எதிர்க்கட்சித் தலைவர்

பேரறிஞர் அண்ணாவின்

சட்டமன்ற உரைகள்



எதிர்க்கட்சித் தலைவர்

பேரறிஞர் அண்ணாவின் சட்டமன்ற உரைகள் 1957 - 1962

பூம்புகார் பதிப்பகம்
127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.
தொலைபேசி : 044 - 25267543

I, A-950

விலை ரூ. 350/-

பூம்புகார் வெளியீட்டு எண் : 950

முதற் பதிப்பு : ஏப்ரல், 2010 O. No. : 02900832

வடிவமைப்பு உரிமை : பூம்புகார் பதிப்பகம் P. C. No. : 9819HH11

அச்சிட்டவர்கள் ஈகிள் பிரஸ், சென்னை - 600 013.

பதிப்புரை

அண்ணா!

தமிழ்த்தாயின் காலக்கொடை.

அண்ணா ஓர் அரசியல்வாதி.

அண்ணா ஓர் சிறுகதை ஆசிரியர்.

அண்ணா ஓர் புதின ஆசிரியர்.

அண்ணா ஓர் நாடக ஆசிரியர்.

அண்ணா ஓர் நாடகப் பயிற்று ஆசிரியர்.

அண்ணா ஓர் பத்திரிகையாளர்.

அண்ணா ஓர் ஓவியர்.

அண்ணா ஓர் கவிஞர்.

அண்ணா ஓர் தலைசிறந்த சொற்பொழிவாளர்.

அண்ணா ஓர் எழுத்தாளர்.

அண்ணா ஓர் இசை பற்றாளர்.

அண்ணா ஓர் பொதுநலத் தொண்டர்.

அண்ணா ஓர் தலைசிறந்த நிர்வாகி.

இதற்கெல்லாம் மேலாக அண்ணா ஓர் மனித நேயமிக்க மாமனிதர்.

அரசியல் நேர்மை, தூய்மை, ஒழுக்கம், கழகத்தையே குடும்பமாகக்கொண்ட பாசம், மாற்றாரை மதித்துப் பாராட்டும் பண்பு, உடன்பிறப்புகளை அரவணைத்துச் சென்ற பாங்கு, தலைவனாக இல்லாமல் தொண்டர்களின் அண்ணனாக விளங்கிய பாசப் பிணைப்பு, மற்றவர் துயர் கண்டு துடித்து, ஆறுதல் அளித்த பெருமனம், பொது வாழ்வில் ஒளிவு மறைவு இன்றி வாழ்ந்தமை, எளிமை, பதவி வந்த பிறகும் அடக்கத்துடன் வாழ்ந்த பெருங்குணம். இப்படி எல்லா வகையிலும் அண்ணா எப்படி உயர் குணங்களின் மொத்த உருவமாக நம்மிடையே வாழ்ந்து மறைந்தார் என்பதற்கான சரித்திரச் சான்றுகள். இப்படிப்பட்ட உயர் குணங்கள் உள்ளவரை ஆன்மீகவாதி 'கடவுள்' என்பார். மணி பிரவாள நடையில் 'மஹாத்மா' என்பார். அண்ணா அவர்கள் 'உத்தமர்' என்பார். நாம் அண்ணா என்போம்.

வகை அறியாதவர் அல்ல பாமரர்! காலம் வரட்டும் என்று காத்திருக்கும் பொறுமைசாலிகள்.

அறிவற்றவர்கள் அல்ல மக்கள்! ஆத்திரத்தை அடக்கிக் கொள்ள கற்றவர்கள்.

பிடி சாம்பலாகிப் போனவர்கள் அல்ல அந்த மக்கள்!

நீறு பூத்த நெருப்பாகி நிற்பவர்கள்!!

: 'ஐந்து கால் பசு' - திராவிட நாடு.
16.10.1960

பேரறிஞர் அண்ணா அன்று அறுபதுகளில் எழுதிய, பேசிய பேச்சுக்கள் இன்றைய இரண்டாயிரத்து ஒன்பதுகளிலும் பொருந்தும். மக்கள் அன்றும் பொறுமைசாலிகள். இன்றும் பொறுமைசாலிகள். அன்றைய மக்கள் பொறுமையுடன் வாழ்ந்து 1967ல் புதிய திராவிட யுகத்தை ஆரம்பித்து வைத்தார்கள். இன்றைய இளைஞர்கள் இனிவரும் காலங்களில் புதிய வார்ப்புகளாய் பரிணாமித்து எழுச்சி கொண்டு எழுவார்கள். வங்கக் கடலோரம் கண் துய்யும்

(உறங்கும்) அண்ணாவைத் தொட்டு எழுப்பி மண் துடைத்து முகத்தில் முத்தமிடும் காலம் வெகு தூரமில்லை அண்ணா என புதிய அண்ணா யுகமாக மாற்ற இருக்கிறார்கள். காலங்கள் கனிய காத்திருப்போம்.

இப்படிப்பட்ட ஒரு தலைவனை, நெஞ்சுடை மனிதனை, நம் காலத்தில் வாழ்ந்து மறைந்த 'அண்ணாவை' இன்றைய தலைமுறை, அண்ணாவை அறியாத தலைமுறை, அண்ணாவை படமாக மட்டும் கண்ட தலைமுறை, அண்ணாவின் பாடத்தை அறிய முடியாத தலைமுறை. இதை தெரிந்து கொண்டு இன்றைய தமிழக இளையதலை முறை தெரிந்து கொள்ள வேண்டும். அவர் காட்டிய வழியில் தன் பயணத்தை தொடர வேண்டும். அவர்கள் தலைசிறந்து அண்ணாவைப் போல் வாழ்ந்து காட்ட வேண்டும். அண்ணா நீ மட்டும் அண்ணா அல்ல தமிழகத்தில் லட்சக்கணக்கான அண்ணாக்கள் உருவாகி இருக்கிறோம். இளைஞர் பட்டறையில் இளைய அண்ணாவாக செதுக்கப் பட்டிருக்கிறோம். என்று சொல்லும் நிலை கூடிய விரைவில் வர வேண்டும் என்ற நோக்கத்துடன் கடந்த 35 ஆண்டுகளாக பேரறிஞர் அண்ணாவின் நூல்களை குறைந்த விலையில் எல்லோரும் வாங்கி படிக்கும் வகையில் வெளியிட்டு வருகின்றோம். செம்பதிப்புகளாக அண்ணாவின் நூல்கள் 15 பதிப்புகள் வெளியிட்டுள்ளோம்.

பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்தக் கால கட்டத்தில், அண்ணா அவர்கள் 1957 இலிருந்து 1962ஆம் ஆண்டு முடிய 5 ஆண்டுகள் தமிழக சட்டசபை எதிர்க் கட்சி தலைவராகப் பணிசெய்த காலத்தில் அவர்கள் சட்டசபையில் ஆற்றிய உரைகள் முழுவதையும் கால வரிசைப்படி தொகுத்து, பெரும் தொகுதியாக வெளியிடுவதில் பூரிப்படைகிறோம்.

ஒவ்வொரு இளைஞனின் பேச்சிலும், எழுத்திலும், மூச்சிலும் அண்ணா வாழ வேண்டும். தமிழக இளைய சமுதாயம் அண்ணா சமுதாயமாக மாற வேண்டும் என்ற உயர்ந்த நிலைப்பாடு கொண்டு பூம்புகார் பதிப்பகம், அண்ணா அவர்கள் எழுதிய, பேசிய, அண்ணா சுவடுகள் அனைத்தும் வரலாற்றுச் சான்றாக உருவாக்கி வருகிறோம். எங்களது உன்னத முயற்சிக்கு வாசகர்களாகிய உங்களது முழு ஒத்துழைப்பை நல்குவீர்கள் என்று நெஞ்சார நம்புகிறோம். வாழ்த்துகிறோம், தலை வணங்குகிறோம்.

பூம்புகார் பதிப்பகத்தார்.

பொருளடக்கம்

உரை எண்.	தேதி	பொருள்	பக்கம்
1.	29.04.1957	பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்வினைப் பாராட்டுதல்	9
2.	06.05.1957	ஆளுநர் உரை மீதான விவாதம்	14
3.	04.07.1957	நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்	30
4.	24.07.1957	தொழில் வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடு விவாதம்	52
5.	26.07.1957	நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு	63
6.	30.10.1957	நம்பிக்கையின்மையின் மீதான தீர்மான விவாதம்	69
7.	31.10.1957	,,	95
8.	05.11.1957	உள்ளாட்சி பற்றிய வெள்ளை அறிக்கையின் மீதான விவாதம்	97
9.	11.11.1957	நாட்டு மதிப்பிற்குரியவற்றை களங்கப்படுத்தத் தடைவிதிக்கும் சட்ட முன்வடிவு	107
10.	13.02.1957	ஆளுநர் உரை மீதான விவாதம்	130
11.	08.03.1958	1958-59ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதம்	158
12.	11.03.1958	அலுவலக மொழி குறித்து மொழிப்பிரச்சினை குழுவின் அறிக்கை மீதான விவாதம்	197
13.	1958	பட்ஜெட் மீது உரை	215
14.	17.03.1958	சமுதாய நலத்திட்டத்திற்கான விவாதம்	237
15.	18.03.1958	நிதி ஒதுக்கீட்டுக் கோரிக்கை - காவல்துறை	247
16.	20.3.1958	தாழ்த்தப்பட்டோர் மீதான விவாதம்	259
17.	26.03.1958	வேளாண்மைத்துறை நிதி ஒதுக்கீடு வாக்கெடுப்பு	271
18.	07.04.1958	நிதி ஒதுக்கீடு சட்டமுன்வடிவு விவாதம்	282
19.	10.09.1958	உணவு நிலைமை பற்றிய விவாதம்	292
20.	18.09.1958	வேளாண்மை வருவாய் வரிமுறை சட்ட திருத்த முன்வடிவு	305
21.	24.09.1958	ஊராட்சி மன்ற சட்ட முன்வடிவு	313
22.	30.09.1958	மாநில அரசு பணியாளர்கள் பற்றிய பணிநிலை அறியும் குழு குறித்த தீர்மானம்	332
23.	30.10.1958	நில உச்ச வரம்புத் தீர்மானம்	344
24.	09.02.1959	ஆளுநர் உரைமீது விவாதம்	356

25.	17.02.1959	ஆபாசத் தடுப்புச் சட்ட முன்வடிவு மீதான விவாதம்	377
26.	17.02.1959	”	394
27.	10.03.1959	1950-60 ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதம்	397
28.	19.03.1959	வேளாண்மைத் திட்டம் நிதி ஒதுக்கீடு சட்ட முன்வடிவு	426
29.	23.03.1959	நிதி ஒதுக்கீடு - தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம்	435
30.	31.08.1959	கேரள அமைச்சரவை கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்தியமைக்கான கண்டனத் தீர்மானம்	444
31.	03.09.1959	பேருந்து நாட்டுடைமைத் தீர்மானம்	445
32.	10.12.1959	ஆளுநர் உரைமீதான விவாதம்	463
33.	16.12.1959	உரிமைப்பிரச்சினை மீதான விவாதம்	495
34.	16.03.1960	நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்	505
35.	22.03.1960	சென்னை மாநகராட்சியால் சட்டமன்ற உறுப்பினர்கள் மீது கொண்டு வரப்பட்ட கண்டனத் தீர்மானம் பற்றிய உரிமைப்பிரச்சினை	538
36.	08.04.1960	தொழில்துறை நிதிஒதுக்கீடு வாக்கெடுப்பு	540
37.	20.04.1960	நிலச் சீரமைப்பு சட்ட முன்வடிவு	559
38.	30.04.1960	நிதி ஒதுக்கீடு சட்ட முன்வடிவு	580
39.	11.08.1960	ஆளுநர் உரைமீதான விவாதம்	588
40.	05.09.1960	அலுவலக மொழிபற்றிய விவாதம்	605
41.	30.01.1961	சென்னை பெயர் மாற்றத் தீர்மானம்	622
42.	08.03.1961	நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்	624
43.	14.03.1961	நிதி ஒதுக்கீடு - தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம்	654
44.	16.03.1961	அமைச்சர்கள், துணைத்தலைவர். . . தேர்தல் ஆகியன பற்றி நிதிஒதுக்கீடு கோரிக்கை	666
45.	29.08.1961	நில உச்சவரம்பு சட்ட முன்வடிவு	674
46.	11.11.1961	மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின் மீதான விவாதம்	689
47.	13.11.1961	தேசிய ஒருமைப்பாடு - அரசினர் தீர்மானம்	705
48.	15.12.1961	சென்னை நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு - வாக்கெடுப்பு	727

எதிர்க் கட்சித்தலைவர் பேரறிஞர் அண்ணாவின் சட்டமன்ற உரைகள்

பேரவைத் தலைவர் துணைத்தலைவர் தேர்வினைப் பாராட்டுதல்

உரை : 1 *நாள் : 29.04.1957*

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே, துணைத்தலைவர் அவர்களே தங்களுடைய கட்டளைக்கு அடங்கி நல்ல முறையில் தங்களுடன் ஒத்துழைத்து இந்தச் சபையின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதில் இந்தப் பகுதியில் அமர்ந்திருக்கிற எங்களுக்கு உண்மையில் நல்ல நம்பிக்கையும் இதிலே பிறருக்கு நம்பிக்கை ஏற்படச் செய்ய வேண்டுமென்ற உறுதிப்பாடும் இருப்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களுடைய சிறந்த அறிவாற்றலை நான் மாணவனாய் இருந்த பருவத்திலும் அரசியல் நடவடிக்கைகளைக் கவனித்துப் பார்த்த காலத்திலும், இருந்தே நன்கு அறிந்திருக்கிறேன். தங்களைப் போன்ற நேர்மை உள்ளம் படைத்தவர்கள் போட்டியின்றியே சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதுதான் பொருத்தமானது. என்றாலும் ஜனநாயக அமைப்பிலே சில பல தவிர்க்கமுடியாத கடமைகளுக்கு உட்பட்டு போட்டி இருந்தது என்றும் அந்தப் போட்டியும் தங்கள் புகழை அதிகப்படுத்துவதாக முடிந்தது என்பதையும் அறிவோம்.

பாராளுமன்ற நடவடிக்கைகளில் தங்களுடைய அறிவையும்

ஆற்றலையும் நன்கு அறிந்திருக்கக் கூடிய எங்களுக்கு அதிலே அதிகமான அநுபவம் இல்லாததை தாங்கள் அறிந்து கொள்ள வேண்டு மென்று குறிப்பிட விரும்புகிறேன். அரசியல் துறையில் தாங்கள் நல்ல அறிவாற்றல் பெற்றிருப்பது போலவே தாங்கள் ஈடுபட்டிருக்கிற மருத்துவத் துறையில் யார் யார் தங்களிடம் இளைத்து வருகிறார் களோ அவர்களுக்குப் பலமூட்டுகின்ற காரியத்தில் நீண்ட நாளாக ஈடுபட்டிருக்கிறீர்கள். உடல் இளைத்தோருக்கு மருத்துவராக அவர்கள் பக்கத்தில் நின்று தாங்கள் பலம் ஊட்டுவதைப் போலவே அரசியலில் இளைத்தோருக்குப் பக்கத்திலும் தாங்கள் நின்று பலமூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசியல் உலகத்தில் நம் நாட்டு ஜனநாயக ஆட்சியில் என் போன்றவர்களுக்கு இத்தகைய சட்டமன்றத்தில் அநுபவம் இல்லாதது மட்டுமல்ல பொதுவாக பிற ஜனநாயக நாடுகளோடு ஜனநாயக முறையில் செயல்படுகிற நம்முடைய நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது சிறு குழந்தைப் பருவத்தில்தான் உள்ளது என்பதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். இந்த நிலையில் நல்ல ஜனநாயகப் பண்புடன் வளர்ந்திருக்கும் தாங்கள் இந்தப் பக்கத்திலுள்ள எங்களில் சிலர் யாராவது சில சமயங்களில் கொஞ்சம் குறும்பாக குழந்தைத் தனமாக நடந்து கொண்டாலும் தாய் போன்று எங்களை அன்புடன் அணைத்து அதிகமாக அடிக்காமல் கருணையோடு சீராட்டி வளர்ப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் அரசியல் அநுபவம் உள்ளவர்கள், அரசியல் அநுபவம் இல்லாதவர்கள் என்ற இரண்டு வகை மட்டுமல்ல, இதையே பச்சைத் தமிழில் சொன்னால் ஞானவான்கள், அஞ்ஞானம் நிரம்பியவர்கள் என்ற இரண்டு வகை மட்டும் அல்ல, ஞான சூன்யர்கள் இருப்பதாகவும் கருதப்பட்டு வருகிறது. எங்களைப் போன்றவர்களை ஞான சூனியர்கள் என்றால் கவலை இல்லை. ஞான சூனியர்களைத் திருத்த முடியும். ஆனால் அஞ்ஞானிகளைத் திருத்துவது என்பது மிகமிகக் கடினம்.

என்னைப் பொறுத்த வரையில் நாங்கள் சேர்ந்திருக்கிற இந்தப் பகுதியைப் பொறுத்த வரையில் அரசியல் அநுபவத்தையும் ஆற்றலையும் அதிகமாகப் பெற்றுவிட்டோம் என்று எடுத்துச் சொல்வதற்கு இல்லை. ஆனால் நம் நாட்டில் ஜனநாயகம் குழந்தைப் பருவத்தில் இருக்கும் போதே நாங்கள் அதிகமாகப் பயிற்சி பெறாமல்

இருப்பது அதற்கு ஏற்ற காலத்தில் பயிற்சி பெறத் தவறி விட்டது ஒன்றைத்தவிர பயிற்சி பெற முடியாது என்பது அல்ல. பயிற்சி பெற்றால் எங்களுக்கு அந்த அறிவு கைகூடாது என்பதும் அல்ல என அரசியல் அநுபவம் பெற்ற தாங்கள் நிச்சயமாக நன்கு உணர்ந் திருப்பீர்கள். அரசியல் துறையில் குழந்தைகளாக எதிர்வரிசையில் உட்கார்ந்திருக்கும் நாங்கள் இந்தச் சபையின் நடவடிக்கைகளில் சட்ட வரம்புக்கு உட்பட்டே செயல்படுவோம் என்றாலும் குழந்தைத் தனமாக சிலபல நேரங்களில் தவறுவதும் இயற்கை. அந்த நேரங்களில் தாங்கள் அன்பு கூர்ந்து, தங்கள் கட்டளைகளை புன்சிரிப்போடு கலந்து கருணையிலே குழைத்து உபயோகிப்பது எங்களை எல்லாம் நல்ல ஜனநாயகப் பண்புடையவர்களாக்கப் பயன்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கிற நாங்கள் ஆளும் கட்சி செய்கின்ற காரியங்கள் அத்தனையும் எதிர்ப்போம் என்று அல்ல. ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் உள்ள உறவு மாப்பிள்ளைக்கும் மாப்பிள்ளைத் தோழர்களுக்கும் உள்ள உறவுபோல இருக்க வேண்டு மென்று கருதிக் கொண்டிருப்பவர்கள் நாங்கள். சிற்சில நேர நேரங்களில் மாப்பிள்ளை, தம்முடைய தோழர்களின் குறும்புகளை வெறுப்பது போல ஆளும் கட்சியில் உள்ளவர்கள் எங்களைக் கருதக் கூடும். அப்படிப்பட்ட நேரத்தில் நாங்கள் மிகவும் சோர்ந்து போகாமல் இருக்க, தாங்கள் அருள் கூர்ந்து தங்களுடைய நியாயமான தீர்ப்புக்களை வழங்கவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் அரசியல் பெருந்தன்மை நம் நாட்டில் மிக மிக அவசியம் என்பதை நல்ல பெருந்தன்மை உடைய தகப்பனாருக்குப் பிள்ளையையும், நல்ல பெருந்தன்மையுள்ள தொழிலில் ஈடுபட்ட வராயும் அரசியல் பெருந்தன்மையை நிலை நாட்டும் பதவிக்கு இன்று தேர்ந்தெடுக்கப்பட்டவராயும் உள்ள தாங்கள் அறிந்து இருப்பீர்கள்.

அரசியல் பெருந்தன்மை, கொடுத்து வாங்குவது ஒன்றே தவிர ஒரே வழியில் செல்கிற வியாபாரம் அல்ல என்று நீங்கள் அறிந் திருப்பீர்கள். அப்படி அரசியல் பெருந்தன்மையை கொடுத்து வாங்க வேண்டுமென்ற கொள்கையைத்தான் நாங்கள் கவலையோடு போற்றி வைத்துக் கொண்டிருக்கிறோம். இருந்தும் சில பல நேரங்களில் தவறுகள் இழைக்க நேரிட்டால், அரசியல் அநுபவம் இல்லாதவர்கள்

நாங்கள் என்பதைக் கருத்தில் கொண்டு தவறுகளைத் திருத்தி நல்வழிப் படுத்துகின்ற அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கிற தாங்கள் கொடுக்கும் ஆணைகளுக்கு உட்பட்டு நடப்போம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நாங்கள் எல்லாம் ஒரு விசித்திர அரசியல் கூட்டத்தினர் என்று நீங்கள் அறிவீர்கள் இந்தச் சபையும் அறியும். நாங்கள் ஒரு விசித்திர அரசியல் கூட்டத்தினர் என்றால் எங்களைத் தோற்றுவித்ததும் நாட்டிலுள்ள ஒரு விசித்திர தலைமைதான் என்பதை யாவரும் உணர வேண்டும். விசித்திரமான நிலைமைகள் விசித்திரமான கட்சிகளை ஏற்படுத்துகின்றன.

உண்மையிலேயே ஒரே விதமான உடற்கூறு படைத்தவர்கள் சிற்சில வியாதிகளுக்கு உட்படுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சிறந்த மருத்துவர் என்ற முறையில் அவர்களுடைய வியாதிக்கு மூலகாரணம் என்ன என்பதைப் பற்றியும் நீங்கள் ஆராய்ந்து சிகிச்சை செய்திருப்பீர்கள். வெளியே தோன்றுகின்ற புறக்குறிகளை மாத்திரம் பார்த்து சிகிச்சை அளிக்கக் கூடாது என்பது தங்களுக்குத் தெரியாதது அல்ல. உங்களுடைய பேட்டையில் எத்தனையோ நோயாளிகள் இளைத்தவர்களாக உங்களிடம் வந்து திடகாத்திரர்களாகத் திரும்பி இருக்கிறார்கள். அவ்வாறு திரும்பிய பலபேர்களிடத்தில் இருந்து நான் அறிந்துள்ளபடி தாங்கள் முதலில் புறத்தே தோன்றும் குறிகளைக் கண்டு அக்குறிகளைத் தோற்றுவித்த மூலகாரணத்தை உணர்ந்து சிகிச்சை செய்யும் வழக்கத்தை இங்கும் கையாள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் படைத்துள்ள நல்ல ஜனநாயகக் கண்ணோட்டத்தோடு எங்களுடைய குறைபாடுகளையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம் நாட்டில் அரசியலில் மட்டுமல்ல ரெயில் வண்டிப் பிரயாணத்திலும் கூட யார் வண்டியில் ஏறி இடம் பிடித்துக் கொள்கிறார்களோ அவர்கள் அடுத்து வருகிறவர்களைத் துரத்துவதைப் பார்க்கிறோம். சட்டமன்றத்திலும் அந்த மனப்பான்மை நீண்ட காலத்திற்கு இருக்கத்தான் செய்யும். பின்னே வருகிறவர்கள் முன்னே வண்டியில் ஏறிக்கொண்டு தங்களை ஏறவிடாமல், தடுக்கின்றவர் களின் மனம் புண்படாமல் மெள்ள உள்ளே ஏறி நுழைந்து கொள்வதைப் போலத்தான் நாங்களும் தட்டுத்தடுமாறி இந்தச் சபைக்குள் நுழைந்து கொண்டிருக்கிறோம். இந்த அரசியல்

வண்டிக்குள் ஆதிக்கம் வாய்ந்தவர்கள் இருப்பார்கள். அவர்கள் முகம் சுணங்கும் வகையில் அவர்களைப் பார்த்து காலை மடக்கிக் கொள்ளுங்கள் என்று நாங்கள் சொல்வதற்கு முன்னாலேயே, நீங்கள் உங்களுடைய கருணைப் பார்வையினாலேயே அவர்கள் காலை மடக்கிக் கொண்டு எங்களுக்கும் இடந்தரச் செய்ய வேண்டும். நியாயத்திற்காக கருணை உள்ளத்தோடு நீங்கள் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்; தங்களுடைய ஆட்சியின் கீழ் இந்த மன்றத்தின் கண்ணியம் உண்மையிலேயே சிறப்புறும் என்று சொல்லி இந்தச் சபையின் கண்ணியத்தையும், கௌரவத்தையும் பாதுகாப்பதில் எங்களுக்கும் ஏதாவது பங்கு கிடைக்குமானால் மகிழ்ச்சி அடைவோம் என்று கூறி வணக்கம் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரை மீதான விவாதம்

உரை : 2 **நாள் : 06.05.1957**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே மேன்மை தங்கிய கவர்னர் அவர்களின் பேருரையின் மீது இந்தச் சபையிலுள்ள பலத்தரப்பட்ட கருத்துக் கொண்டவர்கள், தத்தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான இந்த வாய்ப்பில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்தினை அதனுடைய சட்டசபை உறுப்பினர்கள் சார்பில் தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமைப் படுகிறேன். நேற்று முதல் நடை பெற்று வருகின்ற இந்தக் கருத்துரை வழங்குதலில் ஒரு கட்சி மற்றொரு கட்சிக்கு நல்லுரைகளையும் அறிவுரைகளையும் ஆற்றியதை நான் தவறாக எடுத்துக் கொள்ள வில்லை என்பதையும் மாலை நேரத்தில் எல்லாம் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டிருக்கிற இரு கட்சிகள் காலையில் மட்டும் திடீரென்று காதல் கொண்டு விட முடியாது என்பதையும் நான் உணர்ந்திருக்கிறேன். காதலைப் பற்றித் திருவள்ளுவர்,

> "காலை அரும்பி பகல் எல்லாம் போது ஆகி
> மாலை மலரும் இந் நோய்"

என்று கூறி இருக்கிறார்கள். அரசியல் உலகத்தில் அந்த நோய் காலையிலே அரும்பி மாலையிலே மலரும் என்றாலும் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி இந்தச் சட்ட சபை உறுப்பினர்கள் சொல்லுகின்ற கருத்துக்களையும் மறுப்புரை களையும் நான் உண்மையிலேயே வரவேற்கிறேன். ஏனெனில் துவக்கத்திலே நான் எடுத்துச் சொல்லியிருக்கிறபடி நாங்கள் அரசியலில் புகுந்து இருக்கிற இந்த நேரத்தில் எல்லாத் தரப்பட்ட கருத்துக்களையும் கேட்டு அதன் மூலம் எங்கள் கருத்துக்களை செம்மைப்படுத்திக் கொள்ளத் தயாராய் இருக்கிறோம். சிலர், இந்தக் கட்சியின் பெயர் மாற்றப்பட வேண்டும் என்று எடுத்துச்

சொன்னார்கள். சிலர் பெயரை மட்டும் மாற்றினால் போதாது, இந்தக் கட்சியை அடியோடு அழித்து விட வேண்டுமென்றும் சொன்னார்கள். இன்னும் இந்தக் கட்சி தனியாக இருப்பானேன்? தோளோடு தோள் சேர்ந்து எங்களுடைய பக்கம் நிற்கலாமே! என்றும் சொன்னார்கள் தோளோடு தோள் சேர்ந்து நிற்கலாம், என்று சொன்ன நேரத்திலே நான் முதலமைச்சர் அவர்களைப் பார்த்தேன். அவரும் நானும் தோளோடு தோள் சேர்ந்து நிற்பது இயற்கையிலேயே முடியாத காரியம் (சிரிப்பு). ஆனால் கைகோர்த்துக் கொண்டு செயலாற்ற முடியும். உருவத்தை மட்டிலும் நான் சொல்லவில்லை. உள்ளப் பாங்கைப் பொறுத்த வரையில் பல்வேறு கட்சிகள் தோளோடு தோள் சேர்ந்து பணியாற்ற முடியாது. கைகோர்த்துக் கொண்டு பணியாற்றலாம்.

கவர்னர் பெருமகனாரின் பேருரை ஆட்சியாளர்கள் இனி செய்யப்போகின்ற காரியங்களையும் கடைப்பிடிக்க இருக்கின்ற கொள்கைகளின் (1.10 க்கு) விளக்கத்தையும் உள்ளடக்கியதாக இல்லாமல் இருப்பது உண்மையிலேயே பெருங்குறையே என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொதுவாக ஆட்சியாளரின் கொள்கைத் திட்டங்களை விளக்குவதே கவர்னருடைய பேருரை என்பதும், அக்கொள்கைத் திட்டங்களுக்கு ஏற்ப நிதியை பகிர்ந்தளிப்பதாகிய புள்ளி விவரங்களைக் கொண்டதே - வரவு செலவுத் திட்டம் என்பதும் தான் என நான் அறிந்துள்ள வரையில் உணர்ந்திருக்கிறேன். ஆனால் கவர்னர் பேருரையில் குறிப்பிட வேண்டிய கொள்கை விளக்கங்களை நிதி அமைச்சர் அவர்களுடைய வரவு செலவு திட்டப் பிரசங்கத்திற்கு கவர்னர் ஒதுக்கிவிட்டது பெரும்குறை எனச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஆனால் நம் நாட்டிலுள்ள வேறு சில கட்சிகளைப் புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டியுள்ளார் கவர்னர். அவர் கொடுத்திருக்கிற இரண்டாயிரம் பொலி காளைகளை யாரும் மறைக்கவில்லை; அவர் கொடுத்திருக்கிற பன்னீராயிரத்து ஐநூறு பம்பு செட்டுகளும் தேவையில்லை என்று சொல்லி விடவில்லை; ஆனால் கவர்னர் பெருமகனார் இந்தப் பொலி காளைகள் மூலமாகவும், பம்பு செட்டுகள் மூலமாகவும் கிராமாந்தரங்களுக்கு மின்சாரத்தைப் பரப்புவதன் மூலமாகவும் என்ன என்ன மாதிரியான திட்டங்களை இந்த சர்க்கார் செய்யப்போகிறார்கள், இவர்களுடைய வருங்காலக் கொள்கை என்ன

என எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் மக்களைத் திருப்தி செய்து விடமுடியாது. முக்கியமாக அவர் தம்முடைய உரையில் அறிவித்திருக்க வேண்டிய கொள்கை விளக்கத்தையும் நிதி அமைச்சருக்கே ஒதுக்கி விட்டிருப்பதைக் கண்டு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல், ஏற்கெனவே ஏகப்பட்ட பாரத்தைத் தூக்கிக் கொண்டிருக்கும் நிதி அமைச்சர் அவர்களுக்கே மேலும் அதிகமாகத் தொல்லை தருவதாக இருக்கிறதே என்று நான் பரிதாபப்படுகிறேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நிதிக்கும் அமைச்சர், நீதிக்கும் அமைச்சர், கல்விக்கும் அமைச்சர், இந்த மூன்று பெருந்துறைகளையும் தாங்குவதற்குரிய ஆற்றல் படைத்தவர் தாம் அவர் என்பதை சபைக்கு நெடுந்தொலைவில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த காலம் முதலே நன்கு உணர்ந்திருக்கிறேன், என்றாலும் பொதுவாக பாராளு மன்றத்தில் நிதி அமைச்சராக இருப்பவர்கள் செலவாகின்ற இலாக்காக்கள் எதையும் தம்மிடத்தில் வைத்துக் கொள்ளாமல் இருப்பதுதான் ஜனநாயகப் பண்பாட்டுக்கு உகந்தது என்று பல்வேறு நாடுகளில் வலியுறுத்தப் படுவதை நான் இந்த தேசத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதன் மூலமாக அவர் தம்மிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கும் இதர இலாக்காக்களுக்கு அள்ளி அள்ளி வாரி வழங்கி விடுவார் என்ற ஐயப்பாட்டினாலே நான் இதைச் சொல்லவில்லை. ஆனால் எங்கே தாம் வாரி வாரி வழங்கிக்கொண்டு விட்டதாகப் பிறர் தம் மீது குற்றம் சாட்டி விடுவார்களோ என்ற அச்சத்தினாலேயே நான் இதைக் குறிப்பிடுகிறேன். அதற்காக கனம் உறுப்பினர் ஸ்ரீ சின்னத்துரை "அமைச்சர் அவையை விரிவுபடுத்த வேண்டும்" எனச் சொன்னபடி சொன்னால் அதை அமைச்சர் அவையில் உள்ளவர்கள் ரசித்தார்களோ, என்னவோ, கனம் அங்கத்தினர்கள் ரசித்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

நிதி அமைச்சர் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிற நிதி, நீதி, கல்வி ஆகிய மூன்று துறைகளும் நம் நாட்டின் பொது வாழ்வு பற்றிய முக்கியமான துறைகள். அவை மூன்றும் வெவ்வேறாக வகுக்கப்பட்டு தனித்தனியாக நல்ல முறையில் செயல்பட வேண்டியவை. அப்படிப்பட்ட முக்கியமான துறைகள் மூன்றும் ஒருவரிடமே ஒதுக்கப்பட்டு நிதி அமைச்சரிடத்தில் தந்திருப்பது உண்மையிலே அவருடைய ஆற்றலுக்கு அது ஒரு சான்று என்றாலும்; ஆட்சியாளர்கள் அவரிடத்திலே வைத்திருக்கிற அபாரமான ஒரு

நம்பிக்கைக்கு ஒரு சான்று என்றாலும்; அவரைப் போன்ற ஒரு இளைஞரிடத்தில் அம்மூன்று இலாக்காக்களும் இருப்பது இளைஞர் உலகத்திற்கே பெருமை அளிப்பதாக இருக்கிறது என்றாலும்; உண்மையிலேயே இப்படியின்றி இவை வேறு வேறாய் பிரிக்கப்பட்டு வெவ்வேறு அமைச்சர்கள் பொறுப்பில் வருமானால், இவர் நிதி அமைச்சர் என்ற முறையில் தம்முடைய நியாயத் தீர்ப்புகளை வகுத்துக் கொண்டு, எல்லாத் துறைகளுக்கும் தாராளமாக ஏராளமாக நிதி வழங்கி அதன் மூலம் எதிர்பார்ப்பதை விட அதிகமான நல்ல பயன் நாட்டுக்குக் கிட்டும் படியாக பணியாற்ற முடியும் என்று எதிர்பார்த்தே, நான் அந்தக் குறையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கவர்னர் பெருமகனார் கொள்கை விளக்கத்தை வரவு செலவுத் திட்டத்தின் போது வைத்துக் கொள்ளலாம் என்று ஒதுக்கி விட்டாலும் கூட "வரவு செலவுத் திட்டம்" கொள்கையின் அடிப்படையில் அமைகின்ற புள்ளி விவரக் கணக்கே தவிர அதில் கொள்கை விளக்கத்திற்கு அதிகமாக இடம் இருக்கப் போவதில்லை. இருக்கவும் தேவையில்லை. "படத்திற்குச் சட்டமே தவிர சட்டத்திற்கு படம் அல்ல" என்பது போல கொள்கையிலே வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படுவதனால் கொள்கைகளையே முதலில் பேசிய எதிர்க்கட்சிக்காரர்கள் உண்மையிலேயே மிகவும் குறைந்த எண்ணிக்கையினர் என்றாலும், அவர்கள் சொல்லுகின்ற சிலபல நேர்மையான கருத்துக்களையும் அரசியல் பெருந்தன்மையோடு ஆளும் கட்சியினர் ஏற்றுக் கொண்டு வரவு செலவுத் திட்டத்தை தயாரித்துக் கொடுப்பதாக இருந்தால்தான் அந்த வரவு செலவுத்திட்டம் பூர்த்தியானதாக இருக்கும். மக்களுடைய கருத்துக்கள் எல்லாம் அதிலே கலந்து பிரதிபலிக்கும். ஆனால் இன்றைக்கு கொள்கைகளைப் பற்றி பேசி முடிவு செய்யாமலேயே ஒரு திங்கள் கழித்து வரப்போகின்ற வரவு செலவு திட்டத்திலே கொள்கைகளைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்றால் நம்முடைய கொள்கைகள் ஒருபக்கம் இருந்தால், வரவு செலவு புள்ளி விவரங்கள் நம்மை வேறு எங்கோ இழுத்துக் கொண்டு போய்விடும். அப்போது கொள்கைகளை எல்லாம் அலசி ஆராய்வதற்கு நேரமும் இருக்காது. அப்படியே அலசி ஆராய்வதாக இருந்தாலும், கொள்கை மாற்றத்திற்குத் தக்கபடி வரவு செலவுத் திட்டத்தைத் திருத்தி அமைப்பது என்பது இயலாத காரியம். ஆட்சியாளரை அப்படித்

திருத்தி அமைக்கச் செய்யக் கூடிய எண்ணிக்கையும் எங்களிடத்தில் இல்லை என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.

ஆகையினாலே தான் கவர்னருடைய உரையில் கொள்கை விளக்கம் இல்லாததைப்பற்றி நான் வருந்துகிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதோடு மற்றொரு உறுப்பினர் குறிப்பிட்டது போல உண்மையிலேயே இந்த அரசாங்கத்தினருக்குப் புதுக் கொள்கைகள் எதுவும் இல்லையா? நிதி அமைச்சர் உரையிலே பின்னே வரப்போகின்ற கொள்கை விளக்கம் எல்லாம் இப்போது இருந்து கொண்டிருக்கும் நலிந்து போன கொள்கைகளின் தொடர்ச்சியாகத்தான் இருக்குமோ என்று கூட ஐயப்பட வேண்டி யிருக்கிறது. இந்த ஐயப்பாட்டிற்குக் காரணம் என்ன இருக்கிற தென்றால், புதிய அமைச்சரவை அமைந்தவுடனே முதல் அமைச்சர் அவர்களை நிருபர்கள் பேட்டி கண்டதாகப் பத்திரிகையில் செய்தி பார்த்தேன். முதல் அமைச்சர் அவர்களிடம் "உங்கள் கொள்கை என்ன? திட்டம் என்ன? என்று அவர்கள் கேட்ட காலத்தில் புதிதாகக் கொள்கைகளை விளக்க வேண்டிய அவசியம் என்ன? புது மந்திரி சபையா இது? முன்பு இருந்த கட்சி தானே இன்றைக்கும் வந்திருக்கிறது அதே கொள்கைகள் தான். அதே திட்டங்கள் தான்" என்று சொன்னதாகச் செய்தித்தாளில் படித்தேன் (கனம் ஸ்ரீ. கே. காமராஜ்) ஆகவே வரவு செலவு திட்டத்திலும் கூட புதிதான கொள்கை விளக்கம் இருக்காதென்று தெரிந்திருக்கின்ற காரணத்தினால்தான் ஏற்கனவே உள்ள திட்டங்களைப் பற்றியும் குறைகளைப் பற்றியும் நாங்கள் எடுத்துப் பேச வேண்டியிருக்கிறது.

ஆனால் நாங்கள் குறை கூறுவதைப் பற்றி ஆளுங்கட்சியில் உள்ள பலர் குறை கூறினார்கள் முடிவில் எங்களைக் குறை கூறினவர்களும் நிர்வாகத்திலுள்ள குறைகளையே எடுத்துச் சொன்னார்கள். இதை அவர்கள் எவ்வாறு நிறைவேற்றினார்கள் என்றால் "பிச்சைக்காரனுக்கும் பிச்சையில்லை போ" எனச் சொல்லி விரட்டிய நாட்டுப் பெண்ணைப் பார்த்து "அப்படிச் சொல்ல உனக்கு என்ன அதிகாரம்" எனக் கேட்ட கொடுமைக்கார மாமியார் பிச்சைக் காரனைத் திரும்பவும் அழைத்து "நான் சொல்லுகிறேன் பிச்சை இல்லை போ" என்று சொல்லித் துரத்தினதைப் போல இருந்தது (சிரிப்பு). பெரும்பாலும் ஆட்சியாளரின் கட்சியில் இருந்து பேசிய உறுப்பினர்கள் எல்லாம் எங்களைப்பார்த்து "குறைகளையே

அடுக்கிக் கொண்டிருக்கிறீர்களே, குறை சொல்ல நீங்கள் யார்?'' எனக் கேட்டு விட்டு ''அந்த உரிமை எங்களுக்குத்தான் உண்டு'' என்பது போல கவர்னர் பெருமகனாரின் உரையில் குறைகளையே பொறுக்கினார்கள். அவர்களுடைய ஜனநாயகப்பண்பு உண்மையிலேயே வளரவேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன். அப்படி வளருமானால் எங்கள் வேலைகளும் தொல்லைகளும் பெரும்பாலும் குறைந்து விடும் என்று கருதுகிறேன்.

அந்தக் கட்சியிலே உள்ள பலர் நிர்வாகத்திலுள்ள குற்றங் குறைகளைத் தாங்கள் எடுத்துக் கூறுவதற்கு காரணமாக சில தத்துவங்களை கற்பித்துக் கொண்டு பேசினார்கள் ''இப்படி எல்லாம் நாங்கள் குறை சொன்னால் தான் மக்களுடைய ஆதரவு எங்களுக்கு இருந்துகொண்டிருக்கும். திரும்பவும் அவர்களிடத்தில் சென்று குற்றங்களை எடுத்துச் சொல்லி கண்டித்துப் பேசியிருக்கிறோம்'' என்று சொல்லி ஓட்டுப் பெற்று வருவதற்குச் சௌகர்யமாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டார்கள். அப்படிப்பட்ட கருத்தைத் தெரிவித்துக் கொண்ட அங்கத்தினர்களுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படி எல்லாம் நடந்து தேர்தலிலே மக்களுடைய ஆதரவைப் பெறவேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. காரணம் தாய்த் திருநாட்டை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கும் ஆற்றல் படைத்த, ஒரே சிறு படை நாங்கள் தான் என்ற முறையில் அவர்களுடைய ஆதரவைக் காட்டி தங்கள் வாக்குரிமையை எங்களுக்கு அளித்திருக்கிறார்கள். இனியும் அவர்களுடைய வாக்குக்களைப் பெறுவதற்குரிய அன்பை நாங்கள் இழந்து விடவில்லை. இழந்து விடவும் மாட்டோம். இங்கே நடை பெறுகின்ற காரியங்கள் எல்லாம் எங்களுடைய குறிக்கோளைக் குந்தகப் படுத்திவிடாது.

ஆகையினால்தான் குற்றங் குறைகளை எடுத்துச் சொல்லி மக்களின் ஆதரவைப் பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு நாங்கள் குறைகளை எடுத்துக் காட்டவில்லை. உண்மையிலேயே இந்த அரசாங்கத்தார் தங்களுடைய திட்டவட்டமான கொள்கை எதையும் எந்தப் பிரச்சனையின் மீதும் கவர்னர் உரையில் வெளிப்படுத்த வில்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாக நிலச்சீர்திருத்தத்தைப் பற்றி அவர்கள் குறிப்பிடுகின்ற நோக்கத்தில் ஸ்ரீ வினோபாவின் பூதான இயக்கத்தைச்

சுட்டிக் காட்டி இது வெற்றி பெற்றால் நில விநியோகம் வரம்பு கூட்டுவதற்கு அவசியமிராது என்று கூறியுள்ளார். இப்படிச் சொல்லும் போது சட்டமன்றத்திற்கு அப்பாற்பட்டவராக இருக்கும் ஸ்ரீ வினோபா அவர்களிடம் எங்களுக்கு மதிப்பு இல்லை என்று அர்த்தம் இல்லை. இந்த நாடும், இந்த நாட்டிலுள்ள அத்தனை பேராலும் நன்கு மதித்துப் போற்றப்படுகிறவர் என்பதோடு கூட, வெளியுலக மெல்லாம் பெரிதும் போற்றி மதிக்கப்படுகின்றவர் ஸ்ரீ வினோபா என்ற காரணத்தினாலே அவர்கள் நிலச் சீர்த்திருத்தம் பற்றி என்ன சொல்லி வருகிறார்கள் என்பதைச் சபையில் எடுத்துக் காட்டி அதைப் பரிசிலிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

ஆனால் வினோபா அவர்கள் செய்து கொண்டு வருகின்ற பூதான இயக்கம் வெற்றிபெற்று விடுமானால் நிலத்தைப் பங்கிடுவதோ, வரம்புக் கட்டுவதோ தேவையில்லாமல் போய்விடும் என்று எடுத்துச் சொல்லி, தங்களுடைய பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வினோபாவை அவர்கள் ஒரு திசையாகப் பயன்படுத்திக் கொள்கிறார்களோ என்று நான் ஐயப்படுகிறேன். நான் ஏன் அப்படி ஐயப்படுகிறேன் என்றால், இந்தச் சர்க்காரைப் பற்றியும் இந்தச் சர்க்கார் நிலச் சீர்திருத்தத்தை எந்த வகையிலே கவனிப்பார்கள் என்பதைப் பற்றியும், இந்தச் சபையாலே போற்றிப் புகழப்பட்டு உலகத்தாரால் மதிக்கப்பட்டுவரும் வினோபா அவர்கள் சமீப காலத்திற்கு முன்னாலேயே எடுத்துச் சொல்லியிருக்கிற கருத்தை இந்தச் சபையினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

"We cannot expect that the present Government Manned mostly by the land. Owning class will enact such land legislation which will harm their own interests. Even when they try to introduce land reforms they give ample time for the land - owners to distribute among themselves or sell their lands so that they may not be affected by the law and thus the law becomes a mere force."

"சட்டம் என்பதை ஒரு கேலிக் கூத்து ஆக்குகின்ற தன்மையில் சட்டத்தைக்கொண்டு வருகிறேன்; கொண்டு வருகிறேன்; என்று நிலச் சொந்தக்காரர்களை உஷார்படுத்தி சட்டம் வந்த காலத்தில் எப்படி அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்பதற்காக இந்தச் சர்க்கார் வழி வகுக்கிறார்கள். ஏனென்றால் சர்க்காருடைய அமைப்பே இப்படி இருக்கிறது" என்று சிறுநல்லூர் என்னும் சிற்றூரில் வினோபா அவர்கள்

தம்முடைய பேருரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

இப்படி இந்தச் சர்க்காருடைய போக்கைப்பற்றிய கருத்தை வெளிப்படையாகத் தெரிவிக்கும் வினோபா அவர்கள் இன்றைய தினம் பெற்றுக் கொண்டு வருகின்ற நிலதானம், நாங்களெல்லாம் கூர்ந்து பார்க்கத் தக்கது, ஆராயத் தக்கது என்று இந்தச் சர்க்கார் பெருமையோடு சொல்லிக் கொண்டாலும், உண்மையிலேயே வினோபா அவர்களாலே ஆற்ற முடிகின்ற இந்தக் காரியம் நாட்டை ஆளும் சர்க்காரால் நம்முடைய இந்திய துணைக் கண்ட அரசியல் வரலாற்றிலேயே எந்த ஒரு கட்சிக்கும், இதுவரை ஏற்பட்டிராத அளவுக்குச் செல்வாக்கைப் பெற்றிருக்கும் காங்கிரஸ் கட்சியால் நடத்தப்படும் இந்தத் துரைத்தனம் ஏன் இந்தச் சீர்திருத்தத்தை செய்ததிலே தயக்கப்பட வேண்டும்? யாருக்காக அஞ்சுகிறார்கள்? யாராவது அவர்களுடைய கரங்களைப் பற்றிக் கொள்வார்கள் என்று கருதுகிறார்களா? என்று நான் இந்தச் சபையிலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு விஷயத்திலும் தங்களுடைய பொறுப்பையும், தாங்கள் அவசர அவசரமாக கவனிக்க வேண்டிய விஷயத்தையும் அவர்கள் உண்மையிலேயே செய்யத் தவறியிருக்கிறார்கள். பொறுப்பைத் தட்டிக் கழித்திருக்கின்றார்கள் என்று நான் குற்றஞ் சாட்ட விரும்புகிறேன், அதனாலேயே கொள்கை விளக்கம் இந்தக் கவர்னர் பேருரையிலே இல்லையோ என்று கூட நான் உண்மையிலேயே அஞ்ச நேரிடுகிறது.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் உண்மையிலேயே ஆளுங்கட்சியினர் எந்த வகையிலே எங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன் என்றால், நாங்கள் அழிந்துவிடத் தக்கவர்கள் என்று சபிப்பதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. பொறுப்பற்றவர்கள் என்று எங்களை தூற்றுவதைப் பற்றி உண்மையிலேயே கோபித்துக் கொள்ளப் போவதில்லை. ஏனென்றால் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளச் சந்தர்ப்பம் இல்லாத நிலையில், ஒருவரை யொருவர் இப்படித் தூற்றிக் கொண்டிருப்பது பொது அரசுத் துறையில் உண்மையிலேயே சாதாரணமாகி விட்டது, ஆனால் இந்தக் கோட்டைக்குள் நுழைந்து உள்ளே வந்து பார்க்கையில் இப்பொழுதிருக்கும் ஆட்சியாளர்களை விட பல ஆயிரக்கணக்கான மடங்கு அதிகாரம் படைத்தவர்கள்

மக்களுடைய எழுச்சிக் குரலைக் கேட்ட நேரத்தில் கோட்டையை விட்டுவிட்டு ஓட வேண்டியிருந்தது என்பதை என்னால் மறந்துவிட முடியவில்லை.

ஆகையால் இன்றைய தினம் பெருவாரியான அளவிலேயிருந்து ஆட்சி நடத்தும் கட்சிக்காரர்கள் அவர்களுடைய வக்கீல்கள் என்று நான் சொல்லுவேன். பீஸ் வாங்காவிட்டாலும் என்ன சொல்கிறார்கள் என்றால் ''அவர்கள் எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் - என்ன காரியத்தைச் செய்து விட முடியும்?'' என்று. ஆனால் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் என்றென்றைக்கும் ஆளும் கட்சியிலே இருப்பார்கள் எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் என்றைக்குமே ஆளும் கட்சியாக வரமுடியாது என்றும், ஏகாதிபத்தியத் தத்துவத்தை எழிலான தமிழிலே எடுத்துச் சொன்னார்கள் ''அத்தைக்கு மீசை முளைத்தால் அல்லவா சித்தப்பா என்று அழைப்பதற்கு? அத்தைக்கு மீசை முளைக்கப் போவதும் இல்லை சித்தப்பா என்று அழைக்கப் போவதும் இல்லை'' என்று உறுப்பினர் எடுத்துச் சொன்னார். ஆனால் அத்தைக்கு மீசை முளைத்து சித்தப்பா என்று அழைக்கிறார்கள் அண்டைய நாடாகிய கேரளத்தில் என்பதை அம்மையார் அவர்கள் மறந்துவிட முடியாது. அது மட்டுமல்ல, அத்தைக்கும் சித்தப்பாவுக்கும் மீசை ஒன்றுதான் வித்தியாசம் என்று உலகம் கருதுவதில்லை. பல அத்தைகளுக்கு மீசை இருக்கின்றன என்றாலும் நாம் அத்தை என்று கருதிக்கொண்டு தானிருக்கிறோம். ஆகையால் ஆளும் கட்சியிலிருப்பவர்கள் எதிர்க் கட்சியிருப்பவர்களை அணைத்துச் செல்ல வேண்டு மென்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் எதிர்க்கட்சியாக இருப்பார்கள். நாளைக்கே ஆளுங் கட்சியாக மாறக் கூடும். மாறலாம், இன்றைய தினம் ஆளும் கட்சியில் பெருவாரியாக இருப்பவர்கள் எல்லாம் - என்னைப் பொறுத்த வரை இந்தச் சபையினுடைய ஒழுங்கு முறைக்கு அது உட்பட்டதாகத்தான் இருக்குமென்று கருதுகிறேன். செஞ்சிக் கோட்டையில் ஏறியவர்கள் எல்லாம் தேசிங்கு ராஜாக்கள் அல்ல. காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் எல்லாம் வீரதீரமாக சுந்திரப் போராட்டத்திலே அவர்களே ஈடுபட்டவர்கள் என்று கருதிக் கொண்டு அவர்கள் பிறரைப்பற்றி ''இவர்கள் எல்லாம் பிரிட்டிஷ் ஆட்சிக்கு கால் வருடியவர்கள். வெள்ளையர் ஏகாதிபத்தியத்தின் தாசர்கள்'' என்று பழைய வார்த்தையை எடுத்துச்சொல்லும் நேரத்தில் என்னுடைய முகம் சுருங்கவில்லை. ஆனால் அவர்களுடைய பகுதியில் உள்ள பலருடைய முகம் சுருங்குகிறது (சிரிப்பு).

இப்படி பழைய பரம்பரை பேசிக் கொண்டிருந்த ஜமீன்தார்கள், மிட்டாதார்கள், சிற்றரசர்களே தங்கள் பட்டம் பதவிகளை விட்டு வெளியேறும் போது இந்த நேரத்திலே அரசியலில் மட்டும் இவர்கள் ஜமீன்தாரி முறையைக் கையாளுவார்களேயானால் அந்த ஜமீன்தாரி முறைக்கும் வெகுவிரைவிலே இறுதிக் காலம் வரும் என்று நான் எச்சரிக்கின்றேன்.

தொழில் துறையைப் பொறுத்த வரையில் எங்களை எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று ஆளும் கட்சிக்கு நான் சொல்ல விரும்புகிறேன் என்றால் எங்களை ஆயிரம் தூற்றுங்கள்; அதற்காக நாங்கள் அங்கலாயித்துக் கொள்ளவில்லை. ஆனால் இப்படி ஒரு கூட்டம் இருக்கிறதென்று எடுத்துச்சொல்லி மத்திய சர்க்காரிடத்திலே வாதாடி, போராடி தமிழகத்திற்கு - நம்முடைய ராஜ்யத்திற்கு - நல்ல உரிமைகளை வாங்கித்தாருங்கள். அந்த முறையிலே தொழில் துறையில் நாம் பின் தங்கியிருக்கிறோம் என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு பல்வேறு கூட்டங்களில் எடுத்து விளக்கியிருக்கிறோம். சென்னை சர்க்காருடைய ஆலோசனைக் குழுக்களும் பல தடவை எடுத்துச் சொல்லியிருக்கின்றன.

சட்ட மன்றத்திலே ஒரு காலத்தில் உறுப்பினராக இருந்து பின்னர் அமைச்சராகவும் பணியாற்றியவர்கள் திரு. ரோச் விக்டோரியா அவர்கள் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை வைத்துக் கொண்டு இந்த விஷயத்திலே சொல்லும் போது இந்த வாசகங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

"The Madras Government is however, helps in the matter, for the Government of India in the Commerce and Industries Department are dictating the policy as to what should be done or what should not be done in the state of Madras. We are tied to the apron strings of the central Government."

ஆங்கிலத்திலே உள்ள அந்தக் கருத்தை கொச்சைத் தமிழில் சொல்ல வேண்டுமென்றால், கனம் சபாநாயகர் அவர்கள் நான் குறிப்பிடும் மதத்திற்காக மன்னிக்க வேண்டும். மத்திய சர்க்காருடைய பாவாடை நாடாவில் மாகாண சர்க்கார் கட்டித் தொங்கவிடப் பட்டிருக்கிறது என்று கருத்துப்பட அவர் சொன்னார். அந்த நாடாவை சற்று அவிழ்த்து விட நாங்கள் விரும்புகிறோம். வேறு ஒன்றுமில்லை. அப்படி அவிழ்த்துவிட்டால் பலவற்றாலும் ஆற்றல் படைத்த அமைச்சர்கள் அமைந்திருக்கும் இந்த அமைச்சர் அவை

உண்மையிலேயே நல்ல காரியங்கள் ஆற்றும் என்ற நம்பிக்கையில் நாங்கள் சொல்லுகிறோமே தவிர, ஆட்சிப் பொறுப்பிலிருந்து அவர்களை விரட்ட வேண்டும் என்பதால் அல்ல.

குறை சொல்லிக்கொண்டிருக்க வேண்டும் என்பதே எங்களுடைய நோக்கம் அல்ல. நம் ஜனநாயகத்தில் இருக்கிற ஒரு சிறு தத்துவத்தை மிக குறைந்த நேரத்தில் விளக்கப் பிரியப்படுகிறேன். கனம் அங்கத்தினர் தம்முடையக் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படாதது பற்றி உண்மையிலேயே வருத்தப்பட்டார். ஆனால் அதற்குக் காரணம் புதிதாக வந்திருக்கும் உறுப்பினர்கள் எங்கேயோ அலைந்துவிட்டுப் பிறகுதான் தங்களுடைய விஷயத்துக்கு வருவார்கள் என்பது மட்டுமல்ல; உறுப்பினர்கள் எவ்வளவு காலம் அனுபவம் பெற்றாலும், இப்பொழுதிருக்கும் முறைப்படி எந்த அங்கத்தினரும் தம்முடைய கருத்துக்களை விரிவான முறையில் எடுத்துச் சொல்வதற்கு சட்ட மன்றத்திலே உண்மையிலேயே வாய்ப்பும் இல்லை, வசதியும் இல்லை என்று நான் கருதுகிறேன். அதற்காக ஜனநாயகத்தில் உண்மையிலேயே ஒரு சிறந்த சட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியாவிட்டாலும் நமக்குள்ளேயே ஒரு ஏற்பாட்டினைச் செய்து கொண்டால் சாலச் சிறப்புடையதாகும் என்று நான் கருதுகிறேன்.

ஒவ்வொரு துறையிலும் விவாதங்கள் செய்கின்ற நேரத்தில் அந்தந்தத் துறைக்குப் பொறுப்பாளராக இருக்கும் அமைச்சர்கள்; சட்ட மன்ற உறுப்பினர்களில் ஆளும் கட்சியிலிருந்தும், எதிர்க் கட்சியி லிருந்தும் பதின்மர், இருபதின்மர், பதினைந்து பேர்கள், பன்னிரண்டு பேர்கள் கொண்ட சிறுசிறு ஆலோசனைக் குழுக்களை வைத்துக் கொண்டால் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு தலைப்பிலே வருகிற விஷயங்களை அந்த ஆலோசனைக் குழுவிலே உண்மையிலே நன்றாக விவாதிக்கலாம். அப்படி விவாதிக்கும் போது, உண்மை யிலேயே பேச்சுப் போட்டி போல் அமையாமல் கொள்கையை விளக்குகிற அளவிலே இந்தச் சட்டமன்றம் அமையும் என்று நான் கருதுகிறேன். இதற்கு ஆளுங்கட்சியினர் ஏதாவது விதி செய்வார் களானால்; எனக்கு அல்ல, ஜனநாயகத்திற்கு உண்மையிலேயே சேவை செய்தவர்களாவார்கள்.

‘‘வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது’’ என்பது அடுக்குச் சொல்லாக சொல்லப்படுவது என்று கருதிக் கொண்டு அடுக்குச் சொல்

எப்படியிருக்கக் கூடாதோ அந்த முறையில் ‘‘குண்டா இருக்கிறது அண்டா இல்லை; போச் இருக்கிறது மாச் இல்லை’’ என்று சொன்னது அடுக்கு மொழி சரியாகப் பயன்படுத்தப் படவில்லை என்பதையும், அடுக்கு மொழி தவறான இடத்தில் கிடைத்து விட்டால் எவ்வளவு அலங்கோலமாகின்றது என்பதையும் காட்டுகிறது.

‘‘வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது’’ என்பதை அடுக்குச் சொல்லில் சொல்வதால் மட்டும் ஒரு சிறு கூட்டத்தார் நாட்டிலே அந்த மனப்பான்மையை ஏற்படுத்திவிட முடியாது. எவ்வளவு ஆற்றல் இருந்தாலும் அதற்குத் தேவையான புள்ளி விவரங்கள் உண்மையிலேயே நமக்கு அடிக்கடி கிடைத்துக் கொண்டு வருகின்றன. அப்படிக் கிடைத்துக் கொண்டு வருகின்ற சில புள்ளி விவரங்களில் ஒரே வகை நெறியில் ஈடுபட்டவர்களுடைய குடும்பங்கள் இரண்டை எடுத்து - ஒன்று வடநாட்டில், மற்றொன்று தென்னாட்டில் ஒப்பிட்டுப் பார்த்தால் வடநாட்டில் உள்ளவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 273-ம் தென்னாட்டில் உள்ளவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 93-ம் வருமானம் கிடைக்கிறது என்று சர்க்காருடைய புள்ளி விவரக் கணக்கு நமக்கு அறிவிக்கிறது.

அதைப்போல, விவசாயத் துறையிலும் சரி, அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியத்தைக் கவனித்தாலும் சரி, வேலை நாட்களைக் கவனித்தாலும் சரி, வடக்கில் இருப்பவர்களுக்கும் தெற்கில் இருப்பவர்களுக்கும் உள்ள தாரதம்மியத்தை அடிக்கடி சர்க்காருடைய புள்ளி விவரங்கள் நமக்கு தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுகிறது. இவைகளைப் போக்குவதற்கு எங்களைக் கருவிகளாகப் பயன்படுத்திக் கொள்வார்களானால் உண்மையிலே நாங்கள் மெத்த மகிழ்ச்சி அடைவோம்.

பட்டாளத்தில் "Sappers and Miners" பிரிவினர் கள்ளி காளான்களை அகற்றி பாதைகளைச் சரி செய்து வைத்தால் பட்டாளத்தார் டாங்குகளை கட்டிக்கொண்டு வருவதைப்போல, எங்களையும் நம்முடைய ஆளுங்கட்சியினர் "Sappers and Miners" ஐப்போல பயன்படுத்திக்கொண்டால் கள்ளி காளான்களை அகற்றும் காரியங்களில் எங்களை ஈடுபடுத்திக் கொண்டால், எங்கள் கரத்தில், கழுத்தில் அல்ல, அழுக்கேறினாலும் அதைப் பற்றி நாங்கள் கவலைப் படாமல் அவர்களுக்குப் பாதைகளைச் சரி செய்து வைப்போம். மத்திய சர்க்காரிலே இருக்கும் அதிகாரங்களை மாகாண சர்க்காருக்கு

மாற்றுவதற்கு அவர்கள் எங்களை மெத்தப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே முறையில் நான் சர்க்கார் செய்யும் எந்தக் காரியத்தையும், அல்லது அவர்கள் செய்திருக்கின்ற எந்தக் காரியத்தையும் குறைத்து மதிப்பிடுபவர்கள் அல்ல; உண்மையிலே சிலபல நாட்களாக நம்முடைய மதுவிலக்குத் திட்டத்தை அமல் படுத்த வேண்டுமென்பதற்காக போலீஸ் மந்திரி அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் தீவிர நடவடிக்கைகளைப் பத்திரிகையில் பார்க்கும் நேரத்தில் இவ்வளவு தீவிரமாக மதுவிலக்கை அமுல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க இந்தச் சர்க்கார் முன்வந்திருப்பதை நான் உண்மையிலே பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன். அப்படி பாராட்டுகிற நேரத்தில் ஒன்றைச் சொன்னால் மறுபடியும் குறை சொல்கிறேன் என்று ஆளும் கட்சியார் வருத்தப்படக் கூடாது. இவ்வளவு குற்றங்கள் இருந்தும் முன்னாலேயே தீர்க்க முற்படாதது ஏன்? என்று கேட்பதற்கு என் பேதை நெஞ்சம் தூண்டுகிறது. ஆகவே மதுவிலக்கைச் சரிவர அமுல் நடத்திட எடுத்துக் கொள்ளும் முயற்சியை நான் பாராட்டுகிறேன்.

அதைப் போலவே, சமுதாய நலத் திட்டத்தை நம்முடைய மாகாண முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய சொந்தப் பொறுப்பில் ஏற்றுக் கொண்டிருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். தமிழகத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு கருத்து வேற்றுமைகள் இருந்தாலும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நாட்டுமக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற..... செய்கிறார்கள் என்று அல்ல..... செய்ய வேண்டுமென்ற அக்கறை கொண்டவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகையால் அவரிடத்தில் இந்த இலாகா ஒப்படைக்கப்பட்டிருப்பதைப் பற்றி நான் உண்மை யிலேயே மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த இலாகா அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்ட பிறகுதான் நான் சமுதாய நலத்திட்டத்தைப்பற்றி இருக்கிற பல்வேறு வகையான கருத்துக்களைச் சேகரித்துப் பார்த்தேன். அப்படிப் பார்த்த போது அவர்களுடைய கவனத்திற்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் எங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்ற எண்ணத்தாலும், இந்தச் சமுதாய நலத் திட்டத்தைப் பற்றி அதற்கு என்று இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிற அமெரிக்க நிபுணர்களில், டெபுடி டைரக்டராக இங்கே பணியாற்றுகிற

பெர்னார்டு அவர்கள் "Community Development" என்பதை எவ்வளவு எச்சரிக்கையோடு எடுத்துச் சொல்லுகிறார் என்பதை இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

Buildings can be seen but does this mean that the people themselves are aware of the opportunities for raising their standards of living? Model villages may be instituted but does this mean that a process in under way in which the inhabitants of that villages are working to improve even that model villages? Are there more people who can read and write? Are these fever cases of malaria or dysentery? Has infant mortality been reduced? How much has the villages himself done to produce these results?

இவைகளைப் பார்த்துத்தான் சமுதாய நலத்திட்டத்தைக் கணக்கு எடுக்க வேண்டுமென்று டெபுடி டைரக்டர் சொல்லியிருக்கிறாரே தவிர, சமுதாய நலத்திட்டத்தின் மூலம் எத்தனை பொலி காளைகள் வாங்கப்பட்டன, விதைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி அல்ல. அதே நேரத்தில் இதுவரையில் இந்தக் காரியம் சரியாக நடந்திருக்கிறதா என்பதையும் பற்றி டெபுடி டைரக்டர் கூறிய உரையின் பேரிலேயே மதிப்பிட்டுப்பார்க்க விரும்புகிறேன்.

சமுதாய நலத்திட்டம் இதுவரையில் நடந்திருப்பதைப் பரிசீலிப்பதற்காக அமைக்கப்பட்ட கமிட்டியில் கமிட்டித் தலைவராக இருந்து பணியாற்றிய டாக்டர் பி. கே. ஆர் ராவ் இந்தக் கருத்தைத் தெரிவிக்கிறார்.

"குடிசைத் தொழில் அவ்வளவு பரவலாகவும் இல்லை. வெற்றி கரமாக இருக்கிறதென்றும் சொல்ல முடியாது. முதியோர் கல்வி, சுகாதாரம் ஆகிய அம்சங்களில் அவ்வளவாக வெற்றி காணப்பட வில்லை. பொது மன்றங்களுக்குச் செல்வது, வாலிபர் கிளப்புகள், பெண்கள் ஸ்தாபனங்கள் இவைகளில் மக்கள் அவ்வளவாக ஈடுபாடு கொள்ளவில்லை. இருப்பதிலேயே மிகக் குறைவான வெற்றி காட்டும் அம்சம் இதுதான். கடன் வாங்கும் வசதிக்குத் தவிர கூட்டுறவு ஸ்தாபன முறைகளிலும் மக்கள் அவ்வளவாக உற்சாகம் காட்ட வில்லை. இந்த அம்சத்தில் தோல்விதான் ஏற்பட்டுள்ளது. சுய முயற்சியில் ஈடுபட வேண்டுமென்ற எண்ணத்தை கிராமங்களுக்கு ஏற்படுத்தும் முயற்சி அவ்வளவாக வெற்றி பெறவில்லை. கிராமப் பஞ்சாயத்துக்கள் விஷயத்திலும் இதே நிலைமைதான் இருக்கிறது. பஞ்சாயத்துக்களின்

நோக்கங்களையும் இன்றும் நண்பராகத் தெரிந்து கொள்ளவில்லை. திட்டமிட்டு கிராம அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளும் முன்முயற்சியும் காணப்படவில்லை.

மற்றொன்றும் சபாநாயகர் அனுமதியின் பேரில் சட்ட மன்றத்தின் கவனத்திற்கு எனக்கு இருக்கிற முழு ஆற்றலைக் கொண்டும் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

''அதிகாரிகளே கூட இந்தத் திட்டங்களின் தத்துவத்தைத் தெரிந்து கொள்ளாதவர்களாக உள்ளனர். கிராம சேவகர்கள் (சம்பளம் கொடுத்து வைக்கப்பட்டிருப்போர்) கிராமங்களுக்குப் போவதில்லை. அப்படியே போனாலும் தங்களுக்கு நன்றாகப் பழக்கப்பட்டவர் களிடம் மட்டும் சென்று விட்டு வந்து விடுகிறார்கள். இவர்கள் அதிகாரிகள் போல் நடந்து கொள்கிறார்கள்''

இது இதுவரையில் நடைபெற்ற சமுதாய நலத் திட்டத்தைப் பற்றி எடுக்கப்பட்ட மதிப்பீடு ஆகும். இதே முறையில் இந்தச் சமுதாய மதிப்பீடு ஆகும். இதே முறையில் இந்தச் சமுதாய நலத் திட்டங்கள் இனியும் சென்று கொண்டிருக்காது, என்பதற்கு ஒரே ஒரு உறுதி நமது முதல் அமைச்சர் அவர்கள் அந்த நிர்வாகப் பொறுப்பை தாமே ஏற்றுக் கொண்டிருப்பதுதான். ஆனால் டெபுடி டைரெக்டர் சொல்லி யிருக்கக் கூடிய குறைகளை எல்லாம் களைவதற்கு முன்வராவிட்டால் அந்தத் துறையில் நாம் செலவழிக்கின்ற கோடிக்கணக்கான ரூபாய்கள் அத்தனையும் பாழ்பட்டு விடும் என்று நான் எச்சரிக்கிறேன்.

சமுதாய நலத்திட்டங்கள் அமெரிக்காவின் துணை கொண்டு இப்போது நாற்பத்தைந்து நாடுகளில் நடந்து கொண்டு வருகின்றன. இந்த நாற்பத்தைந்து நாடுகளில் நடந்துவருகின்ற சமுதாய நலத் திட்டத்தில் எவ்வளவு வெற்றி கிடைத்திருக்கிறதோ அதற்குச் சமமான வெற்றி நம் நாட்டிலும் கிடைக்கிறதா என்று பார்க்க வேண்டுமே தவிர ''எத்தனைக் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன'' என்றோ அல்லது அம்மையார் கூறியபடி எங்களை எல்லாம் ''எங்களுடைய கிராமங் களுக்கு வந்து பாருங்கள்'' என்று அழைப்பதாலோ மட்டும் பயன் இல்லை. இந்த வகையில் இந்தத் திட்டங்களின் மதிப்பீடு அமைய வேண்டும்.

உணவுப் பிரச்சனையைப் பொறுத்த வரையிலும் கூட, திட்டக் கமிஷனின் தலைவர், ஸ்ரீ. வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தெளிவாக

சொல்லியிருக்கிறார்கள். "மாகாண சர்க்கிளார் தாம் போட்ட திட்டங்களில் இருந்து தவறி இருக்கிறார்கள்" என்று "ஆகவே இதுவரையிலும் போட்ட திட்டங்களும் சரியாக நிறைவேற்றப்பட வில்லை. எங்கள் கொள்கைகளையும் விளக்க மாட்டோம்" என்று சொல்வது "நாங்கள் எண்ணிக்கையில் பெருத்தவர்கள். நீங்கள் குறைந்தவர்கள். அடங்கிக் கிடவுங்கள்" என்பதாக இருக்கிறது". அவர்களுக்கு நான் சொல்வது என்னவென்றால் பேரழிவு என்ற ஒன்றுக்குப் பிறகு மக்களுடைய பேரெழுச்சி என்ற ஒன்று இருக்கிறது. அது நல்ல தீர்ப்பு அளிக்கும். அந்தத் தீர்ப்பு காலம் கடந்து கிடைத்தாலும் நிச்சயமாகக் கிடைக்கும். அப்படிச் சொல்கின்ற போது "பேசுகின்ற உரிமை உங்களுக்குத் தந்ததாலே இப்படி எல்லாம் பேசுகின்றீர்கள்" என்று எடுத்துச் சொன்னார்கள். அப்போது என் மனக்கண் முன் ஸ்ரீ சத்தியமூர்த்தி தோன்றுகிறார். பிரிட்டிஷாரின் ஆட்சி நடந்த காலத்தில் தன்னந்தனியாக நின்று போராடிய நேரத்திலே இதே கோட்டையில் இருந்துதான் "உங்களுக்குப் பேச்சு சுதந்திரம் கொடுத்திருக்கிறோம். அப்படி பேசினீர்கள்" என்று அவர்கள் சொன்னார்கள். அதே கோட்டை இன்று ஆளுங் கட்சியாக இருக்கின்ற காங்கிரஸ்காரர்களுக்கு வந்திருக்கிறது. "பேச்சு சுதந்திரம் கொடுத்தோம்; நீங்கள் எங்கள் சுதந்திரத்தைப் பறித்து விட்டீர்கள்" என்று அன்றைக்குச் சொன்ன பிரிட்டிஷ்காரர்கள் தேம்ஸ் கரையில் நிற்கிறார்கள். இங்கு கூவம் நதிக்கரையில் நின்று கொண்டு அதே பழைய தத்துவத்தில் நீங்கள் உழன்று கொண்டிருக்க வேண்டாம் என்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்

உரை : 3 **நாள் : 04.07.1957**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே நமது மாகாண நிதியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்னிலையில் விவாதத்திற்காக வைத்திருக்கிற வரவு செலவுத் திட்டத்தைப் பரிசீலனை செய்து பார்க்கிற பொறுப்பு எல்லாக் கட்சிகளுக்கும் இருப்பதைப் போலவே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இருப்பதினாலேயும், அதிலே கலந்து கொள்கிற வாய்ப்பு எனக்கு முற்பட்டதில் உண்மையில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆராய்வதற்கு முன்னால் இந்த வரவு செலவுத் திட்டம் எந்த நேரத்திலே நம்மிடத்திலே தரப்பட்டிருக்கிறது என்பதை ஆராய்வது அதனுடைய தன்மைகளை உண்மையில் புரிந்து கொள்வதற்கு மொத்த உதவியாயிருக்கும் என்று கருதுகிறேன். அப்படி ஆராய்வதில் நமக்குச் சாதகமான சூழ்நிலைகள் மொத்தம் எவ்வளவு இருக்கின்றன? இயற்கை நமக்கு இவ்வாண்டு உதவி புரிந்திருக்கிறது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியோடு தெரிவித்திருக்கிறார்கள். இந்த நாட்டு மக்களிடையே எத்தனையோ மாதிரியான மனக்குமுறல்கள் இருந்தாலும் இந்த நிமிடம் வரை சட்டங்களுக்கு அடங்கி நடக்கிற பொறுப்புள்ள குடிமக்களாக இருந்து கொண்டு, கேட்கிற வரிகளை எல்லாம் அவர்கள் தருகிறார்கள். தீட்டப்படுகின்ற சட்டங்களுக்கு மதிப்பளிக்கிறார்கள். இது நல்ல சூழ்நிலைதான். அதே போன்று நம் நாட்டில் இருக்கிற பத்திரிகைகளில் பெரும்பாலானவை நிர்வாகத்திலே, திட்டங்களிலே, கொள்கைகளிலே எந்த மாதிரி குறைபாடுகள் இருந்தாலும், வலிவோ, பொலிவோ குறைந்திருந் தாலும் அந்தப் பொலிவினை அவர்கள் இழந்து விடுகின்ற நேரத்திலே, நல்ல வர்ணப்பூச்சிகளாக அவைகளைக் காட்சி அளிக்கும்படி செய்து இன்றைய தினம் ஆதரவு அளித்து வருகின்றன. இது மட்டுமல்ல. நிர்வாகத் திறமையும், நல்ல நம்பிக்கை பெற்றவர்களையும், திறமை

படைத்த அமைச்சர்களையும் பொதுவாழ்விற்கென்று தன்னை ஒப்படைத்துவிட்டு அதைத் தன் கட்சி தவிர வேறு எந்தக் கட்சியாலும் சாதிக்க முடியாது என்று நம்பிக்கொண்டிருக்கிற, தங்கள் கட்சியை எதிர்க்கிறவர்கள் சிலரை அணைத்து அழித்தும் சிலரை ஒழித்தும் கட்டத் திட்டமிடும் திரு. காமராஜின் தலைமையில் இன்றைய மந்திரி சபை இருக்கிறது. அது மாத்திரமல்ல. இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் பார்த்துப் பாடம் பெறக் கூடிய வகையில் நல்ல திறமை வாய்ந்த அதிகார இயந்திரம் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதனால் ''ஆனால்'' என்ற அருவருப்பான சொல்லை நானாகத் தேடிக் கொள்ளவில்லை; அது தானாகவே துரத்திக் கொண்டு வருகிறது. ஆனால் இவ்வளவு நல்ல சூழ்நிலைக்குப் பிறகும் விலைவாசிகள் ஏறியிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்து ஆடுகிறது நம் நாட்டில். நாட்டில் பற்றாக்குறை எல்லாம் திக்கிலும் துரத்திக் கொண்டு இருக்கிறது. சர்க்கார் அலுவலகங்களில் பணியாற்றுகிறவர்கள், சர்க்கார் துணை அலுவலகங்களில் பணியாற்று கிறவர்கள் அத்தனை பேர்களும் இன்றைய தினம் மனக் குறையோடு தான் இருக்கிறார்கள். அதைப் போக்க நல்ல சூழ்நிலை நம்மிடம் உருவாக்கப்படுவதில்லை. இந்த நிலையில் அலுவலகத்துறையில் உள்ளவர்கள் சர்க்காருடைய உதவியைப் பெற்றிருக்கிறார்கள் என்று வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதே, அப்படி அலுவலகத் துறையிலுள்ளவர்கள் யாரும் மனத்திருப்தியோடு இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். நான் இதை நினைவூட்டுவது அவர்கள் பேரில் வைத்திருக்கும் அன்பையும் அபிமானத்தையும் அதிகப்படுத்துவதற்கே தவிர குறை கூறுவதற்கில்லை. குறை கூறுவதற்கு இருக்கின்ற பல காரியங்களைப் பற்றி இம்மன்றத்தில் விளக்கமாகப் பேசப்பட்டது என்று மரியாதையாகச் சொல்கிறேன். இம்மன்றம் ஒவ்வொருவரும் பேச்சுத் திறமையைக் காட்டிக் கொள்வதற்காகக் கூட்டப்படவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியங்களையும் பற்றிக் கூறுவார்கள். அதற்கு திருப்பி பதில் அளிப்பது இதுதான் இங்கே நடந்தது - ஆனால் அவ்விதம் இருத்தல் கூடாது என்று மன்ற உறுப்பினர்களுக்கும், எனக்கும் நானே கவன மூட்டிக் கொள்கிறேன். ஆனால் எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் அத்தனை காரணங்களையும் காட்டி முறைப்படி குற்றம் சாட்டுகிறார்கள். காரணம் ஒரு கொள்கையைக் கடைப் பிடித்து அதன்படி நின்று தக்க ஆதாரங்களுடன், கட்டுப்பாட்டுடன்,

கண்ணியத்துடன் எடுத்துரைப்பதற்குள்ள, தகுதி எதிர்க்கட்சிக் காரர்களிடம் குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தாரிடம் இருக்கிறது. இந்திய துணைக்கண்டம் தன் மற்ற சட்ட சபைகளில் எல்லாம் என்ன நடந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த மன்றத்திற்கு கவன மூட்ட விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்னால் பத்திரிகையில் பார்த்தோம். தேர்தலில் தோற்றுப் போன ஒருவர் கவர்னராக பதவி பெற்று சட்ட சபையில் வந்து ஆற்றிய உரையை எதிர்த்து பெரிய அமளி நடைபெற்றிருக்கிறது. நம்முடைய மாகாணத்தில் பெருமையாகவும் திறமையாகவும் தம்முடைய பதவியை நிர்வகித்து கொண்டிருந்த கவர்னர் பிரகாசா அவர்கள் பம்பாய் சட்ட மன்றத்தில் தன்னுடைய உரையை நிகழ்த்துவதற்காகச் சென்ற நேரத்தில் இருமொழி இராஜ்யம் வேண்டாம் என்ற ஒரு காரணத்தைக் காட்டி சட்ட சபையில் ஒரு பெரிய அமளி நடைபெற்றிருக்கின்றது. எல்லாவற்றையும் விட மேலாக, சபாநாயகர் அவர்களே, ராஜஸ்தான் சட்ட சபையிலே திரிலோகசிங் என்பவர் சபாநாயகர் வெளியே போயிருக்கிற சமயம் பார்த்து சபா நாயகருடைய இருப்பிடத்திலே ஏறி இருந்து கொண்டு அகல மாட்டேன் என்றார். இத்தனை சம்பவங்கள் எல்லாம் மற்ற சட்ட சபைகளில் நடக்கின்ற இந்தச் சமயத்தில், இங்கு கட்டுப்பாடோடு, கண்ணியத்தோடு பாசத்தோடு நடந்து கொள்ளுகிற எங்களுடைய தன்மையை நீங்கள் உணர்ந்து கொள்ள மறுக்கின்றீர்கள், அதோடு எங்களைப்பற்றி கண்டித்துக் குறையும் கூறி வருகிறீர்கள் என்றால், நீங்கள் எங்களை நான் முன்னால் குறிப்பிட்ட அந்தப் பாதைக்குத் திருப்பி விடுகின்றீர்கள் என்றுதான் அர்த்தம். நாங்கள் எப்போதும் ஜனநாயகத்தின் அடிப்படையிலேயே நின்றுதான் பணியாற்றுகிறோம். நீங்கள் ஆணவமாக வேண்டுமானால் கருதிக் கொள்ளலாம். நாங்கள் இந்த சபைக்கு வந்தது என்றைக்கும் எதிர் அங்கத்தினர்களாகவே இருப்பதற்காக நுழையவில்லை. இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கத்தான் போகிறோம் (ஆரவாரம்). ஆகவே நாங்கள் பொறுப்பை உணர்ந்திருக்கின்றோம். பொறுப்பற்ற முறையில் நாங்கள் நடந்து கொள்ள மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். அடுத்த படியாக இங்கு பல அங்கத்தினர்களும் தங்களுடைய குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன குறைபாடுகள் எல்லாம் நமது நிதி அமைச்சர் அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் வகையில்

ஒரு குறிப்பு எடுத்து வைக்கிறேன். யார் யார் எதை சொன்னார்கள் என்றல்ல. என்னென்ன குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினார்கள் என்பதைக் குறித்து வைத்திருக்கின்றோம். ஒவ்வொருவரும் தங்களுடைய தொகுதியின் அவைகள் கவனிக்கப்படவில்லை. எங்களுடைய தொகுதி கவனிக்கப்படுமா என்று தெரிய வேண்டும் என்று ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களில் பலரும் கேட்டார்கள். நான் பிற உறுப்பினர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. காங்கிரஸ் காரர்களே இந்தத் திண்டாட்டம் அடைகின்ற பொழுது மற்ற வர்களுடைய நிலைமையைப் பற்றிக் கூறவே வேண்டாம். கனம் அங்கத்தினர் அம்மையார் ஒருவர் கூறினார். "எந்தெந்த மந்திரிகளை யெல்லாமோ அழைத்து வந்து எங்களது குறைகளை எடுத்துச் சொன்னோம். கடைசியில் கனம் மந்திரி கக்கன் அவர்களை கூட அழைத்து வந்து எங்கள் குறைகளைச் சொன்னோம். அவைகளுக்கு இன்னும் நிவாரணம் கிடைக்கவில்லை. எங்களது துன்பக் கண்ணீர் துடைக்கப்படவில்லை" யென்றும் அம்மையார் அவர்கள் கசிந்துருகிக் கண்ணீர் விட்டார்கள். ஏழைகளாகிய நாங்கள் எதிர்க்கட்சியிலுள்ள வர்களாகிய நாங்கள் 'இதுவும் ஒரு கட்சியா? இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? என்று நீங்கள் நினைக்கின்ற நேரத்தில் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் நல்ல சீர்திருத்தங்கள் எல்லாம் கொண்டு வந்த பிறகும் நல்ல நல்ல திட்டங்களெல்லாம் கொண்டு வந்த பிறகும், இவைகள் இத்தனை மோசமாக இருப்பதற்குக் காரணம் என்ன வென்று என் பேதை நெஞ்சம் எண்ணத் துணிகின்றது. மற்றொரு அம்சம், விவசாயிகளுக்கு அறுபது நாற்பது சட்டம் வந்த பிறகு அதனால் நிலச் சுவான்தார்களால் விவசாயிகள் பாதிக்கப்படுவதின் நிலைமைகளைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டினார்கள். சட்டங்களை நிறைவேற்றினால் மாத்திரம் போதாது; அதை நடத்துகின்ற நிர்வாக இயந்திரம் பழுது ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பல இடங்களில் நிர்வாக இயந்திரம் சரியாக வேலை செய்யவில்லை என்று குறிப்பிட்டார்கள். மட ஆலயங்களில் உள்ள ஏராளமான நிலங்கள் உழவர்களுக்குத் தரப்படவேண்டும் என்று அரசாங்கத்தைக் கவனப்படுத்துகின்ற வகையில் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இவைகளை எல்லாம் பார்க்கும் போது 'ஐயோ! இவர்கள் எல்லாம் நம் பக்கத்தில் இருக்க வேண்டியவர்கள்' தேர்தலில் பிரிந்து போய் விட்டார்களே' என்று எண்ணக் கூடிய நிலையில் இருக்கிறது. (சிரிப்பு). இவை தவிர

ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. கிராமங்களுக்குச் சரியான பாதை போக்குவரத்து செய்து கொடுக்கப்படவில்லை, மின்சார கெடுபிடி அதிகமாக இருக்கிறது, இலங்கையிலிருந்து ஏற்படுகின்ற கஷ்டங்கள், இவைகளுக்கு எல்லாம் நிவாரண வழி வேண்டும் என்று இன்று காலையிலிருந்து பல அங்கத்தினர் கூறுகின்றனர். இவைகளையெல்லாம் நாங்கள் உங்களைப் பார்த்துக் கேட்கும் போது நீங்கள் கோபப்படுவானேன்? வருத்தப்படுவானேன்? நாங்கள் இவ்விடத்திற்கு உங்களுக்கு லாலி பாடுவதற்காக வரவில்லை. குற்றங் குறைகளை எடுத்துக் கூறவே வந்திருக்கிறோம். அதுதான் ஜனநாயகத்தின் பொறுப்பு. நாங்கள் இங்கிதம் தெரியாமல் நடந்து கொள்ளவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் போகவில்லை. நீர்ப்பாசன வசதி கிடைக்கவில்லை, குடி தண்ணீர் வசதி கிடைக்க வில்லை என்பதனையெல்லாம் பல அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டினார்கள். இவ்வளவுக்கும் காரணம் என்ன? காங்கிரஸ் அங்கத்தினர் உங்களுக்கு இந்த மன்றத்தின் மூலம் ஒன்று கூறுகிறேன். எதிர் கட்சியில் உள்ளவர்களுக்காவது குறைகள் இருக்கும். அவை நிறைவேற்றி தருவதற்காக அவர்கள் குறைகளைக் கூற வேண்டியது தான். ஆனால் ஆளும் கட்சிக்காரர்களாகிய உங்களுக்குப் பல கமிட்டிகள் இருக்கிறது. அதன் மூலம் அரசாங்கத்திற்குத் தெரிவித்து உங்களது குறைகளைத் தீர்த்துக் கொண்டிருக்கலாம். அவ்விதம் இருந்தும் நீங்கள் எடுத்துச் சொல்வதற்கு காரணம் என்ன? நீங்கள் சொல்லிச் சொல்லி அலுத்து விட்டீர்களா அல்லது அவர்கள் செவிகளில் நீங்கள் கூறுவது ஏறவில்லையா அல்லது எங்கள் எதிரில் சொன்னாலாவது அமைச்சர்கள் வெட்கப்பட்டுக் கொண்டாகிலும் குறைகளைத் தீர்ப்பார்கள் என்பதற்காகப் பேசுகிறார்களா? என்றெல்லாம் எண்ணத் தோன்றுகிறது. ஆகவே இம்மாதிரியான குறைகளைப் பற்றி விரிவாகப் பேசவில்லையென்றால் எதிர்க்கட்சிக் காரர்களாகிய எங்களுக்குப் பட்ஜெட்டின் அடிப்படை கொள்கைகளைப் பற்றி இன்னும் அதிகம் பேசுவதற்கு இடம் கிடைத்திருக்கும். இங்கு கூறப்பட்ட குற்றச் சாட்டுகள் எல்லாம் நிர்வாக இயந்திரம் சரியாக வேலை செய்யவில்லை என்பதுதான். ஜனநாயகம் வளர்வதற்கு, நிர்வாக கொள்கை அடிப்படையில் கவனிக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் தங்களின் அனுமதியின் பேரில் இந்த மன்றத்தில் கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதியை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

"The Finance Minister in his Budget speech will deal with the policies of the New Ministry."

என்று வாக்களித்திருப்பதனால் நிதி அமைச்சர் அவர்களது உரையில் கொள்கை அளவில் அறிவிக்கப்பட்டிருக்கும் என்று எண்ணி இதைத் துருவித் துருவிப் பார்த்தேன். காணவில்லை. இதில் கொள்கை விளக்கம் இல்லாததற்கு இரண்டு காரணம் காட்டப்படலாம். ஒன்று எங்களது கொள்கை உங்களுக்குத் தெரியாதா என்று கேட்பது, இன்னொன்று பொருளாதாரத்தையும் அரசியல் சாஸ்திரத்தையும் சேர்த்து புள்ளிவிவரங்களோடு தருகிறேன் பார் - என்று சொல்லுவது. நான் பள்ளியில் இரண்டு பாடங்களையும் சேர்த்து ஒன்றாய் தான் படித்தேன். இருந்தும் இதில் கொள்கை விளக்கம் என்று ஒன்றுமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் உண்மையிலேயே இந்த வரவு செலவுத் திட்டத்தை நான் ஆராய்ந்த வரையிலும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் தரப்படுகின்ற விபரங்கள் எல்லாம் ஒரு குழுவின் கீழ் தயாரிக்கப்படுகிறது. இந்த குழுவினால் பரிசீலிக்கப்பட்ட மூன்று அம்சங்களைப் பார்த்தால்தான் இந்த வரவு செலவு திட்டத்தின் தாரதம்மியம் நன்றாக தெரியும்.

உதாரணமாக இன்றைய தினம் கனடாவில் இம்மாதிரி வரவு செலவு திட்டத்தை ஆளும் கட்சியினர் உண்மையிலேயே அச்சத்தோடு கொண்டு வந்தார்கள் என்று கருதலாம். ஏனென்றால் அங்கே ஆளும் கட்சியினருக்கும் எதிர்க் கட்சியினருக்கும் இடையே உள்ள எண்ணிக்கையின் வித்தியாசம் 10, 12 தான். இன்றைய தினம் என்னுடைய கட்சியைப் பொறுத்த வரையில் ஆளும் கட்சியினர் நாங்கள் 15 பேர்கள் தான் இருக்கிறோம் என்று கூறுவார்கள். அது மாத்திரமல்ல. எதிர்க் கட்சியிலுள்ள எல்லோரையும் கூட்டிச் சேர்த்துப் பார்த்தாலுங்கூட, கூட்டுவதும் சேர்ப்பதும் கடினம். அத்தனை பேர்களைக் காட்டிலும் 3 மடங்குக்குமேல் அதிகமான பலமுள்ளவர்கள் ஆளும் கட்சியினர். அதனால் அவர்களுக்கு நிச்சயம் தெரியும். என்ன குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டாலும் என்ன ஒழுங்கீனங்கள் எடுத்து விளக்கப்பட்டாலும், இன்றுதானே பேசப் போகிறார்கள். பேசி என்ன காரியம் நடக்கப் போகிறது. என்ன ஆகிவிடப் போகிறது என்ற எண்ணம் தோன்றியிருக்கக் கூடும். இந்த நம்பிக்கையின் பேரிலே இந்த வரவுத் திட்டம் தயாரிக்கப்

பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். எங்கள் எண்ணிக்கையை மட்டும் கருதாமல், எண்ணத்தைக் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நிதி அமைச்சர் அவர்களைப் பலர் பாராட்டினார்கள். பாராட்டுதலினால் அவருக்கு அஜீரணம் ஏற்பட்டு விடுமோ என்ற முறையில் பல அங்கத்தினர்கள் பாராட்டினார்கள். ஆனால் என்னுடைய பாராட்டுதல் இனிப்போடு கொஞ்சம் காரங் கலந்ததாக இருக்குமாதலால் அவருக்கு ஏற்பட்ட அஜீரணம் மாறி ஜீரணம் ஆகிவிடும். தான் யார் என்று நாங்கள் அவரை அறிந்து கொள்ள முடியாமல் நடந்து கொண்டதற்கு நிதியமைச்சரை வெகுவாகப் பாராட்டுகிறேன். தான் யார் என்று காட்டாமல் இருப்பதற்குக் காரணம் கண்டுபிடிப்பதற்கு முன்னால் தான் யார் என்று காட்டிக் கொள்வது நல்லது அல்ல என்று கருதினார்களோ, அல்லது தான் யார் என்று கண்டு பிடிக்கக் கூடாது என்று கருதினார்களோ, தான் யார் என்பதைக் காட்டிக் கொள்ளவில்லை. நான் சொல்லுவது பொருளாதாரப் பாஷையிலே சொல்லுகிறேன். அதிக வரி போட்டுப் பொருளாதாரத்தைப் பெருக்குவதை ஆதரிக்கின்றாரா, கிடைக்கின்ற வருமானத்தை வைத்துக் கொண்டு நாட்டு நிர்வாகத்தை ஓட்டிச் செல்லுகிற பரம்பரை பொருளாதார நிபுணராக இருக்கின்றாரா, துண்டு விழும் பட்ஜெட்டினால் நாட்டிற்கு நன்மை உண்டு என்று கருதுகின்ற பொருளாதார நிபுணராக இருக்கின்றாரா, உபரி பட்ஜெட் நாட்டிற்கு நல்லது என்று கருதுகின்ற பொருளாதார நிபுணராக இருக்கின்றாரா என்பதை அவர் வார்த்தைகளில் காண முடியவில்லை. துண்டுவிழும் பட்ஜெட்டைப் பற்றி பேசுகின்ற பொழுது "Deficit Budget is neet bead. It is a Virtue also" என்று சில அங்கத்தினர்கள் பாராட்டினார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீ முத்தையா செட்டியார் அவர்கள் "இதுதான் ஒரு நல்ல பொருளாதாரம். பன்நெடுங்காலமாக நான் கூறிக் கொண்டுவந்த யோசனையை இப்பொழுது தான் ஏற்றுக் கொண்டார்கள் என்று மிக மிக அவசரமாகக் கூறிச் சென்றார்கள். பற்றாக் குறை பட்ஜெட்டின் மூலம் நாட்டு நலனைச் சரிக்கட்ட விரும்பினாரா, அல்லது நிதி அமைச்சருக்கு கட்டுக் கடங்காத நிலைமையில் இந்த பட்ஜெட்டை கொண்டு வந்திருக்கிறாரா என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இரண்டிற்கும் அடிப்படையிலே வித்தியாசம் இருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

ஜெர்மன் தேசத்தை ஆண்ட ஹிட்லர் துண்டு விழும் பட்ஜெட்டை சர்க்கார் வைத்துக் கொண்டிருக்கும் ஒரு மகத்தான ஆயுதம் என்று கருதி, கட்டுக் கடங்காத அதிகாரத்தை எடுத்துக் கொண்டு, ஏராளமான ஜெர்மன் மார்க்கு நோட்டுகளை அடித்து, துப்பாக்கியின் துணை கொண்டு விநியோகித்து தனது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி காப்பாற்றிக் கொள்ள முடிந்தது. பற்றாக் குறை பட்ஜெட்டின் மதிப்பையும் நிதி அமைச்சர் அவர்கள் வெளிப்படுத்தவில்லை. ஒரு சமயம் நிதி அமைச்சர் அவர்கள் துண்டு விழும் பட்ஜெட் இருப்பதுதான் சரி என்று கருதுகிறாரா என்பதற்காக சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது அவர் நிகழ்த்திய பேருரையை நான் மிகக் கவனத்தோடு பார்த்தேன். விசித்திரம் என்ன வென்றால் இன்று அவர் துண்டு விழும் பட்ஜெட் சமர்ப்பித்ததற்காக எப்படிப் பாராட்டப்பட்டிருக்கிறரோ, அதே மாதிரிதான் அன்று இதே மன்றத்தில் அவர் அதிக வரிப் போட்டதற்காகப் பாராட்டப்பட்டிருக் கிறார். (சிரிப்பு). நிதி அமைச்சர் தனது நிலைமைக் கேற்ப வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கிறார் என்று கருதுகிறேன். பாராட்டுதல் ஜனநாயகத்தில் சகஜம்தான். ஆனால் கொஞ்சம் அது அதிகமாகப் போய் விட்டது என்பது உள்ளபடியே என்னுடைய வருத்தம்.

துண்டுவிழும் பட்ஜெட் போடுகின்ற நேரத்திலே புதிய வரிகளை அவர் போடவில்லை என்பதைப் பற்றியும் சில உறுப்பினர்கள் வரவேற்றுப் பேசினார்கள். என்னைப் பொறுத்த வரையில், என்னுடைய கட்சியைப் பொறுத்த வரையில் வரி அதிகமா, குறைவா என்பதைப் பொறுத்து ஒரு நாட்டின் கஷ்ட நஷ்ட மில்லை என்ற கருத்துக் கொண்டவர்கள் நாங்கள். தாங்குபவர்கள் மீது வரிப்போடுவதும் தாங்க முடியாதவர்கள் மீது இருக்கும் வரியைக் குறைப்பதும்தான் நான் படித்த பொருளாதார அரிச்சுவடியில் போதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சமயம் நிதி அமைச்சர் அதற்கு மேல் படித்த பொருளாதாரத்தில் வேறு விதமாகப் போதிக்கப்பட்டிருக் கலாம். அல்லது அவருக்கு நிர்வாகத்தில் ஏதாவது புதிய அநுபவம் ஏற்பட்டிருக்கிறதோ என்னவோ! (சிரிப்பு). பொருளாதாரத் தத்துவத்தை விளக்கியவர்கள் 'Progression Taxation, regression taxation' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையே வேறு விதமாக 'direct taxation, indirect taxation' என்றும் விளக்கம் அளித்துள்ளார்கள்.

இந்த நிமிடம் வரையிலே நமது வரவு செலவுத் திட்டத்தைப் பார்த்தால் ஏழை மக்கள் தருகின்ற விற்பனை வரியிலிருந்துதான் நமக்கு கணிசமான அளவுக்கு பணம் வருகிறது. எத்தனையோ துறைகள் இந்த நேரத்திலே கவனிக்காமல் விட்டு வைக்கப்பட்டிருக் கின்றன என்று எத்தனை பெரிய கூக்குரல் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிறது?

உண்மையிலேயே விற்பனை வரி மக்களை வாட்டி வதைக்கின்றது என்பதை பல்வேறு கட்டத்தில் எடுத்துக் காட்டியிருக் கிறோம். இந்த நேரத்திலே நாம் எல்லாம் எதிர் பார்த்தது என்ன வென்றால் உணவுப் பொருள்களுக்காவது நமது நிதி அமைச்சர் விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பார்கள் என்பதுதான். தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய வியாபாரிகளும் வியாபாரச் சங்கங்களும் பல காலமாக பல்வேறு மகாநாடுகள் கூட்டி, அவைகளுக்கு அமைச்சர் சிலரைக் கூட வரவழைத்தும், அவர்களிடம் சமர்பித்தும் தங்களுடைய குறைபாடுகளை எடுத்துச் சொல்லி "பல்வேறு கட்டங்களில் போடுகின்ற விற்பனை வரியை ஒரே கட்டத்தில் போட்டால் நாங்கள் திருப்தி அடைவோம்" என்று எடுத்துச் சொன்னார்கள். முதலமைச்சர் வியாபாரக் கூட்டம் நிறைந்த விருதுநகரைச் சேர்ந்தவர் என்பதால் அவ்வாறு செய்வார்கள் என்று நினைத்தோம். வியாபாரிகளுக்கு சலுகை காட்டுகிறார்கள் என்று நாங்கள் சொல்லுவோம் என்று அஞ்சி ஒரு வேளை அக்காரணத்தினால்தான் விற்பனை வரி விஷயத்தில் கொஞ்சம் கண்டிப்பாக இருக்கிறார்களோ என்று எண்ணுகிறேன். அப்படி நாங்கள் சொல்ல மாட்டோம். மற்ற விஷயங்களைக் கருதிஅப்படிச் செய்திருந்தால் போகட்டும். ஆனால் எங்களுக்காக அப்படிச் செய்திருந்தால் தயவு செய்து அதை மாற்றிக் கொள்ளுங்கள். ஒரு முனைவரி விற்பனைவரி போட வேண்டும் என்றும், உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டு மென்றும் கருதுகிறேன்.

நிதி அமைச்சர் அவர்கள் food grains என்பதை food stuffs என்று மாற்றினால் ஓரளவுக்கு நாட்டிலே நல்ல திருப்தி ஏற்படும். வார்த்தைகள் மாற்றம், ஊர்களின் பெயர்கள் மாற்றம்தான் "எங்கள் கட்சியின் திட்டம்" என்று சொல்வதாக அவர் புன்னகை எடுத்துக் காட்டுகிறது (சிரிப்பு). நாங்கள் சொல்லுகின்ற திட்டங்களெல்லாம் செலவு இல்லாத திட்டங்கள்தான். பெரிய செலவுத் திட்டங்கள்

கொடுத்தால் அவர்கள்தான் எங்கு போவார்கள்? வடக்கே போகிறார்கள். ஆனால் அங்கு கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்புகிறார்கள் (சிரிப்பு).

உணவு தானியங்கள் என்பதை உணவுப் பொருள்கள் என்று மாற்றி அவைகள் மீது விற்பனை வரியை நீக்கினால், அதனால் சில லட்ச ரூபாய்தான் வருமானம் குறையும். ஆனால் மக்கள் சாப்பிடுகின்ற பொழுது சர்க்காரை மனமார வாழ்த்துவார்கள். உணவு சாப்பிடுகின்ற நேரத்திலே "நல்ல சர்க்கார் நாட்டிலே நிலவுகிறது. நல்ல மந்திரி சபை நாட்டிலே ஆளுகிறது. உணவுப் பொருள்கள் மீது வரியை எடுத்து விட்டார்கள்" என்று மனமாற வாழ்த்துவார்கள். சட்ட சபையிலே பலபேர்கள் வந்து போகிறார்கள். ஜனநாயகத்தின் பரிசாக இதை மதிப்பார்கள். முதல் கவளத்தில் முதலமைச்சரை வாழ்த்து வார்கள். இரண்டாவது கவளத்தில் நிதி அமைச்சரை வாழ்த்துவார்கள்.

உயர் திரு. சி. சுப்பிரமணியம்: மூன்றாவது கவளத்தில் இதை எடுத்துச் சொன்னவரை வாழ்த்துவார்கள் (சிரிப்பு).

திரு. சி. என். அண்ணாதுரை: சாப்பிடுகின்ற நேரத்திலே சாப்பாட்டுப் பொருள்கள் மீது வரியில்லை என்று பொது மக்கள் ஒரு முகமாக வாழ்த்துவார்கள். சாப்பிடும் பொழுது வாழ்த்துவது நல்லது என்று வைதீகர்கள் கூறுவார்கள். மற்ற விஷயத்தில் வைதீகத்தில் வேறுபட்ட கருத்தைக் கொண்ட நான் இந்த விஷயத்தில் வேண்டுமானால் ஒத்துக் கொள்கிறேன்.

வரவு செலவுத் திட்டத்தில் புதுவரி போடாதது பற்றி இங்கே பேசிய பல காங்கிரஸ் உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினார்கள். நிதி அமைச்சர் வரிபோடாததற்குக் காரணம் பற்றி என்னுடைய அபிப்பிராயம் என்ன வென்றால் ஏற்கனவே பட்ட அடியால் ஏற்பட்ட தழும்பு மாறாமல் இருக்கும் பொழுது தானும் அதன்மேல் அடிக்க வேண்டாமென்று வரிப் போடாமல் விட்டிருக்கக் கூடும் என்று கருதுகிறேன் (சிரிப்பு). எப்பொழுதும் நிதி அமைச்சர் மன அரிப்புக் கொண்டவர்கள். ஒரு தடவை நிதி அமைச்சர் பீடத்தில் உட்கார வைத்து விட்டால் எப்பொழுதும் கனவிலும் நினைவிலும் அவருக்கு வரி என்ற நினைவுதான். ஒரு ஹாஸ்யப் பத்திரிகையில் படித்தேன். மனைவி கட்டிக் கொண்டிருக்கும் சாதாரண சேலையைப் பார்த்து நிதி அமைச்சர் "இதில் வரி இல்லையா" என்று கேட்டாராம். அங்கு கூட

நிதி அமைச்சருக்கு வரியின் கவனம் போகவில்லை. கற்பனை நிதி அமைச்சரைப்பற்றி நான் குறிப்பிட்டேன்; இந்த நிதி அமைச்சரைப்பற்றி அல்ல (சிரிப்பு).

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் வரிப் போடாமல் விட்டிருக்கின்றார். எங்களுக்குப் பயந்து அவர் வரி போடாமல் விட்டிருக்கின்றார் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் அவர்களுடைய கட்சியிலே இருப்பவர்களில் ஒரு சிலர் அப்படிச் சொன்ன காரணத்தால் என்னுடைய கழகத்தைச் சேர்ந்தவர்களும் ''ஆமாம் எங்களுக்குப் பயந்துதான்'' என்று சொன்னார்கள். நிதி அமைச்சர் அவர்கள் வரிப்போடாமல் இருப்பார் என்பதிலே எனக்கு உண்மையிலேயே நம்பிக்கை இல்லை. ஏனென்றால் அவர்களுடைய வாக்கியத்தை நல்ல தமிழிலே எழுதியிருக்கிறார் என்று அங்கத்தினர் எல்லோரும் பாராட்டினார்கள். தமிழ் எப்பொழுதும் பொய்க்காது. தமிழிலே இருக்கும் வாக்கியத்தைப் பார்த்தால் ''இந்த எண்ணத்தில், இப்பொழுது எஞ்சிய பற்றாக் குறையை ஈடு செய்யாமல் தற்காலிக மாக விட்டுவிடுவது நியாயமாகும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம்'' என்று இரண்டு மூன்று ஆபத்தான பதங்களை மிக அழகாக உபயோகப்படுத்தி இருக்கிறார்கள்.

இதற்கு நேர்மாறாக, பம்பாய் மாநில நிதி அமைச்சர் ஜீவராஜ் மேத்தா அவர்களும் இதைப் போல் துண்டுவிழுந்த பட்ஜெட்டை சமர்ப்பிக்கும் போது ''என்னுடைய மாநில மக்கள் ஏகமாக வரி விதிக்கப்பட்டிருக்கிறார்கள். புதிதாக மத்திய சர்க்கார் போட்டிருக்கும் வரியிலே பெரும்பாகம், அதாவது 40 சதவிகிதம் வரை. என்னுடைய மாநிலத்திலிருந்து வசூலிக்கப்படும் என்று நான் அஞ்சுகிறேன். ஆகையால் வரவு செலவுத் திட்டத்திலே துண்டு விழுவதைச் சரிக் கட்டுவதற்கு நான் புதுவரித் திட்டங்கள் எதனையும் போடவில்லை'' என்று காரணம் காட்டுகிறார்.

ஆனால் நமது நிதி அமைச்சர் அவர்கள் காரணம் காட்ட வில்லை - காரணம் காட்டாதது மாத்திரம் அல்ல - காரணம் காட்டியி ருக்கிறார்களா என்று ஆவலோடு அலசிப் பார்த்தேன். காரணம் காட்டாததிலே ஒரு பயம் பிறந்தது. கடைசியில் பார்க்கும் போது ''எந்த எண்ணத்திலோ இப்பொழுது எஞ்சிய பற்றாக்குறையை ஈடு செய்யாமல் தற்காலிகமாக விட்டுவிடுவது நியாயமாகும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம்'' என்று கூறியிருக்கிறார்கள். அதில்

"தற்காலிகமாக என்று இருப்பதாலே" இந்த ஆண்டுதான் அங்கிருந்து விழுந்திருக்கிறது அடி. அந்த அடித்தழும்பே இன்னும் மறையவில்லை. அடுத்த ஆண்டு நான் தருகிறேன். அதுவரையில் பொறுங்கள் என்று அடுத்த ஆண்டுக்கு காக்க வைக்கிறார் என்று தோன்றுகிறது.

வரி என்று குறிப்பிடுகிற நேரத்தில் வரிகளுடைய முறைகளைப் பார்த்துத்தான் ஆளும் கட்சி அல்லது சர்க்காருடைய போக்குகளை நாம் தீர்மானித்துக் கொள்ளமுடியும். அதனாலேதான் பல்வேறு கட்சிகள், முற்போக்குக் கட்சிகள் - இந்த நாட்டை இன்று யார் ஆளுகிறார்களோ, அவர்களுடைய திட்டங்கள் சமதர்மம் பொருந்தியவை என்று நடக்கவில்லையே என்று வருத்தப் பட்டார்கள். அப்பேர்பட்ட வருத்தத்திற்குக் காரணம் புரிகிறது. நம்முடைய ஆட்சியாளர்கள் "சமதர்மம், சமதர்மம்" என்று எடுத்துச் சொல்கிறார்களே தவிர, அவர்கள் இன்றைய தினம் கையாளுவ தெல்லாம் சமயதர்மமே தவிர, சமதர்மம் அல்ல. அதாவது, சமயத்திற் கேற்றபடி சில தர்மங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஐயோ, போதும் வரிபோடுவதற்கு இது சமயம் அல்ல. ஆகவே இப்பொழுது வரி போட வேண்டாம்" என்ற அந்த முறையிலேதான் இருக்கிறது. ஆகவேதான் இவர்களுடையது சமதர்மமாக இல்லை, சமய தர்மமாகத்தான் இருக்கிறது.

இனி வரவு செலவுத் திட்டத்தின் காலத்தைப் பற்றி யோசிக்கும் போது முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவுற்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் துவக்கத்தில் இருக்கிறோம். முதல் ஐந்தாண்டுத் திட்டம் நம் நாட்டை ஓரளவு சீர்படுத்தி இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மேலும் சீர்படுத்தும், ஆகையால் இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தை, நிறைவேற்ற வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியிலே புதிய வரியைப் போட்டாலும் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும் என்ற வாதத்தை என்னால் புரிந்து கொள்ள முடியாது. எப்பொழுது புரிந்து கொள்ள முடியுமென்றால், முதல் ஐந்தாண்டுத்திட்டம் உண்மையிலேயே சகல ஏழை எளிய மக்களுக்கும் நன்மை பயக்கிறது என்று புள்ளி விவரங்களோடு காட்டி, நாட்டு மக்கள் அதனை ஏற்றுக் கொண்டு, முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே அவர்களுக்குக் கிடைத்த வலுவு காரணமாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வாங்கிக் கொள்ளக் கூடிய வலுவு ஏற்படுமானால் அப்பொழுது அவர்களுடைய வாதத்தை உண்மையில் பாராட்டக்கூடும்.

நல்ல வேளையாக சபாநாயகராக அமர்ந்திருக்கும் தாங்கள், மருத்துவத் துறையில் மெலிந்திருப்பவர்களுக்குக் கொஞ்சம் கடினமான டானிக்கு தந்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கு முன்னால் அடிப்படைத் தேவையான உணவு, உடை, குடியிருப்பு இடம் ஆகிய இந்த மூன்று அடிப்படைத் தேவைகளைப் போதுமான அளவு நாம் பெற்றிருக்கிறோமா என்று பார்த்தால் Mr. Sriman Narayan, the General Secretary of the congress party has written in the Economic Review like this:

"The People feel that while the poorer sections cannot escape taxation of an indirect nature in the form of sales tax and excise duties on various necessaries of life, the richer classes have become experts in managing evasion and avoidance of taxes." ஐந்தாண்டுத் திட்டத்திற்காகப் போடப்பட்ட வரிகளைப் பற்றி அகில இந்திய காங்கிரஸின் செயலாளர் ஸ்ரீமன் நாராயண், காங்கிரசுக் கட்சியால் நடத்தப்படுகிற ஏறக்குறைய official Journal என்று எடுத்துச் சொல்லியும் அதற்கேற்றபடி சொல்லக்கூடிய Economic Reviewவில் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், "பணக்காரர்கள் தங்களுக்குப் போடக் கூடிய வரியிலிருந்து இலகுவாகத் தப்பித்துக் கொள்கிறார்கள்; ஆனால் ஏழை மக்களால் தப்பித்துக் கொள்ள முடியவில்லை" என்கிறார்.

தாம் மட்டும் சொன்னால் போதாது என்ற காரணத்தால் பொருளாதாரப் பேராசிரியர் கால்டர் என்பவருடைய கருத்தையும் தெரிவிக்கிறார்.

"According to Prof. Kodora' estimates, evasion of direct taxes in India is of its order of Rs. 200 to 300 crores per year." இப்படி கால்டர் என்ற பொருளாதாரப் பேராசிரியரின் மதிப்பீட்டின்படி இந்தியத் துணைக் கண்டத்தில் ஆண்டொன்றுக்கு இப்படி ஏமாற்றும் வரி 200 அல்லது 300 கோடி ரூபாய் வரையில் இருக்கும் என்ற புள்ளி விவரத்தைத் தந்திருக்கிறார். 200 அல்லது 300 கோடி ரூபாய் என்பது அதிகமானது. 30 அல்லது 40 கோடி ரூபாய்தான் இருக்கலாம். எவ்வளவு தாராளமாகப் பார்த்தாலும். 60 கோடிக்கு மேல் இருக்காது என்று இந்திய சர்க்கார் சொன்னதையும் அறிந்திருக்கிறேன். எனினும் இப்படி பெருத்த அளவுக்கு வரி போய்க் கொண்டிருக்கிறதென்பதை ஸ்ரீமன் நாராயண் அவர்கள் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

அது மட்டுமல்ல, குறிப்பாக ஐந்தாண்டுத் திட்டத்தை பற்றி அவர் குறிப்பிடும் போது "The common man has not been able to feel the glow of the freedom during the last few years in accordance with his expectation" என்று சொல்லியிருக்கிறார்.

இந்த சர்க்காரிடத்திலே இதைச் செய்யவில்லை, அதைச் செய்யவில்லை என்று பல பேர்கள் கேட்கும் போது, சர்க்கார் கட்சியில் இருப்பவர்கள் "இது என்ன, எப்போது பார்த்தாலும் குறைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே!" என்று சொல்லலாம். சர்க்காரிடத்திலே அபாரமான நம்பிக்கை காரணமாகத்தான், மக்கள் இன்றைய தினம் கேட்கிறார்கள். அதைக் குறித்து சர்க்கார் கட்சியிலே இருப்பவர்கள் பெருமைப்பட வேண்டும். வெள்ளைக்காரர்களாக இருந்தால் அவர்களைக் கேட்டிருக்க மாட்டார்கள். வெள்ளைக் காரர்கள் காலத்தில் அரிகேன் விளக்குத் தானே இருந்தது. இப்பொழுது நம் காலத்தில் பெரிய 'ட்யூப்' விளக்கு போடப் பட்டிருக்கிறதே என்று பெருமை பாராட்டிக் கொள்ளாதீர்கள். அப்படிப் பெருமை பாராட்டிக் கொள்வீர்களானால், வெள்ளைக் காரனும் அப்படித்தான் சொன்னான் "ரயிலைப் பார்க்காத உங்களுக்கு ரயிலை நான்தானே காட்டினேன். அப்படியிருக்க அதிலேயே ஏறி என்னைப் போகச் சொல்கிறாயே?" என்று. ஆகையால் ஏகாதிபத்தியத்திலிருந்து பழப்பு ஏகாதிபத்தியமாக காங்கிரஸ் ஜனநாயகம் மாறக் கூடாது என்று கவலை கொண்டு ஸ்ரீமன் நாராயண் சொல்கிறார்.

"The fact remains that our plans and projects have not yet been able to touch visibly the poorest sections of the population" என்று.

மற்றும் ஒன்று கூற ஆசைப்படுகிறேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய நிர்வாகத்தின் கீழ் வந்திருக்கிற "கம்யூனிடி பிராஜெக்ட்டைப்பற்றியும், ஸ்ரீமன் நாராயண் குறிக்கும் போது, அவை திருப்திகரமான நிலையில் இல்லை என்று சொல்லி யிருக்கிறார். அதாவது "Even in the community projects and National Extension Services, it is now being admitted that the lowest sections of the rural population have not been benefited to any considerable extent."

இவைகள் மட்டும் அல்லாமல் "In fact all the available satisfies tend to show that differences between the living standards of the richer and poorer sections instead of being narrowed, down has increased further during the last 9 or 10 years"

என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

இப்போது நான் இந்த மன்றத்தின் முன்னாலே, கனம் சபாநாயகர் அவர்களுடைய அனுமதியின் பேரில் கேட்டுக் கொள்வது என்ன வென்றால், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த அளவு மக்களை ஏமாற வைத்திருக்கிற போது அதே ஏழை மக்களை வரி கொடுக்கச் சொல்லிக் கேட்பதில் என்ன பயன்? ஆகையால், வரி யாருக்குப் போடுகிறார்கள் என்பதைப் பொருத்தும், எப்படிச் செலவழிக்கிறார்கள் என்பதைப் பொருத்தும் இந்த பட்ஜெட்டைப் பற்றி தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஐந்தாவது பாராவில், நிதி அமைச்சர் அவர்கள் ''விலைவாசிகள் ஏறுமுகம், அன்னியச் செலவாணிக் குறைவு இவை இரண்டுமே நாட்டின் பொருளாதார நிலைமையை இன்று பாதிக்கும் பெரும் சிக்கல்கள்'' என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இதை மறுப்பவர்கள் உண்மையை மறைப்பவர்கள் ஆவர். இன்றைய தினம் உண்மையில் இரண்டு பெரிய குறைகள் இருக்கின்றன. ஒன்று விலைவாசி ஏறுமுகம், மற்றொன்று அன்னியச் செலவாணிக் குறைவு. ஆனால், நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்த இரண்டுக்கும் நல்ல பரிகாரங்கள் தேடுகின்ற திறமை, நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாக உண்டு. ஆனால் இந்த இரண்டுக்கும் அவருடைய நேரடியான மேற் பார்வையிலே நேரடியான நிர்வாகத்திலே அவரிடம் ஒப்படைக்க வில்லை. அகில இந்தியாவில் இருக்கும் நிலைமைகளைப் பொறுத்துத் தான் விலைவாசி ஏறுமுகம், அன்னியச் செலவாணிக் குறைவு ஆகிய இரண்டு சிக்கல்களையும் தீர்க்க முடியும். இதனை அவர்கள் நன்றாக உணர்ந்திருக்கிற காரணத்தால், நாம் இவைகளை இங்கும் தீர்க்கப் போகிறோம் என்று எடுத்துச் சொல்லி, தங்களால் செய்யக் கூடிய சில பல காரியங்களைச் சொல்லியிருக்கிறார். அதற்காக, அவர்களைப் பாராட்ட வேண்டும் என்று கனம் அங்கத்தினர்களெல்லாம் விரும்பினார்கள். ஒரு அங்கத்தினர் அவர்கள் உறுக்கமாகக் கேட்டார்கள். ஒன்று கூட நல்லது சொல்ல மாட்டீர்களா?'' என்று. நாங்கள் நஷ்டம் அடையாமல் நீங்கள் லாபம் அடைந்தால், நாங்கள் ஏன் குறுக்க நிற்கப் போகிறோம்? வியாபாரத்தில் அதெல்லாம் சாதாரணமாக ஏற்படக் கூடியதுதான். ஆனாலும் இப்படி யாரோ ஒன்றிரண்டு பேர் புகழ்ந்து பேசிவிட்டார் என்பதற்காக இலகுவாகத்

திருப்தி அடைந்து விடக்கூடிய சபல மனம் படைத்தவர் அல்ல நம் நிதி அமைச்சர் அவர்கள் என்பதை அறிந்த காரணத்தால் நான் அவர்களைப் பாராட்டாமல் இருக்கிறேன். அவர்களுக்கு இருக்கும் அன்பு காரணமாக சிலர் பாராட்டிப் பேசினார்கள். அப்படிப் பேசுவதும் நல்லதுதான். அது இருக்கட்டும் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள், நம்முடைய வசதிக் கேற்ற அளவில், பிரித்து வைத்திருப்பதில் அவர்கள் செய்திருக்கிற நல்ல ஏற்பாடுகள், உண்மையிலேயே வரவேற்க வேண்டியதாய் இருக்கின்றது. ஆனால் அந்த ஏற்பாடுகளை வரவேற்கின்ற நேரத்திலே, அவைகளை மூன்றால் வகுத்துப் பார்த்துத்தான் நம்முடைய தீர்ப்பை அளிக்க வேண்டி இருக்கிறது. அதாவது ஒன்று போடுகின்ற திட்டம்; இரண்டாவது திட்டத்திற்கு ஒதுக்கப்படுகின்ற பணம்; மூன்றாவது அந்தப் பணத்தை செலவு செய்கின்ற நிர்வாக முறை. இந்த மூன்றும் சரிவர இருந்தால் தான் உண்மையிலேயே நம்முடைய திட்டங்கள் நல்ல பலனை அளிக்கும். உதாரணமாக நமது நிதி அமைச்சர் அவர்கள் போன ஆண்டு 38 விதைப் பண்ணைகள் திறக்கப்பட்டன. இவ்வாண்டிலே 136 பண்ணைகள் திறப்பதாகத் தீர்மானித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அது நியாயமான, தேவையான, மக்களால் வரவேற்கத்தக்க ஒரு திட்டமாகும். இத்திட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்தில், இந்தப் பண்ணைகள் எந்த முறையில் வளர்க்கப் படுகின்றன. இந்தப் பண்ணைகளுக்காக தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிலங்கள் யாரிடத்திலே வாங்கப்படப் போகின்றது, அப்படி வாங்கப்படுகிற நிலங்களுக்கு விலை எப்படி நிர்ணயிக்கப்படும் என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். அந்த நிலங்களுக்குப் பதிலாக, நிலச் சுவான்தார்களைக் கூப்பிட்டு - அந்த நிலச்சுவான்தார்களிடத்தே இருக்கிற ஏராளமான நிலத்தில் ஒரு பகுதியில் கட்டாயமான விதைப் பண்ணைகள் வைக்க வேண்டும் என்று சட்டபூர்மாக சொல்லி விடலாம் - ஆனால் ஆளும் கட்சியில் அன்பு பாராட்டும் பலநிலச்சுவான்தார்கள் இருப்பதால் - அவர்களுக்கு கனிவாக எடுத்துச் சொல்லி, உங்களிடத்திலே இருக்கும் நிலத்திலே ஒரு பகுதியை விதைப் பண்ணைக்கு ஒதுக்கி வைக்க வேண்டும் என்று சொன்னால் அவர்கள் கொடுத்து விடுவார்கள். இப்படிச் செய்தால் நாம் அந்தப் பண்ணைகளுக்கு முதலீடு செய்ய வேண்டியதில்லை. இப்படி அந்தத் திட்டத்தை சுலபத்தில் நிறை வேற்றலாம் என்று நான் கருதுகிறேன். விதைகள் கொடுப்பதனைப் பற்றி, இந்த விதைகள் ஏழை உழவனுக்குக் கிடைக்கவில்லை என்று ஒரு அங்கத்தினர் சொன்னார். எந்த நேரத்தில்

''விதைகள் விதைக்க வேண்டும்'' என்று பரிதாபத்துடன் காத்துக் கொண்டிருக்கிறார்களோ, அந்த நேரத்தில் விதைகள் வராமல், அறுவடை காலத்தில் வருவதால் அதையும் சேர்த்து மார்க்கெட்டில் விற்று விடுகிறார்கள் என்று கனம் அங்கத்தினர் ஒருவர் அனுபவம் காரணமாக கிராமப்புறத்தில் இருக்கும் நிலைமையை தெளிவாகச் சொன்னார்கள். ஏட்டிலே திட்டங்களைக் காட்டுவதால் மட்டும் பாராட்டுதலுக்குரியவர்களாக மாட்டார்கள் நாட்டை ஆளுகின்ற சர்க்கார். ஏட்டிலே போடுகின்ற திட்டம் எந்த அளவுக்கு ஒவ்வொரு வீட்டிலும் இதற்கு முன்னாலே இருந்ததை விட வயிற்றுக்கு ஒரு கவளம் சோறு அதிக மாகியிருக்கின்றது. தமக்கு ஒரு உச்சிக் கரண்டி எண்ணை அதிகமாகியிருக்கின்றது. வாழ்வுக்கு ஒரு வேளை நிம்மதி அதிகமாகி இருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும். நிம்மதி கலந்த புன்னகைதான் ஒரு நிதி அமைச்சர் எதிர்பார்க்கும் பரிசும் புகழுமாகும். தங்கள் கட்சிக்காரர்களும், எதிர்க் கட்சிக்காரர்களில் இரண்டொரு பேரும், புகழை வீசி விட்டார்கள் என்றால் அது எந்த அளவும் பலனளிக்காது. அதை நான் நிச்சயமாக உணர்ந்திருக்கிறேன்.

போன ஆண்டு 36 விதைப் பண்ணைகள் திறக்கப்பட்டன. இந்த ஆண்டு 136 பண்ணைகள் திறக்கப் போகிறோம் என்று நிதி அமைச்சர் அவர்கள் ஆவலோடு சொல்லுகின்ற காரணத்தால் நாம் அதனை நம்ப வேண்டி இருக்கிறதே தவிர, இதுவரை நடந்து வந்திருக்கிற முறையைப் பார்த்தால், அந்த 136 பண்ணைகளும், இந்த ஆண்டிலேயே திறக்கப்பட்டு விடுமோ என்கிற ஐயப்பாடு இருக்கின்றது. சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே ''இந்த ஆண்டு 50 விதைப் பண்ணைகள் திறக்கப் போகிறோம்'' என்று வாக்குறுதி அளித்தும் அதில் 38 தான் திறந்தார்கள். அதாவது 50 சொல்லி 38 என்றால் 136 சொல்லி 36-ரோடு நின்று விட்டால் என்ன செய்வது. ''ஆண்டவனே, அவருக்கு அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தைத் தராமல், எல்லாம் பண்ணைகளையும் திறக்க வேண்டும் என்ற ஒரு எண்ணத்தைத் தரவேண்டும்'' என்று நான் ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன்.

மற்றொன்று, நீர்ப்பாசனத்திறக்காக சிறு பாசனத் திட்டங்கள் 55 லட்ச ரூபாய் செலவில் இந்த ஆண்டு தொடர்ந்து நடக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறது. சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பார்த்தால், 1 கோடியே 23 லட்சம் ஒதுக்கப்பட்டதாக புள்ளி

விவரங்கள் காட்டுகிறது.

நமது நிதி அமைச்சர் அவர்கள் நீண்ட காலமாக நிதி அமைச்சராக இருக்கிறதாலோ, அல்லது நான் முதன் முறையாகப் பார்க்கின்றேன் என்ற காரணத்தாலோ சில குறைபாடுகள் இருக்கலாம் - உண்மையில் அதன் பொருளாதாரத் தத்துவத்தை - சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு குறைவாக இருக்கும் அரசியல் காரணத்தை - விளக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றி இங்கு நடந்த விவாதத்திலே இரண்டு பெரிய பிரச்சனைகள் பேசப்பட்டன. ஒன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நாட்டு மக்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்லிக் கொண்டு வருவது "பெரிய ஆறுகள் இல்லை; அதனால் அணைக்கட்டுகள் கட்டுவதற்கில்லை" - உண்மையிலேயே பெரிய ஆறுகள் இல்லை - பெரிய ஆறுகள் கிடையாது அணைக் கட்டுக்கள் கட்ட என்று நாகரிகமான முறையில் எடுத்துச் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் கட்சியைச் சேர்ந்த சில பேர்கள் "ஆறுகள் இல்லை அணைகட்ட, அண்ணாதுரை வாய்க்குத்தான் அணைகட்டியாக வேண்டும்" என்று. முடிந்த வரையில் கட்டுங்கள் - வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் இன்று சிறு நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றி பேசுகிற காலத்தில் உண்மையிலேயே நம் நாட்டில் இன்னமும் வீணாகிக் கொண்டிருக்கிற மலை அருவிகளைக் கட்டுப்படுத்தி சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் செய்யக் கூடியது நிறைய இருக்கிறது. அவைகள் தள்ளப்படாததற்குக் காரணம், அப்படிச் செலவழிக்கப் படுவதன் மூலம் நமக்குக் கிடைக்கும் வருவாய் மிகவும் குறைவானதாக இருக்கிற ஒரு காரணத்தால், ஒதுக்கி வைக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதால் கிடைக்கும் நேர்முகமான லாபத்தைப் பார்க்கிறார்களே தவிர அந்த மக்கள் மனதிலே ஏற்படக் கூடிய சந்தோஷம், அந்த மக்களுக்கு ஏற்பட கூடிய திருப்தி இவைகளை ரூபாயாக மாற்றி பார்த்தால் உண்மையிலேயே எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரு ஏற்பாட்டை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

அதைப் போலவே என் தொகுதியைப் பற்றி பேசாவிட்டால் அண்ணாதுரை திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி பேசினாரே

தவிர தன் தொகுதியைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை என்று நாங்கள் கருத மாட்டோம். என் தொகுதியில் உள்ளவர்கள் கருத மாட்டார்கள். ஆனால் இங்கு எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் சொல்வார்கள். என் தொகுதியில் இருக்கும் வறண்ட ஒரு ஆற்றைப் பற்றி முதல் அமைச்சர் அவர்களின் ஈரமான நெஞ்சத்திற்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நான் ஒரு சிறுவனாக பள்ளியில் படித்த காலத்திலே, படித்துக் கொண்டிருக்கும் போது அங்கே இருந்த ஒரு ஆசிரியர் மணியை அடித்து பிள்ளைகள் வீட்டிற்குப் போகலாம் பாலாற்றிலே தண்ணீர் வந்தது என்றார். எங்கள் பகுதியிலே பாலாற்றிலே தண்ணீர் வந்ததென்றால் பள்ளிக் கூடத்திற்கு விடுமுறை விட்டுக் கொண்டாட வேண்டிய ஒரு காட்சியாகும். ஆனால் அது ஒரு நல்ல ஆறு - பெரிய ஆறு. ஆண்டுக்கொரு தடவை சபாநாயகருக்கு எடுத்து சொல்லிக் கொள்கிறேன். நாலு நாள் மூன்று நாள் பெய்கிற மழையில் தண்ணீர் வெள்ளமாக வருகிறது; அந்தத் தண்ணீரை ஆங்காங்கு சிறு சிறு தேக்கங்களாக நிரப்பி அங்குள்ள பெரிய பெரிய ஏரிகளையும் குளங்களையும் நிரப்பி செங்கல்பட்டில் நீர்ப்பாசனம் நடந்து வருகிறது. இரண்டு குறைபாடுகளை நான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆற்று வெள்ளம் ஏரியில் தேக்கப்படுவதால் அந்த வெள்ளத்தில் அடித்து விடும் "சில்ட்" அதாவது வண்டல்மண் அந்த ஏரியில் படிந்து ஆழம் குறைவது. அது நாளாவட்டத்தில் வடி கால்களை உடைத்துக் கொண்டு வெள்ளம் வந்தாலும் தண்ணீர் தங்காமல் கக்கிக் கொண்டு வெளியில் போகிறது. எப்படி சில விஷயங்களைப் படித்தாலும் உண்மைப் பொருளை தெரிந்து கொள்ள முடியாமல் தவறாமல் வெளியே கக்கி விடுகிறோமோ அதைப் போல பொங்கி வரும் நீரை வெளியே கக்கி விடுகிறது. பல தடவைகளில் சென்னை சர்க்காரும் மைசூர் சர்க்காரும் நடத்திய பல்வேறு மாதிரியான பேச்சு வார்த்தைகள் எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்று அறிய விரும்பினால் அது முடிந்து விட்ட தென்று சொல்லுகிறார்கள். நம்முடைய ஊர்வாகப் பிரச்சனை எதனையும், முடிந்து விட்டது என்று கருதாமல் நமது மாநில முதலமைச்சர் அவர்கள் பாலாறைப் பற்றி மைசூர் ராஜ்ய முதலமைச்சரோடு மறுபடியும் கலந்துபேசி - முன்னாலே நிபுணர்கள் எல்லாம் கலந்து பேசினார்கள் - நமது முதலமைச்சர் காமராஜ் அவர்கள் நிபுணர் அல்ல. நிபுணர் அல்லாத ஒரு காரணத்தால் நாட்டு மக்கள் அவர்களிடத்தில் இன்றைய தினம் நிறைந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் - நிபுணர்கள் புள்ளி

விவரங்களை நம்புவார்கள். நிபுணர் அல்லாத இவர் நாட்டு மக்களுடைய பசித்த வயிற்றினையும் காய்ந்த தலையினையும், கவலை படிந்த முகத்தினையும் பார்த்துத்தான் நாட்டின் நிலைமையைத் தெரிந்து கொள்கிறார் - ஆகையால் பாலாற்றுக்குத் தண்ணீர் வருவதற்கு மைசூர் சர்க்காரிடம் உடனடியாக மறுபடியும் பேச்சு வார்த்தைகளும் துவக்கி வைக்க வேண்டும். அதுவும் இல்லையென்றால் இன்றைக்கு ரஷிய நாட்டிலே இது போன்ற நிலைமையில் ஆற்றிற்கு மேலே தண்ணீர் இல்லாமல் போனாலும் 'சப் சாயில் வாட்டர்' அதாவது பூமிக்கு அடியிலே இருக்கும் தண்ணீரை மின்சாரத் திட்டம் மூலமாக ஆங்காங்கு வெளியே கொண்டு வந்து அதன் மூலம் நீர்ப்பாசனம் நடத்துகிறார்கள். இதை நமது 'எஞ்ஜினியரிங் டிப்பார்மெண்ட்' எடுத்து சொல்லக் கூடும். அந்த முறையிலே பாலாற்றிற்குத் தண்ணீர் கொண்டு வர வேண்டுமென்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அப்படி பாலாற்றிற்கு தண்ணீர் கொண்டு வந்து விட்டு எங்கள் கழகத்தைப் பற்றி செங்கல்பட்டு மாவட்டத்திலே எந்த மூலை முடுக்கிலே போய் திட்டினாலும் மாலை போடுவார்கள். எவ்வளவு வேண்டுமானாலும் திட்டட்டும். மன்னர் தண்ணீர் கொண்டு வந்தாரே என்று பாராட்டுவார்கள். அதிலே இரண்டு லாபம் இருக்கிறது. ஒன்று மக்களுடைய ஆதரவு கிடைக்கிறது. இரண்டு எங்களை அடக்குவதற்கு ஒரு வசதி கிடைக்கிறது. இன்றைக்கு பாலாற்றுக்குத் தண்ணீர் கொண்டு வந்தால் போதும். அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

Mr. Speaker : I Suppose the Honourable Member will finish his speech soon.

Sri. A.A. Rasheed : How much most time the Honourable member will take.

Mr. Speaker : I hope the Honourable member will finish reasonably quicker.

திரு. சி. என். அண்ணாதுரை : சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை சபையில் கொண்டு வந்து பேசிய போது நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர் விடுத்த வேண்டுகோளை இந்த இடத்தில் படிக்க விரும்புகிறேன்:-

"ஆனால் நமக்கு உண்மையில் ஆழ்ந்த கவலை ஊட்டக்கூடிய அம்சம் ஒன்று உள்ளது. நம் இந்திய தேசியத் திட்டத்தில் மொத்தச் செலவின் பெரும்பகுதி இரும்பு எஃகு போன்ற அடிப்படைத் தொழில்கள். அபிவிருத்திக்காகவும் அந்த வளர்ச்சிக்கு ஏற்றாற்போல

அதையொட்டி போக்குவரத்துச் சாதனங்களில் முன்னேற்றம் காணவும் பயன்படும் பொதுத்துறையில் இந்த இனங்களுக்காக சுமார் 2,000 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. இப்பெருந் தொகையில் குறிப்பிடத்தக்க பகுதி எதுவும் தென்னிந்தியாவில் செலவு செய்யப்படுவதாகத் தோன்றவில்லை. நம்மிடம் திட்டங்கள் இல்லை என்பது உண்மைதான். ஆனால் தெற்குப் பிராந்திய வளர்ச்சிக்காக, தேசத்தின் திட்டத்தில் குறிப்பிடத்தக்க முயற்சி எதுவும் இல்லை என்ற உண்மை மாறி விடாது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்திற்காக சுமார் 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 50 கோடி ரூபாயையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் கூட தெற்கு ராஜ்யங்களுக்காக செலவாகும் தொகை விகிதாச்சாரம் அவ்வளவாக உயராது. மேலும் நெய்வேலித் திட்டம் பரீட்சார்த்த நிலையில் இன்றும் உள்ளது. முக்கிய இயந்திரத் தொழில்களை நிறுவுவதற்கு ஏற்ற இடங்கள் தென் பிராந்தியத்தில் நிறைய இருக்கின்றன. அத்தொழில்களுக்காக இடத்தைத் தேர்ந் தெடுக்கும் போதாகிலும் இந்தப் பிரதேசத்திற்கு சற்று சலுகை காட்டுவது மிகவும் அவசியமாகும். நிலத்தை நம்பி வாழும் மக்கள் தொகையையும் சாகுபடியாகும் மக்கள் தொகையையும் சாகுபடியாகும் ஏக்ரா அளவையும் எடுத்துப்பார்த்தால் இந்தப் பிரதேசத்தில் இருக்கும் ஜன நெருக்கடிபோல் நாட்டில் வேறெங்கும் கிடையாது. கனமின்சார இயந்திர தொழிற்சாலை நிறுவிட உத்தேசம் உள்ளது. அதற்குத் தேவையான வசதிகள் அனைத்தையும் நாம் செய்து தர முடியும். சேலத்தில் 'பாக்ஸைட்' கனிகளிலிருந்து அலுமினியம் உற்பத்தி செய்ய நம் மின்சார இணைப்பில் போதிய மின்சாரம் உள்ளது. இணைப்பில் போதிய மின்சாரம் உள்ளது. புதிதாக உற்பத்தியாக விருக்கும் எஃகிலிருந்து கன இயந்திரங்கள் செய்ய ஒரு தொழிற்சாலை இங்கு நிறுவுவதற்கும் இங்கு இடம் இருக்கின்றது. இப் பிரச்சனைகள் குறித்து நம் கருத்தை நாம் வற்புறுத்தியுள்ளோம். இச்சபையும் என்னுடன் சேர்ந்து இக் கருத்தை மேலும் வன்மையாக ஆதரிப்பதன் மூலம் நம் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமை யாததாக உள்ள இந்த அம்சங்களை திட்டக்கமிஷனும் இந்திய அரசாங்கமும் உரிய முறையில் கவனிக்கும்படி செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

கடைசியில் ஒரு வேண்டுகோளையும் விடுத்திருக்கிறார்கள். இவைகளை எல்லாம் செய்ய என்னுடைய கரத்தை வலுவடைய

செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்த நாட்டை தொழில் துறையிலே வளர்ச்சியுறச் செய்வதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒத்துழைப்பை உண்மையிலேயே விரும்பினால் இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம் அதற்குத் தயாராக இருக்கிறது. ஆனால் தொழில் முன்னேற்றம் தொழிலாளர்களை பாதிக்காமல் வாழ வைக்கக் கூடியதாகவும் நாட்டின் செல்வத்தைப் பெருக்கக் கூடியதாகவும் முதலாளித்துவ வர்க்கத்தை மாற்றி அமைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டுமானால் அதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு எப்போதும் கிடைக்கும். ஆனால் இந்த ஒத்துழைப்பை ஆட்சியாளர்கள் எந்த நேரத்தில் எந்தக் கட்டத்தில் கேட்கிறார்கள் என்பது தீர்மானிக்கப்பட வேண்டும். எதிர்க்கட்சி ஒத்துழைக்க வேண்டும், ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்கிறார்களே தவிர, எந்த நேரத்தில் எந்தக் கட்டத்தில் கேட்கிறார்கள் என்பது தெளிவு படவில்லை. நான் கருதுகிறேன் திட்டங்களைத் தீட்டும் நேரத்தில் ஒத்துழைப்பைக் கேட்டால் நாங்கள் தயார். இராமயணத்திலிருந்து சொன்னால் இங்கு உள்ளவர்கள் திருப்தி அடைவார்கள் என்ற எண்ணத்தில் சொல்கிறேன். அணில் கூட அல்லவா இராமனுக்கு உதவி புரிந்தது. அந்த முறையில் அண்ணாதுரை பயன்படக் கூடும் (சிரிப்பு). முன்னால் திட்டம் தீட்டும் நேரத்தில் கேட்டால் எங்கள் ஒத்துழைப்பு நிச்சயம் கிடைக்கும் என்று சொல்லி வரவு செலவுத் திட்டத்தில் தற்காலிகமாக வரி விதிக்காத நிதி அமைச்சரைத் தற்காலிகமாக பாராட்டுகிறேன்.

Mr. Speaker : The House will now adjourn and meet again at 9. a.m. on Friday the 5th July 1957.

The House then adjourned.

தொழில் வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடு விவாதம்

உரை : 4 **நாள் : 24.07.1957**

(தமிழகம் தொழில் துறையில் வளம் பெற வேண்டும். வளம்பெற வாய்ப்புக்கள் இருப்பினும் பொறுப்புடைய அரசுக்கு ஆணை பிறப்பிக்க அதிகாரம் இல்லை. மத்தியில் குவிந்த அதிகாரங்கள் மாநிலத் தொழில் வளர்ச்சியை முடமாக்குகின்றன. கத்தும் கடல் களுக்கப்பால், முத்தையும் பட்டையும் அனுப்பிய தமிழகம் தாழ்ந்திருக்கும் காரணம் என்ன? என்பதை யெல்லாம் இவ்வுரையில் காணலாம். அடுக்கு மொழியால் மட்டுமே பேசத் தெரியும் என எள்ளி நகைப்போருக்கு பொறுத்தமான புள்ளி விவரங்கள் அழுத்தமான பதிலுரையாக அமைகிறது.

- பி. இரத்தின சபாபதி)

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே தொழில் துறையிலே ஒதுக்கப்பட்டிருக்கின்ற மான்யத்தின் பேரில் தரப்பட்டிருக்கிற வெட்டுத் திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகளை நான் பேசுகின்ற காலத்தில், தொழில் துறையிலே இன்னும் அதிகமான அளவுக்கு கவனம் செலுத்தவேண்டுமென்று சர்க்காருடைய திறமையை தூண்டுவதற்காக இந்தக் கருத்துக்களை சொல்லுவதாக சர்க்கார் கட்சியினர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொதுவாக, தொழில்துறையை பொறுத்தவரையிலே இந்த சர்க்காருக்கு ஒரு நல்ல திட்டம் இல்லை என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். அம்மாதிரி குற்றம் சாட்டுகின்ற நேரத்திலே, நான் அவர்கள் சார்பிலே வாதாடி, அவர்களுக்கு ஒரு திட்டம் இல்லாததற்கும் காரணம் திட்டம் வகுக்கின்ற பொறுப்பு அவர்களிடம்

இல்லை என்ற சமாதானத்தை அவர்கள் சார்பிலே நான் தேடிக் கொள்ளுகிறேன். அப்படி தேடிக்கொள்ளுகின்ற நேரத்திலே, மாநில ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றவர்கள் திட்டம் வகுக்கின்ற பொறுப்பு வேறு ஒரு இடத்தில் இருப்பது தங்கள் வளர்ச்சிக்கு உகந்தது அல்ல என்ற கருத்துப்பட, தங்களுடைய சொல்லையும் செயலையும் ஓரளவுக்கு பக்குவப்படுத்திக் கொள்வார்களேயானால், தொழில் துறையிலே நல்ல திட்டங்கள் வகுப்பதற்கு இந்த மாநிலத்திற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கும் என்று நான் கருதுகிறேன். நான் இதற்கு நாட்டுப் பிரிவினையை ஆதாரமாகக் காட்டவில்லை. நான் அப்படி ஆதாரமாகக் காட்டினால், அதனால் ஆட்சியாளர்களுக்கு சில சங்கடங்கள் ஏற்படலாம். ஆகையால், நாட்டுப் பிரிவினையை நான் ஆதாரமாக வற்புறுத்தாவிட்டாலும்கூட, ஜப்பான் நாட்டில் பொதுவாக நடப்பது பற்றி எடுத்துரைக்க விரும்புகிறேன். அந்த நாட்டில் அந்தந்த பிரதேசங்களுக்கு (ரீஜனல் போர்டு) தொழில் திட்டங்கள் வகுக்கப்பட்டு, ஒன்றுக்கொன்று முரண்பாடில்லாத வகையில் பொதுவான திட்டங்கள் வசதியாக இருக்கின்ற நேரத்தில், அந்தந்த பிரதேசங்களுடைய திறமைக்கும், தட்பவெட்ப நிலைமைக்கும், மக்களுடைய வருவாய்க்கும் உகந்த நிலைமையில் தேவைப்படி திட்டங்கள் வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி வழியில் ஜப்பான் நாட்டில் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை ஆட்சியாளரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

தொழில் துறையிலே நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம் என்பது ஒரு கட்சி எடுத்துச்சொல்லி, அதை மாற்றுக் கட்சி மறுக்கும் பிரச்னை இல்லை. எல்லா கட்சியில் உள்ளவர்களும் தொழில் துறையிலே தென்னாடு பின்தங்கியிருப்பதை அறிவார்கள். தொழில் துறையிலே நம் முன்னேற்றத்திற்காக தீட்டப்பட்ட முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதனையும், இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் கூட தென்னாட்டினுடைய வளர்ச்சியை முக்கியமாக கருதாதபடி, நம்முடைய மாநில அரசு கேட்ட தொகையை பெறமுடியாமல் கூட திகைத்து திரும்பியதையும் நாடு பூராவும் நன்றாக அறிந்திருக்கிறது. நம்முடைய பொருளாதார திட்டத்தை அகில இந்திய அடிப்படையில் வைத்திருக்கிற வரையில், அகில இந்திய திட்டங்கள் நாட்டிலே அமுல் நடத்தப்படுகிற வரையில், உண்மையிலே பல பிரதேசங்கள் பஞ்சப் பிரதேசங்களாக வேண்டுமென்று அல்ல. விரும்பினாலும் கூட முன்னேற்றத்துக்கு வழி

வகுக்கமுடியாத காரணத்தினாலே, பஞ்சப் பிரதேசங்களாகத்தான் நடத்தப்படும். உதாரணமாகச் சொல்ல வெண்டுமென்றால், எங்கள் கட்சியிலே நாங்கள் எப்பொழுதுமே ஏதோ வேடிக்கையாக எடுத்துக் காட்டுகிறோம் என்று நாட்டை ஆளுகின்ற கட்சி அலட்சியம் காட்ட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். உடல் முழுதும் குளிக்க வேண்டுமானால், முதுகுப் புறத்தை தேய்ப்பதற்கு வாலிபர்களாக உள்ளவர்கள் மனைவி மார்களையும், வயதானவர்கள் தங்களுடைய துணைவர்களையும் வைத்துக்கொள்ளுகிறார்கள். சாதாரணமாக நாடுபூராவும் பொருளாதாரத் திட்டம் போடுகின்ற நேரத்தில், சில பகுதிகள் பஞ்சப் பிரதேசங்களாக, வேண்டுமென்றல்ல, முடியாத காரணத்தினால் ஆக்கப்பட்டு வருகின்றன.

அகில இந்திய ரீதியில் தரப்பட்டிருக்கிற புள்ளிவிவரத்தில் கூட பம்பாய் மாநிலத்தில் சம்பாதிக்கிறவர்கள் 43 பேர்கள் என்றும், அவர்களால் பாதுகாக்கப்படுகின்றவர்கள் 57 பேர்கள் என்றும், சென்னைமாநிலத்தில் சம்பாதிக்கிறவர்கள் 31 பேர்கள் என்றால், அவர்களால் காப்பாற்றப்பட வேண்டியவர்கள் 69 மக்கள் என்றும் கணக்கு போடப்பட்டிருக்கிறது. ஆகையினால் இங்கே சம்பாதிக்கின்றவர்கள் தொகையும் குறைவு. அவர்கள் சம்பாதிக்கின்ற பணத்தை வைத்துக்கொண்டு, பிழைப்பு தேட வேண்டியவர்களின் தொகையும் அதிகமானதாக இருக்கிறது. பிழைப்பு எந்த அளவுக்கு கிடைக்கின்றது என்று பார்த்தால், தென்னாட்டிலே உழவு நாட்கள் ஆண்டு ஒன்றுக்கு 181 என்றால், அதே உழவனுக்கு வட நாட்டிலே 292 நாட்கள் என்றும், தென்னாட்டிலே உழவனுக்குக் கிடைக்கின்ற வருவாய் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 382 என்றால் வட நாட்டிலே உழவனுக்கு கிடைக்கின்ற வருவாய் ரூ. 512 என்று சர்க்கார் தருகின்ற புள்ளி விவரங்களே சொல்லுகின்றன.

புள்ளி விவரங்களிலுள்ள நன்மை தீமையைப்பற்றி நான் ஓரளவுக்கு அறிந்திருக்கின்றேன் என்றாலும் சர்க்கார் தந்திருக்கின்ற புள்ளி விவரங்களிலிருந்து ஒரு உண்மை புலனாகிறது. எந்தவகையில் பார்த்தாலும் வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் ஏற்றத் தாழ்வு இருக்கின்றது என்பதை நாங்கள் எடுத்துச் சொல்லும்போது ஆளும் கட்சியிலுள்ளவர்களுக்கு எரிச்சல் ஏற்படும் என்று நினைத்தோ அல்லாமலோ அடிக்கடி வடக்கு தெற்கு என்று கேலிசெய்வது போன்று ஏதோ சொல்ல வேண்டுமென்று நினைத்து இடக்கு பேசி மடக்கி

வருகிறார்கள் என்கிறார்கள். நாங்களும் இதைப்போன்று சொல்ல முடியும். இவ்விதம் பேசுவதின் காரணம் அவர்களின் மனதிற்கு நாங்கள் சொல்லும் உண்மையைப் பார்த்து அவர்களின் மனம் 'படக் படக்'கென்று அடித்துக்கொள்ளுகிறது. மற்றொரு வகையில் பிரச்னையை மழுப்புவதற்காக சொல்லப்படுகிறது. நாங்கள் எல்லாம் ஒன்று, அகில இந்தியா பூராவும் ஒன்று என்று பார்த்து காரியங்களை நடத்துவோம், நீங்கள் பிளவு மனப்பான்மையுடையவர்கள், நீங்கள் பேத புத்தியோடு பிரச்னைகளை பார்க்கிறீர்கள் என்று வாதங்களை சொல்லி பிரச்னையை மழுப்புகின்றார்கள். ஆனால் தெற்கு பகுதியை தாழ்த்திவிட்டு எத்தனை பெரிய தூய்மையான வாதங்களை எந்த பெரிய தலைவர்கள் சொன்னாலும் அதை ஒத்துக்கொள்வதற்கில்லை. தென்னாட்டில் இருக்கின்ற குறைகளை நீக்கினால் ஒழிய தென்னாடு முன்னேற்றம் அடையாது. இதை மறுத்து எந்தவிதமான அரசியல் வாதங்களை கூறினாலும் ஒத்துக்கொள்வதற்கில்லை. சென்னையில் பொருளாதார நிபுணராக இருந்த திரு. பி. ஜே. தாமஸ் அவர்கள் சென்ற கிழமையில் குறிப்பிட்டிருப்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும் சரி, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் சரி பொதுவாக தென்னாட்டை விட வட நாடு வளம் பெறுகிறது, என்று எடுத்துச் சொல்லி, தென்னாடு முன்னேற வில்லை என்று தென்னாட்டார்கள் பொறாமையின் காரணமாக பேசவில்லை என்பதையும் எடுத்துச் சொல்லி ஒரு பகுதியில் மாத்திரம் விலைவாசி ஏறியிருப்பதின் காரணங்களையும் எடுத்துச் சொல்லி இதை மாற்றுவதற்கு தென்னாட்டுக்கு ஒரு திட்டம் தேவை என்பதையும் எடுத்துச்சொல்லி இதற்கு நல்ல பாதுகாப்பு உணர்ச்சியோடு அரசியல் கலப்பு இல்லாதவர்கள் பணியாற்றினால் நல்லது என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த அளவு நாங்கள் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்று சொல்லுகின்றோமோ அதேதான் இன்று நாலா பக்கங்களிலும் பேசப்படுகிறது. ஆதரிக்கப்படுகிறது. அதே நேரத்தில் அந்த காற்று எந்த பக்கம் அடிக்கிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும் என்பதை கூற விரும்புகிறேன். இது வெறும் கேலிக்குரியது என்று கருதக்கூடாது. நாட்டுக்கு எது தேவை என்பது எங்களுக்குத் தெரியும். நாட்டில் எவ்விதம் இருந்தாலும் நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை, நாட்டுக்கு உழைத்தவர்கள் நாங்கள்தான், எங்களுக்குத்தான் அந்த உரிமையுண்டு என்று ஆளும் கட்சியிலிருந்து பதில் அளிக்கப்

படுகிறது. நாட்டுக்கு உழைத்தவர்களுக்கு நாங்கள் தலை வணங்குகிறோம். அவ்விதம் தலைவணங்குகின்ற நேரத்தில் அதை வைத்துக்கொண்டு ஆட்சியில் இருக்கும் அமைச்சர்களால் நாடு எவ்விதம் நடத்தப்படுகிறது என்பதை பார்த்து பரிதாபப்படுகிறேன். நாட்டை மீட்டு நல்வழிக்கு கொண்டு வரவேண்டும் என்றுள்ள உணர்ச்சி, அதன் மூலம் எழுகின்ற நம்பிக்கை அந்த பக்கத்திலுள்ளவர் களுக்கு மாத்திரம்தான் இருக்கும் என்பதல்ல. இந்த புறத்தில் இருப்பவர்களுக்கும் அந்த நம்பிக்கை வரக்கூடும் என்பதை, சபாநாயகர் மூலமாக அவர்களுக்கு பணிவன்புடன் கூறிக் கொள்கிறேன். இந்த சட்டமன்றத்தில் அடிக்கடி கூறப்படுகிறது. நாங்கள்தான் இந்நாட்டுக்கு தியாகம் செய்திருக்கிறோம், நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கப்படுகிறது. என்னுடைய கட்சியை பொறுத்தவரையில் எங்களை சார்ந்திருந்த தலைவர்கள் வேண்டுமானால் நீங்கள் சொல்லுவதை ஏற்றுக் கொள்ளலாம். அவர்களில் ஒரு சிலர் இன்றைய தினம் உங்கள் நண்பர்களாகி விட்டார்கள். (கைதட்டல்). எங்களை பொறுத்த வரையில் "ஊருக் கிளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி" என்பது போன்று நாங்கள் பிரச்னைகளைப் பற்றி சொல்லுகின்ற நேரத்தில் நீங்கள் என்னவேண்டுமானாலும் சொல்லலாம் என்று நினைத்து சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அதை விட்டு விட்டு பிரச்னைகளை தீர்த்து வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நான் சில யோசனைகளை சொல்லுவதற்கு முன்னால் தொழில் துறை எந்த நிலையில் இருந்தது என்பதற்கு ***1945-1951-ல்*** under the Post-War Development Scheme-the industries development-ல் என்னென்ன தொழில்கள் இருந்தன என்பதை இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்-

1. The Soap Institute and Soap Factory at Calicut;
2. The Oil Factory and Hydrogenation Unit at Calicut;
3. Shark Liver Oil Unit at Calicut;
4. Coir School and Coir Production in Andhra.
5. Oil Institute at Anantapur;
6. Ceramic Factory at Gudur;
7. Bangle Manufacturing Unit at Kalahasti;
8. Paper Factory at Rajahmundry;

9. Kollegal Silk Filature Factory;

10. A Cottage Industrial and Chemical Testing Laboratory at Madras.

இவைகளில் முக்கியமான பெரும் பகுதியை மொழி வழி மாகாண பிரிவினையின் காரணமாக நாம் இழந்திருக்கிறோம். இதில் இருக்கின்ற வேடிக்கை என்னவென்றால் இந்த திட்டங்கள் இருந்த காலத்தில் இதற்காக எவ்வளவோ அதிகாரிகள் இருந்தார்கள். இப்போது இதே துறையில் அதிகமாக அதிகாரிகள் இருப்பதாக அறிகிறேன். நான் கூறுவதில் தவறு இருக்குமானால் என்னை திருத்த வேண்டிய கடமை அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. இந்த விதத்தில் கூடுதலாக அதிகாரிகள் இருப்பதற்கு காரணம் என்ன என்பதை இதில் உண்மையிருக்குமானால் அதை கூற வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. இந்த நாடு ஒன்றாக இருந்த காலத்தில் ஒரு டைரக்டரும் ஒரு ஜாயின்ட் டைரக்டரும் இருந்த அதே இடத்தில், இப்போது ஒரு டைரக்டரும், ஒரு அடிஷனல் டைரக்டரும், மூன்று ஜாயின்ட் டைரக்டரும் அதன் கீழ் பல கெஜெடட் ஆபீஸர்களும், 20, 30 இன்ஜினியர்களும் இருப்பதாக நான் அறிகிறேன். இவ்விதம் இருப்பதற்கு காரணம் என்ன என்பதை அமைச்சர் விளக்க வேண்டும். இதில் உண்மையில்லையென்றால் திருத்தவேண்டிய கடமையும் அவர்களுக்கு இருக்கிறது. அடுத்ததாக சிறிய தொழில்கள் அதிகமாக ஆரம்பிக்க வேண்டுமென்றால் அந்த தொழில்களை சர்க்கார் நேரடியாக நடத்த வேண்டும். இல்லையானால் இதில் அதிக லாபம் கிடைக்கிறதாக இருந்தால் தனிப்பட்டவர்கள் இதை நடத்துவதற்கு வருகிறார்களே தவிர ஏதோ ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் என்ற தர்ம உணர்ச்சியோடு அல்லது நாட்டுக்கு முன்னேற்றம் அடைவதற்காகவோ பொருளாதார துறையில் முன்னேற்றம் அடைவதற்காகவோ தனிப்பட்டவர்கள் எப்பொழுதும் முன் வரமாட்டார்கள். உடனடியாக லாபம் கிடைப்பதாக இருந்தால் தனிப்பட்டவர்கள் தொழிலை ஏற்று நடத்துவதற்கு முன் வருவார்கள். ஆகவே கீழ்கண்ட தொழில்களை உடனடியாக சர்க்காரை ஏற்று நடத்த வேண்டுமென்று ஒரு யோசனை கூற விரும்புகிறேன்:-

(1) A paper factory of some factories where bamboo is available.

நம்முடைய நாட்டில் இன்றைக்கு 600-க்கு மேற்பட்ட பத்திரிகைகள் நடந்து வருவதாக தகவல் கிடைத்திருக்கிறது. இதற்கு வேண்டிய காகிதங்கள் கிடைப்பதற்கு காகித ஆலைகள் அதிகமாக

வேண்டியிருக்கிறது. இதற்கு வேண்டிய நாணல் காடு, மூங்கில் காடு நமக்கு வசதியாக இருக்கிற காரணத்தால் இதை உடனடியாக ஆரம்பித்து நடத்த முடியும். அடுத்ததாக,

(2) An oil and soap factory in North or South Arcot.

(3) A Silk Filature factory at Hosur taluk, Salem district.

இந்த பட்டு விஷயத்தில் இங்கு சபை அங்கத்தினர்களால் உருக்கமாக பேசப்பட்டது. பட்டை கொண்டு பாவையர்களுடைய மனத்தை திருப்தி செய்வதற்காகவாவது இதை உடனடி கொண்டு வரவேண்டும். நமக்கும் சில நேரங்களில் பட்டு தேவைப்படுகிறது. சில நேரங்களில் பட்டு வாங்குவதில் ஆடவர்களுக்கு இதனால் தொல்லை இல்லாமல் இருக்கும். ஆகவே பெண்களின் திருப்திக்கு வேண்டியாவது இந்த பட்டுத் தொழிலை ஆயிரக்கணக்கான ஆண்டு காலமாக மேற்கு நாடுகளுக்கு எல்லாம் அனுப்பிக் கொண்டிருந்த இந்த பட்டை அதிகமாக உற்பத்தி செய்வதற்காக இந்த பட்டுத் தொழிலை நடத்துவதற்கே உடனே முயற்சிக்கலாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக,

(4) A gule and gelatine factory with the huge quantity of tannery flushings available.

நம்முடைய நாட்டில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. தோலை பதனிடும் பொழுது அதிலுள்ள கொழுப்பையும் சத்தையும் வீணாக்காமல் இதை உற்பத்தி செய்யலாம் என்று நிபுணர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்ததாக,

(5) Development of coir industry in Tirunelveli and Ramanathapuram districts.

(6) Metal industry with improved alloys.

இதற்காக இன்று எத்தனையோ இன்ஜினியர்கள் வைத்திருப்பதாக கூறப்படுகிறது. எந்தெந்த உலோகங்களிலிருந்து புதிய உலோகம் கிடைக்கும் என்பதைப் பற்றி ஆராய்வதற்காக இம்மாதிப்பட்ட தொழிற்சாலைகளை உடனடி ஏற்படுத்த வேண்டும். அடுத்ததாக,

(7) Wood industry;

(8) Pigment manufacturing and paint manufacturing and mixing;
(9) Manufacture of musical instruments;
(10) Ink manufacture;
(11) Boot polish making;
(12) Manufacture of parchment paper;
(13) Evolving plastic from materials like cashew kernals, etc.

சபாநாயகர் அவர்களே, நான் இந்த பிரச்னையிலிருந்து சற்று விலகுவதற்குக் காரணம், இந்த சபையில் பேசப்பட்ட சிலவற்றிற்கு பதில் அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். நமது நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும்போது முந்திரி காடுகளை வளர்ப்பதற்காக நான்கு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று அவர்களது வக்கரமான புன்னகையை வீசி என்னைப் பார்த்துச் சொன்னார்கள். சிந்திரி முந்திரி என்று பேசியவர்களுக்கு இது திருப்தி அளிக்கலாம் என்று சொன்னார்கள்.

உயர் திரு. சி. சுப்பிரமணியம்: ஓரளவிற்கு திருப்தி அளிக்கலாம் என்றுதான் சொன்னேன்.

திரு. சி. என். அண்ணாதுரை: அங்கே தொழில் இங்கே தொழில் அங்கே சிந்திரி இங்கே முந்திரி என்று நாங்கள் அடுக்குமொழி கூறவில்லை. நாங்கள் அடுக்குமொழி பேசுவதில் நல்ல பயிற்சி பெற்ற பிறகுதான் கூறுகிறோம். அவைகள் ஓரளவிற்கு பயன் அளிக்கத் தக்க வகையில் இருப்பதையும் நாங்கள் பார்க்கிறோம். முந்திரித் தொழில் என்று நாங்கள் சொல்வது முந்திரிப் பழத்தை அல்ல. அதிலிருந்து, முந்திரிச் செடியிலிருந்து கிடைக்கும் உப பொருள்களை வைத்துக் கொண்டு பிளாஸ்டிக் போன்ற சாமான்கள் செய்து தொழிலை வளப்படுத்த வேண்டுமென்று கூறுகிறோமேயொழிய, முந்திரி பழத்தை நாங்கள் கூறவில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆகவே, முந்திரி என்று நாங்கள் சொல்வது, அதிலிருந்து பிளாஸ்டிக் சாமான்கள் போன்றவைகள் செய்யலாம் என்பதை உள்ளடக்கித்தான் சொல்கிறோமே தவிர, முந்திரிப் பழத்தை நாங்கள் கூறவில்லை. முந்திரி பழக்காடுகள் நிதியமைச்சரவர்களின் மாவட்டத்தில் மட்டுமல்ல இருப்பது. நான் சிறு வயதில் ஓடி விளையாடிக்கொண்டிருந்த காலத்தில் கைக்கு எட்டிய தூரத்தில் ஆத்தூரில் முந்திரிப் பழம் கிடைத்துக்கொண்டிருந்தது. அவைகளை நான் வேண்டிய மட்டில் எடுத்துக்கொண்டிருக்கிறேன். அம்முந்திரி

பழங்களை நான் தின்று பழக்கப்பட்டவன்தான். ஆதலால் நிதி அமைச்சரவர்கள் முந்திரிப் பழத்தை வளர்த்துத் தர வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. அந்தத் தொழிலை வளப்படுத்த வேண்டுமென்று நாங்கள் சொல்லும்போது சர்க்காரிடம் அதற்கு செலவழிக்க பணம் இல்லை என்று சொல்லக் கூடும். நிதி இல்லை என்றால் வரி போடுங்கள் என்று சொன்னால் காங்கிரஸ் கொறடா அவர்கள் எனக்கே கொறடா கொடுப்பார்கள் நாங்கள் வரி போட்டால் நீங்கள் அதை எதிர்ப்பீர்களே என்று. வரிகளை போட்டுத்தான் நாட்டை ஆளவேண்டும் என்றால் சர்க்காருக்கும், சத்திரம் சாவடிகளுக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. ஒரு சர்க்காருக்குள்ள வருவாய் இரண்டு விதத்தில் தான் இருக்க வேண்டும். ஒன்று, வரி மூலம். இரண்டாவது, வருவாய் தரக்கூடிய எல்லா துறைகளையும் சர்க்கார் கைப்பற்ற வேண்டும். தனியார் கையில் இருக்கிறதே தனவந்தர் கையில் இருக்கிறதே என்ற பற்றோ பாசமோ குறுக்கிடக்கூடாது. இன்றையதினம், தொழில்களை பப்ளிக் செக்டர், பிரைவேட் செக்டர் என்று இரண்டாக பிரித்திருக்கிறார்கள். ப்ரைவேட் செக்டர் என்றால் தனிப்பட்ட முதலாளிகள் பணம் போட்டு தொழில் நடத்துவதாகும். பப்ளிக் செக்டர் என்றால், சர்க்காரே பணம் போட்டு நடத்துவதாகும். அதிலே பிரைவேட் செக்டருக்கு நாட்டை ஆளுகிற சர்க்கார் சில நேரங்களில் அவர்களுக்கு கடன் கொடுக்கிறார்கள். உதவியும் அளிக்கிறார்கள். அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் அத்தொழிலை நடத்துகிறவர் களுக்கும் உள்ள நெருக்கத்தைப் பொறுத்துத்தான் கடனும் உதவியும் அளிக்கப்படுகிறது. ஆகவே, நான் சொல்ல விரும்புவது என்னவெனில் அந்த முறையை மாற்றி நம் நாட்டில் தொழில்கள் பப்ளிக் செக்டரில் தான் இருக்க வேண்டும். அதை இரண்டாக பிரித்து, ஒன்று சர்க்காரே முழு மூலதனம் போட்டு நடத்துகிறது. இரண்டாவது சர்க்கார் 51 பங்கு போட்டு மற்ற பங்கை பொது மக்களிடமிருந்து பெற்று நடத்த வேண்டும். பொது மக்கள் தாராளமாக பணம் தர முன் வருவார்கள். தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும் தொழில்களுக்கே அவர்களிட மிருந்து பங்குகள் வாங்க பொது மக்கள் முன் வரும்போது சர்க்காரே தொழிலை நடத்தப் போகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டால் முதலாளிகளிடம் உள்ள நம்பிக்கையை விட அரசாங்கத்தினிடம் அதிக நம்பிக்கை வைத்து பங்குகளை வாங்க முன் வருவார்கள். இன்றுள்ள சிறு தொகை சேமிப்பிற்கு பாடல், ஆடல் மூலமாகவும்,

நாடக மூலமாகவும், நண்பர்களின் ஒத்துழைப்பு மூலமாகவும், கடைசியாக அதிகாரிகள் மூலமாகவும் நிறைவேற்றலாம் என்று கருதுகிறார்கள். சிறு சேமிப்புத் திட்டத்தினுடன் நான் சொல்கிற ஒரு சிறிய யோசனையையும் அதனுடன் இணைக்க வேண்டும். பணத்தை சேமித்து வையுங்கள், 12 ஆண்டில் 100 ரூபாய் 165 ரூபாயாகி விடும் என்று. கூடையில் மாஞ்செடியை வைத்து விட்டு கூடையை எடுத்து விட்டு மாஞ்செடி இருக்கிறது பாருங்கள் என்று சொல்வது மாதிரி இல்லாமல், விளம்பரம் கொடுப்பதை விட்டு அதை மக்களுக்கு பயன்படக் கூடிய முறையில் உபயோகப்படுத்தப்பட வேண்டும். அப்பணத்தை சேலம் அலுமினியம் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளுக்கு இயர் மார்க் செய்து அத்தொழில்கள் வளம் பெறச் செய்வதற்கு, அத் தொழில்களுக்கு இதைப் பங்காக மாற்றினால் இத்திட்டம் விரைவில் வெற்றி அடையும் என்று எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். அந்த முறையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சர்க்கார் முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆனால், இவ்வளவு சொன்னாலும்கூட, கடைசியில் நான் என்னுடை அதிருப்தியை கூறிக் கொள்ளாமல் இருப்பதற்கு இல்லை. அது யாருடைய பேரிலும், இல்லை. எந்தக் கட்சியின் பேரிலும் இல்லை. காலத்தின் பேரில்தான் என்னுடைய அதிருப்தி அது. ஒரு காலத்தில் பட்டையும், முத்தையும் உலகத்திற்கெல்லாம் அனுப்பி வந்த தமிழ் நாடு இன்றையதினம் கூலிகளைத்தான் வெளி நாடுகளுக்கு அனுப்புகிறது என்று அதற்காக காலத்தைத்தான் நான் நொந்து கொள்கிறேன். ஆற்றலும், அறிவும், திறமையும் படைத்த அமைச்சர்கள் எங்களுக்கு அளிக்கப்பட்டிருந்தும் டெல்லியால் போதுமான அளவு அதிகாரம் அளிக்கப்படாததால் அவர்கள் செயல்பட முடியாமல் இருக்கிறார்கள். ஆகையால்

உயர் திரு. சி. சுப்பிரமணியம்: இன்று கூலிகளை வெளி நாடு களுக்கு அனுப்புவதில்லை. முன் காலத்தில் அப்படி நடந்திருக்கலாம்.

திரு. சி. என். அண்ணாதுரை: வெளி நாடுகளில் கூலிகளை இப்பொழுது எடுத்துக்கொள்வதில்லை. இங்கிருந்து சிலோனிற்குச் சென்றவர்களை அவர்கள் துரத்துகிறார்கள். பொருளாதாரத்தை நாம் சரிவர உணர்ந்து பேராசிரியர்கள் சொல்லியிருக்கும் கருத்துக்களை மனதில் வைத்துக்கொள்டு, நமக்குள்ள அதிகாரங்களை நாமே வைத்துக்கொண்டு, தொழில் துறையில் நல்லபடி முன்னேற்றம்

காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நம் நாட்டில் வறுமை சொல்லக்கூடிய நிலைமையில் இல்லை. அந்த அளவுக்கு வறுமை இருக்கிற காரணத்தால் தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் காண வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வெட்டுப்பிரேரணையை ஆதரித்து எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

நிதி ஒதுக்க சட்ட முன் முடிவு

உரை : 5 **நாள் : 26.07.1957**

பொருள் : சென்னை நிதிஒதுக்க சட்டமுன்முடிவு - **1957**
(The Madras Appropriation Bill - 1957)

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல(து) அரசு.

என அரசுக்கு அறிவுரை தருகிறார் வள்ளுவப்பெருந்தகை. நாட்டின் வருவாயை மக்கள் நலங்கருதி திட்டமிட்டுச் செலவிடுதல் அரசின் பணியாகும். திட்டங்கள் அரசின் கொள்கை வழி அமைவன. கொள்கைகளில் முரண்பாடு இருப்பின் திட்டங்கள் செயலற்றுப் போவதோடு பொருளற்றதுமாகும். நிதிஒதுக்கச் சட்ட முன்முடிவு விவாதத்தில் அரசின் கொள்கை முரண்பாடுகளை விளக்குகிறார் பேரறிஞர்.

மேலும் விடுதலை வீரர் பரம்பரையினர் என்ற நல்லெண்ண முதலால் அளவுக்கு மீறி வட்டி பெற்ற ஆட்சியாளர்களின் முதலுக்கே மோசம் வரும் காலத்தை பத்தாண்டுகளுக்குமுன் 'தீர்க்கதரிசனம்' தருகிறார். அரசியலில் தீர்க்க தரிசியன்றோ அறிஞர்!

திரு. சி. என். அண்ணாதுரை: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்தச் சபையின் முன்னாலே நீண்ட நாட்களாக, மிகச் சிறந்த ஆர்வத்தோடு பல்வேறு பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு, இன்றையதினம் இறுதிக் கட்டத்தில், "ஒப்படைத்தல்" (Appropriation) என்ற சம்பிரதாயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு பெரிய தொகையை ஒப்படைப்பதற்கு வேண்டிய நம்பிக்கையைப் பெற்ற ஒரு அமைச்சரவை இன்றையதினம் இருக்கிறது என்பதை நான் பெருமையோடு எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். அந்த அமைச்சரவை நல்ல எண்ணம் படைத்தது என்பதையும் இந்த மன்றத்திலே நான் பல

தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆற்றல்படைத்தது என்பதையும் நான் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். ஆனால், நல்ல எண்ணமும் ஆற்றலும் படைத்தவர்கள் தங்களுடைய சிந்தனா சக்திக்குத் தடை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஒரு துர்ப்பாக்கியமான அரசியல் சூழ்நிலைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்பது தான் எனக்கு இருக்கும் முக்கியமான குறைபாடு. ஆற்றல் இவர்களுக்குக் குறைவாக இருந்திருக்குமானால், அதற்கான அளவுக்கு இவர்களுக்கு அதிகாரம் இல்லாததைப்பற்றி நான் வருத்தப்பட்டிருக்க மாட்டேன். வேண்டிய ஆற்றலுள்ளவர்களும் நல்ல மனம் படைத்தவர்களும் நம் மாநில அரசாங்கத்திற்குக் கிடைத்திருந்தும், அவர்கள் மக்களின் குறைபாடுகளை அறிந்து கொள்வதற்கு நல்ல அக்கரை எடுத்துக் கொண்டிருந்தும், மக்களின் குறைபாடுகளை நீக்குவதற்கான வழிவகைகளைக் காண்பதில் திறமை பெற்றிருந்ததும், அந்தத் திறமையைத் தூண்டுவதற்கு எதிர்த் தரப்பிலுள்ளவர்கள் எடுத்துச் சொல்லும் கருத்துக்களைப் பெருமையோடு ஏற்றுக்கொள்ளும் பெரும் தன்மை கொண்டிருந்தும், அவர்கள் சுயசிந்தனையோடு காரியங்களைச் செய்ய முடியாத அளவிற்கு இன்றைய அரசியல் சூழ்நிலை இருப்பதைப்பற்றி நான் உண்மையிலேயே கவலைப் படுகிறேன். நிர்வாக இயந்திரத்திலுள்ள கோளாறுகளைப்பற்றி பல கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட விஷயங்களை ஆளும் கட்சியாளர்கள் அடியோடு மறுக்கிறார்கள் என்று நான் கருதவில்லை. ஆட்சியாளர்கள் அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்குத் தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவும், அந்த நடவடிக்கைகளில் எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறவும் தயாராக இருக்கிறார்கள் என்றுதான் நான் உண்மையிலேயே நம்புகிறேன். ஆட்சியாளர்களுடைய கொள்கைகளில் இருக்கின்ற முரண்பாடு களைப்பற்றித்தான் நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

ஆட்சியாளர்களின் கொள்கைகளைப் பொதுப்படையாகப் பார்க்கும்போது, மக்களின் நலன்களை வளர்க்கத்தக்க ஒரு நல்ல நிர்வாகத்தை நாட்டுக்கு அளிக்கவேண்டும் என்ற பொதுக் கொள்கை அவர்களிடத்தில் இருந்தாலும், அந்தக் கொள்கை நடைமுறைக்கு வரும் நேரத்தில் பல கொள்கை முரண்பாடுகள் அவர்களுடைய நிர்வாகத்தில் காணப்படுகின்றன என்பது தெரிகிறது. அந்தக் கொள்கை முரண்பாடுகளை எடுத்துச்சொல்லுவதற்கு எனக்கு உறுதுணையாக இருப்பது நான் அறிந்த உண்மைகள் மட்டுமல்ல; கனம் சபாநாயகர்

அவர்களே, காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்த மாமன்றத்தில் எடுத்துச்சொன்ன பல்வேறு கருத்துக்களை ஆதாரமாக வைத்துக் கொண்டுதான் அந்த முரண்பாடுகளை நான் எடுத்துச் சொல்கிறேன்.

உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற கொள்கையை ஆட்சியாளர்கள் மதித்துப் பறைசாற்றுகின்ற இதே நேரத்தில் 'மெகனெஸ்ட் அக்ரிகல்சர், பெரும் விவசாயப் பண்ணைகள் விஞ்ஞான முறையில் வளர்க்க வேண்டும் - என்ற கொள்கையையும் ஆட்சியாளர்கள் வலியுறுத்துகிறார்கள். இந்த இரண்டும் முரண்பட்ட கொள்கைகள் என்பதையும், உழுபவனுக்கு நிலம் என்ற திட்டமும் ''மெகனெஸ்ட் அக்ரிகல்சர்'' என்ற திட்டமும் ஏககாலத்தில் நிறைவேற்றப்பட முடியாது என்பதையும் சாதாரண பொருளாதார சாஸ்திரத்தைப் படித்தவர்கள் உணர்ந்துகொள்வார்கள். அவர்களுடைய கொள்கையில் இந்தப் பெரிய முரண்பாடு இருக்கின்ற காரணத்தால்தான், நம் ஆட்சியாளர்கள் உழுபவனிடத்தில் பரிவும் பாசமும் காட்டினாலும், பெரிய நில முதலாளிகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

ஆட்சியாளர்கள் பெரிய சில முதலாளிகளைக் கட்டுப்படுத்து வார்கள், கட்டுப்படுத்துவார்கள் என்று இலவு காத்த கிளி போல், இந்த நாட்டு மக்கள் பன்னெடுங்காலமாகக் காத்துக்கொண்டிருந்தார்கள். ''தேர்தல்கள் முடிந்த பின் ஆட்சியாளர்கள் புதிய வலிவைப் பெறுவார்கள்; அடுத்த தேர்தல் வரட்டும்; அது வந்து முடிந்ததும் ஆட்சியாளர்கள் மறுபடியும் புதிய வலிவைப் பெறுவார்கள்'' என்று எண்ணி ''நிலச் சீர்த்திருத்தம் வரும், வரும்'' என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதற்குள், இடைக்காலத்தில், ஆச்சர்ய வினோபா பாவே அவர்கள் அருமையாகச் சுட்டிக்காட்டியது போல, நில உடைமைக்கு வரம்பு கட்டும் சட்டம் வந்தாலும் அது தங்களைக் கட்டுப்படுத்தமுடியாதபடி பெரிய நில முதலாளிகள் பல்வேறு சூழ்நிலைகளை உருவாக்கிக்கொண்டார்கள் என்பது இந்த நாட்டு மக்கள் அறிந்த ரகசியம் ஆகும்.

அடுத்தபடியாக தொழில் துறையை எடுத்துக்கொண்டால், அந்தத் துறையிலும், விவசாயத் துறையில் போலவே, இந்த ஆட்சியாளர்கள் தனியார் துறையையும் பொதுத் துறையையும் ஆதரிக்கிறார்கள். காரணம் கேட்டால் ஆட்சியாளர்கள் சொல்லக் கூடும்: ''எங்கள் கொள்கையே 'கோ-எக்ஸிஸ்டென்ஸ்' கொள்கை

தானே? தொழில் துறையிலும் 'கோ-எக்ஸிஸ்டென்ஸ்'-ஐக் கடைப்பிடிக்கிறோம். 'கோ-எக்ஸிஸ்டென்ஸ்' கொள்கையானது உலகப் பூசலைத் தடுப்பதற்காக - ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்காகக் கண்டு பிடிக்கப்பட்டால், அப்போது அது வரவேற்கக்கூடியதாக இருக்கும். ஆனால், ஒரு பக்கத்தில் கொழுத்த முதலாளிகளும் மற்றொரு பக்கத்தில் ஏழைத் தொழிலாளிகளும் இருக்கும் நிலைமையிலும் ஒரு பக்கத்தில் பெரிய மடாதிபதிகளும், மற்றொரு பக்கத்தில் அவர்களுக்கு அடிமையாக வாழ்கின்ற ஆண்டிகளும் இருக்கும் நிலைமையிலும், ஒரு பக்கத்தில் ஆலை முதலாளிகளும் மற்றொரு பக்கத்தில் அவர்களால் கசக்கிப் பிழியப்படும் தொழிலாளிகளும் இருக்கும் நிலைமையிலும் - இப்படிப்பட்ட முரண்பாடுகளை வைத்துக் கொண்டு - 'கோ-எக்ஸிஸ்டென்ஸ்' கொள்கையைக் கடைப் பிடித்தால், அப்போது ஆட்சியாளர்களுக்கு எவ்வளவு நிர்வாகத் திறமையும், அறிவும், ஆற்றலும் இருந்தாலும், மக்களிடத்தில் அவர்களுக்கு எவ்வளவு அன்பும் அக்கரையும் இருந்தாலும், தேவைப்படும் அளவுக்கு அவர்களால் மக்களுக்கு நன்மை செய்ய முடியாது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசாங்கம் மக்களுக்கு எவ்வளவோ நன்மை செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டிருந்தாலும் அதை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. இதனை நான் விளக்கவேண்டுமானால், கனம் சபாநாயகர் மூலமாக இந்த சபைக்குச் சொல்லிக்கொள்கிறேன். இந்த ஆட்சியாளரை நான் ஒரு டாக்டருக்கு ஒப்பிடுவதற்கில்லை; ஒரு கம்பவுண்டருக்கு ஒப்பிட்டால் அதனால் ஆட்சியாளர்கள் வருத்தமடைய மாட்டார்கள் என்று நான் எண்ணுகிறேன். இந்த ஆட்சியாளர்கள் நல்ல கம்பவுண்டர்கள். அவர்களிடம் நோயாளி வரும் நேரத்தில் நோயாளியை அவர்கள் பரிவோடு பார்க்கிறார்கள்; நோயாளியிடமுள்ள நோயைக் கண்டு பிடிக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள். கண்டிபிடித்த நோயைத் நீக்க விரும்புகிறார்கள். ஆனால், எந்த டாக்டரிடம் வேலை செய்கிறார்களோ அந்த டாக்டர் கொடுக்கும் மருந்து பாட்டில்களில் தண்ணீர் அதிகமாகவும் மருந்து குறைவாகவும் இருப்பதால் தங்களுக்கு உண்டாகும் வருத்தத்தைப் புன்னகையாக மாற்றிக்கொண்டு, கிடைக்கும் மருந்தை நோயாளிகளுக்குக் கொடுக்கிறார்கள். இந்த நிலைமையில் இன்றைய ஆட்சியாளர்கள் இருக்கின்ற காரணத்தினால்

தான் நான் குறிப்பிட்ட முரண்பாடுகளும் குறைபாடுகளும் இருக்கின்றன என்று நான் உண்மையிலேயே கருதுகின்றேன். அதனால்தான் போலும் இந்த மாமன்றத்தை ஒரு காலத்தில் நேரில் அலங்கரித்துக்கொண்டிருந்தவர்களும், இப்போது படரூபமாக அலங்கரித்துக் கொண்டிருப்பவர்களுமான ஸ்ரீ ராஜகோபாலச்சாரியார் அவர்கள் ''இந்த மாநில அரசாங்கங்கள் Grant receiving corporation டெல்லியிலிருந்து கிராண்டுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; நன்கொடைகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் கூட்டுறவு ஸ்தாபனங்களைப் போல் இந்த அரசாங்கங்கள் இருக்கின்றன'' என்று குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன். நாட்டில் வளர்ந்து வரும் இந்தப் புதிய கருத்தை ஆட்சியாளர்களுக்கு நாங்கள் வலியுறுத்திக் கூறுகிறோம். இந்தக் கருத்து மிகப் பிற்பட்ட மக்கள் தொகுதியிலிருந்து வருகிறது என்ற காரணத்தினால் இதை ஆட்சியாளர்கள் அலட்சியப் படுத்தினால், 'சாதாரணமாக, ரெயில்வே ஸ்டேஷனிலுள்ள செவிடர்கள் ரெயில் போகும்போது மணி அடித்ததைக் கேட்காமல் உறங்கிக் கொண்டிருந்துவிட்டு, ரெயில் போனவுடன் பதைபதைக்கும் அவல நிலையை அடைவது' போல, நல்ல திட்டங்களைத் தீட்டினாலும் அவை நிறைவேற்றப்படாமல் இருக்கும் நேரத்தில், மக்கள் அல்லோலகல்லோலப்படும்போது, ஆட்சியாளர்கள் அவல நிலையை அடைவார்கள் என்று அறிவுறுத்த விரும்புகிறேன்.

இப்போது, ஆட்சியாளர்கள் தொழில்துறையில் எவ்வளவு நல்ல திட்டங்களைத் தீட்டினாலும் நாட்டு மக்கள் நலனடைய முடியவில்லை. சென்ற பத்தாண்டு காலமாக, நாட்டு மக்களின் மனக்கண் முன்னும் 'பழைய மாஞ்செஸ்டர்கள் போய் புதிய மாஞ்செஸ்டர்கள் வருவதும் பழைய லங்காஷயர்கள் போய் புதிய லங்காஷயர்கள் வருவதும், பழைய ஷெப்பீல்டுகள் போய் புதிய ஷெப்பீல்டுகள் தோன்றுவதும்' நிகழ்ந்து வந்திருக்கின்றன. பாலைவனங்கள் எல்லாம் சோலைவனங்களாக ஆக்கப்பட்டுவிடும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ''பாலைவனம் எல்லாம் சோலைவனமாக வேண்டும்'' என்று ஒரு தமிழ்ப் புலவர் பாடியது போல, பாலைவனங்கள் எல்லாம் சோலைவனங்கள் ஆகும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் நடந்துவருவது என்ன? சோலைவனங்கள் எல்லாம் பாலைவனங்களாக மாறி வருகின்றன. இந்தக் குற்றத்திற்கு யார் உடந்தை என்று பார்த்து குற்றவாளியை அவர்கள் தேடிக் கண்டுபிடிக்க விரும்புகிறார்கள். குற்றவாளியைக்

கண்டுபிடிப்பதற்கு வேண்டிய ஆற்றலும் திறமையும் அவர்களுக்கு இன்று போதாமல் இருக்கலாம். ஆனால், என்றைக்காவது ஒரு நாள் வேண்டிய ஆற்றலைப்பெற்று, இந்த ஆட்சியாளர்கள்தான் அதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்பதை அவர்கள் தெரிந்துகொண்டு விட்டால், ''இவ்வளவு நல்லவர்களா இவ்வளவு பெரிய கெட்ட காரியத்தில் ஈடுபட்டார்கள்'' என்று அவர்கள் உண்மையிலேயே வருத்தப்படுவார்கள்.

இன்றைய ஆட்சியாளர்களின் ஒரு பெரிய செல்வத்தை நான் மதிக்கின்றேன். தேசீய விடுதலைப் போராட்டத்தில் மக்கள் அளித்த நல்லெண்ணத்தை ஆட்சியாளர்கள் தேசீய பாங்கில் போட்டு வைத்திருக்கிறார்கள். அந்த பாங்கில் அவர்கள் பத்து வருஷ காலத்தில் லட்சக்கணக்கான ரூபாய்களைப் பெற்று விட்டார்கள். இனியும் அவர்கள் அவ்வளவு தொகையைப் பெறமுடியாது. ஸ்ரீ நேரு பண்டிதர் தேடித்தரும் புகழும்கூட பாங்கில் பணத்தைச் சேர்க்காது. ஆகவே நல்ல திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் எடுக்க வேண்டும்.

முன்னேற்றத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றுவதற்கு ஆட்சியாளர்கள் முரண்பாடற்ற கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆட்சியாளர்கள் நல்ல திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றுவார்கள் என்ற பரிபூரண நம்பிக்கையுடன் மக்கள் இருக்கிறார்கள். நாட்டை முன்னேற்றமடையச் செய்வதற்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஆட்சியாளர்களுக்கு, கோடிக் கணக்கான ரூபாயும், விலை மதிக்கத்தக்க பொருள்களும், இயற்கை வளங்களும், அவை எல்லாவற்றையும்விட மக்களின் உழைப்பும் இருக்கின்றன. இந்த நிலையில் நல்ல திட்டங்களை வகுத்து நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இந்த ஆட்சியாளர்களுக்கு இருக்கும்போது, தூய்மையான உணர்ச்சியுடன் செயலாற்றுவதற்கேற்ற நிர்வாகத்தை ஆட்சியாளர்கள் பெறவேண்டும் என்பதுதான் இந்தத் தரப்பில் உள்ளவர்களின் கோரிக்கை என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

நம்பிக்கையின்மையின் மீதான தீர்மான விவாதம்

உரை : 6 *நாள் : 30.10.1957*

பொருள்:- *அமைச்சரவையின்பால் நம்பிக்கையின்மைத் தீர்மானத்தின் மீதான விவாதம்*

(1957 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பகுதியில் வகுப்புக்கலவரங்கள் ஏற்பட்ட தன் விளைவாய் பல உயிர்கள் பலியாயின. உரிய வேளையில், உரிய நிலையில் உரிய பணிகளை ஆட்சியாளர்கள் மேற்கொள்ளவில்லை என்பது அண்ணாவின் குற்றச்சாட்டு. அன்றைய அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் எதிர்க்கட்சியினரால் 26.10.57 அன்று கொண்டு வரப்பட்டது. அந்நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் தி.மு.க. சார்பாக அண்ணாவும் கலந்து கொண்டார். முரணான கொள்கைகளையுடைய அரசு முறையாக ஆளவியலாது என்றும், எண்ணிக்கை பலம் மட்டும் போதாது, மக்களின் எண்ண பலமும் ஆட்சி இயங்கத் தேவையென்றும் ஆட்சியாளருக்கு விளக்கி தாம் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவளித்த காரணம் பற்றியும் விளக்குகிறார். எதிராளியின் குறை நிறைகளை அரசியல் பண்போடு அதே வேளையில் உண்மையை ஒளிவு மறைவு இன்றி விளக்கும் திறன் எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.)

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே துணைத்தலைவர் அவர்களே தங்களுடைய கட்டளைக்கு அடங்கி நல்ல முறையில் தங்களுடன் ஒத்துழைத்து இந்தச் சபையின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதில் இந்தப் பகுதியில் அமர்ந்திருக்கிற எங்களுக்கு உண்மையில் நல்ல நம்பிக்கையும் இதில் பிறருக்கு நம்பிக்கை ஏற்படச் செய்ய வேண்டுமென்ற உறுதிப்பாடும் இருப்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்களுடைய சிறந்த அறிவாற்றலை நான் மாணவனாய் இருந்த பருவத்திலும் அரசியல் நடவடிக்கைகளைக் கவனித்துப் பார்த்த காலத்திலும் இருந்தே நன்கு அறிந்திருக்கிறேன். தங்களைப் போன்ற நேர்மை உள்ளம் படைத்தவர்கள் போட்டியின்றியே சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதுதான் பொருத்தமானது என்றாலும் ஜனநாயக அமைப்பிலே சில பல தவிர்க்க முடியாத கடமைகளுக்கு உட்பட்டு போட்டி இருந்தது என்றும் அந்தப் போட்டியும் தங்கள் புகழை அதிகப் படுத்துவதாக முடிந்தது என்பதையும் அறிவோம்.

பாராளுமன்ற நடவடிக்கைகளில் தங்களுடைய அறிவையும் ஆற்றலையும் நன்கு அறிந்திருக்கக் கூடிய எங்களுக்கு அதிலே அதிகமான அநுபவம் இல்லாததை தாங்கள் அறிந்து கொள்ளவேண்டு மென்று குறிப்பிட விரும்புகிறேன். அரசியல் துறையில் தாங்கள் நல்ல அறிவாற்றல் பெற்றிருப்பது போலவே தாங்கள் ஈடுபட்டிருக்கிற மருத்துவத் துறையில் யார் யார் தங்களிடம் இளைத்து வருகிறார்களோ அவர்களுக்குப் பல மூட்டுகின்ற காரியத்தில் நீண்ட நாளாக ஈடுபட்டிருக்கிறீர்கள். உடல் இளைத்தோருக்கு மருத்துவராக அவர்கள் பக்கத்தில் நின்று தாங்கள் பலம் ஊட்டுவதைப் போலவே அரசியலில் இளைத்தோருக்குப் பக்கத்திலும் தாங்கள் நின்று பலமூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசியல் உலகத்தில் நம் நாட்டு ஜனநாயக அரசியல் என் போன் றவர்களுக்கு இத்தகைய சட்டமன்றத்தில் அநுபவம் இல்லாதது மட்டுமல்ல பொதுவாக பிற ஜனநாயக நாடுகளோடு ஜனநாயக முறையில் செயல்படுகிற நம்முடைய நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது சிறு குழந்தைப் பருவத்தில்தான் உள்ளது என்பதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். இந்த நிலையில் நல்ல ஜனநாயகப் பண்புடன் வளர்ந்திருக்கும் தாங்கள் இந்தப் பக்கத்திலுள்ள எங்களில் சிலர் யாராவது சில சமயங்களில் கொஞ்சம் குறும்பாக குழந்தைத் தனமாக நடந்து கொண்டாலும் தாய் போன்று எங்களை அன்புடன் அணைத்து அதிகமாக அடிக்காமல் கருணையோடு சீராட்டி வளர்ப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

நம்முடைய நாட்டை பொறுத்த வரையில் அரசியல் அநுபவம் உள்ளவர்கள், அரசியல் அநுபவம் இல்லாதவர்கள் என்ற இரண்டு வகை மட்டுமல்ல, இதையே பச்சைத் தமிழில் சொன்னால்

ஞானவானிகள், அஞ்ஞானம் நிரம்பியவர்கள் என்ற இரண்டு வகை மட்டும் அல்ல. ஞான சூன்யர்கள் இருப்பதாகவும் கருதப்பட்டு வருகிறது. எங்களைப் போன்றவர்கள் ஞான சூன்யர்கள் என்றால் கவலை இல்லை. ஞான சூன்யர்களைத் திருத்த முடியும். ஆனால் அஞ்ஞானிகளைத் திருத்துவது என்பது மிகமிகக் கடினம்.

என்னைப் பொறுத்த வரையில் நாங்கள் சேர்ந்திருக்கிற இந்தப் பகுதியைப் பொறுத்த வரையில் அரசியல் அநுபவத்தையும் ஆற்றலையும் அதிகமாகப் பெற்று விட்டோம் என்று எடுத்துச் சொல்வதற்கு இல்லை. ஆனால் நம் நாட்டில் ஜனநாயகம் குழந்தைப் பருவத்தில் இருக்கும் போதே நாங்கள் அதிகமாகப் பயிற்சி பெறாமல் இருப்பது அதற்கு ஏற்ற காலத்தில் பயிற்சி பெறத் தவறி விட்டது ஒன்றைத் தவிர பயிற்சி பெற முடியாது என்பது அல்ல. பயிற்சி பெற்றால் எங்களுக்கு அந்த அறிவு கை கூடாது என்பதும் அல்ல என அரசியல் அநுபவம் பெற்ற தாங்கள் நிச்சயமாக நன்கு உணர்ந்திருப்பீர்கள். அரசியல் துறையில் குழந்தைகளாக எதிர்வரிசையில் உட்கார்ந்திருக்கும் நாங்கள் இந்தச் சபையின் நடவடிக்கைகளில் சட்ட வரம்புக்கு உட்பட்டே செயல் படுவோம் என்றாலும் குழந்தைத் தனமாக சிலபல நேரங்களில் தவறுவதும் இயற்கை. அந்த நேரங்களில் தாங்கள் அன்பு கூர்ந்து, தங்கள் கட்டளைகளை புன் சிரிப்போடு கலந்து கருணையிலே குழைத்து உபயோகிப்பது எங்களை எல்லாம் நல்ல ஜனநாயகப் பண்புடையவர் களாக்கப் பயன்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்கட்சியில் அமர்ந்திருக்கிற நாங்கள் ஆளும் கட்சி செய்கின்ற காரியங்கள் அத்தனையும் எதிர்ப்போம் என்று அல்ல. ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் உள்ள உறவு மாப்பிள்ளைக்கும் மாப்பிள்ளைத் தோழர்களுக்கும் உள்ள உறவுபோல இருக்க வேண்டு மென்று கருதிக் கொண்டிருப்பவர்கள் நாங்கள். சிற்சில நேரங் களில் மாப்பிள்ளை, தம்முடைய தோழர்களின் குறும்புகளை வெறுப்பது போல ஆளும் கட்சியில் உள்ளவர்கள் எங்களை கருதக் கூடும். அப்படிப்பட்ட நேரத்தில் நாங்கள் மிகவும் சோர்ந்து போகாமல் இருக்க தாங்கள் அருள் கூர்ந்து தங்களுடைய நியாயமான தீர்ப்புக்களை வழங்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் அரசியல் பெருந்தன்மை நம்நாட்டில் மிக மிக அவசியம் என்பதை நல்ல பெருந்தன்மை உடைய தகப்பனாருக்குப் பிள்ளையாயும், நல்ல பெருந்தன்மையுள்ள தொழிலில் ஈடுபட்டவராயும் அரசியல் பெருந்தன்மையை நிலை நாட்டும் பதவிக்கு இன்று தேர்ந்தெடுக்கப்பட்டவராயும் உள்ள தாங்கள் அறிந்து இருப்பீர்கள்.

அரசியல் பெருந்தன்மை, கொடுத்து வாங்குவது ஒன்றே தவிர ஒரே வழியில் செல்கிற வியாபாரம் அல்ல என்று நீங்கள் அறிந்திருப்பீர்கள். அப்படி அரசியல் பெருந்தன்மையை கொடுத்து வாங்க வேண்டுமென்ற கொள்கையைத்தான் நாங்கள் கவலையோடு போற்றி வைத்துக் கொண்டிருக்கிறோம். இருந்தும் சில பல நேரங்களில் தவறுகள் இழைக்க நேரிட்டால், அரசியல் அநுபவம் இல்லாதவர்கள் நாங்கள் என்பதைக் கருத்தில் கொண்டு தவறுகளைத் திருத்தி நல்வழிப்படுத்துகின்ற அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கிற தாங்கள் கொடுக்கும் ஆணைகளுக்கு உட்பட்டு நடப்போம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நாங்கள் எல்லாம் ஒரு விசித்திர அரசியல் கூட்டத்தினர் என்று நீங்கள் அறிவீர்கள்; இந்தச் சபையும் அறியும். நாங்கள் ஒரு விசித்திர அரசியல் கூட்டத்தினர் என்றால் எங்களைத் தோற்றுவித்ததும் நாட்டிலுள்ள ஒரு விசித்திர நிலைமைதான் என்பதை யாவரும் உணர வேண்டும். விசித்திரமான நிலைமைகள் விசித்திரமான கட்சிகளை ஏற்படுத்துகின்றன.

உண்மையிலேயே ஒரே விதமான உடற் கூறு படைத்தவர்கள் சிற்சில வியாதிகளுக்கு உட்படுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சிறந்த மருத்துவர் என்ற முறையில் அவர்களுடைய வியாதிக்கு மூலகாரணம் என்ன என்பதைப் பற்றியும் நீங்கள் ஆராய்ந்து சிகிச்சை செய்திருப்பீர்கள். வெளியே தோன்றுகின்ற புறக்குறிகளை மாத்திரம் பார்த்து சிகிச்சை அளிக்கக் கூடாது என்பது தங்களுக்குத் தெரியாதது அல்ல. உங்களுடைய பேட்டையில் எத்தனையோ நோயாளிகள் இளைத்தவர்களாக உங்களிடம் வந்து திடகாத்திரர்களாகத் திரும்பி இருக்கிறார்கள். அவ்வாறு திரும்பிய பலபேர்களிடத்தில் இருந்து நான் அறிந்துள்ளபடி தாங்கள் முதலில் புறத்தே தோன்றும் குறிகளைக் கண்டு அக்குறிகளைத் தோற்றுவித்த மூலகாரணத்தை உணர்ந்து சிகிச்சை செய்யும் வழக்கத்தை இங்கும் கையாளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் படைத்துள்ள நல்ல ஜனநாயகக்

கண்ணோட்டத்தோடு எங்களுடைய குறைபாடுகளையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்நாட்டில் அரசியலில் மட்டுமல்ல. ரெயில் வண்டிப் பிரயாணத்திலும் கூட யார் வண்டியில் ஏறி இடம் பிடித்துக் கொள்கிறார்களோ அவர்கள், அடுத்து வருகிறவர்களைத் துரத்துவதைப் பார்க்கிறோம். சட்டமன்றத்திலும் அந்த மனப் பான்மை நீண்ட காலத்திற்கு இருக்கத்தான் செய்யும். பின்னே வருகிறவர்கள் முன்னே வண்டியில் ஏறிக்கொண்டு தங்களை ஏறவிடாமல், தடுக்கின்றவர்களின் மனம் புண்படாமல் மெள்ள உள்ளே ஏறி நுழைந்து கொள்வதைப் போலத்தான் நாங்களும் தட்டுத் தடுமாறி இந்தச் சபைக்குள் நுழைந்து கொண்டிருக்கிறோம். இந்த அரசியல் வண்டிக்குள் ஆதிக்கம் வாய்ந்தவர்கள் இருப்பார்கள். அவர்கள் முகம் சுணங்கும் வகையில் அவர்களைப் பார்த்து காலை மடக்கிக் கொள்ளுங்கள் என்று நாங்கள் சொல்வதற்கு முன்னாலேயே, நீங்கள் உங்களுடைய கருணைப்பார்வையினாலேயே அவர்கள் காலை மடக்கிக் கொண்டு எங்களுக்கும் இடந்தரச் செய்ய வேண்டும். நியாயத்திற்காக கருணை உள்ளத்தோடு நீங்கள் தீர்ப்பளிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். தங்களுடைய ஆட்சியின் கீழ் இந்த மன்றத்தின் கண்ணியம் உண்மையிலேயே சிறப்புறும் என்று சொல்லி இந்தச் சபையின் கண்ணியத்தையும், கௌரவத்தையும் பாதுகாப்பதில் எங்களுக்கும் ஏதாவது பங்கு கிடைக்குமானால் மகிழ்ச்சி அடைவோம் என்று கூறி வணக்கம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னாலே இந்த அமைச்சர் அவையின்பேரில் நம் பிக்கையில்லை என்று கொண்டுவரப்பட்டிருக்கிற கருத்தின்பேரிலே நடைபெறுகின்ற விவாதத்திலே எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கின்ற நாங்கள், நாங்கள் என்று சொல் அளவிலே இருந்தாலும், எப்படி முக்குலத்தவர் என்றால் கள்ளர், மறவர், அகமுடையர் என்று மூன்று வெவ்வேறு பிரிவினைகள் இருக்கின்றார்களோ, அதுபோலவே எதிர்க்கட்சியினர்கள் என்றிருக்கும் நாங்கள் ஐந்து குலத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையினாலே, இந்த ஆட்சியின்பேரிலே நம்பிக்கை இல்லை என்ற பொதுவான கருத்தில், நாங்கள் பிரச்சனைகளை அணுகுவதில், அவரவர்கள் தம் தமது கோட்பாட்டுக்கு ஏற்ற கோணங்களில் பார்த்தால் ஏதோ எதிர்புறத்தில் உள்ளவர்களிட

மிருந்து பல்வேறான கருத்துக்கள் வந்துவிட்டன என்றோ, அல்லது கனம் சன்யாசி அவர்கள் தவறாகக் கருதிக்கொண்டு சொன்னதைப் போல கட்சிகளை எல்லாம் மீறிக்கொண்டு ஜாதி உணர்ச்சி மேலிட்டு விட்டது என்று, அந்த உணர்ச்சிக்கு அப்பாற்பட்ட என்னுடைய கழகத்தைச் சார்ந்த சத்தியவாணிமுத்துவின், போக்கை நினைக்கவேண்டிய அளவுக்கு தவறான கருத்துக்கள் பரவி இருக்கின்றன.

இந்தப் பிரச்னை நாட்டு மக்களின் உள்ளத்தை மிகமிக அதிகமான அளவுக்கு பாதித்துக்கொண்டிருக்கிற பிரச்னை மாத்திரமல்ல. இதுபற்றி நாம் இங்கே பேசுகின்ற வார்த்தைகளில் எந்த அளவுக்கு பொறுப்பு உணர்ச்சியை கடைப்பிடிக்கின்றோமோ, அதைப் பொறுத்துதான் தமிழ் நாட்டின் எதிர்கால அமைதி இருக்கிறது. இங்கே நாம் ஏதாவது ஒரு பக்கத்திலே இன்றைய தினம் ஒன்றுசேர்ந்து அதற்கான ஆதாரங்களை திரட்டியும், செய்திகளை வகுத்தும் பிரித்தும் கட்சிகளின் சார்பாக செய்து விடுகின்ற காரணத் தினாலே அங்கே இருக்கின்ற புகைச்சலை நம்மால் அடக்கிவிட முடியாது. என்னைச்சார்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள், இதில் பங்கெடுத்துக் கொண்டவர்கள், அங்கு ஆதிதிராவிட மக்களுக்கு - இன்று மட்டுமல்ல நீண்ட நெடுங் காலமாக - இழைக்கப்பட்டிருக்கின்ற பெரிய கொடுமைகளை அவர்கள் சகித்துக்கொண்டிருப்பதாகக் கூறினார்கள். அவர்களுக்கு வரக்கூடிய ஆபத்தை முன்கூட்டியே கண்டுபிடிப்பதற்கு வக்கு இல்லாமல் இருக்கின்ற நிலையிலே, அதனை சட்டபூர்வமாக தடுப்பதற்கு வழி இல்லாமல், இரண்டு பெரிய ஜாதியினரிடையே தீராத பகையை மூட்டிவிட்டார்கள் என்ற காரணத்தினாலே இந்த அமைச்சர் அவையின்பேரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நம்பிக்கையில்லை என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அங்கே ஆதிதிராவிட மக்களின் அல்லலை மற்றவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதுமட்டுமல்ல போலீஸ் மந்திரி அவர்கள் ரோம் நாட்டிலே ரோம் தீப்பிடித்து எரிகின்ற நேரத்திலே நீரோ மன்னர் பிடில் வாசித்ததாக பழைய வரலாற்றைக் குறிப்பிட்டார்கள், புதிய ஆராய்ச்சியாளர்கள் அப்படி நீரோ மன்னர் அப்பொழுது பிடில் வாசிக்கவில்லை என்று முடிவு கட்டியிருக்கிறார்கள். எரிகின்ற வீட்டில் ஏதோ கிடைத்த வரையில் லாபம் என்று அகப்பட்டதை பிடுங்கிக்கொண்டார்கள்

என்ற தமிழ்நாட்டு பழமொழியை ஒரு உறுப்பினர் சொன்னார்கள். இதற்கு முன்னாலே நான் வருத்தத்தோடு கூறியிருப்பேன். இன்றை யதினம் பெருமையோடு சொல்லுகின்றேன். அந்த வட்டாரத்தில் எங்கள் கழகத்திற்கு இதுவரையில் ஊன்றுகோல் இல்லை. 25 ஆண்டுகளாக நான் பொது வாழ்வில் இருக்கின்றேன். நான் பரமகுடிக்கு அப்பால் போய் பேசியதில்லையே என்று எண்ணியது உண்டு. அங்கெல்லாம் நம் கழகம் பரவவில்லையே என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இப்பொழுது நான் எண்ணிக் கொள்கிறேன் நல்ல வேலையாகப் பரவவில்லை என்று. பரவியிருந்தால், அங்கே மூட்டப்பட்ட தீயிலே எந்த அளவுக்கு எங்களுக்கும் பங்கு உண்டு என்று சொல்லப்படுமோ, அங்கே நடந்த கொலைகளுக்கு நாங்கள் எத்தனை பேர்களை தூண்டிவிட்டோம் என்று சொல்லப்படுமோ தெரியாது. எங்கள் கழகத்துக்கு ஏற்பட்ட வளர்ச்சி நல்ல வேளையாக பரமகுடிக்கு அப்பால் தாண்டவில்லை என்று இப்பொழுது கொஞ்சம் சந்தோஷப்பட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றையதினம் நம் முன்னுள்ள பிரச்னை, முதுகுளத்தூரில் நடந்தது நவகாளியா, ஜாலியன்வாலாவா, அல்லது இரண்டுமா என்பதுதான். ஜாலியன்வாலாவில் ஏற்பட்டதுபோல படு கொலைகள் நடந்திருக்கின்றன. துப்பாக்கிப் பிரயோகங்கள் நடை பெற்றிருக்கின்றன. பல குற்றங்களுக்காக தண்டிப்பதாக கூறிக்கொண்டு பல்வேறு மக்கள் சிறைச்சாலையில் அடைக்கப் பட்டிருக்கிறார்கள். இந்த வட்டாரத்தில் நல்ல செல்வாக்கு படைத்த முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். அவருக்கும் எனக்குமோ அல்லது எங்கள் கழகத்துக்குமோ அன்போ, தொடர்போ, பற்றோ, பாசமோ இல்லை என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளுகிறேன். ஒருகால் நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அவர் காங்கிரஸுடன் ஒன்றிப்போகமுடியுமே தவிர, எங்களோடு ஈடுபட்டு ஒன்றிப்போய் விட முடியாது என்பது அரசியல் வட்டாரத்தில் நன்றாகத் தெரியும். தடுப்புக்காவல் சட்டத்தைப்பற்றி நாங்கள் ஏதாவது பேசினால், அதிலே சம்பந்தப்பட்ட ஆட்களை மறந்து பிரச்னையைப் பற்றி அணுகுகின்றோம். தடுப்புக்காவல் சட்டத்தை ஆட்சியாளர்கள் மிகமிக தாராளமாக பயன்படுத்துகிறார்கள். அன்று துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபடுகின்ற நேரத்திலே என்ன காரணங்கள்

காட்டினார்களோ, அதே காரணங்களை இப்பொழுது காட்டுகிறார்கள். முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் 20 ஆண்டு காலமாக பலாத்காரத்தில் ஈடுபட்டிருந்தால் அவர்மீது வழக்குத் தொடருவதை நியாய உள்ளம் படைத்த யாரும் மறுக்க மாட்டார்கள். கோவிந்தசுவாமி அவர்கள் தேர்தலில் வெற்றிபெற்றது கண்டு வெற்றி பெறாத காங்கிரஸ்காரர்களின் தூண்டுதலின்பேரில் கொள்ளை, கொலை நடந்தன என்று சர்க்கார் அவர்பேரில் வழக்குத் தொடர்ந்தார்கள். 11 ஆண்டு காலம் வழக்கும் நடந்தது. கோவிந்தசுவாமி அவர்கள் பேரில் கொள்ளைக் குற்றம்சாட்டி வழக்குத் தொடர தயாராக இருந்தவர்கள் யாரைத்தான் கொலை பாதகர்கள் என்று சொல்லமாட்டார்கள்? உண்மையான கொலைபாதகர்களை கண்டுபிடிக்க எங்களுடைய துணையை நாடியிருப்பார்களேயானால், எங்களால் முடியுமானால் அந்தப் பொறுப்பிலிருந்து நாங்கள் தப்பிக்கொள்ள மாட்டோம்.

இந்த முதுகுளத்தூர் பிரச்னையைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ‘கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்’ என்று சொல்லுவார்கள். அதாவது பார்த்தவர்கள் சொல்லவில்லை, சொன்னவர்கள் பார்க்கவில்லை. என்னைப் பொறுத்த வரையிலே கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என்பதல்ல. நான் நேரடியாகப் பார்க்கவில்லை, விண்டவர் கண்டு சொல்லியதை எண்ணிப் பார்க்கிறேன். இருவரும் உணர்ச்சி வேகப்பட்டிருப்பதை நான் நிச்சயமாக உணர்கிறேன். இந்த உணர்ச்சி மதவெறியின் காரணமா என்று ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை. அதுபோலவே, இந்த உணர்ச்சியினால் இந்த அரசியலுக்கு லாபம் அதிகமா, அந்த அரசியலுக்கு லாபம் அதிகமா என்று சொல்ல தேவை இல்லை, என்னுடைய மதிப்பிற்குரிய கன்னியாகுமரி அங்கத்தினர் அவர்கள் ஆதித்திராவிட மக்களின் அல்லலைப்போக்க எல்லோரும் ஒன்றாகக் கூடி அரசியல் கட்சிகள் யோசித்தோம் என்று சொன்னார்கள். அம்மாதிரி கூட்டம் நடைபெற்ற தகவல் எனக்கு இல்லை. அதுபற்றி என்னை அணுகியிருந்தால், எங்கள் திராவிட முன்னேற்ற கழகத்தினர் ஆலோசனைகூறி நாங்களே அதை நடத்த ஒத்துக்கொண்டிருப்போம். ஆதித்திராவிட மக்களைக் காப்பாற்ற இந்த நாட்டை ஆளுகின்ற சர்க்கார் கொஞ்சம் அதிகசிரமமான காரியங்களில் ஈடுபட்டிருந்தால் கூட அதை நாங்கள் தாங்கிக்கொள்ளுவோம் என்று பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனென்றால் தலைமுறை தலை

முறையாக அவர்கள் ஒடுக்கப்பட்டு பாழ்படுத்தப்பட்டிருக்கிறார்கள். மக்களின் உரிமை உணர்ச்சி இந்த 20 ஆண்டு காலமாகத்தான் ஏற்பட்டது. அதற்குக் காரணம் நாங்கள்தான் என்று காங்கிரஸ் காரர்கள் மார்தட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் நாங்கள்தான் என்று நாங்கள் எண்ணிக்கொண்டிருக்கிறோம். அதற்குக்காரணம் காலம் என்று உலக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து சொல்லுகிறார்கள். மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளை தவிர்ப்பதற்கு இந்த நாட்டை ஆளுகின்ற சர்க்கார் சரியான நேரத்தில் சரியான முறையை கையாளவில்லை. அவர்கள் ஏன் சரியான போலீஸ் படையை அமைத்துக்கொள்ளவில்லை. ஏன் 8 பேர்களை சிறையில் போட்டார்கள் என்று கேட்பதுமட்டுமல்ல. நமது போலீஸ் அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் முதல் பாராவில்

"I rise to make a statement on the recent outbreak of lawlessness and violence in some parts of Ramanathapuram district and the steps taken by the Government to maintain law and order and to render relief to the victims of the riots."

என்று இருக்கக்கூடிய விஷயங்களில் எவ்வளவு முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது என்பதைப் பார்த்தால் இந்த நாட்டை ஆளுகின்ற சர்க்கார் மக்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான வர்கள் அல்ல என்று தெரியவில்லையா என்று கேட்கிறேன். Outbreak என்று இவர்கள் சொல்வதன்? அர்த்தமென்ன? திடீரென்று எரி மலையைப்போல் - அமைதியாக இருந்த பிரதேசத்தில் ஒரு கலவரம் வெடித்தால் அவுட் ப்ரேக் என்று இவர்கள் சொல்வது உண்மையாக இருக்கும்.

அறிக்கையின் பிற்பகுதியைப் பார்க்கப் போனால் சட்டத்தை மீறுகின்ற தன்மையில், பலாத்காரச் செயலில் மக்களைத் தூண்டி விட்டு, பெரிய குழப்பங்களையும், கலவரங்களையும் உண்டுபண்ணு கின்ற நிலைமை தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது என்பதான தகவல்களை நன்றாக எடுத்துத் தந்திருக்கிறார்கள். ஆகவே இப்போது நடைபெற்ற கலவரத்தை திடீரென்று அமைதியாக இருந்த வேளையில், யாரும் எதிர்பார்க்காத சமயத்தில் எரிமலை போல அவுட் பர்ஸ்ட் ஆன சம்பவம் என்று சித்தரிப்பது முன்னுக்கும் பின்னுக்கும் பொருத்தமில்லாத விஷயம். இந்தச் சர்க்காரிடத்தில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று தெரிவித்துக் கொள்வதற்குக் காரணம் ''உங்கள் ஆட்சியிலே சட்டம் மதிக்கப்படவில்லை. பாதுகாக்கப்

படவில்லை. உங்கள் ஆட்சியிலே பலாத்காரம் தலைதூக்குகின்றது. சட்டத்தை மதித்து, பலாத்காரம் தலைதூக்காமல் செய்யக் கூடிய திறமை உங்களுக்கு இல்லை. பலாத்காரத்தை ஒடுக்கத் திறமையில்லாத நீங்கள் அதைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறீர்கள். உங்கள் பெயரில் நம்பிக்கை இல்லை'' எனத் தெரிவிக்கும் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பில் இருந்து நான் ஆதரிப்பது இதனால்தான்.

இந்த ராஜ்ய மக்களுடைய - ஆதித்திராவிட மக்களாக இருந்தாலும் சரி - பிற்பட்ட இனத்து மக்களாக இருந்தாலும் சரி - உயிருக்கோ, உடைமைக்கோ உங்களால் பாதுகாப்பு கொடுக்க முடியவில்லை. அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்குப் பதிலாக, அவர்கள்மேல் எடுக்கப்படுகிற பலாத்காரச் செயல்களுக்கு, நீங்களும் உங்கள் சுயநலத்தின் காரணமாக உடந்தையாக இருக்கிறீர்கள் என்கிற காரணத்தினால் உங்கள் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்கிறேன்.

மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் இன்றைக்கும்கூட எண்ணிக்கையைப் பாருங்கள் என்று சொன்னார். நேற்றும் சொன்னார். சந்தர்ப்பம் கிடைக்கிற நேரத்தில் எல்லாம் சொல்வார். எத்தனை முறை வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளட்டும். எண்ணிக்கையில் பெருத்தவர்கள் அவர்கள். ஆனால் நிச்சயமாக நியாயம் என்பது எண்ணிக்கையைப் பொறுத்தது மட்டும் அல்ல. எண்ணத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. மனதைப் பொறுத்துத் தான் இருக்கிறது.

அவர்கள் 150 பேர்கள் அங்கே இருக்கிற காரணத்தினாலே நாங்கள் இங்கே 40 பேர்கள் இருக்கிற காரணத்தினாலே, இந்தப் பக்கத்திலுள்ள கந்தசாமி கருப்பாக இருக்கிறார். காக்கையும் கருப்பு தான். ஆகவே கந்தசாமியும், காக்கைதான் என்று சொன்னால், அவர்கள் 150 பேரும் ஆம் என்றால் அந்த ஒரு காரணத்தினாலே கந்தசாமியும் நிச்சயமாக காக்கை ஆகிவிடமாட்டார். கந்தசாமி கருப்பாக இருக்கலாம். காக்கையும் கருப்பாக இருக்கலாம். அந்த ஒரு காரணத்திற்காக கந்தசாமி காக்கை ஆகமாட்டார் என்று இந்தப் பக்கத்தில் இருக்கிற எண்ணிக்கையில் அவர்களைவிடச் சிறுத்த நாங்கள் 40 பேர் சொன்னால் எண்ணிக்கையில் சிறுத்தவர்கள் என்பதற்காக இது ''இல்லை'' என்று ஆகிவிடாது. இப்படித்தான் நியாயத்தை, நீதியை இந்த ஜனநாயக காலத்தில் எண்ணிக்கையைக் கொண்டு நிர்ணயித்துவிட முடியாது. நல்ல ஜனநாயகப் பண்பை

ஸ்தாபிக்கக்கூடிய திறமை வாய்ந்த நிதியமைச்சர் அவர்கள் தாங்கள் எண்ணிக்கையில் பெருத்திருக்கிறோம் என்பதற்காக எண்ணிக்கை யைக்கொண்டு நியாயத்தை நிலைநாட்டிவிடுவோம் என்று எண்ணி அப்படிப் பேசியிருப்பார்கள் என்றால் அது நிச்சயமாக முடியாது என்பதை எதிர்கட்சி நன்றாக உணர்ந்திருக்கிறது.

உயர் திரு. சி. சுப்பிரமணியம்: நான் நேற்று சொன்னது நியாய அநியாயத்திற்கு எண்ணிக்கையைப் பாருங்கள் என்று சொல்ல வில்லை. மக்கள் யார் பேரில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதற்கு எண்ணிக்கையைப் பார்க்கச் சொன்னேன். நியாய அநியாயத்திற்குச் சொல்லவில்லை. இந்த அளவு வாதத்தைச் சொல்லக் கூடிய அளவு குறைவாகப் பேசுவதற்கு நான் எப்போதும் இறங்கமாட்டேன்.

திரு. சி. என். அண்ணாதுரை: மக்கள் ஆளுகின்றவர்களிடம் நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்வது ஐந்து ஆண்டு காலத்திற்கு ஒரு முறைதான். இடையே அவர்களுக்கு ஏற்படுகின்ற நம்பிக்கை யில்லாத மனக்கசப்பை, மனக்குமுறலை ஆளுகின்றவர்களுக்கு எடுத்து காட்டுவது எதிர்க் கட்சியின் பொறுப்பு.

இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானமும் கூட உங்களைப் பதவியில் இருந்து இதன் மூலம் விலக்கி விட முடியும் என்கிற நம்பிக்கையில் எதிர்க்கட்சியால் கொண்டுவரப் படவில்லை. அப்படி எதுவும் நடந்துவிடாது என்கிற எண்ணம் உங்களுக்கும் இருக்கின்றபடியினால்தான் இங்கே உட்கார்ந்து சிறப்பான வாதங்களை எல்லாம் செய்துகொண்டிருக்கிறீர்கள். இல்லாவிடில் இங்கே உட்கார்ந்து வாதங்கள் புரிந்துகொண்டிருக்க மாட்டீர்கள். தனித்தனியாக தங்களுக்கு ஆள் சேர்க்க முயன்று கொண்டிருப்பீர்கள். ஆகையால் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் மகத்தான ஆபத்து அவர்களுக்கு வந்துவிடும் என்று நாங்கள் மனப்பால் குடிக்கவில்லை. அமைச்சர் அவையைத் தள்ளிவிட இந்த தீர்மானத்தால் முடியாது என்கிற ஒரு காரணமும் இருக்கலாம், நான் இந்த தீர்மானத்தை ஆதரிப்பதற்கு.

ஆளுகின்ற அமைச்சர் அவை பிரும்மாண்டமான வலுவில் இருக்கிறது. மிகச் சிறிய எண்ணிக்கையில் உள்ள எங்களால் அவர்களுக்குப் பாடம் கற்பிக்க முடியும் என்று நாங்கள் நினைக்க

வில்லை. காலம் ஒன்றுதான் அவர்களுக்கு பாடம் கற்பிக்க முடியும் என்று நாங்கள் நினைக்கவில்லை. காலம் ஒன்றுதான் அவர்களுக்கு படம் காட்ட முடியும். அவர்கள் ஆளும் கட்சி. நாங்கள் எதிர்க்கட்சிகள்.

எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்கள் ஒவ்வொரு கோணத்தில் இருந்து இந்த நம்பிக்கை இல்லாத்தீர்மானத்தை ஆதரிப்பதற்குக் காரணம் எதிர்கால அமைதியாவது பாதுகாக்கப்படவேண்டும் என்கிற ஒரு எண்ணம்தான். சட்ட மன்றத் தலைவர் அவர்களே, உங்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல சந்தர்ப்பங்களில் நான் இங்கே பேசவேண்டும் என்று ஆசைப்பட்டேன். நீண்ட நேரம் பேச வேண்டுமென்று ஆசைப்பட்டது உண்டு. நன்றாகப் பேசவேண்டும் என்றும் ஆசை. ஆனால் எனக்குப் பேசாமல் இருக்கும் சந்தர்ப்பம் இந்தச் சமயத்தில் கிடைத்திருந்தால் நான் எத்தனையோ மகிழ்ச்சி உடையவனாக இருந்திருப்பேன். இந்தப் பிரச்னையைப் பற்றி - பொது மேடைகளிலும் சரி சந்தர்ப்பம் கிடைக்கிற நேரத்தில் மிக ஜாக்கிரதையாக நழுவிவிட்டிருக்கிறேன். பேசாமல் இருந்திருக்கிறேன். பத்திரிகையில் ஒரு வார்த்தைகூட எழுதவில்லை. காரணம்? இந்தப் பக்கத்தில் நியாயம் இருக்கிறதா? அந்தப்பக்கத்தில் நியாயம் இருக்கிறதா என்பது ஒருபுறத்தில் தெரிந்துகொள்ள முடியாத சூழ்நிலை சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல. அந்தப் பிராந்தியத்து ஜனங்கள் மிகவும் சீக்கிரத்தில் உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள் - என்று அந்தப் பக்கத்தில் இருந்து அம்மையார் சொன்னதுபோல - நாம் அநுபவிக்கின்ற அரசியல் முறை 1957யோடு முடிவு அடைந்துவிடப் போகிறது இல்லை - நல்ல ஆற்றல் படைத்த மக்கள் அவர்கள் - பழி துடைக்கப்படுகிற வரையில் உள்ளம் கொதித்துக் கொண்டிருக்கப்போகிறார்கள் - இந்தச்சமயத்தில் எந்தப்பக்கத்தை ஆதரித்து நம்முடைய செல்வாக்கை அதிகப்படுத்திக் கொள்வோம் என நாங்கள் சிலரைப்போல அரசியல் தந்திரம் படைத்தவர்களாக இருக்க விரும்பவில்லை. ஒன்றைப்பற்றி எழுதினால் - ஒன்றைப்பற்றிப் பேசினால் - அதன் விளைவாக அந்தப்பகுதியில் மீண்டும் ஒரு அமளி ஏற்படுமானால் - சீக்கிரத்திலே உணர்ச்சிவசப்படக்கூடிய மக்கள் கொதித்தெழுவார்களானால் அதற்கு நாமேதான் பொறுப்பாளியாக வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கி அவர்களுக்கும் ராஜ்யத்திற்கும் தீங்கை உண்டு பண்ணாமல் அமைதியாக -

அவர்களைப் பண்படுத்திவிட்டோம் - புண்ணையாற்ற நியாயமான முறையில் மருந்து போடவேண்டும் என்கிற தன்மையில் பேசாமல் இருந்தேன். இப்போதும் கூட இந்தத் தீர்மானத்தின் மீதுபேசவிரும்ப வில்லை.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அமர்ந்திருக்கிற உறுப்பினர்கள் தங்கள் கருத்தை எடுத்துச்சொல்ல வேண்டும் என்கிற நிலைமை வந்தால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாங்கள் எந்த எந்தக் காரணத்திற்காக ஆதரிக்கிறோம் என்பதை நான் எடுத்துக்காட்ட கடமைப் பட்டுள்ளேன். அந்த முறையில்தான் இப்போதும் பேசுகின்றேன்.

தன்னைத்தானே இப்போது செய்திருக்கும்படியான காரியத்திற்காக போலீஸ் மந்திரி அவர்கள் ஒரு பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டார். நல்லதொரு நடவடிக்கையை போலீஸ் காரர்கள் எடுத்திருக்கிறார்கள் என்று தெரிவித்தார். எதிர்கட்சிகளில் இருந்து திரு. சசிவர்ண தேவர் அவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதைத் தெரிவித்தார். ஆதித்திராவிட மக்களுடைய முன்னேற்றத்தில், அந்தச் சமூகத்தாருக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தைத் துடைப்பதில் தாங்களும் பங்குகொள்ளத்தயார் என்பதாக அவரும் மூக்கையத்தேவரும் சொன்னார்கள். அந்தக் கருத்துக்கு நமது அமைச்சர் அவர்கள் நல்ல உருவம் கொடுத்துப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்பதும் என் அவா.

நாம் நீண்ட நாள் ஒரு சமூகத்தை பகைத்துக்கொண்டு வாழ முடியாது. போலீஸ் மந்திரி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி அந்த வட்டாரத்தில் நிரந்தமாக போலீஸ் பட்டாளங்களை வைத்துக் கொண்டிருக்க முடியாது. அங்கே உள்ள சமூகத்தார்களுக்கு மனக்கசப்பையும், பகைமை உணர்ச்சியையும்தான் அது வளர்க்க உதவும்.

முத்துராமலிங்க தேவர் அவர்கள் பலகாலமாக மற்ற கட்சிகளைப்பற்றி எந்த அளவுக்குப் பேசியிருக்கிறார்கள், என்னைப் பற்றியும், என் கட்சியைப் பற்றியும் எத்தனைவிதமாகப் பேசியிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அவற்றையெல்லாம் நான் இப்போது இந்த மன்றத்தில் எடுத்துப் பேசப் போவதில்லை. முதல் அமைச்சர் அவர்கள் கள்ளநோட்டு அடித்தார்கள் என்று அவர்

சொன்னதாக பலர் அந்தப் பக்கத்திலே இருந்து சொன்னார்கள். தேவர் அதோடு நிற்கவில்லை. அதில் ஒரு பங்கு முதல் அமைச்சர் அவர்கள் என்னிடம் கொடுத்து இருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார். ஆகவே அவருக்கும் எனக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாகவோ, பாசம் பற்று இருப்பதாகவோ எண்ணிக்கொண்டு நான் இந்த மாதிரியாகப் பேசுவதாக யாரும் நினைக்கக்கூடாது. முத்துராமலிங்கத் தேவர் 1933-ம் வருஷத்திலிருந்தே பாண்டிய மண்டலத்தில் சாதித் துவேஷம் வளர்க்கக் கூடிய வகையில் பிரசாரம் செய்து வந்திருக் கிறார்கள் என்று சொல்லப்பட்டது. வகுப்புக் கலவரம், சாதித் துவேஷம் இவை எல்லாவற்றுக்கும் அவர் உடந்தையாக இருந்து வந்தவர் என்று பேசப்பட்டது. இப்போதுதான் எனக்கு ஒரு தபால் வந்தது. அது ஒரு பத்திரிகை. ரங்கூன் நகரத்தில் கடல் கடந்து நிற்கும் தமிழர்கள் முத்துராமலிங்க தேவரின் பிறந்த தின விழாவைக் கொண்டாடும் அழைப்பிதழ். அவரைப்பற்றி இப்போது வெறுத்து ஒதுக்கத்தக்கவராகப் பேசிக்கொண்டிருக்கிறோம். அங்கே அவர்கள் உள்ளத்தில் வைத்துக் கொண்டாடுபவராக இருக்கிறார். உலகத்தார் வைத்திருக்கின்ற கருத்து இன்றைய தினம் இந்த ராஜ்ய ஆட்சியாளர் வைத்திருக்கின்ற கருத்தாகத்தான் இருக்கவேண்டும் என்பது இல்லை. அவர்கள் கருத்தே நாம் வைக்கவேண்டும் என்பது இல்லை. ஆனால் உலகத்தார் வைக்கின்ற கருத்துக்கு மதிப்பு அளிக்கவேண்டும். உலகத்தார் எல்லாம் போற்றுகின்ற உத்தமராக முத்துராமலிங்க தேவர் இருப்பாரானால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவரோடு கலந்து பேசி ஒரு சமரச சூழ்நிலையை அந்த பிராந்தியத்தில் உண்டு பண்ண ஏன் முயற்சிக்கக் கூடாது? அப்படி இவர் பேசுவதை வேண்டாமென்று யார் குறுக்கிட்டார்கள்? குறுக்கிடுகிறார்கள் என்றால் ஏன் குறுக்கிடுகிறார்கள்?

முதுகுளத்தூர் பிரச்னையாக இருந்தாலும் சரி, முரளி கபே பிரச்னையாக இருந்தாலும் சரி, எந்தப் பிரச்னையையும் முளை யிலேயே அணுகினால்தான் அதை தீர்க்க முடியும் என்ற அரசியல் தத்துவத்தை உங்களுக்கு எடுத்துக்கூற கடமைப் பட்டிருக்கிறேன். ஜாதிப் பெயர் குறிக்கும் பலகையை எடுக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்கிறார்கள். இதை நடத்துகின்றவர் பெரியார் ராமசாமி. 700 தொண்டர்களுக்கு மேல் சிறை சென்றிருக்கிறார்கள் என்று கேள்வி ஒன்றுக்கு பதில் சொல்லுகையில் சொன்னார்கள். நான் பத்திரிகையில் பார்த்தேன், கேரள சர்க்கார் உணவு விடுதிகளிலே ஜாதி அறிவிப்பு

பலகைகளை தாங்களாகவே நீக்கிவிடவேண்டும் என்று ஒரு அறிக்கை மூலம் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அவைகளை நீக்காவிட்டால் சர்க்காரே அந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று இருக்கிறது. அதற்கு ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தில் இருந்து எடுக்க வேண்டியதில்லை. கருணையோடு மனம் வைத்தால் இந்தப் பிரச்னையை உடனடியாக தீர்க்க முடியும். திரு. இமானுவல் படுகொலை செய்யப்பட்டதைப் பற்றி இங்கு பேசினார்கள். உண்மையில் அவர் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு மட்டும் அல்ல, தமிழ் நாட்டிற்கே ஒரு பெரிய தியாகம் செய்திருக்கிறார். இமானுவல் ராமனாதபுரத்து மண்ணிலே மறைந்த மாவீரன் மட்டும் அல்ல, உலகமே புகழும் ஒரு வீரனாகவே அவரைக் கருத வேண்டும். நாட்டில் ஒற்றுமைக்காக பாடுபட்டு தன்னையே பலியாக்கிக் கொண்ட ஒரு தியாகியை இழந்தோம். அவர் பெயர் இந்நாட்டு சரித்திரத்திலே பொறிக்கப்பட வேண்டியது. திரு. முத்துராமலிங்க தேவர் மறவர்களுக்கு தலைவராக இருந்தார். அதே போல் ஆதிதிராவிட மக்களின் தலைவராக விளங்கினார் திரு. இமானுவல் என்பதை அமைச்சர் அவை அறியும், இந்நாடும் அறியும்.

முதுகுளத்தூர் இமானுவல் படுகொலை செய்யப்பட்ட பிறகு அங்குள்ள மக்கள் தங்கள் தலைவரை இழந்ததற்காக ஆத்திரம் கொள்வதும் ஆத்திரத்தில் பழிக்குப்பழி வாங்க முயல்வதும் இயல்பு. அவர்களின் வீறிட்டெழும் உணர்ச்சியை ஆட்சியாளர் உணர்ந்திருப் பார்களேயானால், அங்கே போலீஸ் படையை உடனே அனுப்பி இருப்பார்கள். அந்த வட்டாரம் பூராவும் போலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் அல்லது போலீஸ் நிர்வாகத்தில் வைக்கப் பட்டிருக்கும். சம்பவம் நிகழ்ந்த நான்கு நாட்களில் மேலும் கலவரம் வளராது தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காது அவசர அவசரமாக துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்ட பிறகு வெங்கடேஸ்வரனை வைத்து விசாரணை நடத்தினார்கள். அவர்களின் நிர்வாகத் திறமையைப்பற்றி கனம் அமைச்சர் அவர்களே சொன்னார்கள். அதிகாரிகளின் நிர்வாகத் திறமையை அறிந்துக் கொள்ளக்கூடிய அளவிற்கு எனக்கு அரசியல் அறிவும் இல்லை. அனுபவமும் இல்லை. 10-ம் தேதி அன்று இமானுவல் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். நான்கு நாட்கள் கழிந்து போலீஸ் படைவந்து துப்பாக்கி பிரயோகம் செய்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர் போய்விட்டாரே என்று அந்த மக்கள் கொதித்தெழுவதில்

என்ன ஆச்சரியம். திரு. சிதம்பர பாரதி அவர்கள் சொன்னார்கள் யாராவது இந்த தென் பாண்டிய மண்டலத்திலே திரு. முத்துராமலிங்க தேவருக்கு எதிராக பேசுவார்களேயானால் அவர்கள் தலை உருளும் என்று சொல்லுவதாகச் சொன்னார்கள். என்னைவிட அவர் தைரியசாலி, இல்லாவிட்டால் இவ்வளவு தைரியமாக பேசுவாரா? கலகம் நடந்த இடத்தில் விசாரணை நடத்துவதற்கு திரு. வெங்கடேஸ்வரன் அவர்களை விசாரணை நடத்துவதற்கு அனுப்பி யிருக்கிறார்கள். தேனி தியாகராஜன் கூட இவரை புகழ்ந்திருக்கிறார். அப்பொழுது இருந்த சூழ்நிலையில் சாட்சிகள் எப்படி வருவார்கள். ஒரு பக்கம் விசாரணை நடக்கிறது. மற்றொரு பக்கம் தீ வைத்துக் கொண்டே போகிறார்கள். கனம் போலீஸ் அமைச்சர் கூறுகிறார் அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்கப்பட்டது என்று. S.A.P.S, M.S.P. 4, Armed Reserve Police 4, Wireless set 4, அனுப்பி வைத்திருப்பதாக புள்ளி விவரம் தருகிறார். அங்கே இருக்கும் வீடுகள் ஏராளமாக தீக்கிரையாகிக் கொண்டிருக்கும்போது தீயை அணைப்பதற்காக தீ அணைப்பு படையை அனுப்பவில்லை. சில நாட்களுக்கு முன் தான் இந்த தீ அணைப்பு வாரம் கொண்டாடி னார்கள். அந்த விழாவில் ஒரு படத்தைப் பார்த்தேன். உயரமான மாடியில் தீ பிடித்துக்கொண்டால் கீழே குதித்து விடவேண்டும். கீழே ஒரு வலை கட்டப்பட்டிருக்கிறது. அந்த வலையை உபயோகப்படுத்த வில்லையானால் உயிரிழக்க நேரிடும் என்று காட்டினார்கள். ஆனால் அது போன்ற வலை நமது அரசிடம் இல்லை என்று அதிகாரி கூறினார். தீ அணைப்புப் படை அரசாங்கத்திடம் இருந்தும், பயன்பட வேண்டிய சமயத்தில் உபயோகப்படுவதில்லை. அங்கு தீ பரவாமல் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அங்குள்ள கட்சி தீ பரவாமல் தடுப்பதற்கும் தவறிவிட்டது.

திரு. ஏழுமலை அவர்கள் எங்கள் கட்சி நிதானமாக கட்சி என்று சொன்னார். ஆம். யார் இல்லை என்று சொன்னது. பார்த்த பிறகு தானே தெரிகிறது. அங்கே இரண்டு கட்சிகள் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ஒன்று காங்கிரஸ் கட்சி, மற்றொன்று பார்வார்ட் பிளாக். நாடார்கள் தாழ்த்தப்பட்ட மக்களை தூண்டிவிட்டதாக குற்றம் சாட்டியிருக்கிறார்கள். எனக்கு காங்கிரஸ் நாடார்களைப் பற்றி தெரியாது. ஆனால் நாடார்களைப் பற்றி தெரியும். நாடார் அவைகளை நாடார்.

இந்த 10 ஆண்டு காலமாக நான் கேட்கிறேன். நீங்கள் இந்த துப்பாக்கி பிரயோகத்தை பயன் படுத்தும் அளவிற்கு எந்த ஜனநாயக சர்க்காராவது பயன் படுத்தி இருக்கிறதா? நீங்கள் வணங்கும் ஆண்டவன் பேரிலே கேட்கிறேன். நீங்கள் கடைப்பிடிக்கும் காந்திய நெறியின் பெயராலும் கேட்கிறேன். உங்கள் நெஞ்சிலே கைவைத்துச் சொல்லுங்கள். இத்தனை ஆண்டுகாலமாக நம் நாட்டில் நடந்த துப்பாக்கிப் பிரயோகம் உலகத்திலே எந்த நாட்டிலேயாவது இந்த அளவுக்கு நடந்ததுண்டா? நீங்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவதை நாங்கள் கண்டித்தால் உடனே போலீஸ் அமைச்சர் "நாங்கள் இங்கு மட்டுமா துப்பாக்கி பிரயோகம் நடத்தினோம். இதற்கு முன்னேயே தூக்குக்குடியிலே நடத்தினோம், டால்மியா புரத்தில் நடத்தினோம். வால்பாறையில் நடத்தினோம், பயித்தியக்கார மக்களே இதுதானே எங்கள் வேலை, இப்பொழுது முதுகுளத்தூரில் சுட்டதற்கு நீங்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தீர்களே" என்று சொல்லுவார்கள். ஆம். இன்னும் இந்த ஐந்தாண்டு ஆட்சிக்காலத்தில் இன்னும் எத்தனை முறை இந்தத் துப்பாக்கியின் தோட்டாக்களைப் பயன் படுத்தப் போகிறீர்களோ? யார் யார் பலியாக இருக்கிறார்களோ என்று எண்ணி வேதனைப்படுகிறேன். அதனால்தான் உங்கள் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்கிறேன். நான் பத்திரிகையில் பார்த்தேன். துருக்கி நாட்டிலே ஒரு கட்சி ஆட்சிக்கு வந்ததற்கு அந்தக் கட்சிக்கும் மற்றொரு கட்சிக்கும் தகராறு மூண்டு ஏறக்குறைய 7,000 பேர் கலகத்தில் ஈடுபட்டவர்கள் ஆர்பாட்டம் செய்தார்கள். அந்தக் கூட்டத்தைக் கலைக்க துருக்கி சர்க்கார் உபயோகப் படுத்தியது துப்பாக்கியை அல்ல, அவர்கள் மீது தண்ணீரை இறைத்து கலைத்திருக்கிறார்கள். அங்கே ஏராளமான கூட்டம் பெரும் கலகம் விளைவித்த போதிலும், அந்த சர்க்கார் தீ அணைக்கும் படையின் உதவியினால் கலகத்தை தடுக்க அந்த மக்கள் மீது தண்ணீர் இறைத்து துரத்தியிருக்கிறார்கள். ஆனால் இங்கு நடந்ததோ என்னவென்றால் கூட்டத்தைக் கலைப்பதற்கு துப்பாக்கியை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். கீழத்தூவலில் நடந்த சம்பவத்தில் 5 பேரைச் சுட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இதற்காக போலீஸ் படை சென்றிருக்கிறது. சுடுவதற்கு அனுப்பப் பட்ட அதிகாரியும் சுடுவதிலே பழக்கப்படாதவர் அல்ல, அதில் வல்ல தேர்ந்தவர்கள். ஆனால் சுடுவது மிருகங்களையோ, பறவைகளையோ அல்ல மக்களை என்று நினைவில் கொள்ளவேண்டும்.

நான் சொல்வதென்னவென்றால், அதிகாரிகள் பாரபட்சமாக நடந்து கொண்டார்களா இல்லையா என்பதல்ல. அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பு சரியானதா இல்லையா என்பதைப்பற்றித் தான் சொல்கிறேன். ஒரு சில தினங்களுக்கு முன்னால் டெல்லியில் பாராளுமன்றத்தில் உள்நாட்டு அமைச்சர் ஒரு வாக்குறுதி அளிப்பது போல் சொன்னார்கள், we will shoot to scare, not shoot to kill என்று. நாங்கள் கொல்வதற்காக சுடப் போவதில்லை. விரட்டுவதற்காகவே சுடப் போகிறோம் என்று சொன்னார்கள். அப்படி பந்த் அவர்களே சொன்னார்கள். அதைக்கண்டு, பந்த் அவர்களே இப்படிச் சொல்லியிருக்கிறார்களே; ஆகவே இனி போலீஸ் சுடமாட்டார்கள் என்று இந்த பேதை நெஞ்சம் நினைத்துக் கொண்டிருந்தது.

கொல்வதற்காகத்தான் சுட வேண்டும். சுட்டு கீழே விழுந்த பிணங்கள் மறவர்களின் பிணங்கள்தான். அவர்கள் கொடுமை செய்தவர்கள்; அதனால் அந்தப் பிணங்கள் விழுந்தால் பரவாயில்லை என்று சிலர் சொல்லலாம். ஆனால் அடுத்து குண்டு யார் பேரில் பாயும், இந்த ஐந்து வருடத்திற்குள் யார் யார் மேல் குண்டு பாயப்போகிறது, எத்தனை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் போகிறார்களோ, எத்தனை பேர்கள் அதனால் உயிர் நீக்கப் போகிறார்களோ, எந்தெந்த இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடக்கயிருக்கிறதோ என்று எண்ணிப்பார்க்கும்போது இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கை யில்லை என்று சொல்லத்தோன்றுகிறது. நான் எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன். உங்கள் அறிவில், உங்கள் ஆற்றலில் எனக்கு சந்தேகமில்லை என்று. ஆனால் நிலைமையைக் கண்டு அறிந்து கொள்வதற்கு நீங்கள் வைத்திருக்கும் அதிகாரிகள் உங்களுக்கு சரியான தகவல் தரவில்லை, நீங்கள் நன்கு ஆள வாய்ப்புத் தரவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். முத்துராமலிங்க தேவர் அவர்கள், 30; 33ஆம் ஆண்டிலிருந்து இன்றையதினம் வரையில் அங்கு பெற்றிருக்கும் செல்வாக்கைப் பற்றி எல்லோரும் எடுத்துச் சொல்கிறார்கள். சசிவர்ண தேவர் அவர்கள் எடுத்துச் சொன்னபோது, முத்துராமலிங்க தேவர் அவர்கள் மறவர்களின் சமூகத்தில் மட்டும் அல்ல, பிற சமூகத் தாரிடமும் நல்ல செல்வாக்கு பெற்றவர் என்று எடுத்துச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் எடுத்துச் சொல்லும்போது அவர் ஜாதி ஆதிக்கத்தால் செல்வாக்கு பெற்றார்கள் என்று சொன்னார்கள். எது எப்படியிருந்தாலும் அவருடைய செல்வாக்கு மகத்தானது என்பதை யாரும் மறுக்கவில்லை.

அவருடைய இந்தச் செல்வாக்கு, இன்றையதினம் கொலைக்கும், கொள்ளைக்கும் பயன்படத்தக்கதாகச் சொல்லும்போது, இந்த செல்வாக்குதான் காங்கிரஸிற்கு 10, 15 வருஷ காலமாகப் பயன்பட்டதல்லவா? என்று கேட்கிறேன். தேவர் அவர்கள் தரும் தொல்லைகள் பற்றி இப்பொழுது அமைச்சர்கள் அல்லல் படுகிறார்கள். ஏன்? இப்பொழுது அவர்கள் தரும் தொல்லைகள் காங்கிரஸிற்கு ஏற்படுகிறது. அன்று நான் சேர்ந்திருந்த ஜஸ்டிஸ் கட்சி அல்லல்பட்ட காலத்தில் அவரது தொல்லைகள் பற்றி, அவர் கொடுத்த தொல்லைகள் பற்றி ஒரு வார்த்தையாவது, ஒரு சின்ன வார்த்தையாவது சொன்னதுண்டா? 1937-ஆம் வருஷம் கூட அவர் காங்கிரஸ் அபேட்சக ராயிருந்து ராமனாதபுரம் ராஜா சுயேச்சையாக நின்றபோது எஸ்டேட் தாசில்தார் தாக்கப்படவில்லையா? அவர்களின் பேரில் நாங்களே அல்லவா வழக்குத் தொடுத்தோம் என்று நேற்றைய தினம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முத்துராமலிங்க தேவரின் செல்வாக்கை நீங்கள் திருப்பரங்குன்றத்தில் உபயோகித்துக் கொள்ளவில்லையா? அப்பொழுதெல்லாம் தேவர் பலாத்கார மனிதனாக இல்லாமற்போனதேன்? நிதியமைச்சர் அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர்தான். ஆனாலும் நாங்கள் சொல்வதை சற்று எண்ணிப் பார்க்கவேண்டும். அப்பொழுது நீங்கள் என்ன செய்தீர்கள்? மேலும் அவரைத்தான் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தி வைத்தீர்கள். தென்பாண்டி மண்டலத்தில் அவருடைய செல்வாக்கைக் கொண்டு தானே நீங்கள் ஆதிக்கம் பெற்றீர்கள். அவரைக் காட்டித்தானே ஜஸ்டிஸ் கட்சியை மிரட்டினீர்கள். அன்று அவரது செல்வாக்கைப் பெற்று வளர்ந்துவிட்டு இன்று அவரை பலாத்கார மனிதர் என்கிறீர்கள். அவ்வளவு பயங்கரமான மனிதரை ஏன் இவ்வளவு தூரத்திற்கு வளர்த்து விட்டீர்கள். அங்கு இப்பொழுதுள்ள நிலைமையை அடக்குவதாகச் சொல்லி இரண்டு வகுப்பாரிடையே பகையை மூட்டுகிறீர்கள் என்று பயப்படுகிறேன். ஆகவே, நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டிய நிலைமை, எடுக்கப்படுகிற முறை, எடுப்பதின் அளவு இம் மூன்றிலும் நீங்கள் பெற்றிருக்கிற அரசியல் செல்வாக்கை கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல், எத்தனை அரசுகள் வளர்ந்தன, எத்தனை அரசுகள் அழிந்தன என்ற வரலாற்றை மனத்தில் வைத்துக் கொண்டு போலீஸ் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் என்னிடம் சொன்னார், கீழத்தூவலில் ஐந்து மறவர்களின்

கையைக்கட்டியோ காலைக்கட்டியோ கண்ணைக்கட்டியோ போலீஸார் சுட்டார்கள் என்பதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் போலீஸார் அவ்வளவு பலாத்காரம் உபயோகித்திருக்க வேண்டியதில்லை என்று சொன்னார்கள். எப்படிச் சுட்டிருந்தாலும் சுடப்படக்கூடிய அளவிற்கு அங்கு உணர்ச்சி ஓங்கி இருக்கிறது. வெங்கடேஸ்வரன் அறிக்கையில் 300 பேர்கள் வந்தார்கள். பலாத்காரத்தோடு இருந்தார்கள். ஆயுதங்களை வைத்திருந்தார்கள். ஒரு முறை, இரண்டு முறை சொல்லியும் அக்கூட்டம் கலையாததால் சுட்டார்கள் என்கிறார்கள். இன்னொரு இடத்தில்,

An armed gang of 500 Thevars which went about setting fire to Palla houses and looting properties in Pacheri, Kaloorani and surrounding villages was encountered by a Special Armed Police party under the lead of Inspector of Police, Manamadurai, at Malavarayanendal at 5 p.m. The Police ordered the mob to surrender their arms. As the mob defied the Police and pelted stones at them, the Taluk Magistrate, Sivaganga, who was with the police party, ordered the police to open fire. Even after three rounds were fired, the mob still advanced towards the police party, where - on three more rounds were fired. One person who was injured as a result of the firing died on the way to the hospital.

என்று இருக்கிறது. இது 500 பேர். அது 300 பேர். போலீஸின் முறையில் கொஞ்சம் தன்மை இருக்கவேண்டுமென்று சொல்வது. அந்த இடத்தில் போலீஸ் அதிகாரி மனிதரை மனிதரென்று சுட்டார்கள். கீழத் தூவலில் சுட்ட அதிகாரி மனிதர்களை குருவிகள் என்று நினைத்து சுட்டார்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது. இதற்கு அமைச்சர் அவர்கள் சாமர்த்தியமாக பதில் அளிக்கக்கூடும். 16-ம் தேதி துப்பாக்கி பிரயோகம் செய்த பிறகு 20-ம் தேதி மக்கள் அடங்கியிருந்தார்கள் என்றால், 20-ம் தேதி கையாண்ட நடவடிக்கைகளை ஏன் 16-ம் தேதி கையாண்டிருக்கக் கூடாது? அப்படியென்றால் இந்த ஐந்து பேர் செத்திருக்கமாட்டார்களே. கீழத்தூவலில் போலீஸார் சுட்ட விதத்தைப் பார்க்கும்போது இமானுவேல் கொலை பற்றிய துப்புக் களையே அதனால் அழித்துவிட்டார்களோ என்று நினைக்கிறேன். பாகிஸ்தானில் லியாகத் அலிகானை ஒருவன் சுட்டுக் கொன்றபோது எப்படி அங்கிருந்த கூட்டத்தினர் அவனைப் பிடித்துப் பிய்த்துக் கொன்றுவிட்டதினால் யார் சதி செய்தார்கள் என்பதைப் பற்றிய ஆதாரமே பாகிஸ்தான் அரசாங்கத்திற்குக் கிடைக்காது போனது

மாதிரி, இமானுவேல் கொலைபற்றி ஏதாவது ஆதாரம் கிடைக்கும்படி இருந்தாலும், போலீஸார் நடந்துகொண்ட விதத்தில் அது கிடைக்காமல் அதை இழந்து விட்டார்கள். அந்த ஆதாரங்கள்கூட இந்தத் தீயில் பொசுக்கப்பட்டு போயிருக்கலாம். இது ஊகமே தவிர வேறொன்றும் இல்லை. அப்படியும் இருந்திருக்கக்கூடும். விசாரணை யில் இருப்பதால் அதைப்பற்றி நான் கூடுதல் சொல்லவில்லை. நமது அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது இவ்வளவு சொல்கிறவர்கள் போலீஸை வாபஸ் வாங்கவேண்டுமென்று பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர் யாரை மனதில் வைத்துக்கொண்டு சொன்னார்களோ, தெரியாது. ஆனால் எங்கள் கழகத்தைப் பொறுத்த வரையில் எங்கள் கழகத்தின் சார்பில் பேசிய அம்மையார் அவர்கள் போலீஸை வாபஸ் வாங்கக்கூடாது என்றுதான் சொன்னார்கள். வாபஸ் வாங்க வேண்டுமென்று சொல்லவில்லை. நடைபெற்ற சம்பவங்களுக்கு ஒரு ''ஜுடிஷியல் என்கொயறி'' நடத்தப்பட வேண்டுமென்பதைத்தான் நாங்கள் அத்தனை பேரும் வலியுறுத்து கிறோம். அது தேவை என்று சொல்லும் போது, ஏற்கெனவே விசாரித்த அதிகாரி நல்லவர் அல்லவா, திறமைசாலி அல்லவா என்று கேட்பதில் பயனில்லை. அது, அமளி இருந்தபோது நடைபெற்றது. காலையில் ஒரு விவாதத்திற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அதை ஏற்படுத்திய காலத்தில் அமைதி நிலவும் என்று எதிர்பார்த்தோம் என்றார்கள். ஒரு பக்கத்தில் விசாரணை நடக்க இன்னொரு பக்கத்தில் அமளி நடந்துகொண்டேயிருந்தது. ஜஸ்டிஸ் கட்சி காலத்திலும் சரி, பிரிட்டிஷ் நிர்வாகமுறையிலும் அமளி எல்லாம் அடங்கிய பிறகுதான் விசாரணை நடத்துவது என்ற கொள்கையை கையாண்டிருந்தார்கள். நிதியமைச்சர் சொன்னபோது அமளி பரவாது என்ற எண்ணத்தில் அதைச் செய்தோம் என்கிறார். நாட்டு மக்கள், அதிகாரிகள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளும் அதற்குக் காட்டுகிற காரணங்களும் போதுமானதல்ல என்று எண்ணுகிறார்கள். இந்த அளவிற்குக்கூட மக்களுக்கு மதிப்பளிக்கக் கூடாதா? எல்லாயிடங் களுக்கும் சேர்த்து ஒரு ''ஜுடிஷியல் என்கொயறி'' செய்வதில் என்ன தவறு இருக்கிறது? அதற்கு ஏற்படும் தயக்கம் என்ன? எந்தக் கட்சியையும் ஆதரிக்கவேண்டும் என்பதற்காக இந்த விசாரணை நடத்தவேண்டுமென்று சொல்லவில்லை. நாங்கள் நேரடியாக சம்பந்தப்பட்ட விஷயங்களில்கூட நீதி விசாரணை கேட்கவில்லை. ஆனால், இந்த விஷயத்திற்குக் கேட்பதற்குக் காரணம், இது,

சந்தையிலும், அங்காடியிலும், வீடுதோறும், உணவு விடுதிகள் தோறும், நாலைந்து பேர்கள் கூடுகிற இடங்களில் அடிதடி ஏற்படும் அளவிற்கு இது ஒரு பெரிய பிரச்னையாய் இருந்துவருகிறது. இது பேச்சுத்திறமையைக் காட்டும் பிரச்னையாயிருந்தால் உங்கள் வாதங்களை நான் ஏற்றுக்கொள்வேன். அதனால் எனது வாதத் திறமையை உயர்த்திக்கொள்ளப் பயன்படுத்திக் கொண்டிருப்பேன். இன்று நகரத்தில் எந்தப் பக்கத்தில் போனாலும் மாலை நேரத்தில் உணவு விடுதிகளில் எல்லாம், தெருக்கோடிகளில் எல்லாம், சந்தைகளில், பஸ் ஸ்டாண்டுகளில் எல்லாம் பேசப்படுகின்ற பேச்செல்லாம் இந்தப் பிரச்னையைப்பற்றித்தான். ஐந்து பேரை கையை கட்டிவைத்து சுட்டார்களாமே, இல்லை, கையை கட்டவில்லை என்று இன்னொருவர், நீ பார்த்தாயா என்று மற்றொருவர், நான் பார்க்கவில்லை, பார்த்தவர் ஒருவர் சொன்னார் என்று இன்னொருவர், இவ்விதமாக பேசப்படுவதை நாம் கேட்கின்றோம். இந்த ஆட்சியாளர்கள் இதை ஒன்றை மாத்திரமாவது கணக்கில் வைத்துக்கொண்டு இந்த நிலைமைகளை, இந்த சந்தேகங்களை நீக்கி, நிம்மதியை உண்டு பண்ணவேண்டும். நான், அல்லது எங்கள் கட்சி, இந்த ஆட்சியாளர்களின் பேரில் நம்பிக்கை இல்லை என்று சொல்லுவதின் மற்றொரு காரணம், இப்போது சொல்லப்படுகின்ற, தாழ்ந்த நிலையில் இருந்த அந்த பகுதிகளை இந்த ஆட்சியாளர்கள் எந்த லட்சணத்தில் வைத்திருந்தார்கள் என்பதைப் பற்றி நாம் பார்க்கவேண்டும். போலீஸ் அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் வேறு காரணங்களை காட்டலாம், அங்கே யெல்லாம் போவதற்கு ரோடு வசதியில்லை, வேறு பல வசதிகளும் இல்லாமல் இருந்தது, அதனால் தான் அந்த பகுதிகளை சீர்திருத்த முடியவில்லை, இன்று நாங்கள் அந்த பகுதிகளில் இவைகளை எல்லாம் போக்குவதற்காக முற்போக்கான பல திட்டங்களை வகுப்பதற்காக Block Development போன்ற பல திட்டங்களை ஆரம்பித்து இருக்கின்றோம் என்று வேண்டுமானால் நீங்கள் இன்று சொல்லலாம் - இப்போதாவது ஆரம்பித்ததற்காக நன்றி - இதுகாறும் ஆரம்பிக்காமல் விட்டுப் போனதற்காக அனுதாபம் - 16 மறவர்களை சுட்டுக் கொன்றார்கள் அல்லது 16 ஆதித் திராவிடர்களைச் சுட்டுக் கொன்றார்கள் என்பதோடு பழிக்குப் பழி சரியாகப் போய்விட்டது என்று மக்கள் கருதமாட்டார்கள். அடுத்த ஆண்டில் அவர்கள் எந்த மண்டலத்தில் இருந்தாலும் உங்களை சபிக்கப் போகிறார்கள்.

முன்னாலேயே படுகொலைகள் நடந்துகொண்டிருந்தது என்று கூறுகின்றீர்கள். இன்று இவற்றிற்கு எல்லாம் காரணம் என்னவென்று கருதுகின்றீர்கள்? மதிப்பிற்குரிய அரசாங்கத்தினர், ஆளும் கட்சியைச் சேர்ந்த அம்மையார் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்-கலப்புத் திருமணம் எல்லாம் நடந்துகொண்டிருந்தது என்று - முக்குலத்து மக்களிடம் பெண் கேட்பதற்கு அந்தப் பகுதிகளில் போனால் குரல் கொடுக்க மாட்டார்கள் என்று சொன்னார்கள் - சுய மரியாதை இயக்கம் தோன்றின காலத்திலிருந்து கலப்புத் திருமணம் நடந்து வந்திருக்கிறது. உண்மையில் அந்தப் பகுதிகளில் எல்லாம் சுயமரியாதை கழகம் அதிகமாகப் பரவியிருந்ததால் கலப்புத் திருமணம் அதிகமாக நடந்திருக்கும். சுயமரியாதைக் கழகம் மற்ற பல பகுதிகளில் அதிகமாகப் பரவியிருக்கின்ற காரணத்தினால்தான் இன்று நாட்டில் பல பகுதிகளிலும் கலப்புத் திருமணம் அதிகமாக நடைபெற்று வருகிறது. கலப்புத்திருமணத்தில் சுவை இருப்பதாக அறிந்ததின் காரணமாகத்தான் பல பகுதிகள் வரவேற்றன. சுயமரியாதை இயக்கம் பரவி இருந்திருக்குமானால் முதுகுளத்தூர் வட்டாரத்திலும் ஜாதி வெறி தலைவிரித்தாடி இருக்காது. இன்றைக்கு யார் மீது குற்றச் சாட்டுகளைக் கூறுகிறீர்களோ, அவர் மூலமாகத்தான் கழிந்த 25 ஆண்டு காலமாக காங்கிரஸ்காரர்கள் வோட்டுகள் வாங்கிக் கொண்டு இருந்தார்கள். ஆனால் இன்றையதினம் அந்த வோட்டுகள் காங்கிரசுக்குக் கிடைக்கவில்லை - மேலும் எங்கே கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயம் ஆட்சியாளர்களுக்கு, எங்கே இந்த வோட்டுகளை எல்லாம் திரு. வி. கே. ராமசாமி முதலியார் கொண்டு போய் விடுவார்களோ என்ற பயம். எங்களை பொறுத்த வரையிலும் அவர்களுக்கு வாங்கிக் கொடுத்தாலும் நிச்சயமாக எங்களுக்கு வாங்கித் தரமாட்டார் என்பது நிச்சயம். ஆகவே எங்களுக்கு அதைப்பற்றிக் கவலையே இல்லை. ஆகவே வோட்டு வாங்குவதற்கு மாத்திரம்தான் இவைகளை எல்லாம் செய்கின்றார்களே தவிர அந்தப் பகுதியிலுள்ள ஆதித்திராவிட மக்கள் தலைநிமிர்ந்து நிற்கக் கூடிய அளவுக்கு நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள். இன்றைக்கு 2,735 ஆதித்திராவிட மக்களுடைய வீடுகளும், 107 தேவர்களுடைய வீடுகளும் சாம்பலாக்கப்பட்டன என்று கணக்குக் கொடுக்கின்றீர்கள். இந்த 2,735 ஆதித்திராவிடர்களுடைய வீடுகள் எல்லாம் வெறும் ஓலைக் குடிசைகள்தானே. இவர்களை எல்லாம் இந்தக் குடிசைகளில் தானே இதுவரை விட்டு வைத்திருக்கிறீர்கள். இன்றுவரை அவர்களுக்கு என்ன

செய்து கொடுத்திருக்கிறீர்கள். இதுவரை நீங்கள் எங்கே போயிருந்தீர்கள். ஆதித்திராவிடர்களாகிய அவர்கள் ரத்தம் சொட்டச் சொட்ட முழங்கால் அளவுக்கு சேற்றில் வாழ்கின்றார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் ஆதித்திராவிடர்கள் இறந்துபோனால் அவர்களுடைய பிணத்தைத் தூக்கிக் கொண்டு போவதற்கு பக்கத்திலுள்ள வயல்களைக் கடந்து போக வேண்டும். நல்ல பாதை கிடையாது. வயல் முதலாளிகள் பாதையை விட்டுத் தரமாட்டேன் என்று சொல்லு கின்றார்கள். இவற்றை எல்லாம் அமைச்சர் கக்கன் அவர்கள் அங்கு வந்திருக்கும் நேரத்தில் அவர்களிடத்தில் எடுத்துக் காட்டினார்கள். நண்பர் எழுமலை அவர்களும் அந்தப் பகுதிகளுக்கு அவர்கள் கூட வந்திருந்தார்கள். நான் திம்மசமுத்திரத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். நீங்கள் இதுகாறும் ஆதித்திராவிட மக்களை சேற்றில் அழுத்தி, கொடுமையில் வைத்திருக்கவில்லை என்றால், நான் அவ்வாறு கருத மாட்டேன். இதுதான் இவைகளுக்குக் காரணமே தவிர வேறு ஒன்றும் இருக்க முடியாது. இவ்வளவு நாட்களாக உங்களுடைய கவனம் எங்கே செலுத்தப்பட்டிருந்தது. அந்தப் பகுதிகளில் ஏன் உங்கள் கவனத்தைச் செலுத்தாமல் இருந்திருக்கிறீர்கள். அவர்கள் எல்லாம் காந்தீயத்தின் அடிப்படையிலே வாழ்ந்துகொண்டி ருப்பவர்கள் தானே. நீங்கள் வேண்டுமானால் காந்தீயத்திற்குப் புறம்பாகப் போவீர்கள். சுவாமி சகஜானந்தா போன்றவர்கள் காந்தீயத்திலிருந்து விலகிப் போக மாட்டார்கள். 2,735 வீடுகள் எரிந்து போய்விட்டன. வீடு ஒன்றுக்கு 30 ரூபாய் கொடுப்பட்டதாகச் சொல்லப்பட்டது. இப்பொழுது 100 ரூபாய் கொடுப்பட்டதாக போலீஸ் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இவைகள் மாத்திரம் போதுமா என்று கேட்கின்றேன். நாம் பேச வேண்டியவைகளை எல்லாம் அந்தப் பகுதியில் போய்ப் பேசி இருக்க வேண்டும். இந்தச் சட்டசபைக் கூட்டத்தையே பரமக்குடியில் நடத்தி இருக்கலாம். இவைகள் எல்லாம் அந்த நாட்டில் இருக்கின்ற மக்களுக்கு தெரிந்து இருக்க வேண்டும். அதற்காகத்தான் இவைகளைச் சொல்லுகின்றேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. அமைச்சர்கள் ஏன் அந்தப் பகுதிகளுக்குப் போகவில்லை என்று தோழர் சின்னத்துரை அவர்கள் கேட்டதற்கு இவர்கள் எல்லாம் எங்கே போனார்கள் என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நாங்கள் எல்லாம் போய் என்ன செய்ய முடியும்? நாங்கள் போக வேண்டும் போலீஸ் பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டபோது கலகம் வரட்டும் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னீர்கள். பாதுகாப்பு வேண்டும்

என்று கேட்கின்ற நேரத்தில் எல்லாம் அமளிகள் வரட்டும், வந்தால் அவர்கள் அடக்கிக் கொள்வார்கள் என்று சொல்லுகின்றீர்கள். எனவே எதிர்க்கட்சிக் காரர்கள் போய் ஒன்றும் செய்ய முடியாது. ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள்தான் போய் இருக்க வேண்டுமென்று சின்னத்துரை அவர்கள் கேட்டதில் என்ன தவறு இருக்கிறது? அவர்கள் ஏதோ உணர்ச்சி வயப்பட்டு கேட்டார்களே தவிர, உங்களைப் புண்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அல்ல. புயல் அடித்த நேரத்தில் எல்லாம் அந்தப் பகுதிகளுக்குப் போயிருந்தால் வோட்டு கிடைத்திருக்கும். நமது போலீஸ் அமைச்சர் அவர்கள் எனக்கு முன்பே அரசியலில் நீண்ட காலமாக அனுபவம் பெற்றிருப்பவர்கள் என்று நினைக்கின்றேன். என்னுடைய தந்தை அரசியலில் ஈடுபட்டிருந்த காலத்திலேயிருந்து ஈடுபட்டிருக்கக் கூடியவர். அவருடைய மகனுடைய வயதிற்குத்தான் நான் இருப்பேன். மகன் இருக்கிறாரோ இல்லையோ, எனக்குத் தெரியாது.

உயர் திரு. சி. சுப்பிரமணியம்: மகன் இருக்கிறார்.

திரு. சி. என். அண்ணாதுரை: இருக்கிறார் என்றால் மகிழ்ச்சி. எனவே வோட்டு வாங்க வேண்டுமென்ற எண்ணமிருந்தால் புயல் அடித்த நேரத்தில் எல்லாம் அங்கு போயிருக்க வேண்டும். ஆனால் இப்போதல்ல அதற்குக் காலம். இப்போது தன்னைச் சுற்றி ஆட்களை வைத்துக்கொண்டு அடிபடாமல் திரும்பி வந்தாலே போதும். பல்கலைக் கழகப் பக்கம் திரும்பாவிட்டாலும் கூட, இந்நாட்டு மக்களை, இந்த நாட்டு அரசியலை நன்றாக நிர்ணயித்து வைத்திருக்கிற நமது முதலமைச்சர் அவர்கள் புயல் அடிக்கிற நேரம் பார்த்து அங்கு போனார்கள். எந்த இடங்களுக்கு எந்த நேரத்தில் போனால் வோட்டு கிடைக்கும், எந்த நேரத்தில் போனால் வேட்டு கிடைக்கும், எப்போது வோட்டு, எப்போது வேட்டு, என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். (கை தட்டல், ஆரவாரம்). அவர்கள் இதை எல்லாம் நன்கு அறிந்திருக்கின்றார்கள். எவ்விதமிருந்தாலும் இந்தப் பகுதிகளில் எல்லாம் நீங்கள் போக வேண்டிய நேரங்களில் போகவில்லை என்று தான் நாங்கள் உங்களை குற்றம் சாட்டுகிறோம். ஆகவே, உங்களிடம் ஒரு துளி மாசு இருந்தாலும் கூட அதை நீக்கிக் கொள்ள வேண்டும். பாகவதம், இராமாயணம் இவைகளைப் பற்றி நமது போலீஸ் அமைச்சர் அவர்களுக்கு நிரம்ப நம்பிக்கை உண்டு என்று நம்புகின்றேன். யாரோ ஊரில் ஒருவன் உத்தம சீதை களங்கப்

பட்டிருக்கிறாள் என்று சொன்னதற்காக உத்தம சீதை நெருப்பில் இறங்க வேண்டுமென்ற கடும் சோதனையை இராமபிரான் நடத்தினதை எல்லாம் இராமாயணத்தில் நீங்கள் படிக்கின்றீர்கள். அந்த நேரத்திலும் சீதை ராமனுக்குக் கிடைக்கவில்லை. பூமி பிளந்து உள்ளே போய்விடுகின்றாள். எங்கோ ஒருவன் சொன்ன குற்றத்திற்காக ஒரு சக்கரவர்த்தியே இவ்விதம் பரிசோதனை நடத்தி இருக்கிறார் என்றால், எவ்வளவோ ஆசாபாசங்கள் நிறைந்திருக்கும் இந்த உலகத்தில் இருக்கும் நீங்கள் அதுவும் எங்களைப் போன்ற ஆட்களையும் துணை கொண்டு இருக்கக் கூடிய நீங்கள் செய்கிற காரியங்களிலும் தவறு இருக்கத்தான் செய்யும். அதை நீக்கிக் கொள்வதற்கு நீதி விசாரணை வைத்தால் என்ன? நீதி விசாரணை வைப்பதின் மூலம் நீங்கள் உங்களையே பரிசுத்தப்படுத்திக் கொள்ள முடியும். அப்போதுதான் ஆளும் கட்சியினருக்கு சுட மட்டும் தெரியும் என்றில்லாமல் மருந்தும் தடவிடத் தெரியும் என்று பொதுமக்கள் புரிந்து கொள்வார்கள். அதற்காகவாவது இந்த நீதிமன்ற விசாரணையை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நாங்கள் எதிர் கட்சிகள் அல்ல. நாங்கள் எதிர் கட்சியாக இருந்திருந்தால் 'கீழ்த்தூவல்' கூட ஒரு சமயம் யோசித்துத்தான் நடந்திருக்கும். இனியாவது இப்படி நடக்காமல், அதற்கு பதிலாக அற நெறியிலும் அன்பு நெறியிலும் ஆட்சி நடத்தப்படும் என்பதற்கு உத்தரவாதம் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான், ஆட்சியாளர்கள் கையாண்ட முறையில் நம்பிக்கை இல்லை என்று சொல்லி இந்தப் பிரச்னை குறித்து இப்படிப் பேசியிருக்கிறோம் என்று கூறிக்கொண்டு, இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

நம்பிக்கையின்மையின் மீதான தீர்மான விவாதம்

உரை : 7 *நாள் : 31.10.1957*

பொருள்:- அமைச்சரவையின் பாற் நம்பிக்கையின்மைத் தீர்மானத்தின் மீதான விவாதம்

(எல்லாக் கட்சிகளின் சார்பாகவும் உறுப்பினர்கள் 26.10.1957 அன்று கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கலந்து கொண்டனர். விவாத இறுதிநாளான 31.10.1957 அன்று, ஆட்சியினர் மேற்குறிப்பிட்ட கலவரங்களின் காரணங்களைக் கண்டறிய நீதி விசாரணை அமைக்க ஒப்பவில்லை. ஆட்சியாளர்களின் போக்கைக் கண்டிக்கும் வகையில் தி.மு.க உறுப்பினர்கள் அனைவரும் வெளி நடப்பு செய்தனர். அவ்வெளிநடப்பிற்கு முன். . . . . .)

திரு. சி. என். அண்ணாதுரை : இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததன் நோக்கம் முதல் அமைச்சர் அவர்கள் பேரிலும் போலீஸ் அமைச்சர் அவர்கள் பேரிலும் குற்றச் சாட்டுகளைக் கொண்டு வருவதற்கு மாத்திரம்தான் என்று தமது நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நாங்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கின்ற நேரத்திலே நாங்கள் பேசுகின்ற பொழுது என்ன கூறினோம் என்பது நினைவிலே இருக்கிறது. இந்தப் பிரச்னைக்கு இரண்டு மந்திரிகள் பொறுப்பாளிகள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் ஒப்பவில்லை. விவாதத்தின் போது சர்க்கார் மீது குற்றஞ் சாட்டப் பட்டதற்குக் காரணம் விவாதத்தில் பேசும்போது எங்கள் கழகம் ஒரு கோணத்திலிருந்து பிரச்னையைப் பார்த்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் 'Business Advisory Committee' யின் கூட்டத்தில் கலகத்தைப் பற்றி விவாதிக்க வேண்டுமே தவிர நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றி வலியுறுத்த வேண்டியதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது''

என்பதைச் சொன்னார்கள். அந்தத் தீர்மானத்தை நாங்களும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் அதற்கு மாறுபட்டு இங்கு நடந்துவிட்டதற்கு எங்கள் வருத்தத்தையும் எங்கள் கழகத்தின் சார்பில் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கலவரம் சம்பந்தப் பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் மீது நீதி மன்ற விசாரணை தேவையில்லை என்று கனம் அமைச்சர்கள் சொல்லும் போது "அது தேவை" என்று வற்புறுத்த விரும்புகிறோம். ஆனால் அதை இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் வற்புறுத்துவோமானால் இரண்டு மந்திரிகள் மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை என்பதையும் வற்புறுத்துபவர்களாவோம். அப்படிச் செய்து அதன் விளைவுகளுக்கு கனம் அமைச்சர்களை உட்படுத்த விரும்பவில்லை. இந்தக் காரணங்களினால் இந்தச் சர்க்காரின் போக்கை நீதி விசாரணை அமைக்க ஒப்புக் கொள்ளாததற்காக கண்டிக்கும் முறையில் நானும் என்னுடைய கட்சி உறுப்பினர்களும் இப்போது இந்த மன்றத்தை விட்டு வெளியேறுகிறோம்.

(All the D.M.K. Members staged a walk out.)

உள்ளாட்சி பற்றிய வெள்ளை அறிக்கையின் மீதான விவாதம்

உரை : 8 *நாள் : 05.11.1957*

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே, வெள்ளை அறிக்கையின் பேரிலே நடைபெற்றுவருகின்ற இந்த விவாதம் - முடிந்த முடிவுகளை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்ற கட்டத்தில் இல்லாமல் - நாம் எடுக்க இருக்கிற முடிவுகள் நாட்டுக்குத் தேவைதானா என்று அலசிப் பார்ப்பதற்குப் பயன்படும் என்று நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் மெத்த நம்பிக்கையோடு வரவேற்கிறேன். ஏன் நம்பிக்கையோடு வரவேற்கிறேன் என்று நான் கூறுகிறேன் என்றால், கனம் சின்னதுரை அவர்கள் எடுத்துச் சொன்னபடி, ஏற்கனவே செய்யப்பட்டுவிட்ட ஒரு முடிவின்பேரில் அப்படி முடிவு எடுக்கப்பட்டதன் காரணமாக, இங்கே ஒப்புக்கு ஒரு விவாதத்தை நடத்துகிறார்களோ என்று ஐயப்படுகிற விதத்தில் மதுரை மாவட்டத்தில் ஒரு இடத்தில், அவர்கள் வெள்ளை அறிக்கையிலே என்ன மாதிரியான நிலைமைகளைக் காண விரும்புகிறார்களோ அவைகளையெல்லாம் அங்கே பரீட்சித்துப் பார்த்தாலும், அவைகள் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டிய முடிவுகள் அல்ல என்று எடுத்துச் சொன்னதை அரசியல் பெருந்தன்மையாக நான் கருதவில்லை. சர்க்காருடைய நல்ல நோக்கமாகவே கருதி அதை நான் வரவேற்கிறேன்.

இன்றையதினம் கிராமப் புறங்களிலே உள்ள நிலைமைகளைத் தக்கபடி சீர்திருத்துவதற்காக இந்த முறை கையாளப்படுகிறதா, அல்லது கிராம நல அபிவிருத்தி சமுதாய நல அபிவிருத்தி என்று போடப்பட்டிருக்கும் திட்டங்கள் வெற்றி பெறுவதற்காக இந்த முறையைக் கையாளுகிறார்களா என்பது உண்மையிலேயே குழப்பமாக இருக்கிறது. நிதி அமைச்சர் குறிப்பிட்ட கருத்துக்

குழப்பம், கேட்பவர்களிடையே மட்டுமல்ல, சொல்லுபவர்களிடையேயும் பெரும் அளவுக்கு இருக்கிறது. ஸ்தல ஸ்தாபனங்களை பிரித்து அமைக்கவேண்டுமென்ற கருத்து சமுதாய நலத் திட்டங்களைப் பற்றி எண்ணிப் பார்க்காமல் இருந்த காலத்திலேயே, ரத்தினசபாபதி முதலியார் காலத்திலேயே இந்த யோசனைகள் இந்த நாட்டிலே வலியுறுத்தப்பட்டுக்கொண்டு வந்திருக்கின்றன. இடையிலே ஏற்பட்ட ஒரு புதிய முறை இன்றைக்கு பொறுத்தமாக இருக்கிறதா, இல்லையா என்பதை ஆராய வேண்டுமென்பது மட்டுமல்ல. இருக்கின்ற ஸ்தல ஸ்தாபனங்கள் அமைப்பிலோ, அல்லது புதியதாக ஏற்பட இருக்கின்ற ஸ்தல ஸ்தாபனங்கள் அமைப்பிலோ சமுதாய நலத் திட்டங்கள் நிறைவேற்றுவதற்காக அவைகள் கருவியாக பயன்படவேண்டுமென்ற முறையில் இந்தப் பிரச்னை அணுகப் படுகிறதோ என்று நான் அஞ்சுகிறேன். நான் அப்படி அஞ்சத்தக்க அளவில் நிதி அமைச்சர் அவர்கள் சமுதாய நலத் திட்டத்தைப் பற்றி தமது உரையிலே 20 நிமிடங்கள் வலியுறுத்தி, அது சரியான முறையில் நடைபெற வேண்டுமானால் கிராம மக்கள் அக்கரை காட்ட வேண்டும், கிராம மக்களுக்கு அதில் அக்கரை இருக்கவேண்டும், அவர்களுடைய அமைப்பிலும் அதற்கெல்லாம் வசதிகள் இருக்க வேண்டுமென்று பரிசோதித்தார்.

சாதாரணமாக எங்கள் பக்கத்தில் மாடு வாங்கப் போகும்போது பெண் பார்த்துக்கொண்டு வருவது வாடிக்கை. அதே போல மாடு வாங்கப்போன இடத்தில் மாட்டையும் வாங்கிக்கொண்டு அத்துடன் பெண்ணையும் வாங்கி வருவதுபோல், சமுதாய நலத் திட்டத்தை எப்படி வெற்றிகரமாக நிறைவேற்றலாம் என்ற கருத்தை ஆராய்ந்திருக்கிற இந்த சர்க்கார் அதே நேரத்திலே ஒரு பெண்ணை வாங்கிக்கொண்டு வரலாம் என்பதைப்போல, நீண்ட நாளைய இந்தப் பிரச்னையை அதோடு ஒட்டிவைத்திருக்கிறார்கள். சமுதாய நலத் திட்டம் நல்ல முறையிலே இயங்கவேண்டுமென்று சர்க்கார் எடுத்துக்கொண்டுள்ள அக்கரையை உண்மையிலேயே வரவேற்கக்கூடிய நேரத்தில், எப்படி மத்திய அரசை ஆட்டிப் படைக்கின்ற அளவுக்கு ''பிளானிங் கமிஷன்'' உருவம் எடுத்து அதன் பலனாக பல நிதி அமைச்சர்கள் தங்களுடைய வாழ்நாளை விரைவிலே முடித்துக்கொள்ளவேண்டிய தாயிற்றோ, அதே முறையில் இங்கு சமுதாய நலத் திட்டம் என்ற புதிய இயந்திரம் நம்முடைய ஸ்தல ஸ்தாபன இயந்திரங்களை அடியோடு ஒழித்துக் கட்டிவிடும் என்று நான்

உண்மையிலேயே அஞ்சுகிறேன். உண்மையிலேயே திட்டங்கள் என்பது இன்றைக்கு இருக்கும் ஆட்சியாளரினால் மிகவும் முக்கியமாக கருதப்படலாம். ஆனால் அவைகளின் முக்கியத்துவத்திற்கு எந்த வகையிலும் குறைந்தது அல்ல நிரந்தரமாக நம்மிடத்தில் இருக்கும் சர்க்கார் இயந்திரங்கள். நிரந்தரமாக இருக்கின்ற சர்க்கார் இயந்திரங்களையே புதிதாக அமைக்கப்படுகின்ற திட்ட இயந்திரங்கள் அடியோடு ஒழித்துவிடும், அல்லது இரண்டும் ஒன்றுக் கொன்று முரண்பட்டுவிடும் என்ற வகையிலே இந்த உருவங்கள் இருக்கலாகாது என்ற என்னுடைய கருத்தைத் தெரியப்படுத்துகின்றேன்.

ஒவ்வொரு கட்டத்திலும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களை சந்தேகிக்கக்கூடிய அளவுக்கு அவர்கள் பக்கத்திலே அதிகாரிகளை நாம் அமர வைத்திருக்கிறோம். அப்படி அதிகாரிகளை அமரவைப்பதினாலே உண்மையிலேயே நான் அஞ்சுவது என்ன வென்றால், நேற்றையதினம் பேசும்போது டாக்டர் சவுந்திரம் அம்மையார் எடுத்துச்சொல்லியபடி, நல்ல தரம் உள்ளவர்கள் இத்தகைய அமைப்புகளில் அமருவதற்கு அஞ்சுவார்கள். நான் கலந்து கொண்ட ஒரு பஞ்சாயத்து மகாநாட்டில் பஞ்சாயத்து தலைவர்களும் உறுப்பினர்களும் தங்கள் அதிகாரிகளை அணுகினால் அதிகாரிகள் எப்படி அறுவறுக்கத்தக்க முறையிலே நடந்துகொள்ளுகிறார்கள் என்று வெளிப்படையாகப் பேசி, இனியாகிலும் அதிகாரிகள் அம்மாதிரி நடந்துகொள்ளக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானம் நிறைவேற்றும் நேரத்தில் அதில் கலந்து உரையாற்றிய ஒரு பஞ்சாயத்து தலைவர் எவ்வளவு உருக்கத்தோடு அதிகாரிகளிடம் தாங்கள் படும் அல்லலை எடுத்துச் சொன்னார் என்பதை நான் சொல்லுவதிலிருந்து அமைச்சர் அவர்கள் உணர முடியாது. நான் நேரிடையாகக் கேட்டதினால் அதை உணர்ந்து இந்த அவையிலே அந்த அல்லலை எடுத்துச் சொல்ல முன்வந்தேன். அதிகாரிகளிடத்திலே ஏற்கெனவே படுகின்ற அல்லல் போதாது என்று மேலும் அவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் அதிகாரியிடத்தில் நின்று கையேந்தி நிற்கவேண்டிய நிர்ப்பந்தமான முறையிலே இந்த அறிக்கை இன்றையதினம் இருக்கிறது என்று அஞ்சுகிறேன்.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்துகளைப் பற்றி பேசிய நேரத்தில் சில அடிப்படை தத்துவங்களை இங்கே எடுத்து விளக்கினார்கள். அப்படி அவர்கள் விளக்கியது மற்றவர்களை

விளக்கத் தூண்டும் முறையில் இருந்த காரணத்தினாலே, அதுபற்றி ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன். பஞ்சாயத்துக்கள் அல்லது ஸ்தல ஸ்தாபன அமைப்புகள் நல்லபடி நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதற்காக அதிகாரிகளை ஆங்காங்கு அமைப்பது என்பது அதிகார வர்க்கத்தை அதிகரிக்குமே தவிர, மக்களின் சுய ஆட்சி நிலைமை உரிமையை நிலைநிறுத்துவதாக இருக்காது.

பத்து ரூபாயை சில்லரை மாற்றி ஆளுக்கு ஒரு ரூபாய் கொடுத்தால் எல்லோருக்கும் ரூபாய் கிடைக்கும். நம்முடைய சர்க்கார் பத்து ரூபாய் நோட்டை பத்து துண்டாகக் கிழித்து ஒவ்வொரு துண்டையும் ஒவ்வொரு இடத்திலும் கொடுக்கிறார்கள். 500-க்கு ஐந்து பேர்கள் என்ற பஞ்சாயத்து அமைப்பில் ஒரு துண்டைத் தருகிறார்கள். மற்றொரு துண்டை எடுத்து பத்து கிராமங்களை ஒன்றாகச் சேர்த்து அவைகள் சில காரியங்களைச் செய்து கொள்ளலாம் என்று பஞ்சாயத்து சர்க்கிளிடம் ஒப்படைக்கிறார்கள். 70, 80 பஞ்சாயத்துகளை ஒன்றாகச் சேர்த்து இப்பொழுது அபிவிருத்தி திட்டங்கள் நடத்தப்படுகின்ற பகுதியின் அடிப்படையில் ஒரு பகுதிக்கு மற்றொரு துண்டை கொடுக்கிறார்கள். இப்படி இருக்கின்ற அதிகாரங்கள் எந்த இடத்திலும் நிர்வகிக்கமுடியாத அளவுக்கு துண்டாடப்பட்டிருக்கின்றன. எந்த ஒரு அமைப்பிற்கும் தன் காரியங்களை செய்தவற்கான முழு வாய்ப்பும் செய்து கொடுக்கப்படவில்லை. ஆங்காங்குள்ள நிர்வாக அதிகாரம் இப்பொழுது இருக்கக் கூடிய "பிளாக் டெவலப்மெண்டு" அதிகாரிகள், கிராம சேவக்குகள் இவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. இந்த அதிகாரிகளின் நோக்கம் கிராம நல அபிவிருத்தி திட்டங்களை எப்படி நிறைவேற்றுவது என்பதில் செல்லுமே தவிர பஞ்சாயத்துகளில் சுயஆட்சி உணர்ச்சியை எப்படி வளர்ப்பது என்பதில் அவர்கள் அக்கரை காட்டமாட்டார்கள், அல்லது அக்கரை செலுத்த மாட்டார்கள்.

"ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீஸர்களைப்" பற்றியும், சமுதாய நலத் திட்டங்களைப்பற்றியும் நமது இந்திய சர்க்கார் பெருமை அடித்துக்கொள்ளவில்லை. பெருமை அடித்துக்கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல. தாங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் காரியம் சரியானபடி நடத்தப்படவில்லை என்பதை அவர்களே

வெளியிட்டிருக்கின்ற "இவால்யுவேஷன் கமிட்டியின் ரிபோர்டு" எடுத்துக்காட்டியுள்ளது. "பிளாக் டெவலப்மெண்டு ஆபீசர்கள் சரியான முறையிலே தங்கள் கடமைகளை நிறைவேற்றவில்லை என்று கனம் டே அவர்களும், பாராளுமன்றத்தில் பலரும் எடுத்துக்காட்டியிருக் கிறார்கள். சந்தேகத்திற்கு இடமானவர்களையும் சரியானபடி காரியங்களை நடத்துகிறார்கள் என்று இன்னமும் தீர்மானிக்கப்படாமல் இருக்கின்ற அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு நிர்வாகத்தை நடத்தினால் அவர்கள் ஜனநாயகத்தையே உண்மையிலேயே பாழ்படுத்தி விடுவார்கள் என்று நான் மீண்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகையினாலே எல்லா இடங்களிலும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு நல்ல வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

ஜில்லா போர்டுகள் நிர்வகிக்கும் பரப்பும் நிலத்தின் அளவு அந்த ஜில்லா என்பது கட்டுக்கு அடங்காத, உண்மையிலேயே காரியங்களை நிறைவேற்றுவதற்கு முடியாத பெருத்த அளவுக்கு இருக்கிறது என்று சொல்லி, சிறுத்த அளவில் காரியங்களை நடத்தப்போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லும் நேரத்திலே அவர்களுக்கு ஒரு சிறிய யோசனை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பகுதிகள் எந்த அளவுக்கு இருக்கவேண்டுமென்பதற்கு வேறு முறைகளைக் கையாள்வதைவிட அரசியலுக்காக பிரிக்கப்பட்டிருக்கும் சட்டசபை தேர்தல் தொகுதிகளை ஏன் ஒரு வகையாக வைத்துக்கொள்ளக் கூடாது? சாதாரணமாக இப்படிப்பட்ட காரியங்களிலும், வேறு பல காரியங்களிலும் ஆங்கிலத்தில் இரண்டு பதங்களை உபயோகப் படுத்துவார்கள். நல்ல முறையில் நிர்வாகம் நடைபெறுவதற்கு "எகனாமிக் யூனிட்டாக" இருக்கவேண்டுமென்று சொல்லுவார்கள். அதாவது பொருளாதாரத் துறையிலே எல்லாவித வசதிகளையும் செய்துகொள்ள வகை இருக்கவேண்டும். அல்லது "பொலிடிகல் யூனிட்" அரசியலுக்கேற்ற அமைப்பாக இருக்கவேண்டுமென்று சொல்லுவார்கள். இப்பொழுது ஏற்படுத்தப்போகிற பஞ்சாயத்து யூனிட்டுகள், "எகனாமிக் யூனிட்டாகவுமில்லை", "பொலிடிகல் யூனிட்டாகவுமில்லை". "பொலிடிகஸ் யூனிட்டாக இருக்கவேண்டு மென்றால் ஏற்கெனவே இருக்கின்ற எம்.எல்.ஏக்கள் தொகுதிகளை அந்தத் தொகுதிகளாக வைத்திருக்கலாம். "எகனாமிக் யூனிட்டாக" இருக்கவேண்டுமென்றால், பொருளாதார நிபுணர்கள் எதை "எகனாமிக் யூனிட்" என்று சொல்லுகிறார்களோ அம்மாதிரி

பிரிக்கலாம். இரண்டையும் விட்டுவிட்டு குருடன் கோலை வீசி நொண்டி காலை எடுத்து வைப்பது போல இப்பொழுது இருக்கிற இரண்டு பிளாக்குகளை ஒன்றாகச் சேர்த்து ஒரு வகை யூனிட்டாக வைத்திருப்பதாக எடுத்துச்சொல்லுவது அவ்வளவு பொறுத்தமாக எனக்குத் தெரியவில்லை. கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்கு யாரிடம் எதற்கு எப்படி அணுகுவது என்பது, தெரியவில்லை. பல்வேறு அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள். ரெவின்யூ இலாகா ஒன்று இருக்கிறது. அவர்களும் கிணறு வெட்டுகிறார்கள். லோகல் "டெவலப்மெண்டு" இலாகா ஒன்று இருக்கிறது. அவர்களும் கிணறு வெட்டுகிறார்கள். சமுதாய நலத் திட்டத்தின் கீழும் கிணறுகளை வெட்டுகிறார்கள். என்னுடைய தொகுதியிலே ஒரு இடத்தில் ஒரு கிணறு வெட்டப்பட்டிருக்கிறது. அதற்குக் கைப்பிடிச் சுவர் இல்லை. கைப்பிடிச் சுவர் ஏன் கட்டப்படவில்லை என்று கேட்டால் "அதை நாங்கள் வெட்டவில்லை, சமுதாய நலத் திட்டத்தின் கீழ் வெட்டி யிருக்கிறார்கள், அவர்களைக் கேளுங்கள்" என்று ரெவின்யூ இலாகாவினர் சொல்வதாகவும், "நாங்கள் வரவில்லை, அவர்களைத்தான் கேட்கவேண்டும்" என்று இவர்கள் சொல்வதாகவும் அறிகிறேன். இன்றைக்கும் கைப்பிடிச் சுவர் இல்லாமல் கிராம மக்கள் அந்தக் கிணற்றை உபயோகித்து வருகிறார்கள். இப்படித் தாறுமாறாகக் காரியங்கள் நடை பெறுவதற்குக் காரணம் பொதுமக்கள் அந்தக் காரியத்திற்கு ஆதரவு தராததுதான். பொதுமக்கள் ஒத்துழைத்தால்தான், ஆதரவு தந்து பங்கு கொண்டால்தான், சமுதாய அபிவிருத்தித் திட்டங்களை வெற்றி கரமாக நிறைவேற்ற முடியும் என்று நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதைக்கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

அதே தத்துவத்தை அவர் இன்னும் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்திருப்பாரேயானால் பொதுமக்கள் எந்த நேரத்தில் ஆதரவு தருகிறார்கள், எந்த நேரத்தில் ஆதரவு தர மறுக்கிறார்கள் என்பதை அவர் கொஞ்சம் உணர்ந்து கொண்டிருக்க முடியும். எந்த இடத்தில் சமுதாய நலத்திட்டத்தினால் போடப்படுகிற திட்டம் சரியான முறையில் நடைபெறும், நல்ல திட்டம் என்கிற அபிப்பிராயம் பொதுமக்களுக்கு உண்டாகிறதோ அந்த இடத்தில் அவர்கள் ஆதரவு தந்து உற்சாகமாகத் தாங்களும் பங்கு கொண்டிருக்கிறார்கள். எந்த இடத்தில் இவர்கள் போடுகிற திட்டம் நன்றாக நடைபெறாது; இது வெறும் கண் துடைப்பு, மெழுகுப் பூச்சு, என்கிற அபிப்பிராயம்

அவர்களுக்கு உண்டாகிவிடுகிறதோ அங்கேயெல்லாம் அவர்கள் ஆதரவு கிடைப்பது இல்லை என்பதை அறிந்துகொள்ளலாம். இதை நான் நடைமுறையில் பார்த்திருக்கிறேன் என்பதற்கு ஒரு நிகழ்ச்சியை இந்த அவையில் - மன்றத் தலைவர் அவர்களே உங்கள் அனுமதியுடன் - சொல்வது பொருத்தமானதாக இருக்கும் என்பதால் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நிதி அமைச்சர் அவர்களுடைய கோயம்புத்தூர் மாவட்டத்தில் கவுந்தப்பாடி, சவுந்தப்பட்டு கிராமத்தில் சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பழங்குடி மக்களுக்கு 47 வீடுகளுக்கு மேல் கட்டப் பட்டிருக்கிறது. அந்த வீடுகளை நிதி அமைச்சர் அவர்களே திறந்து வைப்பதற்காக இருந்தார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆனால் இவர் திறந்து வைக்கச் செல்லவில்லை. அவர் திறந்து வைப்பதற்கு ஏற்ற அளவில் இல்லாமல் அவை கட்டிய சிறிது காலத்திற்குள்ளாகவே அலங்கோலமாகிவிட்டன. 47 வீடுகளில் 26 வீடுகள் கீழே விழுந்து அலங்கோலமாகக் கிடந்தன. அதைக் காண்பதற்கு என்னை அழைத்திருந்தார்கள். நான் பேசும்போதும் குறிப்பிட்டேன். "இந்த அலங்கோலக் காட்சியைக் காண்பதற்கு நிதி அமைச்சரை அழைக்காமல் என்னை அழைத்திருப்பதே நல்லது" என்று குறிப் பிட்டேன். நிதி அமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்திற்குச் செல்லும் காலத்தில் அவசியம் அந்த இடத்தைப் போய்ப் பார்க்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே பொதுமக்களுக்கு இது கண் துடைப்பு வேலை இல்லை என்கிற நம்பிக்கை உண்டாகும் வகையில் நல்லமுறையில் இவர்கள் சமுதாய அபிவிருத்தித் திட்டங்களைப் போட்டால்தான் அவர்கள் தங்கள் ஆதரவைத் தர முன்வருவார்கள். இந்தமாதிரியாகச் செய்தால் அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற முடியாது என்று தெரிவிக்க விரும்புகிறேன். அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவதற்குச் செய்யவேண்டிய முறை, கையாள வேண்டிய கொள்கை வேறு. அதைக்கொண்டுபோய் ஸ்தல ஸ்தாபனங்களுடன் பிணைப்பது என்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை.

ஒரு இயந்திரத்தினுடைய கருவியைக் கொண்டுபோய் இன்னொரு இயந்திரத்தோடு சேர்க்கும்போது அது பொருந்துமா என்பதைப் பார்த்து பொருத்தவேண்டும், இல்லாவிட்டால் அது முறிந்துவிடும், அல்லது இந்த இயந்திரத்தின் ஓட்டத்தைத் தடை

படுத்தும் என்பதாக நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு ஒரு உதாரணம் அவர்கள் ஜில்லாவிலேயே காட்டமுடியும். மாடுகள் இழுக்கும் வண்டிகளுக்கு டையர் சக்கரங்களைப் போடுகிறார்கள். டையர் சக்கரம் போட்ட வண்டி தார் ரோடில்தான் நன்றாகப் போகுமே தவிர மண் ரோடில் போகும் அந்த வண்டிகளுக்கு டையர் சக்கரங்களைப் பொறுத்துவது பொருந்தாத ஒன்றை கொண்டு போய் பொருத்துவதாகத்தான் இருக்கிறது. அதே முறையில் எல்லா இடத்திலும் அனுசரிக்கவேண்டாமென்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்தல ஸ்தாபனங்களைத் திருத்தி அமைக்கவேண்டுமென்ற கருத்தையும், சமுதாய நலத் திட்டம் வெற்றி பெறவேண்டுமென்ற கருத்தையும் ஒன்றாகப் பிணைப்பது சரியானது அல்ல. அந்தக் கண்ணோட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் நான் காணுகின்ற குறைபாடு இந்த அடிப்படையில்தான். சாதாரணமாக வெள்ளை அறிக்கையில் இருக்கிற மற்ற தத்துவங்களைப் பற்றியும் அவநம்பிக்கை இருக்கிறது. இங்கே பேசியவர்கள் எல்லோரும் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் - ஸ்ரீ முத்தையா அவர்களைத் தவிர மற்ற யாவரும் - வரவேற்கவில்லை. ஓரளவுதான் வரவேற்கிறேன் என்று ஸ்ரீ முத்தையாவும் குறிப்பிட்டார்கள். அந்த ஓரளவுதான் என்ன என்பதை அவர் இங்கே சொல்லாவிட்டாலும் பொறுக்குக் கமிட்டியிலாவது ஒரு சமயம் சொல்வாரோ என்று நினைக்கிறேன். சிந்தனைக்கு உரியதாகக் காணப்படுகிற விஷயங்களை எல்லாம், போட்டிருக்கிற பொறுக்குக் கமிட்டி நன்றாக அலசி ஆராய்ந்து பார்க்கும் என்று நம்பிக் கொண்டிருக்கிறேன்.

மற்றொன்று பஞ்சாயத்து நடக்கிற தேர்தலைப் பற்றி அரசியல் கட்சிகளுக்கு எல்லாம் சீறிய யோசனை ஒன்றை நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசியல் கட்சிகளை எல்லாம் யோசிக்கும் படியாகக் கேட்டுக் கொண்டார்கள். "அங்கே எல்லாம் அரசியல் கட்சி மனப்பான்மை வளருவது நல்லதா? அரசியல் கட்சியின் சார்பில் பஞ்சாயத்துக்குப் போட்டியிடுவது நல்லதா?" என்று கேட்டார்கள்.

மன்றத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நிதி அமைச்சர் அவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். முன்பு நான் சார்ந்திருந்த ஜஸ்டிஸ் கட்சி ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அரசியல் கட்சியின் சார்பில் போட்டி போடக்கூடாது என்கிற முறையைத்தான் அந்தக் காலத்தில்

வகுத்திருந்தார்கள். காங்கிரஸ்காரர்கள்தான் அந்த முறையைத் தகர்த்தெறிந்தார்கள். கட்சியின் சார்பில் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் போட்டியிடும் வழக்கத்தை கொண்டுவந்தார்கள். இன்றைக்கு அரசியல் கட்சியின் சார்பில் போட்டியிடக்கூடாது என்கிற முறையை வகுக்க விரும்பினார்கள் என்றால் - ஆங்கிலத்தில் சொல்வது உண்டு - ஜென்டில்மென்'ஸ் அக்ரிமெண்டு என்பதாக - அப்படி எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று கூடி அந்த முடிவுக்கு வருவார்களானால் நான் சார்ந்திருக்கிற கட்சிகளும் ஒன்று கூடி அந்த முடிவுக்கு வருவார்களானால் நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பில் காங்கிரஸ்காரர்கள் கொண்டுவருகின்ற அப்படிப்பட்ட முடிவுக்கு முழுக்க ஒத்துழைக்கத் தயாராய் இருப்பேன் என்று இன்றையதினம் சொல்லிக் கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியின் கருத்தாகத்தான் அது இருக்குமென்று நம்பி இதைச் சொல்லிக்கொள்கிறேன். இது நிதி அமைச்சர் அவர்களுடைய சொந்தக் கருத்து என்றால் தனிப்பட்ட முறையில் உயர்ந்த கருத்தைத் தெரிவித்ததற்காக என் மதிப்பு. அதன் பேரில் அவர் எடுத்துக்கொள்கிற நடவடிக்கை எப்படி இருக்குமோ அது எதிர்காலத்தில்தான் தெரியவேண்டும்.

ஆனால் ஒன்று, பஞ்சாயத்துக்கு அரசியல் கட்சியின் சார்பில் தேர்தலுக்கு நின்று சண்டை போட்டுக்கொள்வது நாகரீகச் சண்டையாக இருந்தாலும் இருக்கும். காரணம் பஞ்சாயத்து தேர்தல்கள் ஏதாவது ஒரு கட்சியின் சார்பில்தான் நடைபெறக்கூடியதாக இருக்கும். கிராமங்களுக்குச்சென்று பார்த்தால் தெரியும். வடக்குத் தெரு ஒரு கட்சி. தெற்குத் தெரு ஒரு கட்சி. இரண்டுக்கும் சண்டை. மேட்டுத் தெருவுக்கும், கிழக்குத் தெருவுக்கும் சண்டை; அல்லது சாதியின் பெயரால் சண்டை; அல்லது பெரிய வீட்டுக்காரருக்கும், சின்ன வீட்டுக்காரர்களுக்கும் சண்டை; என்று இப்படித்தான் இருக்கும். ஆனால் இந்தச் சண்டைகளை எல்லாம் விட அரசியல் கட்சிகளுக்குள் ஏற்படுகிற சண்டை ஒருகால் நாகரீகமான சண்டையாகவே இருக்க முடியும். ஆனால் ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் அரசியல் கட்சிகளின் சார்பில் ஸ்தல ஸ்தாபனங்களின் தேர்தல் நடைபெறக்கூடாது என்று இருந்த முறையை மாற்றி அமைத்த காங்கிரஸ்காரர்கள் - அரசியல் கட்சியின் சார்பில் போட்டியிடுவது நல்லதா என்பதையோசித்துப் பார்க்கவேண்டும் என்று சொல்கிற முறைக்கு இறங்கி வந்திருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் என்ன? தாங்கள் எதிர் பார்த்த நோக்கம் அதனால் பூர்த்தி

அடையவில்லை - இல்லா விட்டால் தாங்கள் எதிர் பார்த்தது போல் இல்லாமல் பல இடங்களில் தங்களுக்கே நஷ்டம் அதிகமாக வந்துவிட்டது என்கிற காரணமாக இருந்தாலும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் அது நல்ல யோசனை என்பதனால்தான் அந்தக் கருத்து உருவானால் எங்கள் கட்சியின் ஒத்துழைப்பும் அதற்குக் கிடைக்கும். இதைப்பற்றி எல்லாக் கட்சிகளும் ஒன்றுகூடி பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டால் அதை வரவேற்கிறேன் என்று எடுத்துச் சொல்லி, நாம் செய்கின்ற மாறுதல் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிகாரம் கொடுத்து அவை நல்ல முறையில் செயலாற்றவேண்டும் என்பதாக இருக்கவேண்டுமே தவிர சமுதாய காரணத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கக்கூடாது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

காரணம் சமுதாய நல அபிவிருத்தி திட்டங்கள் என்பன ஐந்து வருஷத்தின் அடிப்படையில் போடப்படுவது. நிரந்தரமான திட்டங்கள் இல்லை. முதல் ஐந்து வருஷத் திட்டம் முடிந்தது. இரண்டாவது ஐந்து வருஷத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. முடிந்தால் மூன்றாவது ஐந்து வருஷத் திட்டத்தையும் இவர்கள் கொண்டுவரலாம். அனுமதித்தால் நான்காவது ஐந்து வருஷத் திட்டத்தையும் கொண்டுவரக்கூடும். இப்படி அவை நிரந்தரமான திட்டங்களாக இல்லாமல் குறிப்பிட்ட வருஷங்களைக் கொண்ட திட்டங்களாகவே அவை அமைவன. ஆனால் ஸ்தல ஸ்தாபனங்கள் என்பது நிரந்தரமான ஒரு திட்டம். நிரந்தரமான ஒரு திட்டத்தோடு நிரந்தரமில்லாத திட்டத்தை பிணைப்பது ஒரு டப்பிக்குள் இன்னொரு சின்ன டப்பியைப் போடுவதாகத்தான் இருக்கும். இது அதோடு பொருந்தாது. உள்ளே இருந்து ஓசையைத்தான் எழுப்ப உதவும். பந்தோபஸ்தாக இருக்காது, என்கிற காரணத்தினால் ஸ்தல ஸ்தாபனங்களின் பிரச்சனை தனி. சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்களின் பிரச்சனை தனி. இரண்டையும் ஒன்றாகப் பிணைப்பது சரியல்ல என்று கூறி, சட்டசபைக் கமிட்டியில் ஸ்தல ஸ்தாபனங்களை நல்ல முறையில் சீர் அமைப்பது பற்றி ஆலோசிப்பார் என்று நம்பி முடித்துக்கொள்கிறேன்.

நாட்டு மதிப்பிற்குரியவற்றை களங்கப்படுத்தத் தடை விதிக்கும் சட்ட முன்முடிவு

உரை : 9 *நாள் : 11.11.1957*

(The Prevention of insult to National Honour)

*(நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் - என்பது வள்ளுவம்.*

எவ்வகைச் செயற்பாட்டிற்கும் இக்கூற்று பொருத்துவதாகும். தேசீய கௌரவம் என்பது பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றே. அக் கௌரவம் உணர்வால் உருவாவதே யன்றி சட்டத்தால் நிலை நிறுத்தப்படுவதன்று. இவ்வுரையில் பெரியாரின் செயல்களுக்குக் காரணம் கண்டறிந்து அதை நீக்க வழிசெய்யவேண்டும் என்கிறார் அண்ணா. அவ்வாறின்றி பெரியார் மேற்கொண்ட நடவடிக்கை களுக்குத் தடை விதிப்பது நேர்மையான அரசியல் நெறியாகாது என்பது அண்ணாவின் கருத்தாகும்).

திரு. சி. என். அண்ணாதுரை: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்றுவரையில் குற்றங்கள் என்று கருதப்படாமல் இருந்து வந்த சில செயல்கள், இனி மூன்று ஆண்டுகளுக்கு தண்டிக்கத்தக்க கடுமையான குற்றங்கள் என்று தெரிவிக்கும் இந்த மசோதாவை நான் தீதானது, தேவையற்றது, கொடுங்கோண்மைக்கு வழி கோலுவது என்று கூறி கண்டிக்கிறேன் என்று சொன்னால் நான் இந்தக்காரியங்களிலே பங்கு எடுத்துக் கொள்கிறவன் என்று நீங்கள் தவறாகக்கருதமாட்டீர்கள் என்று எண்ணுகிறேன். இதனை வார்த்தையால் மட்டும் சொல்ல வில்லை. முன்பு ஒரு சமயத்திலே தேசியக்கொடி எரிக்கப்படவேண்டு மென்ற கிளர்ச்சி நடந்த நேரத்திலே நான் அதிலிருந்து ஒதுங்கியிருந்து மட்டுமல்ல, அது தவறானது என்று வெளிப்படையாகக் கண்டித்தேன். ஆகையினால், நான் இன்றையதினம் இந்த சபையின் முன்னாலே

இருக்கிற இந்த மசோதா தீதானது, தேவையற்றது, கொடுங் கோன்மைக்கு வழிகோலுவது என்று கூறினால் அதன்மூலமாக தேசியச்சின்னத்தை தேசிய கௌரவத்தை பங்கப்படுத்த வேண்டு மென்று நான் வாதாடுகின்றேன் என்று பொருள் அல்ல. தேசிய கௌரவம் என்பது பரம்பரை பரம்பரையாக நாட்டுமக்கள் உள்ளத்திலே ஊடுருவிப்பாய வேண்டியது ஒன்றாகும். சட்டத்தின் மூலம் தேசிய கௌரவத்தை நிலைநிறுத்தமுடியாது. தேசிய கௌரவத்திற்கு இழுக்கை உண்டாக்கிக் கொண்டிருப்பவர்களை சும்மாவிட்டுக்கொண்டிருக்கமுடியுமா? பைத்தியக்காரர்கள் என்றால் அவர்களைப் பிடித்து உள்ளே போடத்தான் வேண்டும். சட்டம் இருக்கிறது என்பதாக போலீஸ் அமைச்சர் அவர்கள் பேசினார்கள். ஒரு நாட்டிலே பைத்தியக்காரர்கள் குறைவாக இருப்பது நாட்டுக்கும் நல்லது. ஒரு நாட்டிலே பைத்தியக் காரர்கள் குறைவாக இருப்பது என்பது, நாட்டுஆட்சிக்கும் பெருமை. "எங்கள் நாட்டிலே பைத்தியக்காரர்கள் ஜாஸ்தியாக இருக்கிறார்கள். அவர்களை அடக்க சட்டங்கள் போட்டிருக்கிறோம் என்று சொல்வது போலீஸ் அமைச்சருக்கோ, அவருடைய நிர்வாகத்திற்கோ பெருமையைத் தேடித்தராது. அதிகமாக இழுக்கைத்தான் தேடித்தரும் என்பதை மறந்துவிட முடியாது ஆகவே, தேசிய கௌரவத்தைப் பாதுகாக்க புதிய சட்டங்கள் தேவையில்லை என்று சொல்கிற நேரத்திலே "யாரோ ஒரு பைத்தியக்காரர் காந்தியாரின் படத்தைக் கொளுத்து கிறார் என்றால் அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியுமா" என்று இவர்கள் சட்டத்தைக் கொண்டு வரும்போது ஒன்று சொல்வேன் "நீங்கள் காந்தியாரின் உயிரைக் காப்பாற்றத் தயாரா யில்லாவிட்டாலும், காந்தியாரின் படத்தைக் காப்பற்றவாவது முயற்சி எடுத்துக் கொண்டீர்களே பெருமைதான்" என்று கூறவிரும்புகிறேன். சாதி வெறியினால்தான் காந்தியார் கோட்ஸே யினால் கொல்லப் பட்டார் என்பதும் சாதி வெறியை அடக்க காந்தியார் முயற்சி எடுத்ததுதான் காந்தியாரின் உயிருக்கே ஆபத்தாய் முடிந்தது என்பதும் உலகம் அறிந்த உண்மை.

காந்தியாரின் உயிரையே வாங்கிவிட்ட சாதிவெறியை அடக்குவதற்கு நாங்கள் சட்டம் கொண்டுவந்திருக்கிறோம் என்று சொன்னால் நான் அதைப் பாராட்டுவேன். உலகம் உங்களைப் பெருமையாகச் சொல்லிக் கொள்ளும். ஒன்றை நான் இந்த மன்றத்தில் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காந்தியாரின் சமாதிக்கு மாலை போட்டுவிட்டு கதர் கட்டிக் கொண்டிருக்கிற

காங்கிரஸ்காரர்கள்தாம் இன்றைக்கு இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் ஒருகாலத்தில் பெரியாரின் மாளிகையில் தங்கி இருந்தவர்கள் தாம். காந்தியார் சாதிவெறியினால் கொல்லப்பட்ட நேரத்திலே, காந்தியார் இருந்த இந்த நாட்டுக்கு காந்திநாடு என்பதாகவும், இந்நாட்டிலுள்ள மதத்திற்கு காந்தி மதம் என்றும் பெயர் வைக்க வேண்டுமென வெளிப்படையாகச் சொன்னவர் பெரியார்தான் என்பதை அந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவர்கள் மறந்திருக்கலாம். ஆனால் நாடு மறந்திருக்காது. நாட்டு மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். காந்தி பெரியாரின் மாளிகையில் தங்கி இருந்திருக் கிறார். காந்தியின் நினைவாகத் தன் தமக்கையின் பெண்ணுக்கு பெரியார் 'காந்தி' என்றே பெயர் வைத்திருக்கிறார்கள்.

காந்தியாரை வைத்துக் கொண்டு காங்கிரஸ் கட்சியார் தன் செல்வாக்கை அதிகமாக்கிக் கொண்டதன் காரணமாக அன்றைக்கு அவர் உயிரைக்காப்பாற்ற முன் வராவிட்டாலும் அவர் படத்தை யாவது காப்பாற்றுவோம் என முன்வந்திருக்கிறவர்கள் ஒரு உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும். "காந்தியாரின் படத்தைக் கொளுத்துவேன். அரசியல் சட்டத்தை கொளுத்துவேன்" என்று பெரியார் சொன்னார் என்றால் அவருக்கு அவைகளின் பெயரில் இருக்கிற வெறுப்பினால் அல்ல. தேசியக் கொடிக்குத் தேசிய சட்டத்திற்கு இழுக்கை உண்டாக்க வேண்டும் என்கிற எண்ணத்தினால் அல்ல. "இவைகளை எந்த காரணத்திற்காக, கொளுத்தச் சொல்கிறேன். கிழிக்கச் சொல்கிறேன்" என அவர் எடுத்துச் சொல்கிறாரோ அந்த குறைபாடுகளையெல்லாம் நீக்குவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்வதற்காக - அவர்களுடைய கவனத்தைக் கவருவதற்காக சொல்லப்படுகின்ற விஷயங்கள்தாம். அவைகளின் பேரில் அவருக்கு வெறுப்பு இல்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அதை உணர்ந்துகொண்டு அவர் எந்தெந்த காரணங்களுக்காக உள்ளம் குமுறிக் கொண்டிருக்கிறாரோ அதை நிறைவேற்ற இவர்கள் ஏற்பாடு செய்தார்களா? அவைகளைச் செய்யாதவரைத் திரு. சங்கரன் சொன்னது போல் மூன்றுக்கு பக்கத்தில் சைபரை போட்டு 30 ஆண்டுகள் சிறை என்றாலும் இந்தச் சட்டத்தின் நோக்கம் நிறைவேறாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சுதந்திரம் அடைந்து 8 ஆண்டு காலம் ஆனபிறகும் கூட ஜாதி ஒழிப்புக்கு நீங்கள் என்ன செய்தீர்கள் என்கிற கேள்விக்கு அறிவிப்புத்தான் பெரியாரின் செய்கை. எங்கள் தேசிய சின்னங்களுக்கு அவமானத்தை உண்டாக்குவது என்றால் "எங்கள் அரசியல்

சட்டத்திற்கு இழிவை உண்டாக்குவது என்றால் அதை எப்படி தடுக்காமல் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்?'' என போலீஸ் அமைச்சர் கூறி அப்படி செய்கிறவர்களுக்கு 3 வருட தண்டனை அளிக்கப்படும் என சொல்லலாம். திரு. கல்யாண சுந்தரம் அவர்கள் அதை இன்னும் கூடுதலாக்க வேண்டும் என்று சொல்லலாம். இந்த அளவில் திரு. சங்கரன் 3 வருடத்தை முப்பது வருடம் என திருத்த வேண்டுமென்று பேசலாம். உண்மையில் இவர்களெல்லாம் அதிகாரத்தை எப்படி பயன்படுத்திக் கொள்வது என்று யோசிக்கிறார்களே தவிர நோயினுடைய மூல காரணத்தை அறிந்து கொள்ள சற்று யோசிக்கத் தவறிவிட்டார்களென்று சொல்ல விரும்புகிறேன்.

பயித்தியக்காரன் என்ற உதாரணத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். சிலர் உண்மையிலேயே பயித்தியக்காரர்களாக இருக்கலாம். அவன் கருத்துக்கு ஒவ்வாத கருத்தை இவன் சொன்னாலும் பயித்தியக்காரனென்று பிறரால் இவன் பட்டம் சூட்டப்படுகிறான். கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள் ''பயித்தியக் காரனை அடக்க சட்டம் இல்லையா?'' அப்படித்தான் இது என பேசியபோது பயித்தியக்காரன் என யாரைச் சுட்டுகிறீர்கள் பெரியாரையா? என்று திரு. பழனிசாமி கேட்க ''அப்படி நான் குறிப்பிடவில்லை'' என அவர் மறுத்தது அரசியல் பெருந்தன்மை என்ற முறையில் நான் வரவேற்கிறேன். ஆனால் அவர் பேசிய பேச்சு இந்த எண்ணத்திற்குத்தான் சபையில் உள்ளவர்களை இழுத்துக் கொண்டு செல்லும். ஆகையால் அவர் ஒப்புக் கொள்வது உண்மை என்று வைத்துக் கொண்டாலும் பயித்தியக்காரர்களை அடக்குவதில் வீட்டாருக்குள்ள பொறுப்பு வேறு; நாட்டாருக்கு உள்ள பொறுப்பு வேறு; அரசியலாருக்கு உள்ள பொறுப்பு வேறு. பயித்தியக் காரனென்றால் அவன் வீட்டார் அவன் பயித்தியத்திற்கான மனப்பிராந்தியை எப்படி போக்குவதென்றே முயற்சி செய்வார்கள். அந்த முறையில் பெரியார் அவர்களுடைய மனக்குமுறலை இப்படி யெல்லாம் இவர் செய்வேனென்று சொல்வதற்கு மூல காரணமாக மன எழுச்சியை அவர்கள் போக்குவதற்கு என்ன செய்தார்கள்? இவர்கள் பெரியாரை ஒரு பைத்தியக்காரர் என்று சொன்னாலும் கூட எண்பது ஆண்டுகள் சென்ற பெரியார் தமிழகத்தில் மிகச் சிறந்த செல்வாக்கைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அவர்களில் யாரும் மறுக்க முடியாது. அந்தச் செல்வாக்குத் தங்களுக்கு இன்றைக்குப் பயன்படவில்லையே, தவறான வழியில் நமக்கு அனுகூலமில்லாத வழியில் ஓடப் பார்க்கிறதே என்று இவர்கள் இன்றைக்குச் சட்டம் கொண்டுவர

முயற்சிக்கிறார்கள். தீண்டினால் திருநீலகண்டம்; என்று இவர்கள் அவரை இத்தனைநாளும் ஒதுக்கி கொண்டிருக்கவில்லை. திரு. கல்யாணசுந்தரம் அவர்களும் பெரியாரின் உதவியை ஒரு காலத்தில் பெற்றிருக்கிறார்கள். காங்கிரசுக்கும் அவருடைய பேராதரவு கிடைத்திருக்கிறது. அவருடைய பேருழைப்பைப் பெற்றுத்தான் இங்கே வந்திருக்கிறார்கள். ஆனால் அவருடைய ஆதரவை இதுவரையிலும் பெறாதவன் யாராவது ஒருவன் இங்கு இருக்கிறான் என்றால் அது நான்தான்.

நான் அவருக்காக வாதாடுகின்ற நேரத்திலே நீங்கள் எல்லாம் அவரை எந்தக் கூண்டிலே தள்ளுவது என்று பேசுவதும், தள்ளுகிற கூடு இரும்புக் கூடாக இருக்கவேண்டுமென திரு. கல்யாணசுந்தரம் சொல்வதும், இரும்புக் கூட்டில் தள்ளினால் போதாது, அதற்குப் பெரிய பூட்டாகப் போட்டு பூட்ட வேண்டும் என திரு. சங்கரன் சொல்வதும் - இன்றைய அரசியல் உலகத்தில் ஏற்பட்டிருக்கிற விசித்திரமான நிலைமை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். குற்றம் என்று சொன்னால் நான் படித்த அகராதியில் - அது சாதாரண அகராதிதான். சட்ட அகராதி அல்ல - any offence committed against public laws and which is anti to social welfare என்றுதான் பொருள் இருக்கிறது. சட்டங்களுக்குப் புறம்பாகச் செய்வது குற்றம். இப்போதுதான் புதிதாகச் சட்டம் செய்கிறோம் என்ற காரணத்தினால் அந்த பொருள் தேவை இல்லை. சமுதாயத்தில் உள்ள நன்மைகளைப் பாதிக்ககூடிய செயல் குற்றங்கள் என்று சொன்னால் - சட்ட நிபுணர்கள் இங்கே இருக்கிறார்கள் - சட்டம் செய்வதற்கு முன்னால் எந்த வகையில் அந்தச் செயல் சமுதாயத்தைப் பாதிக்கிறது என்று பார்த்துச் சொல்ல வேண்டும். உங்கள் கௌரவத்தை அது பாதிக்கலாம். நீங்கள் சார்ந்து வளர்ந்து இருக்கிற இயக்கத்திற்கு இழிவு என்று கருதலாம். சமுதாயத்தைப் பொறுத்த அளவில் எந்த மாதிரியாகப் பாதிக்கிறது? சமுதாயப் பொருளாதாரத்தைப் பாதிக்கிறதா? சமுதாய அரசியல் வாழ்வைப் பாதிக்கிறதா? சமுதாயத்தின் மானத்தைப் பாதிக்கிறதா?

சமுதாயத்திலே மிகவும் ஊன்றி இருக்கும்படியான உணர்ச்சி மத உணர்ச்சி. யுகம் யுகமாக அநாதி காலம் தொட்டு இருப்பது அவ்வுணர்ச்சி என்று சொல்வார்கள். இன்றைக்கு தேசீயச் சின்னங்களைக் கொளுத்துவதற்கு முன்னர் - அன்றைக்கு மதச் சின்னங்களை - பிள்ளையார் விக்ரகத்தையும், ராமர் படத்தையும்

பெரியார் அவர்கள் உடைத்துக் கொளுத்தினார்களே, அந்த நேரத்தில் நீங்கள் என்ன சொன்னீர்கள்? "பிள்ளையார் உருவத்தை அவர் உடைக்க உடைக்கத்தான் பிள்ளையார்க்கு அதிகப் பெருமை உண்டாகிறது?" என்று ரொம்ப யுக்தியாகச் சொன்ன உங்கள் வாதம் இந்த நேரத்தில் மங்கிப்போய்விட்டதா? அன்றைக்கு பிள்ளையாரைப் போட்டு உடைத்து, ராமர் படத்தைக் கொளுத்திக்கொண்டிருந்த போது சமுதாய மக்களின் உள்ளத்திலே ஆழ்ந்து பதிந்து இருக்கும் படியான உணர்ச்சி பண்பட்டிருக்காதா? அப்போது அதனால்தான் பிள்ளையார் பெருமை உயர்கிறது என்று சொல்லிச் சும்மா இருந்த நீங்கள் அந்தத் தத்துவத்தை உண்மையாக உணர்ந்து பேசியிருந்தால் இப்போது இந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதற்கு அவசியம் என்ன? இதனால் யாருடைய மனம் புண்படும்? இந்தக் காரியம் ஏற்கெனவே கண்முன்னால் செய்து காட்டப்பட்டுவிட்டது.

பாட்னா நகரத்தில் கிளர்ச்சி செய்யப்பட்ட நேரத்தில் காந்தியார் படத்தைக் கொளுத்தியிருக்கிறார்கள். நேருவுக்குக் கொடும்பாவி கட்டி இழுத்திருக்கிறார்கள். அரசியல் சட்டத்தைக் கிழித்தெறிந்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் நீங்களே அரசியல் சட்டத்தை ஏழு ஆண்டுகளுக்குள்ளாகப் பத்து தடவை கொளுத்தியிருக்கிறீர்கள். அரசியல் சட்டத்தைக் கொளுத்தும் காரியத்தைத்தான் ரொம்ப நாகரீகமாகப் பத்து தடவை திருத்தி யிருக்கிறீர்கள். ரொம்ப புனிதமான சட்டம் என்று போற்றப்படுகிற அந்தச் சட்டம் உங்களாலேயே திருத்தப்படுவது என்றால் என்ன? கொளுத்தப்பட்டது என்றுதான் ஆகிறது.

உயர் திரு. சி. சுப்பிரமணியம்: இந்த வார்த்தையை நான் அறிஞரிடத்தில் இருந்து எதிர்பார்க்கவில்லை.

திரு. சி. என். அண்ணாதுரை: நமது போலீஸ் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். "நாங்கள் எல்லாம் அரசியல் சட்டத்தை வேதம் என்று வைத்துக் கொண்டிருக்கிறோம்" என்பதாக. அதை அவர்கள் வேதமாக வைத்துக் கொண்டு பூசிப்பதை யாரும் தடுக்கமாட்டார்கள். ஆனால் மிகப் பெரும்பாலோராக இருக்கின்ற அவர்களால் அந்தச் சட்டத்திலுள்ள குறைபாடுகள் திருத்தப்பட்டால் அது புனிதமானதாகவும், மிகச் சிறுபான்மையோராக இருக்கக் கூடியவர்கள் அதில் உள்ள குறைபாடுகளை நீக்கவேண்டுமென்று சொன்னால் அது குற்றமாகவும் ஆகுமா? மிகப் பெரும்பாலோராக இருக்கக் கூடியவர்கள் ஒரு காரியத்தைச் செய்யத் துணிந்த பிறகு, மிகச்

சிறுபான்மையோராக இருக்கக்கூடியவர்கள் அந்தக் காரியத்தையே செய்ய முற்படும்போது சட்டத்தினால் மட்டும் அப்படிச் செய்யக்கூடாது என்று தடுத்துவிட முடியாது. சட்டங்கள் இயற்றலாம். சட்டங்கள் இயற்றப்படுவதால் மட்டும் எந்தச் செயலையும் அடியோடு நிறுத்துவிடமுடியாது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

சட்டமியற்ற பழக்கப்பட்டவன் அல்ல நான். மனதிற்கு சரி என்று பட்ட காரியத்திற்காக அவசியம் என்று ஏற்பட்டால், சட்டம் குறுக்கிடும் என்று நம்பினால், அந்தச் சட்டத்தை துச்சம் என்று மதிக்கிறவர்கள் தமிழ் நாட்டில் லட்சக்கணக்கான பேர் இருக்கிறார்கள். நீங்கள் சட்டத்தை நிறைவேற்றி விட்டாலும், ஆனால் 10 ஆயிரம் பேர்அந்தச் சட்டத்தை மீறி, மூன்று ஆண்டு அல்ல முப்பது ஆண்டு அல்ல சிறையில் இருக்கத் தயங்க மாட்டார்கள். அமெரிக்கா நாட்டிலோ, பிரான்ஸ் நாட்டிலோ, ரஷ்ய நாட்டிலோ ஒரு சமுதாயத்தை இப்படியெல்லாம் அவர்கள் கருதமாட்டார்கள். இந்திய அரசியல் சட்டத்தில் எவ்வளவோ மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. யார் தேசியத் தலைவர் என்று ஏற்றுக்கொள்வதிலே இன்னும் விவாதம் இருக்கிறது. சிறைக்குச் செல்பவர் 10 ஆயிரம் பேர் என்று அங்குள்ளவர்கள் கருதுவார்களே தவிர, அது நீங்கள் எதிர்பார்க்கிற கவுரவத்தைக் காப்பாற்றுவதாகாது. நான் உங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன் - பெரியார் அவர்கள் செயலுக்குப் பின்னால் இருக்கிற நோக்கத்தை தயவு செய்து ஆராய்ந்து பாருங்கள். அந்த நோக்கத்தை வெளுப்படுத்துகிற பெரியாருடைய பழைய கால நடவடிக்கைகளையும் உங்களுக்கு ஏற்பட்ட தொடர்புகளையும் ஒரு கணம் எண்ணிப்பாருங்கள். அவர்களை சுலபத்திலே பயித்தியக் காரர் என்று சொல்லி விடுவார்களேயானால், நாம் எல்லாம் எந்தெந்த காலத்தில் எப்படி பயித்தியக்காரர்கள் ஆகிவிடுவோமோ என்று தோன்றுகிறது. அப்படி அவரை பயித்தியம் என்று சொல்வதற்கு அவர் எடுத்துச் சொல்வதுதான் என்ன? அவர்கள் சொல்வது அத்தனையும் ஜாதி ஒழிய வேண்டும் என்பதுதானே. ஜாதி இருக்கவேண்டுமென்று இந்திய நாட்டு பிரதம மந்திரி பண்டித நேரும் கருதவில்லை. 10 நாட்களுக்கு முன்னால் ஒரு வாலிபர் சங்க விழாவில் பேசும்போது நேரு சொன்னார்:

"India is entering into the threshold of the Third India from the Second India of casteism, superstition orthodoxy and narrowmindedness.

என்று தெளிவுபட எடுத்து பேசியிருக்கிறார். மூன்றாவது இந்தியாவை பெறுவதற்கு நீங்கள் தயாரிக்கப்படுகிற நேரத்தில், அவருடைய முறையீடுகளை கவனிக்காத நேரத்தில், மக்கள் அழுகிற குரலை கவனிக்காத நேரத்தில், சிறு சிறு கிளர்ச்சிகளை கவனிக்காமல் இருக்கிற நேரத்தில் பண்டித நேரு வேறொரு சந்தர்ப்பத்தில் சொல்லிய அந்த வாக்கியத்தை நான் ஆதாரம் காட்டி உங்களை தெளிவாக்கலாம் என்று கருதுகிறேன். பெரியார் ஒரு அதிர்ச்சி வைத்தியம் செய்கிறார். பெரியார் அவர்களை நீங்கள் பித்தம் பிடித்தவர் என்று கருதலாமே தவிர உலகத்தில் பெரும் பகுதியினர் அவ்வாறு கருதவில்லை. உங்களுக்கு இருக்கிற அதிகார பலத்தை வைத்துக்கொண்டு நீங்கள் சட்டத்தை நிறைவேற்றலாம். ஆனால் அது உங்களுடைய பலவீனத்தைக் காட்டுமே தவிர உண்மையான பலத்தைக் காட்டாது. மூன்று ஆண்டுகள் சட்டத்தை மீறியவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்க, இந்திய அரசியல் சட்டத்தை கண்ணில் ஒத்திக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்திய அரசியல் சட்டத்தின் கர்த்தாவாகிய காலம் சென்ற டாக்டர் அம்பேத்கர் அவர்கள் வெளிப்படையாகச் சொன்னார். "இந்த அரசியல் சட்டத்தில் பல்வேறு கோளாறுகள் இருக்கின்றன. இது எரிக்கத்தக்கது" என்று. "நீர்தானே இந்தச் சட்டத்தை செய்தவர்" என்று சிலர் அவரைக் கேட்க "நீங்கள் சொல்லிச் செய்யப்பட்டதே தவிர ஏற்றுக்கொள்ள முடியா, மனதிற்கு ஒவ்வாத பல கருத்துக்கள் இருக்கின்றன" என்று சொன்னார்கள். அரசியல் சட்டத்தில் இன்றைய தினம் உள்ள நாகநாட்டு நிலைமையைப்பற்றி நாளைக்கு ஒரு திருத்தம் கொண்டுவர இருக்கிறார்கள். இந்த 7 ஆண்டுகளிலே அரசியல் சட்டத்தில் 10 தடவைகள் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். திருத்தங்கள் கொடுப்பது என்பது நாகரீகமான முறையில் சட்டத்தைக் கொளுத்துவதாகும். திருத்துகிறோம் என்ற பெயரால் 10 தடவை கொளுத்தியிருக்கிறீர்கள் அந்தச் சட்டத்தை. மேலும் வெள்ளைக் காரனுடைய துணியைக் கொளுத்தினீர்கள் என்றால் வெள்ளைக் காரர்களையே கொளுத்துவது என்று அர்த்தம் அல்ல. அந்தத் துணிகளைக் கொளுத்துவதன் மூலம் சுதேசி உணர்ச்சியை ஊட்ட வேண்டும் என்பதுதான் அவர்களின் நோக்கம். அரசியல் சட்டத்தைக் கொளுத்துவதன் மூலம் பெரியார் அவர்கள் இன்று ஜாதி அடிப்படையிலே இருக்கும் பல குறைகளை வெளிப்படுத்து வதற்காகத்தான். இப்பொழுது முதல் அமைச்சராக இருக்கும். திரு. காமராஜ் அவர்கள் சென்னையில் பெரியார் அவர்களால் நடத்தப்பட்ட ஜாதி ஒழிப்பு மாநாடு ஒன்றில் கலந்து பேசுகையில்

''நான் அதிகாரத்திற்கு வந்தால் நான் செய்யக்கூடிய முதல் காரியம் ஜாதி ஒழிப்பாகத்தான் இருக்கும்'' என்று பேசினார். இதை நீங்கள் கேட்டிருக்க மாட்டீர்கள், நான் கேட்டிருக்கிறேன். ஆகையால் பெரியார் அவர்கள் தன்னுடைய செல்லப்பிள்ளை ஆட்சிக்கு வந்து விடுவார் என்ற நம்பிக்கையில் இரவு பகல் பாராமல் உழைத்து உங்களை உட்கார வைத்திருப்பது நீங்கள் ஜாதி ஒழிப்பிற்கு ஆதரவாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கையினால்தான். ஆனால் அப்படி உங்களை நம்பினவரை நட்டாற்றில் கைவிடுகிறீர்களே என்றுதான் நான் பரிதாபப்படுகிறேன்.

பெரியார் அவர்கள் நேற்று ஒரு கூட்டத்தில் பேசியதை பத்திரிகையிலே, பார்த்தேன். பெரியாரோடு நெடுங்காலமாக, பழகி யிருக்கிற எனக்கு, நம்முடைய திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்ன வாக்கியம் எந்த தொனியிலே சொல்லப்பட்டிருந்தாலும் அந்த வாக்கியத்தின் அடிப்படை உண்மையை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். சட்டத்தை அவர் என்றைக்கும் ஏற்றுக் கொள்ளுகிறவர், மதித்து நடக்கிறவர் என்பதை நான் அறிவேன். அனாவசியமாக கிளர்ச்சிகளிலும் கொந்தளிப்புகளிலும் அவர் ஈடுபடுகின்றவர் அல்ல. ஜெர்மன் நாட்டிலே கிரீச்சிங் பாம் போட்டார்கள். அது பயங்கரமான ஒரு சத்தத்தை விம்பும். அதிலே மக்கள் அயர்ந்துவிட வேண்டுமென்று எண்ணினார்கள். அதைப் போல் பலருக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து மதமதப்பு அடைந்திருக்கும் சர்க்காரை கொஞ்சம் சுறுசுறுப்பாக்க வேண்டு மென்று கருதினார்கள். ஜாதி ஒழிப்பிலே பெரியார் அவர்கள் கொஞ்சம் தீவிரமாக வேண்டும் என்று கேட்டுக்கொள்வதில் தவறு என்ன இருக்கிறது? நான் வழக்கறிஞன் அல்ல என்றாலும் இந்தச் சட்டம் இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று சொல்லுவேன். வாதத்தில் சிறந்த வழக்கறிஞராக இருக்கும் போலீஸ் அமைச்சரும், நிதி அமைச்சரும் இருக்கிறார்கள். நான் வழக்கறிஞன் அல்ல என்ற காரணத்தால் என்னுடைய வாதத்திலே ஓட்டை இருப்பதாக அடுத்துச் சொல்லக்கூடும். அதேசமயத்தில் வழக்கறிஞர் அல்லாதவர்களும் சட்டத்தைப் பார்த்தால் அதில் என்ன குறைகள் இருக்கின்றன என்று உணரமுடியும். நான் ஒன்று சொல்ல விரும்பு கிறேன். இந்த அரசியல் சட்டத்தை அவரவர்கள் தங்களுக்குரிய சொத்துக்களைப் பெறுவதற்கும், பாதுகாத்துக்கொள்வதற்கும், தங்களுக்கு இஷ்டப்படி அவைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் 19-வது பிரிவிலே உரிமை அளிக்கப்படுகிறது. அடிப்படை உரிமை

அது. அதனையும் பாதிக்கும் சட்டங்களை இயற்ற சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. இயற்றப்படும் நேரத்தில் ஆர அமர யோசித்துப் பார்த்து இயற்றவேண்டுமே தவிர கண்மூடித்தனமாக இயற்றக் கூடாது என்பதைச் சட்ட நிபுணர்கள் ஒத்துக்கொள்வார்கள். ஆட்சியாளர்கள் இதைக் கூர்ந்து கவனிப்பார்கள் என்று நினைக்கிறேன். அரசியல் சட்ட புத்தகத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கருதினாலும், பாதுகாக்க வேண்டுமென்று கருதினாலும், நாசமாக்கவேண்டுமென்று கருதினாலும், அதற்கு அடிப்படை உரிமை தரப்பட்டிருக்கின்ற நேரத்தில், பெரியார் தம் கையிலே உள்ள பணத்தைப் போட்டு, ஏடு வாங்கி, தம் மனையில் இரண்டு பக்கத்தைப் படித்துக்காட்டி இதில் குறை இருக்கிறது சனியன் தொலையட்டும் என்று சொல்லி அதைக் கிழித்தெரிந்தாலும் அது அவருடைய தனிப்பட்ட உரிமை என்று நீங்கள் ஏன் கருதக்கூடாது? சட்ட நிபுணர்களும், வழக்கறிஞர்களும் வேறு விதமாகச் சொல்லக் கூடும். அந்த உரிமை மக்களுடைய உரிமைதானே, நீங்கள் குறுக்கிடுவானேன். சோஷல் வெல்பேர் ஆட்சியாகவேண்டுமென்று இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டுவர வேண்டுமா? வேண்டு மென்றால் "எங்களுக்கு பிடிக்கவில்லை, எங்கள் காலத்திலேயே இப்படி நடக்கிறதே" என்று சொல்லுங்கள்.

திரு. என். கெ. பழனிசாமி அவர்கள் காந்தியடிகள் தேச பிதாவாக இருந்தார் அவருடைய படத்தையா இப்படிச் செய்வது என்று கேட்டார். நல்லவேளையாக அப்படிச் சொன்னாரே என்று மகிழ்ச்சி அடைந்தேன். அவர் வணங்கிய பழைய தெய்வமாகிய பழைய ஸ்டாலின் சிலை தூக்கிப்போட்டு உடைக்கப்பட்டது என்பதை இன்றையதினம் மறந்து பேசுகிறார். ஒரு வேளை இவர் ரஷ்யாவில் இருந்திருந்தால், குருஷேவைக் கரத்தைப் பிடித்துத் தடுத்திருப்பார் என்று நினைக்கிறேன். துரதிர்ஷ்டவசமாக இவர் இங்கே இருக்கிறார். தேச பிதாவின் படங்களை காப்பாற்றப்பட வேண்டும் என்று எடுத்துச்சொல்லுகிறார்கள், தேசப்பிதாவைப் புகழ்ந்து பேசினார்கள். அவருடைய புனிதத் தன்மை பாழாக்கப்படுகிறது என்று சொல்லு கிறார்கள். நாட்டில் கொந்தளிப்பு ஏற்படும் என்று குற்றம் சாட்டுகிறார்கள். எல்லாம் ஒரு கடுமையான சட்டம் இயற்று வதற்காகக் காட்டப்படும் சாக்குகள்.

பெரியார் ராமசாமி அவர்கள் காமராஜ் அவர்களை எந்த வகையில் கருதுகிறார்கள் என்பதை இன்று பார்த்தால் காமராஜ் ஓங்கி அடித்தாலும் காமராஜரின் கரம் வலிக்குமே என்றுதான் பெரியார்

கருதுவார். ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்பதுபோல் பெரியார் அவர்களும் என்னைத்தான் தாக்குவாரே ஒழிய காமராஜ் பக்கம் திரும்ப மாட்டார். அந்த அளவுக்கு உங்களை நம்பிப் பாசம் வைத்து இருப்பவரைப் பாதிவழியில் சென்று சந்தித்துப் பேசி தேசிய கொடியின் கவுரவத்தைக் காப்பாற்றினால் உங்களின் எந்தக் கவுரவம் எப்படிப் பாதிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. முத்துராமலிங்க தேவர் அவர்களை திரு. காமராஜ் அவர்கள் சந்தித்து பேசக்கூடாதா என்று கேட்டதற்கு நம்முடைய நிதி அமைச்சர் ஒரு சமாதானம் சொன்னார். "காமராஜ் அவர்களுடைய குலத்தையே தாழ்வாகப் பேசுகிறார். அப்படிப்பட்டவரோடு எப்படிக் கலந்து உரையாடுவது" என்று கேட்டார்கள். அந்தக் குலத்தைப் பொறுத்தும் அதிகமாகக் கொந்தளிப்பு ஏற்படும் என்று சொன்னார்கள். அது வாதத்திற்கு ஒப்புக் கொள்ளத்தக்கதாக இருக்கும். ஆனால் பெரியார், காமராஜ் தொடர்பு அப்படிக் கருத முடியாது. அவர் காமராஜின் அருங்குணங்களை, இதுவரை சொல்லாத அருங்குணங்களை, காமராஜருக்கே தெரியாமல் இருக்கும் அருங்குணங்களை அவர் எடுத்துச் சொல்லி அவர் சிறந்த தமிழர், அவரை விட பச்சைத் தமிழர் என்றால் வளர்க்கப்பட்ட தமிழரை விட சிறந்த தமிழர் என்று சொல்லத் தக்க அளவிலே பாசம் வைத்திருக்கிறார். ஏன் திரு. காமராஜ் அவர்கள் பெரியார் அவர்களை ஒரு தரம் சந்தித்து பேசக் கூடாது?

பெரியாரை ஒரு கணம் சந்தித்து ஜாதி ஒழிப்பு பற்றி இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது, ஜாதியை ஒழிக்க வேண்டு மென்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது, நீங்கள் அதைப் பாராமல் இருக்கிறீர்களே என்று எடுத்துச் சொல்லி, ஜாதி ஒழிப்பு என்பது தங்களுக்குள்ள பிரத்தியேக உரிமையா, ஜாதி வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோமா, அது உங்களுக்குத் தெரியாதா, எங்கள் அமைச்சரவையில் ஜாதிக் கட்டுப்பாட்டை மீறி கலப்பு மணம் செய்து கொண்டவர்கள் இருக்கிறார்களே என்றெல்லாம் பெரியாரிடம் எடுத்துச் சொல்லி அவரது முறையை மாற்றுவதுதான் ராஜதந்திரம் ஆகுமே யொழிய, எங்களுக்கு மெஜாரிடி இருக்கிறது என்று சொல்லி, கட்சி பலத்தைக் கொண்டு சட்டம் போட்டுக் கொள்வதில் வியப்பு மில்லை, அதில் யூகமுமில்லை. பலமுள்ள ஒரு அரசியல் கட்சி ராஜதந்திர முனையில் வெற்றி பெற்றார்கள் என்று உலகத்திற்கு நீங்கள் அறிவிக்க வேண்டும். ஆகவே பெரியாரைத் தயவு செய்து சந்தியுங்கள்.

அவரது மனக்குமுறலை உணர்ந்து கொள்ளுங்கள். அவரது லட்சியமும் உங்களுக்கு உகந்ததுதான். ஆனால் அவரது முறை தவறு என்று நீங்கள் கருதுகிறீர்கள். நான் கருதுகிறேன். அங்ஙனம் கருதுகிற காரணத்தால்தான் நான் அதில் ஈடுபடாமல் இருக்கிறேன். முறை தவறு என்று கண்டிக்கும்போது தூய்மையான நோக்கத்தை ஆராய்ந்து பார்த்து அதை நீக்குவதற்கு உங்களுக்கு வழிவகை இருக்குமானால் ஏன் அந்த வாய்ப்பை நீங்கள் இழக்க வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். காமராஜ் - பெரியார் சந்திப்பு இப்பொழுது தேவையே அல்லாது புதிய சட்டமல்ல. சட்டத்தை நிறைவேற்றி விடலாம். நிறைவேற்றவும் போகிறீர்கள், நிறைவேற்றத் துடித்துக் கொண்டிருக்கிறீர்கள். இதுவரை அப்படி ஒரு சட்டத்தை நிறைவேற்றாதது தவறு என்றும் ஆளும் கட்சியைச் சார்ந்த சில அங்கத்தினர்கள் கூறினார்கள். சட்டம் இயற்றுவதினால் மட்டும் நமது தேசீய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளப் போவதில்லை. சட்டங்கள் செய்யப் போகிற நேரத்தில் நீங்கள் யாரையோ வலுச் சண்டைக்கு அழைக்கிறீர்கள் என்று மக்கள் கருதி மூன்று ஆண்டுகள் தானே என்று எண்ணிக் கொண்டிருக்கும் மக்கள் தமிழகத்தில் ஏராளமாக இருக்கிறார்கள் என்று போலீஸ் அமைச்சர் அவர்கள் உணர வேண்டும். ஐம்பதினாயிரம் மக்கள் தஞ்சை மகா நாட்டில் கூடினார்கள் என்று சொன்னபோது போலீஸ் அமைச்சர் அவர்கள் நான் அதை நம்பவில்லை என்று சொன்னார்கள். அதை நம்ப அவர்கள் மறுக்கிறார்கள். நம்பினால் கொஞ்சம் நடுக்கம் எடுக்கும். ஐம்பதினாயிரம் என்று எண்ண அவரது நெஞ்சம் கூசுகிறது.

உயர் திரு. எம். பக்தவச்சலம்: எனக்குத் தெரியாது, எனக்கு வந்த தகவல் வேறு. ஆனால் பத்திரிகைக்காரர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்றுதான் சொன்னேன்.

திரு. சி. என். அண்ணாதுரை: பதினாயிரம் பேர்கள்தான் வந்திருந்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஐம்பதினாயிரம் என்ன, நான்கு லட்சம் பேர்கள் வந்தார்கள் என்று சில பத்திரிகைகள் எழுதியிருந்தது. அவனவன் மனைவி அவனவன் கண்ணிற்குப் பிடிக்கும் என்பது மாதிரித்தான் இது இருக்கிறது. உங்கள் ஆட்களைக் காணும்போது நீங்கள் ஒருவிதம் எண்ணுவீர்கள், வேறு ஆட்களைப் பார்க்கும்போது வேறு விதம் எண்ணுகிறீர்கள். இந்தக் காரியத்தை செய்ய வேண்டுமென்று அவர் சொல்கிற நேரத்தில் அதற்கு

“ஆம்” என்று சொல்கிறவர்களை பயித்தியக்காரர்கள் என்று நீங்கள் சொல்கிறீர்கள். நீங்கள் இன்றைய தினம் நிம்மதியாய் உட்கார்ந்திருப்பதின் காரணமாக, பெரியார் சொல்வதை ஏற்றுக் கொள்ளும் இத்தனை பேர்களும் பயித்தியக்காரர்களா? அப்படி அவர்களை பயித்தியக்காரர்கள் என்றால், நீங்கள் இன்று தமிழ் நாட்டிற்கு அதிகாரிகள் அல்ல, பயித்தியக்காரர்கள் அடங்கிய நாட்டிற்குத்தான் அதிகாரிகளாவீர்கள். ஜாதியை ஒழிப்பது இந்த அரசாங்கத்தின் கடமை என்று 10 தினங்களுக்கு முன்பு நேரு அவர்களே சொன்னார்களே, அந்த அடிப்படையில் பெரியாரை சந்தித்துப் பேசினால், அவரை விட தனிப்பட்டவர்கள் இடத்தில் மரியாதை காட்டுகிறவர்; அவரைவிட தாட்சண்யத்திற்கு கட்டுப்படக் கூடியவர், அவரை விட, எதிரியின் மனப்பான்மையை அறிந்து தன் மனப்போக்கை மாற்றிக் கொள்ளக் கூடிய ஒருவரை நீங்கள் தமிழகத்திலேயே பார்க்க முடியாது. சட்டங்களைச் செய்வதினால் பலனில்லை. நம் போலீஸ் அமைச்சர் அவர்கள் இச்சட்டம் குறித்துப் பேசியபோது மிகவும் உணர்ச்சியோடு பேசினார்கள். அவர் இவ்வளவு உணர்ச்சியோடு பேசினதை நான் இதுவரை பார்த்ததில்லை. நான்கூட நினைத்திருக்கிறேன். போலீஸ் அமைச்சருக்கு உணர்ச்சியே வராதோ என்று. அவர் உணர்ச்சியோடு பேசியதற்கு, அவரது உணர்ச்சிக்கு நான் மதிப்பளிக்கிறேன். தேசீயக் கொடி அவமதிக்கப்பட்டால் அது தன் நெஞ்சில் புண்ணை ஏற்படுத்தும் என்று அமைச்சர் அவர்கள் கருதுவது போல், பெரியாரை அடக்குவதற்காக நீங்கள் கடுமையான சட்டம் கொண்டு வந்தால் மனம் புண்படுபவர்கள் இன்று தமிழகத்தில் லட்சக் கணக்கில் இருக்கிறார்கள் என்பதை அமைச்சரவை தயவுசெய்து தெரிந்து கொள்ள வேண்டுமென்று நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தச் சர்க்காரும் தனிப்பட்டவர்களின் கிளர்ச்சியை ஒடுக்குவது என்பது இயற்கையாகவே அமைகிறது. ஆனால் எத்தனை தடவை, எத்தனை கிளர்ச்சிகளை நீங்கள் இப்படி அடக்கிக் கொண்டிருக்கப் போகிறீர்கள் என்று கேட்கிறேன். முத்துராமலிங்க தேவரை ஒரு பக்கத்தில் பூட்டிக் கொண்டிருக்கிறீர்கள். பெரியார் ராமசாமியை ஒரு பக்கத்தில் பூட்ட இருக்கிறீர்கள். இப்பொழுது அரசியல் சட்டத்தைக் கொளுத்துவது, தேசீய தலைவருக்கு இழுக்கு செய்வது சட்ட விரோதமாகும் என்று சட்டம் கொண்டு வருகிறீர்கள். அரசியல் சட்டத்தை கொளுத்துவது அரசியல் சட்டத்திற்கு விரோதமாகும் என்று சங்கரன் அவர்கள் கூறினார்கள். ஆனால் எந்தப்

புத்தகத்தையும் கொளுத்துவது அல்லது அவரவர் விருப்பப்படி செய்வதற்குள்ள உரிமை இருப்பதுபற்றி, அதே அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டிருப்பதை வழக்கறிஞராகிய அவர் உணரவில்லை. அரசியல் சட்டத்தில் குறைபாடுகள் இருக்கலாம். அதைச் சிலர் நாகரீகமாக சொல்வார்கள்; சிலர் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச் சொல்வார்கள்; சிலர் பட்டும் படாததுமாகச் சொல்வார்கள். அரசியல் சட்டத்தில் உள்ள குற்றங் குறைகளை எடுத்துச் சொல்வதே கூடாது என்று சொல்வார்கள்போல் இருக்கிறது. அதற்கும் சட்டம் குறுக்கிடக் கூடும். அதேபோல், ஒருவரின் ஆறு வயது குழந்தை காந்தியாரின் படத்தை எடுத்து உடைத்து விட்டால், அவருக்கு வேண்டாத போலீஸ்காரர் இருந்தால் அவர் சட்டப்படி இக்குற்றத்திற்கு ஆளாகலாம். அதற்குப் பிறகுதானே கோர்ட்டிற்குப் போய், நான் அவமானப் படுத்தவில்லை, என் குழந்தை கீழே போட்டு உடைத்து விட்டது என்று சொல்லி பிறகுதானே விடுதலைப் பெற்று வர வேண்டும். ஆகவே, நான் சொல்வது, வேண்டு மென்றே செய்யப் பட்டால், பொதுவிடங்களில் செய்தால் என்றுகூட எழுதாமல் விட்டிருக்கிறீர்கள். காந்தியின் படத்தைத் தொட்டால், அரசியல் சட்டத்தைத் தீண்டினால் மூன்று வருஷம். இது எதைக் காட்டுகிறது? வாசகங்களை எழுதுவதில் கூட ஏன் அலங்கோலம் இருக்கவேண்டும். எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும் அதன் வாசகம் எப்படி யிருந்தாலும், உங்களுக்கு 150 பேர்கள் இருக்கிறார்கள், மன்னிக்க வேண்டும், இதற்கு 190 பேர்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையின் பேரில் இச்சட்டத்தைக் கொண்டு வருகிறீர்களே தவிர பிரச்னையின் அடிப்படையை ஆராய்ந்து அதன் பின்னால் இருக்கும் பெரியாரின் மனப்போக்கை அறிய நீங்கள் முயற்சி எடுக்கவில்லை. இப்படிப்பட்ட தேவையற்ற, தீதான், கொடுங்கோன்மைக்கு வழி செய்யக் கூடிய, சர்வாதிகார நாடுகளில் கையாளக் கூடிய முறைகளை கையாளாது, தேசீயக் கொடியின் மாண்புகளையும், அரசியல் சட்டத்தின் மாண்புகளையும் மக்களிடம் எடுத்துச் சொல்லி அதன் மூலம் அவைகளுக்கு கௌரவம் தேடுங்கள் என்று சொல்லிக் கொண்டு, நமது அரசியல் சட்டம் வேதத்திற்கும் சிறந்த வேதம் என்று போலீஸ் அமைச்சர் கூறுகிறார் - வேதம் படும்பாட்டை உலகம் இன்று பார்க்கிறது - வேதத்திற்கும் சிறந்த வேதம் என்று சொல்வதால் அதற்கு முக்கியத்துவம் கற்பித்துக் கொடுத்துவிட முடியாது. அரசியல் சட்டம் என்றால், அது என் வாழ்விற்காக இருக்கிறது. அது என்னை மனிதனாக

ஆக்குகிறது, என்னை நல்லவனாக இருக்கச் செய்கிறது. எனக்கு நாட்டில் மதிப்பளிக்கிறது என்று நாட்டில் உள்ள மக்களை உணரச் செய்தால், அதை யாருமே தீண்ட மாட்டார்கள். நான் கேள்விப்படு கிறேன், நேரு அடுத்த திங்கள் இந்த மாகாணத்திற்கு வருகிறபோது, அவர்கள் ஏதோ ஒரு பிரச்சனையில் சரியான முறையில் நடந்து கொள்ளவில்லை என்று அதிருப்திப் பட்டவர்கள் அவருக்கு கருப்பு கொடி காட்டுவதாக இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கில் மக்கள், மதுரையிலும், கொடைக்கானலிலும் நின்று கொண்டு நேருவே திரும்பிப்போ, நேருவே திரும்பிப்போ என்று சொன்னால் அதில் தேசீய கௌரவம் பங்கப்படவில்லையா? ஜப்பானில் அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப் படுகிறது, அமெரிக்காவில் கோலாகல விழாவில் அவர் கலந்து கொள்ளும் போது மதுரையில் கருப்பு கொடி பிடிக்கிறார்கள் என்றால் அது அவருக்கும் தேசீய கௌரவத்திற்கும் இழுக்குத்தான். அப்பொழுது அதையும் தடுக்க வேண்டும். கருப்பு கொடி காட்டுவதையும் தடுக்க வேண்டும். இப்படியெல்லாம் சட்டம் கொண்டு வந்தால் இந்த ஐந்து வருடத்திற்குள் எதிர்க் கட்சியில் இருப்பதே கூடாது என்று சொல்லி, சில நாடுகளில் ஒரு கட்சிதான் இருக்கலாம், அதற்குப் பெயரும் ஜனநாயகம்தான். என்பதுபோல நீங்களும் ஒரு கட்சி ஜனநாயகத்தை உண்டாக்க விரும்புகிறீர்கள். நீங்கள் ஜனநாயகப் போர்வையில் சர்வாதிகாரப் பாதையில் போகிறீர்கள். அதற்கு வேண்டிய, அதற்கு உதவக் கூடிய காரியங்களைத்தான் நீங்கள் செய்கிறீர்கள். அப்படி நான் சொல்லும் போது, கொளுத்துகிற காரியத்தில் நான் பங்கு ஏற்றுக் கொள்கிறவன் அல்ல. நாங்கள் அந்த முறைகளை ஏற்றுக் கொள்பவர்கள் அல்ல என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்வதோடு, தயவு செய்து அருள்கூர்ந்து ஜனநாயக தத்துவத்தை மனதில் வைத்துக்கொண்டு, விஷயம் என்ன வென்று ஆராய்ந்து, பெரியாரை சந்தித்து அவர் மூலம் இந்த நாட்டிலே நன்மை ஏற்பட நீங்கள் வழி செய்து அந்த வகை உங்கள் கௌரவத்திற்கு பாதகம் இல்லை என்று உணரவேண்டும் என்று சொல்லிக் கொண்டு, இப்பொழுது தேவை சட்டமல்ல, சந்திப்புதான். இப்பொழுது தேவை ஒருவரை ஒருவர் கலந்து பேசுவதே தவிர ஒருவரை ஒருவர் மிரட்டுவ தல்ல. இப்பொழுது தேவைப் படுவது, அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து பேசுவதே, தவிர வலுத்தவன் இளைத்தவன் என்று சொல்லி, உள்ளே வைத்துப் பூட்டுவதல்ல என்று சொல்லிக் கொண்டு இந்த

மசோதா தேவையற்றது, தீதானது, கொடுங்கோன்மைக்கு வழி தேடுவது என்று சொல்லிக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

Sri R. Krishnaswami Naidu: On a point to personal explanation, Sir.

Mr. Speaker: The hon. Member has not made any speech. How can he raise on a point of personal explanation? The Hon. Finance Minister will speak now.

உயர் திரு. சி. சுப்பிரமணியம்: கனம் சபாநாயகர் அவர்களே இந்த விவாதத்திற்கு போலீஸ் அமைச்சர் அவர்கள் விபரமாக பதில் அளிக்கப் போகின்றார்கள். நான் இப்போது அதற்கு மத்தியில் எழுந்திருப்பது எனக்குத் தோன்றிய சில கருத்துக்களை சபை முன் சமர்ப்பிக்க வேண்டும் என்கின்ற கருத்துடன்தான். அதிலும் எதிர் கட்சியிலிருக்கின்ற திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் அண்ணாதுரை அவர்கள் பேசினதிற்கு பிற்பாடு என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க வேண்டியது மிக அவசியம் என்று கருதிதான் நான் எழுந்திருக்கின்றேன். அவருடைய பேச்சைக் கேட்ட பொழுது செயற்கை உபதேசம் எப்பொழுதுமே அறிவை மழுக்கி விடும் என்கிற பேருண்மையை வலியுறுத்தி காட்டுகின்ற முறையில் எடுத்துக் காட்டினார். பெரியார் திராவிட நாட்டு தந்தை, அண்ணாதுரை திராவிட நாட்டு அண்ணா, தந்தையும் மகனும் போல் இருக்கிறார்கள். இப்போது ஏதோ மனக்குறைகள் ஏற்பட்டு இருக்கலாம். அதன் காரணமாக பிரிந்து இருக்கலாம். அவர்களுடைய அடிப்படையான தத்துவங்களில் பிரிவில்லை என்று விளக்கமாக எடுத்துக் காட்டினார். ஆகையினால்தான் இன்றைக்கு இயற்கையாக இருக்கக்கூடிய பாசம் வேறு யாருடனோ காண்பித்தாலும் கூட இவருக்கு தந்தை பேரிலுள்ள பாசம் நீங்கவில்லை என்பதைத் நம்முடைய தமிழ் நாட்டு மக்கள் உணர வேண்டும் என்ற முறையில் பேசியிருக்கிறார்கள். இவ்விதம் பேசுவது அவர்களுக்கு உகந்ததாகவும் தகுதியாகவும் அதிலும் அவர்களுடைய அரசியல் வாதத்திற்கு உகந்ததாகவும் அமைந்திருக்கிறது என்றுதான் நான் எடுத்துக் கொள்கிறேன். ஆகையினால் இன்றைக்குப் பேசிய பேச்சைக் கேட்ட பிறகு பெரியார் அவர்களுடைய கருத்துக் களுக்கும் அண்ணா அவர்களுடைய கருத்துக்களுக்கும் வித்தியாசம் இல்லை என்று தெரிகிறது. இவர்களுடைய முறைகளில் ஏதோ நாகரீகமாக உபயோகப்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். ஆனால்

இன்றைக்குப் பெரியார் அவர்கள் சொல்லக்கூடிய முறைகளை நீங்கள் கொஞ்சம் ஆலோசித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு ஜாதி ஒழிப்பு வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இது எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய வாதம். அதிலும் நம்முடைய பிரதம மந்திரி சொன்னதை அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் ஜாதி ஒழிப்பு என்கின்ற அடிப்படையில் இன்றைக்கு இவர்கள் என்ன சொல்லுகின்றார்கள் என்று பார்த்தால் பிராமணர்களை எல்லாம் அழிப்பதின் மூலம், பிராமணர்களை எல்லாம் சொல்லுவதின் மூலம், பிராமணர்களை எல்லாம் இந்நாட்டிலிருந்து அடித்து விரட்டுவதின் மூலம் தான் முடியும் என்று சொல்லுவது.

Sri. C. N. Annadurai: On a point of order, Sir. Is the Hon. Minister in order in referring to the opinion of Periyar and in saying that he is anti-Brahmin, that he wants to drive away Brahmins and all that in view of the fact that there is a prosecution launched against him?

உயர் திரு. சி. சுப்பிரமணியம்: அவர் இவ்விதம் பேசினாரா இல்லையா என்பதுதான் இப்போது கோர்ட்டின் முன்னால் இருப்பது. நான் அவருடைய அடிப்படையான கொள்கையைத்தான் தெரிவித்தேன். இப்போது நான் கேட்கிறேன். இவ்விதம் ஜாதி ஒழிப்பை கொண்டு வருவதற்கு கத்தி எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுவதை வேண்டுமானால் நாகரீகமாக இல்லை என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர வேறு ஒன்றும் திராவிட முன்னேற்ற கழகத்தாரால் சொல்ல முடியாது. ஆகவே. . .

திரு. கே. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஒரு தலைவருடைய கொள்கை இன்னதுதான் சொல்வது, இதையேதான் சொல்லி யிருப்பார் என்று சான்றாகச் சொல்வது, பொருந்துமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

Mr. Speaker: I shall give my ruling. The Hon. Minister at the present moment has not made any accusation. He has only quoted certain excerpts from speeches. He is perfectly in order to quote them.

திரு. சி. என். அண்ணாதுரை: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மசோதா சட்டமாவதற்கான கடைசி கட்டத்திலும் நான் இதை ஆட்சேபிக்கிறேன் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்

கொள்ளுகிறேன். அவசரப்பட்டு நடவடிக்கையில் ஈடுபட்டு நிலைமையை அலங்கோலமாக்காதீர் என்ற ஒரு வாதத்தை நான் முக்கியமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த நேரத்திலே எனக்கும், நான் சார்ந்திருக்கிற கட்சிக்கும் அவரால் ஆன சிறு கைங்கரியத்தைச் செய்யலாம் என்று எடுத்துக் கொண்ட முயற்சியில் வெற்றி பெற்றுவிட்டதாக அவர் கருதிக் கொண்டிருக்கலாம்.

உயர் திரு. சி. சுப்பிரமணியம்: வெற்றிபெறவில்லை. நீங்கள் பேசி முடியவில்லையே.

திரு. சி. என். அண்ணாதுரை: என்றாலும், அதிலே சில கொள்கைப் பிரச்னைகளை வெளியிடப்பட்ட காரணத்தால், அதுபற்றி மட்டும் நான் சில வார்த்தைகளை பேச கடமைப் பட்டிருக்கிறேன். திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் வெவ்வேறாக பிரிந்திருந்தாலும், இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திரை கிழிக்கப்பட்டு விட்டது, அவர்களுடைய உண்மை சுவரூபத்தை நாங்கள் கண்டுவிட்டோம் என்று நிதியமைச்சர் அவர்கள் கூறினார்கள். எங்கள் சுவரூபத்தை நாங்கள் அவ்வளவு சுலபமாக காட்டிவிடமாட்டோம். நிதி அமைச்சர் அவர்கள் உண்மையிலேயே எங்கள் சுவரூபத்தைக் கண்டுபிடித்ததாக இருந்தாலும், அவரே திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் கொள்கைகளில் வேறுபாடு இருப்பதை, திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகின்ற 'நம் நாடு' பத்திரிகையிலும், நான் எழுதுகின்ற எழுத்துக்களிலும் குறை காணுவதற்கு எதுவுமில்லை என்று எடுத்துச் சொன்னதிலிருந்து, நாங்கள் ஒப்புக்கொள்ளத் தக்க கொள்கை களுடன் நல்ல முறையிலே. . .

உயர் திரு. சி. சுப்பிரமணியம்: குறை காணுவதற்கில்லை என்பது இல்லை. சட்டபூர்வமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்கு அதிலே இடமில்லை.

திரு. சி. என். அண்ணாதுரை: சட்டபூர்வமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்கு அதில் இடமில்லை என்று சொல்லு கிறார்கள். அது என்னுடைய வாதத்திற்கு வலுவு அளிப்பதுதான். ஆகையால் ''சட்டபூர்வமான முறையிலே இவைகளை எடுத்துச் சொல்வது என்பது திராவிட முன்னேற்றக் கட்சியின் கொள்கை,

சட்டத்திற்கு விரோதமான முறையில் சட்டத்தைப்பற்றி கவலைப் படாமல் சொல்வது திராவிடக் கட்சியின் கொள்கை'' என நிதி அமைச்சர் அவர்கள் கருதுகிறார். இது ஒன்றைப் பார்த்தாலும் திராவிட முன்னேற்றக் கட்சியினருக்கும், திராவிடக் கட்சியினருக்கும் உள்ள மாறுபாடு தெரியும். முரண்பாடு என்பதும், மாறுபாடு என்பதும், வேறுபாடு என்பதும் தமிழில் ஒரே பொருளைக் குறிக்கின்ற சொல்லாகப் பொதுவாகப் பார்க்குமிடத்துத் தோன்றினாலும் ஆழ்ந்து கருத்துக்களை ஆராய முற்படும்போது இவை ஒவ்வொன்றுக்கும் வித்தியாசம் உண்டு என்பதை நான் குறிப்பிடவேண்டும் என்பது இல்லை. கனம் நிதி அமைச்சர் அவர்களே உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆனாலும் அவர்கள் இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கட்சியைப் பற்றி ஏதாவது பேச வேண்டும் என்று கருதியது, ஆளுகின்ற கட்சி எங்களுக்குக் கொடுத்த கௌரவமாகவே நான் ஏற்றுக் கொள்கிறேன்.

மற்றொன்று, சட்ட மன்றப் பிரச்சனைகளைப் பார்க்கும்போது - குழந்தைகள் பயங்கரமான வஸ்துக்களைப் பார்க்கும்போது பயத்தால் இறுகக் கண்ணை மூடிக் கொள்ளுமே - அப்படி நாங்கள் பயந்து கண்ணைமூடிக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். உண்மையில் நாங்கள் குழந்தைகள். நீங்கள் ரொம்ப பயம் காட்டுகிறீர்கள். இந்த இரண்டும் நீங்கள் சொல்கிற வாதத்தில் தெரிகிறது. பயந்து ஓடிவிடுகிறோம் என்று சொல்வது - கண்ணை மூடிக்கொள்ளுகிறோம் என்று சொல்வது கோழைத்தனம் என்கிற நினைப்பில் சொல்லிவிட்டுச் சிரித்துக்கொள்ளுகிறார்களோ என்னவோ? ஆனால் ஆங்கிலத்தில் சொல்வார்களே ஓடுவதற்கு இரண்டு வார்த்தைகள் 'ப்ரூடென்ஸ்' (prudence) 'கவர்டிஸ்' (Cowardice) என்று. இரண்டுக்கும் பொருள் கனம் நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரியாமல் இருக்காது. சபையில் இருந்து நாங்கள் ஓடிவிடுகிறோம் என்று சொல்வது உண்மையானாலும் கோழைத்தனத்தால் அல்ல. இருப்பது முறையாகாது என்று எழுந்து போயிருக்கலாம். இன்னொன்றும் தங்கள் மூலமாக நிதி அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பயத்தால் கண்ணை மூடிக் கொள்வது உண்டு. அப்படி சில சமயங்களில் ஒரு செயலைப் பார்க்க அறுவறுப்பு அடைந்து நாங்கள் கண்ணை மூடிக் கொண்டிருக்கலாம். கண்ணை மூடிக்கொள்வது கோழைத்தனத்தால் அல்ல என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

மற்றொன்று திரு. கலியாணசுந்தரம் அவர்கள் பேசும்போது

பகுத்தறிவு என்று குறுக்கு வழியில் போகக்கூடாது என்றார்கள். குறுக்கு வழியில் போவதை மாற்றுவது தான் பகுத்தறிவு என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டிருப்பாரேயானால் அப்படிச் சொல்லி இருக்கமாட்டார்கள். பகுத்தறிவு என்று சொல்லிக்கொண்டு - புராணங்களில் இதிகாசங்களில் நம்பிக்கை இல்லாவிட்டால் என்ன? அவற்றை ஏன் கொளுத்த வேண்டும், ஏன் குறுக்கு வழியில் போகவேண்டும்? - குறுக்கு வழியில் போவதை அனுமதிக்கக் கூடாது என்பதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். நம் முன்னால் மாகாணத்திலேயே மிகவும் செல்வாக்கு உடையவராக இருக்கக்கூடிய ஒரு தலைவர் ''எதைக் கொளுத்துவேன்'' என்று சொல்கிறாரோ அதைக் குறுக்கு வழி என்று சொல்வது எவ்வளவு பொருத்தமற்றது என்பதைக் காட்ட ஒரு விஷயத்தை கவனிக்கவேண்டும்.

வெகு காலத்திற்கு முன்னாலேயே மார்டின் லூதர் என்பவர் - கிருஸ்துவ உலகம் முழுவதும் மிகவும் புனிதமானது என்று கருதுகிற பைபிள் லதீன் மொழியில் இருப்பது கூடாது. போப் ஆண்டவரின் ஆதிக்கம் ஏற்பட்டு விடுகிறது என்ற ஒரு காரணத்திற்காக பகிரங்கமாக ஐரோப்பா கண்டத்திலே கொளுத்தியிருக்கிறார்கள் என்பதைக் கூறுவேன். நண்பர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் அடிக்கடி ஐரோப்பா போவதனால் ஓய்வு நேரத்தில் இதைப்பற்றியும் அங்கிருந்து தெரிந்து கொண்டு வரவேண்டும் என்பதாக கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே இன்றைக்கு அரசியல் சட்டத்தைக் கொளுத்துவது என்பது முரண்பட்ட செய்கையோ, குறுக்கு வழியான செய்கையோ என்று நினைக்க முடியாது. ஆனால் போலீஸ் அமைச்சர் அவர்கள் சொன்னது போல சமுதாயத்தில் கலவரம் ஏற்படக்கூடும் என்கிற வாதத்தை நான் உண்மையில் உணருகிறேன். அதைத் தடுப்பதற்கு வேறு வழிகள் சாத்தியமானால் சட்டம் வேண்டாம். முடிவான ஒரு சட்டத்தைப் போடுவது மேலும் அவர்களை அந்தக் காரியத்தைச் செய்யும்படி தூண்டச் செய்வதாகவே ஆகும் என்பதற்காகவே முன்பு சொன்னேன்.

எங்களுக்கும் திராவிட கழகத்திற்கும் உள்ள முறைகளில் வித்தியாசம் இருக்கிறது என்பதை பார்ப்பனர்களை நாங்கள் எந்த வகையில் நடத்துகிறோம், திராவிடக் கழகம் எந்தவகையில்

நடத்துகிறது என்பதை கவனித்துப்பார்த்திருந்தால் நிதி அமைச்சர் அவர்களுக்கே தெரிந்திருக்கும். திராவிட முன்னேற்றக் கழகத்தில் பார்ப்பனர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். பார்ப்பனர் களாலேயேதான் பார்ப்பனீயம் அழிக்கப்படவேண்டும் என்பதை நாங்கள் நம்பிக்கொண்டிருக்கிறோம். இதற்குக் கொஞ்சம் கால தாமதம் பிடிக்கும் என்றாலும் கூட இந்த வழிதான் உறுதியானது என எண்ணிக்கொண்டிருக்கிறோம். காலதாமதம் ஆனாலும் நாகரீகமான முறையில் பார்ப்பனீயத்தை ஒழிக்க திராவிட முன்னேற்றக் கழகம் உழைக்கிறது. இதே விஷயத்தை வேறுவகையில் தீவிரமாக - காலதாமதம் இன்றி நிறைவேற்றிடத் திராவிட கழகம் துடிக்கிறது. அதனாலேயே "இந்த இரண்டு கட்சியும் ஒன்றுதான்" என நிதி அமைச்சர் அவர்கள் சொல்லி, அதனால் அவர் அடைகின்ற லாபம் என்னவோ தெரியவில்லை. இதனால் ஒரு சில பிராமணர்களும் இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினர்களாக இல்லாமல் செய்துவிடுகிற லாபத்தை அவர் அடைந்தாலும் நான் கவலைப்பட வில்லை. ஆனால் எங்கள் கட்சியின் கொள்கையைப் பற்றித் தெளிவாகச் சொல்ல நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகையால் அதைச் சொல்கிறேன்.

சேரியை ஒழிக்கவேண்டும் என்பதற்காக சேரிகளை எல்லாம் கொளுத்தி விட முடியுமா என்கிற வாதத்தை நிதி அமைச்சர் அவர்கள் எழுப்பினார்கள். அப்படி அவர் கேட்கின்ற நேரத்தில் - ஒரு பெரும் வழக்கறிஞராக கோவையில் அவர் பணியாற்றிக்கொண்டிருந்த காலத்தில் இந்தமாதிரியான கேள்விகள் எத்தனை போட்டு எதிர் கட்சியைத் திணர அடித்திருப்பாரோ என்று என்னையே நான் கேட்டுக் கொண்டேன்.

சேரியை ஒழிக்க வேண்டும் என்பதற்காக நகரசபை அதிகாரிகள் இந்த இடத்திலே சேரி இருக்கக்கூடாது என்று உத்திரவு போடுகிறார்கள். அதை மீறி மறுபடியும் அந்த இடத்தில் சேரி ஏற்படுமானால் - குடிசைகள் போடப்படுமானால் - அவர்கள் அந்தக் குடிசைகளை பிரித்துத்தான் போடுகிறார்கள். கொளுத்திவிட்டுப் போகிறார்கள்.

செத்த பிணம் நாறிக் கிடக்கிறது என்றால் அதை எடுத்துப் புதைக்கத்தான் வேண்டும். இல்லையானால் கொளுத்தவேண்டும். அதை எரிக்காமல் வைத்துக்கொண்டிருக்க முடியாது. யாரும் வைத்துக்

கொண்டிருக்கவும் மாட்டார்கள். ஆகவே கொளுத்துவதாவது வாதத்தை எடுத்துச் சொல்லிப் பயன் இல்லை என்று அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

கடைசியாக ஒரு விஷயம். ''திரு. காமராஜரும், பெரியாரும் சந்திக்கவேண்டும். அவர்கள் இரண்டுபேரும்தான் பரஸ்பரம் நண்பர்கள் ஆயிற்றே'' என்று நான் சொன்னதற்கு போலீஸ் அமைச்சர் அவர்கள் - சங்க காலத்து இலக்கியத்தில் ஒருதலைக் காதல் என்பார்களே அப்படி - பெரியாருக்கு காமராஜரிடத்தில் அதிகமான காதல் இருக்கலாம். ஆனால் காமராஜருக்கு அவரிடத்தில் காதல் இல்லை என்று சொன்னார்கள். சங்க காலத்தில் தூதன், பாகன், பாணன் போல இவர் இங்கே பேசியது பொருந்தாது. ஒருகால் காமராஜருக்கும் பெரியாருக்கும், பெரியாருக்கும் காமராஜருக்கும் எப்படிப்பட்ட காதல் உண்டு என்பதை இடையே இருந்து அவர் நன்றாக உணர்ந்திருக்கலாம். எந்த அளவுக்கு அவ்விஷயம் இவருக்குத் தெரியும் என்பது எனக்குப் புரியாது.

உண்மையிலேயே பெரியாருடைய காதல் ஒரு தலைப்பட்ச மானதாக இருந்தாலும், காமராஜருக்கு அவரிடத்தில் காதல் இல்லை என்றாலும், காமராஜர் சென்று சந்திக்கக்கூடிய அளவுக்கு, மக்களிடத்திலே அதிக செல்வாக்கைப் படைத்த ஒரு தலைவர் பெரியார் என்பதை இவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். அவர் திடீரென்று ஆப்பிரிக்க நாட்டில் இருந்து நேற்று காலை நம் ராஜ்யத்திற்கு வந்தவர் அல்ல. லண்டன் நாட்டவர் போகும் போது நம்மிடத்திலே விட்டுவிட்டுச் சென்றுவிட்ட விசித்திர பிறவியும் அல்ல. நெடுங்காலத்திற்கு முன்னால் இருந்தே இந்த நாட்டுக்கு இடைவிடாமல் உழைத்து வருபவர். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினராகவும், தலைவராகவும் இருந்து பணி யாற்றியவர். காங்கிரஸ் மூலமாக சில கொள்கைகள் நிறைவேறாது என்ற காரணத்தினால் அதை விட்டு வெளியேறியவர். இருந்தாலும் இன்றைய நிலையில் காங்கிரஸ்தான் பதவியில் இருக்கவேண்டும் என்பதற்காக பொதுத்தேர்தலின்போது உங்களுக்காக இடைவிடாமல் உழைத்தவர். தகப்பனிடத்தில் பிள்ளை போவது - எத்தனை மனஸ்தாபமாக இருந்தாலும் அதுதான் சரி என்பது போல - காமராஜருக்குப் பெரியாரிடத்தில் காதல் இல்லை என்றாலும் கூட - பெரியார் தங்களுடைய மாஜி தலைவர் - மாஜி தோழர் என்கிற

முறையிலாவது அவரை அணுகுவது சரியான கொள்கைதான் என்று நான் கருதுகிறேன். தன்னுடைய மாஜி தலைவர், மாஜி தோழர் இவரைப்பற்றிச் சபையில் யாராவது ஏதாவது சொன்னால் மனம் புண்படுமே என்பதுபோலத்தான் இன்றைக்குச் சபையில் காமராஜர் இல்லை என்று கருதுகிறேன். கனம் நிதி அமைச்சர் என்னைப்பற்றிச் சொன்னது போல அவர் ஓடிவிட்டார் என்று சொல்லமாட்டேன். நாகரீகமான பாஷையில் ஒளிந்து கொண்டார் என்று கருதலாம். தான் இவ்விடத்திலிருந்து துக்கப்படாமல் வேறு இடத்தில் இருந்து மனத்திற்குச் சாந்தி ஏற்படுத்திக் கொள்கிறார் என்று கருதுகிறேன்.

ஆனாலும் போலீஸ் அமைச்சர் அவர்கள் பேசும்போது ''காமராஜர் போய் சந்திப்பதைக் காட்டிலும் நீங்களே போய் சந்திக்கலாமே. தந்தையும் மகனும் பிரிந்திருந்தாலும் இந்தக் காரணத்தினால் சந்திப்பது மிகவும் பொருத்தமாயிற்றே'' என்று குறிப்பிட்டார்கள். பிரிந்துவிட்டதனால் இழந்துவிட்ட லாபத்தை திரும்பவும் சந்தித்து ஒட்டிக்கொள்வதின்மூலம் பெற்றுவிடலாம் என்று சொன்னார்கள். அவர்களுடைய நல்லெண்ணத்தைத் துணை கொண்டு நான் அவரை சந்திக்கப் பார்க்கிறேன். ஆனால் அதுவரையில் இந்தச் சட்டத்தை நிறுத்தி வையுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். சட்டத்தை நிறைவேற்றிவிட்டு அவரைப் போய் சந்திப்பது தூது ஆகாது. இந்தக் குற்றத்தைச் செய்தால் இத்தனை வருஷம் சிறை தண்டனை கிடைக்கும் என்பதை அவரிடத்தில் சென்று சொல்லும் அறிவிப்பாகத்தான் இருக்கும். அதைப்போய் நான் சொல்ல வேண்டாம். பத்திரிகை வாயிலாக அவரே பார்த்துக்கொள்வார். உண்மையில் நான் அவரைப் போய் இந்தக் காரணமாகச் சந்திப்ப தனால் லாபம் ஏற்படும் என்றால், திரும்பவும் நாங்கள் அவரோடு ஒட்டிக்கொள்ள முடியும் என்றால் மகன் தந்தை செய்ததை மறந்து திரும்பவும் அவரிடத்தில் சென்று ஒட்டி கொள்வது குற்றங்களில் ஒன்றல்ல; குணங்களில் ஒன்று என்பதை நிதி அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரை மீதான விவாதம்

உரை : 10 **நாள் : 13.02.1958**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய பேருரையின் மீது ஆளும் கட்சியினர் நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தைத் தந்து இருப்பதால் நானும் எதிர் வரிசையில் இருக்கின்ற மற்ற கட்சியினரும் கவர்னர் உரையில் காணப்படுகிற சில கருத்துக்கள் தேவையற்றன, அல்லது சில தேவையான கருத்துக்களை அவர்கள் அதில் குறிப்பிடாமல் விட்டிருக்கிறார்கள் என்கிற கருத்துப்பட சில தீர்மானங்கள் தந்திருக்கிறோம். இதைக் குறித்து கருத்துறையாற்றுவதில் கவர்னர் இங்கே பேருரை ஆற்றிய நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாதது மிகவும் வருந்தவேண்டிய விஷயம் என்பதாக முதலில் பேசிய காங்கிரஸ் அங்கத்தினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் குறிப்பிட்டார்கள். நாங்கள் எல்லாம் அன்றையதினம் வந்திருக்கவேண்டுமென்று அவர்கள் எவ்வளவு ஆசையோடு இருந்தார்கள் என்பதை அறிய நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். என்றாலும் கவர்னர் பெருமான் எங்களுக்கு விரோதி அல்ல - அவர் நண்பர் ஆவாரா என்பதும் ஐயத்திற்குறிய விஷயம். நாங்கள் அவ்வளவு பெரியவர்களும் அல்ல. ஆனாலும் நாங்கள் கையாண்டு வருகிற ஒரு அரசியல் தத்துவத்தின்படி வடநாட்டு மத்திய சர்க்காரால் நியமிக்கப்படுகிற கவர்னர் பெருமானின் பதவியேற்பு விழா நாள் ஒன்றிலும், அவர் பேருரை ஆற்றுகின்ற நாள் ஒன்றிலும் நாங்கள் கலந்துகொள்வது இல்லை என்று கருத்து வைத்திருக்கிறோம். அது விசித்திரமான கருத்தாக இருக்கலாம். எத்தகைய விசித்திரமான கருத்தாக இருந்தாலும் அதற்குக் கட்டுப்பட்ட முறையில் நாங்கள் அன்றைய நடவடிக்கையில் கலந்து கொள்ளவில்லை. அது கவர்னர் பெருமானிடத்தில் நாங்கள் தனிப்பட்ட முறையில் அவமதிப்புக் காட்டுவதாக ஆகாது என்று ஒரு

அறிக்கையில் வெளியிட்டிருக்கிறேன். அந்த அறிக்கை காங்கிரஸ் அங்கத்தினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களின் கவனத்தை ஈர்த்திருக்குமென்று எதிர்பார்க்கவில்லை. ஆனால் அந்த அறிக்கையைப் படித்திருந்தாலும் அந்தக் கருத்துக்களை குறிப்பிடாது, அதில் இல்லாத சில கருத்துக்களை வரவழைத்து அண்ணாதுரை அவர்கள் அந்த அறிக்கையில் கவர்னர் பெருமானுடன் ஒத்துழைக்க வருகிறார் என்றும், அதைப்போல மெள்ள மெள்ள தங்கள் கொள்கை களை விட்டுக்கொடுத்துவிட்டு முன்னேறவேண்டும் என்றும் சொன்னார்கள். பொதுவாக கவர்னர் பெருமான் பேருரையில் கனம் அங்கத்தினர்கள் அத்தனைபேரும் மூன்று விஷயங்களைப்பற்றி மிகப் பெரிதாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மூன்று விஷயங்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள் என்று சொல்வதைவிட மூன்று தனிப் பட்டவர்களைப் பற்றி தங்கள் உரையில் அதிகமாக கலந்து பேசியிருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்தின் முதல்வரான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களைப் பற்றியும் இந்தியத் துணைக் கண்டத்தின் முன்னாள் கவர்னர் ஜெனரலாகிய ஸ்ரீ ராஜகோபாலச் சாரியார் அவர்களைப் பற்றியும் பேசியதுடன், அவ்வளவு பெரியவர் களுடன் என்னை இணைத்து என்னையும் மிக நீண்டதொரு விவாதத்திற்கு ஆளாக்கினார்கள். அப்படிப் பேசும்போது சிலர் நான் கொண்டுள்ள கொள்கைகளில் சில தீதானவை என்று சொல்லித் தங்களோடு ஒத்துழைப்பதற்கு என்னை அழைத்தார்கள். சபாநாயகர் அவர்களே, தங்கள் மூலமாக அவர்களிடம் சொல்லிக் கொள்கிறேன், உண்மையிலேயே என்னைக் கண்டித்தவர்கள் என்னைக் கண்டிக்கும்போது என்னிடம் எதிர்பார்த்ததைவிட மிக அதிகமான மன எழுச்சிக்கு, தங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று என்னை அவர்கள் கேட்டுக்கொண்ட நேரத்தில், நான் ஆளானேன். "மிக்க அனுபவமுள்ளவர்களே தங்களுடன் ஒத்துழைக்கவேண்டு மென்று என்னை அழைக்கிறார்களே; நான் கையாண்ட முறைகள் தீதானவை என்று எடுத்துக் காட்டியவர்களே தங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும் சொல்கிறார்களே; இவ்வளவு நல்லவர்கள் தங்களுடன் ஒத்துழைப்பதற்கு என்னை அழைக்கிறார்களே;" என்று எண்ணிய நான் "இத்தனை பேர்களும் சொல்லும் வார்த்தையைத் தட்டிக் கழிக்க வேண்டியிருக்கிறதே" என்று அப்போது வருத்தப்பட்டேன்.

நான் கொண்டுள்ள கொள்கைகளை விட்டுவிட வேண்டு மென்று சொன்ன கனம் அங்கத்தினர்கள் தாங்கள் அப்படிச்

சொன்னதை விளக்குவதற்காக எடுத்துக்காட்டிய தத்துவத்தை நாட்டின் எந்தத் தலைவர்களிடமிருந்து அவர்கள் அறிந்தார்களோ அந்தத் தலைவர்களிடமிருந்தே அதே தத்துவத்தை அறிந்துணர்ந்த பிறகு தான் இந்தக் கொள்கைகளைக் கொண்டிருக்கிறேன் என்ற காரணத்தால், அவர்களுடன் நான் ஒத்துழைக்க வேண்டுமென்ற அவர்களுடைய வேண்டுகோளை நான் ஏற்றுக்கொள்ள முடிய வில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம், எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பை ஆளும் கட்சியினர் பெற வேண்டுமென்று சொன்னார்கள். அவர், நேற்றையதினம் சபையில் இல்லாத காரணத்தால் இன்று அப்படிக் கூறினார். அவர் நேற்று இங்கே இல்லாததால், ஆளும் கட்சி அங்கத்தினர்கள் என் ஒத்துழைப்பைக் கோரியதைப் பார்க்கும் சந்தர்ப்பம் அவருக்கு இருக்கவில்லை.

கனம் அங்கத்தினர்கள் என்னைக் கண்டித்தார்கள். அதுதான் எனக்கு உற்சாகமளித்தது. இந்த மாமன்றத்திலே நான் வந்திருக்க வேண்டிய தில்லை என்று ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார்; அப்படி அவர் கருதுவதற்கு, சில காரணங்களையும் சொன்னார். அவர் கூறியதை நான் ரசித்தேன். நான் தேர்தலுக்கே நின்றிருக்க வேண்டாம் என்று பெரியார் ராமசாமி அவர்கள் கூறியதை தம் கருத்துக்குக் காரணமாக அவர் எடுத்துக்காட்டினார். பெரியார் ராமசாமி அவர்கள் ஒரு வேளை, "சட்டசபையில் கனம் அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவர்கள் அனுபவமும் ஆற்றலும் மிக்கவர்கள். அவர்கள் உன்னுடைய தூய கொள்கைகளை மாற்றி விட்டால் என்ன செய்வது?" என்று எண்ணி, அவ்வாறு சொல்லியிருக்கலாம். கனம் அங்கத்தினர்கள் என்னைக் கண்டித்ததற்காக நான் வருத்தப்படவில்லை. ஆனால், பல நல்லவர்கள் என்னுடைய ஒத்துழைப்பைக் கேட்டும் அதைப் பெற முடியாத நிலையில் இருக்கிறார்களே என்பதால் எனக்கு வருத்தம் ஏற்பட்டது. கடைசியில் பேசிய கனம் போலீஸ் அமைச்சர், தமது அனுபவத்தின் காரணமாகவும், பருவத்தின் காரணமாகவும், என்னுடைய மாவட்டத்தையே சேர்ந்திருப்பதன் காரணமாகவும், "குழந்தைகளே, நெருப்போடு விளையாடாதீர்கள்" என்று மிகக் கனிவோடு சொன்னார்.

கனம் சபாநாயகர் அவர்களே, என்னைப் பற்றி அவர்களெல் லோரும் எடுத்துச் சொன்ன விஷயங்களைக் குறித்து நான் விரிவாகப்

பேச வேண்டுமென்றால், அந்த விஷயங்கள் கவர்னர் பெருமானின் உரையினின்றும் அப்பாற்பட்டதாக இருந்தாலும், அப்படிப் பேசுவதற்கு தாங்கள் அருள் கூர்ந்து என்னை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், நானே ஓர் பிரச்னையாக ஆக்கப்பட்டு இந்த மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டு விட்டேன்.

எந்தக் காரணத்தினாலோ, நான் எடுத்துக்கொள்ளும் எந்த நடவடிக்கையும், நான் கொள்ளும் எந்தக் கருத்தும், கொள்கையும், பிறருக்கு ஏதோ புதிர்களாகத் தெரிகின்றன. நான் ஒரு புதிராக இருக்கிறேன் என்று கூடக் கூறி ஒரு கனம் அங்கத்தினர் என்னை எச்சரித்தார். தம்முடைய அந்தக் கருத்திற்கு எடுத்துக்காட்டாக, திரு ஆச்சாரியாரும் நானும் ஒரே மேடையில் பேசியதைக் குறிப்பிட்டார். திரு ஆச்சாரியாரும் நானும் ஒரே மேடையில் பேசியதைக் குறித்து, "இந்தக் கூட்டு சேருமா?" என்று சிலர் கேட்டார்கள்; "இது கூட்டா!" என்று சிலர் ஐயப்பட்டார்கள்; "இந்தக் கூட்டு எப்படி நிலைக்கும்?" என்று சிலர் கூறினார்கள். அவர்களெல்லாம் அவ்வாறு பேசியபோது, "இவர்கள் ஏன் அந்த நிகழ்ச்சியை இவ்வளவு கூர்ந்து கவனித்திருக் கிறார்கள்" என்று எனக்கு ஆச்சர்யமாக இருந்தது.

நான் ஆச்சாரியார் அவர்களோடு கலந்து பேசினேன் என்று சொல்வது தவறு. அல்லது நான் கூட்டிய ஒரு மேடையில் ஆச்சாரியார் அவர்கள் வந்து பேசினார்கள் என்று சொல்வதும் தவறு. இந்திப் பிரச்னை பற்றிப் பேச ஒரு மன்றம் எங்களை அழைத்திருந்தார்கள். ஒரு குறிப்பிட்ட பிரச்னையைப் பற்றிப் பேசுவதற்காகத்தான். அதே போல் அழைக்கப்படுகிற பல மேடைகளுக்குப் பல அமைச்சர்களோடு கூட நான் சென்றிருக்கிறேன். எனது தொகுதியில் தண்டலம் என்ற ஊரில் ஒரு பொது மாநாடு கூட்டப்பட்டது. அதற்கு, முதலமைச்சர் காமராஜ் அவர்களை நான் வருந்தி அங்கு வரவழைத்தேன். அதே நேரத்தில் முதல் அமைச்சர் தலைமை வகிக்கிறார் என்று கேட்டவுடன் இந்த நாட்டில் உள்ள சில அரசியல் கட்சிகள், அண்ணாதுரை எதிர்க்கட்சியில் இருக்கிறானே தவிர காமராஜின் கையாளாக மாறி விட்டான் என்று எடுத்துச் சொன்னார்கள். நான் அதையும் தாங்கிக் கொண்டேன். சில பத்திரிகைகள், காமராஜோடு ஒத்துழைக்க அண்ணாதுரை சித்தமாக இருக்கிறார் என்று சொன்னதோடு மட்டு மல்ல, எப்பொழுது சமயம் கிடைக்கும் என்று காத்துக் கொண்டிருக்

கிறான். சமயம் கிடைத்தபோது அண்ணாதுரை காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து விடுவான் என்றும் சொன்னார்கள். அதே போல் ஆச்சாரியார் அவர்களோடு நான் ஒரு மேடையில் கலந்து பேசினேன் என்றவுடன், காமராஜரைக் கவிழ்க்க அண்ணாதுரை தக்க சந்தர்ப்பத்தை பார்த்துக் கொண்டிருக்கிறான், அதற்காகத்தான் ஆச்சாரியாரை நாடியிருக் கிறான் என்றும் சொன்னார்கள். இப்படி நான் ஒரு புதிராக கருதப்படுவதோடு மட்டுமல்ல. நாட்டில் நடைபெறக்கூடிய சாதாரண நிகழ்ச்சிகளைக் கூட பெரிதுபடுத்தி விடுகிறார்கள். நாட்டில் நடைபெறும் சிறிய விஷயங்களை பெரிதுபடுத்தி அவர்கள் பார்ப்பதற்குக் காரணம், அவர்களின் பலஹீனத்தின் அறிகுறி என்றுதான் நான் சொல்வேன். உங்கள் கட்சி அவ்வளவு சுலபத்தில் - இரண்டு பேர் ஒன்று கூடுகிற நேரத்தில் - ஆடி விடக்கூடும் என்று எண்ணிவிடக் கூடிய அளவிற்கு நீங்கள் இருக்கக்கூடாது என்று நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். காங்கிரஸ் அங்கத்தினர்களும் சொன்னார்கள், அதனால்தான் போலும் கனம் அங்கத்தினர் ஆதிமூலம் அவர்கள் இன்னும் 50 வருஷங்களுக்கு உங்களை யாராலும் அசைக்க முடியாது என்று எடுத்துச் சொன்னார்கள். இவ்வளவு பலம் பொருந்திய ஒரு நிலையில் இருக்கிற நீங்கள் நாட்டில் நடக்கிற நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் ஒரு உள் அர்த்தம் கற்பிக்காமல் அவைகள் சாதாரணமாக ஏற்பட்டவைகளே என்றுதான் கருத வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இதை நமது மாநில முதலமைச்சர் காமராஜ் மட்டுமே மிகத் தெளிவாக உணர்ந்த நிலையில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ராஜகோபாலாச்சாரியாரும் அண்ணாதுரையும் ஒரு மேடையில் பேசியிருக்கிறார்கள், ஆனால் அதைப் பார்த்தாலே தெரியும், அவர்கள் இரண்டு பேர்களும் ஒன்றாக இல்லை, அவர்கள் வேறு வேறாகத்தான் இருக்கிறார்கள் என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அன்றையதினம் நடைபெற்ற அந்தக் கூட்டமானாலும் சரி, அல்லது வேறு கூட்டங்களானாலும் சரி, தப்புக் கருத்துக்களை அது உண்டாக்குமானால், நான் அருள் கூர்ந்து அங்கத்தினர்களை வேண்டிக்கொள்கிறேன், எனக்கு என்று சில கொள்கைகள் இருக்கின்றன, நான் சார்ந்திருக்கக்கூடிய ஒரு கட்சியும் இருக்கிறது, அதற்கு குறிப்பிடத் தக்க அளவு நாட்டில் செல்வாக்கும் இருக்கிறது, அது வளர்ந்துகொண்டு வருகிறது, இனியும் வளரும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது, இவைகளை அங்கத்தினர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே கூட்டுச் சேருவதின் மூலம் உள்ளதைக் கெடுப்பதோ இல்லாததை ஏற்படுத்தவோ எனக்கோ அல்லது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ முறை அல்ல என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம் என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சென்ற தடவை கவர்னர் பெருமானுடைய உரை நிகழ்ந்த நேரத்திலும், அதற்குப் பிறகு இந்தத் தடவை நடைபெற்ற போதும், அதற்குப் பிறகும் நான் ஒரு மாறுதலை இங்குக் காண்கிறேன். சென்ற தடவை நாங்கள் திராவிட நாடு பிரிவினையைப் பற்றிப் பேச ஆரம்பித்த நேரத்தில் அது, காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கு மெத்த மன எரிச்சலை உண்டு பண்ணியது. ஆனால் இந்தத் தடவை காங்கிரஸ் அங்கத்தினர்கள் மட்டுமல்ல, காங்கிரஸ் அமைச்சர்களின் பல பேர்களுக்குக் கூட அதைப் பற்றி விளக்கம் அறிந்து கொள்ள ஆவல் ஏற்பட்டதை நான் காண்கிறேன். மிகவும் வரவேற்கிறேன். அந்த ஆவலினால்தான் நமது போலீஸ் அமைச்சர் பக்தவத்ஸலம் அவர்கள், திராவிட நாடு என்று நீங்கள் கேட்பதற்கும் தமிழ் நாடு என்று ஆதித்தன் அவர்கள் கேட்பதற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டார்கள். பழுத்த தேச பக்தராகிய சர்தார் வேதரத்னம் பிள்ளை அவர்கள் கூட, உங்கள் திராவிட நாடு கோரிக்கையை ஆந்திரர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்று கேட்டார்கள். இந்த அளவு உங்கள் ஆவலைத் தூண்டியிருப்பதை நான் மிகவும் வரவேற்கிறேன்.

திரு. எம். பக்தவத்ஸலம்: என்னைப் பொறுத்த மட்டில் கனம் அங்கத்தினர் ஆதித்தன் அவர்களும் காரணம் என்று சொல்வேன்.

திரு. சி. என். அண்ணாதுரை: நான், ஆதரவு என்று குறிப்பிட வில்லை, ஆவல் என்றுதான் குறிப்பிட்டேன். ஆதரவு பெற்று விட்ட தாகக் கருதி என்னை நானே ஏமாற்றிக் கொள்ளவில்லை. ஆவல் கிளம்பியிருக்கிறது. சென்ற தடவை இம்மாமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது நிதியமைச்சர் அவர்கள் இத்தகைய பிரிவினை உணர்ச்சிகளை விட்டு விட வேண்டாம் என்று தெளிவாக என்னிடம் சொல்லி வாதத்திற்காக ஒரு வார்த்தையை சேர்த்துக்கொண்டு, இதை விட்டு விட முடியாவிட்டால் கொஞ்ச நாளுக்கு ஒத்தியாவது வைக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். அதை, வட நாட்டிலுள்ள சில ஏடுகள் நிதியமைச்சர் சுப்பிரமணியம் பிரிவினையை ஆதரிக்கிறார் என்று கண்டித்தும் எழுதின. அதே முறையில் இந்த முறை ஆச்சாரியார் அவர்களுடன் சேர்ந்து பேசிய கூட்டத்தில், பிரிவினையைப் பற்றி

பேசிய நேரத்தில் அவர்கள், அதைப் பற்றி இப்பொழுது பேச வேண்டாம், இப்பொழுது இந்தியைப் பற்றி மட்டும் பேசலாம் என்று அவர்கள் சொன்னார்கள். பிரிவினையை அவர் ஆதரிக்கவில்லை. நிதியமைச்சர் சுப்பிரமணியத்தைப் பற்றி எந்தெந்த வட நாட்டுப் பத்திரிகைகள் தாறுமாறாக எழுதினவோ அவைகள் ஆச்சாரியார் அவர்களைப் பற்றியும் எழுதியது. இதனால் இரண்டு பேருக்கும் கிடைக்கவேண்டியது கிடைத்து விட்டது என்று நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்று யாரும் நினைக்காதீர்கள். வட நாட்டில் உள்ளவர்கள் இரண்டு தமிழர்கள் ஒன்றாக சேர்ந்து விட்டால் சந்தேகப்படுகிறார்கள் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. ஆகவே அவர்களுக்கு அத்தகைய ஐயப்பாடு ஏற்பட்டதைப் போல இங்குள்ள அங்கத்தினர்களுக்கும் ஐயப்பாடு ஏற்பட்டதால்தான் இவர்கள் இந்தப் பேச்சுகளில் என்னைப் பற்றி அதிகமாக, ஒரு புதிராக இருப்பதாகச் சொன்னார்கள். நான் புதிராக இருக்கிறேன் என்று யாராவது கருதினால் நான் அருள் கூர்ந்து அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன், எனக்கு என்று இருக்கிற சில கொள்கை களுக்காகவும், நான் பரப்பவேண்டுமென்று கருதுகிற சில திட்டங் களுக்காகவும் அனைவருடைய பேருதவியையும் நாட நான் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் நான் தேடித் தேடிச் செல்கிறேன், நாடி நாடிப் பார்க்கிறேன், ஓடி ஓடி அழைக்கிறேன், கிடைக்கிற உதவிகளை எல்லாம் பெறுகிறேன். ஆனால் அதே நேரத்தில் எங்களுக்கு இருக்கிற கொள்கைகளை விட்டு விட வேண்டுமென்று யாரும் எதிர் பார்க்க மாட்டார்கள். ஆகவே, சில அங்கத்தினர்கள் மெத்த அன்புடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்பார்களேயானால் எங்கள் அடிப்படைக் கொள்கைகளுக்கு மாறுதல் இல்லாத நிலையில் ஒத்துழைப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் தயாராக இருக்கும் என்பதை நான் வெளிப் படுத்திக்கொள்கிறேன். அந்த அடிப்படைக்கருத்துக்களுக்கு மாறுபாடு இல்லாமல் ஒத்துழைக்கக்கூடிய ஒரு சம்பவம் மெத்த ஐயப் பாட்டிற்கும், விவாதத்திற்கும், சந்தேகத்திற்கும், சவாலுக்கும் இடமளிக்கத் தக்க வகையிலும் மொழியைப் பற்றிய பிரச்னைதான் இன்றைய தினம் நாட்டில் ஏற்பட்டிருக்கின்றது. இம்மொழிப் பிரச்னையைப் பற்றி நிதி அமைச்சரும் கல்வி அமைச்சருமான கனம் சுப்பிரமணியம் அவர்கள், இந்த மாமன்றத்தில் விவாதித்தால் அதில் வாதப் பிரதிவாதங்கள் அதிகமாகப் போகும் என்ற காரணத்தால் ஒரு

கமிட்டியில் எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடி ஒன்றாகப் பேச வேண்டுமென்று அன்போடு அழைத்தார்கள். நான் அதை மெத்த மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டேன். அந்தக் கமிட்டி இரண்டு தினங்கள் கூடிற்று. அதில் அதற்கு முன்னாலே தயாரித்த ஒரு அறிக்கையைப்பற்றி முதல் நாள் விவாதம் நடந்தது. அந்த விவாதத்தை ஒட்டிச் சில திருத்தங்களைச் சேர்த்து இரண்டாவது நாள் விவாதம் நடந்தது. இவ்விதமாக இரண்டு நாட்கள் கமிட்டியினுடைய நடவடிக்கைகள் நடைபெற்றன. அதிலே செய்யப்பட்ட முடிவுகளைப் பற்றி வெளியில் சென்று நான் சொல்லவும் இல்லை, பத்திரிகையில் எழுதவும் இல்லை, பொதுக்கூட்டங்களில் பேசவுமில்லை. நிதி மந்திரி அவர்களும் அப்படித்தான் இருந்தார்கள் என்று கருதுகிறேன். அதற்கு பிறகு, ஒரு திங்களுக்கு முன்னால் என்று கருதுகிறேன், டெல்லியில் பத்திரிகை நிருபர்களிடம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அதிலே திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட அனைவரும் அறிக்கையை ஏற்றுக் கொண்டார்கள் என்று சொன்னதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அதையும் நான் பெரிதாக கொள்ளவில்லை. ஆனால் அதை வைத்துக் கொண்டு எனக்கு மாசு கற்பிக்க வேண்டுமென்ற கருத்து கொண்ட சில ஏடுகள் அண்ணாதுரை தமிழர்களுக்கு துரோகம் செய்து விட்டான், ஹிந்தியை ஏற்றுக் கொண்டு விட்டான் என்று எழுத ஆரம்பித்தன. அப்பொழுதுதான் நான் கமிட்டியில் நடைபெற்ற விஷயங்களைப் பற்றியும் அங்கு ஏற்பட்ட நிலைமைகளைப்பற்றியும் எடுத்துரைக்க வேண்டிய வனானேன். அதற்காக நான் வெளியிட்ட அறிக்கை இன்னும் என்னுடைய உறுதியான கொள்கையாக இருக்கிறது. அந்த அறிக்கையில் நான் ளியிட்டதை இங்குச் சுருக்கமாக மறுபடியும் சொல்வதற்குத் தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன். இந்தக் கட்டத்தில் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து பேசி முடிவு எடுக்கப்படுவதற்கு இது ஒரு சர்வ கட்சி கூட்டமாக அமைக்கப் படவில்லை என்று நான் இன்னமும் கருதுகிறேன். "So far as is possible a unified opinion at least in the problem" என்று நிதி அமைச்சர் அவர்கள் இந்த முறையில் எடுத்துச் சொன்னார்கள். நான் அதனை இங்கே எடுத்துக் காட்ட விரும்புகின்றேன். அந்த முறையிலே அங்குக் கூடியிருந்த நாங்கள், ஒரு புறத்திலே நான் இருந்தேன், மற்றொரு புறத்திலே ஆங்கில மொழியை ஏற்றக்கொண்டவர்கள், ஆங்கிலேயருக்குப் பிறந்தவர்கள் என்று கருதத்தக்க அளவில் தேசீய உணர்ச்சி படைத்

தவர்கள் இருந்தார்கள், ஒரு புறத்திலே பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர், ஹிந்தி அல்லவோ தேசீய மொழி என்று அழுத்தந்திருத்த மாகப் பேசக்கூடிய சின்னதுரை இருந்தார்; ஹிந்தியை கட்டாய பாடமாக்கியிருந்தால் இந்தக் கர்மம் வந்திராது என்று கனிவோடு பேசிய சர்தார் வேதரத்தினம் பிள்ளை ஒருபுறம் இருந்தார். இந்தத்தொல்லையை அடுத்த தலை முறையைச் சேர்ந்தவர்கள் பார்த்துக் கொள்ளட்டும் என்று சொல்லக்கூடிய நிதி அமைச்சர் சுப்பிரமணியம் ஒரு புறம் இருந்தார். இத்தகைய பல்வேறு முரண்பட்ட கொள்கைகளைப் படைத்தவர்கள் அங்குக் கூடி, அவர்களுக்குள் ஒரு ஒருமைப்பாடு - கருத்தொற்றுமை - காண வேண்டியிருந்தது. 1965-ல் நம்மை எதிர்நோக்கியிருக்கும் ஆபத்து, அன்றைக்கு வரவிருக்கின்ற நெருக்கடி, அதிலிருந்து எப்படித் தப்பித்துக் கொள்வது என்பதுதான் எங்களது உள்ளத்தில் மேலோங்கியிருந்தது. அந்தக் கூட்டத்திலே பேசிய பேச்சுக்கள் குறிப்பு எடுக்கப்பட்டிருக்கின்றன என்று நிதி அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தில் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். அவைகளில் ஒரு எழுத்தைக்கூட இன்னும் நான் மறந்து விடவில்லை. அப்போது பேசிய பேச்சில் நான் எடுத்துச் சொன்னேன், ‘நமது முதலமைச்சர் அவர்களைத்தான் நாங்கள் நம்பியிருக்கிறோம். அவர்களால்தான் இப்படிப்பட்ட சிக்கலான பிரச்னைகளைச் சாதித்துத் தர முடியும்’ என்று சொன்னேன். நிதி அமைச்சரும், முதலமைச்சரும் சொன்னார்கள் “அவரவர்களுக்குக் கட்சி இருக்கின்றது. அந்தந்த கட்சிக்கென்று சில கொள்கைகள் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் விட்டுக் கொடுக்கச் சொல்லவில்லை. அனைவரும் கூடி, மத்திய சர்க்காரிடம் போராடி, வரவிருக்கும் ஆபத்தைத் தடுக்க என்ன செய்யலாம் என்ற முறையில் சொல்லுங்கள்” என்று எடுத்துச் சொன்னார்கள். இன்னும், அந்தக் கமிட்டியில் ஹிந்தியைக் கட்டாய மாகப் புகுத்தினால் எனக்குத்தானே நல்லது என்று சொன்னார்கள். ஆங்கிலத்தில் "It is to your advantage" என்று சொன்னார். நம்மில் பலபேர் இவ்வளவு வெளிப்படையாகச் சொல்ல முடியாது. நம்முடைய முதலமைச்சர் எவ்வளவு வெளிப்படையாகச் சொன்னார்கள் - பிளையினாகச் சொன்னார்கள். நான் சொன்னேன், “இங்கு நாம் கட்சி வளர்ச்சிக்காகக் கூடவில்லை. கட்சிக்கு அப்பாற்பட்ட. . . .

உயர்திரு. கே. காமராஜ்: கட்சி நோக்கத்தோடு பேசினால் உங்களுக்கு அட்வாண்டேஜ் என்று சொன்னேன்.

திரு. சி. என். அண்ணாதுரை: கட்சிக்கு அப்பால் என்று சொன்னேன். ''திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டமல்ல இது. முதலமைச்சர் விரும்புவதானால், என்னுடைய கட்சிக்குச் சாதகமாக இதை ஆக்கிக்கொள்ளத் தயார்'' என்று சொன்னேன். இவ்வளவும் நான் சொல்வதற்குக் காரணம் ஹிந்தியை தேசீய மொழியாக, அல்லது ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமா வேண்டாமா என்று அங்குக் கலந்து பேசப்படவில்லை. அப்படிக் கலந்து பேசப்படவில்லை என்பது மாத்திரமல்ல, அதற்காக அமைக்கப்பட்ட கூட்டமும் அல்ல அது. அதற்காக அழைக்கப்பட்ட கூட்டம் அல்ல என்பது மாத்திரமல்ல. அதற்கான ஒரு சூழ்நிலை அப்போது இல்லை. அப்போது கேர் கமிட்டியின் அறிக்கை வெளி வந்திருந்தது. அப்படி வெளி வந்த அறிக்கையினால் நமக்கு வரவிருக்கின்ற விபத்தினிலிருந்து நம் நாட்டு மக்களைக் காப்பாற்ற பொறுப்புள்ள ஆட்சியில் உள்ளவர்கள் எண்ணி, அனைவரும் கூடிக் கலந்து பேசலாம் என்று அழைத்திருந்தார்கள். ஹிந்தி ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமா, வேண்டாமா என்று என்னைக் கேட்டால், என்னை அல்ல - நான் சார்ந்திருக்கிற கட்சியிலுள்ள யாரை கேட்டாலும் - நாங்கள் விழித்துக் கொண்டிருக்கும்போது மட்டுமல்ல, தூங்கிக் கொண்டிருக்கும்போது தட்டி எழுப்பிக் கேட்டாலும் - வேண்டாம், வேண்டாம் என்றுதான் சொல்வோம். வேண்டாம், வேண்டாம் என்பதை நாங்கள் வெளியில் மட்டுமல்ல, சிறைச்சாலைக்குள்ளேயிருந்தும் சொல்லியிருக்கிறோம். சிறைச்சாலைக்குள்ளேயிருந்து மட்டுமல்ல, இரண்டு வாலிபத் தோழர்கள் - பிணமானவர்கள் - பிணமாகிய நேரத்திலே கூட ஹிந்தி வேண்டாம், வேண்டாம் என்றுதான் சொன்னார்கள். 1937-ம் ஆண்டை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படிப்பட்ட கருத்துக்களைக் கொண்ட நாங்கள், ஒரு கமிட்டியில் உட்கார்ந்து, எங்களுடைய அடிப்படை கருத்துக்களை விட்டு விடுவோம் என்று நீங்கள் எப்படி எதிர்பார்க்கலாம். இப்படி விட்டு விட்டதாகப் பொருள்படும்படி வேறு யாராவது பேசினால் மறுப்பு அளித்திருப்பேன். நம் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் நான் கையெழுத்து போட்டுவிட்டதாகச் சொன்னதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம்: நான் எந்தக் கூட்டத்திலும் கையெழுத்துப் போட்டதாகச் சொல்லவில்லை. கையெழுத்திற்கு நான் மதிப்பு கொடுப்பவன் அல்ல. கையெழுத்தை விட வார்த்தைக்குத்தான் மதிப்புக் கொடுப்பவன் நான் என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொள்கிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை: நிதி அமைச்சர் சொன்னதாக பத்திரிகையிலே வந்தது. பத்திரிகையிலே வந்தது மட்டுமல்ல, நேற்றைய தினம் பேசிய கனம் அங்கத்தினர் அனந்தநாயகி அவர்கள், கையெழுத்துப் போட்டுவிட்டு இப்போது இல்லையென்று சொல்கிறாரே என்று ஆழ்ந்த வருத்தத்தோடு கேட்டார்.

திருமதி. டி. என். அனந்தநாயகி: திருத்திக் கொண்டேன் என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை: இப்போது நான் ஹிந்தியை ஏற்றுக் கொண்டேனா, இல்லையா என்பது பிரச்னை அல்ல. அண்ணாதுரை தமிழருக்குத் துரோகம் செய்துவிட்டார் என்று பத்திரிகையெல்லாம் எழுதியது. அப்போதே, நிதி அமைச்சர் "கையெழுத்துப் போட்டார் அண்ணாதுரை" என்று சொல்லியதாகச் சில பத்திரிகைகளில் வந்தது. சண்டைகளைப் பத்திரிகைகள்தான் மூட்டி விடுகின்றன என்பது தெரிகின்றது. என்றாலும் நிதி அமைச்சர் அவர்கள் முதலிலேயே மறுத்திருக்கலாம், அண்ணாதுரை கையெழுத்துப் போடவில்லை யென்று, கையெழுத்துப் போடவில்லை என்பதைத் தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரிக் கூட்டத்தில்தான் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு முன்னால் மதுரை சென்றார்கள். வேறு பல இடங்களிலும் பேசினார்கள்.

உயர்திரு சி. சுப்பிரமணியம்: மதுரைக்குப் பின்னால் சென்றேன்.

திரு. சி. என். அண்ணாதுரை: எங்களுடைய கையெழுத்தைப் போடும்படி கோரப்படவில்லை. அப்படிக் கையெழுத்தைப் போடும் படி கோரப்பட்டிருந்தால் அதிலே என்னுடைய கழகத்தின் கொள்கை கையையும், என்னுடைய சொந்தக் கருத்தையும் சேர்த்து "மினிட் ஆப் டிஸெண்ட்" எழுதி அதோடு இணைத்திருப்பேன் என்று நான் பொதுமக்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. முதல் கூட்டத்தில் பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்கள் அவர்களுடைய

கருத்துக்களைச் சொல்லி, இதில் அபிப்பிராயப் பேதங்கள் இருக்கின்றன, ஆகையால் மினிட் ஆப் டிஸெண்ட் கொடுக்கவேண்டு மென்று சொன்னார்கள். ஆனால் அப்படிப்பட்ட அவசியம் ஏற்படாததால் யாரும் கொடுக்கவில்லை. இரண்டாவது நாள் கூட்டத்திற்கு போகும் முன்பு எதிர்க் கட்சித் தலைவர் வி. கே. ராமசுவாமி முதலியாரை அவரது அறையிலே சந்தித்தேன். அப்போது, அவர் சொன்னார்கள், ''இந்த அறிக்கை வழ-வழ என்றிருக்கிறதே, இதை எப்படி நாம் ஏற்றுக்கொள்ள முடியும், அதில் நம் கருத்துக் களைச் சேர்க்கலாமே'' என்று சொன்னார்கள். கூட்டம் முடிகின்ற நேரத்தில் கனம் அமைச்சர்களைக் கேட்டார்கள், நாங்களெல்லாம் கூட எங்கள் கருத்துக்களை வைக்கலாமா? என்று. ஆனால் நிதி அமைச்சர் அவர்கள் அவரவர்கள் கருத்தை எழுதுவதானால் ஒருமைப் பாடும், வலிவும் இருக்காது என்றார். சர்க்காருடைய கரத்தை வலுவாக்க விரும்பினோம். அந்தக் கூட்டத்தின் நிலைமை அப்படி இருந்தது. It was dangerous sometimes to strengthen the hands of the Government but not this time. All the parties want to strengthen the hands of the Government என்று நான் சொன்னேன். அதே நேரத்தில் கட்சியின் கொள்கைகளை, கோட்பாடுகளை, உயிரினும் மேலாகக் கருதுகின்ற நான், அடிப்படைத் தத்துவங்களை விட்டு விடக் கூடாது என்பதை உணர்ந்து பார்த்து அன்றைய கூட்டத்தில் சொன்னேன். 'After so much of adjustment on the part of the Madras Government, there is aggression on the part of the Central Government. If we analyse the problem, you will come to the only conclusion that you have been paying homage to the false God till this time" என்ற வாசகங்களைச் சொன்னேன். இவைகளெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கருத்துக்கள். ஆக, இவைகளை நான் வலியுறுத்த, நிதி அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல் ஹிந்தி என்றிருப்பதை சிகப்புக் பென்சிலால் அடித்து மறுத்தீர்களா? என்று கேட்டால், மறுக்கவில்லை. ஏன் மறுக்கவில்லை என்றால், ஹிந்தி இன்றையதினம் புகுத்தப்படவில்லை. இன்றையதினம் அரசியல் சட்டப்படி இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சி மொழி - அபிஷியல் லாங்குவேஜ் - ஹிந்தி. இப்போது இருக்கும் பிரச்னை 1965-க்குப் பிறகு ஆங்கிலத்தை அறவே நீக்கி விடுவதாக இல்லையா, அப்படி நீக்குவதற்கு என்ன வழி முறைகள் செய்யவேண்டும் என்பதுதான். இது குறித்துத்தான் பேசப்பட்டது. கேர் கமிட்டிக்கும் இதுதான் கோரிக்கையே தவிர ஹிந்தி ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமா?

வேண்டாமா? என்று தீர்மானிக்க வேண்டிய பெரும் பொறுப்பு அரசியல் சட்டத்தைத் தீட்டிய நேரத்தில் இருந்தது. அந்த நேரத்திலே அரசியல் அந்தகாரத்தில் நின்றவன் நான். அரசியல் ஒளி நிரம்பிய இடத்தின் வெளிச்சத்தில் நின்றிருந்த நிதி அமைச்சர் அவர்கள் அப்போது செய்திருக்கலாம். அதே கூட்டத்தில் நான் கேட்டேன். “14 மொழிகளை தேசீய மொழிகளாக அரசியல் சட்டத்தில் ஒப்புக் கொண்டிருக்கிறீர்களே? இப்படி 14 மொழிகளை தேசீய மொழிகளாக ஒப்புக்கொண்ட நீங்கள், ஆங்கிலம், ஹிந்தி இரண்டையுமே ஏன் ஆட்சி மொழிகளாக ஒப்புக்கொண்டிருந்திருக்கக்கூடாது” என்று. அவர்கள் பேசிய நேரத்தில் சொன்னார்கள் அந்த நேரத்திலே ஹிந்தி பற்றிய கருத்தும் சூழ்நிலையும் அப்படி இருந்தது என்று. அவரது உள்ளுணர்ச்சியை மெத்த மதித்தேன். அதைப் போலவே, அன்றைய கூட்டத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களை எடுத்து ஆராய்ந்து பார்த்தாலும், நான், திராவிட முன்னேற்றக் கழகம் ஹிந்தி கூடாது என்று எடுத்துச் சொல்வதையும், திராவிட முன்னேற்றக் கழகம் தனி நாடு கோருகிறது என்பதையும் அடிப்படையாக வைத்துத் தான் என்னுடைய கருத்துக்களை தெரிவித்திருப்பது தெரியும். சர்தார் வேதரத்னம் பிள்ளை, ஹிந்தியை அந்தக் காலத்தில் கட்டாயமாகப் படித்திருந்தால் இந்தத் தொல்லைகள் வந்திருக்காதே என்று அவர்கள் உருக்கத்தோடு சொல்லி கொண்டிருந்த நேரத்தில், அந்தக் கமிட்டிக் கூட்டத்தில் முறைப்படி தலைமை வகித்த முதலமைச்சர் குறுக்கிட்டு, “பழைய விஷயங்களைக் கிளராதீர்கள்” என்று சர்தார் வேதரத்தினம் பிள்ளையைக் கேட்டுக் கொண்டார். நானும் சொன்னேன், சர்தார் வேதரத்தினம் பிள்ளை “ஹிந்தியை கட்டாயமாக்கினால்தான் ஒற்றுமை ஏற்படும்” என்று சொல்கிறார், நானும் என்னைச் சார்ந் திருப்பவர்களும் “நம் நாடு இந்தியாவிலிருந்து பிரிந்து விட்டால் நல்லது என்று கருதுகிறோம். இந்த இரண்டுமே இப்போது நடைமுறைக்குக் கொண்டு வரப்படுவது அல்ல. ஆகவே, அவற்றைப் பற்றிப் பேசத் தேவையில்லை” என்று நானும் எடுத்துச் சொன்னேன். அப்போது பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் சின்னதுரை அவர்கள் மெத்த ஆக்ரோஷத்தோடு “ஹிந்தி தானே தேசீய மொழி. இப்போது பேசுவதைப் பார்த்தால் ஆங்கிலம் அல்லவோ என்றென்றைக்கும் இருக்குமென்று தோன்றுகிறது” என்று சொன்னார். அப்படிச் சொன்ன நேரத்தில் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் உட்கார்ந்த இடத்திலிருந்து “ஹிந்தி உமக்கு தேசீய மொழி எனக்கு அது தேசீய

மொழி அல்ல என்று சொல்கிறேன் உட்காருங்கள்'' என்று சொன்னார். இப்படி எனக்கு இனிப்பு பானங்கள் இனிப்பு பண்டங்கள் இவ்வளவும் தந்து அதற்குப் பிறகு அண்ணாதுரை ஹிந்தியை ஒத்துக்கொண்டார் என்று சொல்லி விட்டார்கள். ஆசாரியாரும் நானும் பேசிய கூட்டத்திலே.............

உயர்திரு. சி. சுப்பிரமணியம்: இனிப்புப் பண்டங்களை கண்டு நீங்கள் மயங்கி விட்டதாக உங்கள் கட்சியினர் நினைத்திருக்கலாம்.

திரு. சி. என். அண்ணாதுரை: என்னுடைய கட்சியினர் யாரும் அப்படி நினைக்கவில்லை. அப்படி எங்கள் கட்சிக்கு மாசு கற்பிக்க வேண்டுமென்று நினைப்பவர்களுக்குத் தாங்கள் உடந்தையாக இருக்கலாகாது என்பதற்காகத்தான் நான் இவ்வளவும் சொன்னேன். ஆச்சாரியார் அந்தக் கூட்டத்தில் ''எனக்கு இருக்கும் அனுபவம் அண்ணாதுரைக்கு இருந்திருந்தால் அந்தக் கமிட்டிக் கூட்டத்திற்கே போயிருக்க மாட்டார்'' என்று சொன்னார்கள். அவர் சொன்ன வாசகத்தைப் பல்வேறு கோணங்களிலும் நான் கவனித்தேன். பல்வேறு கோணங்களிலிருந்து கவனித்து, அவர் பேசிய பிறகு நான் பேசவில்லை. நான் பேசிய பிறகு அவர் பேசினார். நான் சொன்னேன் ''அந்தக் கமிட்டிக்குப் போனது தவறு என்று சொல்வீர்களேயானால், ஒரு சமயம் அனுபவக் குறைவினால்தான் அப்படிச் செய்தேன். இப்படிப்பட்ட கமிட்டிகளைப் பொறுத்த வரையில் எனக்கு அனுபவக் குறைவுதான்''. இப்படிப்பட்ட அமைச்சர்களிடத்தில் எனக்கு அனுபவக் குறைவு என்றும் சொல்லியிருக்கிறேன். (சிரிப்பு). கனம் நிதி அமைச்சர் அவர்கள் அண்ணாதுரை தனக்கு அனுபவம் இல்லை என்று ஒப்புக்கொண்டதாகச் சொல்லிவிட்டார்கள். அனுபவம் இல்லை என்று எடுத்துச் சொல்வதுதான் அனுபவத்தைப் பெறுவதற்கான வழி என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன். எல்லா அனுபவமும் எனக்கு வந்து விட்டது என்று சொல்லிக்கொள்ள நான் தயாராயில்லை. எனக்குச் சில விஷயங்களில் அனுபவம் இல்லை என்பதை நான் எடுத்துச் சொல்லுகிறேன். அனுபவம் இல்லாத காரணத்தினாலே கையெழுத்துப் போட்டு விட்டு வந்து, உடனே நழுவிக் கொள்கிறேன் என்று சில பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. அது தவறு என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இவ்வளவு விவாதமும் நடந்ததற்குக் காரணம் நான் அந்தக் கமிட்டியிலே உட்கார்ந்தேன் என்பதால் மட்டுமல்ல. கமிட்டியிலே இடம் பெற்று இருந்த நான் ஆச்சாரியாருடன் இந்தியை எதிர்க்கும் கூட்டத்தில் கலந்துக் கொண்டவுடனே, இங்கே வந்து கமிட்டிக் கூட்டத்திலே கலந்து கொண்டு விட்டுப் பிறகு ஆச்சாரியாரிடத்தில் போய் இந்தியை எதிர்க்கிறேன் என்று சொன்னதாக அமைச்சர்களும், மற்றும் அமைச்சர் கட்சியைச் சேர்ந்த பலரும் மன எரிச்சலுடன் சில இடங்களில் பேசியிருக்கிறார்கள். ஆச்சாரியார் அவர்களுடன் நான் இலட்சுமிபுரம் கூட்டத்தில் பேசியது மட்டுமல்ல. 1956-57-லே ஆச்சாரியார் அவர்கள் இந்த நாட்டிலேயுள்ள பலதரப்பட்ட கட்சித் தலைவர்களையும், உங்கள் கட்சியைச் சேர்ந்த ராஜா சர் முத்தைய்யச் செட்டியார் அவர்களையும், பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் போன்றோர்களையும், மற்றும் பலரையும் அழைத்து ஒரு விவாதத்தை நடத்தி, ஆங்கிலம்தான் நீடித்து ஆட்சிமொழியாக இருக்க வேண்டு மென்று கையொப்பம் வாங்கினார்கள். தமிழரசுக் கழகத் தலைவர் ஸ்ரீ ம. பொ. சிவஞானம் அவர்களும் அதிலே கையெழுத்திட்டார்கள். ஆகவே, இலட்சுமிபுரம் கூட்டத்திலே ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று சொன்னது ஒரு விசித்திரமான சம்பவம் இல்லை. 1956-லேயே இந்தச் சம்பவம் நடைபெற்றது. கௌஹத்தித் தீர்மானம் எப்படிப்பட்டது என்பதை விளக்குவதற்காக இலட்சுமிபுரத்தில் கூட்டம் போட்டார்கள். ஆச்சாரியார் அவர்களை அந்தத் தீர்மானத்தைப்பற்றி விளக்கிக் கூறவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். அந்தக் கூட்டத்தில் நான் பேசியதை அமைச்சர் அவர்களும் தெரிந்து கொண்டிருக்க முடியும் என்று கருதுகிறேன். ஏனென்றால், என்னுடைய பேச்சுக்கள் எல்லாம் ஸி.ஐ.டி. குறிப்பாளர்களால் குறிப்பு எடுக்கப்படுகின்றன. அந்தக் கூட்டத்தில் நான் பேசிய பேச்சு அவ்வாறு எடுக்கப்பட்டதோ, என்னவோ தெரிய வில்லை. நேற்றையதினம் பேசும்பொழுது கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள், தலைவர்கள் என்ன பேசினார்கள் என்பது எனக்கு அதிகாரப் பூர்வமாகத் தெரியும் என்று சொன்னதினால் பொதுவாக என்னுடைய பேச்சுக்கள் குறிப்பு எடுக்கப்பட்டு வருகின்றன என்று நினைக்கிறேன்.

உயர்திரு. எம். பக்தவத்ஸலம்: கனம் தலைவர் அவர்களுடைய பேச்சைப்பற்றி நான் அவ்வாறு சொல்லவில்லை.

திரு. சி. என். அண்ணாதுரை: என்னுடைய மனத்துக்கு மெத்த

ஆறுதல். ஏனென்றால், இழிமொழியினால் மந்திரிகளைத் தாக்கு வதாக போலீஸ் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது என்னுடைய பேச்சல்ல என்று சொன்னதிலே மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். வேறு யாராவது கழகத்தைச் சேர்ந்தவர்கள் அவ்வாறு பேசியிருக்கிறார்கள் என்று போலீஸ் அமைச்சர் அவர்கள் சொன்னால், உண்மையிலேயே அவர்களைத் திருத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்வேன் என்று உறுதி அளிக்கிறேன். ஆனால், அதேமாதிரி காங்கிரஸ் அங்கத்தினர்கள் நடந்துகொள்ளவேண்டுமென்று நான் கேட்கமாட்டேன். அவர்கள் பேசப் பேசத்தான் நாங்கள் வளருகிறோம். (சிரிப்பு). ஆகையால் அவர்கள் தாராளமாகப் பேசட்டும்.

திரு. எ. மாரியப்பன்: On a point of order, Sir. கனம் அண்ணாதுரை அவர்கள் சேலம் கூட்டத்தில் போலீஸ் அமைச்சர் அவர்களைப்பற்றி கேவலமாகப் பேசியிருக்கிறார்கள். 3,000 வோட்டுகள் அதிகம் பெற்று. . .

சபாநாயகர்: இது "பாயிண்ட் ஆப் ஆர்டர்" அல்ல.

திரு. சி. என். அண்ணாதுரை: நான் பேசவில்லை என்று போலீஸ் அமைச்சர் அவர்களே சொன்னார்கள். இலட்சுமிபுரம் கூட்டத்திலே ஆச்சாரியாருடன் கலந்து பேசியதாலே, நான் சென்னை சர்க்காருக்கு, அந்தக் கமிட்டியிலே உட்கார்ந்ததன் காரணமாக, துரோகம் செய்து விட்டேன் என்று அவர்கள் கருதுவதாக வெளியிலே பேசப்படுகிறது. சென்னை சர்க்கார் கூட்டிய அந்தக் கூட்டத்தில் நான் மட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீ இராமஸ்வாமி முதலியார் அவர்களும் இருந்தார்கள். ஆச்சாரியார் நடத்திய இலட்சுமிபுரம் கூட்டத்திலே நான் கலந்து கொண்டதைப் போலவே 22-15-57-ல் கோகலே மண்டபத்தில் மொழிப் பிரச்சனைப் பற்றி ஆச்சாரியார் அவர்கள் நடத்திய கூட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவர் ஸ்ரீ இராமஸ்வாமி முதலியாரும் கலந்து கொண்டிருக்கிறார்கள். கோகலே மண்டபக் கூட்டத்தில்தான் அங்கே நிறைவேற்றிய தீர்மானத்திற்குப் பிறகு சுலோகம் தரவேண்டுமென்பதற்காக ஸ்ரீ கோதண்டராவ் அவர்கள் "English ever; Hindi never" என்ற கோஷத்தை எடுத்துச் சொன்னார்கள். ஸ்ரீ இராமஸ்வாமி முதலியாரும் அன்றையக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அதைப் போலவேதான் நானும் இலட்சுமிபுரம் கூட்டத்திலே கலந்து கொண்டேன். ஆனால் அவருக்கு இருக்கின்ற

அதிருஷ்டத்தைப் பாருங்கள். எனக்கு இருக்கின்ற துரதிருஷ்டத்தைப் பாருங்கள். (சிரிப்பு) அவர் கூட்டத்தில் கலந்து கொண்டால் அமைச்சர்களுக்கோ, நாட்டுக்கோ, மற்றவர் களுக்கோ ஐயப்பாடு ஏற்படவில்லை. ஆனால் நான் கலந்து கொண்டால். . .

உயர்திரு. கே. காமராஜ் : நீங்கள் எங்கே போய்ப் பேசினாலும் எங்களுக்கு ஐயப்பாடு இல்லை.

திரு. சி. என். அண்ணாதுரை : நேற்றைய தினம் நமது முதல் அமைச்சர் அவர்கள் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் பேசியதை யெல்லாம் கேட்டிருப்பார்களேயானால் இப்படிச் சொல்லமாட்டார்.

உயர்திரு. கே. காமராஜ் : மந்திரிகளுக்கு பயம் இல்லை என்று சொன்னேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : மந்திரிகளுக்கு இருக்கும் தன்னம்பிக்கையை நான் பாராட்டுகின்றேன். ஆகையினால் நான் ஆச்சாரியாருடன் கலந்து பேசியதால் ஒரு அரசியல் விபத்து வந்து விட்டது என்று பலர் பேசியதை நான் விரும்பவில்லை. உண்மை யிலேயே அப்படிப்பட்ட கருத்து வேண்டாம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். இன்னும் சிலர் காமராசரை கவிழ்க்க வேண்டும் என்று நான் ஆச்சாரியாருடன் ஒத்துழைக்கிறேன் என்றும் சொல்லுகிறார்கள்.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: On a point of order நமது அரசாங்கத்தின் முதல் அமைச்சர் அவர்களுக்கு பேச வேண்டும் என்றால் அதற்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது. அடிக்கடி அவர் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் அவர் யாரிடத்தில் பேசிக் கொண்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியவில்லை.

உயர்திரு. சி. சுப்பிரமணியம்: Don't make it npleasant.

சபாநாயகர்: கனம் அண்ணாதுரை தொடர்ந்து பேசலாம்.

திரு. சி. என். அண்ணாதுரை: ஆகையினால் பெரிய அரசியல் விபத்து ஏற்பட்டுவிட்டது என்று கருதினார்களேயானால் கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னபடி அதைர்யப்படாமல் இருப்பதுதான் நல்லது என்று அவர் சொன்ன கருத்தை நான் ஆதரிக்கிறேன். கமிட்டியில் நான் எடுத்த முடிவை மாற்றிக் கொண்டுவிட்டேன் என்று

எடுத்துச் சொல்வதும் கமிட்டியில் நான் ஹிந்தி மொழியை ஆதரித்து விட்டேன் என்று எடுத்துச் சொல்வதும் ரொம்பவும் பொருத்தமற்றது என்பதை மறுபடியும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். கருத்துக்களை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டால் நான் அதை மாற்றிக்கொள்ள தயங்க மாட்டேன் என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட தைர்யத்தையும் நான் கனம் நிதி அமைச்சர் அவர்களிடத்திலிருந்து பெறுகிறேன். ஆச்சாரியார் காலத்தில் புகுத்தவேண்டுமென்று கொண்டுவரப்பட்ட கல்வித் திட்டம் பிறகு தேவையில்லை என்று கூறித் தமது கருத்தை மாற்றிக்கொண்டவர். தட்சண பிரதேசம் அமைய வேண்டும் என்று முதலில் சொன்ன கருத்தை பிறகு மாற்றிக் கொண்டவர் அவர். அவருடைய துணிவைப் பார்த்து நான் அனுபவம் பெறுகிறேன் என்று கனம் நிதி அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஹிந்தி சம்பந்தப்பட்ட மட்டில் அந்த நிலைமை ஏற்படவில்லை. ஹிந்தி ஆட்சி மொழியாக இருப்பதா இல்லையா என்ற பிரச்னையை நான் கவனிக்கவில்லை. எனக்கு இந்த பிரச்னை 1965-க்குப் பிறகு ஆங்கிலத்தை வைத்துக்கொண்டிருக்க வேண்டுமா அதற்குப் பிறகு இந்தி இருக்குமா என்ற கவலை இல்லாததால் கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தில் சொன்னபடி "அவர்கள் வெளியே பிரிந்து போகவேண்டியவர்கள் தானே. அவர்களுக்கு அகில இந்திய பாஷையைப்பற்றி கவலை இல்லை." என்று சொன்னதாகப் பார்த்தேன். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆகையால் என்னுடைய நிலைமை என்ன என்பதை அதில் நான் எடுத்துச் சொல்லவில்லை.

அடுத்தப்படியாக கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள் சில அறிவுரைகளை தந்திருக்கின்ற காரணத்தினால் நாங்கள் தவறான பாதையில் செல்லவில்லை என்பதை விளக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்கு பதில் சொல்லுவதும் என்னுடைய கடமை. சென்ற மாதம் 3ஆம் தேதி நடைபெற வேண்டிய எங்கள் கூட்டத்திற்கு மட்டும் தடை உத்தரவு போடவில்லை என்று சொன்னார்கள். உண்மையிலேயே எங்கள் கூட்டத்திற்கு மட்டும் தடை உத்தரவு போடவில்லை என்று திராவிடக் கழக கிளர்ச்சிக்கும், சோஷலிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகளுக்கும்தான் தடை உத்தரவு போடப் பட்டிருந்தது, அதனால்தான் எங்களுடைய கூட்டத்திற்கும் செக்ஷன்

41-ன்படி தடை உத்தரவை போடவேண்டிய நிலைமை ஏற்பட்டது என்றும் சொன்னார்கள். ஆனால் அந்தத் தடை உத்தரவை எங்களிடத்திலும் வீச வேண்டிய அவசியம் இல்லை. அப்படி தடை உத்தரவு வீசியது மூன்றாம் தேதிக்கு மட்டும் அல்ல, 4, 5 தேதிகளில் நடைபெற வேண்டிய கூட்டங்களுக்கும் தடை உத்தரவு போடப் பட்டது என்றும் சொன்னார்கள். இந்த மூன்று நாட்களுக்கு தடை உத்தரவு போட வேண்டிய அவசியம் இல்லை. நாகர்கோவில் மாநாட்டிற்கு முன்னதாகவே, 4, 5 தேதிகளில் கூட்டம் போட வேண்டுமென்பதற்கு அனுமதி கேட்கப்பட்டது. அந்த வட்டாரத் திலுள்ள எங்கள் கழகத் தோழர்கள் கேட்டுக் கொண்டதனால் அன்று கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 4, 5 தேதிகளுக்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அப்படி தீர்மானிக்கப்பட்டது என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மூன்றாந் தேதி கூட்டம் நடைபெற அனுமதித்திருந்தால் கிளர்ச்சிகளும், காலித் தனங்களும் அதிகமாகியிருக்கும் என்று போலீஸ் அமைச்சர் அவர்கள் அழுத்தந்திருத்தமாகக் கூறினார்கள். நான் அதைவிட அழுத்தந் திருத்தமாக இப்போதும் சொல்கிறேன். மூன்றாந் தேதி கூட்டம் நடை பெறுவதற்கு அனுமதித்திருந்தால் காலித்தனங்களும், கிளர்ச்சிகளும் கண்டிப்பாக நடந்திருக்காது. நடைபெறவும் அனுமதித்திருக்க மாட்டோம். மீறி காலித்தனம் செய்தால் என்ன செய்ய முடியும் என்று யாராவது கேட்பார்களேயானால் நான் பொதுமக்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருப்பேன். மீனம்பாக்கம் விமான நிலையத்தில் காலிகள் கல்களை எடுத்திருந்தால் அவர்கள் காலில் வீழ்ந்திருப்பேன். போலீஸ் தடியடி பிரயோகத்தினால் சாதிக்க முடியாததை சாதிக்கப் பார்த்திருப்பேன். அப்போதும் என்னால் முடியாமல் போய் விட்டால் இப்பொழுது என்ன காரியத்தை அமைச்சர் அவை செய்ததோ அதைச் செய்வதற்கு ஆலோசனை செய்ய அவகாசம் கிடைத்திருக்கும்.

கருப்புக்கொடியை ஏன் காட்டுவதற்குத் தீர்மானித்திருந்தோம் என்பதை விளக்க எங்களால் மூன்றாந்தேதி கூட்டம் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கூட்டம் நடந்திருக்கட்டும். அதற்கு மறுநாளே நான்காந் தேதியே "கருப்புக் கொடி காட்டுவது தவறு, தேசத் துரோகமான காரியமாகும். ஆகவே பிரதமருக்கு கருப்புக்கொடி காட்டாதீர்கள்" என்று மக்களை ஏன் இந்த அமைச்சரவை கேட்டுக்கொண்டிருக்ககூடாது? அவர்களைக் கூட்டிவைத்துக்

கொண்டு இவர்கள் பேசுவதற்கென்ன? இன்றைக்கு எங்களுக்குப் புத்திமதி சொல்ல பல காங்கிரஸ் அங்கத்தினர்களும் சில அமைச்சர்களும் முன் வந்திருக்கிறார்களே இவர்கள் அன்றைக்கு மக்களிடத்தில் தேசீய பக்தி, தேசீய ஒற்றுமை வளர்வதற்கு கருப்புக் கொடி காட்டுவது குந்தகம் விளைவிக்கும் என்று ஏன் எடுத்துச் சொல்லி கருப்புக்கொடி காட்டாமல் செய்திருக்கக்கூடாது? தவிர ஒரு ஜனநாயக சர்க்கார் மக்களைத் தங்கள் பக்கத்தில் திருப்ப முடியும் என்ற நம்பிக்கையோடு, பெருவாரியான வோட்டுக்களைப் பெற்று ஆட்சிக்கு வந்திருக்கிறோம் என்று நினைக்கிறவர்கள் இன்றைக்கு மக்களுக்கு புத்தி சொல்லாமல் ஏன் இருந்தார்கள்? இது ஜனநாயக சர்க்கார் இல்லை, போலீஸ் ஸ்டேட் என்பதை நிருபித்தார்கள். இங்கு மாத்திரமா அப்படி? முதுகுளத்தூரில் என்ன நடந்தது? தொழிலாளர்களை போலீஸ் எப்படி அடித்து நொறுக்கிற்று.

உயர்திரு. ஆர். வெங்கடராமன்: தொழிலாளர்களை அடிக்கவே யில்லை.

திரு. சி. என். அண்ணாதுரை: தொழிலமைச்சர் அவர்கள் சொன்னது உண்மை. தொழிலாளர்களை அடிக்கவில்லை, சுட்டுக் கொன்றீர்கள், வால்பாறையில் ஐந்துபேரை. இத்தனையும் நடை பெற்றதற்குக் காரணம் ஆட்சியாளர்கள் கூறுகிற ஒரே ஒரு சமாதானம் சட்டம் பாதுகாக்கப்பட வேண்டும், அமைதி பாதுகாக்கப்பட வேண்டும். இவர்கள் எல்லாம் பலாத்காரத்தில் ஈடுபடுபவர்கள் என்பதுதான். சட்டத்தைப் பாதுகாப்பதற்கு இந்த நடவடிக்கையில் ஈடுபடுவதைவிட மக்களுடைய பண்பைப் பாதுகாப்பதற்கு மக்களுடைய உள்ளத்தைக் கட்டியாள்வதற்கு எங்களால் முடியும் என்று காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் குறிப்பாகவும், பொறுப்பாகவும் உள்ள அமைச்சர் அவர்கள் நான்காம் தேதியே முயற்சி செய்திருக்க வேண்டும். ஐந்தாம் தேதியே முயற்சி செய்திருக்க வேண்டும்.

என்னை அடையாரில் அடைத்து வைத்திருந்தார்கள் என்று ஒருவர் சொன்னதுபோது "என்னையும் நுங்கம்பாக்கத்தில் அடைத்து தான் வைத்திருந்தார்கள்" என்று போலீஸ் அமைச்சர் அவர்கள் சொன்னதைக் கேட்டு வருத்தப்படுகிறேன். இன்றைக்கு அமைச்சராக இருக்கக்கூடியவருக்கு முன்பு நடந்தது போன்றேதான் எனக்கும் இன்று நடந்திருக்கிறது என என் மனதில் தோன்றியது. அந்தக் காலத்தில் - அந்நியர் இருந்த காலத்தில் - ஸ்ரீ பக்தவத்சலம்

அவர்களுக்கு அப்படிப்பட்ட நிலை உண்டாயிற்று. ஸ்ரீ பக்தவத்சலம் இன்று மந்திரியாக இருக்கிறபோது எனக்கு அந்நிலை கிடைத்தது. அதைத்தவிர முறை ஒன்றும் மாறவில்லை என்பதை அறிந்து வருத்தப்படுகிறேன். ஆங்கிலேயர்களின் கொடுமையான ஆட்சிக்கு உட்பட்டு பலவிதமான அனுபவங்களைப் பெற்றிருக்கிற ஒரு அமைச்சர் ஆங்கிலேயர் செய்த கொடுமைகளைப் போல இனி இந்நாட்டில் எவ்வித கொடுமையும் நடக்கக் கூடாது என்று எண்ணியிருக்கவேண்டும். "திரு. ஆச்சாரியார் ஆண்ட காலத்திலும் நாங்கள் கைதுசெய்யப்பட்டோம். அப்போது திரு. பார்த்தசாரதி ஐயங்கார் போலீஸ் கமிஷனராக இருந்தார். அப்போது எங்களைக் கைதுசெய்து போலீஸ் கமிஷனர் ஆபீசில் வைத்திருந்தார்கள். ஆனால் இப்போது போலீஸ் கமிஷனராக இருப்பவர் எங்களை இந்த நிலைக்கு ஆளாக்கினார்," என்று சொன்னேனே தவிர, இப்போது இவ்வாறு நடத்தப்பட்டதால் எங்களுக்கு இழிவு வந்துவிட்டதென்றோ நாங்கள் கொடுமைப்படுத்தப்பட்டோம் என்றோ சொல்லவில்லை. காங்கிரஸ் ஆட்சியில் பல கொடுமைகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும் என்பதை அறிந்துதான் நாங்கள் பணியாற்றிவருகிறோம். எங்களைக் கொடுமைப் படுத்தவில்லை என்று கனம் போலீஸ் அமைச்சர் சொன்னார். சில கனம் அங்கத்தினர்கள் "உனக்கு மட்டும் என்ன தனிச் சலுகை?" என்று கேட்டார்கள். எனக்கு மட்டும் தனிச் சலுகை கேட்கிறேன் என்று அர்த்தமில்லை. அவர்களிடம் நான் சொல்ல விரும்புகிறேன்: "நாங்கள் உங்களோடு உட்காருகிறவர்கள்; சட்டமியற்றும் இந்த மாமன்றத்திற்கு வந்து உங்களோடு உட்காரு கிறவர்கள். நாங்கள் தகுதிக் குறைவுள்ளவர்களாகவும், சமூக அந்தஸ்தில் உங்களைவிடத் தாழ்ந்தவர்களாகவும் இருக்கக்கூடும். உங்களைப்போன்று நாங்களும் ஜனநாயக உள்ளம் படைத்தவர்கள். ஜனநாயக உள்ளம்படைத்த எங்களை உங்களைவிடக் குறைவாக நடத்தியது சரியா என்றுதான் கேட்டேன்."

கறுப்புக் கொடி காட்டுவது பலாத்காரத்தில்தான் கொண்டு போய் விடும் என்று கனம் போலீஸ் அமைச்சர் சொன்னார். கறுப்புக் கொடி காட்டுவது பலாத்காரத்தில்தான் கொண்டுபோய்விடும் என்பதற்கு என்ன ஆதாரங்கள் இருக்கின்றன? கறுப்புக்கொடி காட்டுவது எங்கெங்கே பலாத்காரத்தில் கொண்டுபோய் விட்டிருக்கிறது? முன்பு அப்படிப்பட்ட சம்பவம் நேர்ந்திருக்கிறதா? ஆகவே கறுப்புக் கொடி காட்டுவது பலாத்காரத்தில்தான் கொண்டு

போய்விடும் என்று பொதுவாக இலக்கணம் சொல்வதற்கில்லை. கறுப்புக் கொடி காட்டுபவர்களின் எண்ணிக்கை கணக்குக்கும் அதிகமாகத் தெரிகிறது என்ற காரணத்தால் "ஒரு போலீஸ் ராஜ்யம் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமோ, அவ்விதம் நடந்து கொள்ளுங்கள், இவர்களை யெல்லாம் பிடியுங்கள்" என்று போலீஸ் இலாகாவினருக்கு கனம் போலீஸ் அமைச்சர் உத்தரவிட்டு, அதன் விளைவாக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டமே நடக்காமல் இருந்திருந்தால், "போலீஸ் இலாகாவிற்கு மகத்தான வெற்றி" என்று உலகமே வியப்புற்றிருக்கும்.

அது, யூகம். ஆனால் எங்களை எல்லாம் கைது செய்த பிறகு கருப்புக் கொடி காட்டுவது அடியோடு நின்றிருக்குமானால், நாங்கள் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே ஜீவ சக்தி இல்லாமல் போய் விட்டது என்று உலகத்திற்கு நிரூபித்துக் காட்டி விட்டதாக இருப்பீர்கள். நேற்று போலீஸ் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், லட்சக்கணக்கில் இல்லை, எங்கள் கணக்குப்படி ஏதோ மூவாயிரம் பேர்கள்தான் இருந் திருப்பார்கள் என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். கணக்கு இருக்கட்டும். கருப்புக் கொடி காட்டுவது உங்கள் நடவடிக்கையால் தடுக்கப்பட்டு விட்டதா? என்று கேட்கிறேன். சென்னையில்தான் நாங்கள் கருப்புக்கொடி காட்ட இருந்தோம், அதைப் பற்றி பேச இருந்தோம். எங்களை இங்குதான் கைது செய்துமிருந்தார்கள். பின் நாலாயிரம் கழகத் தோழர்கள் 3-ம் தேதி முதல் 6-ம் தேதி வரையில் எதற்காக வெளியூர்களில் கைது செய்யப்படவேண்டும், 700 என்று பத்திரிகைகளில் செய்தி வந்தன. எங்கள் கழகத்திற்கும் அந்த தகவல் வந்திருக்கின்றன. 4,200 பேர்கள் தமிழ் நாடு பூராவிலும், சென்னையில் கருப்புக் கொடி காட்டும் நிகழ்ச்சி வந்த நேரத்தில் பண்டித நேருவிற்கு கருப்புக் கொடி காட்டியது. காஞ்சீபுரத்திலோ காட்பாடியிலோ கள்ளக்குறிச்சியிலோ திருநெல்வேலியிலோ கருப்புக் கொடி நிகழ்ச்சி நடக்கவில்லை. இருந்த போதிலும் அங்குள்ள கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

உயர்திரு. எம். பக்தவத்சலம்: சட்டத்தை மீறியவர்கள்தான் கைது செய்யப்பட்டார்கள்.

திரு. சி. என். அண்ணாதுரை: போலீஸ் அமைச்சர் அவர்கள் சொல்வதில் ஒரு பகுதி உண்மையே. சட்டத்தை மீறியவர்கள் கைது

செய்யப்பட்டார்கள். மீறுவார்கள் என்று சந்தேகப்பட்டவர்களும் கைது செய்யப்பட்டார்கள். பலர் அநியாயமாக கைது செய்யப் பட்டது கண்டும், அநியாயமான முறையில் அடக்குமுறையைக் கையாண்டது கண்டு மனிதரிடையே மனிதனிடம் உள்ள மிருக உணர்ச்சியினால் சில காரியங்கள் நடந்திருக்கலாம். அதைத் தவிர திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பலாத்காரத்தில் நம்பிக்கை யில்லை என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கருப்புக் கொடி காட்டுவது நேருவை அவமதிப்பதாகும் என்ற கருத்தில் பல அங்கத்தினர்கள் இங்கு பேசினார்கள். அது சரியல்ல. அவர் ஒரு மாபெரும் தலைவர். அவரிடத்தில்தான் நமது குறைகளை எல்லாம் சொல்லிக் கொள்ள வேண்டும். அவரிடத்தில் நமது அதிருப்தியைக் காட்டினால்தான் அதைப்பற்றி அவர் கவனிப்பார். ஆகவேதான் அவருக்குக் கருப்புக் கொடி காட்டப்பட்டதே தவிர, எங்கள் இயக்கத்தைப்பற்றி தாறுமாறாக பேசக் கூடிய பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நாங்கள் கருப்புக்கொடி காட்டுகிறோமா? எங்கள் இயக்கத்தை கண்டித்து பேசும் எல்லோருக்கும் நாங்கள் கருப்புக் கொடி காட்ட இயலுமா? அப்படிக் காட்ட வேண்டுமென்றால் எங்கள் கரங்களில்தான் கருப்புக் மையைப் பூசிச் செல்ல வேண்டும். நேரு உயர்ந்த நிலையில் உள்ளவர், அவர் வந்து இங்குள்ள தமிழ் நாட்டுத் தலைவர்களைப்பற்றி தாறுமாறுமாக பேசிவிட்டுச் சென்றதால் நாங்கள் மனம் புண்பட்டுக் கிடக்கிறோம். அதனால் எங்கள் அதிருப்தியைத் தெரிவிக்க, அதிருப்தியை எடுத்துக் காட்டத்தான் கருப்புக் கொடி காட்ட முன் வந்தோமேயல்லாது அவரை அவமதிக்க வேண்டுமென்றல்ல. போலீஸ் அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் கேட்டார்கள். யாரைப் பார்த்து நீங்கள் 'கோ பாக்' என்று சொன்னீர்கள், இந்தியப் பிரதமரைப் பார்த்தா "go back" என்று சொன்னீர்கள் என்று கேட்டார். யாரைப் பார்த்து சம்யுக்த மஹாராஷ்டிரக்காரர்கள் கோ பாக் என்று பம்பாயில் சொன்னார்களோ அதே நேருவைத்தான் நாங்கள் கோ பாக் என்று சொன்னோம். அன்று சம்யுக்த மஹாராஷ்ரடிக்காரர்கள் நேருவைப் பார்த்து கோ பாக் என்று சொன்னார்கள். எதற்காக? தங்கள் மனக்குமுறலைக் காட்டத்தான், தங்கள் அதிருப்தியைக் காட்டத்தான் அப்படிச் செய்தார்கள். அந்நிகழ்ச்சிகளைப் பற்றி எல்லோரு அறிந்திருப்பார்கள். இப்பொழுது இங்கு இவர்கள் சித்தரித்துக் காட்டுவதை விட மிக மோசமான நிலையில் அங்கு சம்பவங்கள்

நடைபெற்றன. அகிலஇந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்கு செல்வதற்கு முன் பல மோட்டார்கள் வழியில் தடுக்கப்பட்டன; அவைகள் கல்லால் அடிக்கப்பட்டன. கதர் உடை அணிந்து சென்றவர்கள் எல்லோரும் தாக்கப்பட்டனர். கதர் குல்லாக்கள் எல்லாம் தீக்கிரையாக்கப்பட்டன. இவைகளை செய்தவர்கள் சம்யுக்த மஹாராஷ்டிரக்காரர்கள்தான். அப்போதெல்லாம் "go back" என்று சொன்னதை அது அர்த்த மற்றது என்று சொல்வதற்கு யாரும் அங்கு இருக்கவில்லை. ஆனால் நாங்கள் மாத்திரம் "go back" என்று சொன்னால் அது ஜனநாயகத்தில் கையாளப்படுகின்ற சொல் அல்ல என்று சொல்லப்படுகிறது. "Go back" என்று முன்னால் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இப்போது எனக்கு நினைவில் இருக்கிறது. பி. டி. ராஜன் அவர்கள் அமைச்சராக இருந்தபோது திருநெல்வேலிக்கு சென்ற சமயத்தில் அங்கு காங்கிரஸ்காரர்கள் கருப்புக் கொடி காட்டி "go back" என்று சொன்னார்கள். அவர் வேடிக்கையாக பதில் சொன்னார்கள், ‘‘என்னுடைய வேலை முடிந்தது; நான் போகிறேன்,’’ என்று சொன்னதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். "Go back" என்று சொன்னால் ஏதோ உடனேயே திருப்பி அனுப்பிவிடுவோம் என்று அர்த்தமல்ல. இதுமட்டுமல்ல சூயஸ் பிரச்னை எழுந்த சமயத்தில் ஈடன் அவர்களை லண்டன் நகரத்திலுள்ள மக்கள் வரிசை வரிசையாக கடை வீதியில் நின்று கொண்டு ப்ளக்கார்டு (Placard) களை வைத்துக்கொண்டு go back Eden என்று சொன்னார்கள். ஈடன் திரும்பி பார்த்துவிட்டு லண்டனை விட்டு நான் எங்கே போவது என்று கேட்கவில்லை. ஆனால் அவர் அங்கிருந்த நிலைமையை புரிந்து கொண்டார். சூயஸ் காரியத்தில் அங்குள்ள மக்களுக்கு அதிருப்தி இருக்கின்றது என்பதை அவர் உணர்ந்து கொண்டார். பண்டித நேரு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இந்தோனேஷியாவுக்கு போயிருக்கின்ற நேரத்தில் அங்கே கம்யூனிஸ்டு கட்சியினர் கறுப்புக் கொடி காட்டினார்கள். இன்றைக்கு பண்டித நேருவுக்குக் கறுப்புக் கொடி காட்டுவது முறையல்ல என்று கம்யூனிஸ்டு கட்சி கூறுகிறது. இப்போது சொல்லுவது கம்யூனிஸ்டு கட்சியின் புதிய சித்தாந்தம். இவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் கருப்புக் கொடி காட்டினார்கள். அது மட்டுமல்ல. பம்பாயில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் சம்யுக்த மகாராஷ்டிரர்களோடு கூட கம்யூனிஸ்டுகள் ஒன்றாக ஈடுபட்டிருந்தார்கள். இவைகளை நான் சொல்லுவது கம்யூனிஸ்டு கட்சியைப் பற்றி குறை சொல்ல வேண்டும் என்பதற்காக

அல்ல. அவர்கள் எங்களோடு சேராமல் இருந்ததே அவர்களுக்கு கறுப்புக்கொடி காட்டுவது பிடிக்கவில்லை என்பதை வாதத்திற்கே இடமில்லாமல் விளக்கப்பட்டிருக்கிறது. கறுப்புக் கொடி காட்டுவது அநாகரீகமான முறை என்றும் வெறி பிடித்த செயல் என்றும் சொன்னார்கள். இதனால் பலாத்காரம் வரும் என்றும் சொன்னார்கள். கறுப்புக் கொடி காட்டுவது என்பது உலகத்தில் இருக்கின்ற ஜனநாயக நாடுகள், கையாளுகின்ற, அளிக்கின்ற மரியாதையான முறைகளே தவிர, யாரையும் அவமதிப்பதற்கான முறைகள் அல்ல. இங்கு சில காங்கிரஸ் அங்கத்தினர்கள் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். இவ்விதம் கருப்புக் கொடி காட்டுவதினால் உங்களுக்குத்தான் அவமானம். பண்டித நேருவுக்கு அவமானம் ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். அந்த தைரியம் எப்பொழுதும் இருக்க வேண்டும். பண்டித நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டுகிறோ மென்றால் அவர்களது மதிப்பை நாங்கள் குறைத்துவிடுகிறோம் என்று அர்த்தமல்ல. ஜனநாயகத்தில் ஒரு கட்சியின் மதிப்பு அந்தக் கட்சியின் எண்ணிக்கை சட்டசபையில் குறையும் போதுதான் அதற்கு அவமதிப்பு வருகிறது என்பதை நான் உணர்ந்து வந்திருக்கிறேன். கருப்புக் கொடி காட்டுவது என்பது அவமதிப்பிற்காகக் காட்டுவதில்லை. கருப்புக் கொடி காட்டுவது என்பது எங்களுடைய மனக் குமுறலை, எங்களுடைய உள்ளத்தில் இருக்கின்ற புண்ணை, நாங்கள் அடைந்திருக்கின்ற வேதனைகளை எடுத்துக் காட்டுவதாகும். கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ''ஆச்சாரியார் அவர்களைத் திட்டினால் உங்களுக்கு என்ன?'' என்று கேட்டார்கள். இவ்விதம் சொல்லிவிட்டு என்னைப் பார்த்த பார்வை நன்றாக என் கவனத்தில் இருக்கிறது. . .

உயர்திரு. எம். பக்தவத்சலம்: ஆச்சாரியார் அவர்களை நேரு திட்டவில்லை என்றுதான் சொன்னேன். மரியாதையோடுதான் சொன்னார்கள் என்று சொன்னேன். (பேசுவதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிய இருப்பதைக் குறிக்க சபாநாயகர் மணியை அடித்தார்.)

திரு. சி. என். அண்ணாதுரை: எனக்கு இன்னும் சிறிது நேரம் அனுமதிக்க வேண்டுகிறேன்.

சபாநாயகர்: உங்களுக்கு ஏற்கனவே 5 நிமிடங்கள் கூடுதலாகி விட்டது. இனிமேல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச வேண்டியிருக்கிறது. அதன் பின் மந்திரி அவர்கள் பேச வேண்டியிருக் கிறது. நீங்கள் டிவிஷன் கேட்காவிட்டால் நீங்கள் சொல்வதை

ஏற்றுக்கொள்வேன். நீங்கள்தான் டிவிஷன் கேட்பீர்களே!

திரு. சி. என். அண்ணாதுரை: கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள் பிரதம மந்திரி அவர்கள் திட்டவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதில் "டான் க்யுக்ஸோட்" என்றும் "க்யுக்ஸாடிக்" (quixotic)என்றும் பதங்கள் இருக்கின்றன. "க்யுக்ஸாடிக்" என்றால் அதற்கு ஆங்கில அகராதியில் foolish, idiotic என்றுதான் அர்த்தமிருக்கிறது. அதில் வருகிற டான் க்யுக்ஸோட் என்ற பாத்திரத்தை பைத்தியக்காரன், அப்பாவி என்று சொல்லப்படுகிறது. பிரதம மந்திரி அவர்கள் நம் நாட்டின் தலைவர்களைப் பற்றித் திட்டினால் உங்களுக்கு என்ன என்று கேட்டார்கள். அதே மாதிரி நாங்கள் பிரமத மந்திரி அவர்களுக்கு கறுப்புக் கொடி பிடித்தால், உங்களுக்கு என்ன என்று சுலபமாகக் கேட்கலாம். அப்படி நான் கேட்க விரும்பவில்லை. நாங்கள் கருப்புக் கொடி காட்டப்போகிறோம் என்று நம் மாநில முதல் அமைச்சர் அவர்களுக்கும் போலீஸ் அமைச்சர் அவர்களுக்கும், என் நினைவு சரியாக இருந்தால் முதல் தேதியே கருப்புக் கொடி காட்டப் போகிறோம் என்று எழுதியிருந்தேன் என்பது தெரியும். படாஸ்கர் அறிக்கை வந்த உடன் போலீஸ் அமைச்சர் அவர்கள் என்னை வரவழைத்துப் பேசினார்கள். போலீஸ் அமைச்சர் அவர்கள் அழைத்தால் வரக்கூடாது என்ற கருத்துடையவனா நான். சமீபத்தில் தண்டலத்தில் முதல் அமைச்சர் அவர்களை வரவழைத்து வறண்ட நிலங்களை எல்லாம் நானே சென்று காட்டியபோது, பிரதமர் நேருக்குக் கருப்புக் கொடி காட்டப்போகிறோம் என்று நாங்கள் சொல்லும்போது, அந்த நேரத்தில் நீங்கள் எங்களை அழைத்துப் பேசி இருந்தால் இந்த நிலைமை வந்திருக்காது.

உயர்திரு. கே. காமராஜ்: அப்போது நான் இங்கு இல்லை, வெளியூருக்குப் போய்விட்டேன்.

திரு. சி. என். அண்ணாதுரை: முதல் அமைச்சர் அவர்களுக்கு நல்ல சமாதானம் இருக்கிறது. அன்றையதினம் அவர்கள் இங்கு இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் மற்ற அமைச்சர்கள் இருந்தார்கள். ஆனால் என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் அமைச்சராக இருக்கின்றவர், இதற்கு முன்னால் அவருக்குத் தெரியுமோ தெரியாதோ, திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்ட உடன், திராவிட முன்னேற்றக் கழகத்தை பக்தவத்சலம் அவர்கள்தான் ரகசியமாக ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள் என்று வேறு பலர்

எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு சொந்தம் இருக்கின்ற என்னை ஏன் அழைத்துப் பேசி இருக்கக் கூடாது? (சிரிப்பு).

உயர்திரு. எம். பக்தவத்சலம்: திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் நாகர்கோயிலில் கூடி முடிவு எடுத்த பிறகு, அந்தத் தீர்மானத்தை மாற்றிக்கொள்ளச் சொல்லுவது அரசியல் ரீதியில் சரியில்லை என்றுதான் அழைத்துப் பேசவில்லை.

திரு. சி. என். அண்ணாதுரை: தீர்மானத்தை மாற்றிக்கொள்ளச் சொல்லி அழைத்துப் பேசச் சொல்லவில்லை. அனுபவமுள்ளவர்களா யிற்றே, இன்னின்ன விதமாக கருப்புக் கொடி பிடித்தால் பலாத்காரம் வராது என்று சொல்லியிருக்கலாமே. இதற்கு முன்னால் காங்கிரஸ் காரர்கள் எத்தனையோ முறை கருப்புக் கொடி காட்டியிருக்கிறார்கள். உலகம் போற்றும் உத்தமர் காந்தியடிகள் நடத்திய கிளர்ச்சியிலேயே சௌரிசௌராவில் கலகம் நடந்துவிட்டது. இதனால் ஏற்பட்ட கலகத்தை அவரால் கூட தடுக்க முடியவில்லை. போலீஸ் அமைச்சர் அவர்கள் என்னை அழைத்து நீங்கள் இன்னின்ன மாதிரி நடக்கா விட்டால் பலாத்காரம் ஏற்படும் என்று சொல்லியிருக்கலாம். ஏன் நான் இதைச் சொல்கிறேன் என்றால் இங்கே போலீஸ் ராஜ்யம்தான் நடத்துகிறார்கள். ஜனநாயக ராஜ்யம் நடத்தவில்லை. போலீஸ் ராஜ்யத்திற்கும், ஜனநாயக ரீதியில் நடத்துகிற ராஜ்யத்திற்கும் உள்ள வித்தியாசத்தை மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் கலியாணசுந்தரம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஜனநாயக ராஜ்யத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் ஆளும் கட்சியைப் பற்றிக் குற்றம் சொல்லலாம். எதிர்க்கட்சிகள் செய்கின்றதை ஒடுக்குகின்ற முறையில் போலீஸை வைத்துக்கொண்டு நடத்துவதுதான் போலீஸ் ராஜ்யம். இப்படிப் போலீஸ் ராஜ்யத்தை நடத்துகின்ற காரணத்தால், இந்தச் சட்டசபை கலைந்து கூடும் போதெல்லாம் கட்டிய அணைக் கட்டுகளை உங்களால் காட்ட முடியவில்லை, வெட்டிய திருக் குளங்களை உங்களால் காட்ட முடியவில்லை, திறந்த பள்ளிக் கூடங்களை உங்களால் காட்ட முடியவில்லை, உங்கள் ஆட்சியால் கீழே விழுந்த பிணங்களைத்தான் உங்களால் காட்ட முடிகின்றது. சென்ற தடவை சட்டசபை கூடிய போது முதுகுளத்தூரிலே விழுந்த பிணங்களை நீங்கள் காட்டினீர்கள். இந்தத் தடவை சென்னையிலே விழுந்த பிணங்களைக் காட்டியிருக்கிறீர்கள். முதுகுளத்தூரிலே இவர்கள் பிணமாகியிராவிட்டால் வேறு பலர் பிணமாகியிருக்க நேர்ந்திருக்கும்

என்று அப்போது காரணம் காட்டினீர்கள். இங்கே இப்போது மற்றவர்களால் நெருக்கப் பட்டதால் பிணமாகியதாகச் சொல்லுகிறீர்கள். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். உங்கள் கையில் ரத்தக் கறை படிந்திருக்கிறது. இரத்தக் கறை படிந்த கரத்துடன் வாயினால் மட்டும் சாமர்த்தியமாக ஜனநாயகம் பற்றிச் பேசுகிறீர்கள். ஆனால் உலகம் மதிப்பிடவேண்டியது உங்கள் ஆட்சியிலே எத்தனை முறை தடியடி தர்பார் நடந்திருக்கிறது, உங்கள் ஆட்சியில் எத்தனை முறை துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது, உங்கள் ஆட்சியிலே எத்தனை பிணங்கள் கிழே விழுந்திருக்கிறது, உங்கள் ஆட்சியில் எத்தனை முறை இப்படிப்பட்ட செயல்கள் நடந்திருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இந்தக் காரணங்களால் இவைகளைப் பற்றி விசாரிக்க ஒரு பொது விசாரணை தேவை என்று நான் என்னுடைய கட்சியை வற்புறுத்தி என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

1958-59 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதம்

உரை : 11 **நாள் : 08.03.1958**

திரு. சி. என். அண்ணாதுரை: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே! இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது, இந்த மன்றத்தில் உள்ள அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னதில் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நான் சில வார்த்தைகளைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தக் கருத்துக்களை, நானோ அல்லது நான் சார்ந்திருக்கும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களோ, இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்கின்ற நேரத்தில், காணப்படுகின்ற குற்றங் குறைகளை - விட்டுப் போன தகவல்களை - ஏற்படக்கூடிய கேடுபாடுகளை - இவைகளை எடுத்துச் சொல்கின்ற நேரத்தில் அமைச்சர் அவை அதைப் பற்றி அதிகமாக ஆயாசப் படாவிட்டாலும், அவர்களுடைய ஆதரவாளர்கள், இந்தக் குற்றங் குறைகளைச் சொல்கின்ற காரணத்தால், அமைச்சர் அவையினுடைய அறிவாற்றலைப் பற்றி நாங்கள் ஏதோ குற்றம் காணுவதாகக் கருதிக் கொண்டு மிக்க வருத்தம் அடைகின்றனர்; சிலர் கோபப்படுகின்றனர்; சிலர் எங்களுடைய அறிவாற்றலை ஆராய முற்படுகின்றனர்! நான் இந்த மாமன்றத்தில் பலமுறை எடுத்துச் சொன்னபடி, இந்த அமைச்சரவையில் அமர்ந்திருக் கின்றவர்கள் யாருக்கும் அறிவாற்றல் குறைவாக இருப்பதாக நான் எப்போதுமே கருதினது இல்லை. இப்படிக் குற்றம் எடுத்துச் சொன்னால், அறிவாற்றல் படைத்தவர்கள் போதுமான அளவு அதிகாரம் படைத்தவர்களானால், நாட்டை ஆளக்கூடிய உரிமை பெற்ற இவர்கள் காரியங்களை இன்னும் எவ்வளவு திறமையாக செம்மையாக சாதிக்கமுடியும் என்பதை எடுத்துக்காட்டிடவே கூறுகிறோம்!

வரவுசெலவுத் திட்டத்தில் வெறும் புள்ளி விவரங்களைக் காட்டி இவ்வளவு செலவு, மிச்சத்துக்கு எங்கே போவது என்று கேட்பதற்கு மட்டும், ஆண்டுக்கு ஒருமுறை வரவு செலவுத் திட்டத்தின் மேல் விவாதிக்கப்படுவது இல்லை என்று கேள்வி நேரத்தின் போது நிதி அமைச்சர் எடுத்துச் சொன்னார்கள்.

என்.ஜி.ஓ. வினருக்கு அதிகச் சம்பளம் தரவேண்டும் என்றால், "திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் எதிலிருந்து குறைத்து எதிலே கொடுத்து விடுவது என்று சொன்னால், யோசனை செய்கிறோம்" என்று சொன்னார்கள். கல்விக்காகச் செலவழித்தது அதிகம், அரிஜன முன்னேற்றத்துக்காகச் செலவழித்தது அதிகம், அவைகளைக் குறைத்து, என்.ஜி.ஓ. வினருக்குக் கொடுத்துவிடுங்கள் என்று நான் சொல்வேன் என்று எதிர்பார்க்கிறார்கள்.

எங்களுக்குச் சட்டசபை அனுபவம் குறைவுதான். ஆனால் மனித சுபாவத்தை நீண்ட நாட்களாக அறிந்திருப்பவர்கள்! அதிலிருந்து குறைத்து இதற்குக் கொடுங்கள் என்று சொல்வது எங்களுடைய வேலை அல்ல! அதற்குத் தான் அமைச்சர் அவை இருக்கிறது!

எந்தெந்தத் துறைகளை உடனடியாகக் கவனிக்க வேண்டும் என்ற பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. எதைக் குறைத்தாக வேண்டும், எந்தெந்தத் துறைகளை கவனித்தால் மற்ற துறைகளுக்கு அதனால் ஊக்கம் ஏற்படும்படி செய்யலாம் என்பதை ஆராய்ச்சி செய்து, வருவாய் வரி மூலமாக மட்டும் அல்லாமல், வேறு பல வகைகளிலும் வருமானத்தைத் தேடுவதும், திட்டங்களைத் தீட்டுவதும் அமைச்சர் அவையின் பொறுப்பு. இதைத் தட்டிக் கழிப்பதற்கு எங்களைத் துணைக்கு அழைக்கிறீர்கள் என்று நான் கருதவில்லை. ஏதாவது மாற்று யோசனைகள் சொல்லவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய உரையின் இறுதியில் சில மாற்று யோசனைகளையும் சொல்லப் பிரியப்படுகிறேன்.

நிதி நிலை அறிக்கையின் புள்ளி விவரங்களை மாத்திரம் பார்த்தால் இந்த அமைச்சர் அவையை யாரும் பாராட்டத்தான் வேண்டும். ஏனென்றால் கிடைத்ததை வைத்துக் கொண்டு செட்டாக, சீராக, சிறப்பாக செலவழித்து கணக்கை ஒப்படைத்துவிட்டு, தங்களுடைய கையை துடைத்துக் காண்பித்துவிட்டு, மற்றவைகளை

உதறித்தள்ளி காட்டி விட்டார்கள்! கனம் நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையில் எந்தெந்த துறைக்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார். ''புள்ளி விவரங்களைக் காட்டுவது மட்டும், நிதி நிலை அறிக்கையின் நோக்கம் அல்ல!'' என்பதை நமது ஆட்சியாளர்கள் தங்களுடைய ஒரு அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள்.

"The Budget speech is largely a political document. No doubt, the Finance Minister reviews the salient features of the financial administration of the year ending and the year commencing; but the main purpose is to focus attention on the policies and programmes of the party he represent and how for those had been already implemented and how for they are to be further implemented during the budget year. . ."

என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆட்சியாளர் கையாளுகிற இந்தக் கொள்கைகளும் கோட்பாடுகளும் சரியானவை தானா என்று அறியவும், சரியானவை என்று ஏற்றுக் கொள்ளப் பட்டாலும், அவைகளை அவர்கள் சரியான முறையில் நிறைவேற்றியிருக்கிறார் களா என்பதைக் கவனிப்பதும் இந்த விவாதத்திலே மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. அதனால் தான் புள்ளி விவரங்களுக்கு அப்பால் போய் நாங்கள் பேசுகிற நேரத்தில், ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆயாசப்படுகிறார்கள் என்று நான் குறிப்பிட்டேன்.

அவர்கள் ஆயாசப்படுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

150பேர் என்று சொல்லத்தக்க அளவுக்கு உறுப்பினர்களைப் பெற்றிருக்கிற ஒரு பெரிய கட்சி காங்கிரஸ் கட்சி. அதனுடைய செல்வாக்கை, மற்றக் கட்சிகள் குறைவாக மதிப்பிடவில்லை. 'அதனுடைய செல்வாக்கை' என்று சொல்லும்போது ''வோட்டு வாங்குகிற செல்வாக்கை'' என்று நான் ஒரு திருத்தத்தை சொல்லிக் கொள்கிறேன். அந்தச் செல்வாக்கு இருக்கிற பெரிய கட்சி காங்கிரஸ் கட்சி. எதிர்க்கட்சிக்காரர்கள் மிக்க சிறுபான்மையராகவும் தங்களுக் குள்ளாகவே கூட ஒருசில குறிப்பிட்ட விஷயங்களிலே மட்டுமல்ல, மற்ற விஷயங்களிலே மாறுபாடான கருத்துக் கொண்டவர்களாகவும்

அமர்ந்திருந்தால், இப்படிப்பட்ட அமைச்சரவை மீது "இவ்வளவு சிறுபான்மையினராக இருக்கும் இவர்கள் குற்றங் குறைகளைச் சொல்வதா, நாம் கேட்பதா?" என்று அமைச்சர்கள் அல்ல, அமைச்சரவையை ஆதரிப்பதாகக் கருதிக் கொண்டிருப்பவர்கள் சற்று ஆயாசப் படுகிறார்கள்!

ஒரு கட்சிக்கு வலிவு அதிகமாக இருக்கும் போதுதான் பொறுப்பு மிகவும் அதிகமாக இருக்கிறதென்பதையும், பழுத்த மரத்தின்மீது தான் கல் வீசுவார்கள் என்பதையும், பழுக்காத மரத்தின் மீது கல் வீச மாட்டார்கள் என்பதையும் அரசியலிலேயும் நாம் அறிந்து கொள்ளலாம்.

அமைச்சரவை ஆடக் கூடிய நிலையில் இருந்தால், இவ்வளவு குற்றங் குறைகளைச் சொல்லிக் கொண்டிருக்க மாட்டோம்! அதை எப்பொழுது வீழ்த்துவது என்று கணக்கெடுத்துக் கொண்டிருக்கலாம். திறமையை இழந்து விட்டிருக்கிற அமைச்சரவையாக இருந்தால் உள்ள குற்றங்குறைகளை இவ்வளவு அப்பழுக்கற்ற முறையிலே விளக்கிக் கொண்டிருக்க மாட்டோம். அடுத்த தடவை அவர்கள் திரும்பி வராமல் இருப்பதற்கு என்ன வழி என்று யோசித்துக் கொண்டிருப்போம்.

ஆனால் இந்த நாட்டிலே ஜனநாயகம் குழந்தை பருவத்திலே இருக்கிறது என்பதையும், அப்படிக் குழந்தைப் பருவத்திலேயிருக்கும் போது, ஒரு கட்சி ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டால், அதை வெகு விரைவிலே, எளிதிலே, விரட்ட முடியாது என்பதையும், பல நாட்டு ஜனநாயக ஆட்சியினுடைய வீழ்ச்சியையும் வரலாற்றையும் படித்திருக்கும் நாங்கள் உணர்ந்திருக்கிறோம்.

அதனால்தான், நம்முடைய அமைச்சர்கள் அதிலும் குறிப்பாக, நம்முடைய போலீஸ் அமைச்சர் கனம் பக்தவத்சலம் அவர்கள், போகும் ஊர்களிலெல்லாம், "நல்ல எதிர்க்கட்சி இல்லையே! திறமையாகப் பணியாற்றக் கூடிய எதிர்க்கட்சி இல்லையே! நல்ல எதிர்க்கட்சி வேண்டும், வேண்டும்!" என்று ஆங்காங்கே பேசி வருகிறார். நல்ல எதிர்க்கட்சி இல்லையே என்று உண்மையிலேயே மெத்த வருத்தப்படுகிறார். அவர் வருத்தம் போகும் வேகத்தைப் பார்த்தால், அடுத்த தடவை அவரே எதிர்க்கட்சித் தலைவராக அமர்ந்து

விடுவாரோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது! (சிரிப்பு) அவ்வளவு வருத்தப்படுகிறார், நல்ல எதிர்க்கட்சி இல்லையே என்று!

ஒரு நல்ல எதிர்க்கட்சி வளரவேண்டுமானால், நாங்கள் எதிர்க் கட்சிக்காரர்கள் தேர்தலுக்கு நிற்கும் நேரத்தில் ஆளும் கட்சியினர் போட்டிக்கு நிற்கக் கூடாது என்ற ஒரு விபரீதமான அரசியலை நாங்கள் 'இங்கே' புகுத்த விரும்பவில்லை. விபரீத அரசியலை 'இங்கே' நாங்கள் புகுத்த விரும்பவில்லை என்னும்போது 'இங்கே' என்பதை அழுத்துவதற்குக் காரணம், நம்முடைய ராஜ்யத்தில் என்பதை வலியுறுத்தத்தான்! பிரஜா சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் அசோக மேத்தா அவர்கள் மத்திய சட்டசபைத் தேர்தலுக்கு நின்ற நேரத்தில், அவருக்காக, காங்கிரஸ் கட்சியிலிருந்து யாரும் போட்டி போடாமல் விட்டார்கள்.

அந்த முறையைக் கையாண்டு - எங்களுடைய எண்ணிக்கையை பெருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளவில்லை. எண்ணிக்கையைப் பற்றிக் கவலைப்படாமல், எண்ணிக்கையைப் பற்றி அதிகமாக எண்ணிப் பார்த்துக் கொண்டிராமல் சொல்லுகிற விஷயங்களிலே உள்ள நன்மை தீமைகளை ஆராய வேண்டும். அப்படி ஆராயும் நேரத்தில் ஆளும் கட்சியில் சொல்ல வேண்டும் என்பதற்காக, அவர்களுக்கு மிகவும் துருப்புச் சீட்டாகக் கருதிக் கொண்டிருக்கும் சினிமா விவகாரத்தை மெத்த இழுத்தார்கள். அவர்களெல்லாம் பேசிய நேரத்தில் நான்கைந்து சினிமா முதலாளிகள் கேட்டுக் கொண்டிருக்க வில்லையே என்று நான் எண்ணினதுண்டு. அப்படிக் கேட்டுக் கொண்டிருந்தால், இன்னும் கொஞ்சம் கிராக்கிக் கிடைத்திருக்குமே தவிர, குறை வந்திருக்காது. அவர்கள் எடுத்துச் சொல்லும்போது வெளியிலே இருப்பவர்கள் என்ன எண்ணிக் கொள்வார்கள்? ''சினிமாக்காரர்கள் அரசியல் பேசுகிறார்கள், அரசியல்வாதிகள் சினிமாவிலே நாட்டம் கொண்டு விட்டார்களே, இது என்ன தலைகீழ் மாற்றம்!'' என்று சந்தேகப்படுவார்கள்.

ஆகையால் அந்தத் துறையில் எங்களுக்கு இருக்கும் ஈடுபாடுகளைச் சுட்டிக்காட்டி, நாங்கள் ஆட்சியிலே உள்ள குற்றங் குறைகளை எடுத்துக் காட்டுவதன் தரத்தை யாராவது குறைக்கலாம் என்றால், அது இயலாது என்று கூறிக்கொள்கிறேன். அது தரத்தைக் குறைத்து அவர்கள் எடுத்துச் சொல்வதாலே நாங்கள் ஈடுபாடு

கொண்டிருக்கும் துறையிலே எங்களுக்கு இன்றைய தினம் இருக்கும் இடம் சற்று அதிகமாகி வருகிறது என்றும் கூறுகிறேன். அதை நாங்கள் ஒருபுறத்தில் பொருட்படுத்தாமல் நடப்பதற்குக் காரணம், எங்கள் பேரில் மாசு கற்பிக்க வேறு காரணங்கள் எதுவும் இல்லாத தன்மையினாலே, இதையாவது சொல்லலாமே என்கிற ஆவல் உள்ளவர்களாக காங்கிரசார் இருக்கிறார்கள் என்பதுதான்!

அதுவும் குறிப்பாக காங்கிரஸ் உறுப்பினர் திரு. ஏழுமலை அவர்கள் சினிமாவை தேசிய மயமாக்கவேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். இந்தச் சர்க்காருக்கு அந்தத் துணிவு வரவேண்டு மென்று உண்மையில் நான் விரும்புகிறேன்.

சினிமாவைத் தேசீயமாக்குவது என்ற தீர்மானத்திற்கு இந்த சர்க்கார் வந்துவிட்டால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் உறுதி கூறிக் கொள்கிறேன், அவர்கள் சினிமாவைத் தேசீய மயமாக்கியவுடன் ஐந்தாண்டுக் காலத்தில் எத்தனை கதைகளை அவர்கள் எங்களிடமிருந்து கேட்டாலும் நாங்கள் இலவசமாகத் தருகிறோம் (கைத்தட்டல்)

திரு. கே. காமராஜ் : ''கதை கொடுப்பதோடு ஆக்டும் பண்ணணும்!''

திரு. சி. என். அண்ணாதுரை : ''முதல் அமைச்சர் அவர்கள் அதில் நாங்கள் நடிக்கக்கூட வேண்டும் என்று சொல்கிறார்கள். நிச்சயமாக நடிப்போம்! நான் ஏன் இதை இவ்வளவு அழுத்தமாகக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், சினிமாத்துறையில் நாங்கள் ஈடுபாடு கொண்டிருப்பது எங்கள் கட்சி நடத்தும் விடுதலைக் கிளர்ச்சிக்கு அது பெரிதும் உதவும் என்ற காரணத்தினால்தான். இதை எதிர் தரப்பில் உள்ளவர்கள் உணர்ந்து கொள்ளாமல் இருக்கிறார்களே என்று வருந்துகிறேன். வரவு செலவுத் திட்ட விவாதத்தில் இந்த பிரச்சினையையே கிளப்பி இருக்கத் தேவையில்லை. நிதி நிலைமையைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கின்றபோது, சிலர் தாங்கள் கருத்துக்களை இந்தப் பக்கம் அதிகமாகத் திருப்பி விட்டதன் காரணமாக நானும் குறிப்பிட வேண்டியிருந்தது.

சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்து பேசுகின்ற நேரத்தில், ''இதற்குத் தீர்ப்பு இப்போது கொடுக்காதீர்கள்,

ஓராண்டின் முடிவில் தீர்ப்பு அளிக்க வேண்டும்!'' என்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்னதை அப்படியே படிக்கிறேன்.

''பட்ஜெட் திட்டம் தயாரிப்பது வேலையின் ஆரம்பமே யொழிய, வேலையின் முடிவு அல்ல, என்பதை நான் உணர்கிறேன். இன்ன இன்ன திட்டங்கள் செய்யலாம் என்று இப்போது முடிவு செய்திருக்கிறோம். இது நன்றாக நடந்திருக்கிறதா என்பதைப் பற்றி வருஷ முடிவில்தான் தெரிவித்துக் கொள்ள முடியும்!''

ஆகையால் இந்த வருடத்தில் நிதி நிலை அறிக்கையைப் பற்றி யோசிப்பதற்கு முன்னால், சென்ற வருடத்தில் நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்த போது அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றப் பட்டிருக்கின்றனவா, நிறைவேற்றப்பட்டிருக் குமானால் அவற்றால் எதிர்பார்த்த பலன்கள் கிடைத்திருக்கின்றனவா என இவைகளைப் பற்றி எல்லாம் ஆராயக் கடமைப் பட்டிருக்கிறோம்!

அந்த வகையில் நான் சென்ற தடவை காங்கிரஸ் உறுப்பினர்கள் எந்த எந்த கோரிக்கைகளை எழுப்பினார்கள் இந்த மாமன்றத்தின் முன்னால் என்பதைக் குறித்துக் கொண்டு, அவைகளாவது நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய மெத்த ஆவல் உள்ளவனாக இருக்கிறேன். நல்ல வேளையாக இன்றையதினம் திருமதி சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் சில விஷயங்களைப் பற்றி எடுத்துப் பேசினார்கள். கிணறு வெட்டுவதில் உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். சென்ற தடவை பட்ஜெட் விவாதத்தின் போதும் அவர்கள் இதே விஷயத்தைப் பற்றிப் பேசுகின்றபோது ''ஹரிஜனங்கள் குடியிருக்கும் பகுதி முழுவதும் குடி தண்ணீர் கிணறுகளை வெட்டிக் கொடுக்க அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. அப்படி இருந்தும்கூட, போன வரவு, செலவு திட்டத்தைப் பார்த்தாலும் வேறு எதில் பார்த்தாலும், குடிதண்ணீர்த் திட்டம், சுகாதார வசதிகள் ஆகிய இவ்விரண்டு துறையிலும், நாம் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம் என்று பார்த்தால், கொஞ்சம்கூட முன்னேறவில்லை என்று தைரியமாகச் சொல்லலாம்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டும் அதனையே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மற்றவர்களுடைய பேச்சையும் குறிப்பு எடுத்து வைத்திருக்கிறேன். அதிலும் சிறப்பாக தாய்மார்களுடைய

பேச்சைக் கேட்டு தாய்க்குலத்திற்கு மதிப்பு வைத்தாவது ஆட்சியாளர்கள் குறைபாடுகளை நீக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தேன்.''

சென்ற ஆண்டைப் போலவே, அவர்கள் எங்கள் கட்சியினர்கள் பேசிய பேச்சுக்களை எல்லாம் பொறுக்கிக் கொண்டு, அவற்றுக்குப் பதிலளித்திருப்பதோடு கடைசியில் ஆட்சியாளர்கள் எவ்வளவு பேசியும் எங்களைக் கவனிக்காமல் இருக்கிறார்களே என்று தங்கள் தங்கள் தொகுதிகளைப் பற்றியும் கிளப்பின அவலக்குரல் இந்த ஆண்டிலும் கேட்டது. இதிலிருந்து நாங்கள் ஊகித்துக் கொள்ளக் கிடைப்பது, அமைச்சர் அவை சென்ற ஆண்டு இங்கே குறிப்பிட்ட குறைபாடுகளை எல்லாம் இன்னும் நிவிர்த்திக்கவில்லை என்பது தான்!

அவைகளை நீக்குவதற்கு ஆற்றல் இந்த அமைச்சர் அவைக்கு இல்லை என்று நான் கருதவில்லை! போதிய அவகாசமும் அவர்களுக்கு இல்லை என்று கூறுவதற்கில்லை! அல்லது, அவர்கள் செயல்படாத வாறு யாரோ குறுக்கிடுகிறார்கள் என்றும் பொருள் அல்ல! அமைச்சர் அவைக்கு, அதற்கேற்ற வசதி இல்லை. அந்த வசதியைப் பெறுவதற்குரிய வரியைப் போடும் வாய்ப்புகளை எல்லாம் மத்திய அரசாங்கம் அதிகப்படுத்திக் கொண்டு விட்ட காரணத்தினால், இவர்களுக்குள்ள குறைந்த இனங்களிலேயே அதிக வரியைப் போடுவது என்று முன்வருகிறார்கள். இது க்ஷேம நல சர்க்கார் என்கிற அடிப்படைத் தத்துவத்திற்கே சரியாகாது! வரி இல்லாமல் ஆட்சி நடக்காது. ஆனால் வரி ஒன்றினால் மட்டும் தான் வருவாயைத் தேடிக் கொள்ளமுடியும் என்று நினைத்தால், நிச்சயமாக அந்த ஆட்சி வழியில் போகின்றவனுடைய மடியில் இருப்பதை எடுத்து மற்றவன் காற்றில் கொடுப்பதைப் போலத்தான் நடக்க வேண்டியிருக்கும்!

ஆகையால் ஆளும் கட்சியினர் வருவாயை எந்த எந்த வகையில் பெருக்கிக் கொள்ளலாம் என்று பார்க்கின்ற நிலை வேண்டும். வரி மூலமாக மட்டுமல்லாமல், வேறு எந்த எந்த வகையில் வருவாயை பெருக்கிக் கொள்வது எனவும் எண்ண வேண்டும். அப்படி எண்ணிப் பார்க்கும்போது நான் பழைய விஷயத்திற்கு வந்து விடுகிறேன் என்று சிலர் வருத்தப்படக் கூடும். நான் பழைய விஷயத்திற்கு வரவில்லை. அடிப்படை விஷயத்திற்கு வருகிறேன்! ஆட்சியாளர்களுக்கு போதுமான வாய்ப்பு இல்லை என்று குறிப்பிட்டேன், காரணம் நமது

அரசியல் சட்டத்தின் 12-வது பிரிவின்படி எந்தெந்த துறையில் மட்டும் வரிபோடலாம் என்பதை இந்திய அரசாங்கத்தார் வரையறுத்து விட்டார்கள். மத்திய சர்க்கார் போடுகின்ற வரிப்பளுவின் விளைவாக நமக்கு ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமைகளை எடுத்துக் காட்டினால், திராவிட நாட்டு பிரிவினைக்கு முன் திட்டமிட்டு உங்களை அழைத்துச் செல்கிறேன் என்று எண்ணிக் கொள்வார்கள் இங்கு உள்ள அமைச்சர்கள். ஆனால், வங்காளத்தில் இருக்கிற முதல் அமைச்சர் டாக்டர் பி.சி. ராய் இப்போது பேசியிருக்கிறார்.

''மத்திய அரசாங்கத்திலே நாம் நிதிக்காக கையேந்தி நிற்கவேண்டி இருக்கிறது. அப்படி நாம் கையேந்தி நிற்கும் நேரத்தில், நமக்கு கிடைப்பது போதிய அளவு கிடைக்குமா? அப்பொழுது கிடைக்கும் என்பதையும் உறுதியோடு சொல்ல முடியாமல் இருக்கிறது. ஆகவே மாநில அரசாங்கத்தில் நிதி நிலை அறிக்கையை தயாரிப்பதிலே கஷ்டம் இருக்கிறது என்று டாக்டர் பி.சி. ராய் அவர்கள் - பழுத்த தேசியவாதி - அரசியல் அறிஞர் - நல்ல திறமை படைத்தவர் - வருங்கால மாநில சர்க்காரின் முதல் அமைச்சராக இருப்பவர் கூறி இருக்கிறார்! அப்படி சொல்லுங்காலத்தில் 8.83 ரூபாய் துண்டு விழும் பட்ஜெட்டை, அதற்காக எந்தப் புது வரியும் போடாமல் வரவு செலவுத் திட்டத்தை அவர் கொடுத்து விட்டு இதனைச் சொல்லியிருக்கிறார்.

மத்திய சர்க்கார் எந்தெந்த துறைகளில் வரி போடுகிறார்கள் - அவர்கள் போடுகிற வரியின் அளவைப் பற்றி நாம் கவனிக்கும் நேரத்தில், அவர்கள் போட்டது போக மிச்சம் இருக்கும் துறையில் நாம் வரி போட வேண்டியிருக்கிறது. மத்திய சர்க்கார் போடும் வரிச் சுமையைத் தாங்கி விட்டு, மேலும் வரும் வரிச் சுமையைத் தாங்கிக் கொள்ள மக்களுக்கு வலிவு இருக்கிறதா? என்று நாம் பார்க்க வேண்டும்.

மத்திய அரசாங்கம் ஒரு பக்கத்தில் வரிகளைப் போட்டுக் கொண்டே போக, நம் நாட்டு மக்கள் அந்த வரிச் சுமையைத் தாங்கிய பின் மிச்சம் வலிவு இருந்தால்தான் மாநில சர்க்கார் போடக்கூடிய வரிச் சுமையைத் தாங்கிக் கொள்ள முடியும்! மாநில சர்க்கார் மேலும் வரிச்சுமையை மக்களின் மேல் போட முடியாமல் இருப்பதற்குக்

காரணம், மக்களினால் மேலும் வரிச்சுமையைத் தாங்கிக் கொள்ள முடியாது என்று உணர்ந்திருக்கும் கருணை உள்ளத்தால் தான் என்று நான் கருதுகிறேன்.

1953-54ஆம் ஆண்டில் மட்டும் மத்திய சர்க்கார் எக்சைஸ் வரி மூலம் அதாவது கலால் வரி மூலம் பொருள்களின் மீது கொடுக்கப் பட்ட வரி ஏறக்குறைய, 96 கோடி ரூபாய் வசூலித்திருக்கிறார்கள், ஆனால் 1957-58ல் எக்சைஸ் வரியாக சுமார் 257 கோடி ரூபாய் மத்திய சர்க்காருக்குப் போய் இருக்கிறது!

எந்தெந்தப் பொருள்களுக்கு நாம் வரி செலுத்துகிறோம் என்பதை எங்களுக்குரிய கதை சொல்லும் பாணியில் நான் சற்று சொல்லப் பிரியப்படுகிறேன். காலையில் எழுந்ததும் பல் துலக்க பிரஷ்ஷை எடுத்தால், அதற்கு வரி மத்திய அரசாங்கத்துக்குத் தருகிறோம். அத்துடன் (Tooth paste) பற்பசையை எடுத்தால் அதன் மீது மத்திய அரசாங்கத்துக்கு வரி போகிறது. பிறகு டீயோ, காபியோ குடித்தால் அதற்குரிய வரி மத்திய அரசாங்கத்துக்குப் போகிறது. பிறகு நாம் குளிக்க சோப்பு எடுத்தால், அதற்கும் மத்திய சர்க்காருக்கு வரி தருகிறோம்! நாம் குளிப்பதற்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு க்ஷவரம் செய்து கொள்ள பிளேடை கையில் எடுத்தால், அதற்கு மத்திய சர்க்காருக்கு வரி தருகிறோம். நாம் சிகரெட் பிடிப்பவர்களாக இருந்தால் அதற்குப் போடப்படும் வரியும் மத்திய சர்க்காருக்குப் போய்ச் சேர்கிறது! அந்தச் சிகரெட்டைப் பற்ற வைக்கும் தீப்பெட்டிக்கும் வரி போகிறது! இப்படிப் போடப்படுகிற வரிகள் எந்தெந்தப் பொருளுக்கு என்பதை மட்டும் நான் இந்த மாமன்றத்தில் படித்துக் காட்ட சபாநாயகர் அவர்கள் அனுமதி அளிக்கவேண்டு மென்று விரும்பி கேட்டுக் கொள்கிறேன். அது மற்றவர்களுக்குத் தெரியாது என்பதால் அல்ல - ஆனால் எனக்குத் தெரியும் என்பதை எடுத்துக் காட்ட தயவு செய்து நிதியமைச்சர் அவர்கள் அனுமதிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். அவைகளாவன,

"Gold, Silver, Kerosine, Tobacco, Coffee, Tea, Cigar, Cherrot, Cloth, Matches, Vegetable product, Steel, Power Alchohal, Sugar, Tyre-tubes, Cement, Soaps, Art silk, Foot wear, Paper, Paints-Varnish, Electric-bulbs, Fans, Batteries, Fabrics, Power-looms, Vegetables, Non-essential oils, Yarn Mechanical-lighter, Motor Spirit, Motor Car"

எக்சைஸ் வரியால் இவ்வளவு பணம் வசூலிப்பதில் சென்னை மாநில சர்க்காருக்கு மத்திய சர்க்கார் எவ்வளவு பணம் தருகிறது? முன்னேற்றக் கழகக்காரர்களுக்கு ஏதாவது கணக்கு இருக்கிறதா? என்று ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; எங்களுக்கு சரியாகக் கணக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இல்லை. இருந்தாலும் கிடைத்திருக்கக் கூடிய மட்டும் சொல்லுகிறேன்.

இந்தத் துறையில் மட்டும் சென்னை மாநிலம் 21.58 கோடி ரூபாய் எக்சைஸ் வரியாக கொடுத்துக் கொண்டு வருகிறது.

மாநில சர்க்கார் தங்களுடைய வரவு செலவு திட்டத்தில் விழும் துண்டை சரிக்கட்டுவதற்காக ஏதாவது மக்களுக்குத் தேவையான நன்மைகளை செய்ய வேண்டுமென்று கருதி வரிபோட வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் அடைக்கப் பட்டிருக்கின்ற இடங்கள் இவ்வளவு இருக்கின்றன. தேவைக்குத் தக்க பணம் கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தின் பேரில் அமைச்சர் அவர்கள் விவசாய வருமான வரியை போட்டிருக்கிறார்கள். ஆனால் கணக்கெடுக்கும் பொழுது விவசாய வருமானத்தோடு, மற்ற துறைகளில் வரும் வருமானத்தையும் சேர்த்துக் கணக்கெடுக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். இன்றைய தினம் அதற்குக் கூட இந்த மாநில சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறதா என்பதில் எனக்கு ஐயப்பாடு இருக்கிறது. ஏனென்றால் நமது வரவு-செலவு திட்டத்தில், பிற துறைகளிலிருந்து வருகின்ற வருமானத்தில் வரிவிதிக்கும் அதிகாரம் மத்திய சர்க்காருக்கு அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர, மாநில சர்க்காருக்கு இல்லை. யாராவது வழக்கறிஞர்களை வைத்து, சர்க்கார் வாதாடலாமே தவிர, மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் அந்தத் துறைகளின் மீது வரிவிதிக்கும் அதிகாரத்தை மத்திய சர்க்கார்தான் வைத்துக் கொண்டு இருக்கிறது என்பது தெரியும்.

இவைகளையெல்லாம் நான் சொல்லுவது, மத்திய சர்க்காரின் மேல் குற்றஞ் சாட்ட வேண்டுமென்பதற்காக அல்ல! மத்திய சர்க்காரிடத்தில் இவ்வளவு துறைகளை ஒப்படைத்து விட்டு, பிறகு எவ்வளவுதான் ஆற்றல் படைத்தவர்களாக இருந்தாலும் சரி, நமது மாநில அமைச்சர்களால் துண்டு விழும் வரவு செலவு திட்டத்தைத் தான் தயாரிக்க முடிகிறது!

இந்த துண்டு விழுந்த தொகையைச் சரிக்கட்டுவதற்கு யாரைப் பார்த்து வரி போட்டால் அதிகமான பணம் கிடைக்கும் என்று எண்ணிப் பார்த்து நிதி அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அதோடு "ஆமாம்! இதில் கஷ்டங்கள் இருக்கின்றன. இவைகளை மாற்றுவதற்கு வேண்டிய வழிகளை எதிர்க்கட்சித் தலைவர்கள் வேண்டுமானால் சொல்லட்டுமே, கேட்கலாம்!" என்று சொன்னார்கள். உண்மையில் வழிமுறை தெரிந்திருந்தால், என்னைப் பார்த்துக் கேட்டிருக்க மாட்டார்கள். சிறு குழந்தைச் சந்திரனைப் பிடித்துத் தரவேண்டு மென்று அழுகின்ற நேரத்தில், அதன் தாய் "அந்த சந்திரனை என்னால் பிடிக்க முடியாது, சந்திரனைப் பிடிப்பதற்கு உன்னை ஏவுகிறேன் பிடித்து வா?" என்று அந்தத் தாய் சொல்லுகின்ற கனிவை நிதியமைச்சர் அவர்களிடத்தில் காண்கின்றேன். சந்திரனைப் பிடிக்க முடியாது - மத்திய சர்க்காருடைய கையில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது எல்லா அதிகாரமும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

உண்மையில் இந்த மத்திய சர்க்காரில், வரிகள் என்று சொல்ல வில்லை, வரித்துறைகள் அவ்வளவும் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன, சிறிய அளவு தான் மாநில சர்க்காரிடத்தில் இருக்கிறது.

ஆங்கிலத்தில் வரிமுறைகளைப் பற்றி எடுத்துச் சொல்லுவார்கள். சில வரிகள் "எலாஸ்டிக்" (Elastic) அதாவது வருவாய் அதிகரிக்க, அதிகரிக்க வரித்தொகை அதிகரித்துக் கொண்டே போகும். "இன்-எலாஸ்டிக்" (Inelastic) என்பது வருவாய் எவ்வளவுதான் அதிகரித்தாலும் அதனால் வரிகள் வளராது என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். நில வருவாய் என்பது குறிப்பிட்ட அளவு தான் வளருமே தவிர, மாநிலச் சர்க்காருக்கு இன்றைய தினம் இருக்கின்ற பசியை எண்ணி, மாநில சர்க்காரின் பற்றாக்குறையை எண்ணி, நிலங்கள் நாலைந்து போகம் விளைந்து விடாது. அதெல்லாம் நந்தனார் காலத்தோடு நின்று போய்விட்டது. நந்தனார் காலத்தில் நந்தனாருக்கு மட்டுமே ஒரே இரவில் உழாமல், விதைக்காமல், மறுநாள் காலை அறுவடை செய்ய முடிந்தது என்று கதை சொல்லுகிறது. அது இப்போது எப்படிக் கிடைக்கும்?

நான் குறிப்பிட்ட இந்த வரிகள் எல்லாம் மக்களின் வாங்கும் சக்தி அதிகரிக்க அதிகரிக்க, மக்களின் பண்பாடுகள் அதிகரிக்க

அதிகரிக்க, மக்களுடைய தேவைகள் வளர வளர, இந்த வரிகளும் வளர்ந்து கொண்டே போகும். 1953-54ல் 27 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அந்த அளவு வளர்ச்சியடையும் வரிகள், வரித்துறைகள் எல்லாம் மத்திய சர்க்காரிடத்தில் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன, அதனால்தான், இந்த மாநிலத்தவரல்ல, வேறொரு மாநிலத்தைச் சார்ந்தவர் இதைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்.

அதாவது "நாம் ஒரு குடியேற்ற நாட்டின் அந்தஸ்திலேயே இருக்கிறோம். உண்மையான விடுதலை இல்லை!" என்று இந்த மாகாணத்திலுள்ளவரல்ல, வேறொரு மாகாணத்திலுள்ள ஒருவர், பொறுப்பற்றவர் அல்ல, பொறுப்புள்ள ஒருவர், ஏனோ தானோக்களில் சேர்ந்தவர் அல்ல, யாரென்று கவனிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ள ஒருவர், இவ்வாறு சொல்லியிருக்கிறார்.

"It is by now painfully apparent that our rulers in Delhi cannot be counted up on to be fair to underdeveloped regions. It is the people concerned that by their united and strong action must wrest what is their due."

என்று சொல்கிறார். நான் அசாம் மாகாணத்தைப் பற்றி குறிப்பிடுகிறேன். அசாம் மாகாணத்திற்கும் மத்திய சர்க்காருக்கும் இடையில் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை சம்பந்தமாக ஏற்பட்ட தகராறில், இந்த விதமாக அங்குள்ள அரசியல் தலைவர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்த அளவுக்கு மனப்பான்மை வளர்ந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, மாநில சர்க்காருடைய கரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மத்திய சர்க்கரிடத்தில் எல்லா அதிகாரங்களையும் கொடுத்து விட்ட காரணத்தினால், நமக்குப் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தை நாம் தயாரிக்க வேண்டியிருக்காது என்பதை உள்ளடக்கி,

"Stark fact is that what Assam is enjoying the new rulers of the country is not freedom, but the status of a colony"

நாம் குடியேற்ற நாட்டின் அந்தஸ்தில்தான் இருந்து வருகிறோம் என்றும், அசாமிலுள்ள அரசியல் தலைவர் சொல்லுகிறார்.

நான் இவ்விதம் சொல்வதை வைத்துக்கொண்டு மிகச் சாமர்த்தியமாக நமது நிதி அமைச்சரவர்கள், வடக்கு - தெற்கு சொல்லுகின்ற அண்ணாதுரை இப்போதாவது அசாமுக்குக் கூட கவலை இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளுகின்றார் என்று கூறி வாதாடப் போகிறார்கள் என்று முன் கூட்டியே நான் ஊகிக்கிறேன். நான் ஒன்று சொல்வேன், அசாமுக்குக் கவலை இருக்கிறது, நமக்கும் கவலை இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்! அவர்கள் தங்கள் பாசத்தை எவ்வளவு காண்பித்தாலும்கூட, தங்களுடைய கவலையைத் தெரிவித்துக் கொள்ளுவதில் தவறில்லை என்பதை நாம் பார்க்க வேண்டும்! "தாயும் மகளும் ஒன்று என்றாலும், வாயும் வயிறும் வேறு!" என்கின்ற முறையில் அவர்கள் இருந்து வருவதை நாம் பார்க்க வேண்டும்! நம்முடைய நிதியமைச்சர்.

அவர்களோ மத்திய சர்க்காரினால் நியமிக்கப்பட்ட நிதிக்குழுவினிடத்தில் காரசாரமாக விஷயங்களைப் பற்றிப் பேசி விவாதித்து அப்பழுக்கற்ற ஆதாரங்களைக் காட்டி எவ்வளவோ திறமையுடன் வாதாடினாலும் பெற வேண்டியதைப் பெற முடியவில்லை என்று சொல்லி, ஆனால் பெற்றதற்கு நாம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்வோம் என்று சொல்லுகிறார்கள். அசாம் மாகாணத்திலுள்ளவர்கள் "வெட்டு ஒன்று, துண்டு இரண்டு!" என்று பேசக்கூடிய நேரத்தில் நமது நிதியமைச்சரவர்கள், எதிர்பார்த்த அளவுக்குக் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, கிடைத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்வோம்" என்று எடுத்துச் சொல்வதிலிருந்து எனக்குத் தோன்றுகிறது, மிக விரைவில் அவர்களே அங்கே போய் உட்கார்ந்து கொண்டு நாம் கேட்கும் போதெல்லாம் "இல்லை, இல்லை !" என்று சொல்லுவார்களோ, அதற்காகத்தான் இப்போது இப்படிச் சொல்லுகிறார்களோ என்று நானே ஊகித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது! எது எப்படியிருந்தாலும். . .

உயர்திரு. ஆர். வெங்கட்ராமன் : (இடை மறுத்து) "அவர் அங்கே போனால் நமக்கு வேண்டியதைக் கொடுப்பார்!"

திரு. சி.என். அண்ணாதுரை : "நம் தொழிலமைச்சர் அவர்கள், நிதியமைச்சர் அவர்கள் அங்கே போனால் பணம் தருவார்கள் என்று

சொல்கிறார்கள். அவர் அப்படி சொல்வதிலிருந்து, யாராவது அங்கேயிருந்து கொண்டு நமக்கு நியாயமாகப் பணம் தரவேண்டுமென்ற ஆவல் அமைச்சருக்கு எவ்வளவு இருக்கிறது என்பது தெரிகிறது!

உயர்திரு. ஆர். வெங்கட்ராமன் : நியாயமாக இல்லை, அதிகமாக என்று சொல்லலாம்.

திரு. சி.என். அண்ணாதுரை : இப்படிச் சொல்வது நம்முடைய வாதத்தைத்தான் உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது! நமக்கு வேண்டியவர்கள் அங்கு இருந்தால், நமக்கு அதிகமானப் பணம் கிடைக்கும். இப்பொழுது குறைவாகக் கிடைப்பதற்குக் காரணம் நமக்கு வேண்டியவர்கள் அங்கு இல்லாததுதான்! இப்போது சாதாரணமாகப் போட்டிருக்கிற வரித் துறைகளைப் பொறுத்த வரையில் அந்த வரித்துறைகளை எங்கள் கட்சி எதிர் கட்சியிலிருந்து இதுவரை எதிர்க்க வில்லை நானும் எதிர்க்கவில்லை.

இன்றையதினம் நிலத்திற்கு உச்சவரம்பு கட்டவேண்டுமென்று எடுத்துச் சொல்லாத கட்சியை முற்போக்கான கட்சியென்று நாட்டிலே யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நாட்டிலே ஒருமைப்பாடு இருக்கிற பிரச்சினை இது. எதனால் இவ்வளவு காலதாமதம் இதற்கு ஏற்படுகிறதென்று எனக்குப் புரியவில்லை. ஒரு சமயம் அடுத்த தேர்தல் முடிந்து, அதற்குப் பிறகு பார்க்கலாம் என்ற அளவுக்கு அமைச்சரவையில் உள்ளவர்கள் கருதுகிறார்களோ என்று தெரியவில்லை. சாதாரணமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலும், வெளியே பேசுகின்ற போதும், "பணக்காரர்களிடத்தில் உள்ள பணத்தை வாங்கிக் கொள்ள முடியும்! வாங்கத் தெரியும்!" என்று சொல்லுகிறார். அவருக்கு அந்தத் திறமை இருக்கிறது. அந்தத் திறமை அவருக்குக் கடைசி வரை இருக்குமா? ஐயப்பாடுதான்! அவருக்குப் பிறகு ஆட்சியாளராக அமருகின்றவர்கள் அவரைப் போல பணக்காரர்களிடத்தில் பக்குவமாகச் சொல்லி வாங்கக் கூடிய அளவுக்கு திறம் படைத்தவர்களாக தொடர்ச்சியாக வருவார்களா என்று தெரியவில்லை.

உலகத்திலே பொருளாதார நிபுணர்கள் ஒருவரிடத்திலே பணம் குவிந்திருக்கக் கூடாது என்று கருதும்போது, இவர்கள் மட்டும் ஏன் இன்னும் இதை விட்டு வைத்திருக்கிறார்கள் என்பதை என்னால்

திரு. சி.என். அண்ணாதுரை : நமது முதல் அமைச்சர் ''என்னை அழைத்துக்கொண்டுபோய் ஏமாற்றலாம் என்று பார்த்தீர்களா?'' என்று சொல்கிறார், காங்கிரஸ் அல்லாத மாற்றுக்கட்சிக்காரர்கள் வெற்றி பெற்ற தொகுதிகளில், முதல் அமைச்சர் பணம் செலவழிக்கக் கூடாது என்று திட்டமிட்டிருக்கிறாரா? அப்படிக் கூறி விடட்டுமே, பார்க்கலாம்! காங்கிரஸ் வெற்றிபெற்ற தொகுதிகளில் பணம் கேட்க எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அவ்வளவு உரிமை எங்களுக்கும் இருக்கிறது. ஆகையால் ஏமாற்றுவதற்கு அல்ல; உண்மையைச் சொல்ல வேண்டுமானால், என்னுடைய தொகுதி மக்கள் என்பேரில் ஏமாற்றம் அடையாமல் இருக்க வேண்டுமென்பதுதான் என் நோக்கம். ''முதல் அமைச்சரைக் கேளுங்கள். பணம் தரவேண்டியவர் அவர்தான்!'' என்று நான் சொன்னேன். என்னுடைய தொகுதி மக்கள் என் மீது திருப்தியாக இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதெல்லாம் ''தொகுதி உறுப்பினர் செய்ய வேண்டியதையெல்லாம் செய்தார், முதல் அமைச்சருக்கு இன்னும் மனம் வரவில்லை, அவருக்கு மனம் வரவேண்டும்!'' என்பதுதான். என்னுடைய தொகுதியில் உள்ளவர்கள், அவரை வரவேற்று வாழ்த்தியனுப்பியிருக்கிறார்கள். இரண்டாம் முறையாகவும் அந்தத் தொகுதிக்கு வந்தார். இந்தத் தடவையாவது என் தொகுதியைக் கவனிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

ஒருவரையொருவர் ஏமாற்றுவது அல்ல. ஒருவரையொருவர் கேட்டு வாங்குவதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறது. ஆகையால் முதல் அமைச்சரை ஏமாற்றவேண்டும் என்கிற நிர்ப்பந்தம் எனக்கு இல்லை. ஏமாற்றவேண்டும் என்று கருதி, நான் ஒரு பஸ் பர்மிட் கேட்கவில்லை, எந்தவிதமான சலுகையும் எனக்காக நான் கேட்கவில்லை. சலுகைகள் கேட்க வேண்டும் என்றால் எனக்கு வேண்டிய மந்திரி சபையையே நான் பார்த்திருக்கிறேன். அப்பொழுதும் நான் சலுகைகள் கேட்கவில்லை. இப்பொழுதும் கேட்பதாக அபிப்பிராயம் இல்லை. ஆகையால் இப்பொழுது ஏமாற்றம் ஒன்றும் இல்லை. சிவப்பு நாடா முறையை ஒழிப்பதற்கு தண்டலம் ஒருவழி. சிவப்புநாடா முறையை ஒழிப்பதற்கு பாகல்மேடு ஒருவழி என்று சொல்கிறார்கள். ஆனால் அவைகளினால் கிடைத்த பலன் என்ன? ஒன்றும் காணவில்லை.

ஊகிக்க முடியவில்லை!

நம் நிதியமைச்சர் அவர்கள் ''வரவு செலவுத் திட்டத்தைப் பார்த்து விட்டு தீர்ப்பு அளிக்காதீர்கள், ஆண்டு முடிந்த பிறகு தீர்ப்பளியுங்கள்'' என்று சொன்னார்கள். அந்த வகையிலே பார்க்கும் போது பல துறைகளில் ஒதுக்கிய பணத்தைச் செலவழிக்காமல் விட்டிருக்கிறார்கள். இதற்குக் குறிப்புகளையும் காரணங்களையும், காட்டுகின்ற நேரத்தில் சென்ற ஆண்டு அவர்கள் அளித்த விளக்கத்தை நினைவூட்ட விரும்புகிறேன்!

''பணத்தை ஒதுக்குகிறோம், திட்டங்களை தயாரிக்கிறோம், திட்டங்களைப் பகிர்ந்தளிப்பதில் முதலில் தயக்கம் ஏற்படுகிறது. ஆறு மாதங்களுக்குப் பின்தான் மளமள என்று திட்டத்திற்குப் பணம் கேட்கிறார்கள். அப்போது கண் மண் தெரியாமல் கொடுத்துவிடாது மிச்சம் பிடிக்க வேண்டியிருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்றால்'' - இது நான் சொல்வதல்ல நமது நிதி அமைச்சர் அவர்கள் சொன்னது. ''பரீட்சைக்கு முன்னர் படிக்காத மாணவன், பரீட்சை சமயத்தில் விழுந்து விழுந்து படிப்பதைப்போல் இருக்கிறது. இனிமேல் நாங்கள் அப்படிச் செய்ய மாட்டோம், திட்டமிட்டுப் பணியாற்றப் போகிறோம்'' என்று சொன்னார்கள். இப்போது திட்டமிட்டுப் பணியாற்றியதைப் பார்க்கும்போது லட்சக் கணக்கான ரூபாய் பணம் தேவையான இடங்களுக்குப் போகாமல், மீத்து வைக்கப்பட்டிருக் கிறது. அப்படி மீத்து வைக்கப்பட்ட முறையினால், துண்டுவிழக் கூடிய பட்ஜெட்டை உபரி பட்ஜெட்டாக ஆக்கி இன்றையதினம் காட்ட முடிந்திருக்கிறது. சிறு எடுத்துக்காட்டாகச் சொன்னால் ஒன்றை வைத்துக் கொண்டு மற்றவைகளை நிதி அமைச்சர் அவர்கள் ஊகித்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

டி.ஐ. சைக்கிள் கம்பெனியில் 5 லட்சம் சைக்கிள்கள் உற்பத்தி செய்யக்கூடிய வகையிலே ஆலோசனை இருக்கிறது என்று சென்ற ஆண்டு சொன்னார்கள். இந்த ஆண்டு 3 லட்சம் சைக்கிள்கள் உற்பத்தி செய்யத் திட்டம் இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். 5 லட்சத்திற்கு போட்ட திட்டம் 3 லட்சம் அளவுக்கு குறைந்திருக்கிறது. இதை யாரும் மறுப்பதற்கில்லை. 5 லட்சம் சைக்கிள்கள் தயாரிக்க வேண்டுமென்று நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கலாம். ஆனால் அதற்குப் போதுமான அளவு வசதி இல்லாததனாலே 3 லட்சம் சைக்கிள்கள்

தயாரிக்கிறோம் என்று அவர்கள் சொல்லியிருக்கலாம். 1 லட்சம் 2 லட்சத்திலே தகராறு வேண்டாம், 10-12 நாட்களாகக் கோடிக் கணக்கில் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம் சில லட்சம் போனால் பரவாயில்லை. திட்டமிட்டுக் காரியங்களை நிறைவேற்றும்போது, "பொறுங்கள் பொறுங்கள்!" என்ற சொல்லுகிறார்கள். பார்த்தால் தெரிகிறது, பல துறைகளில் உள்ள குறைபாடுகளையும், எதிர்பார்த்தது கிடைக்காததையும், எடுத்ததை நிறைவேற்றாததையும், ஆகையால் தான் இன்றையதினம் பல்வேறு துறைகளில் மனக் குமுறல் இருக்கிறது.

புள்ளி விவரங்களைக் காட்டி மக்களைத் திருப்தி செய்து விடலாம் என்று எண்ணி விடாதீர்கள்! ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்காக இவ்வளவு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். கல்விக்காக இத்தனை கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று புள்ளி விவரங்களைக் காட்டினால் போதாது. நாட்டு மக்கள், ஹரிஜனங்கள் சென்ற ஆண்டு இருந்ததைவிட இந்த ஆண்டு எந்த அளவுக்குச் சமுதாயத்தில் உயர்ந்திருக்கிறார்கள், சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு பசி, பட்டினி எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது, குடியிருப்பு வீடுகள் கட்டுவதில் இந்த ஆண்டு எவ்வளவு கஷ்டம் குறைந்திருக்கிறது என்பதைக் கணக்குப் பார்த்துத்தான் மதிப்பிடு வார்களே தவிர, கொடுக்கும் புள்ளி விவரங்களைப் பார்த்து திருப்தி யடைந்து விட மாட்டார்கள்.

ஓவியத்தில் ஊதா நிற வண்ணம் இவ்வளவு, நீலம் இவ்வளவு, கருநீலம் இவ்வளவு பயன்படுத்தினேன், நாலைந்து தூரிகைகளை உபயோகித்தேன், இரவு பகலாகக் கண்விழித்துத் தீட்டினேன் என்று சொன்னால் போதுமா? ஓவியம் பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறதா? பார்த்தவர் பாராட்டும் விதமாக இருக்கிறதா? என்பது தானே முக்கியம்!

அமைச்சர் அவை மக்களுக்குத் தேவையானவைகளை, குறைபாடுகளை, நாங்களே நேரில் போய்ப் பார்த்து நன்மை சாதிக்கப் போகிறோம் என்று எடுத்துச் சொன்னார்கள். சென்ற ஆண்டு அதற்காக ஒரு முறையை நம்முடைய முதல் அமைச்சர் வகுத்தார். அதுதான் எல்லா பத்திரிகைகளும் பாராட்டி எழுதிய "பாகல் மேடுபாதை"! முதல் அமைச்சர் பாகல்மேடு கிராமத்துக்குச் சென்றார்; அதிகாரிகளையும் உடன் அழைத்துச் சென்றார்; அங்குள்ள கிராம

மக்கள் ஆச்சரியத்தால் வாய்பிளந்து, ''முதலமைச்சரும் அதிகாரிகளும் நம்முடைய கிராமத்திற்குக் கூட வருகிறார்களே!'' என்று ஆவலுடன் வரவேற்றார்கள். அவர்கள் அங்குள்ள குறைபாடுகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவைகளை முதலமைச்சர் கேட்டு நேரிடையாகவே உத்தரவு போட்டார் என்று பத்திரிகைகளில் படித்தேன். நம்முடைய பத்திரிகைகளில் எல்லாம் ''இது அல்லவோ முறை! பாகல்மேடு பாதை!'' என்று பாராட்டியிருக்கிறார்கள். எனக்கு நான்கு நாட்களுக்குமுன் ஒரு சந்தேகம் வந்தது. ஆந்திராவுக்குச் சில இடங்கள் போய்விட்டதே, அதேபோல் இந்த பாகல் மேடும் போய்விட்டதோ? என்று; சந்தேகத்தைப் போலீஸ் அமைச்சரிடம் கேட்டேன். நல்ல வேளையாக பாகல்மேடு போகவில்லை என்று தெரிந்து கொண்டேன். இப்போது பாகல்மேடு இருக்கிறது; ஆனால் பாகல் மேட்டுப்பாதை இல்லை.

சென்ற ஆண்டு முதல் அமைச்சர் செய்து காட்டியது சிவப்பு நாடா முறையை ஒழிப்பதற்கு என்று சொன்னார்கள். பாகல் மேட்டுப் பாதை சிவப்பு நாடா முறையை ஒழிப்பதற்கு என்று சொன்னால், அதைத் தொடர்ந்து நடத்தாதற்குக் காரணம் என்ன? சிவப்புநாடா முறையை நீடித்துக் கொண்டிருப்பதால் என்ன நன்மை கிடைக்க முடியும்?

பாகல்மேட்டில் நடந்ததைப் படித்தபிறகு, நானும் ஒரு பேராசைக்காரன், என்னுடைய தொகுதியிலும் அம்மாதிரி நேரடியான உத்தரவுகள் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். தண்டலம் என்னும் கிராமத்துக்கு முதல் அமைச்சர் வந்தார். அங்கு உள்ள கிராம மக்கள் குறைபாடுகளை எல்லாம் சொன்னார்கள். அதன் நிலைமை எப்படி இருக்கிறதென்றால், முதல் அமைச்சர் வசதியாக வருவதற்காக அங்குள்ள இஞ்சினியர்கள் இரவு பகல் பாராமல் போட்டிருந்த பாதை இன்று மழையால் அடித்துக் கொண்டு போகப்பட்டிருக்கிறது. மறுபடியும் முதல் அமைச்சர் வந்தால், அந்தப் பாதையே தெரியாது.

பாகல்மேட்டுப்பாதை அவராலேயே கைவிடப்பட்டது. தண்டலத்தில் போடப்பட்ட பாதை அடைபட்டுப் போய்விட்டது?

உயர்திரு. கே. காமராஜ் : என்னை ஏமாற்றப் பார்த்தீர்கள்?

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஆண்டு அறிக்கையைப் படித்துவிட்டு "புள்ளி விவரங்களைமட்டும் சொல்லாதீர்கள், அதன் பலனையும் பார்த்துச் சொல்லுங்கள்!" என்று சொன்ன காரணத்தால், பலன் ஏற்படவில்லை என்பதை எடுத்துச்சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஓவியத்தின் வசீகரத்தைப் பார்த்துத்தான், ஓவியரின் திறமையைச் சொல்லவேண்டுமேயொழிய அதிலே செலவான வண்ணத்தைப் பார்த்துச் சொல்வது சரியல்ல. வண்ணத்தைக்கொண்டு ஓவியத்தைத் தீர்மானிப்பது இயலாத காரியம். ஆகையினால்தான், நாங்கள் வேறு ஒருவழியை ஒருமுறை கண்டுபிடித்தாக வேண்டும் என்று நானும் என்னைச்சார்ந்த கட்சிக்காரர்களும் கருதுகிறோம். "அது இந்தத் தலைமுறையில் நடக்காது" என்று ஆளுங்கட்சியினர் சொல்லுகிறார்கள். அது இந்தத் தலைமுறையில் நடப்பதாக இல்லை என்றால், இந்தத் தலை முறையிலேயே அதற்கு வேண்டிய துவக்கம் ஏற்பட்டால் தான் அடுத்த தலைமுறையிலாவது அதற்கு முடிவு ஏற்படும். அந்தக்காலம் வரப்போகிறது! கனியப்போகும் அந்தக் காலமும் வரப்போகிறது! அதற்கு முதலில் வித்து இடவேண்டும். வித்திட்டு, உரமிட்டு, பயிராகி அதற்குப் பிறகு பலன் கிடைக்கும் காலம் வரட்டும் என்று காத்திருக்கலாம். அப்படிப்பட்ட காலம் தானே வரும் என்று நினைத்து நாங்கள் அதற்கு வித்திடாமல் இருக்கமுடியாது என்ற காரணத்தால் நானும் என்னைச் சார்ந்த கழக உறுப்பினர்களும், ஆளும் கட்சியில் உள்ளவர்கள் எவ்வளவுதான் எங்களைக் கேலியாகச் சொன்னாலும் கூட, வடக்கு-தெற்கு என்பதை எடுத்துச் சொல்லிக் கொண்டே வருகிறோம்.

நாம் தனி நாடாக இருந்தால் வாழமுடியாது. தனியாக வாழ்வதற்கு நமக்கு என்ன வசதி இருக்கிறது என்ற பொருள்பட நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பன்முறை எடுத்துப் பேசுகிறார்கள். அவர்கள் எடுத்துப் பேசிய காரணத்தால் நான் அவருக்கு ஒன்று குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

உண்மையிலேயே ஒரு நாடு பெரிய நாடு சிறிய நாடு என்பதைப் பார்த்து அதன் எதிர்காலத்தை முடிவு செய்ய முடியாது.

சென்ற ஆண்டு ஜூலை மாதம், ஐரோப்பா கண்டத்திலிருக்கிற ஹேக் என்ற நகரத்தில், நமது பாரத நாட்டு பிரதமர் பண்டித நேரு அவர்களே அப்படி எடுத்துச் சொல்லியிருக்கிறார்!

ஆகவே ஒரு நாடு சிறிய நாடா அல்லது பெரிய நாடா என்று கண்டு பிடிப்பது அதனுடைய செழிப்பைப் பொருத்திருக்கிறது. இப்படி குறுகிய மனப்பான்மையுடையவர் சொல்லவில்லை. பரந்த மனப்பான்மையுடைய பண்டித நேரு அவர்களே இப்படி எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஒரு நாட்டின் விஸ்தீரணத்தைப் பொறுத்து இந்த நாட்டின் முக்கியத்துவத்தைக் கணிப்பது சரியல்ல என்று அவரே சொல்லியிருக்கிறார். ஒரு நாடு பெரிய நாடாக இருந்தாலும் சிறிய நாடாக இருந்தாலும் அந்த நாடு தனியாக இயங்க வேண்டுமானால், அதன் மக்களை வாழவைக்கும் அளவு இயற்கை வளப்பம் இருக்கிறதா என்பதைப் பார்த்து அதைப்பற்றி கணக்கிட வேண்டும் என்று ஆங்கிலத்தில் சொல்லியிருக்கிறார்கள். அதாவது ''வையபிள் மாகாணம்'' (Viable Economic Quit) என்று சொல்லுவார்கள். பொருளாதாரத் திட்டத்தின் கீழ் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளக் கூடிய பிறர் கையை எதிர்பார்க்காத அளவு இயற்கை வளம் இருக்கிறதா என்று பார்த்து அந்த நாட்டைப் பற்றித் தீர்மானம் செய்வார்கள். அப்படி பொருளாதார நிபுணர்களும், தத்துவாசிரியர் களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த மன்றத்திலுள்ள காங்கிரஸ் உறுப்பினர்களில் பலர், அவர்களுடைய தொகுதியிலுள்ள வளங்களைப் பற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலிருக்கிற நாகப்பட்டின உறுப்பினர் தோழர் என். எஸ். ராமலிங்கம் அவர்கள், தங்களுடைய நாகப்பட்டினத் துறைமுகத் திட்டத்தை எடுத்துக் கொண்டு அதை விரிவு படுத்தினால் எவ்வளவோ வருமானம் கிடைக்கும் என்றும், நாட்டை வளமுறச் செய்யலாம் என்றும், அங்கே எஃகுப் பெட்டிகள் தயார் செய்யக் கூடிய தொழிற்சாலை இருப்பதால், அவைகளை ஏற்றுமதி செய்து நாட்டை வளம்பெறச் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார். அதன் மூலம் நாட்டின் செல்வம் வளரும் என்றும் குறிப்பிட்டார்.

நம்முடைய மதிப்பிற்குரிய வேதாரண்யம் தொகுதி உறுப்பினர் சர்தார் வேதரத்னம் அவர்கள் தங்களுடைய தொகுதியில் இருக்கக்

கூடிய வளங்களைப் பற்றி எடுத்துச்சொல்லி, அங்கே முந்திரியையும், தேக்கு மரங்களையும் பயிரிட்டால் நல்ல வருமானம் கிடைக்கும் என்றும், அப்படிப் பயிர் செய்வதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன என்றும் குறிப்பிட்டார்.

இப்படிப்பட்ட வளங்களை கணக்கில் எடுத்துப் பார்க்கும் போது, சிறிய நாடு பெரிய நாடு என்ற பிரச்சினை இல்லை, ஒரு நாட்டின் முக்கியத்துவம் அந்த நாட்டின் வளத்தைப் பொறுத்திருக்கிறது. அந்த நாட்டு மக்களின் நல்ல பண்பைப் பொறுத் திருக்கிறது. இப்படி பண்டித நேரு அவர்கள் சொன்னது மட்டுமல்ல, மற்றொரு அரசியல் தலைவரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதையும் இந்த சமயத்தில் அமைச்சர் அவைக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

இதை நான் சொல்ல வேண்டியதற்குக் காரணம், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள், "இவ்வளவு சின்ன நாடாக இருந்தால் செயற்கை சந்திரனைச் செய்ய முடியுமா?" என்று கேட்டார்கள், ஒரு தடவை. அதைச் செய்வதற்கு ரஷ்யாவில் தானே முடிகிறது! அமெரிக்காவில் தானே முடிகிறது! நீங்கள் தமிழ் நாடு, திராவிட நாடு என்று பிரிந்து போனால், உங்களுக்குத் தேவையான இயந்திரங்களை வாங்கக் கூடிய அளவு பணம் கிடைக்காதே!" என்று கழிபெரக்கப் பட்டார்!

செயற்கைச் சந்திரனைச் செய்வதற்கு ரஷ்யாவால் முடிந்தது போல, அமெரிக்காவால் முடிந்தது போல, அந்த நாடுகளை விடச் சிறியதாக இருக்கக் கூடிய இங்கிலாந்து நாட்டிலே செயற்கைச் சூரியனை செய்வதற்கு இன்றைய தினம் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சூரியனுக்கு எந்த அளவு உஷ்ணம் இருக்கிறதோ, அந்த அளவு உஷ்ணத்தை - வெப்பத்தை - விஞ்ஞான முறையில் பெற்றுக் கையாளலாம் என்று கண்டிருக்கிறார்கள்.

ஆகையால் சின்ன நாடா, பெரிய நாடா என்ற பிரச்சினை அர்த்தமற்றது. நாங்கள் சொன்னால் ஏழைச் சொல் அம்பலம் ஏறாது என்ற காரணத்தால், அவர்கள் போற்றத்தக்க, மதிக்கத்தக்க, வழிபடத் தக்க பண்டித நேரு அவர்கள் சொன்ன வாசகத்தைச் சொன்னேன்.

மற்றொரு தலைவருடைய வாசகத்தையும் சொல்ல விரும்புகிறேன் :

"To think that small nations had no role to play in international affairs was a dangerous and defeatist attitude I refuse to subscribe to this dangerous and defeatist attitude. I believe that it will be in the interest of the (Super-states)themselves that small states should not leave to them (Super-states) the entire responsibility for making decisions which may affect all mankind"

- Burmese Premier U Nu.

''சிறிய நாடுகளைப் பெரிய நாடுகள் புறக்கணித்துவிடாது, புறக்கணிக்கக் கூடாது, புறக்கணிக்க முடியாது, புறக்கணித்தால் அவைகளுக்கே ஆபத்து'' என்று சொல்லியிருப்பவர் பர்மிய நாட்டு பிரதம மந்திரி யூ. நூ. அவர்கள்!

இதை நான் சொல்வதற்குக் காரணம் - 'தனிநாடு' சிறுநாடு; ஆகவே வாழ்வதற்கு வழி இல்லை! என்று சொல்கிறார்களே அதற்காகத்தான்; ஒரு நாடு பெரிய நாடாக இருந்தாலும், சிறிய நாடாக இருந்தாலும், அது எந்த அளவுக்கு இயற்கை வளத்தைப் பெற்றிருக்கிறதோ, அந்த இயற்கை வளத்திற்கும் உலகத்திற்கும் எந்த அளவுக்குத் தொடர்பு இருக்கிறதோ, அதைப் பொறுத்துத்தான் ஒரு நாட்டினுடைய வாழும் சக்தி அடங்கியிருக்கிறது.

அப்படியிருக்கும்போது நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுகிற அந்நியச் செலாவணியைப் பற்றி நான் இங்கே கொஞ்சம் குறிப்பிடப் பிரியப்படுகிறேன். ''அந்நியச் செலாவணியில்லாமல் நாம் வெளிநாடுகளிலே இருந்து இயந்திரங்களையும் மற்றவைகளையும் வரவழைக்க முடியாது, பாரதத்தோடு ஒன்றாக இருந்தால் தான் அந்நிய செலாவணி கிடைக்கும்; ஆகையால்தான் நாங்கள் அங்கேயிருக்கிறோமே தவிர. . .'' என்று எடுத்துச் சொன்னார்கள். 'அங்கே இருக்கிறோமே தவிர' என்று சொல்வது தவறு. அவர் அப்படிச் சொன்னார் என்ற கருத்தை நான் சொல்லவில்லை. நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வடநாட்டிலிருந்து வாங்கவேண்டியதை வாங்கிக்கொண்டு, பிறகு பிரிந்துகொள்ளலாம், அண்ணாதுரையும்

சேர்ந்துகொண்டு விடலாம் என்று திட்டமிட்டிருப்பதாக இரண்டு மூன்று வடநாட்டுப் பத்திரிக்கைகள் அவரைக் கண்டித்து எழுதி யிருந்தன. ஆகவே நிதியமைச்சரை அப்படிப்பட்ட சந்தேகம் எழும் படியான சிக்கலான நிலைமைக்கு நான் ஆளாக்க மாட்டேன். என்னுடைய கருத்தைச் சொன்னேன்.

''வெளிநாட்டு செலாவணி இருந்தால்தான் நமக்கு நல்ல இயந்திரங்கள் கிடைக்கும்'' என்று அவர் எடுத்துச் சொன்னார். என்னுடைய வாதம் - அந்நியச் செலாவணி பெறத்தக்க அளவு, வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடிய பொருள்கள் இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய தென்னாட்டில்தான் அதிகம்; இந்தியத் துணைக்கண்டத்தில் மற்ற இடங்களில் மிகக் குறைவு என்பது என்னுடைய வாதம்.

வெளிநாடுகள் விரும்பி வாங்குவது, வெளி நாட்டுக்காரர்கள் தேவை என்று கருதுகிற எந்தப் பொருளைப் பார்த்தாலும் இங்குதான் அவை ஏராளமாக உள்ளன. நம்முடைய நாட்டுத் தோல் (Hides and Skins) தேயிலை, காப்பி, ரப்பர், மிளகு, வாசனைத் திரவியங்கள், முந்திரி, தோரியம், யுரேனியம், பாக்சைட், மானசைட் இப்படிப் பட்டவைகள் வெளிநாடுகளுக்கு இன்றையதினம் தேவைப்படு கின்றன. இங்கே விளையும் வேர்கடலை டாலர்களையும், ஸ்டெர்லிங்குகளையும் இந்தியத் துணைக் கண்டத்திற்கு வாங்கி யளிக்கிறது. இவ்வளவு அதிகமான அளவு டாலர் வாங்கித் தரும் பொருளை வைத்துக் கொண்டிருககும் அந்நியச் செலாவணியைப் பற்றி ஏன் கவலைப்படவேண்டும்?

நம் வீட்டுச் சட்டியில் வெண்ணெய் இருக்கும் போது, அடுத்த வீட்டில் நெய் கொடுத்தார்கள் என்று பாராட்டுவதிலே என்ன பொருள் இருக்க முடியும்?

அந்நியச் செலாவணியைத் தேவையான அளவுக்கு வாங்கித் தரத்தக்க இந்தப் பொருள்களை நாம் தனி நாடு என்றால், எந்த நாடுகளுக்கு அவை தேவையோ அங்கு கொடுத்து, அந்த நாடுகளிலி ருந்து பெறத் தக்கவைகளை நாம் பெற முடியும்! நாம் தனி நாடாக இருந்தால் என்ன செய்ய முடியும் என்று கேட்பவர்களுக்கு இதைச் சொல்கிறேன்!

அப்படிச் சொல்லும் போது, நம்முடைய ஆட்சியாளர் இதுவரை ஒரு வாதத்தைச் சொல்லிக் கொண்டு வந்தார்கள். "இப்பொழுது ஒன்றாக இருப்பது போல், இனியும் ஒன்றாகவே இருப்பதில் என்ன கஷ்டம்?" என்று கேட்கிறார்கள். ஆனால் அந்த வாதத்தை அவர்களே படிப்படியாக இன்றைய தினம் ஓரளவு குறைத்துக் கொண்டு வருகிறார்கள்.

கேள்வி நேரத்தின் போது கேள்வியொன்றிற்குப் பதில் சொல்லும்போது நிதி அமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு சொன்னது நினைவிற்கு வருகிறது. டி.டி.கே. அவர்கள் 'நம்மவர்' என்று ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டு அது பற்றி பிரச்சினை வந்தபோது நிதி அமைச்சர் அவர்கள் எழுந்து, பெருமிதத்துடன், மகிழ்ச்சியோடு சொன்னார், "ஆம்! தமிழர் தென்னவர் என்று அவரைச் சொல்லிக் கொள்வதற்குப் பின் வாங்கப் போவதில்லை!" என்று! "ஆனால் பிரிந்து விட வேண்டுமென்று சொல்கிறார்களே, அதிலே தான் வேறுபடுகிறேன்" என்றும் சொன்னார். நான் அந்த உணர்ச்சியை மெத்த மதிக்கிறேன். ஏனென்றால் அந்த உணர்ச்சி என்னை எங்கு கொண்டு செல்கிறதோ, அதைப் போலவே நிச்சயமாக அவரையும் இழுத்துச் செல்லும் என்ற உறுதிப்பாடு எனக்கு இருக்கிறது.

தமிழன், தென்னவன் என்ற உணர்ச்சியோடு இந்தியன் என்ற உணர்ச்சியையும் என்னுடைய பேதை நெஞ்சுக்குச் சொல்லிப் பார்த்தேன்! பெரியவர்கள் சொல்கிற நேரத்தில், கவிஞர்கள் பாடியிருக்கிற நேரத்தில், நம்முடைய நெஞ்சத்திலும் இந்தியன் என்ற பொது உணர்ச்சி தோன்றாதா என ஏங்கினேன். நாமக்கல் இராமலிங்கம் அவர்கள் பாடிய பாட்டு.

"தமிழன் என்றொரு இனம் உண்டு!
தனியே அவனுக்கோர் குணம் உண்டு!"

என்கிற அவரது சொல் என்னுடைய நெஞ்சுணர்ச்சியை உணர்ந்தே சொன்னது போல எனக்குத் தோன்றியது: ஆகவே தமிழனுக்கு இயல்பான உணாச்சி இருக்கிறது. வட நாட்டாரும், தானும் ஒன்று தான் எனச் சொல்லிக்கொண்டாலும், அது சொல்லளவில் தான் இருக்குமேயொழிய, நெஞ்சுணர்ச்சி அவ்வாறாக அமையாது என்கிற

முடிவில் நிதி அமைச்சர் அவர்களும் என்னுடன் ஒன்றுபட்டு படிப்படியாக மாறிக் கொண்டு வருவார்கள் என்று நம்பிக் கொண்டிருக்கிறேன்!

அந்த நம்பிக்கையைப் பெற்றிருக்கிற காரணத்தினால்தான் வருந்தி வருந்தி, வலியுறுத்தி இந்த விஷயத்தைச் சொல்கிறேனே தவிர புள்ளி விவரங்களைப் பார்த்து, 20.6, 20.2 என்பதாக எடுத்துச் சொல்வது கடினமானது என்பதால் சொல்லாமல் விடவில்லை. இப்படிப் பேசுவது எனக்குக் கடினமானது என்று காங்கிரஸ் அங்கத்தினர்கள் நினைத்தாலும், நிதி அமைச்சர் அவர்கள் அப்படிக் கருதமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். ஐந்தாறு ஆண்டுக்காலம் இந்தப் புள்ளி விவரங்களையே மனப்பாடம் செய்வதற்கு, நான் கல்லூரிகளில் எவ்வளவு எண்ணெய் செலவழித்திருக்கிறேனோ, அதில் கொஞ்சம் இப்பொழுது செலவு செய்தேனேயானால், இது எனக்குச் சாத்தியமானதே என்பதை நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி என் சார்பில் வாதிடுவார்கள் என்று நினைக்கிறேன்.

வெளி நாடுகளுக்கு அதிகமாக அனுப்பத் தக்கப் பொருள்கள் நம்மிடம் இருக்கின்றன. அப்படியிருக்க அந்நியச் செலாவணியைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? இன்றைய தினம் மத்திய சர்க்கார் தங்களுடைய வருவாயை எல்லா மாநிலங்களுக்கும் ஒரு சேரப் பங்கிட்டுக் கொடுக்கிறார்களா என்று பார்த்தாலும், அப்படி அவர்கள் பங்கிட்டுக் கொடுக்கவில்லை என்பதை என் போன்றவர்கள் சொல்வதால் பயனில்லை, இந்திய சர்க்காரிடத்தில் தொடர்பு கொண்டவரும், காங்கிரஸ் கட்சியிலே முக்கியமானவரும், நிதிக் கமிஷன் தலைவருமான திரு. சந்தானம் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

"It was a fact that economic development of the various states had not been even. There was a strong feeling all round that somehow or other, industries should be set up in all states. This feeling deserves to be respected."

என்று அவர் சொல்லிவிட்டு, "பக்ரா, ஹிராக்குட் அணைக் கட்டுகள் வடக்கே கட்டியிருக்கிறார்கள்; வடக்கே கட்டினால் என்ன, தெற்கே கட்டினால் என்ன, அங்கே கிடைக்கும் செல்வம் எல்லோருக்கும்தான்

கிடைக்கிறது!'' என்று எங்களுக்குப் பதில் சொல்கிற காங்கிரஸ்காரர் களுக்கு சூடு கொடுப்பது போல அவர் மேலும் சொல்கிறார்.

"It was true only to a small extent that increase of wealth in any part of India accrued to the whole people. The immediate benefit of a big irrigation project was plenty of employment in its neighbourhood during construction and after construction a notable increase in prosperity. It was so in regard to the setting up of the industries."

இதை எடுத்துச் சொல்வதன் மூலம் பெரிய பெரிய தொழிற் சாலைகள் இவைகளையெல்லாம் இந்தியத் துணைக் கண்டத்தில் எங்கே எந்த இடத்தில் கட்டினாலும் அங்கே கிடைக்கின்ற பலன் இந்தியா பூராவுக்கும் வரும் என்ற வாதம் தப்பு என்பதை காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திரு. சந்தானம் அவர்களே மறுத்து இருக்கிறார், இந்தக் காங்கிரஸ் வாதம். . .

உயர்திரு. கே. காமராஜ் : இதைக் காங்கிரஸ் வாதம் என்று சொல்லாதீர்கள்.

திரு. சி.என். அண்ணாதுரை : முதல் அமைச்சர் அவர்கள் இப்படிச் சொல்கிறவர்கள் காங்கிரஸ்காரர்கள் அல்ல என்று கருதலாம்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : திரு. சந்தானம் அவர்கள் தம்முடைய அறிக்கையில் தமிழ்நாடு அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிற நாடு, அதற்கு நிதியளிக்க வேண்டியது இல்லை என்று சொல்லியிருக்கிறார். அதையும் திரு. அண்ணாதுரை ஒப்புக் கொள்கிறார்களா என்று கேட்கிறேன்.

திரு. சி.என். அண்ணாதுரை : நான் உணவு விடுதிக்குப் போனால் வெண்டைக்காய் சாம்பார் என்றால் என் இலையில் ஊற்று என்பேன். கத்தரிக்காய் பொரியல் என்றால் பக்கத்து இலையை காட்டுவேன்.

உயர்திரு. கே. காமராஜ் : உங்களுக்குச் சாதகமான வாதத்தைத்தான் எடுத்துக் கொள்வீர்களோ?

திரு. சி.என். அண்ணாதுரை : தனக்குச் சாதகமானவற்றை எடுத்துக் கொள்வதுதான் மனித இயல்பு! நான் சொல்லவந்தது நம்முடைய நாடு தனியாக வாழ்வதற்கு ஏற்ற எல்லா வசதிகளையும்

பெற்றிருக்கிறது என்பது ஒன்று மட்டும் அல்ல, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தே தமிழ் மொழி இருந்த நிலை, தமிழர்கள் கடல் கடந்து சென்று வியாபாரம் செய்த நிலை, முதலிய வற்றை எல்லாம் நான் சொல்வதைக் காட்டிலும் வேறு ஒருவர் சொன்னார் என்றால் அதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள். சென்னை சர்வகலாசாலை பொருளாதார நிபுணராக இருந்த திரு. தாமஸ் அவர்கள் சொன்ன கருத்தை இங்கே வைக்க விரும்புகிறேன்.

"The commerce of South Indian ports with Alexandria reached great heights, especially during the years, 45-160 A.D. With growing prosperity in Rome, the demand for not only pepper, but other spices and luxury goods rose to unknown proportions. To satisfy the craving of Roman women, Indian peacocks, parrots, monkeys and other pets were also taken and elephants were required for royal processions in Rome.

As such, large imports had to be paid for in gold or species, authorities in Rome had to fact serious currency problems."

என்று ஈராயிரம் ஆண்டுக் காலத்திற்கு முன்னாலேயே தமிழகப் பொருள்கள் எவ்வளவு வெளிநாடுகளில் தேவைப்பட்டன என்று பி.ஜே. தாமஸ் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந் நிலை பழங் காலத்தில் இருந்தது!

இப்பொழுது இருக்கும் தமிழகத்தில் என்ன இருக்கிறது என்று கேட்கக்கூடியவர் களுக்கு காங்கிரஸ் அமைச்சர்கள் "கருப்புத் தங்கம்" என்று சொல்லும் நிலக்கரி, நெய்வேலியில், நமக்கு நிறைய கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். நமக்கு கிடைக்கும் நிலக்கரியும் அத்துடன் இணைக்கப்படுகிற துணைப்பொருள்களும் செய்தால் தான் இந்த மாநிலத்தின் செல்வ வளர்ச்சியை அதிகப்படுத்த முடியும் என்று எடுத்துச்சொல்லிய அமைச்சர் அவர்கள், இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் அந்நியச் செலாவணி என்று பற்றாக்குறை இருந்த போதிலும் அதற்குத் தடை ஏற்படாது, இது நமக்கு நிச்சயம் உண்டு என்று சொன்னார்கள். ஆனால் நிலக்கரிச் சுரங்கம் தோண்டுகிற வகையில்தான் உண்டு என்று, 'கோர் ஆப்தி ப்ளான்' (Core of the plan) அடிப்படையில் உள்ளதை சேர்த்திருக்கிறார்களே தவிர

மற்றவைகளைச் சேர்க்கவில்லை என்று மத்திய சர்க்கார் துணை நிதி அமைச்சர் அவர்கள் இரண்டொரு நாளைக்கு முன்னால் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நிலக்கரிச் சுரங்கத்தைத் தோண்டி எடுப்பதால் மட்டும் பயனில்லை. உரத் தொழிற்சாலையும், துணைப் பொருள்கள் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையும் அமைந்தால்தான் பலன் கிடைக்கும். ஆனால் இதுபற்றி எதுஎது திட்டத்தின் அடிப்படை என்று ஒரு அட்டவணை கொடுத்திருக்கிறார் மத்திய சர்க்கார் துணைநிதி அமைச்சர் பகத் அவர்கள். மத்திய மந்திரி சொல்வதைப் பார்த்தால் வருகிற ஐந்து ஆண்டிற்கும், நெய்வேலியில் இருந்து நமக்கு நிலக்கரி மட்டும்தான் கிடைக்கும் என்ற அவலநிலை இருக்கிறது.

நம்மிடம் இருக்கக்கூடியது இயற்கை வளங்கள் மட்டுமல்ல, நம் நாட்டின் பூமிக்கு அடியில் இருக்கிற வளங்களைத் தோண்டி பார்ப்பதற்கு நம்மிடம் ஆராய்ச்சி இலாகா இருக்கிறதா? அதாவது ''ஜியாலாஜிக்கல் சர்வே'' (Geological Survey) பற்றிஇந்த மாமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் அமைச்சர் அவர்கள், குறிப்பிட்டார்கள். ஆம்பூர் தொகுதி உறுப்பினர் அவர்கள் அக்கேள்வியை கேட்டார் என்று கருதுகிறேன். ''பூமிக்கு அடியில் இருக்கும் பொருள்களைக் கண்டுபிடிக்க சர்வே பார்க்க, நாம் ஏதாவது இலாகா வைத்திருக்கிறோமா?'' என்று கேட்டதற்குப் பதிலாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அந்த இலாகா மத்திய சர்க்காரிடம் இருக்கிறது!'' என்று. தனி நாடாக இருந்தால் இந்த ஆராய்ச்சி இலாகா நம்மிடம் இருக்கும். அது நம்மிடம் ஒப்படைக்கப்பட்டால் பூமிக்கு அடியில் இருக்கும் பல்வேறு பொருள்களை விலைமதிப்பில்லாப் பொருள்களை, கனிப் பொருள்கள் நாம் தேடி எடுக்க முடியும் என்று நான் நம்பிக் கொண்டிருக்கிறேன். நான் அப்படி நம்புவதற்குக் காரணம் நம் நாடு தனியாக நிற்க வேண்டுமென்பது மட்டுமல்ல, ஆராய்ச்சியாளர் பலர், இங்கு கிடைக்கக்கூடிய இங்குள்ள அரிய பொருள்களை கோடிட்டு காட்டுவதுமாகும். பிப்ரவரி 3-ம் தேதி மேற்கு ஜெர்மனியிலிருந்து வந்த இரண்டு நிபுணர்கள் வட ஆற்காட்டிலும் திருச்சியிலும் சில பகுதிகளைப் பார்த்துவிட்டுத் தந்திருக்கிற ஒரு ஆராய்ச்சிக் குறிப்பை நான் பார்க்க நேரிட்டது.

"Geologists from the Federal Republic of West Germany who recently conducted investigation of the soft rocks area in South Arcot

and Trichy Districts and near Quilon with regard to the occurrence of petroleum, have expressed the view that further work in the area by way of detailed mapping and geophysical examination would be justified.

இயற்கை வளங்கள், முயற்சி செய்தால் கிடைக்கக் கூடிய வளங்கள் ஏராளமாக இருப்பதை நாம் அறிவோம். அவைகளைக் கண்டு பிடிப்பதற்கு அதிகாரம் ஒரு துரைத்தனத்திற்கு இருக்க வேண்டும். அந்த அதிகாரங்களைத் துரைத்தனத்திற்கு வாங்கித் தர வேண்டும் என்பதற்கும் தனி நாடு வேண்டும் என்றுள்ள கோரிக்கைக்கும் தொடர்பு உண்டு என்று நான் கருதுகிறேன். நாம் தனியாக வாழ முடியுமா என்று கணக்கெடுக்கின்ற நேரத்தில் நமது அமைச்சர் அவர்கள் இன்று இருப்பவைகளை மட்டும் எடுக்காது கிடைக்கக் கூடியவைகளையும் (Potentialities) சேர்த்துக் கணக்கெடுக்க வேண்டும் என்று நான் விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

மூன்று பக்கத்திலும் கடல் சூழ்ந்திருக்கிற நம் நாட்டில் மீன் பிடித் தொழிலை மட்டும் எடுத்துக் கொண்டால் நாம் அதை வளர்க்க வேண்டிய அளவுக்கு வளர்ந்து, இப்போது வளர்க்கவில்லை என்று அர்த்தமல்ல, பத்தோடு பதினொன்றாக வைத்து விட்டு, அதற்கு ஒரு ஐந்து லட்சம், இதற்கு ஒரு பத்து லட்சம் என்று கொடுக்கின்ற முறையில்லாமல் அதை எடுத்து ஐந்து ஆண்டுக்குள் இந்த உலகில் இருக்கின்ற நாடுகள் எல்லாம் நம் நாட்டின் மீன் வளத்தைப் பார்த்து அவைகளைப் பெற்றுத் தீர வேண்டும் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்த தொழிலை வளர்க்க வேண்டும். ஆகவே, இதற்கென்று திட்டமிட்டு 10 கோடி அல்லது 20 கோடி ரூபாய் ஒதுக்கினதோ. "பாப்யோ படகுகள் 12 வாங்கியிருக்கிறோம்" இன்னும் ஆறு ஏழு வரும் என்று சொல்லக்கூடிய அவல நிலை இல்லாமல், திட்டமிட்டு வெளி நாட்டார் விரும்பத்தக்க வகையில், அவர்கள் விரும்பி வாங்கக் கூடிய நிலையில் இத் தொழிலை ஏன் நாம் நடத்தக்கூடாது?

நிதி அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மாற்று யோசனைகள் இருந்தால் சொல்லட்டுமே என்று சொன்னார்கள். நம் என்.ஜி.ஓ க்களுக்கு பணம் தருவதற்கு என்னை மாற்று யோசனைகளைச் சொல்லச் சொல்கிறார். என்.ஜி.ஓக்கள் விஷயத்தில் நிதி அமைச்சர் அவர்களுக்கு அக்கரை இருக்கிறது என்று

நினைத்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பணத்தை எதிலிருந்து எடுத்துச் செலவழிப்பது என்று சொல்வதற்கில்லை!

சாதாரணமாக அடுப்பின் அடியில் உட்கார்ந்து கொண்டு இதைச் சொல்லுகிறார்கள் என்ற நான் கருதுகிறேன். அடுப்பின் பக்கத்தில் ஒரு கிளை அடுப்பும் இருக்கும். கிளை அடுப்பில் நெருப்பு அவசியப்படும் பொழுது, பெரிய அடுப்பிலிருந்து எடுத்துக் கிளை அடுப்புக்கும், கிளை அடுப்பில் நெருப்பு அவசியமில்லை என்றால் பெரிய அடுப்பிற்கும் மாற்றிவைப்பார்கள். அது போன்று ஒரு இலாக்காவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தை எடுத்து இன்னொரு இலாகாவிற்குக் கொடுப்பது என்பது சரியான காரியமல்ல. அந்த முறையில் எந்தெந்த இலாகாக்களில் தேவையில்லை , எந்தெந்த இலாகாக்களில் குறைக்கலாம் என்று சொல்வது முடியாத காரியம். ஒவ்வொரு இலாகாவிலும் பற்றாக்குறை இருக்கிறது. மேலும் மேலும் பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு இலாகாவிற்கும் மேலும் மேலும் இன்னும் ஒரு தலைமுறைக்குச் செலவழித்தால் தானே அடுத்தத் தலை முறைக்கு ஒரு நாகரீக நாட்டுக்கு ஒப்பான நிலையை நம் நாட்டு மக்கள் பெறமுடியும். இவைகளை எல்லாம் நாங்கள் உணராமல் இல்லை. ஆகவே ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கு எடுத்துத் தரவேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆங்கிலத்தில்,

"Rob Peter and pay Paul"

என்று சொல்லுகிற பழமொழியைப் போல ஒரு துறையிலிருந்து எடுத்து இன்னொரு துறைக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. நான் சொல்வது, வருவாயைத் தேடி தருகிற வழி வகைகளை இந்த ஆட்சியாளர்கள் தேட வேண்டும். அப்படி தேடுவதற்கான துறைகள் பல இருக்கின்றன.

நம் நாட்டில் மூன்று பக்கத்திலும் கடலை வைத்துக் கொண்டு மீன்பிடித் தொழிலை நாம் ஏன் வளப்படுத்தக் கூடாது? ஆஸ்திரேலியாவில் கிடைக்கிற ஆட்டு இறைச்சியை இங்கிலாந்திற்கு அனுப்பி விற்கப்பட்டு அங்கிருந்து கிடைக்கின்ற பணத்தைக் கொண்டு ஆஸ்திரேலியா மக்கள் தங்களுடைய பொருளாதார நிலையைச் செம்மைப் படுத்த வில்லையா? டென்மார்க் பசுக்களிலிருந்து

கிடைக்கும் பாலைக் கொண்டு, பாலாடை செய்து அவைகளை வெளி நாடுகளுக்கு அனுப்பி டென்மார்க் நாட்டு மக்கள் பொருளாதார நிலையைச் செம்மைப்படுத்த வில்லையா? சுவிட்சர்லாந்திலிருந்து கடிகாரங்கள், நவீன விஞ்ஞானக் கருவிகள் இவைகளை உலகிலுள்ள வெளி நாடுகளுக்கு அனுப்பி அதிலிருந்து கிடைக்கின்ற பணத்தை கொண்டு சுவிட்சர்லாந்து மக்கள் பொருளாதார நிலையைச் செம்மைப்படுத்த வில்லையா?

அதே போன்று மூன்று பக்கத்திலும் கடலைவைத்துக் கொண்டிருக்கின்ற நாம், மீன் பிடித் தொழிலுக்கு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 20 கோடி ரூபாய் மத்திய சர்க்காரிடமிருந்து பெற்றோ, அல்லது அதை மத்திய சர்க்கார் புறக்கணித்து விட்டால் நம் நாட்டு மக்களிடம் கடன் கேட்டு வாங்கியோ, அதைச் செலவழித்து இந்த மீன் பிடித் தொழிலை வளர்த்து இருந்தால், பட்ஜெட்டில் ஏன் துண்டு விழுகிறது?

அதே போன்று நம் நாட்டில் விளை நிலங்கள் போக, தரிசாகக் கிடக்கின்ற நிலங்களில் முற்பயிர் செய்து அதன் மூலம் ஆடு மாடுகளை வளர்த்து, அதன் மூலம் ஆட்டு இறைச்சியை தயாரித்து இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு ஏன் அனுப்பக்கூடாது?

இவைகளைச் செய்யத் திட்டமில்லையா? ஒவ்வொன்றிற்கும் திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் இதில் இருக்கின்ற வித்தியாசம், சாதாரண சாப்பாட்டிற்கும் நிலாச் சாப்பாட்டிற்கும் இருக்கின்ற வித்தியாசம்தான். நிலாச் சாப்பாட்டிற்கு சிறுவர் சிறுமியர் நம்மைப் போல அடுப்பை வைக்கிறார்கள், நம்மைப் போலவே சாதம் வடிக்கிறார்கள், நம்மைப் போலவே குழம்பு வைக்கிறார்கள். ஆனால் அது வெறும் நிலாச் சாப்பாடுதான்! அதே போன்று இந்த மீன் பிடித் தொழிலுக்கு பணம் செலவு செய்யப்படுகிறது. இவைகளின் ஆராய்ச்சிக்காகப் பணம் செலவு செய்யப்படுகின்றது. ஆனால் இந்தத் தொழிலை நல்ல முறையில் வளர்ப்பதற்குத் திட்டமிட்டு, வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு நாம் இந்தத் தொழிலை வளர்த்திருந்தால் பற்றாக் குறையை போக்கிக் கொள்ள முடியும் என்று நான் கருதுகிறேன்.

ஒரு அடிப்படைக் கொள்கையில் மாறுதல் இருந்தால் நிச்சயமாக இந்த மாநிலத்தின் நிலைமை ஒரு தனி நாட்டு

நிலைமையாக இருந்தால், நாம் உண்மையான நன்மை பெறமுடியும்? இத்தனைச் சொல்கின்ற நேரத்தில், திரும்ப திரும்ப திராவிட நாடு கேட்கிறாயே என்று சொல்வார்கள். அப்படியெல்லாம் பேசுவது தவறோ என்று கூடக் கருதிக் கொண்டிருந்தேன். என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் ராமசுவாமி அவர்கள் அளித்த 1935-ம் ஆண்டு டில்லி பாராளுமன்றக் குறிப்புகளில் நான் பார்க்கிறேன், இன்றைய தினம் மத்திய சர்க்காரிலே உள் நாட்டு அமைச்சராக இருக்கும் பண்டித பந்த் அவர்கள் ஒரு விவாதத்தில் கலந்து கொண்டு, என்னை விடத் திறமையாகப் பேசும் போது, "ஆங்கிலேயர் போனபிறகு தான் பிரச்சினைகளுக்கெல்லாம் பரிகாரம் இருக்கிறது" என்றார்.

"If there was Swaraj Government, I would have myself humbly suggested to the Government to a loan of Rs. 100 crores

"சுயராஜ்யம் கிடைத்திருக்குமானால், இந்த வெள்ளை அமைச்சர்களிடத்தில் துண்டு துண்டாகப் பேசியிருக்க மாட்டேன். 100 கோடி ரூபாய் கடன் வாங்கி, நாட்டு மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்திருப்பேன்!" என்று சொன்னார். அப்படிச் சொல்லுகின்ற நேரத்திலே, இப்போது நான் சொல்லும்போது "ஒரு கற்பனையில் மூழ்கியிருக்கிறீர்களே!" என்று நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் என்னைப் பற்றிக் கூறுகிறார்களே, அதைப் போலவே, பண்டித பந்த் அவர்களை வெள்ளை அதிகாரி கண்டித்திருக்கிறார்.

அதற்குப் பதில் தரும் வகையில் பண்டித பந்த் பேசுகிறார்.

"Unfortunately, it is not so, we live under a foreign rule. No it is but a dream. However much our friends may accuse me and blame as for our negative attitude, unless we remove the stupendous impediments and tremendous obstacles, no progress is possible."

"தடைகள் நீக்கப்பட்டாலொழிய, முட்டுக்கட்டைகள் ஒழிக்கப்பட்டாலொழிய, நாட்டுக்கு விடுதலை கிடைத்தாலொழிய, நம் நாட்டு மக்களுக்கு பரிகாரமில்லை!"

என்று பண்டித பந்த் அவர்கள் டில்லி, பாராளுமன்றத்தில் 1925ஆம் ஆண்டு சொன்னதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அப்படி பந்த் அவர்கள் பேசி முடித்தவுடனே சர் ஜேம்ஸ் கிரிக் என்ற ஆங்கிலேயர் "It is but a dream" என்று சொன்னார்கள்.

இன்றைய தினம் காங்கிரஸ் அமைச்சர்கள் என்னைப் பார்த்து "இது வெறுங் கற்பனை" என்று சொல்கிறார்களே, அதையேதான் 'It is but a dream' என்று கிரிக் சொன்னார் என்றால் இதை எதற்காகச் சொல்கிறேன்? என்னை பந்த் அவர்களோடு ஒப்பிட்டுக் கொள்வதற்காக அல்ல. "History repeats itself" அதாவது வரலாறு திரும்புகிறது என்று கொச்சையாகச் சொல்லுவார்கள். அதேபோல் "பந்துகள்" பேசினால் "கிரிக்குகள்" பதிலளிக்க நேரிடுகிறது!

திராவிடநாடு வேண்டுமென்று கேட்பது கேலிக்கூத்தாக இருக்கிறது. இது வெறும் கற்பனை என்று இப்போது நிதி அமைச்சர் பேசுகிறார்; என்னை கேலி செய்கிறார். அப்போது பந்த் அவர்கள் சொன்னதை அப்போது இருந்த கிரிக் என்ற வெள்ளையன் இதேபோல் தான் கருதினான் என்பதையும், ஆனால் உலகம் பந்தின் பக்கத்தில் தான் சேர்ந்தது என்பதையும் கிரிக்கின் பக்கத்தில் சேரவில்லை என்பதையும் நினைவூட்டுகிறேன். நாங்கள் தனி நாடு திட்டத்தை எடுத்துச் சொல்வதிலே, உண்மையாகவே இந்த நாட்டை வாழவைக்க தக்க வல்ல நிலைமைகள் இருந்தபோதிலும், போதுமான அதிகாரங்கள் இல்லாத காரணத்தினால் இந்த நிலைமை வந்திருக்கிறது என்பதைத் தான் காட்டுகிறோம்.

அமெரிக்க நாட்டில் ஹாமில்டன் என்பவருக்காகச் சொல்லப் பட்ட புகழுரையை நான் நிதி அமைச்சர் அவர்களுக்குச் சிபாரிசு செய்கிறேன்.

"He smote the rock of national resources and abundant streams of revenue gushed forth. He touched the dead corpse of public credit and it sprang upon it's feet."

எங்கே பணம்? எங்கே பணம்? என்று கேட்கிறீர்கள். நான் ஹரிஜனங்கள் மடியிலிருந்து எடுத்து அதை என்.ஜி.ஓக்களுக்குத் தரச் சொல்லவில்லை. ஹாமில்டனுக்குச் சொன்னது போல்,

"நாட்டிலே இருக்கிற செல்வங்கள் பாறையைப் போல் அழுத்திக் கொண்டிருந்தன - அவைகளை அவன் தட்டிப்பார்க்க

வில்லை - உடைத்தான். தேவையான வளம் பீறிட்டுப் பாய்ந்தது! செத்ததோ என்று கருதுகிற அளவுக்கு சோர்ந்து போயிருந்த பொது மக்களுடைய செல்வ நிலைமையைத் தொட்டான்; தொட்டவுடன் அது துள்ளியெழுந்தது!''

இந்தக் காட்சியைத் தமிழிலே,

''பட்டமரம் தளிர்க்கும், பார்வையிழந்தவன் பார்வை பெறுவான்!'' என்று சொல்லலாம்.

அத்தகைய முறையிலே அடிப்படை மாறுதல் தேவை. அந்த அடிப்படையில் மாறுதலை நீங்கள் எந்தக் கோணத்திலிருந்து கவனித்தாலும் சரி, இதைத்தவிர வேறு இடம் வந்து சேர்வதற்கில்லை.

இந்த நிதி நிலை அறிக்கையில் நமது நிதியமைச்சர் அவர்கள் படுகின்ற அல்லல் தெரிகின்றது. அவர் மத்திய சர்க்காரிடத்தில் கேட்டுப் பெற முடியாத அவல நிலை தெரிகிறது! பல்வேறு வகையான கிளர்ச்சிகள் உருவாகிக் கொண்டு வருகின்றன என்பதை எடுத்துக் காட்டாமல் இருக்க முடியாது. மார்ச் மாதம் 19ம் நாள் என்.ஜி.ஓக்கள் ஒரு கண்டன நாளைக் கொண்டாடப் போகிறார்கள். திருவல்லிக்கேணி கடற்கரையில் மாபெரும் அணிவகுப்பு நடத்த இருக்கிறார்கள். அதற்கு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த எங்களையும் அழைத்திருக்கிறார்கள். நாங்கள் அங்கே செல்லுகின்ற நேரத்தில் 'நீங்கள் கிளப்பி விட்டு வந்து விட்டீர்களே' என்று நீங்கள் குறைப்பட்டுக் கொள்ளலாம் என்ற காரணத்தினாலே அதை இப்போதே சொல்லுகின்றேன். அந்த அளவுக்கு என்.ஜி.ஓக்கள் அதிருப்தியடைந்திருக்கிறார்கள். ஒரு தேசத்தில் மின்சார இலாகாவில் வேலை செய்யும் தொழிலாளர்கள் 11-ம் தேதி வேலை நிறுத்தம் செய்யப் போகிறோம் என்று நோட்டீஸ் தந்திருக்கிறார்கள்! வேறொரு புறத்தில் மார்ச் மாதம் 27-ம் தேதி ''கோரிக்கை தினம்'' என்று நாளைக் குறிப்பிட்டு, இந்திய துணைக் கண்டம் பூராவும் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்திக் கிளர்ச்சி நடத்த இருக்கிறார்கள்! இப்படிப்பட்ட கிளர்ச்சிகள் அதிருப்தியினால் ஏற்படுகின்ற விளைவு. இந்த அதிருப்திக்குக் காரணம், உங்களால் போதுமான அளவுக்கு வசதி செய்து தர முடியாதது. அப்படி உங்களால் செய்து தர முடியாததற்குக் காரணம் - உங்களுக்கு வழி தெரியவில்லை என்று அர்த்தமல்ல - வழி

தெரியலாம் - ஆனால் அந்த வழி அடைக்கப்பட்டிருக்கிறது. அப்படி வழி அடைக்கப்பட்டிருப்பதன் காரணமாக - நந்தனார் கதையில் வருவது போல் ‘‘சற்றே விலகி இரும் பிள்ளாய், சந்நிதானம் மறைக்குது’’ என்னும் முறையிலே, நமக்குக் கிடைக்க வேண்டிய வசதிகள் அடைப்பட்டு கிடக்கின்றன! நந்தனார் கஷ்டப்பட்ட நேரத்தில் சிவபெருமானே தோன்றுவது போல ‘‘நந்தியே நீர் சற்று விலகி இரும் பிள்ளாய், சந்நிதானம் மறைக்குது’’ என்று சொன்னது போல - இந்திய நாட்டின் பிரதமர் நேரு அவர்கள் நமக்கு வசதிகளையும் வாய்ப்புகளையும் இந்த மாநிலத்திற்கு ஒரு தனிநாடு என்று சொல்கிற அளவுக்கு அளிக்கவேண்டும்.

அதற்காக நிலைமையை அவர்களிடத்தில், கேட்க நமக்கு உரிமை இருக்கிறது. ‘‘ஏன் அந்த உரிமை இருக்கிறது, கருப்புக்கொடி காட்டுவீர்களே அதனாலேயா?’’ என்று அமைச்சர் அவர்களுக்குக் கேட்கத் தோன்றும். அது எங்களுக்கு இருக்கும் உரிமைகளில் ஒன்று என்று கூடச் சொல்லுவேன். ஏனென்றால், யாரிடத்தில் நன்மை கிடைக்குமோ அவர்களைத்தான் நாடிச் செல்வோம். கிடைக்க வேண்டிய நன்மை கிடைக்காவிட்டால், அதற்காக அவர்களிடம் வருத்தப்பட்டுக் கொள்வோம். ஆனால் அவர்களிடத்தில் கேட்பதில் ஒன்றும் தவறில்லை. இந்திய நாட்டினுடைய பிரதமர் என்று நம்முடைய அமைச்சர்கள் சொல்கிறார்கள். நாங்கள் பிரதமர் என்றோ இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமர் என்றோ சொல்லுகிறோம். அவர் பிரதமராக இருக்கும் போதே நமக்கு இருக்கிற சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு ஏற்றகாலம் என்று கருதி, அந்தத் காலத்திலே கிளர்ச்சிகளைத் தொடங்கியிருக்கிறோம்!

1947இல் பண்டித நேரு அவர்கள் சொன்னார்:

The right of any well-constituted area to secede from the Indian Federation or the union has often been put forward. Before any such right of session is exercised, there must be properly constituted, functioning, free India. It may be possible then, when external influences have been removed and real problems face the country to consider such questions objectively and in a spirit of relative detachment, far removed from the emotionalism of to-day. . . Thus it may be desirable to fix a period, say ten years after the establish-

ment of the free Indian State, at the end of which the right to secede may be exercised through proper constitutional process and in accordance with the clearly expressed will of the area concerned."

''இந்திய பூபாகத்தில் எந்தப் பகுதியும் சரியான முறையில் பிரிந்து போகலாம் என்ற உரிமை பேசப்பட்டிருக்கிறது. அப்படி பிரிந்து போக வேண்டும் என்று உரிமையை கொண்டு வருவதற்கு முன்னால் சட்டப்படி சுதந்தர இந்தியா ஏற்படவேண்டும்.

நாட்டுக்கு விடுதலை கிடைத்து, நல்ல ஆட்சி ஏற்பட்டு ஒரு 10 ஆண்டுக்குப் பிறகு எந்த நாடாவது, எந்தப் பகுதியாவது பிரிந்து போக வேண்டும் என்றால், அங்கு இருக்கும் மக்களின் ஒப்புதலைப் பெற்று பிரிந்து போகலாம். பிரிய வேண்டும் என்ற பாத்தியதையை கொண்டாடலாம்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கொஞ்ச நாட்களுக்கு முன்னால்தான் நான் இதைப் படித்தேன். 10 ஆண்டுகள் என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து எனக்கு வேடிக்கையாக இருந்தது! சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையின் போது, நிதி அமைச்சர் அவர்கள் 10 ஆண்டுகளுக்காவது நமக்குள் ஒரு ஒப்பந்தம் (Truce) இருக்க வேண்டும் என்று சொன்னார். இதிலும் 10 ஆண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாகிஸ்தான் வேண்டும் என்று ஜனாப் ஜின்னா கேட்டபோது, பண்டித நேரு இதைச் சொன்னார் - ஜனாப்ஜின்னா கேட்ட காலத்தில் ஜனாப் ஜின்னவை 10 வருட காலம் பொறுத்திருக்கச் சொன்னார். ஆனால் அவர் பொறுக்க மாட்டேன் என்று சொன்னார். 10 வருடத்திற்குள் ஜனாப் ஜின்னா பாகிஸ்தான் பெற்றார்!

இவையெல்லாம் முடிந்த பிறகு, இந்தியாவுக்கு விடுதலை கிடைத்து 10 ஆண்டு முடிந்து 11-வது ஆண்டில் நாம் நுழைந்து கொண்டிருக்கின்றோம். பண்டித ஜவஹர்லால் நேரு எழுதிய வாசகம் என் உள்ளத்தில் உணர்ச்சியையும் நல் நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருக்கிறது. 10 ஆண்டு காலம் பொறுத்து இருந்தோம்.

ஐந்தாண்டு திட்டங்களில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறோம்; தொழில் வளர்ச்சி குன்றியிருக்கிறது; நமது விவசாயம் செழிக்கவில்லை; தொழிலாளர்கள் தொல்லைப்படுகின்றனர். தமிழர்கள் சிலோனுக்கு கூலிகளாகச் செல்லவேண்டியிருக்கிறது;

நம்முடைய நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை; நம் நாட்டின் செல்வம் நாளுக்குநாள் தேய்ந்துகொண்டிருக்கிறது. நாம் ஒரு காலத்தில் உலகம் புகழத்தக்க முறையில் வாழ்ந்தவர்கள், அந்தக் காலத்தில் நம் நாட்டின் பண்பாடு உலகம் முழுவதும் பரவி இருந்தது. தனி நாடாகப் பிரியவேண்டும் என்று கூறும் உரிமையைக் கொண்டாடலாமென்று பண்டித நேருவே சொல்லியிருக்கிறார். அந்த பாத்தியதையை, உரிமை என்று நேரு கூறியிருக்கிறார். அதை இந்த மாமன்றத்தில் இன்றையதினம் எழுப்புவதற்கு மகிழ்ச்சி அடைகிறோம், பெருமைப்படுகிறோம்! அதே நேரத்தில் அப்படி நாங்கள் கேட்கிறபோது ''உங்களுடைய எண்ணப்படி அது உங்களுக்குக் கிடைக்காது, அதைத் தரமாட்டோம், அது இந்தத் தலைமுறையில் கிடைக்காது, இன்னொரு தலைமுறைக்குப் பார்க்கலாம்!'' என்று சொல்லுகிறார்கள். அது எனக்குத் தெரியாதது அல்ல. ஆனால் எந்தக் காரணத்தினாலோ நாங்கள் வற்புறுத்துகிற நேரத்தில் நம்முடைய தலைவர்களுக்கும், காங்கிரஸ் அமைச்சர்களுக்கும் ஏதாவது இதனால் மனக் கசப்பு ஏற்பட்டிருக்கு மாயின், அருள் கூர்ந்து எங்களுடைய ஆழ்ந்த நம்பிக்கையை தயவு செய்து ஏற்றுக்கொள்ள வேண்டும், எங்களுடைய ஆழ்ந்த நம்பிக்கையை உணராமல் வெறும் அரசியலுக்காகப் பேசுவதானால் இதை நாங்கள் விட்டுவிடுவது என்பது எளிதான காரியமாக இருக்கும். நமது நிதி அமைச்சர் அவர்கள் கவர்னர் பேருரையின்மீது பேசும் போது கூட கொள்கை முரண்பாடு இருக்கிறது என்று மிகக் கனிவோடு சொன்னார், அது உண்மைதான்!

கொள்கை முரண்பாடு என்பது அடிப்படைத் தத்துவத்தில் உரிமைப்பிரச்சினையாக இருப்பதாலும், எங்கள் உரிமையை இழந்து விட நாங்கள் மறுக்கிறோம்.

நாங்கள் எழுப்புகிற பிரச்சினைகளுக்கு சாமர்த்தியமான பதில் அளிக்கிறார்; அந்தச் சாமர்த்தியத்தை நான் பாராட்டுகிறேன். நாங்கள் அவரிடமிருந்து எதிர் பார்ப்பது எங்களுடைய வாதங்களை எப்படி மறுக்கிறார்கள் என்ற வாதத்திறமையை அல்ல; அவர்கள் எப்படி அடித்து மடக்கிப் பேசுகிறார்கள் என்பது மட்டுமல்ல; அவைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்ட நிதி அமைச்சர் அவர் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன். அவருடைய இதயத்தைக் கேட்கிறேன் அவருடைய

தோழர்களாகிய காங்கிரசுக்காரர்களைக் கேட்கிறேன். அத்தனைபேர் களுடைய இதயத்தையும் கேட்கிறேன். தாய்த்திரு நாடு பெறுவதற்கு அவர்களின் ஒத்துழைப்பைக் கேட்கிறேன். அவர்கள் தங்கள் இதயத்தில் ஓர் ஓரத்தில் இந்தப் பிரச்சினைக்கு இடம் ஒதுக்கி வைத்துப் பார்த்தால்தான், இதைப் பற்றிப் புரியும் என்பதைச் சொல்லி, அந்த நாள் விரைவில் நெருங்கி கொண்டு வருகிறது என்றும் சொல்லிக் கொள்ளுகிறேன்!

நிதி நிலைமையிலிருக்கும் குறையை, ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையிலும் பற்றாக்குறை விருப்பத்தை அவர்களுக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறோம் என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன்.

அலுவலக மொழி குறித்து மொழிப் பிரச்சினை குழுவின்அறிக்கை மீதான விவாதம்

உரை : 12 *நாள் : 11.03.1958*

திரு. சி. என். அண்ணாதுரை: சட்டமன்றத் தலைவர் அவர்களே! மொழிப்பிரச்சினை சம்பந்தமாகக் கருத்துரை வழங்குவதில் நல்ல சூடு பிடித்திருக்கிறது என்பதை எங்களுடைய தரப்பிலிருக்கிற அன்பழகன் அவர்கள் இந்தச் சட்டமன்றத்தின் முன்னால் எடுத்துரைத்தார்கள்.

நான் இந்தப் பிரச்சினையைப்பற்றி முற்றிலும் வேறொரு கோணத்திலிருந்து கவனிக்க விரும்புகிறேன். மொழிப் பிரச்சினையில் இன்று நாம் எடுக்கின்ற முடிவுகள், நம்மை மட்டும் கட்டுப்படுத்துவதாக இருக்குமானால், அவர்களுக்கு இருக்கின்ற விருப்பு வெறுப்புகளை முக்கியமாகக் கருதி, ஒரு முடிவினை அவசரப்பட்டு - ஆர்வத்தின் காரணமாக எடுத்துவிடலாம். ஆனால் நாம் எடுக்கக் கூடிய முடிவுகள், நம்மை மட்டுமல்லாமல், நம்முடைய பிற்காலச் சந்ததிகளைப் பெரும் அளவுக்குக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கிறது. ஒரு பெரும் பொறுப்பை ஏற்கின்ற நேரத்தில் எல்லையில்லா ஆர்வம் நம்மிடத்தில் இருக்கிறது என்பதால், எழுகிற ஆணவமோ, அல்லது, எல்லோரையும் கட்டுப்படுத்தக்கூடிய வாய்ப்பு பெற்றிருக்கிறோம் என்ற அரசியல் உணர்வோ மேலிடுவதை விட்டு விட்டு, நாம் செய்யக்கூடிய காரியம் பிற்காலச் சந்ததிகளைப் பாதிக்கக் கூடும் என்ற காரணத்தினால், நாம் மிகுந்த ஜாக்கிரதையுடன் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டியிருக்கிறது.

அதனால்தான் என்று கருதுகிறேன் - ஆட்சிப்பொறுப்பில் இருப்பவர்கள் இந்தப் பிரச்சினையில் ஒரு கோடியில் சின்னதுரைகளைப் பார்க்கிறார்கள், இன்னொரு கோடியில் அண்ணாதுரைகளைப் பார்க்கிறார்கள்!

இரண்டு முனைகளுக்கும் இடையில் இருக்கின்றவர்கள், ஆட்சியாளர்கள்! கனம் சின்னதுரை அவர்கள் சொல்கிறபடி "இந்தி மக்களுடைய மொழி!" என்று ஏற்றுக் கொள்வதில் தயக்க மடைகிறார்கள். அதே நேரத்தில் அண்ணாதுரை சொல்கிறபடி "ஆங்கிலம் இருக்கட்டும்! இந்தி தேவையில்லை!" என்பதை ஏற்றுக் கொள்வதற்குத் தயக்கமடைகிறார்கள்.

இந்த இரண்டுக்கும் இடையில் ஏதாவது ஒரு நல்ல வழி கண்டுபிடிக்க முயலுகிறார்கள்!

இந்த நல்லெண்ணத்தைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்! இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க நல்லவழி கண்டு பிடிக்க வேண்டுமென்று நல்ல முயற்சி எடுத்துக் கொண்டார்கள். அந்த முயற்சியில் எல்லா கட்சிகளிலும் உள்ளவர்கள் தத்தமது கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று மெத்த பரிவோடு விரும்பினார்கள்.

அவரவர்கள் தத்தமது கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

ஆனால் இதற்கிடையில் நாட்டிலே முளைத்துவிட்ட சில பிரச்சினைகள், ஒவ்வொருவரும் தத்தமது கருத்தை நாட்டுக்கு விளக்கிக் கூறவேண்டிய நிர்ப்பந்தத்தில் கொண்டுவந்து வைத்திருக்கின்றன.

அதேநேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் வி.கே.ராமசாமி முதலியார் அவர்கள், "மொழிக்கமிட்டியில் உட்கார்ந்துவிட்டு, மற்றொரு கூட்டத்திற்குச் சென்று, இரண்டுக்குமிடையில் இருக்கின்ற கருத்தைப்பற்றி வேறுவிதமாகச் சொல்லக்கூடும். அதிலும் குறிப்பாக என்னைப் போன்றவர்கள்!" என்று குறிப்பிட்டார்கள்.

என்னை வருந்தி வருந்தி அழைத்தார்கள், நான் சென்றேன்! அந்த மொழிக் கமிட்டியில் பேசியதை அங்கே மறுக்கவில்லை என்று சொன்னவர்கள், ஒன்றே ஒன்று சொன்னார்கள். 345வது பிரிவை மாற்றம் செய்யவேண்டுமென்று சொன்னேன் என்று சொன்னார்கள். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கவேண்டுமென்று எண்ணுவது மனித சுபாவம். அந்த மனித சுபாவத்தின்படி, விட்டுக்கொடுத்து உண்மையில் பிரச்சினைகளை தீர்க்க முயற்சி செய்யப்பட்டது. அந்த விதத்திலும் இந்த பிரச்சினை, நம்மைக் கட்டுப்படுத்துவதோ டல்லாமல், எதிர்கால சந்ததியார்களின் வாழ்வையும் கட்டுப்படுத்

துவதால் சில அடிப்படையான உண்மைகளைக் - கசப்பாக இருந்தாலும்கூட ஆராய்ந்து பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம்!

இந்த நாட்டில் - இந்த நாடு என்று குறிப்பிடும் பொழுது, நம்முடைய மாநிலத்தை மனதில் வைத்துக்கொண்டு பார்த்தால், - இப்பொழுது ஒரு பழைய தலைமுறை வேகமாக மறைந்து வருகிறது, ஒரு புதிய தலைமுறை வேகமாக எழுந்து வருகிறது - இந்த இரண்டிற்கும் இடையில் நாம் வாழ்ந்து வருகிறோம்.

பழைய தலைமுறை, "இந்தியத் துணைக்கண்டம், இந்தியர், இந்தி!" என்றும், "இந்தியா விடுதலை பெற்றதால், இந்திதான் தேசியமொழி!" என்றும் ஆழ்ந்த நம்பிக்கையோடு கருதுகின்ற ஒரு தலைமுறை! இனி வரவிருக்கின்ற தலைமுறையில், இந்தியா என்பது உண்மையில் ஒரு கற்பனை என்று கருத்துக் கொண்டிருக்கிற நாங்கள் வெற்றிபெறக் கூடுமானால், இந்தியா என்பது ஒரு துணைக் கண்டமாக ஆக்கப்பட்டு, பல மாநிலங்களைக் கொண்டதாகக் கருதி, தனி நாடுகளாக ஆகப் போகின்றன, அத்தகைய நேரம் வரப் போகின்றது - இந்தியா, இந்தியர், இந்தி என்று அவர்கள் கொண்டிருக்கிற மனவெழுச்சி வெற்றிப்பெறப் போவதில்லை என்றக் கருத்துப்பட இருக்கிறோம்!

இந்த இரண்டுக்கும் இடையில் - பழைய நினைவுகள் ஒரு புறம் இருக்க, மற்றொரு புறத்தில் எதிர்காலச் சந்ததியார்களின் வாழ்வின் எதிர்பார்ப்புகள் இழுக்க, நாம் இக்கட்டான நிலையில் இருக்கும் ஒரு தலைமுறை என்று கருதுகிறேன். ஆகையால் இங்கே செய்யப்போகிற தீர்மானம் பழைய காலத்தில் இருந்து வந்ததை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கக்கூடாது. ஆகையால்தான் இந்தப் பிரச்சினையை உண்மையிலேயே ஒவ்வொருவரும் தத்தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்படாமல், அணுகவேண்டுமென்று நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

விருப்பு - வெறுப்புகளுக்கு ஆட்படாமல் பேச வேண்டும் என்று சொல்கின்ற நேரத்தில், எப்போதும் சாந்தத்தோடும் சமரச நோக்கத்தோடும், கனிவாகப் பேசக்கூடிய நண்பர் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் "மலையாள நாட்டுக்கு, கன்னட நாட்டுக்குச் சென்று பாருங்கள். நீங்கள் உயிரோடு திரும்பி வரமாட்டீர்கள்!"

என்று சொல்லக்கூடிய அளவுக்கு, அவரே பேசியிருக்கிறார் என்றால் - இந்தப் பிரச்சினை விருப்பு வெறுப்புகளை எவ்வளவு தூரத்துக்குக் கிளப்பி விட்டிருக்கிறது என்பது நன்றாகத் தெரியும்.

அவர்கள் ''இந்தியை எதிர்க்கின்ற இவர்கள், இவர்கள் கட்சியை சேர்ந்த நெடுஞ்செழியன் அவர்களுடைய துணைவியார், இந்தி வளர்ச்சி கமிட்டியிலும் ஒரு உறுப்பினராக இருந்து வருகிறார் என்று கேள்விப்பட்டேன்.'' என்று குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து பார்க்கின்ற நேரத்தில் ஒவ்வொரு கட்சித் தலைவர்களின் மனைவிமார்கள் என்னென்ன செய்கிறார்கள் என்பதை ஆராய்கின்ற அளவுக்கு சென்று விட்டது. அம்மையார் அவர்கள் இந்தி வளர்ச்சிக் கமிட்டியில் இருப்பதாகச் சொல்லப்பட்டதும் திரு. வேதரத்தினம் பிள்ளை அவர்கள் சொன்னார்கள் என்பதற்காக அல்ல, எனக்கே ஏற்பட்ட ஆவலின் காரணத்தால், அதைப்பற்றி விசாரித்தேன். அப்படிப்பட்ட ஒரு கமிட்டியில் அவர்கள் இல்லை என்று அறிகிறேன். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளும் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் அவருடைய கணவரே சொல்கிறார். விஷயங்கள் இவ்வளவு தூரம் வளருவதற்குக் காரணம் உண்மையிலேயே நாம் எடுத்துக் கொள்கிற முயற்சி. . . .

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : அப்படி மனைவி வேறுவிதமான கருத்தைக் கொண்டவர்களாக இருந்தால், அவர்களுக்கு அந்தச் சுதந்திரம் உண்டு.

திரு. சி. என். அண்ணாதுரை: அமைச்சர் அவர்கள் சொல்கின்ற படி கணவன் வைத்திருக்கக் கூடிய கொள்கையை விட மாறுபட்ட கருத்தைக் கொண்டு ஒருவர் துணைவியாக இருப்பது தவறு அல்ல - இதை முதலில் பேசியவர்கள் உணர்ந்திருந்தால் இந்தப் பேச்சு வந்திருக்காது! - ஆனால் விஷயங்களைப் புரிந்து கொள்ளும் துணைவியாக இருந்தால் நல்லது.

நான் குறிப்பிட விரும்பியது என்னவென்றால், இந்தப் பிரச்சினையை அணுகுகின்ற நேரத்தில், ''அரண்மனை முதல் அந்தப்புரம் வரை'' நுழைந்து பார்க்கிற அளவுக்கு விருப்பு வெறுப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதுதான்.

இன்றையதினம் கிளம்பியிருக்கிற முக்கியமான சட்டம் சென்னை மாலே சர்க்கார் தயாரித்திருக்கிற அறிக்கையைப் பற்றியதாகும். "ஜெனரல் அக்ரிமெண்ட்" - அதாவது பொதுவான உடன்பாடு வேண்டுமென்ற காரணத்தால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் அந்தக் கமிட்டியில் கலந்து கொண்டேன். ஆனால், அது தவறான முறையில் வியாக்கியானம் செய்யப்பட்டு, தப்பான முறையில் பயன்படுத்தப்பட்டு, என்னுடைய கோரிக்கையை யும், கழகத்தினுடைய கொள்கையையும் விளக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. எங்கள் கழகத்தின் சார்பிலே தரப்பட்ட திருத்தங்கள், இந்த அறிக்கையை வலியுறுத்துவதற்காகவே அன்றி, வலுவற்றதாக ஆக்குவதற்கு அல்ல!

சாதாரணமாக ஒரு பிரச்சினையை மூன்று வழிகளில் தீர்க்கலாம். இருக்கின்ற முக்கியமான அடிப்படை உண்மைகளை மறந்துவிட்டு, மேலெழுந்த வாரியாக சமரசத்தை ஏற்படுத்தலாம். இன்னொன்று, சமரசத்துக்காக அடிப்படை உண்மைகளை மாற்றிக் கொள்ளலாம். மேலும் பிரச்சினையின் அடிப்படையைப் புரிந்து கொள்ளாமல் கூட சமரசத்திற்கு வரலாம். சமரசம் என்பது முக்கியமானதாக கருதப்படாமல் இந்த நாட்டிலே இருக்கின்ற மக்களின் எண்ணம் மத்திய சர்க்காருக்குத் தெளிவாகத் தெரிவிக்கப் படவேண்டும். இந்த நாட்டிலே இருக்கின்ற மக்களின் கருத்து ஐயந்திரிபற மத்திய சர்க்காருக்கு அறிவிக்கப்படவேண்டும். இந்த நாட்டிலே இந்த விஷயத்தில் எல்லோரும் எத்தகையக் கருத்தினைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மத்திய சர்க்கார் உணர வேண்டும் என்பது மூன்றாவதாக இருக்கலாம்.

இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிற 1966-ல் வர இருக்கிற ஆபத்திலிருந்து இந்த நாடு காப்பாற்றப்பட ஆங்கிலம் நீண்டகாலத் திற்குத் தொடர்ந்திருக்க வேண்டுமென்று இந்த நாட்டிலே ஒருமித்த கருத்து இருக்கிறது. மற்ற விவகாரங்களிலே ஒருமித்த கருத்து இல்லை யென்பது மட்டுமல்ல - ஒருமித்த கருத்து இருப்பது லாபம் இல்லை. நாம் எல்லோரும் சேர்ந்து இந்த அறிக்கையை ஆதரிப்போம் என்று சொல்வது, சர்க்காருடைய கரத்தை வலுவாக்கும் என்று நான் கருதியது உண்டு. சர்க்காருடைய கரத்தை வலுவாக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம் என்று நான் அந்தக் கமிட்டியிலே

குறிப்பிட்டேன். ஆனால் சர்க்கார் கரத்தை வலுவாக்குவதற்காக அந்தந்தக் கட்சிகள் தங்களுக்கு இருக்கின்ற வலுவைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்பது பொருள் அல்ல. அது மட்டுமல்ல; எல்லாக் கட்சிகளும் இந்த அறிக்கையை ஏகமனதாக ஏற்றுக் கொள்வதன் மூலம் மத்திய சர்க்காருடைய பிடிவாதத்தை, வடக்கே இருக்கின்ற இந்தி வெறியர்களின் வெறித் தன்மையை குறைத்துவிட முடியுமா? என்பதை பார்த்தால், குறைப்பதற்கு வழியில்லை! ஒவ்வொரு கட்சிக் காரரும் தத்தம் கருத்தினைக் கொண்டவர்களாக இருந்தபோதிலும், இந்தி மட்டும்தான் மக்களுடைய மொழி. அதுதான் தேசிய மொழி யென்று தீவிரமாகக் கருதுகின்ற கனம் சின்ன துரையும், இந்தி தமிழ் நாட்டுக்கு தேசியமொழி ஆகாது என்ற கருத்தைக் கொண்ட அண்ணாதுரையும் - இவர்கள் அத்தனை பேரும் ஒன்றாகச் சேர்ந்து ஆங்கிலம் நீடித்திருக்க வேண்டும் என்ற அளவிலே ஒருமைப்பாடு இருக்கிறது!

மற்றவற்றில் எங்களுக்கு மாறுபாடு இருக்கிறது. இந்த மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்குத் தங்கள் கருத்தினை எடுத்துச் சொல்லும் பொழுது - மாநில சர்க்காரின் கருத்தை மட்டுமல்லாமல், இதனை தெளிவாக்கினால், இந்த மாநில மக்களுடைய உண்மையான எண்ணத்தை எடுத்துக் காட்டுவதாகும்.

பிரச்சினையை மூடி மறைப்பதில் பயனில்லை! புண்ணை மூடுவதற்காக புனுகு தடவுவதில் பயன் இல்லை!

இந்தப் பிரச்சினையிலே ஐயப்பாடு இருக்கிறது என்பதை மறுத்துப் பயனில்லை. அடிப்படையில் ஐயப்பாடு இருக்கின்ற காரணத்தினாலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைய தினம் என்னென்ன சொல்கிறது, என்னென்ன செய்கிறது என்பதை மட்டும் ஆராய்ந்தால் போதாது என்று கருதி, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பூர்வோத்திரங்களை ஆராய ஆரம்பித்தார். கட்சிக் கொள்கைகளை ஆராயும் போது பூர்வோத்திரங்களையும் ஆராய வேண்டுமென்கிற போது, இந்தப் பிரச்சினையில் நாம் சமரசத்தை மட்டும் மத்திய சர்க்காருக்கு அனுப்பினால் பயன் இல்லை. இந்த சமரசம் ஏற்றுக் கொள்ளப்படலாமென்று நிதி அமைச்சர் அவர்கள் தமது உரையிலே தைரியமாகச் சொல்லியிருக்கிறார். இந்தியத் துணைக்

கண்டத்துக்கே ஒரு வழிகாட்டத்தக்க அளவுக்கு சென்னை சர்க்கார் இருக்கிறது. ஆகவே இதை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்வார்கள் என்று சொன்னார்.

மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் நேரத்தில், மத்திய சர்க்கார் மூலமாகவோ, அதற்குப் பின்னர் வரக்கூடிய சர்க்கார் மூலமாகவோ, தமிழகத்துக்கு எந்த ஆபத்தும் வராமல் இருக்கவேண்டுமானால், அரசியல் சட்டத்துக்கு ஒரு திருத்தம் வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுவேன்! மொழிக் கமிஷன் பற்றி நடைபெற்ற அந்தக் கமிட்டியில் சட்டத்தைத் திருத்த வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் நினைவில் வைத்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

அந்தக் கூட்டத்துக்கு வந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ராமமூர்த்தி "It is bad tactics" என்றுதான் சொன்னார். அது இப்போதைக்கு, நடைமுறைக்கு ஏற்றதல்ல. நல்ல 'டாக்டிக்ஸ்' (Tactics) அல்ல என்று சொன்னார். நான் பேசுகின்ற பொழுது ''ராமமூர்த்தி 'டாக்டிக்ஸ்' என்று சொல்கின்றாரே, நாம் நம்ப வேண்டியிருக்கிறது!'' என்று சொன்னேன். அப்படி நான் சொன்னது ராமமூர்த்தி சொன்னதை ஆதரிப்பது என்று அர்த்தமல்ல. 'டாக்டிக்ஸ்' என்பதன் அர்த்தத்தைக் கம்யூனிஸ்ட் கட்சி நீண்ட நாட்களாக நம்பிக் கொண்டிருக்கிறது என்பதை காட்டத்தான் அப்படிச் சொன்னேன்!

இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தினால், வலுவாக இருக்குமா, இருக்காதா என்பதைப் பற்றி ஆலோசிக்கப்பட்டது. நான் அதைப்பற்றி இப்போது எடுத்துச் சொல்லப்போவதில்லை. அதற்குப் பிறகு நடந்திருக்கிற சம்பவங்களைப் பார்க்கின்ற அளவில், எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்களைக் கொண்டு ஆராய்ந்து பார்க்கிற அளவில், இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலே இதற்குக் கணிசமான ஆதரவு கிடைக்கும் என்று துணிவாகக் கூறலாம். ஆகவே அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று மாநில அரசாங்கம் முயற்சிகள் எடுத்து, அதை அறிக்கையில் சேர்ப்பார்கள் என்று நினைக்கிறேன்.

வங்காளத்தில் நடைபெறுகின்ற கிளர்ச்சி, பாஞ்சாலத்தில் நடைபெறுகின்ற கிளர்ச்சி, மராட்டிய நாட்டில் ஏற்பட்டிருக்கும்

குமுறல், இவைகள் எல்லாம் பிற்போக்குவாதிகள் செய்கின்ற கிளர்ச்சிகள் என்று சொல்லி விடுவார்களானால், அவர்களிடமுள்ள அரசியல் அகராதி அந்த ஒருபதத்தைத்தான் அவர்களுக்குத் தருகிறது என்று சொல்ல வேண்டும்.

உண்மையாக ஆராய்ந்து பார்த்தால், இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு ஒரு அரசியல் சூழ்நிலை சரியானபடி உருவாகியிருக்கிறது என்று நான் கருதுகிறேன்! ஆங்கிலம் நீடித்து இருக்கவேண்டுமென்கின்ற கருத்தை நான் வலியுறுத்துகிறேன், இதை அறிக்கையில் சேர்க்க வேண்டும் என்று எங்கள் கழகத்தின் சார்பில் நாங்கள் ஒரு திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறோம்!

இந்த அறிக்கையில் உயிரோட்டம் இருக்க வேண்டுமானால், நாங்கள் சொல்கின்ற திருத்தத்தை சேர்த்துக் கொண்டால்தான் உயிரோட்டம் பெற முடியும். இதில் ஏதோ ஒரு வகையான சமரசத்திற்கு முயற்சி செய்தோமேயானால் ஒருவருக்கொருவர் கருத்துக்களை பறிமாறிக் கொண்டதாக இருக்குமே ஒழிய, இந்த அறிக்கை வலுவிழந்ததாகப் போய்விடும் என்று அஞ்சுகிறேன். ஆகையினால் சென்னை சர்க்கார் கருத்து வெற்றிபெற வேண்டுமானால், இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக்கூற ஆசைப்படுகிறேன்.

அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு நல்ல சூழ்நிலையும் ஏற்பட்டு வருகிறது. பலருடைய முயற்சியும் இருக்கிறது. அவர்களைப் பற்றி இந்த மாமன்றத்தில் வெகுவாக விவாதிக்கப் பட்டது, அதைப்பற்றி நான் பேசப் போவது இல்லை. எங்களுக்குத் தரப்பட்ட 'அறிவுரைகளைப்' பற்றி மட்டும் இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களை எச்சரிக்கை செய்யும் விதத்தில், ''அது ஒரு புளியமரம் அதன் நிழலில், எதுவும் வளராது!'' என்று காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் சொன்னார்கள். அதே புளிய மரத்தின் நிழலில்தான் நீங்கள் வளர்ந்திருக்கிறீர்கள்! ஆகையால், நாங்கள் மட்டும் வளர மாட்டோம் என்று சொல்வதில் பொருளில்லை. எப்படி இருந்தாலும், ''புளியமரம்!'' ''நட்டாற்றில் விட்டுவிடுவார்!'' என்றெல்லாம் இந்தப் பிரச்சினையின் போது எடுத்துச் சொல்லப்

பட்டது. அவருடைய நேர்மையை ஆராய்வது அவ்வளவு சரியல்ல என்று நான் கருதுகின்றேன்.

அதுமட்டுமல்ல, நான் ஒன்று தெளிவாகச் சொல்வேன். இந்தப் பிரச்சினையில் யார் யாரோடு சேர்ந்தாலும், ஒருவரைக் காட்டி ஒருவர் வாழவேண்டும், பிழைக்க வேண்டும் என்ற கருத்து அல்ல என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த வகையில்தான் ராஜகோபாலாச் சாரியார் அவர்கள் வங்காளத்துக்குச் சென்று அங்கே ஒரு மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறார். வடக்கே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு காணக் கோரி, அவர் அங்கே போகவில்லை, திராவிட முன்னேற்றக் கழகம், அவருடைய துணையைக் கொண்டு, வங்காளத்தில் 4 இடங்களைப் பெறப் போவதுமில்லை. எந்தப் பிரச்சினையிலும் இரண்டு பேர் கூடிப் பேசினால், சந்தேகம், சந்தோஷம் இவைகள் ஏற்படுவது சகஜம். ஆனால் இந்தப் பிரச்சினை யில் அது பொருந்தாது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

காங்கிரஸ் அங்கத்தினர்கள் தான் இதற்கு முன்னதாக அவருடன் தொடர்பு கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத்தான் அவரைப் பற்றி நன்றாகத் தெரிந்திருக்கும். அவர்களுக்கு எச்சரிக்கை விடுவதற்கு நாங்கள் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம். அந்த எச்சரிக்கையை எடுத்துக்கொண்டு நாங்களும் ஜாக்கிரதையாகத்தான் இருப்போம். அப்படி இருப்பதற்கும் எங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தப் பிரச்சினை அவ்வளவு முக்கியமானதல்ல.

ஆளும் கட்சியை ஆதரிக்கிறவர்களாக இருந்தாலும், இந்த மொழிப் பிரச்சினையில் கருத்தை எடுத்துச் சொல்வது கட்சிக்கு அப்பாற்பட்டது என்பதை வலியுறுத்திச் சொல்கிறேன். கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்சினை மட்டுமல்ல, நான் துவக்கத்தில் சொல்லிய மாதிரி, இந்தத் தலைமுறைக்கு மட்டும் ஏற்பட்ட பிரச்சினை அல்ல, இது வருங்காலத்தைப் பற்றிய பிரச்சினை!

வெறும் சமரசம் மட்டும் கண்டால் போதாது, தக்க பாதுகாப்பு இருக்க வேண்டும்! இப்பொழுது பாதுகாப்புகள் உண்டாக்கப்படா விட்டால், எதிர்காலத்தில் விபத்துக்களும், ஆபத்துக்களும் வந்தபடி இருக்கும். விபத்துக்களும், ஆபத்துக்களும் அடிக்கடி ஏற்படாமல் இருக்க, அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்!

ஆங்கிலத்தில் "டெமாக்கிளிஸ் கத்தி" "Sword of Democles" என்று சொல்வதுபோல, தலைக்குமேல் ஒரு கத்தி தொங்கிக் கொண்டே இருக்கும். கத்தியின் கீழே கலக்கமின்றி இருக்க முடியாது! அரசியல் சட்டத்தின் விதிப்படி, ஒரு பெரிய கத்தி தென்னாட்டின் மேல் தொங்கவிடப் பட்டிருக்கிறது. இந்தக் கதைக்கு ஒப்ப நம்முடைய தமிழ் நாட்டில் ஒரு புராணக்கதை உண்டு. யமதர்ம ராஜாவின் தலைக்குமேல் ஒரு பெரிய பாராங்கல் கட்டி விடப்பட்டிருக்கும் என்று. நீதி தவறி நடந்தால், அந்தக்கல் அவன் தலைமீது விழுந்து விடுமாம். இந்த ஏற்பாடு எந்த அளவுக்கு நீதியைக் காப்பாற்றியது என்று தெரியாது. இருந்தாலும் அப்படிப்பட்ட யமதர்ம ராஜாக்கதை இருக்கிறது. நமது நிதியமைச்சர் சொல்வார், அப்படி இருந்தால்தான் அவர் நீதியாக நடப்பாரென்று, பாராங்கல்லை வைத்துவிட்டு நீதி எது என்பதை நிர்ணயிப்பது சரியல்ல! நீதி என்பது பயமில்லாமல் வழங்கப்பட வேண்டும்.

இந்த அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு நம்முடைய மாநில அரசியலார் முயற்சி எடுத்தால், அது குற்றம் ஆகாது. திரு. நாகராஜ மணிகார் சொன்னார் "பிரமாணம் எடுத்துக்கொண்ட பிறகு இப்படிச் செய்வதா?" என்று. அப்படிச் சொல்வதில் அர்த்தமில்லை. பிரமாணம் எடுத்துக் கொண்டது உண்மைதான். நம்முடைய அரசியல் சட்டத்தில் குற்றங்குறைகள் இருக்குமானால், அவற்றைத் திருத்துவதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகையினால் அதைத் திருத்துவதால் எந்த விதமான இழிவும் வராது. அப்படித் திருத்துவதற்கு ஆதரவு கிடைக்கும் என்று எனக்குப் பாஞ்சாலத்திலிருந்தும், வங்காளத்திலிருந்தும், மராட்டியத்திலிருந்தும் தகவல் வந்திருக்கிறது. இந்த மூன்று வெளிநாடுகளைத் தவிர, வேறு எந்த வெளிநாடுகளுடனும் எனக்குத் தொடர்பு இல்லை என்று நிதி அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி அங்கிருந்து கிடைக்கும் தகவல்களிலிருந்து நமக்கு ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகையினால் இந்த அறிக்கையின்மூலமாக, அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்கிற பகுதியை மிக நம்பிக்கையுடன் இங்கே வலியுறுத்திக் கூறுகிறேன்.

அடிப்படைப் பிரச்சினைகளைப் பற்றி இங்கே விவாதிக்கப் பட்டன. அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின்

பூர்வோத்திரத்தைப் பற்றி அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியது தேவையில்லை என்று கருதுகிறேன். மற்றபடி இதற்குப் பிறகு வரப்போகிற விவாதங்களில் இதைப்பற்றி எடுத்துக் கொள்ளலாம் என்று நான் நினைத்து இத்துடன் விட்டு விடுகிறேன். ஆனால் ஒன்றை மட்டும் பணிவுடன் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வரலாற்றில் ஆறாவது பக்கத்தில் ஒரு பொருள் கிடைக்கும். பதினாறாவது பக்கத்தைப் பார்த்தால் மற்றொரு பொருள் கிடைக்கும். 1924ஆம் ஆண்டில் சுயமரியாதை இயக்கம் துவங்க பொறுப்பாளியாக இருந்த பெரியார் இராமசாமி நிறைவேற்றிய தீர்மானத்திற்கு நான் ஒப்புதல் அளித்ததாகக் கருதிக்கொண்டு, என்னை இணைத்துப் பேசினார்கள்! எனக்கு இப்பொழுது வயது 48. 1924ஆம் ஆண்டில், அந்தக் காலத்து சுயமரியாதை இயக்கத்திற்கு ஒரு கட்சியினுடைய தீர்மானத்தை உருவாக்கும் தன்மையோ, உருவாக்கும் பொறுப்போ எனக்கு இருந்திருக்கும் என்று நமது நிதி அமைச்சர் எதிர்பார்க்க மாட்டார். அந்த வரலாற்றை அத்துடன் நிறுத்தி விடுவானேன் என்று கனம் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். 1924க்கு முன், இதே பெரியார் இராமசாமி உங்களுடன் இருந்து, வைக்கம் சத்தியாகிரகம் நடத்தி, சிறைச்சாலைக்குச் சென்று ''வைக்கம் வீரர்'' என்ற பட்டம் பெற்று, காந்தியாருடன் துணைவராக இருந்து முதல் அமைச்சர் காமராசர் அவர்களே காங்கிரஸ் தொண்டராக உடன்வரக் கூடிய பெருமையைப் பெற்றிருந்தார். இதைப் பார்க்கும் போது எங்களுடைய வரலாறு அவ்வளவு கேவலமானது அல்ல என்பதை உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்!

இவைகளையெல்லாம் எடுத்துப் பேசுவதற்குக் காரணம் என்னவென்றால், பல பிரச்சினைகளில் நாம் விருப்பு வெறுப்புக்களை உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம். பலர் விருப்பு வெறுப்புக்கு ஆளாகிறார்கள். அப்படி ஆளாகும் நேரத்தில், கொஞ்சம் நமக்குள்ளேயே கட்டுத்திட்டங்களை உள்ளத்தில் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

எதிர்த்தரப்பில் இருக்கிறவர்களைக் கேவலமாகப் பேசும்போது, கேவலமாகப் பேசுகிறவர்களுடைய உள்ளத்துக்கு ஆனந்தம் ஏற்படுவது இயற்கை. உடலில் சிரங்கு இருக்கிறது, அதற்கு மருந்து போடுவதற்கு முன்னால் அதைச் சொரிந்து கொண்டிருந்தால், ரத்தம்

வரும் வரையில் ஆனந்தமாகத்தான் இருக்கும். அது போல், நிதியமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்னால் பேசியபோது ரொம்பவும் சொரிந்து கொண்டார். ரத்தம் வந்தவுடன் எரிச்சல் ஏற்பட்டிருக்கிறது! அவர் எடுத்துப் பேசிய பல விவரங்களை யோசித்துப் பார்த்தால், மன எரிச்சலை ஏற்படுத்தப் பயன்பட்டதே தவிர ஒளியைத் தர பயன்பட்டிருக்காது என்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் ஒத்துழைக்க வேண்டும், எல்லோரையும் சுமுகமாக நடத்திச் செல்லவேண்டுமென்று பேசுகின்ற நீங்கள், உண்மையிலேயே எதிர்தரப்பிலுள்ளவர்கள் சில குறிப்பிட்ட அடிப்படைக் கொள்கை களுக்கு கட்டுப்பட்டவர்கள் என்பதை உணர்ந்துதான் பிரச்சினைகளை பார்க்க வேண்டும்!

இரண்டு தடவைகள் இதே சட்டமன்றத்தில் எங்களை கேவலமாகப் பேசியதால், இத்தனை ஆண்டுகளாக நாங்கள் சேர்த்து வைத்திருக்கும் உணர்ச்சிகள் அழிந்துவிடும் என்று நீங்கள் நம்ப வேண்டாம். அப்படி கேவலமாக பேசுவதால் நாங்கள் எங்கள் கொள்கைகளை விட்டுவிட்டு ஓடிவிடுவோம் என்று கருதத்தக்க பலவீனர்கள் அல்ல நாங்கள்! நாங்கள் பலவீனர்கள் அல்ல என்பது மட்டுமல்ல, நாங்கள் வைத்துக்கொண்டிருக்கின்ற கொள்கைகளும் பலவீனமான கொள்கைகள் அல்ல என்பதை நாங்கள் இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்!

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே எதிர்காலச் சந்ததிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய மிக முக்கியமான முடிவில் அவசரப்பட்டு ஏதோ சமரசம் காணவேண்டும் என்பதில் நாட்டம் வைக்காமல், இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான எங்களுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்திய அரசியல் சட்டம் ஆக்கப்பட்ட நேரத்தில் அது எவ்வளவு அவசரமாக ஆக்கப்பட்டது என்பதனை உணரவேண்டும். அவ்வாறு யார் மூலமாக உணர்ந்திருக்கிறோம் என்றால், இந்திய அரசியல் சட்ட நிபுணர்களாக இருந்தவர்கள், அரசியல் சட்டம் ஆக்கப்படும்பொழுது உடன் இருந்தவர்கள் இவர்களெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன கருத்துக்களி லிருந்து நாங்கள் அதைத் தெரிந்து கொண்டிருக்கிறோம். அன்றைய

தினம், வெள்ளைக்கார ஆட்சி நீங்கி, இந்த நாட்டிற்கு சுய ஆட்சி கிடைத்த நேரத்தில், வெள்ளைக்காரர்கள் போய்விட்டார்கள் என்ற இயற்கை சந்தோஷத்தில், எதிர் காலத்தில், ஆட்சி எப்படி இருந்தாலும் பரவாயில்லை என்று நினைத்து, ஒருவர்க்கொருவர் எதை வேண்டு மானாலும் பரிமாறிக் கொள்ளலாம் என்ற ஆனந்தத்தில் செய்து கொண்ட காரியம் இது! ஹோலி பண்டிகையன்று வேடிக்கையாக ஒருவர்மீது ஒருவர் வண்ணச் சாயத்தை வீசிக் கொள்வதைப்போல, ஒருவருக்கொருவர் வாதங்கள் ஆனந்தமாக வீசிக்கொள்ளப்பட்டன. ஆராய்ந்து இது செய்யப்படவில்லை என்று அரசியல் சட்டத்தை ஆராய்ந்திருக்கும் பெரிய அரசியல் சட்ட நிபுணர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இலங்கையைச் சார்ந்த அரசியல் சட்ட நிபுணர், நீதித்துறை தலைவர், அரசியல் அறிவாளி ஐவார் ஜென்னிங்ஸ் (Ivor Jennings) அவர்கள், இந்திய அரசியல் சட்டம் மிக அவசரமாக ஆக்கப்பட்டது என்றும், மிக அதிகமான அளவு கட்டப்பட்டது என்றும் கூறியிருக்கிறார். பொதுவாக அரசியல் சட்டத்தில் மாற்றங்கள் செய்யவேண்டியது ஏராளமாக இருக்கின்றன என்ற கருத்து மேலோங்கி இருக்கிற நேரத்தில் மொழிப் பிரச்சினை சம்பந்தப் பட்டவகையில் இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்துகொள்வதுதான் உண்மையிலே நமக்கும் எதிர்காலத்திற்கும் நல்லது! நல்ல பாதுகாப்பு அளிப்பதாக இருக்கும். அந்த பாதுகாப்பை பெறுவதற்காகத்தான் இந்த அறிக்கையிலே எங்களுடைய திருத்தத்தை இணைத்துக் கொள்வது பொருத்தம் என்பதை நான் நிதி அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சின்னதுரை அவர்கள் இந்திதான் மக்களுடைய மொழி என்று வலியுறுத்தினார்கள். அவர் காட்டிய மன எழுச்சியை அருள் கூர்ந்து நோக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். அவர்கள் கொண்டிருந்த கருத்தைத் தெளிவாக, துணிவுடன் எடுத்துக் கூறினார்கள். அவர்கள் கொண்டிருந்த கருத்தை நான் குறை சொல்லவில்லை. அவருக்கு ஏற்பட்ட துணிவையும், தெளிவையும் நான் பாராட்டுகிறேன். இந்திதான் மக்கள் மொழி என்று தமிழகத்தில், இந்த மாநிலத்தில், இந்த ஆட்சி மன்றத்தில் இன்றைய தினம் சொல்வதற்கு சின்னதுரை அவர்கள் எந்த அளவுக்கு விருப்பப்படு கிறார்களோ, அதேபோல், இந்திய துணைக் கண்டத்திலே, இந்த

அறிக்கையோடு இந்திய அரசியல் சட்டத்தை திருத்துவதற்கான திருத்தம் இணைக்கப்படாமல் இருந்தால், இந்திதான் மக்கள் மொழி என்று சொல்லுவதற்கு 1000 சின்னதுரைகள் முன்வரக்கூடும். லட்சக் கணக்கான பேர்கள் முன்வரக்கூடும்! இந்திதான் மக்களுடைய மொழி என்ற பிரச்சினையும், அந்த மக்களுக்கு ஏற்கனவே ஒரு மொழி இல்லையா என்ற ஆராய்ச்சியும், அந்த மொழிக்கு இந்திமொழி ஈடா என்ற பழைய பிரச்சினைகள் மறுபடி வரும்!

இந்தியை ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்று, அவர்கள் பேசுகிறார்கள். நமக்கு ஆட்சி மொழி இருக்கிறது. அது தமிழ்! மாநில ஆட்சி மொழியைப்பற்றி பிரச்சினை அல்ல, தேசியமொழியைப் பற்றிய பிரச்சினை அல்ல! "அபிஷியல் லாங்குவேஜ்" - அதிகார மொழி எது என்பதுதான் பிரச்சினை ஆகும். இந்தி மொழி அதிகார மொழி என்று சொல்லுகின்ற காரணத்தினாலே, அதற்கு ஒரு பெரிய அந்தஸ்து கிடைத்துவிடும் என்ற அச்சத்தோடு நான் கூறுகிறேன்!

இப்பொழுது மூன்று வகையான மொழிப் பிரச்சினைகள் நம் முன்னால் இருக்கின்றன.

ஒன்று தேசிய மொழி பிரச்சினை, தேசீய மொழியைப் பொறுத்த வரையில், 10-12 ஆண்டுகளுக்கு முன்னால் எங்கள் செவிகளில் ஒலித்துக் கொண்டிருந்ததெல்லாம், "இந்திதான் தேசீய மொழி" என்பதாகும். இந்திதான் தேசீய மொழி என்று எடுத்துக் கூறப்படாத காங்கிரஸ் கூட்டங்கள் அப்போது கிடையாது. இந்திதான் தேசீய மொழி என்று கூறாத காங்கிரஸ்காரர்கள் இல்லை என்ற கருத்து அப்போது நிலவி வந்தது. இன்றோ இந்தி தேசீய மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது மட்டுமல்லாமல் இந்தியுடன் தமிழும் மற்ற பல மொழிகளும் தேசீய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, மொத்தம் 14 தேசீய மொழிகள் இருக்கின்றன. கனம் அங்கத்தினர் திரு சின்னதுரை வருத்தப்பட்டாலும், கோபப்பட்டாலும் அந்த 14 தேசீய மொழிகளுடன் ஆங்கிலமும் தேசீய மொழியாக இணைக்கப்பட வேண்டுமென்ற கருத்து இந்திய துணைக்கண்டத்தில் இப்போது வலுப்பெற்று வருகிறது. அந்தக் கருத்து வெற்றியும் அடையும்.

இப்போது, இந்தி மட்டும் தேசீய மொழியாக இருக்கவில்லை, தமிழகத்திற்கு தமிழும், தெலுங்கு நாட்டுக்குத் தெலுங்கும், மற்ற

மாநிலங்களில் அந்த அந்த மொழிகளும், தேசீய மொழிகளாக இருக்கின்றன. ஆகவே இந்தி மட்டுமின்றி, 14 மொழிகள் மொத்தம். தேசீயமொழி அந்தஸ்தைப் பொறுத்தவரையில் தமிழ்தான் தமிழகத்தின் ஆட்சி மொழி, வேறு சில ராஜ்யங்களில் உள்ள மொழிகள் ஆட்சி மொழி அந்தஸ்தைப் பெறாமல் இருக்கக் கூடும். அவைகளை நாம் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. அந்த ராஜ்யங்களைப் பார்த்து நாம் பரிதாபப்படுவோம். தமிழை இந்த ராஜ்யத்தில் ஆட்சி மொழியாக்குவதற்கான துணிவைப் பெற்ற ஆட்சியாளருக்கு நன்றி கூற நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

நம் மாநிலத்தில் எது ஆட்சிமொழி என்பதைப் பொறுத்த வரையில் நம்மிடையே அபிப்பிராய பேதம் இல்லை. நம் ராஜ்யத்தில் தமிழ்தான் ஆட்சி மொழி. இந்தியாவில் நிர்வாக மொழி எதுவாக இருக்க வேண்டும் என்பது பற்றிதான் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன!

இந்தப் பிரச்சினையை மூன்று விதமாக நோக்கலாம்.

இந்தியா ஒன்று என்றைக்கும் ஒன்றாக இருக்கும் என்ற எண்ணத்தில் இப்பிரச்சினையைப் பார்ப்பது ஒருவிதம்.

இரண்டாவது, இந்தியா என்றென்றைக்கும் ஒன்றாக இருக்கப் போவதில்லை, அது பிரியப் போகிறது என்ற எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டு, பிரியும் வரையுள்ள இடைக்காலத்தில் எது நிர்வாக மொழியாக இருக்க வேண்டுமென்று பார்ப்பது ஆகும். எங்களைப் பொறுத்த வரையில் இந்தியா பிரியப் போகிறது என்ற எண்ணத்துடன் தான் இப்பிரச்சினையை நாங்கள் அணுகுகிறோம்.

நிர்வாகத்தில் மத்திய சர்க்காரிடம் எந்த எந்த பொறுப்புகளை மாத்திரம் ஒப்படைக்கலாம் என்று பார்த்து, அவர்களிடம் இருக்கும் அதிகப்படியான பொறுப்புக்களைக் குறைத்து விட்டால், அப்போது மத்திய அரசாங்க நிர்வாக மொழி எதுவாக இருந்தாலும் பரவாயில்லை என்ற எண்ணத்துடன் இப்பிரச்சினையை அணுகுவது மூன்றாவது விதம் ஆகும்.

இந்த மூன்றையும் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கனம் நிதி அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். அவர் தம்முடைய

சாமர்த்தியமான வாதத்தைக் காட்டுவதற்காக இவைகளைப்பற்றி யோசித்துப் பார்க்க வேண்டுமென்று அவரை நான் கேட்டுக்கொள்ள வில்லை. தம்முடைய இதயத்தை அவர் காட்டுவதற்காக இவைகளைப் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கூறுகிறேன். அன்றைய தினம் பேசியபோது, உங்களுடைய இதயத்தைக் கேட்கிறேன், சாமர்த்தியத்தை அல்ல, என்று அவரிடம் கூறினேன். இதயத்தில் ஆழ்ந்த கருத்துக்களைப் பதிய வைத்துக் கொண்டால்தான், பல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியும். நிர்வாக மொழியாக இந்திதான் இருக்க வேண்டுமென்ற கருத்தினை வலியுறுத்திச் சொல்லும் வெறி பிடித்த தலைவர்களின் கூட்டம் வட நாட்டில் இருக்கிறதென்பதும், அந்தந்தத் தலைவர்களுக்கு மத்தியி லுள்ள காங்கிரஸ் ஆட்சியாளர்களிடம் மிகுந்த செல்வாக்கு இருக்கிற தென்பதும் உலக மறிந்த உண்மை. கௌகாத்தி காங்கிரஸ் மாநாட்டில் கனம் திரு. சுப்பிரமணியம் பேசிய பேச்சை "The most reactionary speech" என்று ஒரு வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர் குறிப்பிட்டார்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : அவருக்கும் இந்திக்கும் சம்பந்தம் கிடையாது; ஆகவே இந்தி தெரியாதவர்தான் அவ்வாறு கூறினார்.

திரு. சி. என். அண்ணாதுரை: இந்திக்கும் அவருக்கும் சம்பந்தம் இல்லாத போது, இந்தியின் சார்பாக அவர் பேசியிருப்பதிலிருந்து, இந்திக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கின்றதென்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும்! அந்தச் செல்வாக்கு வளர்ந்து கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களும், அவ்வாறு கூறுபவர்களும் இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில், சமரச மனப்பான்மையுடன் நடந்து கொள்ள வேண்டுமென்று பண்டித ஜவஹர்லால் நேரு விரும்புகிறார் என்பதை அவருடைய வார்த்தை களிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

இந்தியை எப்படியும் நிர்வாக மொழியாகப் புகுத்த வேண்டுமென்ற மனப்பான்மை கொண்ட வட்டத்தினரும் வட நாட்டில் இருக்கிறார்கள். இந்த இரு கூட்டத்தினருள், எந்தக் கூட்டத்தினர் வெற்றி பெறுவார்கள், எந்தக் கூட்டத்தினர் வெற்றி பெற மாட்டார்கள் என்று நாம் இன்று அறுதியிட்டுக் கூற முடியாது. இப்படிப்பட்ட நிலைமையில், திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அறிக்கைக்கு ஒப்புதல் அளித்திருக்கிறது என்றும் குறிப்பிட்டு இந்த

அறிக்கையை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பினால், வடநாட்டு இந்தி வெறியர்கள் இங்கே இந்தியைப் புகுத்துவதற்கு இந்த அறிக்கையை பயன்படுத்திக்கொள்வார்கள், அவர்கள், தமிழ் நாட்டில் இந்தியை யாரும் எதிர்க்கவில்லை என்று அறிக்கையிலிருந்து தெரிவதால், தமிழ் நாட்டில் இந்தியை புகுத்தலாம் என்று சொல்ல முற்படுவார்கள். ஆகவேதான்,

இந்தியை எதிர்ப்பவர்களும், இந்தி ஆட்சி மொழியாகக் கூடாது என்று சொல்பவர்களும், இந்தி மத்திய அரசாங்க ஆட்சிமொழியாக ஆக்கப்பட வேண்டுமென்று கூறும் அரசியல் சட்டப் பிரிவை எதிர்ப்பவர்களும், அந்தப் பிரிவைத் திருத்த வேண்டுமென்று வாதாடுபவர்களும், தமிழ்நாட்டில் ஏராளமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்பதை மத்திய அரசாங்கத்திற்கு உணர்த்துவதற்கு நாங்கள் வகை செய்கிறோம்.

நாங்கள் இவ்வாறு செய்வது இந்தித் திணிப்பை எதிர்த்து மத்திய அரசாங்கத்திடம் வாதாடுவதற்கு இந்த மாநில ஆட்சியாளர்களுக்கு உதவும்படியாக இருக்கும் என்று சொல்வேன்.

நாங்கள் 150பேர் இருக்கிறோம். எங்களுக்குக் கிடைக்கும் மதிப்பு போதும் என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லக் கூடும். அந்த மதிப்பை நான் குறைத்துப் பேசவில்லை. எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் வளரக் கூடியவர்கள் என்பது ஜனநாயகத் தத்துவம். அவர்கள் வளரக் கூடியவர்கள் என்பதை ஜனநாயகம் உணர்ந்தவர்கள் எண்ணித்தான் பார்ப்பார்கள். ஆகவே, இங்கே இந்திக்கு எதிரிடையான கருத்து எந்த அளவுக்கு இருக்கிறதென்பதையும், அவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்காகவும், இந்திய அரசியல் சட்டத்திலே திருத்தம் வேண்டும் என்ற அந்தத் திருத்தத்தையும், இதிலே இணைத்துக் கொண்டால் அதற்குப் பிறகு இங்கிருந்து ஏகமனதாக இந்த அறிக்கையை அனுப்பியதாகக் கொள்ளலாம். ஏகமனதாக அனுப்பப்படுகிற அறிக்கை ஆனாலும், ஒவ்வொரு கட்சியினுடைய கருத்தும் அதிலே குறிப்பிடத்தக்க அளவு இணைந்திருப்பதை வடநாட்டிலே உள்ளவர்கள் உணருவார்கள்!

'வடநாடு எது? தென்னாடு எது?' என்று கேட்கப்பட்டது. அப்படிக் கேட்கும் போது, சாதாரணமாகப் படத்தில் ஒரு கோடு

போட்டுக் காட்டிவிட முடியாது. இதற்கு மேலே இருப்பது வடக்கு, இதற்கு கீழே இருப்பது தெற்கு என்று எடுத்துச் சொல்வதற்கில்லை. அப்படிச் சொல்லக் கூடியது அரசியல் தத்துவம் இல்லை. வடநாடு என்று சொல்லும்போது, எல்லா மாநிலங்களுக்கும் முழுப் பொறுப்பையும், அதிகாரத்தையும் ஏற்றுக் கொள்ளுகிற மத்திய சர்க்காரையும், அந்த மத்திய சர்க்காரோடு நெருங்கிய தொடர்பு இருக்கிற ராஜ்யங்களையும் மனதிலே வைத்துக்கொண்டு தென்நாடு, வடநாடு என்று பேசுகிறோம்.

இந்தி மொழிப் பிரச்கினையில் நாமெல்லாரும் சமரசத்திற்கு வந்துவிட்டோம் என்று தெரிவிப்பதை விட, அடிப்படையில் சில மாறுபாடுகள் இருக்கின்றன என்பதை மத்திய சர்க்காருக்கு உணர்த்துவது மிகப் பொருத்தம் என்று கருதி, இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்தத் திருத்தத்தை நாங்கள் வலியுறுத்திக் கூறுகிறோம்.

மற்றபடி மொழிப் பிரச்சினையில், மக்கள் மொழியாக இந்திதான் இருக்கக்கூடும் என்று சொல்லுகிற அந்த நிலைமையை இந்த நாட்டில் வளரவிடாமல் தடுப்பதற்கு ஏற்றவகையில் ஆட்சியாளர் இருப்பதைப் பற்றி நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அளவுக்கு அவர்களுக்கு இன்றைய தினம் வெறியில்லை.

எதிர்காலத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கும், வருங்காலச் சந்ததிகளுக்கும் ஆபத்து வராமல் இருக்க வேண்டுமானால், நாங்கள் சொல்கிற திருத்தத்தையும் வைத்துக் கொள்ள வேண்டும். 15 பேர் சொல்லும் திருத்தத்தை 150பேர் ஏற்றுக் கொள்ளலாமா? என்ற அரசியல் கணக்குப் போடாமல் "Politics is not mere arithmetic, but is a political philosophy - என்ற கருத்தின்படி, எதிர்க் கட்சிகள் வளரக் கூடியன என்ற தத்துவ முறையிலே, எங்களுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நிதியமைச்சர் அவர்களையும் ஆளும் கட்சியையும் வேண்டிக் கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

பட்ஜெட் மீது உரை

உரை : 13 **நாள் : 1958**

திரு. சி. என். அண்ணாதுரை : "நமது மாநிலத்தின் நிதிஅமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்னிலையில் விவாதத்திற்காக வைத்திருக்கிற வரவு-செலவுத் திட்டத்தை ஆராய்ந்து பார்க்கும் பொருட்டு எல்லாக் கட்சிகளுக்கும் இருப்பதைப் போலவே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அக்கறை இருப்பதிலேயும், அதிலே கலந்து கொள்ளுகிற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டதிலேயும் உண்மையிலேயே மகிழ்ச்சி யெய்துகிறேன்.

"இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஆராய்வதற்கு முன்னால் இந்த வரவு-செலவுத் திட்டம் எந்த நேரத்திலே நம்மிடத்தில் தரப்படுகிறது என்பதை ஆராய்வது, அதனுடைய தன்மைகளை உண்மையில் புரிந்துகொள்வதற்கு மிகுந்த உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். அப்படி ஆராய்வதில் நமக்குச் சாதகமான சூழ்நிலைகள் மொத்தம் எவ்வளவு இருக்கின்றன?

"இயற்கை நமக்கு இந்த ஆண்டு உதவிபுரிந்திருக்கிறது என்பதை நிதியமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியோடு தெரிவித்துள்ளார்கள்.

"இந்த நாட்டு மக்களிடையே எத்தனையோ மாதிரியான மனக்குமுறல்கள் இருந்தாலும், இந்த நிமிடம் வரை சட்டங்களுக்கு அடங்கி நடக்கின்ற பொறுப்புள்ள குடிமக்களாக இருந்துகொண்டு, கேட்கின்ற வரிகளை எல்லாம் தருகிறார்கள்! தீட்டப்படுகின்ற சட்டங்களுக்கு மதிப்பளிக்கிறார்கள்! இது நல்ல சூழ்நிலைதான்.

"அதேபோன்று, நம் நாட்டிலே இருக்கின்ற பத்திரிகைகளில் பெரும்பாலானவை, அரசாங்கத்தின் நிர்வாகத்திலே - திட்டங்களிலே - கொள்கைகளிலே எந்த மாதிரி குறைபாடுகள் இருந்தாலும், வலிவோ, பொலிவோ குறைந்திருந்தாலும் அந்தப் பொலிவினை அவர்கள் இழந்துவிடுகின்ற நேரத்திலே நல்ல வண்ணப் பூச்சிகளாகக்

காட்சியளிக்கும்படி செய்து, இன்றையத் தினம் ஆதரவு அளித்து வருகின்றன!

"இது மட்டுமல்ல; இந்தியத்துணைக் கண்டம் முழுவதும் பார்த்துப் பாடம் பெறக்கூடிய வகையில் நல்ல திறமை வாய்ந்த நிர்வாக இயந்திரம் நம்மிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

'ஆனால்.... ஆனால்' என்ற அருவருப்பான சொல்லை நானாகத் தேடிக் கொள்ளவில்லை; அது தானாகவே துரத்திக்கொண்டு வருகிறது.

"ஆனால், இவ்வளவு நல்ல சூழ் நிலைகளுக்குப் பிறகும் விலைவாசிகள் ஏறியிருக்கிறது! வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது! பற்றாக்குறை எல்லாத் துறைகளிலும் துரத்திக் கொண்டிருக்கிறது. அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றுகின்ற வர்கள் அரசாங்கத்துணை அலுவலகங்களில் பணியாற்றுகின்றவர்கள் அத்தனை பேர்களும் இன்றையதினம் பற்றாக் குறையோடுதான் இருக்கிறார்கள். அதைப்போக்க, நல்ல சூழ்நிலை நம்மிடம் உருவாக்கப்படவில்லை! இந்நிலையில், அலுவலகத் துறையில் உள்ளவர்கள் அரசாங்கத்தின் உதவியைப் பெற்றிருக்கிறார்கள்" என்று வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறதே, அப்படி அலுவலகத் துறையிலுள்ள எவரும் முழுமனத் திருப்தியோடு இல்லை என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார் என்றே கருதுகிறேன். நான் இதை நினைவூட்டுவது அவர்கள் பேரில் நான் வைத்திருக்கும் அன்பையும் அபிமானத்தையும் அதிகப்படுத்திக் கொள்வதற்கே தவிர, குறைகூறிக் கொள்ள அல்ல!

"குறை கூறுவதற்கு இருக்கின்ற பல காரியங்களைப் பற்றி இந்த மன்றத்தில் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

"இம்மன்றம் ஒவ்வொருவருடைய பேச்சுத் திறமையையும் காட்டிக்கொள்வதற்காகக் கூட்டப்படவில்லை. அது அவசியமு மில்லை. நாட்டில் மக்கள் மன்றத்தில் ஒவ்வொருவருக்கும் அதற்கான மதிப்பு ஏற்கனவே நிலை நாட்டப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியத்தைப் பற்றிக்கூறவும், அதற்குத்திரும்பப் பதில் அளிப்பதும் இதுதான் இங்கே நடந்தது. ஆனால் இவ்விதம் இருத்தல் கூடாது என்று மன்ற உறுப்பினர்களுக்கும் எனக்கும் நானே கவன மூட்டிக்கொள்ளுகிறேன்.

"எதிர்க் கட்சியிலுள்ளவர்கள், காரணங்களைக் காட்டி முறைப்படி குற்றம் சாட்டுகிறார்கள்; காரணம், அவர்கள் ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து, அதன்படி நின்று தக்க ஆதாரங்களுடனும், கட்டுப்பாட்டுடனும், கண்ணியத்துடனும் எடுத்துரைப்பதற்குள்ள தகுதி எதிர்க் கட்சிக்காரர்களிடம் - குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தவரிடம் இருக்கிறது!

"இந்தியத் துணைக்கண்டத்தின் மற்ற சட்டசபைகளில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திற்குக் கவனமூட்ட விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்னால் பத்திரிகைகளில் பார்த்தோம்; தோற்றுப்போன ஒருவர் கவர்னராகப் பதவி பெற்று சட்டசபையில் வந்து ஆற்றிய உரையை எதிர்த்துப் பெரிய பெரிய அமளி நடைபெற்றிருக்கின்றது!

"நம்முடைய மாநிலத்தில் பெருமையாகவும் திறமையாகவும் நிர்வாகம் நடத்திவந்த கவர்னர் பிரகாசா அவர்கள், பம்பாய் சட்டமன்றத்தில் தன் உரையை நிகழ்த்தச் சென்ற நேரத்தில், 'இரு மொழி மாநிலம் வேண்டாம்' என்ற ஒரு காரணத்தைக் காட்டி, சட்டசபையில் அமளி ஒன்று நடைபெற்றிருக்கிறது.

"எல்லாவற்றையும் விடமேலாக, இராஜஸ்தான் சட்டசபையில் திரிலோக் சிங் என்பவரை, சபாநாயகராகத் தேர்ந்தெடுத்தார்கள்; இதை எதிர்த்து ஒருவர் சபாநாயகர் வெளியே போயிருந்த சமயம் பார்த்து சபாநாயகருடைய இருப்பிடத்திலேறி உட்கார்ந்துகொண்டு பிடிவாதமாக, 'அகலமாட்டேன்' என்றார்.

"இத்தனை சம்பவங்கள் மற்ற மற்ற சட்டசபைகளில் நடைபெறும் இந்நேரத்தில், இங்கு, கட்டுப்பாடுடனும் கண்ணியத்தோடும், பாசத்தோடும் அடக்கத்தோடும், கனிவுடனும் நடந்து கொள்ளும் எங்களுடைய தன்மையை நீங்கள் உணர மறுக்கிறீர்கள். அதுமட்டுமல்ல; எங்களைப் பற்றிக் கண்டித்துக் குறையும் கூறுகிறீர்களென்றால், நீங்கள் எங்களை நான் முன் குறிப்பிட்ட அந்தப் பாதைக்குத் துரத்துகிறீர்கள்" என்றுதான் அர்த்தம்.

"நாங்கள் எப்போதும் ஜனநாயகத்தின் அடிப்படையில் நின்றுதான் பணியாற்றி வந்துள்ளோம்.

"நீங்கள் ஆணவமாக வேண்டுமானால் கருதிக் கொள்ளலாம்? நாங்கள் இந்த சபைக்கு வந்தது, என்றைக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்

களாகவே இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் அல்ல. இன்றில்லா விட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் ஆட்சிப்பொறுப்பை மக்கள் எங்களிடம் ஒப்படைப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் தான் நாங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்துகொள்கிறோம். ஆகவே நாங்கள், பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்ளமாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"அடுத்தபடியாக இங்கு பல உறுப்பினர்கள் பேசும் போது தங்கள் தொகுதிகளில் உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் குறைபாடுகளையெல்லாம், நமது நிதி அமைச்சர் அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் வகையில் நானும் அவைகளைத் திரட்டிக் குறிப்பெடுத்து வைத்திருக்கிறேன். யார் யார் எதை எதைச் சொன்னார்கள் என்றல்ல - எடுத்துச் சொல்லப்பட்ட குறைபாடுகளின் தன்மையைத் திரட்டி வைத்திருக்கிறேன். ஒவ்வொருவரும் தங்கள் தொகுதிகளின் நிலைமையை ஆராய்ந்து குறைபாடுகளை எடுத்துக்கொள்ளுகிறார்கள். இதைக் கவனிக்க வில்லை; அதைக் கவனிக்கவில்லை; எங்கள் தொகுதி கவனிக்கப் படுமா? என்று தெரியவேண்டும்; என்றெல்லாம் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களில் பலரும் கேட்டார்கள் - நான் பிற உறுப்பினர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை.

"காங்கிரஸ்காரர்களே இந்தத் திண்டாட்டம் அடைகின்ற போது, மற்றவர்களின் நிலைமையைப்பற்றிக் கூறவே வேண்டாம். கனம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் - மதிப்பிற்குரிய அம்மையார் கூறினார் - 'எந்தெந்த மந்திரிகளை யெல்லாமோ அழைத்து வந்து எங்கள் குறைகளை எடுத்துச் சொன்னோம்-வரவேற்பளித்தோம் - மாலைகள் அணிவித்தோம் - கனம் மந்திரி கக்கன் அவர்களைக்கூட அழைத்து வந்து குறைகளைச் சொன்னோம்; அவைகளுக்கு இன்னும் நிவர்த்தி கிடைக்கவில்லை; எங்களது துன்பமும் கண்ணீரும் துடைக்கப்படவில்லை' என்று மன வருத்தத்துடன் கண்ணீர் விட்டார்கள்.

"ஏழைகளாகிய நாங்கள் - எதிர்க் கட்சியிலுள்ளவர்களாகிய நாங்கள் - அதுவும், 'இது ஒரு கட்சியா - இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? என்று ஒரு சிலர், நினைக்கின்ற நேரத்தில், காங்கிரஸ் ஆட்சியாளர்கள் நல்ல சீர்திருத்தங்களை யெல்லாம் கொண்டுவந்த பிறகும் - நல்ல நல்ல திட்டங்களையெல்லாம் கொண்டு வந்த பிறகும்

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களின் கருத்து இத்தனை மோசமாக இருப்பதற்குக் காரணம் என்ன என்று என்பேதை நெஞ்சம் கேட்கத் தோன்றுகிறது. திட்டத்தின் பெயரால் எவ்வளவு பணம் செலவழித்தனர்? இருந்தும் என்ன பயன்?

"வேறு சில உறுப்பினர்கள் பேசுகையில், விவசாயிகளுக்கு 60-40 சட்டம் வந்த பிறகும் நிலச்சுவான்தார்களால் ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுவதின் நிலைமை பற்றி எடுத்துக் காட்டினார்கள்.

"சட்டங்கள் நிறைவேற்றினால் மாத்திரம் போதாது, இதை நடத்துகின்ற நிர்வாக இயந்திரம் பழுதுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பல இடங்களில் நிர்வாக இயந்திரம் சரியாக வேலை செய்யவில்லை என்று பல உறுப்பினர்கள் குறைபட்டார்கள். மடாலயங்களின் நிலத்தை உழவர்களுக்கு அளித்து, பத்துப் பதினைந்து ஆண்டுகள் ஆகியும் கூட இப்போதும் அவர்களுக்குப் பல கஷ்டங் களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அரசாங்கத்தைக் கவனப்படுத்துகின்ற வகையில் குறிப்பிட்டார்கள். இவைகளை யெல்லாம் பார்க்கும்போது, 'ஐயோ, இவர்களெல்லாம் நம் பக்கத்தில் இருக்கவேண்டியவர்களோ; தேர்தலில் பிரிந்துபோய் விட்டார் களோ?' என்று எண்ணக்கூடிய நிலையில் இருக்கிறது.

"இவை தவிர, 'வைத்திய விடுதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப் படவில்லை; கிராமங்களுக்குச் சரியான பாதை, போக்குவரத்து செய்து கொடுக்கப்படவில்லை; மின்சார கெடுபிடி அதிகமாக இருக்கிறது; இலங்கையிலிருந்து ஏற்படுகின்ற கஷ்டங்கள்; இவைகளுக்கெல்லாம் நிவாரண வழி வகைகள் வேண்டும்' என்று இன்று காலையிலிருந்து பல உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

"இவைகளை எல்லாம் நாங்கள் உங்களைப் பார்த்துக் கேட்கும் போது, நீங்கள் கோபப்படுவானேன் - வருத்தப்படுவானேன் - ஆத்திரப்படுவானேன்? சொந்தக் கட்சியைச் சார்ந்தோர் குறைகளைக் கூறும்போது எதிர்க்கட்சியைச் சார்ந்த நாங்கள் மட்டும் ஏன் கூறக்கூடாது? நாங்கள் இங்கு வந்திருப்பது ஆளும்கட்சிக்கு 'லாலி' பாடுவதற்காக அல்ல; குற்றங்களை எடுத்துக் கூறவேதான் வந்திருக் கிறோம். அதுதான் ஜனநாயகத்தின் பொறுப்பு. நாங்கள் இங்கிதம் தெரியாமல் நடந்து கொள்ளவில்லை".

''வேலையில்லாத் திண்டாட்டம் போகவில்லை - நீர்ப்பாசன வசதி கிடைக்கவில்லை; குடிதண்ணீர் வசதி கிடைக்கவில்லை என்பனவற்றையெல்லாம் பல உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினார்கள். காங்கிரசு உறுப்பினர்களே! உங்களுக்கு இந்த மன்றத்தின் மூலம் ஒன்று கூறுகிறேன் - எதிர்க்கட்சியிலிருப்பவர்களுக்காவது குறைகள் இருக்கும். அவற்றை நிறைவேற்றித் தர, அவர்கள் குறைகளைக் கூற வேண்டியதுதான். ஆனால் ஆளுங்கட்சிக்காரர்களாகிய உங்களுக்குப் பல 'கமிட்டி'கள் இருக்கின்றன; அவைகள் மூலம் அரசாங்கத்திற்குத் தெரிவித்து வரிகளின் குறைகளைத் தீர்த்துக் கொண்டிருக்கலாம். இருந்தும் நீங்கள் இங்கு எடுத்துச் சொல்வானேன்?

''நீங்கள் சொல்லிச் சொல்லி அலுத்து விட்டீர்களா - அல்லது, அவர்களது செவிகளில் நீங்கள் கூறுவது ஏறவில்லையா? சொல்லியும் பலனில்லை என்றா- அல்லது எமக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடா?

''ஆகவே, நீங்கள் இம்மாதிரியான குறைகளைப் பற்றி விரிவாகப் பேசவில்லை என்றால், எதிர்க்கட்சியினராகிய எங்களுக்கு 'பட்ஜெட்'டின் அடிப்படைக் கொள்கையைப் பற்றி இன்னும் அதிகம் பேசுவதற்கு நேரம் கிடைத்திருக்கும். இங்கு கூறப்பட்ட குற்றச் சாட்டுகள் எல்லாம் 'நிர்வாக இயந்திரம் சரியாக வேலை செய்யவில்லை' என்பதுதான். எங்கள் குற்றச்சாட்டுகள் அப்படியல்ல: கொள்கை அடிப்படையில் நாங்கள் குறை காண்கிறோம்; ஜனநாயகம் வளருவதற்கு நிர்வாகம், கொள்கை அடிப்படையில் கவனிக்கப்பட வேண்டும்.

''இந்தச் சந்தர்ப்பத்தில் தங்களின் அனுமதியின் பேரில், இம்மன்றத்தில், கவர்னர் பெருமான் ஆற்றிய உரையில் ஒரு பகுதியை எடுத்துக் காட்ட விரும்புகிறேன் :-

"The Finance Minister, in his budget speech, will deal with the policies of the new Ministry".

என்று, வாக்களித்திருப்பதை எல்லோரும் நிதி அமைச்சர் அவர்களின் உரையில் கொள்கை அளவில் அறிவிக்கப் பட்டிருக்கும் என்று எண்ணி துருவித்துருவிப் பார்த்தேன்; காணவில்லை. இதில் கொள்கை விளக்கம் இல்லாததற்கு இரண்டு காரணங்கள் தோன்றுகின்றன.

''ஒன்று - 'எங்களது காங்கிரஸ் கொள்கை உங்களுக்குத் தெரியாதா?' என்று நிதி அமைச்சர் கருதியிருக்கக் கூடும்; மற்றொன்று, - பொருளாதாரத்தையும் அரசியல் சாத்திரத்தையும் சேர்த்து புள்ளி விவரங்களாகத் தந்திருக்கிறேன் பார்' என்று சொல்வது! நான் கல்லூரியில் இரண்டு பாடங்களையும் சேர்த்து ஒன்றாகத்தான் படித்தேன். இருந்தும், என்னால் இதில் கொள்கை விளக்கம் ஒன்று இருப்பதாகக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் உண்மையிலேயே இந்த வரவு- செலவுத் திட்டத்தில் நான் ஆராய்ந்த வரையிலும், தரப்படு கின்ற விவரங்கள் எல்லாம், ஒரு குழுவின் கீழ் தயாரிக்கப்படுகின்றன - இந்தக் குழுவினால் பரிசீலிக்கப்பட்ட மூன்று அம்சங்களையும் பரிசீலித்துப் பார்த்தால்தான் இந்த வரவு-செலவுத் திட்டத்தின் தாரதம்மியம் நன்றாகத் தெரியும்.

''உதாரணமாக, இன்றையத் தினம் கனடாவில் இம்மாதிரி வரவு - செலவுத் திட்டத்தை ஆளும் கட்சியினர் கொண்டுவந்தால் உண்மையிலேயே அச்சத்தோடு கொண்டு வருவார்கள் என்று கருதலாம். ஏனென்றால், அங்கே ஆளும் கட்சியினருக்கும் எதிர்க் கட்சியினருக்கும் இடையிலே உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை வித்தியாசம் 10, 12-தான்.

''இன்றையத் தினம், என்னுடைய கட்சியைப் பொறுத்த வரையில், ஆளும் கட்சியினர், நாங்கள் 15 பேர்தான் இருக்கிறோம் என்று கூறுவர். அது மாத்திரம் அல்ல; எதிர்க்கட்சியிலுள்ள எல்லோரையும் கூட்டிச் சேர்த்துப் பார்த்தாலும் கூட - கூட்டுவதும் சேர்ப்பதும் கடினம் - அத்தனை பேர்களைக் காட்டிலும் 3 மடங்குக்கு மேல் அதிகமாக ஆளும் கட்சியினர் உள்ளனர். அதனால்,அவர்களுக்கு நிச்சயம் தெரியும் - என்ன குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினாலும் - எத்தனை ஒழுங்கீனங்களை எடுத்துக் காட்டினாலும் - எந்தக் கொள்கை விமரிசனம் செய்யப்பட்டாலும், இன்றுதானே பேசப் போகிறார்கள்; பேசட்டும் - பேசி என்ன காரியம் நடக்கப் போகிறது - என்ன ஆகிவிடப்போகிறது'' என்ற எண்ணம் தோன்றியிருக்கக் கூடும். அந்த நம்பிக்கையின் பேரிலேயே இந்த வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். எங்கள் எண்ணிக்கையை மட்டும் கருதாமல், எண்ணத்தைக் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

''நிதி அமைச்சர் அவர்களைப் பலர் பாராட்டினார்கள். பாராட்டுதலினால் அவருக்கு அஜீரணம் ஏற்பட்டு விடுமோ என்று எண்ணத் தோன்றும் அளவிற்குப் பல உறுப்பினர்கள் பாராட்டினார் கள். ஆனால் என்னுடைய பாராட்டுதல், இனிப்போடு கொஞ்சம் காரமும் கலந்ததாக இருக்குமாதலால், அவருக்கு ஏற்பட்ட அஜீரணம் மாறி, ஜீரணம் ஆகிவிடும்!

''தான் யார் என்று நாங்கள் அறிந்து கொள்ள முடியாமல் நடந்து கொண்டிருப்பதற்கு நிதி அமைச்சரை வெகுவாக பாராட்டுகிறேன். தான் யார் என்று காட்டாமல் இருப்பதற்குக் காரணம், கண்டு பிடிப்பதற்கு முன்னால், யார் என்று காட்டிக் கொள்வது நல்லதல்ல என்று கருதினார்களோ, அல்லது தான் யார் என்று கண்டுபிடிக்கக் கூடாது எனக் கருதினார்களோ - புரியவில்லை; காட்டிக் கொள்ளவு மில்லை. நான் இதைக் குறிப்பிடுவது, பொருளாதாரப் பாதைக் கண்கொண்டு சொல்லுகிறேன்.

''அதிக வரி போட்டு பொருளாதாரத்தைப் பெருக்குவதை ஆதரிப்பவரா - கிடைக்கின்ற வருமானத்தை வைத்துக்கொண்டு நாட்டின் நிர்வாகத்தையொட்டிச் செல்கின்ற பரம்பரைப் பொருளாதார நிபுணராக இருக்கிறாரா - துண்டு விழும் பட்ஜெட்டி னால் நாட்டுக்கு நன்மை உண்டென்று கருதும் பொருளாதார நிபுணராக இருக்கின்றாரா - உபரி (Surplus) பட்ஜெட் நாட்டுக்கு நல்லது என்று கருதுபவராக இருக்கிறாரா என்பதை அவர் வார்த்தைகளில் காணவே முடியவில்லை. துண்டு விழும் (Deficit) பட்ஜெட்டைப் பற்றிப் பேசும்போது 'Deficit budget is not bad. It is a virtue also' என்று சில உறுப்பினர்கள் பாராட்டினார்கள். கனம் உறுப்பினர் முத்தையா செட்டியார் அவர்கள், 'இதுதான் ஒரு சிறந்த பொருளாதாரத் திட்டம்: பன்னெடு நாட்களாக நான் கூறிவந்த யோசனையை இப்போதுதான் ஏற்றுக்கொண்டார்கள்' என்று மிகமிக அவசரமாகக் கூறிச் சென்றார்கள்.

''பற்றாக்குறை பட்ஜெட்டின் மூலம், நிதி அமைச்சர் நாட்டின் நலனைச் சரிக்கட்டவிரும்பினாரா? அல்லது, நிதி அமைச்சருக்குக் கட்டுக் கடங்காத நிலையில் இந்த பட்ஜெட் கொண்டு சென்றிருக்கிறதா என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இரண்டுக்கும் அடிப்படையில் வித்தியாசம் இருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

‘‘ஜெர்மன் நாட்டை ஆண்ட இட்லர். துண்டுவிழும் பட்ஜெட்டை, அரசாங்கம் வைத்துக் கொண்டிருக்கும் ஒரு மகத்தான ஆயுதம் என்று கருதி, கட்டுக்கடங்காத அதிகாரத்தை எடுத்துக் கொண்டு, ஏராளமான நோட்டுகளை அடித்து, துப்பாக்கியின் துணை கொண்டு வினியோகித்துத் தனது பொருளாதாரத்தை ஸ்திரப் படுத்திக் காப்பாற்றிக் கொண்டான்.

‘‘பற்றாக்குறை பட்ஜெட்டின் மதிப்பை நிதி அமைச்சர் வெளிப்படுத்தவில்லை. ஒரு சமயம் நிதி அமைச்சர் துண்டுவிழும் ‘பட்ஜெட்’ இருப்பதுதான் சரி என்று கருதுகிறாரா என்பதற்கு சென்ற ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் மீது பலர் நிகழ்த்திய பேருரையை நான் மிக்க கவனத்துடன் பார்த்தேன். விசித்திரம் என்ன வென்றால், அவர் துண்டு விழும் ‘பட்ஜெட்’ சமர்ப்பித்ததற்காக இப்போது எப்படிப் பாராட்டப்பட்டிருக்கிறாரோ, அதே மாதிரிதான் சென்ற ஆண்டும் இதே மன்றத்தில் அவர், அதிகவரி போட்டு உபரி பட்ஜெட் கொண்டு வந்ததற்காகப் பாராட்டப்பட்டிருக்கிறார். நிதி அமைச்சர் தனது நிலைமைக்கேற்ப வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்கிறார் என்று கருதுகிறேன்.

‘‘பாராட்டுதல், ஜனநாயகத்தில் சாதாரணம்தான்: ஆனால், அது அளவிற்கு அதிகமாகப் போய்விடக்கூடாது என்பது உள்ளபடியே என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

‘‘துண்டுவிழும் பட்ஜெட் தயாரிக்கும் நேரத்தில் அவர், புதிய வரிகளைப் போடவில்லை என்பது பற்றிச் சில உறுப்பினர்கள் வரவேற்றுப் பேசினார்கள்.

‘‘என்னைப் பொறுத்தவரையிலும் சரி - என் கட்சியைப் பொறுத்த வரையிலும் சரி - அதிகமா குறைவா என்பதைப் பொறுத்து ஒரு நாட்டின் கஷ்ட நஷ்டங்கள் அமையும் என்ற கருத்துக் கொண்டவர் களல்ல, நாங்கள்! தாங்குபவர்களின் மீது வரி போடுவதும், தாங்க முடியாதவர்கள் மீது இருக்கும் வரிகளைக் குறைப்பதும்தான் நல்ல திட்டத்தின் அடிப்படை நோக்காக இருக்கவேண்டும் என்றுதான் நான் படித்த பொருளாதார அரிச்சுவடியில் போதிக்கப் பட்டிருக்கிறது. ஒரு சமயம், நிதி அமைச்சர் அதற்கும் மேல் படித்த பொருளாதாரத்தில் வேறுவிதமாகப் போதிக்கப்பட்டிருக்கிறதோ நான் அறியேன். அல்லது அவருக்கு நிர்வாகத்தில் புதியதாக ஏதாவது அனுபவம் ஏற்பட்டிருக் கிறதோ என்னவோ புரியவில்லை!

"பொருளாதாரத் தத்துவத்தை விளக்கியவர்கள் 'Progressive taxation - Regressive taxation' என்று இரண்டு வரி விதிப்பு முறைகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்; இதையே வேறு விதமாகக் கூறவேண்டுமானால், 'Direct taxation - Indirect taxation' என்றும் விளக்கம் தரலாம்.

"இந்த நிமிடம் வரையில் நமது வரவு செலவுத் திட்டத்தை ஆராய்ந்தால், ஏழை மக்கள் தருகின்ற விற்பனை வரியிலிருந்துதான் அரசாங்கத்திற்குக் கணிசமான அளவுக்குப் பணம் வருகிறது. எத்தனையோ துறைகள் இந்த நேரத்திலே கவனிக்கப்படாமல் விடப்பட்டு இருக்கின்றன என்று ஆங்காங்கு பெரிய கூக்குரல்கள் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்றன. உண்மையிலேயே விற்பனை வரி மக்களை வாட்டி வதைக்கின்றது என்பதை, பல்வேறு கட்டங்களில், பலமுறை இடித்துரைத்து எடுத்துரைத்திருக்கிறோம். எனவே, இந்த நேரத்தில் எதிர்பார்த்தது என்னவென்றால் உணவுப் பொருட்களுக்காகவது நமது நிதி அமைச்சர் விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பார் என்பதுதான். நமது நாட்டில் இருக்கக்கூடிய வியாபாரிகளும் வாணிப சங்கங்களும் பல காலமாகப் பல்வேறு மாநாடுகளைக் கூட்டி, அவைகளுக்கு அமைச்சர்கள் சிலரைக் கூட வரவழைத்து அவர்களிடம் மகஜர்கள் கொடுத்தும் தங்கள் குறைபாடுகளை எடுத்துச்சொல்லி, 'பல்வேறு கட்டங்களில் போடப்படும் விற்பனை வரியை ஒரே கட்டத்திலாவது வசூலிக்கப்பட்டால், நாங்கள் திருப்தி அடைவோம்,' என்று எடுத்துச் சொன்னார்கள்.

"முதலமைச்சர், வியாபாரக்கூட்டம் நிறைந்த விருது நகரைச் சார்ந்தவர் என்பதால் அவ்வாறு செய்வார் என்றும் நினைத்தோம். 'வியாபாரிகளுக்குச் சலுகை காட்டுகிறார் என்று நாங்கள் சொல்வோம் என்று அஞ்சி ஒருவேளை, விற்பனை வரி விஷயத்தில் கண்டிப்பாக இருக்கிறார்களோ என்றும் எண்ணுகிறேன். அப்படிப்பட்டவர்கள் அல்ல, நாங்கள்! அப்படிச் சொல்லவும் மாட்டோம். எனவே, எங்களுக்காக அஞ்ச வேண்டாம். மற்ற விஷயங்களுக்காக அப்படிச் செய்திருந்தால் போகட்டும்; ஆனால், எங்களுக்காக எப்படிச் செய்திருந்தால் தயவுசெய்து அதை மாற்றிக் கொள்ளுங்கள் - ஒரு முனை விற்பனை வரி போட முன்வாருங்கள் - உணவுப் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளியுங்கள் என்று உறுதியுடன் கூறுகிறேன்.

"நிதி அமைச்சர் அவர்கள் 'food grains" (உணவுத் தானியங்கள்) என்றிருப்பதை 'food stuffs' (உணவுப் பண்டங்கள்) என்று மாற்றினால், ஓரளவுக்கு நாட்டில் நல்ல திருப்தி ஏற்படும்.

"வார்த்தைகள் மாற்றம், ஊர்களின் பெயர் மாற்றம் இதுதானே உங்கள் கட்சியின் திட்டம்? என்று சொல்வதாக அவர் புன்னகை எடுத்துக் காட்டுகிறது.

"ஆனால், நாங்கள் சொல்கின்ற திட்டங்களுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அரசாங்கத்திற்கு பெரிய செலவில்லாத திட்டங் களைத்தான் நாங்கள் சொல்வோம். பெரிய செலவுத் திட்டங்கள் கொடுத்தால் அவர்கள்தான் என்ன செய்வார்கள் - எங்கு போவார்கள்; தெரிந்ததுதானே! வடக்கே போகிறார்கள் - ஆனால் அங்கே கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்புகிறார்கள்?

"உணவுத் தானியங்கள் என்பதை உணவுப் பொருள்கள் என்று மாற்றி, அவைகள் மீது விற்பனை வரியை நீக்கினால், அரசாங்கத்திற்கு அதனால் ஒரு சில இலட்சம் ரூபாய்தான் வருமானம் குறையும்.

"ஆனால் மக்கள் சாப்பிடுகின்றபோது அரசாங்கத்தை மனதார வாழ்த்துவார்கள். உணவைச் சாப்பிடுகின்ற நேரத்தில், 'நல்ல சர்க்கார் நாட்டில் நிலவுகிறது- நல்ல அமைச்சரவை நாட்டை ஆளுகிறது - உணவுப் பொருள்கள் மீது வரியை எடுத்து விட்டார்கள்' என்று மனமார வாழ்த்துவார்கள்.

"சட்ட சபையில் பலர் வந்து போகிறார்கள் - ஜனநாயகத்தின் பரிசாக அவர்கள் இதை மதிப்பார்கள்; முதல் கவளத்தில் முதலமைச் சரை வாழ்த்துவார்கள்; இரண்டாவது கவளத்தில் நிதி அமைச்சரை வாழ்த்துவார்கள். (இந்த நேரத்தில் நிதி அமைச்சர், 'மூன்றாவது கவளத்தில் இதை எடுத்துச் சொன்னவரை வாழ்த்துவார்கள்' என்று கூறியதும் அவையில் பெருத்த சிரிப்பொலி எழும்பியது!)

தொடர்ந்து பேசுகையில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்:-

"சாப்பிடுகின்ற நேரத்தில் சாப்பாட்டுப் பொருள்கள் மீது வரியில்லை என்று பொதுமக்கள் ஒருமுகமாக வாழ்த்துவார்கள். மேலும், 'சாப்பிடும்போது வாழ்த்துவது நல்லது' என்று வைதீகர்களும் கூறுவார்கள். மற்ற விஷயங்களில் வைதீகத்தில் வேறுபட்டக் கருத்துக் கொண்ட நான், இந்த விஷயத்தில் வேண்டுமானால் ஒத்துக் கொள்கிறேன்.

"வரவு-செலவுத் திட்டத்தில் புது வரி போடாதது பற்றி இங்கே பேசிய பல காங்கிரஸ் உறுப்பினர்கள் காரணத்தை ஆராய்ந்து எடுத்துக் காட்டினார்கள். ஆனால், நிதி அமைச்சர் புது வரி போடாததற்குக்

காரணம்பற்றி என்னுடைய கருத்து என்னவென்றால், ஏற்கனவே பட்ட அடியால் (மத்திய அரசாங்கத்தின் வரி விதிப்பு) ஏற்பட்ட தழும்பு மாறாமலிருக்கும்போது, தானும் அதன்மேல் அடிக்க வேண்டாமென்று விட்டிருக்கக்கூடுமென்பதுதான்.

''எப்பொழுதும் நிதி அமைச்சர்கள் மன அரிப்புக் கொண்டவர் கள். ஒருமுறை நிதி அமைச்சர் பீடத்தில் அமர்த்திவிட்டால் அவர் களுக்குக் கனவிலும் நினைவிலும் 'வரி' என்ற நினைவுதான் இருக்கும்.

''ஒரு நகைச்சுவை ஏட்டில் படித்தேன் - மனைவி கட்டிக் கொண்டிருக்கும் சாதாரண சேலையைப் பார்த்த ஒரு நிதி அமைச்சர், 'இதில் வரியில்லையா?' என்று கேட்டாராம். அங்குகூட நிதி அமைச்சருக்கு 'வரி'யின் கவனம் போகவில்லை! கற்பனை நிதி அமைச்சரைப்பற்றித்தான் குறிப்பிட்டேன்- இந்த நிதி அமைச்சரை அல்ல!

''எங்களுக்குப் பயந்து வரி போடாமல் விட்டிருக்கிறார் என்று நான் சொல்லவில்லை - எங்களில் யாரும் கூறவில்லை. ஆனால், அவர்களுடைய கட்சியிலேயே இருப்பவர்களில் ஒரு சிலர் அப்படிச் சொன்ன காரணத்தால், எங்களுடைய கழகத்தைச் சார்ந்தவர்களும் 'ஆமாம் எங்களுக்குப் பயந்துதான்' என்று சொன்னார்கள், 'நிதி அமைச்சர் வரிபோடாமல் இருப்பார் என்பதில் உண்மையில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஏனென்றால், அவர்களுடைய வாக்கியத்தை நல்ல நல்ல தமிழில் எழுதியிருக்கிறார் என்று உறுப்பினர்களனைவரும் பாராட்டினார்கள். தமிழ் எப்போதும் பொய்க்காது; தமிழில் இருக்கும் வாக்கியத்தைப் பார்த்தால் 'இந்த எண்ணத்தில் இப்போது எஞ்சிய பற்றாக்குறையை ஈடுசெய்யாமல் தற்காலிகமாக விட்டுவிடுவது நியாயமாகும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம்' என்று இரண்டு மூன்று ஆபத்தான பதங்களை மிக அழகாகவும், சாமர்த்தியமாகவும் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள்.

''இதற்கு நேர்மாறாகப் பம்பாய் மாநில நிதி அமைச்சர் அவர்களும், இதேபோல, துண்டுவிழுந்த பட்ஜெட் சமர்ப்பிக்கின்ற போது 'என்னுடைய மாநில மக்கள்மீது அதிகமாக வரி விதிக்கப் பட்டிருக்கிறது; புதிதாக மத்திய சர்க்கார் போட்டிருக்கும் வரியில் பெரும்பாகம் - அதாவது 40 சதவிகிதம் வரை என்னுடைய மாநிலத் திலிருந்து வசூலிக்கப்படும் என்று நான் அஞ்சுகிறேன். ஆகையால் வரவு - செலவுத் திட்டத்தில் துண்டுவிழுவதைச் சரிக்கட்ட நான் புது

வரித் திட்டங்கள் எதையும் போடவில்லை, என்று காரணம் காட்டியிருக்கிறார்.

''ஆனால், இங்கே, நமது நிதி அமைச்சர் காரணம் காட்டவில்லை - காரணம் காட்டாதது மட்டுமல்ல - ஏன் காட்டப்படவில்லை என்று ஆவலோடு திட்டத்தை அலசிப் பார்த்தேன். காரணம் காட்டாததில் ஒரு பயம் பிறந்தது. கடைசியில் பாக்கும்போது, 'இந்த எண்ணத்தில் இப்போது எஞ்சிய பற்றாக் குறையை ஈடு செய்யாமல் தற்காலிகமாக விட்டுவிடுவது நியாயமாகும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம்' என்று கூறியிருப்பதைக் கண்டு, அதில் 'தற்காலிகமாக' என்றிருப்பதாலேயே, 'இந்த ஆண்டுதான் அங்கிருந்து (டில்லி) விழுந்திருக்கிறது அடி; அந்த அடியின் தழும்பே இன்னும் மறையவில்லை; அடுத்த ஆண்டு நான் தருகிறேன்; அதுவரைப் பொறுங்கள்' என்று அடுத்த ஆண்டுக்கு மக்களைக் காக்க வைக்கிறார் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

''வரி என்று குறிப்பிடுகிற நேரத்தில், வரிகளுடைய முறைகளைப் பார்த்துத்தான் ஆளும் கட்சி அல்லது சர்க்காருடைய போக்கினை மக்கள் தீர்மானித்துக் கொள்ள முடியும். அதனால்தான் பல்வேறு கட்சிகள் - முற்போக்குக் கட்சிகள், 'இந்த நாட்டை இன்று ஆளுகின்றனரே - அவர்களுடைய திட்டங்கள், சமதர்மம் பொருந்தியவை என்று எடுத்துச் சொல்லப்பட்டனவே; அதற்கேற்ற படி நடக்க வில்லையோ' என்று வருத்தப்பட்டார்கள். அத்தகைய வருத்தத்திற்குக் காரணம் புரிகிறது.

''நம்முடைய ஆட்சியாளர்கள், 'சமதர்மம் சமதர்மம்' என்று எடுத்துச் சொல்லுகிறார்களே தவிர, அவர்கள் இன்றைய தினம் கையாளுவதெல்லாம், 'சமயதர்ம'மே தவிர 'சமதர்ம'மல்ல! அதாவது, சமயத்திற்கேற்றபடி, சில 'தர்ம'ங்களை வைத்துக் கொண்டிருக் கிறார்கள் - 'ஐயோ போதும்; வரிபோடுவதற்கு இது நல்ல சமயமல்ல; ஆகவே இப்போது வரிபோட வேண்டாம்' என்ற அந்த முறையில்தான் சர்க்கார் கணக்கிட்டுள்ளது. அதனால்தான் இவர்களுடைய கொள்கை 'சமயதர்ம'மாக இருக்கிறது என்று குறிப்பிட்டேன்.

''இனி வரவு- செலவுத் திட்டத்தின் காலத்தைப்பற்றி எண்ணிப் பார்க்கும்போது, முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவுற்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் துவக்கத்தில் இருக்கிறோம். முதல் ஐந்தாண்டுத் திட்டம் நம் நாட்டை ஓரளவு சீர்படுத்தியிருக்கிறது;

இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் மேலும் சீர்படுத்தும். ஆகையால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்ற பொறுப்புணர்ச்சி யுடன் புதிய வரி போட்டாலும் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும்' என்ற வாதத்தை என்னால் புரிந்துகொள்ள முடியாது. எப்போது புரிந்து கொள்ள முடியாதென்றால், முதல் ஐந்தாண்டுத்திட்டம் உண்மை யிலேயே ஏழை - எளிய - பாமர மக்களுக்கு நன்மை பயந்துள்ளது என்பதற்குப் புள்ளி விவரங்களோடு காட்டி அதை நாட்டு மக்கள் ஏற்றுக் கொண்டால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மக்களுக்குக் கிடைத்த வலிவின் காரணமாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை தாங்கிக் கொள்ளக்கூடிய வலிவு ஏற்படுமானால், அப்போது அவர் களுடைய வாதத்தை உண்மையில் நான் பாராட்டக்கூடும்.

''நல்ல வேளையாக, சபாநாயகராக அமர்ந்திருக்கும் தாங்கள் மருத்துவத்துறையில், கொஞ்சம் மெலிந்திருக்கிறவர்களுக்கு கடினமான 'டானிக்' தந்திருக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கு முன்னால் மக்களுக்கு அடிப்படைத் தேவையாக உள்ள உணவு, உடை, குடியிருப்பு ஆகிய இந்த மூன்று அடிப்படைத் தேவைகளை மக்கள் பெற்றிருக்கிறார்களா என்று பார்த்தால், காங்கிரஸ் பேரவையின் பொதுச் செயலாளர் ஸ்ரீமன் நாராயணன் 'Economic Review' என்ற ஏட்டில்,

'The people feel that while the poorer section cannot escape taxation of an indirect nature in the form of sales tax and excise duties on various necessaries of life, the richer classes have become experts in managing evation and avoidence of taxation'.

என்று குறிப்பிட்டுள்ளது. அதுவும் காங்கிரஸ்காரர்களால் நடத்தப் படுகிற, ஏறக்குறைய அதிகார பூர்வமான ஏடாக விளங்கும் 'எக்கானமிக் ரிவியூ'வில் இப்படிச் சொல்லியிருக்கிறார் என்றால், நாம் சொல்வதில் என்ன தவறு? அதுமட்டுமல்ல; உலகறிந்த பொருளாதாரப் பேராசிரியர் கால்டர் என்பவரும் இதைப் பற்றித் தெரிவித்திருக்கிறார் :-

'Evation of direct taxes in India is of the order of Rs. 200 to 300 crores per year'.

''இப்படி கால்டர் மதிப்பீட்டின்படி, இந்தியத் துணைக் கண்டத்தில் ஆண்டுதோறும் பணக்காரர்கள் ஏமாற்றும் வரி 200

அல்லது 300 கோடி ரூபாய் வரையில் இருக்கும் என்று புள்ளி விவரம் தந்திருக்கிறார். இந்த மதிப்பீட்டை ஆராய்ந்து 'மிகை படுத்தப் பட்டுள்ளது' என்று முடிவு செய்து, 'எப்படிக் கணக்கிட்டாலும் 60 கோடிக்குமேல் இருக்காது' என்று இந்திய அரசாங்கமே அறிவித்ததையும் நான் அறிவேன். எனினும் இப்படிப் பெருத்த அளவுக்கு வரி வசூலிக்கப்படாமல் இழக்கப்பட்டிருக்கிற தென்பதை ஸ்ரீமன் நாராயணன் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார் என்பதை நினைவில் கொள்ள வேண்டுகிறேன்.

''அதுமட்டுமல்ல; ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி அவர் குறிப்பிடும் போது,

'The common man has not been able to feel the glow of freedom during the last few years in accordance with his expectation'.

என்று தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

''இந்த அரசாங்கத்திடம், 'இதைச் செய்யவில்லை - அதைச் செய்யவில்லை' என்று பலர் கேட்கும் போது ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள், 'இது என்ன, எப்போது பார்த்தாலும் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்களே' என்று சொல்லலாம். சர்க்காரிடத்திலே அபாரமான நம்பிக்கை இருப்பதின் காரணமாகத்தான் மக்கள் இன்றையத் தினம் அப்படிக் கேட்கிறார்கள். அதைக் குறித்து ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் பெருமைப் படவேண்டும். இந்த நாட்டை வெள்ளைக்காரர்கள் ஆண்டிருந்தால் அவர்களைக் கேட்க மாட்டார்கள்.

''வெள்ளைக்காரன் காலத்தில், சாதாரண 'அரிகேன் விளக்கு' தானே இருந்தது - இப்போது நம் காலத்தில் பெரிய 'டியூப்' விளக்கு போடப்பட்டிருக்கிறதே என்று பெருமைப் பாராட்டாதீர். அப்படிப் பெருமைப் பாராட்டிக் கொள்வீர்களானால், உங்களை நீங்களே ஏமாற்றிக் கொண்டவர்களாவீர், வெள்ளைக்காரனும் அப்படித்தான் சொன்னான் - 'இரயிலையே பார்க்காத உங்களுக்கு நான்தானே காட்டினேன் - அதிலேயே என்னை ஏறிப்போகச் சொல்லுகிறாயே?' ஏன்?

''ஆகையால், வெள்ளை ஏகாதிபத்தியத்திலிருந்து பழுப்பு ஏகாதிபத்தியமாகக் காங்கிரஸ் ஜனநாயகம் மாறக்கூடாது என்ற கவலை

கொண்டுதான் காங்கிரஸ் பேரவையின் பொதுச் செயலாளர் ஸ்ரீமன் நாராயணன் எச்சரித்துள்ளார்.

"மற்றொன்று கூற ஆசைப்படுகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய நிர்வாகத்தின் கீழ் வந்திருக்கிற 'கம்யூனிட்டி பிராஜக்ட்' பற்றி ஸ்ரீமன் நாராயணன் குறிப்பிடும்போது 'அவை திருப்திகரமான நிலையில் இல்லை' என்று கூறியிருக்கிறார்; அதாவது,

'Even in the Community Projects National Extension Services, it is now being admitted that lowest sections of rural population have not been benefitted to any considerable extend. In fact, all the available statistics tend to show that the difference between the living standard of the richer and poorer sections, instead of being narrowed down has increased further during the last nine or ten years.'

"இப்போது நான் இந்த மன்றத்தின் முன்னால், கனம் சபாநாயகர் அவர்களின் அனுமதியின் பேரில் கேட்டுக் கொள்வது என்னவென்றால், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த அளவுக்கு மக்களை ஏமாற வைத்திருக்கும்போது அதே ஏழைமக்களை வரி கொடுக்கச் சொல்லிக் கேட்பதில் என்னபயன்? ஆகையினால், வரி யாருக்குப் போடுகிறார்கள் என்பதைப் பொறுத்தும், எப்படிச் செலவழிக்கிறார்கள் என்பதைப் பொறுத்தும் இந்த பட்ஜெட்டைப் பற்றித் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்."

தொடர்ந்து பேசுகையில் அண்ணா அவர்கள், நிதி அமைச்சரின் திட்டத்தில் ஐந்தாவது பாராவில் 'விலைவாசிகள் ஏறுமுகம்-அன்னிய செலாவணியில் குறை - இவை இரண்டுமே நாட்டின் பொருளாதார நிலையை இன்று பாதிக்கும் பெரும் சிக்கல்கள்' என்று குறிப்பிட்டுள்ளதைப் படித்துக்காட்டி, மேலும் பேசுகையில் கூறியதாவது :-

"இதை யாரும் மறுக்க முடியாது. அப்படி மறுப்பவர்கள் உண்மையை மறைப்பவர்கள் ஆவார்கள்.

"இன்றைய தினம், உண்மையில் இந்த இரண்டு பெருங் குறைகள் இருக்கின்றன. ஆனால், நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்ன வென்றால், இந்த இரண்டுக்கும் நல்ல பரிகாரம் தேடும் திறமை நிதி அமைச்சர்க்கு உண்டு என்பதைக் காட்டிக் கொள்ளாததே! ஆனால், இந்த இரண்டும் அவருடைய நேரடியான மேற்பார்வையிலோ, நேரடியான அதிகாரத்தாலோ, நேரடி நிர்வாகத்திலோ அவரிடம் ஒப்படைக்கப்படவில்லை.

''இந்தியாவிலிருக்கும் நிலைமைகளை பொறுத்துத்தான் விலைவாசி ஏறுமுகம் அன்னியச் செலாவணிக் குறைவு ஆகிய இரண்டு சிக்கல்களையும் தீர்க்க முடியும். இதனை அவர் நன்றாக உணர்ந்திருக்கின்ற காரணத்தால் நாம் இவைகளை இங்கு தீர்க்கப்போகிறோம் என்று எடுத்துச் சொல்லி தங்களால் செய்யக்கூடிய சில பல காரியங்களை எடுத்துக் கூறியிருக்கிறார். அதற்காக அவரை சில உறுப்பினர்களும் பாராட்ட விரும்பினர். ஒரு உறுப்பினர் உருக்கமாகக் கேட்டார் - 'ஒன்றுகூட நல்லது சொல்ல மாட்டீர்களா?' என்று. நாங்கள் நஷ்டமடையாமல் நீங்கள் இலாப மடைவதில் நாங்கள் ஏன் குறுக்கே நிற்க போகிறோம்? மேலும் இதற்கெல்லாம் திருப்தி அடைந்து விடக்கூடிய சபலமனம் படைத்தவரல்ல நம் நிதியமைச்சர் என்பதை அறிந்த காரணத்தால் நான் அவரைப் பாராட்டாமல் இருக்கிறேன்.

''அவர் மீதிருக்கும் அன்பின் காரணமாகச் சிலர் பாராட்டிப் பேசினார்கள். அப்படிப் பேசுவது அவர்களுக்கும் நல்லதுதான். அதுவேறு விஷயம்.

''நம்முடைய நிதி அமைச்சர் தம்முடைய வசதிக் கேற்ற அளவில் செலவைப் பிரித்துச் செய்திருக்கிற ஏற்பாடுகள் உண்மையிலேயே ஓரளவுக்கு வரவேற்க வேண்டியதாக உள்ளது. ஆனால், அந்த ஏற்பாடுகளை வரவேற்கின்ற நேரத்தில், அவைகளை மூன்றாகப் பிரித்து பார்த்துத்தான் நம்முடைய தீர்ப்பை அளிக்க வேண்டியதிருக்கிறது. அதாவது, ஒன்று - போடுகின்ற திட்டம்; இரண்டாவது - திட்டத்திற்கு ஒதுக்கப்படுகின்ற பணம்; மூன்றாவது - அந்த பணத்தை செலவு செய்கின்ற நிர்வாக முறை. இந்த மூன்றும் சரிவர இருந்தால் தான் உண்மையிலேயே நம்முடைய திட்டங்கள் நல்ல பலனை அளிக்கும். உதாரணமாக நிதி அமைச்சர், சென்ற ஆண்டு 38 விதைப் பண்ணைகள் திறக்கப்பட்டன; இந்த ஆண்டு 136 பண்ணைகள் திறக்கத் தீர்மானித்திருக்கிறோம்' என்று சொன்னார்.

''உண்மையில் இது நியாயமான - தேவையான மக்களால் வரவேற்கத்தக்க ஒரு நல்ல திட்டமாகும். இத்திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில், இந்தப் பண்ணைகள் எந்த முறையில் வளர்க்கப்படுகின்றன - இந்தப் பண்ணைகளுக்காகத் தேர்ந்தெடுக்கப் படுகின்ற நிலங்கள் யாரிடத்தில் வாங்கப்படப்போகின்றன - அப்படி வாங்கப்படுகின்ற நிலங்களுக்கு விலை எப்படி நிர்ணயிக்கப்படும் - என்பதையெல்லாம் பார்க்கவேண்டியது அவசியமாகும்.

"அந்த நிலங்களை விலை கொடுத்து வாங்குவதற்குப் பதிலாக நிலச்சுவான்தார்களைக் கூப்பிட்டு, அவர்களிடம் இருக்கின்ற ஏராளமான நிலத்தில் ஒரு பகுதியையேனும் கட்டாயமாக, விதைப் பண்ணைகள் வைக்க வேண்டும் என்று சட்டபூர்வமாக அறிவிக்கலாம். ஆனால், ஆளும் கட்சியில், அன்பு பாராட்டும் பல நிலப்பிரபுக்கள் இருப்பதால் அவர்களுக்குக் கனிவாக எடுத்துச் சொல்லி, ஒரு பகுதியை விதைப் பண்ணைக்கு ஒதுக்கி வைக்க வேண்டுமென்று சொன்னால், அவர்களும் கொடுத்துவிடுவார்கள். இப்படிச் செய்வதால் அந்தப் பண்ணைகளுக்கு முதலீடு செய்ய வேண்டியதில்லை - அரசாங்கத் திற்கும் பணம் மிகுதியாகும் - திட்டத்தையும் சுலபத்தில் நிறை வேற்றலாம் என்று நான் கருதுகிறேன்.

"விதைகள் கொடுப்பதைப் பற்றியும், ஏழை உழவனுக்கு அந்த விதைகள் கிடைப்பதில்லை என்றும் ஒரு உறுப்பினர் சொன்னார். எந்த நேரத்தில் விதைகள் விதைக்க வேண்டுமோ அந்த நேரத்தில் விதைகள் வராமல் அறுவடை நேரத்தில் வருவதால், அதையும் சேர்த்து மார்க்கெட்டில் விற்றுவிடுகிறார்கள் என்று ஒருவர் அனுபவத்தின் காரணமாகக் கிராமப்புறங்களில் இருக்கும் நிலைமையைத் தெளிவாகச் சொன்னார்.

"ஏட்டில் திட்டங்களைக் காட்டுவதால் மட்டிலும் பாராட்டு தலுக்குரியவர்களாகிவிடமாட்டார்கள், நாட்டை ஆளுகின்ற சர்க்கார்! ஏட்டில் போடுகின்ற திட்டம் எந்த அளவுக்கு ஒவ்வொரு வீட்டிலும், இதற்கு முன்னால் இருந்ததைவிட வயிற்றுக்கு ஒரு கவளம் சோறு அதிகமாக இருக்கிறது - தலைக்கு ஒரு கரண்டி எண்ணெய் அதிகமாக இருக்கிறது - வாழ்வுக்கு ஒரு வேளை நிம்மதி அதிகமாக இருக்கிறது என்பதைக் கணக்கெடுத்துப் பார்க்க வேண்டும். நிம்மதி கலந்த ஏழையின் புன்னகைதான் ஒரு நிதி அமைச்சர் எதிர்பார்க்கும் பரிசும் - புகழுமாகும்.

"தங்கள் கட்சிகாரர்களும், எதிர்க் கட்சிகாரர்களில் இரண்டொரு வரும் புகழ்ந்து பேசிவிட்டால் அது எந்த அளவும் பலனளிக்காது. இதை நான் நிச்சயமாக வலியுறுத்திக்கூற ஆசைப்படு கிறேன்.

சென்ற ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் 'இந்த ஆண்டு 50 விதைப் பண்ணைகளைத் திறக்கப்போகிறோம், என்று வாக்குறுதி அளித்தும், 38 மட்டிலுமே திறந்தார்கள்; அதாவது 50 சொல்லி 38 என்றால், இப்போது 136 சொல்லி முப்பத்தாறுடன் நின்றுவிட்டால்

என்ன செய்வது? இந்த ஆண்டு, எல்லா பண்ணைகளையும் திறக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்திற்காக இந்த ஆண்டு, ரூ 55இலட்சம் செலவில் திட்டங்கள் தொடர்ந்து நடக்கும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைப் பார்த்தால், இதற்காக ரூ.1,23,00,000 செலவிடப்பட்டதாகப் புள்ளி விவரங்கள் காட்டு கின்றன. இந்த ஆண்டு குறைவாக நீர்ப்பாசனத்திற்கு ஒதுக்கப் பட்டுள்ளதற்குக் காரணத்தை விளக்க நிதி அமைச்சர் கடமைப் பட்டிருக்கிறார். நடைபெற்ற விவாதத்தில் இரண்டு பெரிய பிரச்சினை கள் பேசப்பட்டன. நம்முடைய முதலமைச்சர் மக்களுக்கெல்லாம் எடுத்து சொல்லிக் கொண்டுவருவது - 'இங்கே பெரிய ஆறுகள் இல்லை; அதனால் பெரிய அணைக்கட்டுகள் கட்டுவதற்கு இல்லை; வடநாட்டில் இருக்கின்றன; அதனால் பெரிய அணைகள் அங்கே கட்டப்படுகின்றன' - என்று!

''உண்மையிலேயே பெரிய ஆறுகள் தென்னாட்டில் இல்லை - அணைக்கட்டுகள் கட்ட' என்று நாகரிகமான முறையில் எடுத்துச் சொல்லிவருகிறார். அவர் கட்சியைச் சார்ந்த சிலர், 'ஆறுகள் இல்லை அணைகட்ட; அண்ணாத் துரை வாய்க்குத்தான் அணைகட்டியாக வேண்டும்' என்று யோசனை கூறுகிறார்கள்; முடிந்த வரையிலும் கட்டுங்கள் - வேண்டாம் என்று சொல்லவில்லை!

''சிறு நீர்ப்பாசன திட்டத்தைப் பற்றி பேசப்படும் நேரத்தில், இன்னமும் நம் நாட்டில் வீணாகிக்கொண்டிருக்கிற மலை அருவி களைக் கட்டுப்படுத்தி சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் செய்யக்கூடிய வசதிகள் நிறைய இருக்கின்றன. அவைகள் தள்ளப்படுவதற்குக் காரணம் என்ன?

''செலவழிக்கப்படும் பணத்தின் மூலம் நமக்குக் கிடைக்கும் வருவாய் மிகவும் குறைவாக இருக்கும் என்ற ஒரே காரணத்திற்காக ஒதுக்கி வைக்கிறோம் என்று சொல்கிறார்கள். சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதால் கிடைக்கும் நேர்முகமான இலாபத்தைப் பார்க்கிறார்களே தவிர, அதனால் மக்கள் மனதில் ஏற்படக்கூடிய மகிழ்ச்சியும், அந்த மக்களுக்கு ஏற்படக்கூடிய திருப்தியும் ரூபாய்களாக மாற்றிப் பார்த்தால் உண்மையிலேயே எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றவேண்டும் என்ற ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நான் கருதுகிறேன்.

''எல்லோரும் அவரவர் தொகுதிகளைப் பற்றிக் குறைபட்டார் கள்; அதைப்போலவே நானும் என் தொகுதியைப் பற்றிப் பேசாவிட்டால், 'அண்ணாதுரை திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிப் பேசினாரே தவிர, தன் தொகுதியைப் பற்றி ஒன்றுமே சொல்ல வில்லை, என்று - நாங்கள் கருதமாட்டோம்- என் தொகுதியில் உள்ளவர்களும் கருதமாட்டார்கள் - ஆனால் இங்கு எதிர்க்கட்சியி லிருப்பவர்கள் சொல்வார்கள்.

''என் தொகுதியிலிருக்கும் வரண்ட ஒரு ஆற்றைப் பற்றி முதலமைச்சரின் ஈரமான நெஞ்சத்திற்கு எடுத்துச் சொல்ல ஆசைப் படுகிறேன். நான் ஒரு சிறுவனாகப் பள்ளியில் படித்த காலத்தில் ஆசிரியர் மணியை அடித்து, 'பிள்ளைகளே, வீட்டிற்குப் போகலாம்; பாலாற்றில் தண்ணீர் வந்துவிட்டது, என்று கூறியது என் நினைவிற்கு வருகிறது.

''எங்கள் பகுதியில், பாலாற்றில் தண்ணீல் வந்தது என்றால் பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை விட்டுக் கொண்டாடக்கூடிய காட்சியாகும். பாலாறு ஒரு நல்ல ஆறு; பெரிய ஆறு; ஆண்டுக்கொரு முறை நான்கு நாள் மூன்று நாள் பெய்கின்ற மழையில் அப்போது தண்ணீர் வெள்ளமாக வருகிறது; ஆங்காங்கு சிறு சிறு தேக்கங்களாக நிரப்பி அங்குள்ள பெரிய ஏரிகளையும் குளங்களையும் நிரப்பி, செங்கற்பட்டில் நீர்பாசனம் நடந்து வருகிறது. ஆற்று வெள்ளம் ஏரியில் தேக்கப்படுவதால் அந்த வெள்ளத்தால் அடித்து வரப்படும் வண்டல் மண் அந்த ஏரியில் படிந்து ஆழம் குறைந்து நாளடைவில் வடிகால்களை உடைத்துக்கொண்டு, வெள்ளம் வந்தாலும் தண்ணீர் தங்காமல் வெளியில் பாய்ந்தோடுகிறது.

''எப்படி சில விஷயங்களைப் படித்தாலும் உண்மை பொருளைத் தெரிந்து கொள்ள முடியாமல் தானாகவே வெளியே கக்கிவிடுகிறோமோ, அதுபோல பொங்கி வரும் நீரை வெளியே கக்கி விடுகிறது.

''சென்னை அரசாங்கமும் மைசூர் அரசாங்கமும் நடத்திய பல்வேறு மாதிரியான பேச்சு வார்த்தைகள் எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்று அறிய விரும்பினால் - அதைப்பற்றிக் கேட்டால், 'அது முடிந்து விட்டது' என்று சொல்லி விடுகிறார்கள்.

''நம்முடைய நிர்வாகப் பிரச்சினை எதனையும், 'முடிந்து விட்டது' என்று கருதாமல், நமது மாநில முதலமைச்சர் அவர்கள்

பாலாற்றைப்பற்றி மைசூர் மாநில முதலமைச்சருடன் மீண்டும் கலந்து பேசி ஆவனசெய்ய வேண்டுகிறேன். முன்னாலே, நிபுணர்களை யெல்லாம் கலந்துபேசினார்கள். நமது முதலமைச்சர் நிபுணரல்ல; நிபுணரல்லாத ஒரு காரணத்தால்தான் நாட்டுமக்கள் அவரிடத்தில் இன்றைய தினம் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்! நிபுணர்கள், புள்ளிவிவரங்களை நம்புவார்கள். நிபுணரல்லாத இவர், நாட்டு மக்களின் பசித்த வயிற்றையும், காய்ந்த தலையையும், கவலைபடிந்த முகத்தையும் பார்த்துத்தான் மக்கள் நிலையைத் தெரிந்து கொள்கிறார். ஆகையால், பாலாற்றுக்குத் தண்ணீர் வருவதற்கு மைசூர் அரசாங்கத் திடம் உடனடியாக மறுபடியும் பேச்சுவார்த்தைகளைத் துவக்கி வைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

''அதைத்தவிர, இதற்கு வேறு ஒரு வழியும் உண்டு. ரஷ்ய நாட்டில் இதுபோன்ற நிலைமையில் ஆற்றுக்கு மேலே தண்ணீர் இல்லாமல் போனாலும் பூமிக்கடியிலிருக்கும் தண்ணீரை மின்சாரத்தின் மூலம் ஆங்காங்கு வெளியே கொண்டுவந்து அதன் மூலமாக நீர்ப்பாசனம் நடத்துகிறார்கள். இதைப்பற்றி நமது பொறி யியல் இலாகாவினர் மேலும் எடுத்துச்சொல்லக்கூடும். அந்த முறையிலேயாயினும் பாலாற்றுக்குத் தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

''அதைச் செய்துவிட்டு எங்கள் கழகத்தைப்பற்றி செங்கற்பட்டு மாவட்டத்தில் எந்த மூலைமுடுக்கில் போய் திட்டினாலும் மக்கள் மாலைபோடுவார்கள். எவ்வளவு வேண்டுமானாலும் திட்டட்டும்; 'மன்னரே, தண்ணீர் கொண்டுவந்தாரே, என்றெல்லாம்கூடப் பாராட்டுவார்கள். எனவே, இதில் இரண்டு லாபம் இருக்கிறது - ஒன்று மக்கள் ஆதரவு கிடைக்கிறது; இரண்டாவது எங்களை அடக்குவதற்கு ஒரு வழி கிடைக்கிறது. எப்படியோ பாலாற்றுக்குத் தண்ணீர் வந்தால் போதும்!''

அடுத்து அண்ணா அவர்கள் சென்ற ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தை சபையின் முன் கொண்டுவந்து நிதி அமைச்சர் ஆற்றிய சொற்பொழிவைப் படித்துக்காட்டி, 'தென்னாட்டைத் தொழில் துறையில் வளர்ச்சி செய்யத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒத்துழைப்பை 'உண்மையிலேயே சர்க்கார் விரும்பினால், இன்றைய தினம் திராவிட முன்னேற்றக்கழகம் அதற்குத் தயாராக உள்ளது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்; தொழில் முன்னேற்றம், தொழிலாளர்களைப் பாதிக்காமல் வாழவைக்கக்

கூடியதாகவும், நாட்டின் செல்வத்தைப் பெருக்கக் கூடியதாகவும், அதே நேரத்தில் முதலாளி வர்க்கத்தை மாற்றி அமைக்கக் கூடியதாகவும் இருக்குமானால், நல்ல எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு எப்பொழுதும் இருக்கும்; இதில் ஒத்துழைப்பை ஆட்சியாளர் எந்த நேரத்தில் - எந்தக் கட்டத்தில் கேட்கிறார்கள் என்பது தீர்மானிக்கப்பட வேண்டும்; எதிர்க்கட்சி ஒத்துழைக்க வேண்டும் - ஒத்துழைக்க வேண்டும்; என்று கேட்கிறார்களே தவிர, எந்த நேரத்தில் - எந்தக் கட்டத்தில் கேட்கிறார்கள் என்பது தெளிவுபடவில்லை; நான் கருதுகிறேன் - திட்டத்தைத் தீட்டும் நேரத்தில் ஒத்துழைப்பைக் கேட்டால் நலமாயிருக்கும்; நாங்களும் ஒத்துழைப்புத்தர தயாராக உள்ளோம்; இராமாயணத்திலிருந்து மேற்கோள் காட்டினால் இங்குள்ளவர்கள் திருப்தி அடைவார்கள் என்ற எண்ணத்தில் சொல்கிறேன் - அணில் கூட அல்லவா இராமனுக்குப் பாலம் கட்ட உதவி புரிந்துள்ளது - அந்த முறையில் இந்த அண்ணாதுரையும் பயன்படக்கூடும்; எனவே, திட்டம் தீட்டும் நேரத்தில் கேட்டால் திராவிட முன்னேற்றக்கழகம் நிச்சயமாக ஒத்துழைப்புத்தரும், என்று சொல்லி, "வரவு - செலவுத் திட்டத்தில் 'தற்காலிகமாக' வரி விதிக்காத நிதி அமைச்சரை 'தற்காலிகமாக'ப் பாராட்டுகிறேன்".

வணக்கம்

சமுதாய நலத் திட்டத்திற்கான விவாதம்

உரை : 14 **நாள் : 17.03.1958**

(சமுதாய நலத் திட்டத்திற்கு ஒதுக்கவேண்டுமென்று கோரிய தொகையை வெட்ட வேண்டுமென்று விளக்கிப் பேசியது.)

திரு. சி. என். அண்ணாதுரை: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாயநலத் திட்டத்திற்கு இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் தொகை ஒதுக்க வேண்டுமென்று நிதி அமைச்சர் அவர்கள் இந்த சபையைக் கேட்டு இருப்பதில், ஒதுக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லுகின்ற தொகையின் அளவை கொஞ்சம் வெட்ட வேண்டுமென்று இந்தத் தரப்பிலுள்ள நாங்கள் சில காரணங்களைக் காட்டி விளக்கிக் கொண்டு வருகிறோம். இந்த சமுதாய நலத் திட்டத்தை தத்துவ ரீதியிலே ஆராய்ந்து பார்ப்பது என்பது ஒன்று. நடைமுறையில் என்ன பலன்களைத் தந்திருக்கிறது என்று ஆராய்வது மற்றொன்று. நடைமுறையில் சமுதாய நலத் திட்டங்களை ஆராய்ந்து பார்க்கிற நேரத்தில் அது இந்த ராஜ்ய சர்க்காருக்கும் மற்ற ராஜ்ய சர்க்கார்களுக்கும் ஒப்புவைமை பார்த்து, இந்த ராஜ்ய சர்க்காருடைய திறமையைப் பாராட்டுவது, சரியான வழியில் நடைபெறவில்லை, என்று இந்த ராஜ்ய சர்க்காருடைய திறமைக் குறைவைக் கண்டிப்பது என்ற வகையிலே ஆராய்வது மற்றொன்று. நான் முதலிலே இந்த சமுதாய நலத் திட்டம், தேசிய விஸ்தரிப்புத் திட்டம் என்று இருக்கிற திட்டத்தை தத்துவ ரீதியாக ஓரளவுக்கு ஆராய்வதற்கு விரும்புகிறேன். ஏனென்றால் இந்தத் திட்டம் ஐந்தாண்டுத் திட்டம் என்று சொல்லப்படுகின்ற திட்டத்திற்கு உயிரோட்டம் தரத்தக்கது என்றும், உலகத்திலே உள்ள பலநாடுகள் இதனை மிகக் கூர்மையாக கவனிக்கின்றன என்றும், இந்தியத் துணை கண்டத்திலே இருக்கின்ற கிராமப்புறங்களிலே புத்துணர்ச்சியும், புத்துயிரும் இந்தத் திட்டத்தினால் வருகிறது என்றும் கொண்டாடப்படுகிறது.

வெளிநாடுகளிலே இருந்து வருகிற பெரும் தலைவர்களும், சமுதாய நலத்திட்டங்கள் நடைபெறுகிற இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அவர்கள் எல்லாம், திட்டங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் கண்டு, தங்களுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டு வருகிறார்கள். இப்படி இந்தியத் துணைக் கண்டத்தின் மத்திய சர்க்காரினாலே வெகுவாகப் புகழப்படுவதும் வெளிநாட்டினருக்கு வெகுவாகக் காட்டப்படுவதும், வெளிநாட்டுத் தலைவர்கள் பாராட்டிவிட்டுப் போவதுமான இந்தத் திட்டம் சரியான தத்துவத்தின் பெயரால் கட்டப்பட்டிருக்கிறதா என்று ஆராய வேண்டிய பெரும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் இருக்கிறது என்பதை வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

இந்த மாநில சர்க்காருடைய வரவு செலவுத் திட்டத்தில் 63 கோடி ரூபாயை இந்த ஆண்டில் செலவழிக்க இருக்கிறார்கள். அதிலே, 2 கோடி ரூபாய் குறிப்பிடப்பட்ட இந்தத் துறையிலே செலவழிக்கப்பட இருக்கிறது. இந்த 2 கோடி ரூபாய் செலவழிக்கின்ற இந்தத் துறைகள் ஒன்றும் தனித் தனித் துறைகள் அல்ல, புதுமையான துறைகள் அல்ல. மிச்சம் இருக்கிற 61கோடி ரூபாயை எந்தெந்த துறைகளுக்குச் செலவழிக்க இருக்கிறார்களோ அதற்கு செலவழிக்கப் படும். உதாரணமாக விவசாயத்திற்கு என்று குறிப்பிட்ட தொகையை செலவழிப்பதில், அதிலே சமுதாய நலத் திட்டத்திலே கொஞ்சம் தொகையும், அது போலவே, கால்நடை பராமரிப்புக்கு என்று பட்ஜெட்டில் ஒதுக்கி இருக்கிற தொகையோடு இதிலேயும் கொஞ்சம் தொகையும் ஒதுக்கியிருக்கிறார்கள். 61 கோடி ரூபாய் செலவழிப்பதன் மூலம் இந்த நாட்டை ஆளுகின்றவர்கள், நம்மை ஆளுகின்றவர்கள், என்ன பலனை செய்து காட்ட விரும்புகிறார்களோ, மேலும் 2 கோடி ரூபாய் செலவழிப்பதினால், மிக்க அதிக நன்மை செய்து விடமுடியும் என்று அவர்களே வலியுறுத்த மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஒரு நாட்டை ஆளுகின்ற சர்க்காரின் தராதரத்தைப்பற்றி வலியுறுத்துகின்ற நேரத்தில், இந்த நாட்டைப் பொறுத்தவரை, காங்கிரஸ் ஆட்சியைப் பொறுத்தவரை இந்த அளவுக்கு வரி போட்டோம், இந்த அளவுக்கு அதிகாரத்தை கொடுத்தோம் என்று சொல்லுகின்ற நேரத்தில், இதற்கு முன்னர் வேறு ஒரு அமைச்சர் அவை இருந்தது இல்லை, மற்றொரு அமைச்சர் அவை என்ன காரியங்களை சாதித்தது, இது என்ன

சாதிக்கவில்லை என்று ஒப்புவமை பார்ப்பதற்கு வாய்ப்பு இல்லை. இனி வர இருக்கிற அமைச்சரவையைவிட இந்த அமைச்சர் அவை திறம்பட நடக்கின்றதா என்று பார்ப்பதற்கு எதிர்கால அரசியல்தான் பதிலளிக்க வேண்டும். இதற்கு முன்னாலிருந்த அமைச்சரவை இப்பொழுது நாம் வசூலிக்கின்ற வரிப் பணத்தில் 4-ல் ஒரு பாகமோ 10-ல் ஒரு பாகமோ மிகக் குறைந்த அளவிலே வரி வசூலித்துக் கொண்டிருந்தது என்பதை மறந்துவிடுவதற்கில்லை.

கிராமப் புறங்களிலே, சமுதாய நலத் திட்டத்தின் மூலம் நாங்கள்தான் அபிவிருத்திகள் செய்து இருக்கிறோம், மற்றவர்கள் ஒன்றும் செய்யவில்லை என்ற சொல்லுவதற்கில்லை. உண்மையிலேயே ஒப்பிட்டுப் பார்ப்பது சரியான முறையாகாது என்பதை இந்த மாமன்றத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். சமுதாய நலத் திட்டங்கள் வகுத்திருக்கின்ற நேரத்தில் 4 பெரிய பலன்களை எதிர்பார்ப்பதாக அதனுடைய கர்த்தாக்கள் வலியுறுத்தி சொல்லியிருக்கிறார்கள். கிராமப் புறங்களில் புத்துணர்ச்சி, புத்துயிர், ஆங்கிலத்தில் "Revolution in Rural India" என்று சொல்வார்கள் - கிராமங்களில் ஒரு புரட்சியை நான் காண விரும்புகிறேன், என்று அதனுடைய கர்த்தா சொல்லியிருக்கிறார். இன்றைய தினம் கிராமப் புறங்கள் அத்தகைய உருவத்தை அடைந்து இருக்கின்றனவா என்பதை சமுதாய நலத்திட்டத்திற்கு பொறுப்பாக உள்ளவர்கள் நெஞ்சில் கை வைத்து உண்மையில் பதில் அளிக்க வேண்டும். கிராமப்புறங்களில் இன்றைய தினம் இருக்கும் நிலைமை, சமுதாய நலத் திட்டங்கள் மூலமாக இரண்டொரு புதிய கட்டிடங்கள் கட்டுவதும், பொறுக்கு விதைகளைத் தருவதும் இப்படிப்பட்ட காரியங்களை மட்டும் காட்டி, பெரிய புரட்சி மனப்பான்மை பரவி விட்டது என்ற எண்ணம் அல்லாது, தோற்றத்திலே பரவி விட்டது என்று சொல்வதில் பொருள் இல்லை. சமுதாய நலத்திட்டத்தின் மூலம் இல்லாவிட்டால் வேறு வகையில் இவை நடைபெறும். கிராமங்களில் பணம் படைத்தவர்கள் பஜனை கோயில் கட்டியிருப்பார்கள், இன்னும் அதிக பணம் படைத்தவர்கள் திருக் கோயிலைக் கட்டியிருப்பார்கள். பஜனை கோயில் கட்டியதாலேயே பக்தி வளர்ந்து விடவில்லை. திருக்கோயிலை கட்டியதாலேயே திருத்தொண்டு வளர்ந்து விடவில்லை என்பது போல இந்த சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் இரண்டொரு கட்டடங்

கட்டியதால் மட்டும், அங்கு இருக்கின்ற அலங்கோல நிலைமை மாற்றப்படவில்லை.

ஆகவேதான் இந்தத் திட்டக் கர்த்தாக்கள் கிராமப்புறங்களில் புரட்சி மனப்பான்மை வரவேண்டும் என்று சொன்னது மட்டுமல்ல, கிராமப்புறங்களில் உற்பத்தி பெருகவேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். அந்த உற்பத்தி பெருகி இருக்கிறதா என்ற வினாவுக்கு, நாங்கள் அல்ல என்று சொல்லுகிறோம். அந்தத் திட்டம் சரியான முறையில் அமுலாக்கப்படுகிறதா என்று பார்ப்பதற்கு போடப்பட்ட பல்வந்த்ராய் மேதா கமிட்டியினர் பல்வேறு இடங்களுக்குச் சென்று சுற்றிப் பார்த்து பெருமைப்படக்கூடிய அளவுக்கு உற்பத்தி பெருகவில்லை என்பதையும், உற்பத்தி பெருகினதாக தவறான கணக்கை மக்களுக்குக் கொடுத்து விட்டதாகவும் ஒரு குற்றச்சாட்டையும் இந்த கமிட்டியினர் தந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இந்த ராஜ்யத்திலே அது சரியான முறையில் நடைபெறவில்லை என்று அந்தக் கமிட்டியின் அறிக்கையில் ஒரு குறிப்பும் காணப்படுகிறது. அந்தக் கமிட்டியில் இருந்தவர்கள் பெரும்பாலும் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் என்றோ அல்லது செய்கின்ற காரியங்களுக்கு குற்றங்களைக் காணக் கூடியவர்களென்றோ, கிராமப்புறங்களுக்கே இது வரையிலும் போகாதவர்களென்றோ, அலட்சியப்படுத்தி விடமுடியாது. அவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், நல்ல மதிப்பு அளிக்கக் கூடியவர்கள், ஆளும் கட்சியில் அக்கறை கொண்டுள்ளவர்கள், இவர்களே அப்படிச் சொல்லியிருக்கிறார்கள் ''இந்த திட்டம் எதிர்பார்த்த பலனை தரவில்லை'' என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலிருந்து மற்றொரு தத்துவ ரீதியான விளக்கத்தையும் கனம் அமைச்சர் அவர்களிடமிருந்து பெற விரும்புகிறேன். உற்பத்தி பெருக வேண்டிய அளவில் பெருகவில்லை என்று பல்வந்த் ராய் மேதா கமிட்டி ஒப்புக் கொண்டிருக்கிறது. குறிப்பாக விவசாய உற்பத்தி பெருகினாலும் அதன் மூலமாக செல்வம் வளர்ந்து விடுமா என்பதைப் பற்றி என்னைப் போன்றவர்களுக்கு ஐயப்பாடு உண்டு. ஆனால் உற்பத்தி பெருகி, அந்த உற்பத்தியிலிருந்து கிடைக்கக் கூடிய லாபம், உற்பத்தியிலிருந்து கிடைக்கும் வருவாய், பரவலாக நாட்டு மக்களிடத்தில் சென்று சேருவதற்கான வழிமுறை இல்லாத காரணத்தால் உற்பத்தி

பெருகுவதன் மூலம் மட்டும் மறுபடியும் மறுபடியும், பொருளாதாரத் துறையில் பேதங்கள், வித்தியாசங்கள் இருக்கத்தான் செய்யும் என்ற கருத்தை இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

உற்பத்தி பெருகுவதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்வதற்கு ஒவ்வொரு ராஜ்ய சர்க்கார்களும், விவசாய அமைச்சர்களும் காஷ்மீர் நாட்டைச் சேர்ந்த ஸ்ரீநகரில் கூடி நிறைவேற்றிய தீர்மானத்தை இந்த அமைச்சர் அவைக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். உண்மையிலேயே உற்பத்தி பெருக வேண்டுமென்றால் நிலத்தில் பாடுபடுகிறவர்கள்தான் நிலத்தின் சொந்தக்காரர் என்ற உரிமை உணர்ச்சி ஏற்பட்டாலொழிய உற்பத்தி பெருகும் என்பதையும் உணராமல் இதற்கு உரிய சட்டத்தை நிறைவேற்றுவதில் ராஜ்ய சர்க்கார் தயக்கம் காட்டுகிறது, தாமதம் கொண்டிருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஸ்ரீநகரில் கூடிய விவசாய அமைச்சர்கள் மகாநாட்டில் உடனடியாக விரிவான நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும், அப்பொழுதுதான் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உற்பத்தியைப் பெருக்கினால் மட்டும் நாட்டு மக்களிடம் பரவலாக செல்வத்தை அளித்துவிடாது, என்பது ஒன்று. உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஊக்கத்தை அளிக்க தேவையான வகையில் அதில் உழைக்கிறவர்களுக்கு நிலத்தை உடைமையாக்க வேண்டும் என்ற இந்த இரண்டு கருத்துக்களையும் பலனையும் சுமந்து கொண்டுதான் சமுதாய நல திட்டம் இன்றைய தினம் இருக்கிறது. இந்தத் திட்டத்தை நடைமுறையில் கவனிக்கும் போது உண்மையிலேயே இதைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தவர்கள், ஆராய்ந்து பார்த்துவிட்டு வந்தவர்கள், எந்த இடம் ஏற்கெனவே வளம் பெற்று இருக்கிறதோ அந்த இடங்களில்தான் வளர்ச்சி இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். இதை உறுதிப்படுத்தும் தன்மையில் திருமதி குழந்தை அம்மாள் அவர்கள் பேசும்போது ''எவ்வளவு பணம் வேண்டுமானாலும் எங்களால் கொடுத்துவிட முடியும், அதை வாங்கிக்கொண்டு ஏன் திட்டங்களை வளர்ச்சி செய்யாமல் இருக்கிறீர்களே'' என்று கேட்டார். அவர்கள் கொங்கு நாட்டைச் சேர்ந்தவர்கள். அது பிற்போக்கான சில பகுதிகள் என்பதாலும், பொது மக்கள் இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு

பணம் திரட்டித் தருவதற்கு இயன்ற அளவுக்கு அவர்களிடத்தில் பண நடமாட்டம் இருக்கிறது என்பதாலும், அப்படிச் சொல்லுகிறார். இத்தகைய மாவட்டங்களுக்குத்தான் இத்தகைய பலன் போய் சேருகிறதே தவிர நாங்கள் இருக்கும் செங்கற்பட்டு மாவட்டத்தை பொறுத்த வரையில் அதிலும் குறிப்பாக காஞ்சிபுரத்தை பற்றி எங்களுடைய கட்சி மாச்சர்யத்தோடு பேசுகிறேன் என்று சொன்னாலும்கூட காய்ந்திருக்கிற காஞ்சியிலும் அநேக சமுதாய நல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற கருத்தாலும், அதற்கு பொது மக்களிடமிருந்து அதிகப்படியான பணத்தைப் பெருவதற்கு இல்லை. அதிகப்படியான பணத்தை பொது மக்களிடமிருந்து பெருவதற்கு இல்லாத நேரத்திலே உழைப்பு மூலமாக அவர்கள் தானம் அளிக்கலாம் என்ற வாதத்தை எழுப்பப்படுகிறது. உழைப்பு மூலமாக தானம் அளிக்க வேண்டும் என்றால் அந்த உழைப்பை வைத்துக் கொண்டுதான் அவர்கள் தங்களுடைய குடும்பத்தை நடத்திச் செல்லுகிறார்கள். அதனால் மிச்சம் இருக்கும் காலத்தில் இதற்கு அந்த உழைப்பைத் தரவேண்டும் என்பது இயலாத காரியம். ஆகையினால் சமுதாய நலத் திட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்தில் அந்த இடத்தில் பணத்தை கேட்கிறபடியோ அல்லது உழைப்பை கேட்கிறபடியோ என்பதை குறிக்கோளாக பார்க்காமல் அந்த இடங்களில் அவசர அவசரமாக திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்கிற குறிக்கோளை மனதில் வைத்துக் கொண்டு அவைகளை நிறைவேற்ற வேண்டும். இதில் அரசியல் கண்ணோட்டம் அடியோடு இல்லை என்று நான் சொல்லிக்கொள்ளும்போது உண்மையிலேயே நாம் இந்தப் பிரச்சினையிலிருந்து நழுவிக் கொள்ளுகிறோம். ஆளுகிற கட்சி எப்பொழுதும் தாங்கள் செய்கிற காரியம் அரசியல் கண்ணோட்டத்துடன் செய்யப்படவில்லை என்றுதான் வாதிடு வார்கள். எதிர்க்கட்சியினர்கள் தாங்கள் கண்டவைகளை எடுத்துச் சொல்லி அரசியல் கண்ணோட்டம் இதில் இருக்கத்தான் செய்கிறது என்பதை எடுத்துக் கூறுவார்கள். ஒரு தொகுதியில் - அதனுடைய பெயரை குறிப்பிட விரும்பவில்லை - என்னுடைய கழகத் தோழர் வெற்றி பெற்றிருக்கிறார். அங்கே நடைபெறுகின்ற எல்லா சர்க்கார் அலுவல்களிலும், சமுதாய நல திட்டம் சம்பந்தமான எல்லா அலுவல்களிலும், அவரிடம் தோற்றுப்போன காங்கிரஸ் நண்பர்தான் அந்த இடத்திலேயே இடம் பெறுகிறார். வெற்றிபெற்ற என்னுடைய

கழகத் தோழருக்கு அந்த இடத்திலேயே இடம் அளிக்கப்படவில்லை. அப்படி இடம் அளிக்கப்படாதது மட்டுமல்ல, நிறைவேற்றப்படும் திட்டங்களின் திறப்பு விழாக்கள் நடைபெறும்பொழுது, "நாங்கள் இவைகளையெல்லாம் செய்திருக்கிறோம். இன்றைய தினம் நீங்கள் தேர்ந்தெடுத்தவர் என்ன சாதித்துவிட்டார்" என்று கேட்பதன் மூலம் அடுத்த தேர்தலுக்கு அச்சாரம் வைத்து விடுவதாக நம்முடைய காங்கிரஸ் கட்சி பிரசாரகர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள், இதை நான் சொல்வதற்குக் காரணம், இதில் அரசியல் கட்சி கண்ணோட்டத்தை புகுத்தவில்லை என்று எடுத்துச் சொல்லுவது, .பிரச்சிரனையை நழுவ விடுவதாகும். பிரச்சினையை நழுவவிடுவது மாத்திரமல்ல, பெரிய தொகை செலவழிக்கிறோம், சமுதாய நல திட்டத்திற்காக பெரிய தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஏறக்குறைய இந்திய துணைக் கண்டத்தில் ரூ. 100 கோடி செலவழிக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். 100 கோடி ரூபாய் செலவழிக்கும் திட்டத்தில் அரசியல் கட்சி மாச்சரியம் உள்ளே புகுந்தால் அதன் மூலம் பெறக்கூடிய பலனை நாம் நிச்சயம் பெற முடியாது. நமது நிதி அமைச்சர் அவர்கள் முதலிலே கொடுத்த விளக்க உரையில் இவைகளெல்லாம் எப்படி ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துச் சொன்னார்கள். விவசாயம் வளரவேண்டுமானால் பொறுக்கு விதைகள் வேண்டும், பொறுக்கு விதைகள் கிடைத்தால் மட்டும் போதாது, நல்ல உரம் தேவை; நல்ல உரம் மட்டும் கிடைத்தால் போதாது, செயற்கை உரம் மட்டும் கிடைத்தால் போதாது, இயற்கை உரம் தேவை; இவைகளெல்லாம் மட்டும் கிடைத்தால் போதாது, இவைகளை ஒன்றுபடுத்த கூட்டுறவு தேவை; கூட்டுறவு இருந்தால் மட்டும் போதாது, கிராமத்திலுள்ள வர்களுக்கு கடன் கிடைப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்றெல்லாம் எடுத்துக் கூறினார்கள். கடன் வசதியை பொறுத்த வரையில் ஒரு கூட்டுறவு நிபுணர் கொடுத்திருக்கிற கணக்குப்படி கிராமத்தில் 100-க்கு 69.7 Professional money-lenders பங்கு பணத்தை வட்டிக்குக் கொடுக்கின்ற வட்டிக்கடைக்காரர்களை நமது கிராம மக்கள் நம்பியிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார். 100-க்கு 69 பங்கு கிராமத்தார்களுக்கு வட்டிக்குக் கடன் கொடுக்கின்றவர்கள் money-lenders என்று இருக்கிற நேரத்திலே, நம்முடைய சர்க்கார் கொடுக்கின்ற கடனுடைய அளவு 3.3 என்று கணக்கு தரப்படுகிறது.

கூட்டுறவு முறையில் கடன் கொடுப்பது மட்டுமல்லாமல் கருத்துக்களையும் தரவேண்டுமென்று நமது அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். மற்ற மற்ற துறைகளைப்பற்றி அவர்கள் என்ன பாத்தியதைக் கொண்டாடிக் கொண்டாலும், கூட்டுறவைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் ஆட்சி ஏற்படுவதற்கு நீண்ட நாளைக்கு முன்பே இந்த மாநிலத்தில் இந்த ராஜ்யத்தில் கூட்டுறவு துறை மிகமிக போற்றத்தக்க முறையில் வளர்ந்து கொண்டிருந்த கூட்டுறவு மூலமாக இப்பொழுது இவர்களால் தரப்படுகின்ற கடன் 100-க்கு 3 பங்கு என்ற அளவிலே இருக்கிறது. வட்டிக்குக் கடன் கொடுக்கின்றவர்கள் 100-க்கு 69 பங்கு . இந்த நிலையில் இவர்கள் எங்கே முன்னேற்றத்தை காட்டுகிறார்கள் என்று நான் அறிய விரும்புகிறேன். இன்றைக்குப் பொறுக்கு விதைகளைத் தருவது ஆட்சியாளர் கண்ட புதுமை அல்ல. பொறுக்கு விதைகள் முன்னாலேயே நம் தாலுகா அலுவலகங்களில் விநியோகிக்கப்பட்டு வந்தன. அதேமாதிரி பொலி காளைகள் வளர்ப்பதும் ஆட்சியாளரின் புரட்சிகரமான புதுமையான திட்டமல்ல. இதற்கு முன்னாலேயே இந்தத் திட்டங்கள் இருந்துகொண்டு வருகின்றன. இந்தத் திட்டங்களுக்கு நாங்கள் செலவழிக்கும் பணம் அதிகம் என்று சொல்லலாம். அதை எப்படி ஏற்றுக்கொள்வது? நீங்கள் வசூலிக்கின்ற வரி அதிகம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். இந்த மாநில சர்க்காரின் நிர்வாகச் செலவுக்காக முன்பு 6 கோடி ரூபாய் கிடைத்தது. இப்பொழுது 63 கோடி ரூபாய் கிடைக்கிறது. அந்த நிலையில் கொஞ்சம் அதிகம் செலவழித்து விட்டால் கீர்த்தியோ, கிதாப்போ அடைந்துவிடலாம் என்று நினைத்தால், அவர்கள் அடையவேண்டிய நல்ல புகழை அடையவில்லை என்றுதான் கருதவேண்டும். எதிர் தரப்பில் இருப்பவர்கள் இது அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்கப்படுகிறது என்று சொன்னால், அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் எங்களை வாயடைப்பதற்கு எதை வேண்டுமானாலும் பேசட்டும். அதுபற்றி நான் பொருள்படுத்தவில்லை. நான் கூறுவது நல்ல முறையில் உபயோகப்படுமானால் அதிலே நான் பெருமை அடைந்தவனாக கருதுவேன். செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர், பூந்தமல்லி வட்டாரங்கள் நன்றாக வளர்ச்சி அடைந்து அம்மையார் அவர்கள் கூறியபடி மக்கள் திட்டங்களுக்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுத்து மேலும் பணம்

வாங்கிக் கொள்வதற்கு முடியாத அளவில் அஜீரணம் ஏற்பட்டிருக் கிறது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். மதுராந்தகமும் அதுபோலவே நல்ல வளம் பெற்றிருக்கிறது. என்னுடைய தொகுதியாகிய காஞ்சிபுரமும் உங்களுடன் (காங்கிரஸ்காரர்களுடன்) இருந்துவிட்டு இப்போது எங்கள் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் திரு. வி.கே. ராமசாமி முதலியாரின் தொகுதியாகிய உத்திரமேரூரும் சர்க்காரால் மாற்றாந்தாயின் பிள்ளைகளைப்போல் நடத்தப் படுகின்றன. மாற்றாந்தாயின் பிள்ளைகளைப்போல் நடத்தப்படும் தொகுதிகளைச் சேர்ந்தவர்கள், தங்கள் தொகுதிகள் அரசியல் கண்ணோட்டத்துடன் ஆட்சியாளர்களால் அவ்வாறு நடத்தப் படுவதாகச் சொல்லும்போது, அவ்வாறு நடத்தப்படுவதில்லை என்று வாதிக்கப்படுவதைத்தான் நான் காண முடிகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் எல்லா மாநிலங்களிலும் பெருந்தொகை செலவில் சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படும் விஷயத்தில், அவை வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதற்கு எல்லா அரசியல் கட்சிகளும் அக்கறை காட்டுவதற்கும், அவை தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் வாய்ப்பளிக்கும் வகையில் திட்டங்களின் துவக்க கட்டத்தில் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பை ஆட்சியாளர்கள் கோரவேண்டும். துவக்க கட்டத்தில் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோராததினால், இப்போது பல ஊழல்கள் தோன்றிவிட்டன என்பதை நான் எடுத்துச் சொல்வதைவிட, இந்த ஆட்சியாளர்களுடன் இருந்தவரும், சபையில் அங்கத்தினராக இருப்பவரும், காங்கிரஸ்காரராக இருப்பவருமான திரு. சண்முக ராஜேஸ்வர சேதுபதி எடுத்துச் சொல்லியிருக்கிறார் என்று குறிப்பிட விரும்புகிறேன். அவர் அண்மையில் சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது, கான்ட்ராக்டர்கள் கொழுப்பதற்கும் ஊழல்கள் அதிகமாவதற்குந்தான் சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் இப்போது வாய்ப்பளிக்கின்றன என்று குறிப்பிட்டார். அவர் கூறியதை ஆமோதிக்கும் தன்மையில்தான் நேற்று முன் தினம் பாரதத்தின் பிரதமராகிய பண்டித ஜவஹர்லால் நேரு, நம் திட்டங்களால் உணவு உற்பத்தியில் நாம் அதிக அளவு முன்னேற்றங் காண வேண்டுமென்றும், அம் முன்னேற்றத்தின் பலனை கிராம மக்கள் அடைய வேண்டுமென்றும், அம் முன்னேற்றத்தின் விளைவாக விலைவாசிகள்

ஏறாமல் இருக்க வேண்டுமென்றும், நாம் வகுத்து நிறைவேற்றும் திட்டங்களால் இந்தப் பலன்கள் ஏற்படாதவரையிலும் அத் திட்டங்கள் உயிரற்ற நிலையில் (லைப்லெஸ்) தான் இருக்குமென்று குறிப்பிட்டிருக்கிறார்.

எங்களைப் பொறுத்தவரையில், சமுதாய நலத் திட்டங்கள், பழைய காலத்தில் பெருமை வாய்ந்திருந்த பஜனைக்காரர்கள் கட்டிய கோயில்களைப் போலவும், இடைக்காலத்தில் பெரிய பணக்காரர்கள் கட்டிய கோயில்களைப் போலவும், தங்கள் விளம்பரச் சாவடிகளைக் கட்டிக் கொள்வதற்கு காங்கிரஸ்காரர்களுக்கு வாய்ப்பு அளித்திருக் கின்றன என்றும், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் தங்கள் விளம்பரச் சாவடிகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றுந்தான் கருதுகிறோம். சமுதாய அபிவிருத்தித் திட்டங்களினால், கிராமங்கள் புத்துயிர் பெற்றுவிடவில்லை என்றும், நாட்டில் விவசாய அபிவிருத்தி ஏற்பட்டு விடவில்லை என்றும், கிராம மக்களின் பொருளாதார நிலை உயர்ந்துவிடவில்லை என்றும் நாங்கள் வருத்தத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறோம். இத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு நாங்கள் எவ்வாறு உதவ முடியும் என்று அமைச்சரவை கேட்குமானால், நான் மீண்டும் சொல்வேன். திட்டங்களிலும், திட்டங்களை நடத்துவதிலும் இருக்கக்கூடிய குறைகளை நீக்குவதற்கான எங்கள் யோசனைகளை ஆளும் கட்சி திட்டங்களின் துவக்க கட்டத்திலேயே பெறவேண்டும்.

எதிர் தரப்பினரின் எல்லா வாதங்களையும் முறியடிப்பதில் மட்டும் உங்கள் சாமர்த்தியத்தைக் காட்டக்கூடாது என்றும், அவ்வாறு செய்வது அரசியல் அறிவுடைமை ஆகாது என்றும், திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டுமென்றும் கனம் அமைச்சர்களிடம் சொல்லிக் கொள்கிறேன். இத்திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் பணம் வருங்காலத்தில் தக்கவாறு செலவழிக்கப்பட வேண்டுமென்று எதிர்தரப்பிலுள்ள நாங்கள் சொல்லிக்கொள்கிறோம் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

நிதி ஒதுக்கீட்டுக் கோரிக்கை - காவல் துறை

உரை : 15 **நாள் : 18.03.1958**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, போலீஸ் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை தரப்படு வதற்கு முன்னாலேயே அதிலே ஒரு வெட்டு அமைத்து அவ்வெட்டின் மூலம் அத்துறையைப் பற்றி எதிர்தரப்பில் உள்ளவர்கள் அவர்களது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. போலீஸ் துறையின் பேரில் நடத்தப்படும் இந்த கருத்துரை வழங்களில், போலீஸ் துறைக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் இதனுடன் தொடர்புடையன வாக உள்ள விஷயங்களும் விவாதிக்கப்படுகின்றன. எதிர்தரப்பில் உள்ளவர்களானாலும் சரி, அல்லது ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களா னாலும் சரி, நம் மாநில போலீஸ் இலாகாவின் திறமையைப் பற்றி யாருக்கும் ஒரு துளி ஐயப்பாடும் இல்லை. போலீஸ் துறைமிக்க திறமையாக நடத்தப்படுகிறது. திறமையுள்ளவர்களால் நடத்தப்படு கிறது என்பதில் கருத்து மாறுபாடில்லை. ஆனால் இருக்கிற கருத்த மாறுபாடு அத்தனையும், இவ்வளவு திறமையுள்ள போலீஸ் துறையை ஆட்சியாளர்கள் எதற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்பதில்தான் இருக்கிறது. திறமையுள்ளவர்கள், திறமையாக பணியாற்றுகிறவர்கள் என்று சொல்வது ஒன்று, அவர்களுடைய திறமை எதற்காக பயன் படுத்தப்படுகிறது என்பது மற்றொன்று. அந்த வகையில் பார்க்கும் போது, ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கே சிலவேளை உதாரணமாக போலீஸ் துறையின் மேல் அதிருப்தி ஏற்படக்கூடும். உதாரணமாக, எனக்கு முன்னால் பேசிய சேலம் அங்கத்தினர் மதுவிலக்கு இலாகாவையே போலீஸின் மேற்பார்வையில் இருந்து எடுத்து விட்டால்தான் மதுவிலக்கு வெற்றிகரமாக நடக்கும் என்றும் போலீஸ்

துறைக்கும் இழுக்கு இல்லாமல் இருக்கும் என்றும் சொன்னார்கள். அப்படி அவர்கள் சொன்னதில் இருந்து போலீஸ் துறையின் திறமையில் அவருக்கு அதிருப்தி இருக்கிறது என்று தெரிகிறது. நாங்கள் இந்தப் பகுதியில் இருந்து எடுத்து வாதாடுவதெல்லாம் - போலீஸ் துறையில் உள்ளவர்கள் திறமையற்றவர்கள் என்பதல்ல - அவர்கள் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறார்கள் - ஆளும் கட்சியினர் அவர்களை எந்த வகையில் பயன்படுத்துகிறார்கள் - என்பதைத்தான் பொறுத்திருக்கிறது. ஆளும் கட்சியினர், எப்பொழுதும் அதிகாரிகள் செய்கிற நடவடிக்கைகளை ஆதரித்தே தீர வேண்டுமென்ற அகராதி அரசியலில் நீண்ட நாட்களாக ஏற்பட்டு விட்டது. அந்த அகராதியை, ஆளும் கட்சியில் யார் அமர்ந்தாலும் பயன்படுத்துவதால், இவ்வளவு திறமையுள்ள போலீஸ் துறை நமக்கு இருந்தபோதிலும் அதனால் நாட்டு மக்களுக்குச் செய்யும் நற்பணிகளுக்கு குந்தகம் ஏற்படுகிறது. கனம் அங்கத்தினர் கரிய கௌண்டர் அவர்கள் பேசும்போது - மிக்க ஆர்வத்தோடு - போலீஸ் துறையினர் சரியாக நல்ல முறையில் பணியாற்றுகிறார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களது பேச்சை மிகவும் உன்னிப்பாக கவனித்துக் கொண் டிருந்தேன். ‘‘ஆளும் கட்சியில் இருந்து பேசுகிறேன்’’ என்று அவர்கள் பேசும்போது சொன்னார்கள், அவர்களுக்கு ஆளும் கட்சியில் இருந்து நீண்ட நாள் பழக்கம். ஆளும் கட்சி மாறியிருக்கிறதே தவிர கரிய கௌண்டர் அவர்கள் எப்பொழுதும் ஆளும் கட்சியில் இருந்து பழக்கப்பட்டவராவார். ஆகவே, ‘‘ஆளும் கட்சியிலிருந்து சொல்கிறேன், ஆளும் கட்சியிலிருந்து சொல்கிறேன்’’ என்று சொல்லி அவர் பழக்கப்பட்டு விட்டார்கள். நிற்க, இந்தத் துறையில் உள்ளவர்கள் சரியாக பணியாற்றவில்லை என்று நான் குறிப்பிடவில்லை. நம் மாநிலத்தில் மூன்று கோடி ஐம்பத்தேழு லட்சம் மக்கள் இருக்கிறார்கள். 31,000 பேர்கள்தான் போலீஸ் துறையில் பணியாற்றுகிறார்கள், என்று இந்த அறிக்கையில் இருந்து தெரிய வருகிறது. ஆக, மக்களின் எண்ணிக்கையும் போலீஸ் துறையினரின் எண்ணிக்கையும் பார்க்கும் போது கடினமான ஒரு காரியத்தைத்தான் போலீஸ் துறையினர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. சென்ற கிழமை என்று நான் கருதுகிறேன் - நமது போலீஸ் அமைச்சர் அவர்கள் கோவையில் பேசுகிற நேரத்தில் ‘‘டைட் ரோப் வாக்கிங்’’ - சர்க்கஸில் கம்பியில் நடப்பதைப் போல - அவர்கள் நடக்க வேண்டியிருக்கிறது என்று

அவர்களுக்குள்ள கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்கள். இவ்வளவு கஷ்டங்களுக்கு ஆட்பட்டு பணியாற்ற வேண்டியவர்களை ஆளும் கட்சியினர் பயன்படுத்தும் வகையைத்தான் நாங்கள் மிக மிக வன்மையாக கண்டிக்கிறோம். ஆளும் கட்சியினர் இத்துறையில் உள்ளவர்களை தவறான முறையில் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்லும் போது அமைச்சர் அவர்கள் அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்று கேட்கக் கூடும். ஆதாரங்களை வைத்து நிரூபித்துக் காட்ட எதிர்தரப்பில் உள்ளவர்களுக்கு வசதி குறைவு என்பது ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்கும், அமைச்சர்களுக்கும் நன்கு தெரிந்திருக்கும். போலீஸ் அமைச்சராக இருக்கும் பக்தவத்ஸலம் அவர்கள் இம்மாமன்றத்தில் ஒரு முறை பேசும்போது சொன்னார்கள். ''காங்கிரஸ் இயக்கத்தில் நான் ஈடுபட்டிருந்த போது என்னை ஒரு போலீஸ் அதிகாரி ஒருமுறைக்கு மூன்று முறை அடித்தார், அப்பொழுது எனக்கு வலிக்கக்கூட இல்லை, அதற்குப் பிறகு வலி எடுத்து இப்போது அவர் எங்கோ பெரிய உத்தியோகத்தில் இருக்கிறார் என்று .....அதற்காக நான் வருத்தப்பட்டுக் கொள்வில்லை'' என்றும் குறிப்பிட்டார்கள். நாங்களும் வருத்தப்பட்டுக் கொள்ளவில்லை. கனம் அங்கத்தினர் ஒருவர் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் சொன்னது போல், போலீஸ் துறையை ஆளும் கட்சியினர் தங்களுக்காக பயன்படுத்திக் கொள்வதினால், அது உங்கள் கட்சிக்குத்தான் நாட்டில் எதிர்ப்பு உணர்ச்சியை வளர்க்குமே தவிர - ஆளும் கட்சியினர் போலீஸ் துறையை தங்களுக்காக பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்று உங்களுக்குத்தான் அது ஒரு கெட்ட பெயரை உண்டாக்குமே தவிர - எதிர் தரப்பில் உள்ளவர்கள் - அவர்கள் போலீஸ் துறையினரால் துன்புறுத்தப்பட்டாலும், கொடுமைப்படுத்தப்பட்டாலும், அடக்கு முறைக்கு ஆளாக்கப்பட்டாலும் - அதனால் அவர்களுக்கு இழுக்கு எதுவும் இல்லை - அதனால் அவர்களது செல்வாக்கு சிதைந்து போகப்போவதுமில்லை.

பொதுக்கூட்டங்களில் கலவரங்கள் குழப்பங்கள் ஏற்படு மானால், அதை ஏற்படுத்தியவர்கள் யார் என்பதை, ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள், இன்னொரு கட்சியைத்தான் பழி சொல்லிக் கொண்டிருப்பார். அப்படி பொதுக்கூட்டங்களில் கலவரம், குழப்பம் ஏற்படும்போது அதை அடக்குகிற முறையை விட்டு நம் போலீஸ்

துறையினர் ஏதாவது ஒரு புது முறையைக் கண்டு பிடித்தேயாக வேண்டும். மேல் நாடுகளில் கிளர்ச்சிகள் அதிகமில்லை, ஆகவே இது தேவையில்லை என்று இம்மாமன்றத்தில் வாதாடப்பட்டது. மேல் நாட்டில், சென்ற திங்களில், அமைதிக்கு பெயர் போன பிரிட்டிஷ் நாட்டில் - சட்டத்தையும், ஒழுங்கையும் உலகத்திற்கே அறிவிப்பவர்கள் என்று தங்களைத் தாங்களே புகழ்ந்து கொண்டிருக்கும் பிரிட்டிஷ் நாட்டில் - கூட்டம் ஒன்றில் பேச வந்த அமைச்சர் ஒருவர், வீட்டு வாடகையை அதிகப்படுத்தலாம் என்று சொன்னதற்காக அவர் பேச அனுமதி கொடுக்காது, அவர் மேல் கோழி முட்டையை வீசினார்கள் - தக்காளிப்பழங்களையும் வீசினார்கள் - அப்பொழுது அந்தவிடத்தில் கண்ணீர் புகை வீசினார்களா? - துப்பாக்கியால் சுட்டார்களா? - அல்லது அவர்கள் பலமான தடியடிக்கு ஆளாக்கப்பட்டார்களா? - அப்படி ஒன்றும் நடந்ததாக பத்திரிகைச் செய்தி கூறவில்லை - அமைச்சர் அவர்களை பந்தோபஸ்தாக அழைத்துச் சென்றார்கள் என்று மட்டும் கூறப்பட்டிருக்கிறது. அதோடு அவர் கூறியதென்ன? நான் சொல்வது கேட்டு அதிருப்தி ஏற்பட்டு இப்படிச் செய்கிறீர்கள், பிறகோர் காலை நான் செய்தது சரி என்று உங்களுக்குப்படும்போது அப்பொழுது நீங்கள் என்னை ஆதரிப்பீர்கள் என்று சொன்னதாக பத்திரிகையில் பார்த்தேன். அமைச்சர் அவையில் அடிக்கடி மாறுதல் ஏற்பட்டாலும் அதை யொட்டி போலீஸ் துறையில் மாறுதல் அடிக்கடி ஏற்படப்போவதில்லை. நேற்றையதினம் நிதியமைச்சர் அவர்கள், பல்வந்தராய் மேத்தா கமிட்டியைப் பற்றி பேசும்போது நாங்கள் விரும்பியிருந்தால் அதை மூடி மறைத்திருக்க முடியும் என்றார்கள். அந்த மனப்பான்மைதான் இன்றைய தினம் போலீஸ் துறையை தவறான பாதையில் சிற்சில வேளைகளில் திருப்புகிறது. நாங்கள் பேச்சு உரிமை தந்து விட்டோம், அதனால்தான் இவ்வளவு கேடுகள் நடக்கிறது என்று ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார்கள் - கனம் மஹாலிங்கம் அவர்கள் என்று நினைக்கிறேன். மேல் நாடுகளில் - ரஷ்யா போன்ற நாடுகளில் - போலீஸ் துறையினர் குற்றத்தை ஒப்புக் கொள்ளவைத்தல் போன்ற காரியங்களில் மிகவும் கொடுமை செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அதே முறையை இங்கு கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிறீர்களா என்று ஆளும் கட்சியினரைக் கேட்க விரும்புகிறேன். ஆளும் கட்சியினர் தங்களிடத்தில் இன்றைய தினம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற போலீஸ்

துறையை, தங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிற ஒரு இடைக்காலப் பொறுப்பு என்று கருத வேண்டுமே தவிர - நிரந்தரமான பொறுப்பு என்று அவர்கள் கருதுவார்களே யானால் - அது தவறாகும். போலீஸ் துறை நிரந்தரமானது - ஒரு அமைச்சரவை நிரந்தரமானது அல்ல. நிரந்தரமானது அல்லாத ஒரு அமைச்சரவை, நிரந்தரமான போலீஸ் துறையை, தங்கள் செல்வாக்கை நிரந்தரமானதாக ஆக்கிக் கொள்ளப் பயன்படுத்துகிறார்கள் என்பதுதான் எனது பலமான குற்றச்சாட்டு. அதை, அமைச்சர்கள் தனிப்பட்ட முறையில் அப்படிச் செய்யாமல் இருந்திருக்கலாம் - அமைச்சர்கள் கூட சில விஷயங்களில் தனிப்பட்ட முறையில் அவ்வகையில் தூண்டுதலாக இருக்கிறார்கள் என்று நான் ஐயப்படுகிறேன்.

எனது நண்பர் அன்பழகன் அவர்களும், சத்தியவாணி முத்து அவர்களும், இதற்கு முன்னாலே பேசிய நேரத்தில், சென்னையில் நடைபெற்ற போலீஸ் அட்டூழியங்களைப் பற்றி போலீஸ் அமைச்சரிடத்திலே முறையிட்டுக் கொண்டார்கள். அவர்களுடைய தொகுதியிலே இருக்கிற போலீஸ் அதிகாரிகள் தாறுமாறான முறைகளிலே நடக்கிறார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். அப்படியானால் அவர்கள்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன? அப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படாத நேரத்தில், அங்கே இருக்கிற போலீஸ் அதிகாரிகள் அல்ல, அவர்களை நத்திப் பிழைக்க வேண்டுமென்ற ஒரு அரசியல் கட்சி - எந்த அரசியல் கட்சி என்று நான் குறிப்பிட விரும்பவில்லை - போலீசாரை யாராலும் மாற்ற முடியாது, அவர்களை மாற்றவேண்டுமென்று திராவிட முன்னேற்ற கழகத்தினர் சொன்னால், நாங்கள் போய் போலீஸ் அமைச்சரிடம் சொல்லுகிறோம் என்று பகிரங்கமாக கடை வீதிகளிலே பேசிக்கொள்கிறார்கள். உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் போலீஸ் துறையைப் பயன்படுத்த முடியும் என்று பேசுவதனால்தான் சில போலீஸ் அதிகாரிகள் தாறுமாறாக நடந்து கொள்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

போலீசாரின் திறமைக்கு ஐயப்பாடு சொல்லத் தேவையில்லை. உண்மையிலே திறமை படைத்தவர்களாக இருக்கின்ற காரணத்தினாலேதான் மிகக் குறைந்த போலீஸ் படையை வைத்துக்கொண்டு மிகப் பெரிய நாட்டைக் காப்பாற்றிக்கொண்டு வருகிறார்கள்.

இதனுடைய அடிப்படைத் தத்துவத்தை அலசலாம் என்று நான் கருதுகிறேன். இதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். போலீஸ் துறையினர் சட்டத்தையும் ஒழுங்கையும், சமாதானத்தையும் நிலை நாட்ட இருக்கிறார்கள். இந்த சட்டமும், ஒழுங்கும் எவ்வெப்போது குலைகின்றன, அப்படி குலைந்து போவதற்குக் காரணங்கள் என்ன என்பதைப் பார்க்கவேண்டும். எதிர் கட்சிக்காரர்கள் அப்படிச் சட்டங்களை குலைக்கிறார்கள் என்று சுலபமாகச் சொல்லிவிடுவதில் பயன் இல்லை. போடப்படுகிற சட்டங்கள் நாட்டு மக்களால் போற்றப்பட்டு வரவேற்கக் கூடிய சட்டங்கள் ஆகவும், நடத்தப்படுகிற ஒழுங்குமுறைக்கு எதிர்க் கட்சியாக இருந்தாலும் அதற்குக் கட்டுப்பட வேண்டும் என்ற தன்மையிலே அந்த ஒழுங்குமுறை இருந்தால், போலீஸ் துறையினருக்கு, இன்றைய தினம் அமைச்சர் அவர்கள் சொன்னது போல் "tight rope walking" ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை. நாட்டிலே ஏற்படுகிற கொந்தளிப்புகளை அமைச்சர்கள் கவனிக்க மறுக்கிறார்கள். நாட்டிலே ஏற்படக்கூடிய வேலை நிறுத்தங்கள், அந்த வேலை நிறுத்தங்களுக்கு முன்னால் அந்த வாடை வீசுகிற நேரத்திலே, அந்த வேலை நிறுத்தம் ஏற்படாமல் தடுப்பதற்கு அமைச்சர்கள் அவர்கள் தக்க முயற்சிகளை எடுத்துக் கொள்வதில்லை. வேலை நிறுத்தம் நடைபெறுகிற நேரத்தில் அதனாலே கலகங்கள் ஏற்பட்டு விடும் என்ற பயத்தினாலே போலீஸ் துறையினர் மிக்க திறமையாகப் பணியாற்றவேண்டுமென்ற கடமை உணர்ச்சியினால் உந்தப்பட்டு, காலித்தனம் செய்கிறார்கள் என்று ஒரு சிலரைக் கருதி கடுமையான அடக்குமுறைகளை நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு வருகிறது. இந்த மாகாணத்திலே மின்சாரத் துறையினர் வேலை நிறுத்தம் செய்யப்போகிறோம் என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். என்.ஜி.ஓ.வினர் தங்கள் குறைபாடுகளைப் போக்கவேண்டுமென்று பொதுக் கூட்டங்களில் வற்புறுத்திக் கொண்டு வருகிறார்கள். பி. அண்டு ஸி மில்ஸ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். இவைகள் எல்லாம், பொதுமக்களுக்கு மட்டுமல்ல, போலீசுக்கும் சோதனை காலம் ஆகும். உண்மையிலே சில போலீஸ்காரர்கள் அடிக்கிற நேரத்தில் யார் பேரில் அடி விழுகிறது என்று பார்ப்பதில்லை. போலீஸ் கான்ஸ்டேபிளின் அண்ணன் ஆக இருக்கலாம் அடிபடுகிறவர்; அவருடைய தம்பியாக

இருக்கலாம் - கற்பனையில் பேசுவதாக இந்த மாமன்றத்திலே உள்ளவர்கள் கருதவேண்டாம். அப்படி வெளியில் ஓரிடத்தில் நடந்திருக்கிறது. அடித்தவர் போலீஸ்காரர், அடிபட்டவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். அடிபட்டவர் அடித்த போலீஸ்காரருக்குத் தம்பியாகவே இருந்திருக்கிறார். போலீஸ் துறையினரை நாம்தான் தவறான வழிக்கு இழுத்துச் செல்கிறோம் என்று ஆட்சியாளர்கள் அந்தப் பொறுப்பை தங்கள் பேரில் போட்டுக் கொள்ள வேண்டும். சட்டம் குலைக்கப்படும் என்ற வாடை வரும் போது, அதற்கான நிலைமை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும் இந்தப் பெரும் பொறுப்பு ஆட்சியாளரிடமிருந்து நீங்குகிற காரணத்தினால், இன்றைய தினம் போலீஸ் துறையினர் சில வேளைகளிலே தவறான வழிகளில் நடக்க நேர்ந்திருக்கிறது. அதற்கான புகார்களைச் சொல்லும் நேரத்தில், நம்முடைய ஆளும் கட்சியினர் "ஆதாரங்கள் காட்ட முடியுமா, ஆதாரங்கள் காட்ட முடியுமா" என்று கேட்கிறார்கள். ஐ.ஜி. ஆக இருந்து ஓய்வு பெற்றுக் கொண்டிருக்கும் ராஜரத்னம் அவர்களைப் பற்றி மறுபடியும் இந்த மாமன்றத்திலே விவாதிக்கப்படும் என்று நான் கருதியதில்லை. இது விவாதிக்கப்பட்ட பிறகு எனது நண்பர் அன்பழகன் அவர்கள் அதற்கான விளக்கத்தை இங்கே சொன்னதில், காங்கிரஸ் அங்கத்தினரில் ஒருவர், "இதைப் போல ஆதாரம் அற்ற புகார்களைக் கொண்டு வந்து விட்டீர்களே, விசாரணை நடத்தினார் கள், ஒன்றும் பலன் ஏற்படவில்லை" என்று குறிப்பிட்டார்கள். அப்படிச் சொன்னவர் கனம் கரிய கௌண்டர் என்று நினைக்கிறேன். "நீதிபதி விசாரணை, நீதிபதி விசாரணை" என்று சொன்னார்கள். நீதிபதி விசாரணை "Judicial enquiry" என்பதற்கும், "enquiry by judicial" என்பதற்கும் வார்த்தையிலே மட்டும் மாற்றம் இல்லை. தரப்படுகிற அலுவலிலும், அதிகாரத்திலும் மாற்றம் இருக்கிறது. இதற்காக ஏற்படுத்தப்பட்ட அந்த விசாரணை "Judicial enquiry" அல்ல என்று அதற்காக யாரை நியமித்தார்களோ அவர்களே கனம் அன்பழகனுக்கு எழுதிய கடிதம் எங்களிடத்தில் இருக்கத்தான் செய்கிறது. அது மட்டும் அல்ல. ஏதோ, "ஆதாரம் காட்டுங்கள், ஆதாரம் காட்டுங்கள்" என்று எங்களை கேட்பது போலவும், நாங்கள் "இல்லை, இல்லை" என்று மறுத்தது போலவும் இந்த மாமன்றத்தில் பேசப்பட்டது.

இந்த புகார் சொல்லப்பட்ட நேரத்தில், கனம் அன்பழகன் ''இந்த ஆட்சி சரியான முறையிலே நடந்துகொண்டிருக்கிறதா என்று கேட்டால், இல்லை, இல்லை, இல்லை என்ற பதிலைத்தான் வலியுறுத்திச் சொல்வேன். அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள் என்று நிரூபிக்க முடியுமா? என்று கேட்டால், அப்படி நிரூபிக்கத் தேவையில்லை என்று கூட நான் சொல்வேன்'' என்று சொல்லியிருக்கிறார்.

அதிகாரிகளைப் பற்றி வருகின்ற புகார்களை விசாரித்து பார்க்க வேண்டிய பொறுப்பு, பொறுப்புள்ள ஆட்சியாளரைச்சாருமே தவிர, என்ன என்ன ஆதாரங்கள் இருக்கின்றன என்று எடுத்துக் குவித்துக் கொண்டு போவது எதிர்கட்சியாளர்கள் இடத்தில் இல்லை. அப்படித்தான் ஆதாரங்களைச் சேகரித்துக் கொடுத்தால் அதற்குத்தான் நீங்கள் என்ன மதிப்பு அளிக்கிறீர்கள்? கனம் கல்யாணசுந்தரம் ஆதாரத்திற்கு மேல் ஆதாரமாக எடுத்துக் காட்டியபோது, ஆட்சியாளர்கள் என்ன பதிலைத் தந்தார்கள். விசாரணை நடத்தப் பட்டு, பிறகு கைவிடப்பட்டது என்ற வழக்கமான பதிலைத் தவிர வேறு என்ன பதிலை பெறுகிறோம்.

போலீஸ்காரர்களின் திறமைகளைப் பற்றி சேலத்திலிருந்து வந்திருக்கும் அங்கத்தினர் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். கூட்டுறவு ஸ்தாபனங்களிலிருக்கும் மோசடிகளைக்கூட போலீசார் திறமையாக கண்டு பிடித்திருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் திறமைகளை எந்தெந்த காரியங்களுக்காக ஆட்சியாளர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை நான் ஆராய விரும்புகிறேன். சட்டம், ஒழுங்கு - இவைகளை நிலைநாட்டுவதற்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கும் அமைச்சரவை போலீசாரை இக்கட்டான நிலைமையில் தள்ளுகிறார்களே என்று நான் அவர்கள் விஷயத்தில் பரிதாபப்படுகிறேனே தவிர ஆத்திரப்படவில்லை. மற்றொன்று, போலீஸ் இலாகாவில் செய்திருக்கும் நடவடிக்கைகளைப்பற்றி போடப்பட்டிருக்கும் அறிக்கையில் இந்த வாசகம் இருக்கிறது. இந்த அறிக்கையை தயாரித்தவர்கள் தவறான முறையில் இதை எப்படி புகுத்தினார்கள் என்பதை என்னால் ஊகித்துக்கொள்ள முடியவில்லை.

"On the same day, at Tirupapuliyur and Cuddalore N.T. a party headed by Sri A. Govindasamy, M.L.A., as a protests against the inclusion of Devikulam and Peermedu in the Kerala State observed hartal. They also demanded that all shops should be closed. While shops remained closed at Tirupapuliyur, the owners of one shop refused to do so. Eight persons including the M.L.A. attacked the shop-keeper and committed theft of cash Rs. 166 from the shop."

இந்த வழக்கு போடப்பட்டு, விசாரணை நடத்தப்பட்டு, அவர் குற்றவாளி அல்ல என்று நிரூபிக்கப்பட்ட பிறகு, ஒரு எம்.எல்.ஏ. ஒரு கடையில் 166 ரூபாய் கொள்ளை அடித்தார் என்று அறிக்கையில் போடப்பட்டிருப்பது, "எதிர் கட்சியிலிருக்கும் ஒருவர் 166 ரூபாய் திருடியிருக்கின்றார்" என்று அமைச்சர் படித்துப் படித்து சந்தோஷப் படுவதற்காகவே போடப்பட்டிருக்கிறதோ என்று நான் ஐயப்படு கிறேன். ஏன் இப்படிப் போட வேண்டும்? "Alleged" என்ற வார்த்தை கூட அதில் இல்லை. ஆகையினால், தவறு செய்கின்றவர், போலீஸ் துறையினரா, அல்லது ஆட்சியாளரா என்று பார்க்கின்ற போது, ஆட்சியாளர்கள் கொண்டுள்ள மனப்பான்மைதான் குறையுடையது என்பது தெரிகிறது.

ஜனநாயக முறையில், பேச்சு உரிமை தந்திருக்கிறது, கிளர்ச்சி செய்வதற்கு உரிமை தந்திருக்கிறது, அதனால் அக்கிரமங்கள் நடக்கின்றன என்று கனம் கரிய கௌண்டர் அவர்கள் ரொம்பவும் உருக்கத்தோடு சொன்னார்கள். அவர்கள் பழைய நினைவு வைத்துக் கொண்டு பேசுகிறார் என்று நினைக்கிறேன். ஆகவே, ஒன்று மட்டும் நான் ஆட்சியாளருக்குச் சொல்லுவேன். ஆளும் கட்சி ஜனநாயகப் பாதையில் செல்லுகின்ற வரையில், இந்த உரிமைகளைத் தருவது என்பது அவர்களுடைய தலையாய கடமை. அதை அவர்கள் மறுக்க முடியாது. இந்த உரிமைகளை நீங்கள் மறுத்தால் ஜனநாயகத்தை மறைக்கிறீர்கள். ஜனநாயகம் மறுக்கப்பட்டால் என்ன நடைபெறும் என்பதை இந்தோனேசியா காட்டிக் கொண்டிருக்கிறது. இந்த உரிமைகள் தரப்படுகின்றன என்றால், அது உங்களைப் பாதுக்காகவும் உங்களுடைய கட்சியின் கண்ணியத்தைப் பாதுகாக்கவும் தரப்படு கின்றதே தவிர, காலத்தை ஒட்டி தரப்படுகின்றதே தவிர, எந்த நாட்டிலும் தரப்படாத உரிமைகள் ஒன்றையும் நீங்கள் பிரமாதமாக

எங்களுக்குத் தந்துவிடவில்லை. எஜமானன் மேஜையிலிருந்து எறியும் ரொட்டித் துண்டைப் பொறுக்கிக்கொண்டிருக்கும் பிச்சைக்காரர் களைப் போல் நாங்கள் நன்றி செலுத்த கடமைப்பட்டிருப்பது போலவும் ஆளும் கட்சியினர் கருதுகின்றனர். உங்களுக்கு சர்வாதிகார பாதையில் போவதற்கு ஆசையும் இருக்கிறது. ஆனால் அதை வெளிப்படையாக சொல்வதற்கும் வெட்கமாகவும் இருக்கிறது. வெளிப்படையாக "உங்களுக்கு இந்த உரிமைகளை மறுக்கிறோம்" என்று சொல்லிவிடுங்கள். "எதிர் கட்சிகள் கூட்டம் போடக்கூடாது, எழுதக்கூடாது" என்று சட்டம் செய்து விடுங்கள். அதற்குப் பிறகு என்ன நடக்கும். 'Guided Democracy' -ஐ பல நாடுகளில் பார்க்கின்றோம். இதைச் சொல்லும்போதே அண்ணாதுரையும் வெளிநாட்டுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறாரோ என்று நிதி அமைச்சர் எண்ணிக்கொண்டு தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறார்.

பேச்சு உரிமை, எழுத்துரிமை எல்லா நாடுகளிலும் சர்வ சாதாரணமாக தரப்பட்டிருக்கின்றது. இங்கிலாந்தில் இன்றைய தினம் மகாராணி ஆட்சி நடக்கிறது. அந் நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி கூடி மகாராணி ஆட்சி ஒழிய வேண்டும் என்று தீர்மானம் செய்திருக்கிறது. அரண்மனைக்கு எதிரில், திடலில், மகாராணியின் ஆட்சி நீக்கப்பட வேண்டும் என்று பேசும் அளவுக்கு ஜனநாயக உரிமை அங்கு தரப்பட்டிருக்கிறது. மற்ற நாடுகளில் இல்லாத ஜனநாயக உரிமைகளை என்ன நீங்கள் எங்களுக்குத் தந்துவிட்டீர்கள்? ஜனநாயக உரிமை தரப்பட்டு அது நல்ல பலன் தந்து வருகிறது.

கூட்டங்களில் குழப்பங்கள் நேர்ந்தால் அப்பொழுது எப்படி பக்குவமாக நடந்து கொள்ளவேண்டும் என்பதைப்பற்றி நான் எடுத்துச் சொல்லுவேன். சாதாரணமாக நாம் பத்திரிகைகளில் பார்க்கிறோம். மற்ற நாடுகளில் கூட்டங்களில் குழப்பங்கள் ஏற்பட்டால் அங்கு போலீஸ்காரர்கள் தங்களுடைய தடியால் அடிப்பது இல்லை, தங்களிடமுள்ள ரப்பர் ப்ளட்ஜனால்தான் அடிப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படி அடிக்கும் போது கலகக் காரர்கள் மயக்கமாக கீழே விழுந்து விடுவார்களாம். ஒரு விதமான ஆபத்தும் ஏற்படாத வகையில் ரப்பர் ப்ளட்ஜனால் அடிப்பார்களாம். எகிப்து நாட்டில் ஒரு விதமான முறையைக் கையாளுகிறார்களாம். அதாவது நெருப்புப் பிடித்தால் அதை அணைக்கக்கூடிய யந்திரங்களில்

இருக்கும் தண்ணீரை உபயோகப்படுத்தி கூட்டத்தைக் கலைப் பார்களாம். அந்த தேசம் ஒரு குளிர்ந்த தேசமாதலால் அந்தப் பச்சை தண்ணீரைக் கண்டு பயந்து கொண்டு கூட்டம் கலைந்து விடுமாம். அதைப்போலவே இங்கும் செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. அப்படி இங்கு செய்தால், இது வெப்பம் அதிகமுள்ள நாடு, கலகக்காரர்கள் ஒரு அணாவுக்கு சன்லைட் சோப்பு வாங்கி வைத்துக் கொண்டு குளித்து விட்டுப்போய் விடுவார்கள். அப்படி இல்லாமல் காட்டுமிராண்டித்தனமில்லாத ஒரு முறையைக் கண்டுபிடித்து நடக்க வேண்டும். அப்பொழுது போலீஸ்காரர்கள் திறமையாக நடந்து கொள்ளுவார்கள்.

இப்பொழுது பார்த்தால் போலீஸ்காரர்களுடைய திறமை படிப்படியாக குறைந்து கொண்டு வருகிறது என்பதை ஆட்சியாளர் களுக்கு பணிவுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வெளியூர் களுக்கு நான் போகும் நேரங்களில் பார்க்கிறேன், ஒவ்வொரு புளிய மரத்தின் கீழும் யாராவது ஒரு போலீஸ்காரர் நின்று கொண்டிப்பார். இம்மாதிரி மரத்துக்கு மரம் நின்று கொண்டிருப்பார்கள். இப்படி ஒரு நாளைக்கு மட்டும் அல்ல பல நாட்களுக்கு அப்படி நின்றுகொண்டிருப் பதைப் பார்க்கலாம். அப்படி நான் வெளியூருக்குப் போகும்போது அவர்களைக் கேட்டால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் - ஒன்றிரண்டு போலீஸ்காரர்கள் சொல்லாவிட்டாலும் சிலர் சொல்லுகிறார்கள் - ஒருபக்கத்தில் இந்நாட்டுத் தலைவர் வருகிறார் என்றும், இன்னொரு பக்கத்தில் மந்திரி வருகிறார் என்றும், அதற்கு நிற்கிறோம் என்றும் சொல்லுகிறார்கள். ஆகவே, மந்திரிகளுக்கு பாதுகாப்புக் கொடுப்பதற்கும் மற்ற நாட்டிலிருந்து வருகிறவர்களுக்கு வரவேற்புக் கொடுப்பதற்கும் ஒரு தனிப்பட்ட போலீஸ் இலாகாவை அமைத்துக்கொள்ளலாம். மந்திரிகளுக்கு பாதுகாப்பு தர வேண்டும் என்பதற்காக போலீஸ் படையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். திறமையான இப்படிப்பட்ட போலீஸ் படைகள் கொலை, கொள்ளை முதலிய குற்றங்களைக் கண்டுபிடிக்க இருக்கிறது. நாட்டிலுள்ள சட்டத்தை பாதுகாப்பதற்கும், நிறைவேற்றப்படும் சட்டங்களை அமுல் நடத்துவதற்கும் இந்த படைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட திறமையான படைகளை மந்திரிகளின் பாதுகாப்புக் காக பயன்படுத்திக்கொள்வதால் அவர்களுடைய திறமை குறைந்து

போய் விடுகிறது. மற்றும் ஆட்சியாளர்கள் நடத்த வேண்டிய திறப்பு விழாக்கள் ஏராளம். அவைகளுக்கு போலீஸ்காரர்கள் நாள் தவறாமல் செல்ல வேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுப்பதற்காக போலீஸ்காரர்களை உபயோகப்படுத்தினால் தங்களுடைய திறமையான காரியங்களாகிய கொலை, கொள்ளை முதலியவைகளை கண்டு பிடிப்பதற்கு, முடியாமல் போய் விடுகிறது. ஜனநாயக நாட்டில் எதிர்க்கட்சிக்காரர்கள் நடத்துகிற கிளர்ச்சிகளை நல்ல முறையில் கவனித்து ஆட்சியாளர்களுக்கு கெட்ட பெயர் வராமல் போலீஸ்காரர்கள் நடந்துகொள்ள வேண்டும். இப்படிப் பட்ட துறைகளில் மேல் நாட்டில் என்ன செய்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து பயிற்சி பெற்று வருவதற்கு உயர்தர போலீஸ் அதிகாரிகளில் ஒருவர் அல்லது இருவரை மேல்நாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று நான் ஆட்சியாளர்களை விரும்பி கேட்டுக் கொள்ளுகிறேன்.

போலீஸ்காரர்களுக்கு இருக்கின்ற சில கஷ்டங்களைப்பற்றி ஆளும் கட்சியிலுள்ளவர்களும் எடுத்துச் சொன்னார்கள். எதிர்க் கட்சியிலுள்ளவர்களும் எடுத்துச் சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமையிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டும் என்று நான் திரும்பவும் கேட்டுக்கொள்ளுகிறேன். போலீஸ் துறையை ஆளும் கட்சியினர் தவறான முறையில் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக்கூறி என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

தாழ்த்தப்பட்டோர் மீதான விவாதம்...

உரை : 16 நாள் : 20.03.1958

திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ஹரிஜனத் துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற இந்தத் தொகையை அனுமதிப்பதற்கு முன்னாள், அந்தத்துறை எந்த வகையில் நிர்வகிக்கப்படுகிறது என்பதைப் பற்றி எங்களுக்குள்ள சில கருத்துக் களையும், யோசனைகளையும் எடுத்துச் சொன்னதற்காக வெட்டுத் தீர்மானம் தரப்பட்டிருக்கிறது. அதை ஆதரிக்கின்ற வகையில் நான் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைப்பற்றி பேசுகின்ற நேரத்தில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள், ''எதிர் தரப்பிலிருந்து பேசுகின்றவர்கள் குறைகளை மாத்திரம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பதால் கனம் அமைச்சர் அவர்களுக்கு உற்சாகம் குறைந்து விடும்'' என்று சொன்னார்கள். அவ்விதம் சொல்வதால் உற்சாகம் குறைந்து விடும் என்று நான் கருதவில்லை. உற்சாகம் குறைந்துவிடும் என்ற நோக்கத்தை வைத்துக்கொண்டு பேசுவது என்றால், உற்சாகத்தைக் கொடுக்கக் கூடிய வார்த்தைகளை - ''கக்கன் அவர்கள் வாழ்க!'' - ''கனம் கக்கன் அவர்கள் வாழ்க!'' - ''அவர்களுடைய மேற்பார்வையில் ஹரிஜன மக்கள் நீடூழிகாலம் வாழ்க!'' என்று சொல்லலாம். குறைகளை எடுத்துச் சொன்னால் அமைச்சர் அவர்களுக்கு திருப்தி அளிக்காது என்று சொன்னார்கள்.

செய்கின்ற காரியங்கள் நல்ல நோக்கத்தோடு செய்யப்படு கின்றனவா என்பதை ஆராயும் நோக்கம் மட்டுமல்ல, அந்த நோக்கங்கள் சரியானபடி நிறைவேற்றப்படுகின்றனவா? நிறைவேற்றப் படுவதற்குச் செலவழிக்கப்படும் தொகை சரியான அளவுக்கு அதே நோக்கத்திற்காகப் பயன்பட்டதா என்று பார்ப்பது மிக முக்கியமான ஒரு அம்சமாகும்.

இதில் எந்தக்கட்சி ஹரிஜனங்களுக்கு வேண்டிய கட்சி, எந்தக் கட்சி ஹரிஜனங்களுக்கு நன்மை செய்தது என்பது பற்றியுள்ள அரசியல் கருத்து வேற்றுமைகள் வேகமாக விவாதிக்கப்பட்டன. ஒரு கருத்தை இந்த மாமன்றத்தில் நான் எடுத்துச்சொல்வேன்; தாழ்த்தப் பட்டவர்களைப் புறக்கணித்து விட்டு, தமிழகத்தில் எந்தக் கட்சியும் நிலை நிற்க முடியாது, ஆகையால்தான் எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் சரி. தாழ்ந்தப்பட்டவர்களுக்கு நாங்கள்தான் நன்மை செய்தோம் என்று சொல்லிப் பெருமைப்படுகின்றது. அந்த அளவுக்கு எல்லாக் கட்சிகளும் கூர்ந்து கவனிக்கத்தக்க வகையில் வளர்ந்திருக் கின்ற தாழ்த்தப்பட்டவர்களின் நல்லெண்ணம் மேலும் வளர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்!

இந்த மாமன்றத்தில் இதைப் பற்றி பேசிய நேரத்தில், ஒரு கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியதிலுள்ள ஆழ்ந்த பொருளை நாங்கள் எல்லோரும் கவனிக்கமாட்டோம் என்ற எண்ணத்தில் - நான் அவ்விதம் சமாதானம் தேடிக்கொள்கிறேன் - ''சர்க்கார் செய்த நன்மைகளுக்காக, ஹரிஜன மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு நன்றி காட்ட வேண்டும்!'' என்று எடுத்துச் சொன்னார்கள். இதில் யார் யாருக்கு நன்றி காட்டுவது என்பது பிரச்சினை அல்ல.

நீண்ட நாட்களாக ஒரு சமுதாயத்தை, பழங்குடி மக்கள் என்று கருதப்படும் ஒரு சமுதாயத்தை, நாட்டின் உடைமைக்கும், உழைப்புக்கும், உயிரின் பாதுகாப்புக்கும் பொறுப்பேற்றுக் கொண்ட ஒரு சமுதாயத்தை, இன்ன கட்சி என்று அல்ல, எத்த கட்சியிலுமுள்ள உயர்ந்த ஜாதி மனப்பான்மை பெற்றவர்கள், இன்று நேற்றல்ல, தலைமுறை தலைமுறையாக கொடுமைப்படுத்தி வந்திருக்கிறார்கள். அந்தக் கொடுமைகளைக் களைந்தெறிவதற்கு நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் நாம் முன்னால் செய்த கேடுகளுக்கு கழுவாய் தேடிக் கொள்ள வேண்டும் என்கிறமுறையில் செய்யப்படுகிறதே தவிர, நன்றி பெறுவதற்காகச் செய்யப்படும் காரியம் என்று யாரும் கருதுவதற்கில்லை!

உலகத்திலேயே எந்த நாட்டிலும் ஜாதிப்பிரிவினால் தாழ்ந்த மக்கள் என்று ஒரு சாரார் கருதப்படுவதில்லை, அமெரிக்கா நாட்டிலே நீக்ரோக்கள் பிரச்சினையைப் பற்றி நண்பர்கள் மனதில் எண்ணிக் கொள்வார்கள். இந்த நாட்டிலுள்ள பழங்குடி மக்களுக்கும் அந்த நாட்டிலுள்ள நீக்ரோக்களுக்கும் அடிப்படையில் பலமான மாறுதல்

உண்டு. நூறு ஆண்டு காலத்திற்கு முன்னால் அமெரிக்க நாட்டில் இன்றைய தினம் உரிமைக்காகப் போராடும் நீக்ரோக்கள் அடிமைகளாக விலைக்கு வாங்கப்பட்டார்கள். அப்படி அடிமையாக நூறு ஆண்டுகளுக்கு முன்னால் விலைக்கு வாங்கப்பட்ட நீக்ரோக்கள், இன்று அமெரிக்காவில் அரசியல் சுதந்திரத்தைப் பரிபூரணமாக அனுபவிக்கிறார்கள். இன்று அமெரிக்கா அடைந்திருக்கின்ற தேசீய வளர்ச்சியை, அரசியல் வளர்ச்சியை, பொருளாதார வளர்ச்சியை அவர்கள் பரிபூரணமாகப் பெற்றிருக்கிறார்கள். இங்கும் அங்குமாக ஏதாவது அநாகரீகமாக நடந்து கொள்கிறார்கள் என்றால், அதைக் கண்டிப்பதற்கு மற்ற அமெரிக்கர்கள் முன் வருகிறார்கள். நூறு ஆண்டுக் காலத்திற்கு முன்பு அடிமைகளாக விலைக்கு வாங்கப்பட்ட நீக்ரோக்கள் அமெரிக்க நாட்டில் அடைந்திருக்கின்ற வளர்ச்சியை, இந்த நாட்டில் புராண காலம் தொட்டு, இதிகாச காலம் தொட்டு, நாயன்மார், ஆழ்வார்கள் காலந்தொட்டு நிரந்தர அடிமைகளாகக் கருதப்படுகின்ற தாழ்குல மக்கள் பெற்றுள்ள நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

25 ஆண்டுகளுக்கு ஒருதடவை அவர்களுடைய பெயரில் மாத்திரம் ஒரு மாற்றத்தைப் பார்க்கிறோமே தவிர, அவர்களுடைய நிலையில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் எதுவும் ஏற்படவில்லை!

ஆகவே இவர்களுடைய பிரச்சினைக்கும் அமெரிக்க நாட்டிலுள்ள நீக்ரோக்களின் பிரச்சினைக்கும் ஒப்புலமை பார்ப்பது திருப்தி தேடிக்கொள்வது அல்லது இந்தப் பிரச்சினைகளிலிருந்து ஓடி ஒளிந்து கொள்வதற்குத்தான் பயன்படுத்தலாமே தவிர உண்மையை உணர்ந்து கொள்வதற்குப் பயன்படாது!

இதுவரையில் ஆதிதிராவிடர்கள் ஜாதியில் பிற்படுத்தப் பட்டவர்கள் என்று எடுத்துச் சொல்லப்பட்டாலும், மார்க்கத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் இந்து மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று எடுத்துச் சொல்லப்படுகிறது; இந்து மார்க்கத்தில் ஒரு பகுதியினர் என்று கருதப்பட்டாலும், அந்த இந்து மதத்தில் இருக்கின்ற மற்றப் பகுதியினர் அவர்களை நீண்ட நாட்களாக தாழ்குல மக்கள் என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசாங்கம் மட்டுமல்ல, இதற்கு முன்னால் இருந்த நீதிக்கட்சி அரசாங்கமும், அதற்கு முன்னால் இருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசாங்கமும் ஆதிதிராவிட மக்களுக்கு ஏதாவது சிலபல நன்மைகள் செய்தார்கள்

என்றால், அவர்களிடத்திலிருந்து நன்றி பெறுவதற்காக மட்டுமல்ல, அவர்கள் கழுவாய் தேடிக்கொள்ள, செய்த பாவத்தைப் போக்கிக் கொள்வதற்கு எடுத்துக்கொண்ட பெருமுயற்சி என்று கருதி இதை ஒரு திருத் தொண்டு என்ற முறையில்தான் பார்க்கவேண்டும்!

சென்ற ஆண்டு இந்தத் துறையில் பேசும்பொழுது நான் குறிப்பிட்டது என் நினைவுக்கு வருகிறது.

இந்தப் பிரச்சினை எல்லாக் கட்சிகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு தேசியப் பிரச்சினையாகும்.

இதில் கட்சி மாச்சரியங்கள் குறுக்கிடக்கூடாது என்றும் சொல்லியிருக்கிறேன்.

மனிதன் குறைகளுக்கு ஆட்பட்டவன், சந்தர்ப்பங்கள் வருகின்ற நேரத்தில் ஒரு கட்சி மற்றொரு கட்சியை உரசிக் கொண்டிருந்தால் தான், உள்ளத்திற்கு தெம்பு வருகிறது. அதே முறையில் ஒரு கட்சியை மற்றொரு கட்சி எதிர்த்துப் பேசிக்கொள்வதை நான் பொருட்படுத்த வில்லை. ஆனால் காங்கிரஸ் கட்சி இன்றைய தினம் செய்கின்ற இந்தக் காரியங்களை விட திறமையாக இந்தக் காரியங்களை இந்த நாட்டில் செய்வதற்கு வேறு கட்சிகளே இல்லை என்று காங்கிரஸ்காரர்கள் மார்த்தட்டிக் கொள்ளக்கூடாது. காங்கிரஸ் கட்சி இன்றைக்கு முழு அதிகாரங்களையும் ஏற்றுக் கொண்டிருக்கும் முதல் அமைச்சரவை. இந்த முதல் அமைச்சரவை கேட்கின்ற வரிப்பணத்தைக் நாட்டு மக்கள் கொட்டித்தருகிறார்கள். இவ்விதம் நிரம்ப வரிப்பணத்தைப் பெற்று வருகிறது. காங்கிரஸ் கட்சி. நல்ல அதிகாரங்களை பெற்றிருக்கும் காங்கிரஸ்கட்சி, ஈடுஎதிர்ப்பின்றி செல்வாக்கு பெற்றிருக்கும் காங்கிரஸ்கட்சி, இந்த ஆதித்திராவிட மக்களுக்குச் செய்யவேண்டிய காரியங்களை பரிபூரணமாக செய்திருக்கிறார்களா என்றால், ஆட்சியாளர்களை வாழ்த்த வந்தவர்கள் கூட, வாழ்த்த ஆரம்பித்து, எதிர்க்கட்சி குறைகளைத்தான் சொல்லுகிறார்கள் என்று சொல்லி, அப்படியெல்லாம் நாங்கள் சொல்லமாட்டோம் என்று சொல்லி, கடைசியில் அவர்களும் குறைகளை எடுத்துச் சொல்லத்தான் செய்கிறார்கள்! அவர்கள் குறைகள், குறைகள் என்று தயக்கத்தோடு சொல்லுவதைப் பார்த்து பரிதாபப்படுகிறேன். ஒரு சமயம் அவர்கடைய கட்சித் தலைவர்கள், இவர்களைப்பார்த்து "எதிர்க் கட்சிகளும் குறைகள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்;

நீங்களும் குறைகள் என்று சொல்லிக் கொண்டிருந்தால் கட்சிக் கட்டுப்பாடு என்ன ஆவது?'' என்று சொன்னார்களோ என்னவோ தெரியவில்லை!

குறைகளை நாங்கள் குறைகள் என்று சொல்லும் பொழுது காங்கிரஸ் உறுப்பினர்கள் அதே குறைகளை நிலைமைகள் என்று எடுத்துச் சொன்னார்கள்.

நிலைமைகள் என்ன?

கிராமங்களில் சரியானபடி பாதை அமைக்கப்படவில்லை!

சரியானபடி கிணறுகள் வெட்டப்படவில்லை!

சுடுகாடுகளில் காட்டப்படும் பேதங்கள் நீக்கப்படவில்லை;

பள்ளிக்கூட மாணவர்களுக்குத் தரப்படுகிற உபகாரச் சம்பளங்கள் போதுமான அளவுக்கு, சரியான காலத்தில், அவர்களிடம் போய்ச்சேரவில்லை! என்றெல்லாம் சொன்னார்கள்.

இவைகளைக் குறைகள் என்று சொன்னால் கட்சிக் கட்டுப்பாடு குறுக்கே நிற்கிறது. இவைகள் குறைகள் அல்ல, நிலைமைகள் என்று காங்கிரஸ் கட்சியினர் நாஞக்காகக் கூறுகிறார்கள்!

இந்தப் பக்கத்திலுள்ள கட்சிகள் குறைகள் என்று இவைகளை எடுத்துச் சொல்லும் பொழுது கோபம் வருவதில் பயனில்லை. இந்த நிலைமை இருக்கிறது. இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு எந்தக் கட்சியும் குறுக்கிடாது! இருநூறு பேர்களுக்கு மேல் இருக்கும் இந்த மாமன்றத்தில் சனாதனத்தை, வைதீகத்தை, ஜாதியை ஆதரிக்கக் கூடிய வர்கள் யாருமில்லை, அனைவரும் இன்றைய தினம் ஜாதியற்ற ஒரு சமுதாயத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதில் ஒருவருக்கொருவர் போட்டிபோடக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

ஆதித்திராவிடமக்கள், பழங்குடிமக்கள், இந்த நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள் என்ற முறையில் அவர்களை ஈடேற்றச் செய்யவேண்டும் என்பதில் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு வந்து, பல துறைகளில் இன்றைய தினம் ஈடுபடுகிறார்கள்.

அப்படி ஈடுபடுகிற நேரத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகளில் பிற கட்சிகளின் ஒத்துழைப்பை பெற இதுவரை என்ன முயற்சி எடுத்தக் கொள்ளப்பட்டது?

இங்கே ஒரு அங்கத்தினர் அரிஜன மக்களுக்குச் செய்யப்படுகிற நல்ல காரிங்களுக்கு யார் யாரோ முட்டுக்கட்டை போடுவதாகக் குறிப்பிட்டு ஒரு கிராமத்திலுள்ள தகவலைப் பற்றிச் சொன்னார்கள். உண்மையிலேயே நான் அதைக் கேள்விப்பட்டு வருத்தப்படுகிறேன். அப்படி யாராவது முட்டுக்கட்டை போடுவார்களானால், நான் கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இரண்டு யோசனைகளைச் சொல்வேன். ஒன்று அவர் தனது சொந்த செல்வாக்கை, முட்டுக்கட்டையை நீக்கும் அளவுக்கு வளர்த்துக் கொள்ள வேண்டும், மற்றொன்று, அப்படி ஏதாவது முட்டுக்கட்டை போடுவதாக போதிய தகவல் இருந்தால், இந்த மாமன்றத்தில் சொல்வதற்கு முன், பொறுப்பாக உள்ளவர் களிடம் அந்த நல்ல தகவல்களை எடுத்துச் சொல்ல வேண்டும்.

ஏனென்றால் இந்தப் பிரச்சினை கட்சிகளுக்கு அப்பாற்பட்ட பிரச்சினையாகும். ஆகவே இவைகளை முட்டுக்கட்டை போட்டுத் தடுத்து விடுகிறார்கள் என்று சொன்னதில் பயனில்லை. அப்படி முட்டுக்கட்டை போடக்கூடிய அளவுக்கு ஜாதி மனப்பான்மை இருக்கிறது.

அந்த ஜாதி மனப்பான்மையை நீக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பல முயற்சிகளில் நம்முடைய அமைச்சரவை அளித்திருக்கின்ற அறிக்கையில் நான் ஒரு பகுதியை பார்க்கிறேன்:

"With a view to eradicate untouchability and give publicly, the Government have sanctioned the appointment of 3 Deputy Sevaks and 3 Assistants in each district."

‘‘மூன்று சேவக்குகள், அவர்களோடு மூன்று துணை சேவக்குகள், மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் நியமித்திருக்கிறோம்!’’ என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இவர்கள் இந்த மாவட்டத்தில் செய்த காரியங்கள் என்ன? ஆதித்திராவிட சமுதாயத்திலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு இவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன? இதைப் பற்றியுள்ள தகவல்கள் எங்கே தரப்பட்டிருக்கின்றன? இவர்கள் தீண்டாமையைப் போக்குவதற்கு என்ன பிரச்சாரம் செய்தார்கள் என்கிற தகவல்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

நான் ஒரு மாவட்டத்தைச் சேர்ந்தவன் அல்ல; நான் தவறாமல், நல்லதற்கோ கெட்டதற்கோ, மக்களைச் சந்திக்கிறேன். இப்படி ஒரு ஆறுபேர் தீண்டாமையைப் போக்குவதற்கு நல்ல ஊதியம் கொடுத்து நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். நான் இவர்களை எங்கும் சந்தித்த தில்லை. நான் சந்திக்கவில்லை என்பது பொருட்படுத்தக் கூடிய தில்லை என்று கூறிவிடலாம். ஆனால், நானே சந்திக்கவில்லை என்றால், சாதாரண மக்கள் எங்கே சந்தித்திருக்கப் போகிறார்கள்!

"Posters depieting the evils of untouchability are printed and displayed to create on awakening in this hearts of the people at large".

தீண்டாமைக் கொடுமை எப்படி எப்படியிருக்கிறது என்பதை மக்கள் அறிந்துகொள்வதற்காக விளம்பரத்தாள்கள் அச்சடித்திருக் கிறோம் என்று போடப்பட்டிருக்கிறது. நான் பல விளம்பரத் தாள்களைப் பார்த்ததில்லை. ஆனால் ஒரு விளம்பரத்தாள் எனக்குத் தெரியும். ஏன் அந்த விளம்பரத்தாள் மட்டும் தெரியும் என்றால், அது என் உள்ளத்திலே அப்படியே பதிந்திருக்கிறது. சர்க்கார் அவசரமான சில நடவடிக்கைகளில் ஈடுபட்டு பொதுமக்களுடைய பணத்தை விரயப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை விளக்கும் சம்பவம் அது! அந்த விளம்பரம் என்னுடைய கவனத்திற்கு வந்தது. தீண்டாமைச் சட்டத்தை வலியுறுத்துவதற்காக ‘‘தொட்டால் தீட்டு’’ என்று சொன்னால் எந்த அளவுக்குத் தண்டனை கிடைக்கும் என்ற கருத்தை விளக்குவதற்காகப் போடப்பட்ட விளம்பரத்தில் ஒரு பார்ப்பன உருவத்தைப் போட்டிருக்கிறார்கள். அப்படிப் போட்டிருந்த காரணத்தால் யாரோ சிலர் அதிருப்தியைக் கிளப்புகிறார்கள் என்ற காரணத்தைக் காட்டி அந்த போஸ்டர்கள் எல்லாம் வினியோகிக்கப் படாமல் இருக்கின்றன. இதனால் பொது மக்கள் அதிருப்தி பட்டார்கள், சிலர் மனம் கொதித்தார்கள் என்று சர்க்கார் அறிக்கையில் சமாதானம் சொன்னார்கள். உண்மையிலேயே பொதுமக்கள் ஆத்திரப்பட்டார்களா என்பதை பரிசோதித்துப் பார்ப்பதற்கு, நாங்கள் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சர்க்கார் அச்சடித்து ஒட்டாமல் விட்டுவிட்ட அதே விளம்பரத்தாள் போன்றே எங்கள் கழகச் செலவிலே 5,000 போஸ்டர்களை அச்சடித்து, எல்லாக் கிராமங்களுக்கும் அனுப்பினோம். சில கிராமங்களில் - நான் சொல்வதைக் கேட்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள், பார்ப்பனர் வீடுகளில்கூட ஒட்டிவைத்தார்கள், யாரும் வருத்தப்படவில்லை!

ஒரு சமூகத்தாருக்குக் கேடுபாடானது என்று இவர்களைக் கருதிக் கொண்டு, அந்தப் பணத்தை விரயம் ஆக்கியிருக்கிறார்கள். இது தவிர, தீண்டாமை ஒழிப்புக்கு இவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன வகையிலே இருக்கின்றன என்று அறிவிக்கப்படவில்லை.

என்னுடைய நண்பர்கள் எடுத்துச் சொன்னபடி, இந்தப் பிரச்சினையில் எதிக்கட்சிகள் எப்பொழுது அழைக்கப்பட்டன? எப்பொழுது அழைத்தார்கள்?

சென்ற ஆண்டு இதே துறையில் பேசுகிற காலத்தில் குறிப்பிட்டேன், "ஹரிஜன தினம் கொண்டாடுகிறார்கள். நாலைந்து அதிகாரிகள், பத்துப்பதினைந்து காண்டிராக்டர்கள், இருபது முப்பது வோட்டர்கள், ஐம்பது அறுபது போலீஸ்காரர்கள் இவர்கள் மத்தியிலே ஹரிஜன தினம் நடத்தப்படுகிறது" என்று! அப்படி நடத்துவதினால் மட்டும், ஹரிஜனங்களுக்கு வந்துவிட்ட குறைகளை நீக்குவதற்கு பொதுமக்களுடைய கவனத்தை ஈர்க்கமுடியாது. இதைத் தேசியத் திருவிழாவாக்க வேண்டும். எல்லாக் கட்சிகளும் இதிலே கலந்து கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டேன்.

அதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகள் என்ன? ஏன் முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும் என்று சொல்கிறேனென்றால், எவ்வளவுதான் நமக்குள்ளே, கட்சிகளுக்குள்ளே "பேதம் வேண்டாம், பேதம் வேண்டாம்" என்று சொன்னாலும், நம்மில் பலர் அந்தப் பேதத்திலிருந்து விடுபடவில்லை; விடுபடப்போவதுமில்லை! ஆனால் முக்கியமான துறைகளில் கட்சிக் கட்டுப்பாடுகள் தாம் முக்கியம் என்று கருதாமல், தேசீயத்திருவிழா வென்று கருதவேண்டும் அப்படிக் கருதுவதற்கு இவர்கள் எந்தெந்த வகையில் காரியங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து பார்ப்பதற்கு நியமிக்கப்பட்ட ஷெடியூல்டு வகுப்புக் கமிஷனர் ரிப்போர்ட்டில் இந்த ஆண்டு ரிப்போர்ட்டிலும் சரி, இதற்கு முன்னால் வந்த ரிப்போட்டிலும் சரி - எடுத்துக் கொண்ட முயற்சிகள் தக்க விதத்திலே நிறைவேற்றப்படவில்லை என்று குற்றம் சாட்டி அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"The State Governments have not still undertaken the welfare schemes of backward classes under any definite planned programme. Even while submitting schemes for the Second Five Year Plan, they have attached

importance only to the amount of expenditure that may be earmarked for the schemes".

என்று குறிப்பிட்டிருக்கிறது.

அதைத்தான் "17 லட்சம் ரூபாய் செலவழிந்த இடத்தில், 18 லட்சம் ரூபாய் செலவழிக்கிறோம்! 10 லட்சம் ரூபாய் செலவழிந்த இடத்தில் 20 லட்சம் ரூபாய் செலவழிக்கிறோம்!" என்பதாகப் பார்க்கிறோமே தவிர, தெளிவாகத் திட்டமிட்டுத் திறமையாக நிறைவேற்றினோம் என்று சொல்லக்கூடிய விதத்தில் ராஜ்ய சர்க்காரர்கள் நடக்கவில்லை, என்று நாங்கள் அல்ல, ஷெடியூல்டு வகுப்புனர் கமிஷனர், அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார். மற்றொன்று, எந்த வகையிலே இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்பதைக் குறித்து மிகத்தெளிவான முறையில் அந்த அறிக்கையில் குறிப்புகள் காணப்படுகின்றன.

இந்தப் பிரச்சினையில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன என்பதை இந்த மன்றத்திலுள்ள நம்முடைய நண்பர்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். ஹரிஜன மக்களை வறுமைப் பிடியிலிருந்து நீக்குவது ஒரு பகுதி, ஹரிஜன மக்களை, சமுதாயத்திலே தாழ்த்தப்பட்ட மக்களை, சமூகக் கொடுமையிலிருந்து விடுவிப்பது மற்றொரு பகுதி!

ஒன்றுக் கொன்று ஓரளவுக்குத் தொடர்பு கொண்டது. ஆனால் இரண்டும் வேறு வேறு என்பதும், ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டிருந்தாலும், இந்த இரண்டுக்கும் இடையில் அதிகமான அளவு மாறுபாடும் உண்டு என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

நான் இருக்கிற காஞ்சீபுரம் நகராட்சி மன்றத்திற்கு, பல்லாண்டுகளுக்கு முன்னால் ஒரு ஆணையாளர் வந்திருந்தார். அவர் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர். அவர் வந்த உடனே வீடுகளுக்கெல்லாம் வீட்டு வரியை அதிகப்படுத்தினார். அதிகப்படுத்திய உடனே, வீட்டுக்காரர்கள் மனுக்கொடுத்துக் கொண்டதன் பேரில், முன்னாலே போட்ட வரியைக் குறைக்க வேண்டுமா என்று பார்ப்பதற்காக, அந்த ஆணையாளர் வீடுகளைப் பார்வையிடச் சென்றார். அப்பொழுது நான் பத்தாவது வகுப்பை முடித்து விட்டு, கல்லூரியிலே படிக்கிறேன் என்று நினைவு, அவர்கள் சென்ற நேரத்தில் உயர்ந்த சாதிக்காரர்கள் வசிக்கிற வீதியில் உள்ள வீடுகளில் அவர்கள் வரவொட்டாமல் தடுத்தார்கள்!

அவர்களைப் பார்த்து ஆணையாளர் "நான் இந்த நகராட்சி மன்றத்தின் ஆணையாளர்" என்று சொன்னார். அதற்கு அவர்கள் "அது தெரிந்துதான் உங்களை நாங்கள் வரவிடவில்லை" என்று சொன்னார்கள். "நான் நகராட்சி மன்றத்தின் ஆணையாளர் என்று தெரிந்துமா என்னை வர விடவில்லை!" என்று கேட்டார்! அதற்கு அவர்கள் "நீங்கள் நகராட்சி மன்றத்தில் ஆணையாளர் என்று தெரிந்து மட்டுமல்ல, எந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்று தெரிந்தே நாங்கள் உங்களை வரவிடவில்லை!" என்று சொன்னார்கள்.

"பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த விஷயத்திற்கு இப்போது என்ன!" என்று கேட்கலாம். தீண்டாமைப் பிரச்சினை, பணம் படைத்து விட்டால் மட்டும் போய் விடாது; பதவியில் உட்கார்ந்து விட்டால் மட்டும் போய்விடாது. மக்களுடைய மனதில் மாறுதல் ஏற்பட்டால் ஒழிய! இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான பரிகாரம் கிடையாது என்பதை வலியுறுத்துவதற்கே இதனைச் சொல்கிறேன்.

சாதியை ஒழித்தால் ஒழிய தீண்டாமையை ஒழிப்பதற்கு நல்ல மார்க்கம் இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இதையே ஷெடியுல் வகுப்புக் கமிஷனரும் தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

"Caste is one of this biggest things in India to-day, if not the biggest and this has been recognized during elections."

தேர்தல் காலத்தில் சாதீனம் தலை விரித்தாடுகிறது என்பது தெரிகிறது. சாதி என்பது முக்கியமான பிரச்சினை.

"Most of the biggest cities are the strongholds of osatelism."

சாதிவெறி நகரங்களில் இருக்கிறது என்று அறிக்கை அறிவித்து விட்டு, சாதீயத்தை ஒழிப்பதற்கு வழி என்ன என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப் போட்டிருக்கின்ற திட்டங் களுக்கு நீங்கள் எங்கள் கட்சியைத் துணைக்கு அழைக்கலாம். காங்கிரஸ் கட்சிக்காரர்கள் சாதி வேற்றுமை கூடாது என்று பேச ஆரம்பிப்பதற்கு முன்பே, நான் சார்ந்திருக்கும் கட்சி பேசி இருக்கிறது.

"நீங்கள் எங்கள் அளவுக்கு கிணறு வெட்டினீர்களா?" என்று கேட்டால், வெட்டினது இல்லை!

''பள்ளிக்கூடங்கள் கட்டினீர்களா?'' என்று கேட்டால் கட்டினது இல்லை!

''பொலிகாளைகளை வாங்கிக் கொடுத்தீர்களா?'' என்று கேட்டால் வாங்கிக் கொடுத்தது இல்லை!

''பொறுக்கு விதைகளை வாங்கித் தந்தீர்களா?'' என்று கேட்டால், பொறுக்கு விதைகளை வாங்கித் தந்தது இல்லை! ஏன் வாங்கித் தரவில்லை என்றால், நாங்கள் கஜானா பக்கத்தில் உட்காந்து இருக்கவில்லை. ஆனால் நீங்கள் கஜானா பக்கத்தில் உட்கார்ந்திருக் கிறீர்கள்?

எங்கள் கட்சி பூர்வோத்திரத்தைப் பற்றி நிதிஅமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் அன்றொரு நாள் பேசினார்கள்; காங்கிரஸ் கட்சி பூர்வோத்திரத்தின் சாதி முறையை ஒழிக்கவேண்டும் என்று பேசக்கூடாது என்று சனாதன காங்கிரஸ்காரர்கள் தடுத்திருக் கிறார்கள். லோகமான்ய பால காங்காதர திலக் அவர்கள் ''இது ஒரு அரசியல் கட்சி ஸ்தாபனம், சமுதாயத்தைத் திருத்தத் தேவையில்லை'' என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, காங்கிரஸ் கட்சியில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அதன் பூர்வோத்திரம் படிப்படியாக வளர்ந்து, அதற்குப் பிறகு அரிஜனங்களுக்கு உரிமை ஒதுக்கும் பெருந்தன்மை காங்கிரஸ் கட்சிக்குப் பிறந்தது!

காங்கிரஸ் கட்சி காலடி எடுத்து வைப்பதற்கு முன்பே, நீங்கள் கனம் கக்கன் அவர்களை இங்கு அமைச்சராக அமர வைத்து, அழகு பார்த்து, ஆனந்தப்பட்டு, பெருமைப்பட்டு, வாழ்த்தி, வழிபடுவதற்கு முன்பே, இதே துறையில் எம்.சி.ராஜா அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். பழங்குடி பெருமக்கள் பெருமைப் படத்தக்க வேலைகளில் அமர்ந்து வேலை பார்த்திருக்கிறார்கள். ஆதி திராவிட மக்களுக்கு வந்துள்ள குறைபாடுகளை நான் சார்ந்திருக்கிற கட்சியும் பூர்வோத்திரமாகக் கூறப்பட்ட சுயமாரியதைக் கட்சி, நீதிக் கட்சி அரியணைகளும் நீண்ட காலத்திற்கு முன்பே கவனித்து வந்திருக்கின்றன.

ஒரு கனம் அங்கத்தினர், ஏதோ ஒரு மகாநாட்டில், ஆதி திராவிட மக்களைச் சமமாக நடத்தவில்லை என்று குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே விளக்கம் சொல்வார்களேயானால், அதற்குப் பொறுப்பாக இருக்கக்கூடியவர் யாறாக இருந்தாலும், அவரைக் கட்சியிலிருந்து விலக்குவதற்கு நான் தயாராக இருக்கிறேன். அதே

நேரத்தில் அப்படிப்பட்ட காரியங்களை - சாதிமுறையை ஒழிப்பதற்கு - சாதி முறைகளை ஒழிப்பதன் மூலம் பழங்குடி மக்கள் நீண்டகால குறைபாடுகளை நீக்குவதற்கு எல்லா கட்சியிலும் தீவிரவாதிகள் ஒன்றுபட வேண்டும்.

ஒரு கட்சியிலிருந்து வேறு கட்சிக்குப் போவது சகஜம், லாபமானதும்கூட! அதை இங்கேயேகூட நான் காட்சிகளாகக் காண்கிறேன்! ஆனால் கட்சி விட்டுக்கட்சி மாறி வேண்டுமென்று நான் சொல்லவில்லை, அழைக்கவில்லை, கட்சிக் கட்டுப்பாட்டுக்குட் பட்டே, குறிப்பிட்ட நல்ல காரியத்தில் நாம் ஈடுபடலாம்.

அப்படிப்பட்ட ஒரு நல்ல திருத்தொண்டு தாழ்த்தப்பட்டவர் களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவது, அந்தப் பழங்குடி மக்களை விடுவிப்பது! இதில் சர்க்கார் எடுத்துக் கொள்ளும் எல்லா முயற்சி களிலும் திராவிட முன்னேற்றக் கழகம் துணை நிற்கும்!

ஆனால், ஓடக்கூடிய குதிரைக்கு அதன் உடலில் தழும்பு ஏறாதபடி சவுக்கு ஓங்குவது போல், ஒரு நல்ல காரியத்தை மேலும் நல்ல முறையில் செய்ய வேண்டும் என்றுத் தூண்டக் கூடிய அவையில் நாங்கள், இந்த வெட்டுத் திட்டத்தை வைத்திருக்கிறோம் என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்!''

வேளாண்மைத் துறை நிதிஒதுக்கீடு (வாக்கெடுப்பு)

உரை : 17 **நாள் : 26.03.1958**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையில் ஒரு வெட்டுத் திட்டத்தைக் கொடுப்பதன் மூலம் எதிர்த் தரப்பில் உள்ள நாங்கள் நீர்ப்பாசனத் திட்டத்தை நிறைவேற்றுகிற தன்மையில் இருக்கிற சிலபல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக் கிறோம். இன்றைய தினம் நடைபெற்ற விவாதத்தின்போது நான் நம்முடைய மராமத்து இலாகா அமைச்சர் கனம் கக்கன் அவர்களைப் பற்றி எண்ணிக் கொண்டிருப்பதை விட நம் நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்களைப் பற்றித்தான் அதிகமாக எண்ணிக் கொண்டிருந்தேன். ஏனென்றால் சென்ற தடவை நீர்ப்பாசனத் துறையைப் பற்றிய விவாதம் நடந்தபோது "நாட்டிலே எங்கேயாவது கொஞ்சம் தண்ணீர் ஓடினால் அதை அணை கட்டி தேக்க வேண்டும் என்ற ஆசை தோன்றுவது இயற்கைதான், ஆனால் அப்படி அணை கட்டுவதற்கு, தேக்கங்கள் கட்டுவதற்கேற்றளவு நாட்டில் நீர் வீணாகிப் போய்விடவில்லை" என்று சொல்லி, ஒரு ஆசிரியர் மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது போன்ற எண்ணத்தில் நாட்டில் எந்த அளவு மழை பெய்கிறது, எந்தளவு கடலில் நீர் போய் விழுகிறது என்று கணக்கெடுத்துப் பார்த்தால் இங்கு பெருமளவு நீரைப் பயன்படுத்து கிறோம். தண்ணீர் வீணாகி விடவில்லை என்று கூறினார். மழை பெய்து தண்ணீர் ஓடும் இடங்களிலெல்லாம் அணை கட்டுவது என்பது முறையல்ல என்றெல்லாம் சொன்னார்கள். இன்று கனம் அங்கத்தினர்கள், சீர்கொழிக்கும் சீமையான திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து வருகிறவர்களும், மற்ற துறைகளில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டிருப்பதாக கருதப்படுகிறவர்களான கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும், தஞ்சை மாவட்டத்தைச்

சேர்ந்தவர்களும் ஆங்காங்குள்ள ஆறுகளில் தேக்கங்கள் கட்டலாம் என்று சொன்னதைப் பார்க்கும்போது, சென்ற ஆண்டு நிதியமைச்சர் அவர்கள் செய்த வாதத்தை இந்த சபை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற முடிவிற்குத்தான் நான் வரவேண்டியவனாக இருக்கின்றேன். நாட்டில் நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்கள் ஏராளம் இருக்கின்றன. நிதியமைச்சர் அவர்கள் பாடம் சொல்லிக் கொடுப்பது போல் வாதிட்டும் கூட அதை ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கிற கனம் உறுப்பினர்கள் அதன் மூலம் தங்கள் தங்கள் தொகுதிகளில் மட்டுமல்ல, நாட்டிற்கே பொதுவாக நல்லதொரு காரியத்தை செய்திருக்கிறார்கள். நல்லதொரு தொண்டாற்றியிருக்கிறார்கள் என்று அவர்கள் எல்லோருக்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். காங்கிரஸ் அமைச்சரவையே வெளியிட்டிருக்கிற அறிக்கையில் "In the British regime Madras raniced second only to the panjah in the matter of irrigation etc" என்ற குறிப்பு காணப்படுகிறது. பாஞ்சாலத்திற்கு அடுத்தபடியாக சென்னை மாநிலத்தில்தான் நீர்ப்பாசனத்திட்டம் செவ்வையான முறையில் இருக்கிறது என்று வெள்ளைக்காரன் காலத்திற்குப் பிறகு காங்கிரஸ் அமைச்சரவை ஏற்பட்ட போது வெளியிடப்பட்ட நீர்ப்பாசன அறிக்கையில் ஒரு குறிப்பு காணப்படுகிறது. ஆக, வெள்ளைக்காரன் கூட தான் செய்ய வேண்டிய கடமையை ஓரளவு உணர்ந்து செய்திருக்கிறான் என்றாலும்; நம்மவர்கள் ஆட்சியில் நம்மவர்கள் கேட்கிற சில பல காரியங்களைக் கூடச் செய்வதற்கு இந்த அமைச்சரவையால் முடியவில்லை என்பது இன்றைய தினம் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும் பல்வேறு கட்சியைச் சார்ந்தவர்களும் தங்கள் தங்கள் தொகுதியைப்பற்றி எடுத்துப் பேசியதில் இருந்து தெளிவாகத் தெரிகிறது. ஓரளவுகூட நம் குறைபாடுகளை, நம் அமைச்சரவை நீக்க முடியாத நிலையில் இருப்பதற்குக் காரணம் என்னவென்று எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த ஒரு துணையில் பேசுகிறபோதாவது வடக்கு தெற்கு என்று பேசாமல் இருக்கலாம் என்று நான் ஆசைப்பட்டேன்.

ஆனால் காங்கிரஸ் சார்பில் உள்ளவர்கள் வடக்கு தெற்கு என்று நாங்கள் பார்க்கமாட்டேம் என்று சொன்னார்கள். உண்மையிலேயே அங்விதம் பார்க்காமல் இருக்கிறவர்கள் காங்கிரஸ் அங்கத்தினர்கள் என்றால் ஏன் அவர்கள் வடக்கே உள்ள நீர்பாசனத் திட்டங்களைக் கண்டு திருப்தி அடைந்து விடாமல், இங்கே, தெற்கே நீர்பாசனம் சரியாக செய்யப்படவில்லை என்று குறைபட்டுக் கொள்ளவேண்டும்?

வடக்கேயே கோதுமையை விளைவித்து மலிவான விலைக்கு வாங்கி சாப்பிட்டுக்கொள்ளலாம் - வடக்கே நெல்லை விளைவித்து மலிவான விலைக்கு வாங்கி சாப்பிட்டுக்கொள்ளலாம். அதற்காக மற்றொரு பக்ராநங்கல் திட்டத்தையோ, மற்றொரு தாமோதர் அணை கட்டையோ அங்கேயே கட்டச் சொல்லி சிபாரிசு செய்திருக்கலாம். நம்முடைய மாநிலம் - நம்முடைய இராஜ்யம் - நம்முடைய நாடு பின்னோக்கி சொல்கிறது என்று காண்கிறநேரத்தில் "வடக்கு-தெற்கு" என்ற உணர்ச்சி அதே விதத்தில் வராவிட்டாலும் மாநில சர்க்கார் மத்திய சர்க்கார் என்று உருவிலே உங்கள் உள்ளத்திலே புகுந்து குடையத்தான் செய்கிறது. அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற அறிக்கையில் பல இடங்களில் நான் பார்க்கிறேன், மத்திய சர்க்காரை இன்னும் எந்த அளவுக்கு நம்பிக்கொண்டிருக்கிறார்கள் என்று "1958-59-ல் இருந்த வேலைகளுக்கு மான்யம் ரூபாய் 21 இலட்சம், கடன் ரூபாய் 11 இலட்சம் தரும்படியாக இந்திய அரசாங்கத்திடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அமைதி எதிர்பார்க்கப் படுகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே கேட்கப்படுகிற பணம் நிச்சயம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை அமைச்சரவைக்கு இருக்குமானால் மத்திய சர்க்காரிடமிருந்து மான்யமாக 21 இலட்சம் ரூபாயும் கடனாக 11 இலட்சம் ரூபாயும் நாங்கள் பெற்று கனம் அங்கத்தினர்கள் சொல்லியிருக்கின்ற இந்த சிறு சிறு திட்டங்களை நிறைவேற்றித்தருவோம் என்று தெளிவாக திட்டவட்டமாக எடுத்துச்சொல்ல முடியும். ஆனால், அனுமதி எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு மறுபக்கத்திலே "1958-59-ம் ஆண்டில் இந்த வேலைகளுக்காக ரூபாய் ஆறு லட்சம் மான்யமும் ரூபாய் ஒரு லட்சம் உதவித் தொகையும் அளிக்குமாறு இந்திய அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது" என்று இப்படி பக்கத்திற்கு பக்கம் "எதிர்பார்க்கிறோம்" என்ற நிலைமையில் இருக்கிற காரணத்தால் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் காங்கிரஸ் அமைச்சர்களுக்கு உற்சாகம் தருகிற வகையில் அமைச்சர்களுக்கு உண்மையிலேயே துணிவு ஏற்பட வேண்டும் என்றும், டெல்லியிடம் சண்டை போட்டு பணத்தை கேட்டு வாங்கவேண்டும் என்றும் எடுத்து குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார், ஆனால் அந்த நேரத்தில் மத்திய சர்க்கார் பணம் தரக்கூடிய நிலையில் நம்மிடத்தில் இருக்கிறார்களா என்று அறிய வேண்டுமானால் மத்திய சர்க்காருடைய நீர்ப்பாசன திட்டக்

கொள்கை எந்த வகையில் அமைந்திருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. விருப்போடு விரும்பினாலும் விரும்பா விட்டாலும் - இன்றையதினம் இந்திய துணைக்கண்டம் என்ற அரசியல் அமைப்பில் இருக்கிற காரணத்தால் மத்திய சர்க்கார் எந்தெந்த திட்டங்களை எப்படி எப்படி அமுலாக்குகிறார்களோ அதைப் பொறுத்து நம்முடைய திட்டங்களுக்கு மாற்று உருவங்களை கொடுக்கவேண்டியோ குறைக்கவேண்டியோ அல்லது அதிகரிக்க வேண்டியோ ஏற்படுகிறது. அந்த நிலைமை இருக்கிறது. இதில் ஐந்தாண்டு திட்டத்தில் மத்திய சர்க்கார் போட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் அத்தனையும் மலை போன்ற அணைகட்டுகளுக்குத்தான் பெருவாரியாக பணம் ஒதுக்கப்பட்டதே தவிர சிறு சிறு நீர்பாசன திட்டங்களைப் பற்றி மத்திய சர்க்கார் கவலைப்படவில்லை. அவர்கள் கவலைப்படாதது மிகுந்த தவறுடையது என்று மத்திய சர்க்காரைச் சேர்ந்தவர்களே இன்றைய தினம் உணர்ந்து முதல் ஐந்தாண்டு திட்டத்தில் பெரிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து விட்டோம், ஆனால் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை என்று அவர்களே கொஞ்சம் கழிவிரக்கத்துடன் பேசியிருக்கிறார்கள். தாமோதர் அணைகட்டு கட்டப்பட்டதாலும், பக்ரா நங்கல் கட்டப்பட்டதாலும் அங்கே கிடைக்கிற தண்ணீரை அந்த பகுதி மக்கள் சரியானபடி பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று மத்திய அரசு இன்றையதினம் மனம் நொந்து பேசியிருக்கிறது. இப்படி பேசியிருக்கிறார்கள் என்றால் மிக தாராளமாக கோடிக்கணக்கான ரூபாய்கள், நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை வாரி இறைத்தான பிறகு பேசியிருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இங்கே பெரிய ஆறுகள் இல்லை, ஆகவே அணைகள் கட்டுவதற்கில்லை என்று பேசுகிற அமைச்சர்கள் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய்களை வடக்கே செலவழிக்கப்பட்ட நேரத்தில் நம்முடைய சிறு நீர்ப்பாசன திட்டங்களுக்காக என்று ஏன் பெரிய தொகை கேட்டு வாங்கவில்லை. இனியாவது கேட்டு வாங்குவதற்கு, அந்த துணிவு அவர்களுக்கு இருக்கிறதா என்றால் அவர்கள் அறிக்கையில் ''அனுமதி எதிர் பார்க்கப்படுகிறது'' என்று சொல்லுகிறார்கள். இவர்கள் அனுமதி எதிர்பார்ப்பதை தான் ''வடக்கு-தெற்கு'' என்று நாங்கள் சுருக்கமாகச் சொல்லுகிறோம். அனுமதி நீங்கள் எதிர்பார்க்கவேண்டியது நாட்டு மக்களுடைய கண்களிலிருந்து - அனுமதி நீங்கள் எதிர்பார்க்க வேண்டியது வறண்டு கிடக்கிற வயல்களிலிருந்து - அனுமதி

நீங்கள் எதிர்பார்க்கவேண்டியது தேய்ந்து போகிற நம்முடைய விவசாயத்தைப் பார்த்தே தவிர பணப்பெட்டியை கையிலே வைத்துக் கொண்டு இருக்கிற வேறு ஒரு இடத்திலிருந்து அனுமதியை எதிர் பார்த்துக்கொண்டிருந்தால் நிச்சயமாக பயன் இல்லை, சரியல்ல. திருநெல்வேலிச் சீமையைச் சேர்ந்தவர்கள் - தேச விடுதலை வரலாற்றை எடுத்துச்சொல்லி இப்படிப்பட்ட சீமையை நீங்கள் பட்டினி போடுகிறீர்களே என்று கேட்டால் அவர்கள் குரல், உண்மையிலேயே அந்த சீமையிலே இருக்கிற மக்கள் எந்த அளவுக்கு குமுறிக்கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிடும் அளவுக்கு இருகிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் நிச்சயமாக வெற்றி பெற வேண்டுமென்றால் நம்முடைய விவசாயத்திலே கிடைக்கும் விளை பொருள்களின் வளர்ச்சி 100-க்கு 42 பங்கு அதிகமாக வேண்டும் என்று பிளானிங் கமிஷன் திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறது. 100 கலம் விளைந்து கொண்டிருந்த இடத்தில் ஐந்து வருடத்திலே 142 கலமாக விளைய ஆரம்பித்தால் நமக்கு ஏற்பட்டிருக்கிற வெளிநாட்டு கடன்களை கூட நம்மால் நீக்கிக் கொள்ள முடியும் என்று பிளானிங் கமிஷன் திட்டவட்டமாக சொல்லியிருக்கிறது. இராஜ்ய சர்க்கார் தலைவர்கள் 100-க்கு 42 பங்கு என்று முடியாவிட்டாலும் 100-க்கு 28 என்ற அளவுக்கு அதிகம் வளர்ச்சி செய்து காட்டுகிறோம் என்று உறுதி அளித்திருக்கிறார்கள். பெரிய ஆறுகள் இல்லை - பக்ரா நங்கல் கட்டுவதற்கு, சிறிய ஆறுகள் இருக்கின்றன - ஆனால் அவைகளில் தண்ணீர் அதிகம் இல்லை, தண்ணீர் அதிகம் இருந்தாலும், சிறு நீர்ப்பாசனத் திட்டங்களைக் கட்டுவதற்கு பணம் இல்லை - என்று சொல்லிக் கொண்டிருந்தால் - நூற்றுக்கு 28 பங்கு என்ற வளர்ச்சியை எப்படி நிறைவேற்ற முடியும்? நூற்றுக்கு 28 பங்கு என்ற அளவுக்கு உணவுப் பொருள்களை நாம் அதிகப்படுத்திக் காட்டாவிட்டாலும், வெளி நாடுகளிலிருந்து வாங்கிய கடன் தொகைகளைத் திருப்பித் தருகிற காலம் வரும்போது எதிலிருந்து திருப்பித் தரப்போகிறோம்? இப்படி வாங்கிய கடன் தொகைகளை மத்திய சர்க்கார்தான் அதிகப் பொறுப்போடு கவனிக்க வேண்டுமென்றாலும், மாநில சர்க்கார் இந்தப் பொறுப்பிலிருந்து அடியோடு நழுவி விடமுடியாது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தொகுதியிலே இருக்கும் சிறு சிறு ஆறுகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே - சிறிய ஆறல்ல

- பெரிய ஆறு இருக்கிறது. அந்தப் பெரிய ஆற்றில் நீர் இல்லாது இருப்பதற்குக் காரணம் மைசூர் ராஜ்யத்திற்கும், சென்னை ராஜ்யத்திற்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்படாததுதான் என்று சென்ற ஆண்டிலே நான் சுட்டிக் காட்டினேன். சென்ற ஆண்டிலே, இப்படிப்பட்ட விவரங்களைப் பற்றிப் பேசிய நேரத்தில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் "இங்கு வந்து அவரவர்கள் தங்கள் தங்கள் தொகுதியிலுள்ள குறைகளைப் பற்றி சொல்லிக்கொண்டிருக்கத் தேவையில்லை, நானே சென்று அந்தந்த இடத்தில் கவனிக்கிறேன்" என்று சொல்லி "பாகல்மேடு பாதை" என்ற ஒரு புதிய முறையை வகுத்தார்கள். அந்தப் புதிய முறை என்ன ஆயிற்று? என்று இந்த நாட்டை ஆளுகிற அமைச்சரவர்கள் நாட்டு மக்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்த "பாகல்மேடு பாதையை" அவர்கள் மறுபடியும் பின்பற்றப்போகிறார்களா? - அல்லது ஒரு தடவை பின்பற்றி, அது சரியல்ல என்று அதிகாரிகளிடமிருந்து யோசனை வந்த காரணத்தினால் - கைவிடப்பட்டு விட்டதா? - அல்லது "பாகல்மேடு பாதை" என்பது தேர்தல் முடிந்த ஒரு நாளிலும், மறு தேர்தல் வருகிற மறு நாளிலும் நாங்கள் நடத்திக் காட்டுகிற வேடிக்கை என்று கருதுகிறீர்களா? என்று நான் அறிய விரும்புகிறேன். "பாகல்மேடு முறை" அனுசரிக்கப்பட்டிருந்தால் இங்கே வந்திருக்கிற அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் கீரியாறு திட்டத்தைப் பற்றியும், மஞ்சளாறு திட்டத்தைப் பற்றியும், அவர்கள் தொகுதியில் இருக்கிற ஆற்றைப்பற்றியும்.............

திரு. என். மகாலிங்கம் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ஸர், இந்த "பாகல்மேடு" திட்டத்திற்கும், தற்போது விவாதத்தில் இருக்கும் இரிகேஷன் விஷயத்திற்கும் என்ன சம்பந்தம் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சபாநாயகர் : கொஞ்சம் பொறுங்கள், அவர்களே சொல்வார்கள்.

திரு. சி. என். அண்ணாதுரை : "பாகல்மேடு" திட்டத்திற்கும் கனம் மகாலிங்கம் அவர்களுக்கும் சம்பந்தமில்லை என்று நான் உணருகிறேன். ஆனால் "பாகல்மேடு" திட்டத்திற்கும் முதல் அமைச்சருக்கும் சம்பந்தம் இருக்கிறது. "பாகல்மேடு" என்பது வேடிக்கையான ஒரு தேசிய திருவிழா என்று கருதியிருந்தால் அதைப்பற்றி நான் கேள்வி கேட்டிருக்கமாட்டேன். "பாகல்மேடு" திட்டத்திற்குப் பிறகு நான் என்னுடைய தொகுதியில் இருக்கும்

குறைபாடுகளை நமது முதல் அமைச்சருக்குத் தெரியப்படுத்த, அவரை தண்டலத்திற்கு அழைத்துச் சென்று ஒரு மாநாடு நடத்தினேன். அந்த மாநாட்டைப் பற்றி இந்த மாமன்றத்தில் நான் குறிப்பிட்ட நேரத்தில் முதல் அமைச்சர் அவர்கள் - எழுந்திருந்தல்ல - மற்ற அங்கத்தினர்கள் பேசுவது போலல்ல - வழக்கமாக உட்கார்ந்து கொண்டே சொல்லுகிற கருத்துக்களைப் போல - "என்னை அழைத்துச் சென்று ஏமாற்றப் பார்த்தீர்கள்" என்று சொன்னார். இந்தக் கருத்து ஒரு அமைச்சருக்கு இருக்குமானால் - பாகல்மேடு பாதையிலேயும் போகமாட்டோம் - தண்டலம் மார்க்கம் தப்பு அர்த்தம் கொடுக்கிறது - என்றால் இந்தக் குறைகளை இங்கே எடுத்துப் பேசுவதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது. அப்படிப் பேசுவதில்தான் பலன் இருக்கிறதா? என்றால் - கனம் சுப்பைய்யா முதலியார் அவர்கள் "பேசிப் பேசிப் பார்க்கிறோம், ஆனால் பலன்தான் இல்லை" என்று சொன்னார்கள் - அப்படி சுப்பைய்யா முதலியாரே பேசிப் பேசிப் பலன் இல்லையென்றால் - 10 ஆண்டு காலமாகச் சொல்லியும் பலன் இல்லை என்றால் - நாங்கள் உங்களிடத்திலே பேசுவதை விட்டு, மக்களிடத்திலே பேசுவதைத் தவிர வேறு மார்க்கத்திற்கு எங்கே விடுகிறீர்கள்? இதைத்தான் ஆட்சியாளர்களுக்கு எடுத்துக்காட்ட பிரியப்படுகிறேன். பெரிய தொகை ஒதுக்குவதற்கு மத்திய சர்க்காரிடம் பணம் கேட்க உங்களுக்குத் துணிவு இல்லை - அந்தத் துணிவு இல்லையே என்று சொன்னால் "நாங்கள் வடக்கேயே கட்டி ஆள வேண்டுமென்றாலும் முடியும்" என்று பல பேர் சொல்லுகிறார்கள். இன்றைய தினம் இராஜா ஸர் முத்தையா செட்டியார் சொன்னதைப் போல, டில்லிக்குப் போகிறபோது கொஞ்சம் அதட்டிப் பணத்தை கேட்டு வாங்கவேண்டும். ஆனால், அதட்டுகிற நேரத்தில் அதட்டுகிற வருடைய தன்மையையும், அதட்டப்படுகிறவருடைய தன்மையை யும் பொறுத்துத்தான் பலன் இருக்கும். அதனால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் நம் மாநில சர்க்கார் இன்றைய தினம் அனுமதி கேட்கிற நிலைமையில் இருப்பதைச் சுட்டிக்காட்டி பல தடவை பேசியிருக்கிறோம். பாலாறு திட்டத்தை வலியுறுத்திய நேரத்தில் நமது நிதி அமைச்சர் சென்ற ஆண்டு சொன்னார்கள் - மைசூர் இராஜ்யத்தோடு பேசி ஒன்றும் பலன் ஏற்படவில்லை என்று. இப்போது மண்டலக் குழு நிறுவியிருக்கிறர்கள் - அதாவது ஸோனல் கவுன்ஸில். அந்த மண்டலக் கமிட்டி பாலாறு பிரச்சினையைப் பற்றி அவர்கள் நிச்சயம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். எங்களுடைய செங்கற்பட்டு, வட ஆற்காடு, இரண்டு மாவட்டங்

களுக்கும் பாலாற்றை விட்டால் வேறு வழி முறை இல்லை. ஆற்று நீர் பாசனத்திற்கு, ஒன்று நீங்கள் பாலாற்றுக்கு தண்ணீர் கொண்டு வாருங்கள், அல்லது அதிலே இருக்கிற மணலை எல்லாம் எடுத்து, பெரிய பெரிய லாரிகளிலே ஏற்றி, கப்பல்கள் மூலமாக வெளி நாடுகளுக்கு அனுப்பி விடுங்கள். அல்லது சாதாரண கரம்பு நிலமாக வாவது ஆக்கித் தாருங்கள். இந்த இரண்டு மாவட்டங்களில் வளைந்து வளைந்து ஓடுகிற பாலாறு பார்ப்பதற்கு அழகாக இருக்கிறது. ஒரு சொட்டுத் தண்ணீர் மேலேயில்லையே தவிர, நல்ல நீர்பாசன நிபுணர்கள் அதிலே அடியூற்று நீர் (subsoil water) ஏராளமாக இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த நீரைப் பயன்படுத்துவதற்கு இதுவரையில் என்ன முயற்சிகள் எடுத்துக்கொண்டீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். மைசூர் இராஜ்யத்தோடு கலந்து பேசுவதற்கு "ஸோனல் கவுன்சிலை" பயன்படுத்துங்கள். ஸோனல் கவுன்சிலர்கள் இதைப்பற்றி பேசுவதற்கு இல்லை எனது கருதினால், இந்த மாமன்றத்தில் இருக்கிற வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங் களைச் சேர்ந்த உறுப்பினர்கள் - எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களை - கொண்ட அதிகாரம் படைத்த ஒரு நல்லெண்ண தூதுகோஷ்டி (Goodwill Mission) யை மைசூர் சர்க்காரிடத்தில் சென்று பேசுவதற்கு நிறுவுங்கள். எப்பாடு பட்டாவது பாலாற்றில் தண்ணீர் கொண்டுவரவேண்டும். இந்த இரண்டு மாவட்ட மக்களும் - இன்றல்ல, நேற்றல்ல - எனக்கு வோட்டு அளித்த பிறகு அல்ல, அதற்கு நீண்ட நாட்களுக்கு முன்னாலிருந்தே, மனதில் இதைத்தான் ஆவலோடு எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். பாலாற்றிலே தண்ணீர் கொண்டு வருவதற்கு வழிவகை சொன்னால், அதை காதில் வாங்க மறுக்கிறீர்கள், அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளாமல், காஞ்சீபுரம் தொகுதிக்கு வரும்போது எல்லாம், காஙகிரஸ் அமைச்சர் களும் சரி, அவர்களால் தூண்டிவிடப்படுகிற பிரசாரங்களும் சரி, "அண்ணாதுரை பாலாற்றுக்கு தண்ணீர் கொண்டுவந்துவிட்டாரா?" என்று பேசுகிறார்கள். அதனால் எனக்கு ஒன்றும் குறைவு ஏற்பட்டு விடவில்லை. பகீரதன் கங்கையைக் கொண்டு வந்தான் என்று சொல்லுகிற பரம்பரையைச் சேர்ந்த நீங்கள் மைசூர் இராஜ்யத்தி லிருந்து தண்ணீர் கொண்டுவர முடியவில்லை என்றால், அது இந்த அமைச்சரவைக்குத்தான் இழுக்கே தவிர, அங்கே இருக்கிற உறுப்பினர்களுக்கு அல்ல என்பதை நான் வலியுறுத்திச் சொல்லுவேன். செய்யாறு திட்டத்தைப் பற்றி நீண்ட நாளைக்கு முன்னதாகவே நம்முடைய மராமத்து இலாக்கா அமைச்சருக்குத் தெரியும். இதற்கு

அதிகமான பணம் தேவையில்லை. இந்த திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இவர்கள் என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்களோ, அத்தனை தகுதிகளும் இந்தத் திட்டத்தில் இருக்கின்றன. செலவு குறைவு, பலன் அதிகம். அதிகமான சிக்கல்கள் இல்லை, கட்சி மாறுபாடு இல்லை. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், பிற கட்சியைச் சேர்ந்தவர்களும் கூட்டாகச் சேர்ந்து செய்யாறு நீர்தேக்கத் திட்டத்தைப்பற்றி அமைச்சர் இடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அமைச்சர் கூட அங்கே சென்று பார்த்து நிலைமையை ஆராய்ந்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கையில் செய்யாறு திட்டத்தைப் பற்றி ஏதாவது குறிப்பு இருக்குமா என்று துருவித்துருவிப் பார்த்தேன். ஆனால் குறிப்பு எதுவும் இல்லை. இப்படி, இருக்கிற திட்டங்களை நிறைவேற்றாமல், புதிய வழிமுறைகளைக் கண்டு பிடிக்காமல், "இங்கே ஆறுகள் அதிகம் இல்லை, ஆகவே நீர்ப்பாசனத் திற்கு வசதியில்லை" என்று சொன்னால், நாட்டிலே இருக்கிற விவசாயத்தை நீங்கள் எப்படி வளர்க்கப் போகிறீர்கள்? அதற்கு நிதி அமைச்சர் சுப்பிரமணியம் ஒரு வழி சொன்னார்கள், இப்பொழுது விவசாயி அதிகமான அளவுக்குத் தண்ணீரைப் பாழ்படுத்தி விடுகிறான் என்று. இந்த அளவுக்கு தண்ணீரைப் பயன்படுத்தாமலே விவசாயத்தை வளரச் செய்யமுடியுமென்று சொல்லுவது நிபுணர்களுடைய கருத்தாக இருக்குமேயானால், அதை நாட்டிற்கு எடுத்துச் சொல்லுங்கள். அதிகத் தண்ணீர் தேவையில்லை, இப்பொழுது விவசாயத்திற்கு உபயோகிக்கப்படும் தண்ணீரை விட மிகக் குறைச்சலாக தண்ணீரைக் கொண்டு இந்த விளைச்சலைப் பெற முடியுமென்று நிதி அமைச்சர் அவர்கள் கருதுவார்களேயானால், அந்தக் கருத்துக்கு நிபுணர்களின் ஒப்பம் இருக்கிறது என்றால், விவசாயத்துறை நிபுணர்களைக் கொண்டு அந்தக் கருத்தை நாட்டிலே பரப்புங்கள். பரப்பி, இந்த அதிகமான தண்ணீரைச் செலவழிக்காமலே, விளைச்சலை அதிகப்படுத்துவற்கு வழிமுறையை நீங்கள் செய்து கொடுங்கள். தண்ணீரும் தரமாட்டீர்கள், உணவைப் பெருக்கச் சொல்லுவீர்கள், விலைவாசியைக் குறைக்க மாட்டீர்கள். எதிர்த் தரப்பிலுள்ளவர்கள் வாழ்த்தே பாடவேண்டுமென்று கருதிக்கொண்டு இருப்பீர்களே யானால் இன்றைய தினம் எதிர்த் தரப்பிலிருந்து மட்டுமல்ல, உங்கள் சொந்த கட்சியிலிருந்தே சொல்லப்படுவதேயெல்லாம் வாழ்த்து என்று கருதுவீர்களேயானால், அதை உபசாரத்திற்காக வாழ்த்து என்று கொள்ளலாமே தவிர, கட்சிக் கட்டுப்பாட்டு அதிகாரத்தின்படி

வாழ்த்து என்று கொள்ளலாமே தவிர, உண்மையில் வண்மையான கண்டனம் இருந்திருக்க முடியாது.

சர்க்கார் தயாரிக்கும் திட்டங்களை கண்டித்துவிட்டு, கடைசியில் திட்டங்களுக்கு ஆதரவு தருகின்றவர்களைப் பற்றி சென்ற கிழமை பண்டித நேரு என்ன சொல்லியிருக்கிறார் என்பதை கனம் அங்கத்தினர்கள் கவனத்திற்கு கொண்டுவர கடமைப்பட்டிருக் கிறேன். திட்டத்திலே உள்ள குறைபாடுகளை எடுத்து சொல்லிவிட்டு, கடைசியில் ஆதரிக்கிறேன் என்று சொல்வதை, "That is illogical support, and I do not want it" என்று பண்டித நேரு அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைய தினம் உங்களுக்கு கிடைக்கும் ஆதரவு அத்தனையும் கட்சிக் கட்டுப்பாட்டினால் கிடைக்கிற ஆதரவே தவிர வேறு வகையில் ஆதரவு கிடைக்கவில்லை என்பதை அமைச்சர் அவர்களுக்கு நான் தெளிவாக எடுத்துச் சொல்லப் பிரியப்படுகிறேன். போடப்பட்டுள்ள பல திட்டங்களில், ஒரு திட்டத்தைப் போட்டால் மற்ற இடங்கள் பாதிக்கிறதா என்பதை ஆராய்ந்து'' பார்த்து திட்டம் போடப்படுவது இல்லை. சாத்தனூர் திட்டத்தினால் வளவனூர் காய்கிறது என்று அந்தத் தொகுதி அங்கத்தினர் சொன்னால் அதை அமைச்சர் அவர்கள் அடியோடு மறுப்பதற்கு இல்லை. சாத்தனூர் திட்டத்தில் அதிகமான அளவு தண்ணீர் தேங்கவில்லை, மழை பெய்யவில்லை என்று சொல்லலாம். ஆனால் இந்த சாத்தனூர் திட்டம் நீண்ட நாளாக சர்க்கார் அலுவலகத்தில் தூங்கிக்கொண்டிருந்ததற்குக் காரணம் சாத்தனூர் அணைக்கட்டினால் வளவனூர் பகுதியில் பஞ்சம் வரக்கூடும் என்று அப்போதே கருதியிருந்ததால்தான், ஒரு இடத்தில் திட்டம் போட்டால் மற்ற இடங்களில் காய்ந்து போகிறது என்பதை யோசிக்காமலே திட்டம் போட்டிருக்கிறார்கள். உங்களுக்குத் திட்டம் போடத் தெரியவில்லை. போட வேண்டிய திட்டங்களை போடுவதற்கு ஏற்ற பணம் இல்லை. ஆனால் அறிக்கையில் "Our engineers are in great demand elsewhere" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது உண்மைதான். நம் மின் பொறியாளர்கள் (எஞ்சினியர்ஸ்) நாட்டின் பல இடங்களில் தேவைப்படுகிறார்கள். இங்கு அவர்களை பயன்படுத்திக்கொள்ள வில்லை. அவர்கள் திறமைக்கு ஏற்ற அளவுக்கு இங்கு அணைக்கட்டுத் திட்டங்கள் போடப்படவில்லை. ஆகவே அவர்கள் வேறு இடங்களில் தேவைப்படுகிறார்கள். அங்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். நம்முடைய எஞ்சினியர்கள் அங்கு செல்வது நமக்கு சிறப்பு

என்றாலும், நம்முடைய அமைச்சரவை அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் அளவுக்கு நல்லத் திட்டங்களை போடவில்லை என்பதையும் அனுசரிக்கிறது. ஆகையினால் குறை இல்லாத முறையில் எல்லா கட்சிகளையும் கலந்து, அத்தகைய திட்டங்களை நிறைவேற்று வதற்கு வழி வகை செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை நிறுத்திக்கொள்கிறேன்.



நிதி ஒதுக்கீடு சட்ட முன்வடிவு.....

உரை : 18 நாள் : 07.04.1958

திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ஒரு திங்களுக்கு மேலாக இந்த ஆண்டு துரைத்தனத் தாரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிற இந்தத் தொகையை எந்தெந்த நோக்கத்தோடு எந்தெந்தத் துறையில் எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்பதைப் பற்றி சர்க்கார் தரப்பிலே இருந்தும், எதிர் தரப்பில் இருந்தும் கருத்துக்களை அவரவர்கள் எடுத்துச் சொல்வதன் மூலம், முடிவடைகிற இந்தத் தருவாயில் ஒரு தெளிவான நிலைமைக்கு வந்திருக்கிறோமென்று நினைக்கிறேன். இந்த ஆண்டுக்கான சர்க்காரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிற இந்தத் தொகையை எந்த வகையிலே அவர்கள் பல பல துறைகளுக்கு ஒதுக்கி, தக்க விதத்திலே பயன்படுத்துகிறார்களோ அதைப் பொறுத்துத்தான் சிறப்பு இருக்கிறது என்பது மட்டுமல்ல, அதைப் பொறுத்துத்தான் இந்த நாட்டினுடைய நன்மை தீமைகளும் அடங்கியிருக்கின்றன. பிறருடைய பாராட்டுதலைப் பெறவேண்டிய பருவத்தைக் கடந்து விட்டேன் என்று நேற்றையதனம் நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

திரு. சி. சுப்பிரமணியம் : ஆசைத்தம்பி அவர் களுடைய....

திரு. சி. என். அண்ணாதுரை : அவருடைய பாராட்டுதலைக் கோருகிற பருவத்தில் இல்லையென்று சொன்னார்கள். ஆசைத்தம்பி பாராட்டுதலைப் பெறுவதுடன், மற்ற பாராட்டுதல்களையும் சேர்த்துக் கொள்வது நிதி அமைச்சருக்கு நஷ்டமாக இராது, லாபத்தில்தான் முடியுமென்று அவருக்குக் குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் பொதுவாக ஒன்று சொல்வேன். இங்கே எடுத்துச் சொல்லப் பட்ட பல கருத்துக்களில் இன்றையதினம் சர்க்கார் நடந்து கொள்கிற போக்கு அனைவருக்கும் திருப்தி கொடுத்துவிட்டது என்று ஒரு குறிப்பிட்ட அங்கத்தினராவது தைரியமாக இந்த மன்றத்திலே பேசவில்லை

என்பதை ஆட்சியாளர்கள் தயவுசெய்து மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். கட்சிக்கு கட்சி கருத்துமாறுதல் இருக்கிற காரணத்தினாலே, ஒருவர் சொல்லுகிற கருத்தை மற்றவர்கள் மறுக்கிறார்கள் என்றாலும் வட, தொகுதிகள் சரியாக கவனிக்கப்பட வேண்டுமென்று அந்தந்த தொகுதி உறுப்பினர்கள், கட்சியைப்பற்றிய நிலைமையைக்கூட ஓரளவுக்கு ஒதுக்கிவைத்து, எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். தொகுதிகள் சரியான முறையில் கவனிக்கப்படவில்லை, போதுமான அளவுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை, ஒதுக்கப்பட்ட நிதி சரியான முறையில் செலவழிக்கப்படவில்லை என்று மூன்று வகையான குற்றச்சாட்டுகள் எடுத்துச் சொல்லப்பட்டன. நிர்வாக ஊழல்கள் ஏராளமான அளவுக்கு இருக்கின்ற என்று எங்கள் தரப்பிலே உள்ளவர்கள் சுட்டிக்காட்டியதை விட ஆளும் கட்சியிலுள்ளவர்கள் அதிகமான அளவுக்கு சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நிச்சயமாக உணர்ந்து பார்க்க வேண்டும் மென்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் பெற்று இருக்கிற சிறந்த செல்வாக்கு அவர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதைப் போலவே அவர்களுக்கு பெரிய பொறுப்பையும் கவலையையும் அளிக்க வேண்டும். அவர்கள் சுலபத்தில் வீழ்த்திவிடக்கூடிய ஒரு எதிர்க்கட்சி உருவாகியிருக்கு மானால் ஆளும் கட்சியினர் சிறிய சிறிய தவறுகளை செய்தாலும் அது பொது மக்களை அதிக நாட்களுக்கு பாதிக்காது. ஆனால் இன்றைய தினம் ஆளும் கட்சியில் உள்ளவர்களை எதிர்கட்சியில் உள்ளவர்கள் வீழ்த்திவிட முடியாது என்கிற நிலைமை இருக்கிற காரணத்தினால் தான், எதிர் தரப்பில் உள்ளவர்கள் எந்தக் கருத்துக்களை எடுத்துச் சொன்னாலும் அந்தக் கருத்துக்களை உன்னிப்பாக கவனிக்க வேண்டிய பெருந்தன்மை அவர்களுக்கு இருக்கவேண்டும். நம்முடைய நிதி அமைச்சர், இந்த மன்றத்திலும் சரி, வெளியிலும் சரி, உருவான நல்ல கருத்துக்களை எதிர் தரப்பிலிருந்து பெற முடியவில்லை என்று எடுத்துச் சொல்லி வருகிறார்கள். உருவான கருத்துக்களை அவர்கள் தர முடியவில்லை என்பது அவர்களுக்கு இருக்கின்ற பயற்சி குறைவு காரணமாக இருக்கலாம். அல்லது தருகின்ற எல்லா கருத்துக்களும் உருவான கருத்துக்கள் அல்ல என்று சர்க்காருடைய அகராதியில், நீண்ட நாளாக பழக்கப்பட்டதின் காரணமாக இருக்கலாம். எதிர் கட்சியில் உள்ளவர்களும் அந்த அந்த

தொகுதியில் உள்ள குறைபாடுகளை நீக்க வேண்டும் என்று சொன்னால், உருவான கருத்துக்கள் என்கிற முறையில்தான் சொல்கிறார்கள் என்று ஆளும் கட்சியில் உள்ளவர்கள் கவனித்துப் பார்க்கவேண்டும். அது மட்டும் அல்ல.

பொதுவாக இந்த மாநிலம் இந்திய துணைக் கண்டத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. அதன் காரணத்தினால், நன்மையோ, தீமையோ, வளர்ச்சியோ, குந்தகமோ, இந்திய துணைக் கண்டத்தின் பெரிய திட்டங்களைப் பொறுத்துத்தான் இருக்கிறது. அதனுடைய நிதி நிலைமையைப் பொறுத்து நம்முடைய நிதி நிலைமை பாதிக்கப்படு கின்றது. ஆகையால் நாங்கள் பேசுகின்ற நேரத்தில் அதனை குறிப்பிட வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படி குறிப்பிடுகின்ற நேரத்தில் 'வடக்கு தெற்கு' என்கிற வார்த்தைகளை அதிகமாக உபயோகப் படுத்துகிறோம் என்று நிதி அமைச்சர் அடிக்கடி சொல்லிக் கொண்டு வருகிறார்...வடக்கு, தெற்கு என்று சொல்லுகின்ற காரணத்தினால் அது குறைவுடையது என்றோ, அல்லது அதை வைத்துக்கொண்டு மற்றப் பிரச்சினைகளை ஆராய்கின்ற போது, பிரச்சினைகளின் தன்மை கெட்டுவிடும் என்றோ நிதி அமைச்சர் எண்ணிக்கொள்ளக்கூடாது. வரவு செலவு விவாதத்தின்போது, திராவிட நாடு பிரிவினைபற்றி அந்தப் பிரச்சினை அதிகமாக கிளம்பிய காரணத்தால், அதைப்பற்றி என்னுடைய கருத்துக்களை நான் சொன்னதற்கு, நமது நிதி அமைச்சர் பதில் அளிக்கின்ற தன்மையில், பூர்வோத்திரத்தை ஆராய்ந்து கட்சியின் பூர்வோத்திரத்தைப் பற்றியும், கட்சியின் பூர்வோத்திரங் களில் எனக்கு இருந்த தொடர்புகளைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். எங்களுடைய பூர்வோத்திரங்கள் நிதி அமைச்சரின் கவனத்தை இழுத்தது பற்றி நான் பெருமைப்பட்டுக் கொள்கிறேன். அதேபோல் காங்கிரஸ் கட்சியில் உள்ள தனிப்பட்ட நபர்களைப் பற்றியும், அல்லது மொத்தமாக காங்கிரஸ் கட்சியின் பூர்வேகத்திரத் தைப்பற்றியும் ஆராயவேண்டும் என்று ஆரம்பித்தால் அரசியலில் உள்ள பல அழுக்குகள் வெளிப்படையாகத் தெரிந்துவிடும். இந்த மன்றத்தில் அதிக பழக்கம் இல்லாமல் நான் இருக்கிறேன். ஆனால் நீண்ட நாள் பழக்கம் உள்ள நிதி அமைச்சர் அவர்கள் இந்த முறைதான் திருப்தி தருகிறது என்று நினைக்கிறார். அவர்களுக்கு அழுக்கை கிளறிப் பார்ப்பதில் பிரியம் இருக்குமானால் நான் அதைத் தடுக்கவில்லை.

பூர்வோத்திரத்தை ஆராய வேண்டாம் என்று நாங்கள் சொல்வதற்கும், திராவிட நாடு பிரிவினைக்கும், ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உண்டு என்று கருதினால் பயன் இல்லை.

வட நாட்டில் வளர்ச்சி அதிகம் என்பதும்; தென்நாட்டில் வளர்ச்சி குறைவு என்பதும், எங்கள் தரப்பில் உள்ளவர்கள் மட்டுதான் சொல்கிறார்கள் என்கிற பொருள் அல்ல.

Are Ahmedabed and Bombay the only places where raw material for the textile industry is available in plenty? I represented in the previous Legislative Assembly five districts, four of which have the largest area under cotton cultivation. There is not a single spinning mill there. Why should you bring all the cotton to Ahmedabed to be spun into yarn and woven into cloth and sent back to the very place where it has come from? Is that not the very fact against which we had been fighting, that cotton which is produced in this country was being taken to Manchester to be woven into cloth and sent back to us? Was it not for that that we fought the British imperialists? Are we going to supplant one imperialism by another imperialism?

ஏற்கெனவே இருந்த ஒரு ஏகாதிபத்தியத்தை நீக்கி விட்டு மற்றொரு புதிய ஏகாதிபத்தியத்தை நாம் கொண்டு வரவேண்டுமா என்கிற கருத்தை எடுத்துச் சொல்லப்பட்ட இடம் டில்லி பாராளு மன்றம். இதை எடுத்துச் சொல்லியவர் டில்லியில் பாராளு மன்றத் தலைவராக இருக்கின்ற கனம் அனந்தசயனம் அய்யங்கார் அவர்களே. அவர் முன்னாள் உறுப்பினராக இருந்த நேரத்தில் எடுத்துச் சொன்னார். ஆகவே திரு. அனந்தசயனம் அய்யங்கார் காங்கிரஸ் உறுப்பினராக இருந்துகொண்டு டில்லி பாராளு மன்றத்தில்.... Are we going to supplant imperialism by another imperialism? என்று கேட்கிறார்கள் என்றால் அது நான் சொல்லுகிற வடநாடு தென்னாடு என்கிற அதே கருத்தை அதிகமான அளவில் விவரித்துச் சொல்லா விட்டாலும் மனதில் அவருக்கு அந்தக் கருத்து இருந்திருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

பொதுவாக இந்த மன்றத்தில் நடத்தப்படும் விவாதம் மிகுந்த உயர்ந்த தரம் அமைந்திருப்பதாகவும் அதனுடைய தரத்தின் தன்மை இன்னும் பெரும் தன்மையோடு உயர்ந்த முறையில் நடத்தப்பட்டு

வருவதையும் இந்த மாநிலத்தில் மட்டும் அல்ல, பிற மாநிலத்திலும் பாராட்டப்படுகிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். என்றாலும் இந்த விவாதம் அமைந்திருக்கிற முறை எப்படி அமைந்திருக்கிறது என்று பார்த்தால் விவாதத்தின் கடைசி நேரத்தில் கனம் எழுந்து நின்கிற நேரத்தில், ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள பிரச்சினையைப் பற்றி அவருடைய பதில் அமைந்திருக்குமானால் அது விவாத முறைக்கு ஒத்ததாக இருக்கும். ஆனால் கனம் நிதி அமைச்சர் பதில் அளிக்கிற நேரத்தில், பதில் அளிக்க கனம் அமைச்சர் எழுந்து நிற்கிற நேரத்தில், ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள பிரச்சினையைப்பற்றி அவருடைய பதில் அமைந்திருக்குமானால் அது விவாத முறைக்கு ஒத்ததாக இருக்கும். ஆனால் கனம் நிதி அமைச்சர் அவர்கள் சென்ற தடவை பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்; "திரு. அண்ணாதுரை திராவிட நாட்டு பிரிவினைப் பற்றி பேசாமல் இருந்தாலும் நான் பேசுவதற்கு தயாரித்துக் கொண்டு வந்திருக்கிறேன்," என்று சொல்லி தயாரித்துக் கொண்டு வந்து பேசினார். அந்த முறையில் விவாதங் களைக் கவனித்துப் பார்க்காமல் எதிர் தரப்பிலுள்ளவர்கள் என்ன குறைபாடுகளை இந்த சட்ட மன்றத்தில் குறிப்பிடுகிறார்களோ அதற்குத் தகுந்த சமாதானங்களைச் சொல்லுவதற்கு ஆளும் கட்சியினர் இருக்கவேண்டும். அந்த முறையில் விவாதம் அமைந்தால்தான் எந்த விவாதமும் நல்ல முறையில் இருக்கும் என்பதை நான் அல்ல மிகப் பெரியவர்; எங்கள் தரப்பி லுள்ளவர் அல்ல; உங்களிடத்தில் செல்வாக்குள்ள ஆளும் கட்சியில் ஒத்துக்கொள்ளக்கூடிய மற்றொரு பெரியாருடைய கருத்தை இந்த மன்றத்தில் வைக்க பிரியப்படுகிறேன்.

With reference to these debates, may I make one submission? This is the Government reply at the end, and you naturally put down interruptions. I do not say you are wrong at all. What happens is that the whole debate becomes one-sided affair. It is just like a durbar where representations are made by one side and the Government come along at the end and say, 'We do not accept this'. As it is, the Government give their reply at the end of the debate and we are not given opportunity to rebut the statements made by Government. We cannot interrupt.

என்று இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னவர் காலஞ்சென்ற தமிழகத்தில், முற்றிலும் இந்தியத் துணைக் கண்டம் பூராவிலுமே

பாராளுமன்றத் திறமை பெற்றவர் என்று பாராட்டுதலைப் பெற்ற திரு. சத்தியமூர்த்தி அவர்களே இதனை எடுத்துக் காட்டியிருக்கிறார். அவர் குறிப்பிட்ட அதே குறிக்கோளுடன் இன்றைய தினம் இங்கே நடந்து கொண்டிருக்கிறது. ஆகையினால் தான் விவாதங்கள் முடிகிற நேரத்தில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் புதிய பிரச்சினையைக் கிளப்பாமல் ஏற்கெனவே சொல்லப்பட்டவை களுக்கு பதில் அளிக்கின்ற அந்த வித முறையைக் கையாள வேண்டும் என்பதை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக இப்பொழுது அவரிடத்தில் ஒப்படைக்கப்பட்ட பெரும் தொகையை எந்த வகையில் செலவழிக்கிறார்கள் என்பதைப் பார்த்து நாங்கள் சொல்கிற நேரத்தில் இந்த வரவு செலவு திட்டம், துண்டு விழுகிற பட்ஜெட்டா அல்லது உபரியாக இருக்கிற பட்ஜெட்டா அல்லது சரிக்கட்டுகிற பட்ஜெட்டா என்பதைப் பார்த்து நாட்டினுடைய நிலைமை இல்லை என்பதை மற்றொரு பேரறிவாளர் சொன்னதை இந்த நேரத்தில் இந்த மன்றத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

But the prosperity of a nation does not depend entirely upon its financial position or upon its having a balanced or a deficit budget.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : நீங்கள் சொன்னாலே நான் ஒத்துக்கொள்வதற்கு தயாராக இருக்கிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் இதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இது பேரறிவாளர்களுடைய கருத்து.

It depends entirely upon the wealth of the country. In the present industrial set-up, howevermuch a labourer may produce, he is not in any way benefited. Therefore, the only way this problem can be solved is to find out a way by which whenever there is an increase of production, labour will be benefited to that extent, and not only the capitalist or the employer. This is why I said some sort of a sharing of profit system should be introduced. When I say that I realise the entire implications of the proposal.

இந்த மன்றத்தில் இந்தக் கருத்தை நான் வலியுறுத்துவதற்குக் காரணம் நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் பாராளு

மன்றத்தில் இருந்த காலத்தில் சொன்ன கருத்தையே, பேரறிவாள ருடைய கருத்தையே அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இதை நான் குறிப்பிட்டேன். ஆகவே வரவு செலவுத் திட்டத்தில் எவ்வளவு வருவாய் வருகிறது, எவ்வளவு செலவழிக்கிறோம் என்பதை மட்டும் ஒரு குறிக்கோளாக வைத்துக்கொள்ளாமல் அதன் மூலமாக ஏற்படுகின்ற பலனை எந்த அளவுக்கு அதிகரித்துக் கொள்ளலாம் என்பதை குறிக்கோளாகக் கொள்ளவேண்டும் என்பதை நான் மிகவும் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். உருவான யோசனைகள் மன்றத்தில் தரப்பட வேண்டும் என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன காரணத்தால் நான் கனம் மகாலிங்கம் சொன்ன ஒரு கருத்தை கொஞ்சம் திருத்தத்துடன் அரசாங்கத்தினுடைய யோசனைக்குக் கொண்டு வந்து அதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் முன்பாக சமர்ப்பிக்க விரும்புகிறேன். ஒரே அமைச்சருக்கு அதிகமான இலாகாக்கள் தரப்படுகிறது என்ற காரணத்தால் அந்த அமைச்சருக்கு வேலை பளு அதிகமாக இருக்கிறது என்று கனம் மகாலிங்கம் எடுத்துச் சொன்னார். அதையும் மனதில் வைத்துக்கொண்டு வேலைப் பளுவைப் பகிர்ந்து அளிக்கின்ற வகையிலே, இந்த மாநிலத்தில் குறிப்பிடத்தக்க ஒரு சமுதாயத்தினராகவும், இன்றைய தினம் ஆளும் கட்சி எடுத்துக் கொள்கிற எல்லா முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருப்பவர் களாகவும், இந்தியாவுக்கும் காஷ்மீருக்கும் தகராறு என்றாலும், 'காஷ்மீரத்தை நாங்கள் ஆதரிக்கமாட்டோம், இந்திய சர்க்கார் செய்வதுதான் நியாயம்' என்று துணிவோடு பெருந்தன்மையோடு சொல்லுபவர்களாகவும் இருக்கின்ற முஸ்லிம் சமுதாயத்தினர் ஒருவருக்கு ஒரு அமைச்சர் பதவியைத் தந்து, நமது நிதி அமைச்சர் தன்னிடம் இருக்கின்ற இரண்டு, மூன்று இலாக்காக்களில் ஏதாவது ஒன்றை அவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற ஒரு யோசனையை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். முஸ்லிம்களை வலை போட்டு பிடிக்கின்றேன். அதற்காக நான் இப்படிச் சொல்லுகின்றேன் என்று அவர்கள் சொல்கிறார்கள். பெரிய வலை காங்கிரஸ் சர்க்காரிடத்தில் இருக்கிறது என்பது நன்றாகத் தெரியும். ஆகவே, வலை போடுவதற்காக நான் இதைச் சொல்லவில்லை என்பதை கூறிக் கொள்ளுகிறேன். முஸ்லீம் சமுதாயத்திற்கு ஒரு நல்ல பிரதிநிதித்துவம் இந்த அமைச்சர் அவையிலே தரப்பட வேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த மாநில சர்க்காரின் நிதி நிலையை மத்திய சர்க்காருடைய நடவடிக்கைகளை பொறுத்திருக்கிறது என்ற காரணத்தினாலே, மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ளுகிற முயற்சிகள் அனைத்தும் சரியான பொறுப்பு நம்முடைய அமைச்சர் அவைக்கு இருக்கிறது. அந்த வகையில் நான் மற்றொரு உருவான யோசனையைக் கூற விரும்புகிறேன். தேங்கிக் கிடக்கின்ற கைத்தறி ஜவுளியை நம்முடைய துரைத்தனத்தாரே விலை கொடுத்த வாங்கி, அதை வைத்துக்கொண்டு கைத்தறி நெசவாளர்களுடைய கஷ்டங்களை உடனடியாக நீக்கவேண்டுமென்று நான் ஆட்சியாளரை விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். ரிபேட் தொகையைக் குறைத்திருக்கின்ற மத்திய சர்க்காரின் போக்கை நமது அமைச்சர்கள் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். வன்மையான கண்டனம் டெல்லி செல்லுகின்ற காலத்துக்குள் மிக மென்மையாக ஆகிவிடாதபடி, பல முயற்சிகளை எடுத்துக்கொண்டு ரிபேட் தொகையைக் குறைக்காமல் கைத்தறி நெசவாளர்களுக்கு உருப்படியான பலன் கிடைப்பதற்கு வழி வகைகள் செய்ய வேண்டுமென்று ஆட்சியாளரை நான் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மன்றம் உதகமண்டலத்தில் நடக்கப்படவேண்டுமென்ற கருத்தை நம்முடைய நண்பர் மாதா கவுடர் அவர்கள் மிக உருக்கமாகவும், ஆத்திரமாகவும், கோபமாகவும், கடைசி நேரத்தில் கொஞ்சம் கண்ணீரும் கலக்கமும்கூட வந்ததாகக் கருதக்கூடிய அளவிலே எடுத்துச் சொன்னார்கள். நான் மெத்த வருந்துகிறேன். அவர்களுடைய இவ்வளவு உருக்கத்தைக் கேட்டும்கூட நான் என்னுடைய முடிவை மாற்றிக்கொள்ள முடியாமல் இருப்பதற்கு உண்மையிலேயே வருந்துகிறேன். உதகமண்டலத்தின் வளர்ச்சிக்கு இந்த மாமன்றம் - அங்கேகூடப் போவது காரணமாக இருக்கும் என்று அவர்கள் சொல்லியதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. உதகமண்டலம் வளர்ச்சி அடைய வேண்டும் என்று மாதா கவுடர் அவர்கள் சொன்னதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். ஆனால், இந்த மாமன்றம் அங்கேகூடுவது அதன் காரணமாக அமையும் என்று சொல்லக்கூடிய அந்த வாதத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள்'தமிழர்களுடைய நன்மையை உத்தேசித்து நாங்கள் அங்கே வரமாட்டோம் என்று சொல்லுகிறோம், உதகமண்டலத்தில்

இருப்பவர்கள் தமிழர்கள் அல்லவா?' என்று கேட்டார்கள். எங்களுடைய தரப்பில் உள்ள யாரும் 'தமிழர்களுடைய நன்மையை உத்தேசித்து உதகமண்டலம் வரமாட்டோம்' என்று சொல்லவில்லை. எனக்கு கவனம் சரியாக இருக்குமானால், கனம் மாதா கவுடர் அவர்கள் ஒரு முறை இந்த மன்றத்திலேயே 'நான் தமிழன் அல்ல, கன்னடக்காரர்' என்று கூறியிருக்கிறார். இன்றைய தினம் நான் இதைக் குறிப்பிடுவதற்கு காரணம் யார் தமிழர், யார் தமிழர் அல்ல என்று சொல்லுவதற்காக இல்லை. நீண்ட காலத்திற்கு முன்னாலேயே தமிழர்கள் 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற விரிந்த மனப்பான்மையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழர் கெட்டு விடுகிறார்களா, நன்மை அடைகிறார்களா என்ற பிரச்சினை இங்கே எழவில்லை. இந்த மன்றம் உதகமண்டலத்தில் கூடுவதால், அங்கே வளர்ச்சி ஏற்படும் என்பதில் எனக்குக் கருத்து மாறுபாடு இருக்கிறது. ஆகவேதான் உதகமண்டலத்தில் இந்த மன்றம் கூடுவதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. நான் அதை ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால் அது நிறுத்தப்படுகிறது என்பதை வருத்தத்தோடு சொன்னால் கனம் மாதா கவுடர் அவர்கள். நான் அவருக்குச் சொல்லுகிறேன். ஒரு குறிப்பிட்ட கட்சியினுடைய ஒப்புதலை கேட்ட பிறகுதான் இப்படிப்பட்ட காரியங்கள் நடத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் கொண்டிருக்கிற பெருந்தன்மையை இன்னும் கொஞ்சம் விரிவு படுத்தி, ஒரு குறிப்பிட்ட கட்சியாகிய நாங்கள் சொல்லுகின்ற தமிழ் நாடு என்ற பெயரை அரசாங்கம் இந்த மாநிலத்திற்கு வைக்காமல் இருக்கும் காரணத்தினால், அவர்களுக்கு யோசனை சொல்லி, தமிழ் நாடு என்று பெயர் வைக்கும்படி அவர்களுக்கு சிபாரிசு செய்வார்களேயானால், தமிழ் நாடு என்று பெயர் வைக்கப்பட்ட மறு நாளே உதகமண்டலம் வருவதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஒப்புதலை அளிக்கும். ஏதோ பேரம் பேசுவதற்காக நான் இதைச் சொல்லுவதாகக் கருத வேண்டாம். உங்களால் ஆட்சியாளரை மாற்ற முடியாது என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்குத்தான், காங்கிரஸ் உறுப்பினராக இருந்தாலும், நீங்கள் சொல்லுகின்ற கோரிக்கைக்கூட ஆட்சியாளர்களுக்கு விருப்பம் இல்லாவிட்டால், ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற அரசியல் நிலைமையை கவனிப்பதற்குத்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

ஆகையால், இந்த மாமன்றம் உதகமண்டலத்தில் கூடுவதால், உதகமண்டலத்திற்கு அதிக நன்மைகள் வந்துவிடாது. அதைவிட நல்ல யோசனைகளும் சொல்லப்பட்டன; அவைகளை நான் மெத்த நம்பிக்கையுடன் வரவேற்கிறேன். உதகமண்டலத்திலுள்ள எழில் களையும் வனப்புகளையும் அபிவிருத்தி செய்து அதைச் சிறந்த வாசஸ்தலமாக ஆக்க வேண்டுமென்று யோசனை சொல்லப்பட்டது. அவ்வாறு செய்தால் உண்மையிலேயே உதகமண்டலம் அபிவிருத்தி யடையும். ஆகையால், உதகமண்டலத்தை அபிவிருத்தி செய்வதை கட்சிப் பிரச்சினையாகக் கருதவேண்டாம் என்றும், மற்றவர்கள் பேரில் மாசு கற்பிக்க வேண்டாமென்றும் கனம் அங்கத்தினர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அந்த அந்தத் தொகுதிகளி லுள்ள குறைகளை கனம் அமைச்சர்கள் தெரிந்து கொள்வதற்கு ஒரு தொகுதிகளில் ஆங்காங்கே உள்ள குறைபாடுகளை நேரிடையாகத் தெரிந்து கொள்வதற்கு தங்கள் தங்கள் தொகுதிகளுக்கு கனம் அமைச்சர்களை அழைத்தால், கனம் அமைச்சர்கள் கனம் அங்கத்தினர்களையும், ஜில்லாவிலுள்ள அதிகாரிகளையும் அழைத்துக் கொண்டு தொகுதிகளில் 2, 3 நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டும். இதற்குக் குறிப்பாக ஹரிஜன நல இலாகா அமைச்சர் ஏற்பாடு செய்யவேண்டும். ஒரு தொகுதியிலுள்ள குறைபாடுகள் எல்லாவற்றையும் ஐந்து நிமிஷப் பேச்சில் சொல்ல முடியாது. ஆகவே நான் கூறியபடி செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சர்களைக் கேட்டுக் கொள்கிறேன். வரவு செலவுத் திட்டத்தில் செலவினங்களுக் காக ஒதுக்கப்பட்டுள்ள பெரும் தொகை பணத்தை நல்லபடியாகச் செலவழித்து மக்களுக்கு நன்மைகளைச் செய்ய அரசாங்கத்தார் முற்படவேண்டுமென்று சொல்லி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

உணவு நிலைமை பற்றிய விவாதம்...

உரை : 19 **நாள் : 10.09.1958**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, உணவு நிலைமையில் இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியை நாம் எவ்வளவு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற விதத்தில், அமைச்சர் அவர்களால் தயாரிக்கப்பட்டு, மன்றத்திலே ஒப்புவிக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் நான் அதிகமான அளவுக்குத் திருப்தி அடைவதற்கில்லை என்பதை நான் சுட்டிக்காட்டுவதைப் போலவே, கனம் அங்கத்தினர்கள் பலர் இதற்கு முன்னாலே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

பற்றாக்குறையாக இருந்த இந்த மாநிலத்தினுடைய உணவு நிலைமையை, ஓரளவுக்கு அதிகப்படியான விளைவு இருக்கிறது என்று புள்ளி விவரங்கள் மூலமாக கொஞ்சம் திருப்தியடையத்தக்க வகையில் மாற்றியமைத்திருக்கின்றவர்களை நாம் பாராட்டத்தான் வேண்டும்.

பற்றாக்குறையாக இருந்த இந்த மாநிலத்தினுடைய உணவு நிலைமை மேலே இருக்கும் மேற்கு வங்காளத்தைப் போலவோ, பீகாரைப் போலவோ, உத்திரப் பிரதேசத்தைப் போலவோ மோசமான நிலைமைக்குச் சென்று விடவில்லை. அங்கு மக்கள் உணவுக்காகத் திண்டாடி, சட்ட மன்றத்திலேயும் சட்ட மன்றத்திற்கு வெளியிலேயும் அதனுடைய எதிரொலிகளும் கலவரங்களும் அதிகமான அளவுக்குப் பரவியிருக்கிறதென்பதை நாம் இன்றைய தினம் பார்க்கின்றோம். அந்த வகையிலே எல்லாம் இல்லாமல், பற்றாக்குறையாக இருந்த இந்த மாநிலம், ஓரளவுக்குத் தன்னுடைய நிலைமையைச் சரி செய்து கொள்ளுகின்ற அளவுக்கு வளர்ந்திருப்பதற்காக நாம் பாராட்டத்தான் வேண்டும். ஆனால், யாரைப் பாராட்ட வேண்டும் என்பதிலேயே எனக்கும் மற்றவர்களுக்கும் கருத்து வேறுபாடு இருக்கிறது. இந்த மாநில அமைச்சரவையையோ சர்க்காரையோ பாராட்டப்படவேண்டிய வர்கள் என்று சர்க்கார்த்தரப்பிலே உள்ளவர்கள் கருதிக்கொண்டிருக்

றார்கள். எவ்வளவு பெரிய இடுக்கண்கள், இடையூறுகள், இன்னல்கள் திணிக்கப்பட்டாலும், அவைகளையெல்லாம் சமாளித்துக் கொண்டு, இந்த அளவுக்காகிலும் உற்பத்தியை அதிகமாகச் செய்து காட்டியிருக்கின்ற உழவர் பெருங்குடி மக்கள் தாம் உண்மையான பாராட்டுதலுக்கு உரியவர்கள் என்பதை இந்த மன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உழவர் பெருங்குடி மக்களுக்கு உரிமைகள் சரிவர வழங்கப் படவில்லை என்பது ஒருபுறம் இருக்கிறது. அவர்களுடைய உழவுத் தொழிலுக்குத் தேவையான உபகரணங்கள் நல்ல வகையில் தரப்பட வில்லை என்பதை ஒவ்வொருவரும் - ஆளும் கட்சியிலுள்ள ஒவ்வொருவரும் அழுகுரலோடு - ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். உற்பத்தி செய்கிற பண்டங்களை கட்டிக் காக்கும் உரிமையும் பொறுப்பும் அவர்களிடத்திலே ஒப்படைக்கவில்லை என்று பல கட்சிகளிலே உள்ளவர்கள் வலியுறுத்திக் காட்டியிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய தொல்லைகளுக்கிடையே நம்முடைய மாநிலத்தில் உள்ள உழவர் பெருங்குடி மக்கள் உற்பத்தியைப் பெருக்கி, நம்மை அவல நிலைமைக்கு ஆளாக்காமல் பார்த்துக்கொண்டதற்காக இந்த மன்றத்திலேயுள்ள எல்லாக் கட்சி அங்கத்தினர்களும், இந்த மன்றத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் உழவர் பெருமக்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

உணவு நிலைமை எந்த அளவு இருக்கிறதென்பதை ஆளும் கட்சியினர் அல்லது அமைச்சரவை எடுத்துக்காட்டும் நேரத்தில், என்ன செய்துவிட்டோம் என்பதை எடுத்துக்காட்டுவதைவிட, என்ன செய்திருக்கலாம் என்பதை எடுத்துச் சொல்லி, அதிலே எந்த அளவு வெற்றி பெற்றிருக்கிறோம் என்று சுட்டிக்காட்ட வேண்டியது ஒரு நல்ல க்ஷேமநல சர்க்காருடைய அடிப்படைக் கொள்கையாகும். நாட்டு மக்களைப் பட்டினி போடாமல் பார்த்துக்கொண்டோம் என்று எடுத்துச் சொல்வதாலேயே ஒரு நல்ல க்ஷேமநல சர்க்காருக்கு கீர்த்தி ஏற்பட்டுவிடாது. உலகத்திலேயே பயங்கரமான யுத்தம் நேரிட்ட காலத்தில், இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்த அன்னியர் இந்த நாட்டில் பட்டினி ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்காக வெளிநாடுகளிலிருந்தும் உணவுப் பொருட்களை வரவழைத்து மக்களை ஓரளவு அமைதியாக வைத்திருந்தார்கள். அமைதியாக வைத்திருந்தார்கள் என்று நான் சொல்வதை அடிமைகளாக வைத்திருந்தார்கள் என்று வேண்டுமானால் சில அரசியல் கட்சிகள்

தங்களுடைய அகராதியிலுள்ள பதத்தைப் பயன்படுத்தலாம். அந்த யுத்த காலத்தில் எடுத்துக் கொண்ட முயற்சிகளைவிட, சாதாரண காலத்திலே நாம் எடுத்துக்கொண்டிருக்க வேண்டிய முயற்சிகளை தீவிரமான விதத்தில் எடுத்துக்கொண்டிருப்போமானால், நம்முடைய மாநிலத்திலே பற்றாக்குறை நிலைமையை மாற்றிவிட்டோம் என்பது மட்டுமல்ல, நம்முடைய மாநிலத்திலே தங்கு தடை இல்லாமல், மக்கள் அத்தனை பேரும் மூன்று வேலை வயிறார உண்டு, மீதம் இருக்கும் உணவுத் தானியங்களை வெளி மாநிலங்களுக்கும் வள்ளல் தன்மையோடு வழங்கி, அதன் மூலம் கிடைக்கும் வருவாயை வைத்துக் கொண்டு இந்த மாநிலம் நல்ல முறையிலே வளர்ச்சி அடைந்திருக்க முடியும். அந்த நல்ல எண்ணம், ஆர்வமான எண்ணம், என்னுடைய மனதிலே தோன்றுவதற்குக் காரணம், இந்த சட்ட மன்றத்திலே இதற்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் ஒருவர், மற்ற மற்ற கட்சிகள் நாடு பிரியவேண்டும் மக்கள் பிரியவேண்டும் என்று பார்க்கிறார்களே தவிர, ஜப்பான் நாட்டிலே உள்ளதைப்போல் உள்ளங்கை அளவு கொண்ட நிலத்தைக்கூட பாழ்படுத்தாமல், தண்ணீரின் மேல் ஒரு மூங்கில் பாலம் அமைத்து, அதன் பேரில் மண்ணைத் தூவி, நல்லவிதமாக பயிர் செய்கிறார்கள் என்று சொன்ன நேரத்தில், பிற பிற நாடுகளில் எப்படி எப்படியெல்லாம் பயிர் செய்கிறார்கள் என்ற எண்ணம் தோன்றிற்று.

கடல் நாட்டையே அழித்துக்கொண்டு போய்விடும் நிலையில் இருக்கும் நாடுகள் உலகத்திலே இருக்கின்றன. பூகம்பம் மிகுந்திருக்கக் கூடிய நாடுகளும் உலகத்தில் இருக்கின்றன. எரிமலைகள் நிறைந்த நாடுகளும் உலகத்தில் இருக்கின்றன. மழையை ஆண்டொன்றுக்கு ஒரு திங்கள் கூட காணாத நாடுகளும் உலகத்தில் இருக்கின்றன. அந்த நாட்டிலே உள்ளவர்கள் செய்யத்தக்க அளவுக்குத் தீவிரமாக திட்டங்களை இந்த நாட்டிலே உள்ளவர்கள் செய்யவேண்டிய அவசியம் இருக்கிறதா என்றால், இயற்கை அந்த அளவு நம்மை இன்னல்களுக்கு ஆளாக்கவில்லை. நம்முடைய நிலவளத்தில், நீர் வளத்தில் வேறு பலநாடுகளில் உள்ளதைவிட நம்நாடு குறைந்தது அல்ல. பூசாரமும் மற்ற நாடுகளில் உள்ளதைப்போல் பிற்பட்ட நிலையில் இருக்கவில்லை. ஆனால், மனவளம்தான் இல்லை. தமக்கு மனவளம் இல்லை என்பதைவிட ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கு மக்களுடைய மனதை ஆராய்ந்து பார்க்கத்தக்க அளவுக்கு மனவளம் இல்லாததால்தான், இந்த அளவுக்கு நிலைமை சீர்குலைந்திருக்கிறதே

தவிர, தீவிரமான திட்டங்களிட்டு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று ஆரம்பித்திருப்போமானால் - என்னுடைய பிற அங்கத்தினர் கள் அகில இந்தியக் கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டும் என்று சொன்னதுபோல - அகில இந்தியாவுக்கு மட்டுமல்ல, பல வெளிநாடு களுக்கும் நாம் ஏற்றுமதி செய்யத்தக்க அளவு நம்முடைய நாட்டில் உணவு உற்பத்தியை அதிகப்படுத்திக் காட்டியிருக்கலாம்.

அந்த வகையில் சொல்ல வேண்டுமானால் இந்த உணவு உற்பத்திப் பிரச்சினை தனிப்பட்ட பிரச்சினையல்ல என்பதையும் அத்துடன் இணைந்திருக்கிற வேறு பல பிரச்சினைகளையும் மற்றவர்கள் எண்ணிப் பார்த்தாகவேண்டும். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டிய பல காரியங்களில் சர்க்கார் தவறி இருக்கிறார்கள் என்பதைப் பல அங்கத்தினர்கள் சுட்டிக்காட்டினார்கள். அப்படிச் சுட்டிக் காட்டுகிற நேரத்தில் நீர்ப்பாசனத்தை சரியான முறையில் விருத்தி செய்து எந்த அளவில் அதைச் சர்க்கார் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமோ அந்த அளவில் பயன்படுத்திக்கொள்ளத் தவறியிருக்கிறார்கள் என்பதனை எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் மறுபடியும் - அது என்னுடைய வழக்கமான பல்லவி என்று கருதினாலும்கூட வடக்கு தெற்கு என்கிற பாகுபாடு செய்யப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டுவதற்கு உங்களுடைய அனுமதியைக் கோருகிறேன். அது துவேஷ மனப் பான்மையில் விளைந்த சொற்களாகவும் ஆகாது. ஒரு பேலாவில் இருக்கிற சந்தனத்தை முதலில் ஒருவன் அள்ளி எடுத்து அப்பிக்கொண்டு விட்டான் என்றால் பாக்கியுள்ள சந்தனத்தை வைத்துக்கொண்டுதான் மற்றவர்களையெல்லாம் உபசாரம் செய்ய முடியும். அப்படி இந்திய துணைக்கண்டத்தின் பெரும்பகுதி வருமானத்தை வடக்கேயுள்ள பெரிய பல அணைக்கட்டுக்களுக்காக செலவழிப்பதால் தமிழகத்தில், தென்னாட்டில் சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை மிகமிகக் குறைவாயுள்ளது. பஞ்ச நிலைமைக்குச் சமானமாக இருந்திருக்கிறது.

ஆனால் அமைச்சர் அவர்கள் பேசும்போதெல்லாம் இந்த ராஜ்யத்தில் மழைத்தண்ணீர் கொஞ்சம்கூட வீணாக்கப்படவில்லை என்பதை எடுத்துச் சொன்னாலும், கனம் அங்கத்தினர்கள் - எல்லாம் கட்சிகளையும் சார்ந்தவர்கள் - தங்கள் தங்கள் மாவட்டத்திலும், தொகுதிகளிலும் வீணாகப்போகிற மழைத்தண்ணீரை உபயோகித்துக்

கொள்ள கட்டப்படவேண்டிய சிறு சிறு நீர் தேக்கங்கள் பற்றியும், அணைக்கட்டுகளைப்பற்றியும், சாகுபடிக்குக் கொண்டு வரப்படாத தரிசு நிலங்கள் பற்றியும், தரப்படும் உரம் உரிய காலத்தில் கொடுக்கப் படாததன் காரணமாக உணவு உற்பத்திக்குப் பயன்படாமல் போவது பற்றியும், மிக உச்ச நிலையில் இருக்கக்கூடிய நில விகிதாசாரத்தைச் சரியான முறையில் பகிர்ந்து கொடுக்காதது பற்றியும், அளிக்கப்பட வேண்டிய உரிமைகள் அளிக்கப்படாதது பற்றியும் வலியுறுத்திப் பேசி யிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் செய்வதற்கு தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இன்று ஆட்சியாளருக்கு நல்லதொரு அரசியல் சூழ்நிலை அமைந்திருக்கிறது. அவர்கள் கட்சிக்குள் எந்த விதமான குழப்பமும் இல்லை. வெளியிலுள்ளவர்களும் அவர்களுக்கு அதிக சாதகமான வேலைகளைச் செய்துகொண்டுதான் வருகிறார்கள். இவ்வளவு அமைதியான சூழ்நிலையில் ஆளும் கட்சியினருக்குத் தரப்பட்டிருந்தும் கூட இந்த நாட்டின் விவசாயத்தைக்கூட சரியான முறையில் விருத்தி செய்ய முடியவில்லையே என்று - நாங்கள் சுட்டிக் காட்டா விட்டாலும் - அவர்களுக்கே அடிக்கடி ஐயப்பாடு வருகிறது என்பதில் சந்தேகமில்லை.

முதலில் உணவுப் பிரச்சினை என்று எடுத்துக்கொள்கிற நேரத்தில் அதை மூன்று வகையாக அவர்கள் மனதில் பாகுபாடு செய்துகொள்ள வேண்டும். ஒன்று - ப்ரொடெக்ஷன் - உற்பத்தி. மற்றொன்று - டிஸ்ட்ரிபியூஷன் - எந்த எந்தப் பகுதிக்கு எவ்வளவு அனுப்பி வைக்கப்படுகிறது என்கிற விநியோகம். மூன்றாவது - கன்ஸம்ஷன் - எப்படி உபயோகப்படுத்திக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்து இருக்கிறது. இந்த மூன்று விஷயங்களும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிற காரணத்தால்தான் - சபாநாயகர் அவர்களே, நாங்கள் பேசும்போது சிலபல நேரங்களில் வழி தவறி பேச நேரிட்டு விடுகிறது. நீங்கள் சட்டமன்ற ஒழுங்கு முறையை நிலைநாட்ட எங்களைத் தடுத்து நிறுத்துகின்றீர்கள். அதற்காக எங்களுடைய நன்றியை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆனால் உணவுப் பிரச்சினையை நாம் வெறும் உற்பத்திப் பிரச்சினையாக மட்டும் கருதாமல் விநியோகப்படுத்துகின்ற பிரச்சினையாக மட்டும் கருதாமல், வாங்கி உபயோகித்துக்கொள்ளுகிற மக்களுடைய வாங்கும் சக்திப் பிரச்சினையாகவும் கவனித்தால்தான் நம்முடைய நிலைமை நமக்கு நன்றாகப் புரியும். இந்த மூன்று விஷயங்களிலுமே அமைச்சர் அவை இன்றைய தினம் சரியான

முறையில் காரியங்கள் ஆற்றவில்லை என்பதை எடுத்துக்கூற நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். ஆனால் நிலைமை அப்படித்தான் இருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் இதற்கு முன்னதாகத் தந்திருக்கிற புள்ளி விவரத்திற்கும் இப்போது தந்திருக்கிற புள்ளி விவரத்திற்கும் கூட சில முரண்பாடுகள் இருப்பதை நான் கூறும் படியாகத்தான் நேரிடுகிறது. "Production of foodgrains for Madras during the year 1956-57" என இருக்கிற சர்க்கார் தந்திருக்கிற புள்ளி விவரக் கணக்கில் அவர்கள் தந்திருப்பது 42, 94 என்று இருக்கிறது. ஆனால் இப்போது தந்திருக்கிற அறிக்கையில் அது 29 என்பதற்கு 60 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முரண்பாட்டுக்குக் காரணம் அச்சுப் பிழையோ அல்லது வேறு என்ன காரணமோ தெரியவில்லை. இப்படிப்பட்ட புள்ளிவிவரங்கள் மூலமாக நாம் திருப்தி அடைவதைவிட - நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பாகச் சொல்வேன் - நான் ஒன்றுக்கு மூன்று வேளை சோறு மக்கள் எல்லோருக்கும் கிடைக்கும்படிச் செய்யவேண்டும்: ரூபாய்க்கு மூன்று படி அரிசி விற்கப்படவேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான உபகரணங்கள் அவர் கட்டுக்கு அடங்கக்கூடிய விலையில் தரப்பட வேண்டும். எந்த இடத்தில் நிலம் இருக்கிறதோ அந்த இடத்திற்கு உரம் தரப்படவேண்டும். இப்பொழுது உரம் லாப வேட்டைக்காரர்களின் உள்ளக் குளிர்ச்சிக்காகத் தரப்படுகிறதே தவிர நிலத்திற்குத் தரப்படவில்லை. பல அங்கத்தினர்கள் இன்றையதினம் உரம் கள்ள மார்க்கெட்டில்தான் விற்கப்படுகிறதென்பதைச் சொல்லியிருக் கிறார்கள். அதற்கு மாற்று யோசனை என்ன என்று சர்க்கார் எங்களைத் திருப்பிக் கேட்கலாம். கார்டு கவர் விற்கப்படுவதைப்போன்று, கொய்னா மருந்து விற்கப்படுவது போன்று தபால் இலாகா மூலம் அமோனியம் சல்பேட் போன்ற உரங்கள் எந்த எந்த விவசாயி கேட்கிறானோ அவனுக்குத்தான் நேரிடையாகக் கொடுப்பது என்று வைத்துக்கொள்ளலாம். இந்த யோசனை சிறு பிள்ளைத்தனமானது என்று தோன்றினால் - அவர்களுக்கு இருக்கக்கூடிய நிறைந்த அனுபவத்தைக் கொண்டு வேறு ஏதாவது நல்ல முறைகளை அவர்கள் கையாளலாம். ஆனால் இன்று இருக்கிற முறை விவசாயிகளுக்குத் தேவையான உதவியை அவ்வப்போது அளிக்கக்கூடியதாய் இல்லை. அவர்களது நல்வாழ்வுக்குப் பயன் அளிப்பதாய், நாட்டின் உணவு உற்பத்திக்கு அடிகோலியிருப்பதாகத் தெரியவில்லை.

விவசாயத்திற்கு அதிகமாகப் பயன்படுகிற இயந்திரங்களுக்கு உபயோகிக்கும் டீசல் எண்ணைக்கு வரிபோடுகிற நேரத்தில் இந்த

வரிப் பிரேரணை விவசாயத்தை மிகவும் பாதிக்கக்கூடியது என்கிற விஷயத்தைப்பற்றி பல கட்சிகளைச் சார்ந்தவர்களும் குறிப்பிட்டார்கள். குறிப்பாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களே கட்சிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு இந்தப் பிரேரணையை ஆதரித்தார்களே தவிர பேசும்போதெல்லாம் இந்த வரி குறைக்கப்பட வேண்டும், நீக்கப்படவேண்டும். போக்கப்படவேண்டும் என்று பலமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் கூறியது எல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் காதில் ஏறாமல் போனது போலவேதான் காங்கிரஸ் கட்சிக்காரர் சொன்னது எல்லாம்கூட கனம் அமைச்சர் அவர்களுடைய ஒரு காதின் வழியாக ஏறி மறு காதின் வழியாக வெளியே போய்விட்டது. டீசல் எண்ணைக்குப் போடப்படும் வரி விவசாய உற்பத்திச் செலவை அதிகமாக்கும் என்று விவசாயிகள் பயந்தது இன்றைக்குச் சரியாகப் போய்விட்டது. அதனால் உணவுப் பொருள்களின் விலையும் அதிகமாக அந்த அளவுக்கு உயர்ந்து விட்டதே என்று மக்கள் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவைகள் எல்லாவற்றையும் விட விவசாயிகளுக்கு இருக்கிற உரிமைகள் எந்த அளவுக்குப் பாதுகாக்கப்படும் என்பதனைப் பற்றிய நிரந்தரத் தன்மை அவர்கள் உள்ளத்தில் ஏற்படவில்லை. அப்படி ஏற்படாதிருக்கக் காரணம் நாம் நாட்டை ஆளுகின்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற அமைச்சர் அவை - அமைச்சர் அவை அமைத்திருக்கிற காங்கிரஸ் கட்சிக்காரர்கள் - ஓரிடத்தில் ''உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்படும்'' என்கிற உறுதியைத் தரும்படியாகப் பேசுவதும், ''நிலத்தின் உற்பத்தியைப் பெருக்குவதுதான் எங்களுடைய திட்டம்'' என்பதாக மற்றோரிடத்தில் பேசுவதும், ''உற்பத்தி பெருகினால்தான் விலைவாசி குறையும்'' என்று வேறு இடத்தில் பேசுவதும் இப்படி முரண்பட்ட முறையில் அங்கங்கே பேசிக்கொண்டு போவதுதான் என்று பொதுமக்கள் ஐயப்படுகிறார்கள். உழுபவனுக்கே நிலம் என்று இவர்கள் சொல்கிறார்களே என்பதாகவும், ''நிலத்தின் உச்ச வரம்பைக் கட்டுப்படுத்தப் போகிறோம்'' என்று பேசிவருகிறார்களே என்றும் திட்டவட்டமாக அவர்கள் எதுவும் பேசாத கொள்கையை வகுக்காத காரணத்தினால் அதன் விளைவு எப்படி இருக்குமோ என்கிற ஐயப்பாட்டினால் நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் அவைகளைத் தரிசாகப்போட ஆரம்பித்துவிட்டார்கள். விவசாய உற்பத்தியில் ஊக்கம் காட்டுவதற்குப் பதிலாக ஊக்கம் குன்றிப்போய் இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவை உணராமல் இருக்க முடியாது.

எங்கே தங்களுடைய நிலம் பிறன் கைவசப்பட்டுவிடுமோ என்கிற காரணத்தினால் எனக்குத் தெரிந்த பலயிடங்களில் நிறைய நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் அந்நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவராமல் சவுக்குப் பயிரிட்டிருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக உணவு மந்திரி அவர்களுக்கும் தெரிந்திருக்கும் - அவரும் நானும் எங்களுடைய தொகுதி என்று உரிமையோடு சொல்லிக் கொள்கிற செங்கல்பட்டு மாவட்டத்தில் தங்கள் நிலம் எந்த நேரத்தில் தங்கள் கரத்தைவிட்டுப்போய்விடுமோ என்கிற எண்ணத்தினாலோ, அல்லது 60, 40 என்பது அவர்கள் மனதிற்கு ஏற்காத காரணத்தினாலோ சவுக்கு மரங்களை வைக்கிறார்கள். சவுக்கு வைத்தாலும்கூட சிலபல தொல்லைகள் உண்டாகிவிடுமோ என்று முள்செடியை வளர்த்து வெட்டி விறகாக மாற்றலாம் என்கிற எண்ணத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

உழுபவர்களுக்கும், நிலச் சொந்தக்காரர்களுக்கும் சம அந்தஸ்து உண்டாகவேண்டும். சம நிலை உண்டாகவேண்டுமென்று சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள். அதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் சர்க்கார் எடுத்துக்கொள்கிற அந்த முயற்சியில் இருந்து தப்பித்துக் கொள்வதற்குப் பணம் படைத்தவர்கள், சட்டத்தின் சந்துபொந்துகளைக் கண்டறியக் கூடியவர்கள் தீவிர முயற்சி மற்றொரு பக்கத்தில் எடுத்துக்கொண் டிருக்கிறார்கள். எந்தக் காலத்திலும் தங்கள் உரிமைகளை விட்டுவிட மனம் இல்லாத சுயநலக்காரர்களோடு சர்க்கார் எதிர்த்துப் போராட வேண்டிய நிலைகளில் எல்லாம் - வெட்கத்தோடு மிகவும் வேதனையுடன்தான் ஒப்புக்கொள்ளவேண்டும் - சர்க்கார் தோற்கடிக்கப்பட்டு வருகிறதே தவிர சுயநலவாதிகள் வெற்றி பெற்றுக்கொண்டுதான் இருக்கிறார்கள். அந்தப் பணக்காரச் சுயநலவாதிகளின் செய்கைகளை முறியடிக்கவேண்டுமென்றால் இந்தச் சர்க்காருக்கு நெஞ்சு உரம் வேண்டும். அந்த நெஞ்சு உரத்தை அவர்கள் பெறுவதற்குத்தான் இரண்டு நாட்களுக்கு முன்பாக இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கூட ''உணவுப் பிரச்சினையைப் பொறுத்த வரையில்'' எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த நிர்வாகக் கமிட்டி ஒன்றை - ஸ்டேட் லெவலில் - ஏற்படுத்தி இது சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளையும் நன்றாக அலசி ஆராய்ந்து பார்த்து அவர்கள் சொல்கிற வழிப்படிச் செல்ல வேண்டுமென்று தங்கள் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு பொதுவாக

நாட்டுக்கு நல்லதொரு யோசனையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் இதுவரையில் நம் மாநிலத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பது - ஆளும் கட்சி ஒரு காரணத்தைச் சொல்வதும், எதிர்க்கட்சியிலுள்ள நாங்கள் அதை மறுப்பதும், ஆளும் கட்சியிலுள்ளவர்கள் நாங்கள் எப்படிப்பட்டவர்கள் என்கிற அங்க ஆராய்ச்சிகளைச் செய்வதும், அதற்குத் திரும்பி நாங்கள் பதில் சொல்வதும் ஆக இப்படிப்பட்ட விளையாட்டில் நாடு சென்று கொண்டிருக்கிறது.

கட்சிக்கு அப்பாற்பட்டதும் - எல்லாக் கட்சிகளுக்கும் உயிர்ப் பிரச்சினையாக இருப்பதும் ஆகிய இந்தப் பிரச்சினையில் நாம் எல்லோரும் கட்சிப் பாகுபாடுகளை மறந்து ஒருமுகமாக இதை நல்லவகையில் தீர்ப்பதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டிருப்பதை வரவேற்கிறேன். அதற்கேற்ற வகையில் காரியங்கள் செய்யப்படவேண்டும் என்று வற்புறுத்துகிற நேரத்தில் “வடநாடு தென்னாடு என்கிறார்களே. வடநாட்டில் பெரிய ஆறுகள் இருக்கின்றன. அணைகள் கட்டுகிறார்கள். தென்னாட்டில் அணை கட்டக்கூடிய பெரிய ஆறுகள் என்ன இருக்கின்றன? ஏதாவது கட்டவேண்டுமென்றால் அண்ணாதுரை வாய்க்குத்தான் அணை கட்டலாமே தவிர வேறு எதற்குக் கட்டுவது? என்று அங்கலாய்க்கிறார்கள்.

என்னைப் பொறுத்த வரையில் - இந்தியத் துணைக் கண்டத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறவர்கள் முதலிலே தண்ணீர் இல்லாத பகுதியில் அதிக கவனம் செலுத்தியிருக்கவேண்டும். தண்ணீர் இருக்கிற பகுதியைக் கவனிக்காது இருந்தாலும் அத்தனை தீமை நாட்டில் ஏற்பட்டிருக்காது என்று சொல்வேன். கங்கையும், சிந்தும், யமுனையும் பாய்கிற இடத்தில் பெரிய அணைகளைக் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளாமல் அங்கு இருக்கிற தண்ணீரை வைத்து ஐந்து வருஷங்கள் சமாளித்துக் கொள்ளலாம் என்று அங்கே பணத்தைக் கொட்டாமல், தெற்கே - வறண்டு இருக்கிற நம் பகுதிக்கு - பெரிய பெரிய ஆறுகள் இல்லாத பகுதிகளில் ஓடும் சிற்றாறுகளையும், ஓடைகளையும், காட்டாறுகளையும், கால்வாய்களையும் கட்டுப்படுத்தித் தேக்கிவைக்கும் சிறுசிறு பாசனத்திட்டங்களை நிறைவேற்றுவதற்குச் சிலபல கோடிகளை ஒதுக்கியிருந்தால் நம்முடைய நிலைமை மிகவும் நல்லபடியாக வளர்ந்திருக்கும். ஆனால் அதைச் சொன்னால் நமது அமைச்சரவையில் உள்ளவர்களுக்குச் சீற்றம் உண்டாகலாம்.

அதிலும் நானும் கனம் உணவு அமைச்சர் அவர்களும் சேர்ந்து எங்கள் மாவட்டம் என்று சொல்லிக்கொள்கிற செங்கல்பட்டு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், தென்னாற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், வடாற்காடு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் சிலபல பகுதிகளில் வறட்சியான இடங்கள் இருக்கின்றன. அங்கே ஏன் வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்கக் கூடாதா? அங்கே வறட்சி ஏற்படாமல் இருந்திருக்கவேண்டுமானால் பாலாறு திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருந்தால் செங்கல்பட்டு மாவட்டத்திலும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் வறட்சியான நிலைமை ஏற்படுவதற்கு வழி இல்லாமல் இருந்திருக்கும். செங்கல்பட்டு ஜில்லாவையும் வட ஆற்காடு ஜில்லாவையும் பொறுத்தவரையில் பாலாற்றுத் திட்டம் பாழாகிக்கொண்டிருக்கிறது. வேகவதித் திட்டம் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. செய்யாற்றுத் திட்டத்தைச் சீந்துவார் இல்லை. இவை களெல்லாம் சாதாரணத் திட்டங்கள். என்னைப் போன்றவர்களும் கனம் அமைச்சரைப் போன்றவர்களும் சென்னையில் குடியேறியிருக் கிறோம்; ஆகவே, நாங்கள் அந்தத் திட்டங்களை நம்பியிருக்கவில்லை. சென்னை நகர கார்ப்பரேஷன் குழாயில் தண்ணீர் வந்தால் எங்களுக்குப் போதும். ஆனால் பாலாற்றில் இருக்கும் உழவர் பெருங்குடி மக்கள் பாலாற்றில் தண்ணீரை எதிர்பார்த்தே இருக்க வேண்டியிருக்கிறது. பாலாற்றில் தண்ணீர் வந்தால்தான் அவர் களுடைய நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும். ஆகவே, அத்தகைய பகுதிகளில் பாசன வசதி செய்துகொடுப்பதில் அரசாங்கத்தார் அக்கறை கொள்ளவேண்டும். அதற்கான திட்டங்களில் அரசாங்கத்தார் அக்கறை கொள்ளவேண்டும். ஆற்றில் தண்ணீர் ஓடா விட்டாலும், அங்கெல்லாம் விஞ்ஞான முறைப்படி பூமியிலுள்ள தண்ணீரை வெளியில் கொண்டுவந்து பாசன வசதி செய்து கொடுப்பதற்கான யோசனைகளை பாசன இலாகாவினர் தெரிவித்திருக்கிறார்கள். ''லிப்ட் இர்ரிகேஷன்'' முறையில் அங்கெல்லாம் பாசன வசதி செய்துகொடுக்கலாம். செங்கல்பட்டு, வட ஆற்காடு ஜில்லாக்களின் பாசன வசதிக்கு, ''லிப்ட் இர்ரிகேஷனைத்'' தவிர வேறு வழி இல்லை. ஆகையால் மாநிலத்தில் அந்தமுறையில் பாசன வசதிகளைச் செய்து கொடுப்பதில் பணத்தைச் செலவழிப்பதற்கு அமைச்சரவையினர் சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கவேண்டும். இப்படிப்பட்ட காரிங்களைச் செய்வதற்கான உரிமை மாநில அரசாங்கத்திற்கு இருக்கிறதா அல்லது மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறதா என்ற

பிரச்சினை சென்ற கிழமைதான் பாராளுமன்றத்தில் பலத்த விவாதத்திற்கு உட்பட்டது.

நாங்கள்தான் "வடக்கு தெற்கு" என்று பேசுகிறோம் என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால், இந்த "வடக்கு-தெற்கி" லிருந்து வேறு பலராலும் தப்பித்துக்கொள்ள முடியவில்லை என்பது கனம் உள்விவகாரஅமைச்சரின் அறிக்கையிலிருந்து தெரிகிறது. குறிப்பாக கனம் அமைச்சராலேயே தப்பித்துக்கொள்ள முடியவில்லை என்பது அவருடைய அறிக்கையிலிருந்தே தெரிகிறது. இதை நான் சொல்லவில்லை. அவருடையஅறிக்கையே தெரியப்படுத்துகிறது. "நாம் உணவு தானியங்களை அதிகமாகத்தான் உற்பத்தி செய்திருக்கிறோம். அப்படி இருந்தும், இங்கே உணவு தானியங்களின் விலைகள் ஏறியதற்குக் காரணம், வடக்கேயுள்ள ராஜ்யங்களில் விலைகள் ஏறியிருப்பதுதான்" என்று கனம் அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறு கூறியதன் மூலம், கனம் அமைச்சர் "உடலில் இருக்கும் நோயாக இருந்தாலும் அழுக்காக இருந்தாலும், வேர்க்குருவாக இருந்தாலும், சிரங்காக இருந்தாலும் அதன் பலாபலன்களிலிருந்து யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது" என்பதை மிகத்தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார். "நாம் உற்பத்தி செய்திருக்கும் உணவுப் பொருள்களின் அளவு விலையை இறங்கச் செய்யக்கூடியதாகத்தான் இருக்கிறது" என்பதை எடுத்துக்காட்டிய கனம் அமைச்சர் ....வடக்கு ராஜ்யங்களில் விலை ஏறியதால் இங்கேயும் விலை ஏறியது" என்று குறிப்பிட்டிருக்கிறார். "அண்டை நாடுகளில்" என்றோ, "இந்தியாவின் மற்ற பகுதிகளில்" என்றோ சொல்லாமல், "வடக்கு ராஜ்யங்களில்" என்று அவர் சொல்லியிருக்கிறார். கனம் அமைச்சர் அடுத்த தடவை இந்தப் பதத்தை ஜாக்கிரதையாக விட்டுவிடுவார் என்று நினைக்கிறேன். (சிரிப்பு). வடக்கேயுள்ள நிலைமை தெற்கேயுள்ள நிலைமையை பாதிக்கிறது என்பதை கனம் அமைச்சர் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். அரசியல் தெளிவு ஏற்பட்டதால் கனம் அமைச்சர் இவ்வாறு கூறியிருக்கிறார் என்று அர்த்தமில்லை. நல்ல வார்த்தைகளை கவனிக்காமல் இருக்க வேண்டுமென்று நாம் விரும்பினாலும், சில சமயங்களில் அவைகளை நாம் கவனித்துவிடுவதுண்டு. அந்த விதத்தில் தான் கனம் அமைச்சர் அவ்வாறு கூறியிருக்கிறார்.

இந்தியத் துணைக் கண்டத்தில் இப்போது பெரிய பிரச்சினையாக இருப்பது உணவுப் பிரச்சினை. "உணவு சம்பந்தப்பட்ட பொறுப்பு எங்களுடையது இல்லை. அது மாநில சர்க்கார்களைச் சேர்ந்தது" என்று

இப்போது மத்திய அரசாங்கத்தார் கூறுகிறார்கள். உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களின் அரசாங்கத்தார்களோ "அந்தப் பொறுப்பிலிருந்து மத்திய அரசாங்கத்தார் தப்பித்துக்கொள்ளக்கூடாது, தப்பித்துக்கொள்ள முடியாது" என்று கூறுகிறார்கள். இந்திய பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்களோ, இந்த விஷயத்தில் மத்திய சர்க்காருக்கு "though there is no constitutional right, there is a moral obligation" என்று கூறியிருக்கிறார்கள். "எங்களுக்கு, சட்டப்படி பொறுப்பு இல்லை, ஆனால் ஆத்மார்த்த முறைப்படி எங்களுக்குப் பொறுப்பு இருக்கிறது" என்று அவர் கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட ஆத்மார்த்தப் பொறுப்புகளை நிறைவேற்றத்தக்க சந்தர்ப்பங்கள் வந்த காலத்திலெல்லாம் மத்திய சர்க்கார் மாநில சர்க்கார்களை ஏமாற்றியும் வஞ்சித்தும் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்கூறும் போது நாங்கள் வேதனைப்படுகிறோம். நாங்கள் இவ்வாறு கூறுவதை ஏற்றுக் கொள்வதில் ஆளும் கட்சியினருக்கு சங்கடங்கள் இருக்கலாம்.

சென்னை மாநிலத்தை ஒரு தனி உணவு மண்டலமாக அமைக்க வேண்டுமென இந்த அரசாங்கத்தார் பல காலமாகவே மத்திய அரசாங்கத்தாரிடம் கூறி வந்திருந்தும், மத்திய அரசாங்கத்தார் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் கனம் அமைச்சர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். இனிமேல், மத்திய சர்க்காரிடம் மாநில சர்க்கார் இதுவிஷயமாகத் தெளிவாகச் சொல்லிவிட வேண்டும். உணவு விஷயத்தில் தங்களுக்குப் பொறுப்பு இல்லை என்று மத்திய சர்க்கார் கூறிவிட்ட பிறகு, "எங்களுக்குத் தேவையான உணவு தானியங்களை நாங்களே தேடிக்கொள்கிறோம். ஆனால், அப்படித் தேடிக்கொள்ளும் போது, நீங்கள் குறுக்கிடவோ எங்களுக்கு உணவு தானியங்கள் கிடைப்பதற்குக் குந்தகம் விளைவிக்கவோ கூடாது" என்று மத்திய அரசாங்கத்தாரிடம் சொல்லத்தக்க நெஞ்சுரம் இந்த அமைச்சரவையினருக்கு ஏற்படவேண்டும்.

அப்படி நெஞ்சுரம் ஏற்பட்டு, நாங்கள் அடிக்கடி வடக்கு தெற்கு என்று பேசுவதால் எங்கள் பேரில் ஏற்படுகிற கோபம் அவர்கள் மனதில் ஆத்திரமாக ஆழப்பதிந்து அதை சமயம் கிடைக்கிறபோதெல்லாம் எங்கள் பேரில் பாய்ச்சி, நாங்கள் காணாத நேரத்தில், அவர்கள் டெல்லிக்குப் போகிற நேரத்தில் காட்டவேண்டிய இடத்தில் காட்ட வேண்டிய முறைப்படி, காட்டவேண்டிய நெஞ்சுரத்துடன் காட்டி இம்மாநிலத்திற்கு தொடர்ந்து நல்ல உரிமைகளைப் பெற்றுத் தர வேண்டுமென்று நான் குறிப்பிட்டுக்கொள்வேன். வறட்சியான

பிரதேசங்களில் ஏன் செயற்கை முறையில் மழை பெய்விக்க விஞ்ஞான முறையை பயன்படுத்தியிருக்கக்கூடாது? வறண்டு போயிருக்கிற ஆறுகளின் அடியூற்றுத் தண்ணீரை பயன்படுத்திக் கொள்ளக் கூடாதா? ஐக்கிய மாகாணத்தில் "ட்யூப் வெல்ஸ்" தோண்டித் தோண்டி பலன் ஒன்றும் ஏற்படவில்லை என்று சொல்லி உத்திரப்பிரதேச சர்க்கார் லட்சக்கணக்கான ரூபாய், கோடிக்கணக்கான ரூபாய்களை பாழ்படுத்தி விட்டு இனியும் கொடுங்கள் இனியும் கொடுங்கள் என்று மத்திய சர்க்காரை அவர்கள் கேட்கும்போது, நல்ல திட்டங்களை வைத்துக்கொண்டிருக்கும் நீங்கள் காரியங்களை நன்கு செய்துகொண் டிருக்கும் நீங்கள் அதுபற்றி வேண்டிய புள்ளிவிவரங்கள் வைத்துக் கொண்டிருக்கும் நீங்கள், மத்திய சர்க்காரிடம் வேண்டிய பண உதவி கேட்க ஏன் கூச்சப்படவேண்டும், ஏன் தயக்கப்பட வேண்டும், ஏன் வெட்கப்பட வேண்டும் என்று நான் கேட்கிறேன். இந்த மாநிலத்தின் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அதை சரியான முறையில் பங்கீடு செய்வதற்கும், அதை வாங்கும் நேரத்தில், கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டியபடி அதை, பதுக்கல்காரர்களின் லாப வேட்டைக் காடாக்காமல் உணவுப் பண்டங்களை வாங்கும் மக்களுக்கு அவை நியாயமான முறையில் செல்வதற்கு ஏற்ற வழிவகைகள் செய்யவேண்டுமென்று அமைச்சரவையை நான் பணிவன்புடன் வேண்டிக் கொண்டு பற்றாக்குறையாக இருந்த இம்மாநிலத்தை ஓரளவு அதிலிருந்து நீக்கி நிலையை உயர்த்தி வைத்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் அறிக்கைக் கொடுக்கக் காரணம், இன்றையதினம் இம்மாநிலத்திலுள்ள உணவு நிலையைப் பார்த்து அவர்களே வருத்தப்படுவதுதான். அவர்களின் வருத்தத்தில் நானும் பங்கு கொள்கிறேன். அவர்கள், உணவுநிலையை சரிபடுத்த முடியவில்லையே என்று வெட்கப்படுகிறார்கள். அப்படி வெட்கப் படுவதிலும் "நான் பங்குகொள்கிறேன்" உணவு நிலை இன்னும். சரியாகவில்லையே என்று வேதனைப்படுகிறார்கள், அதிலும் நான் பங்குகொள்கிறேன் என்றும் கூறிக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

வேளாண்மை வருவாய் வரிமுறை சட்ட திருத்த முன்வடிவு

உரை : 20 **நாள் : 18.09.1958**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிற இந்த வரிமுறை அடிப்படை பிரச்சினையைப் பொறுத்த வரையிலே கட்சி பேதமில்லாமல், எல்லா கட்சியினரும் ஓரளவுக்கு மகிழ்ச்சியோடு வரவேற்கத்தக்க ஒரு நிலைமையிலே அது அமைந்திருக்கிறது. விவசாய வருமான வரி நம்முடைய நாட்டில் மட்டுமல்லாமல், முற்போக்கான வரி விதிக்கும் முறைகளை கையாளுகின்ற எந்த நாட்டிலும் அமுலில் இருந்துவருவதையும், அதனாலே எந்தவிதமான குந்தகமும் யாருக்கும் ஏற்படவில்லை என்பதையும் அனுபவம் நன்றாக தெரிவிக்கின்ற அளவுக்கு, நிலைமை ஏற்பட்டதால் நம்முடைய மாநில சர்க்காருக்கு இந்த அளவுக்கு தைரியத்தை இவ்வளவு காலம் கடந்து கொடுத்திருக்கிறது. இந்திய துணைக் கண்டத்தை எடுத்துக் கொண்டால், வேறு பல மாநிலங்களில் விவசாய வருமான வரி ஏற்கனவே விதிக்கப்பட்டு இப்பொழுது அந்த மாநிலங்களிலே இந்த வரி விதிப்பினால் ஏற்பட்டிருக்கின்ற சிக்கல்களை எப்படி நீக்குவது என்ற கட்டத்திலே அவர்கள் இருந்து கொண்டு வருகிறார்கள். என்றாலும், காலம் கடந்தபோதிலும், நல்ல நோக்கத்தோடு ஒரு முற்போக்கான சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற நிர்ப்பந்தத்திற்கு ஆளும் கட்சி ஆளாக்கப்பட்டு வருவது நாட்டில் முற்போக்கு கருத்துக்கள் பரவி வருகின்றன என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு என்ற முறையிலே நான் கவனித்துக் கூறுகிறேன். இந்தச் சட்டத்தினால் சமதர்மம் வளருமா என்ற பிரச்சினையைப்பற்றியும், இந்த வரிவிதிப்பு முறையினால் விவசாயம் வளர்ச்சி அடையுமா என்ற பிரச்சினையைப் பற்றியும் பேசப்பட்டது. அப்படி பேசப்பட்டது மட்டுமல்ல, தலையிலே மேய்கின்ற பேனி

லிருந்து தயாபரன் வரையில் இதற்கும் அதற்கும் உள்ள சொந்தங்கள், தொடர்புகள் பற்றி விரிவாகப் பேசப்பட்டது. இப்படியெல்லாம் பேசப்பட்டதற்குக் காரணம் இந்த மசோதா வந்தாலும், நாம் எண்ணிக் கொண்டிருக்கின்ற பல கருத்துக்கள் சரிவர நிறைவேற்றப்பட முடியாது என்ற அதிருப்தி அங்கத்தினர் பலருக்கும் இருப்பதுதான். இதனாலே அது நேரிடுமா, அதனாலே இது நேரிடுமா என்று தொடர்புபடுத்தி பேசியிருக்கிறார்கள். அப்படி தொடர்பு படுத்திப் பேசுவதற்கு அவசியம் இல்லாமலே, தெளிவான முறையிலே இந்த வரி விதிப்பிற்கான காரணத்தை வரியைக் கொண்டுவருபவர்கள் விளக்கி இருந்தால் மெத்த உபயோககரமாக இருந்திருக்கும். ஆனால், அவர்கள் வரி விதிப்பு முறை "Statement of Objects and Reasons"-ல் கொடுத்திருக்கும் கொள்கை விளக்கத்தில் சமதர்மம் ஏற்படுத்த வேண்டுமென்ற தங்களுடைய நோக்கத்தையோ அல்லது நிலத்திலே பிரபுத்துவம் இருப்பதை தவிர்க்கவேண்டிய அவசியத்தையோ வற்புறுத்தாமல், ''மத்திய சர்க்கார் எங்களுக்கு தர இருந்த வரிப்பணத்தில் கொஞ்சம் குறைவுபட்டுவிட்டது. நாங்கள் மேற்கொண்டு இங்கே வரிபோடுதற்கில்லை. இடையிலே எங்களுக்கு கொஞ்சம் பணம் வேண்டும். இந்தப் பணத்தை எந்த இடத்தில் சேகரிப்பது என்று பார்த்தோம். இந்த இடம் சரியானது என்று தோன்றியது'' என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகையினால் இந்த மசோதா மிக முற்போக்கான கருத்துக்களைக் கொண்டு வரப்பட்டது அல்ல என்பதும், சர்க்காரும், ஆளும் கட்சியும் கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது என்றபொழுதில், வரிப் பணம் தேவைப்படுகிறது என்றபொழுதில், இதை அவர்கள் தயாரித்திருக்கிறார்கள் என்பதும் தெளிவாகிறது. அதனால்தான் என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் எம். கலியாணசுந்தரம் அவர்கள் இதை ஒரு முற்போக்கான அம்சம் என்று யாரும் கருதுவதற்கில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் எனக்கு இருக்கிற மிக முக்கியமான மகிழ்ச்சி, எந்தத் துறையிலே ஈடுபட்டவர்களும், எந்தக் கட்சியில் உள்ளவர்களும், உள்ளத்திலே அவர்களுக்கு குமுறல் இருந்தாலும்கூட, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே வருமானத்திற்கு வரி போட்டுத்தான் ஆக வேண்டும் என்ற அடிப்படை கருத்தையும், அது விவசாய வருமானமாக இருந்தாலும், அதற்கும் வரி போட்டுத்தான் ஆகவேண்டுமென்ற கொள்கையையும் ஏற்றுக்கொள்ளத்தக்க அளவுக்கு நாட்டிலே நல்ல நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதுதான்

அதிலே சில இடங்களில் விதிவிலக்கு அளிக்கப்படுவதை வன்மையாகக் கண்டித்து, எதற்காக விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக கோவில் நிலங்களுக்கும், மடாதிபதிகளின் நிலங்களுக்கும் என்று பல அங்கத்தினர்கள் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். அதிலும் என்னுடைய மகிழ்ச்சிக்கும், பூரிப்புக்கும், பெருமைக்கும் உரிய வகையில் காங்கிரஸ் அங்கத்தினர்களே பலர் இதை சுட்டிக்காட்டி பேசியபிறகு, மற்றொரு காங்கிரஸ் அங்கத்தினர் இங்கே பேசுகின்ற நேரத்திலே "நாஸ்திகத்தை தடுப்பதற்காகத்தான் தர்ம ஸ்தாபனங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள் தலையில் கை வைப்பதா" என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன வாசகம், "இவர்கள் தலையிலா கைவைப்பது" என்று சொன்னதிலிருந்து, வேறு யார் தலையிலோ கை வைத்ததாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. எந்த வரிவிதிப்பதிலும் யார் தலையிலும் கை வைக்கக்கூடாது, பணப்பெட்டியில்தான் கை வைக்கவேண்டும். தர்ம ஸ்தாபனங்கள் தலையிலே கைவைப்பது அல்ல. பெரும்பாலான மடாதிபதிகளின் தலையில் கைவைத்தால், ஈறும் பேனும்தான் அந்த இடத்தில் இருப்பதைக் காணமுடியும். அவர்கள் தலையிலே கைவைக்கச் சொல்லவில்லை. அவர்களால்தான் நாஸ்திகம் வளராமல் தடுக்க முடியும் என்ற காரணத்தை கனம் அங்கத்தினர் கூறினார்கள். தெளிவாக இந்த மன்றத்திலே அவர்கள்தான் காரணம். ஆஸ்திகத்தில் ஏற்பட்டிருக்கின்ற அலங்கோலங்கள்தான் நாட்டில் நாஸ்திகத்தைப் பரப்புவதற்குக் காரணம் என்று உண்மையான ஆஸ்திகர்கள் நன்றாக உணர்வார்கள். அவர்களுக்கு விதி விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். நாஸ்திகத்தை தடுக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்திற்காக கேட்டாலும், ஆஸ்திகத்தை அவர்கள் வளர்த்தார்கள் என்ற தவறான நம்பிக்கையோடு கேட்டிருக்கிறார்கள். அந்த விதிவிலக்கு தேவையில்லை என்று நான் கருதுகிறேன். அவர்களே நாட்டை ஆளுகின்ற சர்க்காருக்கு இந்த முறையிலே வரி செலுத்து வதற்கு தாங்களாகவே மனமுவந்து முன்வரவேண்டும்.

விவசாயத்திற்கான வருமான வரியைப் போடுகின்ற நேரத்திலே, நாங்கள் ஆளும் கட்சியினரை ஒன்று வேண்டிக்கொள்ளுகின்றோம். வருமானத்திற்கு வரி போடுவதை யாரும் தடுக்கமாட்டார்கள். குறை சொல்ல மாட்டார்கள். ஆனால் போடுகின்ற வரி இருக்கிற வருமானத்தை அதிகப்படுத்துவதற்கு தூண்டுதலாக இருக்கவேண்டுமே தவிர, கிடைக்கக்கூடிய வருமானத்தைக் குறைப்பதற்கு அது பயன்

படக்கூடாது. அந்த அச்சத்திலே சில அங்கத்தினர்கள் பேசினார்கள். விவசாயிகளுக்கு ஏற்கனவே இருக்கிற வருமானம் சரியான முறையில் இல்லை, அவர்களிடத்திலே பல குறைகள் இருப்பதினாலே, கிடைக்கக்கூடிய வருமானம் வரவர குறைந்து கொண்டு வருகிறது. விவசாயத்திலே உபயோகப்படுத்துகின்ற பொருள்களின் விலை ஏறியிருக்கிற காரணத்தினாலே, அவர்கள் அப் பொருள்களை வாங்க முடியாமல் தவிக்கிறார்கள் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நான் பெரிய நிலச்சுவான்தாரும் அல்ல, நிலச்சுவான்தார்களை நண்பர்களாக படைத்தவனும் அல்ல. அவர்கள் அப்படிச் சொல்வதில் உண்மை இருக்கிறதா, இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. ஒன்றை நான் உணரமுடிகிறது. வியாபாரத்தில் திடீரென்று பணம் சேர்ப்பதைப் போல், பெரிய தொழிற்சாலைகள் வைத்து பணம் சேர்ப்பதைப் போல், விவசாயத்திலே சேர்க்க முடியவில்லை. ஆகையினாலே, இந்த வரியைப் போடுகின்ற நேரத்திலே, விவசாய வருமான வரியினால் விவசாயத்திற்குக் குந்தகம் விளையாமல் இருக்கிறதா என்று - இப்பொழுது அல்ல, வரி அமுலுக்கு வருகின்ற நேரத்திலே- மிக உன்னிப்பாக ஆட்சியாளர் கவனித்துப் பார்க்க வேண்டும் என்று பணிவன்போடு வேண்டிக்கொள்ளுகிறேன். நம்முடைய மாநிலத்திலும் சரி, இந்த மாநிலம் இணைக்கப் பட்டிருக்கும் இந்திய துணைக்கண்டத்திலும் சரி, இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு முக்கியமான காரணம் விவசாயத் துறையில் நாம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறாததுதான் என்று பொருளாதார அறிஞர்கள் மட்டுமல்ல, அரசியல் துறையிலுள்ள அறிஞர்களும், எல்லோரும் சேர்ந்து சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகையினாலே, விவசாயத்திற்கு மற்றொரு நெருக்கடி ஏற்படத்தக்க வகையிலும், விவசாய வளர்ச்சியை கெடுக்கக்கூடிய தன்மையிலும், வரி முறை இருக்குமானால் அதைக் கூர்ந்து கவனித்து, அது ஏற்படுவதற் கான காரணங்களை ஆராய்ந்து அதிலுள்ள குற்றம்குறைகளை களைவதற்குச் சர்க்கார் எப்பொழுதும் தயாராக இருக்கவேண்டும். மற்றொரு கனம் அங்கத்தினர் இதைப்பற்றிக் குறிப்பிடுகின்ற நேரத்தில் சட்டங்கள் நல்ல நோக்கத்தோடு போடப்பட்டாலும், அவைகளை நிறைவேற்றுவதற்காக இயற்றப்படும் விதிமுறைகளைப் பொறுத்தும், விதிமுறைகளை யார் அமுல் நடத்துகிறார்களோ அவர்களை பொறுத்தும், சட்டங்களின் நன்மை தீமைகள் இருக்கின்றன என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டினார்கள். விதிமுறைகளைப்

போடுகின்ற நேரத்தில் இவ்வளவு தெளிவாக அவைகளைப் பற்றி விவாதிப்பதற்கு சட்டமன்றத்திலே வழிவகை இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, சட்டத்தின் மேலெழுந்தவாரியான நோக்கத்தை ஆதரிக்கின்ற நாங்கள் எல்லாம், சட்டத்தின் விதிமுறைகளை கையாளுகின்ற நேரத்திலே சட்டம் தவறான வழியில் பயன்படுத்தப் படாதபடி, இந்தச் சட்டத்தினால் விவசாய வளர்ச்சிக்கு குந்தகம் வராமல் பார்த்துக்கொள்ளுவதற்கு ஏற்ற முறையிலே, விதி முறைகளை அமைக்க வேண்டுமென்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மற்றொன்று, விதிமுறைகளை புகுத்தும் நேரத்தில் வக்கீல்களின் வேட்டைக் காடுகளாக அவைகள் அமைந்துவிடக்கூடாது என்று ஒரு வழக்கறிஞர் தியாக உணர்ச்சியோடு எடுத்துச் சொன்னார்கள். அதை மிக்க ரசித்தோம். என்றாலும்கூட, தெளிவான விதிமுறைகளை அமைப்பதோடு மாத்திரமல்ல, அவைகளை நிறைவேற்றுவதற்காக இருக்கின்ற அதிகாரிகளினால் நடத்தப்படுகின்ற முறைகள் சரியானவை அல்ல என்பதையும் சில அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டினார்கள். ஒருபுறத்தில் இந்தச் செலவினங்களையெல்லாம் குறிப்பிட்டுவிட்டு, மற்றொரு புறத்தில் பார்த்தால், இதற்கான கணக்குகளை எழுதி இந்த விவசாயப் பெருங்குடி மக்கள் ஒப்படைக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, இந்த வரி முறையினால் அறிவு தெளிவு பெற்றிருந்தாலும்கூட, சட்டத்திற்கேற்ற கணக்கு எழுதி அறியாத இந்த விவசாயப் பெருங்குடி மக்கள் மீது- நல்ல சட்டமாக இருந்தாலும் - சரியான முறையில் பயன்படுத்தப்படாமல் - தவறான முறையில் பயன்படுத்தத் தக்க அளவில் - இன்றைய தினம் அதிகாரிகள் கையில் ஒப்படைக்கப்படுகிறது. ஆக, இந்த இரண்டு பேரும் சந்திக்கின்ற நேரத்தில் - கிடைக்கின்ற வருமானம் 70 லட்சம் என்று திட்டமிட்டிருந்தாலும் - கிடைப்பது 60 லட்சமாகவோ அல்லது 50 லட்சமாகவோ இருந்தாலும் பரவாயில்லை - கிடைக்கின்ற பணத்தோடு நாட்டு மக்களுடைய சாபமும் இந்த அமைச்சரவைக்கு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பெருத்த நெருக்கடிகளை நீக்குவதற்கு இன்றைய தினம் இந்த சர்க்கார் முன் வருவதாகத் தெரியவில்லை. விலை வாசிகளெல்லாம் ஏறிக்கொண்டே போனால், அதைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த மாநில சர்க்காருக்கு அதிகாரம் இல்லை; உரத்தின் விலை ஏறிக்கொண்டே போனால், அதைக்

கட்டுப்படுத்துவதற்கு இந்த மாநில சர்க்காருக்கு அதிகாரம் இல்லை. உணவுப் பொருள்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போவதைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த மாநில சர்க்காருக்கு அதிகாரம் இல்லை. இவைகளையெல்லாம் நான் சொல்லக் காரணம், இந்த மாநில சர்க்காருக்கும், மத்திய சர்க்காருக்கும் இடையே இருக்கின்ற அதிகாரப் பங்கீடு முறையைப் பற்றி குறைபட்டுப் பேசவேண்டு மென்பதற்காக வல்ல. இவ்வாறு நம் நாட்டு மக்களை பாதிக்கக்கூடிய அத்தனை பிரச்சினைகளிலும், இந்த மாநில சர்க்கார் ஒரு சிறு விரலைக் கூட அசைக்க முடியவில்லை. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை செய்வதற்கோ அல்லது அவர்களைத் திருப்தி செய்வதற்கோ வசதியில்லாத மாநில சர்க்கார், வரி மேல் வரி போட்டுக் கொண்டே யிருப்பார்களானால், உண்மையாகவே இவர்கள் விவசாயப் பெருங்குடி மக்களுடைய சாபத்திற்கு ஆளாவார்கள் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் நியாயமானது - நல்லது - என்றும், இதனால் யார் யார் பாதிக்கப்படுவார்கள். யார் யார் பாதிக்கபட மாட்டார்கள் என்பவைகளைப் பற்றியெல்லாம் எதிர் கட்சிகள் நாட்டுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று மதிப்பிற்குரிய அங்கத்தினர் ஒருவர் எடுத்துச் சொன்னதை நான் மெத்த வரவேற்கிறேன். ஆனால், இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருகின்ற நேரத்தில் மிக ஜாக்கிரதையாகக் கொண்டு வந்தால்தான், போடப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டம் சரியான முறையில் நிறைவேறுவதற்கு நல்ல வழி வகைகள் கிடைக்கும்.

பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டுக் காட்டிய மற்றொரு பிரச்சினையை நானும் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது, சர்க்காருக்கு கொஞ்சம் பணம் தேவையாக இருக்கிறது என்பதற்காக என்று சுட்டிக்காட்டிய நேரத்தில், "பணம் வேண்டாமா?" என்று ஒரு அங்கத்தினரும், "பணம் இல்லாமல் எப்படி நடக்கும்?" என்று ஒரு அங்கத்தினரும் வருத்தத்தோடு பேசிக் கொண்டார்கள். பணம் இல்லாமல் - வரி போடாமல் - சர்க்காரை நடத்த வேண்டும் என்றோ, திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்றோ யாரும் கூற மாட்டார்கள்; ஆனால் போடப்படுவது எந்த நேரத்தில், போடப்படுவது யார் மீது, போடப் படுவது எந்த அளவு, போடப்படுவது எந்த நோக்கத்தோடு, போடப் படுவது எந்த வகையில் வசூலிப்பதற்காக, போடப்படுவது எந்தக்

காரணத்திற்காக என்பவைகளைப் பொறுத்துத்தான் அதற்கு ஆதரவோ அல்லது எதிர்ப்போ இருக்குமென்பதைத் தவிர, நாட்டில் வரி போடாமல் நாங்கள் ஆளத் தயாராயிருக்கிறோம் என்று சொல்லக் கூடிய எந்த ஒரு கட்சியும் இன்றையதினம் இல்லை.

வரி போட்டு பணத்தை வாங்குவதற்குப் பல காரணங்களைக் கூறுகிற நேரத்தில், ஒன்று இதனாலே நிலத்திற்கு உச்ச வரம்பு தானாகவே ஏற்பட்டுவிடும் என்று ஒருவர் சொன்னார். ஒரு பழமொழியை நான் கவனப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன் - கனம் சபாநாயகர் அவர்கள் நான் எடுத்துக் கூறுவதைத் தவறுதலாகக் கருத மாட்டார்கள் என்று நினைக்கின்றேன்- ''கொக்கின் தலையிலே வெண்ணையை வைத்துப் பிடிப்பது'' என்று சொல்வார்கள். நிலப் பிரபுக்களிடத்திலுள்ள நிலத்தின் அளவை எப்படிக் குறைப்பது என்றால் - கொக்கின் தலையிலே வெண்ணையை வைத்தால், அது உருகும், உருகிக் கண்ணில் பட்டவுடன் கண்ணை மூடிக்கொள்ளும், அப்போது கழுத்தைப் பிடித்து கொக்கைப் பிடித்துக்கொள்ளலாம் என்று சொல்வதைப் போல - நிலத்திற்கு வருமான வரி போட்டால், நிலப் பிரபுக்கள், அரசாங்கத்திற்கு அதிகமான வரி கொடுக்க வேண்டியிருக்கிறதே என்று எண்ணி, - எங்களுக்கு வரியும் வேண்டாம், நிலமும் வேண்டாம் என்று - தாங்களாகவே கூறி விடுவார்கள் என்று - கொக்கு கண்ணை மூடிக்கொள்ளும், அப்போது பிடித்துக் கொள்ளலாம் என்பதைப் போல - இவர்கள் நினைக்கிறார்கள். நிலத்திற்கு ஏன் உச்ச வரம்பு கட்டவில்லையென்று கேட்டால் - இந்த வரியை மட்டுமல்ல - இவர்களுக்கு மட்டும் சொந்தமில்லாத, எல்லாக் கட்சிகளுக்கும் சொந்தமான, கட்சிகளுக்கு அப்பாற்பட்ட வினோபா அவர்கள் பெற்றிருக்கும் வெற்றியைக் காரணமாகக் காட்டி, நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவது தானாக ஏற்பட்டுவிடும் என்று சொல்கிறார்கள். அதனால் நிலத்திற்கு உச்ச வரம்பு ஏற்படுமா, ஏற்படாதா என்பது ஒருபுறம் இருக்க, உச்ச வரம்பு கட்டுவதிலே உங்களுக்குள்ள சங்கடங்கள் என்ன? - உச்ச வரம்பு கட்டுவதை எந்தக் கட்சி தடுக்கிறது? - உச்ச வரம்பு கட்டுவதினால் உங்களுக்கு என்ன நஷ்டம் ஏற்படும்? - உச்ச வரம்பு கட்டப் போகிறோம் என்று தேர்தல் காலத்தில் நீங்கள் கொடுத்த வாக்குறுதி என்னவாயிற்று?- இதற்கெல்லாம் சமாதானம் சொல்லாமல், உச்ச வரம்பு தானாக ஏற்பட்டுவிடும் என்று சொல்வது உண்மையிலேயே விந்தையாக இருக்கிறது.

நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில், ஒரு மாணவன் அதிகமாக சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான். அவனிடம் சென்று "ஏன் அதிகமாக சிகரெட் பிடிக்கிறாய்?" என்று கேட்கின்ற நேரத்தில், அவன் "பர்னிங் தி பிரிட்டிஷ் குட்ஸ்" என்று கூறி, இதன் மூலம் வெள்ளைக்காரர்களுடைய பொருள்களை கொளுத்துவதாகவும் இருக்கும், அதே நேரத்தில் சுதந்திரத்திற்காகத் தியாகம் செய்ததாகவும் இருக்கும் என்று சொன்னான். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நிலத்தைத் தாங்களாகப் பிரித்து விடுவார்கள் என்று எண்ணியோ அல்லது பிரிப்பதற்கு மனமில்லை என்பதாலோ அல்லது உச்ச வரம்பு கட்டுவதாக இறங்கினால், கட்சியிலிருந்து சிலர் விலகி விடுவார்கள் என்று அச்சப்பட்டோ, அல்லது தேர்தல் காலத்தில் பணம் கொடுக்கக்கூடியவர்கள் சரிவரக் கொடுக்க முற்பட மாட்டார்கள் என்று கருதியோ, கொண்டுவரவில்லையே தவிர யாரும் - முற்போக்குக் கருத்துக்கள் கொண்ட யாரும் - தடுப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, இந்த வரியை சாக்காகக் காட்டி உச்ச வரம்பு கட்டுவதைத் தடுக்கக் கூடாது - நிறுத்தக் கூடாது- என்பதை பணிவன்போடு எடுத்துச் சொல்லி, இந்தச்சட்டத்தின் அடிப்படை நோக்கத்தை வரவேற்று, அந்த நோக்கம் கெட்டுவிடாது பார்த்துக்கொள்ள, இதில் தெளிவுபடுத்தப்படாமல் இருக்கும் சில விதிமுறைகளைத் தெளிவுபடுத்தி, இதை நடத்துகின்றவர்கள் நல்ல விதமாக நடத்தி - 70 லட்சம் அல்ல; 7 கோடி பெறுவதானாலும் - மக்கள் கொடுக்கின்ற வரிப்பணம், அவர்களுக்கே நல்ல முறையில் திருப்பிச் செலவு செய்வதற்கு நல்ல விதமாக செலவினங்களை ஒழுங்குபடுத்திச் செய்தால் அதற்கு யாரும் குறுக்கே நிற்கமாட்டார்கள் என்று எடுத்துச் சொல்லி இந்த அளவில் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

ஊராட்சி மன்றச் சட்ட முன்வடிவு

உரை : 21 **நாள் : 24.09.1958**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கான மசோதா பற்றி இன்றைய தினம் மூன்றாவது நாளாக பொது விவாதம் நடத்தி அதற்குப் பிறகு இன்னும் நான்கு நாட்கள் மசோதாவிலுள்ள ஷரத்துக்களைப் பற்றிய விவாதம் இந்த சபை நடத்த இருக்கிறது. கடந்த மூன்று நாட்களாக நடைபெற்றுக்கொண்டு வந்தபோது விவாதமும், இனி நடைபெற ஏற்பாடாகியிருக்கும் நான்கு நாட்கள் மசோதாவிலேயுள்ள ஷரத்துக் களைப்பற்றிய விவாதமும் ஓரளவுக்கு தேவையில்லையோ என்று நாம் ஐயப்படத்தக்க அளவுக்கு, சபைத்தலைவர் கனம் நிதி அமைச்சர் அவர்கள், இப்படிப்பட்ட மசோதாக்கள் பொறுக்குக் கமிட்டிக்கு விடப்பட்ட பிறகு, பொறுக்குக் கமிட்டியிலே எல்லாக்கட்சி யினுடைய உறுப்பினர்களும் அமர்ந்து இருந்து, ஏகோபித்த முடிவுக்கு வந்த ஒரு விஷயத்தை மறுபடியும் மறுபடியும் நுணுக்கமாக ஆராய்வது தேவை தானா என்ற ஒரு புதிய பிரச்சினையை இங்கே கிளப்பியிருக் கிறார்கள்.

பொறுக்குக் கமிட்டியிலே நிறைவேற்றப்பட்டவைகள், அந்தந்த கட்சியினுடைய தலைவர்களும் உறுப்பினர்களும் அந்தக் கமிட்டியிலே இடம் பெற்றிருந்தார்கள் என்ற காரணத்தினாலேயே அவைகளில் உள்ள சாதக பாதகங்களையோ, நுணுக்கங்களையோ நாம் விவாதிப்பது முறையல்ல என்று நிதி அமைச்சர் அவர்கள் கருதுவாரானால், ஐந்து நாட்கள், ஆறு நாட்கள் அதற்காக இந்தச் சபையினுடைய காலத்தை ஒதுக்குவதற்குப் பதிலாக பொறுக்குக் கமிட்டியிலே இடம் பெற்ற உறுப்பினர்களைக் கொண்டு, சபையிலே உள்ள மற்றவர்களுக் கெல்லாம், நாங்கள் இன்னஇன்ன காரணத்தாலே, இன்னஇன்ன விதிமுறைகளை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று விளக்கம் அளித்து, மற்றவர்கள் கருத்து ஏதும் கூறாமல் செய்திருக்கலாம்.

ஆனால், ஜனநாயக சம்பிரதாயத்தில், ஆளும் கட்சியினர் நிறைவேற்ற வேண்டுமென்று கருதுகிற சட்டத்தை, மசோதாவாக அவர்கள் முதலில் தயாரிக்கிறார்கள். அப்படித் தயாரிக்கப்பட்ட மசோதாவில், நான்கு சுவற்றுக்கு இடையே என்ன செய்யலாம் என்ற முறையில் தயாரிக்கப்பட்ட மசோதாவில், என்ன திருத்தங்களைப் புகுத்தலாம் என்று பல கட்சியினுடைய தலைவர்களும், தனிப்பட்ட உறுப்பினர்களும் பொறுக்குக் கமிட்டியிலே இடம் பெற்று அவர்கள் அதிலே தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்றார்கள். தெரிவிக்கின்ற கருத்துக்கள் அத்தனையும் அப்படியே ஏற்றுக் கொள்ளப்படும் என்று பொருள் அல்ல; செய்யப்பட்ட முடிவுகள் அத்தனையும் எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ள கருத்துக்கள் என்றும் பொருள் அல்ல. பல கருத்துக்கள் விவாத வடிவிலிருந்து மசோதாவாக சபைக்கு வருகிறது. அப்படி வருகின்ற நேரத்தில், பல நல்ல புதிய கருத்துக்களும், பல விவாதத்துக்குரிய நல்ல பிரச்சினைகளும் எடுத்துக் காட்டப்படும் என்ற நம்பிக்கையிலேதான் இந்த மன்றத்திலே மூன்று நாட்களாக பொது விவாதமும், மற்ற நான்கு நாட்கள் இந்த மசோதாவிலேயுள்ள நுணுக்கங்களைப்பற்றியும் நாம் விவாதிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆகையால், ‘‘இது என்னுடைய மசோதா அல்ல; சர்க்காருடைய மசோதாவும் அல்ல; எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து செய்த மசோதா; ஆகையால், அவர்கள் எல்லாம் சொன்ன கருத்துக்களை இங்கே நீங்கள் நுணுக்கமான முறையில் மறுத்துப் பேசுவது முறையல்ல’’ என்று நிதி அமைச்சர் சொல்வது விவாதத்திலிருந்து சர்க்கார்த் தரப்பினர் தப்பித்துக்கொள்ள விரும்புகிறார்கள் - என்றுதான் எனக்கு ஐயப்பாடு தோன்றுகிறது.

‘‘கட்சியினுடைய கண்ணோட்டத்திலே இதைக் கவனிக்க வேண்டாம்’’ என்று சொல்கிற நேரத்தில் நான் ஒன்றை இந்த மன்றத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நல்ல வேளைக்கோ அல்லது கெட்ட வேளைக்கோ இன்றையதினம் ஆளும் கட்சியினர் நிர்வாகத்திலே இருக்கும் நெளிவு சுளிவுகளைப்பற்றி எடுத்துச் சொல்ல திறமை பெற்றிருக்கிறார்கள், அனுபவம் காரணமாக. ஆனால், எதிர்க்கட்சியிலேயுள்ள யாரும் நிர்வாகத்திலே முன்னாலே இருந்தவர்கள் அல்ல; அவர்கள் துவக்கியிருக்கும் கட்சி எதுவும் நிர்வாக அலுவலிலே இதுவரை ஈடுபடவில்லையாகையால்,

தத்துவரீதியாக அவர்கள் பேசினால், நடைமுறையிலே இது இப்படி இப்படி இருக்கிறது என்று சிக்கல்களை எடுத்துக்காட்டுவதன் மூலம், நாட்டு மக்களுக்கு ஏற்றதாக அந்தத் தத்துவம் அமைந்திருக்கிறதா என்று பார்க்கின்ற எங்களுடைய உரிமை பறிக்கப்படுவது அவ்வளவு முறையாகாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

செய்யப்படுகிற எந்தத் திட்டத்தையும், புகுத்தப்படும் எந்த மசோதாவையும், அல்லது இதைவிடக் கொஞ்சம் விரிவாகச் சொல்லவேண்டுமானால் எடுத்துக்கொள்ளுகின்ற எந்த வழக்கையும் மிகச் சாமர்த்தியமாக வாதாடும் வழக்கறிஞர்கள் நாட்டிலே இருக்கத் தான் செய்வார்கள். அதேமாதிரிதான், பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது பஞ்சாயத்து அங்கத்தினர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று நிதி அமைச்சர் அவர்கள் எவ்வளவு காரசாரமாக எவ்வளவு விளக்கமாக காரணங்களைக் காட்டினாரோ அதிலே ஒரு இம்மியும் குறையாத நிலைமையில், தலைவரை மக்கள்தான் தேர்ந்தெடுக்கவேண்டும். ஏனென்றால் மக்களுக்கும் தலைவருக்கும் தொடர்பு இருந்தால்தான் நல்லபடி ஜனநாயகம் நடக்கும் என்று ஆளும் கட்சினரே முன்னாலே வாதாடியிருக்கிறார்கள்.

இன்று அதே முறையில், ‘சபைக்குப் பொறுப்பு இருக்க வேண்டுமானால் சபையிலே, உள்ளவர்கள்தான் தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும்; அப்படித்தான் நாங்களெல்லாம் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறோம்’ என்று வாதாடுகிற நம்முடைய நிதி அமைச்சரிடம், சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள் எப்படி முழு அதிகாரப் பொறுப்பையும், நிர்வாகப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களோ, அதேபோல் நல்ல முறையிலே பஞ்சாயத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கு ஏன் நிர்வாகப் பொறுப்பைத் தரக்கூடாதென்று கேட்டால், அவர் உடனே வேறொரு கட்டைப் பிரித்து, “நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்துவதற்குப் பயிற்சி வேண்டும், பழக்கம் வேண்டும், அதிலே ஊறிப்போனவர் களால்தான் முடியும், ஆகையால் அவர்களிடம் ஒப்படைக்கிறோம்” என்று சொல்கிறார்.

மறுபடியும், அவர் மற்றொரு இடத்தில் பேசும்போது, “இந்த நிர்வாகப் பழக்கம் பெறுவது கம்பசூத்திரம் அல்ல; அதை யாரும் பெறலாம்; நான் கூட சாதாரண வழக்கறிஞனாகத்தான் இருந்தேன்; என்னிடத்தில் இவ்வளவு நிர்வாகத் திறமை இருக்கும் என்று எனக்கே

தெரியாது; எனக்கு வாய்ப்புக் கிடைத்த பிறகுதான் இவ்வளவு நிர்வாகத் திறமை இருக்கிறது என்று தெரிந்தது'' என்று ஒன்றுக் கொன்று முரண்பட்ட கருத்துக்களைச் சொல்லி சாமர்த்தியமாக வாதாடியிருக்கிறார்.

அவர்கள் எடுத்துக்கொண்ட அந்த முறையிலே வாதாடப் பார்க்காமல், எதிக்கட்சியிலே உள்ளவர்களாகிய நாங்கள், ஆளும் கட்சியினரால் கொண்டுவரப்பட்ட மசோதாவைக் கவனிக்கின்ற நேரத்தில், இந்த மசோதா நடைமுறையில் எப்படி இருக்கும் என்பதைக் கவனிப்பதைவிட, நாட்டு மக்கள் உங்களிடமிருந்து எதை எதிர்பார்க்கிறார்கள். நீங்கள் எதைத் தருகிறீர்கள் என்பதைப் பார்க்க விரும்புகிறேன்.

நாட்டு மக்களாகிய, கிராமத்து மக்களுக்கு இதுவரையிலே இருந்து வந்த குறை சீராக்கப்பட்டு, அவர்களுக்கு மேலும் மேலும் அதிகாரங்களும் அந்த அதிகாரங்களை நிர்வகிக்கக்கூடிய வசதிகளும் தரப்படவேண்டுமென்று பெரும் கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறார் கள். அதனால்தான், இந்த மன்றத்தில் பேசிய பல அங்கத்தினர்கள், வெள்ளைக்காரன் காலத்திலே இந்தப் பஞ்சாயத்துக்கள் எல்லாம் கிராமத்திலே அழிக்கப்பட்டு, தேசிய ஆர்வமே இல்லாத முறையில் வைக்கப்பட்டிருந்தார்கள் என்றும், இன்னும் எங்களுடைய பக்கத்திலேயுள்ள நண்பர்களிலே சிலர், இந்த ஊராட்சி மன்றங்கள் பழந்தமிழர் காலத்திலேயே இருந்தன என்று பாத்தியதையும் கொண்டாடினார்கள். இத்தனையும் எடுத்துக்கொண்டு பேசியதற்கு முக்கிய காரணம், நாட்டிலே இன்றைய தினம் கிராமப் புறத்திலே மகத்தான விழிப்புணர்ச்சி ஏற்பட்டு, கிராமத்திலேயுள்ள மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ள வேண்டும் என்ற நல்ல கருத்தினாலே, தாங்கள் யாரோலோ ஆளப்பட்டால் தங்களுடைய சுகதுக்கங்களைக் கவனிப்பதில்லை என்ற மனக்குறை மிக அதிகமான அளவில் பெற்றிருக்கிறார்கள் என்பதனால்தான்.

ஆகையால், இந்த ஆட்சியாளர்கள், கிராம ராஜ்யம் என்று அவர்கள் சொன்னாலும், ராம ராஜ்யம் என்று அவர்கள் சொன்னாலும், மற்றொரு கனம் அங்கத்தினர் நேற்றைய தினம் சொன்னது போல், ராம ராஜ்யமும் காம ராஜ்யமும் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து இணைத்து இருக்கிறார்கள் என்று சொன்னாலும், அப்படிப்பட்ட ராஜ்யத்தின் மூலமாக அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள், நீங்கள்

என்ன தருகிறீர்கள் இந்த மசோதாவின் மூலமாக என்பதைத்தான் ஆராய்ந்து பார்க்க வேண்டுமேத்தவிர........

திரு. எம். ஆர். கந்தசாமி முதலியார் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார், கிராம ராஜ்யத்தையும் ராம ராஜ்யத்தையும் ஒன்றாகச் சேர்த்திருப்பதாகத்தான் நான் நேற்று குறிப்பிட்டேன்.

திரு. சபாநாயகர் : வித்தியாசம் ஒன்றும் இல்லையே; இரண்டும் ஒன்றாகத்தான் இருக்கிறது.

திரு. சி. என். அண்ணாதுரை : நம்முடைய கனம் அங்கத்தினர் அவர்கள் திருத்துவதற்கு என் நன்றி. காம ராஜ்யத்திலே அவர்கள் போய்விட்டாரோ என்று நான் பயப்பட்டேன். (சிரிப்பு).

அதைப்போலவே நிதி அமைச்சர் அவர்கள் இப்படியெல்லாம் நுணுக்கமாக விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லி, இப்படியெல்லாம் பேசுவதால் நிர்வாகம் ஸ்தம்பித்துவிடும் என்ற பயத்தையும் காட்டியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. இப்படியெல்லாம் கவனத்தை வேறுபுறம் திருப்பிவிட்டுவிட்டால் சட்டப்படி, அதற்கு தரவேண்டிய சரியான ஊட்டம் கொடுக்கப்படாமல் போகும் என்று சொல்கிறார்கள். அவர்கள் இப்படியெல்லாம் அச்சப்படாமல் இருப்பதற்காக நான் என் தரப்பிலிருந்து சொல்லிக் கொள்வது என்ன வென்றால் - இந்த மசோதாவின் மூலமாக அவர்கள் செய்திருக்கும் படியான நல்ல காரியத்தை வரவேற்கிறோம். அதேசமயத்தில் அதில் உள்ள குற்றங்குறைகளை நாங்கள் எடுத்துச் சொல்கிற காரணத்தினால் அந்த மசோதாவில் அடக்கியுள்ள சிறப்புகளை மறந்துவிட்டோம் என்று அர்த்தம் இல்லை. அப்படி மசோதாவில் உள்ள குறைகளை ஆளும் கட்சியினர் மறந்துவிடவில்லையென்றாலும், அந்த மசோதாவின் சிறப்புக்களையே அப்படியும் இப்படியுமாக எடுத்துப் பேசிக்கொண்டிருக்கிறார்களோ எப்படி இதன் குற்றங்குறைகளை நாங்கள் எடுத்துச் சொல்லும்போது இதன் சிறப்புக்களை மறந்து விட்டோம் என்று பொருள் இல்லை. நான் முன்பே சொன்னபடி கிராமத்து மக்கள் எதை எதிர்பார்க்கிறார்கள் என்று நாம் ஆராய்ந்து பார்க்கிற நேரத்தில் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ள வேண்டுமென்று அவர்கள் வேண்டிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான நிர்வாக அமைப்பு வகுக்கப்படுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கிராமத்திலுள்ள நிர்வாக காரியங்கள் எல்லாம் தங்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும். ஊராண்மைக் கழகங்கள்,

அதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிற தலைவர், நிர்வாகப் பொறுப்பு எல்லாம் தங்களிடமே ஒப்படைக்கப்படவேண்டும். அவர்களுக்குத் தேவையான உரிமைகள், வசதிகள் எல்லாம் தரப்பட்டு தங்களுடைய காரியங்களைத் தாங்களே நடத்திக் கொள்வதற்கு இன்றுள்ள ஆட்சியில் தங்களுக்கு வழிவகை செய்யப்படும் என்ற நம்பிக்கையில் பஞ்சாயத்துகளை நாடுகிறார்கள். இதற்காக அவர்கள் கூட்டாத மகாநாடுகள் இல்லை. தீட்டாத தீர்மானம் இல்லை. பேட்டி பார்க்காத நாள் இல்லை. அவர்களுக்கு நாமும், வாக்களிக்காத நேரம் இல்லை. கிராம ராஜ்யத்தை அமைக்க எல்லாவிதமான காரியங்களையும் செய்திருக்கிறோம், அவர்களுக்கு வேண்டிய தேவைகளை, உரிமை களை, வசதிகளை எல்லாம் அள்ளி அள்ளி கொடுத்துவிட்டோம் என்று பேசிவிட்டு இப்போது கிராமத்தாரிடத்திலே நாம் போய் நின்றால் - கனம் காங்கிரஸ் அங்கத்தினர் ஒருவர் கேட்டுக்கொண்டது போல் - இங்கே சர்க்காரைப் பாராட்டுவதோடு மட்டும் நின்றுவிடாமல் வெளியிலும் போய் இந்தச் சர்க்கார் செய்திருக்கும்படியாக இந்தச் சட்டத்தைப் பாராட்டிப் பேசுகிற போது - நானோ, எதிர்கட்சித் தலைவர் திரு. வி. கே. ராமசாமி முதலியாரோ மக்களைச் சந்திக்கிற நேரத்தில் "நீங்கள் இத்தனை நாளும் கேட்ட கிராம சுயாட்சி உரிமைகளை வழங்கிவிட்டோம்" என்கிற நேரத்தில் "ஊராண்மைக் கழகத் தலைவரை நாங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பதிலாக அங்கத்தினர்களிலிருந்து, அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று செய்துவிட்டீர்களே" ஏன்? என்று கேட்டால், "தலைவர் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவதை - நீங்கள் விரும்பவில்லையா?" என்று நாங்கள் கேட்பதற்கு "ஆம்" என்று சொன்னால், "ஏன் நீங்கள் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படு வதை விரும்பவில்லை?" என்பதற்கு "ஐயோ இதனால் தானே 6 பேர்கள் இந்த ஊரில் பழனிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். எட்டு பேர்களைக் காஞ்சீபுரத்திற்குக் கொண்டுபோனார்கள். புதுச்சேரிக்கு 6 பேர்கள் கடத்தப்பட்டார்கள். தேர்தலுக்குப் பிறகு இதில் திரும்பியவர்கள் நான்கு பேர்கள்தானே". இப்படி ஆளைத் தூக்கிக்கொண்டு போகப்படுவதற்கா இப்படிச் செய்துவிட்டீர்கள் என்று கேட்டால் நாங்கள் என்ன சொல்வது என்று கேட்கிறேன். அவர்களுக்கு நாங்கள் என்ன சமாதானம் சொல்வோம்? நாங்கள் சொல்கிற சமாதானம் அவர்களது அச்சத்தை நீக்கி திருப்தியை அளிக்குமா என்று கேட்கிறேன்.....

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : அப்படித் தூக்கிக்கொண்டு போய்விடுவார்கள் என்கிற பயம் உள்ளவரையில் பஞ்சாயத்து மசோதாவைப்பற்றி நாம் யோசனை செய்யாமல் இருப்பதுகூட நல்லது என்று சொல்வேன். என்றைக்கு "நாங்கள் யாராலும் தூக்கிக் கொண்டு போய்விடுவோம் என்கிற பயம் எங்களுக்கு இல்லை. சுதந்திரமாக வோட்டு அளிக்கும் தைரியம் எங்களுக்கு உண்டு" என்கிற மனஉறுதி நம் மக்களுக்கு வருகிறதோ அன்றைக்குத்தான் இந்த ஜனநாயக ஆட்சி முறை நன்றாக அமைய முடியும். தூக்கிக்கொண்டு போய்விடுவார்களே என்று பயப்படுகிற வரையில், ஒருவருடைய செல்வாக்குக்குப் பயந்து வோட்டு அளிக்கிற நிலைமை இருக்கிற வரையில் எந்த ஆட்சி முறையும், எந்த ஜனநாயக அமைப்பும் வெற்றி பெறாது. ஆனால் எனக்கு மக்கள் பேரில் அதிக நம்பிக்கை இருக்கிறது. ஒரு சிலர் தவறாக நடந்து கொண்ட போதிலும் ஆயிரத்தில் தொள்ளாயிரத்து தொண்ணுத் தொன்பது பேர்கள் தைரியமாக, சுதந்திரமாக தங்கள் விருப்பப்படி செயல்படக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள் என்பதில் சந்தேகம் கிடையாது.

திரு. சி. என். அண்ணாதுரை : மக்களிடத்தில் நிதி அமைச்சர் அவர்களுக்கு இருக்கிற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பை எடுத்துக்கொண்டதற்கு மகிழ்ச்சியுறுகிறேன்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : நீங்கள் எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்ததற்கு என் நன்றி.

திரு. சி. என். அண்ணாதுரை : அப்படித் தூக்கிக்கொண்டு போவதற்கு இடம் இல்லையென்று சொன்னால் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள முடியாத நிலையில் சீதை ராவணனால் தூக்கிக்கொண்டு போகப்பட்டதை அவர்கள் மறந்து இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : அது அந்தக் காலம். இந்தக் காலத்தில் முடியாது.

திரு. சபாநாயகர் : கனம் அண்ணாதுரை தன் பேச்சில் எனக்கும் குறுக்கிடுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கிறார். (சிரிப்பு) மசோதாவைப் பற்றி மட்டும் அவர்கள் பேசினால் இப்படிப்பட்ட குறுக்கீடுகள் இருக்காது என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : அந்தக் காலத்தில் அப்படி நடந்தது இந்தக் காலத்தில் நடக்காது என்று நிதி அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இப்போது சீதையை தூக்கிக்கொண்டு போவதற்குப் பதிலாக சீதாராமர்களைத் தூக்கிக்கொண்டு போகிறார்கள். (சிரிப்பு).

திரு. எஸ். நாகராஜ மோனிகர் : On a point of order, தமிழ் நாட்டிலே ராமாயணத்தையே கொளுத்திவிடவேண்டுமென்று கீமாயணம் பாடியவர்களுக்கு சீதையைப்பற்றியும், ராமனைப் பற்றியும் நம்பிக்கை இருக்கிறதா என்று கேட்கிறேன்.

Mr. SPEAKER : I don't see any point of order in this. I rule it out of order. The Hon. Member may continue his speech.

திரு. சி. என். அண்ணாதுரை : பஞ்சாயத்துத் தலைவரை பஞ்சாயத்து அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற முறையில் இப்படிப்பட்ட சீர்கேடுகள் வளர்கின்றன என்பதை இந்த மன்றத்திலே நாங்கள் எடுத்துச் சொல்வதற்குக் காரணம் கூற விரும்புகிறேன். பஞ்சாயத்துத் தலைவரை பொது மக்களே தேர்ந்தெடுக்கவேண்டுமென்று இந்த மன்றமே முன்பு தீர்மானித்திருந்தது; ஆனால் அந்த முறை நடைமுறையில் ஒத்து வரவில்லை என்று கருதி இந்த மன்றமே அந்த முறையை மாற்றி, பஞ்சாயத்துத் தலைவரை பஞ்சாயத்து அங்கத்தினர்கள்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற முறையைக் கொண்டு வந்திருக்கிறது; மறுபடியும் இந்த முறையை மாற்றி பழைய முறையைக் கொண்டுவர வேண்டியது அவசியமானால், ''அந்த அவசியத்திற்கான காரணங்களை நீங்கள் எடுத்துக் காட்டவில்லையே'' என்று எங்களைப் பார்த்து ஆட்சியாளர்கள் சொல்வார்களோ என்ற பயத்தால்தான் இந்த சீர்கேடுகளைப்பற்றி இங்கே இப்போது எடுத்துச் சொல்கிறோம். ஜனநாயகம் கையாளப்படும் முறையிலுள்ள தவறுகள்தான், மசோதாக்கள் தயாரிக்கப்படும்போது அவைகளில் குறைபாடுகள் ஏற்படுவதற்கு அடிப்படையான காரணங்களாக இருக்கின்றன. மசோதாக்கள் தயாரிக்கப்படும்போது எதிர்க் கட்சியினருடனோ மற்றவர்களுடனோ சர்க்கார் கலந்து பேசுவதற்கு இன்றைய ஜனநாயக முறையில் இடமில்லை. எனவே, இன்றைய நிலையில், மசோதாக்கள் தயாரிக்கப்பட்ட பிறகு அவைகளில் காணக் கிடக்கும் குற்றங் குறைகளை நாங்கள் எடுத்துச் சொல்வதன் மூலமாகத்தான், மசோதாக்களிலிருந்து அவைகளைக் களைவதற்கான வாய்ப்பு ஆளும்

கட்சியினருக்கு அளிக்கப்படவேண்டியிருக்கிறது. கிராம மக்கள் எங்களைப் பார்த்து "இந்தப் புதிய மசோதாவால் எங்களுக்கு என்ன கிடைக்கிறது" என்று கேட்கும்போது, "நேற்றையதினம் வரை உங்களுக்கு இல்லாதிருந்த அதிகாரங்கள் இன்றுமுதல் உங்களுக்கு கிடைக்கும்" என்றோ, "உங்களுடைய அந்தஸ்து இப்போது உயர்ந்திருக்கிறது" என்றோ அவர்களிடம் சொல்வதற்கு எங்களுக்கு வாய்ப்பு அளிக்கக்கூடியதாக இந்த மசோதா இல்லை. நிர்வாக இயந்திரம் சரியாக இயங்கவேண்டுமென்பதற்காக நிர்வாக இயந்திரத்திற்கு அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறோம்" என்று வேண்டுமானால் கனம் அமைச்சர்கள் வாதாட முடியுமே தவிர, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கொண்ட பஞ்சாயத்து சபைகளுக்கு போதிய அதிகாரங்கள் வழங்கியிருப்பதாக கனம் அமைச்சர்கள் கூற முடியாது. இந்தச் சபையில் நானும் என் கட்சியல்லாத இதர கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கனம் அமைச்சர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அதேபோல்தான், பஞ்சாயத்து உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். ஆனால் மசோதாப்படி, சட்டசபை உறுப்பினர்களின் அதிகாரங்களுக்கும் பஞ்சாயத்து உறுப்பினர்களின் அதிகாரங்களுக்கும் வேற்றுமை இருக்கிறது; பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கு போதிய அதிகாரங்கள் இல்லை. இந்த நிலையில் இருக்கக்கூடிய பஞ்சாயத்து உறுப்பினர்கள் "கனம் அமைச்சர்களும் சட்டசபையின் இதர உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே. நாங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். சட்டசபை உறுப்பினர்கள் லட்சம் பேரால் தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள் என்றால், நாங்கள் 500 பேரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவ்வளவுதான் வித்தியாசம். அவர்கள் அனுபவிக்கும் அதேவிதமான உரிமைகளை பஞ்சாயத்தில் நாங்கள் ஏன் அனுபவிக்கக்கூடாது? எங்களுக்கு பஞ்சாயத்தில் அத்தகைய அதிகாரங்கள் ஏன் இருக்கக்கூடாது?" என்று கேட்க ஆரம்பித்தால் ஆட்சியாளர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? அப்படி அவர்கள் கேட்ட பிறகாவது அவர்களிடம் படிப்படியாக அதிகாரங்களை ஒப்படைப்பதற்கு வகை செய்வதாக இந்த மசோதா இருக்க வேண்டும். மசோதாவில் இதற்கு எப்படி வகை செய்வது என்பது, கனம் நிதி அமைச்சர் சொல்வதைப் போல், நிர்வாகத்தில் பழக்கப்பட்டவர் களுக்குத்தான் தெரியும், புரியும்; நிர்வாகத்தில் பழக்கப்படாதவர்

களுக்குத் தெரியாது, புரியாது; நிர்வாகத்தில் பழக்கப் படாதவர்களுக்கு அதைத் தெரிந்துகொள்வதற்கும் வாய்ப்புகள் இருக்காது. இயற்றப் படும் சட்டத்தில் இருக்கக்கூடிய குறைபாடுகள் குறித்து கிராம மக்களுக்கு ஏற்படக்கூடிய அதிருப்தியை நீக்குவதற்கான முறையில் மசோதாவில் திருத்தங்கள் கொண்டுவரவேண்டுமென்பதற்காகத் தான் இந்த விவாதத்தில் பல கட்சியினரும் கலந்துகொள்கிறார்கள்; பொறுக்குக் கமிட்டி பரிசீலனை செய்து தீர்மானித்து மசோதாவை இவ்வாறு உருவாக்கியதற்குப் பிறகு, இந்த சபையில் மேலும் பேசுவது அவசியமா என்று கேட்பது சரியாகாது என்பதை.........

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் இதை பல தடவை குறிப்பிட்டு விட்டதால் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். பொறுக்குக் கமிட்டியில் முடிவு செய்துவிட்டதால் மசோதாவை இங்கே கனம் அங்கத்தினர்கள் பரிசீலனை செய்யக்கூடாது என்றோ, அதைப்பற்றி பேசக்கூடாது என்றோ நான் சொல்லவில்லை. அவ்வாறு நான் சொல்லமாட்டேன். மசோதாவில் ஒரு விதியில் மாறுதல் செய்யவேண்டுமென்றால் அதற்கு சரியான காரணங்கள் இருக்கவேண்டுமென்றும் அக்காரணங்களை கனம் அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டவேண்டுமென்றும் தான் நான் சொன்னேன்; ஒரு விதி குறித்து யாரோ ஓரிருவர் மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்பதால், சரியான காரணங்களைக் கூறாமல் அந்த விதியை மாற்ற வேண்டுமென்று பேசிக்கொண்டேயிருக்க வேண்டாம் என்றுதான் நான் சொன்னேன். இந்த மசோதாவைக் குறித்து இங்கே விவாதிப்பதற்கே இடமில்லை என்று நான் சொல்லவில்லை. அவ்வாறு நான் கருதவும் இல்லை. இந்த மசோதாவைக் குறித்து சபையில் விவாதம் நடக்கவேண்டியதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருந்தால், இதன்மீது இரண்டு நாட்கள் பொது விவாதமும் மூன்று நாட்கள் பிரிவு வாரியான விவாதமும் நடக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்காது.

திரு. சி. என். அண்ணாதுரை : கனம் சபாநாயகர் அவர்களே, என் பயத்தைப் போக்கியதற்கு கனம் நிதி அமைச்சருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஆளும் கட்சியில் இல்லாத காரணத்தால், இனிமேல் இப்படிப்பட்ட விவாதங்கள் நடத்தக்கூடாது என்று ஆளும் கட்சியினர் தீர்மானித்துவிடுவார்களோ என்று பயந்தேன். மசோதாக்கள் குறித்து நல்ல முறையில் விவாதிப்பதற்கு

எதிர்க்கட்சிகளுக்கு உரிமை இருக்கிறது. கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு ஏன் நிர்வாக அதிகாரங்களைக் கொடுக்கக்கூடாது என்பதற்கு, ஆளும் கட்சியினரால் எடுத்துச் சொல்லப்பட்ட காரணங்கள் எங்கள் மனதிற்குத் திருப்தியளிக்கக்கூடியவையாகவோ எங்கள் மனதில் சமாதானத்தை ஏற்படுத்தக் கூடியவையாகவோ இல்லை என்பதை மிக மிக வன்மையாகவும் மிக மிக வினயத்துடனும் தெரிவிக்க விரும்புகிறேன். நிர்வாகத் துறையில் ஈடுபடத் தக்க பக்குவம் அடையாதவர்களாகவும், திறமை இல்லாதவர்களாகவும் இப்போது கிராம மக்கள் இருக்கிறார்கள் என்று பலர் வாதாடினர். கிராம மக்களுடன் நேரிடையாகப் பழகியுள்ளவர்களுக்கு, இப்படிப்பட்ட ஊராண்மைக் கழகங்களை நடத்திச் செல்லத் தக்க தரமும் திறமையும் படைத்தவர்கள் நம் கிராமங்களில் இருக்கிறார்கள் என்பது நன்கு தெரியும். நமது தமிழகத்தில் 7,000 பஞ்சாயத்துக்களை அமைக்கலாம் என்று வைத்துக்கொண்டால், அந்த 7,000 பஞ்சாயத்துக்களில் ஒவ்வொன்றிலும் பொது நலக் காரியங்களைத் திறம்படச் செய்வதற்கும் நிர்வாகத்தை மிக நேர்மையான முறையில் நடத்துவதற்கும் உரிய மனிதர்கள் இந்தத் தமிழகத்தில் இல்லையா என்ற கேள்விக்கு கனம் நிதி அமைச்சர் பதிலளிக்க வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அவர் கிராம மக்களைப் பார்த்து, "ஊராண்மைக் கழகத்தை திறம்பட நடத்தத் தக்க நிர்வாகத் திறன் உங்களுக்கு இல்லை. இதற்கான பக்குவத்தை நீங்கள் இன்னும் அடையவில்லை" என்று கூறத்தக்க .....

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : Sir, on a point of order, முக்கியமானதொரு விவாதத்தின் மீது எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்த சந்தர்ப்பத்தில் நிதியமைச்சர் அவர்கள் சபையில் உட்கார்ந்துகொண்டு சர்க்கார் சம்பந்தப்பட்ட பைல்களை பார்த்துக் கொண்டிருப்பது நல்லதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சபாநாயகர் : விவாதத்திற்கு சம்பந்தமான பைல்களை பார்க்கலாம்.

திரு. சி. என். அண்ணாதுரை : உங்களுக்கு நிர்வாகத் திறமை யில்லை, ஆகவே உங்களிடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்புவிக்கப் போவதில்லை என்று கிராம மக்களைப் பார்த்துச் சொல்வதற்குள்ள தைரியம் நமது நிதியமைச்சர் அவர்களுக்கு இருக்கிறதா? இது வரையில்

பஞ்சாயத்துகளை நடத்திச் சென்றவர்களில் எத்தனை பேர் ஒழுங்கீனத்திற்காக கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்? எத்தனை தலைவர்களின் பேரில் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் கிறது? எத்தனை தலைவர்கள் கையாடல்கள் நடத்தியிருக்கிறார்கள்? என்ற கணக்கையும் எத்தனை நிர்வாக அதிகாரிகள் மோசமாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்ற கணக்கையும் பார்த்து இரண்டு வர்க்கத்திலே எந்த வர்க்கம் மோசமாக நடந்து கொண்டது என்பதை கவனித்துப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தால் நிச்சயமாக பஞ்சாயத்து பொறுப்புக்களை தலைவர்களிடம் ஒப்படைப்பதில் நிர்வாகம் குந்தகப்பட்டுவிடாது என்பதை நாம் உணர முடியும். அதைத்தான் நான் இந்த சட்டமன்றத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அவர்களிடம் ஒப்படைக்கும் அதிகாரம், வழக்குகளைப் போடுவதோ அல்லது வழக்குகளை விசாரிப்பதோ போன்ற அதிகாரங்கள் தரப்படவில்லை, அப்படி தரப்பட வேண்டுமென்று நாங்களும் வலியுறுத்திக் கேட்கவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர் தலைவராக வந்திருக்கும்போது அவர்களது பக்கத்தில் இருக்கக்கூடிய நிர்வாக அதிகாரிதான் எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டுமென்று இருந்தால் நல்லவர்கள் பஞ்சாயத்துகளுக்கு வர, நாளாக நாளாக கூச்சப்பட்டுக்கொண்டு ஒதுங்கி விடுவார்கள். அதிகாரிகளின் தலையீட்டிற்கு கட்டுப்படுபவர்கள், அதிகாரிகளின் தயவை நாடக்கூடியவர்கள்தான், தமக்கு அதிகாரம் இல்லா விட்டாலும் தம் பக்கத்திலுள்ள அதிகாரியின் தயவு கிடைத்தால் போதும் என்று கருதுகிறவர்கள்தான் ஊராண்மைக் கழக தலைவர்களாக வருவார்களே தவிர, இந்த ஊரை நான்தான் நிர்வாகம் செய்து நடத்தி வருகிறேன், அதற்கேற்ற திறமை எனக்கிருக்கிறது, ஊரின் சீருக்கு நான்தான் பொறுப்பு. அதற்கேற்றபடி ஊரிலுள்ள மக்களுக்கு பணியாற்றுவதற்குள்ள உரிமை பெற்றிருக்கிறேன் என்ற மனப்பான்மையோடு அங்கு செல்லக்கூடியவர்கள் நாளாக நாளாக அதிலிருந்து ஒதுங்கிவிடுவார்கள். அதோடு, ஜனநாயகத்தில் நமக்கு சரியான இடமில்லை என்று அவர்கள் மனமுடைந்து போவார்கள். ஆகவே ஜனநாயகத்தில் நல்ல பயிற்சி பெறக்கூடியவர்களை நாம் அணி அணியாக உண்டாக்கவேண்டுமானால் அதற்கான முதல் கட்டம் கிராமப்புறங்கள்தான். ஆகவே கிராமப்புறங்களில் இருந்துதான் ஜனநாயகத்தை துவக்கவேண்டுமென்று இன்று நேற்றல்ல, 1907-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ராயல் கமிஷன் காலந்தொட்டு, மாண்டேகு

செம்ஸ்போர்ட் சீர்திருத்தம் வரையில், அதற்கு பிறகு ஏற்பட்ட "கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா ரெஸல்யூஷன், 1918". 1918-ஆம் ஆண்டு ஏற்பட்ட சட்டம் முதற்கொண்டு கிராமப்புறங்களில்தான் அதிக அளவு அதிகாரங்களை பங்கிட்டுக் கொடுக்கவேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இந்நிலையில், மிகச் செல்வாக்கு பெற்றிருக்கிற "டீசென்ட்ரலைஸேஷன்" என்ற வார்த்தையையும், அதன் உள் இருக்கிற தத்துவத்தையும் பற்றி நாம் இப்பொழுது யோசித்துப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம். "டீசென்ட்ரலைஸேஷன்" என்ற சொல், குவிந்து கிடக்கிற அதிகாரத்தை பரவலாக்குவது என்ற முறையில் மட்டுந்தான் இதுவரையிலும் நாம் கவனித்து வந்திருக்கிறோம். என்னைப் பொறுத்த வரையில் சொல்லிக் கொள்வேன். இது இந்த மசோதாவிற்கு அப்பாற்பட்டதாக கருதப் பட்டாலும் சரி, அல்லது அடிப்படை பிரச்சினையிலிருந்து வேறானது என்று எண்ணப்பட்டாலும் சரி அல்லது நிதி அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல் அவரவர்கள் கட்சிக்கென்று சில கொள்கைகள் உண்டு, அதை இங்கே புகுத்தாதீர்கள் என்பதாகயிருந்தாலும் சரி என்னைப் பொறுத்த வரையில், "டீசென்ட்ரலைஸேஷன்" என்பதின்படி, ஜனநாயகம் உயிர் பெறவேண்டுமென்றால் வட்டங் களுக்கு தனித்தனியாக அதிகாரங்கள் வகுக்கப்படவேண்டும். எப்படி இந்த மாமன்றம் இந்த மாநிலம் பூராவிற்கும் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறதோ, எப்படி நம் அமைச்சர்கள் தங்கள் தங்கள் துறைகளுக்கு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்களோ அதே போன்று ஊராட்சி மன்றங்களுக்கு முழு உரிமையும், முழு அதிகாரமும் அளிக்கப்படவேண்டும்.

இந்த மாமன்றத்தில் பலசந்தர்ப்பங்களில் எடுத்துக்கையாளப் பட்ட வினோபா சொல்லுகின்ற ராம ராஜ்யத்தை எண்ணிப் பார்ப்பார்களானால் இதில் கொஞ்சம்கூட அந்த வாடையோ ஜாடையோ இல்லாத அளவுக்கு வகுக்கப்பட்டிருக்கின்றது என்பது புரியும். ஆகவே நிர்வாக அதிகாரிகளைப் போட்டு பஞ்சாயத்துக்களை நடத்தி செல்லுகின்ற ஒரு நிலையை பொறுக்கு கமிட்டியால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும் கூட பொறுக்கு கமிட்டியில் தங்கள் கருத்துக்களை வலியுறுத்தி சொல்லிச் சொல்லி கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள் என்று சொல்லப்பட்டாலும் பொறுக்கு கமிட்டியில் இது முடிவு செய்யப்பட்டுவிட்டது என்று இருந்தாலும் கூட இங்கே ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று அர்த்தமல்ல.

எதிர்க்கட்சித் தலைவர் ராமசாமி முதலியார் அவர்கள் சொல்லியதை போல் எங்களுடைய கருத்துக்களை சொல்லி வலியுறுத்தி பார்த்தோம். அது ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் ஒருமித்த ஒரு சமரச கருத்துக்கு வந்தோம் என்றுதான் அதை பொருள் கொள்ள முடியும். பொறுக்கு கமிட்டியில் பேசி முடிவு செய்யப்பட்டு விட்டது என்றாலும்கூட, அதே கருத்துக்கள் இந்த மாமன்றத்தில் பேசப்படுமானால் அமைச்சரவையிலுள்ளவர்கள் கொஞ்சம் மனமிரங்கி, கொஞ்சம் தர்ம நியாயத்திற்கு கட்டுப்பட்டு, கொஞ்சம் ஜனநாயகத்தில் நாட்டம் கொண்டு திருத்தத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்களா என்ற நப்பாசையால்தான் சொல்லுகிறோமே தவிர நாங்கள் சொன்னால் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று அர்த்தமல்ல - அந்த முறையில் நீங்கள் நடந்துகொண்டதுமில்லை - அந்த முறையில் நடந்து கொள்ளவும் மாட்டீர்கள் என்பதை நாங்கள் நன்றாக உணர்ந் திருக்கிறோம். ஆனால் கிராம மக்களிடத்தில் நாங்கள் இதை எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில் கிராமத்தாருக்கு எந்த அளவுக்கு பூரண அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை எடுத்தச் சொல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதற்கு நமது நிதி அமைச்சர் அவர்கள் கம்யூனிட்டி பிராஜக்ட், நேஷனல் எக்ஸ்டென்ஷன் போன்ற இந்த திட்டங்களை நீங்களே ஏற்று நடத்தலாம் என்று சொல்லப்பட்டிருக் கிறது. அதை கவனிக்க வேண்டுமே தவிர வார்த்தைகளை மட்டும் கவனிக்க வேண்டாம் என்ற முறையில் சொன்னார்கள். இந்த சட்ட மன்றத்தில் வாசகங்களையும் வார்த்தைகளையும் கவனிக்க வேண்டாம் என்று சொல்கிற, பெரிய வழக்கறிஞராக பல காலம் பணியாற்றி இருக்கிற நமது நிதி அமைச்சர் அவர்கள், ஒரு சின்னஞ்சிறு வாசகம்தான் ஒருவனை பிழைக்கவும் வைக்கும், தூக்கில் ஏற்றவும் வைக்கும் என்பதை உணருவார்கள். ஆகவே வாசகங்களை கவனியாமல் நடைமுறையில் எப்படி வருகிறது பாருங்கள் என்று எங்களுக்கு ஆசை காட்டுவதைவிட சாதாரண மக்களாகிய நாங்கள் உணர்ந்து பார்க்கத்தக்க அளவுக்கு பயங்கரம் இல்லாத தெளிவான, திட்டவட்டமான வாசகங்களை போடவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

"The Government may entrust to the panchayat union council, with its consent and on such terms as may be agreed upon, the execution in the panchayat development block of the National Extension Service Schemes" என்று இருக்கிறது. 'May' implies 'may not' also என்பது சாதாரணமாக

சொல்லப்படுகின்ற இலக்கணம். May entrust என்றால் கேட்கலாம், எப்போது கேட்கலாம், எஜமான் சிரிக்கிற வேளையில் கேட்கலாம். சிரிக்காத வேளையில் கேட்காமலும் இருக்கலாம். கேட்கிற முறைப்படி கேட்டால் கேட்கலாம், இல்லை யென்றால் தள்ளிவிடலாம், இவ்வளவுக்கும் இடம் அளிக்கிறது. இத்தனையும் நீங்கள் சொல்லுவீர்கள் என்று அர்த்தமல்ல. May என்பதற்குப் பதிலாக "The Government shall entrust on representation by the panchayat union" என்று மாற்றினால் நாங்கள் கிராம மக்களிடத்தில் போய் உங்களுடைய ஆட்சியைப்பற்றி, உங்களுடைய ஆட்சியின் அருமை, பெருமைகளைப்பற்றி எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும். May என்பதற்கும் shall என்பதற்கும் வித்தியாசம் தெரியாத அளவுக்கு இந்த சபையில் யாரும் இருக்கமாட்டார்கள். ஆகவே இதில் இருக்கக்கூடிய வார்த்தைகளே, கொலை வழக்குகளை நடத்தி வெற்றி பெற்றிருக்கும் நமது நிதி அமைச்சர் அவர்கள் உன்னிப்பாக கவனித்துத்தான் அந்த வார்த்தையை போட்டிருப்பார்கள். May என்றிருப்பதை shall என்று மாற்றினால் மக்களுக்கு மிகுந்த ஆறுதல் அளிக்கும் என்பதை கூறிக்கொள்கிறேன். மற்றொன்று கிராமத்திற்கு அதிகமாக பணம் தரப்போகிறோம், வீட்டுவரியை எந்த அளவுக்கு வசூலிக்கிறீர்களோ அந்த அளவுக்கு ‘‘மார்ச்சிங் கிராண்ட்’’ தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஒரு அன்புள்ள தாய் தன்னுடைய குழந்தைகளுக்கு கசப்பான மருந்தோடு தேனும் கலந்து நாக்கை நீட்ட சொல்லி தடவுவது போல் நமது நிதி அமைச்சர் அவர்கள் இதை நமக்கு தருகிறார்கள். அவர்களின் தாய் அன்பை பாராட்டுகின்றேன். ஆனால் நீங்கள் கொடுக்கின்ற மருந்தில் கசப்பான மருந்து தான் அதிகமாக இருக்கிறது, தேன் குறைவாகத்தான் இருக்கிறதோ என்ற ஐயப்பாடு இருக்கின்றது. ஏனென்றால் இன்றையதினம் வசூல் செய்யப்படுகிற வீட்டுவரி தலைக்கு 12 நயா பைசா என்று இருக்கிறது. இது 30 நயா பைசாவாக கிடைக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள். இருப்பதை விட ஒன்றுக்கு ஒன்றரை மடங்கு அதிகமாக வரிபோட வேண்டுமென்று எண்ணுகின்றீர்கள். இங்கே 150 பேருக்கு மேலாக எண்ணிக்கை பலம் இருக்கக்கூடிய ஆளும் கட்சி, நியாயமாகப் போடுவதானாலும், தேவைக்காகப் போடுவதானாலும் வரி போட்டால் மக்களுடைய அதிருப்தி எங்கே தங்களுக்கு வந்து விடப்போகின்றதோ என்று அச்சப்பட்டு கொண்டுதான் போட்டு வருகிறார்கள். இவ்விதம் வீட்டுவரியை ஒரு ரூபாய் என்பதை

இரண்டரை ரூபாய் என்று எந்த பஞ்சாயது தலைவர்களாவது அதிகப்படுத்துவார்கள் என்று அமைச்சர்கள் எதிர்பார்க்கின்றார் களா?...

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : இதிலே வரி அதிகப்படுத்த வேண்டுமென்று வகுக்கவில்லை. இப்போது போட்டிருக்கக் கூடிய வரியையே வசூலிப்பதில்லை. அதைத்தான் வசூலிக்கவேண்டுமென்று போட்டிருக்கிறோம். இப்போது வரி இருக்கிறதேயொழிய வசூலிப்பதில்லை.

திரு. சி. என். அண்ணாதுரை : சர்க்காரினாலே நியமிக்கப்பட்ட டேக்ஸேஷன் என்க்கொயரி கமிஷன், பஞ்சாயத்துக்களில் வரி வசூலிக்க கிராமத்தார்கள், கிராமத் தலைவர்கள், விரும்பவில்லை என்பதை "The Taxation Enquiry Commission, however was of the view that when a panchayat is established, it should not start levying taxes immediately. Such a measure was bound to incur the resentment of the village people and if the panchayat were to refrain from such activity, they would earn contempt by inactivity." பணம் வசூலிக்காவிட்டால் காரியம் நடக்காது. வரி வசூலித்தால் கெட்ட பெயர் வந்துவிடும். ஆகையினாலே வரி வசூலிப்பதிலே குந்தகம் இருக்கிறது என்று டேக்ஸேஷன் கமிஷன் தன்னுடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருக் கின்றது. அதே நிலைமைதான் இப்போது கிராமப்புறத்தில் நீடித் திருக்கின்றது. ஆக, நீங்கள் எவ்வளவு வரி வசூலிக்கிறீர்களோ அந்த அளவு நாங்கள் பணத்தைத் தருகிறோம் என்று சொல்வதற்கு பதிலாக, பஞ்சாயத்துக்களானாலும் சரி, பஞ்சாயத்து யூனியன்களானாலும் சரி, வருவாய் வரக்கூடிய தொழில்களை நடத்த முன் வந்தால், சர்க்கார் மிகத் தாராளமான முறையில் மான்யங்களைக் கொடுத்தும், கடன்களைக் கொடுத்தும், உற்சாகப்படுத்தியும் ஊக்கமூட்டியும், திட்டங்களைப் போட்டுத் தந்தால், அந்தத் திட்டங்களின் பேரில் ஆட்சியாளர்கள் கவனத்தைச் செலுத்தி புறம்போக்கு நிலங்களைப் பயிர் செய்து பணம் சம்பாதிக்கிறோம் என்று சொன்னாலும், கலப்பு உரங்களைத் தயார் செய்து பணம் சம்பாதித்துக் கொள்கிறோம். அதற்குப் பணம் தேவை, ஆகவே அதை கடனாகக் கொடுங்கள் என்று கேட்டாலும் இவைகளுக்கெல்லாம் பணம் தருவதிலே தாராள மனப்பான்மையைக் காட்ட வேண்டுமென்று நான் ஆட்சியாளர் களைக் கேட்டுக்கொள்கிறேன்.

"வீட்டு வரி எந்த அளவுக்கு வசூலிக்கிறீர்களோ அந்த அளவுக்குத் தருகிறோம்" என்று சொல்வது, ஏட்டிலே பார்த்தால் மிக அழகாக இருக்கும். ஏட்டிலே பார்த்தால், 1,000 பேர்களைக் கொண்ட கிராமப் பஞ்சாயத்துக்கு ரூ. 1,250 வரும் என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். கிராமத்திலே எத்தனை வீடுகள் என்று கணக்கிட்டுச் சொல்லும்போது, கிராமத்திற்குள்ளே போய்ப் பார்த்தோமானால், இரண்டு புதிய விடுகள் கட்டப்படுகிற நேரத்திலே 20 பழைய வீடுகள் இடிந்து விட்டிருக்கின்ற அந்தக் காட்சிகளைத்தான் பார்க்கலாம். இடிந்து போன பழைய வீடுகளைக் கட்டுவதற்கே பணமில்லாமல் இருக்கின்றது. இங்கே நகரத்தில் பணம் சம்பாதித்தவர்கள் பணம் சம்பாதித்து வந்திருப்பதை கிராமத்தார்களுக்குக் காட்டவேண்டு மென்பதற்காக வேண்டுமானால் இரண்டு புதிய வீடுகளைக் கட்டுகிறார்கள். ஆகையினாலே வீட்டு வரி மூலமாக கிராமத்தில் போதிய பணம் வசூலாகும் என்று எதிர்ப்பார்த்தால் நிச்சயமாக நாம் ஏமாற்றம்தான் அடைவோம் என்பதனை நான் இங்கே பணிவன்போடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், கம்யூனிடி டெவலப்மென்ட் ஸ்கீம் இவர்களிடத்திலே ஒப்படைக்கப்படுகின்ற காரணத்தினால் பல நன்மைகள் வரும் என்று கூறுவதினாலே, இந்த மசோதாவோடு தொடர்பு கொண்டிருக்கின்ற கம்யூனிடி பிராஜெக்டைப் பற்றிக் கொஞ்சம் ஆராய வேண்டியிருக்கிறது. இது வரையில் கம்யூனிடி பிராஜெக்ட் என்பது ஆளும் கட்சியினுடைய விளம்பரச் சாவடியாக இருந்து வந்திருக்கின்றது என்ற கருத்து மேலெழுந்தவாரியாகப் பரவியிருக்கிறது. ஆனால் நிதியமைச்சர் அவர்கள் புள்ளி விவரங் களால் இதை மறுக்கவோ, அல்லது என்னுடைய பூர்வோத்திரத்தை எடுத்துக் காட்டி கோபமூட்டவோ செய்யலாம். இவைகளிலே எந்த முறையைக் கையாண்டாலும், நாட்டிலே மக்கள் கம்யூனிடி பிராஜெக்ட் என்பது ஆளும் கட்சியினருடைய விளம்பரச் சாவடியாக இருக்கிறது என்று மேலெழுந்தவாரியாகக் கருதுகிறார்கள். அதைக் கொண்டு போய் கிராமத்திலே ஒப்படைப்பதால் மட்டும் நாட்டுக்கு நல்ல காரியங்கள் நடந்து விடாது என்று உணர்ந்து நிதி அமைச்சர் அவர்கள் துவக்கத்தில் சொன்னது போல கிராம ஆட்சிக்கும், கிராம வசதிக்கும் உள்ள தொடர்பை சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். கிராம ஆட்சிக்கு நல்ல திட்டங்களை அமைத்து விட்டால் வசதிகள் ஏற்பட்டுவிடாது, வசதிகளே இல்லாத இடத்திலே ஆட்சியும்

நடக்காது. ஆகவே, கிராமத்திற்கு ஆட்சிமுறை வேண்டுமானால் தயாரித்துத் தரலாமே தவிர, வசதிகளை உண்டாக்க வேண்டிய பொறுப்பு இந்த மசோதாவிற்கு அப்பாற்பட்டு இருக்கின்றது. அப்பாற்பட்டு இருக்கின்றது மாத்திரமல்லாமல், கிராமத்தில் வறுமை இந்த மாமன்றத்திலுள்ள எந்தக் கட்சிக்காரர்களும் புறக்கணிக்க முடியாத அளவு ஓங்கி வளர்ந்திருக்கின்றது. கிராம மக்களுடைய வசதிகளை அதிகரிப்பதற்கான வழி வகைகள் என்ன என்பதனை இந்த நேரத்தில் எண்ணிப் பார்த்தால், இவ்வளவு வசதி அதிகரித்தால் இவ்வளவு வரி வசூலிக்கலாம். இவ்வளவு வரி வசூலித்தால் இவ்வளவு மாச்சிங் கிராண்ட் கிடைக்கலாம், இவ்வளவு மாச்சிங் கிராண்ட் கிடைத்தால் மொத்தத்தில் இவ்வளவு வரி சேரும். இவ்வளவு வரி சேர்ந்தால், அதன் மூலமாக அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும் என்று கணக்கிட முடியும். கிராமப்புறங்களிலே வசதிகளை அதிகரிக்க வழி வகை இருக்கின்றதா என்பதைப் பார்த்து உங்களுடைய வசதிகளை நீங்களே பெருக்கிக் கொள்ளுங்கள் என்று அவர்களுக்குப் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. பொறுப்புக்களை பங்கிட்டுக் கொள்வதுதான் ஜனநாயகம் என்று நிதியமைச்சருடைய பார்வை என்னை கேட்கின்றது. தாங்கிக்கொள்ளக்கூடிய திட்டத்தைத் தரவேண்டிய பொறுப்பு ஆளுகின்றவர்களைச் சார்ந்ததாகும். உள்ளத்தால், உடலால் மெலிந்திருக்கின்றவர்கள் என்றாலும், பொறுப்பைக் கொடுத்து, வசதிகளைக் கொடுத்தால், பொறுப்புக்களை நிறைவேற்றத் தக்க அளவுக்கு அவர்களுக்குத் திறமையிருக்கிறது. ஆகையினாலே இவைகளைச் செய்ய கிராமத்திலுள்ள மக்களுக்கு வசதிகளைக் கொடுக்காமல் அவர்களுடைய திறமையிலே குறை இருப்பதாகக் கருதாதீர்கள். ஒப்புக்கொண்ட எந்தப் பொறுப்பையும் அவர்கள் நிறைவேற்றுவார்கள். இவர்களிலே பலர் எதிர்கால நிதியமைச்சர்களாக இருக்கக்கூடும், பலர் எதிர்கால முதலமைச்சர் களாக இருக்கக் கூடும். நிதியமைச்சர் சொன்னதைப் போல, படிக்காதவர்கள் என்ற காரணத்திற்காக யாரையும் மந்திரியாக ஆக்காமல் இருக்க மாட்டோம். ஜனநாயகம் அதை அனுமதிக்காது. கிராம மக்களுக்கு சாதாரணப் படிப்பிலே தேறாவிட்டாலும், வானத்தைப் பார்த்து மழை எப்போது பெய்யும் என்று சொல்லத் தெரியும், பயிரைப்பார்த்து எப்போது அறுவடை செய்யலாம் என்று சொல்லத் தெரியும், உரத்தைப் பார்த்து எத்தனை கலம் விளையும் என்று சொல்லத் தெரியும். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற பயிற்சியை

பகுத்தறிவால் கிடைத்த பயிற்சியை - இப்படிப்பட்ட மன்றங்களிலும் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த மன்றத்திலே கூட இப்படிப்பட்ட கிராம மக்கள் வந்திருக்கிறார்கள். வேண்டுமானால் அவர்கள் பேசுவது நாம் பேசுகிற சட்ட நுணுக்கத்தைப் போல இல்லை என்று சொல்லலாமே தவிர அவர்களை மட்டமாக யாரும் கருத முடியாது. கிராமத்திலுள்ள நல்லறிவை கிராமத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லுகிறேன். அதற்கு இந்த மசோதாவிலே இடமிருந்தால் சேர்த்துக் கொள்ளுங்கள். நிதியமைச்சர் அவர்கள் ''நீங்கள் மாற்றிக்கொள்ளத் தக்க திருத்தங்களை மட்டும் சொன்னால் நான் ஏற்றுக் கொள்கிறேன்'' என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் சொல்வதற்குக் காரணம் நான் நினைக்கிறேன் ''இவர்கள் எங்கே மாற்றிக் கொள்ளத்தக்க அளவுக்கு திருத்தங்களைச் சொல்லப் போகிறார்கள், ஏதாவது மேலெழுந்தவாரியாகச் சொல்வார்கள், அதற்கு ஏதாவது சாமர்த்தியமாக மூன்று நான்கு வாதங்களைச் சொன்னால் சரியாகப் போய்விடும்'' என்று அவர்கள் சாமர்த்தியத்திலே நம்பிக்கை வைக்கிறார்களே தவிர, இதயத்தில் நம்பிக்கை வைக்கவில்லை.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : உங்களுடைய சாமர்த்தியத்திலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது. உங்களுக்கு சாமர்த்தியக் குறைவு இருப்பதாக நான் நம்பவில்லை. (சிரிப்பு).

திரு. சி. என். அண்ணாதுரை : நாம் இருவரும் ஒரே ரகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் (சிரிப்பு). இதயத்திலே அதிகமான அளவுக்கு அக்கரை காட்டி, கிராம மக்களை வாழ வைக்க இந்தச் சட்டத்திலே நன்மைகளைப் புகுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, ஆட்சியாளரின் நோக்கத்தைப் பாராட்டுகிறேன். கிராம மக்களிடத்தில் இந்த அளவுக்கு அன்பும் அக்கறையும் செலுத்துவதை நான் பாராட்டுகிறேன். ஒரு சமயம் அவர்களும் ஓட்டர்கள் என்ற காரணத்தினால் இந்த அக்கறை ஏற்பட்டதோ என்ற ஐயத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

மாநில அரசுப் பணியாளர்கள் பற்றிய பணிநிலை அறியும் குழு குறித்த தீர்மானம்

உரை : 22 *நாள் : 30.09.1958*

திரு. சி. என். அண்ணாதுரை : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சர்க்கார் உத்தியோகத்திலிருக்கும் அவலநிலையிலுள்ள கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களுடைய பிரச்சினையை கவனிப்பதாக, ஆளும் கட்சியினர் இந்த சட்டமன்றத்தில் சொல்லியதுடன் மட்டுமின்றி வெளியிலும் பல்லாண்டு காலமாக பன்முறை சொல்லியிருந்தாலும்கூட, இன்று வரையில் அப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் அவர்கள் ஓரளவு திண்டாடிக் கொண்டிருக்கிறார்களே என்ற ஐயப்பாட்டால்தான், அதைத் தீர்ப்ப தற்கான சில யோசனைகளை எதிர்த் தரப்பில் உள்ளவர்கள் சொல்லுவதற்கு வகைசெய்வதற்காகவும், இந்தப் பிரச்சினையை அலசி ஆராய்ந்து பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு நல்ல ஆறுதலான திட்டத்தை உருவாக்குவதற்காகவும் ஒரு கமிட்டியை அமைக்கலாம் என்று, இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கும் கனம் நண்பர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் விரும்புகிறார். வேலை நிறுத்தம் செய்யப்போவதாக முன்பு சொல்லிக்கொண்டிருந்த சர்க்கார் ஊழியர்களுக்கு, சலுகைகள் தருவதாக கனம் நிதி அமைச்சர் வாக்களித்து, அவர்களை, வேலை நிறுத்த யோசனையைக் கைவிடச் செய்தார் என்பதை எனக்கு முன் பேசிய ஸ்ரீ கரிய கௌண்டர் அவர்களுடைய பேச்சிலிருந்து நான் தெரிந்து கொள்ளுகிறேன். அவர், அத்துடன் மட்டுமின்றி, அதற்காக சர்க்கார் வரி போட்டால் அதை நாங்களெல்லாம் ஏற்றுக் கொள்கிறோம் என்றும் சொன்னார். மேலும், ஸ்ரீ கரிய கௌண்டர், தமக்கு கனம் நிதி அமைச்சரிடம் உள்ள அபாரச் செல்வாக்கைப் பயன் படுத்தி, வரிகள் போட்டு கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களின்

சம்பள உயர்விற்குத் தேவையான பணத்தை பெறச் செய்வதற்கு தாம் அவரை இணங்கவைக்க முடியும் என்றும் கூறினார்.

அவர்கள் அப்படியெல்லாம் எடுத்துச் சொன்னதிலிருந்து கெஜட் பதிவில்லாத சர்க்கார் ஊழியர்களுக்கு அதிகமான சம்பளம் தரவேண்டு மென்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கொள்கையளவில் என்றாலும் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிற அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு வழிவகை இல்லாத காரணத்தினால் தள்ளிக்கொண்டு போகிறார்கள் என்பது ஒருபுறத்தில் இருந்து பார்த்தால் நன்கு தெரிகிறது. வேறு சில அங்கத்தினர்கள், எதிர் தரப்பில் உள்ளவர்கள் இந்த யோசனையை சொல்கிறார்கள் என்ற காரணத்தினால், இவர்களைவிட சமுதாயத்தில் பின்தங்கிக் கிடக்கும் விவசாய பெருங்குடி மக்களிடமிருந்து துவங்கி கோவில் கோபுர வாசலில் இருக்கும் பிச்சைக்காரர்களின் நிலை வரை நண்பர் நமக்கு கவனப்படுத்தினார். அப்படியுள்ளவர்கள் இருக்கும் போது இவர்களைப் பற்றி கவனிப்பானேன் என்று மற்றொரு கனம் அங்கத்தினர் எடுத்துச் சொன்னார். இதில் இருந்து நான் ஒன்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆளும் கட்சி இதற்கு ஏதாவது திட்ட வட்டமானதொரு கொள்கையை வைத்திருக்கிறதா? சர்க்கார் ஊழியர்களின் கோரிக்கைகள் நியாயமானதென்று சர்க்கார் கருதுகிறார்களா? அப்படி நியாயம் என்று கருதி அதை நிறைவேற்று வதற்கு இப்பொழுது காலமில்லை என்று வாதாடுகிறார்களா, அல்லது காலம் சரியாகயில்லை என்று சொல்கிற நேரத்தில் ஒரு கனம் அங்கத்தினர் சொன்னபடி திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றி நாட்டின் செல்வ நிலை சீர்பட்ட பிறகு இதைக் கவனிக்கலாம் என்று இந்தப் பிரச்சினையை ஒத்தி போட்டு வைக்கிறார்களா அல்லது வேறு சில அங்கத்தினர்கள் சொன்னதுபோல சமுதாயத்தில் உள்ள மற்றவர்களை நன்கு கை தூக்கி விட்ட பிறகு இந்தப் பிரச்சினையைக் கவனிக்கலாம் என்று இப்பிரச்சினையை ஊறுகாய் பானையில் போட விரும்பு கிறார்களா என்ற விஷயத்தில், தெளிவற்ற குழப்பமோ என்று ஐயப்படத்தக்க விதத்தில் ஆளும் கட்சியின் போக்கு இருந்து வருகிறது. ஆளும் கட்சியின் போக்கு இப்படி இருந்து வருவது, என்.ஜி.ஓ.க்களின் மனதில் ஏற்பட்டிருக்கிற குமுறல்கள் என்னென்ன வழிகளில் நாட்டில் வெளிப்படுகிறது என்பதை அவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள்.

அதைத்தான் கரிய கௌண்டர் அவர்கள் சென்னை கடற்கரையில்கூட கூட்டம் போடுகிறார்களே என்று மெத்த வருத்தத்துடன் சொன்னார் கள். கடற்கரை மாலை வேளையில் ஓய்வு பெறக்கூடிய இடந்தான். அப்படி ஓய்வு எடுக்கப்போகிறவர்கள் ஒரு சிலர் இருப்பதோடு தங்கள் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்த பலர் கடற்கரைக்கு போகிறார்கள் என்ற நிலையை இந்நாட்டில் உங்கள் ஆட்சி ஏற்படுத்தி விட்டது. உல்லாசத்திற்கு பயன்படுத்தப்படக்கூடிய கடற்கரை உள்ளக் குமுறல்களை எடுத்துக் காட்டும் இடமாகிவிட்டது, உங்கள் ஆட்சியில். மாற்றுக் கட்சியினர் என்.ஜி.ஓக்களை தூண்டி விடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை சொல்லிவிட்டு என்.ஜி.ஓக்கள் தங்கள் குறைபாடுகளை தாங்களே எடுத்துச் சொல்லலாமே என்று நிதி அமைச்சர் அவர்கள் முன்பு ஒரு தடவை இங்கு எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். அது மட்டுமல்ல. அவர்கள் விஷயத்தில் எதிர்க்கட்சிக்காரர் களுக்குள்ள அக்கரையைவிட எங்களுக்கு அதிகம் இருக்கிறது என்பதை நாங்கள் கூட்டிக் கொடுத்திருக்கும் 12 ரூபாய் உயர்வு எடுத்துக் காட்டவில்லையா என்று புள்ளிவிவரங்களோடு தனது மனதில் உள்ள நல்லெண்ணத்தையும் இணைத்து கூறினார். அப்படி 12 ரூபாய் அதிகமாகக் கொடுத்த நிலையில் இயற்கையாகவே வாழ்க்கைச் செலவு புள்ளிகள் அதிகப்பட்டு போனதால் ஏட்டளவில்தான் இந்த 12 ரூபாய் பயன்பட்டதே தவிர, வாழ்க்கைச் செலவு அதிமாகி விட்டதால் என்.ஜி.ஓக்கள் அதனால் நல்லமுறையில் பயன் அடையவில்லை. ஆகவே, மறுபடியும் அந்தப் பிரச்சினையைப் பற்றி நாம் பேசுகிறபோது ஒருவருக்கொருவர் மனம் விட்டு, ஆளும் கட்சியினரும் எதிர்கட்சியினரும், இந்தப் பிரச்சினையைப் பற்றி பேசவேண்டும். அப்படி மனம் விட்டு பேசிக் கொள்ள இந்த மன்றத்தை விட இதற்கென்று ஒரு ஆய்வுக் குழு அமைத்து எதிர் கட்சியில் உள்ளவர்களும், ஆளும் கட்சியில் உள்ளவர்களும், தேவைப் பட்டால் பொருளாதாரத் துறையில் புது யோசனைகள் சொல்ல என்.ஜி.ஓ. பிரதிநிதி ஒருவரையும் அழைத்து இந்தப் பிரச்சினைக்கு நல்ல தொரு முடிவு காணவேண்டும். அதை உடனடியாக தீர்க்க வேண்டுமென்பதுதான் எங்கள் விருப்பமே தவிர ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டது போல் சர்க்காரை சங்கடத்தில் ஆழ்த்திவிட வேண்டு மென்பதல்ல எங்கள் நோக்கம். அப்படி சர்க்காரை சங்கடத்தில் ஆழ்த்திவிட வேண்டுமென்று கருதினாலும் அதிலிருந்து தப்பித்துக்

கொள்ள உங்களுக்கு எண்ணிக்கை பலம் இருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். பலரது வாதத்தின் பலமும் எண்ணிக்கை பலத்தில்தான் இருக்கிறது என்பதை நாங்கள் உணராமலில்லை. இந்தப் பிரச்சினை மூலம் சர்க்காருக்கு சங்கடத்தை விளைவிக்க வேண்டு மென்று நாங்கள் யாரும் விரும்பவில்லை. சர்க்கார் ஊழியர்கள் அதிருப்திப்பட்ட மனதோடு இருந்தால் சர்க்கார் நிர்வாகம் திறம்பட நடக்காது என்பதை நாம் உணர வேண்டும். ஒரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார், சர்க்கார் ஊழியர்கள் பத்து, இருபது வருட காலம் வரை தியாக உணர்ச்சியோடு பொறுத்திருக்க வேண்டுமென்று. அப்படி பத்து இருபது ஆண்டுகாலம் வரை தியாக உணர்ச்சியோடு பொறுத்திருக்க வேண்டுமென்று எதிர்ப்பார்ப்பதில் தவறு இல்லை. ஆனால் அப்படி பத்து இருபது ஆண்டு காலம் இருந்தால் உண்மையா கவே அவர்கள் வாழ்க்கையில் பெரும் சிக்கல்கள் ஏற்படுவது மட்டுமல்லாமல் அவர்களால் சமுதாயத்திற்கு அளிக்கப்படுகிற நமது எதிர்கால சந்ததிகள் மிகுந்த புத்தி சூன்ய மனதோடுதான் பிறக்க நேரிடும். ஆகையால்தான் இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். பல பிரச்சினைகளைத் தீர்ப்பதிலே இந்த சென்னை ராஜ்யம் முன்னனியில் நிற்கிறது என்று அடிக்கடி அறிவுறுத்தி வருகின்ற நிதி அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதிலே என்ன சிக்கல் இருக்கிறது என்று தெரிவிக்க வேண்டும். சிக்கல் எங்கே இருக்கிறது என்று அவர் எடுத்துக் காட்டுவார்களேயானால், அதைக் குறித்து ஆலோசித்துப் பார்ப்பதிலே எதிர்கட்சிகள் எல்லாம் உண்மையிலேயே அவர்களிடத்திலே நல்லெண்ணம் வைத்திருக்கின்ற காரணத்தினால் ஒத்துழைக்கத் தயாராயிருக்கின்றன. சம்பளம் அதிகம் தரப்படவேண்டியது நியாயம் என்று அவர்கள் நியாயத்தை ஏற்றுக்கொள்கிறார்களோ என்பது தெரிய வேண்டும். மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் இடையே பேதம் இருப்பதை நீக்கியாக வேண்டுமென்ற கொள்கை சர்க்காரிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். சர்க்கார் உத்தியோகஸ்தர் களைப் பொறுத்த வரையில், மாநில சர்க்காருக்கேற்ற விதிமுறைகளை சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு வெள்ளையர் ஆட்சி காலம் முதல் இருந்து கொண்டிருக்கிற விதிகளை - மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த சர்க்காருக்கு மனம் இருக்கிறதா? - அதை ஏற்றுக்கொள்வார்களா, கொள்கையளவில் என்று அறிய விரும்புகிறேன். நான் குறிப்பிடுவது,

இந்திய அரசியல் சட்டத்தில் இருக்கிற 309-வது பிரிவுப்படி ராஜ்ய சர்க்காரிடத்தில் வேலை செய்கிற ஊழியர்களுடைய நடைமுறை வேலைகளை கவனிப்பதற்கேற்ற புதிய வழி வகைகளை சர்க்கார் கையாளப் போகிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இதிலே ஒரு தெளிவு ஏற்பட்டு விட்டால், அதற்குப் பிறகு பணத்தைக் கண்டுபிடிப்பது என்பது கஷ்டமான காரியமல்ல. நிதி அமைச்சருடைய வேலையே பணம் இருக்கிற இடத்தைப் பார்த்து எடுத்து, பணம் தேவைப்படுகிற இடத்தில் பகிர்ந்து கொடுப்பதாகும். ''பணம் எங்கே இருக்கிறது, பணம் இங்கே இருக்கிறது'' என்று எங்களைப் போலவே அவரும் கேட்டுக் கொண்டிருப்பது நிதி அமைச்சருடைய வேலை இல்லை என்பதை நம் நிதி அமைச்சர் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஒரு சினிமா பாடலிலே வருகின்றார் போன்று "எங்கே தேடுவேன், பணத்தை எங்கே தேடுவேன்" என்று சொல்லிக்கொண்டு - நாமெல்லாம் இங்கே ரூ. 150 பெற்றுக் கொண்டும், அமைச்சர் அவர்கள் ஆயிரக் கணக்கில் பெற்றுக் கொண்டும் - எங்கே பணம் இருக்கிறது என்று, தேடிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், அதை வெளியுலகத்தி லுள்ளவர்கள் பார்ப்பார்களேயானால், நம்முடைய திறமையைப் பற்றி ஐயுறுவார்கள். ஆகையால் - இந்தப் பிரச்சினை ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தமானதாகாது - இந்த மன்றத்தில் வீற்றிருக்கிற நமக்கு இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கேற்ற திறமை இருக்கிறதா? - அல்லது இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாத அளவுக்குத் திறமை குறைவு இருக்கிறதா? என்பதை உலகத்திற்குக் காட்டியாக வேண்டும். ஆகையால்தான் கொள்கையளவிலே சர்க்கார் திட்ட வட்டமாக என்ன கருதுகிறார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு தடவையும் இந்தப் பிரச்சினை உருவெடுக்கிற நேரத்திலே ''எங்களுக்கு இதை கவனிக்க தெரியும், நீங்கள் இதிலே தலையிட வேண்டாம்'' என்று ஒரு இடத்திலே சொல்வதும், மற்றொரு இடத்திலே ''எதிர் கட்சிக்காரர்களை நாடினால் உங்களுக்குக் கிடைப்பதுகூட கிடைக்காமல் போய் விடும்'' என்று அவர்களை மிரட்டுவதும், இன்னொரு தடவை விவாதத்தின்போது ''இந்தப் பிரச்சினைதான் முக்கியமான பிரச்னையா? இதைவிட அடிப்படைப் பிரச்சினைகள் ஏராளம்'' இருக்கின்றனவே. அவைகளே கவனித்து விட்டு இவைகளுக்கு வருவோம் என்று இப்படியே நழுவிக்

கொண்டிருப்பதில்தான் அவர்கள் திறமை காட்டுகிறார்களே தவிர, அவர்களுடைய கொள்கை என்ன என்பதனை திட்டவட்டமாக தெளிவுபடுத்தவில்லை. ஆகையால் நான் முதலில் அறிந்துகொள்ள விரும்புவது, இந்த சர்க்காருக்கு இந்த விஷயத்தில் என்ன வகையான கொள்கை இருக்கிறது என்பதாகும். இதைத் திட்டவட்டமாக எங்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு முன் வரவேண்டும்.

பொதுவாக சர்க்கார் தரப்பிலிருந்தும், ஆளும் கட்சியிலிருந்தும், இது வரையில் பேசியவர்கள் இப்போதும், இதற்கு முன்னாலே இந்த மன்றத்திலே எடுத்துப் பேசப்பட்ட காலத்திலேயும், அவர்கள் தந்திருக்கின்ற கருத்துக்களை மூன்று வகைகளாகப் பிரித்துப் பாக்கலாம். ஒன்று, "எங்கள் இடத்திலே போதுமான பணம் இல்லை" என்பது அவர்கள் சொல்லுகிற வாதமாகும். அதனை ஒரு வாதம் என்று ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று நான் முதலிலேயே சொன்னேன் - பணம் இருக்கிற இடத்தைக் கண்டுபிடித்து எடுப்பதுதான் ஒரு நிதி அமைச்சருடைய வேலை. "வரி போட்டுப் பணம் வாங்கினால் நீங்கள் சும்மா இருப்பீர்களா?" என்று கனம் அங்கத்தினர் கரிய கௌண்டர் அவர்கள் கேட்டார்கள் - நிச்சயமாக சும்மா இருப்போம். ஆனால், எந்த இடத்திலே வரி போட வேண்டும் என்பதிலே - எவ்வளவு வரி போடவேண்டும் என்பதிலே - யாருக்குப் போடவேண்டும் என்பதிலே, நமக்குள்ளே அபிப்பிராய பேதம் நிச்சயமாக வரும் என்று இந்த மன்றத்திலே நான் பல தடவைகள் குறிப்பிட்டிருக்கிறேன். உதாரணமாக, "இந்த மாநிலத்திலுள்ள ஜமீந்தார்களிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட நிலவுடமைகளுக்கு நஷ்ட ஈடாகக் கொடுக்கிற பணத்தைக் கொஞ்ச காலத்திற்குக் கொடுக்காமல் நிறுத்தி வைத்து, அந்தப் பணத்தை இதற்குப் பயன்படுத்தலாமா?" என்று கேட்டால், அதற்கு நான் என்னுடைய இரண்டு கைகளையும் தூக்கத் தயாராக இருக்கிறேன். அதே நேரத்தில் "பண்டங்களை வாங்குகின்ற ஏழை மக்களுக்கு விதிக்கப்படுகிற விற்பனை வரியில் இன்னொரு பைசா கூட்டலாமா?" என்று கேட்டால் "கூடாது, கூடாது" என்று தான் சொல்வேன். ஆகையால் "வரி போட்டால் ஒத்துக் கொள்வீர்களா" என்று பொதுப்படையாகக் கேட்டால் பலன் இல்லை. சாதாரணமாக பணம் இல்லை என்று சொல்லப்படுகிற நேரத்தில் அதை ஒரு வாதம் என்றும் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

முன்பு ஒரு தடவை இதைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் கனம் நிதி அமைச்சர் அவர்கள், ''நிதி அறிக்கை இருக்கிறது, எதிலே செலவழிக்கிற பணத்தைக் குறைத்து இதற்குச் செலவிடுவது என்று பார்த்து விட்டு வழிகாட்டுங்கள் - கல்விக்குக் கொடுக்கின்ற மானியத்தைக் குறைத்துக் கொடுக்கட்டுமா? தொழில் துறைக்குக் கொடுக்கின்ற மானியத்தைக் குறைத்துக் கொடுக்கட்டுமோ? இதைக் குறைக்கட்டுமா? அதைக் குறைக்கட்டுமா?'' என்று கேட்டார்கள். உண்மையாகவே ஒரு செலவைக் குறைத்து இதற்குத் தந்தால்கூட சரிக்கட்ட முடியாத அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதை சாதாரணமாக அனைவரும் அறியலாம். ஆகையால்தான் பணம் இல்லை என்று சொல்லுகிற நேரத்தில், வரிகள் மூலமாகத்தான் பணத்தைத் தேட வேண்டும் என்பதை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். பல தடவைகள் இந்த மன்றத்திலே பேசியும் இருக்கிறேன். வரி போடுவதன் மூலமாகத் தான் ஒரு சர்க்கார் தன் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற தத்துவத்தை மாற்றி, வரியோடு, வருமானத்தைப் பெறத்தக்க தொழில்களை நடத்த சர்க்கார் முன்வர வேண்டும். இதனால் இன்னொரு அடிப்படைக் கொள்கையையும் மாற்றிக் கொள்ள நேரிடும். அந்த அடிப்படைக் கொள்கையை - நீங்கள் தொழில் திட்டத்தில் தனியாருக்குச் சிலவற்றை ஒதுக்கியிருக்கிறீர்கள் - பொதுத் துறைக்கென்று சிவற்றை ஒதுக்கியிருக்கிறீர்கள் - இதில் மாற்றமே கிடையாது என்று சொல்லுகிற அடிப்படைக் கொள்கையை சற்று மாற்றி, தனியார் துறைக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிற - அதிக லாபம் தரக்கூடிய தொழில் - பயிற்சி ஏற்பட்டிருக்கிற தொழில் - இவைகளை தாங்களே ஏற்று நடத்த வேண்டும் என்று என்றைய தினம் இந்த சர்க்கார் கொண்டுவருகிறார்களோ, அப்போதுதான் வருமானம் அதிகரிக்கும் - வருமானம் அதிகரித்தால்தான் இவர்களுக்கெல்லாம் பணத்தைத் தர முடியும். கனம் அங்கத்தினர் கரிய கௌண்டர் அவர்கள் வாதத்திற்காக வேண்டுமானால் சொன்னார்கள் ''வரி போட ஒத்துக்கொண்டால் நிதி அமைச்சர் அவர்களிடம் சொல்லுகிறேன்'' என்று - அவர் சொன்னதினால் நிதி அமைச்சர் ஏற்றுக்கொண்டார்கள் என்று பொருள் இல்லை – நாங்கள் வரி போட ஒத்துக்கொள்வோம் - இந்த நாட்டில் 3 கோடி தமிழர்கள் இருக்கிறார்கள் என்றால், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக தலைக்கு ஒரு ரூபாய் வரி போட

வேண்டும் என்று சொன்னால் - நாங்கள் ஒத்துக் கொள்கிறோம் என்று சொன்னால் கூட நீங்கள் போடமாட்டீர்கள். ஏன் நீங்கள் போடமாட்டீர்கள் என்று சொல்லுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. சும்மா, "போடுகிறோம்" என்று வாதத்திற்காகச் சொல்லி விடலாம். இது சுவையளிக்கக் கூடியதாக இருக்கிறதே தவிர பிரச்சினையைத் தீர்ப்பதாகாது. ஆகவே, சொல்லப்படுகிற முக்கியமான வாதம் பணம் இல்லை என்பது ஒரு வாதமாகாது. மற்றொரு வாதம் என்.ஜி.ஓக்கள் பரவாயில்லை - ஒரு கனம் அங்கத்தினர் சொன்னதைப்போல அவர்களை விட கஷ்டப்படக் கூடியவர்கள் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள் என்பது. முதல் தேதி எப்போது வரும் என்று பார்த்துக் கொண்டிருப்பார்கள் - முதல் தேதி சம்பளம் வாங்கி விடுகிறார்கள் - 28-ம் தேதி முதல் கடன்காரர்கள் பிடுங்குகிற பிடுங்கல் கனம் அங்கத்தினருக்குத் தெரியாது. 28-ம் தேதி முதல் கடன்காரர்கள் தொல்லைபடுத்த ஆரம்பித்து, "1-ம்தேதி வரட்டும், 1-ம் தேதி வரட்டும்" என்று சொல்வதை அடிப்படையாக வைத்து ஒரு சினிமா படத்தையே தயாரித்திருக்கிறார்கள். சினிமாவையே விரும்பாத கட்சியிலே இருக்கின்ற காரணத்தினால், கனம் அங்கத்தினர் பார்த்திருக்க மாட்டார்கள் - நான் பார்த்திருக்கிற காரணத்தினால் இதைப் பற்றிச் சொல்கிறேன் - அந்தப் படம்" முதல் தேதி" என்பது. முதல் தேதி ஆனவுடன், ஜமீன்தார்களுக்கு நஷ்ட ஈடாகக் கொடுக்கக் கூடிய தொகையைப் போல பெரும் தொகையை என்.ஜி.ஓக்கள் வாங்கிக்கொண்டு வருவது போலவும், அதைப் பங்கிட்டுப் பங்கிட்டுக் கை ஓய்ந்து போய், "கொஞ்ச நாளைக்கு ஓய்வு இருங்கள்" என்று இவர்கள் அறிவுரை எடுத்துச் சொல்வது எவ்வளவு கடின இருதயம் இருந்தால் அப்படிப்பட்ட வாதம் வரும்?" என்று என்னை நானே கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, "நாங்கள் திட்டம் போட்டிருக்கிறோம், திட்டம் பெரிதா? இது பெரிதா?" என்று நிதி அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறர்கள். இந்தத் திட்டம் என்ற பிரச்சினை இந்த மாநிலத்தில் மட்டுமல்ல. எப்போது பேசினாலும் - எந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசினாலும் - திட்டத்தையும் அதையும் இணைத்து இணைத்துப் பேசுகிறார்கள். அப்படிப் பேசுகிற காரணத்தினால் அவர்களுக்குத் திருப்தி ஏற்பட்டால்தான் திட்டம் வெற்றி பெறும். திட்டம் வெற்றி

பெறட்டும், இதை கவனிக்கலாம் என்று சொல்வது சரியான முறை ஆகாது; திட்டம் தோற்றுப் போக இதுதான் முக்கியமான காரணமாக இருக்கும் என்று மிகவும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, என்னுடைய இரண்டாவது பதில் - "உங்கள் திட்டத்திலேயே எங்களுக்குச் சந்தேகம் இருக்கிறது" ஏதோ, திட்டம் என்றால் நாடு பூராவிலும் சரிவர நிறைவேற்றியிருக்கிறோம் - எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற மனப்பான்மையில் பேசுகிறீர்கள். ஆனால், திட்டம் நிறைவேற்றப்படுகிற வகையிலும், திட்டம் தீட்டப்படுகிற முறையிலும், திட்டத்திற்காக நீங்கள் செலவழிக்கிற பெரும் தொகையை, சில வேளைகளில் கண்மூடித் தனமாகச் செலவழிக்கிறீர்கள் என்று ஐயப்படுகிற கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள். ஆகையால், "திட்டம் நிறைவேறட்டும், பிறகு பார்க்கலாம்" என்று சொல்வது திருப்திகரமான பதில் ஆகாது. திட்டம் ஒரு சமயத்தில் நல்லபடி நிறைவேற்றப்படவேண்டும் என்று சொன்னாலும் கூட, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கேற்ற மனப்பக்குவத்தை சர்க்கார் ஊழியர்கள் பெறவேண்டுமானால், அவர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்தித்தான் ஆகவேண்டும்.

என்னுடைய நண்பர்கள் எனக்கு சொன்னார்கள் - கணக்குத் தவறுதலாக இருந்தால் நிதி அமைச்சர் அவர்கள் திருத்துவார்கள் என்று நினைக்கிறேன் - மத்திய சர்க்கார் ஊழியர்களாக இருப்பவர்களுக்கு சட்ட பூர்வமான எல்லாவகையான வருமானமும் சேர்ந்து மாதத்திற்கு 130 ரூபாய் கிடைக்கிறது என்றும், மாநில சர்க்காரில் அதே விதமான பணியாற்றுபவர்களுக்கு ரூபாய் 94 கிடைக்கிறது என்றும், பஞ்சப் படியிலே இருக்கிற வித்தியாசத்தையாவது போக்க வேண்டுமென்று என்.ஜி.ஒக்கள் விரும்புகிறார்கள் என்றும் சொன்னார்கள். 130-க்கும் 94-க்கும் இடையிலே இருக்கும் இந்தச் சிறு வித்தியாசத்தை போக்க குறைந்தது 3 கோடி ரூபாய் தேவை என்று புள்ளிவிவரத்திலே காட்டியிருக்கிறார்கள். "மூன்று கோடி ரூபாயை எப்படிப் பெறுவது? - சம்பளத்தை அதிகப்படுத்தினால் இன்னும் சில கோடி ரூபாய்கள் தேவைப்படும்; அதற்கு எங்கே பணம் இருக்கிறது?" என்று நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சில கூட்டங்களிலே சொன்னதாக பத்திரிகையில் பார்த்தேன். "உங்கள் அண்ணாதுரையை திட்டம் கேட்டால், கசாப்பு கடை வைக்க சொல்லுகிறான். வேறு என்ன

திட்டம் கொடுத்தான்?'' என்று கூறுகிறார். இன்று காலையிலே ஒரு சர்க்கார் வெளியீட்டை படித்துக்கொண்டிருந்தேன். மாநிலத்திலே கோழிகளைப் பற்றிய வெளியீடு அது. இந்த மாநிலத்தில் கோழிகளினால் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் வருமானமுள்ள முட்டைகள் கிடைப்பதாக கணக்குக் காட்டியிரு கிறார்கள். வளர்க்கின்ற கோழிகளில், ஒரு கோழிக்கு இரண்டு கோழி வளர்த்தால், மூன்று கோழி வளர்த்தால் - எங்களையா கோழி வளர்க்கச் சொல்லுகிறீர்கள் என்று கோபங் கொள்ளக் கூடாது - கோழி வளர்ப்பைப்பற்றி அறிக்கை வெளியிட்டதன் காரணமாகச் சொல்லுகிறேன். 20 நாட்களுக்கு முட்டை இடுகின்ற கோழி அதற்கு பதிலாக 40 நாட்களுக்கு மீண்டும் முட்டையிடும். இதனால் இப்பொழுது கிடைக்கின்றதைவிட 2 கோடி ரூபாய், 3 கோடி ரூபாய் அதிக வருமானம் கிடைக்கும். பணத்திற்கு என்ன செய்வது என்று நீங்கள் எடுத்துச் சொல்வது, உங்கள் விஷயங்களிலே அபாரமான நம்பிக்கை வைத்திருக்கிற எனக்கு ரொம்பவும் சந்தேகத்தைக் கொடுக்கிறது. தொழிலில் வருவாய் கிடைக்கக்கூடிய நல்ல வகையான திட்டங்களை நீங்கள் தீட்டலாம். அதை மேலெழுந்தவாரியாக இந்த மன்றத்திலே பேசுவதைவிட, என்னுடைய நண்பர் கலியாண சுந்தரம் அவர்கள் சொன்னதுபோல, இதற்கு ஒரு குழு அமைத்து அதிலே எதிர்க்கட்சிக்காரர்களையும் பொருளாதார நிபுணர்களையும் உட்கார வைத்து நாம் அலசிப் பார்ப்போமேயானால், ஒரு சமயம் எங்களுடைய மனதிலே தவறு இருக்குமானால் நீங்கள் நீக்கலாம்; அல்லது, உங்களுடைய சிக்கலை எடுத்துச் சொன்னால், இது சிக்கல் அல்லவே என்று நாங்கள் எடுத்துச் சொல்லலாம். எங்கள் விஷயத்திலே கொஞ்சம் நம்பிக்கை செலுத்தி, நாங்கள் எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் ஆனாலும், நாங்களும் அந்தப் பிரச்சினையில் அக்கறை உள்ளவர்கள் என்பதை உணர்ந்து, வேறு எந்த விஷயத்திலே கவலைப்படா விட்டாலும், அவர்களை தூண்டிலே விடத்தக்கவர்கள் என்ற வகையிலாவது கவனித்து, இந்தப் பிரச்சினையை ஆராய வேண்டுமே தவிர, எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்னால், நாங்கள் கவனிக்க மாட்டோம் என்று சொல்லுவதில் அர்த்தமில்லை என்பதை பணிவன்புடன் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது எத்தனையோ தொழில் துறைகளிலே நாட்டை ஆளுகின்ற சர்க்கார் தங்களை உட்படுத்திக் கொண்டு, அதன் மூலமாக வருவாய் பெற்று

என்.ஜி.ஓக்களின் குறைகள் கொள்கைகளைப்பற்றி திட்டவட்டமாக இன்றையதினம் இந்தமன்றத்திலே தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதிலே திட்டவட்டமாக அவர்களுடைய கொள்கைகளை தெரிவிக்க வேண்டுமென்று விரும்புவது என்ன வெனில், மாநில சர்க்கார் ஊழியர்கள் கோரிக்கை நியாயமானதா என்பதிலே உங்கள் பதில் தெரியவேண்டும். மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும், மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் இடையே இருக்கிற இந்த சம்பள வித்தியாசம் அநியாயமானது. இதை நீக்குதல் போக்குதல் வேண்டும் என்பதிலே உங்களுக்கு திட்டவட்டமாக முடிவு இருக்கிறதா என்று தெரியவேண்டும். இதற்கு பணம் ஒன்று தான் குறுக்கிடுகிறதா, அல்லது உள்ளத்திலே "இவர்களுக்கு ஏன் தரவேண்டும்" என்று எண்ணுகிறீர்களா என்று தெரியவேண்டும். இதை விட்டு விட்டு தந்தை தன் மகனுக்குச் சொல்லுவது போல, தாய் தன்னுடைய மகளுக்குச் சொல்வது போல, பொதுவாகச் சொல்வது போல நிதி அமைச்சர் "உங்கள் குறை எனக்குத் தெரியாதா?" என்று சொல்லக்கூடாது. அவர்கள் கட்சியில் இருப்பவர்கள் "உங்களுக்கு மட்டும் தானா குறை, குறைப்பட்டவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். சொல்லப் போனால் எங்களுக்கே ஏகப்பட்ட குறை இருக்கிறது" என்று எடுத்துச் சொல்லுவதில் பலன் இல்லை. இந்தப் பிரச்சினை நம்மாலே ஆராய்ந்து முடிவு கட்டப்படவேண்டிய பிரச்சினை. ஏனென்றால், சர்க்காருடைய வேலையில் நாளாக நாளாக நுணுக்கங்களும், திறமையும், அறிவும் தேவைப்படுவது வளர்ந்து கொண்டே போகிறது. "வெல்பேர் ஸ்டேட்" க்ஷேமநல சர்க்கார் என்று திட்டத்திலே எடுத்துக்கொண்டிருப்பதால், அந்த சர்க்கார் வேலைகள் நாளாக நாளாக வளர்ந்துகொண்டே வருகின்றன. வளர்ந்து கொண்டே வருவது மட்டுமல்ல, விரிவு படுவது மட்டுமல்ல, பல்வேறு வகையிலே நுணுக்கங்களும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. நுணுக்கமான முறைகளிலே ஆட்சி நடத்தவேண்டிய பெரும் பொறுப்பு ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால், அதை நடத்துகின்ற வர்கள் - ஒரு கனம் அங்கத்தினர் சொன்னது போல - அஸ்திவாரம், ஆணிவேர் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள் - ஆணி வேர் பழுதாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஆணிவேருக்கு தண்ணீர் ஊற்ற மறந்து விட்டு, கிளைகளில் எலக்டிரிக் பல்பு பொருத்தி வெளிச்சம் போடுவது தவறு என்று குறிப்பிட விரும்புகிறேன்.

ஆணிவேர் போல இருக்கிற சர்க்கார் ஊழியர்கள் மனதில் அதிருப்தி ஏழாத நிலையில் - ஒரு கனம் அங்கத்தினர் சொன்னது போல: லஞ்சம் வாங்காதவர்களே கிடையாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு லஞ்சம் பரவியிருக்கிறது என்று ஊரிலே உள்ளவர்கள் பேசிக் கொள்ளும் கேவல பொருளாக அவர்களை ஆக்காமல் அவர்கள் உண்மையான உத்தியோகஸ்தர்களாக இருக்கிறார்கள். அடிப்படை காரியங்களை செவ்வனே நடத்துகிறார்கள் என்று மிக நீண்டகாலமாக புகழ்பெற்று இருக்கும் சென்னை சர்க்கார் ஊழியர்கள், இந்திய துணைக் கண்டத்திலே மிகத் திறம்பட பணியாற்றுகிறவர்கள் என்ற நல்ல பெயர் பெற்றிருக்கிற சர்க்கார் ஊழியர்கள். அரசியல் புயல் எத்தனை ஏற்பட்டாலும், அதிலே தங்களை உட்படுத்திக் கொள்ளாத சர்க்கார் ஊழியர்கள், எத்தனை மாறுதல் ஏற்பட்டாலும் மாறுதலுக்குத் தக்கபடி தங்களுடைய மனதிலே பக்குவத்தை ஏற்படுத்திக்கொள்ளும் திறமை படைத்த சர்க்கார் ஊழியர்கள், இவர்களின் ஊதியத்தை உயர்த்துவது அறநெறி நின்று பணியாற்ற வேண்டியது அமைச்சருடைய காரியம். வெறும் புள்ளி விவரங்களை கொடுத்து தப்பித்துக்கொள்ளக்கூடிய நிதி அமைச்சருடைய காரியம் மட்டுமாக இருத்தல் ஆகாது. அறநெறி நின்று, உள்ளத்திலே உள்ளதை வெளிப்படையாகப் பேசி, இதிலே இருக்கிற சிக்கல்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு ஒரு தனி கமிட்டி ஏற்படுத்துவதுதான் நியாமானது, தேவையானது, அவசரமானது, கட்சிகளுக்கு அப்பாற்பட்டது என்பதனை இந்த மன்றத்திலே வலியுறுத்திக்கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

நில உச்ச வரம்புத் தீர்மானம்

உரை : 23 **நாள் : 30.10.1958**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவது என்ற கொள்கையில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு மாறுபாடான கருத்து இல்லை என்பதாக அவர் எடுத்துச் சொன்னதற்காக நான் உண்மையாகவே மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், அவர்கள் எவ்வளவு தெளிவாக எவ்வளவு தூய நோக்கத்துடன் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் பேசியிருந்தபோதிலும், நாட்டிலே பரவலாக ஒரு எண்ணம் வளர்ந்திருக்கிறது. அதை சிலர் படித்து வரவேற்றிருக் கிறார்கள். சில பேர்கள் பயப்பட்டுக்கொண்டு, நம்முடைய நிதி அமைச்சர் எப்பொழுது மிராசுதாரர்களுக்கு வழக்கறிஞராகி விட்டார் என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய தினம் அவர்கள் நமக்கு அவர் தம் கொள்கையிலிருந்து மாறவில்லை, சர்க்காரும் அந்தக் கொள்கையை நழுவவிடவில்லை என்பதனை எடுத்துச் சொன்னதற்காக நாம் உண்மையாக அவரைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். எனக்கு மிக ஆச்சரியத்தைக் கொடுப்பது என்னவென்றால், அவர் இன்றைய தினம் பேசி எல்லா வாதங்களை யும் ஒவ்வொரு மிராசுதார்கள் மகா நாட்டிலும் பேசுகிறார்கள். நிலத்திற்கு உச்சவரம்பு கட்டவேண்டுமென்று கருதுகின்ற இந்த சர்க்காரினுடைய வாதங்களும், இருக்கிற நிலங்களை விட்டுவிடக் கூடாது என்று பிடிவாதமாகக் கருதிக் கொண்டிருக்கிறவர்களுடைய வாதங்களும், இரண்டும் எப்படி ஒன்று போலவே இருக்கின்றன என்பது எனக்கு அவ்வளவாக விளங்கவில்லை. ஒரு சமயம் உச்சத்திற்கு செல்கிற நேரத்தில் மேதாவிகள் ஒன்றுபட்டுவிடுகிறார்களோ என்று ஐயப்படுகிறேன். மிராசுதார்கள் மகாநாட்டில் நிலத்திற்கு உச்சவரம்பு கட்டக்கூடாது என்று சொல்லுகிற நேரத்தில், அவர்களும் அப்படிச் செய்தால் உற்பத்தி கெட்டுவிடும் என்று வலியுறுத்துகிறார்கள். அது போலவே, நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டவேண்டுமென்று

கொள்கையை உடனடியாக திட்டவட்டமாக நிறைவேற்றினால் உற்பத்தி பாதிக்கப்பட்டு விடும் என்று நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் வலியுறுத்துகிறார்கள். இரண்டு வாதங்களும் ஒன்று போல் காணப்படுவதால், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் மிராசுதார்கள் பக்கத்தில் சாய்ந்துவிட்டார்களோ என்று சிலர் ஐயுறுவதற்குக் காரணம் இருக்கிறது. ஏனென்றால், நாட்டிலுள்ள பெரும்பாலான மக்கள் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களைப் போல் லட்சியம், லட்சியத்திற்கான விளக்கம், திட்டம், திட்ட நிறைவேற்றம் என்றெல்லாம் வகுத்துப் பார்த்து நிலைமைகளை ஆராய்ந்து பார்க்கக் கூடியவர்கள் அல்ல. அவர்களுக்கு அதற்கேற்ற நேரமும் இல்லை. அவர்கள் அறிய விரும்புவது எல்லாம், நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டவேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்ட காலத்தில், அது வேண்டாம் என்று நிதி அமைச்சர் கூறிவிட்டார் என்று வெளியே பேசிக்கொள்ளப்படுகிறதே. அது ஏன் என்பதுதான். வெளியே எப்படிப் பேசிக்கொண்டாலும் அதைத் தாங்கிக் கொள்ளுவதற்கு அவர்களுக்கு வலுவு இருக்கிறது. அவர்களுக்கு வலுவு இருக்கிறது என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : நிலப் பிரச்சினையைப் பற்றித் தீர்மானம் அல்ல அங்கு வந்தது. உணவு உற்பத்தியைப் பற்றிய தீர்மானம்தான் அங்கு வந்திருக்கிறது. அதிலே நிலப் பிரச்சினையைப் பற்றியும் கவனிக்க வேண்டிய ஒரு கட்டம் ஏற்பட்டது. அங்கு இருக்கக்கூடிய ஒரு நண்பர் ஸ்ரீ என். கே. பழனிசாமி அவர்கள் சொன்னது போல, நிலத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டால், தானாகவே உற்பத்தி பெருகிவிடும் என்கின்ற கருத்தை வெளியிட்டார்கள். அது தவறு என்கின்ற முறையில், இது கொஞ்சம் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்று எடுத்துச் சொன்னேன். அங்கு உச்ச வரம்பு பற்றிய தீர்மானமும் வரவில்லை. அதை எதிர்த்துப் பேச சந்தர்ப்பமும் எழவில்லை.

திரு. சி. என். அண்ணாதுரை : நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவது பற்றி அங்கே பிரச்சினை எழவில்லை. உணவு உற்பத்தியைப் பற்றிய பிரச்சினைதான் எழுந்தது என்று நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தார்கள். அங்கே நிதி அமைச்சர் அவர்கள் வெளியிட்ட கருத்து நாம் இப்பொழுது எடுத்துக்கொண்டு விவாதித்துக் கொண்டிருக்கிற தீர்மானத்திற்கு பாதகமாகிவிடக்கூடாது என்ற அளவில்தான் நான் கூறுகிறேன். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டவேண்டும் என்று

சொல்லுகின்ற நேரத்தில், ஒரு லட்சியத்தை பார்த்துக்கொண்டிருக் கிறோம். அந்த லட்சியத்திலிருந்து நழுவவிடவில்லை என்று மறுபடியும் நிதி அமைச்சர் அவர்கள் உறுதி அளித்ததற்காக நாட்டிலுள்ள எல்லா கட்சியினர்களும் அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக் கிறார்கள். அதனை அவர்கள் விளக்குகின்ற நேரத்தில், ''நான் இப்பொழுது புதிய கருத்துக்களை சொல்லவில்லை. நீண்ட நாளைக்கு முன்னாலேயே சொல்லியிருக்கிறேன்'' என்று கூறினார். நல்ல பெயருக்கு விதைகள், நீர்ப்பாசன வசதிகள், நல்ல உரங்கள், குடியானவர்களுக்குத் தேவையான பண வசதிகள், இவைகளை யெல்லாம் கொடுத்தால்தான் உற்பத்தி பெருகுமே தவிர, நிலத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டால் உற்பத்தி பெருகிவிடாது என்பதனை எடுத்துச்சொன்னார்கள். நிலத்தைப் பிரித்து வாங்கிக்கொள்கிறவர் களும், நிலத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு, நல்ல விதை, நல்ல உரம், சர்க்காரிடமிருந்து மானியங்கள், கடன்கள் இவைகளையெல்லாம் பெற முடியும் என்ற நம்பிக்கையின் பேரிலேதான் நிலத்தை கேட்கிறார்களே தவிர, நிலத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டால், நந்தனார் காலம் போல் சிவகணங்கள் வந்து உழுது விடுவார்கள் என்று நம்பிக் கொண்டிருக்கவில்லை. நாட்டை ஆளுகின்ற சர்க்கார் ஏழை விவசாயிகளுக்கு நிலத்தைப் பங்கிட்டுக் கொடுக்க கடமைப்பட்டி ருப்பதுபோல், பிரித்துக்கொடுத்த நிலங்களை நல்ல விளை நிலங்களாக மாற்றுவதற்காக ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்ய கடமை பட்டிருக்கிறார்கள். வேண்டுமானால், அந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வசதி இல்லை என்று வாதாடலாம். அதற்குப் போதுமான திட்டங்களை நாங்கள் போட்டுக்கொள்ளவில்லை என்று சொல்லலாம். அதை வேண்டுமானால் குற்றமாகச் சொல்லுங்கள் என்று நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களை குற்றம் கூறுவதற்கு நாங்கள் அவ்வளவு பெரியவர்கள் அல்ல. எனக்குத் தோன்றுவது என்னவென்றால், நிதி அமைச்சர் இந்தப் பிரச்சினையை தெரிந்து கொண்டிருக்கும்போது, நிலத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்று அவரைச் சார்ந்திருக்கிற கட்சியினர்களும், அவர்கள் ஈடுபட்டிருக்கிற ஆட்சியும் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறபோது, அது வெற்றிபெறுவதற்கான திட்டங்களை இதற்கு முன்னாலே வகுத்துக்கொள்ளுவதற்கு என்ன? என்ன குறிக்கிட்டது என்று அறிய விரும்புகிறேன். 1953-ஆம் ஆண்டிலேயே இதைப்பற்றி நான் வலியுறுத்தி யிருக்கிறேன் என்று இந்த மாமன்றத்தில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் இதைப் பற்றி பேசியதை எடுத்து படித்துக் காண்பித்தார்கள்.

அதிலிருந்து இது வரையில், இப்பொழுது அவர்கள் அமைக்க விரும்புகிற அந்தக் கமிட்டியை, அதாவது இந்த சட்டமன்ற அங்கத்தினர்கள் கொண்ட கமிட்டியை அமைத்து இதுவரையில் வேலை செய்து வந்திருந்தால் இப்படி குந்தகப்பட வேண்டிய அவசியமும் தயக்கமும் அடையவேண்டிய காரணமும் இருந்திருக்காது. அப்படிச் செய்ய முடியாமல் இருந்ததற்குள்ள காரணத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களுடன் நெருங்கிப் பழகக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. ஒன்று எனக்குத் தோன்றுகிறது, இந்தப் பிரச்சினைகளை நன்றாகப் புரிந்து கொண்டும் அதைத் தீர்க்காமல் இருந்திருக்கிறார்கள் என்றால் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏற்ற ஆற்றல் பெற்று இருக்கிறார்கள். அப்படியிருந்தும் அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் தங்களையும் அறியாமல் எதிரிகளுடைய கையாளாக ஆகி விட்டார்களோ என்றுதான் நான் வருத்தத்துடன் கூற வேண்டியதாக இருக்கிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக மட்டுமே நிலத்தைப் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்று யாரும் வாதாடுவது இல்லை. நிலத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டியதன் லட்சியம் அவர்களுக் குள்ள ஒரு உடமையில் உரிமை பெறவேண்டும் என்ற கொள்கையும், அவர்கள் உழைப்பதற்கான பலன் அவர்களுக்கே சேருகிறது என்ற உரிமை மனப்பான்மை அவர்களுடைய மனதில் வரவேண்டும் என்ற திட்டத்தையும் வைத்துத்தான் நிலத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று பேசுகிறோம். அதிக அளவுக்கு ஒருவரிடத்தில் செல்வம் குவிந்திருக்கக்கூடாது என்று சம தர்மப் பிரச்சினை இருக்கிறதே தவிர உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக சமதர்ம பிரச்சினை ஏற்படவில்லை. சம தர்மப் பிரச்சினை இல்லாத நாட்டிலே கூட உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறது. முதலாளித்துவ நாடாகிய அமெரிக்காவில்கூட உணவு உற்பத்தி ஏராளமாகப் பெருகி இருக்கிறது. அதைப் போலவே சம தர்மத்திற்கு அச்சாணியாக இருக்கக்கூடிய சோவியத் நாட்டில் கூட உணவு உற்பத்தி பெருகிக் கொண்டே இருக்கிறது. திட்டத்தின் அடிப்படையில் உணவு உற்பத்தி பெருக வேண்டும் என்று பேசுகிற நேரத்தில், திட்டங்களின் அடிப்படையில் உணவு உற்பத்தி என்பது உணவு உற்பத்தி பெருகுவதற்கு திட்டங்கள் உதவிகரமாக இருக்கலாம் என்பதுதான் பொருள். உணவு உற்பத்தி பெருகவேண்டும் என்று கூறுகிற நேரத்தில்

நிலத்தினுடைய தரம், அதில் பாடுபடுகிற மக்களுக்கு கிடைக்கிற வசதிகள், அப்படிப்பட்ட வசதிகள் நாட்டை ஆளுகிறவர்கள் செய்து தருகிற முறை, பாங்கு, அவைகளைப் பொறுத்து உற்பத்தி பெருக்கம் இருக்கிறது. கோவை மாவட்டத்தில் நிலத்தினுடைய வளத்தைப் பற்றியும் உழைப்பாளிகளுடைய திறமைப்பற்றியும் கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார். ஒரே நாளில் செங்கற்பட்டு மாவட்டத்தின் நில வளத்தைப் பற்றியும் கோவை மாவட்டத்திலுள்ள நில வளத்தைப் பற்றியும் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொண்டது பற்றி நான் மகிழ்கிறேன். கோவை மாவட்டத்தில் நிலவளம் அவ்வளவு அதிகமாக இருப்பதன் காரணம் அங்குள்ளவர்கள் ''வர்ஜின் சாயில்''.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : அங்கே நல்ல உழைப்பாளிகள் இருக்கிறார்கள். அதுதான் காரணம்.

திரு. எம். கல்யாணசுந்தரம் : அப்படியானால் மற்றவர்கள் சோம்பேறிகளா?

திரு. சி. என். அண்ணாதுரை : ''வர்ஜின் சாயில்'' என்பதன் முழுப் பொருளை கனம் நிதி அமைச்சர் அவர்கள் உணர்ந்து கொண்டால் நல்லது. வர்ஜின் சாயிலாக இருப்பதன் காரணத்தாலேயும் நல்ல உழைப்பாளிகளாக இருப்பதன் காரணத்தாலேயும் உணவு உற்பத்தி அதிகமாகி இருக்கிறது. எங்கள் மாவட்ட நிலம் கொஞ்சம் ஔவை பிராயத்தை அடைந்திருக்கிறது. அதனால்தான் செங்கற்பட்டு ஜில்லாவில் நல்ல உழைப்பாளிகள் இருந்தும்கூட பலன் கிடைக்க வில்லை என்பதை நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. கோவை மாவட்டத்தில் மண் வளம் எப்படி இருக்கிறது என்பதையும் நான் மறக்கவில்லை. பல ஆண்டுகள் அங்கே தங்கி வாழ்ந்திருக்கிறேன். அவர்களுடைய உழைப்பு திறமையும் தமிழ கத்திலேயே வேறு எந்த உழவர்களுக்கும் இல்லை என்பது தெரியும். அதை நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். ஏனென்றால் அவர்கள் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு அவர்களைச் சூழ இருக்கும் காடுகளை எல்லாம் - கோவையில் நிலங்களை அவர்கள் காடுகள் என்றுதான் சொல்லுவார்கள் - அந்தக் காடுகளில் அவர்கள் பருக்கைக் கற்களைப் பொறுக்கி எடுத்து வீசிவிட்டு, நிலம் வளம்பெற, பாடுபட்டு உழைத்து வருகிறார்கள். அப்படி உழைப்பதற்கும் அவர்களுக்கு உற்சாகம் இருக்கிறது. அதில் விளைகிற அவ்வளவும் அவர்களுக்கே சொந்தம், இதிலே விளைகிற நெல்லை எந்த வியாபாரியும் கொள்ளை

லாபத்திற்கு விற்கப் போவதில்லை. இதிலே கிடைக்கும் தானியம் மறுபடியும் கஞ்சிக் கலயத்திற்கு வந்துசேரும் அல்லது அருமை மனைவிக்குத் தங்க நகையாகும். நிதி அமைச்சர் சொன்னதைப்போல் ஆறாயிரம், ஏழாயிரம் என்று பணத்தைச் சேர்த்து வைக்க உதவும்; சில இடங்களில் அவர்களுக்குப் பிறக்கும் உதவாக்கரைப் பிள்ளைகள் செலவழிப்பதற்குக்கூட பயன்பட்டுக்கொண்டு வருகிறது என்ற எண்ணம், உழைப்பை அதிகப்பலனுள்ளதாக்குகிறது.

நிலம் தங்களுக்குச் சொந்தம் என்ற எண்ணம் வரும்போது, அதிலே கிடைக்கும் உற்சாகம் நல்ல விதையிலே இல்லை. அதிலே கிடைக்கும் உற்சாகம் நல்ல உரத்திலே இல்லை. உரம் வேண்டாம், விதை வேண்டாம் என்று சொல்லவில்லை. உரத்தையும் விதையையும் வாங்கித்தர வேண்டியது சர்க்காருடைய கடமை. அதைப்போலவே நாட்டு மக்களுக்கு அவர்கள் உழைப்பினால் கிடைக்கும் பலனை அவர்கள் அனுபவிக்க முடியும் என்ற உரிமை தரும் உற்சாகத்தை அளிக்கவேண்டும்.

வசதி இல்லாதவனுக்கு நிலத்தைப் பங்கிட்டுக் கொடுத்தால் என்ன பலன் என்று நம்மிடத்தில் வாதாடும் நிதி அமைச்சர் அவர்கள் காங்கிரஸ் தியாகிகளுக்கு நிலத்தை 3 ஏக்கர் 10 ஏக்கர் என்று பங்கிட்ட நேரத்தில் அவர்களிடம் ஏர் இருக்கிறதா, கப்பை இருக்கிறதா, பணம் இருக்கிறதா என்று ஆராயவில்லை என்பதைக் கவனிக்கவேண்டும். அவர்களால் நல்ல விதை வாங்கிக் கொள்ள முடியுமா என்றும் எண்ணிப் பார்க்கவில்லை. உரம் பெற்றுக்கொள்ள வசதி இருக்கிறதா என்றும் எண்ணிப் பார்க்கவில்லை. தியாகம் செய்தார்கள், அவர்களைக் காப்பாற்றினால் பெருமை பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணத்திலே பங்கீட்டுக் கொடுத்தார்கள். நிதி அமைச்சர் சொன்னதுபோல், சிலர் நல்ல உழைப்பால் பயன் அடைந்தார்கள். சிலர் நிலத்தைப் பெற்று, கடன்பட்டுக் கெட்டுவிட்டும் இருக்கிறார்கள். சிலர், நிலத்தை வாங்கி யார் யாருக்குக் கொடுக்கவேண்டுமென்று மனதில் எண்ணியிருந்தார் களோ அவர்களுக்குக் கொடுத்தும் இருக்கிறார்கள். பலவகையிலே நிலம் துர்விநியோகிக்கப்பட்டதைக் காரணமாகக் காட்டி, நிலத்தைப் பங்கிட்டுக் கொடுக்கக்கூடாது என்று நிதி அமைச்சர் வாதாடி தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார் என்று மற்றவர்கள் பேசி, அவருடைய வாதத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதற் காகத்தான் இன்றையதினம் அமைச்சர் அதைப்பற்றி பேசவேண்டும் என்று பெரிதும் விரும்பினேன். 'நிலத்தைப் பிரித்துக் கொடுப்பது தவறு

என்ற வாதத்தை நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள்; பாருங்கள்; பாருங்கள்' என்ற வகையில் பெரிய பெரிய பத்திரிகைகள் அவருடைய படத்தைப் போட்டுக் காட்டுவதையும், அவர் எங்கேயாவது மயங்கி விடுகிறாரோ என்பதற்காகவும், அதையெல்லாம் கண்டு அவர் பேசிய பேச்சை பக்கம் பக்கமாகப் போடுவதையும் கண்டு அவர் மயங்காமல், தம்முடைய கொள்கையை எடுத்துச் சொல்ல வேண்டுமென்றும் நான் பெரிதும் விரும்பினேன்.

லட்சியங்களை நிறைவேற்றும் நேரத்தில், நேரிடக்கூடிய கொள்கைக் குழப்பங்கள், நேரிடக்கூடிய சிக்கல்கள், இவைகளை அமைச்சர்களும் மற்றோரும் அனுசரித்துப் பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் சொல்வோன் - நம்முடைய நாட்டில் ஆயிரம் இரண்டாயிரம் ஏக்கர் என்றோ, 'பெசண்ட் ப்ரொப்ரைட்டர்' என்று சொல்லக்கூடிய சிறு சிறு நிலச்சுவாந்தார்களிடத்தில் பெருவாரியான நிலம் இருக்கிறது என்பதை அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியிருந்தும், ஏன் உற்பத்தி பெருகவில்லை என்று 1953ஆம் ஆண்டிலே அவர்கள் கேட்டதை இங்கே படித்துக் காட்டினார்கள். இப்பொழுது அவர்களே மற்ற சொற்பொழிவுகளிலே இங்கே நம்முடைய உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதைக் காட்டியிருக்கிறார்கள். 1953ஆம் ஆண்டிலே நிலம் பிரிக்கப்பட்டால் உற்பத்தி பெருகி விடாது என்று எடுத்துச் சொல்லப் பயன்பட்ட அதே வாதத்தை இன்றைய தினம் எதற்குப் பயன்படுத்துகிறார்கள். எங்களுடைய நாட்டில், எங்களுடைய திட்டத்தினால், நாங்கள் விவசாயிகளுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதிலே எடுத்துக்கொண்ட முயற்சியினால் உற்பத்தி பெருகியிருக்கிறது என்று காட்டப்படுகிறது. உற்பத்தி பெருக்கத்திற்கும், நிலத்தைப் பிரிப்பதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அதே நேரத்தில், அவர் உண்மையாக ஒன்றுக்கொன்று இந்த ஆண்டு பிரச்சினைகளையும் தொடர்பு படுத்த வேண்டிய அவசியம் இல்லையென்றால், நம்முடைய நண்பர் கோதண்டராமன் அவர்கள் கொண்டு - வந்திருக்கும் தீர்மானத்தைச் சர்க்கார் ஏற்றுக்கொள்வதால் ஒரு சங்கடமும் இல்லை. தீர்மானம் குறிப்பிடுவது லட்சியத்தைத்தான். அதிகமான அளவுக்கு நிலத்தை வைத்துக் கொண்டிருப்பவர்களைப் பொறுத்த வரையில், உச்ச வரம்பு கட்டி விடுங்கள், மிச்ச நிலங்களை நிலமில்லாத ஏழை மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுங்கள் என்ற லட்சியம் தீர்மானமாக தரப்பட்டிருக்கிறது. அதை ஏற்றுக்

கொள்வதால் உற்பத்தி ஒன்றும் கெட்டுவிடாது என்று நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நம்புவார்கள் என்று நான் நம்புகிறேன். தீர்மானத்தை ஏற்றுக்கொண்டுவிட்டேன் என்று நிதி அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டால், வெளியிலே உள்ளவர்கள், நாம் எந்த இடத்தை நோக்கிச் செல்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும். இந்தத் தீர்மானத்தை சர்க்காரே ஏற்றுக் கொண்டால், அது அவர்களுடைய பெருந்தன்மையை மட்டுமல்ல, அவர்களுக்கு லட்சியத்திலே இருக்கும் நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுவதாக அமையும்.

ஆகையால், இதை ஏற்றுக்கொள்வதற்கும் உணவு உற்பத்திக்கும் அதிக சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டவேண்டும் என்ற பிரச்சினை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியிலே பேசப்பட்ட நேரத்திலேதான் இந்தத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன என்று அறிகிறேன். அங்கே நிறைவேற்றிய தீர்மானத்தின் வாசகத்தைச் சொன்னால் நன்றாக இருக்கும் என்று நிதி அமைச்சர் அவர்களை நான் முதலிலேயே கேட்டுக்கொண்டேன். தீர்மானத்தின் வாசகத்தைப்பற்றி யார் என்ன சொன்னாலும், நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டிப் பிரித்துத் தரவேண்டுமென்பதுதான் சர்க்காருடைய லட்சியம் என்பதையும், உணவு உற்பத்திப் பெருக்கத்தையும், நிலப் பிரச்சினையையும் ஒன்று படுத்துவது தவறு என்பதையும் நிதி அமைச்சர் அவர்கள் உடனடியாக பொது மக்களுக்கு ஒரு அறிக்கையின் மூலம் தெரிவித்துவிட வேண்டும். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவது என்ற சர்க்காருடைய லட்சியத்தை நழுவவிட்டுவிட வில்லை, நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவது எங்களுடைய கடமை, உணவு உற்பத்தியை எப்படிப் பெருக்குவது என்பதற்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்று நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பாரானால், மிக நல்ல முறையிலே அது நாட்டுக்குப் பயன்படும். அப்படிச் செய்யாவிட்டால், நாட்டில் பலர் உணவு உற்பத்தியை அதிகரித்தல், நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டுதல் ஆகிய இரண்டு பிரச்சினைகளையும் சேர்த்து, ''பாருங்கள், பாருங்கள்; கனம் நிதி அமைச்சர் நன்றாகக் கூறியிருக்கிறார். நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டினால் உணவு உற்பத்திப் பெருக்கம் பாதிக்கப்படும் என்று அவர் கூறியிருக்கிறார். அவர் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர். எனவே, அவர் உழவுத் தொழிலில் திறமை படைத்தவர். அவரே அவ்வாறு கூறியிருக்கிறார்'' என்று சொல்வார்கள். கனம் நிதி அமைச்சரின்

நண்பரும் என் நண்பருமான திரு. கருத்திருமன் அவர்கள் உழவருக்கு நிலத்தில் ஒரு அங்குலம் விட்டுக்கொடுப்பதற்குக்கூட எவ்வளவு பிடிவாதம் செய்தார்கள் என்பதைப் பார்த்தோம். 'உழவருக்கு அதிக நெல் கொடுங்கள்' என்று நாங்கள் சொன்னபோது திரு. கருத்திருமன், 'ஏன் நாற்று நடுபவர்களுக்கு நெல் கொடுக்க வேண்டாமா?' என்று கேட்டு கடைசியில் மாடு வரைக்கும் தமது வாதத்தைக் கொண்டு வந்தார். ஒருவருக்கு நிலத்தில் உரிமை ஏற்பட்டு விட்டால் அதை விட்டுக்கொடுப்பது அவருக்கு அவ்வளவு சுலபமல்ல. உடைமை உணர்ச்சி என்பது யாருக்கும் எளிதில் குறையாது. வாதம் செய்வதால் உடைமை உணர்ச்சி குறைந்துவிடாது. ஒரு கட்சியில் சேர்ந்து விட்டதால் மட்டும் உடைமை உரிமையை விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை யாருக்கும் வந்துவிடாது. தங்கள் கட்சியில் சேர்ந்து விட்டவர்களுக்கு அந்த மனப்பான்மை வந்துவிடும் என்று பெரும் கட்சித் தலைவர்கள் நம்பினால் அவர்கள் தவறு செய்தவர்கள் ஆவார்கள். யாருக்கும் உடைமை உணர்ச்சி அவ்வளவு சீக்கிரம் குறைந்து விடாது. நிலச்சுவாந்தார்களுக்கு இருக்கும் நில உடைமை உணர்ச்சியைக் குறைக்க வேண்டுமென்பதற்காகத்தான் நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டும் லட்சியத்தை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நிலச்சுவாந்தார்கள் நில உடைமையை விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்று ஸ்ரீ. அண்ணாதுரை சொன்னார். நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டப்பட்ட பிறகு, என்னிடம் உச்ச வரம்பிற்கு மேல் உள்ள நிலங்களை யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினர் கூறுகிறாரோ அவர்களுக்குக் கொடுக்க நான் தயாராயிருக்கிறேன் என்று இந்த சந்தர்ப்பத்தில் அறிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : அவ்வளவு தயாராக இருப்பவர் வினோபாஜி வந்தபோது அவருக்குக் கொடுத்திருக்கலாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவருக்குக் கொடுத்திருக்கிறேன். அது கனம் அங்கத்தினருக்குத் தெரியாது. ஏனென்றால் அப்போது அவர் அரசியலில் இல்லை.

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டங்கள் கொண்டுவரப்படும் போது மனிதர்களின் நல்லெண்ணங்களைத் தடவிப்பார்த்து அவை கொண்டுவரப்படுவதில்லை. நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டும்

சட்டம் கொண்டுவரப்பட்ட பிறகு, நல்ல மனிதர்களின் நல்லெண்ணத்தை அறிந்துகொள்பவர்கள் பலர் நிச்சயமாக திரு. கருத்திருமன் போன்றவர்களிடமிருந்து நிலங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடும்.

உச்ச வரம்பு கட்டிவிட்டால், அந்த வரம்பிற்கு மேல் நிலச் சுவாந்தார்களிடம் இருக்கும் நிலங்களை என்ன செய்வது என்று கேட்கப்படுகிறது. அவை விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படா விட்டால் உணவுஉற்பத்திப் பெருக்கத் திட்டம் கெட்டுவிடுமே என்று கூறப்பட்டது. நாம் அவ்வாறு கவலைப்பட வேண்டியதில்லை. அந்த நிலங்களை நிலமில்லாத ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதற்கான வழிவகைகளைக் காணவேண்டும். அந்த நிலங்களைக் கூட்டுறவு சாகுபடித் திட்டத்திற்கு உட்படுத்தலாம் என்றால், கூட்டுறவு சாகுபடி முறை நல்ல பலன் தரவில்லையே என்று சொல்லப்பட்டது. எதிர்க் கட்சிக்காரர்கள் நல்ல லட்சியத்தை வகுத்துக் கொடுத்தால் 'அதை நாங்கள் எப்படி நிறைவேற்றுவது' என்று சர்க்கார் சொல்கிறார்கள். சர்க்காரால் கூட்டுறவு சாகுபடித் திட்டத்தையும் நல்ல முறையில் நடத்த முடியவில்லை; எதிர்க் கட்சிக்காரர்கள் குறிப்பிடும் லட்சியத்தையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; அவர்களாக வும் நல்ல வழிவகைகளை வகுத்துக்கொள்ளமாட்டார்கள்; நல்ல திட்டங்களை அமலுக்குக் கொண்டுவரும் விஷயத்தில் எதிர்க்கட்சி களுடன் கலந்தாலோசிக்கவும் மாட்டார்கள்; இந்த நிலையில் ஆளும் கட்சியினர் வீணாக வாதாடுவதில் பயனில்லை. ஜனநாயகத்தில் ஆளும் கட்சிக்கு உள்ள வலிமையைப் பயன்படுத்திக்கொண்டு வாதாடுவதில் பயனில்லை. சட்ட மன்றத்தில் ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் வெறும் வாதப் பிரதிவாதங்கள் செய்வதில் பயனில்லை. அவரவர்களிடம் உச்ச வரம்பிற்கு மேல் இருக்கும் நிலங்களை மற்றவர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கும்போது அவைகளை எவ்வாறு - எந்த அளவில் - பங்கிட்டுக் கொடுப்பது எப்படிச் செய்தால் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்குச் சதாகமாக இருக்கும் என்று யோசனை கூறக்கூடிய நிபுணர்கள் நம்மிடம் இல்லாமலில்லை. உணவு உற்பத்திப் பெருக்கம் சம்பந்தமாக ராஜ்ய அரசாங்கத்தார் அமைத்திருக்கும் கமிட்டியில் எதிர்க் கட்சிக்காரர்கள் சேர்க்கப்படவில்லை. 'இங்கே சொன்னாலும் கேட்டுக் கொள்கிறேன். வெளியே சொன்னாலும் கேட்டுக்கொள்கிறேன்' என்று கனம் நிதி அமைச்சர் சென்னார். 'அக்ரிகல்சர் கமிட்டி'யில் ஆளும் கட்சியைச்

சேர்ந்தவர்களும் அதிகாரிகளும் அங்கத்தினர்களாக நியமிக்கப் பட்டிருக்கிறார்களே தவிர, எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் அங்கத்தினர்களாக நியமிக்கப்படவில்லை. எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதில் இடம் பெறச் செய்வதற்கு அரசாங்கத்தார் வழி வகுக்கவில்லை. அரசாங்கத்தாரின் காரியம் இப்படிப்பட்டதாக இருக்கிறது. இந்த சர்க்கார் இவ்வாறு செயலாற்றிவிட்டு, யார் வேண்டுமானாலும் எந்த யோசனையை வேண்டுமானாலும் சொல்லலாம் என்று சொல்கிறார்கள். இது எதைப் போல் இருக்கிறது? இது, இரவில் வீட்டிற்கு வந்த விருந்தாளியை வாசலில் உட்காரவைத்து விட்டு வீட்டுக்காரன் உள்ளே போய் தான் சாப்பிட்டு விட்டு வெளியேவந்து விருந்தாளியிடம் 'சாப்பாடு ஆகிவிட்டதே, தூங்குவோம். காலையில் பார்த்துக்கொள்ளலாம்' என்று சொல்வது போல் இருக்கிறது. இந்த வழக்கம் கோவையில் கிடையாது. பஞ்சப் பிரதேசத்தில் இதே வழக்கம் உண்டு. நாங்கள் குறிப்பிடும் திட்டங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது கனம் நிதி அமைச்சர் "இது கசாப்புக் கடைத் திட்டத்தைப் போல் இருக்கிறது. இது கோழி முட்டைத் திட்டத்தைப்போல் இருக்கிறது. இது பலனளிக்குமா? எப்பொழுது பலனளிக்கும்; பத்து வருஷங்களாகுமே; என்று குறிப்பிடுகிறார். நான் கோழி வளர்த்திருக்கிறேன். ஆறாவது மாதத்தில் கோழி முட்டையிடும்; அவரசப்பட்டு அடை காக்காமலிருந்தால் 25 நாட்களில் குஞ்சு பொறிக்கும். பத்து வருஷங்கள் காத்திருக்க வேண்டாம்.

உயர் திரு. சி. சுப்பிரமணியம் : இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால், திட்டம் பலனளிக்க பத்து வருஷங்கள் ஆகும் என்றுதான் நான் சொன்னேன். அதாவது, இப்போதிருக்கும் அளவை இன்னும் அதிகப்படுத்தி மூன்று கோடி ரூபாய் வருமானம் பெறுவதற்கு பத்து வருஷங்கள் ஆகும் என்று சொன்னேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : யோசனைகளை நன்றாகப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். திட்டங்களைத் தெரிவிக்கும்போது கேலி செய்வது எளிது. திட்டங்களைக் கொடுப்பவர்கள் அவைகளைப் பூராணமாகக் கொடுக்க முடியாது. கோடிட்டுத்தான் கொடுக்க முடியும். திட்டங்களைக் கோடிட்டுக் காட்டுபவர்களைப் பற்றி கேலி பேசுவது எளிது. அவர்களைப்பற்றி அவ்வாறு கேலி பேசுவதைப் பொழுது போக்காக வைத்துக்கொள்ளலாம்; ஆனால் அவ்வாறு செய்வதன் மூலம் பிரச்சினையைப் புரிந்துகொள்ளவோ, தீர்க்கவோ

முடியாது. எங்களுக்கு சந்தர்ப்பம் வாய்க்கும்போது நாங்களும் கனம் அமைச்சர் கோடிட்டுக் காட்டுவதை கேலி செய்ய முடியும். கனம் நிதி அமைச்சர் நல்ல உழைப்பாளி, ஏனென்றால் அவர் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்று நாங்கள் சொல்ல முடியும். கேலி பேசும் வழக்கத்தை கனம் நிதி அமைச்சர் கடைப்பிடிப்பார் என்று நான் நம்பவில்லை. இந்த வழக்கம் ஜனநாயகத்தில் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இதைப்பற்றி நான் இவ்வளவு தூரம் பேசுகிறேன்.

உற்பத்தி ஆகக்கூடிய நிலங்களை தனிப்பட்ட ஆட்களிடத்தில் விட்டு விட்டால் சாகுபடி செய்வதற்கு அவர்களுக்கு வசதி கிடைக்காது என்றால், பஞ்சாயத்து யூனியன்களிடம் அவைகளை ஒப்படைத்துவிடலாம். அந்த பஞ்சாயத்து யூனியன்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் சர்க்கார் மான்யங்கள் தரலாம். ஆனால் அதில் கிடைக்கக்கூடியது பஞ்சாயத்துக்குச் சொந்தமென்று ஆகவேண்டும். என்ன செய்வது? வேறு பல சிக்கல்கள் உண்டானால் என்ன செய்வது? என்று சிக்கல்களைக் காட்டி திணற வைப்பதில் பிரயோஜனம் இல்லை. எப்படிப்பட்ட நல்ல திட்டமானாலும் சரி சிக்கல் இல்லாமல் இராது. சிக்கலை நீக்குவதில்தான் இன்பம் இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியாமல் இராது. நூல் நூற்கிற அவருக்கு எத்தனை தரம் அது அறுந்து போகிறது, எத்தனை தரம் ஒட்டவைக்க வேண்டியிருக்கிறது, முடிச்சுப் போட்டு நூல் இழுக்கும் போது எத்தனை இன்பம் உண்டாகிறது என்பது தெரியாமல் இராது - அவர் நூல் நூற்கிறார் என்ற நம்பிக்கையில் பேசுகிறேன் - சிக்கலை நீக்குவதில்தான் இன்பம் இருக்கிறது என்பதை உணர்ந்து சிக்கல்களை நீக்குவதில் தாங்கள் எவ்வளவு திறமை உடைவர்கள் என்பதைக் காட்டுவார்களானால் மெத்த மகிழ்ச்சியடைய முடியும். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவது சர்க்காருடைய கொள்கை என்பதைத் தெளிவு படுத்தியதற்காக நன்றி கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரை மீது விவாதம்

உரை : 24 *நாள் : 09.02.1959*

திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னருடைய உரையின் பேரில், பல்வேறு கட்சிகளும் உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துரைகளைத் தெரிவிக்கின்ற முறையில், நான் என்னுடைய கருத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இதை ஏன் இன்றையதினம் வலியுறுத்த வேண்டியிருக்கிற தென்றால், கவர்னர் உரையாற்றிய விழாவின்போது வராமலிருந்தவர் கள், அவருடைய உரையைப்பற்றி தங்களுடைய கருத்துரைகளை வழங்கலாமா என்ற கேள்வி பல்வேறு உறுப்பினர்களாலே இந்த மன்றத்தில் எழுப்பப்பட்ட காரணத்தினாலே, விழாவிலே கலந்து கொள்ளாமலிருப்பது என்பது ஒன்று; கவர்னருடைய உரையைப் பற்றி அந்தந்தக் கட்சிகள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பது என்பது முற்றிலும் வேறானது என்பதை நான் நினைவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டதே என்று நான் மிக வருந்துகிறேன்.

விழாவிலே கலந்து கொள்ளாதவர்கள் விழாக் காலங்களிலே சொல்லப்படுகிற கருத்துக்களுக்கு மறுப்புரைகளோ விளக்கவுரை களோ அளிப்பது, காங்கிரஸ்காரர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னாலேயே, வெள்ளையர்கள் ஆட்சிக் காலத்திலே, கையாண்ட முறைதான் என்பதைப் பலர் எடுத்துக்காட்டினார்கள்.

ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் சொன்ன சில கருத்தை மறுத்துப் பேச, அல்லது விளக்கம் அளிக்க வந்த, சர்தார் வேதரத்னம் அவர்கள், "அதெல்லாம் ஒரு சமயம் ராஜா சர் அவர் களுடைய பழைய கால அரசியல் நினைவாக இருக்கலாம்" என்று சொன்னார்கள். நான் அதிலே ஆச்சரியப்படவில்லை. ஆனால், எனக்கு

இருக்கும், ஆச்சரியம் எல்லாம் - திரு. வேதரத்னம் அவர்களும் தங்களுடைய பழைய கால நினைவுகளை மறந்துவிட்டார்களே என்பதுதான் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது.

கவர்னர் ஆற்றிய உரையில் உப்பு சப்பு இல்லை என்று பலரால் எடுத்துச் சொல்லப்பட்டது. அதற்கு மிக முக்கியமான காரணம் எதுவாக இருக்குமென்று நான் கருதியதில், கவர்னர் தம்முடைய உரையின் கடைசியில், "அமைச்சர் அவையின் பொருளாதாரக் கொள்கையைப்பற்றி வரவு செலவுத் திட்டத்தின் போது நிதி அமைச்சர் அவர்கள் தருவார்கள்" என்று குறிப்பிட்டிருப்பதால், இதிலே எந்தக் கொள்கையைப்பற்றியும் பேச வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தால், நடைபெற்ற செய்திகளையும், நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிற செய்திகளையும் இதிலே குறிப்பிட்டிருக் கிற காரணத்தால், இதிலே வெகுவாக, அதிகமாக சுவை ஏற்படாமல் இருந்திருக்கிறது. சுவை ஏற்படாமல் இருந்திருக்கிறது என்பது மட்டுமல்ல - இந்த மன்றத்திலே உள்ளவர்கள் கவனிக்கவேண்டு மென்று இதைத் தொடர்பாக நான் சொல்லிக் கொள்வேன் - இப்படி ஒரு விழா தேவை தானா என்று யோசிக்கவேண்டிய அளவுக்கு, இந்த விழாக் காலத்திலே தரப்படுகிற கருத்துக்கள் கொள்கை விளக்கக் கருத்துக்கள் அல்ல என்று எடுத்துச் சொல்லப்பட்டுவிட்டால், கொள்கை விளக்கக் கருத்துக்கள் வரவு செலவுத் திட்டத்திலே இருக்கப் போகின்றன என்று எடுத்துச் சொல்லப்பட்டுவிட்டால், ராஜ பார்ட் வேஷத்திற்கு முன்னால் முதலிலே சாதாரண வேஷம் வந்து போவதைப் போல், ஒரு கவர்னர் உரை என்பது விழாக் காலங்களில் தேவை தானா என்பதை நாம் எண்ணிப் பார்க்க இந்த உரை நம்மைத் தூண்டுகிறது.

நான் விரும்புவது - கவர்னர் உரையின் போது கொள்கையைப் பற்றிய பிரச்சினைகளும், நிதி அமைச்சருடைய வரவு செலவுத் திட்டத்தின்போது அந்தக் கொள்கைகளுக்கேற்ப அவர்கள் தங்களுடைய வரவு செலவுத் திட்டத்தை வகுத்திருக்கிறார்களா என்ற பரிசீலனையும் அமைந்திருக்குமானால், கவர்னர் உரை ஆற்றுவதிலே யும், அதிலே இந்த மன்றத்தில் உள்ளவர்கள் கலந்துகொள்வதிலேயும் மிகுந்த பொருத்தம் இருக்க முடியும். ஆனால், கவர்னர் தங்களுடைய உரையின் இறுதிக் கட்டத்தில், "கொள்கை விளக்கத்தை நிதி அமைச்சர் அவர்கள் தருவார்கள், நான் என்னுடைய உரையை அளித்திருக் கிறேன்" என்ற முறையில் சொல்லியிருக்கிறார்கள்.

அவர்கள் தங்களுடைய உரையில் என்ன தெரிவித்திருக்கிறார் கள் என்று பார்த்தால், முதலிலே வழக்கப்படி, பருவ நிலைமையைப் பற்றி ஆரம்பித்து, உணவுப் பிரச்சினைக்குச் சென்று, உணவுப் பிரச்சினையிலேயிருந்து நிலப்பிரச்சினைக்குச் சென்று, நிலப்பிரச்சினை யிலே சம்பந்தப்பட்டிருக்கிற வளர்ச்சித் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டு விட்டு, அதற்குப் பிறகு பாசனத் திட்டங்களுக்கு வந்து, அதற்கும் பிறகு நெய்வேலியிலே தாங்கள் தொழில் வளர்க்கிறோம் என்று கூறி, இப்படி நடைபெற்றுக்கொண்டு வருகிற காரியங்களைப் பற்றி இதிலே குறிப்பிட்டிருக்கிறதே தவிர, நடைபெற்றுக்கொண்டிருக் கிற காரியம் நடைபெற வேண்டிய காரியத்திலே எவ்வளவு சிறு பகுதி என்பது பற்றி கொள்கையை விளக்கினால் நிச்சயமாகத் தெரியும்.

ஆனால், கவர்னர் பெருமானுடைய உரையிலே அதிகமான அளவுக்கு விவாதத்திற்கு இடமில்லாமல் இருப்பதை கனம் அங்கத்தினர் கள் சுவையும் சூடும் ஏற்றி பல்வேறு பிரச்சினைகளை இங்கே கிளப்பி யிருப்பதால் கொஞ்சம் பேசுவதற்கு நல்ல மகிழ்ச்சிகூட இருக்கிறது.

உதகமண்டலத்திற்கு இவர்கள் ஏன் வரவில்லை என்று இவ்வளவு கனிவோடு அழைக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கும் போது, அவர்களுக்கெல்லாம் எங்கள் கழகத்தாரிடத்திலே இருக்கும் பற்றுதல் மிகவும் தெரிகிறது. உதகமண்டலத்திற்கு நாங்கள் ஏன் வரவில்லை என்று கேட்கின்றவர்கள் - சர்தார் வேதரத்னம் அவர்கள் பேசியதாக நான் கேள்விப்பட்டேன். - "சென்னைக்கு தமிழ்நாடு என்ற பெயர் வைத்துவிட்டால் வருவதாக அண்ணாதுரை சொன்னாரே; உண்மையிலேயே உதகமண்டலத்திற்குப் போவது கொள்கை அளவில் தவறு என்று சொல்லவில்லை; தமிழ் நாடு என்று பெயர் வையுங்கள்; வந்து விடுகிறேன் என்று சொல்கிறாரே வந்துவிடுவாரா?" என்று கேட்டிருப்பது - நான் அனுபவக் குறைவினாலே தவறுகள் செய்யலாம். ஆனால், மிகுந்த அனுபவம் படைத்த சர்தார் வேதரத்னம் அவர்கள் எப்படி இந்தத் தவறான கொள்கைக் குழப்பத்திற்கு வந்தார் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் இந்த மன்றத்தில் சொன்னால் சரியா, இல்லையா என்று நிரூபித்துப் பார்த்துக் கொள்வதற்கு அமைச்சரவைக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. நான் இந்த மன்றத்திலே சொன்னது, கனம் மாதா கௌடர் அவர்களுக்குப் பதில் அளிக்கும் முறையில் சொன்னேன்: "வேண்டுமானால் சென்னைக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வையுங்கள்; இதை பேரம் பேசுவதாக நீங்கள் கருதவேண்டாம் ...."

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : அண்ணாதுரை பேசியதாகச் சொல்லவில்லை. அவருடைய தோழர்கள் பலர் இந்தக் கருத்தை எடுத்துப் பேசினார்கள். அவர்களுடைய பத்திரிகையில் "சென்னைக்குத் தமிழ் நாடு என்று பெயர் வைத்தால் நாங்கள் உதகைக்கு வருகிறோம்" என்று எழுதி இருப்பதை நான் படித்திருக்கிறேன். அண்ணாதுரை அவர்கள் பேசினார் என்பதற்காகச் சொல்லவில்லை. அவர்கள் இப்பொழுதுதான் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் பேசிய கருத்தை வைத்துத்தான் திரு வேதரத்தினம் அவர்கள் பேசினார்கள்.

திரு. சி. என். அண்ணாதுரை : நாங்கள் சொன்னால் நீங்கள் செய்யமாட்டீர்கள்; அல்லது நாங்கள் சொல்லி விட்டோம் என்பதற்காக நீங்கள், அது நியாயமானதாக இருந்தாலும்கூட எடுத்துக் கொள்ள மாட்டீர்கள். இது வரை எடுத்துக்கொண்டதில்லை என்ற காரணத்தினால் எங்கள் கட்சித் தோழர்கள் அதைப்பற்றி ஒரு அறைகூவல் (challonge) விடுவதுபோல் "தமிழ் நாடு" என்று பெயர் வைத்தால் நாங்கள் உதகமண்டலத்திற்கு வருகிறோம்" என்று பேசி இருக்கிறார்கள். நீங்கள் இதைச் செய்யமாட்டீர்கள் என்ற காரணத்தினால் "இதைச் செய்யுங்கள் பார்க்கலாம்" என்று சொன்னதே தவிர, சென்னைக்குத் தமிழ் நாடு என்று பெயர் வைப்பதற்கும், உதகமண்டலத்தில் கூட்டம் நடத்துவற்கும் தொடர்புபடுத்தவில்லை. இவ்வளவு முறைபற்றிப் பேசுகின்ற நிதியமைச்சர் அவர்களை நான் -கனம் சபாநாயகர் அவர்களே, தங்கள் மூலம் கேட்க விரும்புகிறேன். - "எல்லாக் கட்சிகளும் இணங்கினால்தான் உதக மண்டலத்தில் சட்டசபைக் கூட்டத்தை நடத்துவதுபற்றி யோசிக்கப்படும். எந்த ஒரு கட்சி எதிர்த்தாலும் அந்தப் பிரச்சினை கவனிக்கப்படமாட்டாது" என்று இதே மன்றத்தில் நீங்கள் கூறிய வார்த்தை என்ன ஆயிற்று என்று. முதலிலே கைவிடப்பட்ட இந்தப் பிரச்சினை மறுபடியும் கனம் மாதாகௌடர் அவர்களால் வலியுறுத்தப்பட்ட போது கனம் நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள் - நான் அருகில் இருந்து பார்த்திருந்தால்கூட அவர் கையை வீசி வீசிப் பேசியது அவ்வளவு நன்றாகத் தெரிந்திருக்காது. அன்றைய தினம் தொலைவில் இருந்து பார்த்தேன். ரொம்ப அழகாக இருந்தது. "இந்தப் பிரச்சினையில் எல்லாக் கட்சிகளும் ஒருமுகமான அபிப்பிராயம் தெரிவித்தால்தான் சர்க்கார் இதுபற்றி நடவடிக்கை எடுக்கும் என்று அவர் கையை ஆட்டி ஆட்டிப் பேசிய இந்தப் பேச்சு எங்களைப் போல் நாடகத்தில் அதிகப் பழக்கம் இல்லாத நிதியமைச்சர்கூட இவ்வளவு நன்றாக நாடகம் ஆடுகிறாரே" என்று நினைக்கும்படி இருந்தது.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : சகவாச தோஷம் என்று நினைக்கிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றார் சகவாச தோஷம் என்று. அது சகவாச பலனாக மாறி நன்மை தர வேண்டும்.

உதகமண்டலம் போகக்கூடாது என்று நாங்கள் சொல்லுவதற்கு "பணச் செலவு ஆகும்" என்பது மட்டும் காரணம் அல்ல. "அப்படி என்ன செலவு ஆகிவிடப் போகிறது. 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆகாது. 50 ஆயிரம் ரூபாய் பெரிதா?" என்று கேட்டார்கள். பல அங்கத்தினர்கள் நாங்கள் எப்படி எப்படி பணம் சம்பாதிக்கிறோம் என்றெல்லாம் ஆராய்ந்தார்கள். ஒரு அங்கத்தினர் "நீங்கள் பிருந்தா வனத்தில் போய் உட்கார்ந்துகொண்டு சம்பாதிக்கிறீர்கள்" என்று கூறினார்கள். "பிருந்தாவனத்தில் போய்ச் சம்பாதிக்கிற இவர்கள் உதகைக்கு வரக்கூடாதா?" என்று கேட்டார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று கருதுகிறேன்; நாங்கள் பிருந்தாவனத்தில் போய் வேறு பல காரியங்களில் ஈடுபடுகின்றவர் களைப் போல் அல்லாது, எழுதி விட்டு வருகிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். உதகைக்கு செல்ல 50 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று சொல்லப்பட்டது. 50 ஆயிரம் ரூபாய் என்பது முடிந்த முடிவு அல்ல. உதகையில் சட்டசபைக் கூட்டத்தை நடத்தவது என்று எண்ணம் தோன்றிய நேரத்திலேயே சில லட்ச ரூபாய் போட்டு ஆரன்மூர் அரண்மனையை வாங்கினார்கள். வாங்கப்பட்ட அரண்மனையில் கூட்டம் நடத்துவதற்கேற்ற நல்ல சூழ்நிலையை உண்டாக்குவதற்காகச் சில லட்சம் ரூபாய்களைச் செலவழிக்க இருக்கிறீர்கள். அங்கத்தினர்கள் போக்குவரத்து ஆகியவை களுக்கு மட்டும் 50 ஆயிரம் ரூபாய் ஆகுமென்று சொல்லுகிறார்கள். தவிர, படிப்படியாக அந்தச் செலவு எப்படி எப்படி வளரும் என்பது நமக்குத் தெரியும். நாம் போடுகின்ற திட்டங்களை முதலில் போடும் போது இவ்வளவு செலவாகும் என்று நிர்ணயிக்கிறோம், கடைசியில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிற நேரத்தில் எவ்வளவு செலவாகியது என்பதைப் பார்த்தால் நாம் போட்டதைப் போல் பல மடங்கு செலவு ஆக இருப்பதைக் காண முடியும். உதகமண்டலம் போகின்ற செலவு 50 ஆயிரம் என்று சொல்லப்பட்டாலும், அது பல லட்சம் ரூபாய் வரை செல்லும் என்பதில் சந்தேகம் இல்லை. இதில் பணம் மட்டும் செலவாகிறது என்ற பிரச்சினை மட்டும் அல்ல என்று

சொன்னேன். மக்கள் உள்ளத்திலே உதகமண்டலம் செல்வதைப் பற்றி ஏற்படுத்தப்பட்டிருக்கும் அருவருப்பு உணர்ச்சியை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த அருவருப்பு உணர்ச்சியை மக்கள் மனத்தில் யார் எப்பொழுது ஏற்படுத்தினார்கள் என்பதை எல்லாம் நான் கிளற விரும்பவில்லை. அந்தப் பழைய அரசியல் விஷயங்களை எல்லாம் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய பிரத்தியேக இலாகாவுக்கே விட்டு விடுகிறேன். அந்தக் காரணத்தைக் கொண்டு தான் உதகைக்கு போகவேண்டாமென்று கூறினேன். ஆட்சியாளர் களாகிய நீங்கள் கோடையிலே உதகைக்கு செல்லுகிறீர்கள் என்றால், சாதாரண மக்கள்'' இவர்கள் வெள்ளைக்காரர்களைப் பின்பற்றி, வெள்ளை ஏகாதிபத்தியத்தைப் பின்பற்றி மலைக்குச் செல்லுகிறார் களே'' என்று வாட்டம் அடைந்திருக்கிறார்கள்; வருத்தம் அடைந்திருக்கிறார்கள். பொதுமக்களை நான் நித்தம் நித்தம் சந்திக்கிற காரணத்தினால் நான் இதை நன்கு உணர்ந்திருக்கிறேன். இதுபற்றிப் பணப் பிரச்சினை வந்தபோதுகூட, நான் இதிலே மக்களுடைய உள்ளத்திலே ஏற்பட்டிருக்கிற மன நெகிழ்ச்சிக்கு (sentiments) நீங்கள் மதிப்புக் கொடுங்கள் என்றுதான் கூறினேன். எண்ணிக்கை பலம் இருக்கிறது என்ற ஒரே காரணத்தினால் நீங்கள் உதகைக்குச் சென்று கூட்டம் நடத்துவதைப்பற்றி எங்களுக்கு ஒன்றும் கவலை இல்லை. நீங்கள் ''டென்சிங்'' போல் எந்த மலைமீது வேண்டுமானாலும் ஏறுங்கள் எங்களை மட்டும் அழைக்காதீர்கள். நாம் சட்டசபைக் கூட்டத்தை அங்கு நடத்துவதன் காரணமாக அங்கு மக்கள் அதிகமாகக் கூடுவர். அதன் காரணமாக பல லட்சக் கணக்கான வருவாய் வரும் என்று சொன்னார்கள். இந்த அளவுக்கு அவர் தன்னுடைய மனத்தை வளர்த்திருப்பதைக் காண வருத்தப்படுகிறேன். சட்ட சபையை உதகமண்டலத்தில் 10 நாட்கள் நடத்துவதானால் நாட்டிலுள்ள பல்வேறு மக்களும் சட்டசபை நடவடிக்கைகளைக் காண அங்கு ஏராளமாகக் கூடுவார்கள்; அதிலும் பல லட்சம் ரூபாய் வருவாய் கிடைக்கும் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவார் களானால் - நான் சொல்வேன் - 10 நாட்களுக்கு சட்ட சபையை அங்கு நடத்துவதால், அல்லல் படுகின்ற ஆசிரியர்கள், தொல்லைக்கு ஆளான என்.ஜி.ஓக்கள், ஓராசிரியர் பள்ளிகளிலே இடம் கிடைக்கப் பெறாதவர் ஆகியோர்தான் அங்கு வருவாரே தவிர, பல லட்சம் ரூபாய் வருவாய் வரக்கூடிய அளவுக்கு வளமுள்ள மக்கள் யார் வருவார்கள் என்பது தெரியவில்லை. ஆண்டுதோறும் நடைபெறக் கூடிய காங்கிரஸ் பொருட்காட்சியை உதகமண்டலத்தில் நடத்தினால்

பல லட்சம் மக்கள் கூடுவார்கள்; சில பல கோடி ரூபாய்கூட வசூல் ஆகக் கூடும். ஆகவே நீங்கள் உதகமண்டலம் செல்வதானது "நாங்கள் வெள்ளைக்காரர்களின் பிரதிநிதிகளாக இருக்கிறோம்; அவர்களுடைய வாரிசாகிவிட்டோம்" என்று உலகத்திற்கு அறிவிப்பதாகத்தான் இருக்குமே தவிர வேறு ஒரு பலனும் கிட்டாது. ஆகவேதான் நாங்கள் உதகமண்டலத்திற்குப்போக வேண்டாம் என்று சொல்லுகிறோமே தவிர வேறொன்றுமில்லை. எங்களைப் பார்த்து "நீங்கள் ஏன் உதகமண்டலத்திற்கு வர மறுக்கிறீர்கள்" என்று கேட்பதிலே பொருள் இல்லை. நாங்கள் உல்லாசத்திற்காகப் பிருந்தாவனத்திற்குப் போகும்போது, உதகமண்டத்திற்கு வருவதற்கு எங்களுக்குக் கசப்பாகவா இருக்கும்? மக்களுடைய உள்ளத்திலே தோன்றக்கூடிய அருவருப்பு உணர்ச்சிக்கு நீங்கள் ஆளாகக் கூடாது என்ற காரணத்தினால்தான் அங்கு செல்ல வேண்டாம் என்று சொல்லுகிறோம். நீங்கள் உதகமண்டலத்திற்குப் போனால் பொதுமக்களிடம் "பார் பார், மலைக்குப் போய்விட்டார்கள்" என்று நாங்கள் பேசக்கூடும். அப்படி எல்லாம் பேச வேண்டிய அளவுக்கு இடம் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைப்பற்றி அலுவல் கமிட்டியிலேயே விளக்கமாக எடுத்துச் சொன்னேன். நீங்கள் சொல்லுவதைப்போல் உதகமண்டலம் மட்டுந்தானா பின் தங்கி இருக்கிறது? தமிழ் நாட்டின் பல பகுதிகள் அந்த நிலையில் இருக்கின்றன. அங்கெல்லாம் சட்டசபைக் கூட்டத்தை நடத்தவேண்டுமென்றா கூறுகிறீர்கள்? தமிழ் நாட்டுச் சட்டசபை நடவடிக்கைகளை தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் வசிக்கும் மக்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக சட்டசபைக் கூட்டம் வேறு பகுதியில் கூட வேண்டுமென்று யாருக்காவது தோன்றுமானால், உதகமண்டலம் மட்டும் என்ன? மதுரையிலே திருமலை நாயக்கன் கட்டியுள்ள "திருமலை நாயக்கன் மகாலிலே" ஒரு திங்கள் கூடுவோம்; தஞ்சை அரண்மனையிலே ஒரு திங்கள் கூடலாம். குற்றால நீர்வீழ்ச்சி இருக்கிறது; அதற்குப் பக்கத்தில் ஒரு திங்கள் கூடலாம். இப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் சட்ட மன்றத்தைக் கூட்டினால் ஆங்காங்கு உள்ள மக்கள் நாம் எவ்வளவு திறமையாக, தெளிவாக செயலாற்றி வருகிறோம் என்பதைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். அதுமட்டுமல்ல, குளிர் காலத்தில் உதகைக்கு செல்வதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்காது. கோவை மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். இருந்தாலும் அதைச் சொல்லாமல் உங்களை எல்லாம்

வாருங்கள் வாருங்கள் என்று அழைக்கிறார். கோடைகாலம் என்கிற காலத்திலேயே மத்தியானம் 2 மணிக்கு மேல் யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்பதே தெரியாது. ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் தெரியாது பனிமூடி இருக்கும். அப்படிப்பட்ட இடத்திற்கு ஏன் பத்து நாளைக்காகச் செல்ல வேண்டுமென்றுதான் தெரியவில்லை. இதற்காகப் பொதுமக்களுடைய பணத்தைச் செலவழிப்பானேன் என்று கேட்கிறேன். உதக மண்டலத்தில் கூட்டம் நடத்தினால் நன்றாக இருக்கும் என்கிற ஆசையை கோவை மாவட்டத்தைச் சேர்ந்த நிதி அமைச்சர் அவர்கள் உங்களுக்கு உண்டாக்கினால் அவர் குற்றம்தான் செய்கிறார் என்று சொல்வேன். உதகைக்குச் சென்று உதடு வெடித்து இங்கே வந்து ப்ளாஸ்திரி போட்டுக் கொண்டவர்களைக் கேட்டால் உண்மை தெரியும். போய் வந்த பிறகு நன்றாக இருக்கும் என்று சொன்னவர்களைச் சபிப்பீர்கள். போகவேண்டாம் என்று தடுத்துச் சொன்ன எங்களை வாழ்த்துவீர்கள். நிதி அமைச்சரைப் பின்னால் சபிக்க வேண்டாம் என்பதற்காகவேதான் நான் உண்மை நிலையை எடுத்துச் சொல்லி உதகைக்கு போகும் யோசனையைக் கைவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRIMATHI T.N. ANANDANAYAKI : On a point of order, Sir. The Hon. Member when he wants to refer to another Member can say. 'Such and such a Member representing such and such a constituency" and should not refer to the name or the profession of another Member.

திரு. சபாநாயகர் : அதில் தவறு இல்லை. எந்த இடத்திலிருந்து வருகிறார் என்று சொன்னால் நன்றாக இருக்கும். பெயர் சொல்வதில் தவறு இல்லை.

SRI K.VINAYAKAM : On a point of order, Sir. When one Member wants to refer to another Member, he should refer to the other Member by his or her name or by the constituency by which he or she was returned, and not refer to the profession which the Member is practising. The Member referred to is an Advocate, and so Sri Annadurai is not perfecty right in referring to that Member as a practising lawyer. I want a ruling from the Chair.

SRI. M. P. SUBRAMANIAM : We all know that. The Hon. Member need not reveal that.

MR. SPEAKER : I think the gentleman to give the answer is the Chair but Sri Vinayakam himself has given the answer. I do not agree with him however.

SRI S. NAGARAJA MONIGAR : On a point of information, Sir.

MR. SPEAKER : The Hon. Member can rise only on a point of order and not on a point of information. He can rise on a point of information at the end.

திரு. சி. என் அண்ணாதுரை : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, பேச்சை நிறுத்தி வறண்ட தொண்டைக்கு நீர் ஊற்றிக் கொள்ள இடமில்லாதவாறு அவர்களே இடையில் எனக்குச் சிறிது நேரம் அளித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்களுடைய தொகுதியின் பெயரைக் குறிப்பிட்டு அழைக்க முடியாமல் இருக்கக் காரணம் - அந்த அந்தத் தொகுதியைச் சேர்ந்தவர்களே தங்கள் தங்கள் தொகுதியைக் குறிப்பிட்டு பேசுவது இல்லை. ஆதலால் அவர்கள் தொகுதி எது என்கிறதே தெரிவதில்லை.

அரசியல் சட்டத்தின் கீழ் கவர்னருடைய அழைப்புக்கிணங்க சபைக்கு வராத நாங்கள் விவாதம் நடக்கிறபோது மட்டும் எதற்காக வந்தார்கள் என்கிற முறையில் திருச்சிராப்பள்ளி லால்குடி தொகுதியைச் சார்ந்த உறுப்பினர் சொன்னார். இதற்குக் காரணம் நாங்களும் சட்டசபை விதி முறைக்கு உட்பட்டே காரியங்களைச் செய்கிறோம் என்பதுதான். விதிமுறைக்குட்பட்டு உள்ளே காரியங்கள் செய்வதற்காக சட்டமன்றத்திற்கு வருகிறோமே தவிர சட்ட உறுப்பினர்கள் நாங்கள் சட்ட உடைப்புச் செய்ய வேண்டுமென்று விரும்பினால் அது வெளியில் இருந்து நாங்கள் செய்ய வேண்டிய காரியம். அதை நாங்கள் செய்ய, அவர்கள் கண்குளிரப் பார்க்க வேண்டுமானால் அவர்களைச் சில ஆண்டுகள் பொருத்திருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ்காரர்கள் அன்றைக்கு என்ன காரியங்களைச் செய்தார்களோ அதை நாங்கள் வெளியில் இருந்து செய்த போது "இவர்கள் வெளியில் இருந்துதான் பேசுவார்கள். உள்ளே வந்து செய்யட்டுமே" என்றீர்கள். இன்றைக்கு உள்ளே வந்து விதி முறைக்கு உட்பட்டு நாங்கள் ஆற்றுகிற செயல் உங்களுக்குப் பிடிக்கவில்லையானால் - அல்லது சங்கடத்தை உண்டாக்கினால் சொல்லிவிடுங்கள். வாருங்கள் வாருங்கள் என்று ஐந்தாண்டு காலமாக அழைத்தீர்கள். உள்ளே வந்து என்ன பிரமாதமாகச் செய்துவிட்டார் கள் என்றீர்கள். இரண்டு ஆண்டுக்குள்ளே நாங்கள் வெளியே போனால் போதும் என்றாகிவிட்டதா?

திரு. எஸ். நாகராஜ மோணிகர் : கனம் அங்கத்தினர் பேசுகின்ற அத்தகைய கருத்துக்கள் கவர்னர் அவர்களுடைய உரைக்கு அவ்வளவு பொருத்தம் உடையதாக நான் கருதவில்லை.

திரு. சி. என். அண்ணாதுரை : கவர்னர் அவர்களுடைய உரை பலவகையில் முற்றும் ஏமாற்றம் அளிக்கக்கூடியது என்பதைச் சுட்டிக் காட்டவே வருகிறேன். கவர்னர் தம்முடைய உரையில்... "இவ்வாண்டில் நல்ல அறுவடைக்கான அறிகுறிகள் இருந்தபோதிலும் உணவுப் பொருள்களின் விலை இன்னும் ஏற்றமாகவே இருந்து வருகிறது" என்பதைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். சென்ற ஆண்டு அவர் ஆற்றிய உரையில் அறுவடை நன்றாக இருக்கும் என்ற காரணத்தினால் விலைகள் இறங்கும் முகமாக இருக்கிறதென்று குறிப்பிட்டுள்ளார்கள். சென்ற ஆண்டில் விலை இறங்கும் முகமாக இருக்கும் என்று குறிப்பிட்டுவிட்டு, இவ்வாண்டு விலை ஏறுமுகமாக இருப்பதாகக் கூறியிருக்கின்ற கவர்னர் அவர்கள் விலை ஏற்றத்திற்குக் காரணம் என்ன என்பதைத் தம் உரையில் குறிப்பிடவில்லை. ஆனால் அதற்குப் பரிகாரம் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று நியாயவிலைக் கடைகளைத் திறக்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நல்ல யோசனை - திறவுங்கள். ஆனால் நான் கனம் அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன், "அதற்கு நியாயவிலைக் கடைகள் என்று மட்டும் பெயர் போடாதீர்கள்" என்று. இதற்கு Fair Price Shop (நியாய விலைக் கடைகள்) என்று பெயர் போடுவதன் மூலமாக - சட்டம் ஒழுங்கான முறையில் அமுல் செய்யப்படுகிறது என்று சொல்லிக் கொள்கிற உங்கள் நாட்டில் அநியாய விலைக் கடைகள் இருக்கின்றன என்கிற பொருள்படக் கூடாது. ஆகவே மக்களுக்கு நிரந்தரமான குறைந்த விலையில் உணவு தானியத்தை விநியோகம் செய்யக்கூடிய கடைகளைத் திறவுங்கள். இது கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற ஒரு யோசனை. (Deputy Speaker in the chair) உற்பத்தியைப் பெருக்குவது மற்றொரு பரிகாரம் என்று சொல்லியிருக்கிறார். இந்த உற்பத்தியைப் பெருக்குவதற்காக எடுத்துக் கொள்கிற நடவடிக்கைகள் எல்லாம் வேறு ஒருபுறம் இருக்கட்டும். நான் தெரிந்து கொள்ள விரும்புவது - உற்பத்தி பெருகி கொண்டிருக்கிற நேரத்தில் விலைவாசிகள் கீழே விழாமல் ஒரே ஏற்றத்தில் இருக்கக் காரணம் என்ன? எந்த இடத்தில் சர்க்காருடைய பொருளாதாரத் தந்திரம் கீழே சரிந்தது, நிர்வாக இயந்திரம் பழுதுபட்டது என்பதை நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும். என்

சிற்றறிவுக்கு எட்டிய வரையில் இந்த மாநிலம் அடைய முடியாத அளவுக்கு, பெருமைபடத்தக்க அளவுக்கு எல்லாவகையிலும் முன்னேற்றம் அடைந்து உணவு பெருகி இருக்கிற நேரத்தில் விலை கீழே விழாமல் இருப்பதற்குக் காரணம் - இந்த மாநில துரைத்தனத்தாரே ஒப்புக்கொண்டுள்ளார்கள் - நாட்டில் பதுக்கல் வியாபாரம் நடைபெறுகிறது. கள்ள மார்க்கெட் பெருகிவிட்டது. அதைக் கண்டிக்கும் துணிவை இந்தச் சர்க்கார் இன்னமும் பெறாமல் இருப்பதுதான் விலையேற்றத்திற்குக் காரணம் என்பேன். அவர்கள் எந்தப் பக்கத்தில் இருந்தால் என்ன? அந்தப் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாலும் தயவு தாட்சண்யம் காட்டாதீர்கள். அவர்கள் சமூகத்திற்கு விரோதிகள் என்ற முறையில் ஒரு 10 பதுக்கல் வியாபாரிகளை 4 கள்ள மார்க்கெட்காரர்களை, 10 கொள்ளை லாபக்காரர்களை இந்தச் சர்க்கார் நெஞ்சத் துணிவோடு கூண்டில் ஏற்றி நிறுத்தினால் மார்பு நிமிர்ந்து நான் முன்னுக்கு நடப்பேன். நல்ல துரைத்தனம் நாட்டில் இருக்கிறது என்று களிப்படைவேன். இனி பதுக்கல் வியாபாரம் இந்த நாட்டில் செல்லாது என்கிற உண்மை எல்லோருக்கும் புலப்படும். நடந்தால் நாட்டில் விட்டு வைக்க மாட்டார்கள் உள்ளே பிடித்து அடைத்து விடுவார்கள் என்கிற உணர்ச்சி உள்ளத்தில் உண்டாகும். அதை இந்தச் சர்க்கார் செய்தார்களா? ஏன் செய்யவில்லை? இங்கே சென்ற ஆண்டும் சொன்னார்கள். முன் ஆண்டும் சொன்னார்கள். கள்ளமார்க்கெட் நடக்கிறது. உணவு தானியம் பதுக்கப்படும் என்பதை அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். அவ்வளவு தெரிந்திருந்தும் பதுக்கல்காரர் களின் மீது, கொள்ளை லாபம் அடிக்கிறவர்களின் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? முயன்றும் முடியாமல் போய்விட்டதா? முயற்சி எடுத்துக் கொள்ளப்பட வில்லையா என்பதை நீங்கள் சட்ட மன்றத்தில் எடுத்து விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் ஒன்று. இந்த நிலைமைக்கு விளக்கம் கொடுக்காமல் பரி காரத்தைப் பற்றி மட்டும் பேசுகின்ற கவர்னர் அவர்கள் நிலச் சீர்திருத்தத்திற்கு - நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டும் வகையிலே - ஒரு சட்டம் கொண்டுவர இருக்கிறார்கள். அதைக் கூடி பண்ணை முறையில் அமைக்க இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்த நேரத்தில் - ஆட்சியாளர்களுக்குப் பிடிக்காததாக இருந்தபோதிலும் - ஒன்று சொல்லிக்கொள்ள

விரும்புகிறேன். ஏராளமான பணத்தைத் தாராளமாகச் செலவு செய்கின்றீர்கள். அதில் குற்றம் குறை எடுத்துச் சொல்வார் யாரும் இல்லை அதிகப் பணம் செலவழிக்கிறோம் என்று மக்களிடத்தில் சொல்லவேண்டும் என்ற எண்ணத்தில் செலவழிக்கிறீர்கள். ஆனால் ஒன்று சொல்வேன். நான் சொல்வதை மறுக்கவேண்டும் என்பதற்காக மறுத்தால் நான் கவலைப்படப் போவதில்லை. நீங்கள் எந்தப் பலன் மக்களுக்குக் கிடைக்கவேண்டும் என்று செய்கிறீர்களோ அந்தப் பலன் மக்கள் உள்ளத்தில் கிடைக்கவில்லை. மக்கள் மனதில் அத்தகைய எழுச்சி ஏற்படவில்லை. சமுதாய நலத்திட்டத்தைப் போடுகிறீர்கள். பிர்க்கா அபிவிருத்தி என்று எத்தனையோ கட்டிடங்களைக் கட்டுகிறீர்கள். ஆனால் அதிலிருந்து கண்டிராக்டர் எத்தனை லாபம் அடைந்திருப்பான் என்று மக்கள் பார்க்கிறார்கள். பொறுக்கு விதைப் பண்ணைகளை ஏற்படுத்துகிறீர்கள். அங்கிருந்து விதை வாங்கினால் எத்தனை ஆயிரம் ஏக்கர்களுக்குப் பயிர் செய்யலாம் என்று அவர்கள் பார்க்கவில்லை. இந்த நிலம் யாரிடத்திலிருந்து குத்தகைக்கு வாங்கப் பட்டது - இதனால் யார் எத்தனை லாபம் அடைந்தார்கள் என்றுதான் பார்க்கிறார்கள். ரசாயன உரம் டன்டன்னாகத் தருகிறீர்கள். உற்பத்திக்கு இது எவ்வாறு பயன்படுகிறது என்று அவன் கவனிப்பதில்லை. இது எந்த கள்ளமார்க்கெட்டிலே யாரால் விற்கப்பட்டு, எவ்வளவு கொள்ளை லாபம் அடிக்கப்படுகிறது என்று பார்க்கிறான். மக்கள் உள்ளத்தில் அத்தகைய சலிப்பு உணர்ச்சி அதிகப்பட்டிருப்பதற்குக் காரணம் நாங்கள் என்று கருதாதீர்கள். இதுவரையில் சமுதாய நலத்திட்டத்தில் சேர்ந்து ஒத்துழைக்காதீர்கள் என்று நாங்கள் மக்களிடத்தில் சொன்னது இல்லை. நாட்டு மக்களுக்கேற்ற திட்டம் இல்லை என்ற சொன்னதில்லை. நாட்டு மக்களுடைய உள்ளத்தில் என்ன உணர்ச்சி ஏற்படுகிறது. அவர்கள் எந்த முறையில் நடக்கிறார்கள் - என்பதை நாங்கள் மட்டும் அல்ல - நீங்களேகூட நெருங்கிப் பழகிப் பார்த்தால்தான் நான் சொல்வதன் உண்மை தெரியும். இந்தக் குறையைப் போக்குவதற்கு நீங்கள் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர இந்தப் பழியை யார் பேரில் போடலாம் - போட்டு சமாதானம் கூறலாம் என்று சிந்திப்பதில் பயன் இல்லை. கோயமுத்தூர் மாவட்டத்தில் இருக்கிற பட்டியில் கட்டப்பட்ட வீடுகள் எப்படிச் சரிந்து விழுந்திருக்கின்றன என்பதைச் சொன்னேன். இப்போதும் நான் அங்கே செல்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது. இப்போதும் அதே நிலையில்தான் கீழே தள்ளப்பட்டு கிடக்கிறது என்று சொல்லுகிறார்கள். இப்படி சமுதாய

நலத்திட்டத்தினால் போடப்படுகிற திட்டங்கள் விரயமாவதைக் கண்டே மக்களுக்கு அத்தகைய உணர்ச்சி பெருகி வருகிறது. சமுதாய நலத்திட்டங்களை எல்லாம் பரிசீலனை செய்வதற்கு ஓர் ஆய்வுக் குழு இன்றைக்கு இல்லை. ஒவ்வொரு ஊரிலும் கம்யூனிடி ஹால் கட்டுகிறோம். பொதுக் காரியங்களைப் பற்றிக் கூடிப் பேசி விவாதிப்பதற்கு மணிமண்டபம் கட்டுகிறீர்கள். ஆனால் அந்த மணி மண்டபம் இன்றைய தினம் எந்த வகையில் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி ஆய்வதற்குக் குழு இல்லை. அதைப்பற்றி இந்த மன்றத்தில் தெளிவுபடப் பேசுவதற்குக் கொஞ்சம் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிதி அமைச்சர் அவர்களும் நான் சொல்வதைச் சகித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் செங்கல்பட்டு மாவட்டத்திலே, மாமல்லபுரத்திலே வெளியாரெல்லாம் வந்து பார்க்கும் அரிய கட்டிட வேலைப்பாடுகள் இருப்பது எல்லோருக்கும் தெரியும். அதற்கும் பக்கத்திலே, இருக்கிற குடிசைகளை, சென்னையிலிருந்து மாணவர்கள் வந்து, சமுதாய நலத் திட்டத்தின் கீழ், குடிசைகளை துப்புரவு படுத்தி, சுவர்களை வெள்ளையடித்து, வீட்டிலே முகப்பிலே ஒரு தாமரைப்பூ, இன்னொரு புறத்திலே மல்லிகைப்பூ, மற்றொருபுரம் ரோஜாப்பூ போன்ற வேலைப்பாடுகளுடன் அமைத்திருக்கிறார்கள். அங்கே "New look given by Madras Medicos" என்று எழுதியிருக்கிறார்கள். நான் அந்த இடத்திற்கு ஏதோ வேலையாகப் போக நேர்ந்தது. அங்குள்ள காட்சிகளை நான் கண்டேன். மந்திரிகள் பார்வையிடுகிறார்கள் என்பதற்கும், நான் கண்டேன் என்பதற்கும், பொருளிலே வித்தியாசம் இருக்கிறது. பார்வையிடுபவர்கள் அவர்களுக்குக் காட்டுவதைப் பார்க்கிறார்கள். அதற்கும், நான் கண்ணைக்குத்தும் காட்சிகளைப் பார்ப்பதற்கும் அரசியலில் வித்தியாசம் இருக்கிறது. பார்வையிடும் நேரத்தில், எத்துணை சரிப்படுத்தப்பட்டிருக்கின்றன என்று பாராட்டவும் செய்கிறார்கள், அப்படித் தன்னைத் தானே பாராட்டிக் கொள்பவர்கள், அப்பொழுது, நம்மைப் பாராட்ட அண்ணாதுரைக்கு மனம் வரவில்லையே என்று கோபமும் எழக்கூடும்.

நான் அங்கு குடிசையிலே இருந்தவனை அழைத்து "இப்படிச் செய்திருக்கிறார்களே, சர்க்கார் செய்தார்களா" என்று கேட்டேன். கிராமத்திலே இருந்த குடியானவன், "சர்க்கார் பள்ளிக்கூடத்து மாணவர்களை அனுப்பினார்கள், இதைச் செய்வதற்கு" என்று

சொன்னான். நான் சொன்னேன், ''இதற்குச் செலவழிக்கப்பட்ட பணத்தை எட்டு அணா, ஒரு ரூபாய் என்று கொடுத்திருந்தால் நீயே சுண்ணாம்பு அடிக்க மாட்டாயா''. அதற்கு அந்த குடியானவன் தந்த பதில் எனக்கு வெட்கமாக இருந்தது. அதைக் கேட்பதற்கு அமைச்சர்களுக்குக் கோபமாக இருக்கலாம். இருந்தாலும், பொறுமையாகக் கேட்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவன் சொன்னான். ''இங்கே யார் யார் வெள்ளையடித்தார்களோ அவர்கள் வீடுகளுக்கு வெள்ளை யடிப்பது என் வேலையல்லவா'' ''அது என் தொழில். எட்டணா, ஒரு ரூபாய்க்கு நிம்மதியாக நான் செய்திருப்பேன். வெள்ளையடித்த மாணவர்கள் கூரையிலிருந்து கீழே விழாமல், பார்த்துக் கொள்ளவும், சுண்ணாம்பில் கையை விட்டு கை வெந்து போகாமல் பார்த்துக் கொள்ளவும், அதிகமாக ஒரு இடத்தில் சுண்ணாம்பு அடித்ததை சரிசெய்யவும் எனக்குத் தெரியும்'' என்று சொன்னான். நம் அமைச்சர் ஸ்ரீ ராமைய்யா மாறுவேடம் பூண்டு செல்வதில் வல்லவர் என்று பத்திரிகையில் வருவதைப் பார்த்திருக் கிறேன். அவரை வேண்டுமானாலும் அனுப்பிப் பாருங்கள், (சிரிப்பு), மக்கள் எப்படியெல்லாம், என்னவெல்லாம் பேசுகிறார்கள் என்று தெரிந்துகொள்ள. (குறுக்கீடு) தினத்தந்தியில் பார்த்தேன். (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் தினத்தந்திக்கு அவ்வளவு மதிப்பு).

நம் ஆட்சியாளர்கள் கோடிக்கணக்கான பணத்தைச் செலவழிக் கிறார்கள். இவ்வளவு பணம் எந்த சர்க்காரும் சேமித்து செலவழிக்க முடியாது. ஆனால் மக்கள் உள்ளத்திலே ஆர்வம் எழாவிட்டால், அதற்குக் காரணம் என்ன? எதிர்கட்சிக்காரர்கள் கெடுக்கிறார்கள் என்ற சுலபமான வாதத்தினால், என் வாயை அடைக்கப் பார்க்காதீர்கள். எதிர்க் கட்சியினர் சமுதாய நல திட்டத்தை, அதில் மக்களுக்கு ஆர்வம் எழுவதைக் கெடுக்கவில்லை. நாங்கள் முனைந்து வேலை செய்யாமல் இருக்கலாம். ஆனால் கெடுக்கும் முறையில் ஏதும் செய்யவில்லை. மக்களுக்கு சலிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆர்வம் எழவில்லை. அப்படி யென்றால், செலவழிக்கும் பணத்தின் அளவிற்கு, நல்ல பயன் கிராமங்களிலோ அல்லது நகரப் புறங்களிலோ நிச்சயம் கிடைக்காது. ஆகவே மக்கள் ஏன் ஆர்வம் கொள்ளவில்லை என்று கண்டு பிடிக்க வேண்டும்.

உரையில் கவர்னர் அவர்கள் சொல்கிறார்கள். ''ஒருமித்த உடன்பாடு கண்டார்கள்'' என்று. உடன்பாடு கண்டார்கள் என்று சொல்லியிருப்பது, வரப் போவதை, நடைபெற வேண்டியதை

நடைபெற்றதாகக் கூறுவதாகும். அதைப்பற்றி கூறும் போது, இப்பொழுது அரசாங்கத்தில் எடுக்கும் முடிவுகள் என்ன? நாட்டில் கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்து, ஒரு நல்ல சமுதாயத்தை உண்டாக்குவதில் ஒருமித்த உடன்பாடு காணவேண்டும். ஆனால் நாம் காண்பதென்ன? அண்மையில், வடாற்காடு மாவட்டம், திருவண்ணா மலையிலே என்ன நடந்தது? அதைச் சுற்றிப் பார்க்கப் போனேன். அப்பொழுது கனம் அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு கால் நடைக் கண் காட்சியை துவக்கி வைப்பார் என்று விளம்பரம் இருந்தது. திருவண்ணாமலையைச் சேர்ந்த கனம் மெம்பர் ஷண்முகத்தைப் பார்த்து "நீங்கள் செல்கிறீர்களா" என்று நான் கேட்டதற்கு, அவர்கள் சொன்ன பதில் என்னை ஏமாறச் செய்தது. "எனக்கு அழைப்பு இல்லை" என்று அவர்கள் சொன்னார்கள். திருவண்ணாமலையிலே நடக்கும் கால்நடைக் கண் காட்சிக்கு அந்தத் தொகுதி எம்.எல்.ஏ.வின் ஒத்துழைப்பு பெறவேண்டுமென்ற பண்பு கூட உங்கள் உள்ளத்தில் இல்லை. கோடிக்கணக்கான மக்கள் உள்ளத்திலே என்று எழுச்சி ஏற்படும்? சொல்லலாம், "நீங்கள் 15 பேர்கள்தான், நாங்கள் 150 பேர்கள்" என்று. என்றாலும், அளவு அறிந்து இடம் அளிக்கும், Proportional representation முறையைக் காங்கிரஸ் மேற்கொண்டால், காங்கிரசுக்கு 50 லட்சம் வாக்கு என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு மூன்றில் ஒரு பங்கு அல்லது 17 லட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கிறோம். அளவு அறிந்து இடம் அளிக்கும் முறை இருந்தால், நாங்கள் 50 பேர் இருக்கவேண்டும். ஆனால் நீங்கள் அமைத்திருக்கும் தேர்தல் இலக்கணம் உங்களுக்கு சாதகமாக இருப்பதால், நீங்கள் 150 பேர்களும், நாங்கள் 15 பேர்களும் இருக்கிறோம். ஆனால் 17 லட்சம் மக்கள் கிள்ளுக்கீரைகள் இல்லை. எனவே, எங்களுடைய ஒத்துழைப்பைப் பெற வேண்டும் என்றிருந்தால், மக்கள் உள்ளத்திலே ஆர்வம் எழவேண்டுமென்றால், உங்கள் லட்சியத்தை அவர்கள் முன்னே வைக்க வேண்டும். இவர்கள் என்ன லட்சியம் வைத்திருக்கிறார்கள்?

எகிப்து நாட்டிலே, நாசர் வெள்ளைக்காரனுக்கு சூயஸ் வாய்க்காலில் ஆதிக்கத்தை ஒழிக்க எழுந்தான். அதுதான் அவன் லட்சியம். அவன் அழைக்க மக்கள் அவன் பின்னால் செல்கிறார்கள். பிரான்சு நாட்டிலே கூட, ஜனநாயகத்தின் சந்து வழியே உள்ளே சென்று டிகால் இந்த நாட்டின் எலும்புருக்கி நோயை இந்த நாட்டிலிருந்து விரட்டுவேன் என்கிறான். பிரான்சு நாட்டு மக்கள்

அவன் பின்னால் வருகிறார்கள். கானா நாட்டு பிரதமர் தன் லட்சியம் ஆப்பிரிக்க கருப்பர்களை விடுவிப்பது என்கிறான், மக்கள் அவன் பின் வருகிறார்கள். ஆனால், நீங்கள் என்ன லட்சியம் வைத்திருக்கிறீர்கள்? பெருங்காயம் வைத்த பாண்டம் போல் இருக்கிறீர்கள். பெருங்காயம் போய் விட்டது, பாண்டம் இருக்கிறது. பெருங்காய வாசனை இருக்கிறது. தக்க சாக்கிரதை இல்லாவிட்டால், பாண்டத்தை ஊரார் அபகரிக்க வரலாம். பாண்டம் பறிபோகும். நாட்டு மக்கள் உங்கள் லட்சியம் என்னவென்று அறியவேண்டும். மக்கள் உள்ளத்தை அறிந்து செய்ய வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, எதிர்க்கட்சிக்காரர்கள் பரப்பி வரும் கருத்துக்கள் அவ்வளவும் மக்கள் உள்ளத்திலே, அலைமோதுகின்றன. அப்படி அவர்கள் உள்ளப் போக்கைக் கண்டுபிடிக்க வேண்டுமானால், எதிர்க்கட்சியை மதிக்குத் தன்மை ஆளும் கட்சிக்கு வரவேண்டும். எதிர்க்கட்சிகளை மதிக்கும் தன்மை ஆளும் கட்சிக்கு வருமானால், அப்போது, எதிர்க்கட்சிகள் நாட்டு மக்கள் உள்ளத்தில் என்னென்ன கருத்துக்களைப் புகுத்தியிருக்கிறார்கள். அதனால் நாட்டு மக்களுக்கு என்னென்ன லட்சியங்களில் பற்று ஏற்பட்டிருக்கிறது. அந்த லட்சியங்களில் எந்த லட்சியங்கள் எல்லாம் நம் நடைமுறைக்கு ஏற்றவை என்று ஆளும் கட்சி பார்க்கவேண்டும். உதாரணமாக நான் ஒன்று சொல்வேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை மாநிலம் 152 கோடி ரூபாய் பெற்றிருக்கிறது. இந்த 152 கோடி ரூபாய் நம் மாநிலத்திற்கு மிகக் குறைவு. குறைவு என்று நாங்கள் சொன்னால், அப்போது காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்கள், அதை நாங்கள் சொல்கிறோம் என்பதால் "இல்லை, இல்லை ஜனத்தொகை அடிப்படையில் பார்த்தால், உத்திரப் பிரதேசத்திற்குக் கிடைத்தது அதிகம். விஸ்தீரண அடிப்படையில் பார்த்தால், உத்திரப் பிரதேசத்திற்குக் கிடைத்தது குறைவு. அந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது, நமக்கு அதிகத் தொகைதான் கிடைத்திருக்கிறது என்று சொல்ல வேண்டும்" என்று கூறி எங்கள் கூற்றை மறுத்துப் பேசுகிறார்கள். அவர்கள், அவ்வாறு பேசுவதால், மத்திய சர்க்காருக்குத்தான் வக்காலத்து வாங்குகிறார்கள். மத்திய சர்க்காரிடமிருந்து நாம் இன்னும் பணம் வாங்குவதற்கு உள்ள வழியை அடைக்கிறார்கள். ஆனால் 300 கோடி ரூபாய் வேண்டும் என்று கனம் நிதி அமைச்சர் வாதாடியதில் நமக்கு 152 கோடி ரூபாய்தான் கிடைத்திருக்கிறது. மத்திய சர்க்கார் கொடுத்த அந்தத் தொகையை, ஒரு பொறுப்புள்ள அமைச்சர் என்ற முறையில், அவர் ஏற்றுக்கொண்டது நியாயம். ஆனால் அந்தத்தொகை குறைவு

என்பதை நாங்கள் அடிக்கடி சுட்டிக்காட்டினால்தான், அவர் டெல்லிக்குப் போகும்போது "152 கோடி ரூபாய் எங்கள் மாநிலத் தவர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை, இன்னும் அதிகப் பணம் தர வேண்டும்" என்று மத்திய சர்க்காரிடம் எதிர்த்துப் பேசுவதற்கு வழி இருக்கும். நாங்கள் கூறுவதால், கொடுத்துள்ள தொகையே போதும் என்று ஆளும் கட்சியினர் பேசினால் அதில் பயனில்லை என்று கூறுவேன். இந்த மன்றத்தில் இருக்கும் ஆளும் கட்சி அங்கத்தினர்கள் எங்களுக்குப் பதில் பேச்சு பேசுவதைத்தான் முக்கியமாகக் கருதுகிறார்கள். மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தை எப்படி நடத்துகிறது என்பதுபற்றிப் பேச வேண்டியதுதான் இன்று முக்கியம். ஏனென்றால், அந்தப் பிரச்சினை அரசியல் கட்சிகளைவிட மீறி மீறி வளர்ந்து வருகிறது. ஒரு மாநிலத்திற்குத் துணை கவர்னராக இருந்த, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. சந்தானம் அவர்கள் இதை அடிக்கடி சுட்டிக்காட்டி வருகிறார். மாநில அரசாங்கங்கள் வர வர நகராட்சி மன்றங்களுக்குச் சமானமாக ஒடுக்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசாங்கத்திடம் தான் அதிக அளவிற்கு அதிகாரங்கள் குவிந்து வருகின்றன என்பதை திரு. சந்தானம் சுட்டிக் காட்டி வருகிறார். இதே விஷயத்தை மைசூர் ராஜ்யத்தைச் சேர்ந்த திரு. அனுமந்தையாவும் சட்டசபையிலும் வெளியிலும் அடிக்கடி சுட்டிக்காட்டி வருகிறார். மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்தைப் பார்த்து பிச்சை கேட்கும் நிலையில் இருக்கும் வரையில் மாநில அரசாங்கப் பிரதிநிதிகள், டெல்லிக்குச் சென்றால் அங்கே, கடன் கொடுத்தவனிடம் கை கட்டிவாய் புதைத்து நிற்கும் கடன் வாங்கியவனைப் போல் இருக்க வேண்டும் என்பதை திரு. அனுமந்தையா சுட்டிக்காட்டி வருகிறார். "ஏழைசொல் அம்பலம் ஏறாது" என்ற பழமொழியை நினைத்துக் கொண்டு என்னுடைய இந்தச் சொற்கள் அம்பலம் ஏறவில்லை என்று தப்புக் கணக்குப் போடாதீர்கள். என்னுடைய சொற்களால் ஏற்பட்டுள்ள விளைவு, நாடு பிரிவினை என்ற அளவிற்கு வராமல் இருந்திருக்கலாம். நமது மாநிலத்தின் இதே கவர்னர் அவர்கள் சென்ற ஆண்டு தமது பேருரையில், அவர்கள் அஸ்ஸாம் மாநிலத்தில் முதல் அமைச்சராக இருந்தபோது அந்த மாநில மக்களின் உரிமைக்காக அவர்கள் போராட வேண்டியிருந்தது என்ற கருத்துப்படப் பேசியிருக் கிறார்கள். அவர் அவ்வாறு பேசியதுடன், எப்படி இருந்தாலும் இந்திய ஒருமைப்பாடு அவசியம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். வேண்டு

மானால், நீங்கள் இந்திய ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசுங்கள். அதைப் பற்றிப் பன்னிப் பன்னிப் பேசுங்கள். இந்திய ஒருமைப் பாட்டைப் பற்றி பேசி என்னைத் திருத்தலாம் என்று நீங்கள் கருதினால் அதைப்பற்றித் திரும்பத் திரும்பப் பேசுங்கள். ஆனால் நமது மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்துடன் வாதாடுவதற்கு இருக்கும் வழியை அடைத்துவிடாதீர்கள் என்று இந்த மன்றத்தில் உங்களிடம் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன்.

கவர்னர் அவர்கள் தமது பேருரையில், இந்த மாநிலத்தில் எல்லா வகையான நீர்ப்பாசனத் திட்டங்களும் முடிந்துவிட்டன என்று கூறியிருக்கிறார்கள்.வைகை ஆற்றுத் திட்டம் முடிந்துவிட்டது. கேரள சர்க்காருடன் பேசி, பரம்பிக்குளம் தண்ணீரைத் தமிழகத்திற்குக் கொண்டுவர வழிகாணப்பட்டுவிட்டது. அத்திட்டத்தால் நமக்குக் கிடைக்கும் தண்ணீர் உடுமலைப்பேட்டைக்குப் பக்கத்திலேயே இருக்குமா, அல்லது தாராபுரம் பக்கமாகவும் வருமா என்பது போன்ற சந்தேகங்கள்தான் தீர்க்கப்பட வேண்டியவையாக இருக்கும். நீர்ப்பாசனத்திற்குத் தேவையான அணைகள் கட்டப்பட்டு விட்டன.

DEPUTY SPEAKER : The Hon. Member has got only two minutes more.

திரு. சி. என். அண்ணாதுரை : இனிமேல், அணைகட்ட வேறு ஆறுகள் இல்லை என்று சும்மா இராமல் சிறு பாசனத் திட்டங்களுக் குள்ள வேறு வழிவகைகளைக் காணவேண்டும். அதற்கான பணத்திற்கு மத்திய அரசாங்கத்துடன் போராட வேண்டும்.

அடுத்தபடியாக, நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டுவது பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கூட்டுறவு முறையில் கூட்டுறவுப் பண்ணைகள் நடத்தலாம் என்ற கருத்து இங்கே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்து உறுதிப் படுவதற்கு முன்பு கூட்டுறவுத் துறையைப்பற்றி நாட்டு மக்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை ஒரு பாரபட்சமற்ற ஆய்வுக் குழுவின் மூலம் அறிந்துகொள்ளவேண்டும். அதற்கான ஆய்வுக் குழுவை நியமிக்க வேண்டும். அது கண்டுபிடித்துத் தெரிவிக்கும் குற்றம் குறைகளைக் களைவதற்கு ஏற்ற முறையில் கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்திவிட்டு அதற்குப் பிறகு கூட்டுறவுப் பண்ணைகளை அமைத்து நடத்தினால் நல்ல பலன் கிடைக்கும். அப்படி இன்றி இன்று இருக்கும் கூட்டுறவு

ஸ்தாபனங்களைப்போன்ற கூட்டுறவுப் பண்ணைகளை நடத்தினால் பலன் ஏற்படாது. இன்று போன்று குடும்பத்தார் தேடிவைத்த சொத்தைப் போன்றோ, ஊர்ப் பெரியதனக்காரரின் சொத்தைப் போன்றோ, தண்டல்காரனின் தண்டத்தைப் போன்றோ கூட்டுறவு ஸ்தாபனங்கள் இருந்தால், கூட்டுறவுப் பண்ணைகள் இருந்தால், மக்களுக்கு நன்மை ஏற்படாது. கூட்டுறவு முறைக்கு நான் ஆதரவு காட்டாமல் இருக்கிறேன் என்று யாரும் தப்பாக எண்ண வேண்டாம். கூட்டுறவு முறை சிறந்த திட்டம். ஆனால் அந்தச் சிறந்த திட்டம் வெற்றியுற வேண்டுமானால் எல்லாக் கட்சிகளின் நிபுணர்களும் பொருளாதார நிபுணர்களும் ஒன்றாகக் கூடி கூட்டுறவு முறையைப் பற்றிப் பொது மக்கள் என்ன நினைக்கிறார்கள், அதில் என்னென்ன குற்றம் குறைகள் சுட்டிக்காட்டுகிறார்கள், கூட்டுறவு முறையில் ஏன் லாபம் வருவதில்லை என்பதை யெல்லாம் அறிந்துகொண்டு, அதற்குப் பிறகு அவசியமான தகுந்த சட்டத் திருத்தங்களைச் செய்துவிட்டு கூட்டுறவு பண்ணைகளை அமைத்து நடத்தினால் மக்களுக்கு நன்மை ஏற்படும். மாட்டை வண்டியில் பூட்டுவதற்கு முன்பு பல விஷயங் களைக் கவனிக்கவேண்டும். வண்டிச் சக்கரத்திற்குப் பட்டா போடப் பட்டிருக்கிறதா, இரும்பு வளையங்கள் சரியாக இருக்கின்றனவா, கடையாணிகள் பொருத்தமானவையாக இருக்கின்றனவா என்றெல்லாம் பார்த்த பிறகு வண்டியில் மாட்டை பூட்ட வேண்டியிருக்கிறது. இவைகளையெல்லாம் கவனிக்காமல் அச்சு முறிந்த வண்டியில் மாட்டைப் பூட்டினால் காளையும் கெட்டுப் போகும், வண்டியும் நாசம் அடையும். அதே மாதிரி கூட்டுறவு முறைகள் சம்பந்தமாக நான் கூறிய காரியங்களை யெல்லாம் செய்த பிறகு நாகபுரியில் தயாரிக்கப்பட்டிருக்கும் அழகான காளையை கூட்டுறவு என்ற வண்டியில் கட்டினால் அச்சு முறியாமல் இருக்கும். கூட்டுறவு முறையைப் பற்றி கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதால், நாட்டு மக்கள் உள்ளத்தில் அந்த முறை சம்பந்தமாக இருக்கும் அதிருப்தியைத் தெரிவித்தேன்.

நான் குற்றம் குறைகள் கூறியதற்காக என் மீது அருள்கூர்ந்து அருவருப்பு அடையாதீர்கள் என்றும், கோபப்படாதீர்கள் என்றும் காங்கிரஸ் அமைச்சர்களையும் காங்கிரஸ் உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன். உங்களைக் கண்டிக்க எனக்கு இருக்கும் நேரம், இந்தப் பகல் வேளைதான். மாலை வேளைகளில் நான் வெளியே

உங்களைக் கண்டித்துப் பேசலாம். என்னுடைய அந்தக் கண்டனப் பேச்சுக்களின் தொடர்ச்சி இது என்று தவறாகக் கொள்ளாதீர்கள். இங்கே நான் பேசும்போது, கனம் நிதி அமைச்சர் அவர்களுடைய கரங்களை, மத்திய அரசாங்கத்துடன் இன்னும் பலமாகப் போராடுவதற்குரிய முறையில் வலுப்படுத்தும் வகையில் பேச வேண்டும் என்பதுதான் என் நோக்கம். நீங்களும் நானும் ஒன்றாகச் சேர்ந்து அவருடைய கரங்களை வலுப்படுத்த வேண்டு மென்று நான் விரும்புகிறேன்.

நான் டெல்லிக்குச் சென்றிருந்த போது "உங்கள் நிதி அமைச்சர் மிகவும் சாமர்த்தியசாலி. அவர் மிகுந்த பலமுள்ளவராக இருக்கிறார். அவர் இங்கிருந்து அதிகமான பணத்தை வாங்கிக்கொண்டு போகிறார்" என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னிடம் சொன்னார்கள். அதைக் கேட்டு நான் பூரித்துப் போனேன். "அவர் அவ்வளவு பணம் வாங்கிக் கொண்டு வராவிட்டால் அவரை நாங்கள் சும்மா விடுவதாக இல்லை. அவருக்குப் பக்கத்தில் நாங்கள் இருக்கிறோம்" என்று நான் அவர்களிடம் சொன்னேன். எனவே நாம் இரண்டு சக்திகளாகப் பிரிந்து இந்த மாநிலத்தை வலுப்படுத்த வேண்டும். கவர்னர் உரையின் பேரில் பேசும்போது நான் குற்றம் குறைகள் கூறியதற்காக என் மீது கோபம் கொள்ளவேண்டாம் என்று உங்களைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எஸ். நாகராஜ மோனிகர்: On a point of information, Sir. கனம் அங்கத்தினர் திரு. அண்ணாதுரை அவர்கள் நமது நிதி அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று மத்திய அரசாங்கத்திடமிருந்து சாமர்த்தியமாக அதிகமான பணத்தைப் பெற்றுவருகிறார்கள் என்று குறிப்பிட்டு, தம் பாராட்டுதலையும் பூரிப்பையும் தெரிவித்தார்கள். (கனம் ஸ்ரீ. சி. சுப்பிரமணியம் : பாராட்டுதலை நம்பவேண்டாம்) அவ்வாறு அவருக்கு திருப்தி ஏற்படுமானால், அவர் நாடு பிரிய வேண்டும் என்ற எண்ணத்தை விடுவாரா?

திரு. எ. வேதரத்னம் : On a point of personal explanation, Sir. அறிஞர் அண்ணா அவர்கள் பேசும்போது என் சம்பந்தமாக தவறாக ஒரு விஷயம் சொல்லிவிட்டார். "தமிழ் நாடு" என்று இந்த ராஜ்யத்திற்குப் பெயர் வைத்துவிட்டால் உதகைக்கு தாம் வருவதாக அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதாக நான் இங்கே சொன்னேன்

என்று அவர்கள் கூறினார்கள். அது தவறு. நான் அவ்வாறு சொல்லவில்லை. பத்திரிகைச் செய்தியை வைத்துக்கொண்டு நான் இங்கே பேசவில்லை. நான் இந்த சபையில் பேசியபோது அறிஞர் அவர்கள் இங்கே இல்லை. எனவே யாரோ தவறாகச் சொன்ன செய்தியைக் கேட்டு அவர் அவ்வாறு இங்கே பேசியிருக்கிறார் என்று நினைக்கிறேன். ஸ்ரீ ஆசைத்தம்பி அவர்கள், நம்மிடம் யாரோ ஒரு நண்பர் வந்து, உதகைக் கூட்டத்திற்கு அவர்கள் செல்வார்களா என்று கேட்டதாகவும், அதற்கு அவர், சென்னை ராஜ்யத்திற்கு "தமிழ் நாடு" என்று பெயர் வைத்தால் தாங்கள் உதகை கூட்டத்திற்குச் செல்லப் போவதாக தான் பதிலளித்ததாகவும் பேசினார்கள். அவர்களுடைய அந்தப் பேச்சுக்குத்தான் நான் பதிலளித்தேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : நான் கனம் அங்கத்தினர் ஸ்ரீ வேதரத்னம் அவர்களைப்பற்றிக் கொண்டிருந்த எண்ணம் உறுதிப் பட்டதற்காக மகிழ்ச்சியடைகிறேன். நான் முன்பு இங்கே குறிப்பிட்டது போல் அவர் சொல்லியிருக்கமாட்டார் என்றே நினைத்தேன். அது சரியாகி விட்டது. அவருடைய பெருந்தன்மை யான விளக்கத்தைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

ஆபாசத் தடுப்புச் சட்ட முன்வடிவு மீதான விவாதம்

உரை : 25 நாள் : 17.02.1959

திரு. சி. என். அண்ணாதுரை: சட்டமன்றத் தலைவர் அவர்களே! தகாத முறையிலே ஒட்டப்படுகிற விளம்பரங்களைத் தடுப்பதற்காகவும், அப்படிப்பட்ட விளம்பரங்கள் ஆபாசத்தைத் தூண்டுவதாக இருக்குமானால் அவைகளைத் தடுப்பதற்காகவும் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியத்தில் ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்கள் ஆளாக்கப்பட்டிருப்பதைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் விசனப்பட்டதைப் போலவே, ஆபாசத்தைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தை கூறிக்கொண்டு, அந்த நோக்கம் நல்ல விதத்திலே நிறைவேற்றப்பட முடியாத முறையில், ஒரு சட்டத்தை அவர்கள் கொண்டு வருகிறார்களே என்று நானும் விசனப்படுகிறேன். அப்படி ஆபாசம் இந்த நாட்டிலே அதிகப்படுத்தப்பட்டிருப்பதாகவும், அதை அடக்கியே தீரவேண்டும் என்றும் ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற பொறுப்பு - ஆபாசம் எது என்பதை அவர்கள் அறிந்திருப்பது போலவும், ஆபாசத்தை பல வகைகளிலும் தடுக்கின்ற பொறுப்பு ஆட்சியில் இருக்கின்ற இவர்களிடம் தரப்பட்டிருப்பது போலவும், வேறு யாரோ பல பேர்கள் ஆபாசத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற மனப்பான்மையிலும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். ஆபாசம் என்பது அவரவர் களுடைய மனப்போக்கிற்குத் தகுந்தபடியும், காலத்திற்குக் காலம் மாறுபட்டும் வருகிறது என்பதை நாம் இன்றையத் தினம் உணர்ந்து பார்ப்போமானால், கருத்துக்கள் உருவாகிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் கட்டுப்படுத்தக் கூடிய சட்டங்களைப் போடுவது ஜனநாயகத்திற்கு முரணானது என்பது மட்டுமல்ல - பகுத்தறிவு வளர்வதற்கு அது பெரும் தடையாகவும் இருக்கும்.

இருபது, இருபத்தைந்து ஆண்டு காலத்திற்கு முன்னாலே ஆலயத்திற்குள் பழங்குடி மக்கள் நுழைவது ஆபாசம் மட்டுமல்ல, பெரிய பாவம் என்று கருதப்பட்டது. ஆலயத்திற்குள் பழங்குடி மக்கள் போகவேண்டும் என்று பேசப்பட்ட நேரத்தில், நுழைந்தால் ஆலயத்தில் இருக்கும் புனிதத்தன்மை போய்விடும் என்று கற்றறிந்த மேதைகளெல்லாம் சொன்னார்கள். அப்படிப்பட்ட கற்றறிந்த மேதைகள் சொன்னது, கற்றதைச் சொன்னார்களே தவிர, உலகத்தையொட்டிச் சொல்லவில்லை என்ற காரணத்தால், ஆலயப் பிரவேசச் சட்டத்தைக் கொண்டுவந்து பழங்குடி மக்களுக்கு நல்ல உரிமைகள் தரப்படவேண்டும் என்ற நல்ல நிலைமை ஏற்படுத்தப்பட்டது.

எந்த நேரத்தில் புதுமை எடுத்துச் சொல்லப்பட்டாலும், அது ஆபாசமாகத்தான் முதலிலே கருதப்பட்டு, அதனாலே பல்வேறு வகையான அனர்த்தங்கள் ஏற்படும் என்று ஊரிலே உள்ளவர்கள் பேசி, அதற்குப் பிறகு Survival of the fittest என்று ஆங்கிலத்தில் சொல்வது போல், எதற்கு நல்ல உயிரூட்டம் உள்ள வலுவு இருக்கிறதோ அந்தப் பிரச்சாரம் நிலைக்கும், மற்றப் பிரச்சாரம் தோற்கும்.

ஒரு கனம் அங்கத்தினர் இங்கே குறிப்பிட்டதைப் போல, "இவர்கள் ஏதோ எழுதிவிடுகிறார்கள்; ஆனால் மக்கள் அவைகளிலே ஏதும் மயங்கி விடவில்லை; மக்கள் ஏமாந்துவிடவில்லை என்பதை எங்கள் எண்ணிக்கையைப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்" என்று குறிப்பிட்டார்கள். மக்கள் அந்தப் பிரச்சாரத்தை நம்பவில்லை என்று நீங்கள் வாதமாகக் காட்டுகிறபோது எதற்காகச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இதற்கு ஏற்கனவே சட்டம் இடம் அளிக்கிறது என்று எங்கள் தரப்பிலிருந்து எடுத்துச் சொல்லிய நேரத்தில், நம்முடைய லால்குடி தொகுதி அங்கத்தினர், "295 (எ) செக்ஷன் அதற்குப் போதுமானது அல்ல" என்று சொன்னார்கள். சொல்லிவிட்டு, அவர்கள் "இன்டியன் பினல் கோட்"ஐத் தேடினார்கள். துரதிருஷ்டவசமாக அது அவர்களுக்குக் கிடைக்கவில்லை; அதிருஷ்டவசமாக அது எனக்குக் கிடைத்தது. கிடைத்த காரணத்தாலே, ஏற்கனவே உள்ள சட்டம் இதற்குப் போதும் என்பதற்கேற்ற வாசகங்கள் இருப்பதை நான் இந்த நேரத்தில் கவனப்படுத்த விரும்புகிறேன்.

"2 5-A Whoever with deliberate and malicious intension of outraging the religious feelings of any class of citizens of India, by words, either spoken or written, or by visible representation insults or attempts to insult the religion or the religious beliefs of that class, shall be punished with imprisonment. . . .

என்று அந்தப் பிரிவு இருக்கிறது. இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தைப் பற்றி அறியவேண்டுமென்றால், இந்த மசோதாவுக்குப் பின்னாலே இருக்கும் ஒரு சிறு வரலாற்றை இந்த மன்றத்திலே நான் சொல்லப் பிரியப்படுகிறேன். 1956-ல் இந்த மசோதாவினுடைய ஒரு சுருக்கம் ஒரு தனிப்பட்ட அங்கத்தினராலே தரப்பட்டது. தனிப்பட்ட அங்கத்தினரால் 1956-ல் தரப்பட்ட மசோதாவில் , "சுவர்களையும், ஊர்களையும் அசுத்தப்படுத்துகிறார்கள். அதனால் ஆபாசமாகக் காட்சியளிக்கிறது, வரைமுறையற்ற முறையில் விளம்பரத் தாளை ஒட்டுவதனால் ஊருக்கு இருக்கும் அலங்காரம் கெடுகிறது. அழகு பாழ் படுகிறது. அதைத் தடுக்க வேண்டும்" என்ற முறையிலே தான் இந்த மசோதாவை ஒரு தனிப்பட்ட அங்கத்தினர் கொண்டு வந்தார். இதை ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதிக் கொண்டு ஆட்சியாளர்கள், "நாங்கள் இதைச் சர்க்கார் மசோதாவாகக் கொண்டு வருகிறோம்" என்று வாக்களித்து அவரும், எதிர்பாராத அளவு - ஆனால் இன்றையதினம் அவர் ஆதரிக்கக்கூடும் - அவர் எதிர்பாராத பல ஷரத்துக்களை இதிலே புகுத்தியிருக்கிறார்கள். ஆகையால்தான், இந்த மசோதாவிலே இருக்கும் ஷரத்துக்களைப்பற்றி ஆராய்வதற்குக்கூட எனக்கு மனம் இடம் தராமல் இந்த நோக்கத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஆபாசத்தைத் தடுப்பதற்கு நீங்கள் யார் என்று உங்களை உலகம் என்றைய தினம் கேட்கும் என்றால், ஆபாசம் எது என்று அறிவதற்கு நீங்கள் அருகதை பெற்றவர்கள் என்று உலகம் ஏற்றுக்கொண்டால், இது ஆபாசம், இது ஆபாசம் அல்ல என்று நீங்கள் சொல்லக்கூடும்.

சினிமா விளம்பரங்களைப் பார்த்து, இது ஆபாசம் என்று கருதப்படுவதை பல அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். நிச்சயமாக நான் உங்களுக்குச் சொல்வேன் - தமிழ்நாட்டிலே தயாரிக்கப்படுகிற சினிமா விளம்பரங்களுக்குத் தமிழ்ப் பெண்களை விளம்பரத் தாள்களிலே போட்டால் அது எந்த அளவுக்கு ஆபாசமாகக் கருதப்படுகிறதோ, அந்த அளவுக்கு மற்ற இடங்களில் கருதப்படுவது

இல்லை. அதே நேரத்தில் வட நாட்டுப் பெண்களை சினிமா விளம்பரத் தாளிலே போட்டால் தமிழ் நாட்டில் உள்ளவர்கள் அதை அந்த நாட்டினுடைய பழக்கத்தில் ஒன்றாக இருக்கிறது என்று கருதி விடுகிறார்கள். தமிழ் இலக்கணத்தில் ''இடக்கரடக்கல்'' என்று ஏற்கெனவே சொல்லி வைத்திருக்கிறார்கள். கெட்டதை நாம் அடக்கியே பேச வேண்டும் என்ற ''இடக்கரடக்கல்'' என்னும் இலக்கணத்திற்குக் கட்டுப்பட்டு, நீங்களே யூகித்துக் கொள்வீர்கள் என்று சொல்லாமல் விட்டுவிடுகிறேன். நாட்டுக்கு நாடு, காலத்திற்குக் காலம் மாறுபாடு கொண்டிருக்கும் பல்வேறு கருத்துக்களை நீங்கள் தடுக்க வேண்டும் என்று விரும்புவது - எங்கள் தரப்பிலே உள்ள கனம் அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னது போல, அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்த கதையாக, எதை எதைச் செய்தால் எதிர்ககட்சிப் பிரசாரத்தைத் தடைபடுத்த முடியும் என்ற எண்ணத்திலே நீங்கள் செய்கின்றீர்கள் என்று உங்கள் பேரிலே பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். ஆபாசத்தை அடக்குவதற்கு இவர்களுக்கு இருக்கும் ஆற்றல் பயன்படவில்லையா என்று நான் அவர்களைக் கேட்கிறேன். இன்னது ஆபாசம் என்று பொது மக்களிடத்தில் எடுத்துச் சொல்லி, இதுவரை தாரால் எழுதப்பட்ட எந்தச் சுவற்றில், எத்தனை சுவற்றில் வெள்ளை அடித்தார்கள், காங்கிரஸ் தொண்டர்கள்? வெள்ளை அடித்து அந்த ஆபாசத்தை மூடினார்கள். எந்த வீட்டிலே எழுதப்பட்டதோ, அதை அந்த வீட்டுக் காரர்களோ, மற்றவர்களோ, ஊரிலிருக்கும் பொதுநலத் தொண்டர்களோ பார்த்து, இது எழுதப்பட்டிருப்பதால் ஊருக்கு ஆபாசம் விளைகிறது, பலாத்கார உணர்ச்சி தூண்டப்படுகிறது, ஆகையால் இதை அழிப்போம் என்று அழிக்கப்பட்ட சுவர்கள் எத்தனை?

திரு. எம். ஆர். கந்தசுவாமி முதலியார் : 'I rise on a point of order, Sir. கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகின்றேன். நண்பர் அவர்கள், ''எந்த இடத்திலே காங்கிரஸ் காரர்கள் ஆபாசத்தை அழித்தார்கள்?'' என்று கேட்கிறார். நான் அவருக்குச் சொல்கிறேன் - சேலம் ஜில்லாவில் பல இடங்களில் அம்மாதிரி ஆபாசங்கள் சுவற்றில் எழுதப்பட்டதாகப் புகார் வந்து, அவை அழிக்கப்பட்டிருக்கின்றன. இல்லை என்று மறுப்பதற்கில்லை. ஆகையால், அவர் சொல்வது தவறு.

திரு. சபாநாயகர் : This is not a point of orders. The Hon. Member is giving information

திரு. எம். ஆர். கந்தசுவாமி முதலியார் : கனம் அங்கத்தினர் தவறாகச் சொல்கிறார் அதற்காகத்தான்.

திரு. சபாநாயகர் : The Hon. Member cannot say that.

திரு. சி. என். அண்ணாதுரை: சட்டமன்றத் தலைவர் அவர்களே, அதற்கு ஏற்ற விதத்திலே ஒரு தொண்டர் படை நாட்டிலே அமைக்கப் பட்டிருக்குமானால், அமைக்க இன்றையதினம் ஆட்சியாளர் முற்படுவார்களானால், நாங்கள் சார்ந்திருக்கும் கழகத்தின் சார்பில், அந்தத் தொண்டர் படையில் எத்தனை பேரைச் சேர்க்க முடியுமோ அத்தனை பேரைச் சேர்த்து வைப்பதற்குக் கழகத்தின் சார்பில் தயாராக இருக்கிறேன். ஆபாசம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதிலே யாருக்கும் அக்கறை இல்லாமல் போய்விடாது. ஆனால், எது ஆபாசம் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு, அந்தந்த இடங்களிலேயுள்ள விருப்பு வெறுப்புக்குத் தக்கபடி, அந்தந்த இடத்திலுள்ள அரசியல் மாச்சரியங்களுக்குத் தக்கபடி வழக்குகள் ஜோடித்து தொடர்வதற்கும் வழிவகை செய்து, நீங்கள் ஏற்படுத்துகிற இந்தச் சட்டம் மறைமுகமாக - நீங்கள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் - எதிர்க்கட்சிப் பிரசாரத்தைத் தடுக்கத்தான் பயன்படும். ஆங்கிலத்தில் உள்ள வார்த்தையை இங்கே கவனப்படுத்தினால் ஆட்சியாளர்கள் என்பால் கோபப்படமாட்டார்கள் என்று கருதுகிறேன். "Writing on the wall" என்பது அகராதியில் அனுமதிக்கப்பட்ட வார்த்தைகளாகும். சுவற்றிலே எழுதப்பட்டிருப்பதைப் பார்த்துத்தான் நாட்டு மக்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை ஆட்சியாளர் அறிந்து கொள்ள முடியும். ஜூலியஸ் ஸீஸர் ஆண்ட காலம் முதற்கொண்டு மாக்மில்லன் பிரபு ஆளும் இந்தக் காலம் வரை மேல்நாடுகளிலே அவ் வார்த்தைகளை அனுமதித்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, சுவற்றிலே எங்கோ எழுதப்பட்டிருந்தால், அதைப் பார்த்து மனம் பதறி, ''இது தடுக்கப்பட வேண்டும்'' என்று இவர்கள் ஏன் பதற வேண்டும் என்று எனக்குத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

உங்களுக்கு நான் மற்றொரு உதாரணத்தைச் சொல்ல முடியும். எங்களுடைய கழகம் இருக்கும் ராயபுரத்திலே ''அறிவக''த்திற்கு

எதிரில் ஒரு பெரிய சுவர் இருக்கிறது. அந்தச் சுவற்றில் எங்களைப் பிடிக்காத கட்சியார், "காட்டிக்கொடுத்தவன் கலைஞனா"? என்று எழுதியிருக்கிறார்கள். நான் அந்த சுவற்றில் வெள்ளை அடிக்கக்கூடாது என்று சொல்லி, அதைப் பார்த்து பொது மக்கள் எங்களைப் பற்றித் தவறாகக் கணக்கெடுத்துவிட்டால், பொதுமக்கள் கருத்துக்குத் தலைவணங்க வேண்டும் என்று சொன்னேனே தவிர, இது இருக்கும் வரையில் கழகத்திற்கு இழுக்கு என்று சொல்லவில்லை. இவர்களுக்கு ஏன் அந்த விஷயத்தில் துணிவுடைமை இல்லை? ஆபாசத்தைப் பிரசாரத்தால் தடுக்க முடியும் என்று இவர்கள் ஏன் கருதவில்லை? இவர்களிடம் பிரசார பீரங்கிகளுக்குக் குறைவா? சுழல் துப்பாக்கிகள் இல்லையா? இவர்கள் எத்தனை வகையான பிரசார வகைகள் வைத்திருக்கிறார்கள்; ஏன் அவைகளை விட்டு அந்த ஆபாசங்களை அகற்றியிருக்கக்கூடாது? இதைப் பற்றிச் சொல்லும் நேரத்தில், இது எந்த எந்த இடத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும் என்பதை நம்முடைய மதிப்பிற்குரிய சாமி சகஜானந்தா அவர்கள் கொஞ்சம் கண்ணீரோடு பேசிய போது நான் மெத்த வருத்தப்பட்டேன். அவருக்கும் அவர் போன்றோருக்கும் ஒன்று சொல்லிக் கொள்வேன். நீங்கள் ஆழ்ந்த நம்பிக்கையோடு வைத்துக் கொண்டிருக்கும் பல கொள்கைகள் எதிர்காலத் தலைமுறைக்கு ஏற்றதல்ல என்று உலகம் தீர்ப்பளித்திருக்கிறது. உங்களுக்கு எவ்வளவுதான் அதில் ஆழ்ந்த நம்பிக்கை இருந்தாலும், அந்த நம்பிக்கைகளெல்லாம் நசித்துக் கொண்டு வருகின்றன. உலகத்தில் ஏற்பட்டுக் கொண்டு வரும் மாறுதல் காரணத்தால், இதைச் சொன்னால் மனம் புண்பட்டுவிடும் என்று எண்ணுவதைவிட்டு, இதையெல்லாம் காட்டிலும் கொள்கையிலே உறுதியிருந்தால் மனம் புண்படாது என்று சொல்வேன். சர்தார் வேதரத்தினம் அவர்கள் சொன்னதுபோல், நீங்கள் அப்படியே கருதி, மனம் புண்படுகிறதே என்ற எண்ணத்தில் இப்படிப்பட்ட முறையிலே உலகம் மாறிக்கொண்டு வருகிறது என்று; ஒன்று, நீங்கள் மாறுதலைத் தடுக்க வேண்டும்; அல்லது மாறுதலுக்கு நீங்கள் உட்படவேண்டும்: அல்லது அந்த மாறுதலில் இருந்தே ஒதுங்கி நிற்கவேண்டும். இது முறையே தவிர இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே என்று எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பது முறையாகாது என்று மறுபடியும் எடுத்துச் சொல்லுகிறேன்.

இவர்கள் நினைத்தால் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற எண்ணிக்கை பலத்தைப் பெற்றிருக்கிறார்கள். இந்த நேரத்திலேதான் இவர்கள் செய்யும் சட்டத்திலே அடக்க உணர்ச்சி அதிகமாக இருக்கும் இந்த நேரத்தில்தான் "நாங்கள் விரும்பியிருந்தால் இந்தச் சட்டத்தைச் செய்ய முடியும்; ஆனால், நாங்கள் எங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்த விரும்பாத காரணத்தால் சட்டங்களைக் கொண்டு வரவில்லை" என்று இவர்கள் சொல்வதுதான் இவர்களுக்கும் இவர்கள் சார்ந்திருக்கும் கட்சிக்கும் கீர்த்தி அளிக்குமே தவிர, ஒரு அங்கத்தினர் சொன்னது போல, "பத்து ஆண்டுகள் விட்டு பிடித்தோம்; இவர்கள் போகிற பாதை சரியாக இல்லை" என்று ஏதோ உலகத்தில் யாரும் தராத உரிமையை, உலகத்தில் யாரும் தராத ஜனநாயகத்தைக் கடைந்தெடுத்து, தேர்ந்தெடுத்து, பக்குவப்படுத்தி, தகாதவர்கள் மத்தியிலே தந்தது போலவும், அவர்கள் நிச்சயமாகப் பயன்படுத்தவில்லை என்பது போலவும் கனம் அங்கத்தினர் சொன்னதைக் கேட்டு, அவருடைய அரசியல் வரலாற்றைப் பற்றி நான் மனதிலே எண்ணிப் பார்த்த நேரத்தில், உரிமைகள் உருவாக்கப்பட்ட நேரத்தில் அவர்கள் எந்தப்பக்கத்தில் இருந்தார் என்பதை எனக்குள்ளாக நினைத்துக்கொண்டேன். இந்த விதத்தில் பத்து ஆண்டுக் காலம் உரிமைகளைக் கொடுத்தோம், அதை நாங்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்று நீங்கள் சொல்வது சர்வாதிகாரத்தை உணர்ந்து நீங்கள் சொல்வதாக இருக்கிறது. அந்த மனப்பான்மை வளர வளர இதைச் செய்யலாம், அதைச் செய்யக் கூடாது என்று சொல்லுகிற மனப்பான்மையில்தான் ஸ்ரீ லால்குடி அங்கத்தினர் ஒன்று சொன்னார். "இது மட்டும் போதாது, இப்படியெல்லாம் பேசக்கூடாது" என்று சட்டம் இருக்க வேண்டும் என்று அவர் ஒரு யோசனையையும் குறிப்பிட்டார். கட்டை விரலை வாங்கி விட்டு நாக்கை அறுத்து விட்டால் நீங்கள் நிலைக்க முடியும் என்றால் தாராளமாகச் செய்யுங்கள். உங்களுக்கும் கட்டை விரல் இருக்கிறது, நாக்கும் இருக்கிறது. ஆபாசத்தைப் போக்க அறநெறி அறிந்தே சர்தார் வேதரத்தினம் இருக்கிறார், உங்களிடத்தில், அவர் இருப்பதால் தைரியமாக இருக்கலாம். இத்தகைய ஆபாசங்கள் நாட்டில் நடைபெறாமல் இருக்க, சட்டம் மூலமாக இல்லாமல் சர்தார் வேதரத்னம் அவர்களுடைய சன்மார்க்கம் மூலமாகவும், சர்தார் வேதரத்னம் அவர்கள் சொன்னது போல் அறநெறி காட்டுவதன்

மூலமாகவும், சர்தார் வேதரத்னம் சொன்னது போல் வள்ளுவப் பெருந்தகை குறள் வழி காட்டுவதன் மூலமாகவும் அவைகளை ஏன் தடுக்கக்கூடாது? போலீசுக்குப் புது அதிகாரத்தைத் தருவது என்பது ஜனநாயகத்திற்கு உலை வைப்பதாகும். அறிவாளிகள், அரசியல் வாதிகள் போலீசிடத்தில் இந்த அதிகாரத்தைத் தருகிறார்கள். சுவற்றில் எழுதப்பட்டிருப்பது எந்த வகையில் இருந்தாலும் குற்றம் உடையனவா அல்லது குற்றம் உடையனவாக இல்லையா என்பதைப் பொறுத்து இருக்கிறது. சட்டத்தையும் அமைதியையும் காக்கும் பொறுப்பு, இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற கனம் பக்தவத்சலம் அவர்கள் இதற்கு நல்ல விளக்கம் தந்திருக்கிறார். மதத்திற்கு மாறுபடாமல் மனம் புண்படாமல் எழுதினால் குற்றம் இல்லை என்று சொல்லி இருக்கிறார். யாரிடத்தில் இந்த அதிகாரத்தை ஒப்படைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அநேக போலீஸ் காவலர்கள் சுவர்களில் எழுதப்பட்டவுடன் இது ஆபாசமானது, இது ஆபாசமானது அல்ல என்று பாகுபடுத்துவதற்கு முடியாத நிலையில் வழக்குத் தொடருவார்கள். அந்த வழக்கு சட்ட மன்றத்திற்குச் செல்லும் நேரத்தில் இது எப்படிப்பட்ட பலாத்காரத்தை தூண்டலாம் என்று வழக்கு அறிஞர்கள் வாதாடக் கூடும். ''பார்ப்பனர்களே வெளியேறு'' என்று எழுதி இருப்பதை திரு. சகஜாநந்தம் அவர்கள் குறிப்பிட்டார். அதை நான் ரசிக்கவில்லை, வரவேற்கவில்லை. அதற்கு விளக்கங்கள் தரப்பட வேண்டுமானால், இரண்டு விளக்கங்கள் கொடுக்கலாம். சட்ட மன்றத்தில் இரண்டு தரப்பிலும் பேசலாம். ''பார்ப்பனர்களே வெளியேறு'' என்று எழுதுவதற்கு காரணம் ''பார்ப்பனர்கள் இந்நாட்டில் அக்கிரமம் செய்கிறவர்கள், அவர் அந்நியர், ஐயா, நீங்கள் வெளியேறுங்கள், வெளியே போய்விடுங்கள்'' என்று அர்த்தம் கொடுத்து சொல்லலாம். ஆனால் மற்றொன்று அப்படி எழுதி இருப்பது தூண்டுதலை உண்டாக்குகிறது என்று சர்க்கார் தரப்பிலுள்ள வழக்கறிஞர் வாதாடலாம். மற்றும் ''வெளியேறு'' என்ற வார்த்தையை எப்படி ''முடுக்காக இருக்கிறது பாருங்கள்'' என்று சொல்லலாம். ''வெளியேறுங்கள்'' என்று எழுதாமல், ''வெளியேறுகிறார்களா இல்லையா'' என்று கேட்காமல் ''வெளியேறு' என்று எழுதியிருப்பது ''வெளியேறாவிட்டால் வெளியேற்றி விடுவோம்'' என்ற உள் அர்த்தம் தொக்கி இருக்கிறது என்று இப்படியெல்லாம் வழக்கு மன்றத்தில்

வழக்காடலாம். இந்த நிலையில் புதிய சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியம் என்ன?

பல அங்கத்தினர்கள் சொன்னார்கள்; ஏராளமான மகஜர்கள் வந்தன என்று. ஆளும் கட்சிக்குத் தரப்படும் மகஜர்களையெல்லாம் அவர்கள் கவனித்தார்களா? இப்பொழுதுள்ள ஆட்சியாளர்கள் இதை நன்றாக கவனிக்க வேண்டும். குளம் இல்லை என்று மகஜர் கொடுத்தால் அதை குப்பை தொட்டியில் போட்டு விடுகிறார்கள், எரு இல்லை என்றால் அதை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை, மற்றப்படி பாசன வசதி இல்லை என்று மகஜர் வந்தால் அதற்கு அக்கறை காட்டுவது இல்லை. ஆனால் இதற்கு மகஜர் வந்தவுடன் ஆட்சியாளர்கள் அதில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு வருவதற்கு அவர்களுடைய திறமையைக் கண்டு பாராட்டுகிறேன்.

இப்படி அச்சத்தின் காரணமாக இதைச் செய்து வருகிறார்கள். இப்பொழுது இருக்கிற ஐ.பி.சி. பிரிவின் கீழ், எழுதப்பட்டிருப்பதற்கு, எத்தனை வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. யாரையும் இந்த வகையில் சிறைச்சாலைக்கு அனுப்பியிருக்கிறார்களா? அதைத் தடுக்க ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்களா? இதைச் செய்யாததற்குக் காரணம் ஒன்றும் ஏற்படவில்லை என்பதுதான். இப்பொழுது எத்தனையோ எழுதப்படுகிறது. சில எழுத்துக்கள் சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். எங்களுக்குப் பிடிக்கவில்லையே அதனால் தவறு, அது புண்படுத்தக்கூடியது என்று சொல்வது தவறு. பிடிக்காததெல்லாம் தவறு என்று சொல்லுகிற வாதம் தவறான வாதமாகும். பிடிக்காத வார்த்தைகள் அநேகம் வரத்தான் செய்யும்.

இப்பொழுது ஒன்றை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு பழைய தலைமுறை வேகமாக மறைந்து கொண்டும், புதிய தலைமுறை கருவிலே உருவாகிக் கொண்டும் வருகிறது. இடைக் காலத்தில் இருக்கும் தலைமுறை பழைய விஷயத்தில் நம்பிக்கை வைப்பதற்கு அச்சப்பட்டுக் கொண்டிருக்கிறது. இடைக்காலத்தில் வாழும்போது பல்வேறு கருத்துக்கள் பல்வேறு முறையில் பிரசாரங்கள் நடைபெற்று வரும்போது நல்ல கருத்துக்கள் நிலைக்குமே தவிர மற்ற பழைய கருத்துக்கள் நிலைத்து நிற்காது.

பல அங்கத்தினர் ஒழுக்கம் வேண்டாமா என்பதைப்பற்றி யெல்லாம் சொன்னார்கள். ஆனால் ஒழுக்கம் என்பதைப்பற்றி ஒன்றை நான் குறிப்பிட்டுக் கொள்வேன். ஒழுக்கம் வேண்டும் என்று சொல்லுகிறவர்கள்தான் ஒழுக்கத்தை விரும்புகிறவர்கள் என்றும், ஒழுக்கத்தை நிலைநாட்டுவதாக சொல்லுகிறவர்கள் அதுதான் முறை என்று சொல்லுகிறவர்கள் ஒழுக்கம் வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். அது தவறான ஜாதி என்பதை அவர்களே நினைத்துக் கொள்வார்கள். ஒழுக்கம் என்பதற்கு அவரவர்கள் கொடுக்கிற அபிப்பிராயம்தான் காலத்திற்குத் தக்கபடி அதற்குப் பொருள் மாறிக்கொண்டே வரும். சமீப காலத்தில் கனம் நிதி அமைச்சர் அவர்களுடைய கருத்து ஒன்றைப் பத்திரிகையில் படித்தேன். சிறு பெண்கள் இரட்டைப் பின்னலை பின்னிக் கொண்டிருந்தால் அதை தாம் ஆபாசமாகக் கருதியதாகவும், ஆனால் இப்பொழுது பார்த்தால் அது கூட அழகாக இருக்கிறது என்றும் கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதாக பத்திரிகையில் படித்தேன். முதல் முதலில் க்ராப் வைத்துக் கொண்டால் அது ஆபாசம் என்றும், அதைப்போல் ஆங்கில பாஷை பேசிய காலத்தில் அது நீச பாஷை என்று கருதியதாகவும் சொன்னார்கள். நம்மிடையே பலர் ஆங்கில நடையுடை பாவனையை இப்பொழுது வைத்துக் கொண்டிருக் கிறார்கள். தமிழ் இலக்கியத்தில் வல்லுநரான கனம் வேலூர் அங்கத்தினர் பேசும்போது பழைய நாகரிகத்திற்கு முரணாக இருப்பதெல்லாம் ஒழுக்கக்கேடு என்று சொன்னார். அது ஒழுக்கக்கேடு இல்லை என்பதை உலகம் இன்று உணர்ந்திருக்கிறது. என்னைக் கேட்டால் நான் சொல்வேன், எது ஒழுக்கக்கேடு என்றால் சமுதாயத்தில் கஷ்டத்திலும் நஷ்டத்திலும் வெளியேயும் உள்ளேயும் தான் வாழ்ந்து மற்றவர்கள் வாழ்வைக் கெடுக்கக்கூடிய சில முறையில் யார் நடந்து கொள்ளுகிறார்களோ, அந்த முறையை யார் கையாண்டு கொண்டிருக்கிறார்களோ, அவற்றைத்தான் ஒழுக்கக் குறைவு என்று கருதலாம். எனக்குப் பிடிக்கிறதெல்லாம் ஒழுக்கம் என்றும் எனக்குப் பிடிக்காததெல்லாம் ஒழுக்கக்கேடு என்றும் சொன்னால் அது எந்த அளவில் பொருத்தமாக இருக்க முடியும்?

பழைய கதைகளை எடுத்துச் சொல்லி அதில் இருக்கும் பழைய கருத்துக்கள் பகுத்தறிவுக்கு ஒத்ததாக இல்லை என்பதை மதிப்பிற்குரிய நண்பர் ஏ. கோவிந்தசாமி எடுத்துச் சொன்னார். திருவண்ணாமலை

தீபத்தைப் பற்றியும், கண்ணப்ப நாயனார் புராணத்தைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். சர்தார் வேதரத்னம் அவர்களும் அதற்கு ஒரு விளக்கம் கொடுத்தார். அதையும் அவர் தயக்கமில்லாமல்தான் கொடுத்தார். அதைக் கேட்டு உண்மையிலேயே நான் மகிழ்ச்சி அடைந்தேன். திருவண்ணாமலை தீபத்தைப் பற்றி சரித்திரக்காரர்கள் சொல்லுகிற விளக்கம் போதாது என்று சர்தார் வேதரத்னம் உணர்ந்திருக்கிறார். சர்தார் வேதரத்னத்திற்குத் தோன்றியிருக்கலாம், திருவண்ணாமலைக் கார்த்திகை தீபத்தைப்பற்றி சொல்லும்போது புராணக் கருத்தைச் சொன்னால் இந்தக் காலத்தில் அதைக் கேட்டு கை கொட்டி நகைப்பார்கள் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. புராண கருத்தாகிய, பரமசிவனுடைய அடிமுடியைக் காண மகா விஷ்ணுவும் பிரம்மாவும் சென்றார்கள் என்ற கதையைச் சொன்னால் நம்ப மாட்டார்கள் என்றும் அந்தப் பக்கத்தில் இருக்கக்கூடியவர்கள் அதை ஏற்க மாட்டார்கள் என்றும், அதற்கான விஞ்ஞான விளக்கத்தை அவர் தேடித் தந்திருக்கிறார். அதற்கு அவருடைய திறமையை நான் பாராட்டுகிறேன். பழைய காலத்துக் கருத்துக்களை எடுத்துச் சொன்னால் அந்தக் காலத்தில் அது நிலைத்து நிற்கும். ஆனால் நாம் இப்பொழுது எந்த தலைமுறையில் வாழ்கிறோம் என்பதையும் கவனிக்கவேண்டும். ஆகவே, புதிய கருத்துக்களைச் சொல்வதற்கு தாராளமாக இடம் அளிக்கவேண்டும். புதிய கருத்துக்களைச் சொல்லும்போது ஐ.பி.சி-யில் குறிப்பிட்டிருப்பது போல் அவைகள் பலாத்காரத்தைத் தூண்டுவதாக இருக்கிறது என்று பல வழக்குகளை தாராளமாகத் தொடரலாம். அதனைச் செய்தால் அப்படிப்பட்ட வழக்குகள் எப்படித் தடுக்கப்படும் என்பதை முன் கூட்டியே கையைக் கட்டுவதுபோல்; இப்படிப்பட்டச் சட்டம் போட்டு விட்டால் சுவற்றில் எழுதாமல் இருந்து விடுவார்கள் என்று நினைப்பதற்கு இல்லை. இப்படிப்பட்ட சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் அதிகப்படியாக எழுதத்தான் கிளம்புவார்கள். சட்டம் போட்டு விட்டால் எழுத வேண்டும் என்று கருதுகிறவர்கள் எழுதாமல் விட்டு விடுவார்கள் என்பதில்லை. இதற்கு முன் நிறைவேற்றிய சட்டத்தைப் பார்த்தால் இது நன்றாகத் தெரியவரும். கொடியைக் கொளுத்தக் கூடாது என்று சட்டம் செய்தவுடன் அதிகப்படியான கொடிகளைக் கொளுத்தினார்கள் என்பதை நாம் பார்த்திருக்கிறோம். அது சர்க்காருக்கு அனுபவத்தில் தெரிந்திருக்கிறது. அதைப்போலவே. . .

உயர்திரு. பக்தவத்சலம் : கொடி கொளுத்துகிற விஷயத்தைப் பற்றி எல்லோரும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள், சட்டம் போட்டதினால் என்ன ஆயிற்று என்று.

திரு. சி. என். அண்ணாதுரை : நம் கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள் போலீஸ் பாஷையில் பேசியிருக்கிறார். நான் சொல்வது சட்டம்போட்டு விட்டால் அதை அடுத்து குற்றம் செய்யாமல் இருக்க வேண்டுமென்ற உணர்வு வேண்டும். அப்பொழுது தான் சட்டத்திற்கு நல்ல மதிப்பு உண்டு, இருக்கும். அப்படிப்பட்ட சட்டத்தை இயற்றினால்தான் நாம் செலவழிக்கும் நேரம் வீண் நேரமாகாது. அப்படி இல்லாமல் இப்படிப்பட்ட சட்டத்தை நிறைவேற்றுவதில் இவ்வளவு காலத்தை வீணாக செலவிட வேண்டியதில்லை. இப்படிப்பட்ட சட்டத்தை ஒரு பக்கத்தில் கொண்டு வந்து விட்டு அதை மீறினால் அப்படி மீறுகிறவர்களை தண்டிப்போம் என்று இருந்தால் அதற்கு முடிவே இருக்காது. ஆகவே சட்டத்தை செய்யும் நேரத்தில் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் நீங்கள், எண்ணிக்கை பலம் பெற்ற நீங்கள், அனாவசியமான சட்டங்களை அவசர அவசரமான முறையில் கொண்டு வந்து எதிர் கட்சிக்காரர்களை மறைமுகமாக பாதிக்கக்கூடிய வகையில் சட்டத்தைக் கொண்டு வருவது ஆகாது. கொடியை கொளுத்துவதை தடுக்கச் சட்டம் செய்ததால் என்ன விளைவுகள் ஏற்பட்டன என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். நன்கு தெரிந்து கொண்டிருக்கிறோம், அவர்கள் சொன்னதைப்போல இவ்வளவு கடுமையான சட்டத்தைப் பிறப்பித்தும் கூட, பலர் கொடி கொளுத்தினார்கள். கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று சொல்லியும் கூட கொடியைக் கொளுத்த ஐயாயிரம் பேர் இருந்தனர் என்ற நிலைமை உலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது பெருமை தேடிக் கொள்ளும் காரியம் அல்ல.

இந்தச் சட்டம் தேவையற்றது என்பதனையும், நிறைவேறாது என்பதனையும், நோக்கம் நிறைவேறத்தக்க பிரச்சார முறைகளைக் கையாள்வார்களேயானால் எங்கள் கட்சியைப் பொறுத்த வரை முழு ஒத்துழைப்பையும் தர நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதனையும் தெரிவித்துக்கொண்டு, கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள் இப்படிப் பட்ட சட்டத்தைக் கொண்டு வரத்தேவை இல்லை என்று

பணிவன்போடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பல நாடுகளில் இந்தச் சட்டம் இல்லையென்பதை ஏற்றுக்கொண்டார்கள். இந்த முறை இருக்கிறதா என்றால் - பல நாடுகளிலும் ஏழு, எட்டு ஆண்டு காலம் இருந்து விட்டு வந்தவரைப் போல நான் சொல்லுவதற்கில்லை. நான் வெளி நாடுகளுக்குப் போனவன் இல்லை. பல்வேறு கிளர்ச்சிகளைப் பற்றி வருகிற விளம்பரத் தாள்கள், நம்முடைய பத்திரிகைகள் ஆகியவற்றைப் பார்க்கிறேன். இங்கு நடக்கும் கிளர்ச்சிகளுக்கு எள்ளளவும் குன்றாத அளவுக்கு அங்கும் நடைபெறுகின்றன. அமெரிக்க நாட்டுத் துணைத் தலைவர் மெக்சிகோ நாட்டிற்குப் போனபோது "வரக்கூடாது" என்று பல்வேறு வகையில் கிளர்ச்சி நடத்தினர். அன்றைய தினம் - சிறிது நாட்களுக்கு முன்பு ரஷ்ய நாட்டுப் பெரும் தலைவர் அமெரிக்க நாட்டுக்குப் போயிருந்த போது அவரைப் பிடிக்காதவர்கள் தங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்க பல்வேறு கிளர்ச்சிகளில் ஈடுபட்டார்கள். ஜனநாயகத்தில் ஐந்தாண்டு காலத்திற்கு ஒரு கட்சி ஆட்சி என்ற நிலைமை இருக்கிற காரணத்தினால், இடைக்காலத்தில் மக்கள், எதிர்க்கட்சிகள் தங்கள் அதிருப்தியைத் தெரிவிக்க வழிவகைகள் இருக்க வேண்டும். அந்த வழி வகை இருக்க வேண்டுமென்பதையும், அந்த வழி வகைகள் செலவு இல்லாத வகையில், எளிதான வகையில், எல்லாக் கட்சிகளுக்கும் ஏற்ற விதத்தில் இருக்க வேண்டுமென்பதையும் கருதித்தான் இந்த முறை நம் நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் கையாளப்படுகிறதே யல்லாமல் ஒழுக்கம் தவறியோ அல்லது வேறு காரணங்களினாலோ அல்ல. பல்வேறு கட்சியைச் சேர்ந்த சிறு பிள்ளைகள் என்று சொன்னார்கள். அவ்வாறு சிறு பிள்ளைகளாக இருந்தவர்கள் யார் யார் என்று எண்ணிப் பார்த்தேன். ரஷ்ய நாட்டில் பெரிய புரட்சியை நடத்திய லெனின் தன்னுடைய ஜோபியில் எப்பொழுதும் ஒரு கரித் துண்டை வைத்துக்கொண்டு சுவர் இருக்கின்ற இடத்தில் எல்லாம் தான் காண விரும்பிய புரட்சியை பற்றிச் சுவற்றிலே எழுதினார் என்று ஏட்டிலே படித்திருக்கிறேன். லெனின் போன்ற பெரியவர்கள் எல்லாம் அந்தக் காரியத்தை அரசியலிலே கையாண்டு வந்திருக்கிறபோது "சுவற்றிலே எழுதுவது சிறு பிள்ளைத்தனமான காரியம்" என்று சொல்லுவதற்கு நீங்கள் ரொம்பப் பெரிய மனிதர்களாகி விட்டீர்களோ? சுவற்றிலே எழுதுவது ஒன்றும் சிறு பிள்ளைத்தனம் அல்ல. ஆபாசம் இல்லாமல் இருக்கவேண்டுமென்றால் பிரச்சார வழி

வகைகளைச் செய்து கொள்ள வேண்டுமே தவிர, இந்த மாதிரி சட்டம் தேவையில்லை. ஆகவே இந்தச் சட்டத்திலே மிகுந்த கடுமையான முறைகளை புகுத்தி இருப்பதன் காரணமாக எதிர்க்கட்சிகளின் பிரச்சாரம் தடைப்படும் என்ற எண்ணத்தில் கொண்டு வந்திருப்பதாகத் தெரிகிறது. ஆபாசம் ஒரு பக்கத்தில் இருக்க, அழகான தமிழை ஏற்றுக் கொள்ளுகிறார்களா என்றால் அதுவும் இல்லை. வேறு ஒரு நேரத்தில் பேசுகிற போது அடுக்கு மொழி பேசுகிறார்கள் என்று சொல்லுகிறீர்கள். திட்டமாக "நீங்கள் பேசாதீர்கள்" என்று சொல்லி விடுங்களேன். "நாங்கள் சக்தியுள்ளவர்களாக இருக்க நீங்கள் அரசியலில் இருக்காதீர்கள்; நாங்கள் பிழைத்து இருக்க வேண்டு மானால் நீங்கள் பேசாதீர்கள்; நாங்கள் ஆட்சியில் இருக்க நீங்கள் எழுதாதீர்கள்;" என்று சொல்லி விட்டால் மிக சுமுகமான முறையில் முடிந்து விடும். எங்களுக்கும் தொல்லை இருக்காது. ஜனநாயகத்தின் பேரால் கொண்டு வரப்படுகிற இந்தச் சட்டம் உண்மை ஜனநாயக உணர்ச்சியைப் பாழ்படுத்துவதாகும். கொடும்பாவி கட்டி இழுப்பது, அதைக் கொளுத்துவது கூடத் தவறு என்று சட்டத்தில் காட்டப் பட்டிருக்கும் இந்த நாட்டில் மழை பெய்யவில்லை என்றால் கூட கொடும்பாவி கட்டி இழுத்து அதைக் கொளுத்துகிறார்கள். எந்த நோக்கத்திற்காக (intention) செய்கிறார்கள் என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டுமே தவிர, அந்தக் காரியமே கூடாது என்று சொல்வது சரியல்ல. வழக்குத் தொடரப்பட்டால் சட்ட நுணுக்கமறிந்த நம்முடைய போலீஸ் அமைச்சர் அவர்கள் நோக்கம் இன்னது என்று கூறி விளக்குவதைப் பொறுத்து யார் குற்றவாளி என்று தீர்மானிக்கலாம். அவரைப் போல் எல்லோரும் அதை எடுத்து விளக்குவதற்கேற்ற வசதி படைத்தவர்களா? நல்ல நாவன்மை படைத்தவர்களா? நல்ல சொல்வன்மை படைத்தவர்களா? ஒருவன் தன் கொள்கையை எழுதினால் அவன் மேல் வழக்குத் தொடர்ந்து நீ எழுதியது இன்ன முறையில் குற்றம், அதைப்பற்றி விளக்கிச் சொல் என்று கேட்டால் அவன் என்ன சொல்ல முடியும்? அனைவருமா தொல்காப்பியத்தைப் படித்தவர்கள்? அனைவருமா புறநானூறு, அகநானூறு கற்றவர்கள்? அனைவருமா சட்ட நுணுக்கத்தை அறிந்திருக்கிறார்கள்? ஆகவே அவர்கள் வழக்கறிஞர் துணையை நாட வேண்டியிருக்கிறது. அப்படி அவர்களைப் பெரும் செலவுக்கு உள்ளாக்கினால் இந்த மாதிரிக் காரியங்களில் ஈடுபட மாட்டார்கள்

என்று கருதுவது மறைமுகமாக எதிர்க் கட்சிகளின் பிரச்சாரத்தைத் தடுக்க முனைவதாகும். அடியோடு தடுக்கின்றீர்கள் என்று குற்றம் சாட்டவில்லை. ஜனநாயகத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற வகையில் எதிர்க்கட்சிகளின் பிரச்சாரத்தை நீங்கள் தடுக்க முடியாது. தாராள மனப்பான்மையினால் நீங்கள் எதிர்க்கட்சிகளின் பிரச்சாரத்தைத் தடுக்காமல் இருக்கிறீர்கள் என்று அர்த்தமல்ல. ஜனநாயகம் என்ற பெயரில் இருக்கிற வரையில் நீங்கள் எங்கள் பிரச்சாரத்தை தடுக்க முடியாது. உங்களிடம் ஒரு "அயூப்கான்" தோன்றினால் தடுக்கலாம். ஒரு சர்வாதிகாரி தோன்றினால் தடுக்கலாம். அப்படித் தோன்றினால் பிரச்சாரம் நின்று வெடி குண்டு தோன்ற ஆரம்பிக்கும். ஆகவே ஜனநாயகத்தில் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள எதிர்க்கட்சிகளுக்கு உரிமை தருவதே தவிர, ஏதோ தர்ம சத்திரத்தை வைத்திருப்பது போலவும், அற நிலைய பாதுகாப்பை வைத்திருப்பது போலவும் எதிர்க் கட்சிகளுக்கு உரிமையை நீங்கள் இரண்டு கரங்களாலும் வாரி வாரி வழங்குவதைப் போல நீங்கள் செய்கின்ற பாவனை வேடிக்கையாக இருக்கிறது. ஆகையால் ஜனநாயகத்திற்கு மறைமுகமாக ஊறு தேடுகின்ற இந்தச் சட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டுமென்று போலீஸ் அமைச்சர் அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஆபாசத்தைத் தடுக்க வேண்டுமென்பது அவருடைய நோக்கமாக இருக்குமானால், அதைத் தடுக்க ஒரு இரண்டாண்டு காலம் அல்லது ஐந்தாண்டு காலம் எல்லாக் கட்சிகளையும் கொண்ட ஒரு கூட்டணியை வைத்துப் பரீட்சித்துப் பாருங்கள். அதற்குப் பிறகும் பலன் ஏற்படவில்லை என்று கருதினால் "நாங்கள் சட்டம் கொண்டு வருகிறோம்" என்று சொன்னால் ஒரு சமயம் கொஞ்சம் பாவனை நியாயமாவது கிடைக்கும். இப்பொழுது பாவனை நியாயம் கூடக் கிடைக்காது. சாதாரணமாக இதைப் பிரச்சாரத்தால் தடுக்க முடியும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

நம்முடைய போலீஸ் அமைச்சர் அவர்கள் வேறு எங்கோ பேசியதைப் பார்த்தேன். ஆணும் பெண்ணும் சேர்ந்து படித்தால் ஆபாசம் என்று கருதுகிறவர்கள் இருக்கிறார்கள். அது ஆபாசம் அல்ல; அதுதான் நாகரிகத்தின் சின்னம் என்று கருதுகிறவர்களும் இருக்கிறார்கள். ஆடவர்கள் ஒரு பக்கத்திலும், பெண்கள் ஒரு

பக்கத்திலும் உட்காருவதுதான் பண்பாடு என்று கருதுகிறவர்களும் இருக்கிறார்கள். அல்ல, அல்ல. ஆடவர்கள் பக்கத்தில் உட்காருவதால் ஆபாசம் ஏற்படாது என்று கருதுகிறவர்களும் - இந்த மன்றத்தில் அல்ல, வெளியில் இருக்கிறார்கள். எது ஆபாசம்? எது அருவருக்கத் தக்கது? என்பது அவரவர்கள் ஒழுக்கத்திற்கு வைத்திருக்கக்கூடிய "Standard" அளவுகோலைப் பொறுத்துத்தான் இருக்கிறது. ரோம் நாட்டில் ‘‘காடோ’’ என்பவனுக்கு அதிகாரம் கொடுத்தார்களாம். அதிகாரத்தை ஏற்றுக்கொண்ட அவன் கொடுத்த ஒழுக்கத் திட்டத்தில் ‘‘தங்க நாணயத்தை வைத்திருக்கக்கூடாது’’ என்பது ஒன்று; ‘‘தங்க நாணயத்தின் பளபளப்பில் மயங்கி மக்கள் பணத்தாசை பிடித்தவர் களாக ஆகிவிடுவராம். ஆகவே, இரும்பில் நாணயம் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் அதைக் கண்டு மக்கள் அருவருப்பு கொண்டு பணத்தாசையை விட்டு விடுவார்கள்.’’ பணத்தைப் பிடிக்காத ரோம் நாட்டுப் பெரிய தலைவன் இப்படி ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தான் என்று நான் படித்திருக்கிறேன். ஒழுக்கத்தைக் காப்பாற்ற முயற்சித்தவர்கள் எல்லாம் தோற்றுத்தான் போயிருக்கிறார்கள். ஆண்டவனால் அனுப்பப்பட்டிருக்கிற திருத் தூதுவர்களைப் போலும், நீங்கள் இந்தத் தடவை ஒழுக்கத்தைக் காப்பாற்றி விட்டால் ஒழுக்கம் இந்த நாட்டில் இன்னும் பத்தாண்டு களுக்கு அப்பழுக்கில்லாமல் இருக்குமென்றும் உங்களைப்பற்றி நீங்கள் போட்டிருக்கிற அதிகக் கணக்கு காட்டுகின்றது. ஜனநாயகத்தில் உள்ளவர்கள் அதிக கணக்குப் போட்டால் அது சர்வாதிகாரத்திற்குத்தான் இழுத்துச் செல்லும். ஆகவே, அதிகக் கணக்குப் போடாதீர்கள்; சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்லாதீர்கள். அளவறிந்து கணக்குப் போடுங்கள்; திறன் அறிந்து சட்டத்தைக் கொண்டு வாருங்கள்; அவசியமறிந்து மசோதாவைத் தயாரியுங்கள்.

சட்டத்தைப் போடாமலே சன்மார்க்கத்தின் மூலமாக இந்தக் காரியங்களைச் செய்ய முடியும் என்று சர்தார் வேதரத்னம் அவர்கள் நம்பிக்கை கொண்டிருப்பதைப் போல, நீங்களும் ஆழ்ந்த நம்பிக்கை பெற வேண்டும். ஆகையால்தான் இந்தச் சட்டம் தேவையில்லை என்பதை நான் என்னுடைய கழகத்தின் சார்பில் பணிவன்போடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்படிச் சொல்லுகின்ற காரணத்தால், இந்தச் சட்டத்தில் இவ்வளவு கடுமையான முறைகள்

இருக்கின்ற காரணத்தால் எங்களுடைய கழகத்தின் பிரச்சாரம் தடைபடும் என்று ஒரு துளியும் பயப்படவில்லை. நாங்கள் எந்த நேரத்திலும் அப்படிப்பட்ட ஆபாசமான எழுத்துக்களை எழுதியவர்கள் அல்ல. அருவருக்கத் தக்க விதத்திலே நாங்கள் காரியத்தைச் செய்வதும் இல்லை. இது கனம் போலீஸ் அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். மற்றவர்களுக்கும் தெரியும். யாரை எண்ணிக்கொண்டு இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள் என்பதும் பல அங்கத்தினர் களுக்குத் தெரியும். நான் இதைச் சொல்லுகின்ற காரணத்தினால் ஆபாசமே இல்லையென்று சொல்வதாக யாரும் கருதாதீர்கள். ஆனால் ஆபாசத்தைத் தடுக்க வேறு பல வழிகள் இருக்கின்ற நேரத்தில் நீங்கள் சட்டத்தைக் கொண்டு வந்து வீணாக புதிய குற்றவாளிகளை உண்டாக்கி, ஜனநாயகத்திற்கு உலை வைக்காதீர்கள்.

இதற்கு முன் பல பிரச்சினைகளில் பல்வேறு கட்சிகளையும் கூட்டி வைத்து முடிவு எடுத்ததைப் போல், இந்த ஆபாசத்தைப் போக்குவதற்கான வழி முறைகளை ஆராய்வதற்காக ஏன் எல்லாக் கட்சிகளையும் கூட்டி வைத்து பேசி இருக்கக் கூடாது? கல்வித் திட்டத்தைப் பற்றி எல்லோரும் கலந்து பேசவில்லையா? அதைப் போல் எல்லாக் கட்சித் தலைவர்களையும், உறுப்பினர்களையும் கூட்டி அவர்களோடு கலந்து ஆலோசித்து இதை எப்படி எப்படி நீக்கலாம் என்பதற்கான வழி வகைகளை வகுக்க ஆட்சியாளர்கள் எப்போது முயற்சி எடுத்துக் கொண்டார்கள்? எப்பொழுதாவது அத்தகைய முயற்சி எடுத்துக் கொண்ட நேரத்தில் நாங்கள் அதற்குக் குந்தகமாக இருந்தோமா? இனியும் அப்படிப்பட்ட முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமானால், நாங்கள் அதற்கு ஆதரவாக இருப்போம் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொண்டு, இந்தச் சட்டத்தை வலியுறுத்தாமல் இருக்க வேண்டும் என்று போலீஸ் அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஆபாசத் தடுப்புச் சட்ட முன்வடிவு மீதான விவாதம்

உரை : 26 நாள் : 17.02.1959

திரு. சி. என். அண்ணாதுரை: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களாக இந்தத் தரப்பிலுள்ள நாங்கள் எவ்வளவு வாதங்கள் எடுத்துச் சொன்னாலும், எத்தனை விதத்தில் வேண்டிக் கொண்டாலும், கனம் அமைச்சர் அவர்கள் ஒரே ஒரு பதிலையே சொன்னார்கள். இந்தச் சட்டத்தில் நாங்கள் பயப்படத்தக்கது எதுவும் இல்லை, எதற்காக நீங்கள் இந்த அளவுக்கு பயப்படுகிறீர்கள் என்று கேட்டார்கள். அது அவர்களுடைய நல்லெண்ணத்தின் அறிகுறியா, தெளிவு இன்மையின் அறிகுறியா என்று சிந்தித்துப் பார்க்கிற நேரத்தில் நல்ல அறிவும், அநுபவமும் மிகுந்த அவர் கூறுகிற அந்த வார்த்தை அவரது தெளிவு இன்மையின் அறிகுறியாக இருக்க முடியாது, நல்ல எண்ணத்தின் அறிகுறியாகத் தான் இருக்க முடியும் என்று நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் ஒருவருடைய நல்லெண்ணத்தைப் பொறுத்து நாட்டில் நிறைவேற்றப்படக் கூடிய சட்டம் அமுலாக்கப்படுவதைவிட, அப்படிப்பட்ட சட்டம் நிறைவேற்றப்படாமல் இருப்பதே மேல் என்பதை சட்ட நுணுக்கம் தெரிந்தவர்கள் எல்லாம், சட்ட நிபுணர்கள் எல்லாம் அறிந்திருக்க வேண்டும். சட்டத்தை இயற்றுவதற்கு ஏற்ற ஒரே ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு இந்தச் சட்டத்தைப்பற்றி நாங்கள் எப்படிப் பேசினாலும் கவலை இல்லை, அநியாயம் என்று சொன்னீர்கள். அக்கிரமம் என்றும் சொல்லுங்கள். எவ்வளவு சொல்ல வேண்டுமோ அவ்வளவு சொல்லுங்கள் என்ற ரீதியிலே அமைச்சர் அவர்கள் இடைமறித்து ஆத்திரத்தோடு பேசி சட்டத்தை எப்படியாவது அமுலுக்குக் கொண்டுவந்துவிடுவது என்று முந்துகிற நேரத்தில் ஒரே ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதையும் ஒரு கதை வடிவத்தில் கூற விரும்புகிறேன்.

ஒரு சீமான் இருந்தார். தன்னுடைய பாதுகாப்பை முன்னிட்டு ஒரு முரட்டு ஆளை வேலைக்கு அமர்த்திக் கொண்டார். அந்த முரட்டு ஆளைப் பார்த்துச் சொன்னார், ''யாரும் என்பேரில் கை வைக்காது பார்த்துக் கொள்ளவேண்டும். ஒரு கொசுக் கூட என் பேரில் உட்காராது பார்த்துக் கொள்வது உன் பொறுப்பு, அதற்காக மாதம் ஆயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளம் தருகிறேன்'' என்றார். அன்றைய தினத்திலிருந்து அவன் கையில் ஒரு பெரிய கதையை வைத்துக் கொண்டு சீமானைப் பாதுகாக்க ஆரம்பித்தான் முரட்டு ஆள். ஆயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளம் வாங்குகிறவன் ஆயிற்றே. கண்விழி மூடாமல் பாதுகாத்தான். ஆனால் யாரும் வரவில்லை. ஒருநாள் ஓர் ஈ சீமான் பேரில் வந்து உட்கார்ந்தது. ''ஆ! இந்த ஈ உட்காரலாமா? ஆயிரத்து ஐநூறு ரூபாய் வாங்கிக் கொண்டு நான் சும்மா இருப்பதா?'' என்பதாக கையிலிருந்த பெரிய தடியினால் அந்த முரட்டு ஆள் ஈயை அடித்தான். ஆனால் செத்தது சீமான். இந்தக் கதைதான் எனக்கு நினைவுக்கு வருகிறது இப்போது.

நாங்கள், தாய் நாட்டில் ஒழுக்கத்தைக் காப்பாற்ற போகிறோம். இனி ஆபாச விளம்பரங்களோ, அருவருக்கத்தக்க சுவரொட்டிகளோ கண்ணில் படக்கூடாது. அதை ஒழித்தே ஆகவேண்டும் என்பதற்காக கைத்தடியை - இந்த மசோதாவை சிருஷ்டிக்கிறீர்கள். ஆனால் இந்தத் தடி போலீசாரிடத்திலே ஒப்படைக்கப்பட இருக்கிறது. முரட்டு ஆள் ஈயைக் கொல்ல தடியை வீசினாலும் செத்தது சீமான். அப்படி ஒழுக்கத்திற்குக் குந்தகமாக இருக்கப்போகிற ஆபாச விளம்பரங்களை ஒழிக்க பெருந்தடி ஒன்றை போலீஸ் சாம்ராஜ்யத்திடையே ஒப்படைக்கப் போகிறீர்கள். ஒழுக்கம் காப்பாற்றப்படுகிறதோ என்னவோ, ஜனநாயகத்தைச் சாக அடிக்கப் போகிறீர்கள்.

எதிர்க்கட்சியை ஒடுக்குவதற்கு - மறைமுகமாக நீங்கள் எடுத்துக் கொள்கிற நடவடிக்கை இது என்பதை எனது மதிப்பிற்குரிய நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். அவர்களுக்கு எல்லாம் ஒன்று சொல்வேன். ''நீங்கள் இன்றையதினம் விடுக்கிற அறைகூவலை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். இந்தச் சட்டத்தின் மூலம் எங்கள் கழகத்தின் பிரச்சாரத்தை எல்லாம் ஒடுக்கி, நிம்மதியாக வாழ முடியும் என்று மறைமுகமாக நீங்கள் கருதினால் உங்கள் எண்ணம் ஒருநாளும் ஈடேறப் போவதில்லை என்று சொல்கிறேன்.

ஆப்பிரிக்க நாட்டில் வெள்ளையரல்லாதாரை - நீக்ரோக்களை - ஒடுக்குவதற்கு எத்தனையோவிதமான தந்திரங்கள் எல்லாம் கையாளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக அவர்கள் கையில் அனுமதிச் சீட்டு வைத்திருந்தால்தான் பொதுப் பாதைகளிலே நடந்துச் செல்ல முடியும் - அனுமதிச் சீட்டைக் கையில் எடுத்துக் கொண்டுதான் அவர்கள் வீதியில் நடந்து செல்ல வேண்டும் என்கிற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்கும் நியாயத்தைக் காட்டினார்கள். அதற்கும் வழக்கு அறிஞர்கள் வாதாடினார்கள். எண்ணிக்கை பலத்தைக் கொண்டுதான் அன்றைக்கு அந்த நாட்டிலும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. வெள்ளையரல்லாதார்கள் அனுமதிச் சீட்டு இல்லாமல் வெளியில் போனால் ஐந்து ஆண்டு, ஆறு ஆண்டு கடும் தண்டனை வழங்கப்பட்டது. தண்டனை இவ்வளவு மலிவாக்கப்பட்டதன் விளைவு என்ன? "தண்டனை பெறுவதுதான் பெறுகிறோம், நல்ல குற்றமாகவாவது செய்துவிட்டு தண்டனை பெறுகிறோம்" என்று மிகவும் பயங்கரமான குற்றங்களை இன்றைய தினம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

அப்படி நீங்களும் நாட்டு மக்கள் தண்டனைக்குரிய குற்றங்களை புதிது புதிதாகச் சிருஷ்டித்து கொண்டே போவதன் மூலம் இன்றைக்குச் சட்டத்திற்குள்ள மதிப்பை மாய்க்கிறீர்கள். தண்டனை பற்றி மக்கள் உள்ளத்தில் வைத்திருக்கிற பயத்தை நீக்குகிறீர்கள். புதிய அடக்கு முறைகளின் மூலம் புதிய புதிய குற்றவாளிகளை உண்டாக்குகிறீர்கள். ஆகவே இந்த மசோதா மூன்றாவது தடவையாக மன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேறும் சமயத்தில் இந்த மன்றத்திலே நாங்கள் இருக்க விரும்பவில்லை. வெளியேறுகிறோம்.

1959-60 ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதம்

உரை : 27 நாள் : 10.03.1959

திரு. சி. என். அண்ணாதுரை: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்பேரில் கடைசி நாளாக இன்று பொது விவாதம் நடத்தப்படுகிறது. இந்த நிதி நிலை அறிக்கையின் பேரில் எங்கள் கருத்துக்களை திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஏற்கெனவே இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளையொப்பி நானும் சில வார்த்தைகளைச் சொல்ல இங்கு நிற்கிறேன். ஆளும் கட்சியிலுள்ள வர்கள், தாங்கள் மேற்கொள்ளும் சீரிய முயற்சிகளிலெல்லாம் எல்லா அரசியல் கட்சிகளிலுள்ளவர்களும் - எல்லா எதிர் கட்சிகளிலுள்ளவர் களும் - தங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த வேண்டுகோளை நல்லெண் ணத்துடனேயே விடுத்திருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில் என் கருத்துக்களை இங்கே வைக்க முற்படுகிறேன். எல்லா அரசியல் கட்சிகளும் முக்கியமான பிரச்சினைகளில் தங்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்ளும் ஆளும் கட்சியினர் ஒன்றை மறந்திருக்க மாட்டார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அவர்கள், போடப்பட்ட திட்டங்களுக்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோருகிறார்களே தவிர, திட்டங்கள் போடப்படும் நேரத்தில் மற்றெந்தக் கட்சியுடனும் கலந்தாலோசிப்பதில்லை; அப்படி மற்றக் கட்சிகளுடன் கலந்தாலோசிக்கும் பண்பை, இன்றுவரை, தேவையில்லை என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். மேலும், இதுவரையில் ஒத்துழைப்பு என்பதற்கு தகுந்த விளக்கங்களையும் தரவில்லை. நான் அறிந்த வரையில் ஒரு ஆட்சியிடம் அரசியல் கட்சிகள் ஒத்துழைப்பைத் தருவது என்பது அவைகள் அந்த ஆட்சிக்கு எதிரிடையாக அதன் சட்டங்களை மீறும்

கிளர்ச்சிகளை நடத்தாமலிருப்பதும், அந்த ஆட்சி வரி விதிக்கும் போது வரி தரக்கூடாது என்று மக்களை தூண்டிவிடாமல் வரி கொடுக்கும் அளவிற்கு நல்ல மனப்பான்மையை மக்களிடம் வளர்ப்பதும் ஆகும். இவைதான் ஒரு ஆட்சியிடம் அரசியல் கட்சிகள் தங்கள் ஒத்துழைப்பைத் தருவதற்கு முக்கியமான அறிகுறிகள் என்று நான் கருதுகிறேன். இவை மட்டுமன்றி, வகுக்கப்படும் திட்டங்களும் செய்யப்படும் காரியங்களும் எத்தனை குறைகள் உள்ளனவாக இருந்த போதிலும் அவைகளைப் பற்றி குற்றம் குறைகள் சொல்லாமலும் இருக்க வேண்டும் - அவைகளைப் பற்றிக் குற்றம் குறைகள் சொல்வது கூடாது. அதுதான் ஒத்துழைப்பு என்று ஆளும் கட்சியினர் கருதுவார் களானால், அத்தகைய ஒத்துழைப்பை ஜனநாயக நாட்டில் ஜனநாயக நாட்களில் எதிர்பார்ப்பதற்கில்லை என்பதை அவர்களுக்கு பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க் கட்சிகளைப் பற்றி ஆளும் கட்சியினர் எப்படிப்பட்ட அபிப்பிராயங்கள் கொண்டிருக் கிறார்கள் என்பதை, இந்த மன்றத்தில் அவர்கள் எடுத்துச் சொல்லும் பல கருத்துக்களை அறிவதிலிருந்தும் இம்மன்றத்திற்கு வெளியில் அவர்கள் பேசுகிறப் பேச்சுக்களைப் பத்திரிகைகளின் மூலம் அறிவதி லிருந்தும், எங்களால் ஓரளவு புரிந்துகொள்ள முடிகிறது. நாங்கள் ஆளும் கட்சியைப் பற்றி, அதிகமாகத் தாக்கிப் பேசாமல் இருக்கிறோம் என்று நான் சொல்லவில்லை. நாங்களும் ஆளும் கட்சியை எவ்வளவு தாக்கிப் பேசுகிறோமோ அதைவிட அதிகமாக ஆளும் கட்சியினர் எதிர்க் கட்சிகளைத் தாக்கிப் பேசுகிறார்கள். இப்போது இந்த மாநிலத்திலுள்ள எதிர்க் கட்சிகள் எதிர்க்கட்சிகளாகப் பணியாற்று வதற்கு வேண்டிய நல்ல திறமையோடு இல்லை என்று, அண்மையில் கூட கனம் உள்நாட்டு அமைச்சர் ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார். ராஜ்யத்தில் நல்ல எதிர்க்கட்சி வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லும் கனம் உள்நாட்டு அமைச்சரின் ஜனநாயகப் பண்பு எந்த வழியில் செல்கிறது என்று நான் பார்க்கிறேன். அவர், ஒரு நல்ல எதிர்க்கட்சி வேண்டும், ஒரு நல்ல எதிர்க்கட்சி வேண்டும் என்று சொல்வதன் மூலம் இப்போது நல்ல எதிர்க்கட்சி இல்லை , நல்ல எதிர்க்கட்சி இல்லை என்று இப்போதுள்ள எதிர்க்கட்சிகளை மட்டந்தட்ட எண்ணுகிறார் என்றே நான் கருதுகிறேன். அவர்தான் அவ்வாறு பேசுகிறார் என்று நான் எண்ணிக்கொண்டிருக்கும்போது, நான் இங்கே வந்தவுடன் என்னுடைய கனம் நண்பர்கள், கனம் முதல்

அமைச்சர் கூறிய ஒரு விஷயத்தையும் எனக்குத் தெரிவித்தனர். திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டில் செய்துவரும் பிரச்சாரமானது பிச்சைக்காரர்கள் ஆங்காங்கே சென்று பிச்சைக் கேட்பதைப் போலத்தான் இருக்கிறது என்று நமது முதல் அமைச்சர் ஓரிடத்தில் சொல்லியிருப்பதாக என்னுடைய கனம் நண்பர்கள் என்னிடம் தெரிவித்தனர். நாட்டில் பிச்சைக்காரர்களுக்குப் பிச்சை போடாதவர்கள் புண்ணியவான்கள் என்றுக் கருதப்படுவதில்லை. அப்படி இருக்க, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பிச்சைக் கேட்கிறார்கள் என்று ஆட்சியாளர்கள் சொல்லும்போது எச்சில் கையால் கூடக் காக்கையை ஓட்டத் தயங்கக் கூடிய இவர்கள் எங்கள் ஒத்துழைப்பைக் கோரி விடுத்த வேண்டுகோளை உண்மையான, மனப்பூர்வமான வேண்டுகோள் என்று என்னால் கருத முடியவில்லை. தங்கள் திட்டங்களுக்கு எங்கள் ஒத்துழைப்பை உள்ளன்போடு இவர்கள் கேட்கிறார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இருந்தாலும்கூட இந்த ஆட்சியாளர்கள் மேற்கொண்டுள்ள சீரிய முயற்சிகளுக்கு நாங்கள் எங்கள் ஒத்துழைப்பைத் தந்திருக்கிறோம். அதனைக் கனம் உள்நாட்டு அமைச்சர் நன்றாக அறிவார். மதுவிலக்குத் திட்டம் நிச்சயமாக வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்திற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இம் மன்றத்திலும், இம்மன்றத்திற்கு வெளியிலும் தங்கள் ஒத்துழைப்பைத் தந்திருக்கிறார்கள், எங்கள் மீது ஆளும் கட்சியினர் ஏதாவது குற்றம் சுமத்த விரும்பினால், நாங்கள் எங்கள் ஒத்துழைப்பை தகுந்த முறையில் தரவில்லை என்று அவர்கள் சொல்ல முடியுமே தவிர கேட்ட நேரத்தில் ஒத்துழைப்பைத் தரவில்லை என்று அவர்கள் சொல்ல முடியாது. ஆளும் கட்சியினர் எங்களைப் பற்றி மிகவும் தாக்கிப் பேசுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களுக்கு இருக்கும் எண்ணிக்கை பலம்தான் என்று சொல்லவேண்டுமே தவிர அது அவர்களுடைய வாதத் திறமையைக் காட்டுகிறது என்று சொல்ல முடியாது. நிதி நிலை அறிக்கையின் பேரில் நான் தெரிவிக்கும் கருத்துக்கள் புறக்கணிக்கப்படும் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரிந் திருந்தாலும், அவைகளைப் பற்றி கேலிமொழி பேசி அவைகளை அடக்கி விடலாம் என்ற மனப்பான்மை கொண்டவராக கனம் நிதி அமைச்சர் இருக்கிறார் என்பதும் எனக்குத் திட்டவட்டமாகத் தெரிந்திருந்தாலும், இந்த மன்றத்தில் நான் எடுத்துச் சொல்லும்

கருத்துக்கள் நாட்டு மக்களிடமும் போய்ச் சேரும் என்ற நம்பிக்கையில் தான் பேச முற்படுகிறேன். நான் இங்கே பேசுவது, என் வாதத்திற்கு கனம் நிதி அமைச்சரிடம் நியாயம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் அல்ல.

இந்த ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் பேரில் பேசியவர்களில்; இதைப் பாராட்டக் கடமைப்பட்டவர்களாகிய ஆளும் கட்சி அங்கத்தினர்கள் இதில் மூன்று முக்கியமான அம்சங்களைப் பாராட்டினார்கள். அவைகளில் ஒன்று, இந்த வருஷ வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரி எதுவும் போடப்படவில்லை என்பது; மற்றொன்று, இந்த வருஷம் உபரி பட்ஜெட் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது என்பது; மற்றுமொன்று, ஒவ்வொரு துறையிலும் செலவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை முந்தைய வருஷங்களில் ஒதுக்கப்பட்டுள்ளதைவிட அதிகமாக இருக்கிறது. எனவே எல்லாத் துறைகளிலும் மேலும் மேலும் முன்னேற்றம் காணுவதற்கேற்ற வகையில் அதிகமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது. இந்த மூன்று விஷயங்களையும் 'இல்லை' என்று யாரும் மறுப்பதற்கில்லை. ஏனென்றால், ஒவ்வொரு ஆண்டும், கல்வித் துறையானாலும் சரி, ஹரிஜன நலத் துறையானாலும் சரி, சமுதாய நலத் திட்டத் துறையானாலும் சரி, ஒவ்வொரு துறையிலும் செலவிற்காக ஒதுக்கப்படும் தொகை ஏறிக்கொண்டே போகிறது; முந்தைய ஆண்டு செலவழித்ததை விட அதிகத் தொகையே ஒதுக்கப்படுகிறது. இதை, ஏதோ உலகத்தில் வேறு எங்குமே நடக்காத அதிசயம் போலவும், வேறு எந்த மாநிலத்திலும் நடக்காதது போலவும், மற்ற மாநிலங்களில் வளர்ச்சித் திட்டங்களுக்கு முந்தைய வருடம் 50 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்க இந்த ஆண்டு 25 லட்ச ரூபாயாக அதைக் குறைத்திருக் கும்போது இந்த மாநிலத்தில் இவ்வாறு நடப்பது போலவும் கருதும் மனப்பான்மை யாருக்கும் இருக்கக்கூடாது என்று நான் பணிவன்போடு சொல்லிக் கொள்கிறேன்.

மேலும் சென்ற ஆண்டில் ஒரு காரியத்திற்காக பத்து ரூபாய் செலவழித்திருந்தால், இந்த ஆண்டு பண வீக்கம் காரணமாக அதே காரியத்தை, அதே தரத்தோடு, அதே அளவோடு நாம் செய்ய வேண்டுமென்றால், இயற்கையாகவே பதினைந்து ரூபாய் செலவு செய்தாக வேண்டும். நான் இப்பொழுது இருக்கும் பண வீக்கத்தைப்

பற்றிக் குறிப்பிடும்போது அதற்கான பரிகாரங்களை இந்த நேரத்தில் பேசவில்லை. நான் எடுத்துக்காட்ட விரும்புவதெல்லாம், சென்ற ஆண்டு ஒரு காரியத்திற்காக பத்து ரூபாய் போதுமானதாக இருந்தால், அதே காரியத்தை, அதே தரத்தில், அதே அளவில் இந்த ஆண்டு செய்ய வேண்டுமென்றால், இயற்கையாகவே அது பதினைந்து ரூபாயாகத் தான் கூடி இருக்க வேண்டும். அந்நிலை இன்றையதினம் ஏற்பட்டுள்ள பண வீக்கத்தால் ஏற்பட்டுள்ளது. ஆகவே திட்டங்களுக்காக செலவிடப்படும் தொகை, ஆண்டுக்கு ஆண்டு ஏறிக்கொண்டு வருகிறதென்றால், அது தாராளத்தின் விளைவு என்று நான் நம்பவில்லை. பண வீக்கம் காரணமாகத்தான் அப்படி ஏறிக் கொண்டு போக வேண்டி வருகிறது என்பதைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அப்படி ஒவ்வொரு துறையிலும், இன்றையத் தினம் அதிகப்படியான தொகைகளை ஒதுக்கி இருக்கிறார்கள் என்றால், அப்படி அதிகப்படுத்தியிருக்கும் நிலையில், அதை எப்படி ஈடுகட்டுகிறார்கள் என்பதிலிருந்துதான் ஒரு சர்க்காரின் நல்லெண்ணம், ஒரு சர்க்காரின் கொள்கை விளக்கம், ஒரு சர்க்கார் எந்த வழியில் செல்கிறது என்பதை நிர்ணயிக்க முடியும். அப்படிப் பார்க்கும்போது நமது ஆட்சியாளர்கள், வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிகப் பணம் தேவை, தேவை என்று சொல்லும்போது வரிகளை கூட்டினால்தான் அதற்கான பணத்தைப் பெற முடியும் என்பதனை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார்கள். அது பற்றி நான் இந்த மன்றத்தில் பல தடவைகள் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். வருவாயைத் தேடிக் கொள்ள ஆட்சியாளர்கள் வழிவகைகள் கண்டுபிடித்தால் ஒழிய, மேலும் மேலும் வரிகளை மட்டும் போட்டுப் பணத்தைப் பெருக்கிக் கொள்வதைவிட வேறு விதங்களில் நமது வருவாயை அதிகரித்துக் கொள்ள திட்டங்கள் தீட்டி, வளர்ச்சித் திட்டங்களை ஏற்றெடுத்து நடத்த வேண்டுமென்று பல தடவை பல காலங்கள் இங்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆனால் நான் சொன்ன அத்தனை யோசனைகளும் நமது நிதி அமைச்சர் அவர்களுடைய கேலிக்காகப் பயன்படுத்தப்பட்டதே தவிர, இவைகள் எல்லாம் நடைபெறாது என்று சொல்லப்பட்டதே தவிர, இவைகள் நடைபெறாது, நாங்கள் வேறு நல்ல திட்டங்களை வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று எடுத்துக்காட்ட பயன்பட்டதா என்றால் இல்லை. கேள்வி நேரத்தில் பதிலளிக்கப்பட்டபோது மோட்டார் பஸ்களை ஏலத்தில் விடலாமே -

அதனால் லாபம் தேடலாமே-அதனால் நமது வருவாயை அதிகரிக்கலாமே என்பதற்கு அளிக்கப்பட்ட பதிலை நான் கேட்டுக் கொண்டே இருந்தேன். இன்றையதினம் மோட்டார் பஸ் முதலாளிகள், தமிழ் நாட்டில் ஒரு புதிய முதலாளி வர்க்கமாக மாறிக் கொண்டு வருகிறார்கள் என்பதனை அறியாதவர்கள் இல்லை. அவர்கள் எந்தக் கட்சிக்கு வேண்டியவர்கள் என்பதல்ல பிரச்சினை. அதனால் அவர்களுக்கு லாபமா அல்லது அவர்கள்ஆதரிக்கக் கூடிய கட்சிக்கு லாபமா என்பதல்ல பிரச்சினை. ஆனால் நாடறிந்த உண்மை இன்றைய தினம் கள்ளுக்கடைகள் மூடப்பட்ட பிறகு ஒவ்வொரு நாளும் பணத்தைக் குவித்து, லாபத்தை அதிகரித்துக்கொண்டு போகும் புதியதொரு முதலாளி வர்க்கமாகத்தான் இன்று மோட்டார் பஸ் தொழில் அமைந்திருக்கிறது. இன்றையத் தினம் பல ராஜ்யங்களிலுமுள்ள அமைச்சர்கள் இந்த மோட்டார் பஸ் தொழிலை தேசீய உடைமையாக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. பக்கத்திலுள்ள ஆந்திர ராஜ்யத்திலும் இதில் பல சிக்கல்கள் ஏற்பட்டு இருப்பதை நான் அறியாமல் இல்லை. ஆக, அவர்கள் இன்றையதினம் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும்போது, இன்றைய தினம் கேள்வி நேரத்தின்போது பதிலளிக்கப்பட்டபோது அப்படிப்பட்டதொரு உத்தேசம் நமது சர்க்காருக்கு உண்டு என்று சொல்வதற்குக் கூட மனமில்லாத அளவிற்கு இன்றையதினம் ஆட்சியாளர்கள் இருக்கிறார்கள் என்பது அவர்களுக்கும் மோட்டார் பஸ் முதலாளிகளுக்கும் இடையே உள்ள உறவுதான் அதற்குக் காரணமா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மோட்டார் பஸ்களை சர்க்காரே ஏற்றெடுத்து நடத்துவதன் மூலம் நமது வருவாயை நாம் அதிகரித்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்றையதினம் பஸ் தொழிலில் ஈடுபட்டிருக்கும் முதலாளிகளை நாம் எடுத்துக்கொண்டு பார்த்தால், அந்த முதலாளிகளுக்கு சுமார் 20 அல்லது 25 வருடங்களுக்கு முன்னால் என்ன சொத்து இருந்தது, அவர்கள் எவ்வளவு சொத்துக்கு உரியவர்களாக இருந்தார்கள், இன்றையத் தினம் அவர்கள் எந்த அளவிற்கு வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்ற ஒரு கணக்கை எடுத்துப் பார்த்தால் அந்தத் தொழிலில் எவ்வளவு லாபம் கிடைக்கிறது என்பதை நாம் கணக்கிட்டுக் கொள்ள முடியும். அவர்கள் வெளிக்கு கணக்கு எழுதும் முறைப்படி, காஸ்ட்

ஆப் மெயின்டினென்ஸ், சர்க்காருக்கு வரி கொடுப்பது, புதிய பஸ்கள் வாங்குவது இவைகளுக்காக இவ்வளவு ஒதுக்கி இருக்கிறோம் என்று சொல்லி கொஞ்சம்தான் மிச்சம் இருக்கிறது என்றுதான் அவர்கள் வாதிடுவார்கள். இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால் திருவல்லிக்கேணி தொகுதி அங்கத்தினர் ஹாஜா ஷெரிப் அவர்கள் சொன்னார்கள், அவர்கள் மிக அழகாக எடுத்துச் சொன்னார், தொழில்கள் நடத்தும் முதலாளிகள் லாபமே இல்லாமல், "மார்ஜின் ஆப் பிராபிட்"டில் லாபத்தின் ஒரு அருகில்தான் இருக்கிறார்கள், லாபம் மிகச் சிறிதுதான் கிடைக்கிறது என்றும், முதலாளிகள் மிகவும் துன்பப்பட்டுக்கொண்டும், தவித்துக்கொண்டும் இருக்கிறார்கள். ஆகவே, தொழில் இந்நாட்டில் வளர வேண்டுமென்றால், விலைவாசிகள் குறைய வேண்டுமென்றால், தொழிலாளிகள் கூலி உயர்வு கேட்கக் கூடாதென்றும், தொழிலாளர்கள் பிரச்சினையே இருக்கக் கூடாதென்றும், அப்படியானால்தான் விலைவாசிகள் விழும் என்றும் அவர்கள் சொன்னார்கள். கூலித் திட்டத்தைக் கட்டுப் படுத்தினால்தான் விலைவாசி குறையும் என்றும் கூறினார்கள். அப்பொழுதுதான் தொழில் வளரும் என்றும் ஹாஜா ஷெரிப் அவர்கள் கூறினார்கள். முதலாளிமார்கள் தொழிலை நடத்துகிறவர்கள் இந்த வகையில்தான் வாதாடுவார்கள் என்பதை அறிந்துகொள்ள இந்த மன்றம் ஒரு சிறந்த வாய்ப்பினை அளிக்கிறது என்றுதான் எனக்குப் பட்டது. அந்த வாதங்களை மட்டும் நமது ஆட்சியாளர்கள் எடுத்துக் கொள்வார்களேயானால், நாம் தேடிக்கொள்ளக் கூடிய வருவாயை நாம் இழக்கிறோம் என்றுதான் பொருள்படும். போக்குவரத்து அமைச்சர் ஸ்ரீ ராமையா அவர்கள் சொன்னார்கள், லாப நோக்கத்தோடு இந்தத் தொழிலை நடத்தவில்லை என்றும், மக்களுக்கு வசதி செய்து தருவதற்காகத்தான் இந்தக் காரியத்தைச் செய்கிறோம் என்றும் சொன்னார்கள். மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதோடு சர்க்காருக்கும் லாபம் கிடைக்கக் கூடுமானால் ஏன் அந்தத் தொழிலை ஏற்றெடுத்து நடத்தக் கூடாதென்று நான் கேட்கிறேன்? தமிழ் நாடு பூராவும் உள்ள மோட்டார் பஸ் தொழிலை ஏற்றெடுத்து நடத்தினால் எத்தனை கோடி ரூபாய் சர்க்காருக்குக் கிடைக்கும் என்பது யாருக்குத் தெரியாத விந்தை? இன்றையதினம் ஒவ்வொரு ரூட்டும் அதிக விலைக்கு எடுக்கப்படவில்லையா என்று ஒரு அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு, என்னிடம் தகவல் இல்லை என்று அமைச்சர் அவர்கள்

பதில் சொன்னார்கள். நிச்சயமாக அவர்களிடம் தகவல் இருந்திருக்க முடியாது. அப்படி தகவல் இருந்திருந்தால் நிச்சயமாக அவர்கள் பேரில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டி வந்திருக்கும். ஆனால் நாட்டில் என்னென்ன நடக்கின்றன என்று அங்காடிகளில் பேசிக்கொள்கிறார் கள். ஒவ்வொரு மூலை முடுக்கிலும் பேசிக்கொள்கிறார்கள். ஒவ்வொரு தொழில் துறையில் உள்ளவர்களும் அதைப்பற்றி பேசிக் கொள்ளுகிறார்கள். காஞ்சீபுரத்திற்கும் வேலூருக்கும் இடையில் இருக்கிற ஒரு மோட்டார் பஸ் ரூட், போன மாதமோ அல்லது இரண்டு மாதங்களுக்கு முன்னரோ ஒரு முதலாளி கையில் இருந்து இன்னொரு முதலாளி கைக்கு மாற வேண்டி வந்தது. அதற்கு ஒரு லட்சம் ரூபாய் கேட்டார்கள் என்று அங்காடியில் பேசப்பட்டது. அங்காடிப் பேச்சு சட்டமன்றத்தில் பேசுவதற்கு லாயக்குள்ளதா என்று வாதாடலாம். ஆனால் அங்காடிகளில் பேசப்படுவதை நாம் அடியோடு புறக்கணிப்பதற்கில்லை. அப்படிப் புறக்கணித்தால் ஆட்சியாளர்கள் பாதுகாப்பாக இருக்க முடியாது. இந்த மோட்டார் பஸ் தொழிலை சர்க்காரே ஏற்றெடுத்து நடத்துகிற நேரத்தில் அதை நன்கு திறம்பட நடத்த முடியும், மக்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து அவைகளை நடத்த முடியும், அதே நேரத்தில் நல்ல லாபமும் சம்பாதிக்க முடியும் என்பதைச் சென்னை நகரில் நாம் பஸ்களை ஏற்றெடுத்து நடத்துவதிலிருந்து தெரிந்துகொள்ள முடியும். சர்க்கார் மோட்டார் பஸ்களை ஏற்றெடுத்து நடத்துகிறபோது வருவாய் குறைவாக இருந்தாலும், தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும்போது கிடைக்கக் கூடிய லாபத்தை விட குறைவாக இருந்தாலும், அந்த லாபம் சர்க்காருக்குக் கிடைத்து இது மக்களுடைய உடமையாகிறது. ஆகவே, அப்படி நம் வருவாயை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்றுதான் நான் அடிக்கடி இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லி வந்திருக்கும் ஒரு யோசனையாகும். திட்டங்களைக் கொடுங்கள், திட்டங்களை கொடுங்கள் என்று நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி கேட்பதின் நோக்கம் என்னவென்றால், அவர்கள் நாம் சொல்லக் கூடிய யோசனைகளைக் கேட்டுவிட்டு வெளியில் சொல்வதைக் கேட்கும்போது எனக்கு புரிந்துக் கொள்ள முடிகிறது. திட்டங்களைக் கொடுங்கள் என்று கேட்டபோது இந்த திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி முடியும். திட்டங்களை எடுத்துச் சொல்ல லாயக்கற்றவர்கள் சட்ட மன்றத்திற்கு வந்திருக்கிறார்கள்

என்று வெளியில் சொல்லி மகிழ்ச்சி அடைய, திருப்தி அடைய அவைகளை ஒரு வாய்ப்பாகக் கொள்கிறார்கள். அதனால் அவர்களுக்குத் திருப்தி ஏற்படுமானால், அதற்கு குறுக்கே நிற்க நான் தயாரில்லை. அப்படி ஆயிரக்கணக்கான திருப்திகளைப் பொது வாழ்க்கையில் 20 ஆண்டு காலமாக பல தடவைகள் நான் கொடுத்து இருக்கிறேன். ஆகவே நிதி அமைச்சர் அவர்கள் இந்நேரத்தில் அந்த திருப்தியை அடைந்து கொள்வதில் எனக்கு கஷ்டம் ஒன்றும் இல்லை. ஆனால் எப்பொழுது வெட்கம் ஏற்படும் என்றால் நிதி அமைச்சர் அவர்கள் நல்ல திட்டங்களை திறமையாகக் கொண்டுவந்திருக் கிறார்கள் என்ற நிலை ஏற்படும்போது, அண்ணாவா, நீ சொன்ன திட்டம் அபத்தமானது, இதோ பார் ஒரு புதிய திட்டத்தை வைத்திருக்கிறேன், இதனால் இவ்வளவு வருவாய் வரப்போகிறது, இதை இப்பொழுதே துவக்க இருக்கிறோம் என்று அவர்கள் எடுத்துக் காட்டுவார்களேயானால் ஆஹா, ஆஹா இவ்வளவு அழகான ஒரு திட்டத்தை நிதி அமைச்சர், கொண்டு வந்திருக்கிறார்களே, நமக்கு திட்டம் தீட்டத் தெரியாமல் போய் விட்டதே என்று ஒரு பக்கம் எனக்கு வெட்கம் ஏற்பட்டாலும் இப்படிப்பட்டதொரு அழகான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களே என்ற வியப்பும் எனக்கு ஏற்படும். அதோடு இப்படிப்பட்டவர் அல்லவா நமது நிதி அமைச்சராக இருக்க வேண்டும், எட்டு தடவை அல்லது எண்பது தடவையானாலும் இவரல்லவா நிதி நிலை அறிக்கையை தயாரிக்க வேண்டும் என்று சொல்லியிருப்பேன். நிதி அமைச்சர் அவர்கள் எட்டு தடவை நிதி நிலை அறிக்கையை படித்திருக்கிறார்கள் என்று சில நபர்கள் சொன்னார்கள். அதை அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் எனக்கு இருக்கிற வருத்தம், எட்டு தடவையாக நிதி நிலை அறிக்கையை படித்து வருகிறார்களே அதனால் உயிரூட்டும் வகையில் ஒரு நல்ல அறிக்கையை படிப்பதற்கு அவருக்கு வாய்ப்பு கிடைக்க வில்லையே என்றுதான் நான் வருத்தப்படுகிறேன். எட்டு தடவை நிதி நிலை அறிக்கையைப் படிப்பதில் லாபமும் இருக்கிறது, வலிவும் இருக்கிறது. அதே நேரத்தில், அதில் பலஹீனமும் இருக்கிறது. வலிவு எதில் இருக்கிறது என்றால், அனுபவம் ஏறி இருக்கிற காரணத்தினால் எதை மறைக்கலாம், எதைக் காட்டலாம், எந்தக் கணக்கை எந்த பக்கத்தில் தள்ளலாம், எதெதை எந்தெந்த வரிசையில் வைக்கலாம், எப்படி அதைப் படிக்கிறவர்களைத் திணறடிக்கலாம் என்பது

அனுபவத்திலிருந்து பெறும் லாபம். சாதாரண ஒரு அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒரு குமாஸ்தா கூட பத்து வருடத்தில் வேண்டிய அனுபவம் பெற்றுவிடுகிறார். எதை எதை எப்படிச் செய்ய வேண்டுமென்று ஒரு ஆண்டு நிதி நிலை அறிக்கைக்கும், மறு ஆண்டு நிதி நிலை அறிக்கைக்கும் ஒப்பிட்டு பார்ப்பதற்கு முடியாத நிலைமையில் ஒவ்வொரு ஆண்டு நிதி நிலை அறிக்கையின் கோணங்கள் (ஆங்கில்ஸ்)ஒவ்வொரு பக்கத்தில் திருப்பப்படுகின்றன. இப்படி திருப்பப்படுவதின் முக்கிய நோக்கம் - நான் கருதுகிறேன் - தொடர்ந்து மதிப்பீடு போடுவதற்கு வழி வகை செய்யாமல் இருக்க வேண்டுமென்பதற்காக, அந்த விதத்தில் நிதி நிலை அறிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதனுடைய வகை மாற்றப்படுகிறது என்று நான் அஞ்சுகிறேன். எந்த வகையில் இருந்தாலும் 8-வது தடவையாக அவர்கள் நிதி நிலை அறிக்கையை சமர்ப்பிக்கிற காரணத்தினால் அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள். அது வலிவு என்று நான் சொன்னேன். மற்றொன்று பலஹீனம் . பலஹீனம் எதிலே இருக்கிறது என்று சொன்னால் 7 தடவை நிதி நிலை அறிக்கை கொடுத்த நமக்கு என்ன நடக்கப் போகிறது என்ற அலட்சிய சுபாவம் இயற்கையாகவே ஏற்பட்டுவிடும். ஏழு தடவை நிதி நிலை அறிக்கை கொடுத்து, யார் எதிர்த்தாலும் எதிர்ப்புகளை கண்ட துண்டமாக்கி, சண்டமாருதப் பிரசாரம் செய்து, புள்ளி விவரங்களை அள்ளி வீசி, எதிர்ப்பவர்களின் வாய்களை அடக்கி விட்ட நாம் ஆயிற்றே, இப்பொழுது மட்டும் என்ன என்ற எண்ணம், அலட்சிய சுபாவம் நிச்சயம் ஏற்படும். அதனால்தான் 8 தடவைகள் ஒரு காரியத்திலே ஈடுபடுகின்ற அவர்களுக்கு வலிவும் இருக்கிறது. அதே நேரத்தில் பலஹீனமும், இருக்கிறது. அந்த இரண்டும் நிதி நிலை அறிக்கையிலே பல இடங்களிலே நன்றாகக் காட்சி அளிக்கின்றன. அவர்கள் சொல்லுகிறார்கள் தன்னுடைய நிதி நிலை அறிக்கையிலே :

". . . .நம் ராஜ்யத்தில் இருக்கக் கூடிய பல்வேறு தொழில் வாய்ப்புக்களையும் ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பணியை டெல்லியில் இருக்கும் ஒரு ஸ்தாபனம் - தேசீய பொருளாதார ஆராய்ச்சிக் குழு ஏற்றுக் கொண்டுள்ளது. பல அன்னிய நாட்டு நிபுணர்களும் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். ஏப்ரல் மாத இறுதியில் இந்த அறிக்கை நமக்குக்

கிடைக்கும் என எதிர்பார்க்கலாம் என்று தொழில் வளத்தைப் பற்றிய ஆராய்ச்சியை ஒரு இடத்திலே ஒப்படைத்து அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இதை படிக்கின்ற நேரத்திலே, டெல்லியில் உள்ள ஸ்தாபனம் என்று படித்தேன். அதன் காரணமாக ஏன் டெல்லியில் ஒப்படைத்தீர்கள் என்று நான் கேட்கப்போகிறேன் என்று நீங்கள் யாரும் கருதத் தேவையில்லை. நீங்கள் உங்களையே டெல்லியில் ஒப்படைத்திருக்கும்பொழுது இந்தத் திட்டத்தை அங்கு இருக்கும் ஸ்தாபனத்திடம் ஒப்படைத்திருப்பது பற்றி நான் ஆச்சரியப்படுவதற்கில்லை. நான் சொல்லுவது உங்களுக்கு இப்பொழுது புதியதாக பொருளாதார ஆராய்ச்சி தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? இந்த மாநிலத்தில் இருக்கிற தாதுப் பொருள்கள் உங்களுக்குத் தெரியாதா? இந்த மாநிலத்தில் எந்தத் தொழில் வளர்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பது நீங்கள் அறியாத விந்தையா? அது பற்றி தகவல்களைச் சேகரிப்பதற்கு நீங்கள் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லையா? இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப் பற்றி நம்முடைய சர்க்கார் தயாரித்திருக்கின்ற மகத்தான அறிக்கையில் - மகத்தான அறிக்கையென்று நான் சொல்லுகின்றபோது தயாரிப்பிலே தான் மகத்தான அறிக்கை, ஏற்றுக்கொள்ளப்படுவதிலே அல்ல. ஏனென்றால், பல மத்திய சர்க்காராலே, தள்ளப்பட்டு விட்டன - தொழில் வளம் பற்றி கொடுத்திருக்கிற தகவல்களைவிட இனி எந்த ஆராய்ச்சியாளர்களும் புதியதாக தகவல்களைச் சேகரித்துத் தர முடியாது. ஆனால் ஏன் இப்பொழுது ஏப்ரல் மாதம் வரையில் பொறுக்கச் சொல்கிறார்கள் என்றால், ஒவ்வொரு ஆண்டுக்கும் ஏதாவது நப்பாசை காட்ட வேண்டும், பொதுமக்களிடையே பேசுகின்ற நேரத்தில், இந்த ஆண்டுக்கு நாங்கள் இவ்வளவுத் திட்டங்கள் தீட்டியிருக்கிறோம், தொழில் வளத்தைப் பெருக்குவதற்கு ஒரு ஆய்வுக் குழு பணியாற்றிக் கொண்டு வருகிறது, என்று சொல்ல வேண்டும். இப்படி அடிக்கடி பொருளாதார ஆய்வு தேவை என்றிருந்தால், இந்த மாநிலத்தில் இருந்த 'எக்கனாமிக் அட்வைஸர்' என்ற ஸ்தாபனத்தை ஏன் கலைக்க நேர்ந்தது- தொடர்ந்து ஆராய்ச்சி செய்து, நாட்டில் அதனால் தொழில் வளத்தைப் பெருக்க முடியும் என்பது உண்மையானால் , 'எக்னாமிக்கல் அட்வைஸர்' என்ற பதவியை காரணம் இல்லாமல் நீங்கள் நீக்கி இருக்க வேண்டிய அவசியம் இல்லையே? ஆனால், எனக்குப் படுகின்ற வரையில்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு என்னென்ன தேவை, நம்முடைய மாநிலத்தில் எதெதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று தரப்பட்டிருக்கிற ஒன்றைக் கூட, அவர்கள் இதுவரையில் நிறைவேற்றவும் இல்லை, நிறைவேற்றுவதற்கான வாய்ப்புக்களை இன்னும் பெறவுமில்லை. இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள் : 'At present there is no paper mills in the State. The annual consumption of paper of the Madras Government alone amounts to four to five thousand tons.' என்றுபோட்டு இதை நீலகிரியில் ஆரம்பிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்காகத் தீட்டப்பட்ட இந்த அறிக்கையில் உங்களுக்குத் தெரிந்திருக்கும்போது, இப்பொழுது புதியதாக இந்தத் துறையிலே நீங்கள் தெரிந்துகொள்ள விரும்புவது என்ன? என்ன புதைபொருள் ஆராய்ச்சி நடத்தியிருக்கிறீர்கள்? இன்னமும் பார்க்கப் போனால், இந்த சர்க்காரிடத்திலே இருக்குமென்று நினைக்கிறேன். மத்திய சர்க்காரிடத்திலும் இருக்கவேண்டும். 'போஸ்டு-வார் ரிகன்ஸ்ட்ரக்ஷன் பிளான்' என்று வெள்ளையர் ஆட்சியாளராக இருந்த காலத்திலேயே யுத்தத்திற்குப் பிறகு நாட்டில் என்னென்ன செய்யலாம் என்று அவர்கள் போட்டு வைத்திருக்கிற திட்ட அளவுக்குக் கூட - நாம் புதியதாக ஆராய்ச்சி ஒன்றும் இன்றையதினம் செய்ய வேண்டியத் தேவை இல்லை - நாம் அதை நிறைவேற்றி இருந்தால், நம்முடைய வாழ்க்கைத்தரம் அந்த அளவுக்கு உயர்ந்திருக்க முடியும். ஆனால், அவைகளை எல்லாம் செய்யாமல், ஆண்டுக்கு ஒரு புதிய திட்டத்தை வைத்திருக்கிறோம் என்று கூறும் முறையில் இப்பொழுது இப்பணியை டெல்லியில் இருக்கும் ஒரு ஸ்தாபனம் - தேசீய பொருளாதார ஆராய்ச்சி குழு ஏற்றுக் கொண்டுள்ளது. பல அன்னிய நாட்டு நிபுணர்களும் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று சொல்லியிருக்கிறார்கள். பல அன்னிய நாடுகளில். . . .

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : டெல்லியில் அந்த ஸ்தாபனம் இருந்தால் கூட அவர்கள் நம்முடைய ஆட்கள்தான். இது மாதிரி இருப்பதெல்லாம் டெல்லி என்று நினைக்கிறார்கள். அங்கு இருக்கின்ற ஆட்களும் நம்முடைய ஆட்கள்தான்.

திரு. சி. என். அண்ணாதுரை: நமது நிதி அமைச்சருக்கு டெல்லி பேரிலுள்ள பற்றையும், பாசத்தையும் நானே எடுத்துச் சொல்லி

விட்டேன். நான் சொல்லுவது டெல்லியைப் பற்றி அல்ல. அங்குள்ள அந்த ஸ்தாபனத்தின் மூலம் புதிய உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் உங்களுக்கு என்ன இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. ஏற்கனவே நான் தெரிவித்தபடி, இந்தத் தொழில் நுட்பங்கள், தொழில் நுணுக்கங்கள், இவைகளை நிறைவேற்றுவதற்கு உங்களுக்கு வாய்ப்பு கிடைக்காத காரணத்தினால், திட்டங்களைப் பற்றி ஏடுகளில் இருக்கின்றனவே தவிர, மேலும் திட்டங்கள் ஏட்டிலே எழுதப்படுகின்றனவே தவிர, நாட்டுமக்களுக்கு ஏட்டிலே 'சர்க்கரை' என்று எழுதிக் காட்டுகின்றீர்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இன்னும் முதல் அமைச்சர் அவர்கள் பேசிய பாஷையில் பேசப் போனால் பசியோடு பிச்சை கேட்க வந்தவனைப் பார்த்து, 'அடுத்த வீட்டைப் பார் என்று சொல்லக் கூடிய புண்ணியவான்களாக இருக்கிறீர்களேத் தவிர, ஒரு கவளம் கொடுப்பவர்களாக இல்லை. உங்களுக்கே இல்லையோ என்னவோ, அதுவும் எனக்குத் தெரியாது. (சிரிப்பு).

புதியதாக ஆராய்ச்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லுவது மக்களை தவறான நம்பிக்கை கொள்ளச் செய்வதற்குத் தான் என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். அந்தத் தவறான நம்பிக்கை என்ற தன்மையிலே இந்த நிதி நிலை அறிக்கையிலே ஒவ்வொரு பக்கத்திலும் புள்ளி விவரங்கள் பேசுகின்றன. இந்தத் தடவை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தொழில் எப்படியெல்லாம் வளர்ந்திருக்கிறது என்பதைப் பற்றி எடுத்துச் சொல்லுவதற்கு குறிப்புக்களை தந்திருக்கிறோம். தந்திருக்கின்ற அந்தக் குறிப்புகளிலே என்னுடைய நண்பர் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கலியாணசுந்தரம் அவர்கள் இதிலே முதலாளிகள் பெற்ற லாம் என்னவென்று கேட்டார்கள். "அது பற்றி இப்பொழுது ஒன்றும் அவசியமில்லை. நான் சொல்லுவது, தொழில் வளர்கிறது. அதிக ஆட்கள் இப்போது வேலைக்குப் போகிறார்கள். நேற்று இருந்ததை விட, இன்று அதிகம் பேர்கள் வேலை செய்கிறார்கள். நேற்று கிடைத்ததைவிட, இன்று அதிக ஊதியம் கிடைக்கிறது. ஆகவே, முன்னேற்றம் இருக்கிறதா, இல்லையா" என்று அந்த வாதத்தில் நிதி அமைச்சர் அவர்கள் இறங்கினார்கள். அந்த வாதத்தைத் தொடர்ந்து நான் ஊகித்துக் கொண்டேன். கனம் ஹாஜா

ஷெரிப் அவர்கள் 'தொழில் வளர வேண்டுமானால், கூலியையும் நாம் கட்டுப்படுத்த வேண்டும். தொழில் நல்ல முறையில் நடக்க வேண்டுமென்றால், கூலிப் பிரச்சினை எழலாகாது, என்று சொன்னார்கள். இப்படி 'கான்விக்ட் லேபர்', அதாவது, சிறைச்சாலைக் கைதிகளை வேலை வாங்குவது போல் தொழிலாளர்களை பாதி பட்டினி போட்டு தொழிலை வளர்ப்பதினாலே யாருக்கு லாவம்? அப்படி வளர்க்கப்படுகின்ற தொழில் எந்த வகையிலே நாட்டுச் செல்வத்தை உயர்த்தும் என்று கருதுகிறார்கள்?

நமது நிதி அமைச்சர் அவர்கள் சொல்லிய வாசகத்தை, டெல்லி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது அவர் சொல்லிய வாசகத்தை நான் படித்து படித்து இன்புற்றேன். அவர்கள் எடுத்துச் சொல்லுகிறார்கள், தொழில் வளர்ந்தால் மட்டும் போதாது. தொழில் வளர்கின்ற அளவுக்கு தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவேண்டும். "I am recommending a profit-sharing scheme knowing the full consequences" என்ற வாசகத்தை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் டெல்லி பாராளுமன்றத்தில் உபயோகப்படுத்தி இருக்கிறார்கள். தொழிலில் லாபம் கிடைக்க கிடைக்க, தொழிலாளர்களுக்கு அதிலே பங்கு கிடைக்க வேண்டும், அப்பொழுது தான் நிம்மதி ஏற்படும் என்று அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் தனி உறுப்பினராக இருந்த காலத்தில் அப்படி எடுத்துச் சொன்னார்கள் என்று கருதுகிறேன். இப்பொழுது ஏதாவது சொல்லிவிட்டால், செய்து தீர வேண்டிய கடமை அவர்களைக் கட்டுப்படுத்துகிறது. ஆகவே, மிக மிக ஜாக்கிரதையாக பழைய நினைவை மறந்து விட்டு பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். என்னைப் பற்றிய பூர்வோத்திரத்தை பற்றி அவர் மிகவும் நல்லவர் என்பதற்காக நான் பேசுகிறேன். அவர் கெட்டவர் என்பதற்காக அல்ல. அதற்காக அவருடைய பூர்வோத்திரத்தை ஆராய வேண்டிய அவசியம் இல்லை. ஆராய்ந்தால், கிடைக்காமலும் போகாது. (சிரிப்பு). நான் எடுத்துச் சொல்வதெல்லாம் டெல்லி பாராளுமன்றத்தில் அவர் கூறிய நல்ல வாசகங்களைத்தான். இன்றைய தினம் தொழில் வளர்ச்சிக்குத் திட்டங்கள் தேவை என்றால், இந்தத் தொழில் இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்று காட்டுவதோடு கூட, தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்கு பங்கு கிடைத்திருக்கிறது, தொழிலாளர்களுடைய

வாழ்க்கைத்தரம் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்ட வேண்டும். தொழில் நம்முடைய மாநிலத்தில் வளர்ந்திருப்பதைவிட பிற மாநிலத்தில் வளர்ந்திருப்பதற்கு அவர்கள் என்னக் காரணம் சொல்லுகிறார்கள் - என்ன சொல்ல இருக்கிறார்கள் என்று நான் அறிய விரும்புகிறேன். அப்படிச் சொல்லுகின்ற நேரத்தில் - சட்ட மன்றத்தில் அல்ல - வெளியிலே - நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பம்பாயை நீக்கிவிடுங்கள், மேற்கு வங்காளத்தை நீக்கிவிடுங்கள் மற்ற மாநிலங்களையும் இந்த மாநிலத்தையும் ஒப்பிடுங்கள் என்று அவர் வெளியிலே பேசியதாகப் பத்திரிகையிலே படித்தேன். ஒருவர் பணக்காரர் என்று குறிப்பிடுகிறபொழுது, அவர் விரலிலே போட்டிருக்கிற வைர மோதிரத்தையும், காதிலே அணிந்திருக்கிற வைரக் கடுக்கனையும் காட்டி, இதோ பாருங்கள் பணக்காரர் என்று சொன்னால், காதை மறந்து, விரலை மறந்து, ஆளை மட்டும் பாருங்கள், என்று சொல்லி, அவர்களுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்று கேட்பது போல, நிதி அமைச்சர் அவர்கள் பம்பாயை மறந்து, மேற்கு வங்காளத்தை மறந்து, வேண்டுமானால் உத்திரப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டு பார்த்தால் நாம்தான் வளர்ச்சி அடைந்திருக்கிறோமே தவிர, அவர்கள் அல்ல என்று வாதாடுகிறார்கள். ஆனால், நெசவுத் தொழிலை (டெக்ஸ்டைல்ஸ்) பொறுத்தவரையிலே பம்பாய் மாநிலம் அடைந்திருக்கும் வளர்ச்சியையும், சென்னை மாநிலம் அடைந்திருக்கும் வளர்ச்சியையும் தாரதம்மியப்படுத்திப் பார்த்தால், இந்த சர்க்கார் திருப்தி அடைகிறார்களா என்று கேட்கிறேன். இந்தச் நெசவுத் தொழில் (டெக்ஸ்டைல்ஸ்) எந்த வகையிலே வளர்க்கப் பட்டது என்பது நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். வெளி நாட்டு ஜவுளி, வெளி நாட்டு ஆடைகள் இந்த நாட்டில் இறக்குமதி ஆவதை சில வகையிலே தடை செய்திருக்கிறோம். சில நேரத்தில் அவைகளுக் கெல்லாம் அதிகமாக வரி போட்டு, உள்நாட்டு ஜவுளிக்குப் பாதுகாப்பு அளித்து, 'டாரிப் வால்' கட்டி, அதற்குப் பிறகு நெசவுத் தொழிலை நாம் வளர்த்திருக்கிறோம்.

இவ்விதமான பாதுகாப்புச் சுவர்கள் எழுப்புகின்ற நேரத்தில் அதன் மூலமாக முதலாளிகளுக்கு லாபத்தைத் தேடிக்கொண்டிருக் கிறார்களா அல்லது தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பைத் தேடிக் கொடுக்கின்றார்களா என்பதைத்தான் இப்போது நம்மால் புரிந்து

கொள்ள முடியவில்லை. அது மட்டுமல்ல, உள்நாட்டுத் தொழிலுக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்ற காரியத்தில் - பம்பாயில் ஆலைகளுக்கு பாதுகாப்புக் கொடுக்கின்ற காரியத்தில் - பம்பாயில் ஆலைகளுக்கு பாதுகாப்புக் கொடுத்து வருவதைப் போல் நமது மாநிலத்தில் கைத்தறித் தொழிலுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுகின்றதா என்பதைப் பார்த்தால், இல்லை என்றுதான் நினைக்க வேண்டி இருக்கிறது. அதுதான் இல்லாவிட்டால் போகிறது, பம்பாய் ஆலைத் தொழில் முன்னேறி இருப்பது போன்று நாம் கைத்தறித் தொழிலிலாவது முன்னேறி இருக்கிறோமா என்று பார்த்தால் - நமது முதலமைச்சர் அவர்களுடைய பாஷையில் கூறுவதாக இருந்தால் - ஏதோ பிச்சை போடுகிற இடத்தில் கொடுப்பதை வாங்கி கொடுக்கின்ற நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. பிச்சை எடுத்து நமக்குத் தரக்கூடிய பழக்கம்தான் இருந்து கொண்டிருக்கிறது. மில்லினிடத்திலிருந்து வாங்கி கைத்தறிக்குக் கொடுப்பது என்கின்ற முறைதான் இருந்து வருகின்றதை நாம் பார்க்கிறோம். சமீபத்தில் நமது தொழிலமைச்சர் அவர்கள் சொன்னதாகப் பார்த்தேன் - கைத்தறித் துணிகளுக்கு வெளி நாடுகளில் மார்க்கெட் கண்டுபிடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்கு, அந்தப் பொறுப்பு சர்க்காரைச் சேர்ந்தது அல்ல, அந்தப் பொறுப்பை நாட்டு மக்கள்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிற அளவில் கூறியிருப்பதாக அறிந்தேன். எல்லாக் காரியங்களிலும், நூல் வேண்டும் என்று கேட்டால் - ஆலையிலிருந்து கிடைப்பதால் - நூல் தருகிறோம், கூலி உயர்வு வேண்டும் என்று கேட்டால் முதலாளிகள் தந்தால் வாங்கிகொள்ளுங்கள், அதிலும் திரு. ஹாஜா ஷெரிப் அவர்கள் சொல்வதைப் போன்று, தொழில் முன்னேற்றம் அடைய வேண்டுமானால் இன்னும் பத்து வருடங்களுக்குக் கூலி உயர்வு கேட்கக் கூடாது, வெளிநாடுகளில் கைத்தறித் துணிக்கு மார்க்கெட் தேடித் தாருங்கள் என்று கேட்டால் அதற்கு நீங்களே வழி வகை செய்து கொள்ளுங்கள் என்றெல்லாம் பதில்கள் தரப்படுகின்றன. அந்த முறையில் பம்பாயில் தொழில்கள் வளருவது போன்று இந்த நாட்டில் தொழில்கள் வளருகின்றதா என்பதைப் பார்த்து செல்வங்கள் எல்லாம் எங்கே குவிகின்றது என்பதை நாம் பார்க்க வேண்டும் என்பதைத்தான் நாங்கள் எடுத்துச் சொல்லுகின்றோம். அவ்விதம் இவைகளை எல்லாம் எடுத்துப் பார்க்கும்போதுதான் வடக்கே செல்வம் குவிகின்றது என்பதைப் பார்த்துத்தான் - வடக்கு வாழ்கின்றது, தெற்கு

தேய்கின்றது - என்று நாங்கள் சொல்லுகிற நேரத்தில் எல்லாம் அதைக் கேட்டு ஆத்திரப்பட்ட அன்பர்கள் - ஆத்திரப்பட்ட காங்கிரஸ் அங்கத்தினர்கள் - இந்த ஆலை நெசவு தொழிலைப் பொறுத்தமட்டில் எங்கே இந்தத் தொழில் வாழ்கின்றது? எங்கே இந்தத் தொழில் மேம்பாடு அடைகின்றது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்ப்பார்களானால், இங்கே தொழில் வளர்ச்சி என்பது கண் துடைப்பு என்கின்ற அளவில்தான் வளர்ந்திருக்கின்றதே தவிர, உண்மையான அளவில் முன்னேற்றம் அடையவில்லை என்பதை ஒப்புக் கொள்வார்கள். அதே நேரத்தில் தொழில் வாய்ப்புகள் அதிகமாகக் கண்டறிவதற்காக ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கும் நேரத்தில் நமக்கு இருந்து கொண்டிருக்கின்ற குழப்பத்தை நான் நீக்க விரும்புகிறேன். பல தடவை நான் இந்த சட்டமன்றத்தில் பேசுகின்ற நேரத்தில் கனம் நிதி அமைச்சர் அவர்களைத் திறமைசாலி திறமைசாலி என்று குறிப்பிட்டிருக்கிறேன். அதே நேரத்தில் எனது கழகத்தைச் சேர்ந்த பல அங்கத்தினர்கள் இங்கு பேசுகின்ற நேரத்தில் - தங்களுடைய எண்ணத்தை தெரிவிக்கின்ற நேரத்தில் - நிதி அமைச்சர் அவர்களுக்கு திறமையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போது நமது நிதி அமைச்சர் அவர்கள் எனது கழக அங்கத்தினர்களைப் பார்த்து, "உங்கள் தலைவர் என்னை திறமைசாலி என்று சொல்லுகின்றார், ஆனால் நீங்கள் எனக்குத் திறமையில்லை என்று சொல்லுகிறீர்கள், நீங்கள் உங்கள் தலைவர்க் கருத்துப்படி நடப்பவர்கள் இல்லையா" என்று கேட்டிருக்கிறார்கள். இப்போது நான் சொல்லுகிறேன்; நமது நிதி அமைச்சர் அவர்களுக்கு எதில் திறமை இருக்கிறது என்றால் - நமது முதல் அமைச்சர் அவர்களுடைய பாஷையில் சொன்னால், கொடுக்கக் கூடிய பிச்சை டெல்லிக்குச் சென்று கொடுக்கின்ற காசு போதாது, கூடுதல் வேண்டும் என்ற கேட்பதில் அவர்களுக்குத் திறமை இருக்கிறது. ஆனால், எதில் திறமையில்லை என்றால், நம்முடைய வாதத்தை எடுத்துக் கூறி - நம்முடைய உரிமையை எடுத்துக் கூறி - நம் தொழில் வளர்ச்சி முன்னேற்றம் அடையாமல் இருப்பதை அவர்கள் உணரும்படியாக எடுத்துக் கூறி - அவர்களிடமிருந்து உதவி பெறுவதிலும், அவர்கள் அதற்கு மறுத்தால், அவ்விதம் மறுக்கின்ற டெல்லி அரசாங்கம் உணருகின்ற வகையில் இங்கிருக்கின்ற அரசியல் சக்திகளை எல்லாம் ஒன்று சேர்த்து இழுத்து வைத்துக்கொண்டு - இந்த மாநிலத்திற்கு

தொழில் வளர்ச்சிக்கு உடனடியாக வழி வகை செய்யாவிட்டால் இந்த மாநிலம் பிரிந்து போகும் என்று அவர்களுக்கு சொல்லுவதில் - நமது அமைச்சர் அவர்களுக்கு திறமையில்லை - இந்தத் திறமை கேரள நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு - பாரதம் எல்லாம் ஒன்று, பாரத நாட்டு மக்கள் எல்லாம் ஒன்று என்று சொல்லுகின்ற கேரள முதலமைச்சர் அவர்களுக்கு இருப்பதை நாம் பார்க்கின்றோம். தொழில் வளர்ச்சிக்கான திட்டங்களில் கேரளம் புறக்கணிக்கப் பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்வதில் கண்ணுங்கருத்துமாக இருக்கிறார் கேரள முதலமைச்சர். கொச்சித் துறைமுகத்தை மத்திய சர்க்கார் எந்த விதத்தில் பெரிய தொழில் வளர்ச்சிக்காக பயன்படுத்து கிறார்கள் என்பதைப் பார்த்துதான், கேரளத்தின்மீது, மத்திய சர்க்காருக்கு இருக்கின்ற நல்லெண்ணத்தை முடிவு செய்ய முடியும். "The Cochin Harbour is a touch stone" என்று சொல்லியிருக்கின்றார். அதைப்போலவே ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டி அவர்கள் தங்களுடைய மாநிலத்திற்கு தொழில் வளர்ச்சிக்கு போதிய அளவு மத்திய அரசாங்கம் ஆதரவு தரவில்லை என்று சொல்லுகின்ற நேரத்தில் நாங்கள் இன்பக்கனவு காண்கின்ற இன்பத் திராவிடத்தின் பகுதிகளாக இருக்கின்ற கேரளம், கன்னடம், ஆந்திரம் இந்த மாநிலங்கள் எல்லாம் தங்களுக்கு மத்திய அரசாங்கத்தால் போதிய ஆதரவு தரப்படவில்லை என்று சொல்லுகின்ற நேரத்தில் நம் நாட்டுக்கு மட்டும் போதிய ஆதரவை தந்திருக்கிறார்கள் என்று நாம் சொல்லிக்கொண்டு வருவதை நான் பார்க்கின்றேன். இந்த அறிக்கையைப் படித்த உடனேயே எனக்கு ஏற்பட்ட திகைப்பு, ஏற்பட்ட வருத்தம், இது வரையிலும் பேசாமல் இருந்த மற்ற மாநிலத்திலுள்ள முதலமைச்சர்கள் எல்லாம் டெல்லியைப் பார்த்து பேச ஆரம்பித்து அவர்களைப் பார்த்து தங்கள் நாட்டுக்கு போதுமான அளவு ஆதரவு ஏன் தரவில்லை என்று தட்டிக்கேட்கின்ற இந்த நேரத்தில், எங்கள் நாட்டில் தொழில்கள் எல்லாம் திருப்தியாக நடந்தேறியிருக்கிறது என்று கூறுவது மற்ற மாநிலத்தவர்கள் எல்லாம் தங்கள் மாநிலத்திற்கு போதுமான ஆதரவு தரப்பட வேண்டும் என்று கேட்கின்ற ஒருமித்த குரலுக்கு நீங்கள் (இந்த அரசாங்கம்) துரோகம் செய்வதாகும் என்று நான் நம்புகிறேன். கேரள முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய மாநிலத்திற்கு திட்டத்தில் சரியான பங்கு தரவேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில் (ஆண்டு ஒன்றுக்கு 50 கோடி ரூபாய்க்கு அந்நிய செலாவணிக்கு வழி

செய்கின்ற) மாநிலத்திற்கு தொழில் வளர்ச்சிக்கு போதிய ஆதரவு, தரப்படவேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில், நாமும நம்முடைய தேவையை கேட்கவேண்டியது நம்முடைய கடமையாகும். அந்த முறையில் நாமும் கேட்கின்ற நேரத்தில் - அந்த கோரிக்கைகளை எல்லாம் பள்ளிக் கூடத்தில் சட்டாம்பிள்ளை வகுப்பிலுள்ள மாணவர்களை எந்த விதமாக அடக்கி ஒழுங்காக வைத்திருப்பாரோ - அதே போன்று இங்குள்ளவர்களை இந்த அரசாங்கம் அடக்கி வைத்திருக்கின்றது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். பிற மாகாணங்களில் கூட அமைச்சர்களிடத்தில் ஒற்றுமை கிடையாது. இரண்டு பேர்கள் சேர்ந்து படுத்தால் ஒருவர்தான் எழுந்து வருவார், மற்றொருவர் மறைந்து விடுவார் என்ற அளவுக்கு பிற இடங்களில் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்ற நிலையில் இங்கு நீங்கள் எல்லாம் ஒற்றுமையாக இருக்கின்றீர்கள் - இவ்விதம் உங்களுக்குள் இருக்கும் ஒற்றுமை - அதோடு உங்கள் மீது எங்களுக்கு இருக்கும் ஆசை - இந்த இரண்டையும் பயன்படுத்தி மத்திய சர்க்காரிடத்தில் உங்கள் உரிமையைப்பற்றி கேட்பதற்கு ஏதாவது திட்டங்கள் வைத்திருக் கிறீர்களா என்று பார்த்தால் அவ்விதம் ஒன்றும் இருப்பதாக என்னால் இதில் காண முடியவில்லை. அதே நேரத்தில் நிதி அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் 8-வது பக்கத்தைப் பாருங்கள், அதில் நம்முடைய தொழில் முன்னேற்றம் தெரிகிறது, 12-வது பக்கத்தைப் பாருங்கள், அதிலுள்ள குறிப்பு நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது என்று எல்லாம் குறிப்பிடுகிறார்கள். இவையெல்லாம்தான் இந்த மாநிலம் வளர்ச்சி அடைவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அதிலும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நீங்கள் கேட்ட தொகைக்கும், டெல்லி அரசாங்கம் கொடுத்த தொகைக்கும் இருக்கின்ற வித்தியாசத்தை யாரும் மறுப்பதற்கில்லை. கேட்கின்ற தொகை நமக்கு கிடைக்காத காரணத்தால்தான் நமக்கு முன்னேற்றுவதற்குள்ள வழிவகையை கண்டுபிடிக்க முடியவில்லை என்பதைப் பார்த்தோம். இவ்விதம் கேட்ட தொகைக்கும் அவர்கள் கொடுத்திருக்கும் தொகைக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதைப் பார்த்தே - நான் இதைப் பார்த்திருக்க மாட்டேன். நிதி அமைச்சர் அவர்கள் இதைப் படியுங்கள் , இந்தப் புதிய புத்தகத்தைப் படியுங்கள் என்றெல்லாம் சொன்னார்கள், அடிக்கடி சொல்லியும் வருகிறார்கள், ஆசிரியர்கள்

மாணவர்களைப் பார்த்து இந்தப் புத்தகத்தைப் படியுங்கள், அந்த புத்தகத்தைப் படியுங்கள் என்று சொல்வது போல சொன்னார்கள். நமது நிதி அமைச்சர் அவர்கள் கல்லூரி பேராசிரியராக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : இந்த வேலை போனாலும் வேறு ஒரு வேலைக்கு வழி காண்பித்து தந்ததற்காக மிகவும் நன்றி.

திரு. சி. என். அண்ணாதுரை : நிதி அமைச்சர் அவர்களுக்கு பேராசிரியர் வேலைத் தேவையில்லை. அவர்கள் சிறந்த வழக்கறிஞர், கொலை செய்தவரை தப்புவிக்க வைப்பார், கொலை செய்யாதவரை குற்றவாளியாக்குவார், அவ்வளவு சிறந்த வழக்கறிஞர். அது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. நான் இங்கு குறிப்பிட விரும்புவது இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நமக்கு தரப்பட்டிருக்கின்ற அளவு போதாது என்பதைத்தான். இவ்வளவு குறைவாக நமக்கு கிடைத்திருந்தும் இந்த அறிக்கையை நாம் அனைவரும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கின்ற நினைப்பில் திட்டங்கள் எல்லாம் போதிய அளவு திருப்திகரமாக நிறைவேறியிருக்கிறது என்ற தொனி பெறும்படியான அளவில் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றிய விவரங்களை குறிப்பிட்டிருக்கிற இந்த புத்தகத்தில் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நமக்கு எந்த அளவுக்கு பங்கு கிடைத்திருக்கிறது என்பதை நாம் பார்த்தால் - அக்ரிகல்சுரல் அண்ட் கம்யூனிட்டி டெவலப்மெண்ட் என்கிற இனத்தில் மொத்தம் ஒதுக்கியிருப்பது 568 கோடி ரூபாய், அதில் நமக்கு கிடைத்திருப்பது 29 கோடி ரூபாய், இது 5 சதமானம் - அதே போன்று இர்ரிகேஷன் அண்ட் பவர் என்கிற இனத்தில் மொத்தம் ஒதுக்கி யிருப்பது 913 கோடி ரூபாய், அதில் நமக்குக் கிடைத்திருப்பது 65 கோடி ரூபாய், இது 7 சதமானம் ஆகிறது - அதே போன்றுதான் இண்டஸ்ட்ரீஸ் இனத்தில் மொத்தம் ஒதுக்கியிருப்பது 890 கோடி ரூபாய், அதில் நமக்குக் கிடைத்திருப்பது - இதில் நமக்கு திறமைமிக்க அமைச்சர் இருந்தும் கூட - நமக்கு கிடைத்திருப்பது 10 கோடி ரூபாய், இது சுமார் ஒரு சதமானம் ஆகிறது.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : இந்தத் தொகையை இரண்டு பாகங்களாகப் பிரித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்று, ராஜ்யங்களுக்கு எல்லாம் சேர்ந்து எவ்வளவு

ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை பார்க்கவேண்டும், அதே போன்று ஸெண்டரிலிருந்து நேரடியாக செலவு செய்வது எவ்வளவு என்பதையும் பார்க்க வேண்டும். இரண்டும் சேர்த்துத்தான் இதில் 890 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, ராஜ்யங்களுக்கு ஒதுக்கியிருப்பதில் நமக்கு கிடைத்திருப்பது ராஜ்யவாரியாக எத்தனை சதமானம் என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். அதல்லாமல் வேறு விதமாக தப்புக்கணக்கு போடுவதில் பிரயோசனமில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : தப்புக்கணக்கு அல்ல, மத்திய சர்க்கார் மாநில அளவுக்கு உதவி செய்து வருகிறது என்பதைப்பற்றி நாம் பல தடவை இந்த மன்றத்தில் பேசியிருக்கிறோம். நெய்வேலி திட்டத்தையும் பெரம்பூர் கோச் பாக்டரி திட்டத்தையும் மத்திய சர்க்கார் நடத்துவதினால் நமது மாநிலத்திலுள்ள சில ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கிறதே தவிர அதிலிருந்து வரும் லாபத்தை நாம் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. பாதைகளுக்கு 263 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதிலே நமக்குக் கிடைத்திருப்பது 7 கோடி ரூபாய்; கல்விக்கு 207 கோடி ரூபாய் போட்டிருப்பதிலே நமக்குக் கிடைத்திருப்பது 11 கோடி ரூபாய்; சுகாதாரத்திற்கு 274 கோடி ரூபாய், அதிலே நமக்குக் கிடைத்திருப்பது 14 கோடி ரூபாய்; வீட்டு வசதிக்கு 120 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டிருப்பதிலே நமக்குத் தரப்படுவது 3 கோடி ரூபாய்; பிற்பட்ட சமூகத்தினருடைய நலனுக்காக 91 கோடி ரூபாய் ஒதுக்கியதிலே நமக்கு கிடைத்திருப்பது 5 கோடி ரூபாய். இப்படித்தான் ஒவ்வொரு துறையிலே பார்த்தால், நமது நாட்டுக்கு - ஜனத்தொகை அளவில் கணக்கிட்டு பார்த்தாலும் - நிலப் பரப்பு அளவில் கணக்குப் பார்த்தாலும் - ஒரு நாகரிக சர்க்கார் - ஜனத்தொகை அளவு, நிலப்பரப்பு அளவு என்பது மட்டுமல்லாமல் - எந்த மாநிலங்கள் எந்த அளவு பின் தங்கி இருக்கின்றன என்று பார்த்துதான் தொகை ஒதுக்கியிருக்க வேண்டும். வடக்கே பெரிய பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் ஏற்பட்டு, உலகத்திலே இருக்கின்ற தலைவர்கள் வரும்போதெல்லாம் பார்த்து மூக்கின் மேல் விரல் வைத்து ஆச்சரியப்படத் தக்க அளவுக்கு கட்டப்பட்டிருக்கின்ற பக்ரா - நங்கல் திட்டங்களெல்லாம் இருக்கின்ற பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை விட, பிற்பட்ட பகுதிகளுக்கு - தொழில் வளத்தைப்

பெருக்க - மற்ற வளத்தைப் பெருக்க - அதிகப் பணத்தைக் கேட்டு பெற்றிருக்கின்ற வேண்டிய நிலைமை நிதி அமைச்சருக்கு இருந்தது - அதிலே அவருக்கு திறமை இல்லை. எதிலே திறமை இருக்கிறது என்று சொன்னால் - சில மாநிலங்களிலே 10 கோடி ரூபாய் ஒதுக்கப்படும், அதிலே 8 கோடி ரூபாயைத்தான் செலவழித்திருக்கிறார்கள் - அதைப் போலல்லாமல், ஒட்டப் பால் கறப்பதைப் போல் - ஒரு சொட்டு கூட விடாமல் - வாங்கி வருகிறார் என்று, அந்த வகையிலே அவருடைய திறமையைப் பாராட்டுகிறேன். இன்னொன்று நான் சொல்வேன் - எதிர்க் கட்சியிலிருந்தாலும், பிற மாநிலங்களில் செலவழிக்கப்படு கின்ற பணம் எந்த அளவு பலன் தருகிறதோ அதைவிட அதிகப் பலன் பெருகிற தன்மையில் இங்கே இருக்கிற ஆட்சியாளர்கள் பணத்தை பூரணமான பலன் வரத்தக்க அளவு செலவழித்து ஆட்சி நடத்திக் கொண்டு போகிறார்கள். எதையும் நான் ஒளிக்க விரும்பவில்லை - எதையும் மிகைப்படுத்திப் பேசவும் விரும்பவில்லை. அதிகமாகக் கேட்டுப் பெற்று அதிக அளவு வளத்தைப் பெருக்க அவர்களுக்குத் திறமை இல்லாமல் போய்விட்டது. திறமை யில்லாததற்குக் காரணம் மனம் முதலிலே இல்லை. மனம் அவர்களுக்கு இல்லாததற்குக் காரணம் நான் சொல்வது, நாங்கள் சொல்வது என்ற காரணத்தினால் அதையெல்லாம் எடுக்கக் கூடாது என்று கருதித்தான் - முன்னாலே இங்கே புதிதாக ஏதாவது தொழில் ஆரம்பிக்கலாமே என்று கேட்டதற்கு ஆட்டிறைச்சித் தொழில் ஆரம்பிக்கலாம் என்று நான் சொன்னேன். அதற்கு நிதி அமைச்சர் அவர்கள் - எங்கள் ஊரில் வந்து பேசினார் என்று எங்கள் நண்பர்கள் கேட்டு வந்து சொன்னார்கள். அது வேடிக்கையாக இருந்தது என்று சந்தோஷப்பட்டார்கள் - அண்ணாதுரை கசாப்புக் கடை வைக்கச் சொல்லுகிறாரே, இது நியாயமா என்று கேட்டார். நான் கசாப்புக் கடை வைக்கச் சொல்ல வில்லை. ஆடு வெட்டுகின்ற அளவுக்கு வலிவு நிதி அமைச்சருக்குக் கிடையாது. முதல் அமைச்சருக்கு வேண்டுமானால் சொல்வேன் - அவர் வெட்டலாம். உங்களை அந்த தொழிலில் ஈடுபடச் சொல்ல முடியாது. நான் சொல்வது - ஒரு கடை வைத்தால் அது கசாப்புத் தொழில் - ஆயிரம் கடைகளை வைத்து சர்க்கார் நடத்தினால் அதற்குப் பெயர் மீட் இண்டஸ்ட்ரி. ஒரு தொழில் பெரிதா, அல்லது ஒரு தொழில் சிறிதா என்பதைப் பொறுத்து அந்தத் தொழிலின் தரம் உயராது - என்று. எத்தனையோ ஏடுகளை எடுத்துக் காட்டி எங்களைப்

படிக்கச் சொல்லியிருக்கிறார்கள் நிதி அமைச்சர் அவர்கள். நான் சொல்லுகிற ஒரு ஏட்டிலே - ''நான் நிதி அமைச்சர். கல்விக்கும் அமைச்சர் நீதிக்கும் அமைச்சர், ஆகையால் படிக்க காலம் ஏது'' என்று அவர்கள் சொல்லலாம் - அமெரிக்க நாட்டிலேயுள்ள எழுத்தாளர் ஒருவர் எழுதியுள்ள ஒரு புத்தகத்தைப் பார்த்தால் - மீட் இண்டஸ்ட்ரி எந்த அளவுக்கு இருக்கிறது என்று அவர்கள் தெரிந்து கொண்டிருக்கலாம். நான் இறைச்சித் தொழில் செய்யலாம் என்று சொன்னதை கசாப்புக் கடை என்று கேலிக்குரிய முறையில் அவர்களுடைய கட்சிக்காரர்களின் மாலை நேரப் பொழுது போக்கு அளவிலே சொன்னார்களே தவிர, எந்த வகையிலே லாபகரமில்லை என்று அவர் பதிலளிக்கவில்லை. கசாப்புத் தொழில் தேவையில்லை என்று அவர் கருதுவார்களானால் நான் அதைப்பற்றி இருக்கிற புள்ளி விவரங்களை இன்றைய தினம் சொல்லுகிறேன். கசாப்புத் தொழில் நடத்துவதன் மூலம் இன்றையத் தினம் டென்மார்க் நாட்டிலே ஆண்டொன்றுக்கு அவர்களுடைய தேவைக்குப் போக 300 கோடி ரூபாய் அளவுக்கு வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் வருமானம் கிடைக்கிறது. அதே போல ஆஸ்திரேலியா கண்டத்திலே இதைவிட அதிகமாகக் கிடைக்கிறது. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் வெளியிலே கேலியாகப் பேசுவதைப் போல் என்ன பலன் இருக்கிறது என்று இங்கே சுருதியை மாற்றி ஒருதடவை சொன்னார்கள். 'இது ஒரு கேவலமான தொழில் அல்ல, ஆனால் மேய்ச்சல் நிலம் எங்கே இருக்கிறது'' என்று கேட்டதற்கு நான் இரண்டு பதில்கள் சொல்வேன். ஒன்று, இப்போதே கூட நம் மாநிலத்தில் இருக்கக்கூடிய ஆடு மாடுகளின் அளவு இங்கே இருக்கக்கூடிய மேய்ச்சல் நிலத்தை பொறுத்து இல்லை - ஏராளமான ஆடு, மாடுகள் இருக்கின்றன. மற்றொன்று நீங்கள் மேய்ச்சல் நிலத்தை அதிகமான அளவு வைத்துக் கொண்டிருந்தால்தான் ஆடு, மாடுகளை வளர்க்க முடியும் என்று எண்ணுவது பொருளாதாரத் துறையிலே இருக்கும் வைதீகக் கருத்தாகும். டென்மார்க் நாட்டின் அளவை சென்னை மாநிலத்தின் அளவோடு ஒப்பிட்டுப் பார்த்தால் எது பெரிது, எது சிறிது என்று யாரும் விளக்கத் தேவையில்லை. டென்மார்க் நாட்டிலே இருக்கின்ற விளை நிலம் எவ்வளவு, அதே நேரத்தில் சென்னை மாநிலத்தில் இருக்கின்ற விளை நிலம் எவ்வளவு என்று கணக்குப் பார்த்தால், டென்மார்க் நாட்டில் உள்ளதைவிட நம்முடைய சென்னை

மாநிலத்தில் நிலைமை நன்றாகத்தான் இருக்கிறது என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : ஜனத்தொகை . . . .

திரு. சி. என். அண்ணாதுரை : ஜனத்தொகையைப் பொறுத்தவரை நான் அந்தக் கணக்கை எடுக்கவில்லை.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : அதுதான் தப்பு.

திரு. சி. என். அண்ணாதுரை : நிதி அமைச்சருடைய வாதம் எனக்குத் தெரியும். எது இல்லையோ அது தப்பு என்று சொல்லுவார். (சிரிப்பு). அது கூட ஆசிரியர்களுடைய பழக்கம்தான் - ஆசிரியர்களுடைய பண்புதான். ஒரு பையன் எல்லாவற்றையும் சரியாகச் செய்திருப்பான் - எல்லாவற்றையும் செய்திருந்தாலும் கூட, காப்பி நோட்டு எங்கே என்று கேட்பார். அதற்கு அந்தப் பையன் இல்லை என்றால், பெஞ்சின் மேல் ஏறு என்று சொல்வார். இதைப் போலத்தான் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள்.

உயர்திரு. கே. காமராஜ் : அன்பழகன் அவர்கள் ஏன் அந்தத் தொழிலை விட்டு விட்டு வந்து விட்டார்?

திரு. சி. என். அண்ணாதுரை : நமது முதலமைச்சர் அவர்கள் கனம் அன்பழகனை பற்றிச் சொல்லுகிறார்கள். அந்தத் தொழில் வேண்டாமென்றுதான் இங்கே வந்து விட்டார்கள். டென்மார்க் நாட்டிலே இருக்கிற மேய்ச்சல் நிலத்தைப் பற்றி நான் கணக்குச் சொல்வதிலே இந்த மன்றத்திலே சொல்ல விரும்புகிறேன்.

"In Denmark, there is no room for extensive pastures and the pastures are not of the best. Nor is the winter mild enough for cattle to graze out of doors all through the year, as they do in England."

கடுமையான குளிர்இருக்கிற காரணத்தினால், ஆடு, மாடுகள் வெளியே போய் மேய முடியாது.

"They must live under cover and be fed by hand. Cows spend most of their time in the stable, going out for air and exercise rather than for food".

மேய்ச்சலுக்கு அவைகளை வெளியே அனுப்ப முடியவில்லை.

ஒரே இடத்தில அந்த ஆடு, மாடுகளை வைத்திருப்பதால் அவைகளை காலாறுவதற்காகவும், காற்று வாங்குவதற்காகவும் மட்டும் வெளியிலே அழைத்து வருகிறார்கள். அந்த முறையில் டென்மார்க் நாட்டிலே 300 கோடி ரூபாய் சம்பாதிக்கிறார்கள். டென்மார்க் நாட்டு அமைச்சர்களை விட நமது அமைச்சர்கள் திறமைசாலிகள் என்று எண்ணுகிறேன்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : இல்லை.

திரு. சி. என். அண்ணாதுரை : இல்லையா? இல்லை என்று சொன்னால் நான் வருந்துகிறேன். டென்மார்க் நாட்டிலே 300 கோடி ரூபாய் சம்பாதிக்கிற இந்தத் தொழிலை இங்கே நடத்தினால் ஏன் லாபம் வராது என்று கேட்கிறேன். நம்முடைய சர்க்கார் தந்திருக்கிற கணக்குப்படி பார்த்தாலும், இப்போதே கூட இந்தியா பூராவும் எடுத்துக் கொண்டால் நம் மாநிலத்திலேதான் அதிக அளவு கறி சாப்பிடுகிறார்கள் என்று இருக்கிறது.

"The average annual per capita consumption is 5.6 pounds the highest compares to other States in India."

இங்கேதான்அதிகம் கறி சாப்பிடுகின்றவர்கள் இருக்கிறார்கள். சராசரி ஆண்டொன்றுக்கு, ஒருவர் சாப்பிடுகிற அளவு 5.6 பவுண்டுகள். அர்ஜெண்டைனாவிலே 266 பவுண்டு சாப்பிடுகிறார்கள். ஆஸ்திரேலியாவில் 244 பவுண்டு சாப்பிடுகிறார்கள்; அந்த அளவுக்கு நாம் போகவேண்டாம். ஏனென்றால் இந்த நாட்டிலே நாம் இரண்டு கட்சிகளாக பிரிந்திருக்கிறோம். ஒன்று எங்களைப் போன்ற பிச்சைக் காரர்கள் இருக்கிறார்கள், இன்னொன்று காமராஜர் போன்ற பிரபுக்கள் இருக்கிறார்கள். ஆகையால் இப்போது நாம் அதிகம் சாப்பிட முடியாது. நான் சொல்வது, இந்திய துணை கண்டத்திலே, சென்னையிலேதான் அதிக அளவு நாம் சாப்பிடுகிறோம். அது மட்டுமல்ல, இங்கே இருக்கிற மதிப்பு,

"The meat produced is estimated at Rs. 27 crores per annuam".

என்று இருக்கிறது. ஆனால் அது அப்படியேதான் வளருகிறதே, வளரட்டும் என்று சொல்லலாம். இந்த கசாப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் சாதாரணமாக ஏழ்மை நிலையில்

உள்ளவர்களும், அதிகக் கல்வி அறிவு இல்லாதவர்களும், சுகாதார முறைப்படிக் காரியத்தைச் செய்ய முடியாதவர்களும்தான். நான் குறிப்பிட்ட அந்த நாடுகளிலே ஏன் அந்த அளவு லாபம் வருகிறது என்று சொன்னால்,

"The Central Slaughter House, cold storage facilities, marketing facilities, transport facilities."

இது அத்தனையும் சர்க்கார் தந்திருக்கிறார்கள். நம் சர்க்கார் அதைத் தருவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைத் தந்தாலும்கூட, ஸ்டோரேஜ் வசதி பெற்றுக் கொண்டு இந்தத் தொழிலை விருத்தி செய்ய வேண்டுமானால் சர்க்கார் இந்த தொழிலை எடுத்துக் கொண்டால் அதிக லாபம் கிடைக்கும் - வருவாய் கிடைக்கும் - என்று நினைக்கிறேன்.

உயர்திரு. சபாநாயகர் : The hon. Member has already taken 45 minutes. Anyway, I shall give him another five minutes.

திரு. சி. என். அண்ணாதுரை : ஆகையால் இந்தத் தொழிலை எடுத்து நடத்துவதால் இழிவு என்று கருதத் தேவையில்லை. அதேபோல், பஸ் தொழிலை எடுத்து நடத்தலாம் என்ற மற்றொரு திட்டம் நான் பேசும் போது சொன்னேன். அதோடு, நாட்டிலே இருக்கும் எல்லாச் சினிமாக் கொட்டகைகளையும் எடுத்து நடத்தலாம் என்று சொன்னேன். அதிலே பெரும் வருவாய் இருக்கிறது. இப்படி வருவாயைப் பெருக்குவதன் மூலம் நாட்டு மக்களுக்கு ஓரளவு நீங்கள் வரிச் சலுகை அளிக்கலாம், வரியைக் குறைக்கலாம்.

முதல் ஆண்டிலே நான் நிதி அமைச்சரிடம் சொன்னேன் - 'உணவுப் பொருளுக்குப் போட்டிருக்கும் வரியைக் குறையுங்கள்; சாப்பிடும்போதெல்லாம் மக்கள் வாழ்த்துவார்கள்' என்று சொன்னேன். அப்போது அவர் பேசியிருப்பதை நான் மறுபடியும் படித்துப் பார்த்தேன். இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டு கவனிக்கலாம் என்ற சொன்னார்கள். அடுத்த ஆண்டு கவனித்தாரா என்றால், அடுத்த ஆண்டும் கவனித்ததாக தெரியவில்லை. ஆனால், அவர் ஒரு வாதத்தை அளித்திருக்கிறார்கள். 'உணவு பொருளுக்கு வரி போடுகிறோம் என்று சொன்னாலும், உணவுப் பொருள்களில் 25 சத விகிதம்தான் வரி கொடுக்கத்தக்க அளவு

வருகிறது; மற்றபடி உணவுப் பொருள்கள் கிராமத்தில் கைமாறிக் கொண்டு போகின்றன; ஆகையால் விற்பனை வரி இல்லை' என்று சொன்னார்கள். இது என்ன இவ்வளவு சாதுரியமாக வாதாடுகிறாரே என்று ஆச்சரியப்பட்டேன். அவர் இந்தக் கருத்தை எத்தனை காலமாக வைத்திருக்கிறார் என்று பார்த்தேன். 1953-லே அவர் இங்கே பேசியிருக்கிறதைப் பார்த்தேன். அவர் பேசியபின் கடைசியில், அப்பொழுது முதலமைச்சராக இருந்த ராஜகோபாலாச்சாரி அவர்கள், 'நிலைமை கொஞ்சம் சரியானால் விற்பனை வரியைக் குறைப்பது பற்றி கவனிக்கலாம்' என்று கூறினார்கள். நிலைமை சரியாகியிருக்கும் இந்த நேரத்தில், இந்த நிதி நிலை அறிக்கையிலே உணவு பொருள்கள் மீது விதித்திருக்கும் வரியை ரத்து செய்திருப்பார்களானால், உண்மையிலேயே நாட்டு மக்களை நீங்கள் மதிக்கிறீர்கள் என்று பொருள். நாட்டு மக்களை மதிக்கின்ற காரியத்தில் ஈடுபடுத்துவதற்கு எனக்குத் திறமை இல்லை.

நாட்டு மக்கள் அனைவரும் கூடி, புலவர் குழாங்கள் கூடி, ஆசிரியர் குழாங்கள் கூடி, ஊராட்சி மன்றங்கள் கூடி, இந்த மாநிலத்திற்கு "தமிழ்நாடு" என்று பெயர் வைக்கவேண்டுமென்று கூறினார்கள். "எங்களுக்கு பிடித்தம் இல்லை; ஆகையால் வேண்டாம்" என்று சொல்லிவிட்டார்கள் ஆட்சியில் இருப்பவர்கள். "தமிழ்நாடு" என்று பெயர் வைக்கவேண்டும் என்பதற்காக உண்ணாவிரதம் இருந்தவரைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் "வெட்ட வெளிச்சத்தில் பட்டினி கிடந்து சாகிறார்" என்று கூறினார்கள். அந்த பக்கத்துக்கு அடிக்கடி போய் வந்த முதலமைச்சர் அவர்கள் 'அவர் இன்னும் சாகவில்லை' என்பதுபோல் சொன்னாரே தவிர 'தமிழ்நாடு' என்று பெயரை மாற்றுகிறோம் என்று சொல்ல முன்வரவில்லை.

உயர்திரு. கே. காமராஜ் : அவர் செத்துவிட்டார்.

திரு. சி. என். அண்ணாதுரை : நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எனக்குத் தகவல் தருகிறார். 'அவர் பட்டினி கிடந்து செத்து விட்டதாக. செத்துவிடுகிறார் என்று தெரிந்திருந்தும்கூட 'எங்களுக்கு இஷ்டம் இல்லை ஆகையால் பெயரை மாற்றமாட்டோம்' என்று இருந்து விட்டார்கள்.

அது போலத்தான், 'உதகமண்டலத்திற்கு எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டால்தான் போவோம்' என்று சொன்னார்கள். 'அங்கு போக வேண்டாம்' என்று நாங்கள் சொன்னோம். நீங்கள் வேண்டாம் என்கிறீர்கள்; ஆகையால் வசதி இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஓட்டலில் சாப்பாடு எப்படி இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஒரு தடவை போய்விட்டு வந்தே காட்டுகிறோம்' என்று போகிறீர்கள். தாராளமாக போங்கள்.

ஒன்று நான் இந்த ஆட்சியாளருக்குச் சொல்வேன். மக்களுடைய மனப்போக்கை அறிந்து நடப்பதற்கு ஒரு ஜனநாயக நாட்டில், எவ்வளவு பலம் பொருந்திய கட்சியாக இருந்தாலும், முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். வலிவு இருக்கும் காரணத்தாலே மக்களுடைய மனப் போக்கை அறியத் தேவை இல்லை என்று நீங்கள் கருதுவீர்களானால் நிச்சயமாக இந்த வலிவு எந்த எந்த வகையிலே பெறப்பட்டது என்பதை நான் அறியாமல் இல்லை. இந்த வலிவு எந்த எந்த வகையிலே பெறப்பட முடியும் என்பதும் எங்களுக்குப் புரியாமலும் இல்லை. இந்த வலுவை எப்படி எப்படிப் பெறுவது என்று நாங்கள் முயற்சி எடுத்துக்கொள்ளாமலும் இல்லை. ஆகையால், நான் இன்றையத்தினம் சொல்வது - இப்பொழுது கிடைத்திருக்கும் வருவாயை வைத்துக்கொண்டு, நீங்கள் மக்களுடைய எண்ணத்தை புறக்கணிக்கக்கூடாது என்பதை நான் சொல்லிக் கொண்டு, இந்த நிதி நிலை அறிக்கை பொதுவாக வடநாட்டுக்கும் தென் நாட்டுக்கும் இடையே இருக்கும் இந்த பூசல் கிளம்பியிருப்பதை மறைப்பதற்காகவும், மறுப்பதற்காகவும் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் மிக அழகாக வாதாடியிருக்கும் ஒரு பெரிய வழக்கறிஞர் செய்திருக்கும் வேலை என்று கருதுகிறேன். இது அவரை டில்லிக்கு அழைக்குச் செல்லுமானால் நான் திருப்திப்படுவேன். இதற்குப் பிறகும் அவர் டில்லிக்குப் போக வாய்ப்பு கிடைக்க வில்லையானால், அவர் அடுத்த தடவையாகிலும் சென்னை மாநிலத்திற்கு மத்திய சர்க்காரிலிருந்து உதவி சரியான காலத்தில் கிடைக்காத காரணத்தால் இவ்வளவு பின்தங்கியிருக்கிறோம் என்று சொல்லி, இங்கே இருக்கும் மக்கள் இருதயத்திலே கொலுவீற்றிருங்கள் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : திரு. அண்ணாதுரை அவர்களுக்கு நான் இங்கிருப்பது பிடிக்கவில்லையானால் நான் விலகிக் கொள்ளத் தயாராயிருக்கிறேன். ஆனால் அவருக்கே பிடிக்காத வடக்குக்கு என்னைப் போகச் சொல்லவேண்டாம்.

திரு. சி. என். அண்ணாதுரை : நிதி அமைச்சரைப் போகச் சொல்கிற நேரத்தில் நானும் அங்கு வருவதாக இருக்கிறேன்.

வேளாண்மைத் திட்டம் நிதி ஒதுக்கீட்டுச் சட்டமுன்வடிவு

உரை : 28 **நாள் : 19.03.1959**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்திலே ஒவ்வொரு ஆண்டும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக இந்த அரசாங்கம் கணிசமான நிதி ஒதுக்கி வருகிறோம் என்று அறிவிக்கிற சர்க்காருடைய அறிவிப்பை ஆதரிக்க வேண்டுமென்ற முறையிலே பேசிய கனம் அங்கத்தினர்களும், அந்தத் தொகையை கணிசமான அளவு அல்லது மேலும் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று வெட்டுப் பிரேரணையின் மீது பேசிய எதிர்த்தரப்பில் உள்ளவர்களும் பல திட்டங்களை இந்த அரசாங்கம் நிறைவேற்றத் தவறிவிட்டது என்று எடுத்துக்கூறினார்கள். ''இந்த அரசாங்கம் இதுவரையில் சாதித்திருக்கக்கூடிய காரியங்கள் பாராட்டுதற்குரியன'' என்ற முறையில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் தங்களுடைய பேச்சைத் துவக்கிய போதிலும், ''இன்னும் செய்யப்படக்கூடிய காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன'' என்று வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்த அறிவிப்பிலே மிகுந்த திருப்தியை இந்த நாடு அடைந்துவிட்டதைப் போலும், மிகுந்த திருப்திகரமாகப் பல காரியங்களைச் செய்துவிட்டால் போலவும், ஒரு பாவனை ஏற்படுகின்ற காரணத்தினால் - செய்யப்பட வேண்டிய காரியங்கள் இன்னும் எவ்வளவு பாக்கி இருக்கின்றன என்பதை வலியுறுத்தி எதிர்த்தரப்பில் உள்ளவர்கள் இந்த மன்றத்திலே எடுத்துக் கூறி இருக்கிறார்கள்.

பொதுவாகப் பாராட்டுதலை மட்டும் அமைச்சர் அவர்கள் விரும்புவார்கள் என்று நான் கருதவில்லை. பாராட்டுதலோடு கூட, அவர்கள் செய்யத் தவறிய காரியங்கள் அல்லது செய்வதற்கு

இன்றையதினம் அவகாசம் இல்லையென்று விட்டுவிட்ட காரியங்கள் - இவைகளைப் பற்றி எல்லாம் கவனிப்பது அங்கத்தினர்கள் பொறுப்பு என்ற முறையில் காங்கிரஸ் தரப்பில் உள்ளவர்களும், செய்யப்பட வேண்டிய பல திட்டங்களைப் பற்றி இந்த மன்றத்திலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எனக்கு அதிலே ஏற்பட்ட ஆச்சரியத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல அங்கத்தினர்கள் கேட்ட அளவிலே பார்த்தால் - அவர்கள் சொன்ன திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படுமானால் குறைந்தது 3 லட்சம் ஏக்கர் நிலங்கள் புதிதாகப் பாசன வசதி பெறும் என்று தெரிகிறது. குறிப்பாக, சர்தார் வேதரத்தினம் அவர்கள் "மிகக் குறைந்த செலவில் 40,000 ஏக்கர் நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டு வரலாம்" என்று அறிவித்தார்கள். மற்றொரு கனம் அங்கத்தினர் - நல்லசாமி என்று கருதுகிறேன் - 30,000 ஏக்கர் வரை பாசனத்திற்குக் கொண்டுவரலாம் என்று தெரிவித்தார்கள். இப்படி ஒவ்வொரு அங்கத்தினர்களும் கொடுத்தக் கணக்கைப் பார்த்தால் ஏறக்குறைய 2 லட்சம் அல்லது 3 லட்சம் ஏக்கர் நிலங்கள் புதிதாகப் பாசன வசதி பெறச் செய்ய முடியும் என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது. இந்த முறையில் அந்த அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னதன் காரணம் அவர்கள் தங்கள் தங்கள் தொகுதியில் வைத்திருக்கும் அக்கறையின் விளைவு என்று மட்டும் அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள் என்று தெரியவில்லை. இதே பிரச்னையைப் பற்றி இதற்கு முந்திய ஆண்டிலும் அந்தக் கனம் அங்கத்தினர்கள் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அங்கத்தினர்கள் சொல்லுகிற இந்தத் திட்டங்களைப் பற்றிச் சர்க்கார் எல்லா திட்டவட்டமான கருத்தை வைத்திருக்கிறார்கள் என்று நான் அறிய விரும்புகிறேன். "அங்கத்தினர் கள் தங்கள் தங்களுக்குத் தேவையான அல்லது தோன்றுகின்ற திட்டங்களைப் பற்றிப் பேசுவார்கள்; அமைச்சர்கள் அதைக் காதாரக் கேட்டுக் கொண்டு இருப்பார்கள்; ஆனால் அவைகளைப்பற்றிப் பிறகு அக்கறை செலுத்தமாட்டார்கள்" என்றால் அதைப் பற்றி அந்தத் திட்டங்களைப்பற்றி பேசிக் கொண்டிருப்பது வீண் நேரக் கேடு என்று சொல்லும் திட்டங்கள் பயனற்றது என்று அமைச்சர் அவர்கள் கருதுவார்களேயானால் தங்கள் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கெல்லாம் "இந்த மாதிரித் திட்டங்களைப் பற்றிச் சொல்ல வேண்டாம்" என்று கூறி இருக்கலாம். இந்த மன்றத்திலும் "இந்தத் திட்டங்கள் எல்லாம் காரிய சாத்திய மற்றது" என்று திட்ட வட்டமாகக் கூறி இருக்கலாம். சர்க்கார் தங்கள் கொள்கையாக இதில்

அறிவித்திருப்பது என்னவென்றால் "ஏக்கருக்கு 300 ரூபாய்க்கு மேல் அதிகமாகப் பணத்தைச் செலவழிக்காமல் இருக்கக் கூடிய நிலங்களுக்கு அபிவிருத்திக் கட்டணங்கள் கிடைக்க வேண்டும்". இதுதான் எங்கள் கொள்கை என்று ஓரிடத்தில் அறிவிக்கிறார்கள். மற்றொரு இடத்தில் "ஆனால்" என்று ஆரம்பித்து "பின்னடைந்த பிரதேசங்களைப் பொறுத்த வரை நாங்கள் இந்தக் கொள்கையைக் கொஞ்சம் தளர்த்துவோம். அங்கெல்லாம் அதிகப் பணம் செலவழித்து அவைகளை எல்லாம் வளமாக்கத் திட்டம் இட்டிருக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களிடத்தில் இருக்கிற கொள்கையில் கொள்கைக் குழப்பம் ஒரு புறமிருக்க, அவைகளை நிறைவேற்றுகிற நேரத்தில் விருப்பு வெறுப்புக்கு ஆளாகிறார்களோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. காங்கிரஸ் அங்கத்தினர்கள் சொல்லுவதைச் செய்வார்கள்; காங்கிரஸ் அல்லாத உறுப்பினர்கள் சொன்னால் செய்யக் கூடாது என்று அமைச்சர் அவர்கள் மனதில் எண்ணிக் கொண்டிருக்கிறார்களோ என்ற சந்தேகம் பலமாக ஏற்படுகிறது. ஆகவே, இந்த ஆண்டு 2 லட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களைத், தரிசாக இருக்கிற நிலங்களை, அல்லது அதிக வளம் இல்லாத நிலங்களை எல்லாம் எடுத்து - இவைகளுக்கெல்லாம் புதிய பாசன வசதிகள் செய்யலாம் என்று அங்கத்தினர்கள் சொன்ன யோசனையைப்பற்றி அமைச்சரவை திட்டவட்டமாகத் தங்கள் கொள்கையை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று பெரிதும் விரும்புகிறேன்.

மற்றும் ஒன்று, பொதுவாக நீர்ப்பாசன விஷயத்தில் நம்முடைய மாநிலத்தில் பெரிய ஆறுகள் இல்லையென்ற காரணத்தால் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் செய்ய வேண்டிய அளவு செய்ய வசதி இல்லை என்று எடுத்துப் பேசிவந்ததன் விளைவு - இன்றைக்கு மத்திய சர்க்காரை அணுகும் நேரத்தில் "நீங்களே திருப்தி தெரிவித்திருக்கிறீர்களே; நீங்களே இன்னின்ன திட்டங்களை நிறை வேற்றிவிட்டோம் என்று பூரண பலன் பெற்றுவிட்டது" என்று மத்திய சர்க்கார் இவர்களுக்குப் பதில் அளிப்பார்களோ என்று நான் அஞ்சுகிறேன்.

வெளியிலே இருக்கும் வேறு பல மாநிலங்களில் ஆறு இருந்து அணைக்கட்டிப் பாசனத்திற்கு வசதி செய்து கொடுக்கிறார்கள். இங்கு ஏன் செய்யவில்லை என்று கேட்கும்போது, அப்படிப்பட்ட பெரிய ஆறுகள் இல்லை என்று இங்கே பதிலளிக்கப்பட்டது. பெரிய ஆறுகள்

நம்முடைய மாநிலங்களிலே இல்லை என்பதையே வலுவற்ற தன்மைக்குக் காரணம் ஆக்கிக் கொள்ளாமல் பெரிய ஆறு இல்லாத மாநிலத்தில் சிறுநீர்ப்பாசன திட்டத்துக்கு அதிகமான தொகையை நாளாக நாளாக ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டு அவர்கள் ஒதுக்கி இருப்பதாகக் குறிப்பிட்டுக் காட்டுவது 84 லட்சம் ரூபாய்தான். ஏறக்குறைய இரண்டு வாரங்களுக்கு முன்னால் என்று நினைக்கிறேன் - செங்கல்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாய சங்கத்தார், இந்த சட்ட மன்றத்தில் இருக்கும் பல எம்.எல்.ஏ.க்களும், எம்.எல்.ஹி.க்களும் அதில் அங்கம் வசிக்கின்றார்கள் என்று நினைக்கிறோம் - அவர்கள் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். சிறு நீர்ப்பாசனத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மிகக் குறைவு, குறைந்தது இரண்டு கோடி ரூபாயாவது ஒதுக்கியிருக்க வேண்டுமென்று கனம் ராமச்சந்திர ரெட்டியார் என்று கருதுகிறேன்; அந்தக் கூட்டத்திலே எடுத்து வலியுறுத்தியிருக்கிறார். இவைகளை நான் சொல்வதற்குக் காரணம் குற்றம் குறை சொல்லும் நேரத்தில், காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள் சொல்லுகிறார்கள் என்று ஒதுக்கித் தள்ளுவதற்கு இல்லை. காங்கிரஸ் உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லுகிறார்கள் என்ற காரணத்தினால், அமைச்சரவை அதைப் புறக்கணிக்காமல் உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மன்றத்தில் ஒரு தடவை சொல்லப்பட்டது. ''அங்கே பெய்யும் மழை நீரை, ஆறுகள், வாய்க்கால்களில் ஓடும் நீரை - கடலிலே கலப்பதற்கு முன்னால் சொட்டுக்கூட அதிகமாகக் கலக்காமல் பார்க்கிறோம். நீரை விரையம் ஆக்கவில்லை'' என்று அமைச்சரவையினர் எடுத்துச் சொல்லுகிறார்கள். ஆனால், இன்றையதினம் பேசியதைக் கவனித்தால், உறுப்பினர்கள் தங்கள் தங்கள் பகுதியில் தாங்கள் காணும் காட்டாறு, தாங்கள் காணும் மலையருவி, தாங்கள் காணும் சிற்றாறு இவைகளில் நீர் சேதப்படுவதாகவும், நெல்லுக்கு பயன்படுத்தபடவில்லை என்று ஒவ்வொரு அங்கத்தினரும் எடுத்துச் சொன்னார்கள். கனம் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் ஒரு பெரிய வாய்க்கால் திட்டத்தைச் சொன்னார்கள். சர்தார் வேதரத்தினம், ''லட்சம் ரூபாய் செலவழித்தால் நாற்பதாயிரம் ஏக்கர் நிலத்தைப் புதிதாகப் பாசனத்திற்குக் கொண்டுவரக் கூடும்'' என்று சொல்கிறார்கள். அப்பொழுது நமது மராமத்து அமைச்சரும் விவசாயத்துறை

அமைச்சரும் - வேறு காரணத்திற்குக் என்று கருதுகிறேன் - சிரித்துக் கொண்டிருந்தார்கள். சிரிப்புக்கு இடமான திட்டமாக இருந்தால் வெளிப்படையாகச் சொல்லிவிடுவதே நல்லது. ஏனென்றால், உறுப்பினர்கள் இவைகளைப்பற்றி இங்கே பேசுவதற்கு முன்னால், தங்கள் தங்கள் தொகுதி மக்களிடத்தில் இவைகளைப் பற்றி பேசியிருக்கிறார்கள். அந்தந்தத் தொகுதி மக்கள் அந்தந்தத் தொகுதியிலுள்ள உறுப்பினர்களிடத்திலே இவைகளைப் பற்றி முறையிட்டிருக்கிறார்கள். இங்கு வந்திருக்கும் காங்கிரஸ் உறுப்பினர்களும், எதிர்த் தரப்பில் இருக்கும் உறுப்பினர்களோடும் எவ்வளவு சாமர்த்தியமாக வாதாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை பரீட்சை பார்ப்பதற்காக மட்டும் நாம் இங்கு வந்திருப்பதாகத் தெரியவில்லை. இந்தப் பருவத்தை நம்மில் பல பேர் கடந்திருக்கிறோம் என்று நினைக்கிறேன். தங்கள் தங்கள் தொகுதி மக்கள் சொல்லும் குறைபாடுகளைச் சட்ட மன்றத்தில் எடுத்துச் சொல்லி அதற்குப் பரிகாரம் தேட வந்திருக்கிறார்கள். இந்தப் பரிகாரங்களைத் தேடிக்கொள்வதற்காக திட்டங்களைச் சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அந்தத் திட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரக் கூடியனவா என்று தயவுசெய்து இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட பிரச்னைகளில் ஒன்று பாலாற்றுப் பிரச்னை. பாலாற்றுப் பிரச்னை என் வரையிலேதான் இருக்கிறது, எங்கள் மாவட்டத்திலேதான் இருக்கிறது என்று நான் கருதினேன். செட்டி நாட்டுப் பகுதியில் இன்னொரு பாலாறு இருக்கிறது என்று நம்முடைய ராஜா சர் முத்தையா செட்டியார் பேசியதிலிருந்து நான் அறிகிறேன். எங்கள் பாலாற்றை போலவே அந்தப் பாலாறும் சாதாரண மணலாக இருக்கிறதே என்று நான் மிகவும் வருந்துகிறேன். பெரியவர்கள் அதற்கு எதற்காகத்தான் பாலாறு என்று பெயர் வைத்தார்களோ என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது. ஆனால், அப்பொழுதிருந்த மக்கள் அந்த ஆற்றிலே வளத்தைக் கண்டதாலே, அதற்குப் பாலாறு என்று பெயர் வைத்திருக்கக் கூடும். அந்தப் பாலாற்றுத் திட்டத்தைப் பற்றி பல அமைச்சர்கள் எங்கள் தொகுதியிலே வந்து பேசும் போதுகூட, குறிப்பிட்டிருக்கிறார்கள். அண்ணாதுரை இங்கே வெற்றி பெற்று வந்துவிட்டான், பாலாற்றிற்கு தண்ணீர் கொண்டு வரமுடிந்ததா? என்று கேட்கிறார்கள். இப்படி கேட்பது என்னை குறைபடுத்தியதாகக் கருதுகிறேன். நான் இங்கே

வருவது விஷயங்களை முறையிடுவதற்கே தவிர காரியங்களை சாதிக்கும் ஆற்றல், காரியங்களை சாதிக்கும் வசதி, அதற்கான உரிமை அமைச்சரிடத்தில் இருக்கிறது. ஆகையினால் பாலாறு திட்டத்தைப் பற்றி உடனடியாக திட்டவட்டமாக அமைச்சரவை நாட்டுக்கும், எங்களுக்கும் அறிவிக்க வேண்டும். இந்த விஷயத்திலே உங்களுக்கு அக்கறை இருக்கிறதா, இது வெற்றி பெறும் என திட்டவட்டமாக நம்புகிறீர்களா அல்லது வீணுக்கு இதைப் பற்றிப் பேசுவதற்கு அனுமதி அளிக்கிறீர்களா என்று நிச்சயமாகத் தெரிந்தாக வேண்டும். ஏனென்றால், இந்தப் பாலாற்றுப் பிரச்னையைப் பார்த்தால் கனம் கரிய கவுண்டர் சொன்னபடி இன்று நேற்று அல்ல, பல ஆண்டு காலமாக, நாலைந்து ஆண்டுகளாக, சட்ட மன்றத்தில் பேசப்பட்டு வந்திருக்கிறது. பாலாற்றைப் பற்றி வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்து வந்திருக்கும் உறுப்பினர்களுக்கும் வாக்கு அளித்துவிட்டு வந்திருக்கிறார்கள். போகும் ஒவ்வொரு ஊரிலும் கேட்கிறார்கள். விவாதத்தில் உள்ள பிரச்னையாக பல ஆண்டு காலமாக இருக்கிறது. சென்ற வருஷத்தில் என்று நான் நினைக்கிறேன் - நம்முடைய அமைச்சர் அவர்கள் டில்லிக்குச் சென்றிருந்த காலத்தில் அங்கே இருக்கும் துணை அமைச்சருடைய தலைமையில் நடைபெற்ற கமிட்டிக் கூட்டத்தில், பாலாற்றுப் பிரச்னையை பற்றி ஒரு தடவை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டார்கள். ஓராண்டுக்குப் பிறகு நடத்தப்படும் இந்த விவாதத்தில் அது பற்றிய ஒரு குறிப்பும் காணப்படவில்லை. அமைச்சர் பேச்சிலே, அந்த விவாதம் எந்த அளவிலே இருக்கிறது, எந்த அளவுக்கு நாங்கள் அக்கறையோடு இருக்கிறோம், எந்த அளவுக்கு வெற்றி பெறமுடியும் என்று அறிவித்திருப்பாரானால், வட ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய இரண்டு மாவட்ட மக்களுடைய மனதிற்கும் குளிர்ச்சி ஏற்படும். இதை விட்டுவிட்டு,பாலாற்றைப் பற்றி அவர்கள் பேசினால் நடக்குமா என்று கூறினால் அவர்கள் ஜனநாயகப் பொறுப்பிலே இருந்து தவறிவிடுகிறார்கள் என்று நான் உண்மையாகக் கூற விரும்புகிறேன். பாலாற்றுக்குத் தண்ணீர் கிடைக்கும் என்று கூறவில்லை. மைசூர் ராஜ்யத்திற்கும் சென்னை ராஜ்யத்திற்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் ஏதோ கோளாறு இருப்பதாக எடுத்துச் சொல்லப்பட்டது. சர்க்காருடைய தஸ்தாவேஜுகளை பரிசீலிக்கிற வாய்ப்பு எனக்கு இல்லை என்று அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் அதிலே இருக்கும் உண்மைகளைப் பற்றியோ

உண்மைக்கு மாறானவைகளைப் பற்றியோ நாங்கள் எதுவும் திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை. ஆனால் இன்று சொல்லிக் கொள்வேன் - மைசூர் ராஜ்ய சர்க்காரோடு சென்னை மாநிலச் சர்க்கார் ஒன்றாக கலந்து பேசி பாலாற்றுக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கு இதுவரை என்ன முயற்சிகள் எடுத்துக் கொண்டார்கள்? முதலில் அந்தப் பிரச்சினை இருக்கிறதென்று ஒத்துக் கொள்ள வேண்டும், இரண்டாவது, கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினையா என்பதைத் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும், மூன்றாவது அந்தப் பிரச்சினைக்காக மைசூர் ராஜ்யத்தோடு கலந்து பேசி மைசூர் ராஜ்யத்துக்கும், சென்னை ராஜ்யத்துக்கும் கருத்து வேறுபாடு இருக்குமானால் மத்திய சர்க்காருடைய துணையை நாட வேண்டும். இப்பொழுது மத்திய சர்க்காரிலே உள்ளவர்கள் சொல்கிறார்கள், ''உங்களால் தீர்த்துக்கொள்ள முடியவில்லை என்றால் எங்களை அழையுங்கள், நாங்கள் தீர்த்து வைப்போம்'' என்று கேட்டிருக்கிறார்கள். அது கேட்டு ஓராண்டு காலம் ஆகிறது. ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார், ஆமை வேகத்தில் போகிறார்கள் என்று. நான் சொல்கிறேன் இவர்கள் ஆமை வேகத்திலும், நத்தை வேகத்திலும் போகவில்லை. அமைச்சர் வேகத்தில் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று! அந்த வேகத்தைப் பற்றிக் கொஞ்சம் இந்த இரண்டு மாவட்டங்களும் உங்களால் பலம் பெற வேண்டும், அந்த விதத்தில் காரியத்தைச் சாதிக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே பாலாற்றுப் பிரச்சினையை சரியான முறையில் தீர்க்க வேண்டுமானால் இந்த பிரச்சினை பற்றிமட்டும் கவனிப்பதற்கு என்று தனி துணைக் குழு அமைக்கப்படவேண்டும். அதற்கு தனி அதிகாரி, ஸ்பெஷல் ஆபீசர் நியமிக்கப்பட வேண்டும். அந்தத் துணைக் குழு நிரந்தரமாக வேலை செய்துகொண்டு இந்தப் பிரச்சினை தீருகிற வரையில் அவர்கள் வேலை செய்ய வேண்டும். அவர்களுக்குத் துணையாக ஸ்பெஷல் ஆபீசர் இருந்து இந்தக் காரியங்களைக் கவனிக்க வேண்டுமென்று அமைச்சர்களுக்கு இருக்கும் ஆயிரத்தெட்டு கவலையோடு இதையும் ஒன்றாக வைத்துக் கொண்டால் இந்தக் காரியம் சுலபத்திலே வெற்றி பெறும். அமைச்சர் அவர்கள் இந்தக் காரியத்தை மிகவும் முன்னிலையில் வைத்து அவசரமாக நிறைவேற்ற வேண்டிய காரியமாக கவனிக்க வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவைகள் எல்லாவற்றையும் விட நம் மாநிலத்தின் பிரம்மாண்டமான திட்டம் என்று கருதக்கூடிய கிருஷ்ணா, கோதாவரி தண்ணீரை நம்முடைய மாநிலத்திற்கு பயன்படுத்துவதற் கான திட்டத்தை நாம் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும், முடியாதென்றால் அடுத்த ஐந்தாண்டு திட்டத்திலாவது எடுத்துக் கொள்ளக்கூடாதா என்று கேட்கின்ற முறையில் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் சொன்னார்கள். திரு. கரிய கவுண்டர் அவர்களும் சொன்னார்கள். இரண்டாவது திட்டத்தில் இல்லையென்றால் எப்படியாவது மூன்றாவது திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள், மூன்றாவது திட்டத்தில் இல்லையென்றால் நான்காவது திட்டத்தில் எப்படியாவது சேர்த்துக்கொள்ளுங்கள் என்று கேட்டார்கள். இந்த ராஜ்யத்தினுடைய நலனைத் தங்களுடைய மனதில் வைத்துக்கொண்டிருக்கும் சர்க்காராக இருந்திருப்பாரானால், முதல் ஐந்தாண்டு திட்டத்திலேயே கிருஷ்ணா, கோதாவரி திட்டத்தைப் பற்றி பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் அதற்கென நிதி ஒதுக்கி, மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் அதை நிறைவேற்றிக் காட்டியிருப்பார்கள். ஆனால் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற தவறிவிட்ட குறைபாட்டை நீக்கிக் கொள்வதற்காகவாவது அவர் திட்டவட்டமாக கிருஷ்ணா, கோதாவரித் தண்ணீரை நமது மாநிலத்திற்குக் கொண்டுவருகிற திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிச்சயமாக சேர்த்துக் கொள்வதற்குப் பாடுபடுவோம் என்ற விவாதத்திற்குப் பதில் அளிக்கும் இந்தத் தருணத்தில் எடுத்துச்சொல்ல வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அத்தகைய ஒரு கொள்கை விளக்கமாவது இந்த மன்றத்தில் அமைச்சரவர்களால் சொல்லப்பட வேண்டும்.

இதைப் போலவே கோமுக நதித் திட்டம், குடவனாறுத் திட்டங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாறு திட்டத்தைப் பற்றி அமைச்சரிடத்தில் பல தடவைகள் சொல்லியிருக்கிறார்கள். அவர் கூட அந்தப் பக்கத்தில் போய் அதைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். வேகவதி திட்டத்தைப் பற்றி பத்தாண்டு காலமாக சொல்லி வருகிறார்கள். அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. சென்ற வருஷத்தில் சொன்னேன், பெயரைக் கேட்டாலே நம்முடைய அமைச்சருக்கு இன்பம் காணக் கூடிய நந்தன் கால்வாய் திட்டத்தைப் பற்றி. இந்த நந்தன் கால்வாயைப் பார்த்துவிட்டு வாருங்கள் என்று சொன்னேன். பல

இடத்திற்குப் போகிறார், சில இடங்களைப் பார்க்கிறார், சில இடங்களை மறந்து விடுகிறார் என்று நான் குற்றம் சாட்ட வேண்டியிருக்கிறது.

உயர்திரு. பி. கண்ணன் : மறந்துவிடவில்லை. கவனிக்கிறோம்.

திரு. சி. என். அண்ணாதுரை : அதற்காகத்தான் சில இடங்களை அவர் பார்க்கிறார். சில இடங்களை கவனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார். கடைசியில் எல்லாவற்றையும் மறந்து விடுகிறார் என்று சொன்னேன். ஆகையால், எதையும் மறக்காமல் உடனடியாக இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவர்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதை நான் கழகத்தின் சார்பில் கட்சிச் சார்பிலே அல்ல, இந்த மாநில மக்களின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் குறிப்பில் 11-வது பாராவில் இந்த மாநில மக்கள் இந்தச் சர்க்காருக்கு நீர்ப்பாசனத் துறை விஷயத்தில் எவ்வளவு ஒத்துழைப்பு அளித்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் பாராட்டி இருக்கிறார்கள். மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் முறையில், அவர்களை வாழ வைக்கும் முறையில் வறண்டு கிடக்கும் பகுதிகளுக்கு வரம் அளிக்கும் முறையில் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிற காரியத்தில் கொஞ்சம் சுறுசுறுப்பாக எதிர்க் கட்சிக் காரர்கள் சொல்கிறார்கள் என்று கவலைப்படாமல், மத்திய சர்க்காரோடு வாதாடி, இந்தக் காரியங்களை நடத்தித் தீர வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகையால், மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் முறையில், அவர்களை வாழ வைக்கும் முறையில், வறண்டு கிடக்கும் இடங்களுக்கு வளம் அளிக்கும் முறையில் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற கொஞ்சம் சுறுசுறுப்போடு செயலாற்ற வேண்டுமென்றும், எதிர்க்கட்சிகள் இவைகளைக் குறிப்பிடுகிறார்களே என்று கவலைப் படாமல் மத்திய சர்க்காரிடம் வாதாடி இந்தத் திட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டுமென்றும் மதிப்பிற்குரிய அமைச்சரவர் களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நிதி ஒதுக்கீடு - தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம்

உரை : 29 நாள் : 23.03.1959

திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கட்சி பேதமில்லாமல் வரவேற்கக்கூடிய ஏதாவது ஒரு துறை நமது மாநிலத்தில் இருக்கிறது என்றால் அது இந்த பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காக ஈடுபட்டிருக்கும் இந்த துறை ஒன்றுதான் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். அதை இந்த நாடும் நிச்சயமாக வரவேற்கும் என்று நம்புகிறேன். எங்கள் தரப்பிலிருந்து இந்த துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியின் மீது வெட்டுத் தீர்மானம் கொடுக்கிறோம் என்றால், அது சம்பிரதாயத்திற்காக கொடுக்கப் பட்டிருக்கிறதே தவிர, மேலும் மேலும் அதிகமாக ஒதுக்கவேண்டு மென்று வலியுறுத்துவதற்காகவே எதிர் தரப்பிலிருந்து இந்த வெட்டுத் தீர்மானம் தருகிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதை விளக்க வேண்டிய தேவையில்லை. நமது நாட்டின் பழங்குடி மக்கள், இன்றைய தினம் காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற இந்த ஆட்சியின் கீழ் என்ன முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள், முன்னால் எல்லாம் எவ்விதம் பின்னிலையிலிருந்து வந்தார்கள், அதிலிருந்து இன்றைக்கு எவ்வளவு தூரத்திற்கு முன்னேறியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் பார்க்கின்ற நேரத்தில் குறைந்த வேகத்தில்தான் முன்னேற்றமடைந்து கொண்டிருப்பதாக நான் கருதுகிறேன். அந்த வகையில் நம்முடைய சர்க்கார் வெளியிட்டிருக்கின்ற அறிக்கையில் 1937-வது ஆண்டு வரையில் செய்யப்பட்டு வந்த திட்டங்கள் எல்லாம்- இந்தத் துறையில் செய்யப்பட்டு வந்த காரியங்கள் எல்லாம் - வெறும் பெயர் அளவுக்குத்தான் இருந்து வந்தன என்ற முறையில் குறிப்பிட்டிருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது. பழங்குடி மக்களை முன்னேற்றவேண்டும் என்கின்ற கருத்து 1919-லிருந்தே இந்திய துணை கண்டத்தில் நமது மாநிலத்தில் வேரூன்றி, அது மெள்ள மெள்ள வளர்ந்துகொண்டே

வந்தது. இன்றைக்கு நிதி நிலைமை அதிகமாக இருக்கின்றதன் காரணமாக பழங்குடி மக்கள் 10 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலையை முன்னேற்றுவதற்காக கொஞ்சம் அதிகமாக செலவு செய்கின்றோம் என்றாலும் கூட, முன்னால் செய்யப்பட்ட காரியங்கள் எல்லாம் - திட்டங்கள் எல்லாம் - 1937-வது ஆண்டு வரையில் வெறும் பெயரளவில்தான் இருந்து வந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருப்பது, இப்போது செய்யப்பட்டிருக்கின்ற காரியங்களை மற்றவர்கள் பார்க்கும்போது காணுகின்ற குறைகளை எடுத்துச் சொல்லுவதற்குத்தான் வழி செய்கின்றது. இவ்விதமிருந்தால் 1975-லோ அல்லது 1977-லோ இவ்விதம் யாராவது அறிக்கை வெளியிடுவதானால் 1959- வரையிலும் நடைபெற்று வந்த காரியங்கள் எல்லாம் வெறும் பெயரளவில்தான் இருந்தது என்று அந்த நேரத்தில் இருக்கின்ற ஆளும் கட்சியினர் கூற நேரிடும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இதைப்பற்றி அறிக்கை வெளியிடுகின்ற நேரத்தில் இந்த பழங்குடி மக்களின் பிரச்சினை ஒரு தேசீயப்பிரச்சினை என்ற வகையில் ஆளும் கட்சியினர் மனதார உணர்ந்து இப்பிரச்சினை, கட்சிகளுக்கெல்லாம் அப்பாற்ப்பட்ட பிரச்சினை என்பதை விளக்கி, ஒரு கட்சியினுடைய கீர்த்தியை மட்டும் தெரிவிக்கக்கூடிய முறையில் அறிக்கைகள் வெளியிடாமல் இருக்கவேண்டுமென்று நான் அரசாங்கத்தை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். தேச பிதா காந்தியாரைப் பற்றி ஒரு கட்சிக்கு மட்டும் தான் உரிமை கொண்டாடலாம் என்கின்ற நிலைமை இப்போது மாறிக்கொண்டே வருகிறது. தேச பிதா காந்தியாரின் கொள்கைக்கு எதிரிடையான கொள்கைகளையுள்ள கருத்துக்களை கொண்ட பலர் இன்று காங்கிரஸ் ஸ்தாபனத்தில் சேர்ந்திருக்கிறார்கள். அப்பேர்ப் பட்டவர்களை இருகைகொண்டு வரவேற்றுக்கொள்ளக்கூடிய நிலையில்தான் காங்கிரஸ் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் கட்சிகளுக்குள் இருக்கின்ற பூசல்களைப் பற்றி விளக்கவேண்டிய தேவையில்லை. உலகத்தில் இருக்கின்ற பாகுபாட்டை நாம் இந்த நேரத்தில் உணர்ந்துகொள்ள வேண்டும். அமெரிக்காவில் நீக்ரோக்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் எத்தனையோ தகராறுகள் இருந்த போதிலும், அமெரிக்க நாட்டின் முன்னேற்றத்தை அவர்கள் ஒரே கட்சிப்பிரச்சினையாகவும் - தேசீயப் பிரச்சினையாகவும் - கருதியிருப்பதைப்போல், நம்முடைய நாட்டின் பழங்குடி மக்களின் பிரச்சினை என்று வரும்பொழுது அதை கட்சிகளுக்கு அப்பாற்பட்டப்

பிரச்சினையாகவே கருதவேண்டும் என்பதில் காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, சோஷியலிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, யாருக்கும் இதில் அபிப்பிராய பேதம், கருத்து வேறுபாடு இல்லை. 1937-ல் இதற்காக ஒதுக்கப்பட்டதை விட இன்றைய தினம் 2 கோடி என்ற அளவில் அதிகமாக ஒதுக்கப் பட்டிருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கதாகும். அதே நேரத்தில் 1937-ல் வாங்கப்பட்ட வரி விகிதத்தில் எத்தனை சதமானம் இதற்கு செலவழிக்கப்பட்டு வந்தது என்பதை பார்த்துவிட்டு, இப்போது எந்த அளவுக்கு நாம் வரி வாங்குகிறோம், அதில் இந்த துறைக்கு எத்தனை சதமானம் செலவு செய்ய ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது குறைந்தது ஒரு சதமானமாவது இந்தத் துறைக்கு கொடுப்பார்களானால் அது கொஞ்சம் கஷ்டமாகவே இருக்கும். இதை ஆராய்ந்து பார்ப்பது தேவையில்லை, என்றாலும் பழங்குடி மக்களின் முன்னேற்றத்தில் ஆளும் கட்சிக்கு அக்கறை இருக்கிறது என்பதை நான் மனதார ஏற்றுக்கொள்கிறேன். அதே நேரத்தில், "நீங்களாக இருந்தால் இதைவிட என்ன செய்துவிடுவீர்கள்" என்று கேட்பது சரியாகாது. எதிர்கட்சி ஒரு தடவை ஆள ஆரம்பித்து இப்போதுள்ள ஆளும்கட்சி எதிர்கட்சியாக இருந்து, அதன் பின்னால் இன்னொரு தடவை இப்போதுள்ள ஆளும் கட்சியே ஆட்சிக்கு வந்து, எதிர்க்கட்சியைப் பார்த்து "நீங்கள் இருந்தபோது என்னசெய்தீர்கள்" என்று கேட்டால், அது கொஞ்சம் பொருத்தமாக இருக்கும். நல்லதற்கோ, கெட்டதற்கோ இன்றுள்ள ஆளும் கட்சியை கவிழ்த்தால், எதிர்கட்சி ஆட்சிக்கு வருவதற்குள்ள நிலை இன்று எதிர் கட்சிகளிடத்தில் இல்லை. ஆகவே எதிர்க்கட்சிக்காரர்கள் திட்டங்களில் இருக்கின்ற குற்றங் குறைகளை எடுத்துச் சொல்லுகின்ற வர்கள் என்றால், அந்த குற்றங்குறைகளை எல்லாம் போக்கி இப்போது இருப்பதை விட இன்னும் அதிகமாக வேலை செய்யவேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, அதைக்கேட்டு வருத்தப்படுவதில் ஒரு பிரயோசனமும் இல்லை. இங்கு சில கனம் அங்கத்தினர்கள் பேசியிருப்பதைப் பார்த்தால், இலை நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் சாதம்தான் நன்றாக இல்லை என்ற முறையிலும், சிலர் சாதம் நன்றாக வெந்துதான் இருக்கிறது, இலைதான் நன்றாக இல்லை என்ற முறையிலும் பேசினார்கள். ஆனால், நான் குறிப்பிட விரும்புவது

சாதத்தையும் நன்றாக வேகவையுங்கள், இலையையும் பதம் பார்த்து அறுத்து எடுத்துக்கொள்ளுங்கள். திட்டங்களை நல்ல விதத்தில் தீட்டிக் கொள்ளுங்கள், அதற்கேற்றவகையில் நிதியை ஒதுக்கிவைத்து, திட்டங்களை நிறைவேற்றி கொள்ளுங்கள் என்றுதான் - குறிப்பிட விரும்புகிறேன். மேலும் நான் குறிப்பிடுவேன், இதற்கு நிதி ஒதுக்குகின்ற காரியத்தில், எப்படி வறண்ட பிரதேசங்களுக்கு அணைகட்டை கட்டுவதற்காக 10 கோடி, 20 கோடி 40 கோடி என்று ஒதுக்க முடிகிறதோ - அதே முறையில் கணக்கை அதிகமாக பார்க்காமல் - எவ்விதம் பக்ராநங்களுக்கு அனேக கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறதோ, அதே முறையில் இதற்கும் ஒதுக்க வேண்டும். நம் நாட்டு பழங்குடி மக்களை முன்னேற்றி புதியதோர் சமுதாயத்தை உருவாக்க ஒரு புதிய திட்டம் நமக்குத் தேவை. இதில் எத்தனை கோடி செலவு செய்கிறோம் என்பதைப்பற்றி பார்க்க வேண்டிய தேவையில்லை. சென்ற ஆண்டில் 1½கோடி ஒதுக்கப் பட்டிருந்தது. இப்போது இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட் டிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு அவர்களது நிலை மேம்பாடு அடைந்துவிடும் என்றும் திருப்தி அடைய முடியாது. இன்றையதினம் மானியத்தில் நாம் இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் - அதே நேரத்தில் கல்வித்துறைக்காக ஒதுக்கப்படுகின்ற தொகையைப் போல, அதை விட அதிகமாக - ஒதுக்கினால்தான் இன்னும் ஒரு தலைமுறைக்குப் பின்னால் இந்த பழங்குடி மக்கள் ஓரளவுக்கு முன்னேற்றத்தைக் காண முடியும், அல்லது இன்றைக்குப் போய்க் கொண்டிருக்கின்ற நிலையிலேயே இன்னும் போய்க் கொண்டிருந்தால் இன்னும் ஒரு தலைமுறைக்குப் பின்னால் இங்கு வாழுகின்ற - கனம் ஏழுமலை அவர்களுடைய பேரப்பிள்ளை இந்தத் துறைக்காக சர்க்கார் ஆறு கோடி ஒதுக்கியிருக்கிறார்கள், "ஆனாலும் என்று ஆரம்பிக்கக்கூடிய நிலைதான் அப்போதும் இருந்து கொண்டிருக்கும். ஆகவே இந்த துறைக்கு கணிசமான அளவில் ஒரு தொகை ஒதுக்கவேண்டும். அவ்விதம் சொல்லும்போதும் இந்த அதிகமான தொகையை நாம் எவ்விதம் திரட்டுவது என்று கேட்கின்ற நேரத்தில் - அதற்கு இந்த தரப்பிலிருந்து - சில கருத்துக்களை தெரிவிக்க பிரியப்படுகிறேன். கட்டாய கல்வியை பரப்பவேண்டும் என்பதற்காக - கல்வி இலாகாவின் பெரும் தலைவர்களால் போடப்படும் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி வைப்பதற்காக பொது மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று கல்வி சீரமைப்பு மகாநாடுகள்

நடத்தி, அதன் மூலம் இரண்டு கோடி ரூபாய் பெறுமான சாமான்களை நன்கொடையாக அளித்தார்கள் என்று இங்கு சொல்லப்பட்டது. அதே விதத்தில் அரிஜன மக்களுடைய முன்னேற்றத்திற்கு அதிகமாக தேவைப்படும் பணத்தை - மற்ற கட்சிக்காரர்களுடைய ஒத்துழைப்பை பெற்று அரிஜன சீரமைப்பு மகாநாடு நடத்தி அதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு அல்லது மூன்று கோடி ரூபாய் வரையிலும் திரட்டலாம் என்ற நோக்கத்துடன் ஆளும் கட்சியினர் உள்ளன்போடு முயற்சி செய்வார்களானால், நிச்சயமாக இதில் வெற்றி பெற முடியும். கல்வித்துறைக்காக மானியங்களை ஒதுக்கப்படுகின்ற நேரத்தில் 10, 12 கோடி என்று ஒதுக்கப்படுகிறது. இது தவிர, மேசை, நாற்காலி, புத்தகங்கள் முதலியவை வாங்கிக் கொடுக்கப்படுகின்றன. மேலும், ஆசிரியர்களை வெளியே அனுப்பி கல்விக்கூடங்களை கட்டுவதற்கு பணம் திரட்டுவதுபோல், சேரிகளை சீர்திருத்தம் செய்வதற்கும், இந்த பழங்குடி மக்களை முன்னேற்றுவதற்கும், சர்க்கார் மற்ற கட்சிகளுடைய ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்று பொதுமக்களிடம் அணுகுவார்கள் என்றால், இதற்கு வேண்டிய பணத்தை திரட்டுவது என்பது முடியாத காரியம் அல்ல. இது பிச்சை காசு கேட்பது போல் இருக்கும் என்று யாரும் கருத தேவையில்லை. செய்த பாவத்திற்கு பரிகாரம் தேடுகிறார்கள் என்றுதான் அனைவரும் கருதுவார்கள். ஆகவே இந்த முறையை சர்க்கார் அனுசரிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்று, மெத்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்வேன், அரிஜன மக்கள் மற்ற மக்களோடு கலந்திருப்பதற்கு (இந்த அரசாங்கம்) நீங்கள் என்ன வசதியை செய்து வைத்திருக்கிறீர்கள் என்பதை எண்ணி எண்ணிப் பார்த்தேன். தேர்தல் காலங்களில் நடப்பதைப்பற்றி நான் கூற வேண்டியத் தேவையில்லை. சாதாரணமாக அரிஜன மக்கள் பிற இன மக்களோடு பழகி கொள்வதற்கு - என்னென்ன வழி வகைகளை என்னென்ன ஏற்பாடுகளை - செய்து வைத்திருக்கிறீர்கள், எந்தெந்த இடத்தில் மற்றவர்களோடு ஒன்று கலந்து உரையாடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறீர்கள், எந்தெந்த நேரத்தில் அரிஜன மக்கள் மற்ற மக்களோடு உரையாடுவதற்கு என்னென்ன வாய்ப்புகள் இருக்கின்றன? இவைகளுக்கு எல்லாம் வழிவகைகள் இருந்தால்தான் ஜாதி உணர்ச்சி மெள்ள போகும். இதன் மூலம் நிச்சயமாக ஜாதி உணர்ச்சி மறைந்து போகும். அரிஜன தின விழாக்கள் கொண்டாடுவதாக சர்க்கார் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நான் சென்ற ஆண்டும் சொன்னேன், இப்போதும் சொல்லுகின்றேன், நீங்கள் (அரசாங்கம்) நடத்துகின்ற இந்த விழாக்கள் எல்லாம் வெறும் கலெக்டர் தர்பாராகத்தான் இருக்கிறதே தவிர, பொதுமக்களுடைய மனதில் உணர்ச்சியை உண்டுபண்ணுவதாக இல்லை. அரிஜன தினம் என்று சொன்னால், அந்த அரிஜன தினத்திற்கு முன் தினம் இதற்கு அழைக்கப்பட்டிருக்கும் மந்திரி அவர்கள் நகரத்தில் வந்து தனியாக தங்காமல் சேரிகளில் வந்து அரிஜன மக்களோடு தங்கி இருக்க வேண்டும். அவர்களோடு ஒன்று சேர்ந்து கலந்து உரையாட வேண்டும். இந்த முறையில் இதை தேசியத் திருநாளாக கொண்டாட வேண்டும். நீங்கள் உழவு மாடுகளைப் பிடித்து, "எச். டபிள்யூ" என்று சூடிட்டு யாரிடத்தில் பிடித்துக் கொடுப்பது என்று ஆலோசித்து, அதைப் பிடித்துக் கொடுத்து விடுவதால் மட்டும் கலந்து உறவாடும் தன்மை ஏற்பட்டு விடாது. கலந்து உறவாடுவதற்கு ஏதாவது ஒரு தகுந்த திட்டத்தை அவர்கள் கண்டுபிடித்தாக வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, இங்கே கவனத்தில் ஹரிஜனங்களுக்கும், பிற்படுத்தப்பட்ட வகுப்பாருக்கும் - இருவருக்கும் ஒன்றுசேர - நிதியை ஒதுக்கி, ஸ்காலர்ஷிப் பிரித்துக் கொடுப்பதால், பல்வேறு மனத்தாங்கல் ஏற்படுவதை நான் கவனித்தேன். அதை மூடி மறைப்பதில் பயனில்லை. பிற்பட்ட மக்கள், தங்களுக்கு அதிகமான அளவு பெறுவதற்கு உரிமை இருக்கிறது என்று கருதவும், ஹரிஜன மக்கள், எங்கள் பெயரால் பணம் ஒதுக்கப்படுகிறதே தவிர, எங்களுக்கு போதுமான அளவு தரப்படவில்லை என்று குறை சொல்லுவதையும் நான் இன்றையதினம் பார்த்தேன். ஸ்வாமி சகஜாநந்தா போன்ற பொறுப்புள்ள உறுப்பினர்கள் பேசும்போது சொன்னார்கள், இந்தத் துறை -இந்த இலாகா - ஒருவர் இடத்தில் இருக்கிற காரணத்தினால் சரியான விகிதத்தில் ஹரிஜன மக்களுக்குப் பயன்படவில்லை என்று சொன்னார்கள். அதனுடைய நன்மை தீமைகளைப் பற்றி நான் இப்போது ஆராயவில்லை. ஆனால், இப்படிப்பட்ட அருவருப்பான எண்ணம் வளருவது மிகவும் ஆபத்தானது. இப்படிப்பட்ட அருவருப்பான எண்ணம் வளருவதைத் தடுக்க வேண்டுமானால், "பேத உணர்ச்சி கொள்ளாதீர்கள்" என்று உபதேசம் செய்துவிட்டால் மட்டும் பலன் ஏற்பட்டு விடாது. ஆகையினால், அமைச்சர் அவர்களுக்கு இந்த ஒரு சிறு யோசனையை சொல்லிக்கொள்கிறேன் - ஏன் இந்த இரண்டு இலாகாக்களையும் ஒன்று படுத்த வேண்டும் ? -

ஹரிஜன மக்களுக்கென்று ஒதுக்கப்படுகிற தொகையை நிர்வகிக்க ஒரு தனித் துறையும், பிற்பட்ட மக்களுக்கென்று ஒதுக்கப்படுகிற தொகையை நிர்வகிக்க மற்றொரு தனித் துறை என்று வைத்து விட்டால் நம்முடைய பணம் அங்கு போகிறது - எங்களுடைய பணம் உங்களுக்கு வருகிறது - என்ற பிரச்சினை எழாமல் இருக்கக்கூடும் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன். அதற்கு ஏற்ற விதத்தில் ஏதாவது செய்யக்கூடுமானால் அதைச் செய்யவேண்டுமென்று நான் எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

பொதுவாக, இன்றைய தினம் பழங்குடி மக்களுடைய நிலையை உயர்த்த வேண்டுமானால், அவர்களிலே பெரும்பான்மை யினர் இன்றைய தினம் எந்தத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக் கிறார்கள் என்பதைப் பார்த்தால்தான் அவர்களுடைய நிலையை உயர்த்த முடியுமா, முடியாதா என்பதைப் பற்றி திட்டவட்டமாக முடிவு ஏற்பட முடியும். ஹரிஜன மக்களில் நூற்றுக்கு தொண்ணூறு பேர்களுக்கு மேல் இன்றையதினம் உழவுத் தொழிலில் இருக்கிறார்கள். உழவுத் தொழிலில் இருக்கிறார்கள் என்று சொன்னால், நிலம் இல்லாமல், மற்றவர்களுடைய நிலத்தில் உழுது, பயிரிட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கென்று உழுவதற்கு நிலமும், உழுத நிலத்தில் அறுவடை செய்து அனுபவிப்பதற்கேற்ற வகையில் அவர்களுடைய தொழில்வளம் பெருகுமானால், அவர்களை மற்ற - மற்றவர்கள் அடியோடு புறக்கணிக்க மாட்டார்கள். மற்றொன்று, சில குறிப்பிட்ட கேவலமான தொழில்களை அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் செய்யவேண்டுமென்ற சட்டமில்லாது போனாலும், சம்பிரதாயம் இருக்கிறது. கேவலமான தொழில்கள் என்று நான் சொல்லும்போது, குப்பை கூட்டுகிற தொழிலையும், மல ஜலங்களை அப்புறப்படுத்துகிற தொழிலையும் நான் குறிப்பிடுகிறேன் - இன்னமும் ஒரு குறிப்பிட்ட வகுப்பார் மட்டும் இந்த தொழில்களை நடத்துவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர்களை அப்படிப்பட்ட கேவலமானது என்று கருதப்படுகிற தொழிலிலே வைத்து விட்டு - உழவுத் தொழிலில் வைத்திருந்தாலும், கூலி நிர்ணயம்கூட செய்யாமல் - மினிமம் வேஜஸ் பார் அக்ரிகல்சரிஸ்ட்ஸ் கூடச் செய்யாமல் - அவர்களுக்கென்று குடியிருப்பு மனைகளைக் கொடுக்காமல் - உழுகின்ற நிலத்தை அவர்களுக்குக் கொடுக்காமல் - அவர்களில் யாராவது தப்பித் தவறி எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டால் உபகாரச் சம்பளம் கொடுக்கிறோம்

என்று சொல்வது, மாட்டுக்கு முதுகின் மேல் இருக்கிற புண்ணுக்கு மருந்து போடாமல், கொம்புக்கு குப்பி மாட்டுவதற்குச் சமானமாக ஆகும். ஹரிஜன மக்களை அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தில் உயர்த்த வேண்டுமானால், இதுவரையில் உழுது பயிரிட்டுக் கொண்டிருக்கிற மக்களுக்கு நிலங்களை அவர்களுக்கு கிடைக்கச் செய்கிற நல்ல திட்டங்களை அமைச்சரவை உடனடியாக கவனிக்க வேண்டும். அதை வேறு பல திட்டங்களோடு இன்றைய தினம் பிணைக்கிறார்கள். அதைக் கொண்டு வந்து லாண்ட் ஸீலிங்கோடு பிணைக்கலாமா? - லாண்ட் ஸீலிங்கைக் கொண்டு கோவாபரேடிவ் பார்மோடு பிணைக்கலாமா? - கோவாபரேடிவ் பார்மை ஸர்விஸ் கோவாபரேடிவோடு பிணைக்கலாமா? - என்று ஒன்றுக்கொன்று பிணையல் போடுவதில் இருக்கிறார்களே தவிர, எந்த இடத்தில் துவக்குவது என்பதில் கால தாமதம் ஆகிறது. உடனடியாக ஹரிஜன மக்களுக்கு பல அங்கத்தினர்கள் சொன்னதைப் போல குடியிருப்பு மனை, உழுவதற்கு நிலம் - உழுவதற்கு நிலம் தர முடியவில்லை, ஒரு இடத்தில் கூலிக்கு வேலை செய்கிறார்கள் என்றால், கூலி நிர்ணயம் - கேவலமான தொழில் என்று கருதப்படுகிற தொழிலில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றால், கேவலத் தன்மை என்று உள்ளத்தில் இருக்கிற சுமை நீங்குகிற அளவுக்கு - வேண்டிய வழிவகைகளை இன்றையதினம் செய்யவேண்டும். இவைகளை உடனடியாகக் கையாளுவார்களேயானால் இன்றையதினம் அவர்களை வைத்திருக்கிற நிலைமை மாறி, அவர்கள் நாட்டுக்கு எவ்வளவு முதுகெலும்பு போன்றவர்கள் என்பதை உணர முடியும்.

அதோடு நான் ஒன்று பெருமையாகச் சொல்லிக் கொள்வேன் - வாய்ப்பு அளிக்கப்பட்ட இடங்களிலெல்லாம் இவர்களுடைய திறமையை - இவர்களுடைய ஆற்றலை -இவர்களுடைய அறிவை - மற்ற மற்ற சமூகத்தார்களெல்லாம் பார்த்து, ''எங்களைவிட இவர்கள் எந்த விதத்திலும் பின் தங்கியவர்கள் இல்லை'' என்று சொல்லத்தக்க அளவுக்கு தங்களுடைய திறமையை வெளியாக்கியிருக்கிறார்கள். இந்த அளவுக்கு எல்லா விதத்திலும் பலப் பரீட்சை, அக்கிப் பரீட்சை இவைகளுக்கு உட்பட்டிருந்தும் கூட நம்முடைய அங்கத்தினர்கள் பேசும்போது காங்கிரஸ் அங்கத்தினர்கள் பேசியதைக் கேட்டு நாங்களெல்லாம் மெத்த வருத்தப்பட வேண்டியதாக இருந்தது. இதைக் எடுத்துக்கொண்டு நான் அமைச்சர் அவர்களை கேலி செய்வேன் என்று கருதுவாரானால், இன்றையதினம் கேலி செய்வதற்கு

பதிலாக ஒருவருக்கொருவர் உள்ளத்திலே இருக்கிற அழுக்கைத் துடைத்துக் கொள்வதற்கு இந்த நாளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகையினால் இதை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருத வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அமைச்சர் அவர்கள் காஞ்சீபுரத்தில் ஹரிஜன மாணவர்களுக்கென்று ஒரு உணவு விடுதி திறக்கப்போவதாகச் சொன்னார்கள். அவர்கள் அதை "காமாக்ஷி" பெயரால் வைத்திருக்கிறேன் என்று சொன்னார்கள். "காமாக்ஷி" பெயரால் வைத்திருக்கிறேன் என்று சொன்னால், எனக்கு உணவு விடுதி பிடிக்கும், "காமாக்ஷி" என்றால் பிடிக்காது என்று சொன்னார்களோ என்னவோ, அவர்களுக்கு நான் சொல்வேன், பெயர் எப்படி இருந்தாலும் உணவு விடுதி என்றால் யாரும் வரவேற்க வேண்டியதுதான். அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன், காஞ்சீபுரத்தில் சுவையானஉணவு கிடைக்கிற இடமாக "காமாக்ஷி ஹோட்டல்" என்று ஒன்று இருக்கிறது. ஆகையினால் அந்தப் பெயரை வைப்பதில் அதைப்பற்றி எனக்கு குறையில்லை.

ஆரம்பிக்க இருக்கிற உணவு விடுதியை மெத்த வரவேற்று, இந்த அளவுக்காவது காஞ்சீபுரம் விஷயத்தில் கனம் கக்கன் அவர்களின் கண்ணோட்டமானது நீண்ட காலத்திற்குப் பிறகு கொஞ்சம் பாய்ந்ததற்கு அவருக்கு நன்றி கூறி உரையை முடித்துக் கொள்கிறேன்.

கேரள அமைச்சரவை கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்தியமைக்கான கண்டனத் தீர்மானம்

உரை : 30 **நாள் : 31.08.1959**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே, மாநில மக்களுடைய உரிமையைப் பெற்ற ஒரு சர்க்கார் எந்தக் கட்சியால் நடத்தப்பட்டாலும், மக்களுடைய நம்பிக்கையை அது பெற்றிருக்கிற வரையில் அதைப் பதவியில் அமர்த்த வேண்டும் என்ற நல்ல அரசியல் சம்பிரதாயத்தைப் பாழாக்குகிற முறையிலே நடந்து கொண்ட மத்திய சர்க்காருடைய போக்கைப்பற்றி இங்கே விவாதிப்பது அரசியல் சட்டத்தின்படி சரியல்ல என்பதை நிதியமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி "வெளியேற வேண்டுமென்ற ஆசையிருந்தால் வெளியேறலாம்" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். உள்ளே இருப்பதற்கு ஆசையுள்ளவர்கள் உள்ளே இருந்து கொண்டிருக்கலாம். ஆனால் பிரச்சினைகள் வருகிற நேரத்தில் வெளியேறி தங்களுடைய கண்டனத்தைத் தெரிவிப்பது என்பது சில தடவைகளிலே வெளியேறிய அனுபவத்தைப் பெற்றிருக்கிற அமைச்சர் அவர்கள் உணருவார்கள் என்று கருதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இங்கே இந்தப் பிரச்சினையை விவாதிப்பதற்கு மறுக்கின்ற போக்கை கண்டிக்கின்ற தன்மையில் நானும் என்னுடைய கட்சியினரும் வெளியேறுகின்றோம்.

(அண்ணாவும் அவர் கட்சியினரும் வெளிநடப்பு செய்தனர் - திரு. கே. சட்டநாதக் கரையாளரும் அவர் கட்சியினரும் (பொது உடமைக்கட்சி) வெளிநடப்பு செய்தனர்.)

பேருந்து நாட்டுடைமை தீர்மானம்

உரை : 31 **நாள் : 03.09.1959**

திரு. சி. என். அண்ணாதுரை : அவைத் தலைவர் அவர்களே, கனம் அண்ணாமலை அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சமதர்ம திட்டத்தை தங்களுடைய திட்டமாக ஏற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்லக் கூடிய ஒரு கட்சியின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த நாட்களில், பஸ்களை தேசீயமாக்கவேண்டு மென்ற ஒரு தீர்மானம், ஆளும் கட்சியினர்களாலே இவ்வளவு பலமாக எதிர்க்கப்படுவது, உண்மையில் விந்தை மட்டும் அல்ல, ஓரளவு வேதனை தரக்கூடியதாகவும் இருக்கிறது.

பஸ்களை தேசீயமாக்கவேண்டுமென்ற தீர்மானத்தை எதிர்த்து கனம் அங்கத்தினர்கள் இன்னும் இன்ன இன்ன தொழில்கள் தேசீய மாக்கப்படவேண்டுமே என்று எடுத்துச் சொல்வது பஸ்களை தேசீயமாக்கும் தீர்மானத்தை எதிர்த்துப் பேசுவதற்கு ஆதாரம் ஆகாது. ஓர் இடத்தில் இருக்கிற தொழிலை தேசீயமாக்க வேண்டுமென்று ஒரு தரப்பில் இருந்து சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில் இன்னும் தேசீயமாக்குவதற்கு வேறு எத்தனையோ துறைகள் உள்ளனவே என்று சொல்லுவது இவ்வளவையும் சேர்த்துக் கொள், என்று சொல்வது போல் ஆகிறதே தவிர எதிர்ப்பதற்கு அதனை வாதமாகக் கொள்வது பொருத்தமற்றதாக ஆகும். பஸ்களை இன்றையதினம் தேசீயமாக்க வேண்டும் என்பதற்கு தீர்மானத்தைக் கொடுத்து ஆதரித்தவர்கள் என்ன என்ன காரணங்களைக் காட்டியிருக்கிறார்களோ - அந்த வாதங்களுக்கு இதுவரையில் அதை எதிர்த்துப் பேசியவர்கள் - யாரும் தகுந்த சமாதானத்தை எடுத்துச் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக கனம் அமைச்சர் அவர்கள் கல்லூரி பேராசிரியரைப் போல சோஷலிஸம் 19-வது நூற்றாண்டில் எப்படி இருந்தது, 18-வது நூற்றாண்டில் எப்படி இருந்தது, 20-வது நூற்றாண்டில் எப்படி

இருக்கிறது என்கிற வியாக்கியானத்தை எடுத்துச் சொல்லி, இன்ன ஏட்டிலே எழுதியிருப்பதைப் படித்துப் பாருங்கள் என்பதாகச் சொன்னார்கள். ஏடுகளிலே வந்திருக்கக்கூடிய விஷயத்தை அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற அவசியம் இல்லை. அந்த ஏடுகளுக்கு மறுப்பு ஏடுகளும் இல்லையென்று கனம் அமைச்சர் அவர்கள் கருதிவிடக் கூடாது. சமதர்மம் என்பது எல்லாவற்றையும் தேசீயமாக்க வேண்டும் என்ற கொள்கைதான் என்று கருதிவிடக் கூடாது என்றும், இந்த நூற்றாண்டிலே அந்தக் கொள்கை வேறுவிதமாக மாறியிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டுகிற நேரத்தில், ஜனநாயக முறையில் சமதர்மக் கொள்கையைக் கொண்டுவர வேண்டுமானால் சில உடைமைகளைத் தனி உடைமை யாக்கவேண்டும், சில உடைமைகளை சர்க்கார் உடமையாக்க வேண்டும். இப்படி இரண்டையும் சேர்த்து வைத்துக் கொண்டால் தான் முடியும் என்கிற வாதத்தை அவர்கள் எடுத்துப் பேசுகின்றபோது நம்மவர்கள் கடவுளை அர்த்தநாரீஸ்வரராக ஒரு பாதி உருவம் ஆணாகவும், ஒரு பாதி உருவம் பெண்ணாகவும் - ஆணுக்கும் பயன்படாமல் பெண்ணுக்கும் பயன்படாமல் வைத்துக் கொண்டிருப்பது போல் - அந்தவிதத்தில் சமதர்மக் கொள்கையைப் பார்க்கிறபோது - இந்த அர்த்தநாரீஸ்வர சமதர்மக் கொள்கையைப் பார்த்து ஆச்சரியப்படுவது மட்டும் அல்ல, கொஞ்சம் வருத்தப் படுகிறேன். வேண்டுமானால் ஆளும் கட்சியினர் நாங்கள் மயில் கழுத்தை எங்களுக்கு உதாரணம் கொடுத்துக் கொள்ளுகிறோம். எந்தப் பக்கம் அசைத்தாலும் எல்லா வர்ணமும் தென்படும் என்று சொல்வார்களேயானால் அது இந்த நேரத்தில் பேச்சு சாமர்த்தியத்தை எடுத்துக் காட்டவேண்டுமானால் பயன்படுமே தவிர பிரச்னைத் தீர்க்க உதவியதாகாது.

உண்மையிலேயே பஸ் தொழிலை ஏன் தேசீயமாக்கக்கூடாது என்பதற்குச் சரியான வாதம் எதையும் இந்தச் சபையில் அதை எதிர்த்தவர்கள் எடுத்துக் காட்டவில்லை. தேசீயமாக்க வேண்டு மானால் அதற்குப் போதிய பணம் இல்லை என்று அமைச்சர் அவர்களோ, ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களோ யாரும் எடுத்துக் காட்டவில்லை. அவர்கள் எடுத்துச் சொன்னது எல்லாம் எங்களுக்கு யாரைக் கண்டும் பயப்படவேண்டியதில்லை. இது எல்லாம் எங்களுக்குத் தெரிந்ததுதான். நீங்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு யார் என்பது போல ஜனநாயகம் என்ற பெயரால்

பெருவாரியான ஆட்களை - உறுப்பினர்களை வைத்துக் கொண்டிருப்பதனால் ஏற்பட்டிருக்கிற தைரியத்தினாலே அத்தகைய வாதத்தை இங்கே எடுத்துச் சொல்லலாமே தவிர அதில் புத்திசாலித் தனமோ, சாமர்த்தியமோ இல்லை. மேலும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பஸ் முதலாளிகளைக் கண்டு நாங்கள் பயப்படவில்லை என்று சொன்னார்கள். "நீங்கள் ஏன் பயப்படவேண்டும்? உங்கள் பக்கத்தில் பஸ் முதலாளிகளை வைத்துக்கொண்டு, பஸ் தொழிலை தேசீயமாக்குவது சமதர்மமாகாது" என்று பேசுகிற வரையில் பயப்பட வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். பஸ்களை எல்லாம் தேசீயமாக்குவது என்கிற ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டு உடனடியாக தேசீய மாக்குவதற்கும் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள ஆரம்பித்த பிறகு "நாங்கள் பஸ் முதலாளிகளைக் கண்டு பயப்படவில்லை" என்று சொன்னார் களானால் அதிலே பொருள் இருக்கும், வீரம்இருக்கும், விவேகம் இருக்கும். அதைவிட்டு பஸ் முதலாளிகளை தங்கள் பக்கத்திலே வைத்துக் கொண்டு பயப்படவில்லை என்று சொல்வதானது, புலியை வைத்துக்கொண்டு வேடிக்கை காட்டுகிற வித்தைக்காரன் நான் பயப்படமாட்டேன். என்னுடைய கையில் துப்பாக்கி இருக்கிற தென்று பேசுவதற்கு சமானமாகத்தான் ஆகும். இன்றையதினம் பஸ் முதலாளிகள் புதிய பணக்கார பரம்பரையாக வளர்ந்து வருகிறார்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. திரு. கரிய கவுடர் வேண்டு மானால் அவர்களிலும் உதாரண புருஷர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லலாம். அவர்களுடைய உபசாரத்தைப் பெற்ற கரிய கவுடர் அவர்களுக்கு நன்றாக அது தெரிந்திருக்கலாம். அதே நேரத்தில் அவர்கள் மிகுதியான பணத்தைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. வாதத்திற்குச் சொல்வது என்றால் நிலத்திற்கும் இன்றையதினம் எதற்காக உச்ச வரம்பு கட்ட வேண்டும், உச்ச வரம்பு கட்டுவது என்பதே தேவையில்லை. நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டாது மிட்டாதார்களும், மிராசுதார்களும் இருக்கும் படியாக நாம் ஆதரித்துக் கொண்டிருந்த காரணத்தினால்தான் மாடமாளிகை கூட கோபுரத்தைக் கட்டுகிறார்கள், திருக்குளத்தை வெட்டுகிறார்கள், பள்ளிக் கூடத்தையும், சத்திரத்தையும் கட்டுகிறார்கள் என்று சொல்லக்கூடும். ஆனால் ஒரிடத்தில் பணம் குவிந்து பல்லாயிரக் கணக்கான பேர்கள் தரித்திரர்களாக வாழ்வது என்பது கூடாது. இரண்டொரு தர்மவான்கள் வருவது என்பதற்காக

அந்த நிலைதான் இருக்கவேண்டும் என்று அதையே சமதர்மம் என்று யாரும் பேசமாட்டார்கள். பஸ் முதலாளிகளிடத்திலும் அத்தகைய குணம் படைத்தவர்கள் இருக்கிறார்கள் என்பதை அநுபவத்தின் காரணமாக எடுத்துச் சொல்வது பிரச்சினைக்கு பதில் அளித்ததாக ஆகாது. பஸ் முதலாளிகளிடத்திலே தர்மவான்கள் என்று யாரும் இல்லை. ஆகையால் அவர்களிடத்தில் இருந்து அந்தத் தொழிலை எடுத்து விடவேண்டுமென்று இந்தத் தரப்பிலிருந்து யாரும் வாதிடவும் இல்லை. ஆகவே பஸ் முதலாளிகளிடத்திலே நல்ல காரியங்களைச் செய்கிற குணம் படைத்தவர்கள் இருக்கிறார்கள். ஆகையால் அந்தத் தொழிலை அவர்களிடத்திலிருந்து எடுத்துவிடக் கூடாது என்பதற்காக இந்தத் தீர்மானத்தை எதிர்ப்பதாகச் சொல்வது அர்த்தம் இல்லாதது. அதுமட்டுமல்ல.

பஸ் முதலாளிகளிடத்தில் பணம் குவிகிறது, பணம் குவிகிறது என்று பேசுகிறார்களே, அந்தப் பணம் எங்கே போகிறது, இந்த நாட்டில் இருந்து சீனாவுக்குப் போகவில்லை, கிழக்கு ஜெர்மனிக்குப் போகவில்லை, மேற்கு ஜெர்மனிக்குப் போகவில்லை, இந்த நாட்டிலேயேதான் இருக்கிறது. அதனால் இந்த நாட்டின் செல்வம்தானே அதிகரிக்கிறது என்று கனம் அங்கத்தினர்கள் தங்களுக்குத் தெரிந்த பொருளாதார தத்துவத்தை எடுத்துச் சொன்னார்கள். இதே வாதத்தை பிடிபட்ட கள்ளனும்கூட கோர்ட்டில் சொல்லக்கூடும். ''நான் இந்தப் பணத்தை ஆஸ்ட்ரேலியாவுக்கு அனுப்பவில்லை, அமெரிக்காவுக்கு அனுப்பவில்லை, இந்த நாட்டிலேதான் இது இருக்கப் போகிறது'' என்று. அதைக் கேட்டு கோர்ட்டு சிரிக்கும். அல்லது கொஞ்சம் பொறுப்புள்ள நீதிபதியாக இருந்தால் கோர்ட்டை அவன் அவமதித்த குற்றமாகக்கூட எடுத்துக் கொள்வார்கள். ஆனால் எண்ணிக்கை பலத்தை வைத்துக் கொண்டிருக்கிறோம் என்ற காரணத்தினாலே 'எந்த வாதத்தை சொன்னால் என்ன, எதிர்ப்பதற்கு? என்கிற எண்ணத்தில் ஆளும் கட்சியினர் 'அந்தப் பணம் எந்த நாட்டுக்கும் போகவில்லையே, அவர்களிடத்தில் இருந்தால் என்ன' என்று கேட்டிருக்கக் கூடும். மனிதனைக் கடித்து ரத்தத்தை உறிஞ்சுகிற கொசுக்கூட, அந்த ரத்தம் எங்கே போகிறது, என் உடலில் இருந்தால் என்ன, இந்த உடலில் இருந்தால் என்ன என்று சொன்னால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் கொசுக்கூட அப்படிப்பட்ட அர்த்தமற்ற வாதத்தைச் செய்யாது. ஆனால் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் எண்ணிக்கைப்

பலத்தை கொண்டு அப்படிப்பட்ட வாதத்தை எடுத்து சொல்கிறார்கள்.

நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற சமதர்மம் 19-ம் நூற்றாண்டில் இருந்தது அல்ல, 18-ம் நூற்றாண்டில் இருந்தது அல்ல. 20-ம் நூற்றாண்டில் அவை மாறி விட்டது. வேண்டுமானால் பொதுவுடமை ஆட்சிக்குள் எல்லாவற்றையும் தேசீய மாக்கலாமே தவிர, ஜனநாயகத்தை வைத்துக் கொண்டு செய்ய முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஜனநாயகத்தை வைத்துக் கொண்டுதான் இங்கிலாந்து நாட்டில் நிலக்கரிச் சுரங்கத்தை பொதுவுடமையாக்கினார்கள். ஆனால் அப்போது தொழில் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆட்சியில் இருந்தார்கள். அதை எதிர்த்தவர்கள் கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லக் கூடும். ஆனாலும் ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற நாட்டிலேயே அத்தகைய காரியத்தை எடுத்துக் கொள்வதற்குள்ள செல்வாக்கையும் பெற்று, தைரியத்தையும் பெற்று பொதுத் தொழில்களை தேசீயமாக்கினால் இது ஜனநாயகத்திற்கு விரோதம் ஆகாது. ஆனால் இன்றைக்கு ஆளும் கட்சியில் இருப்பவர்கள் பஸ் தொழிலை தேசீயமாக்குவது ஜனநாயகத்திற்கு விரோதம் என்று சொல்லும்போது வேண்டுமானால் இன்னொரு பொருள் தெரிகிறது. இந்த வகையில் ஜனநாயகம் என்றால் தேர்தல், தேர்தல் என்றால் பணச் செலவு, பணச்செலவுக்கு யாராவது பணம் தரவேண்டும், அதற்கு யாரிடமாவது பணம் குவிய வேண்டும். யாரிடமாவது பணம் குவியவேண்டும் என்கிறபோது இன்றையதினம் பஸ் முதலாளிகளிடத்தில் பணம் குவிகிறது, அவர்களும் தேர்தல் காலத்தில் எங்களுக்குப் பணம் உதவி செய்கிறார்கள், ஆகையால் எங்கள் ஜனநாயகம் வெற்றி பெறவேண்டுமானால் பஸ்களை தேசீயமாக்கக்கூடாது என்று வாதிடுவதாகத் தெரிகிறதே தவிர இப்படிச் செய்வது ஜனநாயகத்திற்கும், சமதர்மத்திற்கும் பொருந்தாது என்று எடுத்துச் சொல்வது நான் படித்த எந்த அரசியல் தத்துவ புத்தகத்திலும் இல்லை. அப்படியே இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஏன் அவசியம் இல்லையென்றால் அதே நாடுகளில் உள்ள வேறு பொருளாதார நிபுணர்கள் அதற்கு மாறுபட்ட கருத்துக்களை வேறு புத்தகங்களிலே எழுதியிருக்கக் கூடும். அசோகமேத்தா எழுதியிருக்கிற புத்தகத்தைப் படித்துப் பார்க்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள்

திரு. சின்னதுரைக்குச் சொன்னார்கள். அசோக் மேத்தா சொல்லியிருந்தாலும், முசானே சொல்லியிருந்தாலும், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் சொல்லியிருந்தாலும் யார் சொல்லியிருந்தாலும் நம் உள்ளத்திற்கு எது சரி என்று படுகிறதோ அதைத்தான் எடுத்துக் கொள்ளவேண்டுமே அல்லாது பளபளவென்ற வழு வழுப்பான புஸ்தகத்தை எடுத்துக் காட்டி அதைப் பாருங்கள் என்று இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்கள் சொல்வது பொருத்தமுடையதாக இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இன்றையதினம் சமதர்ம திட்டத்தை இந்தத் துறையிலே புகுத்துவதற்கு போதுமான பணம் இல்லை என்று வாதாடி இருந்தால், பணம் இருக்கிற வகைகளை எடுத்துச் சொல்லலாம். அதற்கு தேவையான திறமையில்லை என்று சொல்வார்களேயானால் - உண்மையில் அப்படிச் சொல்ல மாட்டார்கள். ஏனென்றால் கனம் அமைச்சர் ஸ்ரீ வெங்கட்டராமன் அவர்கள் தனிப்பட்ட பஸ் முதலாளிகளிடத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களின் கஷ்டத்தைவிட சென்னை சர்க்கார் ஏற்று நடத்தும் பஸ் தொழிலாளர்களின் கஷ்டம் குறைவாக இருக்கிறது. அந்த அளவிற்கு நிர்வாகத்தில் திறமை இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்டத் திறமை ஏன் மாவட்டங்களில் மட்டும் வராது என்று கருதுகிறீர்கள்? பஸ் தொழிலை தேசீய உடைமையாக்கி நடத்திச் செல்வதற்கு நல்ல திறமை படைத்தவர்கள் நிர்வாகத்தரப்பில் கிடைக்கவில்லை என்றால், ஸ்ரீ கரிய கவுண்டர் அவர்கள் உதாரண புருஷர் என்று சொன்ன கனம் மகாலிங்கம் அவர்களையும் அழைத்து "நீங்கள் பஸ் தொழிலை சர்க்கார் சார்பில் எடுத்து நடத்துங்கள். தனிப்பட்ட முறையில் நடத்தும்பொழுது எவ்வளவு லாபம் கிடைத்ததோ அதற்கு இம்மியளவும் குறையாமல் நடத்தவேண்டும். ஆயிரம் ரூபாய் குறைந்தால் கூட மூன்று மாதம் கடுந்தண்டனை விதிக்கப்படும்" என்று சொல்லலாம். அவர் திறமை படைத்தவர் உதாரண புருஷர் என்று ஸ்ரீ கரிய கவுண்டர் அவர்கள் கூறினார்கள். எனக்கு வேண்டிய நண்பர் ஒருவர் காதர் ஷெரிப் இருக்கிறார். அவரிடத்தில் ஒரு துறையை பிரித்துக் கொடுத்து பஸ்களை எடுத்து நடத்தச் சொன்னாலும் நடத்துவார்கள். இதை ஆங்கிலத்தில் "கமிஷனிங்" என்று சொல்வார்கள். எப்படி தொழிலை தேசீயமயம் ஆக்குகிறோமே அப்படி அவர்களுடைய திறமையையும் தேசீயமயம் ஆக்குவோம் என்பதை கனம் ஸ்ரீ கந்தசாமி முதலியார் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். என்னிடம் திறமை இருப்பதாக

அவர்கள் ஏற்றுக்கொண்டதற்கு நன்றி செலுத்துகிறேன். அதை சர்க்கார் எப்பொழுது கேட்டாலும் நான் ஒப்படைக்கத் தயாராய் இருக்கிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ''சீலிங் ஆன் இன்கம்'' வருமானத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்பதற்கு கட்டுப் பட்டிருக்கிறார்கள் என்பதை கனம் கந்தசாமி முதலியார் மறந்து விட்டுப் பேசினார் என்று நினைக்கிறேன். காங்கிரஸ் கட்சி நாட்டை ஆளுகின்ற பெரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் வருமானத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி அதற்குப் பிறகு அதை சட்டமாக்கினால் அது என்னையும் பாதிக்கும் சமுதாயத்திலுள்ள அனைவரையும் பாதிக்கும். வருமானம் வராதவர்கள் அதைக் கொண்டு சந்தோஷப்படும்படி செய்யலாம். என்னைத் தனிப்பட்ட முறையில் பார்த்து "உங்கள் வருமானத்திற்கு உச்ச வரம்பு கட்டுவீர்களா" என்று கேட்பது தங்கள் கட்சி அதற்கு கட்டுப்பட்டு இருக்கிறது என்பதை கனம் ஸ்ரீ கந்தசாமி அவர்கள் மறந்துவிட்டுப் பேசுவதாக எனக்குத் தோன்றுகிறது.

திரு. எம். ஆர். கந்தசாமி முதலியார் : On a point of personal explanation, Sir, நான் இவர்களை மாத்திரம் குறிப்பிட்டுச் சொல்ல வில்லை, நான் பொதுப்படையாக கதை எழுதக்கூடியவர்களுடைய திறமையைப் பற்றிச் சொன்னேன். எல்லோரையும் சேர்த்துத்தான் மொத்தமாகச் சொன்னேன். பொருளாதாரத் துறையில் பணம் இல்லாத காரணத்தினால் பெரிய தொழிலை எடுத்து நடத்தினால் பணம் போதாது. இதற்கு நஷ்டயீடு கொடுக்க முடியாது என்றுதான் சொல்லியிருக்கிறோம் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : என்னைத் தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை. பொதுவாக சினிமா கதை எழுதுபவர்களின் வருமானத்திற்கு உச்சவரம்பு கட்டவேண்டுமென்று சொன்னார்கள். இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த ஸ்ரீ அண்ணாமலை அவர்கள் கதை எழுதுபவர் அல்ல. இந்த தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய என். கே. பழனிசாமி அவர்களும் கதை எழுதுபவர் அல்ல. அதை எதிர்த்துப் பேசியவர்களும் கதை எழுதுபவர்கள் அல்ல. அனைவருக்கும் சேர்த்து வருமானத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்று சட்டம் வருமேயானால் அனைவரும் அதற்குக் கட்டுப்பட வேண்டும். இதற்காகத் தனியாக ஒரு மசோதா

கொண்டுவர வேண்டுமென்று கனம் கந்தசாமி முதலியார் அவர்கள் கேட்பது பொருத்த மற்றது.

பணம் இல்லாததினால்தான் நாங்கள் தேசீய உடைமை ஆக்குவதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னார்கள். துரதிர்ஷ்டவசமாக அவர்கள் அமைச்சராக இல்லாத காரணத்தினால், அமைச்சர் சொன்ன வாதத்திற்கும் கனம் அங்கத்தினர் சொன்ன வாதத்திற்கும் உள்ள ஏறு மாறுதல்களை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் பணம் இல்லை என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் பணம் இல்லாத காரணங்களை மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் சம்பந்தமாக ஒரு கமிட்டியைப் போட்டிருக் கிறோம். அதில் எதிர்க்கட்சிக்காரர்களையும் கேட்டுப் போட்டிருக் கிறோம். இந்தத் திட்டம் முக்கியமானது என்று கருதினால் அவர்கள் அங்கே வந்து வாதாடினால் கவனிக்கலாம் என்று சொன்னார்கள். பணம் இல்லை என்று சொல்லவில்லை. பணத்திற்குப் பொறுப்பு - கனம் கந்தசாமி முதலியார் அவர்கள் தன்னைப்பற்றி எப்படி எண்ணிக் கொண்டாலும் அமைச்சர் அவர்களுக்கு அந்தப் பொறுப்பு அதிகமாக இருக்கிறதென்பதை உணர்வார்கள் என்று நான் நினைக்கிறேன். பணம் இல்லை, ஆகையினால் தேசீயமயம் ஆக்கவில்லை என்ற வாதத்தை வேண்டுமானால் வாதத்திறமைக்காக எடுத்துச் சொல்ல லாமே தவிர பணம் எப்படி இல்லாமல் போய்விடும்? கனம் என். கே. பழனிசாமி அவர்கள் இதற்குப் பணம் தரவேண்டிய அவசியம் இல்லை, பாண்டுகளாகத் தரலாம். இன்ஸ்டால் மெண்டாக எடுத்துக் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். ஜமீன்களைக் கைப்பற்றிக் கொண்ட நேரத்தில் அதற்கு வேண்டிய பணத்தை ஒரு பக்கத்தில் சேர்த்து வைத்துக்கொண்டு, பிறகு கைப்பற்றிக் கொள்ளவில்லை. ஜமீன்கள் சர்க்கார் உடைமை ஆக்கப்படும் என்று சொல்லிவிட்டு படிப்படியாகத்தான் பணத்தைக் கொடுத்ததுபோல், பஸ் முதலாளி களுக்கும் எடுத்துச் சொல்லி உங்களுக்கு எவ்வளவு பணம் சேர வேண்டுமோ அதை இன்னென்ன வகையிலே, இந்தந்த அளவிலே செலுத்துகிறோம் என்று சொன்னால், தேச பக்தி மிகுந்த பல முதலாளிகள் காங்கிரஸ் கட்சியில் இன்றையதினம் சேர்ந்து தீவிரமான காங்கிரஸ்காரர்களாக ஆகியிருக்கிற பஸ் முதலாளிகள் அதற்கு குறை சொல்வார்கள் என்று நான் கருதவில்லை.

பல பேர்கள் பேசுகின்ற நேரத்தில் தேசத்தின் திட்டங்கள் தீட்டப்பட்ட நேரத்தில் தாங்கள் உடனிருந்து திட்டங்களைத் தீட்டினது போல் "நாங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம்" என்று எடுத்துச் சொன்னார்கள். நான் அறிந்த வகையில் காங்கிரஸ் கட்சியில் இன்றையதினம் வந்திருப்போர்கள் பலபேர்கள் இப்படிப்பட்ட திட்டங்கள் தீட்டுவதற்கு முன்னால் அவர்கள் எப்படி யிருந்தார்கள் என்பதை மறந்து விட்டுப் பேசுகிறார்கள்.

கனம் நிதி அமைச்சர் அவர்கள் எங்களுக்கு எப்படி சமதர்மத்தில் ஆசைவந்தது என்று கேட்டார்கள். எங்களுடைய திராவிட முன்னேற்ற கழகத்தின் சட்டதிட்ட அடிப்படையை அவர்கள் படித்துப் பார்ப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் அப்படிப் படித்துப் பார்க்காததினால்தான் அப்படிச் சொன்னார்கள். நாங்கள் தொகுத்திருக்கிற சட்டதிட்டத்தில் திராவிட சமதர்ம குடியரசு, குடியாட்சி என்று போட்டிருக்கிறோம். எங்கள் கழகத்தின் திட்டத்தில் சமதர்மத்தை வைத்துக் கொண்டிருப்பதனால்தான் இங்கேயும் அதை வலியுறுத்துகிறோம். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சமதர்மத்தைப்பற்றி வாதாடுகின்ற நேரத்தில் எங்களுடைய சமதர்மம் வேண்டுமானால் சமயதர்மம் அதாவது எந்தெந்த சமயத்தில் எந்தெந்த தர்மம் வைத்துக்கொள்ளவேண்டுமோ அந்தந்த சமயத்தில் அந்தந்த தர்மத்தை வைத்துக்கொள்ள வேண்டு மென்று சொன்னார்கள். சமயத்திற்குத் தகுந்தபடி தர்மம் வைத்துக் கொள்வது முறையும் இல்லை. தர்மமும் ஆகாது. உண்மையிலேயே இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியவர்கள் இதுபற்றி சர்க்கார் திட்டவட்டமாக தெள்ளத்தெளிவாக ஒரு கொள்கையை கைக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். தொழில்களை தேசீயமயம் ஆக்குவதற்கு நாங்கள் ஒருபட்டவர்கள்தானா, படிப் படியாக கொண்டுபோவோம் என்று சொல்லுகிறார்களா அல்லது அடியோடு இதை வேண்டாம் என்று சொல்லுகிறார்களா என்று இந்தத் தரப்பிலே பேசியவர்கள் எல்லாம் சுட்டிக்காட்டிக் கேட்டார்கள். ஆகவே நாம் இங்கு தீர்மானிக்கவேண்டிய முக்கியமான பிரச்னை தேசீயமயமாக்குவதற்கு ஏற்றத் தொழில்தானா பஸ் தொழில் என்பதுதான். அப்படிப்பட்ட லாபகரமான தொழில்தான் பஸ் தொழில் என்பதை இன்றையதினம் பஸ் முதலாளியாக வந்திருப்பவர்களைப் பார்த்து நன்றாகத் தெரிந்துக் கொள்ளலாம். என்னைப் பார்த்து சினிமாத் தொழில் லாபகரமான தொழில் என்று

புரிந்து கொண்டிருக்கிற அங்கத்தினர்கள் பஸ் முதலாளிகளைப் பார்த்து அது எவ்வளவு லாபகரமான தொழில் என்பதை புரிந்து கொள்ள முடியும். அக்கரைக்கு இக்கரை பச்சை என்பதுபோல் அங்கிருந்து பார்த்தால் இது வளமாக இருக்கிறது. இங்கிருந்து பார்த்தால் அது வளமாக இருக்கிறது என்று தெரிகிறதோ இல்லையோ புரியவில்லை. நான் அறிந்தவரையில் 10, 20 ஆண்டுகளுக்குள் பஸ் முதலாளிகள் என்ற ஒரு புதிய முதலாளி வர்க்கம் தமிழகத்தில் உண்டாகியிருக்கிறது. எந்தத் தொழிலிலும் சரக்கை கடனுக்குக் கொடுத்து பிறகு பணத்தை வசூல் செய்யும் தொழிலாக இருக்கிறது. ஆனால் பஸ் தொழிலில் ஏறுவதற்கு முன்னால் பணம் கொடுத்து டிக்கட் வாங்கினால்தான் பஸ் ஓடும். நாள் தவறாமல் ரொக்கமாக பணத்தை கட்டிவைக்கின்ற தொழில் பஸ் தொழிலைத் தவிர வேறொன்றுமில்லை. கனம் அங்கத்தினர்கள் பல தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இது தெரியும். கடன் கொடுத்துத்தான் அந்தத் தொழில்களை நடத்திக் கொண்டு போகிறார்கள். பஸ் தொழில் ஒன்றில்தான் நிச்சயமாக அன்றாடம் இருப்பு கட்ட முடியும். ஆனால் அவர்கள் வாங்குகின்ற சரக்கு அத்தனையும் கடனில்தான் வாங்குகிறார்கள். டயர் வாங்கினால் மாதத்திற்கு ஒரு தடவை பணம் கொடுத்தால் போதும். பெட்ரோல் போட்டுக் கொண்டால் ஆறுமாதத்திற்கு ஒரு தடவை பணம் கொடுக்கலாம். வேண்டுமானால் பஸ்கள் கூட கடனில் வாங்கலாம்.

திரு. டி. கரிய கவுண்டர் : ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். பஸ் தொழிலில் முன்னதாக டிக்கட்டுக்குப் பணம் கொடுத்தால்தான் பஸ் ஏற முடியும் என்று சொன்னார்கள். கதை எழுதுகிறவர்கள் ஒரு வருஷம் இரண்டு வருஷங்களுக்கு முன்னாலேயே அட்வான்ஸ் கேட்கிறார்கள். இது பற்றி விளக்கம் கூறவேண்டுமென்று அங்கத்தினர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. சபாநாயகர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

திரு. சி. என். அண்ணாதுரை : சில விளக்கங்களை திரு. கரிய கவுண்டர் அவர்கள் கேட்கிறார்கள். அவர்கள் கதை எழுதிக் கொடுக்கின்ற சமயத்தில் பின்னால் அதைப்பற்றி விளக்குகிறேன். ஆகவே இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் வாங்கக்கூடிய சாமான்களுக்கு எல்லாம் கொடுக்க வேண்டிய தொகையை தவணைகளாக கொடுக்க முடியும். இதிலிருந்து வரக்கூடிய பணம்

எல்லாம் அன்றாடம் குவிந்து கொண்டிருக்கிறது. பஸ் தொழிலை ஏற்று நடத்துகின்ற முதலாளிகளைப் பார்த்தால், ஒரு ஊரை எடுத்துக் கொண்டால், அங்கு இருக்கின்ற சினிமா கொட்டகையை அந்த முதலாளிதான் வாங்கியிருப்பார். அங்கு இருக்கின்ற ரைஸ் மில்லை அவர்தான் வாங்கியிருப்பார், இவைகளெல்லாம் அவருக்குத்தான் சொந்தமாக இருக்கும், இதுதவிர அங்கு போடப்படுகின்ற புதிய கட்டிடத் திட்டங்கள் எல்லாம் அவருக்குத்தான் சொந்தமாக இருக்கும். இந்தத் நிலையில் குறிப்பிடத்தக்க அளவுக்குப் புதிய பஸ் முதலாளிகள் பணக்காரர்களாகிக்கொண்டு வருகிறார்கள். அதுமட்டு மல்ல, புதிய பணக்காரர்களாக வருகிறவர்கள் எல்லாம் பஸ் முதலாளிகளாகத்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் புதிய முதலாளிகள் வளர்ந்து கொண்டே வருகிறார்கள். நம்முடைய திட்டங்களை தீட்டியவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், இதனுடைய நோக்கம் செல்வத்தை விருத்தி செல்வது மட்டுமல்ல, வருமானத்திலுள்ள பேதா பேதத்தை கூடுமான வரைக்கும் சமமாக்கு வதும் திட்டத்தினுடைய நோக்கம் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள். அதன்படி நடப்பதுதான் நமது லட்சியம் என்றும் சொல்லுகிறார்கள். இன்றைக்கு தனிப்பட்ட நபர்களை எடுத்துக் கொண்டால் அனேகமாக புதிய பணக்காரர்கள் பரம்பரையாகவே தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும், இத்தகைய பொருளாதார பேதம் மாறவேண்டும் என்பதுதான் திட்டத்தில் லட்சியம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைக்கொண்டுவர வேண்டுமென்றால் தேசீயமயமாக்குவதுதான் சரியாக வழியாக இருக்கும். இங்கு தேசீயமயமாக்கினால் என்னென்ன பயன் கிடைக்கும் என்பதை யெல்லாம் காட்டித்தான் சென்னை நகரத்திலுள்ள பஸ் போக்குவரத்தை தேசீயமயமாக்கினார்கள். இப்போது திறமையானவர்கள் இல்லை என்று சொல்லக்கூடிய காரணத்தை சென்னை நகரத்திலுள்ள பஸ் போக்குவரத்தை எடுத்துக் கொண்ட நேரத்தில் எடுத்துச் சொல்லவில்லை. நஷ்ட ஈடு கொடுப்பதற்கு பணம் இல்லை என்று இப்போது சொல்லும் காரணத்தை அப்போது எடுத்துச் சொல்ல வில்லை. இங்கு முன்னால் குறிப்பிட்ட காரணங்களை எல்லாம் பார்த்தால் நீங்கள் அர்த்தநாரீசு வரர்களாக இருக்கிறீர்கள், பெண்ணாகவும் பண்ணலாம், ஆணாகவும் பண்ணலாம் என்ற முறையில் இருந்து கொண்டிருக்கிறீர்கள், ஆண்டவனுக்குத்தான் இந்த உருவம் மகத்துவமே தவிர மானிட

ஜன்மங்களுக்கு பொருந்தாது என்பதை கூற விரும்புகிறேன். நமக்கு போதிய அளவு திறமை இருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் போக்குவரத்தை தேசீயமயமாக்கவேண்டும் என்று சொல்வதற்கும் பயப்படுகிறீர்கள். அமெரிக்காவை போல் முதலாளிகளைக்கொண்ட செல்வ நாடாக விளங்க முடியும் என்று சொல்வதற்கு நெஞ்சுரம் இருக்கவேண்டும், அல்லது, சமதர்ம திட்டத்தின்கீழ் சரியான வழியில் நடத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கவேண்டும். இதில் நம்பிக்கை இருக்குமானால் பொது மக்களின் மேல் அன்பு கொண்டு அவர்களுக்கு வேண்டிய காரியங்களில் ஈடுபட துணிவு இருக்கவேண்டும். இவ்விதம் இரண்டுமில்லாமல் ஊசலாடிக் கொண்டு "மிக்ஸட் எக்கானமி" என்று சொல்லுவதைப்போல் கலப்புத் திட்டமாக உங்கள் திட்டம் இருக்கின்ற காரணத்தினால்தான் உங்களால் எந்த நிர்வாகத்தையும் திறமையாக ஏற்று நடத்த முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. நீங்களாக சென்னை போன்ற நகரங்களில் பஸ் போக்குவரத்தை எடுத்துக்கொள்ளும்போது என்ன வெல்லாமோ காரணங்களை காட்டி எடுத்துவிடுகிறீர்கள். ஆனால் இன்னொரு இடத்திலுள்ளவைகளை தேசீயமயமாக்கவேண்டும் என்று கூறுகின்ற நேரத்தில் படிப்படியாக எடுத்துக்கொள்ளலாம் என்று கூறுகின்றீர்கள். இதற்கு காரணமாக மக்களின் தேவைகளாக இருக்கக்கூடிய உருக்குத் தொழிலை நிறுவுவதற்கு பணம் வேண்டாமா? இரும்புத்தொழிலை நிறுவுவதற்கு பணம் வேண்டாமா என்று கூறப்படுகிறது. இவ்விதம் கூறப்படுகின்ற காரணங்களைப் பார்த்தால் ஏதோ இந்நாட்டில் 1,008 உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்தியிருப்பது போலவும், ஐம்பது அறுபது இரும்புத் தொழிற் சாலைகளை ஏற்படுத்திவிட்டு இனிமேல் கூடுதலாக ஏற்படுத்துவதற்கு பணம் இல்லாமல் திண்டாடுவது போலவும் எடுத்துச்சொன்னார்கள். உருக்குத் தொழிற்சாலைகளும் இரும்புத் தொழிற்சாலைகளும் ஏற்படுவது இந்த நாட்டிலா நடைபெறுகிறது? அவைகள் ஏற்படுத்து கின்ற இடங்களின் திக்கை சொன்னாலே உங்களுக்கு கோபம் வருகிறது. ஆகவே நான் அந்த திக்கின் பெயரைக்கூட சொல்லவில்லை. அந்த விதமாக அடிக்கடி இங்கு சொல்வதின் பயனாகத்தான் இங்கும் குறைந்த அளவிலாவது ஏற்படுத்துவதற்கு இங்குள்ள அமைச்சர்கள் அங்கு போய் தவம் செய்கிறார்கள் என்பதை நாம் அடிக்கடி பத்திரிகையில் பார்க்கிறோம். ஆகவே பணம் இல்லாத காரணத் தினால்தான் தேசீயமயமாக்க முடியவில்லை என்று சொல்லுகின்ற

வாதம் வெறும் அர்த்தமற்ற வாதம். இவையெல்லாம் 18-ம் நூற்றாண்டிலும், 19-ம் நூற்றாண்டிலும் கூறக்கூடிய வாதம். இதை இப்போது ஏற்றுக் கொள்ள முடியாது. வெறும் பிணத்தை நீதிமன்றத்தின் முன்னால் கொண்டு நிறுத்தி இது உயிருள்ள உடம்பு, இதற்கு இப்போது உயிரில்லாவிட்டாலும், உயிர் இருந்தால் இன்னின்ன விதமாக சாட்சிக்கூறியிருக்கும் என்று சொல்வது எப்படியிருக்குமோ அதைப்போலத்தான் இருக்கிறது இப்போது சர்க்காரிலிருந்து கூறக்கூடிய காரணங்கள். ஆகவே இதிலிருக்கின்ற அடிப்படை தத்துவங்களை நாம் கவனித்து அதற்கு தகுந்தபடி நாம் கட்டுப்பட வேண்டும். புதிய பரம்பரை பணக்காரர்களை ஏற்படுத்தாமல் நாம் பார்த்துக்கொள்ளவேண்டும். அதே முறையில் தான் பொருளாதார பேதம் படிப்படியாகக் குறைய வேண்டும். அதே நேரத்தில் சர்க்காருக்கு அதிக வருவாய் தேடவேண்டும். இதற்காக பஸ் போக்குவரத்தை தேசீயமயமாக்கவேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் சினிமாத் தொழிலை ஏன் தேசீயமயமாக்கக்கூடாது என்று சிலர் எடுத்துக் கூறினார்கள். இப்போது அல்ல சென்ற ஆண்டிலேயே நான் எடுத்துக் கூறியிருக்கிறேன், உங்களுக்கு தைரியமிருந்தால் சினிமாத் துறையை ஏற்றெடுத்து நடத்துங்கள், அதற்கு முதல் கட்டமாக சினிமா கொட்டகைகளை தேசீயமயமாக்கி வருமானத்தை பெருக்கிக் கொள்ளுங்கள் என்று நான் முன்பே எடுத்துச்சொல்லி யிருக்கிறேன். ஆகவே இம்மாதிரிப்பட்ட இரண்டொரு காரணங்களை எடுத்துக் கூறினால் இவர்கள் தலை குனிந்து விடுவார்கள் என்று ஆளும்கட்சி யிலுள்ளவர்கள் கருதுவார்களானால் இதை கழிந்த 20,25 வருடங்களாக கேட்டுக்கேட்டு நிமிர்ந்த நெஞ்சத்தோடு இருக்கும் எங்களை இவ்விதம் அடிப்படி குத்திக் காட்டினால் இவர்கள் குன்றிப்போய் விடுவார்கள் என்று நினைப்பார்களானால் அது தப்பாகத்தான் முடியும் என்பதை ஆளும் கட்சியிலுள்ள உறுப்பினர் களுக்கு ஞாபக மூட்டவிரும்புகிறேன். நீங்கள் சொல்லுகின்ற முறையிலேயே சினிமாத் தொழிலை தேசீயமயமாக்குவதாக இருந்தால் அதற்கும் நாங்கள் தயாராகத்தான் இருப்போம். பஸ் தொழிலில் மகாலிங்கம் போன்றவர்கள் திறமைசாலிகளாக இருக்கின்ற காரணத்தால், பஸ் போக்குவரத்தை தேசீயமாக்கினால் அதை திறம்பட நிர்வகிப்பதற்கு இவர்களை உபயோகித்துக் கொள்ளலாம் என்று கூறினது போல, சினிமாத் தொழில் தேசீயமயமாக்கப்பட்டால், அதில் ஒத்துழைக்க நாங்கள் எப்போதும்

தயாராக இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நான் சென்ற ஆண்டு இதே மன்றத்தில் இந்தக் கருத்தைப்பற்றி குறிப்பிட்ட நேரத்தில் சினிமாத் தொழிலை சர்க்கார் ஏற்றெடுத்து நடத்துவதாக இருந்தால் அதற்கு கதை எழுதிக் கொடுக்க நான் தயாராய் இருக்கிறேன் என்று சொன்ன நேரத்தில் இங்கிருந்த முதலமைச்சர் அவர்கள் கதை எழுதினால் மட்டும் போதாது நடிக்கவும் வேண்டும் என்று சொன்ன நேரத்தில் ''ஆகட்டும்'' என்றும் சொன்னேன். ஆகவே தேசீயமாய மாக்குகின்ற வேலையிலிருந்து நாங்கள் தப்பித்துக்கொண்டு போய் விடுவோம் என்று யாரும் கருத தேவையில்லை. அதற்குப்பதிலாக அவசியமற்ற காரணங்களை எல்லாம் கூறிக்கொண்டிருப்பதைப் பார்த்தால், சிறு குழந்தைகளுக்கு சோறு ஊட்டுவதற்காக ''வானத்தைப் பார்த்து அங்கே ஐந்துகண்ணன் இருக்கிறான், ஆறு கண்ணன் இருக்கிறான்'' என்று சொல்லுகின்ற மிரட்டலைப்போல்தான் இருக்கிறது. இம்மாதிப்பட்ட மிரட்டல் களை காட்டுவதினால் எந்தவிதமான பலனும் இருக்காது என்பதை காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு மிகவும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, ஒரு வருடத்திற்கு முன்பாகவே சினிமாத் துறையில் கதை எழுதுபவர்களுக்கு அட்வான்ஸாக பணம் கொடுத்து விடுவார்கள் என்று திரு. கரிய கவுண்டர் அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஒரு சமயம் என் விஷயத்தில், 'என்னிடத்தில் அதிகமான அளவில் பணம் இருக்கும் என்ற நினைப்பில் அவர் மரியாதை காட்டுவார் என்று நம்புகிறேன். உண்மையில் அப்படியல்ல. கதை எழுதி, அது சினிமா படமாக்கப் பட்டு, அது வெளியிட்டு இரண்டு மூன்று வருடங்களுக்கு வெற்றி கரமாக ஓடினால், அதைப்பார்த்து விட்டுத்தான் பணம் தருவார்கள். ஆகவே கனம் கரிய கவுண்டர் அவர்கள் ஏதாவது கதை எழுதி வைத்திருந்தார்களானால் இவ்விதம் கொடுத்து விட்டு கடனாளியாக அலைந்துதிரிய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்விதம் ஒருவருக்கொருவர் விண்ணாகரம் பேசுவதை விட்டுவிட்டு செய்கையில் காரியங்களை நடத்த முடியுமா என்பதைப்பற்றி பரிசீலிப்பதில் தங்கள் கவனத்தை செலுத்தவேண்டும். பஸ் போக்கு வரத்தைப் பொறுத்த வரையில் தேசீய உடமையாக்குவதற்கு வேண்டிய பணம் இல்லை என்ற காரணம் அவ்வளவு சரியான காரணம் அல்ல, அதே போல்தான் திறமையானவர்கள் இல்லை

என்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் திறமையாக சென்னை பஸ் போக்குவரத்தை ஏற்று நடத்தி நல்ல லாபத்தையும் அடைந்திருக்கிறோம் என்று சர்க்கார் தரப்பில் எடுத்து விளக்கினார்கள். ஆகவே இதிலிருக்கின்ற அனுபவம் சர்க்காருக்கு துணை செய்கின்றது. ஆனால் தேசிய உடமையாக்குவதை லட்சியமாக வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். ஆனால் செய்கையில் காண்பிப்பதை மட்டும் பின்னால் வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னால் லட்சியத்தை நாம் அடைய முடியாது. ஒரு சில பஸ் முதலாளிகள் காங்கிரஸ் கட்சியில் இருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டி பேசுகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உண்மைதான். அவர்களிடத்தில் பணம் இருக்கின்ற காரணத்தால்தான் இன்றைக்கு அவர்கள் காங்கிரஸ் கட்சியின் மூலமாக தங்களுக்கு பாதுகாப்பு தேடிக்கொள்கிறார்கள். வேறு கட்சிகளிலும் அறவே இல்லை என்று நான் சொல்ல முன் வரவில்லை. எந்த பஸ் முதலாளியாக இருந்தாலும் அவர்களிடமுள்ள பணம் எல்லாம் போய் விட்டால் அவர்கள் எந்தக் கட்சியும் தேடாது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். அவர்களை உங்களிடத்திலிருந்து மட்டும் பிரித்துவிடவேண்டும் என்பது அல்ல, அவர்களை இந்த நாட்டுக்கு உபயோகமான ஆட்களாக ஆக்கவேண்டும், அவர்களை சாதாரண மக்களாக மாற்றவேண்டும் என்கின்ற எண்ணம் எல்லோருக்கும் வரவேண்டும். அவர்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சியை விட்டுவிட்டு வந்து விட்டால் காங்கிரஸ் கட்சி அப்படியே அழிந்து போகும் என்ற நப்பாசையால் நாங்கள் இவ்விதம் பேசுகிறோம் என்று யாரும் தப்புக் கணக்குப்போட வேண்டிய தேவையில்லை. தேசியமயமாக்குவது என்றால் சர்க்காருடைய வருவாயை பெருக்கி மக்களுடைய வரிப்பளுவை குறைக்கவேண்டும் என்ற கருத்தில்தான் சொல்லுகிறோமே தவிர வேறு ஒன்றும் இல்லை. காங்கிரஸ் உறுப்பினர்களில் சிலர் சொன்னார்கள், தேசியமயமாக்கவேண்டும் என்கின்ற இந்த நல்லெண்ணம் இவர்களுக்கு இப்போது எங்கிருந்து வந்தது என்று கேட்டார்கள். இதைக்கேட்கும் காங்கிரஸ்காரர்களுக்கு, நல்லெண்ணமே உருவாய் கொண்டிருக்கும் காங்கிரஸ்காரர்களுக்கு, நல்லெண்ணத்திலே வளர்ந்து கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்களுக்கு இதை ஆதரிப்பதில் ஏன் தயக்கம் காட்டுகிறார்கள் என்பதைதான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. கருப்பாய் இருக்கிறவனைப்பார்த்து சிவப்பாய் இருக்கிறாய்

என்று சொல்லும்போது, செந்தாமரை போன்று இருக்கும் ஹாஜா ஷெரீப் போன்றவர்களை பார்த்து சிவப்பாய் இருக்கிறீர்கள் என்று சொல்லுவதற்கு ஏன் கூச்சப்பட வேண்டும்? இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் சமதர்ம லட்சியத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் இவர்களுக்கு தேசியமயமாக்குவது ஒத்துக்கொள்ளவில்லையென்றால் அதற்குக்காரணம் இவர்கள் பஸ் முதலாளிகளுக்கு பயந்து இருப்பது தான் என்பதை நான் ஆயிரம் தடவை வேண்டுமானாலும் சொல்லுவேன். அதற்கு நான் வெட்கப்படவும் மாட்டேன். பயப்படவில்லை என்று சொன்னால் இதை நிறைவேற்றி விட்டு, அதன் பின்னால் சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளலாம். இதே மன்றத்தில் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஸீட்டுக்கு தகுந்தவாறு வரியை கூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்ட போது அப்போது நடந்த அல்லோல கல்லோலத்தை நான் உடனிருந்து பார்க்கவில்லை யென்றாலும் எட்டியிருந்து பார்த்து கொண்டிருந்தேன். ஆகவே பஸ் முதலாளிகளுக்கு பயப்படவில்லை என்று சொல்லி தப்பித்துக் கொள்வதில் பயனில்லை. இந்த காங்கிரஸ் கட்சி பதவியில் இருப்பது வரை நமக்கு என்ன பயன் என்ற நினைப்பில்தான் அவர்களும் இருந்து வருகிறார்கள். காரணம் அவர்களிடமிருந்து ஏராளமாக தேர்தலுக்கு பணம் கிடைக்கிறது காங்கிரஸ் கட்சிக்கு. அவர்களும் வேண்டிய அளவு பணம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை யாரும் ஒத்துக்கொள்ளாமல் இருப்பதற்கில்லை.

முதல் அமைச்சர் அவர்கள் முன்பு ஒரு திங்கள் எங்கள் ஊருக்கு வந்தார்கள். அப்பொழுது எங்கள் ஊரில் எல்லாம் அலங்காரம் செய்து இருந்தார்கள். இரண்டு வளைவுகள் கூட போட்டிருந்தார்கள். இவைகளைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன். அந்த இரண்டு வளைவுகளும் இரண்டு பெரிய பஸ் முதலாளிகளால் போடப் பட்டிருந்தன. அந்த வளைவுகளிலேயே 'இந்த பஸ் சர்வீஸ்' என்று எழுதப்பட்டிருந்தது.

இப்பொழுது எங்கள் ஊரில் ஒரு காந்தி சிலை வைக்கப் போகிறார்கள். அது யாரால் நன்கொடை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் இரண்டு பெரிய பஸ் முதலாளிகள்தான் நன்கொடை கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய பெயரையும் அதன் கீழே எழுதப்போகிறார்கள். இப்படிக் கிடைக்கின்ற பணம் உங்களுக்கு குறைந்து விடும் என்ற பயத்தினால்தான் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்

கொள்ள மறுக்கிறீர்கள் என்று நான் தீர்மானமாகச் சொல்லுவேன். அப்படி பணம் வாங்குகிறீர்களே என்று கேட்டால் கோர்ட்டின் ஆதாரம் எடுத்துக் காட்டுகிறார்கள். ஒரு சிமிண்ட் கம்பெனியிலிருந்து 50,000 ரூபாய் இந்தக் கட்சிக்கு தரப்பட்டிருக்கிறது என்று பத்திரிகையில் படித்த செய்தியை கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். கோர்ட்டில் அது நியாயமானது, குற்றம் சொல்வதற்கு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஒரு பெரிய தொழிலை சமதர்மம் என்ற பெயரில் விரல் விட்டு எண்ணக்கூடிய பத்து பேர்களுக்குக் கொடுத்துவிட்டு, அவர்களை தேர்தலில் பயன்படுத்திக் கொண்டு தங்கள் கட்சிக்கு மெஜாரிட்டி கொண்டு வந்த பிறகு மற்ற இடங்களில் சம தர்மம் - சமய தர்மம் என்று பேசுகிறார்கள். சமதர்ம அக்கறை உள்ளவர்கள், அதற்கு ஏற்ற முறையில் தீர்மானத்திற்கு ஆதரவு கொடுப்பார்களானால் தொழிலை தேசீய மயமாக்குவதைப் பற்றி எந்த குறைபாடும் வந்துவிடாது. தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அடுத்த மாதமே தனிப்பட்டவர்களிடம் இருக்கின்ற பஸ்கள் உடனேயே சர்க்காருக்கு வந்து விடும் என்று அர்த்தம் இல்லை. சர்க்கார் போடுகின்ற தீர்மானத்தின் வேகத்தைப்பற்றி ஏற்கனவே போடப்பட்ட தீர்மானங்களைப் பார்த்து நாம் தெரிந்து கொண்டு இருக்கிறோம். இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டால், லட்சியத்தை ஏற்றுக்கொண்டு இருக்கிறோம், லட்சியத்திற்கு கட்டுப் பட்டிருக்கிறோம் என்று அறிவிக்கின்ற ஒரு உன்னத செயலாகக் கருதப்படும். அமைச்சர் அவர்கள் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாம் என்று சொன்னார்கள். நான் காங்கிரஸ் உறுப்பினர்கள் எல்லோரையும் கேட்டுக் கொள்வது என்ன வென்றால் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதன் மூலம் "நாங்கள் பஸ் முதலாளிகளுக்கு பயப்பட்டவர்கள் அல்ல, சம தர்மத்தை ஏற்றுக் கொள்கிறோம்" என்று அவர்கள் எடுத்துச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பை தக்க விதத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தவறினால் இந்தத் தீர்மானத்தை எந்த நோக்கத்தோடு கொண்டு வந்தோமோ அது இப்பொழுது நிறைவேறி இருக்கிறது. ஊரில் சென்று "பஸ் தொழிலை தேசீய மயமாக்கவேண்டும் என்று சொன்னோம், அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை" என்று சொல்வதற்கு போதுமான வாய்ப்பு கிடைத்து விட்டது. அதனால் எங்களுக்கு கிடைக்க வேண்டிய லாபத்தை நாங்கள் பெற்று விட்டோம். நீங்கள் லாபம் பெற வேண்டுமானால் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு 1961-ல்

இத்தகை பஸ், 1962-ல் இத்தனை என்று படிப்படியாகத் தேசிய மயமாக்கப்போகிறோம் என்று சொல்லுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பை கொடுத்த கனம் அண்ணாமலை அவர்களுக்கு நான் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். ஊக்கம் உள்ளவர்களாக இருந்தால் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வார்கள். வெறும் அரசியல் வீராவேசத்திற்கு வேண்டுமானால் நீங்கள் இந்தத் தீர்மானத்தை நிராகரிக்கலாம். ஆனால் இந்த இரண்டையும் இந்த மன்றத்தில் இருப்பவர்களை விட பெரும்பாலான பொது மக்கள் கூர்ந்து கவனிக்கிறார்கள் என்பதை கவனப்படுத்தி கனம் அண்ணாமலையின் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

ஆளுநர் உரை மீதான விவாதம்

உரை : 32 **நாள் : 10.12.1959**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் இந்த சபையில் ஆற்றிய உரையின் மூலம் இந்த மாநிலத்திலுள்ள மக்களுக்குத் தெரிவித்தக் கருத்துக்களைப் பற்றி இரண்டு நாட்களாக நடைபெற்ற கருத்துரை வழங்குகையில் நான் இன்றைய தினம் கலந்துகொள்ளுகிறேன். நான் கலந்து கொள்வதையே ஒரு நிகழ்ச்சியாக ஏன் குறிப்பிட வேண்டியதாக இருக்கிறது என்றால் நேற்று, அதற்கு 'முன் தினம்' அப்பொழுது இல்லாமல் இன்றைய தினம் பேசுவதைப்பற்றி, இன்றைய தினம் பேசிய இரண்டு கனம் அங்கத்தினர்கள் இது சரிதானா என்ற முறையில் அவர்களுடைய ஐயப்பாட்டை எழுப்பினார்கள். அதுவும் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கூட ஜாடையாக அதைப்பற்றி எடுத்துச் சொன்னவுடன் ''கவர்னர் அவர்கள்'' உரை ஆற்றிய நேரத்தில் வராமல் இருந்தவர்கள், ஒன்று கடைசி வரையில் வராமலிருந்திருக்க வேண்டும் அல்லது முழுவதும் வந்திருக்கவேண்டும் என்று அவர்கள் சொன்னார். அதிலும் எனது நண்பரும், திருப்பூர் தொகுதி உறுப்பினருமான கனம் பழநிசாமி கௌண்டர் அவர்கள், கவர்னர் உரையைப் பற்றி மட்டுமல்ல, அன்று மாலையில் நடந்த விருந்தைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். அதில் எல்லாம் கலந்து கொள்வது நாங்கள் மேற்கொண்டிருக்கிற கொள்கைக்கு உகந்தது அல்ல என்ற முறையில், நாங்கள் இந்த தடவையில் மட்டுமல்ல இதற்கு முன்பெல்லாமே கலந்து கொள்ளாமலிருந்திருக்கிறோம். நண்பர் அவர்கள் சொல்வதும் ஒரு முக்கியமான கருத்துதான். கவர்னர் பெருமான் இங்கே வருகிறார், உரை ஆற்றுகிறார், அப்பொழுது வராமல் உரை ஆற்றிய பிறகு ஏன் வந்து கருத்துரை சொல்லுகிறார்கள் என்று குறிப்பிட்டார். கவர்னர் அவர்கள் இந்த மன்றத்தில் உரை ஆற்றுவதன் மூலம் இந்த மாநில மக்களுக்கு சில செய்திகளைச் சொல்லுகிறார். இந்த மாநில

மக்கள், வெளியிலேயும் சரி, சட்டசபையிலேயும் சரி தங்களுக்கு சரி என்று தோன்றுகிற கருத்துக்களை எடுத்துச்சொல்ல கடமைப் பட்டிருக்கிறார்கள். அந்த முறையில் கவர்னர் அவர்களுடைய உரையின்மீது நானும் என்னைச் சார்ந்த எங்கள் கழகத்தினரும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வந்திருக்கிறோம். கவர்னர் உரையின்போது கலந்து கொள்ளாதவர்கள் விவாதத்தில் கலந்துக்கொள்ளக்கூடாது என்று தங்களுக்கு இருக்கிற எண்ணிக்கை பலத்தை வைத்துக்கொண்டு புதிய விதிகளை ஏற்படுத்தி விட்டால் அதனால் யாருக்கும் சங்கடம் இருக்காது. சில குறிப்பிட்ட அபிப் பிராயத்தை கருத்தில் கொண்டு ஓரிரு அங்கத்தினர்கள் அதை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் கவர்னர் பெருமான் உரை ஆற்றிய விழாவில் கலந்துக் கொண்டவர்கள், மாலை விருந்திலே மிக்க விருப்போடு கலந்து கொண்டவர்கள் அந்த உரையின் மீது நடைபெறுகிற விவாதத்தில் அனைவருமாவது பரிபூரணமான திருப்தியைத் தெரிவித்தார்களா என்றால், கவர்னர் பெருமான் உரையில் நல்ல கருத்துக்கள் காணப்படுகின்றன என்று முதலில் துவக்கிவிட்டு அந்த உரையில் இல்லாத கருத்துக்களைப் பற்றியும், நாட்டை ஆளுகின்றவர்கள் செய்த தவறுகளைப் பற்றியும் செய்யத் தவறிய கருத்துக்களைப் பற்றியும் தம் தமக்கு என்ன தேவை என்பதைப் பற்றியும், எத்தனை முறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்பதைப் பற்றியும்தான் விரிவாகப் பேசினார்கள். ஆகவே விழாவில் கலந்து கொண்டவர்கள் விருந்துக்குச் சென்று உண்டவர்கள் கவர்னர் பெருமானின் உரையை பூர்ணமாக ஆதரித்துப் பேசத்தான் வேண்டும் என்பது இல்லாதது போலவே விழாவில் கலந்து கொள்ளாதவர்கள் இந்த உரையின் மீது கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடாது என்பது ஜனநாயக முறையில் கிடையாது என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவர்னர் பெருமானின் பதவியை எப்படி அதிகமான சில அதிகாரங்களையும், பொறுப்புகளையும் அவர்களிடத்தில் ஒப்படைக் காமல் பெருந்தன்மையானதாக நாம் எப்படி வைத்துக்கொண்டிருக் கிறோமோ அப்படியே அவர்கள் உரையிலும் சில பெருந்தன்மையான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். நாட்டுக்குப் பெரும் ஆபத்து வர இருக்கிற காலத்தில் எல்லாக் கட்சிகளும் நாட்டு நன்மையைக் கருத்தில் கொண்டு ஒற்றுமையாக நடந்து கொள்ள வேண்டும் என்கிற

பெருந்தன்மையான கருத்து அதிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நாட்டு நன்மையில் அக்கறையுள்ள யாரும் அந்தப் பெருந் தன்மையான கருத்துக்கு இதயபூர்மான ஒப்புதலை அளிக்காமல் இருக்க முடியாது. நாட்டுக்கு பெரிய ஆபத்து ஏற்படக்கூடும் என்ற கருத்துப்பட இருப்பதால் அப்படிப்பட்ட ஆபத்து எதுவும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அப்படி ஏற்படக்கூடு மானால் அந்தச் சமயத்தில் கட்சியின் பாகுபாட்டை எல்லாம் மறந்து நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து எதிராளியைச் சமாளிக்க வேண்டிய பெரும் பொறுப்பை நாட்டில் உள்ள எல்லாக் கட்சியினர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் எனக்குத் துளிக்கூட ஐயப்பாடு இல்லை. ஆனால் அப்படி ஒத்துழைக்க அழைக்கும்போது ஒரு கட்சியைக் குத்தலாகப் பேசுவதன்மூலம் ஒற்றுமையைக் குலைப்பதற்கு ஒரு கனம் அங்கனத்தினர் அவர்கள் வெகு பிரயாசை பட்டு அந்த முயற்சியை எடுத்துக் கொண்டார்கள். ஆனால் நான் ஒன்று சொல்வேன். ஆபத்துக் காலத்தில் எங்கே சில கட்சிகள் துரோகிகளாக மாறிவிடுவார்களோ என்று ஐயப்பட்டுக் கொண்டிருப் பதைவிட, யுத்தம் ஏற்படக்கூடும் என்ற சூழ்நிலையை வைத்துக் கொண்டு முதலாளிகள் ஏழைகளின் வயற்றில் அடிக்கப் போகிறார்கள் என்ற பயம் இல்லாமல் போகவில்லை. எப்படி எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் அவர்களுக்கு தேசத்துரோகியாகத் தோன்றுகிறார்களோ அப்படியே தேசபக்தி என்ற போர்வையினால் சுரண்டல் காரியத்தில் ஈடுபடப்போகிறவர்கள் அவர்களால் நாட்டுக்கு உண்டாகப் போகிற கேடுகள் எல்லாவற்றை யும் என்னால், எடுத்துக் காட்டி வாதாட முடியும். ஆகவே இன்றைய தினம் கவர்னர் பெருமான் எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டு மென்று கேட்டுக் கொண்டிருக்கிற மனப்பான்மையை நாம் அனைவரும் மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கவர்னர் உரையில் இந்த ஆட்சி எடுத்துக்கொள்ளவேண்டிய முறைகளைப் பற்றியோ புதியதான கொள்கை விளக்கங்களைப் பற்றியோ ஒன்றும் குறிப்பிடவில்லை. பொதுவாகவே நான் விவாதத்தைக் கவனித்துக்கொண்டு வந்ததில் இருந்து இந்த ஆட்சி யாளருக்குத் தனியான நடைமுறைக் கொள்கை எதுவும் இல்லை யென்பதை நான் உணர்கிறேன். அவர்களுக்கு ஏதாவது நல்ல கொள்கை என்று இருக்குமானால் நம்முடைய நாட்டுக்கு நல்லாட்சி

அமையவேண்டும் என்கிற நினைப்பு ஒன்றுதான் என்பதை மதித்துப் பாராட்டுகிறேன். இந்திய துணைக் கண்டத்திலேயே இந்த ராஜ்ய அமைச்சர்கள் எடுத்துக்கொள்வது போல அதிக அக்கறை மற்றவர்கள் எடுத்துக்கொள்கிறார்களா என்பது உண்மையில் விவாதத்திற்குரிய தாகும். அந்த முறையில் நல்ல அநுபவமும் அக்கறையும் இருக்கிற நம் மாநில அமைச்சர்களுக்கு போதுமான அதிகாரமும், சுதந்திரமும் இல்லாத காரணத்தினால்தான் பல பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை என்று சொன்னால் அது பலருக்கு வேதனையாகத்தான் இருக்கச் செய்யும். ஆனால் போதுமான அதிகாரம் இல்லாத காரணத்தினால்தான் நமக்குப் பல குறைபாடுகள் ஏற்படுகின்றன என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருப்பதற்கில்லை. ஏனென்றால் என்னுடைய மாநில அமைச்சர்கள் திறமைக் குறைவான வர்கள் என்று சொல்லிவிட்டு இவர்களிடத்திலே மத்திய சர்க்கார் அதிகமான அதிகாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று வாதிடுவது தத்துவ முறைக்குப் பொருந்தாது. ஆகவேதான் நான் நம்முடைய மாநில அமைச்சர்களது அநுபவத்தையும், திறமையையும் குறைத்து மதிப்பிடவில்லை. இவர்கள் மிகுந்த திறமைசாலிகள். ஆனால் இவர்களிடத்தில் உண்மையாகவே போதுமான அதிகாரம் தரப்பட வில்லை என்று குறிப்பிடுகிறேன். அதற்கு வேண்டிய ஆதாரங்கள் இருக்கின்றன. நான் இங்கே பேசுவதற்கு முன்னால்தான் சில குறிப்புகளை எழுதினேன். உச்ச வரம்புச் சட்டம் ஏன் இன்னமும் கொண்டுவந்து இயற்றப்படவில்லை என்றால் மத்திய சர்க்காரிடத்தில் அதைப்பற்றி கலந்து ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. உணவுப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் தென் மண்டலத்தில் இருப்பதனால் நமக்கும் பெரும் பாதகம் ஏற்படுகின்றது. ஆகவே நாம் தனி மண்டலமாக ஆகவேண்டு மென்று நமக்கெல்லாம் அறிவு விளக்கம் ஆற்றின பிறகு ஏன் அந்த முறை இன்னும் ஏற்படவில்லை என்று கேட்டால் மத்திய சர்க்காரின் அனுமதியைக் கேட்டிருக்கிறோம், அவர்கள் இன்னும் ஒப்புக் கொள்ளவில்லை என்ற பதில் தரப்படுகிறது.

ஸ்டேட் ட்ரேடிங் என்ற தானிய வியாபாரத்தை சர்க்கார் ஏற்றுக் கொள்வார்களேயானால் இந்த பஞ்ச நிலைமை நீங்கிவிடுமென்று அமைச்சர்கள் நமக்கு அறிவுறுத்தினார்கள். ஏன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை? என்று கேட்டால் மத்திய அரசாங்கத்தை

அணுகியிருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். உற்பத்தி பெருக வேண்டுமானால் ரசாயன உரங்கள் தேவை என்று அனைவரும் அமைச்சர்களுக்கு அறிவுறுத்தி வருகிறார்கள். அது ஏன் கிடைக்க வில்லை என்றால் மத்திய அரசாங்கம் கொடுப்பது போதுமானதாக யில்லை, கூடுதல் கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். சாதாரண புளி, மிளகாய் இவைகளுக்கு ஏன் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது என்று கேட்டால் அமைச்சர்கள், இது வெளியே ஏற்றி அனுப்பப்படுகிறது. அதனால் விலை ஏறி விட்டது என்று சொல்கிறார்கள். அப்படி ஏற்றுமதி செய்வதை தடுப்பதுதானே என்று கேட்டால் சொல்கிறார்கள், அதுபற்றி மத்திய அரசாங்கத் தினிடம் வலியுறுத்தப் பட்டிருக்கிறது, என்று. நெய்வேலியில் எப்பொழுது நல்ல நிலைமை ஏற்படும் என்று கேட்டால் அதைப்பற்றி மத்திய அரசாங்கம் ஆலோசித்து வருவதாகச் சொல்கிறார்கள். சேலத்தில் உள்ள இரும்புக்கனியை தோண்டி எடுத்து நல்ல தொழில்களை எப்பொழுது நடத்தப் போகிறீர்கள் என்று கேட்டால் மத்திய அரசாங்கம் அதைப் பற்றி தீவிரமாக ஆலோசித்து வருகிறது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அது எடுக்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கிறார்கள். சேலத்தில் ஒரு அலுமினியம் தொழிற் சாலையை ஏற்படுத்த இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டதா என்று கேட்டால் மத்திய அரசாங்கத்தின், அவர்களின் ஆட்சிக்கு உட்பட்ட நிபுணர்களிடம் கருத்துரை கேட்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள். சர்க்கரை ஆலைகளை ஏன் அதிகம் ஏற்படுத்தக் கூடாது என்று கேட்டால் மத்திய அரசாங்கத்தினிடம் அதற்காக அனுமதி கேட்டுக் கொண்டிருக்கிறோம், அனுமதி கிடைத்ததும் ஆரம்பிப்போம் என்று சொல்கிறார்கள். நமது மாகாணத்திலிருக்கிற மண் வளத்தை ஆராய்ச்சி செய்வது, கனிப்பொருள்களை தோண்டி எடுப்பது, அல்லது பூமிக்கு அடியிலிருக்கும் எண்ணைக் கிணறுகளை தோண்டுவது ஆகியவை பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டால் அதற்காக ஒரு குழு அமைத்திருக்கிறார்கள் அது வேலை செய்கிறது என்று சொல்கிறார்கள். காகித ஆலையை ஆரம்பித்திருக்கிறீர்களா என்று கேட்டால் மத்திய அரசாங்கம் அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். சினிமாத் தொழிலை, கனம் அங்கத்தினர் ஏழுமலை அவர்கள் அதிலிருக்கிற சுவையையும் அதிலுள்ள லாபத்தையும் ரசித்துச் சொன்னார்கள், அதை சர்க்கார் ஏற்று நடத்த வேண்டுமென்று. அதற்காக ரா பிலிம் தொழிற்சாலை ஒன்றை

ஆரம்பிப்பீர்களா என்று கேட்டதற்கு உதகமண்டலத்தில் அப்படி ஒன்று ஆரம்பிக்க மத்திய அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக் கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஸ்பின்னிங் மில்ஸ், ஆலைகள் அதிகப்படுத்துவதற்காக முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக் கிறீர்களா என்று கேட்டால் அதற்காக மத்திய அரசாங்கத்தினிடம் கேட்கப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. கைத்தறி நெசவாளர்களுக்குள்ள ரிபேட்டை ஏன் குறைத்தீர்கள்? அதிகமாக கொடுக்கக் கூடாதா என்று கேட்டால் நம் மாநில தொழில் அமைச்சர் அவர்கள், எனது இதயம் பூராவும் கைத்தறி நெசவாளர்களிடம்தான் இருக்கிறது, ஆனால் இதற்கான பணம் டெல்லியில் இருக்கிறது, கேட்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள். சிங்களத் தீவில் இருக்கும் நமது தோழர்கள் சீர்குலைவாக நடத்தப்பட்டு திரும்பி வருகிறார்களே அவர்களுக்காக என்ன செய்கிறீர்கள்? செய்ய வேண்டிய வேலைகள் பல இருக்க, ஒரு அங்கத்தினர் பேசும்போது அவர் சொல்வதைக் கேட்காது அவசியமில்லாத காரியங்களை பார்த்துக் கொண்டிருக் கிறார்கள், பைலை பார்க்கிறார்கள்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : நான் எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று தெரியாமல் எப்படி ஊகித்துச் சொல் கிறார்களோ அதே போல் மற்றவைகளையும் ஊகித்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. என். அண்ணாதுரை : அவர்கள், சர்க்கார் பைல்கள் எங்கள் கண்களுக்கு படாது என்று நினைத்துச் சொன்னார்கள். ஆனால் அது என் கண்களுக்கு பட்டு விட்டது. இங்கு நடக்கும் காரியங்களைப் பார்த்தால், இவர்கள் இந்த நாட்டில் செய்கிற ஆட்சி போலி ராஜ்யமே தவிர அது உண்மையில் ஷேமநல சர்க்கார் அல்ல என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. எஸ். நாகராஜ மோனிகர் : On a point of order Sir. சர்க்கார் நடக்கும் முறை, ராஜ்ய அரசாங்கங்களுக்கு என சில விஷயங்களும் மத்திய அரசாங்கத்திற்கென சில விஷயங்களும் ஒதுக்கப்பட்டு அரசியல் நிர்ணயச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டு சட்ட திட்டத்தின் கீழ் நடக்கிறது. அப்படியிருக்க அதற்கு உட்பட்டு நடக்கிறோம் என்று பிரமாணம் எடுத்துக்கொண்டு, அதைத் தெரிந்து கொண்டு இந்த சபையில் வந்திருந்து இப்படியெல்லாம் பேசுவது எந்தளவிற்கு சட்டப்படி ஒழுங்கானது என்பதை சபாநாயகர் அவர்களிடமிருந்து

அறிய விரும்புகிறேன்.

திரு. சபாநாயகர் : இதில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றுமில்லை. அமைச்சர் பதில் சொல்லும்போது கனம் அங்கத்தினர் சொன்னதற்கு பதில் சொல்வார்.

திரு. சி. என். அண்ணாதுரை : நான் இப்பொழுது குறிப்பிட்ட துறைகளை எல்லாம் நம்முடைய மாநில சர்க்கார் ஏற்றெடுத்து நடத்துவதற்கு திறமையில்லை என்று குறிப்பிடவில்லை. நமது மாநில சர்க்கார் நடத்துகிற ராஜ்யம் ஒரு போலீஸ் ராஜ்யமாக இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு பொருத்தமாக இருக்கின்ற வகையில் நம்முடைய மாகாணத்தைப் பொறுத்த வரையில், உணவுத் துறையையும், போலீஸ் துறையையும் ஒரு அமைச்சர் அவர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. ஊரில் எல்லா உணவு விலை அதிகமாகிவிட்டது என்று எல்லோரிடத்திலும் கூறிக் கொண்டிருக்கின்ற மக்களை ஏன் அமைச்சர் அவர்களிடத்தில் போய் சொல்லியிருக்கக் கூடாது என்று நான் அடிக்கடி எண்ணுவதுண்டு, அவர்கள் கையில்தான் போலீஸ் துறையும் இருக்கிறது என்ற காரணத்தினால்தான் போய் சொல்லவில்லையோ என்று கருத வேண்டியிருக்கிறது. ஆகவே உணவும் போலீஸும் கனம் பக்தவத்சலம் அவர்களிடத்தில் இருப்பதை மாற்றி உணவுத்துறையை மட்டும் கனம் பக்தவத்சலம் அவர்களிடத்தில் ஒப்படைத்துவிட்டு, போலீஸ் துறையை உங்களிடத்தில் விரலையும் கையையும் காலையும் ஒடிக்கக் கூடிய திறமையான ஆட்கள் இருக்கின்றார்கள் - அவர்களிடத்தில் இந்தத் துறையை ஒப்படைத்தால் போலீஸ் இலாகா மிகவும் சுறுசுறுப் புடன் நடந்து கொள்ளும் என்று கருதுகிறேன்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : சமீபத்தில் போலீஸ் நூற்றாண்டு விழா நடந்ததின் பின்னாலாவது போலீஸ்காரர்கள் "உங்கள் நண்பன்" என்று ஏற்றுக்கொண்டிருப்பீர்கள் என்று நம்பினேன். ஆனால் இப்போதும் பழைய மனப்பான்மையிலேயே இருக்கின்ற திரு. அண்ணாதுரை அவர்களைப் பார்த்து நான் பரிதாப்படுகிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : எனக்கும் போலீசுக்கும் முன் காலத்திலிருந்தே நட்பு உண்டு. மக்களுடைய கருத்து என்ன என்பதைத்தான் நான் இப்போது குறிப்பிடுகிறேன். இந்த நிலையில் இங்கு நடந்து கொண்டிருப்பது போலீஸ் ஆட்சியாகத்தான் இருக்கிறது

என்பதை இங்கு போலீஸ் அமைச்சர் அவர்கள் இல்லா விட்டாலும் கூட சொல்லிக்கொள்கிறேன். இந்த ராஜ்யம் க்ஷேம நல சர்க்கார் என்ற முறையில் ஆட்சியை நடத்துவதற்கு லட்சியம் என்னவாக இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால். . . .

. . . . A Welfare State is not the product of a papar Constitution. There can be nso welfare without economic welfare. Now one of the most unfortunate features of the present Indian Constitution is that the position during last few years in respect of even the basic necessities has been worse than at any time during the period of the war. So far, therefore, from an improvement in the economic wellbeing after the transfer of power there has been a distinct deterioration."

என்பது க்ஷேமநல சர்க்கார் என்று குறிப்பிட்டிருப்பது, நாம் சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு நாம் சுதந்திரம் வாங்குவதற்கு முன்னால் இருந்ததைவிட இப்போது நல்ல நிலையில் வாழுகிறோம் என்பதை தவிர வேறு ஏதுவும் இல்லை. கனம் அங்கத்தினர் ஏழுமலை அவர்கள் "நாங்கள் சுதந்திரம் வாங்கினதினால் தானே உங்களுக்கு எல்லாம் இங்கு உள்ளே நுழைய முடிந்தது" என்று பெரிய மனது வைத்து எங்களுக்கு வழி செய்து தந்திருப்பது போல் கூறினார், அதற்காக நான் 5ன்றி செலுத்துகிறேன். இருந்தாலும் அதற்குப் பிறகு அனைவரும் கூடி அரிசி கிடைக்கவில்லை, கிடைக்கிற அரிசியும், அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது, என்று இங்கேயுள்ள ஒவ்வொருவரும் அழுது கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில்கூட, இதையெல்லாம் போக்குவதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அது மட்டுமல்ல, இந்த நிலையை போக்குவதற்காக எல்லாக் கட்சிகளையும் அழைத்து இதைப்பற்றி ஆலோசிக்கப்படவில்லை. முக்கியமாக சொல்லப்போனால் எந்த விஷயத்திலும் இந்த சர்க்கார் திட்டவட்டமான கொள்கையை இதுவரை அனுசரிக்கவில்லை. சர்க்காரின் இந்த நிலைக்கு காரணமே எல்லா விஷயத்திலும் திட்ட வட்டமான கொள்கையை நிர்ணயிக்காததுதான். அதுமட்டுமல்ல அமைச்சரவையில் இருக்கின்ற அமைச்சர்களுக்குள்கூட திட்ட வட்டமான அபிப்பிராயம் கிடையாது. பல்வேறு மனப்பான்மை கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் மடாலயங் களிலுள்ள சொத்துக்களை எடுத்து பறிமுதல் செய்து மக்களுக்கு பங்கிட்டு கொடுக்கவேண்டும் என்று பகுத்தறிவு பேசுகின்ற மனப்பான்மை ஒரு பக்கம் இருக்கிறது, இன்னொரு பக்கத்தில் ஆலயங்களின் பக்கத்தில் போய் கை வைத்தால் அஷ்டமத்தில் சனி

பிடித்துவிடும் என்ற தாழ்வான கருத்தைக் கொண்டவர்கள் ஒரு பக்கம், விலைவாசிகள் எல்லாம் குறைய வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற வெகுஜனக்குரலை மதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இருப்பவர்கள் ஒரு பக்கம், ஊருக்குள்ளேயே நுழையக் கூடாது என்ற பழங்கால எண்ணத்துடன் இருப்பவர்கள் ஒரு பக்கம், இத்தனை மாறுபட்ட கருத்துள்ளவர்கள் இருக்கிறார்கள் ஒரே அமைச்சரவையில். எங்கள் பக்கத்தில் வேண்டுமென்றால் எவ்வளவோ வேறுபாடுகள் இருக்கலாம், ஏனென்றால் நாங்கள் நாலைந்து கட்சிகளாக இங்கே இருக்கிறோம். எங்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம். அதைப்பற்றி யாரும் ஆச்சரியப்படுதவற் கில்லை. ஆனால் ஒரே கட்சியிலிருக்கின்றவர்களிடத்தில் முரண்பட்ட கருத்து இருப்பதை பார்க்கின்ற நேரத்தில் இந்த ஆட்சியாளர்களுக்கும் ஒரே விதமான கருத்து இருக்காது என்பதையே எடுத்துக்காட்டு கின்றது. இவர்களுக்குள்ளேயே எந்த விஷயத்திலும் ஒருமித்த கருத்தே இருப்பதாகத் தெரியவில்லை என்பதை நான் நிச்சயமாக கருதுகிறேன். ஆகையினால்தான் நிலங்களுக்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்பதைப்பற்றி இப்போது பேசிய கனம் காங்கிரஸ் கட்சி கொறடா அவர்கள், நிலத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டியது அவசியந்தானா என்பதைப்பற்றி இனி மேலும் ஆலோசனை செய்ய வேண்டியதுதான் என்று சொன்னார்கள். ஆனால் கட்சிக்கு கட்டுப்பட்டிருக்கும் இவர்கள் இவ்விதம் சொல்லுகின்ற நேரத்தில், காங்கிரஸ் கட்சி விடுத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லியிருக்கிறார்கள். . . .

"On the land, all intermediaries must be progressively removed so that the land is owned by the cultivator himself. The priniciple of ceilings on land has been accepted and should be progressively introduced so as to bring about a better *distribution* of land."

Better production அல்ல better distribution.

அந்தக் காலத்திலேயே நீங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'பெட்டர் ப்ரொடக்ஷன்' என்ற வார்த்தைகளைப் போடவில்லை. 'பெட்டர் டிஸ்ட்ரிப்யூஷன்' என்ற வார்த்தைகளைத்தான் போட்டி ருக்கிறீர்கள். 'நிலங்களை ஒரே இடத்தில் குவித்து வைக்காமல் பரவலாக பல பேர்களிடத்தில் பங்கிட்டுத் தருவோம்' என்று தேர்தலின் போது குறிப்பிட்டு ஓட்டு வாங்கித்தான் சட்ட சபைக்குள்ளே நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். இப்போது உற்பத்தி

பெருக வேண்டுமே' என்ற எண்ணம் உங்களுக்கு வந்திருக்கிறது. இப்போது இருக்கும் முறையை மாற்றினால் உற்பத்தி இன்னும் கெட்டுவிடும் என்பது போல, நிலத்தைப் பிரிப்பதால் உற்பத்தி பாதிக்கப்பட்டு விடும் என்பது போல, நீங்கள் இப்போது பேசுகிறீர்கள். உற்பத்திப் பெருக்கத்திற்கும் நிலச் சீர்த்திருத்தத்திற்கும் சம்பந்தம் ஏற்படுத்தியதே கனம் நிதி அமைச்சரின் சாமர்த்தியத்தால் ஏற்பட்ட கொள்கைதான் என்று நான் நம்புகிறேன். இரண்டும் இரண்டு துறைகளாகவும், இரண்டுமே ஏககாலத்தில் இருக்கக்கூடிய வெவ்வேறு துறைகளாகவும் இருக்கும்படி செய்யமுடியும். நிலத்தைப் பிரிப்பதால் உற்பத்திப் பெருக்கம் பாதிக்கப்பட்டு விடும் என்று இவர்கள் சொல்வதையும், உற்பத்திப் பெருக்கம் வேண்டுமானால் நிலத்தில் கை வைக்கக்கூடாது என்ற சுதந்திரக் கட்சியின் கொள்கை யையும் பார்க்கும்போது, ஒருவர் 'தியரெடிகலாகவும்' மற்றொருவர் 'ப்ராக்டிகலாகவும்' இருப்பது போலத் தோன்றுகிறது. ஒருவர் பேசிக் கொண்டிருக்கிறார். வேறு சிலர் அவ்வாறு நடந்துகொண்டிருக் கிறார்கள். அந்தக் கட்சிக்காரரிடம் கனம் நிதி அமைச்சருக்கு நெடுங்காலமாக இருந்த பாசத்தை நினைக்கும்போது எனக்கு ஒரு சந்தேகம் கூடத் தோன்றுகிறது.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : கனம், அங்கத்தினர் யாரைப் பற்றிக் குறிப்பிடுகிறார் என்று எனக்குத் தெரிகிறது. எனக்கும் கூட ஒரு சந்தேகம் தோன்றுகிறது. கனம் அங்கத்தினர் யாரைப்பற்றிப் பேசுகிறாரோ அவரே 'எனக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்த நாட்டின் பிரிவினை விஷயத்தைத் தவிர, கொள்கை வேறுபாமே இல்லை' என்று சொன்னார்; அவர் உண்மையைத்தான் சொல்வது வழக்கம். அவர் அவ்வாறு சொன்ன பிற்பாடு, நிலச் சீர்த்திருத்தம் வேண்டும் என்று சட்டசபையில் பேசும் கனம் அங்கத்தினர் அங்கே அவரிடம் வேறுவிதமாகப் பேசியிருக்கிறாரோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது.

திரு. சி. என். அண்ணாதுரை : கனம் நிதி அமைச்சரின் சந்தேகத் தைப் போக்க வேண்டியது என் கடமை. நான் அங்கே அப்படிப் பேசவில்லை. 'சுதந்திராக் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், நாடு பிரிவினை விஷயத்தைத் தவிர, வேறு எதிலும் கொள்கை வேறுபாடே இல்லை' என்று பேசிய அவர் மறுநாள் திருச்சினாப்பள்ளியில் 'காங்கிரசும் இதர கட்சிகளும் ஒன்றாகப்

போய்விடும், கடைசியில் நான் மட்டும்தான் தனியாக இருப்பேன்' என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, 'கொள்கையில், நாடு பிரிவினை தவிர, சுதந்திராக் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் வேறுபாடு இல்லை' என்று அவர் பேசியிருப்பது அவருடைய அரசியல் தத்துவத்திற்கு உகந்த பேச்சாக இருக்குமே தவிர அதில் வேறொன்றும் இல்லை. ரகசியப் பேச்சு எதுவும் நடந்திருக்குமானால், கனம் நிதி அமைச்சருக்கும் அவருக்கும் இடையே ரகசியப் பேச்சு நடந்திருக்கக் கூடுமே தவிர எனக்கும் அவருக்குமிடையே ரகசியப் பேச்சு நடந்திருக்க முடியாது. ஆகவே கனம் அமைச்சருக்கு அப்படிப்பட்ட சந்தேகமும் இருக்க வேண்டியதில்லை.

நிலச் சீர்த்திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு, நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதற்கு, சட்டம் கொண்டு வரவேண்டிய அவசியத்தை மறுக்கும் வகையில் சில வேடிக்கையான காரணங்களும் இங்கே வலியுறுத்தப்பட்டன. "நிலத்தைப் பிரிக்கத்தானே சட்டம்? அதற்குச் சட்டம் எதற்கு? சட்டம் வராதபோதே மக்கள் நிலத்தைப் பிரித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று பல கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். ஸ்ரீ அண்ணாமலை முத்து ராஜா அவர்களுடைய தொகுதியின் பெயர் எனக்கு இப்போது ஞாபகம் இல்லை. அவர் வாதாடியது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அவர் கூறிய வார்த்தைகள் அவருடைய உள்ளத்திலிருந்து வந்த வார்த்தைகள். "யாருடைய நிலத்தை யார் பிரிக்கச் சொல்வது? கஷ்டப்பட்டு சம்பாதித்திருந்தால் தானே இது தெரியும்?" என்று அவர் சொன்னார். யாருக்கும் அப்படிச் சொல்லத்தான் தோன்றும். ஆனால் வேறு சிலர் "எங்களிடம் எங்கே நிலம் இருக்கிறது. இருக்கிற நிலம் எங்கள் வயிற்றுப் பாட்டுக்கே போதாது" என்று கூறினார்கள். அவ்வாறு கூறியவர்கள் கம்பனிலிருந்து காளமேகம் வரை அழைத்து 'கழனியைக் கொடுத்துவிடு. அதற்குப் பிறகு நாங்கள் செய்ய வேண்டிய பூஜைகளைச் செய்கிறோம்" என்று சொன்னார்கள். நாம் விவசாய வருமான வரி போட்டிருக்கிறோம். வாழ்க்கைச் செலவிற்கு ஆனது போக அதற்கு மேல் இருக்கக்கூடிய விவசாய வருமானத்திற்கு வரி விதிக்கப்படும் வகையில்தான் நிலக்காரர்களுக்கு விவசாய வருமான வரி போட்டிருக்கிறோம். அந்த வரி கறவைப் பசுவாக இருக்கிறதே தவிர மலட்டு மாடாக இல்லை. அந்த வரியின் மூலம் அரசாங்கத்திற்கு கொஞ்சம் வருவாய் கிடைத்துக் கொண்டுதான் இருக்கிறது. எனவே

மாநிலத்தில் நிலம் இருக்கத்தான் செய்கிறது. அதைப் பிரித்துக் கொடுப்பதானால் அதை நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்கலாமா அல்லது அதை கூட்டுப் பண்ணையாக வைத்து நடத்தலாமா என்று விவாதங்கள் நடக்கின்றன. இப்படிப்பட்ட தத்துவ விவாதங்கள் நடக்கும்போது பல கட்சிகள் கூடிப் பேச வேண்டும். அப்படி பல கட்சிகள் கூடிப் பேசும்போது புள்ளி விவரங்களைக் காட்டி என்னென்ன செய்யலாம் என்று கேட்காமல் ''இன்னின்ன தத்துவங்களின்படி காரியங்கள் செய்ய எண்ணுகிறோம். இந்தத் தத்துவங்கள் குறித்து உங்கள் கருத்து என்ன'' என்று கேட்க வேண்டும். சர்வ கட்சிக் கூட்டங்கள் அந்த முறையில் நடக்க வேண்டும் என்ற கருத்தை இந்த சமயத்தில் நான் வலியுறுத்த விரும்புகிறேன். இந்தக் கூட்டுறவுப் பண்ணை விஷயத்திலேகூட ஆளும் கட்சியில் இருக்கிற அந்த முக்கியமானவர்களுக்குள்ளேயே ஒருமித்த கருத்து இருப்பதாக என்னால் உணர்ந்து பார்க்க முடியவில்லை. அதைப்பற்றி நமது அமைச்சர் அவர்களுக்கே ஐயப்பாடு இருக்கும் என்று நான் நினைக்கிறேன். கூட்டுறவுப் பண்ணை சரிவர நடைபெறவில்லை என்றும், ஐந்து அல்லது ஆறு ஆண்டு காலத்தில் பல பண்ணைகள் போய்விட்டது என்றும், இப்போது ஓரிரு பண்ணைகள்தான் உயிர் பிழைத்துக் கொண்டிருக்கின்றன என்றும் இந்த மாமன்றத்திலே ஒரு முறை பேசியிருக்கிறார்கள். இப்போது பொது மக்கள் என்ன எண்ணிப் பார்ப்பார்கள் என்று நாம் ஒருமுகமாக, நாம் சார்ந்திருக்கிற கட்சிகளை மறந்து எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் மக்களுக்குச் சொல்லுகிறோம் உற்பத்தி பெருகியிருக்கிறது என்று. நாம் மக்களுக்குச் சொல்லி வந்திருக்கிறோம் நிலத்தைப் பிரிக்கப் போகிறோம் என்று மறுபடியும் நாமே நிலத்தைப் பிரிப்பதில் சங்கடம் இருக்கிறது என்று சொல்லுகிறோம். பிறகு நிலத்தைப் பிரிப்பதில் கூட சங்கடம் இல்லை, அப்படிப் பிரித்தவுடன் யாருக்குக் கொடுப்பது என்பதில்தான் சந்தேகம் இருக்கிறது என்று சொல்லுகிறோம். அதிகப்படியாக உள்ள நிலங்களை கூட்டுப் பண்ணைக்குக் கொடுக்கலாமே என்று ஒரு இடத்தில் சொல்லுகிறோம். வேறொறு இடத்தில் கூட்டுறவுத் துறை சரியான முறையில் இயங்கவில்லை என்ற ஐயப்பாட்டை நாமே கிளப்புகிறோம். வியாபாரிகள் கொடுமை செய்கிறார்கள் என்று சொல்லுகிறோம். விவசாயிகள் நெல்லைப் பதுக்கி விட்டார்கள் என்று நாமே சொல்லுகிறோம். உற்பத்தி போதுமான அளவு பெருகவில்லை என்றும் நாமே சொல்கிறோம். உற்பத்தி பெருகி விட்டது என்றும்

நாமே சொல்கிறோம். இப்படி நீங்கள் கொள்கையில் தெளிவில்லாமல் எடுத்துச் சொல்லுகிற கருத்துக்கள் பொது மக்களுடைய மனதில் எந்த விதமான குழப்பத்தை ஏற்படுத்தும் என்று எண்ணிப் பார்த்தால், திட்ட வட்டமான கொள்கை இல்லாத காரணத்தினால், சமுதாயத்திற்குத் தகுந்தபடி பதிலளித்துக்கொண்டு வருகிறோம் என்பது தெரியும். இந்த மாமன்றத்தில் இதற்கு முன்னால் நடைபெற்ற உணவு விவாதங்களில் வியாபாரிகளைப்பற்றி வெகு பலமாகக் கண்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. உணவு அமைச்சர் முதல் வேறு அங்கத்தினர் ஈராக அத்தனை பேர்களும் வியாபாரிகள் பொருள்களைப் பதுக்கி வைத்து கொள்ளை லாபம் அடிக்கும் நோக்கம் கொண்டிருக்கிறார்கள். இந்த வியாபாரிகளை நம்பியிருக்கும் வரையில் காரியம் உருப்படாது, ஆகையால் நாங்களே நெல்லை கொள் முதல் செய்யப் போகிறோம் என்று இதே மாமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த நேரத்தில் வியாபாரிகளைப் பற்றிய கவனமே ஏற்படாமல் அனைவரும் வேறு விதத்தில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் தயவு செய்து திட்ட வட்டமாகக் கூறவேண்டும். வியாபாரிகளைப் பற்றி நீங்கள் வைத்துக்கொண்டிருந்த கருத்து அப்படியே இருக்கிறதா அல்லது வேறு விதமாக மாறியிருக்கிறதா? அதே போல ''ஸ்டேட் டிரேடிங்'' - அதாவது தானிய வியாபாரத்தை சர்க்காரே மேற்கொள்ளுவது - என்ற கொள்கை அப்படியே இருக்கிறதா அல்லது அதை மாற்றிக்கொள்ளப் போகிறீர்கள்? இந்திய சர்க்காருடைய துணையில் வாழுகிற சர்க்கார் என்ற முறையில், இந்திய சர்க்கார் உணவு அளிக்கக் கடமைப்பட்டி ருக்கிறார்கள், அதனால் ஏதாவது உணவுத் தட்டுப்பாடு ஏற்படு மானால் வெளி நாடுகளிலிருந்து வரவழைக்கப்படும் என்ற கொள்கை இருக்கிறதா அல்லது கைவிடப்பட்டு விட்டதா? இதற்கெல்லாம் விளக்கம் தெரிந்தால் அல்லவா நாங்கள் யோசனைகளைச் சொல்ல முடியும்? இதற்கு விளக்கம் ஏதும் தராத நிலையில் ''உங்களுக்கு தோன்றிய யோசனைகளைச் சொல்லுங்கள், உங்களுக்குத் தோன்றிய யோசனைகளைச் சொல்லுங்கள், என்று எதிர்க் கட்சியிலுள்ள எங்களைக் கேட்டால் எப்படிச் சொல்ல முடியும்? இப்படி விளக்கம் தராத நிலையில் கூட, ''லெவி'' வையுங்கள் என்று சொன்னால், அதற்கு அமைச்சர் அவர்கள் சாவதானமாக ''அது நல்லதுதான், ஆனாலும் இதில் இருக்கக்கூடிய சங்கடங்கள் ஒன்று, இரண்டு, மூன்று'' என்று அவருடைய கஷ்டங்களைச் சொல்வார்கள். கடைசியில் எதிர்க்

கட்சிகள் யோசனை சொல்லவில்லை, சொன்ன யோசனைகள் சரியில்லை என்றுகூறி அவர்களுடைய மேதா விலாசத்திலே நம்பிக்கை வைத்து இப்படி பொழுது போக்காகப் பேசிக்கொண்டிருந்தால் பிரச்சினைகள் காத்துக்கொண்டு இருக்காது. நீங்கள் என்ன செய்ய போகிறீர்கள்? அவைகளை தயவுசெய்து சொல்லுங்கள். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை எடுத்துச் சொன்னால், செய்ய இருக்கிற காரியம் சரிதானா அல்லவா என்பதை எதிர்க் கட்சியில் இருக்கும் நாங்கள் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். நீங்கள் நாட்டு மக்களுக்குப் பதிலளிக்கக் கடமைப் பட்டிருக்கிறீர்கள். நீங்கள் நாட்டு மக்களுக்குச் சோறு போடக் கடமைப் பட்டிருக் கிறீர்கள். பல அங்கத்தினர்கள் - எங்கள் தரப்பு அங்கத்தினர்கள் - இந்த உரையிலே உப்பு இல்லை, சப்பு இல்லை, காரம் இல்லை என்று சொன்னார்கள். இதிலே உப்பு இல்லாதது மட்டுமல்ல, காரமில்லாதது மட்டுமல்ல, சாரம் இல்லாதது மட்டுமல்ல, வெறும் சோறு கூட இல்லை. இன்று சோறுகூட இல்லை என்று கவர்னர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கு மட்டுமல்ல, சில திங்களுக்கு முன்னால் நடந்த கவர்னர்கள் மாநாட்டில், நம் மாநில கவர்னர் உட்பட எல்லா கவர்னர்களும்கூட நம் நாட்டில் இரண்டு வித ஆபத்துக்கள் இருக்கின்றன என்று கூறியிருக்கிறார்கள். ஒன்று எல்லைப் பிரச்சினை, மற்றொன்று வயிற்றுப் பிரச்சினை. இந்த இரண்டு பிரச்சினைகளும் சீரான, சரியான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். இப்படி அனைவருக்கும் இருக்கிற இந்தப் பிரச்சினைக்கு என்ன பரிகாரம் என்று கவனிக்கும்போது, இதற்குப் பரிகாரம் ''உற்பத்தியைப் பெருக்குங்கள், உற்பத்தியைப் பெருக்குங்கள்'' என்று மட்டும் சொல்வதில் என்ன பிரயோசனம் இருக்கிறது?

நான் சர்க்காரின் வருமானத்தைப் பெருக்குவதற்காக, கசாப்புக் கடை வையுங்கள், கோழிப் பண்ணை வையுங்கள் என்று சொன்ன நேரத்தில், நிதியமைச்சர் சாமர்த்தியமாக, ''ஐயையோ கோழி முட்டை யிடுமா, பத்து வருடம் காத்துக் கொண்டு இருக்கலாம்'' என்று அழகாகச் சொன்னார்கள். அதே விதத்தில், உற்பத்தியைப் பெருக்குங்கள், பெருக்குங்கள் என்று நீங்கள் சொல்லும் நேரத்தில், ''வாருங்கள், அனைவரும் வாய்க்கால் வெட்டுவோம், அனைவரும் உழுவோம், நாற்று நடுவோம் - தெரியா விட்டால், காங்கிரஸ் கட்சி கொரடா மறந்து விட்டிருக்க மாட்டார்கள் சிறு வயதில் செய்த

உழவை; இதோ பார் காட்டுகிறேன் என்று சொல்வார்கள். அது கூட நமக்குத் தெரியாது - இப்படித்தான், அப்படித்தான் உழுது, வளர்ந்து அறுவடையாகி அதற்குப் பிறகு சாப்பாடு என்று சொல்கிறார்களா? அல்லது, சில மாய மந்திரங்கள் சொல்வது போல் உணவு உற்பத்தி ஆகும் வரை எல்லா மக்களும் மயக்கிக் கடக்கக் கடவது, அடுத்த தேர்தலின்போது எழுந்து வரக்கடவது என்று சாபம் கொடுக்கலாம். (சிரிப்பு.)

திருப்பித் திருப்பி எங்களை, திட்டம் கொடுங்கள், திட்டம் கொடுங்கள் என்றால், எங்களிடத்திலே நீங்கள் என்ன தகவலைத் தந்தீர்கள்? உங்கள், புள்ளி விவரங்களைச் சந்தேகிக்கிறேன். நீங்கள் சேகரித்திருற்கும் புள்ளி விவரங்கள் உண்மை நிலையைக் காட்ட வில்லை என்ற ஐயப்பாடு பரவலாக ஏற்பட்டிருக்கிறது. இந்திய சர்க்காரே, இராஜ்யங்களிலிருந்து வரும் உணவு உற்பத்தி புள்ளி விவரங்கள் ஐயந்திரிபர அமையவில்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் அடிப்படைக்குப் போனால், உங்கள் புள்ளி விவர சரித்திரமே, பரிபூரணமானதாயில்லை. உங்கள் புள்ளி விவரம் அந்தந்த நேரத்தில், மக்களை அடக்க, இந்த மாமன்றத்திலே கேள்விக்குப் பதில் சொல்ல, பயன்படுகிறதே தவிர, சரியாகச் சீராக இல்லை. ஆனால், என்ன செய்திருக்கிறீர்கள் என்று அறிந்து கொள்ளலாம் என்றால், இந்தப் பிரச்சினையை கவர்னரவர்கள் குறிப்பிட்டிருக்க வேண்டாமா கவலையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். யாருக்குத்தான் கவலை இல்லை? குழந்தைக்குப் பால் இல்லையென்று தாய்க்குக் கவலை; கொண்டைக்குப் பூவில்லை யென்று அவளுக்குக் கவலை யென்று வேடிக்கையாகப் பாடுவார்கள். கவலை இருக்கத் தான் செய்யும். கவலை இருக்கும் நேரத்தில் கவலையைப் போக்க செய்யப்பட்டது என்ன? ஒரு கட்சிக்காரர்கள் இன்னொரு கட்சிக்காரர்களோடு வார்த்தை யாடுகிறோம். கனம் ஏழுமலை சினிமாவுக்கு உச்சவரம்பு கட்டு என்று சொல்வதும், நான் மோட்டாருக்கு உச்சவரம்பு கட்டு என்று சொல்வதுமாக இப்படி நலங்கு விளையாடிக் கொண்டிருந்தால் என்ன பயன்? கொள்கையில் உறுதி இருக்கவேண்டும். திட்டம் போட்டுக்கொண்டே இருந்தால் போதாது. உணவு உற்பத்தி பெருகுவதற்கு, உரம் தேவை என்று சொல்லி விட்டு, உரம் எங்களிடம் இல்லையென்றால் என்ன பயன். உணவு உற்பத்தி எப்படிப் பெருக முடியும்?

பல அங்கத்தினர்கள் உணவு விலையை இறக்க வேண்டாம், அது விசாயத்தைப் பாதிக்கும் என்று அவர்கள் உணர்ந்து பேசினார்கள்.

அவர்களுடைய உணர்ச்சியை மதிக்கிறேன். ஏனென்றால், விவசாயிக்குக் கொடுக்கவேண்டிய பணம் கொடுக்காவிட்டால், நம் நாட்டுப் பொருளாதாரம் இன்று இருக்கும் நிலையில், மிக முக்கியமான ஒரு பகுதி சமுதாயத்தில் ஒடிந்துபோகும். விவசாயிக்கு, விவசாயத்திற்கு வந்து இருக்கும் கஷ்டம் என்ன? விவசாயியின் கஷ்டம் ரூ. 50 முட்டு வழிக்குச் செலவிட்டு ரூ. 100 கிடைத்தால், ரூ. 50 லாபம் கிடைக்கும். முட்டு வழிக்கு ரூ. 250 ஆகி, ரூ. 300-க்கு விற்றால், அப்பவும் லாபம் ரூ. 50 தான். இதில் முக்கியமானது, (Ratio of profit) செலவுக்கும் விற்பனைக்கும் இடையிலே, கணிசமான லாபம் வருகிறதா என்பதுதான் அவர்களுக்குக் கவலை. முக்கியமானது, ஐம்பது ரூபாயில் முடிந்தாலும் ஒன்றுதான், முன்னூறு ரூபாயில் முடிந்தாலும் ஒன்றுதான். ஆட்சியாளர்கள் உற்பத்திச் செலவைக் குறைக்க என்ன வழி சொல்லி நாங்கள் வேண்டாம் என்றோம்? எப்போதாவது விவசாயிக்கு நீங்கள் உரத்தை ரூ. 5-க்குக் கொடுக்கிறோம் என்று சொன்னால், இல்லை, ரூ. 5-க்குக் கொடுக்கக் கூடாது. ரூ. 17¾ -க்குத்தான் கொடுக்கவேண்டும் என்று வாதாடினோமா? எங்கே நீங்கள் திட்டங்களைக் காட்டினீர்கள்? எங்கே உங்களைத் திட்டம் போட விடுகிறார்கள்? திட்டத்தைக் கொடுப்பதற்கு மேலே சொல்ல வேண்டியிருக்கிறதே தவிர, திட்டம் போடுவது உங்கள் இடத்தில் எங்கே இருக்கிறது? எந்தத் துறையை உங்களிடம் விடுகிறார்கள் என்று கேட்கிறேன்.

டில்லியில் உணவு மந்திரி எதற்காக? சென்னையிலே உணவு மந்திரி இருக்கிறார், சென்னை ராஜ்ய மக்களுக்கு உணவு அளிக்க; ஆந்திர ராஜ்யத்திலே உணவு மாதிரி இருக்கிறார், ஆந்திர மக்களுக்கு உணவு அளிக்க; கேரள ராஜ்யத்திலே உணவு மந்திரி இருந்தார், அந்த மக்களுக்கு உணவு கொடுக்க. டில்லி மந்திரி எந்த ராஜ்ய மக்களுக்கு உணவு அளிக்கிறார்? எந்த ராஜ்யம் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது?'' மாநிலத்தில் உள்ள மந்திரிகள் கொடுப்பதை தொகுத்து அனுப்பவும்; அப்படி அவர்கள் ஏதாவது திட்டம் கொண்டு வந்தால், அது சரியில்லை யென்று சொல்வதற்கும், அவர்கள் போட்டிருக்கும் திட்டங்களைச் சேர்த்து இணைப்பதற்கும், இதற்கு ஒரு உணவு மந்திரி இருப்பானேன்? அரசியல் சட்டத்தின்படி ராஜ்யமே செய்துகொள்ளக் கூடிய காரியம் என்று ஏன் வலியுறுத்தக் கூடாது? ஒரு Minister for co-ordination என்று, இதையெல்லாம் இணைப்பதற்கு மட்டும் ஒரு பெரிய மந்திரி இருக்கட்டும். ஒவ்வொரு

துறைக்கும் தேவையில்லையென்று ஏன் வலியுறுத்தக்கூடாது? எதற்கெடுத்தாலும் நேஷனல் டெவலப்மெண்ட் கௌன்சிலுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. நமது மாநிலத்தின் நல்ல காலம், நம்முடைய கருத்தை வலியுறுத்த ஒரு சாமர்த்தியசாலி நமக்குக் கிடைத்திருக்கிறார் - நிதி அமைச்சர் ஸ்ரீ சுப்ரமணியம் அவர்கள். அங்கு போவதால் அவர் வாதாட வேண்டியதாக இருக்கிறது. எத்தனை நாட்களுக்குத்தான் ஒரு வக்கீலை நம்பி வாழ முடியும். எந்த நாளில் எந்தக் கட்சியைச் சேரப் போகிறார்களோ நமக்குத் தெரியாது.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : இது வரைக்கும் நான் எந்த கட்சியிலிருந்தும் மாறியது இல்லை. கட்சியைவிட்டு வேறு கட்சிக்கு மாறுவது என்பது எனக்குக் கிடையாது.

திரு. சி. என். அண்ணாதுரை : அப்படி அவர் மாறாமல் இருப்பதால் அவருக்கு லாபகரமாக இருக்கலாம். லாபகரமாக இருப்பதால்தான் ஒரே கட்சியில் இருக்கிறீர்கள்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : லாபத்தை நான் எதிர்பார்க்க வில்லை. லாபத்தை எதிர்ப்பார்த்தும் நஷ்டத்தை எதிர்பார்த்தும் நான் கட்சி மாறுவது இல்லை.

திரு. சி. என். அண்ணாதுரை : எதிர்பார்க்காமலேதான் லாபம் வருகிறதே. நம்முடைய நாட்டில் இங்கே ஒரு உணவு அமைச்சரும் அங்கே ஒரு உணவு அமைச்சரும் எதற்கு? இங்கு உள்ள உணவு அமைச்சர் சொல்வதை அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்களா? உணவு அளிக்கவேண்டும் என்று கேட்டு தென் மண்டலத்தை கலைக்க வேண்டும் என்று சொன்னால் அதை கலைக்க முடியாது உங்களுக்குத் தேவையான உணவைக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் உணவு மண்டலத்தைக் கலைக்க முடியாது என்று மத்திய அரசாங்கம் சொல்லக்கூடிய காரணம் என்னவென்றால் கேரளாவுக்கும், மைசூருக்கும், மற்ற இடங்களுக்கும் நாங்கள் அரிசி அனுப்பிவைக்க வேண்டியதாக இருக்கிறது, 9 லட்சம் டன் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது, என்ற காரணத்தைக் காட்டி தென் மண்டலத்தைக் கலைக்க மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் தங்களுடைய பொறுப்பை மறந்துவிடுகிறார்கள். அங்கே இருக்கிற உணவு அமைச்சர் பதவி எவ்வளவோ ஆபத்தானது என்பது தெரியவருகிறது. அவர்களுடைய ஆயுள் காலத்திற்குள் அந்தப் பதவி

ஊசலாடிக்கொண்டிருக்கிறது. இந்தப் பனிரெண்டு ஆண்டில் ஐந்து உணவு அமைச்சர்கள் டில்லியில் மாறியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் இந்த உணவுப் பிரச்சினையை எப்படி தீர்க்கப் போகிறோம் என்பதுதான் தெரியவில்லை. அதைப்போலவேதான் இப்பொழுது நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவது என்பதும். இது பத்து ஆண்டு காலமாகவே அனைவருடைய மனதிலும் இருந்துகொண்டு வந்தது பலர் பலவிதமாக இம்மாதிரி பிரித்து விடுவார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியாதா? அப்படி தெரிந்துக்கொள்ளக்கூடிய ஆற்றல் அவர்களுக்கு இருக்கிறது. ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்களுக்கு அதைத் தெரிந்துகொள்வதற்கு ஆதாரங்கள் கிடைக்காமலா போய் விட்டது. அவர்களுடைய சுற்றுப் பிரயாணத்தில் அவர்கள் நிலச் சொந்தக்காரர்களை சந்திக்கவில்லையா? அப்படிப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் கதர் அணிந்த கனவான்களாக இன்றையதினம் இல்லையா? இப்படி நிலத்தை எல்லாம் அவர்கள் பிரித்துவிடப் போகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியாதா? அதைத் தெரிந்துக் கொண்டு அதைத் தடுப்பதற்கு என்ன? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள்? இன்ஷூரென்சு கம்பெனி, பாங்குகள் முதலியவைகளை தேசீய மயமாக்குவதாக இருந்தால் உடனே அங்கே இருக்கக்கூடியவைகளையெல்லாம் ப்ரீஸ் அதாவது முடக்கிவைக்கிறார்கள் அல்லவா? அதைப்போலவே இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாகவே அவர்களுடைய நிலத்தை முடக்கி வைப்பதற்கு என்ன? அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள ஏன் தயங்குகிறார்கள்? அப்படி முடக்கி வைத்தால் கட்சியே கலகலத்துப்போய்விடும் என்ற அச்சம் உடையவர்களாக இருக்கிறார் களா? அந்த அச்சத்தின் காரணமாகத்தான் அப்படி நிலங்களை முடக்கி வைக்காமல் இருக்கிறார்களா? அதே நேரத்தில் பஸ்களை தேசீய மயமாக்க வேண்டும் என்று சொன்னால் காங்கிரஸ் கட்சியைக் கெடுக்கத்தானே அப்படிச் சொல்லுகிறார்கள் என்று சொல்லுகிறீர்கள். தாங்கள் பெரிய தேசீயவாதிகளாக வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கேட்டாலும் பரவாயில்லை. நாடு வாழ்ந்தால் போதும் என்ற கொள்கையை உடையவர்களாக இருக்க வேண்டும். நாடு கெட்டாலும் சரி காங்கிரஸ் காட்சி வாழவேண்டும் என்று நினைப்பது அறம் கலந்த அரசியல் ஆகாது. ஆகவே நான் சொல்லுகிறேன், இப்படி நில உச்ச வரம்பு கட்டுவதைப்பற்றி மக்களுக்கு எவ்வளவு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். உழவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்று

பேசிய காங்கிரஸ் பெரும் தலைவர்கள் யார்? பேசாது இருந்து நிலத்தைக் கேட்காத உழவன் யார்? அதை வாங்கித் தருவதற்கு காங்கிரஸ் கட்சியினால் முடியுமா? அதை வாங்கித் தருவதற்கு காங்கிரஸ் கட்சியினால் முடியாது என்பதை உணர்ந்து புரட்சிகரமான திட்டத்தையுடைய கம்யூனிஸ்ட் கட்சியால்தான் கொண்டுவர முடியும் என்று கூறியதால்தான் உழவர்கள், பெருங்குடி மக்கள் பெருவாரியாக சென்ற தடவை அவர்களை ஆதரித்தார்கள். மறுபடியும் அந்த உழவர் பெருங்குடி மக்களை தங்கள் பக்கத்தில் இழுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே 60-40 என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இப்பொழுது உங்களுத்தான் நிலம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அவர்களை தங்கள் பக்கத்தில் இழுத்துக்கொள்வதற்கு சில கருத்துக்களை இங்கே பேசிய அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். பள்ளிக்கூடங்களுக்கு எழுதி வைத்திருக்கிறார்கள் என்றும் ஆலயங்களுக்கு எழுதி வைத்திருக் கின்றார்கள் என்றும் பேசியிருக்கிறார்கள். நீங்கள் எல்லோரும் ஒரே முகாமில் இருப்பதால் அவ்வப்போது உங்களுக்கு இந்தச் செய்திகள் எல்லாம் கிடைத்திருக்கின்றன. ஆனால் நான் தொலைவில் இருப்பதால் எனக்கு இந்தப் பிரச்சினைகள் எல்லாம் அவ்வளவாகத் தெரியாது. ஆனால் இன்றைக்கு நிலத்தைப் பிரித்து விடுகிறார்கள் என்று தோன்றுகிற நேரத்தில் அவர்களுடைய நிலத்தையெல்லாம் முடக்கி இருக்கலாம். ராஜஸ்தானத்தில் அதைப்போலவேதான் இடைக்காலத்தில் நிலத்தை பகிர்ந்து கொடுக்காமல் இருக்க வேண்டும் என்று முயற்சி செய்த நேரத்தில் ப்ளானிங் கமிஷன் குறுக்கிட்டு சட்டத்தில் அவ்வாறு இடம் இல்லை அப்படிப்பட்ட ஒரு சட்டம் போடக் கூடாது என்று சொன்னார்கள். நாங்கள் சொல்லக்கூடிய வாதங்களை வலியுறுத்தினால் உங்களுடைய கரங்கள் கட்டுப்பட்டி ருக்கின்றன. டில்லியிலுள்ள ஏதேச்சதிகாரத்திற்கு நீங்கள் பதில் சொல்லி விட்டுத்தான் திரும்ப வேண்டுமே தவிர ஒரு துறையிலாவது உங்களுக்கு சுதந்திரம் அளிக்கப்படவில்லை. உங்களுக்கு அளிக்கப் பட்டிருக்கிற சுதந்திரம் எல்லாம் உங்கள் பக்கத்து எண்ணிக்கை குறைந்துவிடாமல் பார்த்துக் கொண்டு மகிழ்ந்திருப்பதற்குத்தான் தரப்பட்டிருக்கிறது. மக்களுடைய கோபதாபம் எங்கே தங்கள் பக்கம் திரும்பிவிடப் போகிறதோ என்று மோட்டாருக்கு முன்னால் வைக்கிற ஷாக் அப்சர்வரைப்போல் தங்களுக்கு முன்னே உங்களை அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வருகிற கோபம் எல்லாம் உங்கள்

பேரில் பாயட்டும் நாம் தொலைவில் இருந்து வேடிக்கை பார்ப்போம் என்கிற ரீதியில்தான் உங்களை இங்கே முன்னணியில் நிறுத்தி வைத்திருக்கிறார்களே தவிர உண்மையான அதிகாரத்தை, பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய அதிகாரத்தை உங்களிடம் அவர்கள் ஒப்படைக்கவில்லை.

புதிதாக வந்த மத்திய உணவு மந்திரி சொன்னார், “நான் அமெரிக்காவுடன் பேசி இந்த நாட்டில் உணவு பாங்க் வைக்கப் போகிறேன். அமெரிக்க நாட்டார்கள் இன்றைய தினம் தங்கள் நாட்டில் உற்பத்தியாகின்ற அதிகமான உணவை பத்திரமாகச் சேமித்து வைப்பதற்காக மட்டும் 500 கோடி ரூபாய் செலவழிக்கிறார்கள். அங்கே அப்படிச் சேமிப்புக் கிடங்குகளை வைப்பதற்குப் பதிலாக இந்தியாவில் கொண்டுவந்து புட் பாங்கை வைத்து இங்கு உள்ள மக்களுக்கு பஞ்சம் வருகிற நேரத்தில் அந்த உணவைப் பங்கிட்டுக் கொடுக்கும்படியாகச் செய்யப்போகிறேன்” என்று சொன்னார்கள். இப்போது அந்த அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவர் டெல்லிக்கு வந்திருக்கிறார். நம்முடைய நிதி மந்திரி அவர்களும், உணவு மந்திரி அவர்களும் டெல்லிக்கு முன்பு அடிக்கடி போன காலத்தில் எல்லாம் இப்படி அவர்களது ஆணைக்கு அடிபணிந்து போய்க்கொண்டிருக்கிறார்களே என்று நான் வருத்தப் பட்டிருக்கிறேன். அப்படி இன்றுவரை அவர்கள் கூப்பிட்ட போதெல்லாம் போய்க்கொண்டிருந்தவர்கள் இன்று நாட்டு மக்களுடைய சார்பில் டெல்லிக்குச் சென்று ஐசன்ஹோவரைச் சந்தித்து இந்தியாவில் புட் பாங்க் ஏற்படுத்துவது என்றால் அதைச் சென்னையில் வைக்கச் சொல்லுங்கள். வடக்கே வைத்தால் கோதுமை பாங்காகத்தான் வைப்பார்கள். இங்கு அதைக் கொண்டுவந்தால் பாங்காகவாவது வைக்கலாம். (ஒரு குரல் - அமெரிக்காவில் அரிசி ஏது?) தென் அமெரிக்க நாட்டில் இருந்து, அர்ஜைண்டைனா நாட்டில் இருந்து அரிசி கொண்டு வரலாம். (கனம் ஸ்ரீ சி. சுப்பிரமணியம் - அதற்கு ஐசன்ஹோவரைச் சந்தித்துப் பயன் இல்லை) அப்படி கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொல்வது ஐசன்ஹோவரின் செல்வாக்கைக் குறைத்து மதிப்பிட்டிருக்கிறார்கள் என்றல்ல. அவர்களுக்கு இருக்கிற செல்வாக்கை இப்படி உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்வது அரசியல் நாகரீகம் அல்ல என்பதற்காகப் பேசுகின்றார்கள். ஐசுன்ஹோவர் பார்த்தால் அரிசியை வாங்கித்தரவா முடியாது.

இன்னொன்று ப்ரொக்யூர்மெண்டு அல்லது லெவி - இந்த இரண்டிலே எதை வெற்றிகரமாக நடத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறதோ அதை தைரியமாகக் கொண்டு வர வேண்டும். அப்படிச் செய்வதற்கு முன்னால் தாங்கள் என்ன செய்ய போகிறோம் என்ற கருத்தை இந்த மன்றத்தில் சொல்லுங்கள். அதன்பேரில் பல அங்கத்தினர்களும் தங்கள் கருத்துக்களைச் சொல்லக்கூடும். அதைவிட்டு விட்டு நாங்கள் எதைச் செய்தாலும் குற்றம் சொல்லுகிறார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் என்று சொன்னால் அது சரியானதாக ஆகாது. ரூபாய்க்கு இரண்டு படி அரிசி விற்கிறது என்றால் நாங்கள் குற்றம் சொல்ல முடியுமா? கேட்கக்கூடியவர்களுக்கு புளி, சர்க்கரை எல்லாம் கிடைக்கிறது என்று சொன்னால் நாங்கள் குற்றம் சொல்ல முடியுமா? அப்படிச் சொன்னாலும் யார் காதுக்காவது அது ஏறுமா? குற்றம் சொல்லுகிறவர்கள் என்றால் இருக்கக்கூடிய குற்றங்களை எடுத்துச் சொல்கிறோமே தவிர இல்லாததை எடுத்துக் கற்பனையாகச் சொல்லவில்லை. இருப்பதை எடுத்துச் சொல்வதற்கே நாங்கள் திண்டாடுகிறோம். அதையும் நிதி அமைச்சர் அவர்கள் ஒட்டியும், வெட்டியும் தகர்த்து பேசி குறைகள் என்று எடுத்துக் காட்டியவற்றைக்கூட இல்லையென்று வாதமிடுகிற திறன் படைத்தவர். இன்னும் இல்லாததைக் கொண்டு வந்து நாங்கள் எப்படி ஸ்தாபிக்க முடியும்?

ஆகையால் நாட்டில் பஞ்சம் இருக்கிறது. உணவுப் பொருள் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் விலை இப்படி ஏறாவிட்டால் விவசாயிகளுக்குத் துன்பம் வந்துவிடுமோ என்று அவர்கள் பயந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் எனக்குத் தெரிந்தவரையில் உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க சில லட்சம் டன் உணவுப் பொருள்களாவது நமது சர்க்காரிடத்தில் பப்பர் ஸ்டாக்காக இருக்கவேண்டும். அதைப் போலவே விவசாயிகளுடைய அடக்கவிலையைப் பார்த்து அவர்கள் கணக்குப்படி அவர்களுக்கு நஷ்டம் ஏற்படாதிருக்க சப்ஸிடி கொடுப்பதற்கும் இந்தச் சர்க்கார் முன் வர வேண்டும். புரட்சிகரமான திட்டங்களை வைத்திருக்கிற சீன நாட்டில் கூட விவசாயிகளுக்கு அம்மாதிரி பணம் கொடுப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். ஆனால் இன்று இருக்கக்கூடிய நிலைமையில் அதுவும் அந்தச் சீனச் செய்தியை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளலாம் என்பது எனக்குத் தெரியாது

ஆனாலும் விவசாயிகளுக்கு தொல்லை உண்டாகாதிருக்க அவர்களைக் காப்பாற்றவேண்டியது தம் அரசாங்கத்தின் கடமை. அவர்களுடைய நிலை, மக்களுடைய நிலை ஆகிய இரண்டையும் சேர்த்து இணைத்துப் பார்த்தால், பப்பர் ஸ்டாக்கும் கையில் எப்போதும் வைத்திருக்கவேண்டும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நஷ்டம் ஏற்படாத வகையில் சப்ஸிடி கொடுப்பதற்கும் பணம் ஒதுக்கி வைத்திருக்கவேண்டும்.

அதற்கு ஏது எங்களிடம் பணம்? எப்படி ஒதுக்குவது? அதற்கு முன்னால்தான் டெல்லியில் உள்ளவர்கள் இன்ன இன்ன திட்டங்களுக்கான இன்ன இன்ன தொகை ஒதுக்கிவிடுங்கள் என்று சொல்லிவிடுகிறார்களே?

ஆகையால் தான் - நான் திருப்பித் திருப்பி பழைய பாட்டையே பாடுகின்றேன் என்று சிலர் என்னிடத்தில் வருத்தம் அடைந்தாலும் கூட நான் சொல்லுகிறேன். இவர்களுக்குப் போதுமான அதிகாரம் இல்லாத காரணத்தினால்தான் இந்தப் பிரச்சினை நீடித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை நீடிக்காமல் இருக்க வேண்டுமானால் உணவுப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் நமது அமைச்சர் அவர்கள் நாளையதினம் இந்த மன்றத்தில் திட்டவட்ட மாக இதுதான் எங்கள் கொள்கை என்று சொல்லி அதையும் விவாதத்திற்கு கொண்டு வந்து, மன்றத்தின் முடிவு இது, இந்த வகையில் தான் நாங்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கப் போகிறோம் என்று கண்டிப்பாக அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அப்போது நிச்சயமாக உணவுப் பிரச்சினை வெற்றிகரமாக தீர்க்கப்படுவதற்கு வழியாவது ஏற்படும்.

உணவுப் பிரச்சினை தீர்க்கப் படாவிட்டால் திட்டங்கள் எவ்வளவு தீவிரமாக போடப்பட்டாலும் நிச்சயமாக அவைகள் வெற்றி பெறாது என்பதை அவர்களே உணர்ந்திருக்கிறார்கள். அதைச் சொல்லும்போது திட்டங்களைப் பற்றி நான் ஓரிரு வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும், ஒத்துழைக்க வேண்டுமென்று பல தடவை அன்பழைப்புகள் நம் அமைச்சர்களால் தரப்படுகிறது. நான் அந்த அன்பழைப்புகளைப் பெரிதும் மதிக்கிறேன். ஆனால் அந்த அந்த அன்பழைப்புகளைத் தரும் அதே சமயத்தில் வெளியேயுள்ள அவர்களது அதிகார வர்க்கமும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும்

எந்த வழியில் நடந்து கொள்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்ல எனக்குச் சந்தர்ப்பம் வந்ததில்லை. ஆனால் இன்றையதினம் அதுபற்றி குறிப்பிட விரும்புகிறேன். நிதியமைச்சர் அவர்கள் காஞ்சிபுரத்திற்கு ஒரு கல்விக் கூடத்தை திறக்க வந்தார்கள். இங்கேயிருந்து புறப்படுகிற போது அவர் என்னிடம் சொன்னார், உங்கள் ஊருக்கு நான் போகிறேன், நீங்கள் வரவில்லையா என்று கேட்டார்கள். நான் அன்றையதினம் அதற்கு பதில் சொல்ல வெட்கப்பட்டேன். ஆனால் இன்றையதினம் நான் வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன், எனக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்பதை. நேற்றைய தினம் உணவு அமைச்சர் பக்தவத்ஸலம் அவர்கள் எனது தொகுதியிலுள்ள சிங்கடி வாக்கம் என்றயிடத்தில் ஒரு மருத்துவ மனையைத் திறக்கச் சென்றார்கள். அதற்கும் எனக்கு அழைப்பு அனுப்பவில்லை. அப்படி அழைப்பு அனுப்பாவிட்டாலும், அதோடு அவர்கள் விட்டு விடுவார்களா? அந்தயிடத்தில் போடப்படும் காங்கிரஸ் கூட்டத்தில் மக்களிடம் கேட்பார்கள், உங்கள் தொகுதி எம்.எல். ஏ. இங்கு நடக்கிற நடவடிக்கையில் கலந்து கொண்டாரா? என்று. என்னென்ன செய்து எதிர்கட்சிகளை அழிக்கலாம் என்றே மனப்பால் குடிக்கிறார்கள், ஆளும் கட்சிக்காரர்கள். இப்படிச் சொல்லி விட்டு உயரே இருந்து கொண்டு எங்களோடு ஒத்துழையுங்கள், ஒத்துழையுங்கள் என்று சொன்னால் நாங்கள் அவர்களிடம் எப்படி நம்பிக்கை வைக்க முடியும்? சமுதாய நலத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படுகிற முறையும், அவை நிறைவேற்றப்படுகிற தன்மையும் கட்சி அடிப்படை யில்தான் நடத்தப்படுகிறது. இதை, ஒளிவு மறைவு இல்லாமல் எந்தயிடத்திலும் ஆதாரங்கள் காட்டி நிரூபிக்க முடியும், என்னால். என்னோடு அமைச்சர்கள் இரண்டு நாட்கள் இந்தப் பகுதிகளுக்கு வந்தால் எந்தெந்தயிடங்களில் திட்டங்கள் போடப்பட்டு நடத்தப் படுகிறது, அவைகள் அரசியல் லாபத்திற்காகத்தான் பயன்படுத்தப் பட்டு வருகிறது, கட்சி லாபத்திற்காகத்தான் அவைகள் பயன்படுத்தப் பட்டு வருகிறது என்பதை அவர்களே நேரில் பார்க்க முடியும். கட்சிக்காக இந்தத் திட்டங்கள் பயன்படுத்தக் கூடாதென்று பெருந் தன்மை குணம் அவர்களுக்கு இருக்குமென்ற நம்பிக்கையுடன் சொல்கிறேன். அவர்களும் அவர்களது கட்சிக்காரர்களைப்போல் அவைகள் கட்சி லாபத்திற்காகத்தான் நடத்தப்படுகிறது என்று சொன்னால், காலம் வரட்டும் என்றுதான் காத்திருக்கவேண்டும். ஆக, கோடிக்கணக்கில் செலவுச் செய்யப்படும் பணம், சமுதாயநலத்

திட்டங்களுக்காக செலவு செய்யப்படும் இப்பணம், எப்படிச் செய்தால் தங்கள் கட்சிக்கு வலு ஏற்படும், எப்படிச் செய்தால் தங்கள் கட்சிக்கு செல்வாக்கு கிடைக்கும் என்று தேடி நடத்தப்படும் காரியங்களாக இருக்கிறதே தவிர இத்திட்டங்கள் மக்களுக்கு எங்கே மன மகிழ்ச்சியைத் தருகிறது? இந்த திட்டங்கள் பற்றி மக்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்பட்டதாக நீங்கள் மனபூர்வமாக நம்புகிறீர்களா? சமுதாயநலத்திட்டங்கள் பற்றி டெல்லியில் உள்ளவர்கள் அமைத்திருக்கிற ஸ்டடி டீம் சொல்லியிருக்கிறது. எல்லாம் சரி; ஆனால் மக்களின் ஒத்துழைப்பு இருக்கிறதா? எல்லாம் இருக்கிறது; ஆனால் மக்களுக்கு ஆர்வம் இல்லையே என்றுதான் சொல்கிறார்கள். இப்படி மக்களுக்கு ஆர்வம் இல்லாமல் போவதற்கு காரணம் என்ன? கட்டிடங்கள் கட்டுகிறார்கள். அதனால் காண்ட்ராக்டர்கள்தான் பிழைக்கிறார்கள் என்பது மக்களுக்குத் தெரிகிறது. மருத்துவ விடுதிகள் திறக்கிறீர்கள். ஆனால் அங்கு மருந்து சரியானபடி வருவதில்லையென்று மக்கள் சொல்கிறார்கள். போன திங்கள் எங்கள் தொகுதியில் ஒரு மருத்துவ மனை திறக்கப்பட்டது. அது சோஷியல் வெல்பெர் போர்டால் கட்டப்பட்டது. இன்றைய தினம் எப்படியோ தெரியாது, ஆனால் நேற்றையதினம் வரை அங்கு மருந்துகள் போகவில்லை. அந்த மருத்துவ மனை சோஷியல் வெல்பெர் போர்டால் கட்டப்பட்டது. அதற்கு இந்திய அரசாங்கம் தாரளமாக மான்யம் தருகிறார்கள். ஆனால் இதுவரை அங்கே மருந்துகள் செல்லவில்லை. ஏனெனில் ஏற்கெனவே வாங்கிய மருந்துகளுக்காக ஸ்பென்ஸர் கம்பனியில் 10,000 ரூபாய்க்கு கடன் இருக்கிறது. அதை அந்த போர்ட் கட்டவில்லை. அந்தக் கடனை அடைத்த பிறகு மருந்துகள் வாங்கித் தருகிறோம் என்கிறார்கள். இப்படியிருந்தால் உங்கள் திட்டங்களைப் பற்றி மக்கள் பல்லாண்டு பாடுவார்கள் என்று கருதுகிறீர்களா? மக்களிடையே ஆர்வம் எழவில்லை, எழவில்லை என்றால் அதற்குக் காரணம் என்ன? அதற்கு காரணம் மக்களோடு தொடர்பு கொண்டு அந்தத் திட்டங்கள் அமைவதில்லை. ஆளும் கட்சியின் செல்வாக்கிற்காகவும், அதிகாரவர்க்கத்தின் செல்வாக்கிற்காகவும்தான் திட்டங்கள் இருக்கின்றனவே தவிர மக்களிடையே புது விழிப்பை ஏற்படுத்துவதற்கு மறுமலர்ச்சி ஏற்படுத்துவதற்கு அந்தத் திட்டங்கள் பயன்படுத்தப்படுவதில்லை. இன்னொன்று சொல்வேன், இதைவிட அதிகம் பணம் எந்த கட்சியும் செலவழிக்க முடியாது. ஆறு கோடி, எட்டு கோடி, பத்து கோடி என்று கோடிக்கணக்கில் தாராளமாக

பேசுகிறோம், அந்தக் கடன்களை எப்பொழுது கேட்கப் போகிறார்களோ, எவ்வளவு அதிக வட்டி கொடுக்கப் போகிறார்களோ, தெரியாது. எவ்வளவு கோடி, செலவழித்தபோதிலும் இந்த நாட்டு மக்களுக்கு போதுமான அளவிற்கு ஊதியம் கிடைப்பதில்லை. தொழிலாளர்களுக்கு போதுமான ஊதியம் கிடைப்பதில்லை. என். ஜி. ஓ-க்களின் மனதில் திருப்தியில்லை. இவைகளுக்காக இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் நாம் செலவு செய்த பணம் இதற்காகத் தான் என்றால் இதை விட அதிகப்பணம் நாம் எப்பொழுது செலவழிக்கப்போகிறோம்? எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்கள் போடுகிறோம். பண்டித நேருவின் கணக்குப்படி ஐந்து ஐந்தாண்டுத் திட்டங்கள் போடலாம் என்ற கருத்து இருப்பதாகச் சொல்கிறார்கள்.

இந்த நிலையில் இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு வந்திருக்கிறோம். இதற்காக இவ்வளவு பணம் செலவு செய்தாலும் கூட நாட்டு மக்கள் அனைவரும் ஒரு வேளை சாப்பாட்டுக்காவது வழி கிடைக்குமா என்பதை நாம் பார்க்க வேண்டும். நகரத்திலுள்ள மக்கள் பண்டங்களுக்காக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், கிராமத்திலுள்ள மக்கள் பணத்திற்காக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நாம் எவ்வளவு செலவு செய்தாலும் என்ன பயன்? நாமோ நம்முடைய தகுதிக்கு மீறி எவ்வளவோ பணம் செலவு செய்யப்போகிறோம், இப்போதும் செலவு செய்து கொண்டிருக்கிறோம், இந்தப் பணங்கள் எல்லாம் மக்களுக்கு சரியாகப் போய் சேருகிறதா என்பதை யாராவது கண்காணிக்கிறீர்களா? எதிர் தரப்பிலிருந்து இவைகள் எல்லாம் சொல்லப்படுகின்றன என்கின்ற கண்ணோட்டத்தோடு பார்க்காமல், ஏற்படுகின்ற கஷ்டங்களை எண்ணிப்பார்த்து, இந்தவிதமான நஷ்டங்கள் எல்லாம் ஏற்படாமல் நஷ்டங்கள் ஏற்படுவது என்றால் எல்லோருக்கும்தான் - நமக்கும் இனிமேல் உள்ளவர்களுக்கும் எங்களுக்கும் உங்களுக்கும் - ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை எல்லாம் உணர்ந்து செயலாற்றவேண்டும். நாம் எவ்வளவோ கடன்களை வாங்கி செலவு செய்தாலும் கூட இதனால் கஷ்டமடையக்கூடியவர்கள் - நாம் மட்டுமல்ல நமது பிற்கால சந்ததியார்கள் இந்த கடன் சுமையை தீர்க்கவேண்டிய நிலைமை வந்து சேரும் என்பதையும் நாம் ஞாபகத்தில் இருத்திக்கொள்ள வேண்டும். நாம் எவ்வளவோ முயற்சிகள் எல்லாம் செய்திருக்கிறோம், தேசிய வளர்ச்சித் திட்டம்

என்று போட்டிருக்கிறோம் - சமுதாய நல வளர்ச்சித் திட்டம் என்று போட்டிருக்கிறோம். இவைகள் எல்லாம் சரியான முறையில் நடை பெறுகின்றனவா என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்தீர்களா? இதன் மூலம் ஏற்படுகின்ற பயன் என்ன நிலைமையில் இருக்கின்றது என்பதை ஆராய்ந்து பார்த்தீர்களா? இவைகளை எல்லாம் நேரில் போய் பார்த்து தெரிந்து கொள்ளவேண்டும். நீங்கள் எல்லாம் அமைச்சர்களாக போனால் இந்த கஷ்டங்கள் எல்லாம் இதில் இருக்கின்ற கஷ்டங்கள் எல்லாம் புரியாது, மாறு வேடம் பூண்டு போவதாக சொல்லப்படுகிறதே - கனம் அமைச்சர் ராமையா அவர்கள் கூட சமீபத்தில் மாறு வேடம் தரித்து போனார்கள் என்று கேள்விப் பட்டேன். அது பத்திரிகை வேடமா அல்லது நிஜ வேடமா என்பது எனக்குத் தெரியாது. அம்மாதிரி மாறு வேடம் போட்டுக் கொண்டு போய்ப் பார்த்தால்தான் இவற்றையெல்லாம் பார்க்க முடியும். சமுதாய நலத்திட்டத்தின்கீழ் ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து வாங்கப்பட்டிருக்கும் புது ஜீப்பில் அதிகாரிகளுக்கு மீன் வாங்கிக்கொண்டு போகிற காட்சிகளை நான் என் கூட அமைச்சர் அவர்கள் வருவதாக இருந்தால் காட்டுகிறேன், சமுதாய நலத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்டிருக்கின்ற கட்டிடங்களை கட்டினவர்கள் மட்டுமல்ல, மேலும் கட்டுவதற்கும் அதன் மூலம் லாபம் சம்பாதிப்பதற்கும் வேண்டி அமைச்சர்களுக்கு விருந்து நடத்துவதற்காக காங்கிரஸ் தொண்டர்களின் பின்னால் சுற்றிக் கொண்டிருக்கின்ற காண்ட்ராக்டர்களைக் காட்டுகிறேன், மாடுகளை வாங்கி எஜமான் வீட்டுக்கு உடனே கொடுத்துவிடுகிற காட்சிகளைக் காட்டுகிறேன், கட்ட வேண்டிய பள்ளிக்கூடங்கள் எல்லாம் கட்டியாகிவிட்டது என்று ஏட்டில் இருந்தும் உண்மையாகவே கட்டப்படாத காட்சிகளைக் காட்டுகிறேன். போட்டிருப்பதாகக் கூறும் ரோடுகள் எல்லாம் போடப்படாதிருப்பதை நான் காட்டுகிறேன். இவைகளை எல்லாம் நான் நிரூபித்துக் காட்ட முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களேயானால், இப்போது நான் பேசியதை எல்லாம் வாபஸ் பெற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். சமுதாய நலத்திட்டத்தின் மூலமாக நீங்கள் நாட்டுமக்களுக்கு செய்யவேண்டும் என்று கருதுகிற காரியங்களை எதிர்பார்த்து ஆளும் கட்சியாக இருந்து கொண்டிருக்கின்ற காங்கிரஸ் கட்சியில் இருக்கின்ற, உங்களுக்கு மக்கள் காட்டுகின்ற பயத்தை

நீங்கள் பக்தி என்று நம்பிக்கொண்டிருக்கிறீர்கள், மக்கள் உங்களை நம்பி வாழ வேண்டியிருப்பதின் காரணமாக போட்ட வோட்டுகளை எல்லாம் உங்களுடைய உண்மையான பலம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள் - இவ்விதம் எல்லா விதத்திலும் நீங்கள் தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டிருக்கிறீர்கள் - மக்களுடைய உள்ளங்கள் எல்லாம் - எண்ணங்கள், எல்லாம் எந்த நிலையில் இருக்கின்றன என்பதை நீங்கள் அறிந்து கொள்ள முயல வேண்டும் - இன்றைக்கு ஆட்சியில் இருந்து கொண்டிருக்கின்ற காங்கிரஸ் மக்களுடைய பணத்தை எல்லாம் செலவு செய்வதைப் பார்த்து மக்களுடைய பணம் எல்லாம் ''கடலில் கரைந்த பெருங்காயமாகத்'' தான் போய்க் கொண்டிருக்கிறது என்று கிராமப்புரத்திலுள்ள மக்கள் எல்லாம், நகரப் புறங்களிலுள்ள மக்கள் எல்லாம் பரவலாகப் பேசிக்கொண்டிருக் கிறார்கள். இந்த அளவுக்கு ஏன் நீங்கள் கெட்ட பெயர் வாங்க வேண்டும் என்று கேட்கிறேன். இவ்விதம் கெட்ட பெயர் வாங்க வேண்டுமென்றால் நீங்கள் எல்லாம் எதற்காக இங்கே இவ்விதம் ஆட்சி செய்து கொண்டிருக்கவேண்டும்? இந்த அமைச்சரவையே தேவையில்லை, இந்த மாமன்றமே தேவையில்லை என்றுதான் - சமீபத்தில் ஆச்சாரிய கிருபளாணி அவர்கள் ''யூனிட்டரி பார்ம் ஆப் கவர்ன்மெண்ட்''. என்று குறிப்பிட்டது போல் - இவையெல்லாம் ஒன்றும் வேண்டாம் என்றாவது சொல்லித் தொலையுங்கள் என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த கஷ்டங்களுக் கெல்லாம் யாரோ பொறுப்பு என்ற எண்ணந்தான் சாதரண மக்களுக்கு தோன்றும், மந்திரிகளுக்கும் இவையெல்லாம் தோன்றுவதில்லை. அமைச்சர்கள் மாலை வேளைகளில் மந்தகாசமான நேரத்தில் - மக்கள் போடும் மாலைகளை கழுத்தில் வாங்கிக்கொண்டு மக்களைப்பார்த்து புன்சிரிப்போடு ''சௌக்கியமா'' என்று கேட்டுவிட்டு, மக்கள் எல்லாம் பரிபூரண அன்போடு தங்களை வரவேற்றார்கள் என்ற எண்ணத்துடன், அவர்கள் கேட்கும் கோரிக்கைகளுக்கெல்லாம் ''ஆகட்டும் பார்க்கலாம்'' என்று சொல்லி விட்டு அமைச்சர்களாகிய நீங்கள் வந்து விடுகிறீர்கள், வந்து விட்டு இங்கே உட்கார்ந்து விட்டு 1,488 மைல் ரோட் போட்டிருக்கிறோம்'' என்று சொல்லிவிடுகிறீர்கள். ஆனால் போடப்பட்டிருக்கிற ரோடுகள் எல்லாம், எவ்விதம் இருக்கின்றன என்று பார்ப்பதற்கு வேண்டியாவது சில கிராமங்களுக்கு நமது நிதி அமைச்சர் அவர்கள் போவார்களானால், அந்த கிராமத்திற்குப் போன பின்னால் மழை பெய்து விட்டது என்றால்,

கிராமத்திற்கு போன அமைச்சர் அவர்கள் திரும்ப வர முடியாமல், நெப்போலியன் எல்பா தீவில் சிறை வைக்கப்பட்டது போல, சிறை வைக்கப்படுவார்கள் என்பதனோடு மட்டுமல்ல - பின்னால் ரோட்டில் வந்தால் கூட அங்கேயிருக்கின்ற மண்ணில் அமைச்சர் அவர்களுடைய கார் அமிழ்ந்து, அதை வெளியே எடுத்து விடுவதற்கு அந்த கிராமத்திலுள்ள காங்கிரஸ் தொண்டர்கள் போதாது என்று வெளியூரிலிருந்து காங்கிரஸ் தொண்டர்களை கொண்டு வந்தாலும் கூட (சிரிப்பு) வெளியே கொண்டு வர முடியாது. இந்த நிலையில் மின்சாரத்தை மட்டும் 8,000 கிராமங்களுக்கு கொடுத்து விட்டோம் என்று சொல்லுவதில் எந்தவித பயனும் இல்லை. இந்த விதமாக இருக்கின்ற நிலையை - இந்த கன்றாவியைப் பார்ப்பதற்காக வெளிச்சம் வேண்டும் என்று கிராமத்திலுள்ளவர்கள் பேசிக் கொள்கிறார்கள். ஏரிக்கரை உடைந்து போகிறது, அதையெல்லாம் கவனிக்காமல் விளக்கு எதற்கு என்று பேசிக்கொள்கிறார்கள். தமிழ் நாட்டில்கூட ஆடம்பரமாக இருக்கின்றவர்களைப் பார்த்து வெளிச்சம் போடுகிறார் என்று சொல்வதுண்டு. அதைப்போல் வெறும் வெளிச்சம் மட்டும் போட்டு என்ன பிரயோசனம்? இதனால் சாதாரண கிராம மக்களுக்கு எந்தவிதமான நன்மையுமில்லை. உள்ளத்திற்கு அந்த ஒளி வர வேண்டுமானால் அவர்கள் உட்கார்ந்து சாப்பிடுகிற சமயத்தில் அவர்களுக்கு திருப்தி இருக்க வேண்டும். நான் ஏற்கெனவே இந்த சபையில், அவர்கள் சாப்பிடும்போது ஒவ்வொரு கவளத்தை உட்கொள்ளும்போது கனம் நிதி அமைச்சரை அவர்கள் வாழ்த்த வேண்டும் என்ற என் விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறேன். ஆனால், இப்போது, அவர்கள் தாங்கள் சாப்பிடும்போது மதிப்பிற் குரிய நிதி அமைச்சரை நினைக்கக்கூடாது என்று, அவர் என் நண்பர் என்ற முறையில் நான் விரும்புகிறேன். ஏனென்றால், இன்றுள்ள நிலைமையில் அவர்கள் சாப்பிடும்போது அவரை நினைத்தால் அவர்கள் அவரை வாழ்த்துவதற்குப் பதிலாக என்ன சொல்லுவார்கள் என்று சொல்லவும் எனக்கு வாய் கூசுகிறது; சாப்பிடும்போது அவரை நினைத்தால் அந்த அளவிற்குச் சொல்லிவிட்டுத்தான் அவர்கள் சாப்பிடுவார்கள். நீங்கள் ஏன் இந்த அளவிற்குக் கெட்ட பெயர் எடுக்கிறீர்கள். நீங்கள் டெல்லியில் சொல்லிவிடுங்கள் "எப்படியோ நாங்கள் சாமர்த்தியத்தால் தள்ளிக்கொண்டு போகிறோம்." பம்பாயைப் பிரிக்க வேண்டுமென்று ஒரு கட்சியார் சொன்னபோது அந்த ராஜ்ய அமைச்சர்கள் மத்திய சர்க்காரிடம் ஆரம்பத்தில்

“இவ்வளவு இருந்தும் பம்பாயைப் பிரிக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை” என்று சொல்லவில்லையா? அதைப்போல் நீங்களும் படிப்படியாகக் கேளுங்களேன். “மத்திய சர்க்காரின் அதிகாரத்தை எங்களுக்கு மாற்றுங்கள்” என்று நீங்கள் டெல்லியில் கேளுங்களேன். உங்கள் விருப்பமெல்லாம் “மத்திய சர்க்காராக நாமே ஆகிவிடலாம்” என்பதுதான். ஆகவே, இந்நிலையில் கவர்னர் அவர்களுடைய உரை பொம்மைக் கல்யாணம் போல்தான் இருக்கிறது. பொம்மைக் கல்யாணத்தில் நலுங்கு பாடுவார்கள். பெண் நன்றாக இருக்கிறது என்று சிலர் சொல்லுவார்கள். பிள்ளை நன்றாக இருக்கிறது என்று வேறு சிலர் சொல்லுவார்கள். அதே போல, சில கனம் அங்கத்தினர்கள் கவர்னர் அவர்கள் கூறிய விஷயங்களைக் குறிப்பிட்டு “அவர் எவ்வளவு பெருந்தன்மையாக இவைகளைத் தெரிவித்திருக்கிறார்” என்று கூறினார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஏழுமலை அவர் சொல்லாததைக் குறிப்பிட்டு “சொல்லாமலே செய்வர் பெரியோர்” என்று, அவரிடம் தமக்குள்ள நெருங்கிய நட்பு காரணமாகச் சொன்னார். இது உபசாரத்திற்காகப் பேசப்படும் பேச்சு. அவரது உரையில் “கடந்த ஆண்டிலிருந்து இந்த ஆண்டிற்குள் எத்தனை பெரிய தொழிற்சாலைகளைத் துவக்கியிருக்கிறோம், எத்தனை லட்சம் பேருக்கு வேலை கொடுத்திருக்கிறோம். விலைவாசி ஏற்றத்தை எவ்வளவு தூரம் தடுத்திருக்கிறோம்” என்ற விவரங்கள் தரப்பட்டிருக்கின்றனவா? இல்லை. அடுத்து வரும் பட்ஜெட்டில் நமது கனம் நிதி அமைச்சர் அந்த விவரங்களைச் சொல்வார். அந்த உரையில் சேலம் அலுமினியத் தொழில் இருக்காது, இரும்பு தெர்மல் ஸ்டேஷன் இருக்காது, அடாமிக் ஸ்டேஷன் இருக்காது. அவர் குறிப்பிடக்கூடியவை 'நட்களும் மறைகளும்தான். “நட் தொழிற்சாலையை விருத்தாசலத்தில் ஆரம்பித்திருக்கிறோம். மண்பாண்டத் தொழிற்சாலையை பண்ருட்டியில் ஆரம்பித்திருக் கிறோம். பனைமரத் தொழிற்சாலையை பத்தமடையில் ஆரம்பித்தி ருக்கிறோம்” என்று அவர் சொல்ல போகிறார். அவ்வாறு, இவர்களுக்கென பிரத்யேகமாக ஒதுக்கப்பட்ட இலாகாக்களைக் காட்டப்போகிறார். நான் மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களையும் ஆளும் கட்சி அங்கத்தினர்களையும் கேட்கிறேன் “உங்கள் திறமை இதுதானா?” நான் உங்களை மதிக்கிறேன். உங்கள் சொந்தக் கட்சிக்காரர்கள் உங்களை மதித்து உங்களுக்கு ஏன் அதிகாரங்களைத் தரக்கூடாது? இப்படியே போனால், கவர்னர்

உரையும் கனம் அமைச்சர்களின் சொற் பொழிவுகளும் நடைபெற்றுக் கொண்டே போகும்; நிலைமை இப்படியே இருக்கும்; மக்களுக்கு அதிருப்தி இருந்துகொண்டே இருக்கும்.

ஒன்றை கவனத்தில் வைத்துக்கொண்டு கனம் உணவு அமைச்சர் நாளை பதிலளிப்பார் என்று நம்புகிறேன். வியாபாரிகளைப்பற்றி அவர் பேசியிருப்பதைப்பற்றி இங்கே நான் அப்படியே குறிப்பிட வேண்டாம் என்று நினைக்கிறேன். அதை நான் குறிப்பிட்டால் வியாபாரிகள் மிகவும் வருத்தமடையக் கூடும். ஒரு சமயம் வியாபாரிகளை மிகவும் கண்டித்துப் பின்பு வியாபாரிகளிடம் சென்றிருக்கும்போது "உங்களிடம் எனக்கு அவ்வளவு அசூயை இல்லை. தர்மத்திற்குப் பொதுவாக பேசிவிட்டு நடந்து கொள்ளுங்கள்" என்றும் அவர்களிடம் பேசியிருக்கிறார். தர்மத்தையே போதித்துக் கொண்டிருந்தால் எல்லாம் நடந்து விடுமா? தர்மத்தை போதித்துக் கொண்டிருக்க இவர் என்ன சங்கராச்சாரியாரா? "நீங்கள் எவ்வளவு தர்மத்தோடு நடக்கிறீர்கள்" என்று அவர்கள் இவரிடம் திருப்பிக் கேட்கமாட்டார்களா? (குறுக்கீடு) கனம் நிதி அமைச்சர், என்னை, இந்த பக்கத்தில் மோதவிடப் பார்க்கிறார். நாங்கள் 'மோதிக் கொள்வதில்லை' என்று ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம்

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : அதைத்தான் நான் முன்பே சொன்னேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : மோதிக் கொள்ளாமல் இருப்பது ஒன்று; ஆலிங்கனம் செய்துகொள்து வேறொன்று. கேரளத்தில் நீங்கள் செய்துகொண்டிருப்பதுபோல் நாங்கள் அவசர ஆலிங்கனம் செய்து கொள்ள மாட்டோம்.

வியாபாரிகளால் உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறதா அல்லது விவசாயிகளால் அது ஏற்பட்டதா என்று ஆராய்ந்த மத்திய சர்க்கார் ஆய்வுக் குழுவினர் "வியாபாரிகளால்கூட உணவு நெருக்கடி வரவில்லை; விவசாயிகள்தான் உணவுப் பொருள்களை அதிகமாகப் பதுக்கிவைக்கிறார்கள்" என்று சொல்லியிருக்கின்றனர். 'அக்ரோ-இகனாமிக் ஸ்கீம்' என்ற ஒரு திட்டத்தைக் குறிப்பிடு கிறார்கள். அதை வங்காளத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள். நோய் இன்னது என்றே கண்டு பிடிக்கவில்லை, ஆளுக்கு ஒரு மருந்து சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் மருந்தை எந்த நோயாளி

சாப்பிடுவான். ஆகையால்தான் இந்தப் பிரச்சினைபற்றி திட்ட வட்டமாகச் சொல்லவேண்டும்.

அதோடு தொழில் பிரச்சினை பற்றியும் திட்ட வட்டமாகச் சொல்லவேண்டும். தேசீய மயமாக்கும் பிரச்சினை பற்றியும் திட்ட வட்டமாக அறிவித்துவிட வேண்டும். நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் பேசும்போது தேசீயமயமாக்குவது நமது கொள்கை என்று சொன்னார்கள். அவருடைய கட்சியைச் சேர்ந்த மற்றொரு அங்கத்தினர் "தேசீயமயமா? அது இப்போது வேண்டாம்" என்று சொன்னார்கள். யார், யாரைக் கேட்டுக் கொண்டு எப்படி நடக்கிறார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் அமைச்சரவை கொண்டுள்ள கருத்துக்களுக்கு மாறாகப் பேசுவதை நான் குறிப்பிடுகிறேன். ஒரு கனம் அங்கத்தினர் இங்கே பேசுகிற நேரத்தில், நிலத்தைப் பிரித்து நிலம் இல்லாத உழவர்களுக்குத் தரப்போகிறோம் என்று சொன்னார்கள். அப்போது இந்தக் கருத்தை எனக்கு எதிரிலிருந்த உணவு அமைச்சர் அவர்களிடம் சுட்டிக் காட்டி இப்படித்தான் செய்யப் போகிறீர்களா என்று நான் கேட்டேன். நான் கடைசியில் விவாதத்திற்கு பதிலளித்துப் பேசும் போது இதைப் பற்றிச் சொல்கிறேன் என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர்களில் பலர் விலைவாசிகளைக் குறைக்கவேண்டும் என்று சொன்னார்கள். விலைவாசிகளைக் குறைக்கக் கூடாது என்று இரண்டொருவர் அழுத்தமாக வாதாடினார்கள். நீங்கள் எந்தப் பக்கத்தில் நிற்கப் போகிறீர்கள்? இதைப்பற்றி தெளிவாக்க வேண்டும். அந்தக் கருத்தில் தெளிவு ஏற்பட்டால்தான் அதைக் குறித்து மற்றவர் களுடைய கருத்து என்ன என்று எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கும். ஆகையால், ஏதோ ஒரு சில வகுப்பாருடைய கல்யாணத்தில் கல்யாணப் பிள்ளைக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய பெண் வயதானவளா, இள வயதுடையவளா, அழகானவளா அல்லது அழகற்றவளா, அவள் கருப்பா சிகப்பா என்று ஏதும் தெரியாமல் முடிக்காடிட்டு இருக்கிற காரணத்தினால், பெண் எப்படி இருப்பாளோ என்று அந்தப் பையன் அங்கலாய்த்துக்கொண்டு இருப்பது போல, எப்போது முக்காடு போய் அவளை நேராகப் பார்க்கலாம் என்று இருப்பது போல, இப்படி பெண்ணைக் காட்டாமல் இருப்பது போல நீங்கள் திட்டவட்டமாக ஏதும் சொல்லாமல் இருக்கிறீர்கள். இந்த உணவுப் பிரச்சினையைத் தீர்த்து, தொழில் துறையை வளர்த்து மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை

உயர்த்த எல்லாக் கட்சிகளுடைய ஒத்துழைப்பையும் கேட்கும் இந்த நேரத்தில் நான் சார்ந்திருக்கும் கட்சியானது ஒத்துழைப்பைத் தருவதில் தயங்காது என்று எடுத்துச் சொல்லிக் கொண்டு, அதே நேரத்தில் இந்திய எல்லையில் பயம் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எங்களுக்கு டில்லிக்காரன் என்றாலேயே கோபம் என்றால், பீகிங்காரன் என்றால் சகித்துக் கொள்வோம் என்று யாரும் கருதவேண்டாம். டில்லிக்காரனை முயற்சி செய்து எப்படி விரட்டுவது என்று எண்ணிக்கொண்டிருக்கும்போது, பீகிங்காரன் எப்படிப் பட்டவன் என்று நமக்குத் தெரியாது. அவன் சிரிக்கிறானா, சந்தோஷமாக இருக்கிறானா, கோபமாக இருக்கிறானா அல்லது அழுகிறானா என்று கூடக் காட்ட முடியாத முக பாவத்தை ஆண்டவன் அவனுக்குத் தந்திருக்கிறான். அவனை நம்பி, அரசனை நம்பி புருசனை கை விட்ட கதையாக இங்குள்ள எந்தக் கட்சியும் ஐயப்பாட்டுக்கு உட்படாது, அதற்காக கடுமையான பதங்களை உபயோகித்து - க்விஸ்லிங், ட்ரைட்டர்ஸ் என்ற பதங்களை உபயோகித்து - பேசத் தேவையில்லை. நமது கம்யூனிஸ்ட் நண்பர்கள் டில்லிப் பட்டணத்தில் ஐஸனோவரை கோலாகலமாக வரவேற்புக் கொடுக்கக் கூடியவர்கள் இந்திய எல்லைப் பிரச்சினையில் வேறு விதமாக நடந்து கொள்வார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அப்படி நினைக்க தேவையில்லை. நான் ஒன்று சொல்லிக் கொள்ளுகிறேன். அப்படி ஏதாவது நமது எல்லையைப் பாதுகாப்ப தற்காக இங்கிருந்து ஒரு படையைத் திரட்டி அனுப்பி சீனாக்காரன் முன்னால் நிறுத்தினாலும், அம்மாதிரி படையை அனுப்பும் முன்னால் சோறு போட்டு அனுப்புங்கள். அனுப்பக்கூடிய படைகளை பட்டினியாக அனுப்பி சீனாக்காரன் பார்க்கிறபோதே செத்து விழும்படியாக விட்டு விடாதீர்கள் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

உரிமைப் பிரச்சினை மீதான விவாதம்

உரை : 33 *நாள் : 16.12.1959*

Sri. C.N. ANNADURAI : Mr Speaker, Sir, I would very respectfully submit that the Chair should allow me certain latitude because being a layman and having to deal with legal, intricate and constitutional problems, I may not be quite logical. As the Hon. the Leader of the House has stated, there is no precedent for this and we will have to formulate our own opinions with regard to the alleged incident. Before proceeding to that, I would first consider certain political tenets that are alleged to be hel by our Party as propounded by the Hon. the Leader of the House. Of course, I cannot expect the Hon. the Leader of the House to know exactly what we mean by 'Dravida Nad'. He has been pleased to state that we do not believe in the cultural unity of this country but in the very next sentence, he has stated that there are cultural differences but there right to be unity in spite of differences. But I am not going to argue about the illogicality of that argument. He has further stated that we have got the greatest contempt for the Constitution and it is our avowed object to have the Constitution broken. We have never stated that either here or elsewhere, nor have we got such a tenet. As a matter of fact, taking the oath of allegiance does not mean that one should not speak against certain sections or certain implications of the Constitution. The Hon. the Leader of the house has also pointed out that because we have taken the oath of allegiance as per Article 188 of the Constitution, we are bound to respect it. We do not have any disrespect for that but Article 188 of the Constitution is also followed by Article 368 of the Constitution werein it

is expressly stated that an amendment of the Constitution is allowed. Of course, the procedure is cumbersome but there is a provision for amendment. Therefore, whatever views we express by words or by deeds to our view of the Constitution, it is safe-guarded by Article 368 of the Constitution which provides for an amendment of the Constitution. The Hon. the Leader of the House has been expatiation upon the tenets of the Dravids Munetra Kazhagam and he was so good as to inculcate heroism in our minds. He said : 'If you take a stand, be prepared for the consequences'. We are not running away from any consequences. But we would like to point out that because consequences are stated to be very irksome, the Government cannot prevent an Hon. Member from expressing his view in a legitimate and constitutions manner.

Sir, the Hon. the Leader of the House was a little bit 'hasty' — if I may use that word - when he said : 'You may have individual disrespect for the Governor but you should be present here when he addresses. Whatever may be the constitutional propriety of his argument, I would like to reiterate here, what I have already reiterated, that we do not have an iota of disrespect to the Governor as an individual. Condemnation of an institution cannto be misconstrued into a denunciation of the particular individual incumbent in that office. What all we are trying to do, we might have done it in a rather cumbersome way which might have caused certain difficulties with regard to sentiment; but what we have tried to do here is to register our protest and disapproval of the institution of Governor which is not an elected institution. It is a nominated institution, nominated or appointed by the President and because of that we have expressed in our Party manifesto and in our propaganda outside and even in speeches made here sometime, that we do not think that there is any necessity for Governorship here and even if there is some sort of ceremonial necessity for Governorship, we can have an elected Governor and even if there is to be an elected Governor he should be a son of the soil of this place. Well, the Hon. the Leader of the

House has laboriously built up an argument that we are inculcating hatred between the North Indians and South Indians. I deny that charge but even if that charge is to be substantiated I doubt very much whether it comes under the jurisdiction of this House because creating commaual hatred or hatred between two communities of this country comes perhaps under the jurisdiction of the India Penal Code and not under the jurisdiction of this House. Therefore, Sir, he has been pointing out certain arguments just to show that the incident that is alleged to have take place is so terrible and so fearful that the consequences also would be very heavy. Well, I am not to be threatened into submission by the arguments of the Hon. the Leader of the House. I am entirely in your hands and I have got the greatest respect for and confidence in your judgment. Sir, Congressmen also did certain things in the past and they were prepared to face consequences. Please do not think that the last battalion of heroes has run out from this country and there are fresh battalions and their methods may vary. But it is not for the Hon. the Leader of the House to inculcate heroism in others and let his preserve the heroism he once had. So, I would respectfully submit that the Hon. the Leader of the House made the fearful charge that we are creating hatred between North Indians and South Indians. By 'North Indians' we mean not people inhabiting North India. It is a symbolic expression of what is technically known as the 'Central Government'. When ever we talk about North Indian domination, we do not for a moment mean that a man from Bombay or a man from Rajasthan or a man from Calcutta is dominating over three other men in South India. When Congress people talked about British Imperialism, they did not mean John or Jones but the system which was then in vogue. So, when we talk of the North Indian domination, let not the Hon. the Leader of House charge us that we are against the individual North Indian as such. Wheat we mean by North Indian domination is the Central Government and the Constitution which vests the Central Government with extraordinary powers to show that there is

domination of the Central Government over the States here. That is why, Sir, when I had occasion to explain the matter I said that myself and the members of my party did not have even an iota of disrespect to the Governor. I repeat that here not because I think that would be a sort of excuse but because I think that the Governor coming from a distant province should not carry with him the painful message that there are people here who hold disrespect to him. I have the greatest respect for the Governor because prior to his Governorship here he was heading the State of Assam during which time he was carrying on a heroic and vigorous struggle against Central Government's domination over the States. When I compare tha: attitude with the attitude that we find here I think that in spite of the fact that he comes from the North he is more skin to my leaning, in contrast to the Hon. Finance Minister's attitude towards me. Therefore let not the impression be created in the minds of anybody that we are creating any disrespect to the Governor.

Another point. The Hon. Leader of the House laboriously built up an argument that we are ridiculing the Constitution. There are people who burn the Constitution. When the Hon. Leader of the House asked me to be prepared for the consequences of our action he ought to have realised that those people who burnt the Constitution were not only prepared for the consequences but took the consequences, also. If it is found that certain consequences would come out of my action. I will not run away from those consequences. So let me not be criticised or condemned on that score.

As a matter of fact I consider the matter to be very serious not from my point of view but from the point of view of the precedent that we are going to make. The Hon. Leader of the House heas pointed out that Governor forms part of the legislature and he has quoted Article 168 of the Constitution which says that every State shall have a legislature which shall consist of Governor and in the States of Bombay, Bihar, etc., tow Houses

and in other States, one House. He has been arguing that Governor is an integral part of the legislature. I dispute his contention. The Governor is not an integral part of the State legislature for two reasons. Firstly he is not a member of any House. A member of a House means that he can take part in the proceeding of the House. Article 194 of the Constitution sub-clause 4 says as follows :-

"The provisions of clauses 1, 2 and 3 shall apply in relation to persons who by virtue of this Constitution have the right to speak in, and otherwise to take part in the proceedings of a House of the Legislature of a State or any committee thereof as they apply in relation to members of that legislature."

I would like to lay stress on the word "proceedings" because the Governor may address the Legislative Assembly but he cannot take part in the proceedings of any house. The word "Proceedings" does not merely confine itself with speaking. It is expressly stated that any individual member takes part in the proceedings by following the recognised methods of casting his vote, giving notice of a motion, or opposing a motion or opposing or supporting the report of a committe, etc. It is not as if "speaking" alone constitute taking part in proceedings and that the definition of the word "proceedings" includes only that. The Governor is not a part of this House or that House. Article 158 expressly states that the Governor shall not be a member of either Houses of Parliament or houses of the Legislature of a State. Therefore privileges arise only when the privilege of a member of a particular House with which we are concerned is undermined. Then only the question of privilege arises. My contention is that Governor is not an internal part of the Legislature. He is not a component part of any of the Houses since he is not a member of either House in the State. He is not allowed to be a member constitutionally and cannot take part in the proceedings of the House. Therefore my contention is that Governor is not an integrat part of the legislature. I would also like to stress another point.

I am a layman and not a legal expert. I want to know one thing. Why should the Constitution speak of "Legislature" and "House"? What is the difference between a legislature and a House? As far as I understand legislature means the Governor and two Houses. It cannot have a physical entity. It can have constitutional entity. We know what is meant by a legislative assembly. We know what is mean by legislative council. We know what is meant by Governor. All put together is what is called "legislature". It has only a constitutional entity which of course we cannot perceive as a physical entity. Of course the Hon. the Leader of the House has not given us the source from which he was arguing about the word "Legislature". Eight years ago a point was discussed in the other House when a painful incident took place in another context. It was then argued that a thing, that has happened in a joint session cannot be thought of and discussed in a particular session of one House. That is why the Hon. the Leader of the House has argued that Governor forms part and when one part is affected it affects the whole. He said something like that. I was very much interested in his logic.

It has been stated in the motion read out by the hon. Member from Lalgudi constituency that since the Governor has summoned us, it is imperative on our part to attend. I would beg that aspect to be argued. The Governor is not an integral part of the legislature or of this House. If it is said that he is part of the legislature, he cannot summon himself. You can summon only other people and not yourself.

Mr. SPEAKER : Let us not have cross arguments. I would request the Hon. Member Sri. C.N. Annadurai to proceed. I would request Hon. Member to take the matter seriously.

Sri C.N. ANNADURAI : I am very glad that the Hon. the Leader of the House finds it fit to intervene. I would very much like him to intervene now and then.

Mr. SPEAKER : I do not want anybody to interrupt in the middle.

Sri C.N. ANNADURAI : The very fact the Governor summons us shows that he is distinct from the House. My next argument that if it is a breach of privilege of the House, it does not concern the Governor because Governor is not an integral part of the House.

The second argument that was advanced was that we were trying to ridicule the Constitution. If it was intended to ridicule the Constitution to many things would have done. But unfortunately we are charged not with an act of commission but with an act of omission. What all is stated is that we abstained from attending the Governor's Address. We have expressly stated our convictions. I do not deny those convictions. My contention is that nothing has been done by us to cause disrespect to the Govenor or contempt of the House. The Hon. the Leader of the House has pointed out as to what constitutes contempt. He has read from May's Parliamentary dictum. What is it that causes "contempt"? If he has read it further lic would have found that questions of privilege arise when through that act, commission or omission, the functioning of the House or any business of the House is impeded. By our not attending that function, nothing has been impeded. The function has not been impeded. As a matter of fact, in his own usual way, the Leader of the House has said that the people do not care about all these things. We know his method of putting certain things, and therefore I expected that. Having met seriously to discuss this thing, he perhaps thought that the people will have their own view on this, and he told therefore that people were not concerned with this. This also gives strength to my argument. If the people are not concerned about this, the Governor is not concerned about it. The Governor is not an integral part of this House, and yet the Leader of the House thinks that it is contempt and a breach of privilege. As a matter of fact, I would like to go through the history of the privileges itself. Why is it that the Members of the House have got certain privileges? It is only to safeguard their safe conduct, their freedom of speech, and to get immunity from

arrest and other things, the whole question of privileges has arisen. I have got an instance from the British House of Commons. When a particular member brought forward a Bill wanting to reduce the extra-ordinary expenditure of the British Monarch, and when that question was raised, the House of Commons stated that he was a traitor, because he wanted to cut down the expenditure of His majesty the King, and he was fined one thousand pounds. Afterwards, when a more intelligent and liberal Monarch sat on the British throne, the same member appealed and his fine was refunded. It was stated by the Monarch in the House of Commons that to criticise the actions of or the provisions for, the Monarch could not be construed to be traitorous. So too, criticising the formation of the institution of Governorship cannot be construed to be a contempt of the Institution of Governorship or even curtailing the privileges of this House. Therefore, Sir, I think that no case has been made out by either the Hon. Member for Lalgudi or by his able advocate, the Leader of the House.

The Hon. Sri. C. SUBRAMANIAM : Sir, I protest against the use of the words 'his advocate'. I thought I functioned as the Leader of the House here, and I wanted to help you to come to a decision. I object to the use of the words 'his advocate'.

Mr. SPEAKER :I think the Hon. the Leader of the House is correct. He is only to clarify the position for me and not to support Sri Lazar.

Sri. C.N. ANNADURAI : Sir, I am glad that he is not advocating his cause.

Mr. SPEAKER : Let us proceed on the assumption that he has spoken as the Leader of the House.

Sri. C.N. ANNADURAI : Sir, the Leader of the House pointed out rule 8 of the Madras Legislative Assembly Rules. It has a history behind it. Rule 8 was introduced, because an extraordinary situation occurred eight years ago when an non. Member intervened when the Governor addressed, raised a point

of order, spoke something, and walked out. And when the question was raised at that time, it was argued that there was no specific provision against interfering with the, or interruption the, Governor's Address. That is why it is stated here that during the Governor's Address, if anybody misbehaves, interrupts, meterrogates, or raises a point of order, all these things will come under breach of privilege. As a matter of fact we were not here in the House when the Governor was addressing, and therefore we cannot come within the mischief of rule 8 of the Assembly Rules.

Another thing, Sir. Because we have taken the oath of allegiance to the Constitution, it does not mean that we shall not agitate for an amendment of the Constitution. Any attempt at amendment is not to be construed to be a contempt of the Constitution. We are very shortly going into the question of amending Schedule VIII of the Constitution, which has been amended in Parliament. The States are asked to ratify it. Therefore any attempt at amendment of the Constitution cannot be misconstrued as a contempt of the Constitution. As a matter of fact, Article 368 of the constitution itself provided for amendments. All we did by not attending the Governor's Address was to impress on the minds of the people and to impress on the minds of those concerned with the Constitution that we registered our disapproval of the institution of Governorship, the method of recruiting the Governor, and the manner in which public funds were being spent on that institution, which we considered to be unnecessary. It may be found to be very necessary by the other parties. But we consider that the institution of Governorship and the expenditure incurred on that is very unnecessary. And to register our protest and to register our disapproval, we abstained ourselves from the Governor's Address. We do not have an iota of disrespect to the Governor or to the Constitution. As a matter of fact, the Leader of the House might remember that when Congress Party itself was placed in a very delicate position, it was kind enough to point out in 1935 that it entered the Legislature

to wreck the Constitution and not to work it. We did not say even that, because we know that wrecking an alien Constitution is much more easy than wrecking the home-made Constitution. Therefore, we do not think that we have got even that need to wreck the Constitution. As a matter of fact, since the Constitution itself provides for amendments, we need not wreck the Constitution. Now the wreckers are coming forward as the safeguards of the Constitution and say, 'you should not cast any aspersion on the Constitution; you should not look at the Constitution', you should have a reverential look at the Constitution'. Constitution is not sacrosanct. It is man-made. It can be remade and reshaped, and entire sections of the Constitution can be deleted by observing proper procedure. Therefore it cannot be considered that any definition or any disapproval of any provision of the Constitution amounts to a contempt of the Constitution.

So, Sir, as a layman, would you allow me too sum up what I said? The Governor is not an integral part of this House for two reasons. First he cannot be a member of any of the Houses. He cannot take part in the proceedings of any House. I have laid stress on the word proceedings which includes not only speaking, but also taking part in voting and other intems, Secondly, since the Governor issues the summons, he cannot be a part and parcel of the body, because one cannoot issue summons to oneself. Thirdly, it is not our intention to discredit or show discourtesy to the Governor. We are only up against the institution and the manner in which Governors are being appointed and the money being spend on them. Rule 8 of the Assembly Rules expressly states the position only when such and such disturbances take place. By our not attending the Governor's Address, we have not impeded the functioning of this House or of any officer of the House. Therefore, I submit that there is no *prima facic case* for the motion.

நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்

உரை : 34 நாள் : 16.03.1960

திரு. சி. என். அண்ணாதுரை : கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின் மீது நான் நாளைய தினம் பேசுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

துணை சபாநாயகர் : நாளைய தினம் எதிர்க்கட்சித் தலைவரும், நிதி அமைச்சர் அவர்களும் பேசுவார்கள்.

திரு. சி. என். அண்ணாதுரை : கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்களின் உத்தரவின்படி இந்த நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

ஆண்டிற்கு ஆண்டு தயாரிக்கப்படும் நிதிநிலை அறிக்கை ஒவ்வொரு ஆண்டின் முன்னேற்றத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய வகையில் இந்த அறிக்கை தயாரிக்கப்படவில்லை. ஒரு சிலருடைய தகுதிக்குத் தக்க வகையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டிலேயும் தரப்படும் நிதிநிலை அறிக்கையில் இருந்து அடுத்த ஆண்டிலே எந்த அளவிற்கு எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதை சுட்டிக் காட்டத்தக்க வகையில் நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்படுமானால் மிகவும் உபயோககரமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரப்பட்டது என்பதும், எத்தனை தொழிற் சாலைகள் நாட்டில் உள்ளது என்பதையும் அவைகளில் எவ்வளவு எவ்வளவு தனியார் துறையில் இருக்கிறது என்பதைப்பற்றி விவரங்கள் எல்லாம் தரப்பட்டது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அதனைத் தொடர்ந்து எத்தனை பேர்களுக்கு இப்பொழுது புதிதாக வேலை

வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது, எத்தனை புதுத் தொழிற்சாலைகள் துவக்கப்பட்டிருக்கிறது என்ற வகையில் நிதிநிலை அறிக்கை இருந்து இருக்குமானால் துரைத்தனத்தார் செய்திருக்கும் காரியங்களின் சாதனைகளைப் பற்றி அதன் ஆதரவாளர்கள் மகிழவும் அதிலுள்ள குற்றங்குறைகளை எடுத்துக் காட்டக் கூடியவர்கள் அவைகளை எடுத்துக் காட்டவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கக் கூடும். ஆனால் இந்தாண்டு நிதிநிலை அறிக்கை வேறு ஒரு வகையில் திருப்பப் பட்டிருக்கிறது என்பதை நான் கவனித்துப் பார்க்கிறேன். இது, முறை தவறான காரியம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் வளர்ந்து கொண்டு வருகிற ஜனநாயகத்தில் ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் கடமைகளைச் சரிவர செய்ய வேண்டுமென்று துரைத்தனத்தார் விரும்பினால் நிதிநிலை அறிக்கைகள், ஒவ்வொரு ஆண்டும் தரப்படுகிற நிதி அறிக்கையின் முறை மாறுபடாமல் அவைகளைத் தொடர்ந்து ஒப்பிட்டுப் பார்க்கும் விதத்தில் அமைந்திருக்க வேண்டு மென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை எந்த கண்ணோட்டத்தோடு தயாரித்திருந் தாலும் நாட்டு மக்கள் இதை எந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்களோ அதன் அடிப்படையில்தான் அமைச்சர் அவர்கள் தனது நிர்வாகத்தை நடத்திச் செல்ல வேண்டும். பொதுவாக நம் நாட்டில் இன்றைய தினம் தொழில் வளர்ந்திருக்கிறதா என்று கேட்கிறபோது ஒருபுறம் தொழில்கள் வளர்ந்திருக்கிறது என்று கூறத்தக்க வகையில் நமக்கு தகவல்கள் கிடைக்கிறது. நம் நாட்டில் டன்லப் டயர் கம்பெனி, டி.ஐ. சைக்கிள்ஸ் கம்பெனி, செயற்கை பட்டுத் தொழிற்சாலை, என்ஜினியரிங் தொழிற்சாலைகள், ஜின்னிங் பாக்டரி 256, அரிசி மில்கள் 661, மோட்டார் போக்குவரத்து, தனியார் துறையில் காகித ஆலை, தனியார் துறையில் அலுமினியம் தொழிற்சாலை, சேலம் மாக்னிஸைட், தனியார் துறையில் அமைக்கப்பட்டுள்ள சோடா உப்புத் தொழிற்சாலை, மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை அமைக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. சிமெண்ட் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள், சர்க்கரை உற்பத்திச் செய்யும் இயந்திரங்கள், பட்டாபிராமில் ஏற்படுத்தப் பட்டுள்ள ரயில்வே வாகன்கள் கட்டுவதற்கான தொழிற்சாலை, மோட்டார் சக்கரங்களும் ரிம்களும் தயார் செய்வதற்காக டி. வி. எஸ் தொழிற்சாலை, டால்மியா சிமிட்டி கம்பெனி, தாழயூத்து சிமிட்டி கம்பெனி, மதுக்கரை சிமிட்டி கம்பெனி, சேஷசாயி கம்பனிகளும்,

பாரி கம்பனி நடத்தும் பல்வேறு தொழில்களும் சேர்ந்து இந்த நாட்டில் தொழில் வளர்ந்திருக்கிறது. தனியார் துறையில் இந்தளவு இருக்கிறது. பெரிய தொழிற்சாலைகள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இங்கிருப்பது நெய்வேலியும், பெரம்பூர் கோச் பாக்டரிகளுமாகும். இந்த இரண்டும் மத்திய அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் இருந்து அதிலிருந்து வரும் லாபத்தில், பிச்சைக் காசு என்று சொல்லும் வகையில் ஒரு குறிப்பிட்ட தொகைதான் நமக்கு கிடைக்கும் வகையில் இந்தத் தொழில்கள் அமைந்திருக்கின்றன. பட்டாபிராமில் ஏற்படுத்தப்பட்டுள்ள ரயில்வே வாகன்கள் கட்டுவதற்கான தொழிற்சாலையில் மூலதனமாக ஒரு கோடி ரூபாயில் சென்னை சர்க்காரின் பங்குத் தொகையாக 2 லட்சம் ரூபாய்தான் போட்டி ருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையும் இந்த சர்க்கார் நடத்தும் பெரிய தொழிற்சாலை என்று சொல்வதற்கில்லை. நாஷனல் இன்டஸ்ட்ரீஸ் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் மூலம் கிண்டியில் ரண சிகிச்சை கருவிகள் உற்பத்தி செய்ய மத்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இதற்கு ரஷ்ய அரசாங்கத்தின் உதவியும் கிடைக்கப்போகிறது. இரண்டாயிரம் பேர்களுக்கு இதனால் வேலை கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவும் மத்திய சர்க்காரிடம்தான் இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் மூன்று சர்க்கரை ஆலைகளும் நூற்பு ஆலைகள் மூன்றும் நம் மாநிலத்தில் இருக்கின்றன. இந்த நூற்பு ஆலைகளும் 51 - 78 லட்சம் ரூபாய் நமது அரசாங்கம் முதலீடு போட்டிருக்கிறார்கள். இவைகளை நீக்கிப் பார்த்தால் நமது துரைத்தனத்தார் நடத்துகிற தொழில்களில் ஒன்று பஸ் போக்குவரத்து, இரண்டாவது சிங்கோனா, மூன்றாவது என்ஜினியரிங் வொர்க்ஷாப், நாலாவது பால் பண்ணை. நான் கேட்கிறேன், இந்த சாதனைகளைக் கண்டு நீங்கள் பெருமைப்படுகிறீர்களா? என்று. தொழில் முன்னேற்றம் குறித்து நேற்று தொழில் அமைச்சர் அவர்கள் கூறியபோது ஐந்து கோடி ரூபாய் முதல் போட்டு ஒரு தொழிற்சாலையை நடத்தும் விதத்தில் இந்த நாட்டில் ஒரு முதலாளி இருக்கிறாரா, இருக்கிறாரா, அப்படி ஒரு முதலாளி கிடைப்பாரா, கிடைப்பாரா என்று தேடிக் கொண்டிருந்தேன் என்று சொன்னார்கள். நீங்கள் முதலாளிகளைத் தேடுகிறீர்கள் என்பது நாடு உணர்ந்ததே. ஆனால் ஐந்து கோடி ரூபாய் மூலதனம் போட்டு ஒரு தொழிற்சாலையை நடத்துவதற்கு இந்த நாட்டில் ஒரு முதலாளி இல்லை என்று கூறும்போது, அந்த அளவிற்கு இந்த மாநிலத்தில் பணப்

புழக்கத்தின் பஞ்சம் ஏற்பட்டு இருக்கிறது என்றால், இந்த வகையில் வட நாட்டில் பெரிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டு மென்றால் ஐந்து கோடி அல்லது ஐம்பது கோடி கூட முதல் போட்டு நடத்தக்கூடிய முதலாளிகள் அங்கு இருக்கிறார்கள் என்பதிலிருந்து, அதில் தொக்கி நிற்பது, வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்பதற் குள்ள உதாரணத்தை தொழில் அமைச்சர் அவர்களே தெரிவிக் கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். தனியார் துறையில் ஐந்து கோடி ரூபாய் மூலதனம் போட்டு நடத்தக் கூடியவர்கள் இந்த மாநிலத்தில் இல்லாமல் இருக்கலாம். நமது துரைத்தனத்தாருக்கு ஆண்டு ஒன்றுக்கு 80 கோடி அளவில் வருவாய் கிடைக்கிறது. நூறு கோடிக்கு மேல் கடன் பெற்று வாழ்க்கையை நடத்தும் துரைத்தனத்தார் ஐந்து கோடி ரூபாய் மூலதனம் போட்டு நடத்தும் தொழிற்சாலை ஒன்றாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். பெரிய பெரிய தொழிற்சாலைகள் மத்திய அரசாங்கத்தினிடமும், அதற்கு அடுத்திருக்கிற தொழிற்சாலைகளை தனியார் துறையிலும் கொடுத்து விட்டு நமது அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்ப்போம். பொள்ளாச்சியில் ரம்பச்சாலையுடன் மரம் பக்குவப்படுத்தும் நிலையத்திற்காக 1.64 லட்சமும், சென்னையில் ரம்பச் சாலையுடன் கூடிய மரம் பக்குவப்படுத்தும் நிலைத்திற்காக 3.69 லட்சமும், தீக்குச்சிகள், மருந்து தடவிய தீப்பெட்டிகள் தயாரிப்புத் தொழிற்சாலைக்காக 1.90 லட்சமும், காலணி தயாரிப்பு - பயிற்சி யூனிட்டுகளிற்காக 0.17 லட்சமும், தச்சுப் பட்டறை-கொல்லப் பட்டறைக்காக 1.25 லட்சமும், கிண்டியில் கைக்கருவிகள் தயாரிப்புப் பணி நிலையத்திற்காக 2.17 லட்சமும், துணி ஆலைகளுக்கு வேண்டிய பாகங்கள் பிரிவுடன் துணி ஆலைப் பாகங்களுக்கான பணி நிலையத்திற்காக 1.30 லட்சமும், பண்ணைக் கருவிகள் தயாரிப்புக்கான பணி நிலையத்திற்காக 0.02 லட்சமும், ஹரிக்கேன் விளக்கு தயாரிப்புப் பணி நிலையத்திற்காக 1.11 லட்சமும்,பித்தளைப் பாத்திரம் வெட்டுக் கருவி பணி நிலையத்திற்காக 1.30 லட்சமும், கிண்டியில் அறுவைச் சிகிச்சைக் கருவிகள் தயாரிப்புப் பணி நிலையத்திற்காக 0.18 லட்சமும், மின்சார சாமான்கள், செப்பனிடும் பணி நிலையத்திற்காக 4.22 லட்சமும், தராசுகள், துலாக்கோல், ஆய்வுக் கூட - விஞ்ஞான கருவிகள் தயாரிப்புப் பணி நிலையத் திற்காக 0. 61 லட்சமும், விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையத்திற்காக 0.44 லட்சமும் விஞ்ஞானக் கண்ணாடிக்

கருவிகள் தொழிற்சாலைக்காக 2.10 லட்சமும், கிண்டி தொழில் பேட்டைக்குப் பணி நிலையக் கார்ப்பரேஷனுக்காக 1.88 லட்சமும், தென் ஆற்காடு மாவட்டத்தில் மட்பாண்டத் தொழிற்சாலைக்காக 0.80 லட்சமும், கற்றாழை நார் பொருள்கள் தொழிலை அமைத்து அபிவிருத்தி செய்வதற்காக மூன்று செயல்முறை பயிற்சி நிலையங் களை நிறுவ 0.37 லட்சமும், பனை ஓலை பொருள்கள் தொழில் அபிவிருத்திக்காக உற்பத்தி பயிற்சி நிலையங்கள் நிறுவ 0.53 லட்சமும், பனைமரத்திலிருந்து கட்டில்கள், மேஜை, நாற்காலி போன்ற பொருள்கள் தயாரிக்க 0.34 லட்சமும், பிரம்புத் தொழில் பயிற்சி நிலையத்திற்காக 0.24 லட்சமும், மூங்கில் பொருள் செய்வதற்காக 0.08 லட்சமும் கண்ணாடி வளையல் தொழிலுக்கு 0.11 லட்சமும், படிகக் கூழாங்கல் உடைத்து பொடியாக்கும் யந்திரச் சாலைக்காக 0.14 லட்சமும், ஈரோட்டில் தாழ்ப்பாள், ஆணி, திருகுமரை தயாரிப்பு யூனிட்டிற்காக 0.47 லட்சமும், வெண்கலப் பாத்திரத் தொழில் அபிவிருத்திக்காக பணிப்பயிற்சி நிலையங்கள் நிறுவ 0.19 லட்சமும், காகித விளையாட்டு சாமான்கள் தயாரிக்க 0.34 லட்சமும், சரிகை, சித்திரப் பூ வேலைகளுக்காக 0.24 லட்சமும் இந்த வகையில் இந்த நிதிநிலை அறிக்கையில் திட்டமிட்டிருக்கிறார்கள், இந்த ஆண்டுக்கு. நான் இந்த அமைச்சரவையைக் கேட்கிறேன், முற்போக்கு துரைத் தனத்தார் என்றும், இந்திய துணைகண்டத்திலேயே எங்களைப் போல் நன்றாக நிர்வாகம் நடத்தக் கூடியவர்கள் அதிகம் பேர்கள் இல்லை என்று தங்களைத்தாங்களே பாராட்டிக்கொள்ளும் இந்த துரைத் தனத்தார், தங்களது அபாரமான அறிவைப் பயன் படுத்திக் கொண்டு பெரிய பெரிய தொழிற்சாலைகளை இந்த மாநிலத்தில் நிறுவுவதற்குப் பதிலாக, கற்றாழை நார் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை யையும், பனை ஓலையினால் செய்யப்படும் பொருள்கள் செய்யும் தொழிற்சாலையும் மட்டும் வைத்துக்கொண்டு, பெரிய பெரிய தொழிற்சாலைகளை மத்திய அரசாங்கத்தினிடத்திலும், அதற்கு அடுத்து இருக்கிற தொழிற்சாலைகளை தனியார் இடத்திலும் கொடுத்து விடுவார்களானால் நமது நாட்டில் தொழில் வளர்ந்திருக் கிறது என்று மக்கள் பெருமைப்பட்டுக் கொள்வார்களா? என்று கேட்கிறேன். நேற்றைய தினம் தொழில் அமைச்சர் அவர்கள், தனியார் துறையில் விடப்பட்ட தொழில்களை சர்க்காரே ஏன் ஏற்றெடுத்து நடத்தக்கூடாது என்று கேட்டதற்கு தனிப்பட்டவர் பேசுவதுபோல் அதற்கு எங்களிடம் பணம் எங்கேயிருக்கிறது என்று கேட்டார்கள்.

உங்கள் திறமை பணத்தைப் பெற பயன்படவேண்டும். அதை விட்டு விட்டு எனது மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் ஒரு இடத்தில் என்னைப் பற்றி சொல்லியதுபோல், பண்டாரங்கள் கூடிக்கொண்டு இல்லை என்று சொல்வது போல் இவ்வளவு பேர்கள் இருந்து, இவ்வளவு அனுபவம் பெற்றவர்கள், இவ்வளவு ஆற்றல் உள்ளவர்கள், ஆற்றல் இருப்பதோடு மட்டுமல்ல, ஆற்றல் எல்லாம், உலகிலேயுள்ள தெல்லாவற்றையும் உருட்டித் திரட்டி எங்களிடம் தரப்பட்டி ருக்கிறது. மிச்சம் ஒருவரிடமும் இல்லை என்று கூறக் கூடிய நீங்கள் செய்யக்கூடியதெல்லாம் இதுதானா என்று நான் இந்த சட்ட மன்றத்தின் முன் கேட்க விரும்புகிறேன்.

ஆகையினால் இந்த துரைத்தனம் நடத்துகின்ற விதத்தைப் பார்த்தால் உண்மையிலேயே தொழில் துறையில் இந்த சர்க்காரும் இருக்கின்ற திறமைகளை சரியான வகையில் பயன் படுத்துவதற்கு வாய்ப்பு அளிக்காத வரையில் தனியார் துறைக்கு எவ்வளவுதான் ஒதுக்கப்பட்டிருந்தாலும் அதனால் எந்தவிதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை. இதை பேசுகின்ற சமயத்தில், இங்கிருக்கின்ற அமைச்சர்கள் மார் தட்டிக்கொண்டு ஆம், இதுதான் எங்களுடைய கொள்கை என்கிறார்கள். நாங்கள் சொல்வதுதான் சோஷியலிஸம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நல்ல வேளையாக இவர்கள் எல்லாம் தோன்றுவதற்கு முன்னாலேயே சோஷியலிஸ தத்து வார்த்தங்கள் தோன்றியிருக்கின்றன. ஆனால் சோஷியலிஸ தத்து வார்த்தங்களை கடைபிடித்து வருகிற உலகத்திலுள்ள யாராய் இருந்தாலும் சரி, அந்த அறிவாளிகள் எல்லாம் உண்மையிலேயே இவர்களுடைய சோஷியலிஸக் கொள்கையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இவர்கள் வேண்டுமானால் நாங்கள் செய்து கொண்டிருப்பதுதான் சோஷியலிஸம் என்று வாதாடலாம். அதல்லாமல் இதுதான் உண்மையான சோஷியலிஸம் என்று இவர்கள் சொல்லிக்கொண்டிருப்பார்களானால், நிச்சயமாக சோஷியலிஸத்தை எழுதியவர்கள் - இன்று மறைந்து போனார்கள் என்றாலும் - அவர்கள் தங்கள் கல்லறையை பிளந்து கொண்டு வெளியே வந்து உங்களை சபிப்பார்கள். நாங்கள் செய்வது வேண்டுமென்றால் சமய தர்மம் என்று வாதாடுங்கள், முதலாளிகள் இருக்கத்தான் வேண்டும் என்று வாதாடுங்கள், தேர்தல் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது, ஆகவே தனியார்கள் துறையைப் பெருக்கிக்கொண்டிருக்கவேண்டியதுதான் என்று வேண்டுமானால் வாதாடுங்கள் - அது வேண்டுமானால் ஒரு

அரசியல் யூகமாக இருக்கலாம் - ஆனால் அறிவாளிகள் எல்லாம் எழுதி வைத்த சோஷியலிஸத்தை இது ஒத்திருக்கிறது என்று பேசாதீர்கள். அவ்விதம் பேசிக்கொண்டிருப்பது - நாங்கள் 150 பேர்கள் இங்கு இருக்கிறோம் - எங்களை ஒன்றும் செய்ய முடியாது என்று மேதைத் தனமாக சொல்லும் கருத்தாகவே இதைக்கொள்ள முடியும். இந்த மன்றமாய் இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த மாமன்றமாய் இருந்தாலும் சரி, இவர்கள் சொல்லுகின்ற சோஷியலிஸ கருத்துக்களை கேட்டு வெளியிலுள்ளவர்கள் கைகொட்டி சிரிப்பார்கள், அவர்கள் ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள் என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இவர்கள் இந்த வகையில் சோஷிய லிஸத்தை பரப்பு வருவது மட்டுமல்ல, நம்முடைய அமைச்சரவை தவறான முறையை கையாளுகிறார்கள் என்பதையும் நான் குறிப்பிட்டுக் காட்டவிரும்புகிறேன். இந்த சர்க்கார் மக்களுக்கு ஆசையை ஊட்டுகிறார்கள், அவர்களுடைய மனதில் - நமக்கு எல்லாம் இன்னும் கொஞ்ச காலத்தில் நன்மைகள் ஏற்படுத்தும் - நம்பிக்கையை வளர்த்து விட்டிருக்கிறார்கள். துரைத்தனத்தார் ஊட்டியிருக்கின்ற இந்த ஆசையில் - இந்த நம்பிக்கையில் மண் விழாமல் பார்த்துக் கொள்ளுகிற வகையில் இவர்கள் என்ன செலவு செய்து இருக்கிறார்கள், அதிலும் செலவு செய்வதற்காக ஒதுக்கப் பட்டிருக்கும் பணத்தில் எவ்வளவு செலவு செய்திருக்கிறார்கள், வரவர எவ்விதம் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள், என்பதை எல்லாம் பார்த்தால் ஒதுக்கியிருக்கிற பணம் எல்லாம் சரியான முறையில் செலவு செய்யாமல் விடப்பட்டிருக்கிறது, அதோடு ஒதுக்குகிற தொகையும் குறைந்து கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதை நான் எடுத்துக்காட்டுவதற்காக சர்க்கார் கொடுத்திருக்கின்ற அறிக்கைகளிலிருந்து சில விவரங்களை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நெசவாளர்களுக்கு குடியிருப்பு காலனிகள் கட்டுவதற்காக திட்டகாலத்தில் 74.29 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதை நம்பிக் கொண்டு அவர்கள் தங்களுக்கு குடியிருப்பு காலனிகள் கிடைக்கும் என்று நம்பிக்கொண்டிருந்தார்கள், இப்போதும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் 1960-61-ல் செலவழிக்கப் படுவதையும் சேர்த்து பார்த்தால் 59.61 லட்சம் ரூபாய் என்று காணப்படுகிறது. இவ்விதம் 20 லட்சம் ரூபாய் குறைந்திருப்பதற்கு காரணம் என்ன? தொழிலாளர்கள் வீடு வேண்டாம் என்று

சொன்னார்களா? தொழில் அமைச்சர் அவர்களின் புன்னகை யிலிருந்து தெரிகிறது, நாங்கள் என்ன செய்வது, தொழிலாளர்கள் தங்களுடைய பங்கை தரவில்லையே, என்று நினைப்பது போல் இருக்கிறது. தொழிலாளர்களுக்கு வீடு வசதி செய்து கொடுப்பதற்காக ஏன் நீங்கள் முதலாளிகளை வற்புறுத்தியிருக்கக் கூடாது? அவர்கள் பங்கு தரவில்லை என்று சொல்லுவதினால் மட்டும் எந்தவிதமான பிரயோசமும் இல்லை. . .

உயர்திரு. ஆர். வெங்கடராமன் : நான் சாதாரணமாக பேச்சில் குறுக்கிடுவதில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் இதைப் பற்றி பேசுவதில் குறிப்பிட்ட ஒரு விஷயத்தை கவனிக்கவேண்டும் என்பதற்காக சொல்லுகிறேன். பிஸிக்கல் டார்ஜெட் வேறு, பைனான்ஷியஸ் டார்ஜெட் வேறு. வீடுகள் கட்டின பிறகுதான் பணத்தை கொடுக்க முடியும். இதில் வீடுகட்டிக்கொடுக்கும் விஷயத்தில் பிஸிக்கல் டார்ஜெட் படி 1,600 வீடுகள் கட்டப்பட வேண்டும். அதில் இப்போது 938 வீடுகள் கட்டியாய் விட்டது. இன்னும் 200, 300 வீடுகள் அடுத்த வருஷத்திற்குள் கட்டப்பட்டு விடும். பாக்கி 130 வீடுகள் பின்னால் கட்டப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : தொழில் அமைச்சர் அவர்கள் மறுபடியும் புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு விளையாட ஆரம்பிக்கிறார். நாங்கள் எடுத்துச்சொல்ல விரும்புவது மக்கள் மீது ஏராளமான ஆசையையும் நம்பிக்கையையும் காட்டியிருக்கிறீர்கள், அதற்கு அல்லது அவைகளை நிறைவேற்ற நீங்கள் என்ன முடிவு எடுத்திருக்கிறீர்கள். நீங்கள் காட்டுகின்ற புள்ளி விவரங்களையும், வீடுகள் கட்டின பிறகுதான் பணம் கொடுக்க முடியும் என்பதையும் நாங்கள் நன்றாக புரிந்து கொண்டிருக்கிறோம். அது பெரிய விஷயமல்ல, அதுவும் இந்த சபைக்கு வந்த பிறகு அறிந்து கொள்ளக் கூடிய அபாரமான விஷயமல்ல. அது சாதாரணமாக தெரிந்து கொள்ளக்கூடிய விஷயம்தான்.

காலனி தயாரிப்பு - பயிற்சி யூனிட்டுகள் என்ற இனத்தில் ஒதுக்கியுள்ள தொகை 5.54 என்று இருக்கிறது. ஆனால் 1960-61-ல் செலவு செய்யப்பட இருப்பதையும் சேர்த்து கணக்கிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் காணப்படுவது 2.32. ஏன் இந்தக் குறைவு ஏற்பட்டது?

மின்சார சாமான்கள் செப்பனிடும் தொழிலுக்காக திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருப்பது 17.70. ஆனால் 1960-61 ஆண்டுகளில் செலவழித்தான பிறகும் கணக்கிடப்பட்டிருக்கின்ற தொகை 11.95 விஞ்ஞானக் கண்ணாடித் தொழிற்சாலைக்காக திட்டத்தில் திட்டமிட்டிருப்பது 8.42. ஆனால், செலவழிக்கப்போவது 6.15. சில தொழில்களில் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதற்காக திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருப்பது 47.74. ஆனால் செலவழிக்கப்போவது 23.76 இவைகளை எல்லாம் பார்த்து கூட்டுறவு அமைச்சர் அவர்கள் பெருமைப்படுகிறார்களா என்று கேட்கிறேன். குறைந்த குதிரைத் திறனுள்ள மோட்டார் தயாரிப்புக்காக திட்டத்தில் ஒதுக்கியிருப்பது 11.07. ஆனால், செலவு செய்யப்படுவது 5.91. நான் சொல்லுகிற கணக்கு எல்லாம் 1960-61-ஆம் ஆண்டில் செலவு செய்யப் போவதையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். சென்னையில் சைக்கில் தொழிற்சாலைக்காக திட்டத்தில் ஒதுக்கியிருப்பது 12.50 லட்சம் ரூபாய். ஆனால், இவர்கள் செலவு செய்யப்போவது 9.40 லட்சம் ரூபாய். கைப்பணிகளுக்காக திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருப்பது 57.50. ஆனால் செலவு செய்யவிருப்பது 33.26. கைத்தொழில் பொருள்களை விற்பனை செய்யும் நிலையங்களை நிறுவுவதற்கு திட்டத்தில் ஒதுக்கப்பட்டது 15.26. ஆனால், செலவு செய்யப்போவது 10.52. துணிகளுக்கும் பாய்களுக்கும் அச்சிடுவதற்கும், சாயமிடுவதற்கும் - இந்தத் தொழில் சாதாரணமான தொழில் - அதிலும் சாயமேற்றுவதில் நீங்கள் சிறந்தவர்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் - அப்படியிருந்தும் இதில் செலவு செய்ய ஒதுக்கப்பட்டது 5.55. ஆனால் செலவு செய்யப்போவது 0.31. இதைப்பார்த்து அமைச்சரவை பெருமைப்படுகிறதா என்று கேட்க விரும்புகிறேன். இதற்கு வேண்டுமானால் நீங்கள் நடைமுறை சிக்கல்களை காரணங்களாகக் காட்டலாம். திட்டங்கள் எல்லாம் இந்தவிதமான காரணங்களினால் தான் காலதாமதம் ஏற்படுகிறது என்று நீங்கள் சொல்லலாம். அவ்விதம் நீங்கள் சொல்லுவதாக இருந்தால் நான் குறிப்பிடுகிற மற்றொரு குற்றச்சாட்டுக்கு நீங்கள் பதில் சொல்லியாகவேண்டும். இந்த திட்டங்களை எல்லாம் ஏன் வரைமுறை இல்லாமல் போடுகிறீர்கள். நிறைவேற்ற வேண்டிய திட்டங்களை கணக்கிட்டு அதற்குரிய காலத்தில் நிறைவேற்றுகிற தக்க அளவுக்கு அதற்குத் தகுந்த அளவில் திட்டங்களை தீட்டி செப்பனிட்டு வைத்துக்கொண்டு வேலைகளை செய்யவேண்டும். அதல்லாமல் வரைமுறையில்லாமல் திட்டங்களை

போட்டுவிட்டு அதற்குரிய காலத்தில் நிறைவேற்றாமல் தவறியிருக்கிறீர்கள், அதற்கு காரணம் என்ற குற்றச்சாட்டுக்கு நீங்கள் பதில் சொல்லியாக வேண்டும். மருத்துவத் துறையில் இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பது 813.65 லட்சம். ஆனால் 60-61ல் செலவு செய்யப்படவிருப்பதையும் சேர்த்து கணக்கிட்டுப்பார்த்த பிறகும் வருகின்ற தொகை 528.73 லட்சம். நான் மருத்துவ அமைச்சர் அவர்களை கேட்கிறேன். மருத்துவத் துறைக்கு நாட்டில் எவ்வளவு அவசியம் இருக்கிறது? நீங்கள் திட்டத்தில் ஒதுக்கியிருப்பதே குறைவான தொகை. நாட்டில் இருக்கின்ற சுகாதார சீர்க்கேட்டினை நாம் எல்லோரும் அறிந்திருக்கின்றோம். மருத்துவ வசதியில்லாமல் நாட்டுமக்கள் நலிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் கூட இந்த குறைவான தொகையை ஒதுக்கி மக்களுடைய மனதில் ஆசையை காட்டிய பிறகும், ஒதுக்கிய தொகையும் செலவு செய்யப்படாமல், ஒதுக்கப்பட்டது 813 என்று புள்ளிவிவரங்களை கொடுத்துவிட்டு, செலவு செய்திருப்பது அல்லது செய்யப்போவது 528 என்று புள்ளிவிவரம் தந்திருக்கிறார்கள். இதைப்பார்த்துவிட்டு மருத்துவ அமைச்சர் அவர்கள் மருத்துவத்துறையில் இந்நாட்டு மக்கள் மிகவும் திருப்தி அடைந்திருக்கிறார்கள், அல்லது சுபிட்சம் அடைந்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன். மாநில நெடுஞ்சாலைக்காக இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருப்பது 370.85, ஆனால் 1961.61-ல் செலவான பிறகும் சேர்த்து கணக்கிட்டு இருப்பது 287.91 லட்சம். ஆகவே நீங்கள் வகுத்திருக்கிற திட்டங்கள் எல்லாம் சரியானபடி நிறைவேற்றப்படவில்லை என்பது இதிலிருந்து தெளிவாகின்றன. அதிலும் போடப்பட்டிருக்கின்ற திட்டங்களையும் தனிப்பட்ட முதலாளிகளிடம் கொடுத்துவிட்டு, இந்த அமைச்சர் அவை, எங்களிடம் மிஞ்சுவார் யாரும் இல்லை, எங்களிடம் கெஞ்சுவார்தான் இருக்கின்றனர் ஏராளம் என்று சொல்லுகின்ற அளவில் இருந்து கொண்டிருக்கின்றன. ஏதாவது புள்ளிவிரங்களை பார்த்துக் காட்டினாலும் கூட, இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள். இவர்களால் புரிந்து கொள்ளவும் முடியாது என்று தனக்கு இருக்கின்ற திறமையை காட்டுவதாக, பாராளுமன்ற முறைக்கு உகந்ததல்லாத முறையில் பண்பாட்டுக்கு ஒவ்வாத முறையில் இதே சபையில், பல தடவையும் நம்முடைய சட்டசபை முதல்வர் அவர்கள் எங்கள் பக்கம் இருக்கின்ற உறுப்பினர்களைப் பார்த்து நான்

தங்களிடம் மன்னிக்க வேண்டுகிறேன், இந்த வார்த்தையை உபயோகிப்பதற்காக - தனக்கு உரித்தான எதேச்சாதிகாரத்தை செலுத்திக்கொண்டு வருகிறார்கள். உறுப்பினர்களை பார்த்து இவ்விதம் எல்லாம் கேட்பதற்கு இவர்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள்? இவர்கள் ஒன்றும் படிக்காமல் வந்துவிட்டு பேசுகிறார்கள் என்று சொல்லுவதற்கு இவர் யார் என்று கேட்க விரும்புகிறேன். நாங்கள் ஏதாவது வரைமுறையில்லாமல் பேசினால் அதைத்தடுத்து நிறுத்துவதற்கு இந்த சபையில் தாங்கள் இருக்கிறீர்கள், நாங்கள் படிக்காமல் இங்கு வந்து பேசுகிறோம் என்றால் அதைப்பார்த்து கேலி செய்ய பொதுமக்கள் வெளியில் இருக்கின்றார்கள். எங்களுடைய படிப்பைப் பற்றி முடிவுகூற இவர்கள் எந்தவிதமான நீதிபதிகளும் அல்ல, அல்லது நாங்கள் படிக்காமல் வந்து பேசுகின்றோம் என்று சொல்ல இவர்கள் எங்கள் வழக்கறிஞர்களும் அல்ல. ஏதோ சந்தர்ப்ப வசத்தால் அமைச்சர் களாகிவிட்டார்களே தவிர இயற்கையிலே தங்களுக்கு ஏற்பட்ட திறமையினால் அல்ல . . .

உயர்திரு. எஸ். லாசர் : On a point of order, Sir. கனம் அங்கத்தினர் அவர்கள் ஆரம்பம் முதலே அவர்களுடைய உரையில் அமைச்சர்களை குறிப்பிடுகிற முறையில் ‘‘நீங்கள்’’ ‘‘நீங்கள்’’ என்று தலைவர் அவர்களையே பார்த்துக் குறிப்பிடுவதாக இருக்கிறது. முறைப்படித் தங்களைப் பார்த்துத்தான் எல்லா அங்கத்தினர்களும் பேச வேண்டும். அப்படியிருக்கும்போது கனம் அங்கத்தினர்கள் அவர்கள் இவ்விதம் பேசிக்கொண்டுபோவது முறையாகுமா என்று கேட்க விரும்புகிறேன்.

துணை சபாநாயகர் : The Hon. Member must address the Chair.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : இதிலே ஏழக்கூடிய பிரச்சினை இன்னொன்று இருக்கிறது. நான் நடந்து கொண்ட விதத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஒழுங்கை மீறி நடப்பதாகக் குற்றம் சாட்டினார்கள். இந்தக் குற்றச் சாட்டு சபாநாயகரைப் பற்றிக் குறிப்பிடுவதாகும். அதாவது நான் ஒழுங்கு மீறி நடக்கும்போது சபாநாயகர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்று அவரைப் பற்றிக் குறிப்பிடுவதாகும். ஒழுங்கான முறையில் இருந்தாலும் அது அவர்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். நான் ஒழுங்கு மீறி நடக்கிறேனோ என்று குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : *சட்டசபை ஒழுங்கை மீறி நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நடந்துகொண்டார் என்று எடுத்துக் கூற விரும்புகிறேன்.*

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : It is a reflection on the conduct of the Chair. He should withdraw it.

துணை சபாநாயகர் : The hon. Member must address the House through the Chair. Let him not address the Hon. Minister direct.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : He has said that I have acted beyond the scope of the procedure followed in this House and against the procedure of this House. That is very Serious allegation - leave alone me; I am a very poor Member of the House and he is entitled to attack me - unfortunately against the Chair in the conduct of the business of the House. It is a reflection against the Presiding Officer. Such a reflection should not be allowed and I would request you, Sir, to ask the Hon. Member to withdraw what he has said which amounts to a reflection against the conduct of the Presiding Officer.

துணை சபாநாயகர் : The Hon. Member will withdraw it.

திரு. சி. என். அண்ணாதுரை : I unconditionally withdraw. *நான் எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்தது, உறுப்பினர்கள் இந்த மன்றத்தில் பேசும்போது நிதி அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகின்ற நேரத்தில் அது அதிக எதேச்சாதிகாரப் போக்கில் இருக்கிறது என்பதைத்தான் தங்கள் மூலமாக நான் கவனப்படுத்தினேன். ஒழுங்கு முறைக்கு மாறாக இருந்தால் நாங்கள் எப்படி தங்களுடைய ஆணைக்கு அடங்க வேண்டுமோ, அதே போன்று அவர்களும் தங்களுடைய ஆணைக்கு அடங்க வேண்டுமென்பது உலகம் அறிந்த உண்மை. இந்த தரப்பிலிருந்து ஒரு உறுப்பினர் பேசும் நேரத்தில், "விவரம் தெரியாமல் பேசுகிறீர்கள், உட்காருங்கள்" என்று அமைச்சர் அவர்கள் சொன்னது என்னுடைய காதில் கேட்டது. எது உண்மையில் ஜனநாயகப் பண்பு என்றால், எது இந்த மாமன்றப் பண்புக்கு உகந்தது என்றால், விவரங்கள் தெரியாமல் பேசினால், அதனுடைய பூரா விவரங்களையும் இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கவேண்டும். ஆனால், தங்களுடைய மேதாவித்தனத்தைக் காட்டிக்கொள்ள வேண்டும் என்று விவரங்களை அவர்களுக்குத் தராமல் விவரங்களைத் தெரிந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அவர்களுக்குக் கொடுக்காமல், இப்படி பேசினால் அது அவர்களுடைய எதேச்சாதிகாரப்*

போக்கைத்தான் காட்டுகிறது என்ற முடிவுக்குத்தான் நாம் வரவேண்டியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் சமூக நலத்திற்காகத் திட்டமிட்டது 47.26 லட்சம் ரூபாய், ஆனால் செலவானது 10.14 லட்சம் ரூபாய், சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்திற்காகத் திட்டமிட்டது 1,392.39 லட்சம் ரூபாய், அதில் செலவானது 1,274.66 லட்சம் ரூபாய். மீன் வளத்தை அதிகப்படுத்தத் திட்டமிட்டது 95.11 லட்சம் ரூபாய். ஆனால் அதில் செலவானது 84.63 லட்சம் ரூபாய். கால்நடை பராமரிப்பிற்காகத் திட்டமிட்டது 217.48 லட்சம் ரூபாய். அதில் செலவானது 195.65 லட்சம் ரூபாய். இப்படி செலவிடப் போவதாகச் சொல்லி, ஆசை காட்டி, வாக்களித்து, அந்தந்தத் துறைகளில் சம்பந்தப்பட்டவர்களும், பொது மக்களும், நம்முடைய துரைத்தனத்தார் இவைகளை யெல்லாம் செய்து கொடுக்கப் போகிறார்கள் என்று எதிர்பார்த்து நிற்கின்ற நேரத்தில், திட்டத்தின் முடிவில் நீங்கள் (சர்க்கார்) கணக்குக் காட்டியிருப்பது ஏற்கனவே போட்ட திட்டப்படி இல்லாது இப்போது கணக்கில் குறைந்திருக்கிற காரணத்தினால், நீங்கள் (சர்க்கார்) வேண்டுமென்றே திட்டமிடுகிற நேரத்தில் ஏராளமாகச் செய்வதாக வாக்களித்து, பிறகு திட்டம் முடியும் போது அவசரம் அவசரமாகக் கணக்குப் பார்த்து காரியங்களைச் செய்ய முடியாது. உண்மையில் போதுமான அளவுக்கு பொது மக்களுடைய ஒத்துழைப்பு கிடைக்காத காரணத்தினால் திட்டமிட்ட அளவுக்குச் செலவழிக்க இயலாமல், குறைந்த அளவில் செலவழித்து, போட்ட திட்டங்களை நிறைவேற்றாமல், பொது மக்களுக்கு நீங்கள் நம்பிக்கை துரோகம் செய்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டை இந்த அமைச்சரவையின் பேரில் தங்கள் மூலமாகச் சாட்ட விரும்புகிறேன். இது என்ன ஒரு குறைபாடா என்று யாராவது கேட்பாரேயானால், நமது மாநிலத்தின் வரவு செலவுத் திட்டங்களையும், மாநில கணக்குகளையும் பரிசீலிக்கக் கூடிய உயர்தர அதிகாரி இதனைப் பற்றி கீழ்க்கண்டவாறு சொல்லியிருக்கிறார்:-

"The object of control over expenditure is to secure as close an approximation as possible between the actual expenditure and the final grant or appropriation under each subject of appropriation. The degree of closeness with which the appropriation for the year approximates to the actual expenditure as finally recorded is an index of the efficiency of Government budgeting and control over expenditure."

ஆக, முதலிலே ஏராளமான அளவுக்கு - தாராள மனப்பான்மை காட்டத் தக்க அளவுக்கு - ஏராளமான பணத்தைச் செலவழிக்கப் போவதாக நீங்கள் (சர்க்கார்) ஆசை காட்டுகிறீர்கள். பிறகு நிறைவேற்றித்தருகின்ற நேரத்தில் அது குறைந்து, நம்முடைய வரவு - செலவுக் கணக்கைப் பரிசோதிக்கின்ற உயர்தர அதிகாரி இது சரியாகாது, துரைத்தனத்தின் திறமைக்கு அடையாளமாகாது என்று எடுத்துக் காட்டுகிற அளவுக்கு நடந்துகொண்டிருக்கின்ற இந்த துரைத்தனத்தை தங்கள் மூலமாக நான் கண்டிக்க விரும்பு கிறேன்.

நீங்கள் (சர்க்கார்) பெறுகிற வருவாய், இது வரையில் பெற்றி ருக்கிற வருவாய், இந்த ஆண்டில் கணக்கெடுத்துப் பார்த்தாலும் அல்லது எந்த ஆண்டுக் கணக்கை வேண்டுமானாலும், எடுத்துப் பார்த்தாலும், இந்தத் துரைத்தனம் ஏழை - எளிய மக்கள் தரும் பணத்தை நம்பி நடத்தப்படுகிறதே தவிர, தனியார்களிடத்தில் தொழில்களை விட்டு விட்டபோதிலும், தனியார்களிடத்தில் மோட்டார் போக்குவரத்தை விட்ட போதிலும், செல்வம் குவிந்திருக்கக்கூடிய இடத்திலேயே மேலும் பணம் சேர்ந்து கொண்டிருந்தாலும், போடக்கூடிய வரிகளெல்லாம் மறைமுக வரி என்கின்ற காரணத்தினால், ஏழை மக்கள் பண்டங்களின் பேரில் கொடுக்கிற வரியைக் கணக்கிட்டுப் பார்த்தால் க்ஷேம நல சர்க்காராக இருந்தாலும், அல்லது சோஷலிஸ சர்க்காராக இருந்தாலும் வெட்கப் படவேண்டும். இப்படி மறைமுக வரி நாளுக்குநாள் அதிகம் ஆக ஆக, விற்பனை வரியானது எல்லாவற்றிற்கும் மேலாக 15 கோடி ரூபாய் அளவுக்கு - 15.85 கோடி ரூபாய் என்று சொல்லத்தக்க அளவுக்கு - வந்திருக்கிறது. இப்படி விற்பனை வரியைச் செலுத்துகிற மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு செலுத்துகிறார்கள் என்பதையும், மக்களுக்கு வாழ்க்கையில் எவ்வளவு துன்பங்களைக் கொடுத்திருக்கிறோம் என்பதையும் அறியாது அமைச்சர்கள் பேசுகிறார்கள். அதோடு பேசும்போது மற்றவர்களைப் பார்த்து இதற்கு ஏதாவது பரிகாரம் சொன்னார்களா என்று ஒருவரையொருவர் பரிகாரத்தைச் சொல்ல மற்றவர்களைக் காட்டுகிறார்கள். நான் துரைத்தனத்தாரைக் கேட்க விரும்புவது தங்கள் மூலமாக, இந்த விலைவாசி உயர்வைக் கட்டுப் படுத்தக் கூடிய உரிமை, கட்டுப்படுத்த வேண்டிய திறமை, கட்டுப்படுத்த வேண்டிய கடமை, யாரைச் சேர்ந்தது? யாரைப் போய்க்

கேட்கச் சொல்லுகிறீர்கள்? யாரைக் கேட்டால் விலைவாசி குறையும்? இந்தத் திக்கில் இருக்கிற விலைவாசியைக் கட்டுப்படுத்தக் கூடிய இடம் என்று எங்கே கை காட்டுகிறீர்கள்? விலைவாசிகள் கட்டுப்படுத்தப்படும், விலைவாசிகள் கட்டுப்படுத்தப்படும் என்று இந்த மாமன்றத்தில் கேட்கப்பட்ட நேரத்திலெல்லாம் வாக்குறுதி தரப்பட்டு, நடவடிக்கை எடுத்துக்கொள்கிறோம், நடவடிக்கை எடுத்துக்கொள்கிறோம் என்று சொல்லி, அவ்வப்போது கொடுக்க வைத்துக்கொண்டிருக்கிற புள்ளி விவரங்களைக் நாட்டி ஜால வேடிக்கை நடத்தப்படுகிறது. விலைவாசி இறங்கி வருகிறது, இறங்கு முகமாக விருக்கிறது, இறங்கியே விட்டது, எதிர் பார்த்தைவிட இறங்கி விட்டது என்று பேசுவதும், இதையெல்லாம் கண்டு நெஞ்சில் கை வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற மக்கள் நிம்மதி அடைந்து விடுவார்களா? விலை வாசிகள் ஏறிப் போகுமானால் கூலியை அதிகப்படுத்தவேண்டுமென்று சொல்லும் போது, சம்பளத்தை அதிகப்படுத்தவேண்டுமென்று சொல்லும்போது, கூலி அதிகம் கொடுப்பதாலும், சம்பளம் அதிகம் கொடுப்பதாலும், விலைவாசிகள் மேலும் ஏறுகிறது என்று விலைவாசியை காரணமாகக் காட்டி தடுத்து நிறுத்தப் பயன்படுகிறதே தவிர, எந்த இடத்தில் நீங்கள் முயற்சி எடுத்து விலைவாசிகளைக் குறைத்துக் கட்டுப்படுத்தினீர்கள்? இதற்காகப் போடப்பட்ட கமிட்டிகள், ஏற்படுத்தப்பட்ட குழுக்கள் எடுத்துச் சொன்ன யோசனைகளை எந்த அளவுக்கு எடுத்துக் கொண்டீர்கள்? மத்திய சர்க்காரினால் அசோக் மேத்தா கமிட்டி என்ற ஒரு குழு நியமிக்கப்பட்டு, விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அவர்கள் தந்த சில யோசனைகளையாகிலும் இந்த சர்க்காரும், மத்திய சர்க்காரும் எடுத்துக்கொண்டார்களா என்று அறிய விரும்புகிறேன். நீங்கள், செய்து பார்க்கத் தவறி விட்டோம் என்று கை விரிக்கப் போகிறீர்களா? அல்லது கமிட்டியால் சொல்லப்பட்டவைகள் நடைமுறைக்கு ஏற்றதாக இல்லை என்று குழுவிலிருந்தவர்களைக் குற்றம் சாட்டப் போகிறீர்களா? அல்லது மக்கள் கூக்குறல் இருந்தது, குழு போட்டோம், இப்போது மக்கள் அடங்கி விட்டார்கள், ஆகையால் குழுவைப் பற்றி கவனிக்கவில்லை என்று தந்திரமாய்ப் பேசப் போகிறீர்களா என்று அமைச்சரவையிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன், தங்கள் மூலமாக. இந்த அமைச்சரவை விலைவாசிகளைக் கட்டுப்படுத்த, விலைவாசிகளை மட்டப்படுத்தத் தவறிவிட்டார்கள் என்று மூன்றாவதாக நான் குற்றம் சாட்ட

விரும்புகிறேன். ஆக நான் மூன்று குற்றச்சாட்டுகளை இந்த அமைச்சரவையின் பேரில் சாட்டுகிறேன். தனியார் துறைக்கு எல்லாத் தொழில்களையும் ஒதுக்கி, பெரிய பெரிய தொழில்களை யெல்லாம் தனியார் துறைக்கு ஒதுக்கி, சர்க்கார் கத்தாழை நாரும், பனை ஓலையும், மண்பாண்டமும்தான் எங்கள் தொழில் என்று சொல்வது முதலாவது குற்றச்சாட்டு. திட்டமிடுகிற நேரத்தில் இவ்வளவு செலவழிக்கப் போகிறோம் என்று ஆசை காட்டி, திட்டமிட்டத்தில் குறைத்துச் செலவழித்து மக்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்வது இரண்டாவது குற்றச்சாட்டு. விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்வதாக வாக்களித்து விட்டு, எந்த விதமான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளாமல், இந்த இடத்தில் சமயத்திற்குத் தகுந்தபடி பேசி, கடைசியில் விலைவாசிகள் இன்னும் கட்டுப்படுத்தப்படாத நிலையில் வைத்திருப்பது மூன்றாவது குற்றச்சாட்டு. இப்படி இந்த மூன்று குற்றச்சாட்டுகளை இந்த அமைச்சரவையின் பேரில் நான் சுமத்த விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் நான் சர்க்கார் கெஜெட் பதிவில்லாத ஊழியர் களைப்பற்றி பேசினால், நம்முடைய அமைச்சரவை, நாங்கள் அவர்களைத் தூண்டி விட விரும்புகிறோம், நாங்கள் அவர்களை எங்கள் கட்சியில் சேர்த்துக்கொள்வதற்காக எடுத்துச் சொல்வதாக உடனே துள்ளி எழுகிறார்கள். நாங்கள் யாரிடத்திலும் போகக் கூடாது. மாணவர்களிடத்தில் போகக் கூடாது, காரணம் அவர் களுடைய படிப்புக் கெட்டுவிடும்; தொழிலாளர்களிடையே போகக் கூடாது, ஏனென்றால் உற்பத்தி பாதிக்கப்பட்டு விடும்; முதலாளி களிடம் போகக் கூடாது, ஏனென்றால் நீங்கள் அங்கே ஏராளமாக இருக்கிறீர்கள்; சர்க்கார் ஊழியர்களிடம் போகக் கூடாது, ஏனென்றால் அவர்கள் கட்சிகளில் சேரக் கூடாது; கிராம உத்தியோகஸ்தர்களிடம் சென்றால். . . .

திரு. எம். சி. முத்துக்குமாரசாமி : On a point of information Sir, கனம் அங்கத்தினர் பேசும்போது, அவர்கள் எவ்வளவு நேரம் பேச வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஆனால் கட்சித் தலைவர்கள் பேசும்போது அவ்வாறு நேரத்தை நீங்கள் தெரிவிக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருக்கு எவ்வளவு நேரம் ஒதுக்கியிருக்கிறீர்கள், அவர் எப்போது பேச ஆரம்பித்தார், அவர் இன்னும் எத்தனை நிமிஷங்கள் பேசுவார் என்று அறிய விரும்புகிறேன்.

துணை சபாநாயகர் : இரண்டு தலைவர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் 40 நிமிஷங்கள் ஒதுக்கினேன். கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்களுக்கு 40 நிமிஷங்கள் ஒதுக்கினேன். அவர் 40 நிமிஷம் பேசினார். ஸ்ரீ அண்ணாதுரை அவர்களுக்கும் 40 நிமிஷங்கள் ஒதுக்கியிருக்கிறேன். அவர் இதுவரை 30 நிமிஷம் பேசியிருக்கிறார். அவருக்கு இன்னும் 10 நிமிஷங்கள் இருக்கின்றன.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : If the Hon. Member wants more time, he can have it. I have no objection.

துணை சபாநாயகர் : The Leader of the House says that the Hon. Member may take more time, if he likes. He may continue.

திரு. சி. என். அண்ணாதுரை : நாங்கள் என்.ஜி.ஓ-க்களைப் பற்றிப் பேசினால் அவர்களுடைய பிரச்சினையை நாங்கள் அரசியல் காரியத்திற்குப் பயன்படுத்துவதாக கனம் அமைச்சர்கள் கருதத் தேவையில்லை. நான் கள்ளம் கபடமின்றி தெளிவாக விளக்க விரும்புகிறேன். இந்த சர்க்காருக்குச் சங்கடம் கொடுக்கவேண்டுமென்ற அவசியம் எங்களுக்கு இல்லை. இங்குள்ள எதிர்க் கட்சியினர் ஆளும் கட்சியினருக்குச் சங்கடம் கொடுக்க எப்போது விரும்புவார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். உங்கள் கட்சியிலுள்ளவர்கள் 150 பேர்களாகவும் எதிர்க் கட்சியினர் 140 பேர்களாகவும் இருக்கும் போது, சங்கடம் கொடுத்து உங்கள் ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்ற நப்பாசை அரசியல் கட்சிகளுக்கு சகஜமாக ஏற்படும். இன்று நீங்கள் பிரம்மாண்டமான பலத்துடன் இருக்கிறீர்கள்; இந்நிலையில் எதிர்க் கட்சிக்காரர்கள் குற்றச் சாட்டுகள் சொல்லும்போது, அரசியல் காரியத்திற்காக அவர்கள் அவ்வாறு குற்றம் சாட்டுகிறார்கள், பிரச்சினையை அரசியல் காரியத்திற்கு அவர்கள் பயன் படுத்துகிறார்கள் என்று நீங்கள் சொல்வது, உங்களிலேயே சில பேர்களிடம் உங்களுக்கு நம்பிக்கை இல்லையோ என்ற ஐயப்பாட்டை எனக்கு ஏற்படுத்துகிறது. எனவே நாங்கள் என்.ஜீ.ஓ.க்களைப் பற்றிப் பேசும் போது அரசியல் காரியத்திற்காக நாங்கள் பேசுவதாக நீங்கள் அருள் கூர்ந்து கருத வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். என்.ஜீ.ஓக்களின் பிரச்சினை நீண்ட நாட்களாகவே, ஊறுகாய்ப் பானையில் நீண்ட நாட்கள் போடப்பட்ட ஊறுகாயைப் போல இருந்து வருகிறது. அந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், இந்த

அமைச்சரவை மட்டுமன்றி இதற்கு முன்பிருந்த அமைச்சரவைகளும் அவ்வாறுதான் நடந்துகொண்டிருக்கின்றன. ஊறுகாய்ப் பானை என்ற வார்த்தைகளை நான் வெறும் சொல் அலங்காரத்திற்காகச் சொல்ல வில்லை. ஊறுகாய்ப் பானையில் இருக்கும் ஊறுகாய்க்கு ஆரம்பத்தில் சுவை இருக்கும். ஆனால் நாளாக நாளாக அதில் இருக்கும் எண்ணெய் வற்றிப்போவதன் காரணமாக அதன் சுவை குறைந்து விடும். என்.ஜீ.ஓக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தார் தாங்கள் செய்யவேண்டிய காரியத்தைக் காலா காலத்தில் செய்திருப் பார்களானால், செய்வதாக வாக்களித்திருப்பார்களானால், அளித்த வாக்குறுதியைத் தக்க விதத்தில் நிறைவேற்றியிருப்பார்களானால், உண்மையிலேயே, பக்குவப்படுத்தப்பட்ட ஊறுகாய் பயன்படுவது போல நல்ல பயன் ஏற்பட்டிருக்கும்; உங்கள் திட்டங்கள் நன்றாக நிறைவேறுவதற்கு அனுகூலமான பலன் ஏற்பட்டிருக்கும். ஆனால் என்.ஜீ.ஓக்கள் ஊதிய உயர்வு கோரிக் கிளர்ச்சி செய்யும் போதெல்லாம் கனம் அமைச்சர்கள் அவர்களைக் கண்டிப்பதிலும் அவர்களுக்குப் பக்கத்தில் இருக்கும் அரசியல் கட்சிகளைக் குறைகூறுவதிலுமே தங்கள் காலத்தைக் கழித்துவிட்டு, நீண்ட காலமானதும் '5 ரூபாய் கொடுக்கிறோம், 10 ரூபாய் கொடுக்கிறோம்' என்று சொல்கிறார்கள். இதன் காரணமாக, ஊறுகாய்ப் பானையில் எண்ணெய் வற்றிப்போய் ஊறுகாய் உலர்ந்துபோய் பயனற்றதாகப் போய்விடுவதைப் போல, நீங்கள் தரும் பணம் பயன்படுவதில்லை; விலைவாசிகள் மறுபடியும் ஏறிவிடுகின்றன. இவர்களுடைய சம்பளத்தைப் பற்றி இதுவரை ஏற்படுத்தப்பட்ட கமிட்டிகள் என்ன கூறியிருக்கின்றன என்று நான் இது சம்பந்தப்பட்ட ஏட்டில் பார்த்தேன்.

"All the Pay Commissions instituted by the Central and State Governments, including the Islington Commission (1912-13), Lee Commission (1923-24), Varadachariar Commission (1946-47), Mysore Pay Commission, Bihar Pay Revision Commmittee (1947), etc. as well as the Labour Conference, 1957, are of unanimous opinion that the emoluments of the low-paid Government employees should be so as to ensure them a living wage, consistent with the rise on price index of essential commodities and that Government servants should be reasonably placed above want, so as to enable them to be free from cares and anxieties and to continue to be efficient during the tenure of their service."

நம்முடைய துரைத்தனத்தில் பணியாற்றுபவர்கள் எவ்வளவு திறமைசாலிகள் என்பதைக் குறிப்பிட்டு, மந்திரிக்கு மந்திரி போட்டி

போட்டுக்கொண்டு அவர்களைப் பாராட்டுகிறார்கள். இதை நான் குற்றம் குறையாகச் சொல்லவில்லை. நாங்களும் பாராட்டுகிறோம். ஆனால் நாங்கள் பாராட்டுவதைவிட, அமைச்சரவையில் உள்ளவர்கள் பாராட்டுவது, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பாராட்டுவது அவர்களுக்கு மிகவும் தேவை. அதை உணர்ந்து பாராட்டுகிறார்கள். அதனால் அந்த உத்தியோகஸ்தர்கள் உற்சாகம் பெறுகிறார்கள். அந்த உற்சாகத்தினால் கடினமான வேலைகளை அவர்கள் மன நிம்மதியோடு செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால், அவர்கள் தங்களுக்குத் தேவையான அளவு ஊதியம் கேட்பது, கௌரவத்திற்காக அல்ல. 'நான் இவ்வளவு சம்பாதிக்கிறேன்' என்று பெருமைப்பட்டுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் கேட்கவில்லை. அந்த அளவாவது கிடைத்தால்தான் வாழ்க்கை நடத்த முடியும் என்பதால் கேட்கிறார்கள். அதை கனம் அமைச்சர்கள் ஒவ்வொரு ஆண்டும் தள்ளிப்போட்டுக்கொண்டு போவது, அதைப்பற்றி வேறு எந்த கட்சியாவது பேச ஆரம்பித்தால் உடனே அச்செய்கைக்கு அரசியல் நோக்கங்களைக் கற்பிப்பதும் முறையாகாது என்று தங்கள் மூலமாக கனம் அமைச்சர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நமது நிதி அமைச்சர் 1957-1958-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒரு அருமையான யோசனையை, ஒரு அருமையான திட்டத்தைக் குறிப்பிட்டார். சிக்கன முறைகளைக் கையாள வேண்டுமென்ற நோக்கத்துடன் சர்க்கார் நிர்வாக இயந்திரத்தில் செய்ய வேண்டிய மாறுதல்களைப்பற்றி ஆலோசனைகள் கூறுவதற்கென ஒரு குழு நியமிக்கப்படும் என்றும், அக்குழு ரிப்போர்ட் சமர்ப்பித்தவுடன் அதை அமைச்சர்கள் மேற்பார்வை செய்து உடனடியாக உத்தரவுகள் பிறப்பிப்பார்கள் என்றும், அந்த முறையில் செலவு ஓரளவு குறையக்கூடும் என்றும், ஆனால் எந்த அளவுக்குக் குறையும் என்பதை அப்போதே மதிப்பிட்டுச் சொல்ல முடியாது என்றும் கனம் அமைச்சர் அப்போது குறிப்பிட்டார். அந்தத் திட்டம் ஏன் இன்னும் நிறைவேற்றப்பட வில்லை? மேலும், அண்டை ராஜ்யமான ஆந்திரத்தில் அந்த ராஜ்ய நிதி அமைச்சர் 1959-1960-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

"The recommendations already finalized by the committee envisage an ultimate permanent recurring saving of Rs. 33.70 lakhs per annum on establishment charges."

அந்த ராஜ்ய நிதி அமைச்சர் ஸ்ரீ பிரம்மானந்த ரெட்டி 1959-60-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் இவ்வாறு சொல்லியிருக்கிறார். அதிலும், வாக்களித்தபடி அவர்கள் நடக்கவில்லை என்பதைக் குற்றமாகச் சொல்ல விரும்புகிறேன்.

கனம் அமைச்சர்கள் ஆசைகாட்டிப் பேசுவதை எடுத்துக் காட்ட அதிக உதாரணங்கள் தேவையில்லை. சேலத்தில் வரவேண்டும் என்று நாட்டு மக்கள் ஆவல் கொண்டிருந்த, பல்வேறு அரசியல் கட்சிகளும் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர்களும் வரிந்து வரிந்து பேசிக்கொண்டிருந்த சேலத்து எஃகுத் தொழிற்சாலை அங்கே உருவாகும் என்று சொல்வதற்கு இவர்களிடம் இன்னும் ஆதாரம் இல்லை. நாம் நல்லெண்ணத்தைத்தான் ஆதாரமாக நம்பிக் கொண்டிருக்கிறோம். நமது அமைச்சர்கள் டெல்லிக்குப் போய்வரும் பிரயாணங்களின் எண்ணிக்கையைத்தான் ஆதாரமாகா காட்டு கிறார்கள். டெல்லிக்காரர்களுக்கும் இவர்களுக்கும் சினேகிதம் இருக்கிறது என்று அரசியலில் பேசப்படுகிற வதந்திகளைத்தான் ஆதாரமாகச் சொல்கிறார்களே தவிர, நமக்குக் கிடைக்கும், கிடைத்தாகவேண்டும் என்று டெல்லிக்காரர்களைத் தட்டிக் கேட்கத் தக்க துணிவை இந்தத் துரைத்தனத்தார் இன்னும் பெறவில்லை. அண்டை ராஜ்யமான ஆந்திர ராஜ்யத்தின் அமைச்சர்கள், மத்திய சர்க் காரின் மூலம் தங்கள் ராஜ்யத்திற்குக் கிடைக்கக்கூடிய வசதிகளை மத்திய சர்க்காரிடமிருந்து பெறுவதற்காக, மத்திய சர்க்கார் மூலம் தங்கள் ராஜ்யத்தில் ஏற்படவேண்டிய தொழிற்சாலைகளை மத்திய சர்க்கார் தக்க விதத்தில் ஏற்படுத்தவில்லை என்று மத்திய சர்க்காரின் மீது குற்றம் சாட்டத்தக்க துணிவைப் பெற்றிருக்கிறார்கள். நமது ராஜ்ய அமைச்சர்கள் அதை கவனிக்கவேண்டும். ஆனால் நமது மாநில அமைச்சர்கள் எப்போதும் மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள். நமது ராஜ்யத்தில் மத்திய அரசாங்கத்தின் மூலம் நிறைவேற்றக்கூடிய திட்டங்களைப்பற்றி நாங்கள் பேசும் போதெல்லாம் இவர்கள் மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள். மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்கிப் பேசும் ஒரு மாநில துரைத்தனம் இருக்கிறதென்றால், அது சென்னை மாநில துரைத்தனமே தவிர வேறு எந்த மாநில துரைத்தனமும் அல்ல. பிற மாநில துரைத்தனங்கள் எல்லாம் மத்திய சர்க்காருடன் சண்டைபோட்டும் போராடியும் தங்கள் மாநில நலன்களைப்

பாதுகாத்துக்கொள்ள முயற்சி எடுத்துக்கொள்கின்றன. ஆனால் இந்த மாநில அமைச்சர்களோ, ஐந்து வருஷக் குத்தகைக்கு மத்திய சர்க்காரிலிருந்து மாநில சர்க்காருக்கு அனுப்பட்டவர்கள் போல, எப்போதும் மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள். நான் இப்போது நேற்று முன்பு வந்த ஒரு பத்திரிகைச் செய்தியை இங்கே எடுத்துச்சொன்னால், ''பத்திரிகைச் செய்தியை கவனிக்காதீர்கள்' என்று கனம் நிதி அமைச்சர் ஒரேயடியாகச் சொல்லி விடுவார். 'சேதுசமுத்திரத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது' என்று டெல்லியில் மத்திய சர்க்காரில் இருக்கிற பொறுப்புள்ள ஒரு அமைச்சர் சொல்லியிருக்கிறார். சேதுசமுத்திரத் திட்டம் 'இல்லை' என்று அது சம்பந்தப்பட்ட ஒரு அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருக் கிறார். இப்போது உங்கள் நிலைமையை தயவுசெய்து பார்க்க வேண்டும் என்று நான் மறுபடியும் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். நமக்கு சேது சமுத்திரத் திட்டம் இல்லை. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் தோண்ட நம்மிடம் வகை இல்லை. இங்கே அடாமிக் ப்ளாண்ட் வைக்க நமக்கு அனுமதி கிடைக்கவில்லை. நாமே அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்தலாம் என்றால் அதற்கு நமக்கு வழியில்லாத காரணத்தினால் அது தனியார் துறைக்குப் போய் விட்டது என்று கனம் அமைச்சர் சொல்கிறார். தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாக ஆக்குவதற்குரிய ஆரம்பச் செலவுகளுக்கு மத்திய சர்க்கார் நிதி கொடுக்கவில்லை என்று சொல் கிறார்கள். மத்திய சர்க்கார் என்ன தருவார்கள் என்பது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிப் பேசிமுடித்த பிறகுதான் தெரியும் என்று சொல்லப்பட்டது. இப்படியே ஒவ்வொன்றும் எந்த நிலையில் இருக்கிறது என்று பார்த்துத் தெரிந்துகொண்ட பிறகு, உங்களிடம் இருப்பது என்ன என்று அறிந்துகொள்ள நான் ஆவலாக இருக்கிறேன். மிச்சம் உங்களிடம் விடப்பட்டிருப்பது என்ன என்று தெரிந்தால் இந்தத் துரைத்தனத்தாரின் திறமையையோ இந்த துரைத்தனத்தார் செய்துள்ள காரியங்களையோ மதிப்பிட முடியும். அதற்கு வழி வகை இல்லாதபோது, 'நாங்கள் ஏராளமான காரியங்களைச் செய்து விட்டோம், எத்தனையோ சாதனைகள் செய்துவிட்டோம்' என்று இந்தத் துரைத்தனத்தார் சொல்வது, அவர்களுக்கு இன்றைக்கு இருக்கும் எண்ணிக்கை பலத்தை வைத்துக்கொண்டு பேசுவதாகுமே தவிர, வேறொன்றும் ஆகாது.

சென்னைக் கார்ப்பரேஷனைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அதனுடைய நிர்வாகத்தைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் மயிலாப்பூர் தொகுதி அங்கத்தினர் ராமசாமி அவர்கள் "இப்போது கார்ப்பரேஷன் நிர்வாகத்திலே இருப்பவர்கள் 'அமெச்சூர் பாலிடிஷியன்ஸ்'', என்று சொன்னார்கள். நான் அதை ஒப்புக் கொள்ளுகிறேன். ''அமெச்சூர் பாலிடிஷியன்ஸ்'' என்றால் அரசியலில் லாபத்தை பயன்படுத்திக் கொள்ளத் தெரியாதவர்கள் என்று பொருள். அதைச் சொன்னவர் எப்படிப்பட்டவர் என்பதைக் காண இந்த மாகாணத்து சட்ட மன்ற உறுப்பினர்களைப் பற்றிய "Who is Who" என்ற புத்தகத்தைப் பார்த்தேன். அதிலே நம்முடைய கனம் அங்கத்தினரைப் பற்றிப் பார்த்தால் "Hobby Politics" என்று கூறப்பட்டிருக்கிறது (சிரிப்பு). பாலிடிக்ஸை ஹாபியாக வைத்திருக்கிறவர் மற்ற அரசியல்வாதிகளை எடை போடுகிறார் என்றால் அதை அப்படியே சிரித்து விட்டு விட வேண்டியதே தவிர அதைப்பற்றிப் பொருட்படுத்த வேண்டியதில்லை.

மற்றும் இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கின்ற புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டிச் சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டு களுக்கெல்லாம் நிதியமைச்சர் அவர்கள் தம்முடைய உரையிலே பதில் சொல்லும் நேரத்திலே மற்றொரு வகையைக் கையாள்கிறார் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். எந்தெந்த பிரச்சினைகள் கிளப்பப்படுகின்றனவோ அவைகளை எடுத்து வைத்துக்கொண்டு பேசுவது ஜனநாயக முறைக்கு ஒத்ததாகும். ஆனால் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக நான் கவனித்து வருகிறேன் - எந்தப் பிரச்சினைகள் கிளப்பப்பட்டனவோ அவைகளையெல்லாம் அப்படியே விட்டு விட்டு வேறு புதிய பிரச்சினையைத் தம்முடைய பதிலிலே சொல்லுகிறார். அப்போது நாங்கள் எழுந்து குறுக்கிட்டால் சபையின் ஒழுங்கு முறைக்குப் பாதகமானது என்று தாங்கள் ஆணையிடுகிறீர்கள். தங்கள் ஆணைக்குக் கட்டுப்படுகிற நாங்கள் அமர்ந்து விடுகிறோம். அமைச்சர் அவர்களுடைய வாதங்கள் கேட்பாரற்றுப் போகின்றன. முதல் தடவை நான் எடுத்துச் சொன்ன பிரச்சினைகளை விட்டு விட்டு என்னுடைய பூர்வோத்திரத்தை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஆராய ஆரம்பித்தார்கள். என்னுடைய பூர்வோத்திரத்தையோ, எங்கள் கழகத்தின் பூர்வோத்திரத்தையோ ஆராய்வது என்பதற்காக ஒரு 4 மணி நேரம் ஒதுக்க இந்தச் சபையின் ஒழுங்கானது வழி வகுக்குமானால் நான்

அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இந்தச் சபையில் அல்லாமல் வேறு எந்தச் சபையிலாவது பேசுவது என்றாலும் தயாராக இருக்கிறேன். ஆனால் எடுத்துச் சொல்லப்பட்ட பிரச்சினைகளில் இருந்து நழுவி ஓடுவது, சொல்லப்பட்ட விஷயங்களை நேரடியாகச் சந்திப்பதற்கு வக்கு இல்லாத முறையில் வேறு துறைக்குப் போவது அவ்வளவு சரியல்ல. இந்த ஆண்டிலாவது நிதியமைச்சர் அவர்கள் சொல்லப்பட்ட பிரச்சினைகளுக்கு நேரடியாகப் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

துணை சபாநாயகர் : The Hon. Member's time is up. I hope he will finish his speech soon as many Hon. Members have to speak to-day.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : Let him take a little more time if he wants. I am anxious particularly to have his views with reference to educational matters, particularly with reference to introduction of Tamil as medium of instruction in colleges. Therefore, I do not mind if he takes a little more time. But he should not avoid that issue. That is all what I want.

திரு. சி. என். அண்ணாதுரை : அமைச்சர் அவர்கள் அளித்த அந்த யோசனைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். மற்றப் பிரச்சினைகளைப் பேசிக்கொண்டிருக்கும்போது கல்வியைப் பற்றி மறந்துவிடக்கூடாதே என்று கவனப்படுத்திய அதே நேரத்தில், அதிலே எனக்கும் நிதியமைச்சர் அவர்களுக்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நாம் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்காக வழி முறைகளைக் கையாள்வதில் நம் வழக்கமாக இருக்கின்ற - ஆங்கிலத்தில் சொல்வார்கள், "Orthodox economy" என்று - அந்த முறையைக் கையாண்டால் கட்டுப்படுத்த முடியாது என்பதை இந்த அமைச்சரவை யோசித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பிரான்சில் என்று கேள்விப்படுகிறேன்-

"In France there is a system of fixing three types of Prices:

1. ***Target prices*** fixed for three to five years in advance:

2. ***Indicative prices*** revising the target prices from year to year in the light of production and consumption trends;

3. ***Campaign prices*** announced before the sowing season. Because of this system, agriculturist knows the return he would get."

இதனாலே விவசாயிகளுக்குப் பயிரிடுகிறபோதே தங்களுக்கு என்ன கிடைக்கும் என்ற உத்தரவாதம் கிடைக்கிறது. அந்த உத்தரவாதம் கிடைக்கும் வகையில் இந்த விலைவாசிகளை மூன்று வகையில் பிரிக்கிறார்கள் என்று பிரான்ஸ் நாட்டைப் பொறுத்த வரையில் சொல்லப்படுகிறது. அதே விதத்தில் நம்முடைய நாட்டுக்குத் தேவையான பல பிரச்சினைகளை வழக்கமான பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் நமக்குப் பரிகாரங்கள் நிச்சயமாகக் கிடைக்காது. ஆகையால் இந்த அமைச்சரவை, திறமையுள்ள, தீவிரமான, முற்போக்குள்ள - புரட்சிகரமான என்று சொன்னாலும் குற்றமில்லை - வழிகளைக் கண்டு பிடித்து நம்முடைய நாட்டிலே இருக்கின்ற இயற்கைச் செல்வங்களை அவர்கள் வளர்த்துக்கொள்ள ஏற்ற வகையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும். அதற்கு நிபுணர்கள் உதவி தேவையென்றால் அவர்களை வரவழைத்துக்கொள்ளக் கூச்சப்படக்கூடாது; கூச்சப்படத் தேவையில்லை. அப்படிப்பட்ட முறையிலே இருக்குவேண்டுமென்று நாங்கள் சொல்லுகின்ற நேரத்தில் நாங்கள் சொன்ன குற்றச் சாட்டுகளுக்குப் பதில் சொல்வதற்குப் பதிலாக முதலிலே கையாளுகின்ற முறை, ''இவர்களெல்லாம் வெள்ளைக்காரனுக்கு அடிமைகள்; வெள்ளைக்கார ஆட்சியை ஆதரித்தவர்கள்'' என்று பேசிவிட்டுப் போவது அரசியலுக்குப் பயன்படலாமே தவிர, பிரச்சினைகளுக்கு விளக்கமாகாது. சுயராஜ்ய போராட்ட காலத்தில், வெள்ளைக்காரன் ஆதிக்கம் செலுத்திய காலத்தில்கூட 200 கோடி ரூபாய் அளவுக்குத்தான் அவனுடைய மூலதனம் இந்த நாட்டிலே இருந்தது. ஆனால் இன்று, சுயராஜ்யம் வந்த பிறகு இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் 400 கோடி ரூபாய்க்கு மேல் அவனுடைய மூலதனம் இருக்கிறது. வெள்ளைக்காரன் ஒன்றும் உங்களை விட்டுப்போகவில்லை. வெள்ளைக்காரன் முன்பு கவர்னரா இருந்தான்; கலெக்டராக இருந்தான்; இன்றையதினம் கம்பெனி டைரக்டராக இருக்கிறான். ஆனால் கட்டுக்கு அடங்கி யிருக்கிறான் என்று சொல்லலாம். கை குலுக்குகிறான் என்று பெருமைப்படலாம். அவனுடைய விருந்துகளுக்கு அழைக்கப்படு கிறீர்கள் என்று சந்தோஷப்படலாம். வெள்ளைக்கார ஆதிக்கத்தை நீக்கவேண்டுமென்பது சுயராஜ்ய லட்சியமானாலும், சுயராஜ்யத் திற்கு முன்னால் 200 கோடி ரூபாய் மூலதனம் போட்டிருந்தார்கள். சுயராஜ்யம் பெற்று இந்த 12 ஆண்டு காலத்தில் அவனுடைய மூலதனம் 400 கோடி ரூபாயாக இருக்கிறது. ஆகையால், இந்த

வகையிலே கான்ஸ்டபிள் தலையணியிலிருந்து கார்டுகளின் அகல நீளம் வரையில் நீங்கள் எதையும் மாற்றவில்லை; எதையும் மாற்றுவதாக உத்தேசமும் இல்லை.

நான் இந்த அறிக்கையிலே பார்த்தேன். எனக்குக் கொஞ்சம் வேடிக்கையாகவும், சிரிப்பாகவும்கூட இருந்தது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறைந்தது 4 பக்கத்திற்கு மேல் மலத்தைப் பற்றி பிரச்சினை மிக விரிவாகவும், தெளிவாகவும் ஆராயப்பட்டிருக்கிறது. மலத்தைக் கொண்டு என்னென்ன மாதிரியான உரங்கள் தயாரிக்கலாம்; எத்தனை அடி ஆழமுள்ள குழியில் போடலாம் என்பதைப் பற்றியெல்லாம் அதிகமாக ஆராய்ந்திருக்கிறார் நமது நிதியமைச்சர். நான் ஆட்டு இறைச்சியைப் பற்றிச் சொன்னதற்கு "என்னைப் போயா இறைச்சி விற்கச் சொல்லுகிறாய்?" என்றவர் இப்போது மலத்திற்குள் இறங்கி விட்டாரே என்று பரிதாபப்படுகிறேன். நாட்டின் உற்பத்திப் பெருக்கத்திற்கு தேவையான அளவு கம்போஸ்ட் உரத்தைப் பெருக்கிக் கொள்வதைப் பற்றி விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் அவருடைய அறிக்கையிலோ அல்லது அவர் பேசுகின்ற நேரத்திலோ அவற்றைப் பற்றி விரிவாகச் சொல்லியிருந்தாலும் பாதகமில்லை. ஆனால் நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் பொதுவாக எடுத்துக் காட்ட வேண்டியது என்ன? "எங்களுடைய ஆட்சியில் போன ஆண்டை விட இந்த ஆண்டு இத்தனை லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப் போகிறோம்; போன ஆண்டை விட இந்த ஆண்டு இத்தனை புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கப் போகிறோம்; சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு எங்களுடைய ஊழியர்கள் மனத் திருப்தியுடன் இருக்கிறார்கள்; சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் நிம்மதி ஏற்பட்டிருக்கிறது; கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விலைவாசி கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது; போன ஆண்டை விட இந்த ஆண்டு எங்களுடைய நிதி நிலைமை அதிகமாகியிருக்கிறது," என்பன போன்ற கணக்கைக் காட்டுவார்களா? அல்லது "இத்தனை அடி ஆழத்திலே குழி வெட்டி, மலத்தைப் போட்டு எப்படி எருவாக்குகிறோம் என்று தெரிவிப்பார்களா? என்று நிதியமைச்சரைக் கேட்க விரும்புகிறேன். நாங்கள் மலத்தைக் கேவலப்படுத்துகிறோம் என்று கருத வேண்டாம். பெரிய ஞானிகள்கூட மும்மலத்தை நீக்க வேண்டுமென்று சொல்லியிருக்

கிறார்கள். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த ஒரு மலத்தையாவது நீக்கி எறியவேண்டுமென்று சொல்லியிருப்பதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். இது ஒரு சர்க்காருடைய திறமையான நிர்வாகத்திற்கு எடுத்துக் காட்டாகாது.

ஆகவே இந்த நிதிநிலை அறிக்கையை நாங்கள் பார்க்கிற நேரத்தில் எனக்கு வருகிற எண்ணம் - உண்மையிலேயே நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் நேற்று ஆறு குருடர்கள் போய் யானையைப் பார்த்த கதையைச் சொன்னார்கள். அதை அவர் பள்ளிக் கூடத்தில் மாணவராக இருந்தபோது படித்திருப்பார். அது இப்போது இவ்வளவு பெரிய சபைக்குப் பயன்பட்டதற்காக மெத்த மகிழ்ச்சி அடைந்திருப்பார். நான் படித்தது செவிடன் கதைதான். அந்தக் கதையை இங்கே சொல்லவேண்டுமென்று தோன்றுகிறது. ஒரு செவிடன் நோய் வாய்ப்பட்டிருந்த நண்பனைப் போய்ப் பார்க்க இருந்தான். தான் கேட்பது அவன் பதில் சொல்லுவது எப்படியிருக்க வேண்டுமென்று முன்னாலேயே எண்ணிப் பார்த்துக்கொண்டான். எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்போம்; கொஞ்சம் சௌகரியம் என்று சொல்லுவார்; நல்லது என்று பதில் சொல்லுவோம். எவ்வளவு சீக்கிரத்தில் தேறுவீர்கள் என்று கேட்போம். விரைவில் தேறிவிடுவேன் என்று பதில் சொல்லுவார். ரொம்ப சந்தோஷம் என்று பதில் சொல்லுவோம் என்று எண்ணிக்கொண்டு அந்த நோயாளியைப் பார்க்கப் போனான். அந்த நோயாளியைப் பார்த்து செவிடன் "எப்படி இருக்கிறீர்கள்" என்று கேட்டதற்கு "இழுத்துப் பறித்துக் கொண்டிருக்கிறேன்" என்று பதில் சொன்னான். உடனே செவிடன், "ரொம்ப நல்லது" என்று சொன்னான். அடுத்த கேள்வி, "எவ்வளவு சீக்கிரத்திரல் குணமாகும்?" என்று கேட்டான். "எமன் வர வேண்டியதுதான் பாக்கி" என்று அந்த நோயாளி கூறியவுடன் "ரொம்ப சந்தோஷம்" என்று கூறினான் (பலத்த சிரிப்பு). அப்படி நோயாளியைப் பார்க்கப் போன செவிடன் முறையில் நீங்கள் மக்களைப் பார்க்கிறீர்கள்.

உயர்திரு. ஆர். வெங்கடராமன் : நான் செவிடனாக இருக்கத் தயார். நீங்கள் நோயாளியாக இருக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : அமைச்சர் அவர்களுடைய பதிலிலே சுவை இருக்கவேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன் -

நான் கொஞ்சம் செவிடு (சிரிப்பு). நீங்கள் குருடா? செவிடா? என்பதைத் தீர்மானிப்பதற்காகச் சொல்லவில்லை. மக்களுடைய குரல் சர்க்காருடைய காதில் நோயாளி செவிடன் முறையில் இருக்கக் கூடாது என்பதே தவிர வேறு ஒன்றும் இல்லை.

தனிப்பட்ட ஆளினுடைய குருட்டுத்தனம், தனிப்பட்ட ஆளினுடைய செவிட்டுத்தனம் சமுதாயத்திற்குப் பெரிய நஷ்டம் அல்ல. ஆனால், துரைத்தனத்தார் அப்படியிருந்தால், அது சமுதாயத் திற்கு நஷ்டம். ஆகையால்தான், எனக்கு நேற்று அவர்கள் குருடன் கதை சொன்னவுடனே, கதைகூட இங்கே சொல்லலாம் போலிருக் கிறது, அப்படியானால் செவிடன் கதையொன்று சொல்லலாம் என்று தோன்றியது.

இன்னொன்று ஆராய்ந்து பார்த்தேன். நம்முடைய தொழி லமைச்சர் திரு. வெங்கடராமன் அவர்கள் இப்படி ஒரு கதையை டில்லிப் பாராளுமன்றத்தில்கூட சொல்லியிருக்கிறார். அது எனக்கு நினைப்புக்கு வந்தது. நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும் நேரத்தில் இருக்கின்றவற்றை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்; இல்லாதவற்றை விட்டு விட்டிருக்கிறார்கள்.

அங்கே தொழிலாளர் சம்பந்தப்பட்ட ஒரு அறிக்கைப் புத்தகம் வெளியிட்ட நேரத்தில் நம்முடைய தொழிலமைச்சர் அவர்கள் - அந்த இடத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார் - அதை எடுத்துக் காட்டி பாராளுமன்றத்தில் சொன்னதாவது:

"You have before you a very valuable booklet which has got a fair get-up. It has got good pictures."

ஆனால் "இதைப் பார்த்ததும் எனக்கு ஒரு கதை கவனத்திற்கு வருகிறது என்று அப்போதே அவர் கதை சொல்ல ஆரம்பித்தார். அவ்வளவு சின்ன வயதில் கதை சொன்னவர், இப்பொழுது வயது ஏறியிருக்கும்போது கதை சொல்கிற சுபாவம் அவருக்கு அதிகப் பட்டிருப்பதில் ஆச்சரியமில்லை." அவர் ஒரு கதை சொன்னார்.

"ஒரு பாதிரி ஆண்டவனை மறுக்கும் ஒருவனை அழைத்துக் கொண்டுபோய், மாதா கோயிலில் இருக்கும் படங்களைக் காட்டி, 'ஆண்டவனைக் கும்பிட்டதினால், நடுக் கடலில் போய்க்கொண் டிருக்கும் கப்பல் காப்பற்றப்பட்டது; எத்தனை பேர் உயிர்

தப்பினார்கள் பாருங்கள் என்று சொன்னார். இப்போது தெரிகிறதா ஆண்டவனைத் தொழுவதினால் வரும் நன்மை? என்று அவர் கேட்டார். அதற்கு அவன் சொன்ன பதில் - 'நீங்கள் இதைத்தான் காட்டினீர்களே தவிர, தொழுதுவிட்டும் மூழ்கிப்போனவன், தொழாமல் தப்பிக்கொண்டவன் ஆகிய இவ்விருவருடைய படங்கள் எங்கே?' என்று கேட்டான். அதையேதான் நான் கேட்க விரும்பு கிறேன் என்று சொல்லிவிட்டு, நம்முடைய தொழிலமைச்சர் அவர்கள் அப்பொழுது கேட்டார்கள்-

"Where are the pictures of those homeless workers living on the pavements and in verandahs under very difficult conditions of life" என்று.

"எங்கே இப்பொழுது?" என்று நான் கேட்கிறேன்.

"Where are the picuture of those, who are not able to get accommodation in hospitals for medical treatment? If this brochure had contained pictures not only of the houses provided but also of those who are without house, thus showing the magnitude of the problem, then the impression would have been correct. This is a sort of ***suggestio falsi.***" இதுதான் இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி மிகப் பொருத்தமான, மிகப்பலமான, ஆனால் வலுவற்ற கட்சியினுடைய துணையைக் கொண்டு நான் சொல்வது ஆகும். கட்சி வலுவற்றது என்ற காரணத்தால் குற்றச்சாட்டுக்களும் வலுவற்றன என்று வாதாடு வார்களானால், அது அரசியலும் அல்ல, அறமும் அல்ல, அது நம்முடைய நாட்டை ஈடேற்றவும் செய்யாது. ஆகவே, செய்த காரியம், சாதிக்கப்போவதாகச் சொன்ன காரியத்தைவிட அளவில் குறைவுதான்; தரத்திலும் குறைவாக இருக்கிறது. தரத்திலே குறைவு என்பதற்காக சமுதாய நலத் திட்டம் எப்படி அரசியல் காரணங் களுக்காகப் பயன்படுகிறது என்பதைப் பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். 'இல்லை' என்று பல உறுப்பினர்கள் வாதாடினார்கள். ஆனால், உண்மையிலேயே நம்முடைய அமைச்சரவைக்குச் சொல்லிக் கொள்வேன் - என்னுடைய கட்சியிலே ஒருவர் இருவர் தாங்கள் இருக்கும் தொகுதியிலே சமுதாய நலத் திட்ட அதிகாரிகள் தங்களுடன் ஒத்துழைத்ததாக மகிழ்ச்சியுடன் என்னிடத்தில் தெரிவித்தார்கள். நான் அதை மகிழ்ச்சியாக வரவேற்றேன். ஆனால், அதே முறையில் எல்லா இடங்களிலும் இல்லை என்பதை நீங்கள் கண்காணித்துப் பார்த்தால்தான் தெரியும் இல்லையென்றால், அதற்கென்று செலவழிக்கப்படும் பெருந் தொகை,

பெரும் அரசியல் விளம்பரத்திற்காகத்தான் பயன்படும். அரசியல் விளம்பரம் என்றால், அந்த விளம்பரம் தகுந்த பலனைத் தர முடியாத விளம்பரமாகும் என்பதைக் கவனிக்க வேண்டுகிறேன். அதில் உங்கள் தரப்பிலுள்ள உறுப்பினர்கள் நேற்றையதினமோ அதற்கு முந்திய தினமோ குறிப்பிட்டார்கள் - 'சமுதாய நலத் திட்ட வேலையில் ஈடுபட்டிருக்கும் கிராம நல ஊழியர்களில் பல பேர்கள் மாற்றுக் கட்சியினராகவும் இருக்கிறார்கள், அவர்களும் அதிலே அக்கறை வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள்' என்று. நான் 'இல்லை' என்று மறுக்கவில்லை. அப்படிப்பட்ட வகையிலே சில பேர் எங்களுடைய கட்சிக் கொள்கை நல்லது என்று கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் செய்கின்ற காரியத்தை ஒழுங்காக முறைப்படி செய்கிறார்களே தவிர, கட்சியில் பற்று இருக்கிறது என்பதற்காக நாங்கள் வைத்திருக்கும் 'அறிவகத்'திற்குப் பக்கத்தில் ஒரு அலங்கார டாங்கை அவர்கள் கட்டிக்கொடுத்துவிட முடியாது. நாங்கள் அப்படிப்பட்ட கேவலமான காரியங்களுக்கு எங்களுடைய செல்வாக்கை எப்பொழுதும் பயன்படுத்திக்கொள்ள மாட்டோம். நாங்கள் சொன்னதைக் கேட்கக்கூடிய அமைச்சரவை இருந்த காலத்திலேயே நாங்கள் அப்படிப் பயன்படுத்திக் கொண்டது இல்லை. ஆகையால், இவ்வளவு பணம் செலவாகும் ஒரு பெரிய துறையை நாம் ஒரு தேசீயத் துறை என்று கருதி, அதிலே எல்லாக் கட்சிகளும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு நல்ல வழிவகைகளைச் செய்து காட்டவேண்டுமே தவிர, அவ்வளவு குறை சொல்கிறார்களே, குறை சொல்கிறார்களே என்று சாதாரணமாக வார்த்தையைப் போட்டுக் குழப்பிக்கொண்டிருப்பதில் ஒரு பயனும் இல்லை என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

துணை சபாநாயகர் : I hope the Hon. Member will finish his speech within two minutes. He has taken more time. There are other Hon. Members to speak.

திரு. சி. என். அண்ணாதுரை : I will finish within five minutes.

திரு. எஸ். நாகராஜா மோனிகர் : On a point of information, Sir.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : கதை சொல்வதிலேயே பாதி நேரம் போய்விட்டது.

துணை சபாநாயகர் : There can be no point of information. I hope the Hon. Member will finish his speech within five minutes.

திரு. சி. என். அண்ணாதுரை : கார்ப்பரேஷனைப் பொறுத்த வரையிலும், நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்ற காரணத்தினாலே, 'இந்தப் புண்ணியவான்கள் வந்த பிறகு இப்படி ஆய்விட்டது'' என்றெல்லாம் நம்முடைய கனம் அங்கத்தினர்களிலே பல பேர் சொன்னார்கள். அவர்கள் பொதுவாகக் குறிப்பிட்டது, - மவுண்ட் ரோடினுடைய நிலைமையையும், பூந்தமல்லி ரோடினுடைய நிலைமையையும் பற்றி. இந்த இரண்டு சாலைகளினுடைய பரா மரிப்புக்காக சர்க்கார் தருகின்ற தொகை 32,000 ரூபாய். இந்த 32,000 ரூபாய் இரண்டு ரோடுகளுக்காக மட்டும் நீங்கள் ஒதுக்கி விட்டு, அதன் மூலமாக இந்தப் பாதைகள் அப்படியே செப்பனிடப்பட முடியும் என்று கருதுவீர்களானால், உண்மையிலே நாம் ஒருவரை யொருவர் ஏமாற்றிக் கொள்ளத்தான் அது பயன்படும். அங்கே கார்ப்பரேஷனிலிருந்து திட்டவட்டமாக கோரிக்கைகளை அவர்கள் தொடர்ந்து அனுப்பிக்கொண்டு வருகிறார்கள். என்னுடைய கழகம் அங்கே ஆட்சிக் கழகமாக வருவதற்கு முன்பிருந்தே, காங்கிரஸ் காரர்கள் அங்கு ஆட்சியில் இருந்த காலத்திலிருந்தே கோரிக்கைகளை அனுப்பியிருந்தார்கள். மோட்டார் வெகிகிள்ஸ் டாக்சேஷன் என்ற வகையில் பெரும் தொகையை நீங்கள் எடுத்துக்கொண்டு அவர்களுக்கு நீங்கள் தரும் பிச்சைக் காசு முறை அடியோடு நீக்கப்பட வேண்டும். நீங்கள் பெறுகின்ற அந்த வரியில் குறைந்தது 60 சத விகிதம் - தாராள மனப்பான்மையோடு இருந்தால் 75 சத விகிதம் - நீங்கள் கார்ப்பரேஷனுக்குக் கொடுத்தால், நிச்சயமாக அவர்கள் அந்தப் பாதைகளைச் சரியாக வைத்திருக்க முடியும். அது மட்டுமல்லாமல், கார்ப்பரேஷனிலிருந்து போட்டனுப்பும் எந்தத் திட்டத்திற்கும் சர்க்கார் உடனடியாக பதிலையோ அங்கீகாரத்தையோ அவர்களுக்குத் தராமல் இருப்பதால்தான் பல விஷயங்கள் இன்றைக்கு அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக, ஒன்றிரண்டு சொல்வேன். கோடம்பாக்கம், மேற்கு மாம்பலத்திலே புதிய வீடுகள் - நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் Satelite town அமைக்கப்படவேண்டும் என்ற சொன்னார்களே, அது போல - ஆயிரம் ஏக்கர் நிலத்திலே கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். கார்ப்பரேஷன் அதற்காகத் திட்டம் இட்டிருக்கும் நேரத்தில், அமைச்சர் அறிவார்கள், இதைப்பற்றி

சிந்திக்கும்போதே அதை போலியாக முதலாளிகள் விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படி போலியாக விற்பனை செய்து விலைவாசிகளை ஏற்றுவார்கள் என்று அறிந்துதான் இந்தியத் துணைக்கண்டப் பிரதம மந்திரி ஜவர்ஹலால் நேரு அவர்கள் கூட சென்ற திங்கள் ஒரு சுற்றறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். நகராட்சி மன்றங்களைச் சேர்ந்தவர்கள் கண்ணுக்கு தெரிந்த இடங்களை விலைவாசி ஏறாததற்கு முன்னாலேயே இப்போதே வாங்கிக்கொள்ள வேண்டுமென்று -குறிப்பிட்டார்கள். அதை அவர்கள் இன்னமும் செய்தபாடில்லை. மோட்டார் வெகிகிள்ஸ் டாக்ஸேஷனிலிருந்து இப்பொழுது சர்க்காருக்குக் கிடைப்பது 85 லட்ச ரூபாய். அதிலே அவர்கள் கார்ப்பரேஷனுக்குக் கொடுப்பது இரண்டு லட்ச ரூபாய். கார்ப்பரேஷன் தங்களுடைய மோட்டாருக்காக சர்க்காருக்குச் செலுத்தும் வரி மட்டும் ரூ. 2,09,000. இப்படி இருக்கையில் கார்ப்பரேஷன் தங்களுடைய நிர்வாகச் செலவிலிருந்து 60 லட்ச ரூபாய் வரையில் ரோடு பராமரிப்புக்காக செலவழித்துக் கொண்டு வருகிறார்கள். ஆகையால், சரியாக நிர்வாகம் இருக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள். தரவேண்டிய பணத்தைத் தந்து விட்டு, கேட்கவேண்டிய கணக்கைக் கேட்டு சொல்லவேண்டிய குற்றச்சாட்டுக்களைச் சொன்னால் பொருத்தமாக இருக்கும். அதை விட்டுவிட்டு, இந்த இடத்தில் அதைப்பற்றிச் சொல்ல வசதி இருக்கிறது என்ற காரணத்தால் சொல்வார்களானால், அது சரியல்ல. நான் அது சம்பந்தமாக பிரேரணைகள் வரும் நேரத்தில் அதைப்பற்றி எடுத்துச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

தங்களுடைய தயவை நாடி மிக அதிக நேரம் நான் பேசிக் கொண்டே போக விரும்பவில்லை. நான் முடிப்பதற்கு முன்னே, நிதி அமைச்சர் அவர்களிடம் இதைத்தான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்வேன் - எடுத்துச் சொல்லப்பட்ட பிரச்சினைகளைக் கவனித்து பதில் அளியுங்கள்; புதிய பிரச்சினைகளுக்குச் சென்று விடாதீர்கள்; சென்று விட்டால் அதை நாங்கள் சந்திப்பதற்கு வசதி இல்லை; வாய்ப்பு இல்லை. உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். இதையெல்லாம் விட்டு விட்டு, இவர்கள் நாட்டுப் பிரிவினை கேட்கிறார்களே, அது நடக்கும் காரியமா என்று நிதி அமைச்சர் அவர்கள் பதிலிலே பேச ஆரம்பித்துவிட்டால் பதில் சொல்வதற்கு எங்களுக்கு வழி இருக்காது; பார்ப்பனர்களைப் பற்றி எங்கள் கருத்து

என்ன என்று அவர்கள் பேச ஆரம்பித்தால் நாங்கள் பதில் சொல்ல நேரம் இருக்காது; சுதந்திராக் கட்சியைப் பற்றிய எங்கள் கருத்து என்ன என்று ஊடே அவர்கள் பேச ஆரம்பித்து விட்டால், அதைப்பற்றிப் பேசுவதற்கும் எங்களுக்கு வாய்ப்பு இருக்காது; ஆகையால், நல்ல பாராளுமன்ற அனுபவம் பெற்ற திறமைசாலி என்ற முறையில், எடுத்துச் சொல்லப்பட்ட பிரச்சினைகளுக்கு மட்டும் அவர்கள் விரிவான, விளக்கமான, தவறுகள் இருந்தால் நீக்கிவிடத்தக்க, கருத்துக்களைத் தரவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, என்.ஜி.ஓக்களைப் பற்றி அவர்கள் திட்டவட்டமான முடிவைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வரிக்கும் வருவாய்க்கும் தொடர்பு எத்தனை சதவிகிதம் இருக்கிறது என்பதற்கு அவர்கள் புள்ளி விவரக் கணக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஒரு சர்க்கார் வரியை மட்டுமே நம்பி வாழாமல், வருவாயையும் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்ற பொருளாதார தத்துவத்தை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களானால், அந்த நடைமுறைப்படி என்ன நடைபெறுகிறது என்பதை விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, விலை வாசிகளைக் கட்டுப்படுத்துவதற்காக என்ன உத்தரவாதத்தை அளிக்கிறார்கள் என்று கேட்டுக்கொண்டு, எல்லாத் தொழிற்சாலைகளையும் மற்றவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, பனை ஓலையிலிருந்து செய்கிற தொழில்களைப் போன்றவற்றை மட்டும் தாங்கள் வைத்துக்கொண்டிருக்கக்கூடாது என்று சொல்லி - சேது சமுத்திரத் திட்டம், தூத்துக்குடி ஆழ்கடல் திட்டம், அலுமினியத் தொழிற்சாலை, பாக்ஸைட்டைப் பயன்படுத்தும் திட்டம், சேலத்தில் இரும்புத் தொழிற்சாலைத் திட்டம் இவைகளுக்கெல்லாம் விமோசனம் உண்டா, விடிவு உண்டா, வழி உண்டா என்று நாங்கள் மட்டுமல்ல, நாட்டு மக்கள் அத்தனை பேரும் ஆவலாக எதிர் பார்க்கிறார்கள் - அவைகளுக்கு நிதி அமைச்சர் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு - நான் ஒன்று சொல்வேன், நிதி அமைச்சர் அவர்கள் என்னுடைய வாதத்திலிருந்தே ஒரு செங்கல்லைப் பிடுங்கி, சுவர் விழுந்துவிட்டது என்று சொல்லக்கூடிய அந்தத் திறமைக்காக அல்ல, நிதி அமைச்சர் திறமைசாலி என்பதை சம்பந்தப்பட்டவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், அதை அடிக்கடி அவர்கள் நிரூபித்துக் காட்டிக் கொள்வது அவசியமில்லை என்று - இந்தப் பிரச்சினைகளுக்கு அவர்கள் நேரடியான சமாதானத்தை, விளக்கத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இவ்வளவு

குறைபாடுகள் இந்த நிதிநிலை அறிக்கையில் இருப்பதால், இதைப் பாராட்டுவதற்கில்லை என்பதைச் சொல்லி, வரி போடவில்லை என்பதற்காக பட்ஜெட்டைப் பாராட்டவேண்டுமென்று அவர்கள் கருதுவார்களானால், இதுவரையில் வெளிவந்த எல்லா மாநில பட்ஜெட்டுகளிலுமே வரி போடாமல்தான் இருக்கிறார்கள், அந்த வழியில்தான் நம்மவரும் சென்றிருக்கிறார், முன் ஏர் போனபடிதான் பின் ஏரும் போகிறது, இதிலே சாமர்த்தியமோ ஆச்சரியமோ இல்லை என்று சொல்லி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

சென்னை மாநகராட்சியால் சட்டமன்ற உறுப்பினர்கள் மீது கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானம் பற்றிய உரிமைப்பிரச்சினை

உரை : 35 *நாள் : 22.03.1960*

திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே கார்ப்பரேஷன் நிர்வாகத்தைப் பற்றி தங்களுக்குத் தோன்றிய முறையிலே இருக்கிற குறைகளை எடுத்துக் காட்டிய உறுப்பினர்களைப் பற்றி கார்ப்பரேஷன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பது இந்த மன்றத்தினுடைய கௌரவத்தை குலைக்கக் கூடியது என்று ஏற்படுமானால் உண்மையிலே அப்படிப்பட்ட அளவுக்கு நான் ஆதரவு அளிப்பதற்கு உடந்தையாக எப்போதும் இருக்கமாட்டேன் என்பதை முதலிலேயே தெரிவித்துக் கொள்கிறேன். சட்ட மன்றத்திலே கார்ப்பரேஷன் நிர்வாகத்தைப் பற்றி கண்டித்துக் குறைகூறிப் பேசியவர்கள் கார்ப்பரேஷன் தீர்மானத்திலே குறிப்பிட்டிருக்கிற 3 அங்கத்தினர்கள் மட்டும் அல்ல வேறு பலரும் இங்கே அந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். குறிப்பாகவும், சிறப்பாகவும், விளக்கமாகவும் விறுவிறுப்பாகவும் சர்க்கார் கட்சியினுடைய தலைவர், இந்தச் சபையின் தலைவர் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். இன்னும் ஓரிரு உறுப்பினர்களும் கார்ப்பரேஷன் நிர்வாகத்தைப் பற்றி இங்கே குறை கூறியிருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் பற்றிக் குறிப்பிடாமல் 3 உறுப்பினர்களை மட்டும் அவர்கள் அங்கே குறிப்பிட்டிருக்கக் காரணம் அவர்கள் சட்டசபை உறுப்பினர்கள் என்ற முறையிலே பேசினார்கள் என்பதிலே வந்த வருத்தம் அல்ல. அவர்கள் கார்ப்பரேஷன் நிர்வாகத்திலே பங்கு கொண்டவர்கள் என்ற முறையில் தங்களுடைய இனம் என்ற

முறையில் அவர்கள் அவர்களைக் கண்டித்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகையினால் அந்தத் தீர்மானத்தினுடைய முக்கியமான கருத்து கார்ப்பரேஷன் நிர்வாகத்தைப் பற்றி கார்ப்பரேஷனோடு நெருங்கிய தொடர்பு கொண்ட சில உறுப்பினர்கள் குறைகண்டு பேசியிருக்கிறார்களே என்பதிலே அவர்களுக்கு ஏற்பட்ட வருத்தத்தைத்தான் தெளிவாகக் காட்டுகிறதே தவிர இந்தச் சபையையோ, இந்தச் சபையினுடைய உறுப்பினர்களையோ அவர்கள் மதிப்புக் குறைவாகக் கருதுகிறார்கள் என்று என்னாலே எந்த வகையிலும் ஊகிக்க முடியவில்லை. இதற்காக ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டுவரப்படுகின்ற நேரத்திலே உரிமைப் பிரச்சினை எந்தெந்தக் காரணங்களால் கொண்டு வரப்படலாம் என்று தரப்பட்டிருக்கிற விதி முறைகளைப் பார்க்கின்ற நேரத்தில், எந்த வகையிலும் இது சிறு பிடிபடுவதாக என் மனதிற்கு ஏற்படவில்லை. ஆனால் தங்களுடைய நல்ல தெளிவான தீர்ப்பு நீதியின் பக்கம் இருக்கும் என்ற முறையில் இதற்குமேல் இந்தப் பிரச்சினையைப் பற்றி ஏதும் சொல்ல விரும்பவில்லை.

தொழில்துறை நிதி ஒதுக்கீடு வாக்கெடுப்பு

உரை : 36 **நாள் : 08.04.1960**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தொழில்துறைக்குக் கோரியிருக்கும் தொகையை குறைக்க வேண்டுமென்ற வெட்டு திட்டத்தை ஆதரிக்கும் நேரத்தில், அது சம்பிரதாயத்திற்கான வெட்டு திட்டமே தவிர, தொழில் துறையை ஏற்றுக்கொண்டிருக்கும் அமைச்சரின் தனிப்பட்ட திறமையைக் கவனித்தாலும், நம் நாட்டு தொழில் வளர்ச்சியின் அவசியத்தைக் கவனித்தாலும் அவர்கள் முன்பே குறைந்த தொகையைக் கோரியிருக் கிறார்களே என்ற கருத்துப்படத்தான், இரண்டு கோடி ரூபாயை இன்னொரு 100 ரூபாய் குறைத்துவிடலாம் என்று சொல்வதன் நோக்கம், குறைந்தது இந்தத் தொழில் துறைக்கு ரூ. 10 கோடியாவது கேட்டு இருக்கவேண்டும் என்ற எண்ணத்தினால்தான். சட்டத்திற்கு உட்பட்டு, ஒழுங்காக நடந்துகொண்டிருக்கிற மக்கள் பெருவாரியாக இருக்கிற இந்த மாநிலத்தில், போலீசுக்கு ரூ. 5, 6 கோடி தேவை என்று துணிந்து அமைச்சர் கேட்டு, அதையும் இந்த சபை மனம் ஒப்பி கொடுத்திருக்கிறபோது, தொழில் துறையில் மிகவும் பின் தங்கியிருக்கிற இந்த மாநிலத்தின் தொழில்களை பெருக்குவதற்கு ஒரு வெறும் இரண்டு கோடி ரூபாய் அளவுகுக்குத்தான், அமெரிக்கா போய் வந்தபிறகும் நம் தொழில் அமைச்சரவர்கள் கேட்டிருக்கிறார்கள். அமெரிக்காவை விட்டுத் திரும்பி வந்து, கப்பலிலோ விமானத்திலோ இருந்து இறங்கிய உடனேயே, ''அதெல்லாம் அந்த நாட்டுக்கு சாத்தியம், நாம் இருக்கும் இடத்திற்கு சாத்தியமில்லை'' என்று விட்டு விட்டார்களோ என்று வருத்தப்படவேண்டியிருக்கிறது.

இன்றைய தினம் வழக்கத்திற்கு மாறாக, நம் தொழில் துறை அமைச்சரவர்கள், சிறிது அரசியலையும் கலந்து தம் துவக்க உரையில் பேசினார்கள். ''நாங்கள் ஒரு தொழில் திட்டத்தை வைத்திருக்கிறோம்; அதற்கு மக்கள் ஆதரவு அளித்து, ஓட்டு அளித்திருக்கிறார்கள்;

ஆகையினால், நாங்கள் அதன்படித்தான் நடப்போம்; தனியார் துறை, பொதுத் துறை என்ற பாகுபாடோ, மத்திய சர்க்கார் நிர்வாகம் அல்லது மாநில சர்க்கார் நிர்வாகம் என்ற வித்தியாசமோ, ஆகியவைகளெல்லாம் எங்களுக்குத் தேவையில்லை. 1956-லேயே தீர்மானித்து விட்டோம்; மக்கள் அதைக் கேட்ட பிறகுதான் எங்களுக்கு ஓட்டு அளித்திருக்கிறார்கள்; ஆகையினால், இப்பொழுது யாரும் குறை சொல்லாதீர்கள்'' என்று அவர்கள் குறிப்பிட்டு பேசினார்கள். நான் சொல்லும் அளவில் விளக்கிச் சொல்லவில்லையே தவிர, அவர்கள் பேச்சிலே இந்த கருத்துக்கள் தொக்கி இருந்தன. அவர்கள் ஓரளவுக்கு அரசியலைக் கலந்து இருக்கிறார்கள் என்று நான் கொஞ்சம் வருத்தப் பட்டுக்கொண்டேன். அவர்கள் தத்துவார்த்திகள் பேசுவதுபோல், பெரிய தொழில்களை ஆரம்பித்தால், பல பேர்களுக்கு வேலை கிடைக்காதே, ஆகையால் சின்னச் சின்ன தொழில்களை ஆரம்பித்தால்தான், பல பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார்கள். நான் அவர்கள் அந்தக் கருத்தைத் தெரிவிக்கும் நேரத்தில் இந்த சட்ட மன்றத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். இங்கே ஓடுகின்ற மின்சார விசிறிகளை, நிறுத்திவிட்டு, சிறிய சிறிய பனை ஓலை விசிறிகளை, மின்சார விசிறிகளுக்குப் பதிலாகக் கொடுத்திருந்தால், ஒரு மின்சார விசிறிக்குப் பதிலாக தொழில் அமைச்சரவர்கள் 1,000 பேர்களுக்கு வேலை கொடுத்திருக்கலாம்; அது போலவே, எல்லா மில்களையும் நிறுத்திவிட்டு, அம்பர் சர்க்காவையே வைத்து நூல் நூற்று, அதன் மூலமாகத்தான் தறி நடத்துவோம் என்று ஏற்படுத்தினார்களானால் எத்தனையோ லட்சம் பேர்களுக்கு வேலை கொடுத்திருக்கலாம்; அது போலவே, சர்க்கரை ஆலைகளை வைப்பதற்குப் பதிலாக, கரும்பு ஆலைகளை ஆங்காங்கே சிறிய குடிசைத் தொழிலாக வைத்து நடத்தினால், எத்தனையோ லட்சம் பேர்களுக்கு வேலை கொடுத்திருக்கலாம். நமது அமைச்சரவர்கள் நம்மை அந்தப் பாதைக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறார்களா என்று அறிய விரும்புகிறேன். பெரிய தொழில்கள் வேண்டும் என்று கேட்கும் நேரத்தில், பெரிய தொழில்களில் அதிக ஆட்கள் வேலை செய்ய முடியாது, சிறிய தொழில்களை வைத்தால் ஏராளமான மனிதர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற சாதாரண உண்மையையும் மறந்து விட்டுக் கேட்டதாக அமைச்சரவர்கள் கருதக்கூடாது. அவர்கள் அப்படிக் கருதியிருப்பார்களேயானால், அவர்கள் அதனை திருத்திக் கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். பெரிய

தொழில்கள் சிறிய தொழில்களுக்கு அடிப்படையாக இருந்து அமைந்திருக்கின்றன. பெரிய தொழில்களில் கிடைக்கும் மூலப் பொருள்களை வைத்துக்கொண்டு, பெரிய தொழில்களில் கிடைக்கக் கூடிய எஃகு, இரும்பு இவைகளை வைத்துக்கொண்டு, சிறிய சிறிய தொழில்களில் பயன்படுத்த வேண்டும் என்பதனால்தான், பேசிக் இண்டஸ்ட்ரீஸ், ஹெவி இண்டஸ்டரீஸ் என்றும், அவைகைள எந்த நாடும் இழக்கக்கூடாது என்றும், தொழில் துறை நிபுணர்களும், பொருளாதார நிபுணர்களும், வலியுறுத்தியிருக்கிறார்கள். அதை மறுக்கும் தன்மையிலே, தொழில் அமைச்சரவர்கள் சிறு தொழில்கள் மட்டும் இருந்தால் போதும் என்று எடுத்துப் பேசியதை மிக வருத்தத்தோடு கவனித்தேன். முன்பு பேசியபோது, கற்றாழைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்; அவர்களை வெளிநாட்டு நிபுணர்கள் பாராட்டினார்கள் என்று பேசினார்கள். அதன் வழுவழுப்பைப் பார்த்தா? கற்றாழை நாற்றத்தைப் பார்த்தா? எதை பார்த்து வெளிநாட்டார் பாராட்டினார்கள் என்று விளங்கவில்லை. ஆகையினால், தொழில் துறையில் ஈடுபட்டிருக்கின்ற அமைச்சரவர் கள், தனக்கு இருக்கிற அடிப்படை கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மக்கள் ஓட்டு அளித்து விட்டார்கள், அதனால், மாற்றிக் கொள்ளப் போவதில்லை என்று அவர்கள் சொல்வார்களேயானால், மக்கள் இடத்தில் இப்படித் தெளிவாகச் சொல்லி வோட்டும் வாங்கப்பட வில்லை என்பதையும், தேர்தல் வருவதற்கு இரண்டு ஆண்டுகளே இருக்கிற காரணத்தால், இப்பொழுதே அமைச்சரவர்கள் தெளிவாக எண்ணிப் பார்க்க முடியும் என்பதையும் எடுத்துச் காட்டவே அதனைச் சொல்ல விரும்புகிறேன்.

உண்மையிலேயே, நம் நாட்டின் தொழில் வளர்ச்சியடைய வேண்டுமானால், என்னென்ன நமக்குத் தேவை என்பதை நான் சிறு குறிப்பாக அமைச்சரவர்கள் பேசும்போதே எழுதிப் பார்த்தேன். நம் நாட்டில் தொழில் துறை வளரவேண்டுமானால், முதலிலே என்னென்ன விளை பொருள்கள், செய் பொருள்கள், கனிப் பொருள்கள் இந்த நாட்டிலே கிடைக்கக்கூடும் என்ற பரிசீலனை செய்வதற்கு நமக்கு ஒரு சர்வே வேண்டும்; இரண்டாவதாக, நாம் அறிந்து பார்த்திருக்கும் உண்மைகள் சரியானதுதானா, தேவைதானா, நடைமுறைக்கு ஏற்றவைதானா என்பதை யெல்லாம் நமக்கு அறிவிக்க, நம்மைவிட தொழில் துறையில் உயர்ந்திருக்கிற, மேல் நாட்டு

நிபுணர்கள் தங்கள் கருத்துக்களை நமக்கு அளிக்க வேண்டும்; மூன்றாவதாக தொழிலுக்குத் தேவைப்படும் மூலதனம் கிடைக்க வேண்டும்; அதற்கு ஏற்ற வகையில் பாங்கிங் ஸிஸ்டம் சரியான முறையில் அமைக்கப்படவேண்டும்; அதற்குப் பிறகு, நான்காவதாக, தொழிலுக்குத் தேவையான இயந்திர வசதிகளை, வெளி நாடுகளிலிருந்து பெறுவதற்கு ஏற்ற வெளிநாட்டுச் செலாவணி வேண்டும். இந்த நாலும் நம்மிடம் இல்லை என்று வருத்தத்தோடு சொல்லுவேன். நம் தொழில் துறை அமைச்சரவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று துணிந்து சொல்லுவேன். இந்த நாலு துறைகளிலும் தொழில் துறை அமைச்சருக்கும் சரி, மாநில சர்க்காருக்கும் சரி ஒரு துளி உரிமையும் இல்லை. எதிர் வீட்டுக் கதவை எட்டிப் பார்ப்பவர் போல, நம் திட்டங்களைப் பற்றி டில்லியில் வாதாடலாமே தவிர, யஜமானர் சிரித்த நேரத்தில் இன்னும் கொஞ்சம் கொடு என்று பெற்றுக்கொண்டு வரலாமே தவிர, தொழில் துறைக்கு அடிப்படைத் தேவைகளான இந்த நான்கு துறைகளிலும் நம் மாநில சர்க்காருக்கு ஒரு துளி ஆதிக்கமும் இல்லை. அது மட்டும் போதாமல், இத்துறை வளத்திற்கு அவசியமாகிற, பாதை வசதிகள், ரெயில்வே வசதிகள், உள்நாட்டு நீர்துறை என்னும் இன்லண்டு வாட்டர் வேஸ், வாய்க்கால் துறை இவைகளில் நம் சர்க்காருக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லை. அதிகாரம் இல்லை என்று சொல்லும் நேரத்தில், ''நம் சர்க்கார்தான் டில்லியில் இருப்பது கூட'' என்று தொழில் அமைச்சரவர்கள் வாதாடக்கூடும். நான் அப்படிக் கருதவில்லை என்பது மட்டுமல்ல, அப்படிக் கருதிக்கொண்டேயிருப்பவர் களானால், அவர்களும் தொழில்களெல்லாம் வடக்கேயே இருக்கட்டும், இங்கே வேண்டாம் என்று ஒரு முயற்சியும் எடுக்காமல் சும்மா இருந்திருக்கலாம். இந்த இடத்தில் நெல் விளைவிப்போம், சோளம், கம்பு விளைவிப்போம், பனை ஓலையால் விசிறிகள் செய்வோம், கத்தாழை நார் உரிப்போம், கருங்கல்லை உடைப்போம், வடக்குப் பகுதியிலேயே மற்றத் தொழில்களெல்லாம் இருக்கட்டும் என்று சும்மா இருந்து இருக்கலாம். ஆனால், இங்கு வேண்டுமானால் மறுக்கிறார்களே தவிர, அவர்கள் டெல்லிக்குப் போகும் நேரத்தில், அவர்களையும் அறியாமல் நான் அவர்களோடு டில்லிக்குப் போகிறேன் என்று அரசியல் உலகம் நிச்சயமாக மறந்து விட முடியாது. அங்கே இவர்கள் எதை, எதையோ அத்தனையும் எங்களுடைய மாநிலத்தில் இருக்க வேண்டும், எங்கள் மாநிலத்திற்குத் தேவை என்று

வாதாடிக்கொண்டிருக்கிற உள்நோக்கம் உண்மையிலேயே இருந்தாலும் கூட, இந்த இடத்தில் ஒப்புக்கு மறுக்கிறார்கள். நம்மிடத்தில் இருக்க வேண்டும், நம் மாநிலத்தில் இருக்க வேண்டும் என்ற பாசத்திலிருந்து அவர்கள் நீங்கி விடுவார்கள் என்று நான் கருதவில்லை.

இங்கே பார்த்தோம் - ராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், கிழக்குப் பகுதி என்கிறார்கள், மேற்குப் பகுதி என்கிறார்கள். சேலம் என்று எடுத்துக்கொண்டால், கிழக்கு சேலம், மேற்கு சேலம். தஞ்சாவூர் என்றால் கிழக்கு தஞ்சை, மேற்கு தஞ்சை. நாங்கள் தெற்கு, வடக்கு என்றால், இவர்கள் கிழக்கு, மேற்கு என்று பேசுகிறார்கள். ஆகவே, தங்களுக்கு, தங்கள் பகுதிக்கு எந்த வழியில் பெருமை வளருகிறதோ, பொருளாதாரம் வளருகிறதோ, வேலை வாய்ப்புகள் மக்களுக்கும் கிடைக்கிறதோ, அப்படிப் பேசுகிறார்கள். (குறுக்கீடு).

ஆகையினால், தொழில் துறை வளர்ச்சிக்குத் தேவையான நான்கு முக்கியமான காரியங்கள் நம் துரைத்தனத்தாருக்கு அதிகார மில்லாததால் வடக்கு - தெற்கு என்று பேசுவது தவறு என்று கருதிக் கொண்டு இருக்கும் நண்பர்கள், அந்த முறையிலே நம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை அமைக்க அதிகாரம் இல்லாமல் இருக்கும் நேரத்தில், தொழில் அமைச்சர் என்று இங்கே வைத்திருப்பதில்தான் என்ன பலன்என்று நான் அறிய விரும்புகிறேன். இன்னொன்று, தொழில் துறையைப்பற்றி யோசிக்கும் நேரத்தில் நாம் ஏற்கெனவே கிடைத்திருக்கிற பொருளை வைத்துக்கொண்டுதான் தொழில்களை வளர்க்க வேண்டுமென்று கருதுகிறோமே தவிர மறைந்திருக்கும் இயற்கை சக்திகளை வளப்படுத்தவேண்டுமென்று இன்னும் முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். இஸ்ரேல் நாட்டில் மின்சாரத்தை உண்டாக்குவதற்கு பணம் செலவழிக்க முயற்சி எடுத்துக் கொள்ளும் வகையில் இஸ்ரேல் நாட்டில் சூரிய வெளிச்சம் கொடுக்கக்கூடிய வெப்பத்தை அதாவது சோலார் எனர்ஜியை வைத்துக்கொண்டு தொழில் துறையில் மிகுந்த முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள். அதைப் பற்றி இந்த சட்ட மன்றத்தில் ஒன்று, இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு உறுப்பினர் எடுத்துச் சொன்ன நேரத்தில் சூரிய வெளிச்சத்தைப் பற்றி மற்றவர்களும் கருதினார்கள். சூரிய வெளிச்சம் கொடுக்கக்கூடிய மின்சக்தியை விட இயற்கையாக

உண்டாக்கக்கூடிய மின்சக்தியைவிட ஏறக்குறைய இருபத்தி நாலாயிரம் மடங்கு அளவுக்கு அதிகம் என்பதை நிபுணர்கள் கணக்கு எடுத்திருக்கிறார்கள். சமீபத்தில் அமெரிக்காவிலிருந்து வந்து சிறு தொழில் கண்காட்சியை நடத்தியபோது சோலார் எனர்ஜியிலிருந்து பல இயந்திரங்களை எல்லாம் இயக்கிக் காட்டப்பட்டது. நம்முடைய நாட்டில் இன்றைக்கு இருக்கும் இயற்கைப் பொருள்களை வைத்துக் கொண்டும் இன்னும் பூமியில் மறைந்து இருக்கிற பொருள்களை வைத்துக் கொண்டும் நாம் புதிய தொழில்களை உண்டாக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் இந்த சட்ட மன்றத்தின் மதிப்பிற்குரிய வேதாரண்யம் தொகுதி அங்கத்தினர் அவர்கள் பேசும் போது யாரோ ஒரு பொறுப்புள்ள பாராளுமன்ற உறுப்பினர், சேலம் இரும்பை எடுத்துக்கொண்டு போய் லண்டனில் ஒரு வாராவதியைக் கட்டியிருக்கிறார்களே என்று சொல்லுகிறாரே, அப்படி கட்டப் பட்டிருக்கிற தகவல் இந்த சர்க்காருக்கு உண்டா என்று கேட்டதற்கு அப்படிப்பட்ட தகவல் இல்லை என்றும் சேலம் என்னும் ஊர் அமெரிக்காவிலுள்ள ஒரு மாநகராக இருக்கலாம் என்றும், அப்படிப்பட்ட ஊரைப்பற்றி சொல்லியிருக்கின்றாரோ என்னமோ என்றும், ஏதோ பொழுது போக்கானமுறையில் கனம் அமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். சர்க்காரிடத்தில் அந்தத் தகவல் இல்லை என்பதை நான் வருத்தத்துடன் ஒப்புக்கொள்ளுகிறேன். சர்க்காரிடம் அந்தத் தகவல் இல்லாத காரணத்தால் அந்தத் தகவல் இல்லை என்று இந்த அமைச்சர் அவை சொல்லுவதற்கு இல்லை. நான் இன்னும் சொல்லுகிறேன். நான் அவர்களுக்குக் கண்டிப்பாக வேண்டிய அவகாசம் தருகிறேன். அப்படிப்பட்ட தகவல் இருக்கிறது. அந்தத் தகவலை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற வகையில் சர்க்கார் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். தொழில் துறை மூலமாக அதை வெளியிட்டிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் இருக்கிற இரும்பை உபயோகப்படுத்துவது சம்பந்தமாக, "அயர்ன் ஓர் அண்ட் யூடிலைசேஷன்" என்ற புத்தகத்தில் 1830-லேயே சென்னை மாநிலத்தில் உத்தியோகத்திலிருந்து விலகிய பிறகு ஜெ. எம். மார்ஷல் என்ற வெள்ளைக்காரர் அந்த அறிக்கையை அங்குள்ள இரும்பை வைத்துக்கொண்டு தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம் என்று அவர் ஒரு குறிப்பு கொடுத்திருக்கிறார். 1953-ல் இன்னொரு தொழிற்சாலை வட ஆர்காட்டில் முள்ளப்பட்டி என்ற இடத்தில் ஏற்படுத்தியிருக் கிறார்கள். அதில் எவ்வளவு டன் எஃகு தயாரிக்கப்பட்டது. அது ஏன்

கைவிடப்பட்டது என்று அவர்களே போட்டிருக்கிறார்கள். அப்படி அவர்களே வெளியிட்டிருக்கிற அறிக்கையில் ஏற்றுக்கொள்வதானால் இந்த இரும்பு வெளிநாட்டுக்குப் போயிருக்காது என்று எப்படி அவர்களால் வாதாட முடியும். இந்த இடத்தில் இல்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். இந்தத் தகவலை ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தாம் படித்துப் பார்த்து அதை அந்த ஏட்டிலிருந்து எடுத்து சொன்னாரே தவிர அமெரிக்காவில் சேலம் என்கிற ஊர் எங்கோயோ இருக்கிறதோ என்னமோ என்று அமெரிக்கா போய் வருவதில் அக்கறை கொண்டிருக்கிற தொழில் அமைச்சர் அவர்களே சொல்லி விட்டால் அதை வேடிக்கையில் ஒன்றாக தள்ளிவிடுவோமே தவிர அதை ஒரு பொறுப்புள்ள பதிலாக நாங்கள் சொல்வதற்கு இல்லை. சேலம் இரும்பைப்பற்றி அவர்கள் கொடுத்திருக்கிற ஆராய்ச்சி உரைகளை இது வரையில் எந்த நாட்டுக்காரர்களும் பார்த்தார்களானால் சேலத்தையே குத்தகைக்கு எடுக்காலாமோ என்ற ஆசை வரத்தக்க அளவில் அந்த அறிக்கையை தயாரித்திருக்கிறார்கள். நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் அங்குள்ள தொழில் அமைச்சர் அவர்கள் சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை உண்டாகுமா என்பதைப்பற்றி திட்ட வட்டமாக இன்னும் ஒப்புக்கொள்ளவில்லை. காவேரித் துறையில் எண்ணெய் வளம் இருக்கிறதா என்பதைப்பற்றி ஆராய்வதற்கு ஆட்களை அனுப்ப உத்தேசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் பேசியிருக்கிறது. எண்ணெயைப்போல வழவழப்பாக வளைந்து பேசியிருக்கிறாரே தவிர இரும்பைப்போல் எஃகைபோல் திட்ட வட்டமாக சேலத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதனை சேர்த்துக்கொள்ளப்படும் என்று அவர்களால் சொல்லப்படவில்லை. ஆகையால்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சேலம் இரும்பு எஃகு தொழிற்சாலையை ஆராய்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கனம் அமைச்சர் அவர்களையும், அமைச்சர் அவையையும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று அவர்கள் இந்த மாநிலத்தில் 1959-60-ல் ஏற்பட்டு இருக்கும் தொழில் வளத்தைப்பற்றி அவர்கள் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். தொழில் அமைச்சர் அவர்களை நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். தயவு செய்து இன்று இரவு இந்த விவாதம் நடந்த பிறகு அதை படித்துப் பாருங்கள், அதை விவாதத்திற்கு முன்னதாக படித்தால் எங்களுக்கு பதில் சொல்வதற்கு அதில் எங்கே இடம் இருக்கிறது என்ற கண்ணோட்டம்தான்

இருக்கும். இந்த மாநில குடிமகன் என்ற முறையில் இன்றைய இரவில் படித்துப்பார்த்த பிறகு அவர்கள் ஏற்படுத்தியிருக்கிற தொழில் இந்த மாநிலத்திற்கு பெருமை தருவதுதானா என்பதை அவர்களே எண்ணிப்பார்க்க வேண்டும். செரிகல்சர் என்ற பட்டுத்தொழிற் சாலைக்கு அதன் விரிவுக்கான தொழிலைப்பற்றி ஒரு இடத்தில் பன்னிரெண்டு இலட்சம் ரூபாய் ப்ளானிங் கமிஷன் அதற்கு ஒதுக்கி இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறது. அதில் பன்னிரெண்டு பைசா கூட இந்த சர்க்காருக்குத் தர முடியாது என்று மறுத்துவிட்டார்கள். இப்பொழுது சர்க்காருக்கு எவ்வளவோ பஞ்ச நிலை ஏற்பட்டிருக் கிறது. அதற்காக எவ்வளவோ பணத்தைச் செலவு செய்து தேனி வளர்ப்புத் தொழிலைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பட்டு உற்பத்திக்காக தருவதாகச் சொன்ன பன்னிரெண்டு லட்சம் ரூபாய் நமக்குத் தரவில்லை. ராஜ்யப் பிரிவினையினால் மைசூருக்கு கொள்ளேகாலம் போனதன் மூலமாக நமக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டத்தை இந்த சர்க்கார் மத்திய சர்க்காரிடத்தில் எடுத்து வாதாடி அந்தப் பணத்தைப் பெற்றிருக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய வாதத் திறமையை எங்களிடத்தில் காட்டுகிறார்களே தவிர அங்கே போகிற நேரத்தில் ஏன் இந்த பன்னிரெண்டு லட்சம் ரூபாயை கேட்டு வாங்கி இருக்கக்கூடாது?

இதைத் தவிர இன்னும் ஒரே ஒரு ஆபத்தான விஷயம் இருக்கிறது. அதாவது Thalawadi area, Coimbatore District, Industrial Co-operative Unit with a working capital of Rs. 1.14 lakhs என்று நீங்கள் செலவழிக்கிறீர்கள் என்று சொன்னேன். இதற்கு முன் நடந்ததைப் பார்க்க வேண்டும். தளவாடி என்ற இடம் மைசூருக்குச் சேரவேண்டும் என்றும், சென்னைக்குச் சேரக்கூடாது என்றும் கிளர்ச்சி நடத்தி அங்குள்ள எல்லா மக்களும், நாம் அன்பாக கருதுகிற முதல் அமைச்சர் காமராஜ் அவர்கள் படத்தை எரித்தும் அவர்கள் ஒரு கிளர்ச்சியை நடத்தியிருக்கிறார்கள் என்று பத்திரிகையிலே பார்த்தேன். தளவாடி நமக்குத்தான் இருக்கவேண்டும் என்று தயவு செய்து முயற்சி எடுத்துக் கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். ஆரணியார் ப்ராஜெக்டை செலவு செய்தபின் விட்டுக் கொடுத்தது போல், இதையும் கொடுத்து விடமாட்டார்கள் என்ற தைரியம் இருந்தால் பணத்தை செலவு செய்து விட்டு தேனியை வளர்த்து அது

வேறுபக்கத்தில் பறந்து போவது போல் போய் விடாது அதை நாமே எடுத்துக் கொள்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் எடுத்துக்கொள்ளக் கூடிய முயற்சியில்தான், போதிய அதிகாரம் இருந்தால்தான் தொழில் வளருமே தவிர வேறு ஒன்றும் இல்லை. நமக்கு தொழில் வளம்தான் முக்கியமானது. தொழில் வளம் மக்களுடைய திருப்தியைப் பொறுத்திருக்கிறது. மக்களுக்கும் அதில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்குத் திருப்தி கொடுக்க வேண்டுமானால் விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும். கட்டுப்படுத்தப்பட்ட விலையில் பொருள்களைக் கொடுத்தால்தான் அதை உபயோகிக்கக்கூடியவர்களுக்கு திருப்தி இருக்கும். தொழில்களில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு நல்ல கூலி விகிதங்களைக் கொடுத்து அவர்கள் தங்களுடைய வாழ்கைத் தரத்தை நல்ல முறையில் நடத்திக் கொண்டால்தான் அவர்கள் தொழிலில் அக்கரை காட்டுவார்கள். நமது தொழில் அமைச்சர் அவர்கள் தொழிலுக்கும் அமைச்சராக இருக்கிறார், தொழிலாளர்களுக்கும் அமைச்சராக இருக்கிறார். அப்படி இருந்து அவர் தராசின் இரண்டு தட்டுகளாகத்தான் இருக்கிறார். எந்தெந்த சரக்குகளை யார் யார் எந்தெந்த தட்டுகளில் போடுகிறார்களோ அந்தப் பக்கத்தில்தான் அவர் சார்ந்து விடுவார் என்ற அச்சம் இருக்கிறது. ஆனால் அவர் தராசு பிடிப்பவராக இருந்தால் அப்படிப்பட்ட அச்சம் இருக்காது. ஆனால் தராசு தட்டாக இருப்பதால்தான் அவருக்கு ஒரு பைல் தொழில் அமைச்சர் என்று வரும், இன்னொரு பைல் லேபர் மினிஸ்டர் என்று வரும். இந்த இரண்டையும் வைத்துக்கொண்டு அவர் முன் நாளில் தொழிலாளர்களுக்கு தலைவராக இருந்த பழைய நிலையை வைத்துக் கொண்டு இப்பொது இருக்கிற சக்தியையும் வைத்துக் கொண்டு அவர் சிரமப்படுகிறாரே என்றுதான் நான் அனுதாபப் படுகிறேன். இன்றைய தினம் அவருடைய சகாவாக இருக்கிற உள்துறை அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்குக் காட்டக்கூடிய அக்கரை என்ன என்பதையும் அவர்களுக்கு தொழிலாளர்களிடத்தில் இருக்கும் நல்ல எண்ணம் என்ன என்பதையும் போலீஸ் பாஷையில் எடுத்துக்காட்டி அவர்கள் சொன்னார்கள். பேட்டைவாய்தலையில் இரண்டு அரசியல் கட்சிகள் தூண்டி விட்டார்கள் என்று சொல்லி விட்டார். ஆம், நாங்கள் அங்கே தொழில் சங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். அது குற்றங்களில் ஒன்றும் இல்லை. தூண்டி

விட்டிருக்கிறோம் என்று சொன்னது தொழிலாளர்கள் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொன்ன நேரத்தில் அவர்களிடத்தில் எந்த வகையிலும் மன்றாடிப் பார்த்தும் அவர்கள் எதற்கும் செவி மடுக்காது இருந்த காரணத்தால் தொழிலாளர்களுக்கு இருக்கும் கடைசி ஆயுதமாகிய வேலை நிறுத்தத்தை அவர்கள் செய்திருக்கிறார்கள். பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் அவர்கள் அரசாங்கத்தினிடத்தில் முறையிட்டிருக்கிறார்கள். வேலை நிறுத்தம் துவங்கியது 11-3-1960, அதாவது ஒரு மாதத்திற்குப் பிறகு அது ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது கூட கனம் அமைச்சர் அவர்கள் பேசுகிறார் அங்கே தொழிலாளர்கள் திரும்பவும் வேலைக்கு செல்ல வேண்டும், தொழில் கெடக் கூடாது, வேலை நிறுத்தம் செய்யக்கூடாது, உண்மையான கோரிக்கைகளை நாங்கள் கவனிப்போம் அல்லது தன்னுடைய சக அமைச்சர் கவனிப்பார் என்றும் சொல்லவில்லை. அதற்கு மேல் தங்களால் என்ன செய்ய முடியும் என்பதையும் சுட்டிக்காட்டினார். இந்த கரும்பு அங்கே இல்லை யென்றால், ஆரூரான் ஆலைக்கு எடுத்துச் செல்வோம், அங்கேயும் அது முடியவில்லை என்றால் அண்ணா மலைக்கு எடுத்துச் செல்வோம், அங்கேயும் இல்லை என்றால் ஆழ் கடலில் கொட்டுவோம் என்ற விதத்தில் போகிறார்களே தவிர தொழிலாளர்களுடைய குறைகள் என்ன? அதை நாங்கள் தீர்த்து வைக்கிறோம் என்று இந்த மாமன்றத்தில் சொல்வதற்கு போலீஸ் அமைச்சருக்குத்தான் மனம் இல்லை என்றாலும் தொழிலாளர் களிடத்தில் பழகி அவர்களுடைய குடிசைகளை நேரடியாகப் பார்த்து அவர்களுடைய கண்ணீரைக் கண்டு அந்தக் கண்ணீரால் குளிப்பாட்டப்பட்ட கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இன்றைய தினம் என்ன பதில் சொல்ல இருக்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன். ஆகையால் தொழிலாளர்களுடைய பிரச்சினை அவர்களுடைய கவனத்திற்குத் கொண்டு வரப்படுகிற நேரத்தில் உடனடியாக அதை கவனித்தால், கவனித்திருப்பாரானால் அவர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். வேலை நிறுத்தம் என்பது ஒரு விளையாட்டு அல்ல. தொழிலாளர்கள் அதை நன்றாக அறிவார்கள். கனம் தொழில் அமைச்சர் எவ்வளவோ வேலை நிறுத்தங்களை நடத்தி இருக்கிறார், எவ்வளவோ வேலை நிறுத்தங்களை தடுத்திருக்கிறார். அவர் இப்பொழுது நான் இருக்கிற இடத்தில் இருந்தால், எவ்வளவோ திறமையாக வாதாடி இருப்பார். துரதிருஷ்ட

வசமாக நீங்கள் அங்கேயும், நாங்கள் இங்கேயும் வீற்று இருக்க வேண்டியிருக்கிறதே தவிர அந்த வாதங்கள் தெரியாது என்று அர்த்தம் இல்லை. இப்போது எடுத்துக் கொண்டிருக்கிற வழக்கு அவர்களுக்குச் சொத்தையாக இருக்கிற காரணத்தினால் பல அரசியல் பிரச்சினைகளை எல்லாம் எழுப்பி குழப்பிப் பேசினார்களே தவிர தொழிலாளர் களுடைய நிலைமை, குறைகள் எல்லாம் அவருக்குத் தெரியாது என்று சொல்லமுடியாது. நான் கேட்பது எல்லாம் தொழிலாளர்களுடைய சங்கத்தைச் சேர்ந்தவர்களைக் கூப்பிட்டு அனுப்பிக் கேட்பதிலே என்ன குறை வந்துவிடும்? நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவது என்றால் எங்கெங்கே நிலம் இருக்கிறது, நிலச் சுவாந்தார்கள் இருக்கிறார்கள் என்று சுற்றி சுற்றிப் பார்க்கவில்லையா? பஸ்களை எடுத்துக்கொள்வ தென்றால் பஸ் முதலாளிகளைக் கூப்பிட்டுப் போடவில்லையா? வெளிச்சத்திலேயும், இருட்டிலேயும் தனியாகவும், பத்துப் பேர்களுக்கு மத்தியிலும், லாபத்திலும், லாபம் இல்லாமலும் பேசுவதே இல்லை யென்று சொல்கிறார்களா? தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்களைக் கூப்பிட்டுக் கேட்பதனால் என்ன குறை வந்துவிடும்? நானும் என் நண்பர் திரு. கல்யாணசுந்தரம் அவர்களும் தொழில் அமைச்சர் அவர்களை இது சம்பந்தமாகக் கண்டு பேசினோம். அவர் பேசியது கொஞ்சம். ஆனால் அவர்களுடைய எண்ணத்தை முகம் காட்டியது அதிகம். நாடகத் துறையில் ஈடுபட்டு வந்துள்ள காரணத்தினால் முகத்தில் தோன்றும் மாறுதல்களைக் கொண்டே அவர்களுடைய உள்ளக் கருத்தை என்னால் புரிந்து கொள்ள முடியும். தொழில் அமைச்சர் அவர்களும் உள்ளத்தில் உள்ளது தெரியாமல் இருப்பதற் காக முயன்றார். இருந்தும் அவர் முகம் அவர் உள்ளத்தில் இருந்ததைக் காட்டிவிட்டது. "பைத்தியக்காரர்களே, இந்த நேரத்தில் வருகிறீர்களே? நான் தொழிலாளர்களுடைய தலைவராக இருந்த நேரத்தில் வந்திருந்தால் என்ன என்னவோ யோசனைகளை நானும் உங்களுக்குச் சொல்லியிருப்பேனே. இப்போது வருகிறீர்களே?" என்று தெள்ளத் தெளிய அவர் முகம் எடுத்துக் காட்டியபோதே அவரிடத்திலும் போலீஸ் மனப்பான்மை வந்துவிட்டதே என்று பரிதாபப்பட வேண்டியிருந்தது. போலீஸ் மனப்பான்மையை விட்டு பொறுப்பு மனப்பான்மையைக் கைக் கொண்டால்தான் தொழில்கள் நல்ல முறையில் வளர்ச்சி அடைகிற க்ஷேமநல அரசாங்கம் ஏற்பட முடியும். ஆகையால் அந்த வகையில் நம்முடைய அமைச்சர் அவர்கள்

தங்கள் கருத்தைச் செலுத்த வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டில் ஐந்தாண்டு திட்டங்களைப் போடுகிற நேரத்திலே தொழில்கள் வளர "நாங்கள் தனியார் துறையா, பொதுத் துறையா என்று பார்க்கப் போவதில்லை. எப்படியோ தொழில் வளர்ந்தால் போதும்" என்று சொல்கிறார்கள். இந்த மனப்பான்மை பிற்காலத்தில் இவர்களை எங்கே கொண்டுபோய்விடும் என்று சொல்ல வருத்தப்பட வேண்டியிருக்கிறது. எப்படியோ தொழில் வளர வேண்டும் என்று "லேஸி பார்" என்ற முறையில் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் தனிக் கட்சி அமைத்துச் சொல்லி வருகிறார்கள். உங்களை அறியாமல் அவர் ஒரு கட்சி ஆரம்பித்து விட்டாரே என்று நீங்கள் கோபப்படலாமே தவிர உள் இருந்து நீங்கள் சொல்லிக்கொண்டிருப்பதைத்தான் அவர் வெளியில் இருந்து சொல்கிறார். ஆனால் பத்தொன்பதாவது நூற்றாண்டுக்குப் பிறகு இந்த உலகத்தில் பொருளாதார அறிவு படைத்தவர்கள் எல்லாத் தொழில்களும் பொதுத் துறையில் போய் விடுவது எவ்வளவு ஆபத்தானது, அதுவும் ஆபத்துக் காலத்தில் எப்பேர்ப்பட்ட ஆபத்தான நிலைமையை அது உண்டாக்கிவிடும் என்பதை அறியாமல் இருக்க முடியாது.

இதைப்பற்றி பேசும்போது நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். "யாரும் முன் வரவில்லை. ஐந்து கோடி மூலதனம் போட்டு ஆரம்பிக்க யாரும் இல்லை. நல்ல வேளையாக சேஷசாயி கம்பெனியார் முன்வந்தார்கள். அவருக்குக் கொடுத்தோம்" என்று சொன்னார்கள். அதைத் தொழில் அமைச்சர் அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். ஏன் வரவில்லை என்றால் ஐந்து கோடி மூலதனம் போட பணம் இல்லாதது ஒரு காரணம். போட்ட பணம் திரும்பி வருமா என்பது மற்றொரு காரணம். அந்தப் பணத்தைப் போட்டாலும் வெளிநாட்டுச் சலுகையை இவர்கள் பெற்றுத் தருவார்களா, இல்லையா என்பது வேறொரு காரணம். எப்படி இருந்தால்தான் என்ன, இங்குள்ளவர்கள் வெறும் கையெழுத்துப் போட்டு அனுப்பி வைக்கிறவர்கள்தானே, மேலே பார்த்துக் கொள்ளலாம் என்று இருக்கிற நிலைமை மற்றொன்று. ஆகவே இன்றுள்ள நிலைமையில் இங்குள்ள முதலாளிகளும்,

சாதாரண மக்களும் தொழில் துறையில் பணம் போட்டு ஈடுபட முன்வர வேண்டுமென்றால் பங்கைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் நம்மிடத்தில் இருக்க வேண்டும்.

அவர்களே சொன்னார்கள், சேஷசாயி கைநீட்டிய பிறகு ஒரு இடத்தில் இருந்து ஒரு கோடி வந்தது, இன்னொரு இடத்தில் இருந்து இன்னொரு கோடி வந்தது, அவர் கை நீட்டுகிற இடமெல்லாம் கோடிக்கணக்கில் வருகிறது என்றார்கள். அதற்குக் காரணம் என்ன? அந்தக் கைக்கு இருக்கிற வலிவு அல்ல, சர்க்கார் அதற்குப் பக்கத்தில் இருக்கிறது என்றவுடன் பாங்கர்கள் துணை நிற்கிறார்கள். இன்றைக்கு இந்த நாட்டில் இருக்கிற ரிசர்வ் பாங்கும், அதற்குமேலாக டெல்லியில் இருக்கிற நிதி அமைச்சர் அவர்களும் சேர்ந்தால் எதையும் செய்ய முடியும் என்ற பொறுப்பு இருக்கிறதே தவிர நமக்கு என்ன பொறுப்பு இருக்கிறது? நமது தொழில் அமைச்சர் அவர்கள் மாதாமாதம் தம் சம்பளத்தை வேண்டுமானால் பாங்கியில் போட்டுக் கொள்ளலாம், தேவையானால் வாங்கிக்கொள்ளலாம். அதைத் தவிர இவருக்கு அதிகாரம் இல்லை. யார் ஒருவர் பாங்குகளை கட்டுப்படுத்துகிற அதிகாரத்தை வைத்து இருக்கிறாரோ அவர் ஒருவரே தொழில் துறையில் ஆதிக்கம் செலுத்த முடியும் என்பது தொழில் துறையின் அரிச்சுவடி காட்டுகிறது. அதை அறிய மாட்டாதவர் அவர் என்று நான் கருதமாட்டேன், சொல்லமாட்டேன் என்கிறார். சொன்னால் என்னுடைய இடத்திற்கு வரவேண்டியவராக இருக்கிறார். "எல்லா அதிகாரமும் டெல்லியில்தான் இருக்கிறது, நம்மிடத்தில் ஒன்றும் இல்லை" என்று அவர் சொல்ல மறைப்பதை நான் சற்று வெளிப்படையாகச் சொல்கிற காரணத்தினால் ஏதோ விரோத உணர்ச்சியுடன் சொல்வதாகக் கருதிவிட வேண்டாம். "தொழில் அமைச்சர் அவர்கள் நல்ல திறமைசாலி. அவர் குணம் தங்கம். அவர்கள் செய்து முடிக்காத காரியங்களே கிடையாது. அவர்கள் வாழ்க, வாழ்க" என்று நான் சொன்னாலும் தொழில் அமைச்சர் அவர்கள் கூட வராந்தாவில் என்னைப் பார்க்கும்போது புன்னகை காட்டிப் போவார். அத்தகைய புன்னகையை என்னுடைய சொந்த லாபமாகச் செய்துகொள்கிற சூதாட்டக்காரன் அல்ல நான். ஆகவேதான் அவரைப் பாராட்டுவது தேவை என்று கருதாமல் அவருக்கு இருக்கிற திறமைக்கு செய்கிற காரியங்கள் குறைவு, இன்னும் சற்று அவருக்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்று சொல்கிறேனே தவிர

விரோதத்தினால் சொல்கிறேன் என்று கருதத் தேவையில்லை. தொழில்துறை கனிவளங்களை ஆராய்ச்சி செய்கிற முழு அதிகாரம் நம்முடைய ராஜ்யத் திட்டங்களை நாமே வகுத்துக் கொண்டு அதற்குத் தேவையான முதலீட்டைப் பெறுவதற்கான பாங்கு வசதிகளையும், இயந்திரங்களையும் வரவழைத்துக் கொள்கிற செலாவணி வசதிகளும் இந்த மாநிலத்திற்கென்றே ஒதுக்கித் தராத வகையில் நம்முடைய தொழில்துறையில் விருத்தி திறமை என்பது எல்லாம் கற்றாழை நாரினால்தான் காட்ட முடியும். தேவையான அளவுக்கு தொழில் வளரவேண்டுமென்றால் கொள்கை, திட்டங்கள், மனப்போக்கு, பற்று, பாசம் இவைகள் நீக்கப்பட வேண்டும். இவைகள் நீக்கப்பட்ட பிறகுதான் இந்த மாநிலத்திற்குத் தேவையான வளத்தைப் பெற முடியும். அதை எந்த அளவுக்குப் பெற வேண்டும் என்பதை அவர் எடுத்துக் காட்டியிருக்கிற அறிக்கையில் இத்தனை தொழில் வைத்திருக்கிறோம் என்று சொன்னார்களே அன்றி, ஒரு ஆண்டிலே, ஒரு மாதத்திலே வேலை வாய்ப்பைத் தேடி அலைகிற மக்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு, கிராமத்தில் இருக்கிற மக்கள் தொழில் கிடைக்காமல், விவசாய காலம் போக பாக்கி எத்தனை காலம் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எல்லாம் எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேன்ஜ் மூலமாகப் புள்ளி விவரங்களைச் சேகரித்து கொடுத்திருக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் நாம் எத்தனை வளர்ச்சி அடைந்திருக்கிறோம் என்று பார்த்துக்கொள்ள வசதி உண்டு.

பல அங்கத்தினர்கள் பேசுகின்ற நேரத்தில் மற்ற மாநிலத்தை விட இந்த மாநிலத்தில்தான் குடிசைத் தொழில் அதிகம் வளர்ந்திருக் கிறது என்று சொன்னார்கள். அதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் குடிசைத் தொழில் என்பதற்கு நம் சர்க்கார் வைத்துக் கொண்டிருக்கிற இலக்கணம் குடிசையிலேயே அந்தத் தொழிலாளர்கள் இருக்க வேண்டும், குடிசையில் இருந்து செய்வதுதான் குடிசைத் தொழில் என்றால் அப்போது பூரண வெற்றி. ஆனால் அவர்கள் ஓட்டு வீட்டுக்கு வரக்கூடாதா? இருட்டுக் குடிசையைவிட்டு ஒளியுடைய மாளிகைக்கு வரக்கூடாதா? அந்த நிலையில் அவர்கள் பொருளாதாரம் வளர்ந்ததா? அப்படி வளரவேண்டுமென்றுதான் நான் சொல்கிறேன். வெள்ளைக் காரன் கிராமத்திலுள்ள தன் பங்களாவுக்கு காட்டேஜ் என்றான்.

காட்டேஜ் இண்டஸ்ட்ரி என்னும் போது அதை அப்படியே குடிசைத் தொழில் என்று வைத்து இந்தத் தொழில் செய்பவர்கள் குடிசையைப் போட்டுக்கொண்டுதான் இருக்க வேண்டும் என்பது போல் நாம் இருக்கிறோம். காட்டேஜ் இண்டஸ்ட்ரி என்று சொல்லப்படுகிற சின்னத் தொழில்கள் எல்லாம் அமெரிக்க நாட்டில் எவ்வாறு செய்யப்படுகிறது, எல்லாத் துறையிலும் மின்சாரம் எவ்வாறு உபயோகப்படுத்தப்படுகிறது என்று நாம் பார்த்தால் அவ்வாறு இங்கும் செய்ய முயல வேண்டும்.

மின்சாரத்தைப்பற்றி பேசுகின்ற நேரத்தில் குந்தாத் திட்டம் முடிந்த பிறகு நமக்கு வேறு வழி இல்லாத காரணத்தினால் நமது அமைச்சர் அவை மேலே இருக்கிற டெல்லி அமைச்சர் அவையிடம் வற்புறுத்தி, முடியுமானால் நம் கோரிக்கைக்கு அவர்களை இணங்கச் செய்ய ராஜிநாமா செய்து விடுவோம் என்று - ஒப்புக்காக, உண்மைக்காக அல்ல - மிரட்டியும் நமது மாநிலத்தில் ஒரு அணு உலையை ஏற்படுத்தியே தீரவேண்டும்.

அப்படி ஒரு அணு உலைக் கூடத்தை ஏற்படுத்தித் தருவதால் மின்சாரத் தட்டுப்பாடுகளை நீக்கிக் கொள்வதன் மூலம் இந்த மாநிலத்திற்குத் தேவையான ரெயில்வே வசதியையும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெறுவதற்கான விதத்தில் நீங்கள் வாதாடுவதினால்தான் தொழில் வளர்ச்சி பெற முடியுமே தவிர தொழில் அமைச்சர் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு பிற இலாகாக்கள் அறிக்கை வெளியிடுகிறார்களே அதே போல் நமது இலாகாவிற்கும் ஒரு அறிக்கை வெளியிடலாம் என்று வெளியிட்டிருக்கும் இந்த அறிக்கையில் இரண்டு பக்கத்திற்கு மேல் போனால் அதற்குப் பின்னால் காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ், பாட்டரி, காயர் மேக்கிங் என்று வருவதைப் பார்த்தால், அவர்கள் மீண்டும் ஐக்கியநாட்டுச் சபைக்கு போகும்போது, அமெரிக்காவிற்கு விமானத்தில் பறக்கும்போது இந்த அறிக்கையை படித்துக்கொண்டே பறக்க வேண்டும். முதல் பக்கத்தில் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், அதில் 25 சத வீதம் போக மற்ற அதிகாரமெல்லாம் மத்திய அரசாங்கத்திற்குத்தான், அடுத்தபடியாக, ''பிக் அயர்ன்'', அது தனிப்பட்ட கம்பெனிக்கு சொந்தமானது; அடுத்த படியாக ''ரப்பர் பாக்டரி'', அது டன்லப் கம்பெனிக்கு சொந்தமானது; அடுத்தபடியாக ''சைக்கிள் கம்பெனி'', அது டீ.ஐ. சைக்கிள்ஸ்க்கு

சொந்தமானது; பின்னர் "அலுமினியம் ப்ளான்ட்", அது தனிப்பட்ட ஒரு முதலாளிக்கு சொந்தமானது; பின்னர் "சர்ஜிக்கல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் ப்ளான்", அது மத்திய அரசாங்கத்திற்கு சொந்தமானது; பின்னர் "ரா பிலிம் ப்ராடக்ட்ஸ்", அது வெளிநாட்டிலும், மத்திய அரசாங்கமும் சேர்ந்து போடுவது. இப்படியாக பக்கங்களை தள்ளிக்கொண்டே வந்தால் கடைசியாக நமது அரசாங்கத்திற்கு சொந்தமானது என்னவென்று பார்த்தால், மன்னிக்க வேண்டும் கற்றாழை நார் மட்டும்தான் நமக்கு சொந்தமாக இருக்கிறது. கற்றாழை நாரில் வேலை செய்வது என்பது தவறு அல்லது மோசமானது என்று நான் சொல்லவில்லை. தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும், இந்த மாநில அரசாங்கம் வைத்துக் கொண்டிருக்கும் தொழில் திட்டம் போதுமானதா? என்று. 10,000 கோடி ரூபாய் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஒதுக்குகிற இந்நேரத்தில் நமது தொழிலமைச்சர் அவர்கள் இந்த மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்காக மிக அதிகமாக தொகை ஒதுக்க வேண்டு மென்று வலியுறுத்திச் சொல்லி இரண்டு கோடி கேட்டதற்குப் பதிலாக பத்து கோடி கேட்டிருந்தால் நிச்சயமாக நான் அதை வரவேற்றிருப் பேன். மற்றொன்று, சேலம் இரும்பைப்பற்றி நேற்று நமது வேதாரண்யம் தொகுதி உறுப்பினர் சொன்னதைக் கேட்டு, பலர் விவரம் தெரியாமல் பேசி விட்டாரே என்று எண்ணிக் கொண்டிருக் கலாம், அது ஒரு ஆதாரத்தின்பேரில்தான் பேசப்பட்டதே தவிர ஆதாரமின்றியல்ல. அதற்கு ஆதாரம் இருக்கிறது என்பதற்கு நீங்கள் தந்திருக்கிற அறிக்கையே ஆதாரம். இன்னொன்று, நாங்கள் எந்தப் பிரச்சினையைக் கிளப்பினாலும் நீங்கள் இலாகாக்களைத்தான் நாடுகிறீர்கள், அது ஓரளவு முறைதான். இருந்தாலும் இலாகாக்களின் தகவல்கள் எல்லாம் "அப்டுடேட்டாக", அன்றாடம் தரும் தகவல்கள் என்று தப்புக் கணக்கு போடாதீர்கள். நேற்று நான் இந்த சட்டசபையின் படிப்பகத்திற்கு சென்றிருந்தேன். அங்கு எம். எஸ் கிருஷ்ணன் என்ற பொருளாதார நிபுணர் நம் நாட்டுக் கனி வளத்தைப்பற்றி எழுதியிருக்கும் அறிக்கையைக் கேட்டேன். அவர் சேலம் மாவட்டத்தைப்பற்றி ஓர் அறிக்கை தயார் செய்திருக்கிறார். அது இருக்கிறதா என்று கேட்டால் எம். எஸ். கிருஷ்ணனா, ஜியாலஜிக்கல் சர்வேயர் என்று இல்லாத பொருளைக் கேட்டு விட்டதைப் போல் கேட்டு விட்டு இல்லை என்று சொன்னார்கள்.

அந்த லட்சணத்தில்தான் நமது படிப்பகம் இருக்கிறது. அடுத்து, நமது மாநிலத் தொழில் வளர்ச்சிப் பற்றி புத்தகம் போட்டு கொடுக்கும்போது மற்ற மற்ற மாநிலங்களின் தொழில் வளர்ச்சியைப் பற்றியும் ஒரு பக்கம் கொடுத்திருந்தால் உங்கள் திறமை எவ்வளவு; நீங்கள் எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறீர்கள் என்பதை ஒப்பிட்டுப் பார்க்க வழி வகையிருக்கும். அதை நீங்கள் செய்யவில்லை அதோடு சிறிய தொழில்களை வளர்க்கப் போகிறோம் என்று சொல்வார்களானால் வேதாரண்யம் தொகுதி உறுப்பினருக்கு அது பிடித்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். நல்ல ஆலமர நிழலிலோ அல்லது நல்ல ஆற்றங்கரை ஓரத்திலோ இருந்து கொண்டு பனை ஓலையை கையில் வைத்துக்கொண்டு அதுபற்றி முதலமைச்சர் அவர்கள் சொல்ல, நிதியமைச்சர் அவர்கள் அதை எழுத, தொழில் அமைச்சர் அவர்கள் அதைத் திரும்ப படிக்க, வேதாரண்யம் தொகுதி உறுப்பினர் அதற்கு வியாக்கியானம் சொல்லவும், காஞ்சீபுரம் தொகுதி அங்கத்தினர் அதற்கு மறுப்புறை சொல்லவும் மற்றுமுள்ளவர்கள் சந்தியாவந்தனம் செய்யவோ அல்லது ஜபநபம் செய்யவோ செய்து விட்டு குடிசைக்குத் திரும்பச் செல்லலாம். ஆனால் அப்படிப்பட்ட நிலை அல்ல, இப்பொழுதிருப்பது. ஜெட் விமானத்தில் பறக்கும் நிலையில் இப்பொழுது நாம் இருக்கிறோம். தொழில் அமைச்சர் அவர்கள் ஜெட் விமானத்தில்தான் பறக்கிறார்கள் அடிக்கடி. அப்படி அவர்கள் விமானத்தில் அதிக உயரத்தில் பறந்தும் கூட, இன்னும் கற்றாழை நாறா இருக்க வேண்டும். எங்களைப் போல் மேலை நாடுகளுக்கு விமானத்தில் செல்லாமல் இருந்தால் ஒரு சமயம், கற்றாழை நார்தான் நமக்குத் தேவையோ என்று கருதியிருக்கலாம். பெரிய பெரிய தொழில் வளர்ச்சி பெற்றயிடங்களுக்கு சென்றிருக்கும் தொழில் அமைச்சர் அவர்கள் தரக்கூடிய திட்டமல்ல இது. அவர்களது தற்போதைய நிலையில், அவர்களால் இவ்வளவுதான் தர முடிந்திருக்கிறது. அவருக்கு திறமையிருக்கிறது என்பதை அவர் கட்சிக்காரர்கள் மட்டுமல்ல நாங்களும் அதற்காக அவரைப் பாராட்ட கடமைப் பட்டிருக்கிறோம், பாராட்டவும் செய்கிறோம். ஆனால் பாராட்டுதலை மட்டும் எதிர்பார்த்து அவர்கள் அறிக்கை வெளியிட்டார்கள் என்று நான் கருதவில்லை. என்னால் முடிந்தது இவ்வளவுதான், வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள் என்று எங்களைத் தூண்டுவது போல்தான் இருக்கிறது, இந்த அறிக்கை. எல்லாவற்றையும் ஜீரணித்து

விட்டு, அஜீரணமான அறிக்கை அல்ல இது. நமது நாட்டின் விவசாயத்தின் தரம் நாளுக்கு நாள் குறைந்து வருவதை தொழில் அமைச்சர் அவர்கள் துவக்க உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். முன்னால் எல்லாம் விவசாயத்தைப்பற்றித்தான் இந்த மன்றத்தில் அதிகமாக பேசுவார்கள். ஆனால் இப்பொழுது தொழிலைப்பற்றித் தான் அதிகமாகப் பேசுகிறார்கள். அதுபற்றி மகிழ்ச்சியடைகிறேன் என்று சொன்னார்கள். உண்மையிலேயே பூர்ண மகிழ்ச்சியடைய வேண்டுமென்றால், விவசாயத்தை எந்த அளவு மக்கள் நம்பிக் கொண்டிருந்தார்களோ அது படிப்படியாக பல காரணங்களால் குறைந்து வருகிறது. இனி தொழில் துறை வளர்ச்சி யடைவதின் மூலம்தான் மக்களுக்கு வயிறாரச் சோறு, நோயாற மருந்து, குடியிருக்க இடம், படிப்பதற்குக் கல்வி வசதி, செய்வதற்குத் தொழில் ஆகியவைகள் கிடைக்க வேண்டும். அதைவிடச் சிறந்ததொரு லட்சியம் எந்த நாகரீக அரசாங்கத்திற்கும் இருக்க முடியாது, அந்த லட்சியத்தை வைத்துக்கொண்டு முன்னேற வேண்டுமென்று அமைச்சரவையை கேட்டுக்கொண்டு நான் எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

நில சீரமைப்பு சட்டமுன் வடிவு

உரை : 37 **நாள் : 20.04.1960**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே, நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுவதற்காக கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த ஏற்பாட்டில் கலந்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைத் திருக்கிறது. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் நாட்டிலே சில புதிய நிலைமைகளை உண்டாக்குவதற்கான ஒரு சிறந்த ஏற்பாட்டில் பங்கு எடுத்துக்கொள்கிறார்கள் என்ற பெருமையை நிச்சயமாக ஒவ்வொருவரும் அடைய முடியும். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவது என்றால், அந்த ஏற்பாட்டைப்பற்றி பல வருடங்களாக பொது மன்றங்களிலும், அரசியல் கட்சி மகாநாடுகளிலும், நிபுணர்களின் அறிக்கைகள் மூலமாகவும் நாட்டு மக்களுக்கு பல்வேறு வகையான வாக்குறுதிகளும், பல்வேறுவிதமான அவர் ஆசாபாசங்களும் ஊட்டப் பட்டும், காட்டப்பட்டும் வந்தன. அவைகள் எந்தளவுக்கு இந்த மாசோதாவில் கொண்டு வரப்பட்டிருக்கிறது, அவை எப்படி நிறை வேற்றப்படுகிறது என்பதைப்பற்றி யோசிக்கவேண்டிய தருணத்தில், அந்த வகையில் நடப்பதற்கு சர்க்கார் முன் வந்ததற்கு நிச்சயமாக முற்போக்கு சக்திகள் அத்தனையும் பாராட்டத்தான் கடமைப் பட்டிருக்கிறார்கள். நிலைமைகளின் நிர்பந்தத்தால் அவர்கள் அப்படி கொண்டுவந்திருக்கிறார்களா அல்லது இந்த காலத்தில் செய்யா விட்டால் இதைவிட தீவிரமான புரட்சிகரமான திட்டங்கள் பிற்காலத்தில் வந்துவிடும் என்பதற்காக பாதுகாப்பு உணர்ச்சியோடு செய்கிறார்களா என்பதெல்லாம் சுவையான அரசியல் பிரச்சினைகளே தவிர இப்பொழுது அவைகள் அவ்வளவு அவசியமல்ல என்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுவது என்ற தொரு திட்டத்தை நடைமுறையில் கொண்டு வந்ததுபற்றி இன்று நாம் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறோம். இந்த மகிழ்ச்சியில் இரண்டற ஆளும் கட்சியோடு சேருவதற்கு ஏற்ற முறையில் இந்தத்

திட்டத்தை உருவாக்கவில்லை என்பதுதான் எங்களுக்குள்ள வருத்த மாகும். இந்த மாமன்றத்தைப் பொறுத்த வரையில் ஒரு பத்து பேர்கள் இருக்கலாம், இதை வெளிப்படையாக வேண்டாமென்று சொல்வதற்கு. அப்படி சொல்வதற்கு முடியாமல் தயக்கத்தோடு அதை மனத்திற்குள்ளாகவே வெறுத்துக் கொண்டிருக்கக்கூடியவர்கள் ஒரு இருபது பேர்கள் இருக்கலாம். மற்ற யாராயிருந்தாலும் சரி கருத்திருமன் அவர்கள் சொன்னதுபோல் முப்பது ஏக்கருக்கு மேல் வேண்டியதில்லை, வேண்டியதில்லை, வேண்டியதில்லை, என்று அதற்கு மேலே இருக்கப் போவதில்லை என்று தெரிந்த பிறகு மிகத் தாராளமாக பேசக்கூடியவர்கள்தான் இந்த மன்றத்தில் அதிகம் பேர்கள் இருக்கிறார்கள். கருத்திருமன் அவர்களுக்கு ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன என்று நம்பிக்கொண்டி ருப்பவன் அல்ல நான். திரு கருத்திருமன் அவர்களை நான் இந்தச் சட்டமன்றத்திற்கு வருவதற்கு முன்னாலேயே நன்றாகத் தெரியும். அவர்களைப் பார்த்தால் ஆயிரக் கணக்கான ஏக்கர்களுக்கு சொந்தக் காரர் என்று தோன்றுமே தவிர அவர் உண்மையிலேயே அப்படிப் பட்டவர் அல்ல.

நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுவது என்கின்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வருகின்ற நேரத்தில், அதனுடைய நோக்கத்தை பார்த்து, அதிலுள்ள பலாபலன்களைப் பார்த்து அதிலிருக்கின்ற கஷ்டங்களைப் போக்குவதற்காக சட்டங்களை இயற்றுகிறோம், தேவையான நீதிகளை ஏற்படுத்துவதற்காக பலவிதமான சட்டங்களை இயற்றுகிறோம், சமுதாயத்தில் இருக்கின்ற கேடுபாடுகளை நீக்குவதற்காக நாம் பல சட்டங்களை இயற்றுகிறோம். இதில் எந்த நோக்கத்தோடு, எந்த விதத்தில் நிலங்களுக்கு உச்சவரம்பு கொண்டு வருவதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை இதிலுள்ள குறிப்பு களிலிருந்து என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பொதுவாக இந்த நாட்டில் உழுபவனுக்கு நிலம் சொந்தமாக இருக்க வேண்டும் என்று பல காலமாக பேசப்பட்டு வந்ததை நாம் எல்லோரும் அறிந்து வந்திருக்கிறோம். பல காலமாக உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று சொல்லப்பட்டு வந்த காலத்தில், அன்று காங்கிரஸ் கட்சியில் இருந்த பெரிய தலைவர்கள், நிலம் உழுபவனுக்கு சொந்தம் என்றால், மோட்டார் ஓட்டுபவர்களுக்கு சொந்தம் ஆக்கப்பட வேண்டும், ரயில், அதில் பிரயாணம் செய்கின்றவர்களுக்கு சொந்தம் ஆக்கப்பட வேண்டும் என்ற புரியாத பொருளாதார தத்துவங்களை எல்லாம்

பேசிக்கொண்டு இருந்தார்கள். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள்கூட, அவர்கள் இங்கு முதல் அமைச்சராக வருவதற்கு முன்னால் இப்படியெல்லாம் பேசுவதை நான் வேடிக்கையாக கேட்கிறேன். அப்படிப்பட்ட மனப்பான்மையிலிருந்து மாறி, நிலம் உழுபவனுக்கு சொந்தம் என்ற கொள்கையாவது, அந்த அடிப்படை அரசியல் ரீதியாக ஏற்றுக்கொள்ள முற்பட்டிருப்பது ஓரளவுக்கு வரவேற்கத்தக்கதுதான் என்றாலும், நிலம் உழுபவனுக்குச் சொந்தம் என்ற அடிப்படையில் அதற்கான முற்போக்கு சத்தி கொண்ட கருத்துக்கள் இந்தச் சட்டத்தில் உண்மையாகவே அமைந்திருக்கும் என்ற எண்ணத்துடன் இதற்கு முன்னுரையாக கூறப்பட்டிருக்கும் இடத்தில் மிக ஆவலோடு கவனித்துப் பார்த்தேன். ஆனால் அதில் இதை ஒன்றும் குறிப்பிடாமல் ஒருபுதிய முறையை, ஏற்பாட்டை கொண்டு வந்திருக்கிறோம். இந்த ஏற்பாட்டின் மூலமாக அதிகப் படியான அளவில் பலா பலன்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம் என்று இவைகளையெல்லாம் அதிகப்படுத்தி சொல்லியிருக் கிறார்களே தவிர நிலம் உழுபவனுக்குச் சொந்தம் என்ற அடிப் படையில் இதைக் கொண்டு வந்திருப்பதாகவே தெரியவே இல்லை. நிலத்தில் பாடுபடுகின்ற உழவர்கள் என்பதற்கு அல்லது கல்டிவேட்டர் என்பதற்குக் கூட இந்தச் சட்டத்தில் இந்த மசோதாவில் இன்றைய தினம் கொடுக்கப்பட்டிருக்கிற வியாக்கியானங்களைப் பார்த்தால் அவை ஒன்றும் முற்போக்கு சக்தியைக் காட்டுவதாக இல்லை. உழவர்கள் யார், விவசாயிகள் யார் என்பதற்கான விளக்கத்தைப் பார்க்கும் பொழுது இதன் மூலம் பயன் அடைபவர்கள் விவசாயிகள் அல்லது உழுபவர்கள் என்று சொல்ல முடியாத அளவுக்கு விளக்கங்கள் இருக்கின்றன. அறுவடைக் காலத்தில் வயலோரங்களில் போகிறவர்கள் மட்டும் உழவர்கள் அல்ல, விதைப்பாடு நடை பெறுகின்ற சமயத்தில் வயலோரங்களில் மட்டும் நின்று கொண்டிருப் பவர்கள் மட்டும் உழவர்கள் அல்ல, அறுவடை கழிந்து நெல்லை களஞ்சியத்தில் போடுவதைப் பார்த்துக்கொண்டிருப்பவர்கள் மட்டும் உழவர்கள் அல்ல, அல்லது களஞ்சியத்திலிருந்து நெல்லை எடுத்து இயந்திரத்துக்கு கொண்டு போவதற்கு உத்தரவிடுகின்றவர்கள் விவசாயிகளும் அல்ல, உழவர்களும் அல்ல. ஆகையினால் உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று சொல்லுகின்ற நேரத்தில் இப்போது யார் யார் விவசாயத்தில் நேரடியாக நிலத்தில் உழுகின்ற வர்கள்தான் விவசாயிகள், உழவர்கள். இந்த முறையில் விளக்கம்

கூறப்படவில்லை என்றால் இது மிகவும் பிற்போக்கான ஒரு நிலையைத்தான் ஏற்படுத்துமே தவிர வேறு எதுவுமிருக்க முடியாது. உண்மையிலேயே உழுபவர்களுக்கு நிலம் சொந்தமாகவேண்டும், அவர்களுக்கு நிலம் தரப்பட வேண்டும் என்று எண்ணமிருந்தால் உண்மையிலேயே நிலத்தில் யார் தன்னுடைய உழைப்பைப் போட்டு அதன் மூலம் கிடைக்கின்ற பணத்தைத் தன்னுடைய வாழ்க்கைக்காக வைத்துக் கொண்டிருக்கிறார்களே அவர்கள்தான் விவசாயிகள், உழவர்கள் என்ற கருத்தில் அவர்களுக்கு நிலங்கள் கொடுக்க வேண்டும் என்ற விளக்கம் தரப்பட்டிருக்குமானால் உண்மையில் இந்த மசோதாவில் முற்போக்கு சக்தி இருக்கிறது என்று எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இவைகளை ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் முன்னால் இருந்த காங்கிரஸ் தலைவர்கள், இப்போதல்ல நீண்ட நாட்களுக்கு முன்னாலேயே இதற்கு மறைமுகமாக வேட்டு வைத்து தகர்த்து விட்டிருக்கிறார்கள். முதன் முதலாக காங்கிரஸ் கட்சி சார்பில் போடப்பட்ட விவசாய கமிட்டியில் கல்டிவேட்டர் என்பதற்குக் கொடுத்திருக்கின்ற விளக்கத்தைப் பார்த்தால் ''எவர் ஒருவர் தன்னுடைய உடலுழைப்பை நிலத்தில் போடுகின்றாரோ அவர்தான் உண்மையான கல்டிவேட்டர் அல்லது உண்மையான உழவர்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அமைக்கப்பட்ட மற்றொரு கமிட்டியின் (லாண்ட் டெனியூர் கமிட்டி) முன்னால், கல்டிவேட்டர் என்பது யார் என்று சொன்னதை மாற்றி கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்தில் "The Congress Agricultural reforms committee defined the cultivator as one who puts in a cortain amount of manual labour in cultivation. This definition is closely associated with the idea if tiller. It is undoubtedly too narrow." என்று சொல்லி, உழைப்பைப் போடுகின்றவர்கள்தான் உழவர்கள் அல்லது விவசாயிகள் என்கின்ற முற்போக்கான விளக்கத்தை மறைத்துவிட்டு கூலிகொடுத்து வேலை வாங்குகின்றவர்களும் தான்யமாகக் கொடுக்கவில்லை யென்றாலும் பணம் கொடுத்து வேலை வாங்குகின்றவர்களும் விவசாயிகள்தான் என்று புதிய விளக்கத்தைச் சேர்த்துக் கொண்டார்கள். இந்த மசோதாவும் அந்த அடிப்படையில் கட்டப் பட்டிருக்கிறது. முற்போக்கான சக்தியுள்ளதாக இந்த மசோதா அமைந்திருக்குமானால் இதில் குற்றம் குறைகாண மக்கள் முற்பட்டிருக்க மாட்டார்கள். நம்முடைய ரெவன்யூ அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற விளக்கத்தில் கல்டிவேட்டர் யார், ரயத்துகள் யார் என்பதற்கு இப்படிப்பட்ட விளக்கத்தைக்

கொடுத்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் முற்போக்கான சக்தியுள்ள விளக்கங்கள் என்று சொல்லமுடியாது என்பது மட்டுமல்ல முற்போக்கான வழிக்கு கொண்டு செல்லாத அளவுக்கு இருக்கிறது. ஆகவே இதற்கு முற்போக்கான விளக்கம் தேவை, அதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே நிலத்தை ஐந்தாறு வகையில் பிரித்திருக்கிறார்கள். இன்னொரு வகையில் வியாபார பொருட்கள் பயிரிடுகிற நிலங்களுக்கு விலக்குக் கொடுத்தும் தோட்டக் காலுக்கு விலக்குக் கொடுத்தும், மலைப் பிராந்தியங்களுக்கு விலக்கு கொடுத்தும், இவ்விதம் பலவற்றிற்கு விலக்கு கொடுத்துவிட்டு மிச்சப்படுகிறது என்னவென்று பார்த்தால் மிகவும் குறைவு. நம்முடைய நாட்டில் இருக்கின்ற நிலத்தின் அமைப்பை எடுத்துப் பார்த்தால். "P ı tadars paying Rupees one and less 22.2, pattadars paying more than one and below Rs. 30- 66.6. pattadars paying more than Rs 30 and less than 50- 3.6 pattadars paying Rs 50 and above 7.1. என்ற இவர்கள் எல்லாம் வர மாட்டார்கள். ஆனால் ஆயிரம் ரூபாய்க்கு மேல் வரிசெலுத்துகின்ற பட்டாதாரர்கள் 2000 பேர்கள் என்று இந்தக் கணக்கிலிருந்து தெரிகிறது. இவர்கள் கொடுத்திருக்கின்ற கணக்கை எடுத்துக் கொண்டு பார்த்தாலும் சரி அல்லது தகப்பன், மகன் புருஷன் மனைவி ஒன்றாக இருந்தாலும் சரி அல்லது புருஷன் மனைவி வேறு வேறாக இருக்கிறார்கள் என்று கணக்கு காட்டினாலும் கூட ஆயிரக் கணக்கான பட்டாதாரர்கள்தான் இருப்பார்கள். இவர்களுக்குத் தொல்லை கொடுக்க வேண்டாம் என்ற அளவில் இந்த ஆயிரம் பேரைக் காப்பாற்றுவதற்கு, இவர்களுக்கு இருக்கிற பயத்தைப் போக்குவதற்கு பெரிய பெரிய அரசியல் வாதிகள் எல்லாம் தனித்தனி இயக்கங்கள் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இல்லை, அவர்கள் விரும்புகிற நோக்கங்கள் அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு இதிலேயே இருக்கின்றது. ஆகவே நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுகின்ற பொழுது இதற்கு பெருவாரியான அளவில் ஆதரவு இல்லாததன் காரணம் முற்போக்கான சக்திகளின் அடிப்படையில் இந்த மசோதா கொண்டு வரப்படவில்லை. இன்னொன்று இம்மாதிரிப்பட்ட மசோதா வரப்போகிறது, வரப்போகிறது என்று கடந்த 15 வருட காலமாக ஏறத்தாழ எல்லா காங்கிரஸ் தலைவர்களுமே கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஜெய்பூரில் நிறைவேற்றிய தீர்மானத்திலிருந்து கராச்சியில் தீர்மானம் போட்டது முதல் இம்மாதிரியான சட்டம் வரப் போகிறது வரப் போகிறது என்று எங்கும் எடுத்துப் பேசப்பட்டு

வந்ததன் காரணமாக, இதிலிருந்து எவ்விதம் எல்லாம் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமோ அவ்விதம் எல்லாம் வேண்டிய பாதுகாப்பையும் அதற்கான வழிகளையும் தேடிக் கொள்ளப்பட்டன. அதற்கான வாய்ப்புகள் முன்பே அளிக்கப்பட்டு விட்டது. ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இங்கு கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கும் பதிலளிக்கின்ற நேரத்தில் குறிப்பிட்டார்கள். நாம் நிலங்களைப் பிரிக்கவேண்டும் என்றுதானே சொல்லுகிறோம். நாட்டில் பல இடங்களில் பெரும் அளவில் நிலம் படைத்தவர்கள் அவர்களாகவே நிலத்தைப் பிரித்துக் கொண்டார்கள். இதுவே போதாதா என்று கேட்பார்கள், கட்டி தானாகப் போவதற்கும் அதை ஆபரேஷன் செய்து எடுப்பதற்கும் இருக்கிற வித்தியாசத்தை கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் நன்றாக உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இதன் மூலம் நாட்டில் நடைபெறுகின்ற அக்கிரமங்களை நீக்கவேண்டும் என்று கருதியிருந்தால் இதை தக்க நேரத்தில், உரிய நேரத்தில், இந்தப் புரட்சிகரமான மாறுதலை கொண்டுவந்து இருப்பார்களானால் இன்றைய தினம் இம்மாதிரிபட்ட ஒரு சட்டம் வரப்போகிறது என்று தெரிந்த நேரத்தில் லட்சக் கணக்கான பொது மக்கள் இந்த மன்றத்திற்கு வெளியே இருந்துகொண்டு உங்களை வாழ்த்தியிருப்பார்கள். அழுகும் பொருட்களுக்கு வரியை கொண்டு வந்தபோது மக்களிடம் இருந்த உணர்ச்சி கூட, நிலத்திற்கு உச்சவரம்பு காட்டும் இந்த மசோதா வருகின்ற நேரத்தில் இல்லை என்பதை வருத்தத்தோடு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட புரட்சிக்கரமான மாறுதலுக்காக உடனடியாக ஒரு திட்டத்தைக் கொண்டுவந்திருப்பதாக நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் நாட்டு மக்கள் உள்ளத்தில் இது எந்த அளவுக்கு ஒரு உணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது என்று நீங்கள் அருள்கூர்ந்து பார்க்க வேண்டும். இது புரட்சிக்கரமான திட்டமாக இருக்கக்கூடாது என்பதற்காகவே நீங்கள் இதைப்பற்றிப் பல ஆண்டு காலமாகப் பேசிப் பேசி வந்து, அவரவர்கள் தங்கள் தங்களுக்கும் பாதுகாப்புக்களைத் தேடிக்கொள்ளும்படி செய்திருக் கிறீர்கள். நேற்றைய தினம் நான் கனம் அமைச்சரிடம் தனிப்பட்ட முறையில் பேசிக்கொண்டிருந்த போது, இந்த மசோதா சட்டமானால் பிரித்துக் கொடுப்பதற்கு, எவ்வளவு நிலங்கள் கிடைக்கக்கூடும் என்று அவரிடம் கேட்டேன். அப்போது அவர், ஏறக்குறைய 5 லட்சம் ஏக்கர் கிடைத்தால் அதுவே அதிகம் என்று சொன்னார். எனவே, கொடி இல்லாமல், கொட்டு முழக்கம் இல்லாமல், சட்ட மன்றம் இல்லாமல்

வினோபா பெற்ற நிலங்களைவிட அதிகமான நிலங்களை, நீங்கள் சட்டத்தின் மூலம் பெறக் கூடியவர்களாக இல்லை. அதிகமான நிலங்கள் இருந்தன. இருந்த நிலங்களுக்கு அவரவர்கள் பாதுகாப்புச் செய்துகொண்டு விட்டார்கள். அவர்கள் அவைகளுக்குப் பாதுகாப்புச் செய்துகொண்டிருந்தபோது நீங்கள் தூங்கிக்கொண்டிருந்தீர்கள் என்று நான் சொல்லமாட்டேன். அப்போது நீங்கள் சந்தோஷப் பட்டுக்கொண்டிருந்தீர்கள் என்று சொல்வேன். நீங்கள் எந்த வகையில் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தீர்கள் என்றால், நிலங்கள் தானாகப் பிரிகின்றன என்ற நல்லெண்ணத்தில் சந்தோஷப்பட்டீர்கள். ஆனால் உங்கள் நல்லெண்ணத்தை, யார் யார் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு எப்படிப்பட்ட சூதான காரியங்களில் இறங்கியிருக் கிறார்கள் என்பதை, தஞ்சை மாவட்டத்திலிருந்து இந்த மன்றத்திற்கு வந்திருக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் இந்த மன்றத்தில் கண்ணீரும் கம்பலையுமாக நின்று எடுத்துப் பேசினர். நான் இதைச் சொல்லுகிற போது "எங்கள் கட்சிக்குள் புகுந்து நீங்கள் ஒன்றும் விளையாடாதீர்கள்" என்று கேட்டுக் கொள்வது எனக்குத் தெரிகிறது. ஆனால், நான் உங்கள் கட்சிக்குள்ளே புகுந்து விளையாடவில்லை. உங்கள் கட்சிக்குள்ளேயே இந்தக் கருத்து இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்தக் கருதுக்கேற்ற வகையில் பேசப்பட்டிருப்பதையெல்லாம் நான் கூர்ந்து பார்த்தேன். ஒரு காங்கிரஸ் கட்சி உறுப்பினர், இந்த மசோதாவானது, பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததுபோல இருக்கிறது என்று சொன்னார். அவ்வாறு சொல்வது ஒரு வகையில் சரி, இன்னொரு வகையில் தவறு என்று நான் கூறுவேன். பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக வரவில்லை. பிள்ளையார் பிடிக்கும்படி வேறு யாரிடத்திலோ சொல்லிவிட்டதால் அது குரங்காக வந்துவிட்டது என்று நான் கருது கிறேன். உங்களுக்கு உண்மையிலேயே உள்ளூர முற்போக்கு எண்ணம் இருந்திருக்குமானால், நீங்கள் மனதார முற்போக்கு எண்ணத்தில் திளைத்திருந்தால் இது பிள்ளையார் பிடிக்கக் குரங்காக மாறியிருக்காது. ஆனால் நீங்கள் எதையோ பிடித்துவைத்துவிட்டு "இதுதான் பிள்ளையார்; இது ஒரு வகையான பிள்ளையார்; வேண்டுமானால் இதற்கு குரங்கு பிள்ளையார் என்று பெயர் வைத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்வதற்காகத்தான் நீங்கள் இத்தகைய மசோதாவைத் தயாரித்திருக்கிறீர்களே தவிர, இதில் முற்போக்குக் கருத்துக்கள் இல்லை என்பது குறித்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.

இந்த மசோதாவில் சில விதி விலக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. சர்க்கரை ஆலைகளுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் கரும்பு சாகுபடி செய்யப்படும் நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். "Caesar's wife should be above Suspicion" என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. கட்சி ஆட்சி நடத்துகிறது, மக்கள் ஆட்சி நடக்கிறது என்று சொல்கிறவர்கள் தப்புத் தண்டாவில் ஈடு படாதவர்களாக இருக்க வேண்டும். ஒருவிதமான சந்தேகத்தையும் ஏற்படுத்தாத வகையில் அவர்களுடைய போக்கும், பேச்சும், நடவடிக்கைகளும் இருக்க வேண்டும். இப்போது சர்க்கரை ஆலைககளுக்கு நிலங்கள் ஒதுக்கி வைத்திருப்பவர்கள் பெரும்பாலும் காங்கிரஸ் காரர்களே, சர்க்கரை ஆலைகள் வைத்திருப்பவர்களும், காங்கிரஸ் காரர்கள்தான். காங்கிரஸில் இப்போது வந்து சேர்ந்திருப்பவர்களும் மிராசுதார்கள் என்பது ஊர் அறிந்த உண்மை. அப்படிப்பட்ட நிலையில் நீங்கள் 'சர்க்கரை ஆலைகளுக்கு என்று ஒதுக்கப் பட்டிருக்கும் நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்கிறோம்' என்று சொன்னால் ஊரிலுள்ள பொதுமக்கள் என்ன பேசிக்கொள்வார்கள் என்று நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். ''இவர்களிடம் தஞ்சமடைந்து விட்டார்கள் மிராசுதார்கள், இவர்களிடம் அடைக்கலம் புகுந்து விட்டார்கள் மிட்டாதார்கள். நீங்கள் சர்க்கரை ஆலை ஏற்படுத்திவிட்டால், சர்க்கரை ஆலைகளுக்கு என்று நீங்கள் 200, 300 ஏக்கர் நிலங்களை ஒதுக்கிவிட்டால், நாங்கள் உங்களைத் தொட மாட்டோம். உங்கள் நிலங்களை சர்க்கரை ஆலைகளுக்கு ஒதுக்கி விட்டால் நீங்கள் இப்போது போல எப்போதும் மிராசுதார்களாகவே இருக்கலாம் என்று இவர்கள் மிராசுதார்களுக்கும் மிட்டா தார்களுக்கும் கை காட்டியிருக்கிறார்கள்'' என்று பொதுமக்கள் பேசிக் கொள்வார்கள். சர்க்கரை உற்பத்திக்காக ஏதற்காக கரும்பு சாகுபடி செய்யும் நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும்? கரும்பு 200 ஏக்கரில்தான் பயிராவேன் என்கிறதா? கரும்பு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கரில் பயிராகாதா? பலர் 5,10 ஏக்கரில் கரும்பு பயிரிட்டு சாகுபடி செய்து அதை எடுத்துக்கொண்டுபோய் புகலூர் ஆலையில் காத்துக் கொண்டிருக்கவில்லையா? வடபாதி மங்கலங்களும் தென்பாதி மங்கலங்களும் 1,000, 2,000 ஏக்கர் நிலங்களை வைத்துக்கொண்டிருப்பதால் கரும்பு சாகுபடி செய்யப்படும் நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று கனம் அமைச்சர் சொல்வாரானால், என்று மக்களைப் பொறுத்த வரையில் கனம் அமைச்சர் எவ்வாறுதும் மனைக்

இரும்பாக்கிக் கொண்டார் என்று கேட்க விரும்புகிறேன். கரும்பை ஒரு ஏக்கரிலும் பயிரிடலாம். இரண்டு ஏக்கரிலும் பயிரிடலாம். அதற்கு ஆயிரம் ஏக்கர்தான் வேண்டும் என்பதில்லை. அடுத்த தேர்தல் வரட்டும், இந்தத் தேர்தலுக்கு இப்படி இருக்கட்டும் என்ற எண்ணத்தில் இந்த கனம் அமைச்சர் இவ்வாறு நிர்ணயித்திருக் கிறாரோ என்னமோ தெரியவில்லை. இவருடைய கருத்துக் களெல்லாம் தேர்தலோடு ஒட்டியிருக்கின்றன. தேர்தலைப் புரிந்துக்கொண்டால்தான் இவரைப் புரிந்துக்கொள்ள முடியும். மற்ற அமைச்சர்கள் தத்துவத்தோடு இணைந்திருக்கிறார்கள். அவர்களைக் கேட்கிறேன்: எந்தக் காரணத்திற்காக கரும்பு பயிரிடப்படும் நிலங்களுக்கு, விலக்கு அளித்திருக்கிறீர்கள்? நெல் சாகுபடி செய்வதில் கிடைக்கும் லாபத்தைவிட அதிகமான லாபம் கரும்பு சாகுபடி செய்வதில் கிடைக்கிறது என்பதை, கரும்பு உற்பத்தியாக, அதைப் பயிரிடுபவர்கள் தள, தளவென்று ஆவதைப் பார்த்துத் தெரிந்துக் கொள்ளவில்லையா? கரும்பு சாகுபடி செய்து சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு கொடுப்பவர்களுக்கு ஆலைக்காரர்கள் தங்கள் லாபத்தில் பங்கு தருகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? லாபகரமான பொருளான கரும்புக்கு ஏன் நீங்கள் விதி விலக்கு அளிக்க வேண்டும்? நீங்கள் இப்படிப்பட்ட விதி விலக்குகளை அளிப்பதால் மசோதாவிலுள்ள முற்போக்கு அம்சங்களை பாழ்படுத்தியிருக் கிறீர்கள். சர்க்கரை ஆலைகள் வளர வேண்டும், சர்க்கரை உற்பத்தி திருப்திகரமான நிலையில் இருக்க வேண்டும் என்றால், உங்களுக்கு உபரியாகக் கிடைக்கும் நிலங்களில் கரும்புப் பண்ணைகள் வைத்து கரும்பு சாகுபடி செய்து அதை ஆலைகளுக்கு அனுப்பினால் உங்களை யார் தடுக்க முடியும்? எனவே, இந்த மசோதா பணக்காரர்களுக்குச் சலுகை காட்டுகிறது என்று நான் வருத்தத்தோடு கூறுவேன். அதனால் தான் உங்கள் கட்சி உறுப்பினர்களே, "பிள்ளையாரை அல்லவா நான் கேட்டேன்? குரங்கை அல்லவா நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்?" - என்று மிக்க மனம் நொந்து இந்த மன்றத்தில் பேசியிருக்கிறார்கள். இந்த மசோதாவை அனுதாபத்தோடு கவனித்த மற்றொரு அங்கத்தினர்கூட இருக்கும் நிலங்களைப் பங்கு போடுவதற்கு பதிலாக புதிதாக நிலங்களைச் சேர்ப்பதற்கும் இந்த மசோதா வழி செய்கிறது என்று கூறிவிட்டார். மேய்ச்சல் காடுகளுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. நான் ஊரறிந்த ஒரு உண்மையைச் சொல்கிறேன். மேய்ச்சல் காடுகளை

கண்ணுக்கெட்டிய தூரம் வரை வைத்துக்கொண்டு அவைகளில் காளைகளை வளர்த்து, கவர்னரிடம் கைகுலுக்குகிறவர்களும், அந்தக் காடுகளை வளர்ப்பதன் மூலம் லட்சக் கணக்கான ரூபாய் லாபம் சம்பாதிப்பவர்களும் உங்கள் பக்கத்தில் இருக்கிறார்கள் என்பது ஊர் அறிந்த உண்மை. இந்த நிலங்களுக்கு ஏன் விலக்கு அளிக்கிறீர்கள் என்று நாங்கள் கேட்கும்போது 'நாங்கள் அப்படித்தான் செய்வோம். நீங்கள் யார் அதைக் கேட்க' என்று இவர்கள் சொல்வார்களானால், ஜனநாயகத்தில் இவர்களுக்கு இருக்கும் கட்சி வலுவை வைத்துக் கொண்டு எங்களை மிரட்டுகிறார்கள் என்று அதற்குப் பொருளே தவிர, இவர்கள் செய்யும் சூது, சூழ்ச்சிகளை உலகம் கண்டுபிடிக்க முடியாது என்று பொருள் அல்ல. மேய்ச்சல் காடுகளில் எப்படி உங்களுக்கு 1960-ம் ஆண்டில் திடீரென்று அக்கரை வந்துவிட்டது? பத்து, 50 ஏக்கரில் மேய்ச்சல் காடுகள் வைத்தால் போதாதா? "சர்க்கார் இறைச்சித் தொழில் நடத்த வேண்டும்" என்று இந்த மன்றத்தில் நான் சொன்னால், "இங்கே மேய்ச்சல் காடுகள் இல்லையே. மாடுகள் மேய வேண்டுமானால், அவை அண்ணாதுரை வீட்டுத் தோட்டத்தில் மேயுமா" என்று ஒரு கனம் அமைச்சர் கேட்டார். இப்போது மிராசுதார்கள் மேய்ச்சல் காடுகள் எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம் என்று இவர்கள் அவர்களுக்கு சலுகை காட்டுகிறார்கள். இம்மாதிரி மசோதாவில் ஓட்டை வைத்து மிராசு தார்களுக்கு கதவைத் திறந்துவைக்கிறார்கள். இவ்வாறு செய்வதற்கு, இவர்கள் மிராசுதார்களிடம் "இங்கே உங்களுக்குக் கதவு திறந்து இருக்கிறது. 1962-ல் எங்களை கவனத்தில் வைத்துக்கொள்ளுங்கள்" என்று பொருளே தவிர, இந்த விதி விலக்குக்கு வேறு காரணம் எதுவும் எனக்குத் தெரியவில்லை. இது தவிர, தோட்டங்களுக்கு ஏன் விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. கமுகும், வேறு நல்ல பலன் தரக்கூடிய பொருள்கள் பயிரிடப்படும் நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நல்ல பலன்தரக் கூடிய இந்தப் பொருள்களுக்கு ஏன் விதிவிலக்கு என்றால், "அதெல்லாம் வேறு" என்று இவர்கள் ஒரே வரியில் பதில் சொல்லி விடுகிறார்கள். இதனால்தான் நான் அப்போதே துவக்கத்திலேயே சொன்னேன்; நீங்கள் ஒவ்வொன்றுக்கும் தரும் வியாக்கியானத்தைப் பொறுத்துத்தான் சட்டத்தில் முற்போக்குத் தன்மையோ பிற்போக்குத் தன்மையோ அமைய வெண்டும். எனவே, 'நிலம்' என்பதற்கு, பயன்தரக்கூடிய எதுவும் நிலம் என்று வியாக்கியானம் தந்திருந்தால்

இத்தனை விதி விலக்குகள் தந்திருக்க வேண்டி யிருந்திருக்காது. இந்த மசோதாவை ஆராய்வதற்கு அமைக்கப்படும் கமிட்டியினர் இப்படிப்பட்ட விதிவிலக்குகளை கூடியவரை நீக்க வேண்டும் என்று அக்கமிட்டியினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கொறடா "ஒரு தனிப்பட்ட ஆள், எவ்வளவு முயற்சித்தாலும் 30 ஏக்கருக்கு மேல் நிர்வகிக்க முடியாது" என்று சொன்னார். உண்மையிலேயே அவர் சட்ட சபையில் மட்டும் உட்கார்ந்து கொண்டிருப்பவர் அல்லர். அவர் வயலோரத்தில் சுற்றிப் பார்க்கிறவர். அவர் அவசரப்பட்டு அவ்வாறு சொல்லிவிட்டாரோ என்னமோ, நான் கூடக் குறித்துக்கொண்டேன். முப்பது ஏக்கருக்கு மேல் இருந்தால் ஒரு தனிப்பட்டவர் பார்க்க முடியாது என்று அவர்கள் கருதுவதால்தான் எங்கள் பக்கத்திலிருந்து, "நீங்கள் உச்ச வரம்பு கட்டும்போது 15 ஏக்கர் என்று வைத்தால் போதும், 30 ஏக்கர் வேண்டாம்" என்று சொல்கிறோம். உழவுத் தொழிலில் அதிக அக்கறை காட்டி, அதற்குக் கம்ப நாட்டாழ்வாரைச் சுட்டிக் காட்டிய நமது கருத்திருமன் அவர்கள் "30 ஏக்கருக்கு மேல் ஒரு தனிப்பட்ட ஆள் உழவுத் தொழிலைக் கவனிக்க முடியாது" என்று சொன்னால் உச்ச வரம்பு கட்டும் நேரத்தில் அதை 15 ஏக்கர் என்று ஏன் வைக்கக் கூடாது? அவ்வாறு 15 ஏக்கர் என்ற முறையிலே வைத்துக் கொண்டிருந்தால் அந்த நிலத்தில் முற்போக்குத் தன்மையிலே விவசாயம் செய்து அதில் மற்றக் குடிசைத் தொழில்களில் கிடைக்கக் கூடிய பலன் இந்த உழவிலே கிடைக்குமானால் அந்த 15 ஏக்கரை வைத்துக்கொண்டு ஒரு குடும்பம் மிக நிம்மதியாக வாழ வழி வகைகள் கிடைக்கும். ஆகவே, 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதை 15 ஏக்கர் என்று குறைப்பது ஓரளவு நாம் முற்போக்குப் பாதையை நோக்கி அழைத்துச் செல்லப்படுகிறோம் என்ற உத்தரவாதத்தை மக்கள் மனதிலே ஏற்படுத்த முடியும். ஆகவே, இந்த மசோதாவில் 30 ஏக்கர் என்று இருப்பதை 15 ஏக்கர் என்று குறைக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, மடாலயங்களுக்கும், கோயில் நிலங்களுக்கும் அடியோடு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று முன்னர் பலர் பேசிக் கொண்டிருந்தார்கள். இப்போது அந்த நிலங்களுக்கு அடியோடு விதி விலக்கு அளிப்பதற்குப் பதிலாக 200 ஏக்கர் வரை இருக்கலாமென்றும் அதற்கு மேற்பட்டவை இந்த மசோதாவினால் பாதிக்கப்படும் என்றும்

சொல்லியிருக்கிறார்கள். அதையொட்டி இந்த மன்றத்திலே, மடாலயங்கள், அற நிலையங்களுக்கெல்லாம் நிலம் தேவையா, அதனால் அறம் வளர்கிறதா என்ற புதுப் பிரச்சினைகள் எல்லாம் எடுத்து விளக்கப்பட்டன. நம்முடைய விவசாய அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் பேசும்போது மிக நல்ல கருத்து ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். "இந்தச் சொத்தெல்லாம் உண்மையிலேயே சாமிக்குத் தேவையில்லை; அங்கே இருக்கும் சில காரியங்களுக்குத் தேவை" என்று சொன்னார்கள். உண்மையிலேயே சாமிக்குத் தேவை யென்றால் யாரும் உச்ச வரம்பு கட்ட மாட்டார்கள். ஆனால் அந்த நிலங்கள் சில ஆசாமிகளுக்கு பயன்படுவதால் உச்ச வரம்பு கட்டுவதோடு மட்டுமல்ல; அந்த நிலங்களை ஒரேயடியாக சர்க்காரே எடுத்துக் கொண்டு "லாண்ட் கமிஷன்" வைத்து அந்த நிலங்களை ஒப்படைத்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயை வைத்துக்கொண்டு அவர்கள் என்னென்ன தர்மங்களைச் செய்ய வேண்டுமென்று கருதுகிறார்களோ அந்தத் தர்மங்களுக்குப் பணத்தைக் கொடுக்க யாரும் குறுக்கிட மாட்டார்கள். இப்போது தர்மத்தை எவ்வாறு செய்கிறார்கள், அந்தத் தர்மம் எவ்வாறு செய்யப்படுகிறது, என்பதைப் பற்றிக்கூட உள்துறை அமைச்சர் அவர்கள் உள்ளாக உணர்ந்திருக் கிறார்கள். நேற்றைய தினம் பேசும்போது "சில தவறுகள் நடக்கத்தான் செய்கின்றன" என்று கூறினார். அவ்வளவு அனுபவம் வாய்ந்தவர் அந்த அளவுக்குத்தான் சொல்வார். என்னென்ன தவறுகள் என்று கேட்டால் கூடச் சொல்ல மாட்டார்கள். யார் தவறு செய்கிறார்கள் என்றும் சொல்ல முடியாது. ஏனெனில் ஒரு நாள் இல்லாவிட்டால் இன்னொரு நாள் அவர்களுடன் போய்ப் பழக வேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்கள், இன்னார் இன்னார் தவறு செய்கிறார்கள் என்று என்னைப் போல் எடுத்துச் சொல்ல முடியாது.

உயர்திரு. எம். பக்தவத்சலம் : நான் பல கட்டங்களில் பகிரங்கமாக இன்னின்னார் இன்னின்ன ஸ்தானங்களில் உள்ளவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்று சொல்லி வந்திருக்கிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : அமைச்சர் அவர்களுடைய அஞ்சா நெஞ்சத்தைப் பாராட்டுகிறேன். ஒருசமயம் விளைவை அறியாமல் பேசி விட்டாரோ என்று பரிதாபப்படுகிறேன். பதவியில் இருக்கக்கூடிய அமைச்சர்கள் பொதுவாகத்தான் சொல்ல முடியுமே தவிர, எங்களைப் போல் எடுத்துச் சொல்ல முடியாது. நாங்கள்

அவற்றை எடுத்துச் சொல்கிற நேரத்தில், எங்களுக்குப் பதில் சொல்லக்கூடிய வக்கீல்கள் என்று உங்களைப் பற்றி நீங்கள் கருதிக் கொள்ளாமல் நீங்கள் சொல்ல முடியாமல் தவிப்பதை நாங்கள் எடுத்துச் சொல்கிறோம் என்ற முறையில் நீங்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல அரசியல் நிலைமைகளைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அப்படி யிருக்கும்போது இதை ஏன் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டும்? ஆலயங்களுக்குச் சொத்துகள் தேவைதானா என்று பேசுகிற பலர் அந்த அற நிலையங்களுக்குச் சொத்துகள் எந்தக் காலத்தில் ஏற்பட்டன என்பதைச் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். உள்துறை அமைச்சர் அவர்கள் சொன்ன தர்மத்தைச் செய்வதற்கு நிலம் இருந்தால்தான் முடியும் என்று பழம் தமிழர்கள் எண்ணவில்லை. இந்த லோகத்தில் செய்துவிட்டதின் பலனை வேறு லோகத்தில் அனுபவிக்கலாம் என்பது வியாபாரம் அல்ல, தமிழ் மரபு. இடைக்காலத்திலே புகுத்தப்பட்ட தர்மம் என்பதற்கும் அறம் என்பதற்கும் அடிப்படையிலேயே பெரிய வித்தியாசம் இருக்கிறது. இப்போதிருக்கும் தர்மஸ்தாபனங்கள், இங்கே சில நன்மைகளைச் செய்தால் அங்கே பலன் கிடைக்கும் என்பதற்காக ஏற்படுத்தப் பட்டது. ஆனால் தமிழ் மரபு கூறும் அறம் அம்மாதிரியல்ல என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட அறச்சாலைகளல்ல - இப்போது அமைச்சர் அவர்களுடைய மேற்பார்வையில் இருப்பவை. மாடதிபதிகளுடைய துறவு பற்றிக் கொடுக்கப்பட்டிருக்கும் இலக்கணங்களை அமைச்சர் அவர்கள் படிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். பசித்தால் புசித்து, வியர்த்தால் குளித்து, நிழல் கண்ட இடத்தில் படுத்து சைவத் தொண்டு செய்ய வேண்டுமென்று மடாதிபதிகளுக்கு விதி சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது அவர்கள் பசித்தால் புசிக்க வேண்டுமென்று சொல்கிறார்களா என்றால், பல மடாலயங்களில் இருப்பவர்களுக்குப் பசியே எடுப்பதில்லை. அமைச்சர் செய்து வருகின்ற பாவ காரியங்களினால், சாதாரண மக்களுக்கு எடுக்கக்கூடிய பசி கூடத் தெரியாமல் அவர்களுடைய உடல் தழைத்திருக்கிறது. மடாலயங்களுக்கும், அற நிலையங்களுக்கும் பெரியவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டு சொத்தை எழுதி வைத்தார்களோ அது இன்றைய தினம் தவறான காரியத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது. இப்போது உழவர் பெருங்குடி மக்களைக் கசக்கிப் பிழிய பயன்படுத்துகிறார்கள். அவர்கள் தங்கள் வீட்டில்

அழகான ஒரு காளை வளர்த்தாலும் அவர்கள் அடி வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. எந்த நேரத்தில் எந்தக் காளை மடாதிபதியின் கண்ணில்படுகிறதோ என்று அஞ்சிக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. காளை பற்றி மட்டுமல்ல; அழகான கன்னியாக இருந்தாலும் எந்த நேரத்தில் அவளுடைய கற்பு சூறையாடப்படும் என்று சொல்ல முடியாது. இந்த மாதிரி நிலையில் இருப்பவர்கள் உள்ள அற நிலையங்களுக்கு ஏன் 200 ஏக்கர் தருகிறீர்கள்? அது இல்லா விட்டால் விபூதி மாடத்தில் விபூதி இருக்காதா; அது இல்லாவிட்டால் வில்வ மரம் வளராதா; அது இல்லாவிட்டால் சைவ நெறி தழைக்காதா? எதற்காக, கோயில்களுக்கும், மடாலயங்களுக்கும் சொத்து இருக்க, வேண்டும்? அவர்கள் வணங்குகின்ற சிவனே காவி கட்டிக்கொண்டு, புலித்தோல் போர்த்து இருக்கிறார் என்று பாடுகிறார்கள். இரும்பு பெட்டியில் 8 லட்சம், கரும்புத் தோட்டத்தில் 10 லட்சம் என்று மனம் இல்லாமல் வைத்துக் கொண்டிருக்கும்போது எதற்காக 200 ஏக்கர் ஒதுக்க வேண்டும்? நீங்கள் மதத்தை வெறுக்கக் கூடிய சர்க்கார் அல்ல, மத ஸ்தாபனங்கள் வைத்திருக்கும் நிலங்கள் விஷயத்தில் அரசாங்கமே நேரடி மேற்பார்வை பார்த்து கிடைக்கக்கூடிய வருவாயிலிருந்து தர்மம் என்பதற்காக ஒதுக்கலாமே தவிர மறுபடியும் மடாதிபதிகள், குத்தகைகாரர்கள் கையில் இந்த நிலங்களை விட்டுவிடும் வாய்ப்பு இந்த முற்போக்கான சட்டத்தில் இடம் பெறக்கூடாது. ஆகையால் மடாலயங்கள், அற நிலையங்கள் ஆகியவைகளுக்கு ஒரு துளியும் நிலம் இருத்தல் ஆகாது என்பதை வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த மசோதா பேசப்படுகிற காலத்தில் மற்றொரு பொதுவான தத்துவத்தையும் நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் ஆராய்ந்து பார்ப்பது நல்லது. பெரிய அளவில் நிலங்கள் இருக்க வேண்டுமா அல்லது சிறு அளவில் நிலங்கள் இருக்க வேண்டுமா? பெரிய பண்ணைகளாக வைத்துப் பயிரிடலாமா அல்லது சிறு சிறு பண்ணைகளாக வைத்துப் பயிரிடலாமா. இந்த விஷயம் பற்றித் திட்டவட்டமான முடிவுக்கு ஆளும் கட்சியினர் வரவேண்டும். ஒரு பக்கத்தில், நிலங்கள் துண்டு துண்டாக போய்விட்டால் நல்ல முறையில் விவசாயம் செழித்து வளர முடியாது என்று பேசப்படுகிறது. இன்னொரு பக்கத்தில், பெரிய நிலப் பரப்பாக இருந்தால் அது நிலத்திலே முதலாளித்துவத்தை உண்டாக்கி விடும் என்றும் அதன் காரணமாக சிறு நிலச்சுவான்தார்கள் இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இந்த இரண்டில் எந்த வழியில்

நிற்க விரும்புகிறார்கள் என்பது திட்டவட்டமாக நாட்டுக்கு அறிவிக்கப்பட வேண்டும். இப்போது மிச்சம் மீதியாகும் 2 லட்சம் ஏக்கர் நிலத்தில் 1 லட்சம், ஒன்றரை லட்சம் வரை ஏற்கனவே குத்தகை தாரர்களுக்குப் போய்விட்டால் மிச்சம் எவ்வளவு நிலம் இருக்கும்? தென்னை மரத்திலே ஏறி தேங்காய் பறித்துக் கொண்டு வந்து, மேலே இருக்கும் தோலை உறித்துவிட்டு, தேங்காயை உடைத்து உள்ளே இருக்கும் தண்ணீருக்காகச் சிறுவர்கள் பாத்திரத்தை எடுத்தால் அதிலே தேரை முகர்ந்திருந்தால் தண்ணீர் வராது, உள்ளேயும் ஒன்றும் இருக்காது. நீங்கள் கொண்டு வந்திருக்கும் சட்டமும், தென்னை மரத்திலிருந்து தேங்காய் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று ஆசை காட்டப் பட்டிருக்கிறதே தவிர, அந்தச் சட்டத்தின் உள்ளே பார்த்தால், தேரை முகர்ந்த தேங்காயின் உள்ளே ஒன்றும் இல்லாதது போல்தான் இருக்கிறது. நீங்கள் திட்டவட்டமாக இந்தச் சட்டத்தை அமல்படுத்தினால், இத்தனை ஏக்கர் நிலம் காத்தானுக்கு, இத்தனை ஏக்கர் நிலம் கருப்பனுக்கு, இத்தனை ஏக்கர் நிலம் முருகனுக்கு என்று சொல்லியிருந்தால் நாங்கள் அரசியல் கட்சி வேறுபாட்டையும் மறந்து முன்வந்து வாழ்த்தியிருப்போம். ஆனால், உன்னுடைய வாழ்த்து எங்களுக்குத் தேவையில்லை என்று ஆளும் கட்சியில் இருக்கும் அமைச்சர் அவர்கள் கருதலாம். ஆனால், என்னுடைய நல்லெண்ணத் தைக் காட்டுவதற்கு நான் வாழ்த்தியிருப்பேன். ஆனால், கொண்டு வருகிற சட்டத்தின் மூலம் என்ன கிடைக்கும் என்று சொல்வதற்கு உங்களுக்குத் தைரியம் இல்லை. கணக்கும் இல்லை. ஒரு சமயம், கொடுக்கின்ற கணக்கு இங்கு பேசி முடிவதற்குள்ளேயே எங்கே குறைந்துவிடுமோ என்ற நிலைமை இருக்கிறது. ஆகையால்தான், ஒரு நல்ல புரட்சிகரமான திட்டம் என்று வெளியிலே எண்ணிக் கொண்டிருக்கிறார்கள், தெம்ஸ் நதிக் கரையோரத்திலும், நைல் நதிக் கரையோரத்திலும் பத்திரிகையைப் பார்த்தால், 'நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுகிறார்கள் சென்னை ராஜ்யத்தில்; அப்பா என்ன முற்போக்கான சர்க்கார் என்று பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், உச்ச வரம்பு கட்டப்போவது ஒரு அறுநூறு சொச்சம் மிராசுதார்களுக்கு. அதுவும் 'வரும், வரும்' என்று சொல்லிவிட்டு - அதற்காகவே அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்களோ என்னவோ, என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை - அதற்குப் பிறகு கொண்டுவருகிற சட்டத்தின் மூலமாக, கிடைக்கும் நிலம் குத்தகைதாரர்களுக்குப் போக மிச்சம், நிலமில்லாதவர்களுக்கு,

உழுகிறவர்களுக்கு எவ்வளவு வரும் என்று கணக்குக் காட்ட முடியவில்லை. ஒரு லட்சம் ஏக்கர் நிலமாகிலும் இதன் மூலமாகப் பிரித்துக் கொடுக்க முடியாது என்றால், இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதால் என்ன பெருமை அடையப்போகிறார்கள் இந்தச் சர்க்கார் என்று நான் கேட்கிறேன். இந்தச் சட்டம் வருவதால் நாட்டு மக்களுக்குத்தான் என்ன மகிழ்ச்சி ஏற்பட முடியும்?

கடையிலே, ''அஸ்கா சர்க்கரை விலை 12 அணா'' என்று பெரிய எழுத்தில் எழுதிவிட்டு, அதன்கீழ் சின்ன எழுத்தில் ''சர்க்கரை இல்லை'' என்று அட்டையில் எழுதுவார்கள். அதுபோல, ''நிலத்திற்கு உச்சவரம்பு கட்டிவிட்டோம்'' என்று கொட்டை எழுத்திலே எழுதிவிட்டு, ''உச்ச வரம்புக்கு நிலம் இல்லை, ஏனென்றால், அத்தனையும் பிரிந்து விட்டது'' என்று சின்ன எழுத்தில் எழுதி, அதற்குக் கீழே, ''இருக்கும் நிலமும் குத்தகைக்காரர்களுக்குப் போகும்'' என்று எழுதி, ''இந்த மிச்சம் இருக்கும் நிலத்தைப்பற்றி ரெவினியூ அமைச்சரைக் கேட்டுத் தெரிந்துகொள்ள'' என்று சொல்வார்களானால், இதற்குப் பெயர் முற்போக்குச் சட்டமா? இதற்காகத்தான் உங்களை வாழ்த்தி, வணங்கி, வழிபட்டு, நீங்கள்தான் பொதுவுடைமையைத் தடுத்து, சம தருமத்தைக் கொண்டுவருவீர்கள் என்று மக்கள் வரவேற்றார்களா? நீங்கள் இப்படிப்பட்ட முறையிலே, சாதாரணமாக அவர்கள் எண்ணிப் பார்ப்பதற்குக்கூட முடியாத அளவுக்கு, ஆங்கிலத்தில் "Caricature" என்றுசொல்வார்களே, அதுபோல, இருக்கிற உருவத்தைத் தேய வைத்து, இதுதான் சட்டம் என்று கொண்டுவருவார்களானால், இந்த அளவுக்குத் தேய வைக்க உங்கள் சாமர்த்தியத்தைப் பாராட்டுகிறேன். காக்க வைத்து, காக்க வைத்து இதுதானா ஏற்பட வேண்டும்? சில விருந்தாளிகள் வீட்டுக்கு வந்து விட்டால், தெருத் திண்ணையிலே உட்கார வைத்து, இரண்டு மணிக்குச் சாப்பாடு என்றால், 'ஆகிறது, ஆகிறது' என்று சொல்லி, அவனுக்குக் கடைசியில் பசி அடங்கிவிட்ட பிறகு, மூன்று மணிக்குக் கூப்பிட்டு, கொஞ்சம் சாதம் போட்டால், மூன்று மணிக்கு, பசி எடுக்க வேண்டிய நேரத்தில் எடுத்து தானாக அடங்கிவிட்ட நேரத்தில், போட்டாலும் சாப்பிட முடியாமல் வெளியே போகும் நிலைமையிலே, நீங்கள் பதினைந்து ஆண்டுகளாக மக்களைப் பட்டினி போட்டுப் போட்டு, 'உள்ளே வேகிறது, அரைக்கிறோம், தாளிக்கிறோம்' என்று சொல்லி, வெளியிலே உட்கார வைத்து, 'வாசனை யெல்லாம் பாருங்கள்' என்று சொல்லி, கடைசியில் உள்ளே

வரும் போது, 'தாளித்தது பக்கத்து வீட்டில், அரைத்தது அண்டை வீட்டில், மிச்சம் இருப்பது பழைய சோறு, சாப்பிடு' என்று சொல்கிறீர்கள். உடையான் சடையப்பன் என்ற வேளாண் பெருங்குடி மக்கள் குலத்தில் பிறந்திருக்கும் அமைச்சரும், படைகளை நடத்திச் செல்வதற்கு படையாட்சிகள் என்று சொல்லப்படுகிற குலத்தில் வந்த மற்றொரு அமைச்சரும் இருக்கும் நேரத்தில், சோறு போடுவதற்குகூட வக்கு இல்லாமல் நீங்கள் தமிழ் மரபையே ஏன் கெடுக்கிறீர்கள் என்று நான் கேட்கிறேன். இதை விட நீங்கள் ஆறு திங்கள் சும்மா இருந்தால், இந்த அளவுக்குக் கூட தேவை இல்லாமல் நிலங்கள் பிரிந்து போயிருக்குமே.

கனம் உறுப்பினர் கருத்திருமன் அவர்கள் சொல்கிறார்கள். 'தைரியமாக யார் வேண்டுமானாலும் வாருங்கள், வந்து பாருங்கள்' என்று. அவர்கள் மட்டுமல்ல; நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்களிடத்தில், 'நீங்கள் நிலத்தைப் பிரிக்க போகிறார்களா?' என்று கேட்டுப் பாருங்கள். ஒன்றும் இல்லை என்று சொல்வார். ஒன்றுமில்லை என்பது மட்டுமல்ல; ஐந்து ஏக்கர் கொடுத்தால் வாங்கிக்கொள்வார். அந்த அளவுக்குத்தான் வைத்து கொண்டிருக்கிறார். ஆகையால், நீங்கள் கொண்டுவந்திருக்கும் இந்தச் சட்டம் உண்மையிலேயே நீங்கள் எந்த நோக்கத்திற்காக ஆரம்பித்தீர் களோ அது பாழ்பட்டுப் போய், இன்றைய தினம் மக்களுக்கு அது பெரிய ஏமாற்றத்தைத் தருகிறது. அந்த ஏமாற்றத்திலிருந்து அவர்களுக்கு ஒரு துளியாகிலும் விலக்கு அளிக்க வேண்டுமென்று கருதினால், நீங்கள் உச்ச வரம்பு கட்டியான பிறகு கிடைக்கும் இரண்டு லட்சம் ஏக்கரையாகிலும் இப்பொழுது இருக்கும் குத்தகைக் காரர்களுக்குக் கொடுத்து புதிய முதலாளிகளை உண்டாக்காமல், உழைக்கின்றவர்களுக்கு அந்த நிலத்தை கொடுங்கள். உழைக்கின்ற வர்களுக்குக் கொடுத்தால், உழுவதற்கு அவர்களிடம் உழவு மாடுகள் இருக்கின்றனவா, ஏர், கலப்பை இருக்கிறதா என்று கேட்பீர் களானால், எட்டு மந்திரிகள் எதற்காக இருக்கிறீர்கள்? அவர்களுக்கு ஏர், கலப்பை கொடுப்பதற்காகத்தான், அவர்களுக்கு உழவு மாடு கொடுப்பதற்காகத்தான், அவர்களுக்கு விதைப் பண்ணை கொடுப் பதற்காகத்தான், இத்தனை அமைச்சர்கள் இருக்கிறீர்களே தவிர, அவர்களிடத்தில் நிலத்தைக் கொடுத்துவிட்டு, ஏர் கலப்பை இருக்கிறதா என்று கேட்பதற்காக அல்ல. நான் வருகிறபோது, அமைச்சரவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். 'சிவகணங்கள்

பயிரிட்டு விடுமா?' என்று. ஒரே ஒரு நந்தனார்தான் பிறந்தார். அவரையும் ஜோதியில் கலக்க வைத்து, கேட்காதே என்று சொல்லி விட்டார்கள். சிவ கணங்கள் வந்து செய்ய வேண்டுமென்று நான் கருதவில்லை. மனித கணங்கள் - வோட்டுப் பிச்சை கேட்டிருக்கும் மனித கணங்கள் - தான் அதைச் செய்ய வேண்டும். அதற்கு யாரோ அமெரிக்க நாட்டிலிருந்தோ, ஆப்பிரிக்க நாட்டிலிருந்தோ ஆட்கள் வர முடியாது. ஏழை மக்களுக்கு நிலத்தைக் கொடுத்து, அதைப் பயிரிடுவதற்குக் கருவிகளையும்கூட நம்முடைய துரைத்தனத்தார்தான் தரவேண்டும். அப்படிச் செய்தால், இந்தச் சட்டத்தின் மூலம் இரண்டு லட்சம் ஏக்கர் இதுவரையிலும் நிலமில்லாத உழவர்களுக்குக் கிடைத்தது என்ற பெருமையாவது இருக்கும். இதிலே கலந்து கொண்ட நாமெல்லாம் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள், 'நாங்கள் சட்ட மன்ற உறுப்பினர்களாக இருந்த நேரத்தில் நல்ல சட்டத்தைக் கொண்டுவந்தோம், நில மில்லா ஏழைகளுக்கு நிலத்தைக் கொடுத்தோம். இரண்டு லட்சம் ஏக்கர் கொடுத்தோம்' என்று பெருமையாகப் பேசிக்கொள்ளலாம். இப்பொழுது யார் யாருக்கு நிலத்தைக் கொடுக்கப் போகிறார்கள்? அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர், இப்படி அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கு ஒவ்வொரு நாயன்மாருக்கும் தனித்தனி பாகப் பிரிவினையைப்போல் கோயிலிலே பிரித்து எழுதிவிடுவார்களோ, அதுகூட எனக்குத் தெரியவில்லை. அவர்களுக்குத் தருவதற்குத்தான் சட்டம் என்றால், இதற்கு நீங்கள் 'உச்ச வரம்பு' என்று பெயர் வைப்பதற்குப் பதிலா வேறு ஏதாகிலும் பெயர் வைத்து, 'மிச்ச வரம்பு' என்று சொல்லிக் கொள்ளுங்கள். 'பிரித்துக் கொண்டது போக மிச்சம் இருக்கும் நிலத்தை உழுதுகொண்டிருக்கிறார்களே அவர்களுக்கே கொடு, பயிரிட்டுக்கொண்டிருக்கிறார்களே அவர்களுக்கே கொடு' என்று நீங்கள் ஏற்படுத்துவதை மிச்ச வரம்புச் சட்டம் என்று சொல்லலாமே தவிர, அது உச்ச வரம்புச் சட்டம் ஆகாது. ஆகையால், ஏழை மக்களுக்கு நல்ல, புது வாழ்வு தரக்கூடிய நிலைமை இந்த மசோதாவில் இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இவ்வளவுக்கும் பிறகு, இந்தச் சட்டத்தை அமுலாக்குவதற்காக நீங்கள் சில புதிய அமைப்புக்களை ஏற்படுத்துகிறீர்கள். லாண்டு கமிஷன் என்றும், லாண்டு ட்ரிப்யூனல்கள் என்றும் நீங்கள் ஏற்படுத்து கிறீர்கள். அதைப் பற்றிக்கூட இந்த மன்றத்தில் பேசியிருக்கும் காங்கிரஸ் உறுப்பினர்; 'இது வக்கீல்களுக்கு வேட்டையே தவிர,

விவசாயிக்கு விருந்து அல்ல' என்று பேசியிருக்கிறார். அந்த வகையிலே அதை ஆக்காமல், போடப்படும் விளக்கங்கள் பாமர மக்களுக்குப் பாதுகாப்பு தரக்கூடிய விளக்கங்களாக, வக்கீல்களுக்கு மட்டும் விருந்தாக இருக்கும் விளக்கங்களாக இல்லாமல், அதை எளிதாக்க வேண்டும். அதற்கு ஏழு, எட்டு விளக்கங்கள் இல்லாதபடி, 'ப்ளெய்ன்' னாக, நேரடியாகப் புரிந்துகொள்ளக் கூடிய அப்படிப்பட்ட விளக்கங்களைக் கொடுக்க வேண்டும். ஏழை மக்களை மறுபடியும் வழக்கு மன்றங்களின் படிக்கட்டுகள் ஏறி ஏறி இறங்கும்படியாக நீங்கள் வைத்துவிட்டாலுங்கூட, ஏழை எந்த எந்த படிக்கட்டுகள்தான் ஏறுவான்? மற்றொரு கனம் அங்கத்தினர் நேற்று சொன்னார்கள், படிப் படியாகத்தான் போக வேண்டுமென்று. அதற்காக ஒவ்வொரு தடவையும் படிக்கட்டு படிக்கட்டாக கோர்ட்டில் ஏறி இறங்கிக் கொண்டிருந்தால், அவன் எப்பொழுது நடப்பான்? 'சாண் ஏறி முழம் சறுக்கியது' என்ற பழமொழி உண்டு. சாண் ஏறும்போது, காங்கிரஸ் அங்கத்தினர் சொல்கிறார்கள். 'பார், பார், ஏறிவிட்டான்' என்று. பரவாயில்லை, ஏறியிருக்கிறான் போல் இருக்கிறதே என்று பார்த்துக் கொண்டிருக்கும்போது, கீழே இறங்குகிறான். இறங்கும்போது அவனுடைய தலை குனிந்தும், ஏறும்போது தலை நிமிர்ந்தும் இருக்கிறது. அது அரசியல் கட்சிக்கு இருக்கவேண்டிய இயல்பு; சுபாவம், குறை சொல்லவில்லை. அப்படிப்பட்ட வகையிலே இல்லாமல், அவர்கள் வழக்கு மன்றங்களில் சிக்காத தன்மையில், இந்த மசோதா எளிதாக்கப்பட வேண்டும். திட்ட வட்டமாக விளக்கங்கள் அளிக்கப்பட வேண்டும். ஒரு அங்கத்தனர் பேசியதை நான் படித்து கொஞ்சம் வருத்தம் கூட பட்டேன். 'நூறு க்ளாஸ்களுக்குமேல் போட்டு சட்டத்தைக் குழப்பிவிட்டிருக்கிறார்கள், இருபது, முப்பது க்ளாஸ்கள் போட்டு நல்லதாக்கியிருக்கலாம்' என்று ஒரு அங்கத்தினர் பேசியதாக நான் பார்த்தேன். நான் இரண்டு மூன்று நாட்களாக மன்றத்திற்கு வரவில்லை. திரும்பி வந்த பிறகு, அனைவர் பேசியதையும் அக்கறையோடு வாங்கிப் படித்துப் பார்த்தேன். படித்துப் பார்த்ததிலே, அப்படி ஒரு அங்கத்தினர் பேசியதாக குறிப்பு இருந்ததைப் பார்த்தேன். அப்படிப்பட்ட வகையிலே இல்லாமல், திட்டவட்டமாக விளக்கங்கள் கொடுத்து இந்த மசோதா இருக்க வேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகிறேன்.

இந்த நிதி விலக்கு அளிப்பதிலே, கரும்பு ஆலைகளுக்கும் மற்றவைகளுக்கும் விதிவிலக்கு அளித்து நிறுத்திவிடுவதைப்போல,

இனி வாங்கக் கூடிய நிலங்களை உச்ச வரம்புக்கு மேல் வாங்க வேண்டாம் என்று தடுப்பதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். அந்த வழிவகையிலே, மேய்ச்சல் நிலத்திற்கு விதிவிலக்கு அளிக்கிறீர்கள். 'என்னிடத்தில் இருக்கும் நிலம் மேய்ச்சல் நிலமே தவிர, விளைச்சல் நிலம் அல்ல' என்று மிராசுதார் சொன்னால், அது மேய்ச்சல் நிலமா, விளைச்சல் நிலமா என்று கண்டு பிடித்து, லாண்டு டிரிப்யூனலுக்கோ லாண்டு கமிஷனுக்கோ போக யார் முன்வருவார்கள்? (கனம் ஸ்ரீ. எம். ஏ. மாணிக்கவேலு: தீர்வையிலே தெரிந்து கொள்ளலாம்.) தீர்வையிலேயிருந்து தெரிந்து கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன். சவுக்கு பயிரிடுவதும், முன் செடி பயிரிடுவதும், காட்டுச் செடி பயிரிடுவதும் மேய்ச்சலுக்குப் பாதுகாப்பாகத்தான் என்று சொல்லக்கூடும். கோவை மாவட்டத்தில் வேல மரங்கள் பயிரிடுகிறார்கள். வேல மரத்திலிருந்து உதிரும் இலையைத் தண்ணீரில் போட்டு மாட்டுக்குக் காட்டுவதற்கு மட்டுமல்லாமல், வேல மரத்தின் அடிக் கட்டையிலிருந்து விவசாயத்திற்குத் தேவையான வேறு கருவிகளையும் செய்வார்கள். மேய்ச்சலுக்கு என்று வேல மரம் போன்று விலை போகக்கூடிய மரங்களையும் பயிரிடுகிறார்கள். அதிலிருக்கும் வருவாய்க்குத் தீர்வை இருக்காது. மேய்ச்சல் நிலம் என்று பொதுப்படையாக ஒதுக்கினால், அதை விளைச்சல் நிலமாக மாற்றிக் கொள்ளுவதற்கு நிச்சயமாக அவர்களால் முடியும். இதிலே நீங்கள் ஒன்றை மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். எவ்வளவு முற்போக்கான சட்டத்தைப் போட்டாலும், லாபத்தை தேடுபவர்கள் அதிலே சந்து பொந்துகளை ஆராய்ந்து தேடி கண்டு பிடிப்பார்கள். ஆகையால், கூடுமான வரையிலே அப்படிப்பட்ட சந்து பொந்துகள் சட்டத்தில் இல்லாமல் நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். மேய்ச்சல் நிலம் சர்க்காருடைய உடைமையாக இருக்கலாம், பஞ்சாயத்து யூனியனுக்கு சொந்தமாக இருக்கலாம், பஞ்சாயத்திற்கு சொந்தமாக இருக்கலாம், ஊராருடைய மாடுகளை மேய்ப்பதற்காக வைக்கலாம். ஊரை மிரட்டுகின்றவர்களுடைய மாடுகள் மேயட்டும், யார் வேண்டாமென்று சொல்லுகிறார்கள். ஆனால் மேய்ச்சல் நிலம் என்று ஒரு இடத்தில் ஒருவருக்கு விதிவிலக்கு கொடுத்தால், தன்னிடத்தில் பணம் வசதியுள்ளவர்கள் அதைச் சுற்றி இரும்பு முள்வேலி போட்டு காளை மாடுகளை மேய்ப்பார்கள். வெளியிலே மேய்ச்சலுக்கு நிலம் இல்லாமல் திண்டாடுகிற ஏழை விவசாயிகள் அந்த நிலத்திற்குள்ளே தங்களுடைய

மாடுகளை கொண்டு செல்ல முடியாது. மேய்ச்சல் தரைக்கு விதிவிலக்கு கொடுத்தால், அதை விளைச்சல் நிலமாக பிற்காலத்தில் மாற்றிக் கொள்ளுவதற்கு வழி செய்யும். அப்படி மாற்றி கொள்ளுவதற்கு வழி செய்வது மட்டுமல்லாமல், அது தேவையற்ற ஒரு விதிவிலக்காக கருதப்படும் என்ற ஒரு காரணத்தினால் அப்படிப்பட்ட விதி விலக்கு கூடாது என்று நான் வற்புறுத்தி எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நான் துவக்கத்தில் சொல்லியபடி, அதனால் உங்களுடைய அரசியல் - மன்னிக்கவேண்டும் - அரசியலில் இருக்க வேண்டிய ஒழுக்கத்திலிருந்து நீங்கள் தவறி விட்டீர்களோ என்று பொது மக்களிடையே ஐயப்பாடு ஏற்படும். நல்லதற்கோ, கெட்ட தற்காகவோ அப்படிப்பட்ட மேய்ச்சல் நிலத்தை பயன்படுத்திக் கொள்ளுபவர்கள் இன்றையதினம் காங்கிரஸ் கட்சியில் இருக்கிறார்கள். குறிப்பிட்டுக் காட்டக்கூடிய வேறு கட்சியிலுள்ள வர்கள் அதில் இல்லை. அதனால் அரசியல் பண்பாட்டிலிருந்து நீங்கள் நழுவி விட்டீர்களோ என்று பொது மக்கள் ஐயப்படுவதற்கு வழி ஏற்படும். ஆகையினாலே உங்களுடைய நல்ல பெயரை காப்பாற்றிக் கொள்ளுவதற்காகவாவது இதற்கு விதி விலக்கு அளிக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தலையை அசைக்கிறார்கள். 'இந்த வயதிற்கு மேலா நான் நல்ல பெயர் எடுக்கவேண்டும்? பரவாயில்லை என்று கருதுகிறார்களோ என்னவோ! இந்த வயதில்தான் நல்ல பெயர் எடுக்கவேண்டும். பால்ய வயதில் கெட்ட பெயர் எடுத்தாலும், மறுபடியும் அதை திருத்திக் கொள்ளலாம். ஆனால், வயோதிக பருவத்தில் கெட்ட பெயர் ஏற்பட்டுவிட்டால், அதை பிறகு திருத்திக் கொள்ளுவதற்கு மார்க்கம் கிடையாது. தள்ளாத வயது வந்த ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தன்னுடைய பரந்த அனுபவத்தை துணையாக வைத்து, நம்முடைய உள்துறை அமைச்சர் அவர்களுடைய ஆலோசனைகளையும் கேட்டு, இப்படிப்பட்ட கெட்ட பெயர் ஜனநாயகத்திற்கு ஏற்படாமல் பாதுகாக்கவேண்டும் என்று நான் பணிவன்போடு வேண்டி கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றப்படி இந்த மசோதாவை பரிசீலனை செய்வதுபற்றி ஆய்வுக் குழு அமைத்திருக்கிறார்கள். அதிலே அமர்ந்து செய்யப்படு கின்ற திருத்தங்கள் முற்போக்கு கருத்தோடு அமைய வேண்டும் என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டும்பொழுது மற்றவைகளுக்கு உச்ச வரம்பு கட்டுவதா

வேண்டாமா என்ற பிரச்சினை பேசப்பட்டது. நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவதிலே இருக்கிற ஒரே ஒரு லாபம் நிலத்தில் உடனடியாக லாபத்தை அடைய முடியாது. மற்றவைகளுக்கும் உச்ச வரம்பு கட்டப்போகிறோம். அப்பொழுது அதற்கு எதிர்ப்பு சொல்லுகிறவர்களை, முன்பு நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டச் சொன்னீர்களே என்று அப்பொழுது மகாலிங்கங்களை கேட்க முடியும். இந்த உச்ச வரம்பு வர இருக்கின்ற உச்ச வரம்புகளுக்கு முன் அறிவிப்பு, அச்சாரம் என்று பொருள். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவதால் மட்டும் சம தர்மத்தையும் சமத்துவத்தையும் ஏற்படுத்திவிட முடியாது. ஓரளவுக்கு அந்தப் பாதையில் நடந்து செல்லுகிறோம் என்று உலகம் நம்மை மதிப்பதற்கு இது வழி வகை செய்யக்கூடியதாக அமையும். அந்த வகையிலே திருத்தங்களைக் கொடுத்து ஆய்வுக்குழு முற்போக்கு உள்ளதாக இதை ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்த அளவுக்கு முற்போக்கான ஒரு சட்டத்தை கொண்டு வரவேண்டுமென்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிற மந்திரிகளைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

நிதி ஒதுக்கீடுச் சட்ட முன் வடிவு

உரை : 38 நாள் : 30-4-1960

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே, அந்த ஆண்டுக்கான நிதி நிலை பற்றிய விவாதத்தின் இறுதிக் கட்டத்தில் ஆட்சியாளர்கள் கேட்கின்ற அளவுக்குப் பணத்தை அவர்கள் பெறுவதற்கான எண்ணிக்கைப் பலத்தைவைத்துக் கொண்டிருக்கிற நிலைமையில் நான் எடுத்துச் சொல்கின்ற கருத்துக்கள் அவர்கள் கேட்கக்கூடிய பணத்தைத் தடுத்து நிறுத்தப் போவதில்லை. ஆகையால் சர்க்கார் கட்சியின் தலைவர் மாற்றுக் கட்சியாளர்கள் என்னென்ன மனதில் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை விரிவாக விளக்கமாக எடுத்துச் சொல்லும்படியாகக் கேட்டிருக்க வேண்டும். அப்படி எடுத்து சொல்வதற்காவது வாய்ப்பு அளித்திருக்க வேண்டும். இல்லை என்றால் மனதில் தோன்றக்கூடிய எண்ணங்களை சட்ட மன்றத்தில் எடுத்துச் சொல்ல நல்ல வாய்ப்புக் கொடுக்காமல் போய்விட்டால் வெளியில் அதைப்பற்றி பல்வேறு வகையான கோணங்களில் பேசிக்கொண்டே போவதற்கு வழிவகை ஏற்பட்டு விடும். ஆனால் இன்றைய தினம் நிதி அமைச்சர் அவர்களுக்கு வேறு ஒரு அலுவல் குறுக்கிட்டு இருக்கிற காரணத்தை எடுத்துக்காட்டி மிகக் குறைவாக கருத்துக்களை இன்றைக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு இருக்கிறது, அதனால் நான் விரிவாக ஒவ்வொரு துறையையும் பற்றிப் பேசத் தேவையில்லையென்று கருதுகிறேன். குறிப்பாக அமைச்சர் அவையின் போக்கை, நிர்வாகத்தினுடைய தன்மையை, அமைச்சர் அவர்கள் கொடுக்கின்ற வாக்குறுதிகளினுடைய நிலையைப் பற்றி மட்டும் இந்த நேரத்தில் குறிப்பிடுவது மிகவும் பொருத்தம் என்று கருதுகிறேன்.

இந்த அமைச்சரவை எதிர்தரப்பில் உள்ளவர்கள் எடுத்துச் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு அளிக்கின்ற பதில் பொறுப்புள்ளதாக

எனக்குப் படவில்லை. உதாரணமாக இந்த மன்றத்தில் ஒரு அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு - அதுவும் பாராளுமன்றத்தில் இருக்கிற உறுப்பினர் பேசிய பேச்சைப் பற்றி - சேலத்தின் இருந்து எடுத்த இரும்பைக் கொண்டு இங்கிலாந்தில் பாலம் கட்டினார்களா - என்ற கேள்விக்கு ஒரு அமைச்சர் தன் பொறுப்பை மறந்து, பாராளுமன்ற உறுப்பினர் கடமை, பொறுப்பு, என்ன என்பதை மறந்து கேலியாக - அது வேறு ஒரு சேலமாக இருக்கலாம் - அமெரிக்காவில் கூட சேலம் என்று இருக்கிறது - எங்களிடத்தில்அப்படிப்பட்ட தகவல் இல்லை - இந்த சேலத்தில் இருந்து எடுத்த இரும்பைக் கொண்டுதான் இங்கிலாந்தில் பாலம் கட்டப்பட்டது என்பதற்கு ஆதாரம் இல்லை - என்று சொன்னார்கள். உண்மையிலேயே அவர் அப்படிக் கேலியாகப் பேசுவதை விடுத்து இதற்கு ஆதாரம் இருக்கிறதா, எங்கே இருக்கிறது என்று அதற்குப் பிறகாவது பார்த்துத் தெரிந்துகொண்டு தாம் சபையில் அப்படிப் பேசியது தவறு, அதனால் எதிர்தரப்பில் உள்ளவர்கள் வருத்தப் படவேண்டாம் என்று எடுத்துச் சொல்லியிருந்தால் அவர்களுடைய பெருந்தன்மையைப் பாராட்டி யிருப்பேன். அதற்கு மாறாக அமைச்சர் அவர்கள் இங்கே கேலியாகப் பேசிய பேச்சு - பத்திரிகையில் மிக விரிவாக எதிர்கட்சிக்காரர்கள் பொறுப்பற்ற முறையில் பேசுகின்றார்கள் என்பதை விளம்பரப்படுத்தும் வகையில் அவர்கள் இந்த மன்றத்தில் பேசினார்கள். அது மிகவும் கண்டிக்கத் தக்கது என்பதையும், பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியது முற்றிலும் பொறுத்தமானது, அதற்கான ஆதாரம் இருக்கிறது என்பதையும் வலியுறுத்தி எடுத்துச் சொல்லி உணர்த்த விரும்புகிறேன். "India's Mineral Wealth" என்ற புத்தகத்திலே சேலத்தில் இருந்த இரும்பு எங்கிருந்து எப்படி எடுத்துச் செல்லப்பட்டது, இங்கிலாந்து நாட்டிலே இரண்டு பாலங்களுக்கு அவை எவ்வாறு உபயோகப்படுத்தப்பட்டது என்பதெல்லாம் தக்க ஆதாரங்களோடு சொல்லப்பட்டிருக்கிறது. ஜனநாயகம் நல்ல முறையில் வளர வேண்டும் என்ற நோக்கம் உடைய நாடுகளில் எதிர்கட்சிக்காரர்கள் எடுத்துச் சொல்லுகிற கருத்துக்கள் - சில தவறாக இருந்தாலும் கூட - அதை கொஞ்சம் நல்ல மனத்தோடு கவனித்து, அதை வளர்த்தால்தான் ஜனநாயகம் வளரும். எண்ணிக்கை பலம் இருக்கிறது என்கிற நினைப்பினாலே கேலியாகப் பேசுவதோ கிண்டல் செய்து கண்டிப்பதோ, சொல்ல வேண்டாம் என்று சொல்வதோ - உண்மையிலேயே ஜனநாயகத்தை வளர்ப்பது ஆகாது. இந்த ஒரு பிரச்சினையைப் பற்றி மட்டும் பேசி ஆளும் கட்சியினரை பற்றி ஊர்

முழுவதும் சிரிக்கும்படியாக எங்களால் செய்துவிட முடியும். பொறுப்பற்ற தன்மையில் ஒரு அமைச்சர் பாராளுமன்றத்தில் எடுத்துச் சொன்ன கருத்தைக் கேலி செய்துவிட்டு, சேலம் இரும்பா, இந்தச் சேலம் இருக்காது, அமெரிக்காவில்கூட ஒரு சேலம் இருக்கிறது என்று சொல்கிறார். ஆனால் நம்முடைய சேலத்து இரும்பை எடுத்துச் சென்று தான் இங்கிலாந்து நாட்டிலே இரண்டு பாலம் கட்டினார்கள் என்பதற்கு இதோ ஆதாரம் இருக்கிறது என்று பொது மக்களிடத்தில் எடுத்துச் சொல்ல முடியும். ஆனால் அமைச்சர் அவர்கள் சிறிதுகூட பொறுப்பற்ற முறையில் பேசியிருக்கிறார்கள். தாங்கள் என்ன சொல்கிறோம், எப்படி பிறர் மனத்தைப் புண்படுத்தும் என்று யோசிக்காமல் பேசுகின்றார்கள். இதைப்பற்றி யெல்லாம் அமைச்சரவை எண்ணிப்பார்க்க வேண்டும்.

எதிர்க்கட்சி எடுத்துச் சொல்லும் கருத்துக்களை அவ்வளவு அலட்சியத்திற்கு உரியதாகக் கருதாமல், பொறுப்புள்ளதாகக் கருதி, பொறுப்போடு பதிலளிக்க வேண்டுமென்று அமைச்சரவையை நான் வேண்டிக்கொள்கிறேன். எனக்கு மதிப்பு அளிக்கத் தேவையில்லை. எனக்கு அளிக்க வேண்டியவர்கள் அளிக்கிறார்கள். ஆனால் இந்த அமைச்சரவைக்கு வெளி உலகத்திலே இருக்கும் ஜனநாயக வாதிகள் நல்ல மதிப்பு அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிடுகிறேன். 1½ மணிக்கு மேல் கனம் நிதி அமைச்சர் அவர்கள் இங்கிலாந்து நாட்டிலிருந்து வரக்கூடிய ஒரு அரசியல் தலைவரோடு, நிர்வாகத் தலைவரோடு, பேச இருக்கிறார். அவருக்கு இந்த அமைச்சரவை எப்படி நடந்துகொள்கிறது என்று தெரிந்தால் எவ்வளவு கேலி செய்வார்கள் என்று அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இரண்டாவதாக, இங்கே எடுத்துச் சொல்லப்படுகின்ற, ஆட்சியாளர் வைத்திருக்கும் கொள்கைகள் குறைபாடானது என்று எங்கள் தரப்பில் எடுத்துப் பேசினோம். எங்கள் தரப்பு என்று சொல்லும்போது எதிர்க் கட்சி இரண்டு மூன்று வகையாக இருப்பதால் எங்களுக்குள்ளேயே இருக்கும் பிளவை பயன்படுத்தி, எங்களுக்குள்ளே இருக்கும் கருத்து வேற்றுமையைப் பயன்படுத்தி சாமர்த்தியமாக பதில் அளிக்க அமைச்சரவை சந்தர்ப்பம் கொடுக்கும் போதெல்லாம் அவர்கள் அவர்கள் எடுத்துச் சொல்லும் கருத்துக்களை நேரடியாக அவைகளுக்கு விளக்கங்கள் சமாதானங்கள் இந்த அமைச்சரவை தரவில்லை என்று நான் வருத்தத்துடன் சொல்லுகிறேன்.

இந்த நாட்டிலே எது செய்வதானாலும் வரி போட்டுத்தான் செய்தாக வேண்டும் என்ற அடிப்படைக் கருத்தை இந்த அமைச்சரவை மாற்றிக் கொள்ள வேண்டும். அது மட்டுமல்லாமல் வருவாய் தேடிக்கொள்வதற்கு ஏற்ற வகையிலே அமைச்சரவையும், ஆளும் கட்சியினரும் வழிவகை ஏற்படுத்திக் கொண்டால்தான் வளருகின்ற பொருளாதார நிலைமையில், நாட்டு மக்களின் தேவைகள் அதிகப்பட்டுக் கொண்டு போகும் இந்த நாட்களில் நாட்டு மக்களுக்குத் தேவையான வசதிகளை அவர்களால் பெற்றுத்தரமுடியும். இந்தக் கண்ணோட்டத்தோடு வருவாய் தரும் பல வசதிகளை இந்த ஆட்சியாளர் தேடிக்கொள்ள வேண்டுமென்று நான் வலியுறுத்திச் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன். இதைப் பற்றி அமைச்சரவை எங்களுக்கு பதில் சொல்ல வேண்டுமென்றால் "இப்பொழுது இல்லை. படிப்படியாகச் செய்வோம்" என்று பதிலுக்குச் சொன்னாலும் அவர்கள் அதை கொள்கையாக ஏற்றுக் கொண்டு விரைவில் வருவாய் தரும் இனங்களைத் தேடி வாடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு ஓரளவு ஆறுதல் அளிக்க வேண்டுகிறேன். அவர்கள் மத்திய சர்க்காரிடத்தில் வலியுறுத்தினாலும் சரி, அல்லது அவர்களுக்கே இருப்பதாகக் கருதப்படும் அபாரமான திறமைகளைப் பயன்படுத்தினாலும் சரி, இந்த மாநிலத்திற்குத் தேவையான தொழில்களை வளப்படுத்துவதற்கு உறுதுணையாக மின்சார வாய்ப்புகள் நமக்கு தீர்ந்து போய்விட்ட காரணத்தால் இங்கு அணு உலைக்கூடத்தை அமைக்க எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதைப் போலவே தூத்துக்குடி துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாக்கும் திட்டத்தையும், சேது சமுத்திரத் திட்டத்தையும் ஒன்றாக இணைத்து அதை விரைவில் நிறைவேற்றுவதற்கு அவர்கள் வழிவகை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதைப் போல் நம்முடைய தொழில் வளம் பெருகி இந்தத் தொழில் வளம் நல்ல பயனைத் தர வேண்டுமானால், தென்னாட்டில் - அதிலும் குறிப்பாக சென்னை ராஜ்யத்தில் - இருக்கும் ரயில் போக்குவரத்து சாதனங்களை எந்த அளவிற்கு அதிகப்படுத்த வேண்டுமோ அந்த அளவிற்கு அதிகப்படுத்துவதற்கு மத்திய சர்க்காரை வலியுறுத்த வேண்டும்.

இதை எடுத்துச் சொல்லும் நேரத்தில், பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சின்னதுரை அவர்கள் சொன்னதற்கு நம்முடைய நிதி அமைச்சர் மெத்த ஆத்திரங்கொண்டும், கோபம் கொண்டும் "எல்லாம் நீங்கள் வந்தால் பார்த்துக் கொள்ளலாம். எங்களுக்குத் திறமை அவ்வளவுதான்" என்று அடக்க உணர்ச்சி மேலிட்டு விட்டவர் போல் பேசினார்கள். அது நாடக பாணியில் உள்ள அடக்க உணர்ச்சி என்ற கொள்ளலாமே தவிர உண்மையிலேயே நம்முடைய கோரிக்கையை மத்திய சர்க்காரிலே எந்த அளவு வலியுறுத்துகிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கும் நேரத்தில் இந்த மன்றத்தில் அவர்கள் மக்களுக்கு ஏமாற்றம் தரும் வகையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். நல்ல வேளையாக நம்முடைய மராமத்து அமைச்சர் இங்கு இருக்கிறார்கள். இந்த மன்றத்தில் ஒரு தடவைக்கு பத்துத் தடவை பாலாற்றுப் பிரச்சினையைக் குறித்து பேசியிருக்கிறேன். பேசியிருக்கும் ஒவ்வொரு நேரத்திலும் அமைச்சர் அவர்கள் எழுந்து "அது குறித்து வாதித்துக் கொண்டிருக்கிறோம், மாநாடு கூட்டியிருக்கிறோம். மைசூர் சர்க்காருடன் பேசியிருக்கிறோம்" என்ற இந்த இடத்தில் நம்பிக்கை ஊட்டத் தக்க அளவில் பதில் அளித்தார்கள். ஆனால் அண்மையில் மத்திய அரசாங்கத்திலிருந்து பாராளுமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது அங்கே அமைச்சராக இருக்கிறவர் "சென்னை துரைத்தனத்தார் மேற்கொண்டு முயற்சி செய்யதேவையில்லை என்று விட்டுவிட்டார்கள். ஆகையால் நாங்கள் இந்தப் பிரச்சினையைக் கட்டிப் போட்டு விட்டோம்" என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஏன் இந்த மன்றத்தில் ஏமாற்றம் தரத்தக்க வார்த்தைகளைத் தருகிறீர்கள்? இன்று உங்களால் சண்டை போட முடியவில்லை என்றால் உங்கள் கையால் ஆகாதனத்தை பகிரங்கமாக ஒப்புக்கொள்ளுங்கள். இதை விட்டுவிட்டு "நாங்கள் மத்திய சர்க்காருடன் பேசிக்கொண்டிருக் கிறோம்" என்று சொல்லுகிறீர்கள். நீங்கள் இப்படி பேசிக் கொண்டிருக்கும் போது இந்த ஆட்சியாளர் முகத்தில் கரி பூசுவதற்கு கன்னத்தில் அறைந்தார்ப்போல் மத்திய சர்க்காரிலிருந்து பதில் அளிக்கிறார்கள், பாராளுமன்ற அமைச்சர்கள். சென்னை துரைத்தனத்தார் இதற்கு மேல் செய்யத் தேவையில்லை என்று சொல்லிவிட்ட காரணத்தால் சும்மா இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். நான் இந்த அமைச்சரவையைக் கேட்கிறேன் வெட்கமாக இல்லையா என்று நீங்கள் எங்களுக்கு இந்த மன்றத்தில் அளிக்கும் பதிலையும் உங்கள் போக்கையும்...

உயர்திரு. பி. கக்கன்: மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் வெட்கமில்லையா என்று கேட்கிறார்கள். இது முறையல்ல. இது பற்றி நாங்கள் மத்திய சர்க்காருடன் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. சி. என். அண்ணாதுரை : நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த அளவிற்குத்தான் பதில் அளிக்க முடிகிறது என்பதைக் கண்டு பரிதாபப்படுகிறேன். நான் சொல்லுவது இந்த அமைச்சரவை இந்த இடத்தில் கொடுத்திருக்கும் பதிலை உண்மையிலேயே கேலி செய்யத்தக்க வகையில், கண்டிக்கத்தக்க வகையில் இந்திய சர்க்கார் பாராளுமன்ற அமைச்சர்கள் பேசுகிறார்கள். ஒன்று இவர்கள் நம்மை ஏமாற்றி இருக்க வேண்டும். அல்லது இவர்களை மத்திய சர்க்கார் ஏமாற்றி இருக்க வேண்டும்.இரண்டிலே எதுவாக இருந்தாலும் வெட்கப்படத்தக்கதுதான் - கண்டிக்கத்தக்கதுதான். மக்களிடையே சொல்லிவிட்டு வந்து விட்டீர்கள். இதனால் ஓட்டுக்குப் போகிறீர்கள் என்று நிச்சயமாக அமைச்சர்களுக்குக் கூறுகிறேன். மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை எடுத்துக் காட்டி ஒரு முறைக்கு 10 தடவையாக இந்த மன்றத்தில் பேசியாகிவிட்டது. இனி இந்த மன்றத்தில் இதைக் குறித்து பேசுவதாக இல்லை. மக்களை கிளர்ச்சிச் செய்யத் தூண்டிவிட்டு அமைச்சரின் வீட்டின் முன் மரியல் செய்து இதைப்பெறுவது என்பது கடினமான காரியம் அல்ல. பள்ளிப்பிள்ளை பேசும் வகையிலே மராமத்து அமைச்சர் பேசியதைக் குறித்து நான் ஆச்சரியப்படவில்லை. இதை அவர்கள் பொறுப்பற்ற முறையிலே வழக்கமாக பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

உயர்திரு. பி. கக்கன்: நான் பொறுப்பற்ற முறையிலே இந்த மன்றத்தில் பதில் சொல்லவில்லை. இதை பரிசீலனை செய்யவேண்டும் என்றால் உடனே செய்கிறோம் என்று சொல்லி யிருந்ததை அங்கத்தினர் சாதகமாக எடுத்துக்கொண்டு மக்களிடத்தில் சொல்லி இருப்பது முற்றிலும் தவறு. அவர்தான் பொறுப்பற்ற முறையிலே பேசுகிறார்.

திரு. சி. என். அண்ணாதுரை : அமைச்சர் அவர்களுக்கு ஆத்திரம் வருவதில் ஆச்சரியம் இல்லை. இப்போது அவர்கள் பேசினார்கள் மக்களிடத்திலே வாக்களித்து விட்டீர்கள் என்று - பொறுப்பற்ற பேச்சு என்றுதான் மறுபடியும் சொல்லுகிறேன். பாராளுமன்றத்தில் உள்ள அமைச்சர்கள் கேலி செய்யும் வகையிலே பேசுகிறார்கள் என்றால் அதைப் பார்த்து என்ன சொல்லுவது?

மைல் கற்களில் இந்தியில் எழுதுவதை நாங்கள் விரும்பவில்லை. இதைப்பற்றி மத்திய சர்க்காருக்கு எழுதி இருக்கிறோம் என்று பேசப்பட்டது. ஆனால் அங்கே இருக்கும் அமைச்சர் அப்படி சென்னை துரைத்தனத்தாரிடமிருந்து எனக்கு ஒரு தகவலும் வரவில்லை என்று சொல்கிறார்கள்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : ஹிந்தி - எண்களைப் பற்றிதான் நான் சொன்னேன். இங்கே மட்டும் அல்ல இந்தியா முழுவதும் இந்தி எண்கள் புகுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : மைல் கற்களைப்பற்றி இங்கே மறுத்துப் பேசுகிறீர்கள். வெளியிலே கண்டித்துப் பேசி மக்களுடைய அன்பைப்பெறப் பார்க்கிறீர்கள். இப்படியாக இங்கே உள்ளவர்களை ஏமாற்ற விரும்புகிறீர்கள் அல்லது அங்கே இருப்பவர்களுக்கு பயப்படுகிறீர்கள் என்ற இரண்டு வகையான குற்றச்சாட்டை நிதி அமைச்சர் பாஷையிலே சொல்லுவதானால் இந்தக் குல்லாய் இந்தத் தலைக்குப் பொறுந்துமா என்றுதான் சொல்லவேண்டும். ஆகையால் குறைபாடுகள் இருக்கின்றன என்றுதான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உணவு மண்டலத்தில் இருந்து நம்முடைய தமிழகத்தை தனியாக பிரிக்க வேண்டும், சென்னை ராஜ்யத்தைத் தனிப்படுத்த வேண்டும் அப்போதுதான் உணவுப் பிரச்சினை தீரும். அதற்காக மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறோம் என்று அமைச்சர் பாராட்டிச் சொல்லுகிறார்கள். இப்படி இங்கே தரப்படுகிற பதிலுக்கும் அங்கே பேசப்படுகிற பதிலுக்கும் இருக்கும் முரண்பாட்டை அருள்கூர்ந்து யோசித்துப் பார்த்து அமைச்சரவைக்கு அங்கே மதிப்பு குறைகிறதா? அல்லது இங்கே மதிப்பு குறைகிறதா? எந்த இடத்தில் மதிப்பு குறைவானாலும் நல்லது அல்ல என்றுதான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். கடைசியாக நான் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புவது, நிலத்திற்கு உச்சவரம்பு கட்டும் மசோதா விவாதத்திற்கு வந்த போது எவ்வளவு நிலம் ஏழை மக்களுக்கு கிடைக்குமென்று ஆராய்ந்து பார்த்ததில், அதிகம் கிடைக்காது என்று தெரிவதால் இன்றைய தினம் விளை நிலங்களாகயில்லாத நிலங்களை எடுத்து உழவர்களுக்குக் கொடுத்து அவைகளை விளைநிலமாக ஆக்குவதற்குரிய ஒரு நல்ல திட்டத்தை நீங்கள் விரைவில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நமது நிதியமைச்சர் அவர்கள் நேற்று சொன்னதுபோல் மனித சக்தியை வைத்துக் கொண்டிருக்கும்

மனிதர்கள், வேலை வாய்ப்பு இல்லாதவர்களை நேரடியாக துரைத் தனத்தாரின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து - ஆங்கிலத்தில் சொல்லுவார்கள் ''லான்ட் ஆர்மி'' என்று - தொழில் வளத்திற்காக தரைப் படையை ஏற்படுத்தி, விவசாய வளத்திற்காக தரைப் படையை ஏற்படுத்தி நமது வளத்தைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நீங்கள் கேட்ட தொகையை நீங்கள் பெறத்தான் போகிறீர்கள், அப்படிப் பெறுவதை ஆத்திரப்படாமல் பெற்றுக் கொள்ளுங்கள். எதிர் கட்சிக்காரர்கள் சொல்வது என்ன என்று கேட்பதில் அக்கறை செலுத்திப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரை மீதான விவாதம்

உரை : 39 **நாள் : 11.08.1960**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்தமுறை கவர்னருடைய பேருரையின் மீது நான் எடுத்துச் சொல்ல இருக்கின்ற கருத்துக்களின் அளவையும், அதனுடைய சிக்கலையும் என்னுடைய கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள் இங்கே பேசுகின்ற நேரத்தில் எடுத்துச் சொல்லி என்னுடைய சுமையை வெகுவாகக் குறைத்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் இதற்கு எதிரான கருத்துக்களை எடுத்துச் சொன்ன காலத்தில், மற்ற கனம் அங்கத்தினர்களும் கவர்னர் பேருரையிலே இருக்கக் கூடிய குறைகளை நல்ல முறையிலே அலசிக் காட்டி "என்றாலும் நாங்கள் வரவேற்கிறோம்" என்ற முறையிலே தங்களுடைய பேச்சை முடித்திருக்கிறார்கள். என்னுடைய அலுவல் குறைந்திருக்கிறது என்பது மட்டுமல்ல; கவர்னர் பேருரையின் மீது நாங்கள் கொண்டிருக்கின்ற கருத்துக்களை எடுத்துச் சொல்லும் நேரத்தில் அது ஆளும் கட்சியினரால் - அமைச்சர்கள் உள்பட எந்த வகையிலும் அளவிலும் கவனிக்கப்படுகிறது என்பதைப் பார்க்கும் நேரத்தில், இவைகளைப்பற்றி விரிவாகப் பேசிக் கொண்டிருப்பதால் ஏதாவது பலன் கிடைக்குமா என்றால் இல்லை. விருப்பு வெறுப்பு இல்லாமலும், கட்சிக் கண்ணோட்டத்தில் பிரச்சினைகளைக் கவனிக்காமலும் எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்ட உணர்ச்சியுடன் செயலாற்றி இந்த மாகாணத்திற்குப் பெருமை தேடித்தரவேண்டுமென்று கவர்னர் பெருமான் தம்முடைய பேருரையில் வலியுறுத்திச் சொல்லியிருப்பதை அமைச்சர்களும் அடிக்கடி தங்களுக்குக் கவனத்திற்கு வருகிற நேரத்தில் எடுத்து விளக்கி யிருந்தும்கூட, ஒவ்வொரு முறையும் எங்கள் கழகத்தில் சார்பில் எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் எள்ளிநகையாடப்பட்டு எரிச்சலூட்டப்படுகின்றதே தவிர முன் பின் நடவடிக்கைகளை ஆராய்ந்து, உள்ளபடியே சொல்லப்படுகின்ற குறை பாடுகளை உணர்ந்து கவனிக்கத்தக்க அக்கறை இந்த அமைச்சரவைக்கும்,

ஆளும் கட்சிக்கும் இல்லாமலிருப்பதைப் பார்த்து மிகுந்த வருத்தமடைகிறேன்.

கவர்னர் பெருமான் தம்முடைய உரையிலே எல்லா நிலைமைகளும் திருப்தியாக இருக்கிறது என்று சொல்லியிருந்தாலும் அவரும் அதை வெளிப்படையாகக் கூறவில்லை. இந்த நாட்டை ஆளுகின்றவர்களாக இருந்தாலும் கூட, அவர்கள் இன்று இருக்கும் நிலைமை போதுமானது, திருப்திகரமாக இருக்கிறது என்று பூரித்துக்கொள்ள இயலாத நிலையிலேதான் நாட்டில் பல்வேறு சிக்கல்கள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றன. எடுத்துச் காட்டாகச் சொல்லவேண்டுமானால், கவர்னர் பெருமான் தம்முடைய உரையில் "அகவிலையைக் கட்டுப்படுத்தவில்லை என்றால் மக்களுடைய வாழ்க்கைத்தரம் குறைந்து சிக்கல்கள் அதிமாகிவிடும்" என்பதை ஒவ்வொரு முறையும் வலியுறுத்திச் சொல்லி வருகிறார். இந்த விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் இந்த ஆட்சியிருக்கிறது என்று நம்பி இந்த மன்றத்திற்கு வெளியே உள்ளவர்கள் இவர்களைப் பதவியில் அமர்த்தியிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் கடை வீதியில் இருப்பவர்களைப் போல், சாலையோரத்தில் இருப்பவர்களைப் போல், அடுப்படியில் இருப்பவர்களைப் போல் அதே பாணியில் பேசிக் கொண்டு இங்கே ஆட்சிப் பொறுப்பில் உட்கார்ந்து கொண்டு "விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டும்" என்று யாரைப் பார்த்துச் சொல்லுகிறார்கள்? இன்றைக்கு இவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற காரணத்தால் நாம் இவற்றை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்கிறோம். இங்கே எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்களை இவர்கள் உள்ளபடியே உதாசீனப்படுத்துகிறார்களே தவிர யோசித்துப் பார்ப்பதில்லை. உள்ளே பேசினாலே கவனிப்பதில்லை யென்றால் வெளியே பேசினால் இவர்கள் கவனிக்கப் போகிறார்களா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். ஒரு கட்சி ஆட்சிமிகப் பலம் பொருந்தியதாகத் தெரிகிற நேரத்தில் அவர்கள் மற்றக் கட்சியினர் சொல்லுகின்ற குறைபாடுகளை அக்கறையுடன் கவனித்துச் செயலாற்றுவது அந்தக் கட்சிக்கு மட்டுமல்ல; அந்த ஆட்சிக்கே, நாட்டுக்கே நல்லது என்பதை அவர்கள் உணர வேண்டும். நம்மிடத்தில் இருக்கும் பலம் அசைக்க முடியாதது என்று அவர்கள் எதிர்க்கட்சிகளை அசிரத்தையாக நினைத்தால் - நான் அவர்களுக்குக் கவனமூட்ட விரும்புகிறேன் - அவ்வித அரசுகள், எதேச்சதிகார ஜனநாயக அரசுகள் கவிழ்க்கப்பட்டு விட்ட சரித்திரத்தை ஓய்வு நேரத்தில் ஆட்சியாளர்கள்

படித்துப் பார்க்கவேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விலைவாசிகளைக் குறைப்பதற்காக இந்த ஆட்சி எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன என்று துருவித் துருவிப் பார்க்கின்ற நேரத்தில் ஒவ்வொரு முறையும் "விலைவாசிகள் ஏறிவிட்டன" என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, இப்படிக் குறிப்பிட்டிருக்கிறோம் என்ற புள்ளி விவரக் கணக்கை எடுத்துச் சொல்லக் கூடிய அவல நிலையிலேதான் இருக்கிறார்களே தவிர வேறில்லை. இதைச் சொல்லும் நேரத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், அதிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சிக் கொறடாவாக இருக்கும் திரு. கருத்திருமன் அவர்கள் நெல், அரிசி விலை மட்டுந்தான் ஏறிவிட்டது என்று சொல்லுவது போல் பேசியிருக்கிறார். உணவுப் பொருள்களின் விலைவாசி குறையவேண்டுமென்று சொல்லும் நேரத்தில் நெல், அரிசி ஆகியவற்றின் விலை மட்டும் குறைந்தால் போதாது, உழவன் உற்பத்தி செய்வதற்குப் பயன்படக்கூடிய கருவிகளின் விலையும் குறையத்தான் வேண்டுமென்பது உள்ளடங்கியதுதான். கனம் கருத்திருமன், நெல், அரிசி முதலியவற்றின் விலையைக் குறைப்பதன் மூலம் உழவர்கள் தங்களுக்கு வேண்டிய மண்வெட்டி, ஏர் போன்ற கருவிகளை வாங்க முடியாத நிலைமையில் செயலற்றவர்களாகி விடுவார்கள் என்றார். அவர்களை இந்த நாட்டிலே செயலற்றவர்களாக்க வேண்டுமென்ற முறையிலே யாரும் வாதாடவில்லை என்பதை அவருக்கு எடுத்துச் சொல்லுவதன் மூலம் மற்றவர்களுக்கும் தங்கள் மூலமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக இந்த 10, 15 ஆண்டு காலத்தில் விலைவாசி ஏறிக்கொண்டேயிருக்கிறது என்று ஆட்சியாளர்களும், ஆட்சியாளர் களுக்கு அவ்வப்போது ஆலோசனை சொல்கிற பொருளாதார நிபுணர்களும் சரியான முறையில் வகுத்துக்காட்டவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இரண்டொரு தினங்களுக்கு முன்னால், டில்லியில் பொருளாதார நிபுணர்கள் இந்த இந்தியத் துணைக் கண்ட பிரதம அமைச்சரின் முன்னால் உட்கார்ந்து இந்த விலைவாசிகளின் ஏற்றத்திற்குக் காரணம் என்ன என்பதுபற்றிப் பேசிய பேச்சைப் படித்துப் பார்த்ததில் அவர்களுக்குள்ளாகவே ஒருமித்த கருத்து ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட சிக்கல் நிறைந்த இப் பிரச்சினையைப்பற்றி எதிர்த்தரப்பில் சொல்லப்படுகிற குறைப்பாடுகளைப் பரிசீலிக்க வேண்டுமென்றும், அவர்களைக் கலந்து

வழிவகைகளை வகுக்கலாம் என்று கூற விரும்புகிறேன். அதை விடுத்து இரு முறை கவர்னர் உரையில் "அகவிலை குறைக்கப்பட வேண்டும்" என்று எடுத்துச் சொல்லி விட்டால் விலைவாசிகள் குறைந்துவிடாது என்பதை மட்டும் பணிவோடு இந்த மன்றத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இந்த அகவிலையைக் குறைப்பதற்கு, கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளாமல் நீங்கள் எத்தனை தான் திட்டங்களைத் தீட்டினாலும், அந்தத்திட்டங்களை நிறைவேற்று வதற்காகப் பெரும் பெரும் நிபுணர்களைக் கலந்தாலோசித்தாலும், வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகை கடனாகவோ, தானமாகவோ தரப்பட்டாலும், எவ்வளவு அதிகமான வரிச் சுமையை இந்த நாட்டு மக்கள் மீது சுமத்தினாலும் இந்த திட்டங்களுக்கு முழு வெற்றி கிடைக்காமல் போய்விடும்; நல்ல பலனைத் தராது என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்த ஆட்சி விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வில்லையென்ற குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

"சுதந்திரப் போராட்ட காலத்தில் எங்கே போயிருந்தீர்கள்?" என்று காங்கிரஸ் கட்சிக் கொறடா, ஏதோ போராட்ட காலத்தில் ஆள் சேர்க்கும் வேலை இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததைப் போலவும், இவர் தேடித் தேடிப் பார்த்த நேரத்தில் நாங்கள் யாரும் சிக்காமல் இருந்த தைப் போலவும், தளபதி பட்டத்தைத் தன்னிடம் தந்து விட்டதைப் போலவும் பேசினார். யார் யாரோ தளபதியாகும்போது கனம் கருத்திருமன் அவர்கள் தளபதியாவதில் தவறில்லை. உண்மையிலேயே சொல்ல விரும்புகிறேன் - நான் இருந்த இடம் உங்களுடைய மாணிக்கவேலு பக்கத்தில்; நான் இருந்த இடம் உங்கள் ஹாஜா ஷெரிப் இருந்த இடத்தில்; நான் இருந்த இடம் உங்கள் சி.ஆர். ராமசாமி இருந்த இடத்தில்; நான் இருந்த இடம் உங்கள் ராஜா சர். முத்தையாச் செட்டியார் இருந்த இடத்தில். ஆனால் அவர்கள் எல்லாம் இன்றைய தினம் உங்கள் கட்சியில் இருக்கிறார்கள் என்பதாலும், நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கிறோம் என்பதாலுந்தான் பொறுப்புள்ள ஒருவர் அவ்வாறு பேசினார்.

திரு. சி. ஆர். ராமசாமி : Sir, I was never a member of the Justice Party.

திரு. சி. என். அண்ணாதுரை : கனம் ராமசாமி அவர்கள் என்னுடைய வாதத்திற்கு வலுவூட்டுகிறார்கள். அப்போது அவர் காங்கிரஸ் கட்சியில் கூட இல்லை.

(திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப் எழுந்தார்.)

திரு. சி. ஆர். ராமசாமி : நான் 1938-லிருந்தே காங்கிரசில் இருக்கிறேன்.

திரு. சபாநாயகர்: If any Hon. Member wants clarification I will give a chance to him at the end of the speech of the Hon. Member Sri Anndurai. So let Hon. Members do not disturb him please.

திரு. சி. என். அண்ணாதுரை : அவர்களெல்லாம் இன்றைய தினம் ஆளும் கட்சியினுடைய திட்டங்களை ஆதரிக்கிறார்கள். அல்லது அதிலே சில பேர் தங்களுடைய மனதிலே இருக்கும் குமுறலை, அரசியல் நாகரீகத்திற்காகவோ, கட்சிக் கட்டுப்பாட்டுக்காகவோ, அல்லது சலுகைகள் கிடைக்காமல் போய்விடும் என்று அஞ்சுவதினாலோ, வெளிப்படுத்தாமலிருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களை அணைத்துக்கொள்ளத் தவறாத காங்கிரஸ் கட்சிக் கொரடா, எதிர்த் தரப்பிலுள்ள எங்களைப் பார்த்து, "நீங்கள் அப்பொழுது என்ன செய்தீர்கள்?" என்று கேட்டு, அவர்களுக்கு இருக்கும் இராமாயண ஞானத்தை நேற்றையதினம் இங்கே காட்டிக்கொண்டு அங்கதனைப் பற்றியும் இராவணனைப்பற்றியும் சொன்னார்கள்.

அங்கதன் இராவணனைப் பார்த்துக் கேட்டதற்கு அப்போழுது இராவணன் என்ன பதில் சொன்னான் என்பதை, இராமாயணத்தை அவ்வளவு படிக்காத காரணத்தால் எனக்குத் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், எண்ணிப் பார்க்கும் நேரத்தில், இராவணன் என்ன பதில் சொல்லி இருந்திருப்பான் என்று கருதுகிறேன் என்றால், "ஏடா, மூடா, தந்தைக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு நீ இவ்வளவு தைரியமாகப் பேச வந்துவிட்டாயாடா?" என்று ஒரு சமயம் இராவணன் கேட்டிருக்கக்கூடும். அப்பொழுது எழுதப் படாவிட்டாலும் இனி எழுதி இணைக்கப்படும் என்று இராமாயண நிபுணருக்கு நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், பழைய புராணங்களிலிருந்து ஆதாரங்கள் எடுத்துக்கொண்டு அலசுவது என்றால் சபையிலே நேரம் போதாது; நேரம் இருக்குமானால், எழுதியவருக்கே நடுக்கம் எடுக்கும் அளவுக்கு, அதற்கு உட்பொருள் எடுத்து விளக்க அனைவருக்கும் தெரியும். ஆனால், அதற்கு வேறு இடங்கள் இருக்கின்றன என்ற காரணத்தால் அவைகளை எடுத்துச்சொல்லவில்லையே தவிர, கனம் கருத்திருமன் சொல்வது போல, ஒவ்வொரு இடத்திற்கும் அங்கதன், வாலி, சுக்கிரீவன் என்று சொல்லி வால் படைத்த மனிதர்களைச் சபை

முன்னால் இழுத்துவந்து, தனம் வாதத்திற்குத் துணை தேடுவதைப் பார்த்து நான் மிக்க பரிதாபப்படுகிறேன்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடாதவர்கள் இருந்தாலும் அவர்களையும் சேர்த்து அணைத்துக்கொண்டு ஆட்சி நடத்துவதற்குத் தான் 'குடியரசு' என்று பெயர். இது உண்மையிலேயே புரட்சிக்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட சர்க்காராயிருந்தால், அந்தப் புரட்சிக்கு எதிரிடையாக இருந்தவர்கள் ஒன்று சுட்டுத் தள்ளப் பட்டிருப்பார்கள்; அல்லது நாட்டை விட்டு விரட்டியடிக்கப் பட்டிருப்பார்கள்; அல்லது நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கப் பட்டிருப்பார்கள்; அல்லது அவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்றால், பர்மாவில் நடந்ததைப் போல, அமைச்சர்கள் கூடியிருக்கும் இடமாகப் பார்த்து, உள்ளுக்குள் தெரியாமல் இருந்து கொண்டு, கையிலே துப்பாக்கியை வைத்துக் கொண்டு, ஒவ்வொரு அமைச்சராகத் தேடிப் பார்த்து, அவர்கள் செய்த அக்கிரமங்களைச் சொல்லிச் சொல்லி, சுட்டுத்தள்ளியிருப்பார்கள். நாங்கள் அப்படிப்பட்ட முறைக்குச் செல்லவில்லை; செல்லவும் மாட்டோம்; நீங்களும் அப்படிப்பட்ட முறைக்குப் போகமாட்டீர்கள். ஏனென்றால், நாம் அனைவரும் ஜனநாயகத்தை ஒத்துக்கொண்டு இந்த மன்றத்திலே அமர்ந்திருக்கிறோம். ஆகையால், 'நாங்கள் என்ன செய்திருக்கமுடியும், தெரியுமா' என்று பேசிக்கொண்டிருப்பது உண்மைப் பிரச்சினைக்குப் பரிகாரம் ஆகாது; ஜனநாயகத்தை வளர்ப்பதும் ஆகாது. ஆகையால், அகவிலையைக் குறைக்க வழி என்ன என்று எடுத்துச்சொல்லப்படுகிற நேரத்தில், 'அதுபற்றி கூடிக் கலந்து பேசுவோம்' என்று ஒரே ஒரு வரியில் பதில் சொல்வது ஆட்சியாளருக்குக் கண்ணியமே தவிர, ஆட்சியாளர் பொறுப்பை உணர்ந்திருக்கிறார்கள் என்று எடுத்துக் காட்டுமே தவிர, "நீங்கள் எப்படிப்பட்டவர்கள் தெரியுமா?" என்று உங்கள் வீர தீரத்தைச் சொல்லி, வாதாடிக் கொண்டிருப்பதானது மாலைநேரத்தில் எங்கோ பேச வேண்டிய பேச்சை இங்கே வந்து பேசுகிறார்கள் என்ற நிலையை ஏற்படுத்தி விடக்கூடாது. ஆகையால், அந்த முறையிலே இருப்பதால், கவர்னர் தம்முடைய பேருரையில் எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்கவேண்டும், நல்லபடி ஒத்துழைத்துப் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருப்பது ஆட்சியாளர்களாலேயே நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இரண்டாவது, கவர்னர் தம்முடைய பேருரையில் குறிப்பிட்டிருப்பது, இந்த நாட்டினுடைய மொழிப் பிரச்சினையைப்பற்றி. இந்த மொழிப் பிரச்சினையைப்பற்றி என்னுடைய கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் இந்த இடத்திலே மிக விளக்கமாக எடுத்துப்பேசி யிருக்கிறார்கள். அதைப்பற்றிக்கூட அனுதாபத்தோடு கவனிக்க அவர்கள் தவறிப்போயிருப்பதைப் பார்த்து நான் வருத்தப்படுகிறேன். அதைப்பற்றி பேசப்பட்ட நேரத்தில், கனம் சர்தார் வேதரத்னம் அவர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்களை நான் வெகுவாக வரவேற்கிறேன். 'வரவேற்கிறேன்' என்றால், ஆதரிக்கிறேன் என்ற முறையில் அல்ல; உள்ளத்தைத் திறந்து பேசியிருப்பதை நான் வரவேற்கிறேன். அப்படிப் பட்டவர்களை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அப்படிப்பட்டவர் சொல்கிற வாதங்கள் சரியா தவறா என்பது வேறு விஷயம். அதை ஏற்றுக்கொள்வதா, வேண்டாமா எ ன்றால், அதுவும் வேறு விஷயம். என்றாலும், தங்கள் உள்ளத்திலே இருப்பதை வெளிப்படையாக எடுத்துப் பேசக் காண்கிறேன். அப்படிப்பட்டவர்கள் மறைமுகமாக எந்தக் காரியத்தையும் செய்யாமல் நேரடியாகச் செய்கின்றார்கள். அந்த வகையிலே அல்லாமல், மொழியைப் பற்றி நாமெல்லோரும் கலந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதிலே முயற்சி எடுத்துக்கொண்டு, சென்னை துரைத்தனத்தைச் சேர்ந்த அமைச்சர்களும், ஆளும் கட்சி அங்கத்தினர்களும் மொழிப் பிரச்சினைக்கு யார் யாராலோ என்ன காரணத்தாலோ ஏற்பட்டிருந்த பெரிய நெருக்கடி தவிர்க்கப்பட்டு, உலகம் பூராவும் கூர்ந்து கவனித்து, 'ஐயோ! இப்படியா நடந்தது' என்ற சேத்தக்க ஒரு விபத்தான நிலைமை தவிர்க்கப்பட்டு, 'கறுப்புக் கொடி காட்டுவது' என்ற நிகழ்ச்சி கைவிடப்பட்டது. அதைப்பற்றி ஒரு வார்த்தை பாராட்டிப் பேச மனம் இல்லாவிட்டாலும், அப்படிப் பாராட்டிப் பேசினால், அதனால் எங்களுடைய கழகத்திற்கு வலு வந்துவிடும் என்ற கிலி பிடித்துக் கொண்டதாலோ, என்னவோ, நேற்றையதினம் காங்கிரஸ் கட்சிக் கொரடா சொன்னபோது, 'சரணாகதி அடைந்துவிட்டார்கள்' என்று சொன்னது உண்மையிலேயே பிரச்சினையிலுள்ள சிக்கலை மேலும் அதிகரிக்கச் செய்வதாகும், - அதைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். மனிதர்கள் உணர்ச்சி வசப்பட்டவர்கள் - அரசியல்வாதிகள் உட்பட உணர்ச்சிவசப்பட்ட மனிதர்களை, உணர்ச்சிவசப்பட்ட அரசியல்வாதிகளை, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், அந்த உணர்ச்சிகள் நியாயமான ஆதாரத்தின் பேரில் ஏற்பட்டதா என்று ஆராய்ந்து பார்த்து, அந்த உணர்ச்சிகளுக்கு

மதிப்பு அளிக்கவேண்டுமே தவிர, எரிகிற நெருப்பில் எண்ணெயை வார்ப்பதுபோல, 'நீங்கள் சரணாகதி அடைந்து விட்டீர்கள்' என்று காங்கிரஸ் கட்சிக் கொரடா பேசியிருப்பது மேலே இருக்கும் பெருந் தலைவர்கள் கையாண்ட ராஜதந்திர முறைக்கு முற்றிலும் முரணாகும். அதுதான் இவர்களுக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசமோ என்று கூட நான் அஞ்சுகிறேன். உண்மையிலேயே, 'சரணாகதி அடைந்துவிட்டோம்' என்று எங்களைப் பார்த்துப் பேசி, கீர்த்தியோ, கிதாப்போ அவர் கட்சிக்குத் தேடிக்கொண்டார் என்றால், உண்மையிலேயே நம்முடைய நிதி அமைச்சர் பத்திரிகை நிருபர்களை வரவழைத்து, நிலைமையை யெல்லாம் எடுத்துச்சொன்ன அந்த அறிக்கையைப் படிக்கின்ற கனம் கருத்திருமன் போன்றவர்கள் 'நிதி அமைச்சர் சரணாகதி அடைந்துவிட்டார்' என்று தப்பாகக் கருதிக்கொண்டிருக்கூடும் என்பதற்காக நான் எடுத்துச் சொன்னேன். இந்தக் கழகக்காரர்கள், அல்லது இந்தி விஷயத்தில் மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களைக் கலந்து பேசவதற்குக் கனிவோடு அழைக்கிறேன் என்று சொன்னார்கள், அமைச்சர் அவர்கள். அவர் ஒரே ஒரு வரியிலும் பதிலளித்திருக்க முடியும். அதாவது, 'அவர்கள் போகிற பாதை தவறானது; சட்டம் தன்னுடைய வேலையைச் செய்யும்' என்று சொல்லியிருக்கக்கூடும். அதுவும் இப்பொழுது அவர்கள் சொல்ல முடியும். சட்டத்தை காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பும், போலீஸ் படையும் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கல்வியமைச்சராக இருப்பதால், பல பாடங்கள் அவர்கள் படித்திருப்பதால், அவர்கள் பத்திரிகை நிருபர்களை அழைத்து இந்தப் பிரச்சினையை விளக்கினார். நான் காங்கிரஸ் கட்சிக் கொரடாவைக் கேட்கிறேன் - 'சரணாகதி அடைந்தாரா, நிதி அமைச்சர்?' என்று தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். நிதி அமைச்சர் சரணாகதி அடைந்து விட்டார் என்று பொருளா? அல்லது அவருக்கு இல்லாத அளவுக்கு அந்தக் கட்சியினுடைய கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தங்களுக்குத்தான் இருக்கிறது என்று மற்றவர்கள் ஏன் முந்திக்கொள்ளவேண்டும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இப்போதும் சொல்கிறேன் - அந்தப் பிரச்சினையிலுள்ள சிக்கலைத் தீர்ப்பதற்கு ஒரு முடிச்சு அவிழ்க்கப்பட்டிருக்கிறதே தவிர, பரிபூரணமாக சிக்கல் தீர்க்கப்படவில்லை. இன்னும், கனம் நிதி அமைச்சர் தங்களுடைய அறிக்கையில் கொடுத்திருக்கிறபடி, குடியரசுத்

தலைவர் ஆணைக்கும், பண்டித நேருவின் வாக்குறுதிக்கும் ஒன்றுக்கொன்று முரண்பாடு இருக்கிறதா, இல்லையா என்பது கூட இன்னும் அவர்கள் கொடுத்திருக்கிற அபிப்பிராயமாக இருக்கிறதே தவிர, அறுதியிட்டு, உறுதியாக, உண்டு இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமை இல்லை. இதை நன்றாக உணர்ந்த காரணத்தால், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள், 'நான் அதைத் துருவித் துருவிப் படித்துப் பார்த்தேன்; ஒரு முரண்பாடும் தெரியவில்லை; என்னுடைய தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது இல்லை; இதை மற்றவர்கள் மீது திணிக்கக் கூடாது என்ற காரணத்தால் இரண்டு உயர்தர மேலதிகாரிகளைப் பார்க்கச் சொன்னேன்; அவர்களும் நான் சொன்ன கருத்தை ஆதரித்தார்கள்; அதுவும் போதாது என்று கருதினால், இன்னும் கருத்து வேற்றுமை இருக்குமானால், பொதுவான நிபுணர்களிடத்தில் சென்று கருத்தைக் கேட்கலாம் வாருங்கள்' என்று எடுத்துச்சொன்ன கனிவை, ராஜதந்திரத்தை நான் பெரிதும் போற்றுகிறேன். அவர்கள் மேல்நாட்டுக்குப் போவதற்கு முன்னால் ராஜதந்திர உணர்வு அவர்களுக்கு வந்திருப்பது பற்றி நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

உயர்திரு. ஆர். வெங்கடராமன் : ராஜதந்திரம் மேல் நாட்டிலேதான் இருக்கிறதா? நம்மிடத்தில் இல்லையா?

திரு. சி. என். அண்ணாதுரை : நம்முடைய கனம் தொழில் அமைச்சர் அவர்கள், 'மேல் நாடுகளுக்குப் போவதற்கு முன்பே' என்று நான் சொன்னது மேல்நாட்டு ராஜதந்திரத்தைப் பாராட்ட என்று எடுத்துக் கொண்டுவிட்டார். என்னுடைய அடுத்த வாக்கியத்தைத் தொழில் அமைச்சர் அவர்கள் பொறுமையோடு கேட்டிருந்தால் இப்பொழுது குறுக்கிட்டிருக்கமாட்டார். மேல்நாடு போவதற்கு முன்பே இந்த ராஜதந்திர உணர்ச்சி அவர்களுக்கு வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன், என்று சொன்ன நேரத்தில், மேல்நாட்டிலிருக்கும் ராஜதந்திர முறைப்படி எதிர்ப்புகளைச் சமாளிக்க எதையாவது சொல்லிவிடக்கூடிய அந்த ராஜதந்திரத்தை அங்கிருந்து கற்றுக்கொண்டு வரவேண்டாம் என்றுதான் அவர்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

எதிர்ப்பாளர்கள் எதை உண்மையாக, மனதார நம்பிச் சொல்கிறார்களோ, அதை ஆராய்ந்து பார்த்து, அன்போடு, அனுசரணையோடு கவனிப்பதுதான் உண்மையில் ராஜதந்திரமாகும். அந்த முறையில் அவர்களுடைய அறிக்கை அமைந்திருந்தது கருதி

எங்களுடைய உள்ளமே கொஞ்சம் ஆடியது. ஆனால், காங்கிரஸ் கட்சிக் கொரடா அவர்கள் நேற்று பேசிய பேச்சினால் நாங்கள் ஆடிவிட்டிருப்போம் என்று அவர் கருதினால், அது சரியல்ல; அது எங்களைப் பலப்படுத்திற்று. நிதி அமைச்சர் போன்றவர்கள் கொடுக்கும் அறிக்கைகள்தான், கனிவான அறிக்கைதான் ஓரளவுக்கு எங்கள் உள்ளத்தை ஆட வைக்கிறது. மனித சுபாவம், யார் அணுகி வருகிறார்களோ அவர்களை அணுகிச் செல்லவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துமே தவிர, எழுந்து நின்று, 'ஆகா' என்று கூச்சல் போட்டால், அதற்குப் பதிலாக 'ஓகோ' என்று கூச்சலிடத்தான் மற்றவர்களுக்குத் தோன்றும். இதிலே குரல் வலிமையைக் காட்டுவதிலே ஒரு லாபமும் இல்லை. ஆகையால், இனி நம்முடைய காங்கிரஸ் கட்சிக் கொரடா அவர்கள், இந்த மொழிப் பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது, யார் சரணாகதி அடைந்தார்கள் என்று ஆராயத் தேவையில்லை. இப்பொழுது திட்டவட்டமாக சொல்லுகிறேன். இந்தப் பிரச்சினைக்கு நல்ல முற்றுப்புள்ளி வைக்கத்தக்க அளவுக்கு ஒரு முடிவுகட்டப்படவில்லை. இன்றைக்கு குடியரசுத் தலைவர் ஆணைக்கும் தமது பிரதம மந்திரி அவர்களின் வாக்குறுதிக்கும் முரண்பாடு இருக்கிறது என்று கருதுபவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுடைய அறிக்கையை நாம் கூர்ந்து கவனித்துப்பார்த்தால் அவர் இந்தப் பிரச்சினையை விளக்குகின்ற நேரத்தில், அவர் ஒரு கருத்தை விளக்குவதற்கு என்னென்ன பதங்களை கையாண்டிருக்கிறார்கள் என்பது தெரியும். Contrary to· " not in consonance with'' militating against என்ற ஆங்கிலப் பதங்களை ஒவ்வொரு இடத்திலும் வைத்திருப்பது அவருக்கு இதில் ஏற்படுகின்ற தடுமாற்றத்தை வெளிக்காட்டியிருக்கிறது. அத்தனையும் ஒத்துக் கொள்ளப்படவில்லை. குடியரசுத் தலைவர் ஆணை பிரதம மந்திரியினுடைய வாக்குறுதியை உள்ளடக்கியதாக இல்லை என்ற முறையில் இருக்கிறது. It is complete. நிதி அமைச்சர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். அவர்களுக்குத் தெரியும். Commission is an offence. Omission is also an offence. குடியரசுத் தலைவர் ஆணையில் பிரதம மந்திரியின் வாக்குறுதி சேர்க்கப்படாமல் இருப்பதும் குற்றத்தின் பாற்பட்டதுதான். அவர்களுக்கு உள்ளூர இருக்கும் எண்ணத்தைத் தெரிவிக்கும் வகையில் அதைத்திருத்திக்கொள்வதற்கு modify செய்வதற்கு தேவையானால் நான் அதற்குத் தயாராக இருக்கிறேன், வாதாடுகிறேன், போராடுகிறேன், இந்த ஆட்சியாளர்களையே பணிய வைக்கிறேன் என்ற சொல்லக்கூடிய

அளவுக்கு பேசியிருக்கிறார்கள். இதைப் படித்த நேரத்தில் ஆளும் கட்சியினருக்கு ஒரு நல்ல மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்ற ஒரு எண்ணத்தோடு உள்ள வந்திருக்கிறோம். அந்த நேரத்தில் காங்கிரஸ் கட்சி கொரடா அங்கதன் சொன்னதாக உள்ளே பாட்டை பாடுகிறார்கள். அதனால் ஆளும் கட்சியினருக்கு இந்த விஷயத்திலே எந்த வகையான கருத்து இருக்கிறது என்று திட்டவட்டமாக தெரிந்துகொள்ளக்கூடிய அவசியம் இருக்கிறது என்று எங்களுக்கு தோன்றுகிறது.

மொழிப் பிரச்சினையில் எல்லா கட்சியினர்களும் ஒப்பம் அளித்து மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்ற கருத்தை நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி உள்ளேயும், வெளியிலும் வலியுறுத்திக்கொண்டு வருகிறார்கள். எல்லாக் கட்சிகளையும் கலந்து ஆலோசிக்கப்பட்டது உண்மை. எங்களுடைய கட்சியின் சார்பில் வந்திருந்த நேரத்தில் ஆங்கிலம் 1965-க்குப் பிறகும் நீடித்து, தொடர்ந்து காலகேடு இல்லாமல் இருந்துவரவேண்டும் என்ற ஒரு வார்த்தைக்குத் தான் நான் ஒப்பம் அளித்தேன் என்று இந்த மன்றத்தில் பல முறை நான் எடுத்துச் சொல்லி, கனம் நிதி அமைச்சர் ஏற்றுக் கொண்டிருக்கிறார். அந்த மக்கள் சார்பிலே, எந்த மக்கள் எங்களுடைய பிரதிநிதித்துவத்தை ஏற்றுக்கொள்ளவில்லை யென்றாலும், நாங்கள் சொல்லுகின்ற கருத்தை நாளாவட்டத்தில் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறதோ அந்த மக்கள் சார்பில் பல திருத்தங்கள் அந்த அறிக்கைக்கு கொடுக்கப் பட்டிருக்கின்றன. கனம் அன்பழகன் அவர்கள் இந்திய அரசியல் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவர வேண்டும், அந்தத் திருத்தம் நிறைவேறாதவரை இந்த மொழிப் பிரச்சினைக்கு நிரந்தரமான பரிகாரம் கிடைக்காது என்பதாக ஒரு திருத்தம் கொடுத்து, அது விவாதிக்கப்பட்டு, கனம் நிதி அமைச்சர் அவர்கள் 'இப்படிப்பட்ட மாறுபாட்டை இப்பொழுது எழுப்பாதீர்கள்' என்று கேட்டுக்கொண்டும் கூட, அவர்கள் வார்த்தைக்கு மதிப்பு அளிக்க வேண்டிய பெரும் பொறுப்பு எங்களுக்கு இருந்தாலும் கூட, அவர்களுடைய கனிவு உரை எங்களுக்கு மகிழ்ச்சி அளித்தாலும் கூட, எங்களுடைய கொள்கை நட்பிற்கும் மேற்பட்டது என்ற காரணத்தினால், எங்களுடைய கொள்கை கட்சிக்காக மட்டும் அல்ல, நாட்டிற்காகவும் இருக்கிறது என்ற காரணத்தினால், அதுபற்றி வோட்டு எடுக்கவேண்டுமென்று தாங்கள் வலியுறுத்தி, இந்த மன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. எங்கள் தரப்பில் உள்ளவர்கள் இந்திய அரசியல் சட்டத்திற்கு திருத்தம் வேண்டும் என்பதற்கு வாக்களித்து, எதிர் தரப்பில் உள்ளவர்கள் வேறு

பல கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒன்றாகச் சேர்ந்து - எனக்கு கவனம் இருக்கிறது - ஏறக்குறைய 72 உறுப்பினர்கள் அதற்கு எதிரிடையாக வாக்களித்து அந்தத் திருத்தத்தை தோற்கடித்திருக்கிறார்கள். அதுபோலவே, கல்விக்கூடங்களிலும் 3 மொழிகள் படிக்கப்பட வேண்டும் என்ற முறையை மாற்றி இரண்டு மொழிகள் இருந்தால் போதும், தமிழும் ஆங்கிலமும் போதும் என்று ஆத்தூர் தொகுதி உறுப்பினர் திரு எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் திருத்தம் கொடுத்து, அதுவும் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலை அங்கத்தினர் திரு. ப. உ. ஷண்முகம் சுப்ரீம் கோட்டில் கடைசி வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று ஒரு திருத்தம் கொண்டுவந்து, அதுவும் தோற்கடிக்கப் பட்டிருக்கிறது. என்னுடைய நண்பர் கோவிந்தசுவாமி அவர்கள் பாராளுமன்றத்தில் எந்த மொழியில் பேசினாலும், உடனுக்குடன் அதை வேறு எல்லா மொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்து அளித்தாக வேண்டுமென்ற திருத்தத்தைக் கொடுத்து, அதுவும் தோற்கடிக்கப் பட்டிருக்கிறது. என்னுடைய கரத்தில் இருக்கிற எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற 'Language Problem of India-III Memorandum' மூன்றாவது அறிக்கையில் - நான் கனம் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். இதிலே அதுபற்றி குறிப்புகள் இடம் பெற வேண்டாமா? அதிலே இடம் பெறச் செய்வது ஜனநாயக மரபு அல்லவா? அந்த அறிக்கையை படித்துப் பார்த்தால் சென்னை துரைத்தனத்தார் கொடுத்திருக்கிற கருத்துக்களை எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன என்று தெளிவுபட எழுதப்பட்டிருக்கிறதே தவிர, அடிப்படையை ஏற்றுக்கொண்டாலும் கூட, அதிலே மிக முக்கியமான பிரச்சினைகளில் நாங்கள் மாறுபட்டிருக்கிறோம் என்பதைக் காட்ட அதுபற்றி எங்களால் இங்கே திருத்தங்கள் கொடுக்கப்பட்டு அவைகளெல்லாம் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன என்பதாக ஒரு 'அபெண்டிக்ஸ்' இணைப்பு இதிலே சேர்த்திருக்க வேண்டுமா? இப்படி நாங்கள் எல்லோரும் மொழிப் பிரச்சினையிலே ஒன்று பட்டிருக்கிறோம் என்று எடுத்துக் காட்டுவதன் மூலம் - நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். நீங்கள் எதற்காக இந்த இருட்டடிப்பு செய்ய விரும்புகிறீர்கள்? அதனால் எங்களுக்கு பெருமை தேடிக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் உங்களைக் கேட்கவில்லை. எங்களுக்கு நாங்களே பெருமை கொள்ள எங்களாலேயே முடியும். எங்களுக்கு நாங்களே பெருமை தேடிக்கொள்ள முடியாவிட்டால் அப்பொழுது உங்களிடம் வரலாம். ஓரளவுக்கு நாட்டு மக்கள் எங்களிடம்

வைக்கவேண்டிய மதிப்பை வைத்துக்கொண்டிருகிறார்கள் என்று எங்களுக்கு குறைவற்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகையால் ஏன் சேர்க்கவில்லை என்று கேட்கிறேன். என்னுடைய கட்சிக்கு தொப்பு தேடிக்கொள்ளக் கேட்கவில்லை. வடக்கே உள்ளவர்கள் மொழி விஷயத்திலே இங்கு இருக்கிற கட்சிகளுக்குள் ஒரு கட்சி இவ்வளவு தீவிரமாக இருக்கிறது என்பதை உணர்ந்தால்தான், துரைத்தனத்தார் எடுத்துச் சொல்லுகிற கருத்துக்களை மிகவும் கவனித்துக் கேட்டு, உண்மையிலேயே அதற்கு ஒப்ப காரியங்களைச் செய்வார்கள் என்ற காரணத்தினால்தான், இதை இணைத்துக்கொள்ளவேண்டும் என்று பல முறை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

ஒரு மாறுபாட்டைக் காண்கிறேன். அதை வெளிப்படையாகச் சொல்லுவதினால் நிதி அமைச்சர் அவர்கள் வருத்தப்படாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மற்ற மாநிலங்களில் அவர்கள் தங்களுக்கு கிடைத்தது போதாது, தங்களுக்கு ஏற்பட்ட முன்னேற்றம் போதாது, தங்களை மத்திய சர்க்கார் சரிவர நடத்தவில்லை என்று எடுத்துச்சொல்லி காரியங்களை சாதித்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் இந்த மாநிலத்தில் உள்ளவர்கள் நான் முன்பு ஒரு முறை இந்த மன்றத்தில் எடுத்துச் சொன்னதுபோல, மத்திய சர்க்காராலே குத்தகைக்கு எடுக்கப்பட்டவர்கள் போல, வாடகைக்கு அமர்த்தப்பட்டவர்கள் போல, அவர்களுக்கு ஏஜெண்டாக நியமிக்கப்பட்டவர்கள் போல 'இங்கு எல்லாம் நிறைவேற்றப்பட்டு விட்டன' என்று எடுத்துச் சொல்லுவதன் மூலம் மத்திய சர்க்கார் நம்முடைய மாநில துரைத்தனத் தாருடைய திறமையை பாராட்டவேண்டும் என்று கருதலாமே தவிர, கிடைக்கத்தக்க சலுகைகள் நமக்கு கிடைக்காமல் போய்விட அவர்கள் செய்திருக்கிறார்கள். நான் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாநிலத்தில் இருக்கிற உயர்நீதி மன்றத்தில் தமிழ், ஆங்கிலம் என்ற இரண்டிற்கு மிடையே எது இருக்கலாம் என்ற பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமே தவிர, ஆங்கிலம் அகற்றப்பட்டால் தமிழ்தான் இருக்கவேண்டும் என்று அறுதியிட்டு உறுதியாக நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர்கள் போயிருந்த ஸ்ரீநகர் மகாநாட்டில், இந்திய துணைக்கண்டத்தின் பல்வேறு மாநிலங்களின் சட்ட அமைச்சர்களை உடன் வைத்துக்கொண்டு, டெல்லி அரசில் இருக்கிற சட்ட அமைச்சர்...

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : வங்காளத்துக்காரர்.

திரு. சி. என். அண்ணாதுரை : வங்காளத்துக்காரர் என்று சொல்லுகிறார் அமைச்சர் அவர்கள். அதிலே இருக்கிற அர்த்தம் எனக்குத் தெரிகிறது. 'வங்காளத்துக்காரர் உங்கள் பக்கத்தில் இருக்கிறார்'' என்று எண்ணுகிறார். எங்கள் பக்கத்தில் இல்லாத நீங்களே இருக்கும்பொழுது, வங்காளத்தில் ஒருவர், இருவர் அப்படி இருக்கிறார் என்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. நமது நிதி அமைச்சர் நெஞ்சுரம் படைத்தவர். நிதி அமைச்சர் வாதத்திறமை படைத்தவர், எதிர்கட்சியினரை துவம்சம் செய்வதற்கே அவதாரம் எடுத்திருப்பவர். உடனே எழுந்து நின்று 'அப்படிச் சொல்லாதீர்கள். நான் எங்களுடைய மக்களுக்கு வாக்குறுதி தந்திருக்கிறேன். எங்களுடைய மாநிலத்தில் உயர்நீதி மன்றத்தில் தமிழ்தான் ஆட்சி மொழியாக இருக்கும்' என்று சொல்லியிருக்க வேண்டும். சட்டக் கல்லூரியில் பேசுகிறபோது மாணவர்கள் மகிழ்ந்திருக்கிறார்கள். பேராசிரியர்கள் பூரித்திருக்கிறார் அல்லவா? மற்ற மாநிலங்களில் உள்ளவர்களைக் காட்டிலும் தாய் மொழிப் பற்று தனக்கு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ''எப்பொழுதும் என்னைக் கண்டித்துப் பேசுகிற அண்ணாத்துரை கூட, 'இந்த விஷயத்திலே நிதி அமைச்சர் அவர்களை பாராட்டுகிறேன்' என்று சொல்லியிருக்கிறார்'' என்று கூறியிருக்கிறார்கள். இவை அத்தனையும் பாழ்படத்தக்க வகையிலே...

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : இதிலே ஒரு கஷ்டம் என்னவென்றால், ஒவ்வொருவரும் அவரவருடைய கருத்தைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்கள். அண்ணாதுரை அவர்கள் அரசியல் சட்டத்தைப் பார்ப்பார்களேயானால், அதிலே ஆங்கிலம் வைத்துக்கொள்ளுவதா – இந்தி வைத்துக் கொள்ளுவதா அல்லது தமிழ் வைத்துக் கொள்ளுவதா உயர் நீதி மன்றத்தில் - என்று முடிவு செய்யவேண்டியது இந்தச் சட்டசபை என்பது தெரியும். ஆகையினால் வேறு என்ன கருத்து வைத்தி ருந்தாலும் அவர்கள் சொல்லுவதற்கு உரிமை இருக்கிறது மறுத்துச் சொல்லவேண்டுமென்று சொல்கிறார். மறுத்துச் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லுவேன். யாரோ ஏதேதோ சொல்லுகிறார்கள் என்று நமக்கு உடனே - கஷ்டம் வந்துவிடும் என்று நினைக்கவேண்டிய தில்லை. அரசியல் சட்டத்தைப் பார்த்து யாருக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை புரிந்து கொண்டிருந்தால், ஒருவர் சொல்லுவதைப் பார்த்து, இம்மாதிரி உடனே ஆபத்து வந்துவிட்டது என்று குதிக்கமாட்டார்கள்.

திரு. சி. என். அண்ணாதுரை : கனம் நிதி அமைச்சர் அவர்கள் இப்படிக் குதிக்கவேண்டாம் என்று சொல்லத்தக்க உணர்ச்சி அவர்களுக்கு இப்பொழுது வந்தது, அந்த உணர்ச்சி அவர்களுக்கு அங்கே வரவில்லையே என்று வருத்தப்படுகிறேன்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : அங்கு நீங்கள் இருக்கவில்லை.

திரு. சி. என். அண்ணாதுரை : நான் அங்கே இருப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருந்தால், அப்படிப் பேசுவதை அனுமதித்திருக்க மாட்டேன்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : அதுதான் உங்களுக்கும் எனக்கும் வித்தியாசம்.

திரு. சி. என். அண்ணாதுரை : எனக்கும் அவர்களுக்கும் இருக்கிற வித்தியாசம் மட்டுமல்ல, இடத்தினுடைய வித்தியாசமும் அப்படித் தான். நான் நிதி அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் அப்படி மறுத்துச் சொல்லி இருப்பார்களே யானால், இந்தியை எல்லா இடத்திலும் புகுத்திவிட எண்ணம் கொண்டு வந்தவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருந்திருக்கும். அவர்கள் அடக்க உணர்ச்சி பெற்றிருப்பார்கள். இன்று பார்ப்பது, நாம் மேலும் மேலும் அடக்க உணர்ச்சியோடு இருப்பதினால், அவர்கள் எந்த அளவுக்கு இந்தி வெறி தலைவிரித்து ஆடுவதற்கு இடம் அளிக்கிறார்கள் என்பதை கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரசியல் சட்டத்தைப் பார்க்கவேண்டுமானால் அதை நன்கு புரிந்துகொண்டிருக்கவேண்டும். கனம் நிதி அமைச்சரவர்கள் ஆசிரியர்போல் ஆசிரியர் வேலை பார்ப்பதில் குற்றம் ஒன்றுமில்லை - படித்ததில், புரிந்து கொண்டிருப்பதில், குடியரசுத் தலைவர், மொழிபற்றி அறிக்கை மீது, அதற்கு ஒரு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று சட்டத்தில் இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆணையிடலாம்: 'How may' *என்று தான் இருக்கிறது;* 'may' implies 'may not' also. *ஆகவே, ஆணை பிறப்பித்தும் இருக்கலாம், பிறப்பிக்காமலும் இருக்கலாம். அவர்கள் அவசர அவசரமாக ஆணையிட வேண்டிய அவசியம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. இந்திய அரசியல் சட்டத்தை புரிந்து கொள்வது மட்டுமல்லாமல், ஒவ்வொரு வார்த்தையையும், வார்த்தையின் பொருளையும் கூர்ந்து கவனிக்கும் அளவில் அவர்கள் செய்த காரியம் விளங்கவில்லை. ஆகையினால் நான்*

சொல்லுவேன், மொழி விஷயத்தில், எங்கள் கழகம் கோருவதுபோல், இந்திய அரசியல் சட்டத்திற்கு திருத்தம் ஏற்படும் வரை, சட்ட பூர்வமாக நிம்மதி கிட்டாது, நிலைமை சிக்கலாகவே இருக்கும், அடிக்கடி தொந்தரவுகள் ஏற்படும்நிலை நீடிக்கும் என்று. ஆகவே, இந்த மன்றத்தில், மன்றத்தின் சார்பில் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்ற முடிவு எடுத்து, சட்ட ரீதியாக மொழிப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். கவர்னர் அவர்கள் அந்த மொழிப் பிரச்சினை குறித்துச் சொல்லும் நேரத்தில். நாட்டு மக்களின் மனதில் எவ்வளவு தூரம் அது ஆங்காரத்தைத் தூண்டியிருக்கிறது, இந்த மாநில மக்கள் எவ்வளவு நிதான புத்தியோடு இருந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லவில்லை. அஸ்ஸாமிலே மக்களைத் தாக்குவதும், அகதிகளாக்கித் துரத்துவதுமான சூழ்நிலை அவர்கள் மாகாணத்தில் இருப்பதும், இந்த மாநிலத்தில், காங்கிரஸ் கட்சித் கொரடா ராமாயணத்தைச் சொல்லி, கதை சொல்லிப் பேசினாலும், நிதானமான சூழ்நிலை இருப்பதை அவர்கள் குறிப்பிட்டு இருந்தால், உண்மையிலேயே மகிழ்ச்சிடையந் திருப்பேன். முதல் ஆண்டிலேயே அவர்கள் நமக்குச் சொன்னார்கள்; நான் வடகோடி மாநிலமாகிய அஸ்ஸாமிலிருந்து வருகிறேன். வடகோடியில் இருந்து கொண்டு இந்தியாவை ஒரே கண்ணோடு நோக்கும் நிலையை நமக்கு எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒருமைக் கண்ணோடு இந்தியாவைப் பார்ப்பவரின் மாநிலத்தில் வங்காளியைப் படுத்தும் பாட்டைப்பற்றி, மொழிப் பிரச்சினைமீது இந்தத் திங்கள் 24, 25 நாட்களில் நடக்கவிருக்கும் விவாதத்தின்போது கூறலாம் என்ற கருதுகிறேன்.

இறுதியாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனம் நிதியமைச்சரவர்கள் வருந்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆர அமர யோசித்த பிறகே இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். நேற்றைய தினம் கழகத்தைச் சேர்ந்தவர்கள் துரைத்தனத்தார் குழுக்களுடன் சேர்ந்திருப்பதைக் குறித்து மிகக் கேவலமான முறையில், காங்கிரஸ் கட்சிக் கொரடா அவர்கள் பேசினார்கள். கனம் நிதி அமைச்சரவர்கள் இருந்தார்களோ என்னவோ. அவர்கள் சொன்னார்கள், எங்கள் விதி; மக்கள் உங்களைத் தேர்த்தெடுக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இனி அந்த சங்கடத்தை நாங்கள் உங்களுக்குக் கொடுக்கவில்லை. நாங்கள் வரவேண்டிய அளவில் வந்து, பெறவேண்டிய பெருமையைப் பெறுவோம் என்று நம்பிக்கையோடு கூறுவேன். எங்கள் கழகக் கூட்டங்களில்கூட, எந்தக் குழுக் கூட்டத்து

நடவடிக்கைகளிலும் நாங்கள் கேவலமான முறையில் மரபில்லாமல் பேசியது கிடையாது. கனம் நிதியமைச்சர் சொன்னார்கள்; அறிக்கை வெளியிட்டார்கள். நான் எந்த நிருபரையும் கழகக் கூட்டத்திற்கு அழைக்கவில்லை, பத்திரிகை அறிக்கை கொடுத்தது கிடையாது. எந்த விஷயத்தைப் பற்றியும் பகிரங்கமாகப் பேசியது இல்லை. கனம் நிதி அமைச்சர் அறிக்கைக்குப் பிறகு, உங்கள் பதில் என்ன என்று கேட்டதின் பேரில், அவர்கள் பண்டாரக் கதை சொன்னதின் பேரில், நான் ஒரு பாதுஷா கதையை மறுப்பு காட்டத்தக்க வகையில் சொன்னேன். அதுகூட காங்கிரஸ் கட்சிக் கொரடாவிற்கு பொறுக்கவில்லை போலும். அரசியல் குழுக்களில் இடம் பெற்று இருப்பதும் அவருக்குப் பிடிக்கவில்லை போலும். கனம் நிதி அமைச்சரவர்கள் அந்தக் கட்சித் தலைவர் மட்டுமின்றி, இந்த சபைக்கும் தலைவராக இருக்கும் காரணத் தினால், தங்கள் மூலம் "உங்களுக்கு சங்கடம் எதற்கு; ஏதோ சேர்த்து வைத்துக் கொண்டோம், கோவிலைத் திறந்ததும் அர்ச்சகர் ஓரமாக நின்றாற்போல், அரசியல் தீண்டாதவர்களாக நினைத்து, உள்ளே இங்கு இருக்கிறார்களே என்று எண்ணி சேர்த்துக்கொண்டு கிட்ட வந்தால் தீட்ட பட்டுவிடுமோ என்று இருக்கிற அந்த சங்கடம் உங்களுக்கு வேண்டாம் என்று நானும், என்னைச் சேர்ந்தவர்களும் உங்கள் குழுக்களிலிருந்து விலகிக் கொள்ளுகிறோம்" என்பதை தெரிவிக்கிறேன். நாங்கள் சொல்லும் கருத்துக்களும், இழிவான முறைகளும் உங்களிடம் வராமல் பாதுகாக்க நாங்களே விலகிக் கொள்ளுகிறோம். உங்கள் திட்டங்கள் இந்த மன்றத்திற்கோ, நாட்டுக்கோ வரும்போது எங்கள் கருத்துக்களைச் சொல்லிக் கொள்ளுகிறோம். இன்று காங்கிரஸ் கட்சிக் கொரடா அவர்கள் தலையில்அடித்துக் கொள்கிறார்கள்; பின்னால் வயிற்றிலே அடித்துக் கொள்வார்கள், இரண்டு கையாலும் அடித்துக் கொள்வார்கள். ஓங்கி ஒரு சமயம் கனம் சுப்பிரமணியத்தையே அடித்து விடுவார்கள். அப்படி சுப்பிரமணியத்தை கொரடாவின் கையில் விடாமல், எங்களுக்கு இடம் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டு, அகவிலை குறித்தும், மொழிப் பிரச்சினை குறித்தும் சரியானபடி தீர்வுகாணாததாலும், தூத்துக்குடி, சேது சமுத்திரம் திட்டங்கள் பற்றி உத்திரவாதம் இல்லாததாலும், இந்தப் பேருரையை - தமிழ்ப் புலவர்கள் "பேருரை" என்று சொல்வதற்கு தவறாக நினைக்க மாட்டார்கள் என்று எண்ணுகிறேன்- பேருக்கு உரை என்று இருப்பதால், அதைப் பாராட்டவோ, அதைக் கண்டு மகிழ்ச்சியடையவோ இடம் இல்லை என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

அலுவலக மொழிப் பற்றிய விவாதம்

உரை : 40 நாள் : 05.09.1960

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே? மொழிப் பிரச்சினை பற்றி நம்முடைய சட்ட மன்றத்திலே இதற்கு முன்னால் இரண்டொரு முறை விவாதித்திருந்த போதிலும், இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் பரபரப்பான நிகழ்ச்சிகள், நாட்டில் நடைபெற்ற எதிரொலிகள், இதன் மேல் எழுந்த அரசியல் விவாதங்கள் பொதுமக்கள் உள்ளத்திலும் பரவியிருக்கும் காரணத்தினால், மொழிப்பிரச்சினை சட்ட மன்றத்திலே இப்பொழுது கவனிக்கப்படுவது பொருத்தமானது என்று கருதுகிறேன்.அவ்வளவு பொருத்தமான விவாதத்தில் நாங்கள் கலந்துகொள்ள கடைசி நேரத்தில் அனுமதி மறுத்துவிடுவார்களோ என்று. அச்சப்பட்டேன். ஆனால், இன்று காலையில் நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ''நான் வரவேற்கிறேன் - அவர்கள் இதில் கலந்துகொள்வதை'' என்று. ஆனால், அவர்கள் இதில் எங்கள் கருத்தைச் சொல்வதன் மூலம் எங்கள் பிரிவினைக் கொள்கை விஷயத்தில் ஏதோ மாறுதல் ஏற்பட்டிருக் குமோ என்ற எண்ணமும், ஒன்றுபட்ட இந்தியாவை ஆதரிக்கிறோம் என்ற எண்ணமும் தொனிக்கப் பேசினார்கள். எங்களுடைய கட்சி விஷயத்தில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் புதிய அக்கறையை நான் நன்றியறிதலொடு வரவேற்றுப் பாராட்டுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகக் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் போது, எங்கள் மூலாதாரக் கருத்துக்கள் பாதிக்கப்படாத அளவுக்குப் பார்த்துக் கொள்ள போதுமான திறமை எங்களிடம் இருக்கிறது என்று தெரிவித்துக் கொண்டு, எப்பொழுதாவது எங்கள் திறமையில் குறைவு ஏற்பட்டால், வேறு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், நண்பர் என்ற முறையில், அது சரியல்ல என்று எடுத்துச்சொல்லி எங்கள் கட்சிக்கு நிதி அமைச்சர் வலுவூட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். (சிரிப்பு). ஏனென்றால், இந்த மொழிப் பிரச்சினை

பற்றி பேசும் நேரத்தில் யாரும் ஒளிவு மறைவு இல்லாமல், இந்த ஒரு விஷயத்திலாவது, பேசுவது நல்லதென்று கருதுகிறேன்.

இந்த மொழிப் பிரச்சினையில், இன்றைய தினம் ஆளும் கட்சியாக இருக்கும் காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளைப் பல ஆண்டுகளாகக் கவனிக்கவேண்டும். இதில் திராவிட இயக்கத்தை நடத்தும் எங்கள் கட்சிகளுக்கு இருந்திருக்கிற அக்கறையையும் உண்மையிலேயே கூர்ந்து கவனிக்கவேண்டும். காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக ஆவதற்கு முன்னாலேயே, ஹிந்தி தேசிய மொழி, என்று சொல்லி நாட்டில் ஹிந்திப் பிரசாரத்தில் நீண்ட காலத்திற்கு முன்னாலேயே இறங்கி, காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் இந்தியாவுக்கு 'ஹிந்தியே பொதுமொழி, சுயராஜ்யம் அடைந்த பிறகு முதல் காரியம் அதுவே' என்று வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அந்த நேரத்தி லெல்லாம், நாங்கள் நடத்தி வரும் தமிழ் இயக்கமோ, திராவிட இயக்கமோ, ஹிந்திக்குக் கணிசமான எதிர்ப்பினை நடத்தி வந்திருப் பதில் ஒரு ஒருமைப்பாடு இருந்து இருக்கிறது. 25 ஆண்டுகளாக, காங்கிரஸ் கட்சியிலும் இதில் ஒருமைப்பாடு இருக்கிறது என்றாலும் காலத்திற்குக் காலம், எதிர்ப்புணர்ச்சிக்குத்தக்கபடி, மாறுதல் அடைந்திருக்கிறது. மாறுதல் என்று சொல்லும்பொழுது, குறை சொல்லுகிறேன் என்று யாரும் கருதவேண்டாம். மாறுதல் வளர்ச்சிக்கு அடையாளம்; அவர்கள் உலகத்தை அறிந்து கொண்டார்கள் என்பதற்கு. அந்த அவர்கள் பண்பினை எடுத்துக் காட்டுகிறேன்.

காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியான பிறகு, ஹிந்தி மொழியைப் பரப்ப ஏற்படுத்திய குழுக்கள் இரண்டு, மூன்று. அரசியல் நிர்ணய சட்ட சபை ஒன்று, அப்பொழுது அங்கு பேசப்பட்டதையெல்லாம் கனம் நிதியமைச்சரவர்களே நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன். அதன் பிறகு, காங்கிரஸ் (ஒர்க்கிங் கமிட்டி,) செயற் குழுவில் தீர்மானித்திருக்கிறார்கள். இன்னொன்று, ஹிந்தி ஸாஹித்ய சம்மேளனம் என்ற ஹிந்திக் குழுவிலும் செய்திருக் கிறார்கள். ஆக, மூன்று தனித்தனிக் குழுக்களிலே கவனிக்கப்பட்டி ருக்கிறது. இந்தப் பிரச்சினை அரசியல் நிர்ணய சபையிலே வந்த நேரத்திலே, அந்தச் சபையில் நமது நிதியமைச்சரவர்கள் அங்கம் வகித்து இருந்திருக்கிறார்கள். அந்த விவாதம் நடைபெற்ற குறிப்பேடுகளை ஆவலோடு படித்துப் பார்த்தேன். விஷயங்கள் சுவையுள்ளது என்பதற்காக மட்டுமல்ல, - சுவையான விஷயங்களும்

அதில் அடங்கியிருக்கின்றன - அப்பொழுது நம் நிதியமைச்சரவர்கள் அங்கம் வகித்தார்களே, அவர்கள் ஹிந்தியைக் கையாள்வது பற்றி என்ன பேசியிருக்கிறார்கள் என்று துருவித் துருவிப் பார்த்தேன். வருத்தப்பட்டேன், மிகச் சிக்கலான ஒரு பிரச்சினை விவாதத்திற்கு வந்து, உறுப்பினர்கள் தம் கருத்தினைத் திட்டவட்டமாக எடுத்துச் சொன்ன போது நிதியமைச்சர் ஒருவித கருத்தையும் சொல்லாமல் இருந்திருக்கிறார்கள். அதில் நழுவிக் கொண்டார்கள் என்று சொன்னால், அது சரியல்ல என்று சொல்லக் கூடும். ஆனால், மொழிப் பிரச்சினை வரலாற்றில், ஒரு முக்கியமான பாகம் எழுதப்படாமல் போய் விட்டது. என்ன பேசினார்கள், விவாதத்தில், நடைமுறையில் கொண்டுவருவது பற்றி, என்று பார்த்தால், ஒன்றுமில்லை, நடுவே ஒரு விளக்கம் கொடுத்தார்கள் என்பதைத் தவிர. கோவை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ராமலிங்கம் செட்டியார் அவர்கள் - ஒரு நாளிலே இங்கே முதல் அமைச்சராக இருந்தவர் இன்றைய தினம் இந்தியத் துரைத் தனத்தில் அமைச்சராக இருக்கும் டாக்டர். சுப்பராயன், இவர்கள் எல்லாம் பேசிய நேரத்திலே, நமது நிதியமைச்சர் அவர்கள் பேசாமல் இருந்ததைப் பார்த்து மிக்க வருத்தப்பட்டேன். (குறுக்கீடு) கௌரவமாக பேசவில்லை என்று சொன்னேன். சான்ஸ் கிடைக்க வில்லை என்று சொல்கிறார், லால்குடி உறுப்பினர் அப்படிச் சொல்லத் தேவையில்லை. இந்தச் சிக்கலான, முக்கியமான பிரச்சினை விவாதிக்கப்பட்ட நேரத்திலே அவர்கள் காட்ட வேண்டிய அக்கறை காட்டாமலே இருந்திருக்கிறார்கள். ஏறக்குறைய 300 திருத்தங்கள் கொடுக்கப்பட்டு, திரு. கோபாலசுவாமி அய்யங்கார் கொடுத்த அதிகார பூர்வமான தீர்மானம் விவாதிக்கப்பட்ட நேரத்திலே, நம் சட்ட சபையிலே விவாதிப்பது போலல்லாமல் திருத்தம், திருத்தமாக விவாதிக்காமல், ஒட்டுமொத்தமாக எல்லாத் திருத்தங்களையும் எடுத்துக்கொண்டு யார் யார் என்னென்ன கருத்தைச் சொல்ல வேண்டுமோ அவைகளைப் பேசினார்கள். அப்படிப் பேசும்போது, தங்கள் தங்கள் தீர்மானங்கள் மீதும் பேசி, ஏற்படுத்திய ஒரு குழப்பத்தைத் தவிர, இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஆட்சி மொழியாக என்ன மொழி இருக்க வேண்டும் என்ற ஒரு பிரச்சினையில் காட்டப்படவேண்டிய ஆவல், செலுத்தப்பட வேண்டிய அக்கறை, காட்டப்படவில்லை, செலுத்தப்படவில்லை; காட்டப்பட வேண்டிய திறமை, காட்டவில்லை. அப்பொழுது படித்துப் பார்த்தாலும், நிதியமைச்சரவர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன். முன்பு ஒரு

முறை இந்தச் சபையில் குறிப்பிட்டேன்; இந்திய துணைக் கண்டத்திற்கு விடுதலை கிடைத்த காரணத்தினால், விடுதலை பெற்றுத் தந்தவர்கள் என்ற விருது பெற்றவர்கள் என்ற எண்ணத்திலும் இந்த நாட்டை நடத்துவதற்குப் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்ற எண்ணத்தோடும் அங்கே கூடியிருக்கும் நேரத்திலே, ஒருவருக்கொருவர் அன்புரைகளைப் பரிமாறிக் கொள்ளும்போது, எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்காமல் செய்த முடிவுதான் இந்த ஹிந்தி ஆட்சி மொழி என்று இருக்கும் அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவு என்பதை நான் திட்ட வட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அரசியல் சட்டத்திலே அந்தப் பதினேழாவது பிரிவு நல்ல முறையிலே திருத்தி அமைக்கப்படாத வரையில், அதிலே புதிய கண்ணோட்டம் செலுத்தப்படாத வரை, காலத்திற்கேற்ப மாற்றியமைக்காத வரை, இந்தச் சிக்கல்கள், இந்தப் பிரச்சினை, குழப்பங்கள், நிச்சயமாக மீண்டும், மீண்டும் தலை தூக்கி கொண்டுதான் இருக்கும். அஸ்ஸாம் அளவுக்குச் செல்லவில்லை யென்றாலும், தமிழன் போக்கு விவாத அளவோடு நிற்குமா என்று இப்பொழுது பேசத் தேவையில்லை என்றாலும், மொழி வெறி, மொழி ஆதிக்கம் காரணமாக குழப்பம் ஏற்படும் நேரத்தில், யாராலும் எதையும் தடுக்க முடியாது. விரும்பத்தகாத விளைவுகள் நிச்சயமாக ஏற்பட்டே தீரும். ஆகையால், இந்தியாவுக்கு ஆட்சி மொழி இந்தி என்று தீர்மானித்தது, சரியான சூழ்நிலையில், நல்ல விதமாக விவாதித்து எடுக்கப்பட்டத் தீர்மானம் அல்ல என்பதனை கனம் நிதியமைச்சரவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். அரசியல் நிர்ணய சபையிலே பலவாறு குறிப்பிட்டார்கள். நல்ல விதத்தில் விவாதிக்கப் பட்டு அது முடிவு எடுக்கப்பட்டதல்ல. இதைச் சொல்லும்போது அப்படி நான் சொல்வது மட்டுமல்ல, நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களுக்கும் நினைவு இருக்கும் என்று கருதுகிறேன், அரசியல் நிர்ணய சபையில் இப்படியே பலர் குறிப்பிட்டிருக் கிறார்கள். அதைப்பற்றி எடுத்துக்காட்டிச் சொல்லி இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக ஒரு அங்கத்தினர் அதைப்பற்றி மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இங்கு 315 பேர்கள் கூடி இதற்கு வழி கண்டு பிடிக்கத் தேவையில்லை, அதை இந்நாட்டு மக்களுக்கு விட்டு விடலாம் என்று அவர் தெளிவாக எடுத்துச்சொல்லி இருக்கிறார். இன்னும் பலர் அதைப்பற்றி விவாதித்திருந்தாலும், விவாதத்தின் கடைசியில் க்ளோஷர் மோஷன் கொண்டு வந்து இது வரையில்

விவாதித்தது போதும் என்றும் இனிமேல் முடித்து விடலாம் என்று சொல்லி இருக்கிறார். சற்று தொடரலாம் என்று இன்னொரு உறுப்பினர் சொன்ன நேரத்தில் நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் எழுந்திருந்து 'இந்தப் பிரச்சினை இப்பொழுது தேவை இல்லை, புதிய திருத்தம் வரும், அந்தக் காலத்தில் இதைப்பற்றி எடுத்துச் சொல்லலாம், என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்பொழுது கவனித்துக் கொள்ளலாம் என்றும் சொல்லி இருக்கிறார். இதனை அரசியல் நிர்ணய சபைத்தலைவர் ஏற்றுக்கொண்டு க்ளோஷர் மோஷனுக்கு இடம் கொடுத்துவிட்டு விவாதத்தை முடித்துவிட்டு கடைசியில் இரண்டொரு திருத்தத்தை மட்டும் வோட்டுக்கு விட்டார். அவை தோற்கடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோது கனம் திரு. டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் அவர்கள் தம் திருத்தத்தைப்பற்றி வோட்டு எடுக்கவேண்டும் என்று சொல்லியபோது கையை உயர்த்தி வோட்டுகள் எடுக்கப்பட்டன. அந்த திருத்தத்திற்கு ஆறு வோட்டுகள் கிடைத்தாக அரசியல் நிர்ணய சபைக் குறிப்புப் புத்தகத்தில் இருக்கிறது. அந்த ஆறு கரங்களில் நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களுடைய கரமும் இருந்ததோ என்னமோ அதைப்பற்றிக் குறிப்பிடவில்லை. அப்படி அவருடைய கரம் இருந்திருந்தால் அது தமிழ் நாட்டினுடைய நல்ல கரம்தான். அவருடைய கரம் இல்லாது இருக்குமானால் உண்மையிலேயே அவருடைய கரம் நமக்குப் பயன்படாமல் போய் விட்டது என்றுதான் கருத வேண்டும் (சிரிப்பு). இப்படி எவ்வளவோ பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த முறையில் நிறைவேற்றப்பட்ட அரசியல் நிர்ணய சட்டத்தில் இருக்கக்கூடிய 17-வது பிரிவு மொத்தமாக திருத்தி அமைக்கப்படவேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடையது மட்டுமல்ல, இந்திய துணைக் கண்டத்திலுள்ள பலருடைய கருத்துமாகும்.

இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்று கருதுகிறவர்கள் மட்டும்தான் இதைப்பற்றிப் பரிசீலனை செய்யவேண்டும், மற்றவர்கள் இதைப்பற்றிப் பேச வேண்டியதில்லை என்று சொல்லக் கூடிய கருத்து உண்மையிலேயே தவறான கருத்தாகும். அது பொருத்தமான வாதமாகாது. இந்தியா இப்பொழுது சுயராஜ்யம் அடைந்து விட்டது. சுயராஜ்யம் கிடைப்பதற்கு முன்னால் உப்பு சத்யாக்ரகம் செய்த போது 'சுயராஜ்யம் கிடைத்துவிட்டால் உப்பு வரியை எடுத்து விடுவோம்' என்று சொன்னார்கள். வெள்ளைக்கார

ஆட்சி நடந்தபோது உப்பு சத்யாக்ரகம் செய்து பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளை விரட்ட வேண்டும் என்று சொன்னார்கள். அதன் பிறகு சுயராஜ்யம் கிடைத்து விட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளை விரட்டி விட்டார்கள். அவர்களுக்குப் பதில் இப்பொழுது தேசீயத் தலைவர்கள் அல்லது அவர்களுடைய இரண்டாவது தலைமுறை இப்பொழுது ஆட்சியில் உட்கார்ந்து கொண்டிருக் கிறார்கள். இப்பொழுது ஏகாதிபத்தியவாதிகள் போய் விட்டார்கள், ஆனால் ஏகாதிபத்தியம் இருக்கிறது.

வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் போய் உள்நாட்டு ஏகாதிபத்தியம் வந்திருக்கிறது. வெள்ளைக்காரர் அவர்களுடைய ஏகாதிபத்தியத்தை மற்றவர்களுக்கு அளித்துவிட்டுப் போய் விட்டார்கள். இப்பொழுது இருக்கிற நிலைமையைப் பற்றி எடுத்துச் சொல்ல எந்தக் குடிமகனுக்கும் உரிமை இருக்கிறது. சுதந்தரப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தாலும் சரி, சுதந்தரப் போராட்டத்தில் கலந்து கொண்டிருக்காவிட்டாலும் சரி, சுதந்தரம் கிடைத்த பிறகு ஆளும் கட்சியுடன் குலவுபவனாக இருந்தாலும் சரி, எந்தக் குடிமகனாக இருந்தாலும் அவன் இந்த இந்திய துணைக் கண்டத்தில், இடம் பெற்றிருக்கக்கூடியவனாக இருந்தால் அவனுக்கு இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையைப்பற்றி எடுத்துச் சொல்வதற்கு வேண்டிய உரிமை இருக்கிறது. இப்பொழுது இருக்கிற சட்ட திட்டங்கள், பாகுபாடுகள் இவைகளைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அவரவர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வேண்டிய உரிமை எல்லாக் குடிமகனுக்கும் இருக்கிறது. இதனை நமது நிதி அமைச்சர் அவர்கள் மறுக்க மாட்டார் என்றே நினைக்கிறேன். இன்று காலை கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். அவர் எவ்வளவோ, தெளிவாகச் சொல்லியிருக்கிறார். நாட்டுப் பிரிவினையைப்பற்றி இன்னும் சொல்லிக்கொண்டிருந்தால் நாட்டின் ஒற்றுமை கெட்டுப்போய் விடும் என்று சொல்லுகிறார்கள்.

நாட்டைப் பிரிக்க வேண்டும் என்றால் தெற்கே உள்ளவர் களுக்கும் வடக்கே உள்ளவர்களுக்கும் இந்திய துணைக் கண்டத்தில் விரோதம் வந்து விடும் என்ற பொருள் இல்லை. பிரிந்து போவதால் விரோதம் வந்து விடாது என்பதற்கு எடுத்துக்காட்டாக நமது பிரதம மந்திரி நேரு அவர்கள் நம்முடைய ராஜ்யத்திலிருந்து கராச்சிக்குப்

போகிறார். பிரிந்து போன பாகிஸ்தானுக்கு அவர் போக வேண்டிய காரணம் என்ன என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இதனை நான் சொல்லும் போது அண்ணாத்துரை பண்டித நேரு அவர்களுடைய அந்தஸ்துக்கு தன்னை உயர்த்திக் கொள்கிறார் என்று காங்கிரஸ்காரர்கள் நினைத்துக் கொள்ளலாம். அப்படி அவ்வளவு பெரிய இடத்திற்கு என்னை உயர்த்திக் கொள்ளுகிறேன் என்று நினைத்தால் அது தவறான எண்ணம் என்றுதான் நான் கருதுகிறேன். அந்த முறையில் பேசும்போது அவ்வளவு உயர்ந்த பதவியில் உயர்த்திக் கொண்டு நான் பேசுகிறேன் என்று கருதவேண்டாம். பிரிந்து போவதால் ஏற்படக் கூடிய மனக்கசப்பு தானாகப்போய்விடும். ஆகவே இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிப்பதற்கு நிச்சயமாக இடம் இருக்கிறது.

இந்திய துணைக் கண்டத்திற்கு தனியான ஆட்சி மொழி வேண்டியது அவசியம்தான். இந்தியத் துணைக்கண்டம் விடுதலை அடைந்தவுடனேயே அதைப் பற்றி முடிவு செய்திட வேண்டும். இப்படிப்பட்ட அடிப்படை பிரச்சினையில் அப்பொழுதே கவனம் செலுத்திட வேண்டும் என்ற எண்ணத்தில் அப்பொழுதே அரசியல் நிர்ணய சபையில் உட்கார்ந்து கொண்டு இதைப்பற்றி முடிவு செய்திருக்கிறார்கள். அப்பொழுது நம்முடைய மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களும் அங்கே இருந்திருக்கிறார். அப்பொழுது அங்கே ஹிந்தி வெறியர்கள் இருந்திருக்கிறார்கள். அதை அவர் மறுக்க மாட்டார் என்றே நினைக்கிறேன். அப்பொழுது அந்த அரசியல் நிர்ணய சபையில் ஹிந்தி மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதைப்பற்றி ஒருவரும் எதிர்த்துச் சொல்லவில்லை. அந்த இடத்தில் ஹிந்தி எண்ணைப்பற்றித்தான் பிரச்சினை எழுதப் பட்டிருக்கிறது. ஹிந்தி எழுத்திலுள்ள எண்ணைக் கொண்டு வருவாத அல்லது அரபி எண்ணைக் கொண்டுவருவதா என்ற பிரச்சினைதான் எழுதப்பட்டிருக் கிறது. அது சம்பந்தமாகத்தான் பல கருத்துக்களை அவர் மறுத்து மறுத்துப் பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசிய போது ஹிந்தி வெறியர்களில் ஒருவர் கூட இதைப்பற்றி பேசியிருக்கிறார். ஹிந்தி தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்று அவர் சொன்ன நேரத்தில் அதை விரும்பாத ஒரு உறுப்பினர் ஹிந்தி மொழி தேசீய மொழி அல்ல, ஆட்சி மொழி, நிர்வாக மொழி என்று சொன்னார். அதற்கு ஹிந்தி வெறியர்,

"You may call it official language but I call it national language. You may belong to another nation but I belong to the Indian Nation. You may oppose and walk out but I do not approve of your view."

என்றெல்லாம் பேசியிருக்கிறார். அவருடைய பேச்சுக்கு எவ்வளவு தூரம் கவனம் செலுத்தப்பட்டது என்பதைப்பற்றி எனக்குத் தெரியாது. அதைப் பற்றி கனம் நிதி அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். அப்பொழுது நடந்த விவாதம் எல்லாம் ஹிந்தி எண்ணை கொண்டு வருவதா அல்லது அரபு எண்ணைக் கொண்டு வருவதா என்பதுதான். ஹிந்திதான் ஆட்சி மொழி என்று முடிவு செய்து விட்டார்கள். அதன் பிறகு கௌகத்தி மகாநாட்டில்தான் இதைப் பற்றி மறு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆட்சி மொழி என்று இல்லாவிட்டால் நாட்டில் ஒற்றமை இல்லாத நிலை ஏற்பட்டு விடும் என்று சொல்கிறார்கள். சரித்திரத்தை நாம் பார்க்கவேண்டும், அதற்கு வேண்டிய ஆதாரத்தை தேடிப்பிடிக்க வேண்டும். ஸ்விட்சர்லந்து நாட்டில் நான்கு ஆட்சி மொழிகள் இருந்தும் நூற்றுக்கு ஒருவர் பேசக் கூடிய ஒரு மொழியையும் ஆட்சி மொழியாக ஆக்கியிருக்கிறார்கள் அதனால் ஒற்றுமை குலைந்துபோகவில்லை. ஸுவிட்சர்லண்டை கவனித்துப் பார்க்க வேண்டும். அங்க ஆட்சி மொழி என்ன, அதனுடைய நிலை என்ன என்பதைப் பார்க்கவேண்டும்.

நான் அங்கு சென்றிருக்காவிட்டாலும் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறேன். நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூடிய சீக்கிரத்தில் அந்த இடங்களுக்குச் செல்ல இருக்கிறார். அவர் அங்கு போகக் கூடிய காலத்தில் அதைப்பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். அவர் தன்னுடைய சுற்றுப் பிரயாணத்தில் இதைப் பற்றி எல்லாம் தெரிந்து கொள்ளலாம். சுவிட்ஜர்லண்டில் ஒற்றுமை குலைந்து போய் விட்டதா என்பதையும் பார்க்கவேண்டும். கனடாவில் ஒற்றுமை குறைந்து விட்டதா? ஆங்கிலம் பிரஞ்சு இரண்டும் ஆட்சி மொழியாக இருக்கக்கூடிய இடத்தில் ஒற்றுமை குலைந்து போய்விட்டதா? வேறு எந்த இடத்திலும் ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படாமல் இருக்கும் போது இந்த நாட்டில் மட்டும் ஒற்றுமை குலைந்து விடும் என்று சொல்வதற்கு என்ன காரணம்? ஒரு மொழிக்கு வளம் இல்லாமல் இருக்கலாம். இலக்கியம் இல்லாமல் இருக்கலாம், இலக்கணம் இல்லாமல் இருக்கலாம். ஏதோ சிலர் பேசுகிறார்கள் என்பதற்காக அதைக் கொண்டு வருவது என்பது கேலிக்கூத்தாகத்தான் இருக்கிறது. அது அந்நிய மொழியாகத்தான் இருக்கிறது. அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஹிந்தி வெறியர்களும் ஹிந்தி ஆதரவாளர்களும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஹிந்தி வெறியர்கள் என்று நான் சொல்லும்போது

உத்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம், பீகார், போன்ற பிரதேசங்களிலிருந்து வருகிறவர்கள் அதைக் கொண்டு வர வேண்டும் என்று சொல்லுகிறவர்கள். ஹிந்தி ஆதரவாளர்கள் என்று நான் குறிப்பிடும்போது அது யாரைக் குறிப்பிடுகிறது என்றால் இங்கே ஹிந்தி வேண்டும் என்று ஆதரித்துப் பேசுகிறவர்களைக் குறிப்பிடுகிறது. அதாவது சர்தார் ஏ. வேதரத்தனம் போன்றவர்களை ஹிந்தி ஆதரவாளர்கள் என்று நான் குறிப்பிடுகிறேன். இதிலே யார் சொல்வதாக இருந்தாலும், ''இந்தி மொழியில் என்ன இலக்கணம் இருக்கிறது, என்ன இலக்கியச் செறிவு இருக்கிறது?'' என்று கேட்டால் துருவித் துருவிக் கண்டுபிடித்து அவர்கள் இரண்டு காவியங்களைத்தான் - காப்பியங்களைத்தான் - காட்டுகிறார்கள். ஒன்று துளசிதாசர் எழுதிய இராமாயணம், மற்றொன்று ஆல் இந்தியா ரயில்வே கெய்டு. (சிரிப்பு). இந்த இரண்டையும்தான் தங்கள் மொழியில் உள்ள சிறந்த இலக்கியமாகக் காட்டுகிறார்கள்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : நம்முடைய இலக்கியச் செல்வத்தை எத்தனை வேண்டுமானாலும் உயர்த்திப் பேசிக் கொள்ளலாம். அதற்காக இன்னொன்றைத் தாழ்த்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : நான் மற்றவர்களைத் தாழ்வு படுத்த வேண்டும், இழிவு படுத்தவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. தாழ்வு படுத்தப்படுகிறோம், இழிவு படுத்தப்படுகிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகிற நம்முடைய தாய் மொழியாகிய தமிழ் மொழி ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று ஒரு நாளாவது நமது நிதி அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கக் கூடாதா? அவர்கள் அதைத் தள்ளிவிடட்டும். ஒப்புக் கொள்ளாமல் போகட்டும். என்றாலும் நம்முடைய தாய் மொழியாகிய தமிழ் இந்திய தேச ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்று நாம் வற்புறுத்தினோம் என்கிற மனச் சாந்தியாவது அவருக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால் பரந்த மனப்பான்மை - வேதாந்த மனப்பான்மை - என்றெண்ணி அவர் சொல்கிறார், ''எல்லோரும் சொல்லலாம். நடப்பதாக இருந்தால்தான் சொல்லலாம். நடக்காத காரியத்தை வீணாகச் சொல்வானேன்'' என்று. இரண்டு திங்களுக்கு முன்பாக மேற்கு வங்கச் சட்டசபையில் மொழிப்பிரச்சினைபற்றி விவாதம் நடக்கையில் வங்காளத்தையும்

ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திய வங்க நாட்டுப் பெரியவர்கள் "தமிழ் மொழியும் மிகச் சிறந்த மொழி. அதையும் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று பேசியிருக்கிறார்கள். கொங்கு நாட்டு அமைச்சரிடத்தில் இருந்து இதனைக் கூற கேட்பதற்குப் பதிலாக வங்க நாட்டில் இருந்து கேட்பதற்கு பாராட்டுவதா, எந்த வகையில் பாராட்டுவது என்று தெரியவில்லை. தமிழ் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்ற ஆர்வம் நமக்கு எழவில்லை.. அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தமிழ் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று சொல்லக்கூட நாம் பயப்படுகிறோம். ஆனால் இதுவும் ஆட்சிமொழியாகத்தான் இருக்கவேண்டும் என்ற அவர்கள் சொல்கிறார்கள். இப்படி நமது அமைச்சர் அவையில் உள்ளவர்களுக்கு - ஆளும் கட்சியாக உள்ளவர்களுக்கு தமிழ் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்வதற்குக்கூட பயம் இருப்பதற்குக் காரணம் என்ன? அதுதான் உள்ளே இருக்கக்கூடிய அரசியல் தத்துவம். என்னைப் போன்றவர்கள் பேசுவதைப் பார்த்து - இப்படி அவர்கள் பேசினார்களாமே நீங்கள் அவர்களை இப்படிப் பேசவிட்டுக் கேட்டுக் கொண்டா இருந்தீர்கள் என்று கேட்டால் உடனே, "இல்லையே, உடனே குறுக்கிட்டு உங்களைப் பாராட்டிக்கொள்ளுங்கள், அதற்காக மற்றவர்களை இழிவுபடுத்தாதீர்கள் என்றல்லவா சொன்னேன்" என்று சொல்லிக் கொள்ளத்தான் வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்கிறார் கனம் நிதி அமைச்சர்.

ஆகவே இன்றைய தினம் ஒளிவு மறைவு இல்லாமல் பேசப்பட்டு விட வேண்டும். நீங்கள் எதற்காக அச்சப்படுகிறீர்கள்? உங்களை யாரும் ஆதரிக்கமாட்டார்கள் என்று நினைக்கிறீர்களா? உங்களை ஆதரிக்க நாங்கள் இருக்கிறோம். நீங்களே நிரந்தரமாகப் பதவியில் இருக்கவேண்டுமா? இப்பொழுதே எங்களுடைய கட்சியின் ஒரு பகுதியினராகிய திராவிடக்கழகத்தினர் உங்களுக்குத்தான் ஆதரவு அளித்துக்கொண்டு வருகிறார்கள். நாங்களும் கூட இந்தக் காரியத்தைச் செய்யுங்கள் - அதற்கு எங்களுடைய பாதுகாப்பைத் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் நீங்கள் தமிழ் நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கின்றவகையில் வட நாட்டாருக்குத் தாழ்ந்து போய்விடக் கூடாது. இந்தி மொழி ஆட்சிமொழியாக இருப்பதற்கு எந்த வகையிலும் தகுதி இல்லாதது. எந்த வகையான தேவையும் இல்லாதது.

இன்னொன்று காலையிலேயே கேட்கவேண்டுமென்று கருதினேன் - ஆட்சி மொழி ஆட்சி மொழி என்று பேசுகின்றோம். ஆனால் ஆட்சி மொழி என்றால் என்ன என்பதற்கு இன்னமும் தெளிவான விளக்கம் தரப்படவில்லை. ஆட்சி மொழி என்பது எந்த எந்தக் காரியத்திற்காகப் பயன்படுத்தப்படும், எவ்வாறு பயன் படுத்தப்படவேண்டும் என்பதற்கு இன்னமும் விளக்கம் தரப்பட வில்லை. ஆட்சி மொழி என்றால் கார்டு கவர்களில் இருக்க வேண்டும், சட்ட மன்றத்தில் பேசப்படவேண்டும், அந்நிய அரசாங்கத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ள எழுதப்பட வேண்டும் என்று இப்படி என்ன என்ன வகையில்தான் தீர்மானித்திருக்கிறார்கள் என்பதற்கு விளக்கம் நமக்கு இல்லை. அதற்குக் காரணம் அரசியல் அமைப்பின்படி ஆட்சி என்றாலே என்ன என்பதற்கு விளக்கம் இல்லாததுதான். ராஜ்ய நிர்வாகம், மத்திய நிர்வாகம், இரண்டும் சேர்ந்த நிர்வாகம் என்கிற அடிப்படையில் எது நம்முடைய ஆட்சியைச் சேர்ந்தது, எது அவர்களுடைய ஆட்சியைச் சேர்ந்தது, எது இரண்டு சர்க்காருடைய ஆட்சியையும் சேர்ந்தது என்று பிரித்துப் பார்க்கிறபோது நாம் ஒரு குழப்பமான நிலைமையில் இருக்கிறோம். இன்றைய தினம் நம்முடைய ஆட்சி மொழி என்று சொல்கிற நேரத்தில் நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தெளிவாக விளக்கம் கொடுக்க வேண்டும். அது எத்தனை பேர்களை பாதிக்கக்கூடிய பிரச்சினையாக இருக்கிறது என்று. சென்னை சர்க்காரில் இருந்து மத்திய சர்க்காருக்கும், அல்லது சென்னைத் துரைத்தனத்தார், வங்கத் துரைத்தனத்தாருக்கும் எழுதுகிற கடிதப் போக்குவரத்து ஆட்சி மொழியில் இருக்கவேண்டும் என்றால் அதற்காக இப்படித் துருவித் துருவி வார்த்தைகளைக் கண்டுபிடிக்கவேண்டியதில்லை. அதற்காக இப்படிக் கோடிக் கணக்கில் பணத்தைக் கொட்டி வார்த்தைகள் கண்டுபிடிக்க வேண்டியதில்லை. அப்படி அவர்கள் தேடித்தேடி அலைவானேன்? இந்தி மொழியை வளப்படுத்துவானேன்? அவர்களுடைய உள்நோக்கம் எதுவோ அதை வடக்கே உள்ளவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்வதற்கு அவர்களுக்கு இப்பொழுது துணிவு இல்லை. அந்தத் துணிவு இல்லாததற்கு காரணம் அவர்கள் எங்களைக் கண்டு பயப்படுவதுதான் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் எங்களுடைய எதிர்ப்பைக் கண்டு எதற்காகப் பயப்பட வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம்.

நாங்கள் 150 பேர்கள், நீங்கள் 15 பேர்கள் தானே என்று பேசலாம். ஆனாலும் வட நாட்டவர்களுக்கு இத்தகைய அச்சம், இந்த மாறுதல் எப்படி ஏற்பட்டது? இந்தி தேசீய மொழிதான் என்று பேசப்பட்டது மாறி, ஆங்கிலத்திற்கு சமமாகவாவது இந்தியை எடுத்துக் கொள்ளக்கூடாது என்கிற முறையில் திரு. வேதரத்தினம் போன்றவர்கள் பேச ஆரம்பித்திருக்கிறார்கள் என்றால் இது பரிதாபமாகக் கூட இருக்கிறது. இந்தியை கட்டாயமாக தேசீய மொழியாக்க வேண்டும் என்கிற நிலையும், பிடியும் இப்போது தளர்ந்து விட்டது. அதை அவர்களே உணர்ந்து வருகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நம் அமைச்சர் அவை ஏன் அதைத் திட்டவட்டமாக எதிர்க்கக்கூடாது என்று கேட்கிறேன்.

மதிப்பிற்குரிய திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் திரு. ராஜ கோபாலாச்சாரியார் முன்னாளில் கொண்டிருந்த கருத்தையும், இப்போது கொண்டுள்ள கருத்தையும் எடுத்துக் காட்டினார்கள். ஒரு முறை கொண்ட கருத்தை தவறானதாக இருந்தால் மாற்றிக் கொள்ளவே கூடாது என்று நான் சொல்லமாட்டேன். அன்றைக்கு நண்பர் திரு. ராஜகோபாலாச்சாரியார் "எங்களுடைய கொள்கை A to Z கம்யூனிஸ்ட் கட்சியை ஒழிப்பதுதான்" என்றார். அதே திரு. ராஜகோபாலாச்சாரியார் இப்போது "என்னுடைய கொள்கை A to Z காங்கிரஸ் கட்சியை ஒழிப்பதுதான்" என்கிறார். எப்போதைக் கெப்போது அவருக்குக் கெட்டது என்று தோன்றுகிறதோ அந்தக் கெட்டதை ஒழித்து நல்லதை வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற கொள்கையை அவர் வைத்துக் கொண்டிருக்கிறார். நாமே ஒரு காரியத்தைச் செய்து விட்டாலும் கூட அதை தீமையானதுதான் என்று தெரிந்தால் தவறை ஒப்புக் கொள்வதுதான் பெருந்தன்மை. ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் ஆச்சாரியார் காலத்தில் இந்தி வலுக்கட்டாயமாகப் புகுத்தப்பட்ட போது கூட எதிர்க்கத்தான் செய்தோம். இப்போதும் எதிர்க்கின்றோம். ஆகவே இன்றைய தினம் அவரைப் பாராட்டுவதா, கண்டிப்பதா என்பதற்கு எங்களுக்கு அவசியம் இல்லை. ஆனால் விசித்திரமான ஒரு விஷயம் இதைப்பற்றி பேசுகின்றபோது எனக்கு நினைவுக்கு வந்தது. எப்படி திரு. ராஜ கோபாலாச்சாரியார் முன்னாளில் தாமே கட்டாய பாடமாக இந்தியைக் கொண்டு வந்துவிட்டு இப்போது அதை எதிர்க்கின்றாரோ அப்படியே மேற்கு வங்கத்தில் கல்வி மந்திரியாக இருந்த பிரபுல்ல சந்திரகோஷா அவர்கள் தம்முடைய காலத்தில் கட்டாயமாக

இந்தியைப் புகுத்திவிட்டு இப்போது பேசும்போது "I have committed a mistake and I admit it". ''நான் தவறு செய்து விட்டேன். அந்தத் தவறை ஒப்புக் கொள்கிறேன்'' என்று சொல்கிறார். ஆகையால் அமைச்சர்கள் தவறு செய்யலாம். செய்யும் தவறை ஒப்புக் கொண்டு திருத்திக் கொள்வதுதான் அமைச்சர் அவைக்கு இருக்க வேண்டிய பெருந்தன்மை. ''இன்ன காரியம் நான் செய்து விட்டேன். ஆகையால் கடைசி வரையில் அதிலேயே இருப்பேன்'' என்று யாரும் சொல்லத் தேவையில்லை. இந்திக்கு இங்கேயுள்ள எதிர்ப்பு போன்று ஆந்திரா வில் இல்லையே, கேரளத்தில் இல்லையே என்று பல நண்பர்கள் பேசினார்கள். ஆனால் இந்தியை எதிர்த்து நாங்கள் கிளர்ச்சி துவக்கியபோது ஆந்திராவில் இருந்து பல நண்பர்களிடம் இருந்து எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. எங்களுக்கும் சேர்த்து நீங்கள் போராடி வெற்றி வாங்கித் தந்ததற்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என எழுதியிருக்கிறார்கள். ஆனால் எனக்குக் கடிதம் எழுதியுள்ளவர்கள் நிதி அமைச்சருக்குப் பக்கத்தில் இருப்பவர்களைப் போன்ற அந்தஸ்து இல்லாதவர்களாக இருக்கலாம். என்னைபோன்ற சாதாரண மக்கள்தான் அவர்கள். ஆனாலும் ஆந்திராவில் உள்ளவர்களும் கூட இங்கே நடக்கிற காரியங்களைக் கூர்ந்து கவனித்துப் பாராட்டுகிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற எல்லாப் பத்திரிகைகளும் இந்தி விஷயத்தில் கொண்டிருந்த பிடிவாதம் இன்றைய தினம் தளர்ந்து இருக்கிறது. அந்தப் பிடிவாதம் தளர்ந்ததற்குக் காரணம் தென்னாட்டில் இருந்த எழுந்த கிளர்ச்சிதான். இன்றைய தினம் அது இந்த அளவோடு நிற்க வேண்டும். பிரிவினைக்குப் போகக்கூடாது என்கிற எண்ணம்தான் அந்தப் பத்திரிகைகளுக்கு எழுந்துள்ளன.

இந்தியா ஒன்று என்று பேசுகிறவர்களிடம் காட்டுவதைவிட அதிக மதிப்பு எங்களிடம் காட்டி ''பிரிந்து போகாதீர்கள். ஒன்றாக இருக்கலாம் வாருங்கள்'' என்று அந்த பத்திரிகைகள் எல்லாம் எழுவதைப் பார்க்கும் போது சந்தோஷமாக கூட இருக்கிறது. ஆனால் சந்தோஷத்திற்காக சித்தாந்தங்களை விட்டுவிடுவது தமிழனின் மரபு அல்ல. அதை, தமிழ் மரபு அறிந்த நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் இந்த மன்றத்திற்கு வெளியே ஒப்புக் கொள்வார்கள் என்று எனக்குத் தெரியும். ஆகவே இந்தி மொழி விஷயத்தில் எங்கள் கழகச்

சார்பில் எடுத்துச் சொல்வது இதற்காகச் சட்டத்தை திருத்தியாக வேண்டும் என்பதாகும். சட்டத்தை திருத்துவதில் உள்ள சிக்கல்கள் பற்றி நமது நிதியமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். சிக்கல் நிச்சயமாக இருக்கும். எதிலேயும் சிக்கல் இருக்கும். ஆனால் சாமர்த்திய சாலிகள் முயற்சி செய்தால் சிக்கல்கள் தீரும். நமது நிதியமைச்சர் அவர்கள் அப்படிப்பட்டதொரு சாமர்த்தியச்சாலி என்பதை அவர்களே அடிக்கடி இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நானும் சில வேளைகளில் ஒப்புக் கொண்டிருக்கிறேன். ஆகவே, அவர்கள் இந்த சிக்கல்கள் நிறைந்தது என்று சொல்வதை விட்டு இதை நிறைவேற்றி வைக்கிறேன் என்று சொல்லவேண்டும். நிறைவேற்றி வைக்கிறேன் என்று சொல்லிவிட்டு அவரால் நிறைவேற்ற முடியாமல் போய்விடும் என்று நாங்கள் பயப்படவில்லை. ஏனெனில் அந்தக் கோட்டை சரிந்து கொண்டிருக்கிறது. 1945,50-ல் இருந்து வந்த பிடிவாதம் அல்ல இன்றைய தினம் இருப்பது. இன்றைய தினம் வடக்கே இருப்பதெல்லாம் இந்திக்காக நாம் எடுத்தக் கொண்ட முயற்சி வீணாகப் போய்விடக் கூடாதே என்பதுதான். அது சட்ட புத்தகம் வரையிலாவது இருக்கட்டும் என்று சொல்லக்கூடிய அளவிற்குத் தான் இருக்கிறதே தவிர முன்னாள் இருந்த கொடி கட்டி ஆண்ட நிலை அல்ல. அன்று கட்டிய கோட்டை இன்று சுக்கு நூறாகிப் போயிருக்கிறது.

ஆகவே, தைரியமாக அரசியல் சட்டத்தைத் திருத்த முயற்சி எடுத்துக் கொள்ளலாம். அதற்கு, திரு. அன்பழகன் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய தீர்மானத்தை சர்க்கார் தங்கள் தீர்மானமாக மாற்றிக் கொண்டு வருவதாயிருந்தாலும் எனக்குப் பெருமைதான். ஒருமித்த கருத்துவரவேண்டும் என்பதற்காக இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்கும் நேரத்தில், இதையொத்த ஒரு தீர்மானத்தை மேற்கு வங்க சட்டசபையிலும், மேற்கு வங்க மேல் சபையிலும் வேறு ஒருவர் கொடுத்த தீர்மானத்தை எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒரு முகமாக ஆதரித்து அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அதே போல் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதால், அமைச்சர் அவைக்கு ஒரு பங்கமும் வந்துவிடாது. அதனால் காங்கிரஸ் கௌரவம் கெட்டு விடாது. அதனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு பெரிய செல்வாக்கு வந்து விடும் என்று பயப்படத் தேவையில்லை. எங்கள்

செல்வாக்கைச் சிதைப்பதற்கு இவ்வளவு பேர்கள் இருக்கும்போது நீங்கள் எதற்காகப் பயப்படவேண்டும்? ஆகவே அச்சப்படாமல் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவை மறுமுறையும் புனர்பரிசீலனை செய்து இந்தியாவிற்கு இந்தி ஆட்சிமொழி, அந்த இந்தி தேவநாகரி லிபியில் இருக்கும் என்ற பகுதியை அறவே நீக்கிவிட்டு இந்தியாவில் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கும், இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற மொழிகளில் ஒன்றோ, பலவோ ஆட்சி மொழியாவதற்கான தகுதி பெற்றதாக கருதப்படுகிற வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் என்ற வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். இதை நான் சொல்கிற நேரத்தில் ஆங்கிலத்திற்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறோம், ஆங்கிலத்திற்கு ஆதரவாக பேசுகிறோம் என்று பலர் தப்பாக கருதுகிறார்கள். சில பேர்கள் ஆங்கிலம் படித்து விட்டால் அவர்களுக்குள்ள சலுகைகள் தமிழ் வந்தால், போய் விடும் என்ற பயத்தால் இப்படிச் சொல்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

ஆங்கிலம் படிக்க எந்த அளவு புத்தி செலுத்தினார்களோ அந்தளவு தமிழில் செலுத்தினால் ஆங்கிலத்தில் எந்தளவு கீர்த்தி பெற்றார்களோ அந்தளவு தமிழிலும் கீர்த்தி பெறமுடியும். ஒரு மொழி, புத்தியை கெடுத்து விடாது. ஆனால் புத்தியுள்ளவர்கள் எந்த மொழியிலும் நல்லது பெற முடியும். ஆகவே, ஆங்கிலம் படித்து விட்டார்கள் சிலர், அதில் கிடைக்கும் சலுகை கெட்டு விடும் என்பதால் இந்தி வேண்டாம் என்கிறார்கள் என்று தப்புக் கணக்குப் போட வேண்டியதில்லை. தமிழ் ஆங்கிலத்தைவிட தரத்தில் குறைவானது என்று நாம் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. ஆட்சிமொழியாக, இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்த மொழி, அப்படிப்பட்ட ஒரு மொழிப் படிப்படியாக நம்மிடம் வரும்போது அந்த மொழியோடுகூட ஆங்கிலமும் படிக்க வேண்டுமென்று சொல்லி 'any one of the Indian languages, இந்தியாவிலுள்ள வேறு மொழிகளில் ஒன்றையும் படிக்க வேண்டுமென்று இந்த மன்றத்தில் வலியுறுத்திச் சொன்னார்கள். நிதியமைச்சர் அவர்கள், அப்படியிருக்கும் போது, இந்திக்கு மட்டும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு இந்தி படிப்பதற்கு மட்டும் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல, சர்தார் வேதரத்தினம் அவர்கள் காலையில் பேசியபோது

சொன்னார்கள், எட்டாவது வகுப்பிலிருந்து 11-வது வகுப்பு வரையில் இந்தி கட்டாய பாடமாக்கப்பட்டு இதை எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள் என்று சொன்னார்கள். அப்படி அவர் போன்றவர்கள் நம்பத்தக்க அளவில், எண்ணத்தக்க அளவில் இருக்கிற அந்த முறையை மாற்றி இந்திய மொழிகளில் எதுவாகயிருந்தாலும் தெலுங்கு படிக்க வேண்டுமென்றாலும், கன்னடம் படிக்க வேண்டுமென்றாலும் மலையாளம் படிக்கவேண்டுமென்றாலும், குஜராத்தி படிக்க வேண்டுமென்றாலும், மராத்தி படிக்க வேண்டுமென்றாலும், வழிசெய்து தரவேண்டும். படிக்க வேண்டுமென்று கருதுகிற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கவேண்டும்? அந்த நிர்ணயத்தைச் சொல்லுங்கள். இத்தனை மாணவர்கள் கேட்டால் இன்னமொழி ஆசிரியர் நியமிக்கப்படுவார் என்ற முறையை வகுத்து, பெற்றோர்கள், மாணவர்கள் எண்ணம் தெரிவிக்கும்போது அந்தந்த மொழிகளில் படிக்க வழி வகை வகுத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மொழிப் பிரச்சினையில் நாம் நிச்சயமாக குறிப்பிடத் தக்க, மகிழத்தக்க, பெருமைப்படத் தக்க அளவு வெற்றி பெற்றிருக் கிறோம். அந்த வெற்றி முழு வெற்றியாக வேண்டுமென்றால் இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவில் மகத்தான மாறுதல் - தலை கீழான மாறுதல் என்று கூடக் குறிப்பிடுவேன் - செய்ய வேண்டும். அப்படிப்பட்ட தொரு மாறுதல் இந்திய அரசியல் சட்டத்தில் செய்யப்பட வேண்டும். செய்யப்பட்ட வேண்டுமென்பதோடு கூட ஒரு மொழிதான் ஆட்சியாக இருக்கவேண்டுமென்கிற எண்ணம் நீக்கப்பட்டு எந்தெந்த மொழிகள் ஆட்சி மொழிகளாவதற்கு தகுதி படைத்தனவோ அவைகள் எல்லாம் ஆட்சி மொழிகள் ஆக வழி வகைகள் செய்யப்பட வேண்டும்.

அப்படிச் செய்வதால் குழப்பம் ஏற்படுமென்று நினைக்க வேண்டியதில்லை. இந்த மன்றத்தில் ஒரு மொழியில் பேசுகிறபோது இன்னொரு மொழி மொழி பெயர்த்து தரவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொடுத்து அது தோற்கடிக்கப்பட்டது. 150 பேர்கள் ஒரு பக்கத்திலும், 15 பேர்கள் இன்னொரு பக்கத்திலும் இருப்பதால். அதை இந்திய பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொண்டு ஒரு மொழியில் பேசினால் இன்னொரு மொழியில் மொழி பெயர்க்க 6, 7 லட்சம் செலவில் விரைவாக காரியங்கள் செய்து கொண்டு வருகிறார்கள். ஆக, நல்லதொரு காரியத்தைச் சொன்னால் அதன் எதிரொலி பல

இடங்களிலும் கேட்கும் என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. ஆகவே நல்ல நோக்கத்தோடு தரப்படுகிற எங்கள் தீர்மானத்தை துரைத்தனத்தார் ஏற்றுக்கொண்டு தங்கள் கரங்களுக்கு வலிவு தேடி இந்திய அரசாங்கத்தினிடம் வாதாடி, போராடி இந்தி மொழிப் பிரச்சினைக்கு நிரந்தரமான, எல்லோரும் கண்டு பெருமைப் படத்தக்க அளவிற்கு, தமிழ் பண்புக்கு ஊறு நேராத முறையில் நல்லதொரு முடிவிற்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை நிறுத்திக் கொள்கிறேன்.

சென்னை பெயர் மாற்றத் தீர்மானம்

உரை : 41 **நாள் : 30.01.1961**

திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே தமிழ் நாட்டு மக்கள் மிக ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற பிரச்சினை பற்றிய விவாதத்தை வெளியில் நடக்கின்ற கிளர்ச்சிகள் உணர்ச்சிகளைத் தூண்டி விடும் என்ற காரணத்தைக் காட்டி பேச வேண்டாம் என்று சொன்னால், அது துரைத்தனத்தாருடைய பலஹீனத்தைக் காட்டுகிறது என்று வெளியில் உள்ளவர்கள் நிச்சயமாகக் கருதுவார்கள்.

ஜனநாயக நாட்டில் கிளர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். ஜனநாயகத்தில் வெளியில் கிளர்ச்சி செய்கிறார்கள். ஆகையால் எதையுமே செய்ய மாட்டோம் சொல்ல மாட்டோம் என்று சொல்வதும், வெளியில் கிளர்ச்சி நடத்தப் போகிறார்கள் ஆகையால் இதைப் பற்றி சட்டமன்றத்தில் விவாதிக்கக் கூடாது என்று சொல்லி விவாதத்தை ஒத்திப் போட்டு சட்ட மன்றம் தன்னுடைய கடமைகளிலிருந்து தவறி விட துரைத்தனத்தார் தூண்டு கோலாக ஆகிவிடுவார்கள் என்று அஞ்சுகிறேன். இதில் சர்க்காருக்குத் தயக்கம் இருக்க என்ன காரணம்? தமிழர்கள் இருக்கும் மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்கத் தயங்குவதற்குக்குக் காரணம் என்ன?

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : இப்போது அது பிரச்சினை அல்ல. ஒரு வார்த்தையில் சர்க்கார் கட்சித் தலைவர் தமிழ்நாடு என்று பெயர் வைக்கத்தான் போகிறோம் என்று சொல்லிவிட்டால், எல்லோருடைய காதிலும் தேனை வார்த்ததற்குச் சமமாக இருக்கும். வாயிலே இல்லை என்றாலும், எல்லோரும் வெகு ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் போது, இந்த விவாதத்தை ஒத்தி வைக்க வேண்டுமென்று சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார்கள் என்றால், அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பல மேல்

நாடுகளுக்குச் சென்று சுற்றிக் கொண்டு வந்திருப்பவர், நிதி அமைச்சர் அவர்கள் இப்படி ஒரு தந்திரம் மேல்நாடுகளிலிருக்கிறது என்று தெரிந்து கொண்டு வந்து சொல்லுகிறாரோ என்று எண்ண நேரிடுகிறது. இத்தனை பொருட் செலவுக்குப் பிறகு இந்த தந்திரத்தைத்தான் கற்றுக்கொண்டு வந்திருக்கிறார் என்று சொன்னால், போய் வந்த செலவு அத்தனையும் வீணாகும். மிகச் சாதரணமான தீர்மானத்தை - அடிப்படை உரிமை பெற வேண்டிய தீர்மானத்தை - இங்கே பேச அனுமதி தருவதுதான் அறநெறி என்று இந்த ஆட்சியாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் திருப்பித் திருப்பி எங்களுடைய எண்ணத்தை மாற்ற வேண்டும் என்று விரும்புவதால், திருப்பித் திருப்பி எங்களுடைய எண்ணத்தை வலியுறுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். சர்க்கார் எந்த முடிவு எடுப்பதாக இருந்தாலும், இன்றைய விவாதம் அந்த முடிவு எடுப்பதை எந்த வகையிலும் கெடுத்து விடாது கிளர்ச்சிக்கு மதிப்புக் கொடுக்கக் கூடாது என்ற எண்ணத்திலே, ஒரு ஜனநாயகக் கட்சியின் கொள்கை அமையுமானால் அந்த ஜனநாயகக் கட்சி உண்மையிலே ஜனநாயகத்தைப் போற்ற வில்லை என்று வெளியிலே உள்ளவர்கள் கருதுவார்கள். அது மட்டுமல்ல. மெஜாரிட்டி எண்ணிக்கையில் முடிவு செய்வோம் என்று சொன்னால், அப்படிப்பட்ட முடிவுக்கு - தமிழ்நாடு என்று பெயரிடுவது கூட எண்ணிக்கை வீதத்தில் இருக்கும் என்று சொன்னால் - இந்த மன்றத்தில் இந்த விஷயம் பற்றி முடிவு எடுக்கப்படும் நேரத்தில் நாங்கள் வீற்றிருப்பது எங்களுக்கு வெட்கக்கேடு என்று நாங்கள் கருதுகிறோம். சர்க்கார் கட்சித் தலைவர் எங்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு தமிழ்நாடு பிரச்சினை பற்றி இங்கே பேசுவதற்கு ஒருப்படமாட்டேன் என்று தெளிவுபடத் தெரிவித்தால், நாங்கள் இங்கே இருப்பதற்கு இல்லை, எழுந்து சென்று தமிழ் மக்களுக்கு பத்து பேர்களாவது இதற்காக இருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை யாகிலும் தெரிவிப்போம்.

(தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவை ஒத்தி போடப்படுகிறது.)

நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்

உரை : 42 **நாள் : 08.03.1961**

திரு. சி. என். அண்ணாதுரை : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைப்பற்றி நான் எனது கருத்துக்களை எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகின்ற நேரத்தில் அதிலுள்ள குற்றங்குறைகளை எடுத்துச் சொல்வதற்கான நிலை வருகிற அவசரத்தில் அதில் காணக்கூடிய, இந்தத் துறைத்தனத்தார் செய்திருக்கக்கூடிய சில நல்ல காரியங்களுக்காக எனது பாராட்டுதல்களை தெரிவிப்பதில் தவறிவிடுவேனோ என்ற அச்சமில்லாது, முதலில் அவர்கள் செய்திருக்கின்ற இரண்டொரு நல்ல காரியங்களுக்காக நான் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் மக்களின் நீண்ட கால விருப்பத்தை தமிழ் நாட்டுப் பண்புப்படி இன்றையதினம் ஏற்றுக்கொண்டு, அதைக் காலங்கடந்து ஏற்றுக் கொண்டதாயிருந்தாலும் ஒரளவு அதை ஏற்றுக்கொண்டு தமிழ் மக்களுக்கு அவர்களது உரிமைப் பெயரான தமிழ்நாடு என்ற பெயரை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுத்திருப்பதற்காக நாம் இந்த அரசைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். அதனை இன்னும் முழு மனதுடன், நல்ல வடிவத்துடன் செய்திருக்கலாம் என்ற கருத்தை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்வதால் அவர்கள்தாம் செய்திருக்கிற காரியம், தவறோ என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. அவர்கள் இந்தக் காரியத்தை இன்னும் நல்ல வடிவத்திலே, அழகாகச் செய்திருந்தால் தமிழ் மக்களின் எண்ணம், அவர்களது களிப்பு இன்னும் முழு வடிவம் பெற்றதாக இருந்திருக்கும். என்றாலும் இந்த அளவிற்காகிலும் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன்.

மற்றொன்று. எல்லா ஏழை மாணவர்களுக்கும் 11-வது வகுப்பு வரை இலவசக் கல்வி அளிப்பதற்கான வசதிகளை இந்தச் சர்க்கார் செய்து கொடுத்திருப்பதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழை மாணவர் அனைவருக்கும் இலவசக்

கல்வி தரப்படுகிறது என்ற காரணத்தினால் சமுதாயத்தில் பிற்பட்ட நிலையில் இருக்கிற தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கிற மக்களுக்குச் செய்யவேண்டிய சலுகைகளை, காட்ட வேண்டிய வாய்ப்புகளை, வசதிகளைச் செய்யாமல் விட்டுவிடுவதற்கு இதை ஒரு சாக்காக வைத்துக்கொள்ளாமல், ஏழைகள் என்பதற்குப் பிற்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் என்பதற்குச் சமுதாயத்தில் இருக்கக்கூடிய பெரிய மாறுபாட்டை உணர்ந்து பிற்பட்ட மக்களைத் தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்துவதற்குத் தனிச் சலுகைகள் இனியும் செய்வதும் அவர்களைக் கைதூக்கி விடுவதினால் சாதி நிலை நிறுத்தப்படும் என்கிற அச்சத்தை வளர்ப்பதற்குப் பதிலாக, சமுதாயத்தில் ஒரு சமநிலையை அடையச் செய்ய முடியும் என்ற வகையிலே தொடர்ந்து அந்தக் காரியத்தில் ஈடுபடவேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் துரைத்தனத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக இந்தத் துரைத்தனம் இந்த ஆண்டு எந்த ஒரு புதிய வரியையும் போடாமல் நிதி நிலை அறிக்கையைத் தயாரித்துக் கொடுத்திருப்பதற்காக அவர்களை நான் பாராட்ட வேண்டி நேரிட்டிருக்கிறது. ஏன் அதை நான் பாராட்ட வேண்டியிருக்கிறதென்று எடுத்துச் சொன்னேன் என்றால் இவர்கள் புதுவரி எதுவும் போடாவிட்டாலும் மத்திய அரசிலே நாம் தாங்க முடியாத அளவுக்கு வரி போட்டுவிட்டதால் இனி இந்த மாநிலத்திலே இந்த அரசு வரி போடுவதற்குத் தனி இனமே இல்லை என்ற காரணத்தினால் விட்டுவிட்டார்கள் என்பதனால் பாராட்ட நேரிட்டிருக்கிறது என்று சொன்னேன். நமது நிதி அமைச்சரிடையே நல்ல அனுபவமும், வருமுன் சொல்வது, வருவதை நினைந்து செய்வது அமைச்சரின் குணமாக இருக்கவேண்டுமென்ற முறையில் நல்ல அறிவும் பெற்றுள்ள நிதி அமைச்சர் அவர்கள் - அந்த வகையில் புதிய புதிய வரி போடுவதற்கு இல்லை என்று சொல்லிவிட்டார்களோ என்று கருதுகிறேன். வரும் பொருள் உரைக்கின்ற ஆற்றல் அமைச்சரின் இலக்கணம் என்று சொன்னது போல் "பின் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு வரியும் இருக்காது'' என்று நிதி அமைச்சர் அவர்கள் சொன்னது அந்த வகையில்தான் இருக்கும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

"வரி போடுவதற்கு வேறு இனமே இல்லாது மத்திய அரசு வரி போடப்போகிறது. இனி வரி போடுகிற உரிமைகூட எங்களுக்கு அவர்கள் விட்டு வைக்கப் போவதில்லை'' என்பதைத் தெரிந்து

கொண்டுதான், "நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்று நிதி அமைச்சர் அவர்கள் ஜாடையாக அதைக் குறிப்பிட்டார்களோ என்று கருதவேண்டியிருக்கிறது. ஆகையால் நம்முடைய அரசு புதுவரி எதுவும் போடவில்லை என்ற மகிழ்ச்சியை மாய்க்கத் தக்க வகையிலே மத்திய சர்க்காரில் 60 கோடி ரூபாய்க்குப் புது வரிகளை விதித்திருக்கிறார்கள். விதித்திருக்கிற வரிகளும் ஏழை மக்களை பாதிக்கக்கூடிய பண்டங்கள் மீது விதிக்கப்பட்டிருக்கிறதே தவிர, தாங்கக்கூடிய மக்கள் மீது போடப்பட்ட வரியாக அமையவில்லை என்பதை எல்லாம் முன்கூட்டியே உணர்ந்து, மத்திய அரசு போட்ட வரிகளினால் பெரும் அளவு ஏழை மக்கள் பாதிக்கப்படுகிற காரணத்தினால் இனி நம் அரசு எந்த வகையில் வரி போட இருக்கிறது என்பதையும் உணர்ந்துதான் இவர்கள் புது வரி இல்லை என்று சொல்லியிருப்பதானது நான் பாராட்ட நேரிட்டிருக்கிறது என்று குறிப்பிட வேண்டியதாகச் செய்தது.

இதிலே இருக்கிற இன்னொரு பெரிய சங்கடத்தை நிதி அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இந்த அரசு செய்திருக்கிற காரியங்களைச் சீர் தூக்கிப் பார்க்கிறபோது, இந்த மாநிலத்திலே இதற்கு முன்பு வேறு ஒரு அரசு இருந்தது. அதற்குப் பின் இவர்கள் வந்தார்கள், அவர்கள் காலத்திலே இவ்வளவுதான் செய்யப்பட்டது, இவர்கள் வந்தபின் இத்தனை காரியங்களைச் செய்திருக்கிறார்கள் - என்கின்ற ஒப்பு உவமைகளை எல்லாம் பார்த்துச் சீர்தூக்கி இவர்களைப் பாராட்டவோ அல்லது பாராட்டாமல் விடவோ இடம் ஏற்பட்டிருக்கும். அப்படி இரண்டு அரசுகளுடைய சாதனைகளைச் சீர்தூக்கிப் பார்த்துப் பேசுவது சற்றுத் தெளிவு கொடுப்பதாகக்கூட இருந்திருக்கும். ஆனால் அப்படி வேறு அரசு இந்த மாநிலத்தில் இதுவரை இல்லாத காரணத்தினால் - அதாவது நாடு விடுதலைபெற்ற பிறகு முழு பொறுப்புகளையும் அதிகாரங்களையும் கடந்த பத்துப் பதினான்கு வருஷங்களாக காங்கிரஸ் கட்சியிடமே தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது, இருந்து வருகிறது என்ற காரணத்தினால்தான் மற்ற கட்சிகள் வந்திருந்தால் 11-வது வகுப்பு வரை இலவசக் கல்வி அளித்திருப்பார்களா, மாட்டார்களா, இன்னும் அதிகச் சலுகைகளும், வசதிகளும் இந்த மாநில மக்கள் பெற்றிருப்பார்களா, மாட்டார்களா என்று சீர்தூக்கிப் பார்ப்பதற்கில்லை, ஆகவே, இவர்கள் தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்வதற்குப் பதிலாக, இன்ன இன்னவைகளை அதுவும் இத்தனை ஆண்டுக்குள் செய்திருக்கிறோம் என்று எடுத்துக் காட்டியிருப்பதைவிட ஒரு வகையில் என்ன என்ன

செய்திருக்கவேண்டும் என்று கணக்கு எடுத்து, அதில் என்ன என்னதான் செய்ய முடிந்திருக்கிறது, இன்னும் செய்ய முடியாதவைகள் இவ்வளவு இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டி யிருப்பார்களேயானால் சாதிக்க வேண்டியவைகளோடு சாதித்திருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இவர்கள் சாதித்திருப்பவை மிகவும் குறைவு என்பதை அவர்களே ஒத்துக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

இந்த நாட்டில் இந்த அரசே நீடித்து இருந்தாலும், வேறு எந்த அரசு ஏற்பட்டாலும் நாட்டில் உள்ள எல்லா மக்களுக்கும் வயிறார உண்ண உணவு கொடுப்பது தலையாய கடமையாகக் கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் அரசு இருக்கிற நாடுகளுக்கும், அரசு இல்லாத நாடுகளுக்கும் அடிப்படையில் இருக்கக் கூடிய வித்தியாசம் அரசு இல்லாத நாடுகளில் மக்கள் உண்ண உணவு இன்றித் தவிக்கலாம், ஆனால் நிலையான நல்ல அரசு இருக்கக்கூடிய நாட்டு மக்கள் நாகரீகமாகத் தொழில்களில் ஈடுபடவும், வயிறார உண்ண உணவைப் பெறவும் வசதியும், வாய்ப்பும் இருந்தாக வேண்டும். அதுதான் நாகரீக அரசுக்கு இலக்கணம். ஆகையால் இந்த அடிப்படைத் தத்துவத்தை அளவு கோலாகக் கொண்டு காங்கிரஸ் அரசு நிறைவேற்றியிருக்கிற காரியங்களை, எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளைச் சீர்த்தூக்கிப் பார்த்தால் அது பெருமை அளிக்கக் கூடியதாக, சிறப்பளிக்கக் கூடியதாக அமைந்திருக்கிறதா இல்லையா என்பதை ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மையில் பெருமைப்பட்டுக் கொள்வதைவிட, தங்களால் இன்னும் சாதிக்க வேண்டியவைகள் அதிகமாக இருக்கின்றனவே என்று அவர்களே வருத்தப்பட்டுக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அவர்கள் இப்படி ஒப்பிட்டுப் பார்க்கத் தவறிவிடுகிற நேரத்தில் எதிர்க்கட்சியில் இருக்கிற நாங்கள் அதை எடுத்துச் சுட்டிக் காட்டுகிற போது, அதிலே உள்ள குற்றம் குறைகளை நாங்கள் எடுத்துச் சொல்கிற நேரத்தில் ஆளும் கட்சியில் உள்ளவர்கள் கோபப்படுவதும், உண்மையை எடுத்துச் சொல்கிறபோது, நல்லதைப் பாராட்டுகிறபோது "கோழி கூவித்தானா பொழுது விடியப்போகிறது" என்கிற கதைகளை இந்தச் சட்டமன்றத்தில் எடுத்துப் பேசுவதும் உண்மையை அவர்கள் புரிந்து கொண்டதற்கு எடுத்துக் காட்டல்ல.

நாங்கள் வலியுறுத்தி பேசிய காரணத்தினால்தான் உண்மையில் தமிழ்நாடு என்ற பெயரைக் கொடுத்தார்கள் என்று பாராட்டிச் சொல்கிறோம் என்றால், நாங்கள் உண்மையில் கிளர்ச்சி செய்த

காரணத்தினால்தான் 11-வது வகுப்பு வரையில் இலவசமாக ஏழைப் பிள்ளைக்குக் கல்வி வசதி தரவேண்டும் என்பதை ஒத்துக் கொண்டார்கள் என்று பாராட்டுகிறோம் என்றால் - இந்தச் சிறு சந்தோஷத்தைக் கூடவா நாங்கள் வெளியிட்டுக் கொள்ளக் கூடாது. இதைக்கூட நாங்கள் அநுபவிக்க முடியாத முறையில் நம்முடைய ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் "கோழி கூவி பொழுது விடியவில்லை" என்று பேசுகிறார்கள் என்றால், நான் பழங்காலத்து மேதைகள், ஞானிகள்தான் குரங்கு பாஷை, கோழி பாஷை, மிருகங்களுடைய பாஷை எல்லாவற்றையும் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன் - ஆனால் இன்றைய தினம் ஆட்சியில் உள்ள காங்கிரஸ்காரர்களுக்கு கோழி பாஷை புரிந்துவிடுகிறது, கோழி நினைக்கிற நினைப்பைப் புரிந்து கொண்டு பேசுகிறார்களே என ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது. இப்படி மிருகங்களுடைய பாஷையைப் புரிந்துகொள்வதற்கு எடுத்துக்கொள்கிற முயற்சியில் ஒரு கால் அளவுக்காவது மனிதர்களுடைய பாஷையைப் புரிந்து கொள்வதற்கு ஆளும் கட்சியில் உள்ள காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் அமைச்சர்கள் முயற்சி எடுத்துக் கொள்வார்களேயானால் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விடும் என்று நான் கருதுகிறேன். நாட்டில் நடைபெறுகிற கிளர்ச்சியின் பயனாக ஒரு காரியத்தில் சர்க்கார் இறங்குகிறார்கள் என்று சொல்வது இழுக்கல்ல. அந்தச் சர்க்கார் மக்களை மதித்து நடக்கிறார்கள் என்பதற்காக எல்லோரும் சந்தோஷப்பட வேண்டுமே தவிர - அது கோழி கூவி எழுந்ததா, கோழி கூவாமல் எழுந்ததா என்கிற பிரச்சினையில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை. உண்மையில் அப்படிப் பேசுவது ஜனநாயகப் பண்பாகாது.

ஆகையால் நாங்கள் கிளர்ச்சி செய்த பயனாக ஆட்சியாளர்கள் இந்தந்தக் காரியங்களைச் செய்தார்கள் என்று எடுத்துச் சொல்வதைக் குற்றமுள்ளதாகக் கருதி, அதற்குப் பதில் சொல்வதற்கு கோழி கூவி சூரியன் கிளம்பவில்லை என்று ஒருவர் சொல்வதும், மாலை வந்து மலரவில்லை என்று இன்னொருவர் சொல்வதும் இப்படியெல்லாம் உண்மையில் பேசிக் கொண்டிருப்பதானது ஜனநாயகத்தை வளரவிடாது, ஜனநாயகப் பண்புக்கு ஏற்றதும் அல்ல என்பதை உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

எதிர்க் கட்சிக்காரர்கள் எடுத்துச் சொல்கிற கருத்துக்களை உண்மையில் எண்ணிக்கை பலம் இருக்கிறது என்ற காரணத்தினால்

உதறிவிடுவதில்லை என்று முதன் முதலிலே நிதி அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளிக்கின்ற முறையில்மிக்க பெருந்தன்மையோடு பேசினார்கள். அவர்களையே நான் கேட்கிறேன் இந்த நான்கைந்து ஆண்டு காலத்தில் எதிர்தரப்பில் இருந்து எடுத்துச் சொல்கிற கருத்துக்களில் எந்தக் கருத்தை அவர்கள் உடனடியாக மட்டும் அல்ல நெடுநாளைக்குப் பிறகாவது ஏற்றுக்கொண்டு காரியம் நடத்தியிருக் கிறார்கள் என்று - இந்த மன்றத்தில் சொல்ல வேண்டாம் - அவர்களுடைய மனத்திற்குள்ளேயே பதில் சொல்லிப் பார்க்கும் படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : இந்தக் கேள்வியை உங்கள் மனத்திற்குள்ளேயே கேட்டுப் பாருங்கள்.

திரு. சி. என். அண்ணாதுரை : என்னுடைய மனத்திலே பேசி விட்டுத்தான் அடுத்தபடியாக இங்கே பேசுகிறேன்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : அப்போது உங்களுடைய மனத்திற்கு ரொம்ப மறதியாக இருக்கும்.

திரு. சி. என். அண்ணாதுரை : ஆகையால்தான் அவர்கள் எந்த எந்தக் காரியங்களில் எதிர்தரப்பில் உள்ளவர்கள் எடுத்துச் சொன்னவைகளை நடை முறைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உடனே உங்களுடைய மனத்தைக் கேட்டுப் பாருங்கள் என்று சொல்வதையும், நான் உடனே என் மனதைக் கேட்டுப்பார்த்த பின்தான் சொல்கிறேன் என்பதும், அப்போது மறதி அதிகம் இருக்கும் என்பதும் காமன் பண்டிகையில் இவன் ஒன்று சொல்வதும், அவன் ஒன்று சொல்வதும் இப்படியாகப் பேசுவது போன்ற முறையில் பேசுவது வேடிக்கை விஷயம் அல்ல. நான் கொஞ்சம் மன அலைச்சல் அதிகம் உள்ளவனாக இருக்கலாம். ஏனென்றால் ஆட்சிப் பொறுப்பில் இல்லை. அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறார்கள். ஆட்சிப் பொறுப்பில் பெரிய பதவியில் இருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள், இன்னும் பெரிய பதவிக்குப் போகவேண்டிய அமைச்சர் அவர்கள் அதுபற்றி தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைவிட்டு காமன் பண்டிகையில் பேசுவதுபோல் பேசிக்கொண்டு போனால் அது வேடிக்கைக்காகப் பயன்படுமே தவிர வேறு காரியத்திற்குப் பயன்படாது. இன்னும் நான் நிதி அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுவேன்.

அந்த வித்தையை என்னிடம் வைத்துக் கொள்ளாதீர்கள். உங்களுக்குத் தெரிந்ததைவிட, நான் அந்த வித்தையில் கொஞ்சம் கைதேர்ந்தவன். ஆகவே அதிலே ஈடுபட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். பொறுப்பிலுள்ளவர்கள், எதிர்கட்சியிலுள்ளவர்கள் சொல்லு கின்றவர்கள் எந்த அளவுக்கு செயல் முறையில் ஏற்றுக் கொண்டிருக் கிறார்கள் என்பதை சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதில் ஏதாவதை ஏற்றுக் கொண்டால்தான் எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் உற்சாகம் அடைவார்கள். நமது நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லுகிறார்கள், பிற மாநிலங்களுக்கு நம்முடைய மாநிலம் எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும் என்று. இந்த மாநிலத்தில் நான் கொடுத்திருக்கின்ற பல பெரிய புத்தகங்களை படித்துப் பார்த்து கருத்துக்களைத் தெரிவித்தால் நம்முடைய விவாதத்தின் தரம் நன்றாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த வகையில் எடுத்துக் கூறப்பட்ட கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்பதை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக் கிறார்கள். ஆகவே தான் முன்பு அவர்கள் ஒரு பெரிய லட்சியத்தை எடுத்துச் சொன்னார்கள். எல்லா காரியங்களிலும் எதிர்க்கட்சிகளை கலந்து கொண்டுதான் ஒரு முடிவுக்கு வருகிறேன். அதே முறையில் வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்குக்கூட எதிர்க்கட்சிகளைக் கலந்து கொண்டு தயாரிக்கலாம் என்று எண்ணியிருக்கிறேன் என்று சொன்னார்கள். இவ்வளவு ஜனநாயகத்தை சொல்லக் கூடிய அமைச்சர் அவர்கள் கருத்துக்களை சொல்லும்போது தனி மனிதராகிவிடுகிறார். இது எந்த அளவுக்கு ஜனநாயகத்திற்குப் பொருந்தும் என்பதை அமைச்சர் அவர்கள் தனது ஓய்வு நேரத்தில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெறும் தத்துவ விளக்கத்திற்கு மட்டும் ஜனநாயகத்தை பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. ஆகவே எதிர்கட்சிக்காரர்கள் சொல்லுகின்ற கருத்துக்களை ஆளும் கட்சிக்காரர்கள் கவனிக்காமல் விட்டுவிடு கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது எதிர்க்கட்சிக்காரர்கள் இங்கு கருத்துக்களைச் சொல்லுகின்ற ஆர்வம் குன்றிவிடுகிறது என்பது மட்டுமல்ல; இந்தச் சபையில் எண்ணிக்கை பலத்தோடு வந்தால் அல்லது இந்த ஆளும் கட்சி ஒன்றுமே செய்யாது என்கின்ற திடமான முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. அந்த நிலையில்தான் மக்களிடத்தில் இந்த குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி, அதில் மும்மரமாக ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தமும் வந்து சேருகிறது. ஆகவே உண்மையிலேயே ஜனநாயகத்தை செம்மைப்படுத்தவேண்டும் என்ற

எண்ணத்தில் கொஞ்சமாவது அக்கறை இருக்குமானால் எதிர்க்கட்சி தரப்பில் சொல்லுகின்ற நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். நியாயமான கோரிக்கை என்று சொல்லும் போது சர்க்கார் பாஷையில் நியாயம் எது என்பதை மட்டும் எடுத்துக் கொள்ளக் கூடாது. எந்த கோரிக்கையைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லையோ அதை நியாயமற்றவை என்று சொல்லி விடுவதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். ஆகவே எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்களில் வாதத்திறமை குறைவாக இருந்தாலும்கூட நன்மை கிடைக்கும் என்று தெரிந்தால் அவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்போது கொண்டு வரப்பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கையின்மீது சொல்லப்படும் கருத்துக்களைக் கேட்டு உடனடியாக அதைத் திருத்திவிடப் போவதில்லை. எந்தெந்த கோரிக்கைகளை யார் யார் கொண்டு வரவேண்டும் என்பதையும் முன்பாகவே குறிப்பிட்டு விட்டார்கள். உங்களுடைய எண்ணிக்கை பலத்திற்குத் தக்கபடி யார் யார் ஒப்புதல் அளிக்கவேண்டும் என்பதை முன்பே எண்ணிக்கை பலத்தால் முடிவு செய்து வைத்திருக்கிறீர்கள். ஆகவே இப்போது நாங்கள் சொல்லுகின்ற கருத்துக்களால் இதை நீங்கள் திருத்திவிடப் போவதில்லை. ஆனால் கழிந்த வருடத்தில் நிதிநிலை அறிக்கைமீது சொல்லப்பட்ட கருத்துக்கள் எந்த அளவு ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன, எந்த அளவு அது கவனிக்கப் படவில்லை என்பதை இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது விளங்குகின்றது. நாங்கள் ஒரு பிரச்சினையைச் சொல்லுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். குழாய்க் கிணறுகள் அதிகமாக வெட்டப்பட வேண்டும். சப் ஸாயில் வாட்டர் எடுத்து வியசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டும், செங்கல்பட்டு, வட ஆற்காடு மாவட்டத்திற்கு பயன்படக்கூடிய முறையில் பாலாற்றில் தண்ணீர் கொண்டுவரவேண்டும் என்று பல கருத்துக்களை இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறோம். இப்படி சொல்லப்பட்ட எந்த விஷயத்தையாவது ஒரு வருஷமாக ஆலோசித்துப் பார்த்து இந்த நிதிநிலை அறிக்கையில் கோடிட்டு காட்டி இதைச் செய்திருக்கிறோம் என்று சொல்லிருக் கிறார்களா, எப்படிக் கோடிட்டு காட்ட முடியும் என்று கேட்க முடியாது. ஏனென்றால் மந்திரி அபிவிருத்திக்காகப் பணம் ஒதுக்கியதைத் தெரிவிக்கின்ற நேரத்தில் என்னைக் கொஞ்சம் கவனமாகவே பார்த்து இதற்காக 5 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இது எங்களுக்கு ஆறுதல் அளிக்கும் என்ற முறையிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சி தரப்பில் சொல்லப்படுகின்ற கருத்துக்களில் இவைகள்

எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று கோடிட்டு காட்டக்கூடிய அளவில் தெரிவித்திருந்தால், அதைப் பார்த்து எதிர்க்கட்சியிலுள்ளவர்களுக்குச் சற்று உற்சாகம் ஏற்படுவது மட்டுமல்ல, மேலும் சிலவற்றைச் சொல்லுவதற்கு வழி ஏற்படும். இந்த ஆண்டு எடுத்துச்சொல்லுகின்ற கருத்துக்கள் மிகவும் நியாயமானவையாக இருந்தாலும்கூட அதை ஏற்கனவே திட்டப்பட்ட இந்த நிதி நிலை அறிக்கையில் மாற்றி அமைக்கப் போவதில்லை என்பது உறுதியாக தெரிவித்தாலும் எதிர்காலத்திற்காக இது பயன்படும் என்ற அளவில் சிலபல கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எங்கள் கட்சி சார்பில் பல நண்பர்கள், என்னென்ன கருத்துக் களைத் தெரிவிக்க வேண்டுமோ அவற்றை எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். அவைகளில் ஒரு விஷயத்தில், என்னுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. ப. உ. சண்முகம் எடுத்துச் சொன்னதை நான் ஒரு வகையில் வன்மையாகக் கண்டிக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் நம்முடைய அமைச்சர்கள், அவர்கள் சுற்றுப்பிரயாணம் செல்லும் நேரத்தில் கட்சி வேலை செய்கிறார், அது மட்டுமல்ல, பணமும் திரட்டுகிறார் கட்சிக்காக என்று சொன்னதாகக் கேள்விப்பட்டேன். அவ்விதம் கூறினது மிகவும் கண்டிக்கத்தக்கதுதான். ஏனென்றால், அவர்கள் சொன்னதற்கு காரணம் இருக்கிறது என்று எண்ணுகிறேன். இரண்டு பேரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

அமைச்சர் சுற்றுப்பயணம் செய்கின்ற வேளையில் கட்சி வேலை செய்கிறார் என்பது மட்டுமல்ல, பணமும் திரட்டுகிறார் என்று சொன்னதைக்கூட நான் குற்றச்சாட்டு என்று கருதவில்லை. நம்முடைய மாணிக்கவேலர் அவர்கள் காங்கிரஸ் கட்சிக்காகப் பிரச்சாரமும் செய்கிறார் என்ற விஷயத்தைத் தெரிவித்து விட்டார் என்றே கருதுகிறேன். மாணிக்கவேலர் அவர்கள் காங்கிரஸ் கட்சிப் பிரச்சாரமாக மக்களிடத்தில் எதைப்போய் சொல்லப்போகிறார், காங்கிரஸ் சரித்திரத்தைப்பற்றிப் பேசப்போகிறார்களா? தண்டி யாத்திரையைப் பற்றிப் பேசப்போகிறார்களா அல்லது அலிப்பூர் சிறையில் ஆறாண்டு காலம் இருந்ததைப்பற்றிப் பேசப்போகிறார்களா? காந்தியார் உப்பு சத்தியாகிரகம் நடத்திய போது தென்னாற்காடு மாவட்டத்தில்தான் தலைமை தாங்கி நடத்தியதைப்பற்றிப் பேசப்போகிறார்களா? எதைப்பற்றிப் பேசப்போகிறார்கள்? இருக்கிற அமைச்சர்களிலே

வலுவிழந்து இருக்கக்கூடிய அவர்கள் கட்சிப் பிரச்சாரம் செய்தார் என்று குறிப்பிடுவது, அதை எதிர்க்கட்சியிலுள்ள ஒருவர் சொல்லுவது அமைச்சர் அவர்களுக்கு வேண்டுமென்றால் பொதுத் தேர்தலுக்கு ஒரு சீட்டு வாங்கிக் கொடுக்க உதவுமோ என்ற அளவில்தான் அதை நான் கண்டிக்கிறேன். ஆகவே திரு. சண்முகம் அவர்கள் என்ன காரணத்திற்காக இவ்விதம் சொன்னார்களோ தெரியவில்லை... *(கனம் ஸ்ரீ சி. சுப்பிரமணியம்: ஜில்லா நட்பாக இருக்கலாம்.)* அதை அமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொள்ளுகிற முறையில் நான் சுற்றுப்பிரயாணம் செய்தேன். ஆசுபத்திரியைப் பார்வையிட்டேன், பின்னால் பல இடங்களைப்போய் பார்வையிட்டேன். பின்னால் சாப்பிட்டேன் பின்னால் ஓய்வு எடுத்துக்கொள்ளுகிற நேரத்தில் போய் கட்சிப் பிரசாரம் செய்தேன், நிதி திரட்டினேன் என்பதை ஏற்றுக்கொண்டார்கள். அதிலும் முக்கியமாக 'சாப்பிட்டேன்' என்பதை இந்த மன்றத்திலேயே தெளிவாகச் சொன்னார்கள். திரு. சண்முகம் ஏதோ அந்த வேலையை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து செய்துக்கொண்டு இருக்கிறார்கள் என்ற அளவில் சொன்னார்கள் என்று நான் எண்ணவில்லை. அமைச்சர் மாணிக்கவேலர் அவர்கள் எந்த அளவுக்குக் கட்சியைக் காப்பாற்றுவார் என்பதை நான் முன்பே அறிந்திருக்கிறேன். முன்னால் என்னுடைய கட்சியை ஆதரிப்பேன் என்று என்னிடமே கையொப்பமிட்டுத் தந்துவிட்டுப் பின்னால் எப்படி நடந்து கொண்டார் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். எப்படி அவர் தந்த வாக்குறுதியின்படி எங்கள் கட்சியைக் காப்பாற்றுவார்களோ அந்த முறையில்தான் காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்றினார்கள் என்பதை காங்கிரஸ் உறுப்பினர் களுக்குத்தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவ்விதம் செய்ததையும் இங்கு அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் திரு சண்முகம் அவர்கள் எப்படி சொன்னார்கள் என்று தெரியவில்லை. நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி ஜில்லா பற்றுதலோ அல்லது வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கின்ற பல சிறப்புகளில் இதுவும் ஒன்றுதானா - ஒருவருக்கொருவர் கைபிடித்து கொள்கிறார்கள் - என்று எண்ணவேண்டியிருக்கிறது. உண்மையில் அமைச்சர்கள் கட்சிப் பிரச்சாரத்தை அமைச்சர்களாக இருக்கின்ற நேரத்தில் மேற்கொள்ளலாமா என்ற தத்துவத்தை அவர் நன்றாக சிந்தித்துப் பார்க்கவேண்டும், ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று அமைச்சர்களை கேட்டுக்கொள்கிறேன். கட்சிப் பிரசாரத்தை அமைச்சர்கள் செய்கின்ற நேரத்தில், பணம் திரட்டுவது என்றால், அது

முறையாகுமா என்று கேட்கின்ற நேரத்தில் அதிகாரிகளுக்கு இருக்கின்ற செல்வாக்கு அமைச்சர்களுக்கு இருக்கின்ற செல்வாக்கை விட உயர்ந்ததா என்று கேட்பது எந்த ஜனநாயக வாதம் என்று தெரியவில்லை. ஜனநாயக அடிப்படையை ஆராய்ந்து பார்த்தால் அதிகாரிகளுக்கு இருக்கின்ற செல்வாக்கைவிடவும் அமைச்சர்களுக்கு இருக்கின்ற செல்வாக்கை விடவும் மக்களுடைய செல்வாக்கு மிகவும் உயர்ந்தது என்பதை அமைச்சர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று எண்ணுகிறேன். அமைச்சர் அவர்கள் ஏதோ பணம் திரட்டுவதற்கு அதிகாரிகள் எங்களுக்குத் தேவையில்லை என்று எடுத்துக்கூறினால் அமைச்சர்களாக இருக்கின்ற நேரத்தில் பணம் திரட்டுவது என்ற முறை.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : நான் அன்று குறிப்பிட்டது, இது மாதிரி அதிகாரிகளை உபயோகித்து பணம் திரட்டினார்கள் என்று சொல்வது பொருத்தமாக இருக்கின்றதா என்பதைப் பார்க்கவேண்டும். ஆகவே அதிகாரிகளை உபயோகித்து பணம் திரட்டினார்கள் என்று சொல்லுவது தவறு, அது பொருத்தமாகவும் இல்லை என்பதை எடுத்துச் சொன்னேன். அமைச்சர் அவர்கள் பணம் திரட்டினார்களா இல்லையா என்பது வேறு விஷயம்.

திரு. கே. அன்பழகன் : அதை கனம் அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டார்கள்.

திரு. சி. என். அண்ணாதுரை : வசூல் செய்தது உண்மைதானா, அல்லது வசூல் செய்தது எவ்வளவு என்கின்ற பிரச்சினைக்கே நான் போகவிரும்பவில்லை. அமைச்சர் பொறுப்பில் இருக்கின்ற நேரத்தில் இம்மாதிரியான காரியங்களுக்கு ஈடுபடலாமா என்கின்ற பொது தத்துவத்தைத்தான் நான் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் ஜனநாயகத்தில் எவ்வளவு தூய்மை இருக்கிறது என்பது தெரியவரும். அமைச்சராய் இருக்கின்றவர்கள் கட்சி வேலை நடத்தலாம் என்பதில் யாருக்கும் இரண்டு விதமான அபிப்பிராயம் இருக்க முடியாது. அமைச்சர்கள் போடுகிற சுற்றுப்பயணத் திட்டங்களைப் பார்த்தாலும் சரி, சுற்றுப் பயண நேரத்தில் நடை பெறுகின்ற நிகழ்ச்சிகளில் யார்யார் அனுமதிக்கப் படுகின்றார்கள் என்பதைப் பார்த்தாலும் சரி, அமைச்சர்கள் ஈடுபடுகின்ற கூட்டங்களில் எவ்வளவு கட்சிப் பிரசாரம் செய்யப்படுகிறது என்பதைக் கணக் கெடுத்துப்பார்த்தால் அமைச்சர் பதவியைத் தவறாகப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை மக்கள் நன்றாகத் தெரிந்து

கொண்டிருக்கிறார்கள். தனிப்பட்ட கல்நாட்டுவிழா காலையில் இருக்கும், மாலையில் பொதுக்கூட்டம் இருக்கும். பொதுக்கூட்டத்தில் எதை வேண்டுமானாலும் சொல்லலாம், அதை யாரும் கேட்கமாட்டார்கள். ஆனால் கல்நாட்டுவிழா போன்ற விழா கூட்டங்களில் கட்சிப் பிரச்சாரம் செய்யப்படுவதை நாம் பார்க்கிறோம். நானும்அமைச்சர் கக்கன் அவர்களும் கலந்துகொண்ட கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் கூட்டத்தில் பொதுவானப் பிரச்சினையைப் பேசுமாறு கேட்டுக்கொண்டார்கள். இம்மாதிரி விழாக்களில் பிரிவினையைப் பற்றிப் பேசக்கூடாது என்று பலர் இங்கும்கூட தெரிவித்தார்கள். அன்று நடந்த கூட்டத்தில் எனக்குப்பின்னால் பேசிய அமைச்சர் கக்கன் அவர்கள், நான் பிரிவினையைப்பற்றி ஒன்றும் குறிப்பிடாமல் இருந்தும்கூட, இந்தியாவினுடைய ஒற்றுமைக்காகப் பாடுபடவேண்டும் என்று கடைசியில் தன்னுடைய கட்சிப் பிரச்சாரத்தைச் செய்து கொண்டுதான் வந்தார்கள். இதிலிருந்து கட்சிப் பிரச்சாரம் வெற்றி பெற்றுவிடும் என்று நான் சொல்லவில்லை. நான் பேசிய பிறகு கனம் கக்கன் அவர்கள் பேசிக்கொண்டு போனார்கள். கனம் கக்கன் பேசியதைக் கேட்டு மக்கள், அண்ணாதுரை பேசியிருந்தால் நாட்டின் பிரிவினைக்கு ஆயிரம் காரணம் காட்டி யிருப்பான் என்று சொன்னார்கள். ஒரு அமைச்சர் தன்னுடைய அலுவலை முடித்துவிட்டுக் கட்சிப்பிரசாரம் செய்வதில் ஆட்சேபம் ஏதும் இருக்க முடியாது. ஆனால் நமது அமைச்சர்களின் அலுவல்களும் கட்சிப் பிரசாரமும் ஒன்றாகச் சேர்ந்து விடுகிறது. அவர்கள் செய்யக்கூடிய அலுவலைப் பிரித்துப் பார்க்க இயலாத நிலை இருந்து வருகின்றது. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்லுவார்கள் 'Caeser's wife should be above suspicion - என்று. அந்த முறையில் அமைச்சராக இருக்கின்றவர்கள் தெள்ளத்தெளிவாகப் பிரித்துப் பார்க்கத்தக்க வகையில் தங்கள் நடவடிக்கைகளைத் தூய்மை உள்ளதாக ஆக்கிக்கொள்ள வேண்டுமே தவிர, மாசு மறு இருப்பதைச் சுட்டிக் காட்ட முடியாத அளவில் தடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறார்கள் - ஆக, இனியாகிலும் அந்த மாதிரி நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாமென்றும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எனது கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்திலே மற்றவர்கள் எங்களுக்கு மதிப்புத்தரத் தேவையில்லை, எங்கள் மதிப்பு இருக்கவே இருக்கிறது என்று சொன்னவுடனே, 'உங்கள் மதிப்புத்தான் சந்தி சிரிக்கிறதே' என்று நிதி அமைச்சர் அவர்கள் இங்கே பேசியதாக நான் அறிந்தேன். நம்முடைய நிதி அமைச்சர் இவ்வளவு தூரம் இறங்கி வந்து

பேசுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. ஏனென்றால் நான் துவக்கத்தில் சொல்லியதுபோல, மேல் நிலைக்கு வந்திருக்கிறார், இளம் வயதிலேயே. மேல் நிலைக்கு வந்திருப்பது மட்டுமல்ல, இன்னும் மேலான நிலைக்குச் செல்ல வேண்டியவர். அப்படி அவர் மேலான நிலைக்குச் செல்வதற்கு மிகத் தரம் குறைந்த மனோபாவத்தை அவர் விட்டுவிட வேண்டும். எதிர் வீட்டு ஜன்னலை எட்டிப் பார்ப்பது என்பது மிகவும் தரக்குறைவான காரியமாகும். அதிலும் இவர் வட நாட்டுக்குச் செல்வதாகச் சொல்லுகின்றார்கள். அங்கே பர்தா முறை இருக்கிறது. ஆகையால் அத்தகைய இந்த நடவடிக்கையை இந்த நாட்டோடு விட்டுவிடவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம்: எங்குச் சென்றாலும் நம் நாட்டுக்குத்தான் செல்கிறேன்). அவர்கள் அந்த நாட்டுக்குப் போகப் போகிறார்கள் என்று அட்வான்ஸாகவே சொல்லி விட்டார்கள். அந்த நாடும் நம் நாடுதான் என்று சொல்லுகிறார்கள். எப்படியிருந்தாலும் இந்த முறை அங்கு வேண்டாம் என்று சொல்லுகின்றேன். ஒரு கட்சிக்குள் ஏற்படக்கூடிய சிலபல காரியங்களை - வெளியிலே உள்ளவர்கள் சொன்னாலும் பரவாயில்லை - சந்தி சிரிக்கிறது என்று இந்த மன்றத்தில் பேசுவது எந்த ஜனநாயகத் தத்துவப்படி நியாயமானது என்று அமைச்சர் அவர்கள் கருதுகின்றார்கள்? அப்படிச் சொல்லவேண்டுமானால் ஒவ்வொரு கட்சியிலும் இருப்பதைப்பற்றி எடுத்துச் சொல்லுவது இயலாத காரியமா? - கூடாத காரியம் என்பதை ஒப்புக்கொள்கிறேன் - இயலாத காரியமா என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கட்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இன்றைய தினம் காலையில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் மறைந்த கோவிந்த வல்லப பந்த் அவர்களைப்பற்றி அனுதாபத் தீர்மானத்தின்மீது பேசும்போது, ஒவ்வொரு கட்சியிலும் பல முறைகளில் கருத்து வேறுபாடுகள் ஏற்படும், அந்த முறையில் கட்சியில் ஏற்படக்கூடிய கருத்து வேறுபாடுகளை அவர்கள்தான் தீர்த்து வைப்பார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட கருத்துக் குழப்பங்கள் ஒவ்வொரு கட்சியிலும் ஏற்படும். ஒரு கட்சியை நடத்திக்கொண்டு செல்லுகின்றவர்களுக்குத்தான் இந்தச் சங்கடங்கள் தெரியுமே தவிர கட்சியை வேடிக்கையாக எண்ணிக்கொண்டிருப் பவர்களுக்கா தெரியும்? நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஒரு கட்சியை நடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாதவர். இருக்கக்கூடிய கட்சிகளில் எந்தப் பக்கம் வலிவு அதிகமாக இருக்கிறது என்று கருதுகின்றாரோ அதில் சேர்ந்து வெளிச்சம் போடக்கூடியவர்கள்

அடுத்த மந்திரி யார்? - ராஜாஜியா? காமராஜா? - என்ற பிரச்சினை வந்த காலத்தில் வெளியிலே என்ன பேசப்பட்டது என்றால் ஆச்சாரியாரின் அத்தியந்த நண்பர் என்று கூறுகிறார்கள், ஆச்சாரியாரும் நான் சிஷ்யப் பிள்ளையை தயார் செய்திருக்கிறேன், கோவையிலிருந்து வந்திருக்கக்கூடிய இளைஞர் அவர், பிரசித்தி பெற்ற கிரிமினல் வக்கீல் என்று அவர் சொல்லிக் கொண்டு இருந்த காலத்தில் இந்திராணி போன்று காட்சியளித்துக் கொண்டு வந்த அவர் - இந்திராணி கதையை எல்லோரும் அறிந்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்திரன் மாறினாலும் இந்திராணி அதே இந்திராணிதான் என்று சொல்லுவார்கள். அந்த முறையில் - ஆச்சாரியார் போய் காமராஜர் வந்தவுடனே அவரது பக்கத்தில் பார்த்தால் நிதி அமைச்சர் உட்கார்ந்திருந்தார். இப்படிக் கட்சிப் பற்றுகூட இல்லாத நிதி அமைச்சரைப் பார்த்துச் சந்தி மட்டும் சிரிக்காது, வீட்டுக்கு வீடு சிரிக்கும், ஆளுக்கு ஆள் சிரிப்பார்கள். இதைப்பற்றியெல்லாம் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. இன்றையதினம், நிதி அமைச்சர் அவர்கள் சந்தி சிரிக்கிறது என்று சொன்னால் இப்படிப்பட்ட மனப் போக்கை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் - மற்றவர்கள் வேண்டுமானால் சொல்லட்டும். வேண்டாமென்று சொல்லவில்லை - அதுவும் சபையை அலங்காரப்படுத்துவதற்குத் தேவைப்படுவதாக இருக்கலாம் - எனது கண்ணோட்டத்தில் எப்படி இருக்க வேண்டுமென்று கருதுகின்றேனோ அந்த முறையில், அதுவும் ஒரு ஆண்டுக்கு முன்னால் எனக்கு ஒரு சிறு உரிமை கொடுத்ததால் அதாவது நான் எப்போதாவது தவறாக நடந்தால் அதை எடுத்துச் சொல்லி திருத்துவதற்கு உரிமை எல்லோருக்கும் உண்டு, அண்ணாதுரைக்கும் உண்டு என்று எனக்குத் தனியாகக் கொஞ்சம் உரிமை கொடுக்கப் பட்டுள்ளதால் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இந்தப் போக்கைக் கைவிட்டு விடவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு கட்சியிலுள்ளவர்கள் ஒருவருக்கொருவர் தெரிந்துகொண்டால்தான் பெரிய காரியங்கள் சாதிக்க முடியும். அப்படி எடுத்துச் சொல்லுவதில் கட்சிக்குள் ஏற்பட்ட சிறு குழப்பத்தை வைத்துக்கொண்டு சந்தி சிரிக்கிறது என்று பேசியிருக்கின்றார்கள். உண்மையில் சந்தி சிரித்ததா இல்லையா, என்ன நடந்தது என்று நிதி அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டால் என்னிடத்தில் இதைப்பற்றித் தனியாகப் பேசினால் நான் எடுத்துச் சொல்வேன். அவர்களுக்கு இருக்கும் ஆயிரத்தெட்டு வேலைகளில் இதைக் கேட்டுக் கொள்ள காலம்

இருக்காது. கேட்டுக்கொள்வதற்குக்கூட நேரம் இல்லாத இந்தப் பிரச்சினையைப்பற்றி யாரோ சொன்னதைக் காதின் வழியாகக் கேட்டு வாயின் வழியாக விட்டுவிட்டிருக்கின்றார்கள். எதையும் காதின் வழியாகக் கேட்டு, கண் வழியாகப் பார்த்து வாய் வழியாக வெளியிடவேண்டும். ஆகவேதான் பெரியவர்கள் இந்த மூன்று புலன்களையும் சேர்த்துச் சொல்லியிருக்கின்றார்கள். காதின் வழியாக வாங்கி வாயின் வழியாக வருவது இருமலாக இருக்கலாம், தும்மலாக இருக்கலாம், ஏப்பமாக இருக்கலாம். ஆனால் எண்ணமாக இருக்காது. எதிர்க்கட்சியை ஏளனப்படுத்தத்தக்க போக்கை விட்டுவிட வேண்டுமென்று சொல்லிக்கொள்கின்றேன்.

நான் துவக்கத்தில் சொல்லியபடி இவர்கள் சாதித்து இருக்கின்ற காரியங்களை ஒப்பிட்டுப் பார்த்து மற்றவர்கள் அதிகம் சாதித்திருக் கிறார்களா என்று எடுத்துச் சொல்லுகின்ற விதத்தில் ஒரு ''ஆல்டர்னேடிவ் கவர்ன்மெண்ட்'' இல்லாத காரணத்தினால், சாதிக்கவேண்டியவை எவ்வளவு, அதில் எந்த அளவு சாதித்திருக்கிறோம், இன்றைக்கு நம்முடைய மக்களுக்குக் கொடுக்கத்தக்கது எவ்வளவு, மக்களுக்குக் கிடைத்தது எவ்வளவு என்று காட்டக்கூடிய முறையில் கொடுத்திருந்தால் சாதனைகள் எவ்வளவு என்று ஒப்பிட்டுப் பார்க்க முடியும். அதை விட்டு வெள்ளைக்காரன் காலத்தில், ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் நடந்தவைகளை விட அதிகமாகச் சாதித்திருக்கிறோம், ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் 12 பொலி காளைகளை வாங்கிக் கொடுத்தார்கள். நாங்கள் தாலுக்காவிற்கு 120 பொலி காளைகளை வாங்கிக் கொடுக்கிறோம் என்று தற்பெருமை அடித்துக் கொள்வதில் அர்த்தமில்லை. நாட்டுக்கு நம் ஆட்சியின் மூலமாக என்ன கிடைத்தது? என்ன முற்போக்குத் திட்டங்களினால் இந்த நாட்டு மக்களுக்கு வசதி ஏற்பட்டிருக்கிறது? வறுமையை ஓட்டி யிருக்கிறோமா? வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கியிருக்கிறோமா? பயங்கர விலைவாசி ஏற்றத்தைத் தடுத்து நிறுத்தியிருக்கிறோமா? அல்லது கட்டுப்படுத்தி யிருக்கிறோமா? எல்லா மக்களுக்கும் தொழில் வாய்ப்புத் தேடிக்கொடுத்திருக்கிறோமா? இயற்கை செல்வங்களை விஞ்ஞான முறையில் பயன்படுத்த செயல்முறைகளைக் கைக்கொண்டிருக் கிறோமா? வெளிநாட்டு ஏற்றுமதியைப் பெருக்கியிருக்கிறோமா? உழவர்கள் மனதில் சந்தோஷத்தை உண்டு பண்ணி யிருக்கிறோமா? தொழிலாளியின் துயரத்தைத் துடைத்திருக்கிறோமா? நடுத்தர வகுப்பினரின் நல்வாழ்வுக்கான காரியங்களைச் செய்திருக்கிறோமா?

இதைப் பற்றியெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இவைகளைப்பற்றி எண்ணிப் பார்த்து எந்த அளவு சாதித்திருக்கிறோம் என்ற கணக்கை எடுத்து அடக்க உணர்ச்சியோடு, இதைவிட சாதிக்கக் கூடியவர்கள் எதிர்காலத்தில், வரக்கூடும் என்ற ஒரு அரசியல் தெளிவோடு, எங்களால் இவ்வளவுதான் சாதிக்க முடிந்தது, இன்னும் எவ்வளவோ சாதிக்க விரும்பினோம், ஆனால் முடியவில்லை என்று அப்படிப்பட்ட ஜனநாயகப் பண்பு வளரவேண்டும் என்று இதனை இவ்வளவு வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றேன். அந்த இலக்கணப்படி பார்த்தால் இந்த அரசு சாதித்திருக்கும் காரியங்களில் பெருமைப் படுவதற்கு அதிகம் இல்லை என்ற ஒளிவு மறைவு இல்லாமல் எடுத்துச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் இந்த அரசு ஏற்பட்ட பிறகு தாம் ஒரு திட்டமிட்ட ஆட்சியை நடத்திக்கொண்டு வருகிறோம் - அதாவது "ப்ளான்ட் இக்கானமி" என்ற முறையில் திட்டமிட்ட பொருளாதாரத்தை வளரச் செய்கிற நடைமுறையில் நாம் இருந்துகொண்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட திட்டங்களில் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவுற்று, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அடி எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறோம். இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் செலவழிக்கப் பட்ட தொகை எவ்வளவு? நமக்குக் கிடைத்த ரிட்டர்ண், அதாவது பலன்கள் என்ன? செலவழிக்கப்பட்ட தொகை ஒரு சீராகச் செலவழிக்கப்பட்டதா? அல்லது இடத்திற்கு இடம் பேதம் இருக்கக் கூடிய முறையில் செலவழிக்கப்பட்டதா? செலவழித்த விதத்திலே சமுதாயத்திற்குப் பயன்படாமல் தாறுமாறாகச் செலவழிக்கப்பட்டது எவ்வளவு? செலவழிக்கும் நேரத்தில் எதிர்பார்த்த பலன் என்ன? இப்போது கிடைத்துள்ள பலன் என்ன? இவைகளைப்பற்றி நிபுணர்களே தங்கள் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். இவைகளிலெல்லாம் தெளிவு கிடைத்துவிட்டது போல, எல்லா திட்டங்களும் வெற்றி பெற்றுவிட்டது போல டார்ஜெட்டுகளை எடுத்துக்காட்டி இவ்வளவு சாதிக்க விரும்பினோம், அதைவிட அதிகம் சாதித்து விட்டோம் என்று எடுத்துக் காட்டுவதில் பயன் இல்லை. திட்டங்களை ஆராய்ந்து பார்த்து அத்தனை பேர்களும் சொல்லுகிறார்கள், திட்டங்கள் மூலமாக எதிர்பார்த்த பலன் இன்னமும் பெறவில்லை, மக்களின் வாழ்க்கைத் தரத்தை இன்னமும் உயர்த்த முடியவில்லை, தனி மனிதன் வருவாயை நம்மால் இன்னும் பெருக்க முடியவில்லை என்று. தேசீய வருமானத்தை ஓரளவு

பெருக்கியிருக்கிறோமே தவிர தனி மனிதன் வருமானத்தை - பர் காபிடா இன்கமை - பெருக்க முடியவில்லை என்று பெருளாதார நிபுணர்கள் புள்ளிவிவரக் கணக்கோடு எடுத்துக்காட்டுகிறார்கள். அரசியல் அனுபவம் படைத்தவர்கள் எங்கே சோரம் போய்விட்டது என்று தேடிக்கொண்டிருக்கிறார்கள். எண்ணிக்கை பலத்தை வைத்துக் கொண்டிருக்கக் கூடியவர்கள் இந்தத் திட்டங்களால் இவ்வளவு சாதித்திருக்கிறோம் என்று எடுத்துப் பேசுவதானால் அது உண்மைக்குப் புறம்பானது மட்டுமல்ல, மக்களைத் தவறான பாதையில் திருப்பிவிடுவதாக ஆகும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மக்களைத் தவறான பாதையில் எதிர்க்கட்சிகள் அழைத்துச் செல்வதாகச் சொல்லப்படுவதை நாம் பார்க்கின்றோம். இன்று நாட்டில் நிறைவேற்றப்படுகின்ற திட்டங்களைச் சற்று கூர்ந்து கவனிக்கும்படி நிதி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டங்களில், இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில், இந்த கடந்த 10 ஆண்டுகளிலே இந்தியத் துணைக் கண்டத்திலே எவ்வளவு பெரிய பெரிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வந்திருக்கின்றன என்பதைக் கணக்கெடுத்துப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்தால் பெரும் பாலான தொகைகள் கட்டடங்கள் கட்டுவதிலே செலவழித்திருப்பது தெரியும். அப்படிக் கணக்கெடுத்துப் பார்த்து, அந்தக் கட்டிடங்கள் எல்லாம் யாருக்குப் பலனளித்தது என்பதை அவர்கள் அறிந்துகொள்ளும் வகையிலே கணக்கெடுத்துப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கும்போது, இந்தத் திட்டங்களினாலே ஏழைமக்களுக்கு ஆர்வம் ஏற்படக்கூடிய விதத்திலே இந்த திட்டங்கள் அமைக்கப்படவில்லை. ஆகவே நீங்கள் எதிர்பார்த்த பலன் கிடைக்காத காரணத்தினால், இந்தத் திட்டங்கள் விஷயத்திலே மக்கள் ஆர்வம் காட்டவில்லை என்று நாங்கள் எடுத்துச் சொல்கிறோம். ஆனால் நீங்கள் தப்புப் பிரசாரம் செய்கிறீர்கள். அதனாலே மக்களுக்குத் திட்டத்தின் பேரில் அவநம்பிக்கை ஏற்படுகிறது என்று எங்கள் பேரிலே குற்றம் சாட்டப்படுகிறது. திட்டங்களைப் பொறுத்த வரையிலே அலுவலர்கள் செய்யக்கூடிய ஒரு பொழுது போக்குக் காரியம்தான் இது என்று கிராமத்திலுள்ள மக்கள் கருதுகிறார்கள். நம்முடைய நிதி மந்திரி அவர்கள் விறகுக் கடைக்கும், அரிசிக் கடைக்கும் போவதற்குப் பதிலாக, திட்டத்தின் பேரால் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் உள்ள ஒரு கிராமத்திற்குச் சென்று, அந்தக் கிராமத்திலே உள்ள ஒரு பெரியவரை அழைத்து, தான் மந்திரி என்பதை அவரிடத்திலே கூறாமல், அந்தக் கட்டித்தைச் சுட்டிக் காட்டி,

இது என்ன கட்டிடம் என்று கேட்கட்டும். அதற்கு அவர் இது சர்க்கார் கட்டிடம் என்று பதில் சொல்வதைக் கேட்கலாம். ஆனால் நீங்கள் தெளிவாக அந்தக் கட்டடத்தின் மீது சமுதாயக் கட்டடம் என்று எழுதியிருக்கிறீர்கள். எல்லா கம்யூனிடி மக்களுக்காகவும் என்று கட்டியிருக்கிறவர்கள் எல்லோருடைய உழைப்பும் அதிலே இருக்கிறது. ஆனால் கிராமத்திலுள்ள மக்கள் அதைப் பார்க்கின்றபோது, எப்படி சிகப்புக் கட்டடத்தைப் பார்த்தால், போலீஸ் ஸ்டேஷன் அல்லது கோர்ட் என்று சொல்கிறோமோ, அதைப்போல் கிராமத்திலுள்ள இந்தக் கட்டடங்களைப் பார்த்த வுடனேயே இதைச் சர்க்கார் கட்டடம் என்று சொல்கிறார்கள். இது இன்னும் சர்க்காருடைய வேலையாகக் கருதப்படுகிறதே தவிர, மக்களுடைய மனத்திலே ஆர்வத்தை இன்னும் ஏற்படுத்தவில்லை. அப்படி இந்தத்திட்டத்திலே மக்களுக்கு ஆர்வம் ஏற்பட வேண்டுமானால், இது மக்களுக்கு எப்படி நேரடியாகப் பலன் தருகிறது என்பதை நாம் விளக்கிக் காட்டினாலொழிய, எப்படி இதிலே மக்களுக்கு ஆர்வம் ஏற்பட முடியும்? கட்டிய கட்டடங்கள் இடிந்து விழுவதைப்பற்றி நான் ஏற்கனவே கனம் கக்கன் அவர்களிடத்திலே சொல்லியிருக்கின்றேன். அதற்கு அவர்கள் "அண்ணாதுரை அவர்கள் கண்களுக்கு இடிந்த கட்டடங்கள் தானா பட வேண்டும். வேறு நல்ல கட்டடங்கள் படவில்லையோ" என்று குறைபட்டுக் கொண்டார்கள். ஆனால் அதேசமயத்தில் இந்தக் கட்டடங்கள் இடிந்துவிழுவதற்கு என்ன காரணங்கள் என்பதை அறியும் வகையிலே தம்முடைய கோபதாபத்தைத் திருப்பி விட்டிருப்பாரேயானால் நன்றாய் இருந்திருக்கும். என்னுடைய பகுதியிலே கட்டப்பட்டுள்ள ஒரு கட்டடத்தை வந்து பாருங்கள் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். ஒன்றும் பயனில்லை. இப்போது கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மழைக் காலத்தில் நல்ல மழை பெய்து, வெய்யில் வந்தவுடன் பாளம் பாளமாக வெடித்து விடுகின்றன. அந்த வகையிலே எவ்வளவு பணம், எத்தனை கோடிக்கணக்கான ரூபாய் பாழாக்கப்பட்டு இருக்கிறது, விரயமாக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்ப்பார்களே யானால் எவ்வளவு பணத்தை ஏழை எளிய மக்கள் வாயைக் கட்டி, வயிரைக்கட்டி, பகல் சாப்பிட்டு ராத்திரி சாப்பிடாமல், மகன் சாப்பிட்டு. தாய் சாப்பிடாமல், கணவன் சாப்பிட்டு, மனைவி சாப்பிடாமல் அவர்கள் மிச்சப்படுத்திக் கொடுத்திருக்கும் பணத்தை வைத்துக்கொண்டு இவ்வளவு பணத்தை விரயமாக்கியிருக்கிறார்கள் என்பது தெரியும். இந்தப் பழி யார் தலையில்

விழும்? இதற்கு எத்தனை காலத்திற்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற பயங்கரமான உண்மைகள் உங்கள் நெஞ்சிலே இருக்குமானால், கட்டப்பட்டுள்ள கட்டடங்களின் கணக்கைச் சொல்வதிலே ஏன் தயக்கம்?அப்படிச் சொல்லப்பட்டுள்ள காரியங்கள் எல்லாம் நடந்திருக்கிறதா என்று பார்த்தாலும் அதுவும் நடக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதன் முடிவில் விவசாயத்தினுடைய விளைவை 12 லட்சம் டன்னாக நாங்கள் உயர்த்த இருக்கிறோம் என்று சொன்னார்கள். இதைச் சொல்லி விட்டு 'இரண்டு வருஷத்திற்கு முன்னாலே கவர்னர் உரையிலே, 12 லட்சம் டன் என்று சொன்னோம், ஏற்கனவே 9 லட்சம் டன்னிற்கு வந்துவிட்டோம், இன்னும் 3 லட்சம் டன்னைத் திட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்துகொள்வோம் என்று இந்த மன்றத்திலே படித்துக் காட்டப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால், ''12 லட்சம் டன் என்று நாங்கள் ஒரு டார்ஜட்டை எல்லையாக வைத்திருந்தோம். ஆனால் பல்வேறு சங்கடங்களின் காரணமாக 7 அல்லது 8 லட்சம் டன்னுக்குத்தான் இப்போது போக முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்'' என்று கூறியிருக்கிறார்கள். சர்க்காரே 7-லிருந்து 8 லட்சம் டன்தான் என்று சொன்னால், அது நிச்சயமாக 8 லட்சம் அல்ல, 7 லட்சம் டன்தான் என்று சொல்லலாம். 7 லட்சத்திலிருந்து இறங்காமல் இருந்தால் அதுவே விசேஷம். ஆகவே 12 லட்சம் என்று சொல்லிவிட்டு, இப்போது 7 லட்சம் டன்தான் என்று சொன்னால் போட்ட கணக்கிலே 40 பங்கு அளவு தவறியிருக்கிறோம் என்று ஏற்படுகிறது. மிகத் திறமைசாலிகள் ஆயிற்றே? ஏன் தவறுகிறார்கள்? மிக நல்ல நிர்வாகம் செய்பவர்கள் ஆயிற்றே? ஏன் இந்தத் தவறு ஏற்பட்டது? மிக நல்ல கணக்குப்பிள்ளைகள் ஆயிற்றே? ஏன் கணக்குப் போடுவதிலே குந்தகம் ஏற்பட்டது என்று சொன்னால், எதிர்க்கட்சியினரின் வேலையே இதுதான் என்று சொல்வதில் பிரயோசனம் இல்லை. கணக்கைச் சரியாகக் காட்டிவிட்டால், எதிர்க்கட்சியினரின் வாய் தானாகவே அடங்கிவிடும். அதை விட்டுவிட்டுத் தலையை எண்ணிக் கொள்ளுங்கள் என்று சொல்வதிலே அர்த்தமில்லை. எதிர்ப் பக்கத்திலே 15 தலைகள்தான், இந்தப் பக்கத்திலே 150 தலைகள் இருக்கின்றன எண்ணிக் கொள்ளுங்கள் என்றால் பயனில்லை. ஹிட்லர்கூட, இந்தக் கணக்கைத்தான் சொன்னான். எல்லோரும் என்

பக்கம், தலையை எண்ணிக் கொள்ளுங்கள் என்று சொல்லும்போது, யாராவது எழுந்திருந்து தலையை நீட்டினால் தலை சீவப்பட்டுவிடும். ஆகவே அப்படிப்பட்ட தலைக் கணக்கை காண்பிக்க வேண்டாம்.

எந்த வகையிலும் இந்த உணவு உற்பத்தி விஷயத்திலே இந்தக் குந்தகம் ஏற்பட்டதற்கு நீங்கள் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறீர்கள். போதுமான உரம் கிடைக்காததால், இத்தகைய தட்டுப்பாடு ஏற்பட்டது என்று காரணம் காட்டப்பட்டிருக்கிறது. இரண்டு வருஷத்திற்கு முன்னால் இந்த மன்றத்தில் நாங்கள் இரண்டு லட்சம் டன் உரம் கிடைக்கும்படிச் செய்யப் போகின்றோம் என்ற உறுதி அளித்துவிட்டு அதற்குப் பிறகு இப்போது 13 லட்சம்தான் கிடைத்தது என்ற கூறுவதானது வேடிக்கையாக இருக்கிறது. அனுமார் இலங்கைக்குச் சீதையைக் காண்பதற்காகப் போய் சீதையைக் காட்டுவதற்கு முன்னால், 'கண்டேன் சீதையை' என்று சொன்னார். ஆனால் இவர்களோ இலங்கைக்கும் போகிறார்கள். ஆனால் சீதையையும் பார்க்கவில்லை, திரும்பியும் வரவில்லை. இராமன் அனுமான் வருகைக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறான். ஆனால் அனுமாரோ, எங்கோ ஒரு மரத்தின் கிளைமேல் ஏறிக்கொண்டு, முந்திரிப் பழத்தைத் தின்று கொண்டு, அதன் கொட்டைகளைக் கீழே வீசி எறிவதுபோல், இவர்கள் எதிர்க் கட்சியினரைப் பார்த்து, நீங்கள் இதற்கு வழிச் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்காகவா இவ்வளவு பெரிய இடத்திற்கு வரவேண்டும்? இதற்காகவா மக்கள் இந்த அளவுக்கு உங்களுக்கு ஆதரவு காட்டினார்கள். ஆகவே நீங்கள் அவர்களுக்கு அவசியம் நல்ல விளக்கங்கள் கொடுக்க வேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். விலைவாசியை எங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை என்று எடுத்துச் சொல்லக்கூடியதிலே வெட்கம் இருக்க வேண்டாமா இந்த அரசுக்கு. எதிர்த் தரப்பிலுள்ள எங்களைப் பார்த்து, நீங்கள் இதற்கு வழி சொல்லுங்கள் என்று கேட்டால், நாங்கள் உங்களுக்குத் தெரிந்த கணக்குகளை யெல்லாம், விஷயங்களை யெல்லாம் எங்களுக்குச் சொல்லுங்கள் என்று சுலபமாகச் சொல்லிவிட முடியும். எங்களைப் பார்த்து வழி சொல்லுங்கள் என்பது உண்மை யிலேயே ஜனநாயகத்திலே வேடிக்கையாகத்தான் இருக்கிறது. நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்வதற்கு என்று முத்திரை பொறித்துக்

கொண்டு வந்திருக்கிறீர்கள். உங்களை அதற்காக மக்கள் சும்மாகூட அமர்த்தவில்லை. பணம் கொடுத்து அமர்த்தி இருக்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்படும் தொகை உங்கள் தகுதிக்குக் குறைவாக இருக்கலாம். அதிகம் கொடுக்கிறர்கள் என்று நான் சொல்லவில்லை. அதிலே நீங்கள் தியாகம்கூட செய்யக்கூடும். அதற்கு நான் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் உங்களுக்கு எஜமானர்கள் பொதுமக்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. எஜமானர்களாகிய பொதுமக்கள் உங்களைக் கணக்குக் கேட்கிறார்கள். அதன்படி நீங்கள் கணக்குக் கொடுப்பதிலே தயக்கம் காட்டுவது ஏன்? விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதில் இதுவரையில் நீங்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டால், நீங்கள் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள். இந்த மன்றத்திலே எந்த தரப்பினராக இருந்தாலும், இதையேதான் எடுத்துக்கூறி வந்திருப்பதைப் பார்க்கலாம். காங்கிரஸ்காரர்களும் கம்யூனிஸ்டுகளும், வேறு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களும் விலைவாசியைக் கட்டுப் படுத்தவேண்டும் என்பதையே திருப்பித் திருப்பி எடுத்துக்கூறி வந்தார்கள். அமைச்சர்கள்கூட, யாரோ விலையை ஏற்றி விட்டதைப் போலவும், நாங்கள் சொல்லி விலையை இறக்காதது போலவும் சொன்னார்கள். விலைவாசிகள் கட்டுப்படுத்தப்பட்டால்தான் ஏழைகள் பிரச்சினை தீரும் என்பதை எங்கோ வெளிநாட்டிலிருந்து உபதேசம் செய்வதைப்போல் பண்ணுகிறார்களே தவிர, விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு யாருடையது என்பதை அவர்கள் உணரவில்லை. விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்காக அசோக் மேத்தா கமிட்டி கொடுத்த சில யோசனைகளை எந்த அளவில் இதுவரை நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமானால், ஸ்டேட் டிரேடிங் மிக அவசியம் என்பதை உணவு அமைச்சர் கனம் பக்தவத்சலம் அவர்கள் இந்த மன்றத்திலே மிக அழுத்தமாகச் சென்னார்கள். இந்த ராஜ்யத்தின் கருத்தும் இதுதான். அண்டை ராஜ்யமாகிய கேரளத்தின் முதல் மந்திரி அவர்களைச் சந்தித்துப் பேசியபோது, இதுதான் நல்ல திட்டம் என்று அவர்கள் சொன்னதாகவும் கூறினார்கள். இதை நாங்கள் எல்லாம் மேலே அனுப்பியிருக்கிறோம், அது ஒப்புக்கொள்ளப்பட்டு விடும், அதன்படி ஸ்டேட் டிரேடிங் வந்தால் ஒரு நிரந்தரமான பரிகாரம் கிடைக்குமென்று உள்துறை அமைச்சரும், உணவு அமைச்சருமான கனம் பக்தவத்சலம் அவர்கள் சொன்னர்கள். என்ன ஆயிற்று?

அதேபோல் நிலத்திற்கு உச்ச வரம்பு என்று சொன்னார்கள். என்ன நடந்தது அதற்கு? அதற்காக ஒரு குழு அமைத்தார்கள். அந்தக் குழு ஊர் ஊராகச் சுற்றிப் பல விஷயங்களை இன்னும் ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. ஆனால் அதைப்பற்றி ஒரு வரி கூட நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. நம்முடைய ஆயுட்காலத்திற்குள்ளே இந்த மசோதா நிறைவேற்றப்படும் என்று குறிப்பிட்டிருப்பார்கள் என்று துருவித்துருவி பார்த்தேன். ஒன்றுமில்லை. ஆகவே நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பாதியில் நிற்கிறது. நீங்கள் எடுத்துக் கொள்ளாத முயற்சிகளைப்பற்றி நாங்கள் எத்தனை எடுத்துச் சொன்னாலும், எதிர்க்கட்சிக்காரர்கள் தானே எடுத்துக் கூறுகிறார்கள், அவைகளைக் கவனிக்கிறோம் என்று கூறிச் சும்மா இருக்கிறார்கள். நான் மீண்டும் விலைவாசி விஷயத்திற்கு வருகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் கடைக்குப் போய் விலையைத் தெரிந்து கொண்டதாக நேற்றையதினம் சொன்னார்கள். அவரே கடைக்குப் போய் தெரிந்துகொள்ளுவது என்றால், அவர் இந்த விஷயத்தில் அக்கறை காட்டுகிறார் என்பது மட்டுமல்ல. எங்கள் விஷயத்திலே எவ்வளவு அவநம்பிக்கை வைத்திருக்கிறார் என்பதையும் காட்டுகிறது. நான் இடித்து இடித்துச் சொல்லுகிறேன் விலைவாசி ஏறியிருக்கிறது என்று. என்னுடைய வார்த்தைகளில் இருக்கிற அவநம்பிக்கை காரணமாக கடைக்கு அவரே நேரில் போய் தெரிந்துகொண்டு பத்திரிகை நிருபர்களைக் கூப்பிட்டுச் சொல்லு கிறார்கள். ''சேதி தெரியுமா, விலைவாசி ஏறி விட்டது, எழுதிக் கொள்ளுங்கள்'' என்று. கடைக்காரர் அமைச்சர் என்ற காரணத்தினால் ஒருக்கால் விலையைக் குறைத்துச் சொல்லக் கூடும். ஆனால் நாங்கள் அப்படி அல்ல. நம்முடைய அமைச்சர் என்ற உரிமையோடு, உண்மையைத் தெளிவாகச் சொல்லுகிறோம். இந்த மன்றத்தில் நான்கு ஆண்டுகளாகச் சொல்லுகிறோம், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை கேட்டுக்கொண்டிருக்கிறோம். நடவடிக்கை எடுக்கிற அதிகாரம் முழுவதும் உங்கள் கரத்தில் இருக்கிறதா? அதைத் தெளிவாக நாட்டு மக்களுக்குச் சொல்லிவிடுங்கள். திருப்பித் திருப்பி எங்களைக் கேட்காதீர்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்த எங்களால் முடியாது. அது மத்திய அரசாங்கத்தினால்தான் முடியும் என்று தெளிவாகச் சொல்லி விடுங்கள். நாங்கள் திருப்பித் திருப்பி உங்களைக் கேட்கும்பொழுது இந்த அதிகாரத்தை மத்திய சர்க்காருக்குக் கொடுத்துவிட்டு நீங்கள் என்ன அரசு நடத்துகிறீர்கள் என்ற வகையிலே கேட்க முடியும். மக்கள்

நம்பும்படியாக விலைவாசியைக் கட்டுப்படுத்துகிறோம் என்று வாக்குறுதி அளிக்கிறீர்கள். வெளியிலே கொடுத்த எந்த வாக்குறுதியும் இந்த மன்றத்திலே நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த மன்றத்திலே, இதற்கு முந்திய சட்டமன்றத்தில் சுயமரியாதை திருமணத்தைப்பற்றி தனி உறுப்பினர் ஒருவர் - கனம் ரங்கசுவாமி ரெட்டியார் என்று கருதுகிறேன் - ஒரு மசோதா கொண்டுவந்தபொழுது அந்த மசோதாவை அவர் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று நமது நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன நேரத்தில், நடைபெற்ற சுயமரியாதை திருமணங்களைச் செல்லுபடியாகச் செய்வதற்கு ஏற்ற ஒரு சட்டத்தை சர்க்காரே கொண்டு வர இருக்கிறது. ஆகையால் அவர் கொண்டு வந்த மசோதாவை திருப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார். எங்கள் கழகத்தைச் சேர்ந்தவர் சுயமரியாதை திருமணங்கள் சம்பந்தமாக மசோதா கொண்டுவந்தபொழுது, அதை நமது நிதி அமைச்சர் அவர்கள் தோற்கடித்தார்கள். இந்த மன்றத்திலே நடைபெற்ற சீர்திருத்த திருமணங்களை செல்லுபடியாக்கத்தக்க சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று உறுதி அளித்தார்கள். நம்முடைய வார்த்தைக்கு நாமாவது மதிப்பு அளிக்கவேண்டுமே, நாம் இந்த மன்றத்தில் சொன்ன வார்த்தைகளை நாம் காப்பாற்றவேண்டும் என்ற பொறுப்பு உணர்ச்சியுடன் இந்த மசோதாவை ஏற்றுக் கொண்டாரா என்றால், அதையும் தள்ளிவிட்டார்கள். அதேபோல விலைவாசிகளை கட்டுப்படுத்துகிறோம், ஸ்டேட் டிரேடிங் கொண்டு வருகிறோம் என்று வாக்குறுதி அளிக்கின்ற தன்மையிலே பேசினார்கள். அந்த வாக்குறுதியையும் விட்டுவிட்டார்கள். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவதுபற்றி எல்லோரும் கூடிகூடிப் பேசினோம். அது இப்பொழுது கிணற்றிலே கல் போட்டாற்போல் இருக்கிறது. எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டீர்களா? விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. அது இறங்காத வரையில் எந்தத் திட்டங்களை எடுத்துக் கொண்டாலும், என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டாலும் அது நல்ல பலனைத்தராது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் இன்னொன்று கூற விரும்புகிறேன். விவசாயம் ஓரளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. புள்ளிவிவரங்கள் மட்டுமல்ல, கண்படைத்த யாருக்கும் அது தெரியும். நேற்றுவரை காடுகரம்பாக இருந்த நிலங்கள் இன்று கழனியாக

இருக்கிறது. முன்பு ஒரு போக சாகுபடி செய்த நிலங்களில் இன்று இருபோக சாகுபடி செய்யப்படுகிறது. நேற்று வரப்பு இல்லாத புறம்போக்கு நிலங்களாக இருந்த நிலங்கள் வரப்பு போடப்பட்டு இன்று வயல் வெளியாகக் காணப்படுகிறது. கண்படைத்த யாரும் இதை இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் பெருகியிருக்கிற விவசாயத்தினுடைய பலன் யாருக்குப் போய் சேர்ந்திருக்கிறது? உழவர்களுக்குப் போய் சேர்ந்திருக்கிறதா? நடுவிலே உள்ள தரகர்களுக்குப் போய் சேர்ந்திருக்கிறதா? வியாபாரிகளுக்குப் போய் சேர்ந்திருக்கிறதா? அல்லது நேராகக் கால்வாய் வெட்டினால் போல் சர்க்கார் கஜானாவுக்குப் போய் சேர்ந்திருக்கிறதா? அந்தப் புள்ளிவிவரத்தைக் கணக்கு எடுத்து அருள் கூர்ந்து ஆராய்ந்து துரைத்தனத்தார் பார்த்திருக்க வேண்டும். 'இதற்கெல்லாம் கணக்கு இருக்கிறது. நீலநிறப் புத்தகத்தில் 6-வது பக்கம், 17-வது வரி, என்று கணக்கைக் காட்டாதீர்கள். இந்தக் கணக்கு ஒவ்வொன்றும் குறை உடையது என்று கணக்குத்துறை இலாகாவே ஏற்றுக்கொள்ளுகிறது. உண்மையிலேயே நாட்டு மக்கள் இன்றையதினம் அடைந்திருக்கிற அவல நிலைமையைக் கணக்கெடுத்து, இந்தப் பலன் அங்கே போய் இருக்கிறதா என்று பார்த்துத் தெரிந்துக் கொள்ளவேண்டும். நான் அறிந்தவரையில் அந்தப் புத்தகத்தில்கூட - நம்முடைய நிதி அமைச்சர் 2,3 நாட்களுக்கு முன்பு என்னிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்து, ஓய்வு இருந்தால் படித்துப் பாருங்கள் என்று சொன்னார் - ஆகையால் சொல்லுகிறேன். அதிலே சொல்லியிருக்கிறது, கிடைத்த விவசாய வருமானத்தின் பலனில் 30 பங்கு மேல் மட்டத்தில் உள்ள மிராசுதார்களிடம் போய் இருக்கிறது. மற்ற அனைத்தும் ஜனங்களிடையே பரவியிருக்கிறது. ஆகையினால் தகுந்த பலன் கிடைக்கவில்லை, என்பதை அவர்கள் எனக்கு அளித்த புத்தகத்தில் ரொம்ப அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"This significant increase in the per capita income has taken place only in a few States. If as much as 30 per cent of the increase in the total income during this period has accrued to the higher income group. Is it surprising that the bulk of the population of this country should feel that they have not benefited in any obvious way from the development of the last decade?"

ஏற்பட்ட முன்னேற்றத்தில் இந்த அளவு முன்னேற்றம்தான் மக்களுக்கு கிடைத்திருக்கிறது என்று மக்களது மனதிலே சலிப்பு

உணர்ச்சி இருந்தால், அது ஆச்சரியமா என்று அந்தப் புத்தகத்திலேயே கேட்கப்பட்டிருக்கிறது. அதிலேயே அதற்குப் பதில் இருக்கிறது என்று சொல்லலாம். அதைக்கூட நிதி அமைச்சர் வேண்டுமானால் உபயோகப்படுத்தலாம். எனக்கு உபயோகப்படவேண்டிய அளவிற்கு உபயோகப்படுத்தப்பட்டு விட்டது. (குறுக்கீடு) நம்முடைய அமைச்சர்அவர்கள் அவருக்கு வேறு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அவரிடம் இந்த நான்கு வருடங்களில் பெற்றது ஒன்றுமில்லை. எனக்கு இதையாவது கொடுத்திருக்கிறார் என்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். விவசாயத்திலே கிடைக்கக்கூடிய வருவாயில் போதிய வருவாய் ஏழை எளியவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதற்கு நல்ல தெளிவான கணக்கு இருக்கிறது என்று நமக்குத் தெரிகிறது. காரணம் கிராமங்களைப் பார்க்கும்பொழுது தெரிகிறது. 10 வருஷகாலத்தில் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு வருகிற மக்கள் தொகை குறைந்திருக்கிறதா, வளர்ந்திருக்கிறதா? சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், மதுரையைப் பொறுத்தவரையில், திருச்சியைப் பொறுத்தவரையில் கிராமங்களிலிருந்து மக்கள் சாரிசாரியாக நகரங்களுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். கிராமங்களில் எவ்வளவோ முன்னேற்றங்களை ஏற்படுத்தி யிருக்கிறோம் என்று எடுத்துச்சொன்னாலும், அங்கிருந்து வாழ்க்கை நடத்துவதற்கு இயலாத காரணத்தினால் நகரங்களை நோக்கி இன்று படைஎடுப்பு நடப்பது இன்னும் குறைந்ததாகத் தெரியவில்லை. இந்த நிதி நிலை அறிக்கையில் 100-க்கு 70 பங்கு மக்கள் விவசாயத்தை நம்பி வாழக்கூடியவர்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது என்றால் ஏகாதசிக்கு முந்திய இரவிலே தான் நாம் இருக்கிறோம் என்ற பொருள் தானே அல்லாது, நன்றாக இருக்கிறோம், துவாதசியில் இருக்கிறோம் என்ற பொருள் அல்ல. துவாதசி என்றால் நன்றாகச் சாப்பிடுவது, அப்படி நன்றாக சாப்பிடக்கூடிய நிலையில் இல்லை. அவர்கள் உண்மையிலேயே, இந்த விவசாயத்தில் கிடைத்த வருவாய் எங்கே போயிற்று என்று தேடிப்பார்த்தார்களா? விவசாயத்தில் மட்டுமல்ல, தொழில் துறையில் கிடைத்த வருவாய் பல தேக்கங்கள் ஏற்பட்டுப் புதிய செல்வ வளர்ச்சியால் ஏற்பட்ட வருவாய், இவை அத்தனையும் எங்கே போயிற்று என்று தேடிப்பார்ப்பதற்குப் பண்டித நேரு அவர்கள் ஒரு குழுவை அமைத்திருக்கிறார். அந்தக் குழு பணியாற்றிக்கொண்டு வருகிறது என்று கருதுகிறேன். ஓடிப்போன மாட்டை எங்கே தேடிக்கண்டு பிடிப்பது; உடைந்த பூட்டை

மறுபடியும் எப்படி சரிப்படுத்துவது, கொள்ளை போன பணத்தை எப்படிக் கண்டு பிடிப்பது என்ற திகைப்பு இருக்கிறது. இருந்தாலும் இது போன வழி என்று எந்த வழியையாவது காட்டினால், அந்த வழியையாவது அடைக்கலாம். போன பணம் போய்விட்டது. நான் தேர்தல் விஷயமாகச் சொல்லுகிறேன் என்று நிதி அமைச்சர் அவர்கள் தவறுதலாகக் கருதவேண்டாம். பிரிட்டிஷ் பேரரசி இங்கு வந்திருந்தபொழுது நாமும் அவர்களை வரவேற்றோம். ராஜஸ்தான் மாஜி மன்னவர்களும் வரவேற்றார்கள். எவ்வளவு கோலாகலமாக அவரை வரவேற்க முடிந்தது? எங்கிருந்து இதற்கு பணம் கிடைத்தது? நீங்கள் இதற்கு அதிகப் பணம் செலவழித்தால், கேள்வி கேட்பதற்கு நாங்கள் இருக்கிறோம். ஆகவே நீங்கள் - அளவாகத்தான் செலவழிக்க முடியும். எதற்கு எவ்வளவு செவவழிக்கலாம் என்ற அளவும் உங்களுக்குத் தெரியும். ஆனால் மன்னர்களும், மாஜி மன்னர்களும் ராஜஸ்தானில் பிரிட்டிஷ் பேரரசியை கோலாகலமாக வரவேற்பதற்குச் செலவழித்த பணம் எங்கிருந்து வந்தது? நேரு பண்டிதர் அவர்கள் கண்டுபிடிக்க வேண்டிய பணத்தில் ஒரு பகுதி அந்தப் பணத்தில் முடங்கியிருக்கிறது. இப்படிப் பணம் தவறான முறையில் போய் நடுக்கொள்ளைக்காரர் களிடத்தில் சிக்கி இருக்கிறது. இதற்கு நமக்குக் கணக்குத் தெரியவில்லை. ஒரு பஸ் முதலாளி 5 வருஷங்களில் 10 பஸ்களுக்கு சொந்தக்காரராகி, அங்கே ஒரு சினிமாக் கொட்டகையையும் விலைக்கு வாங்குவதைப் பார்க்கலாம். இந்த நாட்டில் லஞ்ச லாவண்யத்திற்கு வித்து விதைக்கிறவர்கள் பஸ் முதலாளிகளைத் தவிர வேறு யார்? என்ன விலை யாராக இருந்தாலும் சரி. ஆனால் அமைச்சர்களுக்கு தரத்தக்க விலை கட்சித் தொண்டுதான். ஆகையால் அமைச்சர்கள் வரை வருவதில்லை. மற்றவர்கள் யாருக்கும் லஞ்ச லாவண்யத்தைக் கொடுக்க முன்வருகிறார்கள். இதைக் கண்டு பிடித்துச் சொல்ல முடியாதா என்று உள்துறை அமைச்சர் இருந்தால் இப்பொழுது கேட்கக்கூடும். போலீஸை வைத்துக்கொண்டு, போலீஸ் நாய்களை வைத்துக்கொண்டு மோப்பம் பிடித்துக் கூட சில திருட்டுகளைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அப்படியிருக்கும் பொழுது எங்களால் என்ன முடியும்? கேள்விப்படுவதைச் சொல்ல முடியும். அதை வைத்துக் கொண்டு ஆராய்ந்து பார்க்கவேண்டும். பஸ் முதலாளிகள் 10 வருஷங்களில் எவ்வளவு செல்வான்களாக ஆகியிருக்கிறார்கள்? நேரடியாக மக்களுக்கு வந்திருக்கவேண்டிய பணம், பண்டாரத்திற்கு வந்திருக்கவேண்டிய பணம் - பண்டாரம் என்று சொன்னால் அமைச்சர் கேலியாகச்

சொல்லுகிறேன் என்று கருதவேண்டாம். பண்டாரம் என்றால் பணம் கொட்டி வைத்திருக்கும் ஒரு இடம் - பண்டாரத்திற்கு வரவில்லை. நடுக்கொள்ளைக்காரர்களிடத்தில் அந்தப் பணம் தங்கிவிட்டிருக்கிறது. ஆகையினால், ஏதாவது வழி வகை உங்களுக்குத் தெரியுமா என்று எங்களைக் கேட்டால், தெளிவாகச் சொல்லுவோம். வருவாய் தரக் கூடிய தொழில்களைச் சர்க்கார் தங்கள் உடைமையாக்கிக் கொண்டிருக்க வேண்டும் என்று. இன்றையதினம், எல்லாப் பொருளாதாரக் குழப்பங்களுக்கும் நெருக்கடிகளுக்கும், உங்கள் ''மிக்சட் எகானமி'' கலப்படப் பொருளாதாரத் திட்டம்தான் அத்தனைக்கும் காரணம் என்பதை நான் முன்பு சொல்லியிருக்கிறேன். இன்றைக்கும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கலப்படப் பொருளாதாரத்தை வைத்துக் கொண்டு இருப்பதால் நம்மால் எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாகச் செய்ய முடியவில்லை. விலைவாசிக் கட்டுப்பாடு செய்ய முடியவில்லை. விலைவாசிகளைக் கட்டுப்பாடு செய்ய முடியவில்லை என்பதற்கு என்னைக் காரணம் கேட்டால், என்னைப் பொறுத்தவரை இதைக்கூடச் சொல்லுவேன்: முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங் களிலே செய் பொருள்களை, மான்யுபாக்சர்ட் கூட்ஸ், அந்தப் பொருள்களைவிட கன்ச்யூமர் கூட்ஸ், உபயோகிக்கும் பண்டங்களை அதிகப்படுத்தியிருந்தால், நமக்கு இந்த அளவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்க முடியாது என்று கருதுகிறேன். இதையே ரஷ்யாவில், முதல்திட்டத்திற்கும் இரண்டாவது திட்டத்திற்கும் இடையே இந்த மாறுபாட்டைக் கண்டு கொண்டு, கன்ச்யூமர் கூட்ஸை அதிகப்படுத்தினார்கள் என்று புத்தகத்தில் படித்திருக்கிறேன். ஆகையினால், முதலிலே கன்ச்யூமர் கூட்ஸை அதிகப் படுத்தி உற்பத்தி செய்து கொள்ளவில்லை. உணவுப் பொருள்களைக் கூட வெளி நாடுகளிலிருந்து...

துணை சபாநாயகர் : The Hon. Member has taken more time. He has already taken nearly one hour whereas only 45 minutes has been allotted to him.

திரு. சி. என். அண்ணாதுரை : இன்னும் சில வினாடிகள். ஆகவே, உணவுப் பொருள்களையும், உபயோகிக்கும் பொருள் களையும் இதில் இரண்டு திட்டங்களில் உண்டாக்காததுதான் மிகுந்த குறைபாடு. பொதுவாக இந்த ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலமாக விவசாயத்தில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி நடுக்கொள்ளைக்

காரர்களுக்குப் போய் விட்டது என்று சொல்வது போல், தொழில் துறையிலும் முன்னேறியிருக்கிறோமா, இல்லையே என்று எடுத்துச் சொல்லும்போது "இல்லை, இல்லை" எல்லா இடத்திலும் முன்னேறி இருக்கிறோம் என்று அமைச்சர்கள் பேசுகிறார்கள்; அதுவும் தொழில் அமைச்சரவர்கள் மிகச் சுறுசுறுப்பாக இந்த வாரத்தில் புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டிப் பேசுகிறார்கள்; மேற்கு வங்கத்தைப் பாருங்கள், பம்பாயைப் பாருங்கள், உத்தரப்பிரதேசத்தைப் பாருங்கள் என்று சொன்னதாகப் பத்திரிகையில் படித்தேன். நான் அறிய விரும்புவது "the total economic picture". எத்தனை கம்பெனிகள் புதிதாகத் துவக்கப்பட்டன. அவைகளுக்கு எவ்வளவு மூலதனம் போடப்பட்டது. நாலு வருஷத்தில், மூன்று வருஷத்தில் எவ்வளவு என்ற கணக்கல்ல; மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கணக்கிடும் நேரத்தில் பர் காபிடா இன்கம், தலைக்கு வருமானம் எவ்வளவு என்ற கணக்கு. அதைப் பார்க்கும்போது, நம் மாநிலம், மற்ற மாநிலங்களை விட அடித் தட்டிலேயே இருக்கிறது என்பதை எந்தப் பொருளாதார நிபுணர் மறுத்துக் கூறுகிறார்? எந்தப் பொருளாதார நிபுணர் இல்லை என்று சொல்லி விட முடியும்? உண்மையிலேயே நம் பகுதி பின் தங்கியிருக்கிறது என்பதை யாரும் உணரமுடியும். அண்மையில் மாநிலக் கவர்னர்கள் மாநாட்டில், தென்னகத்திலிருந்து சென்றிருந்த மாநிலக் கவர்னர்களெல்லாம், அது பிற்படுத்தப்பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பெரிய பொருளாதார நிபுணர்கள், அரசியல் விற்பன்னர்கள், அமைச்சர்களும் கூட இந்த நாட்டு குடிமக்கள் என்ற கவனம் வரும் காலத்தில், அவர்களும் கூட இந்த நாடு பின் தங்கியிருக்கிறது, பேஸிக் இண்டஸ்ட்ரிகள் பொறுத்தவரை பின் தங்கியிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நாங்கள் பேசுகிறபோது, வெட்டிய கிணறுகளைப் பாருங்கள், கட்டிய பள்ளிக்கூடங்களைக் கணக்கெடுங்கள், பகல் உணவு அளிக்கிறோம், வந்து சாப்பிட்டுப் பாருங்கள் என்கிறார்கள். புதுப்புது ரோடுகள் போட்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இவைகளெல்லாம் ஒரு நாட்டின் முற்போக்கா? இவைகளெல்லாம் ஒரு நாட்டின் பொருளாதாரப் பெருக்கத்திற்கு ஏற்ற வசதிகள், வாய்ப்புகள். ரோடுகள் எதற்கு? பட்டினி கிடக்கும் மக்கள் நடந்து போகவா? மூன்று வேளை வயிறார சாப்பிட்டு அழகாக சிந்து பாடிக் கொண்டு நடந்து செல்வதற்கு. வெள்ளைக்காரன் அந்த நாளில் தன் பட்டாளம் நடக்கப் பாதை போட்டது போல, கம்யூனிடி டெவலப்மெண்ட் ஜீப்புகள் ஓட

ரோடுகள் போடுகிறார்கள். ஆகையினால் ஒரு நாட்டின் முன்னேற்றம் எதில் இருக்கிறது என்ற ஒன்றை மட்டும் எடுத்துச் சொல்லி என்னுடைய பேச்சை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று கருதுகிறேன்.

நமக்கு விவசாயத் துறையில் கிடைத்திருக்கும் வருமானத்தைக் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள் சர்க்கார் துறையினர். இரண்டாவது திட்டத்தை எடுத்துக் கொண்டால், ஆந்திராவில் 471 கோடியும், பீகாரில் 564 கோடியும், பம்பாயில் 518 கோடியும், மத்திய பிரதேசத்தில் 565 கோடியும், சென்னையில் 345 கோடியும், பஞ்சாபில் 488 கோடியும், உத்தரப்பிரதேசத்தில் 1,146 கோடியும் கிடைத்திருக்கிறது என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். நம் நாடு முக்கிய விவசாய நாடு; பம்பாய் தொழில் வளம் மிகுந்த நாடு. இருந்தும், விவசாயத்தில் அவர்களுக்கு 518 கோடி, நமக்கு 345 கோடி ரூபாய் வருவாய் வந்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இப்படிக் கிடைத்திருப்பதைப் பார்த்து அமைச்சர்கள் பெருமைப் படுகிறார்களா? அல்லது வெட்கப் படுகிறார்களா? வெட்கப்படுகிறார்கள் என்றால், அதைத் திருத்த வழி என்ன காண்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். விவசாயத்தைப் போலவே தொழில் துறையின் மூலம் கிடைத்திருக்கும் வருவாய், பம்பாயில் 272 கோடி, சென்னைக்கு 56 கோடி, மேற்கு வங்கத்திற்கு 197 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றும் ஒன்று, வரவரத் தொழில்கள் ஏற்படுகின்றன. சர்க்கார் நடத்தும் தொழில்களில் மட்டுமல்லாமல் தனிப்பட்ட கம்பெனிகள், போக்குவரத்துக் கம்பெனிகள், இவைகளிலெல்லாம் ஏற்பட்டிருக்கும் வருவாயைக் கணக்கிட்டால் அது ஆந்திராவில் 667 கோடி; பம்பாயில் 411 கோடி; சென்னையில் 218 கோடி; உத்தரப் பிரதேசத்தில் 316 கோடி இருப்பதாகச் சொல்கிறார்கள். பர்காபிடா இன்கம்மை எடுத்துக் கொண்டால்; ஆந்திராவில் 266.1; அஸ்ஸாமில் 323.5; பம்பாயில் 313.2; மத்திய பிரதேசத்தில் 318.8; சென்னையில் 269.3 கோடி; பஞ்சாபில் 406 கோடி; மேற்கு வங்கத்தில் 398.4 என்று இந்தக் கணக்கைக் கொடுத்திருக் கிறது. எதை வேண்டுமானாலும் கணக்கெடுத்துக் கொள்ளுங்கள்; இந்த நாடு வளர்ந்திருக்கிறது என்று எதை வைத்துக் கொண்டு எங்களை நம்பச் சொல்கிறார்கள் என்று கேட்கும் நேரத்தில் உண்மையிலேயே எதை வைத்துக்கொண்டு இந்த நாடு முன்னேறியிருக்கிறது என்று நம்பச் சொல்கிறீர்கள் என்று கேட்கும்போது, ஒரு நாடு முன்னேறியிருக்கிறது என்பதற்கு ஒரு நிபுணர் எடுத்துக் காட்டியிருக்கும் ஒரு கருத்தை மட்டும் எடுத்துச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்-

"The question is being asked. 'Which is a backward area and what is the index of backwardness?' For example, when I mentioned that backward areas should be given due consideration so that there may be greater development in these areas, it was pointed out that so far as Madras is concerned, it has made greater progress than many of the other States in the educational field. The place of rural electrification is more than in any other State. Road Transport system is about the best in India. It is therefore asked how can it be said that Madras State is a backward area?

Therefore, the proper index to assess the backwardness or otherwise of a region should be the capita income of that region. The per capita income of a region gives a clear indication of the economic development which has taken place in that region. Simply because there are more roads and more educated persons in a particular region, that does not mean that there is greater economic prosperity in that region... The backwardness or the progressive nature of an area should not be judged from the percentage of school-going children or from the extent of the roads available. All that will not be the proper indication. The entire economic life of the community should be taken into consideration."

இதுதான் ஆதாரம் என்று சொல்லும் ஒரு நிபுணருடைய வாக்கியங்களை இந்த மன்றத்திலே கூறினேன்; இந்த சட்ட சபை அதை ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன்; ஏனென்றால், அந்த நிபுணர் நம் நிதியமைச்சர்தான் (பலத்த சிரிப்பு) என்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை இந்த அளவில் முடித்துக் கொள்ளுகிறேன்.

நிதி ஒதுக்கீடு - தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம்

உரை : 43 *நாள் : 14.03.1961*

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்ற துணைத்தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் நம்முடைய சமுதாயத்தில் சமநிலை அடைவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற முயற்சியில், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையும், அத்தொகைகளை செலவழிக்கிற வகைகளையும் ஆராய்ந்து பார்ப்பதற்காக அமைந் திருக்கிற இந்த நேரத்தில், நான், இந்தப் பிரச்சினையோடு இணைத்து விடப்பட்டிருக்கிற மற்றொரு முக்கிய பிரச்சினை பற்றி பழங்குடி வகுப்பைச் சார்ந்த பல நண்பர்கள் மனவருத்தம் அடைந்ததைப்போல் இந்த மன்றத்தில் பேசியிருப்பதற்கு முதலில் எனது விளக்கத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைக் சேர்ந்தவர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இலாயக்கற்றவர்கள் என்ற முறையிலும், அவர்கள் அரசியல் ஞானமற்றவர்கள் என்ற விதத்திலும் நாட்டை ஆளுகிற அமைச்சர்கள் பேசிக்கொண்டுபோவதற்கு பதிலளிக்கிற வகையில் மற்றவர்களெல்லாம் அமைச்சர் பதவிக்கு வருகிறநேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் சேர்ந்தவர்கள் வந்தால் என்ன என்று பேசியிருக்கிறேன். இப்படிப் பேசியதை 'ஆதிதிராவிட மக்களைத் தாழ்வாகக் கருதுகிறார்கள்' என்றும், 'எங்கள் தலைவர் கக்கன்ஜீயை நீங்கள் இழிவாகக் கருதுகிறீர்கள்' என்று, அதுகூட அல்லாது, 'தமிழ்மொழியைத் தாழ்வாக கருதுகிறீர்கள்', என்று ஒரு சிலரும் எந்தப் பழியைப் போட்டால் அது உண்மையில் என்னைப் பாதிக்கும் என்று அவர்கள் தப்பாகக் கருதுகிறார்களோ அப் பழிகளைப் போட்டு பேசிக்கொண்டு வருகிறார்கள். 'பழிபோட்டுத் தலை

வாங்குவது என்ற விதத்தில் வற்றி பெற்றுவிடமுடியும் என்று அவர்கள் கருதுவார்களானால் அவர்கள், அவர்களது ஏமாற்றத்தை வெகுவிரைவில் காணஇருக்கிறார்கள். ஆதிதிராவிட மக்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நீண்ட காலமாக இருந்துவரும் நல்ல நேசத் தொடர்பு, இந்த விவாதத்தினால் கெட்டுவிடுமென்று நான் கருதவில்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த மன்றத்தில் பேசிய நேரத்தில் நான் சொல்லியிருப்பதுபோல, இன்றும் நான் எடுத்துச் சொல்ல விரும்புவது எல்லாம், ஆதித்திராவிட சமுதாயத்தையும், பிற்பட்ட வகுப்பினரையும் கைதூக்கிவிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்படுகிற எல்லா முயற்சிகளையும் நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். அதற்காக ஆண்டுக்கு ஆண்டு அதிகமாக தொகை ஒதுக்கி வருவதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மிகுந்த அக்கரையோடு கக்கன் அவர்கள் அதில் கவனம் செலுத்துகிறார்கள் என்பதை இந்த மன்றத்தில் நான் முன்பே எடுத்துக் கூறியிருக்கிறேன். 'கக்கன் மந்திரியாக வருகிறபோது நான் ஏன் வரக்கூடாது', என்று சொன்னதாக நான் சொன்னதில், ஒரு வாசகத்தை விட்டுவிட்டுப் பேசியிருக்கிறார்கள்; 'காமராஜும், கக்கனும் வந்திருக்கிறபோது, நான் ஏன் வரக்கூடாது' என்று கேட்டேனே தவிர - கக்கன் அவர்களை மட்டும் தனியாகக் குறிப்பிடவில்லை; ஆகவே இதை, தனிப்பட்ட ஜாதியாரைக் குறிப்பதாகவோ அல்லது கக்கன் அவர்களைத் தனிப்பட்ட முறையிலே குறிப்பதாகவோ கொள்ளக்கூடாது. அப்படி நான் குறிப்பிடவில்லை.

கக்கன் அவர்களிடம் எனக்கு தனிப்பட்ட விதத்தில் நல்ல மதிப்புண்டு. அவர் இத்துறையில் ஈடுபட்டுப் பணியாற்றுவதில் வெற்றி பெறவேண்டுமென்று விரும்புகிறவர்களில் நானும் ஒருவன். ஆகவே, அமைச்சர் அவர்கள் தவறான ஒரு எண்ணத்தை வைத்துக் கொண்டிருந்தால் அந்த எண்ணத்தை விட்டுவிடும்படி - அந்த எண்ணத்தை நீக்கிக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறேன்.

அவர்கள் சமுதாயத்தைப் பொறுத்த விஷயத்தில் நாங்கள் எப்பொழுதுமே தரக்குறைவான அல்லது தாழ்வான கருத்துக்களைக் கொண்டதில்லை; கொள்ளவும் மாட்டோம்; மற்றவர்களை அப்படிக் கொள்ளவும்விடப் போவதில்லை. 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்று நாங்கள் பெயர் வைத்துக்கொண்டிருப்பதால் 'திராவிட' என்று வைத்துக் - கொண்டிருப்பதால், ஆதித்திராவிட மக்கள், 'நீங்கள்தான்

எங்களுக்கு ஏற்றவர்கள்; நீங்கள்தான் எங்களைக் காப்பாற்றுவீர்கள்' என்று சொல்கிற ஆதிதிராவிட மக்கள் இருக்கிறார்கள். நான் கக்கன் அவர்களுக்கு - அவர்கள் என்னுடன் ஒருநாள் வருவார்களேயானால் அப்படிப்பட்டவர்களை அறிமுகப்படுத்தி வைக்க ஆசைப்படுகிறேன். (சிரிப்பு) சிரிப்பு எதற்கு என்பது எனக்கு விளங்கவில்லை. 'கக்கன் அவர்களை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்' என்று சொன்னதற்காகவா சிரிக்கிறார்கள்? சிரிப்பதற்கு வேறு நல்ல காரணங்களை தேடிக்கொள்ளலாம்.

ஒரு சமயம், 'தமிழில் அவர்கள் படித்திருக்கிறார்கள் என்று நான் சொன்னதால் தமிழை இழிவுபடுத்துகிறேன்' என்று சொல்லுகிறார்கள். இந்த மன்றத்தில் அவர்கள் ஆங்கிலத்தில் பதிலளிப்பதிலிருந்து அதிகாரிகள் தருகிற அறிக்கைகளை அவர்கள் விளக்கி பேசுவதிலிருந்தும் நாம் அறிகிறோம் - அவர்கள் ஆங்கிலம் அறிந்தவர்கள் என்பது. அதுமட்டுமல்ல; 'ஆங்கிலத்தில் படித்தால்தான் அறிவாளி,' என்று கருதுகிற அளவிற்குக் கல்வித்தரம் பற்றி ஒன்றும் அறியாதவன் அல்ல நான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குருஷ்ஷேவிற்கு ஆங்கிலம் தெரியாமல் இருக்கலாம்; அதனால் அவர்களை, நாங்கள், தரக்குறைவானவர் என்று கருதவில்லை.

ஆங்கிலத்தில் படித்தால்தான் படிப்பு; தமிழில் படித்தால் அது படிப்பல்ல - என்பதில்லை. அதுமட்டுமல்ல; கக்கன் அவர்களும், காமராஜ் அவர்களும் பல்கலைக் கழகத்தில் போய்தான் இவைகளைப்பெற வேண்டுமென்று நான் கருதக்கூட இல்லை. வெளியிலிருந்து நிர்வாக அனுபவங்களைப் பெற்றுக்கொண்டவர்கள், அமைச்சர்களாக வேண்டுமென்ற முறையில் அல்லாமல், எடுத்த எடுப்பிலேயே மந்திரியானவர்கள் என்பதற்காகக் குறிப்பிட்டேன். 'எடுத்த எடுப்பிலேயே அவர்கள் மந்திரிகளாகி இருக்கும் போது நான் ஏன் ஆகக்கூடாது', என்றுதான் சொன்னேனே தவிர, அது அவர்கள் சமூகத்தையோ அல்லது அவர்களைத் தனியாகவோ கேவலப்படுத்த குறிப்பிடுவதல்ல. ஆகவே, அவர்கள், அந்தத் தப்பெண்ணத்தை நீக்கிக்கொள்வார்களானால் அது அவரது மனதிற்கே முதலில் ஆறுதலாக இருக்கும்; அது, தப்பு எண்ணங்களை இந்த மன்றத்தில் வளர்க்காமலிருக்கவும் உதவும்.

சமாதானம் சொல்லித் தீரவேண்டுமென்ற நிர்ப்பந்தத்தால் அல்ல நான் இதை கூறுவது. யாரையும் நான் தரக்குறைவாகப் பேசுவதில்லை

என்பது அவர்களுக்கே தெரியும். இன்னும் சொல்லப்போனால், கக்கன் அவர்கள் காஞ்சிபுரத்திற்கு பிரசாரத்திற்காக வந்திருந்த நேரத்தில், 'என் வீட்டிற்கு வாருங்கள்; தேநீர் அருந்திவிட்டுத்தான் போகவேண்டும்' என்று நான் அவர்களை அழைத்தேன்; அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வில்லை; ஆக, இங்குள்ள எட்டு அமைச்சர்களில் நான் அழைத்த ஒரே ஒரு அமைச்சர் கக்கன் அவர்கள்தான் என்பதிலிருந்தே நான் அவர்களைப் பற்றி என்ன எண்ணம் கொண்டிருக்கிறேன் என்பதை, அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சராக இருப்பதால், ஒரு சமுதாயத்திற்கு உயர்வு வருமா வராதா என்பது, விவாதத்திற்குரிய பிரச்சினையாக இருக்கிறது. இதே மன்றத்தில் சென்ற வருடம் பேசிய ஒரு அங்கத்தினர் - அவர் காங்கிரஸ் அங்கத்தினர் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன் - 'எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த கக்கன் அவர்கள் அமைச்சராகிவிட்டதால் எங்கள் சமுதாயம் உயர்ந்துவிட்டதாக கருதமுடியாது' என்று சொன்னார். கக்கன் அவர்கள் அமைச்சர் என்பதற்காக அல்ல - நல்லவர் என்பதற்காக - இன்னும் சொல்லப்போனால் அவர்கள் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்காகவே - உயர்வாகக் கருது கிறேன். ஆகவே, அரசியல் காரணங்களுக்காக - அரசியல் விவாதங் களுக்காகத் தப்பர்த்தத்தை வளர்த்துக்கொள்ளவேண்டாம்.

ஒரு அங்கத்தினர், கருப்பு, சிவப்புக் கொடி போட்ட தேநீர்க் கடைகளில் ஆதிதிராவிட மக்கள் அனுமதிக்கப்படுவதில்லையென்று ஆரம்பித்து, 'கதர் போட்டுக்கொண்ட ஆதித்திராவிட மக்களை அனுமதிப்பதில்லை', என்று ஒரு திருத்தம் கொடுத்தார்கள். கதர் போட்ட மக்கள் அனுமதிக்கப்படுவதில்லை யென்றால், அதற்கு நான் பதிலளிக்கத் தேவையில்லை. ஆனால் ஆதித்திராவிட வகுப்பைச் சார்ந்த மக்கள் என்பதற்காக எங்கள் கழகக்கொடி போட்ட தேனீர்க் கடைகளில் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை யென்றால் அவர்களைவிட எங்கள் கொடிக்கும், எங்கள் கழகத்திற்கும் இழிவு தேடிக்கொடுக்கக்கூடியவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது என்பதை நான் ஒளிவுமறைவின்றி இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் மூவர்ணக்கொடி போட்ட கடைகளில் ஆதித்திராவிட மக்களுக்குத் தரப்படுகிற குவளைகளும், மூங்கிலை இரண்டாக வெட்டி அதன் வழியாக தண்ணீர் ஊற்றி வெளியிலிருந்து குடிக்கச்

செய்வதையும் நான் இங்குள்ள கனம் அங்கத்தினர்களுக்குக் காண்பிக்கிறேன் - அவர்கள் என்னோடு வருவதானால்!

ஆக, இது கொடியின் குற்றமல்ல; நெடுங்காலமாக இருந்துவரும் கொடிய பழக்கத்தான் காரணம். இந்தக் கொடிய பழக்கத்தைத் தீர்த்துக் கட்ட நாம் எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளில் வெற்றிபெற்றிருக்கிறோமா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டுமே தவிர, புள்ளி விவரக்கணக்குப் போடுவதால் மட்டும் பிரச்சினை தீர்ந்து விடாது.

"ரூபாய் 3 கோடியே 55 இலட்சம் ஒதுக்கி இருக்கிறோம்", என்று குறிப்பிட்டு, 'இதுபெருமைப்படத்தக்கது', என்கிறார்கள். அது பெருமைப்படத்தக்கதோ இல்லையோ, வரவேற்கத்தக்கது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அதில், சிறிது பொருளாதாரத் தத்துவத்தை நாம், எண்ணிப் பார்க்கவேண்டும். போன ஆண்டு இரண்டு கோடி ரூபாயில் நடைபெறக்கூடிய காரியங்களை இந்த ஆண்டு ரூ. 2 கோடியில் நாம் நடத்துவதற்கில்லை.

'பிஸிக்கல் டார்ஜட்' - நாம் எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய காரியத்தில் எந்தளவு வளர்ச்சியடைந்திருக்கிறோம் என்ற புள்ளிவிவரக் கணக்குத்தான் முக்கியமே தவிர, பத்து ஆண்டுகளுக்குமுன் சாதித்ததை - இந்தப் பத்து ஆண்டுகளில் பணம் தேய்ந்து கிடக்கிற காரணத்தினால் - நோட்டுக்களின் பெருக்கம் காரணத்தினால் - பண வீக்கம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் - விலைவாசிகள் வளர்ந்திருக்கிற காரணத்தினால், பத்து ஆண்டுகளுக்கு முன்னால் இலட்சம் ரூபாயில் முடிந்த காரியங்கள், இன்று பத்து இலட்சம் ரூபாய் வைத்தால்தான் ஆகும். இந்த பொருளாதாரக் கணக்குப்படி, 1950-51ல் ரூ 65 இலட்சம் செலவு செய்யப்பட்டது; இப்பொழுது ரூ. 355 இலட்சம் செலவு செய்கிறோம் - ஐந்து மடங்கு அதிகமாகச் செலவு செய்கிறோம்', என்று பெருமைப்படுகிற அதே நேரத்தில், நம் ரூபாயின் மதிப்பு எந்த அளவிற்குத் தேய்ந்திருக்கிறது என்பதையும், விலைவாசிகள் எந்த அளவிற்கு உயர்ந்திருக்கின்றன என்பதையும் கணக்கெடுத்து, உங்கள் சாதனைகளையும், உங்கள் பெருமையையும் தேடிக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ரூ. 3 கோடி 35 இலட்சம் ஒதுக்கியிருப்பது அதிசயமானது என்றோ, அல்லது அரிசனத் துறைக்குத்தான் இவ்விதம் அதிகமான அளவில் ரூவாய் ஒதுக்கியிருக்கிறார்களா என்றோ கூர்ந்து கவனித்துப்

பார்த்தால், ஆறு கோடி ரூபாய் போலீசு துறைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். ஆறு கோடி ரூபாய் போலீஸ் துறைக்கு ஒதுக்கிவிட்டு, மூன்று கோடி ரூபாய் அரிசனத் துறைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள்.

ஒவ்வொரு துறையிலும் நாம் செலவு செய்கின்ற தொகையின் அளவு கூடிக்கொண்டே போகிறது; அந்த அளவில்தான் இந்தத் தொகையும் உயர்ந்திருக்கிறதே தவிர, இந்தத் துறையில் மட்டும் விசேட கவனம் செலுத்தியதாக நான் கருதவில்லை. நான் எதிர்க்கட்சிக்காரன் என்ற முறையில் பேசவில்லை என்பதை கனம் அமைச்சர் அவர்கள் மறந்துவிட்டுப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல தலைமுறை தலைமுறையாக இருந்து வந்திருக்கின்ற தீண்டாமைப் பேயை ஒழிப்பதற்கு மெள்ள மெள்ள படிப்படியாக இப்படியே போய்க் கொண்டிருந்தால் எத்தனை தலைமுறைகள் கழிந்தாலும் இந்தத் தீண்டாமைப் பேயை ஒழித்து விடமுடியாது.

அதற்கென்று தகுந்த விரிவான நிறைவேற்றத்தக்க கட்சிகளுக்கு அப்பாற்பட்ட பெருளாதாரத் துறையை அடிப்படையாகக் கொண்டிருக்கின்ற ஒரு உடனடியான திட்டத்தை எடுத்து, அதற்கென்று தனியாக ஒரு துறையை வேண்டுமானாலும் நிறுவி வேலை செய்யவேண்டும்.

'தீண்டாமையை ஒழித்தே ஆகவேண்டும்' என்ற அளவில், இந்தியத் துணைகண்ட பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், 'War on poverty, war against unemployment' என்று சொல்வதுபோல் - 'War against untouchability' - தீண்டாமைப் பேயை எதிர்த்து நடத்துகின்ற ஓர் அறப்போராட்டம் என்ற அளவில் இதைக் கருதிக் செய்யவேண்டும். இதை ஏற்றுக்கொண்டால் ஒழிய, '500 வீடுகள் கட்டப்போகிறோம்', என்று கூறி, 'ஐந்து வீடுகளைக் கட்டிவிட்டோம்', என்று சொல்லுவதினாலோ, அல்லது '100 ஏர் மாடுகள் தேவைப்பட்டது; அதற்கு பத்து மாடுகளை வாங்கிக் கொடுத்திருக்கிறோம்' என்று சொல்லுவதினாலோ, அடுத்தடுத்து ஒவ்வொரு ஆண்டும் 10 மாடுகள் வீதம் வாங்கிக் கொடுக்கப்படும்'; என்று சொல்லுவதினாலோ இந்தப் பிரச்சினை சுலபத்தில் தீர்ந்து விடாது.

இதற்காகப் போடப்பட்டிருக்கும் திட்டங்கள் போதுமான வையாக இல்லை என்று இந்தத் தரப்பிலுள்ளவர்கள் எடுத்துக்காட்டி வருகின்றார்கள். 'சேரிகள் திருத்தப்படவேண்டும்; சேரியிலுள்ளவர்

களுக்கு நல்ல வாழ்க்கைத்தரம் ஏற்படவேண்டும்', என்பதற்காக முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே தகுந்த இடம் ஏற்படுத்தப்படும் என்று எதிர்பார்த்தேன் நான்; இரண்டாவது திட்டத்திலும் இருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஏனென்றால் சேரிகள் திருத்தப்படுவதைப் பொறுத்துத்தான் விவசாய வளர்ச்சி இருக்கிறது; சேரிகள் திருத்தப்படுவதைப் பொறுத்துத்தான் சுகாதார வளர்ச்சி இருக்கிறது; சேரிகள் திருத்தப்படுவதைப் பொறுத்துத்தான் கல்வி வசதி பெருகுவது இருக்கிறது, சேரிகள் திருத்தப்படுவதைப் பொறுத்துத்தான், நாட்டில் சட்டம், அமைதி, ஒழுங்கு - இந்தப் பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகையினால், எல்லாப் பிரச்சினைகளுக்கும் அடிப்படையான பிரச்சினையாக அமைந்திருப்பது ஆதிதிராவிடப் பிரச்சினையாதலால் இதற்கென்று தனியாக ஒரு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி ஏற்பாடு செய்யாமல், 'நான்கைந்து விதைப் பண்ணை களை ஏற்படுத்திவிட்டோம்; ஒவ்வொரு தாலுகாவிலும் 10 பொலி காளைகளை வாங்கிக் கொடுத்திருக்கிறோம்; அல்லது பத்து கோழிப்பண்ணைகளை ஏற்படுத்தியிருக்கிறோம்' அல்லது பத்து ஆதிதிராவிட மக்களுக்குப் பத்து வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கிறோம்' என்று அமைச்சர் அவர்கள் தரப்பிலிருந்து சொல்லுவதும், ஆளும்கட்சி உறுப்பினர்கள் தரப்பிலிருந்து கட்டி கொடுத்தது 10. அதில் விழுந்து போனது 8; மீதம் இருக்கிறது 2. இதை எப்படிப் பாதுகாப்பது என்பதற்குக் கணக்குப் போட்டுக்கொள்வதைப் பார்த்தால், உண்மையிலேயே நாம் வெட்கப்பட்டுக்கொள்ள வேண்டாமா? நாங்கள், 'வெட்கப்பட வேண்டாமா?' என்று கேட்கும்போது, ஆளும்கட்சி உறுப்பினர்கள் பக்கமிருந்தும், அடிக்கடி, 'வெட்கப்பட வேண்டாமா என்று எங்களாலும் கேட்க முடியும்' என்ற எண்ணத்தில் பேசுகிறார்கள். ஆனால் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் நல்லெண்ணம் கொண்டு, இதில் அக்கறை செலுத்தியிருக்கிறார்களா என்று பார்த்து இதனால் யாருக்காவது குந்தகம் ஏற்படுகின்றதா என்பதைப்பார்த்து, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக் கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

காலனிகளுக்கு மனைக்கட்டுகள் ஒதுக்குகின்ற விஷயத்தில் ஏற்படுகின்ற கால தாமதத்தைப்பற்றி பல உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நம்முடைய சர்க்கார் எந்த அளவுக்கு இதில்

அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அறிக்கையிலுள்ள சில வாசகங்கள் தெரிவிக்கிறது; 'அரிசனங்களுக்காக நில ஆர்ஜிதம் செய்வதில் காலதாமதம் ஏற்படுவதாகச் சில சமயங்களில் புகார் செய்கிறார்கள்', என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'புகார்' என்ற வார்த்தைளை எடுத்துக் கொண்டால், அதை ஒப்புக்கொண்டதாக அர்த்தம் ஏற்படவில்லை. 'சில சமயங்களில் புகார் செய்கிறார்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 'ஆறு ஆண்டுகளாகியும் நில ஆர்ஜிதம் செய்ய முடியவில்லையே', என்று இந்தச் சபையிலேயே சொன்னவர்களைப் பார்த்து நான் உண்மையிலேயே பயந்தே போனேன். இவர்களுக்கே இந்த கதி என்றால், மற்றவர்களுக்கு என்ன கதி என்பதை நினைத்து மலைத்தே போய்விட்டேன்.

ஆகையினால், மனைக்கட்டு வழங்குவது, நடைபாதை போடுவது, சுடுகாட்டுக்கு- இடம் கொடுப்பது போன்ற விஷயங்களில் சட்டம் குறுக்கிடுவதாக இருந்தாலும், நம்முடைய அமைச்சர் அவர்கள், சட்ட நிபுணர்களை இதற்கென்று கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுத்தால் ஏன் இந்தத் தாமதம் ஏற்படுகிறது? இது, இந்த ஆண்டு மட்டும் சொல்லுகின்ற குறை அல்ல, போன ஆண்டும் சொல்லப்பட்டது. அதற்கு முந்தின ஆண்டும் சொல்லப்பட்டது. இந்த மன்றத்தின் தலைவராக திரு. சிவசண்முகம்பிள்ளை அவர்கள் இருக்கின்ற காலத்திலேயே, நில ஆர்ஜிதம் செய்வதிலுள்ள குறைபாடுகளைப்பற்றி பேசப்பட்டிருக்கிறது. பத்து ஆண்டுக் காலமாகத் தொடர்ச்சியாக இது பேசப்பட்டு வந்திருந்தும் இதை நீக்குவதற்கு இதிலுள்ள கஷ்டங்களைப் போக்குவதற்கு ஏன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை?

ஆனால் இப்போது கடைசியில் குறிப்பிட்டிருக்கிறார்கள் 'சட்டக் கமிஷனின் சிபாரிசுகளை அனுசரித்து நில ஆர்ஜித நடைமுறையைக் குறைக்க, சட்டத்தைத் திருத்தும் பிரச்சினையை அரசினர் ஆலோசித்து வருகின்றனர் என்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேம்...' என்று. இந்த அளவுக்குத்தான் நிலைமை இருந்து கொண்டிருக்கின்றது. பத்தாண்டு காலமாக மனைக்கட்டு விஷயத்தில் சட்டம் குறுகிடுகிறது என்று தெரிந்திருந்தும் அதை நீக்குவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளாததற்கு காரணம் என்ன? அதில் வெற்றிபெறுவதைப் பொறுத்துத்தான் மக்களிடத்தில் நீங்கள் வைத்திருக்கின்ற நல்லெண்ணத்தைப் பெருக்கிக்கொள்ள முடியுமே

தவிர, வெறும் புள்ளிவிவரக் கணக்கை மட்டும் நம்பி உங்கள் நல்லெண்ணத்தைப் பெருக்கிக்கொள்ள முடியாது.

அதோடு, இதில் பணம் ஒதுக்குவது மட்டுமல்ல, பெருமளவு பிரச்சாரமும் தேவை - என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பிரச்சாரத்திற்காக "அரிஜன விழா" நடப்பதைப்பற்றி இரண்டு ஆண்டுகளுக்குமுன் பேசிய போது, 'இது நலம் அளிப்பதாக இல்லை; இதை ஒரு பொது நாளாகக் கொண்டு இதில் எல்லாக் கட்சிகளும் கலந்து கொள்ளுகின்ற அளவில் ஊருக்கும் சேரிக்கும் நல்ல உறவு ஏற்படுகின்ற வகையில் இதை விரிவு படுத்த வேண்டும்' என்று இந்த மன்றத்தில் நான் பன்னிப்பன்னி சொன்னேன். ஆனால் இங்கே பேசப்படுவது வேறாக இருக்கிறது. எல்லாக் கட்சிகளுக்கும் இதில் கலந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு கொடுக்கவேண்டும்; அதன் மூலம் "அரிசன விழா" கொண்டாடப்படவேண்டும்.

எதிர்க்கட்சியினர் கலந்து கொள்வதில் அமைச்சர் அவர்களுக்கு அச்சம் இல்லையென்றாலும், வேறு சிலருக்கு அச்சம் ஏற்படுகிறது; வேறு சிலர் அச்சப்படுகின்ற அளவுக்குப் பேசினார்கள். அமைச்சர் அவர்களுக்கு அச்சம் இல்லாவிட்டாலும் ஐயப்பாடு ஏற்படுகிறது. 'அந்த இடங்களில் வந்து இவர்கள் எங்கே நாட்டுப்பிரிவினையைப் பற்றி பேசி விடுவார்களோ?' என்று எண்ணுகிறார்கள். நாட்டுப் பிரிவினை யைப்பற்றி பேசுவதற்கு நேரம் கிடைக்காமல், காலம் கிடைக்காமல், இடம் கிடைக்காமல் இருந்தால் அல்லவா இந்த "அரிஜன விழா"வில் வந்து பேசவேண்டும்? ஆகவே, அச்சமும் வேண்டாம். ஐயப்பாடும் வேண்டாம்.

சேரியிலுள்ளவர்கள் ஊருக்குள் வருவதற்கும், ஊரில் இருக்கின்றவர்கள் சேரிகளிலுள்ள வீடுகளுக்குப் போவதற்கும் சேரியில் நடமாடும் குழந்தைகள் ஊரிலுள்ள குழந்தைகளோடு கைகோர்த்து விளையாடுவதற்கும், சேரிகளிலுள்ள முதியவர்கள் ஊரிலுள்ள முதிவர்களோடு அன்பு கனிய பேசுவதற்கும், முடிந்தால் அன்றைய தினம் ஊரிலுள்ளவர்களும், சேரியிலுள்ளவர்களும் ஒன்றாக உட்கார்ந்து உணவருந்துகின்ற முறையில் 'சமபந்தி போஜனம்" நடத்துவதற்கும் வகை செய்தால் இதைத் திருநாள் என்ற முறையில் நடைபெறுவதற்கு வகைசெய்திருந்தால், நிச்சயமாக சேரியிலுள்ளவர்களின் மதிப்பு உயரும்; அதன் மூலம் நல்ல பலனையும் நான் நிச்சயமாகக்காண முடியும் என்பதை நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அமைச்சர் கக்கன் அவர்களுக்குத் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் இதற்கான பிரச்சாரத்தில் ஈடுபடுகின்ற நேரத்தில் அதிலும் பள்ளிக் கூடப் பிள்ளைகளிடத்தில் பேசுகின்ற நேரத்தில் கல்லூரி மாணவர்களிடத்தில் பேசுகின்ற நேரத்தில் நீங்கள் அறிவுரை சொல்லுங்கள். - 'நீங்கள் உங்கள் விடுமுறை நாட்களில் ஆதித்திராவிட மக்கள் சாதி இந்துக்கள் வீட்டிலும் சாதி இந்துக்கள் ஆதித்திராவிட மக்கள் வீட்டிலும் விருந்தினராக தங்கி இருங்கள்' என்று அவர்களிடத்தில் சொல்லவேண்டும். இவ்விதம் அமைச்சர் பிரச்சாரம் செய்வது பொருத்தமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்தக் காரியத்தைச் செய்வதில் அக்கறை இருக்கும் என்றால் இந்தக் காரியத்தைச் செய்தே ஆகவேண்டும்' என்று ஒவ்வொருவருக்கும் சொல்லவேண்டும். அந்த அளவுக்கு சமூகத்தில் மூடுபனி போல பரவி இருக்கின்றது இந்தத் தீண்டாமை.

அதல்லாமல் - 'எங்கள் அமைச்சர் அவர்கள் இந்த இலாகாவில் வந்ததினால்தான் இவைகள் எல்லாம் நடந்தன; காங்கரசு கட்சி இருப்பதினால்தான் இத்தனை எம். எல். ஏக்கள் இந்த மன்றத்தில் வரமுடிந்தது' என்றெல்லாம் சொல்வதால், எந்தவிதமான பலனும் இல்லை. அப்படியே சொல்லிக்கொண்டிருந்தால், நானும் சொல்லலாம் 'கார்ப்பரேஷனில் எங்கள் கட்சி வந்ததின் பின்னால்தான் எட்டு ஆதித்திராவிட மக்கள் கார்ப்பரேஷன் உறுப்பினர்களாக வரமுடிந்தது' என்று.

இவ்விதம் பெருமைப்பட்டுக் கொள்வதால் எந்தவிதமான நன்மையும் ஏற்பட்டுவிட முடியாது. ஆகையால், பெருமைக்காக மட்டுமல்லாமல், நியாய உணர்ச்சியோடு, ஆதித்திராவிட சமுதாயத் திற்கும், மற்ற சமுதாயங்களுக்கும் இடையில் இருக்கின்ற வேறுபாடுகளைக் கருதி, அவர்களுக்கு இடையில் இருக்கின்ற பொருளாதாரப் பேதங்கள், சமுதாயப் பேதங்கள் ஆகியவற்றை யெல்லாம் போக்குவதற்குச் சட்டத்தைவிட நிர்வாகத்தில் செலவு செய்வதைவிட பிரச்சாரம் செய்வதுதான் முக்கியமானது; இன்னின்ன விதங்களில் பிரச்சாரம் செய்கிறோம் - என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைப் படிக்கின்ற நேரத்தில் மற்ற - என்னென்ன காரியத்திற் கெல்லாமோ இங்கு பலர் சிரிக்கிறார்கள் - இதைப் படிக்கின்ற நேரத்தில் எனக்குச் சிரிப்பு வந்தது.

ஏனென்றால், இதிலே யாரோ 'கிராம சேவக்'குகள் என்று இருக்கிறார்களாம்; அவர்கள் ஒவ்வொரு இடத்திற்கும் சென்று, வில்லுப்பாட்டு பாடித் தீண்டாமையை ஒழித்தார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வில்லுப்பாட்டே, ஒழிந்துகொண்டு வருகிற ஒரு முறை; ஒழிந்துகொண்டு வருகிற ஒரு முறையை வைத்துக்கொண்டு, தீண்டாமையை ஒழிப்பதாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. பிறகு வேறு ஏதாவது செய்கிறார்களா என்று பார்த்தால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி பிரச்சாரம் செய்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரையும் எடுத்துக் கொண்டுபோய் உங்கள் சார்பில் திருப்ப ஐந்தாண்டுத் திட்டப் பிரசாரத்துக்கு முயற்சி செய்கிறீர்களே தவிர, தீண்டாமையை ஒழிக்க அத்தகைய பிரசாரத்தை நீங்கள் மேற்கொண்டிருக்கிறீர்கள் என்று இதிலிருந்து விளங்கவில்லை. நிதிநிலை அறிக்கையிலே மட்டும் கலந்து பேசுவது என்று கருதாமல் அமைச்சர் கக்கன் அவர்கள், அவர்களுக்கு ஓய்வு கிடைக்கிற ஒவ்வொரு நேரத்திலேயும், ஒவ்வொரு கட்சியிலும் இருப்பவர்களுடனும் கலந்து பேசி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, எதையும் கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்ப்பது, தன்னைப்பற்றியே தாழ்வாகக் கருதி, மனவருத்தம் கொண்டு, பிரச்சினைக்கு பரிகாரம் தேடாமல், அந்த வேலையிலிருந்து நழுவ வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேரிகளைத் திருத்திப் பாதைகளை அமைக்க, குடி தண்ணீர் கிணறுகளைத் தோண்ட, பள்ளிகளைக் கட்ட, புறம்போக்கு நிலங்களை விளைநிலமாக்க நிதி நிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கி ஆண்டுக்காண்டு இந்த நிலையில் போய்க் கொண்டிருந்தால், எத்தனை ஆண்டில் நீங்கள் எதிர்பார்க்கும் பலனை அடையமுடியும் என்று அறிய விரும்புகிறேன். 25 ஆண்டு வேண்டுமா? 50 ஆண்டில் சாதிப்பீர்களா? அல்லது நூற்றாண்டு தேவையா? இப்படி நீங்கள் இந்த வேகத்தில் வெட்டிக்கொண்ட போய்க்கொண்டிருப்பீர்களேயானால், பூரா இடத்தையும் வெட்டுவதற்குமுன், வெட்டப்பட்ட இடம் தூர்ந்துவிடும் என்பதை மறந்துவிட வேண்டாம். "மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி எனது கருத்தை அமைச்சரவை கேட்ட நேரத்தில், நான் குறிப்பிட்ட ஒரு கருத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சேரிகளைத் திருத்தவும், சேரிகளில் கிணறுகளை அமைக்கவும், புதிய வீடுகளைக் கட்டுவதற்கும், பாதைகளைப்

போடுவதற்கும், புறம்போக்கு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதற்கும் ஐந்து ஆண்டுக் காலத்திற்கு நாம் ராணுவத்தைப் பயன்படுத்தி, அவர்களிடத்திலே உள்ள எஞ்ஜினீயர்களை பயன் படுத்தி அவர்களிடத்திலே உள்ள தளவாடங்களைப் பயன்படுத்தி, அவர்களிடத்திலே உள்ள பணியாட்களைப் பயன்படுத்தி இவைகளை வைத்துக்கொண்டு, இந்தச் சீர்திருத்தத்தை ஐந்து ஆண்டிலே சாதிக்கிறோம் என்று ஒரு திட்டத்தைப் போட்டுக்கொண்டாலொழிய ஆண்டுக்காண்டு தொகை ஒதுக்குவதால் மட்டும் இந்த வேலை முடியாது. அப்படிப்பட்ட ஒரு புனிதப்போரை நீங்கள் நடத்துகிற நேரத்தில் நாங்கள் சார்ந்திருக்கிற கழகம் வேறு, காங்கிரஸ் வேறு என்ற அளவில் இருந்தாலும் முற்போக்கு வேலையை விரும்புகிறவர்கள் ஒரு பக்கத்திலும், மற்றொரு பக்கத்தில் இந்த முற்போக்குப் பணியை விரும்பாதவர்கள் பிரிந்து நிற்பார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் கனம் கக்கன் அவர்கள் உறுதியாக நம்பலாம். நான் அவர் பக்கத்தில் இருப்பேனே தவிர, வைதீகர்கள் பக்கத்திலோ, பிற்போக்காளர்கள் பக்கத்திலோ நானோ என்னைச் சேர்ந்தவர்களோ நிற்க மாட்டோம். அவர்களிடத்தில் ஆங்கிலத்தில் சரளமாக பேச முடியுமா, முடியாதா என்று நான் கவலைப்படமாட்டேன் - பேசுவது ஆங்கிலத்தினால் மட்டும் என்று நான் கருதவில்லை, நல்ல தமிழில் பேசலாம், கனிந்த நட்பு பேசுவதால் மட்டுமல்ல, பக்கத்திலிருந்து பணியாற்றுவதில் அத்தகைய நட்பு ஏற்பட முடியும் என்ற காரணத்தால் இதைக் குறிப்பிட்டுக்கொண்டு, இந்தத் துறைக்கு ஒதுக்கியிருக்கிற ரூ. 355 லட்சம் போதாது என்பதையும் கூறி, அதிக வேலைகள் விரைவாக நடக்க இதை கட்சிகளுக்கு அப்பாற்பட்டதாகக் கருதி, இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க தனித்திட்டம் வேண்டுமென்று எடுத்துச் சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன் வணக்கம்.

அமைச்சர்கள், துணைத் தலைவர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாநில சட்ட மன்றம், தேர்தல் - ஆகியன பற்றி நிதி ஒதுக்கீடு கோரிக்கை.

உரை : 44 **நாள் : 16.03.1961**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்றைய விவாதத்தின் இடையில் ஓரளவுக்குக் கருத்து மோதல்கள் ஏற்பட்டு, காரசாரமாகப் பேச்சு நடைபெற்றதால் நான் ஒரு பெரிய ஏமாற்றத்திற்கு ஆளானேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய கோபதாபங்களையெல்லாம் விட்டுவிட்டதாக நான்கு நாட்களுக்கு முன்னாலேதான் தெரிவித்தார்கள். அவராலே, அவருடைய சுபாவத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை என்பதை உணர்ந்து நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். ஆனால் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற பெரிய பணிக்கு, இப்படிப்பட்ட கோபதாபங்களை உடனடியாகக் கொள்கிற சுபாவம் அவருக்குக் குந்தகமாக இருக்கும் என்ற முறையிலேதான் மறுபடியும் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மான்யங்களைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில், உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்கின்ற நேரத்தில், ''அரசியல் சட்ட திட்டங்களை ஏற்றுக் கொண்டு, உள்ளே வந்திருக்கிற நீங்கள் அதன்படி நடக்க இஷ்டமில்லையானால் வெளியே போய்விடுங்கள்'' என்று பேசுவது, மண்டிக்கடையிலே உள்ள குமாஸ்தாவைப் பிடிக்காத காரணத்தால், மண்டிக் கடை முதலாளி, ''நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டு இருந்தால் இங்கே இரு, இல்லாவிட்டால் கடையைவிட்டு கீழே இறங்கி விடு'', என்று கூறுகிற பாவனையில் இருக்கிறது இது. அதே பாவனையில் கீழே இறங்கிப் போகும் குமாஸ்தா சும்மா இருக்க மாட்டான். நடுவீதியிலே உள்ள

மண்ணை எடுத்து வீசி, ''எத்தனை நாளைக்கு இந்த வாழ்வு?'' என்று கேட்டுவிட்டுப் போவான். அப்படிப்பட்ட வகையிலே நம்முடைய அமைச்சர்கள், அதிலும் நிதியமைச்சர் அவர்கள் அந்த வகையிலே நடந்து கொள்ள வேண்டாமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சில பேர் உள்ளே இருப்பதால் பெருமை அடைகிறார்கள்; சில பேர் வெளியே இருப்பதால் பெருமை அடைகிறார்கள். சில பேர் உள்ளே வந்ததாலே சில கட்டுதிட்டங்களுக்கு அடங்கியிருக்கிறார்கள். இவைகள் அனைத்தும் நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். தெரிந்தாலும், அவர்கள் திடீரென்று ஆத்திரப்படத்தக்க வகையிலே அவர்களுக்கு ஒரு எண்ணம் இருப்பதுபற்றி நான் வருத்தப்படுகிறேன். நண்பர் அன்பழகன் பேசும்போது, ''இந்த அமைச்சர்கள் கவர்னர் வீட்டிலேதான் வேலை செய்ய தகுதியுள்ளவர்கள்'' என்றதும் ஆத்திரம் வந்தது. அதிலிருந்து கவர்னர் பதவி, கவர்னரிடத்திலே பணியாற்று வதை எவ்வளவு தாழ்வாகக் கருதுகிறார்கள் என்பதை அறிந்து நான் பெருமைப்பட்டேன். ஆகவே, இதிலே அவர்கள் ஆத்திரப்பட்டு சில வார்த்தைகள் கடுமையாகப் பேசப்பட்டதால், உண்மையிலேயே ஜனநாயகம் ஸ்தம்பித்துவிட்டதாக யாரும் கருதுவதற்கில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் தவறான பிரச்சாரத்திலே ஈடுபட்டுள்ளதாக இழித்துப் பேசினார்கள்; தரக் குறைவாகப் பேசினார்கள். அடிதடிகளும் நடைபெற்றதாக சேலம் வட்டாரத்து உறுப்பினர் ஒருவர் இங்கே குறிப்பிட்டார்கள். நான் அறிந்திருக்கிற வகையில், சேலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் பேரில் போடப்பட்ட எல்லா வழக்குகளிலும் சமீபத்தில் போன வாரத்தில் கூட வெளிவந்த கோர்ட்டு நடவடிக்கைகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பேரில் அம்மா பேட்டையில் போடப்பட்ட வழக்குகளில் - அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்று நிரூபிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். சேலத்தில் விக்டோரியா மார்கெட் மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தாறுமாறாகப் பேசினார்கள் என்று போலீஸ் தொடுத்த வழக்குகளில் இரண்டு தரப்பினர்களிடமும் குற்றம் இருப்பதாகக் கோர்ட்டில் நிரூபிக்கப்பட்டிருக்கிறதே தவிர, சேலம் தொகுதி உறுப்பினர் சொன்னதுபோல அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அடிக்கிறார்கள், திட்டுகிறார்கள் என்று அவர்கள் பேசியிருப்பது, உண்மையிலேயே கோர்ட்டு நடவடிக்கைகளை அவர்கள்

கவனிக்காமல் பேசுகிறார்களா அல்லது யாரும் எடுத்துக் குறிப்பிட மாட்டார்கள் என்று பேசுகிறார்களா என்று எனக்குப் புரியவில்லை. ஆகையினால், திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பற்றிப் பேசும்போது, அவர்கள் தாறுமாறாக நடக்கிறார்கள், பேசுகிறார்கள் என்று குற்றம் சாட்டியது மட்டுமல்ல. ''இவர்களுக்கெல்லாம் அமைச்சர்கள் வெளியிலே சுற்றுப் பிரயாணம் செய்வதிலே பயம் ஏற்பட்டுவிட்டது. ஆகையினால் அமைச்சர்கள் வரவேண்டாம் என்கிறார்கள்' என்று ஒரு உறுப்பினர் இங்கு குறிப்பிட்டார்கள். உண்மையிலே எங்களுக்கு அப்படி ஒரு பயம் இருக்கிறது என்று வாதத்திற்காக வைத்துக் கொள்ளுங்கள். எங்களுக்கு பயம் இருக்கிறது என்று வாதத்திற்காக வைத்துக் கொள்வீர்களேயானால், காங்கிரஸ் கட்சி வளர்வதற்கு மந்திரிகளுடைய சுற்றுப் பிரயாணம் பயன்படுகிறது என்ற ஆசை உங்களுக்கு இருக்கிறது. அந்த ஆசை உண்மையாக இருக்குமானால், இந்த பயம் உண்மை என்று ஏற்றுக் கொள்ளலாம். இந்த பயம் உண்மை என்று வாதித்தால், அந்த ஆசையும் இருக்கிறது என்பதை நீங்கள் மறுப்பதற்கு இல்லை. ஆகையினால்தான் அமைச்சர்களுடைய சுற்றுப் பிரயாணத்தைப் பற்றி எடுத்துச் சொல்லுகிற நேரத்தில், அவர்கள் தங்களுடைய அதிகார வரம்பிற்கு உட்பட்டு நடத்துகிற காரியங்களையும், கட்சி வரம்புக்கு உட்பட்டு நடத்துகிற காரியங்களையும், இரண்டையும் அறுதியிட்டுக் காட்டி, பாகுபாடு படுத்தத்தக்க அளவுக்கு அமைச்சர்கள் நாடக மேடையில் உள்ள நடிகர்கள் அல்ல. வெளியில் இருந்து பேசுகிற நேரத்தில் அண்ணன், தம்பி, மாமன், மச்சான், காதலன் காதலியாகப் பேசிவிட்டு, உள்ளே போனவுடன் அவர்களுக்கு இருக்கிற இயற்கை பெயரில் பேசிக் கொண்டிருப்பது போல, மந்திரிகள் காலை 6 மணியிலிருந்து 8 மணி வரையில் மந்திரி அலுவல்களை பார்ப்பார்கள், 8 மணியிலிருந்து 10 மணி வரையில் அவர்கள் கட்சி அலுவல்களைப் பார்ப்பார்கள் என்று ஒரு கோடிட்டுக் காட்டுவதற்கு முடியாத நிலை இருப்பதினால்தான், அமைச்சர்கள் தங்களுடைய சுற்றுப்பிரயாண காலத்தில் கட்சிப் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்கள் என்பதைப்பற்றி இங்கே குற்றம் குறையாக எடுத்துக்காட்டப்பட்டது. 'ஏதோ பயப்பட்டுக்கொண்டு செய்கிறார்கள்' என்று நம்முடைய உறுப்பினர்கள் சொல்லியிருப்பது குறித்து, 'அமைச்சர்கள் பேசினால் காங்கிரஸ் கட்சி வளரும், நீங்களெல்லாம் பேசினால் காங்கிரஸ் கட்சி வளராது' என்று நீங்களே உங்களைத் தாழ்த்திக் கொள்கிறீர்களே

என்றுகூட வருத்தப்படுகிறேன்.

நான் இன்னொரு விஷயத்தைப் பற்றி சற்று விரிவாக இங்கே பேச ஆசைப்படுகிறேன். நமது அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி முன்னால் குறிப்பிட்டார்கள். தேர்தலுக்கான செலவினங்களுக்கு அமைச்சர்கள் அதில் ஈடுபட்டுப் பணத்தை வசூலித்தால் அது குறை அல்ல, அது குற்றம் அல்ல என்று அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சிறந்த கிரிமினல் லாயராக இருந்தவர்கள். குற்றம் செய்யவில்லை என்று சொல்லுவதைவிட, செய்ததாகச் சொல்லி, அது குற்றம் அல்ல என்று வாதாடுவது சாமர்த்தியத்தின் பால் பட்டது. அந்த வகையில் சில பேர்கள் தாங்கள் வசூல் செய்யவில்லை என்று நடந்ததை மறுத்திருப்பார்கள். 'ஆமாம், அப்படித்தான் நடந்தது. அது எப்படி குற்றம் ஆகும்? நாங்கள் கட்சிக்காரர்கள் அல்லவா? கட்சித் தலைவர்கள் அல்லவா? தேர்தல் என்றால் செலவு இல்லையா, செலவுக்குப் பணம் வசூலிக்க வேண்டாமா? அந்த வசூல் காரியங்களில் மந்திரிகள் ஈடுபட்டால் என்ன குற்றம்?' என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அதில் என்ன குற்றம் இருக்கிறது என்று கேட்டால், மூன்று வகையான குற்றங்கள் இருக்கின்றன.

முதலாவதாக, மந்திரிகள் என்றால் பொதுமக்களுடைய மந்திரிகளே தவிர, காங்கிரஸ் கட்சிக்கு மந்திரிகள் அல்ல. அவர்களுக்குத் தரப்படுகிற சம்பளங்கள், கொடுக்கப்படுகிற அந்தஸ்துகள், அவர்கள் பெற்றிருக்கிற அதிகாரங்கள் மொத்தமுமே எல்லா மக்களுக்கும் சேர்த்துத் தரப்பட்டதே தவிர, காங்கிரஸ் கட்சியினுடைய வளர்ச்சிக்காகத் தரப்பட்டது அல்ல. ஆகையினால், அவர்கள் மந்திரி பொறுப்பில் இருக்கிற வரையில், எல்லாக் கட்சியினருக்கும் உட்பட்டவர்கள் அல்லது மேற்பட்டவர்கள் என்று கருதலாமே தவிர, கட்சிப் பிரசாரம் செய்வதற்கு, கட்சித் தேர்தலுக்குப் பணம் திரட்டுவதற்குப் போவது என்பது அமைச்சர்கள் தங்களுடைய தரத்தை குறைத்துக் கொள்வதாகும். அது என்னுடைய முதல் காரணம். ஆகவே அமைச்சர்கள் அதிலே ஈடுபடக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இரண்டாவது காரணம், "நாங்கள் போய் கேட்காவிட்டால் பணம் கிடைக்குமா?" என்று நமது அமைச்சர் அவர்கள் வாதாடுவதைப் போல இங்கே பேசுகிறார்கள். ஒரு கட்சிக்குப் பொது மக்கள் எதனால் ஆதரவு தருகிறார்கள்? தேர்தல் நிதிக்கு ஏன் பணம்

தருகிறார்கள்? 'அந்தக் கட்சி நமது அபிலாஷைகளை நிறைவேற்றுகிற கட்சி, அதன் கொள்கைகள் நம்முடைய கொள்கைகள். அந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தால்தான் நாம் வாழ முடியும்' என்ற நம்பிக்கையில் பேரில் பொதுமக்கள் தாங்கள் விரும்புகிற கட்சிக்குப் பணத்தை தருவார்கள். அது உண்மையாக இருக்குமானால் ஒவ்வொரு கட்சியும் தேர்தலுக்கான அறிக்கையில் இதை வெளியிடலாம். 'எங்களுக்குத் தேர்தலுக்கு செலவு இருக்கிறது. பணம் கொடுங்கள் என்று வசூலித்துக் கொள்ளுவது மிக நாகரிக முறையாகும். கனம் நிதி அமைச்சர் அவர்கள் என்னை கேட்க பிரியப்படலாம் - அப்படியா நீங்கள் செய்கிறீர்கள்? நீங்கள் ஊர் ஊராகப் போய் பணம் வசூல் செய்யவில்லையா? என்று கேட்கக்கூடும். அவர்கள் அப்படி என்னைக் கேட்பது என்னுடைய வாதத்தை வலுப்படுத்துவதாகும். அறிக்கை மூலம் பணம் கிடைக்காது என்று தெரிந்து, அமைச்சர்கள் ஊர் ஊராகப் போய்த் தேர்தலுக்குப் பணம் திரட்டுகிறார்கள் என்றால், 'மந்திரி'கள் கேட்டால் பணம் அதிகமாக கொடுப்பார்கள்' என்ற என்னுடைய வாதத்தை அவர்கள் மறைமுகமாக ஏற்றுக் கொள்கிறார்கள் ஒப்புக்கொள்கிறார்கள் என்பதுதான் பொருள். மந்திரிப் பதவியின் செல்வாக்கை கட்சிக்காகப் பணம் திரட்டுவதற்குப் பயன் படுத்தக்கூடாது. மந்திரி என்ற காரணத்தினால் சில செல்வாக்கு ஏற்படுகிறது. சிலருக்குச் செல்வாக்கு இருப்பதினால் மந்திரிகள் ஆகிறார்கள். சிலர் மந்திரிகள் ஆனதினால் செல்வாக்குப் பெருகிறார்கள். எந்த விதத்தில் செல்வாக்கு வந்தாலும், அந்தச் சொல்வாக்கை நாட்டு மக்களுக்குப் பயன்படுத்த வேண்டுமே தவிர, அந்தச் செல்வாக்கை வைத்து கட்சித் தேர்தல் நிதிக்குப் பணம் திரட்டுவது மிகமிகத் தரக்குறைவான காரியம். டெல்லியிலுள்ள அமைச்சர் அவர்கள் - திருமதி தாரகேசுவரி சின்ஹா என்று கருதுகிறேன் - தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி வடநாட்டில் பல நகரங்களுக்குச் சென்று சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் லட்சக்கணக்கான பணத்தை அங்காடிக்குச் சேர்த்தார்கள் என்று பத்திரிகையிலே பார்த்தேன். நம்முடைய மந்திரிகளும் ஒவ்வொரு அங்காடிக்கும் வரட்டும், வீட்டுக்கு வீடு ஏறி இறங்கட்டும், மாளிகைகளை பார்க்கட்டும், மண்டிக்கடைக்குப் போகட்டும் - பொதுமக்களுக்கு தேவையான பணத்தை திரட்டுவதற்கு அந்த வகையில் தங்கள் செல்வாக்கை பயன்படுத்துவார்களே யானால் அவர்களை உச்சி மேல் வைத்து கொண்டாடும் ஜனநாயக உலகம் என்பதத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதை விட்டுவிட்டு,

மந்திரிகள் என்ற காரணத்தினால் ஏற்படக்கூடிய செல்வாக்கை வைத்துக்கொண்டு கட்சி தேர்தல் நிதிக்கு பணம் திரட்டுகிறது என்பது மிகமிகத் தரக்குறைவான காரியம் என்பதை நான் மறுபடியும், மறுபடியும் குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன். ஆகையினால், தேர்தல் நிதிதிரட்டுவது என்ற காரியத்திலே இனியாவது நமது அமைச்சர்கள் ஈடுபடாமல் இருப்பார்களேயானால்தான், அவர்களைப் பற்றி பொதுமக்கள் கொண்டிருக்கிற சந்தேக உணர்ச்சி குறைக்கப்படுமே தவிர, 'இல்லை அப்படித்தான் செய்வோம்' என்று சொன்னால் - உண்மையிலேயே அமைச்சர் அவர்கள் எங்களைப் பார்த்துச் சொன்னதுபோல், - 'அப்படியானால் வெளியிலே போங்கள்' என்று சொன்னதுபோல், - சொல்லத் தக்க அரசியல் பொறுப்பற்ற தன்மையும் எனக்கு இல்லை, அப்படிப்பட்ட அதிகாரத்திலும் நான் இல்லை. ஆகையினால் நான் அப்படிச் சொல்லமாட்டேன் - பொதுமக்கள் பார்த்து 'நீங்கள் வெளியே போங்கள்' என்று சொல்லக்கூடிய காலம் வெகு விரைவிலே வரும் என்று நிச்சயமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றும் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வாங்குகிற பணம், காங்கிரஸ் கட்சி தேர்தல் நிதி யார்யாரிடமிருந்து திரட்டப்படுகிறது என்பதற்கு, பம்பாய் ஹைகோர்ட்டு, கல்கத்தா ஹைகோர்ட்டு ஆகிய நீதிமன்றங்களில் தரப்பட்ட தீர்ப்புகளை படிக்கிற நேரத்தில், உண்மையிலே அரசியல் நாகரிக உணர்ச்சி படைத்த யார்தான் இஷ்டப்படுவார்கள்? டாடா கம்பெனி - தனிப்பட்ட முதலாளிகள் - 'எஃகு தொழிற்சாலை நிரந்தரமாக இருக்கவேண்டுமானால் இந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தால்தான் முடியும் என்று கருதி, காங்கிரஸ் கட்சி தேர்தல் நிதிக்கு பணம் கொடுக்கிறோம்' என்று டைரக்டர்கள் சார்பிலே பம்பாய் ஹைகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருக்கிறார்களே? காங்கிரஸ் கட்சிக்கு பணம் கொடுக்கிற மக்கள் யார்? காங்கிரஸ் கட்சியை காப்பாற்றவேண்டும் என்று விரும்புகிறவர்கள் யார் என்பது இதிலிருந்து வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. அவர்களை அண்டுவதற்கும், பேசுவதற்கும் மந்திரிகள் போனால்தான் முடியும் என்ற காரணத்தினால் அமைச்சர்கள் போகிறார்களே தவிர, இல்லை என்றால் காங்கிரஸ் கட்சிக்கு தேர்தல் நிதி திரட்ட தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரால் முடியாதா? தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருக்கு உங்களுக்கு இருக்கிற செல்வாக்கு இல்லை என்று சொல்லுகிறீர்களா?

கனம் திரு. சுப்பிரமணியம் அவர்கள் கேட்டால் ரூ. 1,000 கொடுப்பவர்கள், திரு. அழகேசன் அவர்கள் கேட்டால் தரமாட்டார்கள் என்று கருதுகிறீர்களா? ஏன் என்னுடைய மாவட்டத்திலுள்ள பெரியவரை அவ்வளவு தரக் குறைவாக, செல்வாக்கற்றவராக நீங்கள் கருதி, அவரை தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராக வைத்துக்கொண்டு, இந்த சாதாரண தேர்தல் நிதி திரட்டும் காரியத்தில்கூட நீங்கள் குறுக்கிடுகிறீர்கள்? மாவட்டத்தில் இருக்கிற காங்கிரஸ் தலைவர்கள் என்ன செய்கிறார்கள்? மாவட்டத்தில் இருக்கிற பழம்பெரும் காங்கிரஸ் தியாகிகள் என்ன செய்கிறார்கள்? உங்கள் 8 பேர்கள் நீங்கலாக தேர்தல் நிதி திரட்டுவதற்கு ஆள் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதா? காங்கிரஸ் என்றால் நீங்கள் 8 பேர்கள்தானா? நீங்கள் 8 பேர்கள் கேட்டால்தானா காங்கிரஸுக்கு பணம் தருவார்கள்? ஏன் உங்கள் கட்சியை இப்படி இழிவுபடுத்துகிறீர்கள்? உங்களை உயர்த்திக் கொள்ள வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அந்த உயர்ந்த எண்ணத்திலே இருந்துதான் நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள்; 'இஷ்டம் இருந்தால், இரு, இல்லையானால் போ' என்று. அந்த உயர்ந்த பண்பு வளரட்டும். ஆனால், தேர்தலுக்கு நிதி திரட்டுகிற அளவுக்குக்கூட காங்கிரஸ் தலைவர்களுக்கு செல்வாக்கு இல்லை என்றா கருதவேண்டும்? ஆகிய காரணங்களினால், இந்தத் தேர்தல் நிதி திரட்டுகிற காரியத்தில் அமைச்சர்கள் ஈடுபடவேண்டாம் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றும் ஒன்று. தேர்தல் வருவதற்கு 6 திங்களுக்கு முன்னால், 3 திங்களுக்கு முன்னாலாவது அவர்கள் பதவியை விட்டு விலகவேண்டுமென்ற கருத்து என்னுடைய கழகத்தினாலே அதிகாரபூர்வமாக எடுத்துச் சொல்லப்படவில்லை என்றாலும், நாட்டில் அப்படிப்பட்ட ஒரு கருத்து மிக வேகமாகப் பரவிக்கொண்டு வருகிறது. இது எந்த ஜனநாயக நாட்டிலும் நடைபெறுவதில்லை என்ற வாதத்தை நீங்கள் தருவீர்கள் என்றாலும், வளர்ச்சி அடையாத ஜனநாயக நாடுகளிலே இருக்கும் ஜனநாயகத்துக்கும், இந்த நாட்டு ஜனநாயகத்தின் தூய்மையைக் காப்பாற்ற, உங்களுடைய நற்பெயரைக் காப்பாற்றிக்கொள்ள நீங்கள் தேர்தலுக்கு 6 திங்களுக்கு முன்னால் பதவியிலிருந்து விலகுவதுதான், நாட்டு மக்களுக்கு நீங்கள் எடுத்துக்காட்டக்கூடிய மிகச்சிறந்த ஜனநாயகப் பண்பு என்பதை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். கவர்னரைப் பற்றியும், மற்றவர்களைப்

பற்றியும் பேசியதிலே நாங்கள் ஏதோ வெளியிலே ஒன்று பேசுகிறோம். உள்ளே ஒன்று பேசுகிறோம் என்று மதிப்பிற்குரிய காங்கிரஸ் கொரடா எடுத்துச் சொன்னார். கொரடா என்று சொன்னாலே, எது அகப்படுகிறதோ, அதைப் பிடித்து இழுப்பது என்பது பொருள். ஏதோ கிடைத்ததை வைத்துக்கொண்டு அவர் இழுத்திருக்கிறார். அவருக்கு தக்க சமயத்தில், தக்க இடத்தில் நான் தனியாக பதில் சொல்லிக்கொள்கிறேன். அவருக்குச் சொல்லுவேன், இந்தத்தடவை கொரடா, இல்லாததைப் பிடித்து இழுத்து, இழுத்து, கொரடாவும் கையுமாகச் சண்டை போடுவது என்ற முறையில், 9 லட்சம் கவர்னருக்காக ஆகின்ற செலவா என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அவசரத்திலே நாலடியார் என்ற தமிழ்ப்புலவர் ஏதோ சொன்னதாகச் சொன்னார். நாலடியார் என்ற தமிழ்ப் புலவர் இல்லை. நாலடியார் என்ற புத்தகத்துக்குப் பெயர் இருக்கிறது. ஆகவே அவருடைய ஆர்வத்தைப் பாராட்டி, அவசரத்திற்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டு, நான் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

நில உச்சவரம்பு சட்ட முன்வடிவு

உரை : 45 **நாள் : 29.08.1961**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே, நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுவது என்ற இந்தத் திட்டம் பல ஆண்டுகளாக நமது நாட்டு மக்களுக்கு தரப்பட்டு வந்த தேர்தல் வாக்குறுதியென்று அதனை எடுத்துக்கொள்ளலாம். நாட்டிற்குத் தேவையான அந்த நல்ல திட்டத்தை முற்போக்கு கருத்து படைத்த எல்லாக் கட்சிகளுமே வரவேற்று அதன் மூலமாக சமுதாயத்திலுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஓரளவிற்கு குறைத்தும், அதே நேரத்தில் விவசாயத்தை வளரச் செய்யத் தக்கவிதத்தில் நிலைமையை மாற்றியமைக்கலாம் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தோன்றியிருக்கிற இந்த மசோதா சட்டமாக்கப் படுவதற்கான நிலை உருவாகியிருக்கிற நேரத்தில் நான் அமைச்சரவைக்கு தங்கள் மூலம் சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நாட்டு மக்கள் இந்த விஷயத்தில் எவ்வளவு அக்கறையுற்றிருக்கிறார்கள் என்பதையும், ஒரு புரட்சிகரமான சட்டம் வரப்போகிறது என்று எண்ணிக் கொண்டிருந்தவர்கள் வரப்போகிற சட்டம் உண்மையிலே நாட்டு நிலைமையை திருத்தியமைக்கத் தக்க வகையில் அமையவில்லையென்று ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதையும் எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். உள்ளபடி நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுவது எந்த நோக்கத்திற்காக என்பதிலே அடிப்படையிலே கட்சிகளுக்குள் அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன என்றாலும் ஆளும் கட்சியினர் இந்த அடிப்படை விஷயத்தில்கூடத் தங்கள் கருத்துக்களை அடிக்கடி மாற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள். சில வேளைகளில், நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுவது உற்பத்தியைப் பெருக்குகிற எண்ணத்தோடு என்று வாதாடியிருக்கிறார்கள். சில நேரங்களில், உச்சவரம்பு கட்டுவது பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்காக என்று எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இப்பொழுது

பொறுக்குக் கமிட்டிக்குச் சென்று ஈளைகட்டி இளைத்துத் திரும்பி வந்திருக்கிறபோது அவர்கள்,

"The Committee decided that it should be amplified bringing out clearly that the legislation was no pursuance of the Defective Principles of State Policy enumerated in clause 3 (c) of Article 39 of the Constitution."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசியல் சட்டத்தில் இருக்கிற 39-வது பிரிவின் அடிப்படையில்தான் நாங்கள் இந்தச் சட்டத்தை உருவாக்கியிருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தச் சட்டத்தில் அவர்கள் தங்களது கருத்தைப் பல முறை மாற்றினாலும், சட்டத்தில் குறிப்பிட்டிருக்கிற 39-வது பிரிவை வெற்றிகரமாக நிறைவேற்றி வைப்பதற்கு ஏற்ற வகையில் அது அமையவில்லையென்று நான் பணிவன்புடன் அமைச்சரவைக்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். உள்ளபடி ஒரு புரட்சிகரமான முறையில் ஒரு சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால் அது எவ்வளவுக்கு எவ்வளவு விரைவாக நிறைவேற்றப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவுதான் அதில் பலன் கிடைக்க முடியும். ஆனால் இந்தச் சட்டம் கடந்த 15 ஆண்டுகாலமாக வரப்போகிறது, வரப்போகிறது என்று சொல்லப்பட்டு வந்து, இன்றையதினம் அத்துறைக்கு அமைச்சராக அமைந்திருக்கிற கனம் மாணிக்கவேலர் அவர்கள், எதிர்த்தரப்பிலிருந்து இப்படி ஒரு சட்டம் வரப்போகிறதா என்று அவர்களே கேலி செய்து பேசிய அந்தக் காலத்திலிருந்து அதே சட்டத்தை இதோ கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்கிற அளவு பலர் தங்கள் அரசியல் அவதாரங்களை மாற்றிக் கொள்ளும் அளவு அவ்வளவு காலம் அளிக்கப்பட்டிருக்கிறது. நான் அவதாரங்கள் என்று சொல்வதால் அவரைக் கடவுளின் நிலைக்கு உயர்த்தி விட்டதாகக் கருத வேண்டாம். கேலிப் பொருள் என்றும் நினைக்க வேண்டாம். அவ்வளவு காலம் பிடித்திருக்கிறது என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன். இவ்வளவு காலம் பிடித்திருப்பதால் நிலச் சொந்தக்காரர்கள் இந்தச் சட்டம் வந்தால் தங்களைப் பாதிக்காமல் இருக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு வகையில் நிலத்தைப் பிரித்து எழுதிக் கொண்டார்கள் என்பதை ஒளிவு மறைவில்லாமல் அமைச்சர் அவர்களே இந்த மன்றத்தில் பலமுறை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மற்ற எல்லா அமைச்சர்களையும்விட கனம் மாணிக்கவேலு அவர்களிடத்தில் நமக்கு பெரிய மதிப்பு இருப்பதற்கு காரணம், அவர் உள்ளொன்று வைத்து புறமொன்று

சொல்லக்கூடிய பெரிய அரசியல்வாதியாக தன்னை கருதிக் கொள்ளாமல், ஆமாம், நிலத்தைப் பிரித்துக்கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள், எப்படியும் நிலத்தைப் பிரிக்க வேண்டும் என்பதுதானே நமது நோக்கம், அதனால் நமக்கென்ன என்ற அளவில் வாதாடியிருக் கிறார்கள். இவ்வாறு பிரித்துக்கொள்வதில் நம்முடைய நோக்கம் ஈடேறாது, அதே நேரத்தில் இதன் மூலம் எந்தவிதமான பலனும் ஏற்படப்போவதில்லை என்பதை யாரும் மறைக்க முடியாது. அவர்கள் தாங்களாகவே பிரித்துக்கொண்டார்கள் என்றால், சட்டம் வந்து, அதிகப்படியான நிலங்களை சர்க்கார் தங்களிடமிருந்து வாங்கிக் கொள்வார்கள், அதனால் பலவிதமான சங்கடங்கள் ஏற்படும், அதிலிருந்து தப்பித்துக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தினால்தான் பிரித்துக்கொடுத்திருக்கிறார்கள். சட்டத்திலுள்ள ஓட்டையைப் பயன்படுத்தித் தப்பித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. ஒரு கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள், மடாதிபதிகள் கையில் நிலங்கள் இருந்தாலும், தர்ம ஸ்தாபனங்களிடம் இருந்தாலும், அவர்களா நேரடியாக வந்து உழப்போகிறார்கள், உழவர்கள் இறங்கித்தானே வேலை செய்யப் போகிறார்கள், ஆதலால் இதில் தவறொன்றுமில்லை, என்று. அவ்வாறு எடுத்துச்சொல்வது, அதை ஓரளவுக்கு விரிவாக பரிசீலனை செய்து பார்த்தால், நாட்டில் திருடுகின்றவர்கள், திருடிய பொருளை இந்த நாட்டில்தானே செலவு செய்யப்போகிறான், அமெரிக்காவுக்கோ அல்லது ஆஸ்திரேலி யாவுக்கோ கொண்டு போய்ச் செலவு செய்யப்போவதில்லை. முத்தன் வீட்டுப் பொருள், முனியன் வீட்டுக்குப் போகிறது, முனியன் வீட்டுப் பொருள் சின்னன் வீட்டுக்குப் போகிறது, ஆகவே இது களவல்ல, ஓர் இடத்திலிருந்து, மற்றொரு இடத்திற்க மாற்றி வைப்பதுதான் என்று நல்லவேளையாக யாரும் வழக்கு மன்றத்தில் வாதாட முன்வரமாட்டார்கள். அந்த அளவில் கனம் அங்கத்தினர் அவர்கள் கூறின விசித்திரமான வாதத்தை கூர்மையாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். இப்போது இருக்கின்ற பிரச்சினை, உச்சவரம்பு சட்டத்தைக் கொண்டு வருவதால் என்ன பலன் ஏற்படும் என்பதை நாட்டு மக்களுக்கு அறிவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஒரு சட்டத்தைக் கொண்டு வரும்போது, அதன் மூலம் நாம் என்னவெல்லாம் பலன்களை எதிர்ப்பார்க்கின்றோம் என்பதை நாம் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். அந்த முறையில் இச்சட்டத்தில் எதுவும் குறிப்பிடப் பட்டிருப்பதாகச் தெரியவில்லை. ஏனென்றால்

விதிவிலக்குகளை எல்லாம் நீக்கி விட்டு மீதி இருப்பது என்ன என்பதைப் பார்க்கும்போது, முன்பு நான் ஒருமுறை சட்ட மன்றத்தில் குறிப்பிட்டதை இப்போது நினைவூட்ட விரும்புகிறேன். இது உச்சவரம்பு மசோதா அல்ல, மிச்சமிருப்பதற்கு வரம்பு கட்டும் மசோதா என்பது மட்டுமல்ல, இதன் மூலம் பாதிக்கப்படுகின்ற ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு, அடைக்கலம் அளிக்கும், அபயம் அளிக்கும் மசோதா என்றுதான் நான் நம்புகிறேன். உலகத்தில் முற்போக்கான நாடுகளை எடுத்துக் கொண்டால், இம்மாதிரியான சட்டத்தைக் கொண்டு வருகின்ற நேரத்தில், ஒரே இரவில் சிந்தித்து, திடீரென்று கொண்டு வந்து, நில உடமைகள் கைமாறிப்போகாமல், அவைகளைச் சமுதாயத்திற்குக் கொண்டு வருகின்ற நிலையில் அவசர அவசரமாகத் தீவிரமான அடிப்படையில் இப்படிப்பட்ட சட்டங்களைக்கொண்டு வந்து நிறைவேற்றுகிறார்கள். நாம் இந்தச் சட்டத்தைப்பற்றி, 15, 16 ஆண்டுகளாக பேசிக்கொண்டு வந்திருக்கின்றோம். உழவர்களுக்கு நிலம் சொந்தமாக்கப்படும் என்று உரத்த குரலில் பேசியிருக்கிறோம். இப்போது சட்டத்தை நிறைவேற்றிய பின்னால் எந்த அளவுக்கு அவர்களுக்கு நிலம் கிடைக்கும், எந்த அளவுக்கு நிலமில்லாதவர்களுக்கு நிலம் தரப்படும், எந்த அளவுக்கு நிலங்கள் மீதமாக அரசாங்கத்தின் கைக்கு வந்து சேரும் என்பதை கணக்கெடுத்துப் பார்க்கின்ற நேரத்தில், இது ஒரு கேலிக்கூத்தாகவும், ஒரு கண் துடைப்பாகவும், எரிச்சல் தரக்கூடியதாகவும், ஏமாற்றம் அளிப்பதாகவும் இருக்கிறதே தவிர, என்ன பலனை இதன் மூலம் இந்த நாட்டு மக்கள் பெறப்போகிறார்கள்? பெறுவதற்கு ஒன்றுமே யில்லை. ஆகையினால்தான் நாட்டு மக்களிடத்தில் இதைப்பற்றி ஒரு பரபரப்பு உணர்ச்சியில்லை. முற்போக்கான நாடுகளில், இம்மாதிரி நிலங்களுக்கு உடமையாக்கக் கூடிய சட்டங்கள் வரும்போது, அந்த நாட்டில் இருக்கின்ற, அந்த நாட்டு மக்களுக்கு இருக்கின்ற பரபரப்பைப்போல் நாம் இந்த நாட்டு மக்களிடத்தில் பார்க்க முடியவில்லை. நிலங்களுக்கு உச்சவரம்பு கட்ட வேண்டும் என்று எகிப்து நாட்டில் தலைவர் நாசர் அறிவித்த போது, எண்ணற்ற மக்களுக்கு நிலம் கிடைக்கப்போகிறது என்ற மகிழ்ச்சியில், அந்த நாட்டு மக்கள் தேர்திருவிழா போன்று அன்றைய தினத்தைக் கொண்டாடினார்கள் என்பதை நாம் பத்திரிகை வாயிலாக பார்க்கின்றோம். இம்மாதிரியான சட்டங்கள் உலகத்திலுள்ள முற்போக்கான நாடுகளில் எல்லாம் வரும்போது அங்குள்ள நாட்டு மக்கள் எல்லாம் வாழ்த்தி வரவேற்கும்போது, இம்மாதிரியான ஒரு

சட்டம், ஒரு புரட்சிகரமான சட்டம் நமது நாட்டில் கொண்டு வருகின்ற நேரத்தில் உப்பு சப்பற்ற நிலைமை, அன்பும் அக்கறையும் இல்லாத நிலைமை, இருப்பதற்கு என்ன காரணம்? இதற்குக் காரணம் எல்லாம் இந்த விதிவிலக்குகள்தான், மடாலயங்களுக்கு கொடுத்தது கூட நியாயம்தான், ஆனால் சர்க்கரை ஆலைகளுக்கு விதிவிலக்கு கொடுத்ததைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும் என்று கனம் ஆளும் கட்சி அங்கத்தினர் ஒருவர் கேட்டுக்கொண்டார். எதிர் தரப்பு அங்கத்தினர்களுக்கு வேண்டுமானால் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம், ஆனால் ஆளும் கட்சி அங்கத்தினர்களுக்குள்ளேயே வேறுபட்ட கருத்துக்கள் இருப்பதற்கு காரணமென்ன? தங்கள் கட்சிக் கூட்டங்களில் இதைப்பற்றி விரிவாக விவாதிக்காமல் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதா? ஏன் இந்த வேறுபாட்டுக்குக் காரணம்? உண்மையிலேயே இது ஒரு விசித்திரமான நிலைமையாக நான் கருதுகிறேன். இதில் இருக்கின்ற ஓட்டைகளை எடுத்துக் காண்பிக்கும்போது, அதை வெறும் கட்சி கண்ணோட்டத்தோடு மட்டும் பார்க்கவேண்டாம் என்று தங்கள் மூலமாக அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன். சர்க்கரை ஆலைகளுக்கு விதிவிலக்கு கொடுப்பது சரியல்ல என்று ஆளும் கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் கந்தசாமி முதலியார் அவர்களும், மடாலயங்களுக்கு விதிவிலக்கு அளித்தது மன்னிக்க முடியாதது என்று தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஆளும் கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் ஒருவரும் குறிப்பிட்டார்கள், இதிலிருக்கின்ற ஓட்டை உடைசல்களை சுட்டிக்காட்டும்போது கலையுலகத்தைப்பற்றி சற்றுப் பேசிவிட்டால் எங்களை ஏதோ குட்டுவது போல் இருக்கும் என்று எண்ணிக்கொண்டிருக்கின்ற கனம் அங்கத்தினர் அவர்கள் - உண்மையிலேயே துணிவு இருந்தால், தைரியம் இருந்தால், கலையைப் பொதுவுடமையாக்குவதற்குத் தக்கதொரு திட்டம் தரப்பட்டால் அதை முதலில் வரவேற்கக்கூடியவர்கள், ஆதரிக்கக்கூடியவர்கள் எங்கள் தரப்பில்தான் இருப்பார்கள் என்பதையும் வேறு பிரச்சினைகளில் எல்லாம் எங்களுக்கு அக்கறையில்லை என்றும், ஏதோ கலையைப்பற்றி பேசி எங்களை ஆத்திரமூட்டிவிடலாம் என்று நினைத்துப் பேசுகின்றவர் களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இலாபத்தைக் கலை யுலகில் கட்டுப்படுத்தவேண்டும், அவ்விதம் கட்டுப்படுத்தாத இந்தச் சர்க்கார் மடாலயங்களில் போய் அவர்களது சொத்தைக் கட்டுப்படுத்துவது என்பது எவ்வளவுக்கு பொருந்தும் என்று கேட்பவர்கள்...

திரு. எம். ஆர். கந்தசாமி முதலியார் : On point of order, Sir, நான் சொன்னது, கலையுலகை கட்டுப்படுத்தாமல், மடாலயத்தை மட்டும் கட்டுப்படுத்துவது சரியல்ல என்றும், கலையுலகிற்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்றும்தான் நான் குறிப்பிட்டேன்.

துணை சபாநாயகர் : This is not a point of Order.

திரு. சி. என். அண்ணாதுரை : இம்மாதிரியான விதிவிலக்குகள் பல கொடுத்திருப்பதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. ஆகவே இந்தச் சட்டம் நல்லவிதத்தில் திருத்தி அமைக்கப்பட வேண்டுமானால் விதிவிலக்கு அளித்திருப்பதை நிறுத்தி - அவ்விதம் யாராவது விதிவிலக்கு வேண்டும் என்று கேட்டாலும்கூட, அதை இந்த மன்றத்தில் கொண்டு வந்து விவாதிப்பதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்து, அதன் பின் யார் யாருக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்பதை ஆராய்ந்து பார்த்து அதன்படி விதிவிலக்கு கொடுத்திருந்தால்கூட ஓரளவு முறையாக இருந்திருக்கக்கூடும். ஆனால் முதலில் கொண்டு வரப்பட்ட இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்குப் போய்வந்த பிறகு எப்படியிருக்கிறது என்றால் - மாமனார் வீட்டுக்குப்போய் இருந்து உடல் தேறி வரலாம் என்று போன மருமகன், அங்கு போயும் வறுமையாக இருந்து, இருந்த வலிமையையும் இழந்து வீட்டுத் திரும்பி வந்தது போல் - பொறுக்குக் கமிட்டிக்குப்போய் விட்டுத் திரும்பியும் பல ஓட்டை ஓடிசல்களோடு திருப்பிவந்திருக்கின்ற மசோதா யாருக்குமே திருப்தி அளிக்காது என்று நான் கருதுகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் திருப்தியையோ, அல்லது அதிருப்தியையோ முகபாவத்தில் காண்பிக்கக்கூடிய அளவுக்குப் பயிற்சி இல்லாதவர் என்றாலும், இதில் அவர்களுடைய நிலை என்ன என்பது அவர்களுடைய புன்னகையி லிருந்து ஓரளவுக்குத் தெரியவருகிறது. மேய்ச்சல் காடுகளுக்கு விதிவிலக்கு அளித்து, தோப்பு தோட்டங்கள் முதலியவற்றுக்கு விதிவிலக்கு அளித்து, சர்க்கரை ஆலைகளுக்கு விதிவிலக்கு அளித்து, மடாலயங்களுக்கு விதிவிலக்கு அளித்து, நல்லவிதத்தில் வருமானம் கிடைக்கக்கூடியவைகளுக்கு எல்லாம் விதிவிலக்கு அளித்து, இத்தனைக்கும் பிறகு மிச்சம் என்ன இருக்கும் என்று பார்த்தால், இவைகளில் எல்லாம் தங்கள் உடைமைகளை ஈடுபடுத்திக்கொள்ளா தவர்கள், அப்பாவி மனிதர்கள் சிக்கிக்கொண்டு இருக்கின்றார்களே அவர்களது நிலம் தவிர வேறு எதையும் எதிர்ப்பார்க்க முடியவில்லை. இதைப்பார்த்துத்தான் எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்

அவர்கள் கேட்டார்கள், எதற்காக இம்மாதிரி ஒரு சட்டத்தைக்கொண்டு வருகிறீர்கள் என்று. இதன் மூலம் யாரை திருப்திப்படுத்தப் போகிறார்கள்? எந்த நியாய அடிப்படையில் இதை அமுலாக்குகிறார்கள்? இதன் மூலம் என்ன பலனை நாட்டுக்குத் தர இருக்கிறார்கள்? என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். உற்பத்தி பெருகுவதற்கு அவர்களுக்குச் சொந்தத்தில் நிலம் இருந்தால்தான் நல்ல விளைச்சல் இருக்கும். அப்போதுதான் விவசாயி அதிக அக்கறை காட்டி பாடுபடுவான் என்று விவசாய அமைச்சர்கள் கூடிய மகாநாட்டில் பேசியிருக்கிறார்கள். உழுபவர்கள், நாம் உழுகிறவர்கள், கடைசியில் அறுத்து எடுத்துக்கொண்டு போகின்றவர்கள் வேறு யாரோ, நாம் பாடுபடுகிறோம், ஆனால் பாடுபட்டுக் கிடைக்கின்ற பலன் வேறு யாருக்கோ போய்ச் சேருகிறது என்ற காரணத்தினால் அக்கறையற்று இருக்கிறார்கள். அவர்களுக்கு அக்கறை ஏற்பட வேண்டுமானால் தங்களுக்குத்தான் அந்த நிலம் சொந்தம் என்ற உணர்ச்சியும், அவர்கள் பாடுபடுவதன் பலன் அவர்களுக்குக் கிடைக்கும் என்ற உறுதிப் பாடும் அவர்களுக்கே இருந்தால்தான் ஏற்படும் என்று உணவுப் பிரச்சினை பற்றி ஆராய்ந்த விவசாய அமைச்சர்கள் பலமுறை எடுத்துப் பேசியிருக்கிறார்கள். அந்த வகையிலே இந்தச் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறதா, இந்தச் சட்டம் அதைப் பூர்த்தி செய்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை.

இந்த மடாலயங்களுக்கு, அற நிலையங்களுக்கு விதிவிலக்கு அளித்திருப்பதற்கு ஒரு சட்டப் பிரச்சினையைக் குறிப்பிட்டிருக் கிறார்கள். இப்படி சட்டப் பிரச்சினையைக் குறிப்பிட்டிருக்கிறார் களென்றால் உண்மையிலேயே, இந்த மசோதா இத்தனை ஆண்டுகளாக உருவாகிக்கொண்டிருந்த நிலையில், கருவில் உருவாகிக் கொண்டு வருவதைப் போல உருவாகிக்கொண்டிருந்த நிலையில் - சட்ட நிபுணர்களைக் கலந்தாலோசிக்கவில்லையா, கலந்தாலோசிக்கத் தவறி விட்டார்களா, அல்லது சட்ட ஆலோசனை கேட்காமல் இந்த மசோதாவில் குறிப்பிட்டு விட்டார்களா என்று அறிய விரும்புகிறேன். அவர்கள் குறிப்பிட்டிருப்பது அரசியல் சட்டத்தின் 26-வது விதியின்படி மடாலயங்களுக்கும், அற நிலையங்களுக்கும் '26 (c) to own and acquire movable and immovable property', என்று இருப்பதால் நாம் உச்சவரம்பு கட்டினாலும்கூட அவர்கள் புதிதாக நிலங்களை வாங்கிக்கொள்ள முடியும் அல்லது இருக்கிற நிலங்களைப் பறித்துக்கொண்டாலும் அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்ல முடியும், ஆக இதற்குத் தனியாக

ஒரு ஏற்பாடு இஷ்டப்பட்டால், தேவைப்பட்டால் செய்யலாம் - செய்யப் போகிறோம் என்ற உறுதியில்லை - இந்த மசோதாவைத் தயாரித்துக்கொண்டிருக்கிறோம் என்ற உத்திரவாதம் இல்லை - இந்த முறையில் தப்பித்துக்கொள்ள விரும்புகிற நேரத்தில் இந்த பாஷைதான் வருகிறது. ஆக தேவைப்பட்டால் இந்த மசோதா கொண்டுவரலாம் என்று குறிப்பிடுவதால் இப்போது இல்லை என்று ஏற்படுகிறது. நான் எடுத்துச் சொல்ல விரும்புவது, "To own and acquire movable and immovable property" இப்படி அவர்கள் அசையும், அசையா சொத்துக்களை வாங்கவும், உரிமையாக்கிக்கொள்ளவும் அவர்களுக்கு சட்டத்தில் இடம் கொடுத்திருப்பது இப்போது இருக்கின்ற உடமைகளுக்கும், இனி வாங்குவதாக இருந்தாலும் நாம் குறிப்பிடுகிற சட்டத்திற்கு உட்பட்ட அளவை குறிப்பிடுமே தவிர, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வாங்கும் அளவுக்கு ஒரு பெரிய உரிமை கிடைத்துவிடும் என்று யாரும் கருதத் தேவையில்லை. ஆக, இந்த 26-வது பிரிவைப் பற்றியே உத்திரப் பிரதேசத்தில் நடைபெற்ற இதே வகையான வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பைப் படித்துக் காட்டுவது பயனளிக்கும் என்று கருதுகிறேன்."

'Property dedicated to a religious, charitable or any other public purpose is not immune from acquisition by the State for public purposes.' என்று "Suryapal Singh v. State of U.P." என்ற வழக்கில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, பொதுக் காரியத்திற்காக, பொது நன்மையை உத்தேசித்து நிலத்தை சர்க்கார் தங்களுக்கு உடைமையாக்கிக் கொள்வதென்றால், மத ஸ்தாபனமாக இருந்தாலும், அற நிலைய ஸ்தாபனமாக இருந்தாலும் - மத ஸ்தாபனங்களால்தான் மதம் இருக்கிறதா என்பது விவாதத்திற்குரிய பிரச்சினை - அற நிலையங்களால்தான் அறம் தழைக்கிறதா என்பதும் விவாதத்திற்குரிய பிரச்சினை - இந்த அறமும் மதமும் இந்த நிலங்களால்தான் இருக்கிறதா என்பது அடிப்படையான பிரச்சினை - அவர்கள் தடுக்க விரும்பவில்லை. அப்படிப்பட்ட இடங்களில் இருந்தாலும் பொது நன்மைக்கு அது தேவை என்று சர்க்கார் கருதினால் அதைப் பெறலாம் என்று இந்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நானே இதைப் பார்த்திருக்கும் போது, எனக்கே இது கிடைக்கும்போது, சட்டப் புத்தகத்திலேயே ஈடுபடுத்திக்கொண்டிருக்கும் அமைச்சர்கள் பார்க்காமல் இருந்திருப்பார்களா? நிச்சயம் பார்த்திருப்பார்கள். நிச்சயம் தெளிவாக இருந்திருக்கும். ஏதாவது ஒரு தடை சொல்ல வேண்டு மென்பதற்காக, இது ஒரு சமயம் சட்டத்திற்கு விரோதமாக இருக்கக்கூடும் என்று

சொல்லியிருக்கிறார்களே தவிர, 26-வது பிரிவும் இப்போது நிறைவேற்றப்படுகின்ற சட்டமும் ஒன்றுக்கொன்று முரண் பட்டதல்ல என்று மிகச் சாதாரண - சட்ட அறிவு வேண்டியதில்லை - பொது அறிவு படைத்தவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். மத ஸ்தாபனங்களுக்கு விதி விலக்கு, அற நிலையங்களுக்கு விதிவிலக்கு, சர்க்கரை ஆலை நிலங்களுக்கு விதிவிலக்கு என்று விதிவிலக்குகள் கொடுப்பது நல்லதல்ல என்று கருதுகிறேன், கூடுமான வரையில் இந்த விதிவிலக்குகளை நீக்கினால் உண்மையில் ஒரு சட்டத்தை நிறைவேற்றினோம் என்று பெருமைப்பட்டுக்கொள்ள முடியும். பிற்காலத்தில் இந்தச் சட்டத்தை யார் கொண்டு வந்தார்கள் என்று அறிந்துகொள்ளும்போது, நம்முடைய அமைச்சரைப் பற்றி நம்முடைய பேரப்பிள்ளைகள் இப்படி ஒரு நிலச் சட்டத்தைக் கொண்டு வந்தாரே என்று நெடுங்காலத்திற்குப் பிறகு அவருடைய பேரப்பிள்ளைகளின் வாழ்த்துக்கு உரியவராகப் போகிறாரே என்று, எனது உற்ற நண்பர் என்ற முறையில், பரிதாபப்படுகிறேன் - எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளபடி மராட்டியத்தில் சர்க்கரை ஆலைகளின் சொந்தக் காரர்களெல்லாம் மிக அழகான வெளியீடுகளெல்லாம் போட்டு விண்ணப்பம் கொடுத்தார்கள், அமைச்சரவையிடத்தில் படை யெடுப்பு மாதிரி நடத்தினார்கள். ஆனால் அந்த நாட்டிலே சர்க்கரை ஆலைகளுக்கு தரப்படும் நிலங்களுக்கு விதிவிலக்கு கொடுக்க மாட்டோம் என்று சொன்னார்கள். அந்த நாட்டிலே இனிக்காத சர்க்கரை நம் அமைச்சர்களுக்கு இனிப்பானேன்? வயதான காலத்தில் சர்க்கரை இனித்தால் ஏதோ ஒரு வியாதி என்று சொல்லுவார்கள். இந்த வியாதி தனி ஆட்களுக்கும் கூடாது, கட்சிகளுக்கும் கூடாது. கட்சிகள் என்று சொல்லுகிற நேரத்தில் எங்களுடைய கட்சியைக் குறித்து எவ்வளவோ பேர்கள் வெகுக் கேலியோடு பேசினார்கள் என்று கேள்விப்பட்டேன். அப்படிப்பட்ட கேலிகளை, தாக்குதல்களை எதிர்பார்த்துத்தான் பொது வாழ்க்கையில் இருக்கிறேனே தவிர கேலிகளைக் கண்டு நான் அஞ்சவில்லை. ஆளும் கட்சிக்கு வியாதி வருவதும், எதிர்க் கட்சிக்கு வியாதி வருவதும், இந்த இரண்டில் எது ஆபத்தைத் தரும் என்று அரசியல் உணர்வோடு பார்ப்பவர்கள் கேலியாகக் கருதமாட்டார்கள். நிலத்திற்கு உச்ச வரம்பு கொண்டு வருவதன் அடிப்படையான காரணம் ஒரே இடத்தில் உடமை குவிந்துவிடக் கூடாது. ஒரே இடத்தில் வருவாய் குவிந்து விடக் கூடாது - பரவலாக்கப்படவேண்டும் என்பது. அந்த ஒரு

அடிப்படை தத்துவப்படி நிறைவேற்றப்படவேண்டுமானால், குறிப்பிட்டிருக்கிற இத்தனை விதிவிலக்குகளும் தேவையற்றவை, தீதானவை, கெட்ட நோக்கத்தோடு புகுத்தப்பட்டவை, யாரையோ திருப்திப்படுத்த ஏற்பட்டவை. இவைகள் பொது மக்களுக்கு எப்படி திருப்தியளிக்க முடியும்? ஆக துவக்கத்தில் சொன்ன மாதிரி இதைப்பற்றி அக்கறையற்ற தன்மையில் இருக்கிறார்கள். அமைச்சருக்குக்கூட, ஆளும் கட்சிக்குக்கூட என்னுடைய கட்சியிலிருந்து யார் யார் மாயையிலிருந்து விலகுவார்கள், யார் யார் தங்களிடம் சேர்வார்கள் என்பதில் உள்ள அக்கறை, விவசாயிகள் விஷயத்தில் ஏற்படாதது உள்ளபடி அவர்களுக்கு இருக்கிற அற்ப ஆசையையும், சட்ட விஷயத்திலே அக்கறையற்ற தன்மை இருப்பதையும் எடுத்துக் காட்டுகிறது. ஆகையால் இந்த மசோதா சட்டமாகும் நேரத்தில் பொதுமக்கள் வாழ்த்தி வரவேற்கும் முறையில் நல்லபடி திருத்தி அமைக்க வேண்டும்.

ஒவ்வொரு இடத்திலும் சிறுசிறு வார்த்தை மாற்றத்தினால் இந்தச் சட்டத்தின் உயிரைப் பறித்திருக்கிறார்கள். ஒரு சில கனம் அங்கத்தினர்கள் எங்களைச் சார்ந்தவர்கள் அடுக்குமொழியாக ஜால வார்த்தைகள் பேசி மக்களை ஏமாற்றுகிறார்கள் என்று சொன்னார்கள். எங்கள் அடுக்கு மொழியும் ஜால வார்த்தைகளும் அமைச்சர் அவர்கள் கண்டுபிடிக்கும் வார்த்தைக்கு எடைபோடக் காணாது. சிறு சிறு வார்த்தைகளை வைத்துச் சட்டத்தின் உயிரைப் பாழாக்கியிருக் கிறார்கள்.

இதே மன்றத்தில் ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதற்கு என்ன இலக்கணம் என்பதைப்பற்றி ஒரு ஏக்கர் நிலம் என்றால் கோயம்புத்தூரில் ஒரு ஏக்கர் நிலத்திற்கும், வட ஆற்காடில் ஒரு ஏக்கர் நிலத்திற்கும் ஒரே மாதிரி பலன் கிடைக்காதே, எப்படி நிர்ணயிக்கப் போகிறீர்கள் என்று கேட்ட நேரத்தில், ரெவின்யூ அமைச்சர் ஸ்டாண்டார்ட் ஏக்கர் என்பதற்கு இலக்கணம் கூறுகிறேன் என்று இலக்கணம் கொடுத்தார்கள். நிலத்திற்கு வரி வசூலிக்கப்படுகிறது என்று சொல்லி அதற்குக் கொடுத்த இலக்கணம்.

'Standard acre' in the definition as it stood the classification of the lands for the purpose of fixing the "standard acre" land revenue to which the land was assessed was taken as the basis. As 'land revenue' would include water cess, etc., the Committee decided that it should be taken to mean the basic 'land

assessment'.

அந்த நிலத்திற்குத் தருகின்ற தீர்வையை கணக்கெடுத்து, ஸ்டாண்டர்டு ஏக்கர் நிர்ணயம் செய்யலாம் என்று முடிவெடுத்த இலக்கணத்தை இப்போது மாற்றுவானேன்? யாருக்காக மாற்றுகிறீர்கள்? எந்த வற்புறுத்தலின் பேரில் இப்படி மாற்றுகிறீர்கள்? அப்படி மாற்றுவதிலே எவ்வளவு பெரிய தீமை ஏற்படப் போகிறது என்பதைப் புள்ளிவிவரம் அறிந்தவர்கள் உணர்ந்து கொள்ள முடியும். ஒரு நிலத்திற்கு தரப்படுகின்ற தீர்வையிலே, தண்ணீர் தீர்வையை கணக்குப் பார்க்கவேண்டும். அப்படி கணக்குப் பார்த்து, அதை நீக்கிவிட்டு பார்க்க வேண்டுமென்ற காரணம் என்ன? அப்படி அதை நீக்கிவிட்டுப் பார்த்தால் இது ரெவின்யூ நிலத்தின் விஷயத்தில் 100 ஏக்கர் இருக்கலாம் என்று சொல்கிற இடத்திலே, தண்ணீர் தீர்வையை நீக்கிவிட்டுப் பார்த்தால் 200 ஏக்கர் வைத்துக்கொள்ளலாம் என்ற நிலைமையைத்தான் உண்டுபண்ணுகிறது. இன்னமும் சற்று ஆராய்ந்து பார்த்தால், அப்படி நிலத்தை வைத்துக்கொண்டுள்ளவர்கள் ஆளும் கட்சியிலே எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதை ஒரு திங்களில் பார்த்து விட முடியும். ஆனால் நாம் அந்த அளவுக்குப் போக விரும்பவில்லை. நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புவது என்ன வென்றால், நாமே இந்தச் சட்ட மன்றத்திலே நம்முடைய அமைச்சர் அவர்கள் இதற்கு வகுத்த இலக்கணத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் போது, இப்போது எதற்காக மாற்றுகிறீர்கள்? என்பதுதான். அப்படி மாற்றத் தூண்டியது எது? யார் மாற்றச் சொன்னார்கள்? அப்படி மாற்றும்படி உங்களை ஊக்குவித்தது யார்? அப்படி மாற்றுவதினால் என்ன பலன் கிடைக்கிறது? என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அவர்களுடைய பேச்சிலே நமக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

மற்றொன்று, வார்த்தைகளை மாற்றுவதிலே அவர்கள் உண்டாக்குகின்ற பல தீமைகளில் ஒன்றை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதுபற்றி ஒவ்வொரு விதியாகப் பேசப்படுகின்ற நேரத்திலே கவனிக்கப்பட்டாலும், இப்போது பொதுப்படையாக சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். 40-வது கிளாசிலே அதைப்பற்றி போட்டிருப்பதில்,

'Clause 40 : Clause 37 of the original Bill provided for the decision of the Sugar Factory Board granting or refusing permission to any sugar factory which desired to hold land.'

சர்க்கரை ஆலைகளுக்கு நிலங்கள் தேவை என்றால், அப்படி சர்க்கரை ஆலைகள் நிறுவப்படும்போது, அந்த நிறுவனத்தினர் போர்டை அணுகி அந்த நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள வேண்டுமென்று இருந்தது. அப்படிக் கேட்கும் போது போர்டார் கொடுக்கலாம் அல்லது கொடுக்காமல் மறுக்கவும் செய்யலாம் என்றிருந்தது. ஆனால் இது பொறுக்குக் கமிட்டிக்கு போய்விட்டு வந்த பிறகு நான் முன்பு சொன்னதுபோல், மாமியார் வீட்டுக்குப் போய்விட்டு வந்த மாப்பிள்ளை இளைத்திருப்பது போல்தான் இருக்கிறது.

'The Committee decided that it should be made obligatory on the Sugar Factory Board to permit a sugar factory to hold the land held by it even as a possessory mortgagee'.

அந்த நிலங்களை அடமானத்திற்கு வைத்துக்கொண்டால்கூட அப்படி அடமானம் வைத்திருக்கக்கூடிய நிலங்களுக்கு விதிவிலக்கு தர வேண்டிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இது எந்த நிலைக்கு கொண்டுபோய் விடுமென்றால், ஒருவன் 100 ஏக்கர் நிலத்தை சர்க்கரை ஆலைக்கு அடமானம் செய்துவிட்டு பத்திரம் எழுதிக் கொண்ட தன்னுடைய நிலத்திற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டு மென்று போர்டாரைக் கேட்டுக்கொண்டால்,

'The Government shall, in the disposal of such land, take into consideration the recommendation of the Sugar Factory Board in that behalf.'

அவர்கள் கொடுத்தே தீரவேண்டும் என்ற நிலைமையைத்தான் உண்டாக்கி இருக்கிறது. அந்த ஏற்பாடுதான் இப்போது ஏற்படுத்தித் தரப்பட்டு இருக்கிறது. ஆகவே, இப்படி ஒருசில வார்த்தைகளை மாற்றியமைப்பதன் மூலம், இந்தச் சட்டத்தின் உயிரையே பிரித்து எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உள்ளபடி, நிலத்தின் தரம் இன்றையதினம் உயர வேண்டுமென்று கருதினாலும், விவசாயத்தினுடைய தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று கருதினாலும், உழவர்களுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்று கருதினாலும், இந்த சட்டம் அதற்குப் பயன்படாது. பயன்படாது என்பது மட்டுமல்ல, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைச் சமப்படுத்துவதற்கு எந்த விதத்திலும் இது உபயோகப் படாது. இந்தச் சட்டத்திலே அதற்கான எந்த விதமான உப்புசப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. இப்போது இதைப்பற்றி இந்தச்

சட்டமன்றத்திலே விவாதிக்கின்ற நேரத்திலே, அதைப்பற்றி என்னுடைய கருத்தை எடுத்துச் சொல்கின்ற நேரத்திலே, இது எல்லா வகைகளிலும் ஏமாற்றக்கூடிய வகையிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்வதை நான் ஜனநாயகக் கடமையாகக் கருதுகிறேன். அப்படிப் பேசக்கூடிய நேரத்தில் ஜனநாயகத்திற்குப் பக்கத்தில் எங்களுக்கு இருக்கக்கூடிய குறைந்த வலிமையையும் நாங்கள் மறந்துவிடவில்லை. அப்படி வலிவற்று இருந்தாலும்கூட, என்னுடைய மற்றொரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது போல உழவர்களுக்காகவும், குடிசையிலே வாழ்ந்து கொண்டிருக்கும் எண்ணற்ற பெரும்குடி மக்களுக்காகவும், விரல் விட்டு எண்ணம் கூடிய 10 பேர்களாக நாங்கள் இருந்தாலும், இந்தச் சட்டம்பற்றிப் பிறிதொரு காலத்திலே எடுத்துக்காட்ட வாய்ப்பு ஏற்படும்போது, நமக்கு முன்னால் இருந்தவர்கள் இந்தச் சட்டத்தைப்பற்றி இத்தகைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று உணர்ந்து கொள்வதற்காக, இந்தச் சட்டத்திலே உள்ள குறைகளை நாங்கள் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டவர்கள். அந்த வகையிலேதான் என்னுடைய கருத்தையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு அரசியல் வாதி என்ற கருத்திலே சொல்ல வேண்டுமானாலும், எவ்வளவுக்கெவ்வளவு இந்த அரசாங்கம் இந்த மசோதாவில் ஓட்டை ஒடைசல்கள் உள்ளதாகச் செய்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு எங்களுக்கு நல்லதுதான் என்பதையும் ஒளிவு மறைவு இல்லாமல் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே அரசியல் எண்ணத்தோடு பார்க்காமல், மக்களின் கஷ்ட நஷ்டங்களை மனதிலே வைத்துக்கொண்டு, அந்த வகையிலே திருத்தி அமைத்து, உழுகின்றவர்களுக்கு நிலம் கிடைக்கத்தக்க வகையில் இந்த மசோதாவை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த அளவிலே என்னுடைய உரையை நிறுத்திக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கும்படியான இந்த நிலச் சீர்திருத்த உச்சவரம்பு மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இதிலே பொறுக்குக் கமிட்டியிலே ஏற்கனவே நான் அங்கத்தினராக இருந்தாலும்கூட, இப்போது விவசாயி என்ற முறையிலே இந்தச் சட்டம் எவ்வளவுதூரம் வரவேற்கப்படுகின்றது, இது எந்த அளவில் அரசியல் நோக்கத்தோடுகூட செய்யப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி யெல்லாம் சில கருத்துக்கள் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதலாவதாக, இந்தநிலச் சீர்திருத்தம் காங்கிரஸ் மகாசபை கொண்டுவந்த காலத்திலும்கூட, ஆளும் கட்சியினரும்கூடி இருக்கும்படியான நிலங்கள் எல்லாவற்றையும் எடுத்து, நில மற்ற ஏழை விவசாயிகள் பூராவுக்கும் விநியோகம் செய்வது என்கின்ற அடிப் படையிலே தயாரிக்கப்படவில்லை என்பதை மிகவும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதன் அடிப்படைக் கருத்து என்னவென்றால், உற்பத்தி அதிகமாக பெருகவேண்டுமென்பதுதான். அதே சமயத்தில் உழுகின்றவர்களுக்கும் ஓரளவுக்கு நிலம் கொடுக்கவேண்டும் என்பதுதான் இதன் அடிப்படையான கருத்து. முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களிலே அந்தத் திட்டங்கள் எந்த அடிப்படையிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது என்ற கருத்தினைப் பார்ப்பார்களேயானால் உற்பத்தியைப் பெருக்க வேண்டும், உழவர்களுக்கு நிலம் சொந்தமாக ஏற்பட வேண்டும், அவர்கள் நிச்சயமாக நிலத்தை உழுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுக்க வேண்டுமென்பதுதான்.

திரு. சி. என். அண்ணாதுரை : கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த மசோதாவின் அடிப்படை நோக்கத்தையே மாற்றி. இந்த சட்ட மன்றத்திலே பேசுகின்ற காரணத்தினால், இந்த கருத்து, இந்தப் பிரச்சினை பிரி- ஆம்பிளுக்குப் புறம்பானது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். பிரியாம்பிளிலே குறிப்பிட்டுள்ள கான்ஸ்டிடியூஷனில் 39-வது பிரிவைப் பார்த்தால், இது உணவுப் பெருக்கத்தை அடிப்படையாக வைத்துச் சொல்லவில்லை. வருவாயைப் பரவலாக்க வேண்டு மென்றுதான் சொல்லுகிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : உற்பத்திப் பெருக்கும் இதிலே ஒரு நிலைதான். கான்ஸ்டிடியூஷனில் இருக்கும் ஆர்டிகிலில் எல்லா நிலங்களையும் சர்க்காரே எடுத்துக்கொண்டு, ஓட்டையாண்டியாக்க வேண்டுமென்று சொல்லவில்லை. கான்ஷ்டிடியூஷனிலே எல்லா வற்றிற்கும் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. உழுபவனுக்கே எல்லா நிலங்களையும் கொடுத்துவிட்டு, நீங்கள் எல்லோரும் ஓட்டையாண்டி ஆகிவிடுங்கள் என்று சொல்லவில்லை என்பதைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரை : இதிலே கனம் அங்கத்தினர் அவர்கள் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து பேசவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். சட்டத்தின் நோக்கத்தை மாற்றிப்

பேச வேண்டாமென்றுதான் குறிப்பிட விரும்புகிறேன். இச்சட்டத்தின் முக்கிய நோக்கங்கள் என்ன வென்றால்...

(b) that the ownership and control of the material resources of the community are so distributed as best to subserve the common good;

(c) that the operation of the economic system does not result in the concentration of wealth and means of production to the common detriment ;

துணை சபாநாயகர் : That is the opinion of the Hon. Member.

திரு. சி. என். அண்ணாதுரை : The Hon. Member must give the correct interpretation of the Preamble.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மீதான விவாதம்

உரை : 46 **நாள் : 11.11.1961**

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிற பல்வேறு திட்டங்களை இந்த மன்றம் ஏற்றுக்கொள்கிறது, சம்பிரதாயத்திற்காக அது தன்னுடைய ஒப்புதலையும் அளிக்கிறது என்ற முறையில் இன்று கனம் கிருஷ்ணசாமி நாயுடு அவர்களால் ஒரு திருத்தம் பிரேரேபிக்கப்பட்டிருப்பதோடு, அதில் சேர்க்கப்படவேண்டிய திட்டங்கள் இன்ன இன்ன, அவை சேர்க்கப்படாதது ஒரு பெருங்குறை என்று எதிர்க்கட்சிக்காரர்களாலும் சில திருத்தங்கள் பிரேரேபிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு வருகிறது. இதிலே நேற்றைய தினத்தில் இருந்து நடந்துகொண்டிருக்கும் விவாதத்தைக் கவனித்துக் கொண்டிருக்கையில் எனக்கு ஏற்படுகின்ற எண்ணம், "இதனால் உண்மையில் ஏதாவது பயன் ஏற்படுமா?" என்பதுதான். இங்கே இப்போது இந்த மூன்றாவது திட்டத்தைப் பற்றி விவாதிப்பதன் மூலம் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் ஏதாவது மாறுதல் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். என்னுடைய எண்ணத்தை உறுதிபடுத்திக்கொள்வதற்காக கனம் நிதி அமைச்சர் அவர்களிடம் கூடக் கேட்டு அறிந்து கொண்டேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் இப்போது அமுலில் இருக்கிறது. ஏப்ரல் முதலே அது நடைமுறைக்கு வந்துவிட்டது. நடைமுறையில் இருந்து வருகிற மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி இப்போது நாம் சபையில் விவாதிப்பதன் மூலம் அந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போக்கை மாற்றி யமைக்க முடியுமா என்ற ஐயப்பாடு உறுதியாகியிருக்கிறது. ஏனென்றால் இதற்கு முன்னாலே மூன்றாவது ஐந்தாண்டு நகல் திட்டத்தை நாம் இந்தச் சபையில் விவாதித்திருக்கிறோம். இன்ன இன்ன திட்டங்கள் தேவை என்று

அப்போது எதிர்க்கட்சியினரால் தங்கள் கருத்துக்கள் வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கின்றன. ஆளும் கட்சியில் உள்ளவர்களும் அமைச்சர்களும் 400 கோடி ரூபாய்க்கு பல திட்டங்களை அமைத்துக்கொண்டு இதுதான் நல்ல திட்டம், இதற்குச் சபை அனுமதி அளிக்கவேண்டும் என்று கோரி சபையின் அனுமதியையும் ஒருவகையில் பெற்றுச் சென்றார்கள். இந்த மன்றத்தின் ஒப்புதல் அப்போது 400 கோடி ரூபாய்க்கு அறிவிக்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் நமது நிதி அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சு மட்டும் அல்ல, அந்தப் பேச்சோடு அவர் வெளியிட்ட பாவங்களும் கூட எனக்கு இப்போது நினைவிருக்கிறது. பரிட்சைக்குச் செல்லும் மாணவனுக்கு சகுனம் பார்த்து அனுப்பி வைப்பது போல, நமது நிதி அமைச்சர் அவர்களும் டெல்லிக்குச் சென்றபோது சகுனம் பார்த்து, சபையின் ஏக ஒப்புதலோடு கூட, “சென்று வாருங்கள், வென்று வாருங்கள்” என்று அனுப்பினோம். அந்த இடத்தில் 400 கோடி ரூபாய்க்கு இந்தச் சபை அங்கீகாரம் அளித்திருக்கிற போது அவர்கள் 291 கோடிக்குத்தான் அனுமதித்தார்கள் என்று நமது நிதி அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டு வந்தார்களே அது சரியா என்ற சட்டப் பிரச்சினையையே கூட இங்கே எழுப்ப விரும்புகிறேன். பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள பிரதிநிதிகள் அடங்கிய சட்டமன்றத்திலே 400 கோடி ரூபாய்க்கு என்று ஒரு திட்டத்தை அங்கீகரித்திருக்க - சபையில் விவாதிக்கப்பட்டு ஒரு முடிவுக்கு வந்திருக்க - டெல்லியில் உள்ள ப்ளானிங் கமிஷன் 291 கோடிக்குத்தான் அனுமதித்தது என்றால் உடனே திரும்பவும் அதற்கு இந்தச் சபையின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டாமா? ப்ளானிங் கமிஷன் நாட்டின் பெரிய மந்திரி சபையா? சூப்பர் காபினெட்டா? இல்லையென்றால் அது 291 கோடி என்று நமது ராஜ்ய திட்டத்தைக் குறைத்தவுடனே நமது நிதி அமைச்சர் அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? உடனடியாக இங்கே வந்து, “அவர்கள் 291 கோடிக்குத்தான் அனுமதி அளிப்போம் என்கிறார்களே, உங்கள் அபிப்பிராயம் என்ன என்று இந்த மாமன்றத்திலே கேட்டிருக்க வேண்டும். அப்போது உண்மையில் ப்ளானிங் கமிஷன் is not a super cabinet என்ற வாதம் எப்படிப் பொருத்தமாக இருக்கும்? ஆனால் இங்கே 400 கோடிக்கு என்று வகுத்த திட்டத்தை - அவர்கள் 291 கோடி என்று குறைத்தவுடனே இந்தப் பணத்திற்கு ஏற்றவகையில் சில பல திட்டங்களை விட்டுவிட்டு, லட்சிய அளவுகளையும்கூட குறைத்து

விட்டிருக்கிறார்கள். இந்தச் சபையின் அனுமதியைப் பெறாவிட்டாலும் அமைச்சர் அவையையாவது உடனடியாகக் கூட்டி இதைப் பற்றி ஆலோசித்தார்களா என்று அறிய விரும்புகிறேன். அப்படி அவர்களே பார்த்து முடிவு செய்து, கடந்த எட்டு மாதங்களாக அதை அமுல் நடத்திக் கொண்டிருக்கிறபோது இன்றையதினம் இந்தச் சபையிலே அதைப்பற்றி விவாதிப்பதும், இந்தச் சபை அதற்கு ஒப்புதல் அளிக்கிறது என்று சம்பிரதாயத்திற்குத்தான் என்றாலும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்று வதும் உண்மையில் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. கல்யாணமாகாத ஒரு ஆணும், பெண்ணும் புருஷன் பெண்சாதியாகப் பெற்றோர்களுக்கே தெரியாமல் வாழ ஆரம்பித்தவுடன் - ஏதோ தங்களுடைய முகத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்பதற்காக அவர்களுடைய திருமணத்திற்கு என்று ஒப்புக்காக ஒப்புதல் அளிப்பதுபோல இன்றையதினம் இந்தச் சபையிலே ஆளும் கட்சியினரைச் சேர்ந்தவர்களும்கூட 400 கோடி ரூபாய்க்கு என்று திட்டத்தை அமைத்து ஒத்துக் கொண்டிருக்கிறபோது அதை 291-க்காக சபை அங்கத்தினர்களைக் கேட்காமலே குறைத்துவிட்டபோதிலும் - இப்போது ஒப்புக்கொள்கிறோம் என ஒப்புக்காகத் தெரிவிக்க வேண்டியது அவசியமா என்று எனக்குப் புரியவில்லை. இந்த விவாதம் அந்தவகையில் அமைவது என்றால் உண்மையில் பயன் அற்றதாகவே ஆகும். அதற்கு மாறாக "291 கோடிக்கு நாங்கள் ஒப்புக் கொண்டாலும் சபை ஒப்புக் கொள்ளவில்லை, இந்தத் திட்டங்களை எல்லாம் ஏற்றுக் கொள்ளாதது வருந்தத்தக்கது என்று திருத்தங்கள் நிறைவேற்றியிருக் கிறார்கள். ஆகவே இவற்றையும் ஒப்புக்கொள்ளவேண்டும்" என்று ஒருகால் மத்திய அரசினிடம் வற்புறுத்திக் கேட்பதற்கு இந்தத் திருத்தங்களை விவாதித்து ஏற்றுக்கொள்வது உபயோகமாகக்கூட இருக்கும். அப்படியில்லையென்றால் இந்த விவாதம் உண்மையில் பயன் அற்றதாகத்தான் இருக்கிறது என்பது என்னுடைய வாதம். பயன் அற்றது என்று சொல்கிறபோது எதிர்க்கட்சியில் உள்ளவர்களின் எண்ணிக்கை குறைந்தது, அதனால் பயனில்லை என்ற கருத்தில் சொல்லவில்லை. பெருவாரியாக இந்த இரண்டு நாட்களாக இங்கே நடக்கிற விவாதத்தைப் பார்க்கிறபோது - கூவம் ஆற்றிலிருந்து கொள்முதல் விலையைக் குறைக்கவேண்டும் என்பது வரையில் பல திட்டங்களை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆற்றுக்கு அணைகட்டுவதிலிருந்து, மனைக்கட்டு வழங்குவேண்டுமென்ற திட்டங்கள் வரைச் சொன்னார்கள். இதற்கு அவசியம் இப்போது இங்கே என்ன இருக்கிறது?

நடைமுறையில் இருந்து வருகிற திட்டத்தை இதனால் மாற்றி அமைக்கப் பயன்படப் போகிறதா? அல்லது இங்கே விவாதித்து ஒப்புதல் அளிக்கவேண்டும் என்ற சம்பிரதாயம்தான் நடைமுறையில் இருந்துகொண்டிருக்கிற ஒரு திட்டத்திற்கு அவசியமா? ஆகவேதான் பயன் அற்றது இந்த விவாதம் என்று சொன்னேன். அன்றைக்கு 400 கோடிக்கு நகல் திட்டத்தை அமைத்து இந்த மன்றத்திலே விவாதித்தபோது - ஆகா இதுதான் உயர்ந்த திட்டம். இந்தத்திட்டத்தை நாங்கள் தயாரித்திருக்கிறோம் என்று பெருமையோடு பேசி ஆதரவு கொடுத்த ஆளும் கட்சியினர்கள், இன்று அத் திட்டம் 291 கோடியாகக் குறைக்கப்பட்டு, முன்பு தீர்மானித்துள்ள பல திட்டங்கள் கைவிடப்பட்டு இன்றைக்குச் சபையில் வந்திருக்கிறபோது - ஐயோ இப்படிக் குறைந்துவிட்டதே என்று கொஞ்சம்கூட வருந்தாது, இதுதான் உயர்ந்த திட்டம் என்று பேசுகிறார்கள் என்றால் - இதுதான் அரசியல் தலையெழுத்தாகும். இது துரதிருஷ்டவசமாக இன்னும் குறைக்கப்பட்டாலும்கூட "இப்போதுதான் இது சிறந்ததாக இருக்கிறது. சிறுகக் கட்டிப் பெருக வாழ் என்றுதானே சொல்லியிருக்கிறார்கள்" என்று தங்களையே சமாதானம் செய்துகொண்டு பாராட்ட வேண்டிய நிலை ஆளும் கட்சியினர்களுடையது. அதுவும் தேர்தல் நெருங்கிவிட்ட நேரம். ஆகவே, இப்போது இதைக் கண்டித்துப் பேசினால் என்ன ஆகுமோ என்று அவர்கள் நினைத்துப்பார்த்து வேண்டியதுதான்.

ஆனால் கடந்த இரண்டு நாட்களாக இங்கே நடக்கிற விவாதத்தைப் பார்க்கிறபோது, "ஆகா இந்தத் திட்டத்தைப்போல் உண்டா? இதைக் குறை சொல்கிறார்களே, எதிர்க்கட்சியில் இருப்பவர்கள்" என்று அவர்கள் அங்கலாய்த்துக் கொள்கிறபோது ஏதோ அவர்களும் வாதத்திற்காகப் பேசுகிறார்களே தவிர கொஞ்சமாவது சிந்தித்துப் பேசுகிறார்கள் என்றுசொல்ல முடியாது. காரணம் திட்டத்தை யார் குறை சொன்னார்கள்? இந்த மன்றத்திற்கு வெளியே இருக்கிற ஒரு கட்சியினர் இந்தத் திட்டத்தை எதிர்ப்பதாகப் பத்திரிகையில் போடப்பட்டிருக்கிறதே தவிர இங்கேயுள்ள அத்தனை கட்சிகளும் திட்டமிட்ட வாழ்க்கையையே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் இந்தப் பதினெட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு திட்டமிட்ட வாழ்க்கையே சிறந்த ஆட்சிக்கு இலக்கணமாக அமைந்துவிட்டிருக்கிறது. ஆனால் "போடப்பட்டுள்ள திட்டம் எவ்வாறு இருக்கிறது, இந்தத் திட்டத்தின் பலனை யார் அனுபவிக்கிறார்கள்?" என்றெல்லாம் ஆராய்வது திட்டத்தையே வெறுப்பதாகாது. ஆகையால் திட்டத்தின்

குறைபாடுகளை எடுத்துச்சொல்கிற நேரத்தில் அந்தக் கண்ணோட்டத் தோடு இதைக் கவனிக்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது எனக்கு முன்னாலே பேசிய மைலாப்பூர் தொகுதி அங்கத்தினர் திரு. ராமசாமி அவர்கள் மின்சாரம் எந்த அளவுக்கு இங்கே உற்பத்தியாகிறது என்பதை மிகவும் ஆர்வத்தோடு சொன்னார்கள். அவர்களேதான் நகல் திட்டம் பற்றி விவாதிக்கையில் இதைச் சொன்னார்கள்.

"The mere electrification of all villages was not an index of prosperity. Every unit of power should be directed towards increasing the production of wealth."

மின்சாரத்தை உற்பத்தி செய்துவிட்டோம் என்று பாராட்டிக் கொண்டிருக்கிற நேரத்தில் நானே சொன்னேன், சும்மா வெளிச்சம் போட்டுக் காட்டினால் போதாது. தொழில் துறையில் ஒவ்வொரு சிறுசிறு தொழிலுக்கும்கூட எத்தனை யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய அளிக்கப்படுகிறது என்று பார்க்க வேண்டும். தொழில் துறையில் அதிகமான அளவுக்கு எப்போது மின்சாரம் உபயோகப் படுத்த ஆரம்பிக்கிறோமோ அப்போதுதான் உண்மையான வளர்ச்சி என்று சொல்ல முடியும் என்றேன். இது தெரிந்தோ தெரியாமலோ இதே கருத்தைத்தான் அப்போது திரு. ராமசாமி சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் 400 கோடி என்பது 291 கோடியாகக் குறைந்துவிட்டபோது - எவ்வளவு வெளிச்சம் போட்டிருக்கிறோம், எத்தனை கிராமங்களுக்கு விளக்குப் போட்டாகிவிட்டது, இது அபிவிருத்தியில்லையா என்று பேசினார்கள். இது எனக்கு புரியவில்லை. தேர்தலுக்கு முன்னாலே பேசுகிற பேச்சு என்று மட்டும் புரிகிறது. இன்றையதினம் உற்பத்தியான மின்சாரம் எவ்வளவு? விவசாயத்திற்கு, இதர தொழில்களுக்கு எவ்வளவு உபயோகப் படுத்துகிறோம்? இதைக் கவனிக்க வேண்டாமா?

இன்றையதினம் நம்முடைய கனம் அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள்? இதுவேண்டும், அதுவேண்டும் என்று கேட்டார்கள், இது சரியல்ல, என்று பேசினார்களே என்று சொல்லிவிட்டு புள்ளிவிவரங்களைக் காட்டினார்கள். நம்முடைய லட்சிய அளவுகள்தான் அதில் குறைந்துவிட்டனவே! கனம் ராமசாமி

அவர்களும் இப்படி இத் திட்டத்தைக் குறைகூறுகிறார்களே என்று தொடங்கி இப்படியே போனால் இங்கே தொழில்துறை வளராது, நிலக்கரி கிடைப்பது இல்லை, இதை யோசித்துப் பார்க்கவேண்டும் என்றுதான் பேசினார்கள். அந்த வகையிலே பார்க்கும்போது நான் உள்ளபடியே என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திட்டமிட்டவர்களுடைய நோக்கம் நிச்சயமாக நிறைவேற்றப்படவில்லை. புள்ளிவிவரங்களைக் காட்டி, 14 லட்சம் டன் உணவு உற்பத்தி 16 லட்சமாக உயர்ந்துவிட்டது என்ற புள்ளி விவரங்களைக் காட்டுவதில் பயனில்லை. உங்களுடைய புள்ளி விவரங்களை விவசாய நிபுணர்கள் ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள். உங்களுடைய புள்ளிவிவரத் தயாரிப்பிலேயே நிறையத் தவறுகள் இருக்கின்றன என்று பெரிய நிபுணர்கள் வலியுறுத்திக் கூறி வருகிறார்கள். ஆகையால் அந்தப் புள்ளி விவரங்களை வலிவு குறைந்தவன் கைத்தடியை ஊன்றி நடப்பதைப் போல் உங்களுக்கு உதவுகின்றனவே தவிர, நாட்டிலே இருக்கக்கூடிய நிலைமையில் எந்தவிதமான மாற்றத்தையும் அது தெளிவுபடுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய கனம் அம்மையார் அவர்கள் ஆரம்பத்தில் எங்களைக் கண்டித்துவிட்டு பிறகு என்ன சொன்னர்கள். இது வேண்டும், அது வேண்டுமென்று சொன்னார்கள். இது சரியல்ல, அது சரியல்ல என்ற பேசினார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தினரும் பேச ஆரம்பிக்கும்போது பிள்ளையார் குட்டாக, "இந்தத்திட்டத்தை வரவேற்கிறேன்" என்று சொல்லி விட்டு அதற்குப் பிறக "ஐயோ, அதைச் செய்யவில்லையே, இதைச் செய்யவில்லையே" என்று கூறினார்கள். கனம் ராமசாமி அவர்கள் இந்தத்திட்டத்தின் குறைகளைக் கூற ஆரம்பித்து, அதற்குப் பிறகு பெரிய தொழில்கள் எல்லாம் வளர்ந்திருக்கின்றன என்று தம்மைத்தாமே உற்சாகப் படுத்திக்கொண்டு, அடுத்த நிமிஷத்திலேயே மூடப்படும் தருவாயில் இருக்கக்கூடிய தொழில்களை எடுத்துக் காட்டுகிறார். என்ன மனப்பான்மையிலே இவர்கள் நடக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் யோசித்துப் பார்க்கத்தான் செய்வார்கள் என்பதைக் கூற விரும்புகிறேன். பெரிய தொழில்கள் வளர்ந்திருக்கின்றன என்று சொல்லும்போது அவருடைய நெஞ்சின் அடிமனம், அவர் தொழில் அதிபராக இருக்கின்ற காரணத்தால், அவர் உண்மையை அறிந்திருக்கிற காரணத்தால், உண்மையை உணர முடிகின்ற

காரணத்தால், பெருந்தொழில்கள் வளரவில்லை என்று தெரிவதோடு இருக்கக்கூடிய தொழில்களும் மூடப்படக்கூடிய நிலையில் இருக்கின்றன என்பதை அவர் எடுத்துக்காட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. 'நிலக்கரி போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை, உற்பத்திச் சாதனங்கள் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை' என்று பேசினார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தினரும் தங்களுடைய 10 நிமிஷப் பேச்சை வீட்டுக்குச் சென்று அவர்களே ஆழ்ந்து படித்துப் பார்த்தால், 2 நிமிஷம் எதிர்க்கட்சிக்கு என்று ஒதுக்கிவிட்டு, 4 நிமிஷம் தொகுதிக்கென்று ஒதுக்கிவிட்டு, கடைசியில் போகிற போகில் எங்கே மறந்து விடுவார்களோ என்று 2 நிமிஷம் எங்களைப் பற்றிச் சொல்லிவிட்டு உட்கார்ந்து விடுகிறார்கள். அவ்வாறு நீங்கள் கூறும் யோசனைகள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இணைக்கப்படுமா? எங்களுடைய அபிப்பிராயத்தை விட்டுவிடட்டும், உங்களுடைய அபிப்பிராயம் மதிக்கப்படுகிறதா? ஏற்றுக்கொள்ளப்படுகிறதா?

இந்த மன்றத்திலே 400 கோடி ரூபாய்த் திட்டத்தை வைத்து விவாதிக்கும்போது ஐந்து முக்கியமான திட்டங்கள் வலியுறுத்தப் பட்டன. தமிழ் நாட்டுக்கு அணு உலைக் கூடம் தேவையென்று கூறியிருக்கிறோம். அதுபற்றி வாய் திறந்து பேசுகிறதா மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்? அதற்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்களா? இதுபற்றி வெளியிலே உள்ளவர்கள் கேலி செய்வார்களே என்பதற்காக'' நங்கள் அதற்கான பூர்வாங்க வேலையைத் துவக்க இருக்கிறோம்'' என்று சொல்கிறார்கள். சேலத்தில் இரும்பு, எஃகு தொழிற்சாலைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற 25 கோடி ரூபாய் போதுமா? அந்தத் தொகையைக் கொண்டு அந்தத் தொழிலை நடத்த முடியுமா? ரூர்கேலாவும், துர்காபூரும் எந்த அளவுக்கு வளமாக இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியாதா? இருபத்தைந்து கோடி ரூபாய் செலவில் சேலத்தில் இரும்பு, எஃகு தொழிலை ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்வது வேண்டுமானால் தேர்தலுக்காகப் பயன்படலாமே தவிர உண்மையிலேயே அந்தத் தொழிலைத் திறம்பட நடத்தப் போதுமானதா? கனம் அம்மையார் அவர்கள் "இடித்தால் இரும்பு கிடைக்கும். தோண்டினால் தங்கம் கிடைக்கும்" என்று பேசினார்கள். "நாங்கள் இடித்துத் கொண்டு தோண்டிக் கொண்டுந்தான் இருக்கவேண்டும். இரும்பையும் தங்கத்தையும் வெளியே எடுத்துக்கொண்டு வர வேண்டியவர்கள் பின்னாலே வர

இருக்கிறார்கள்'' என்ற உண்மையைத்தான் மறைமுகமாக அவர்கள் எடுத்துச் சொன்னார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, இங்கு நிறைவேற்றப்பட்ட அந்தத் திட்டத்தின்படி கேட்கப்பட்ட ஐந்தில் இரண்டு கேட்பாரில்லாமல் இருக்கின்றன. ''இண்டர் ஸ்டேட் வாட்டர் சப்ளை'' பற்றி அந்த நேரத்தில் மந்திரியவர்கள் பன்னிப் பன்னிப் பேசினார்கள். கிருஷ்ணா - பெண்ணாறு திட்டத்தைப் பற்றித் திரும்பத் திரும்பப் பேசினார்கள். இந்தியா ஒன்றாக இருக்க வேண்டுமென்பதிலே அதிக அக்கறை கொண்ட அவர்கள் கங்கை யையும், காவிரியையும் இணைக்கும் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். அதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வழி செய்யப்பட்டிருக்கிறதா? அதற்குக் கொஞ்சம் இடமாவது கொடுத் திருக்கிறார்களா? அதே போன்று மின்சார உற்பத்தியை அதிகப் படுத்துவது அணு மூலமாகத்தான் முடியும் என்று ஒவ்வொரு உறுப்பினரும் வலியுறுத்திப் பேசினார்களே! அது இந்தத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறதா? ஆகவே, 400 கோடி ரூபாய்த் திட்டமானது 291 கோடியாகக் குறைக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், ''பினான்ஷியல் டார்ஜெட்'' குறைக்கப்பட்டிருப்பதோடு மட்டு மல்லாமல் ''பிசிகல் டார்ஜெட்''டும் குறைக்கப்பட்டு, பல திட்டங்கள் வெட்டப்பட்டு, குறைக்கப்பட்டுள்ளன என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்தத் திட்டத்திலே மகிழ்ச்சி யடைய என்ன இருக்கிறது? அனைவரும் கூடி ஒரு நாள் அழ வேண்டுமானால், அழலாமே தவிர, சந்தோஷப்பட என்ன வழி இருக்கிறது? ''கிடைத்தது கிடைக்கட்டும்'' என்ற திருப்திபட்டுக் கொள்ள முடியுமா என்றால் - என்னைப் பற்றிக் கனம் நிதி மந்திரியவர்கள் முன்னர் பண்டாரம் என்று சொன்னார் - பண்டாரங்களாக இருந்தால் திருப்தியடையலாமே தவிர பாதுஷாக்கள் எப்படி திருப்தியடைய முடியும்?

ஆகவே, 400 கோடி ரூபாய்த் திட்டத்தை மறுபடியும் வலியுறுத்தும் வகையில், இந்த 291 கோடி ரூபாய்த் திட்டத்தை ஏற்றுக்கொண்டோம் என்ற தீர்மானத்தைப் போடாமல், 400 கோடி ரூபாய்த் திட்டத்தைப் ப்ளானிங் கமிஷன் நீக்காமல் இருந்தால், குறைக்காமல் இருந்தால் நாட்டுக்கு மேலும் சில பல நன்மைகள் கிடைத்திருக்கும் என்பதைச் சுட்டிக் காட்டும் முறையில் ''எங்கள் நாட்டு மக்கள் இந்தத் திட்டங்களை யெல்லாம் வலியுறுத்திக் கேட்கிறார்கள்'' என்று எதிர்த்தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள

திருத்தத்தை ஏற்றுக் கொண்டால் அதனை டெல்லி வட்டாரத்தில் எடுத்துச் சொன்னால் தக்க பலன் கிடைக்கும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, நம்முடைய திட்டத்தினுடைய நோக்கத்தைப் பற்றி அறிய வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். திட்டம் என்பது, இன்னின்ன இடத்தில் விதைப் பண்ணைகள் ஆரம்பித்தோம், இவ்வளவு பொலிக் காளைகள் வாங்கிக் கொடுத்தோம், இவ்வளவு உரங்கள் சப்ளை செய்திருக்கிறோம் என்று சுட்டிக் காட்டப் போடப்படக்கூடிய ஒரு வரவு-செலவு ஏடல்ல. நாங்கள் இன்னின்ன வகையில் நாட்டைத் திருத்தியமைக்க விரும்புகிறோம். மக்கள் வாழ்க்கையை இந்த அளவுக்கு முற்போக்காகச் செய்ய விரும்புகிறோம் என்ற "மெஷினரி ஸ்பிரிட்" மனோபாவந்தான் திட்டத்திற்கு அடிப்படையாகும். அவ்வாறல்லாமல் செய்யப்படும் காரியங்களைச் சொல்ல ஐந்து வருஷத் திட்டம் என்ற ஒரு ஐங்கணக்கைப் போடுவதைவிட வருஷத்திற்கு ஒரு முறை இன்னின்ன இடத்திலே இன்னின்ன செய்திருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கலாம். மக்களுடைய வாழ்க்கையை இப்படித் திருத்தியமைக்க விரும்பு கிறோம் என்பதுதான் திட்டத்தின் அடிப்படை. அதனால்தான் திட்டத்தைப் பற்றிப் பிரதமர் நேரு அவர்கள் பேசுகிற நேரத்தில் ஏறக்குறைய கவிதா வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார். "மக்கள் முகத்தைப் பாருங்கள்! கிராமப் புறத்தைப் பாருங்கள்! அவர்களுடைய முகத்திலே தோன்றும் புதிய ஒளியைப் பாருங்கள்!" என்று பேசுகிறார். சாதிக்க முடியாத காரியங்களை யெல்லாம் - திட்டத்தால் சாதிக்க முடியும் என்று கூறும் நேரத்திலே இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே இரண்டு முக்கியமான கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன. Eradication of economic disparity not only between individuals but also between regions. தனிப்பட்ட ஆட்களுக்குள்ளே உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுக்கு மட்டுமல்ல, பிரதேசங்களுக்கிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதும் போக்குவதும் மூன்றாவது திட்டத்தின் நோக்குமாகும் என்று சொல்கிறார்கள். நெஞ்சிலே கை வைத்துப் பார்த்து, இன்று வேண்டாம் - நாளை, என் எதிரிலே வேண்டாம் தனியாக, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் யோசித்து பார்ப்பார்களேயானால் இந்த மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் உள்ள பிரதேச வேற்றுமை போக்கப்பட்டிருக்கிறதா, அந்த வேற்றுமை போக்கப்படுவதற்கேற்ற

வகையிலே திட்டங்களை விரிவுப் படுத்தியிருக்கிறார்களா என்றால், இல்லையே! வடநாட்டுத் திட்டங்களோடு தென்னாட்டுத் திட்டங்களை ஒப்புவமை காட்டிப் பேசும் நேரத்தில் 'ஏன் வடக்கு,தெற்கு என்று பேசுகிறீர்கள்' என்று கேட்கும் நீங்கள் தேசிய அபிவிருத்திக் கூட்டத்தில் இந்தக் கருத்தைப் பேசவில்லையா? நிதி மந்திரியின் பார்வை பேசுகிறது. 'இந்தியாவில் இருந்துகொண்டு நான் பேசுகிறேன்; நீ ஓடிப் போகவேண்டுமென்று சொல்லிக்கொண்டு பேசுகிறாய்'' என்று. பத்து வருஷமாக இந்த நிலை என்றால் ஓடாமல் என்ன செய்வது? பதவி வேண்டுமென்றால் ஒட்டிக் கொண்டிருக்கலாம். அவரது கருத்து மதிக்கப்பட்டதா? ''மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்'' என்று சொல்லியிருக்கிறார்கள். நானூறு கோடித் திட்டத்தை நாட்டு மக்கள் கோருகிறார்கள் என்று சொல்லி, திரும்பத்திரும்ப வற்புறுத்தி அமைச்சர் அவர்கள் வாங்கி வருவதாக இருந்தால் அவருக்குக் கொடி தூக்கும் தொண்டராக மாறி டில்லிக்கு அனுப்புவோமே!

தொழில் துறையைப் பொறுத்தவரையில் இந்த மூன்றாவது திட்டத்தில் சர்க்கார் என்ன செய்திருக்கிறார்கள்? ஸ்டீல் ரி ரோலிங் மில்லுக்கு ஒரு கோடி ரூபாய், இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷனுக்கு ஒரு கோடி ரூபாய் என்று பெருமைபட்டுக் கொள்ளுகிறார்கள். கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 50 லட்சம் ரூபாய். பெருமைப்படக்கூடிய காரியமா இது? நீங்கள் கொடுத்திருக்கும் பட்டியலைப் பார்த்தால் முதலாளிமார்களை ஆதரிக்கக்கூடிய சர்க்கார் என்பதற்குத்தான் ஆதாரமிருக்கிறதே தவிர, பாட்டாளிகளின் சர்க்கார் என்பதற்கான ஆதாரம் இல்லையே! ''காகித ஆலையா? -சேஷசாயி கம்பெனி. ரேயான் தொழிற்சாலையா? - வெங்கடசாமி நாயுடு. அலுமினியம் தொழிற்சாலையா? ''வெங்கடசாமி நாயுடு'' என்று ஒவ்வொரு தொழிலையும் ஒவ்வொரு முதலாளிகளிடத்திலே கொடுத்திருக்கிற நீங்கள் எதற்காக இங்கே ஒரு ஆட்சியை நடத்துகிறீர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன். முதலாளிக்கும் தொழிலாளிகளுக்கும் தகராறு வந்தால் போலீசைக் கொண்டு தொழிலாளரை உதைக்கச் செய்து 'விலைவாசி ஏறிக்கொண்டேயிருக்கிறது' என்று சொல்லிக்கொண்டி ருக்கவா நீங்கள் ஆட்சி நடத்துகிறீர்கள்? இந்தத் தொழிலை நடத்த ஆட்சியில் இருப்பவர்களுக்கு திறமையே இல்லையா? எடுத்து நடத்துவதற்குப் போதுமான ஆட்கள்தான் இல்லையா? அல்லது நமக்கு அனுபவம்தான் இல்லையா? இத்தாலி நாட்டுக் கம்பெனியோடு

ஒப்பந்தம் பேசி, வெங்கடசாமி அலுமினியம் தொழிற்சாலை, ஆரம்பிக்க இருக்கிறார் என்றால், அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் அதிகாரம் நம்மிடம் இல்லாமல் போய் விட்டதா? நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இதே மன்றத்திலேயே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள் - ''அலுமினியத் தொழிற்சாலை பப்ளிக் செக்டாரில்தான் வரும் - பொதுத் துறையில்தான் வரும் - கவலைப் படாதீர்கள்; மத்திய சர்க்கார் பணம் கொடுக்காவிட்டாலும் நாங்களே கார்ப்பரேஷன் ஆரம்பித்துப் பணம் சேர்ப்போம்'' - என்று இந்த மன்றத்திலே கொடுத்த வாக்குறுதி என்ன ஆயிற்று? மன்றத்திற்குக் கொடுத்த வாக்குறுதி என்ன ஆயிற்று? மன்றத்திற்குக் கொடுத்த வாக்குறுதியை மீறி, வெங்கடசாமி ஆரம்பிக்கிறார் என்று அதற்கு நீங்கள் - வைதீக பாஷையில் சொல்லவேண்டுமானால் - ததாஸ்து என்று அவர்கள் தலையில் அட்சதை போடுகிறீர்களென்றால், எதற்காக நீங்கள் ஆட்சி பீடத்தில் இருக்கிறீர்கள்? நீங்கள் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவது இப்படித்தானா? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் தொழில் துறையில் பின் தங்கி யிருக்கிற நம் நாட்டை முன்னுக்குக் கொண்டுவரத் தவறி விட்டீர்கள். தவறி விட்டது மட்டுமல்லாமல், உங்கள் தவறை மறுத்துக் கொண்டிருக்கிறீர்கள். மறுத்துக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், தவறைச் சுட்டிக் காட்டக் கூடியவர்களைப் பொது மக்கள் மன்றத்தில் மிகக் கேவலமாகப் பேசிக்கொண்டு வருகிறீர்கள். ஆகவே நாடு முழுவதும் தொழில் துறையில் ஒரே மாதிரி முன்னேற வேண்டும், ஒரு பகுதிக்கும் இன்னொரு பகுதிக்கும் ஏற்றத் தாழ்வு இருக்கக் கூடாது என்று நீங்கள் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறீர்களே தவிர, செயலில் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? வேறு ஒரு இடத்தில் பேசி இருக்கிறார் நமது நிதி அமைச்சர் - 10 வருஷமாக இந்த எண்ணம் எனக்கு உண்டு. "It is unfortunate, that I have not succeeded so far", எனக்கு பிரதேச வேற்றுமைகளை ஒழிக்கவேண்டும் என்ற எண்ணம்தான், ஆனால் வெற்றி பெற முடியவில்லை'' என்று பேசியிருக்கிறார். எங்களில் சில பேர் தேர்தலுக்கு நின்று தோற்றதற்குச் சொல்லுவதுண்டு, ''வெற்றி இழந்தோம்'' என்று - தோற்றோம் என்று சொல்லுவதற்குக் கூச்சம். அதேபோல் நிதி அமைச்சருக்கு இருக்கிற கூச்சத்தினால் வெற்றி பெறவில்லை என்று சொன்னார்களே தவிர, தோற்று துயருற்றுத் திரும்பியிருக்கிறார்கள்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம்: அதுமாதிரி சொல்லும் நிலை எனக்கு வேண்டாம்.

திரு. சி. என். அண்ணாத்துரை : நீங்கள் விரும்புகிற இது பிப்ரவரி மாதத்தில் நடைபெற வேண்டிய காரியம் - இப்போது இருக்கிற நிலையில் அல்ல. ஆகையால் அந்த முதல் நோக்கம் - பிரதேச வேற்றுமைகளைத் தீர்த்துக் கட்டுவது - நிறைவேற்றப்படவில்லை. இரண்டாவது தனிப்பட்டவர்களுக்குள் வரக்கூடிய வருவாயில் இருக்கக்கூடிய ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்திருக்கிறீர்களா என்றால் இந்திய யூனியன் நிதி அமைச்சர் அவர்கள் - மொரார்ஜி தேசாய் அவர்கள் - தெளிவாகக் சொல்லிவிட்டார். I cannot guarantee என்று. ஐந்து வருஷத்தில் முடியுமா? - I cannot promise what I cannot achieve"; ஏழு வருஷத்தில் முடியுமா? நான் சொல்ல முடியாது"; பத்து வருஷத்தில் முடியுமா?- "நான் சொல்ல முடியாது.

இப்படி "என்னாலே முடியாது", "நான் வாக்குறுதி அளிக்க விரும்பவில்லை", "தனிப்பட்டவர்களுக்குள் இருக்கும் இக்கனாமிக் டிஸ்பாரிட்டி - பொருளாதார ஏற்றத் தாழ்வு - குறையும் என்று சொல்ல முடியாது" என்று சொல்லி விட்டார். எனக்கும் நிதி அமைச்சருக்கும் ஒப்புவமை பார்க்கும் நேரத்தில் அவர் மேதை - நான் எதுவும் அறியாதவன். ஆனால் மொரார்ஜி தேசாய்க்கும் நம்முடைய நிதி அமைச்சருக்கும் ஒப்புவமை பார்க்கும் நேரத்தில், குறைந்தது இந்த அளவுக்காவது இவர்களுக்கு அறிவு இருக்கும் என்று நான் கருதுகிறேன். மொரார்ஜி தேசாய் வெளிப்படையாக "என்னால் முடியாது, ஏற்றத் தாழ்வுகள் குறையாது" என்று சொன்ன பிறகு திட்டத்தின் இரண்டாவது நோக்கம் எங்கே? இரண்டாவது நோக்கம் எங்கே ஈடேறிற்று? அவர்களை விட்டு விடுங்கள் - ஓய்வு பெற்றிருக்கிற - முன்னாள் நிதி அமைச்சராக இருந்த - திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஒரு இடத்தில் தெளிவாகப் பேசியிருக்கிறார். "ரூபாயின் மதிப்பு குறைந்து விட்டது, மக்களின் நூற்றுக்கு 90 பங்கு "On marginal of submarginal level" வாழ்க்கையின் எல்லைக் கோட்டிலே - ஏன்? எல்லைக் கோட்டுக்கும் அப்பாலே கூட - இருக்கிறார்கள்" என்று பேசியிருக்கிறார். மிகச் சிலர் இடத்தில் பணம் குவிகிறது என்று நிதி அமைச்சராக இருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி சொல்லி யிருக்கிறார். இன்னும், அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிற கால் பிரெய்த் "நீங்கள் நடத்துகிற சமதர்மம் போஸ்ட் ஆஃபீஸ்

சோஷலிஸம்'' என்று குறிப்பிட்டுப் போயிருக்கிறார். தனியார் துறையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற தொழிலில் லாபம் வருகிறது, ஆனால் பொதுத் துறையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற தொழில்களில் போடப்பட்டிருக்கின்ற மூலதனத்துக்கு வட்டிக்குக் கூடக் கட்ட வில்லை என்று குறிப்பேடுகள் குறிப்பிடுகின்றன. எங்கே நீங்கள் இரண்டாவது நோக்கத்தை நிறைவேற்றினீர்கள்? முதல் நோக்கமே பாழ்பட்டு விட்டது. இரண்டாவது நோக்கம் நிறைவேற்று வதற்கில்லை என்று சொன்ன பிறகு, நிதி அமைச்சர் அவர்கள் தனக்கே உரிய பாஷைப்படி ''முயற்சி எடுப்போம். எல்லோரும் ஒத்துழைத்தால் நடக்கும்'' என்று சொல்லுகிறார். இப்படிச் சொல்லிவிட்டு பிப்ரவரி ஆனதும் வேறு திக்கை நோக்கி ஓடப் போகிறார். இங்கே யாரை உட்கார வைக்கப் போகிறார்களோ தெரியாது. என்னையே இங்கே இருக்க விடப் போகிறார்களோ இல்லையோ, அதுவே அவர் கையில்தான் இருக்கிறது. இப்படி இவர்கள் தனிப்பட்டவர்களுடைய வருவாயில் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதாக உத்திரவாதம் தந்தார்களே, குறைத்துக் காட்டினார்களா? ஆசியாக் கண்டத்திலே இருக்கக் கூடிய பல நாடுகளிலுள்ளவர்கள் - பொருளாதார நிபுணர்கள் - மாநாட்டில் இந்தியாவிலே இரண்டு இந்தியக் குடும்பங்களிடத்தில் 500 கோடி ரூபாய் மூலதனம் சிக்கிக் கொண்டிருக்கிறது என்று பேசியிருக்கிறார். இவருக்கும் இந்தப் பேச்சுக்கும் என்ன பொருத்தம் இருக்கிறது? இதுதான் சமதர்மம் என்றால் சமதர்மத்தை எழுதியவன் அந்தக் காலத்தில் எப்படி இருந்தது என்பதற்காகக் கல்லறைகளைத் தோண்டிப் பார்ப்பதுபோல - கல்லறையிலிருந்து எழுந்து வந்து அந்தக் காலத்தில் நாம் எழுதிய சமதர்மம் நாட்டில் எப்படி இருக்கிறது என்று பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தால், அவன் எழுதிய சமதர்மத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லாததைத்தான் காண நேரிடும். இதுதான் சமதர்மமா? எந்த வகையிலே இந்த சமதர்மத்தை ஏற்படுத்த திட்டத்தின் கீழ் தனியார் துறையில் இருக்கிற லாபத்தை ஒழிக்கப் பார்த்தீர்கள்? நம்முடைய நிதி அமைச்சர் இந்த மன்றத்தில் சொன்ன இன்னொரு லட்சியம் என்னவென்றால், தொழிலாளிகளை தொழிலில் பங்காளிகளாக ஆக்கிவிட வேண்டும் - ஷேர் ஹோல்டர்களாக ஆக்கிவிட வேண்டும் - என்பது. இது சொல்லி ஒரு வருஷத்திற்கு மேல் ஆயிற்று என்று நான் கருதுகிறேன் - என்ன முயற்சி எடுத்தீர்கள்? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட நகலில் இதற்கான வரி என்ன இருக்கிறது? மூலதனாளிகளுக்கு

வரக்கூடிய லாபத்தை அப்படியே விட்டு விட்டால் அது தவறான வழியில் போகிறது, அதுவும் கள்ள மார்க்கெட்டில் வரும் லாபத்தைத் திரும்பப் பிடித்து உரிஞ்சி இழுக்க வேண்டும், அதற்குத் தொழிலாளிகளுக்கு அதிகமாகப் பணத்தை கொடுத்தால்தான் வருமானம் பரவி இருக்கவேண்டும். Disposal of income என்று நிதி அமைச்சர் பேசினாரே, அந்த முறையில் தொழிலாளிகளை தொழிலில் பங்காளிகளாக்க இந்தத் திட்டத்தில் என்ன வழி இருக்கிறது? நேர் மாறாக நீங்கள் புதுப் புது முதலாளிகளையும் தொழிலதிபர்களையும் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்படுத்தியிருக்கிறீர்கள். இந்த நாட்டிலே இருக்கிற தொழில் வளத்தை மட்டும் கணக்கிட்டுப் பார்த்தால் நெய்வேலி நிலக்கரி மத்திய சர்க்கார் நிர்வாகத்தில், பெரம்பூர் கோச் ஃபாக்டரி மத்திய சர்க்கார் நிர்வாகத்தில், புதியதாக அமைக்க இருப்பது ஸர்ஜிகல் இன்ஸ்ட்ருமெண்டஸ் ஃபாக்டரி - அதாவது அறுவைக்கான கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை. இவை தவிர உங்களுக்குக் கிடைத்தது என்ன? ஏராளமான நல்லெண்ணம், மிகுந்த பாராட்டுதல், நல்ல நேசம் - இவைகளை இல்லை என்று நான் சொல்லவில்லை. இவைகள் தவிர இந்த நாட்டுக்குக் கொண்டு வந்தது என்ன? சேது சமுத்திரம் உண்டா? ''சேர்க்கப்பட்டிருக்கிறது, நிறைவேறும் என்று எதிர் பார்க்கிறோம்'' என்று ஒருவரும், இன்னொரு இடத்தில் மத்திய சர்க்காரில் அமைச்சராக இருக்கக்கூடிய திரு. சுப்பராயன் அவர்கள் ஒரு இடத்தில் ''சேர்க்கப்பட்டிருக்கிறது, நிறைவேற்றப்படத்தான் போகிறது, ஆனால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதை சேர்ப்பது யோசிக்கப்படவேண்டிய விஷயம்'' என்று ஆருடம் பார்ப்பது போலப் பேசியிருக்கிறார்கள். நேற்று பேசும் போது கனம் அங்கத்தினர் சீனிவாச அய்யர் கிழக்குக் கரைக்குச் சாலை அமைக்க முடிந்தால் நல்லது என்று பேசியிருக்கிறார்கள். கிழக்குக் கடற்கரைச் சாலை வேண்டும்; தொண்டி துறைமுகத்தை ஆழப்படுத்த வேண்டும்; கடலூர், போட்டோ நோவோ துறைமுகங்களை விரிவுபடுத்த வேண்டும்; சிறு துறைமுகங்களை அபிவிருத்தி செய்து அவைகளைத் தூர்வாரி விரிவுபடுத்த வேண்டும் - இதற்கெல்லாம் என்ன வழி செய்திருக்கிறீர்கள்? நினைத்த நேரத்தில் கண்டலாவைத் தோண்டினார்களே மண் சரிகிறது - அதை வாரிக் கொட்டிவிட்டு, தோண்டி, அதிலும் கட்டணம் இல்லாமல் ட்யூட்டி இல்லாமல் - வரலாம் என்று அந்தத் துறைமுகத்தை இன்றைய தினம் மிகுந்த பரபரப்புள்ளதாக ஆக்குகிறார்கள்...

துணை சபாநாயகர் : The Hon. Member may finish his speech within two minutes.

திரு. சி. என். அண்ணாதுரை : உலக பாங்க் கடன் கொடுக்காமலிருந்தால் சென்னைத் துறைமுகம் கேட்பாரற்றுப் போயிருக்கும். தொழில் வளத்தைப் பெருக்கத் தவறிவிட்டீர்கள். ஆக உண்மையிலேயே இந்தத் திட்டத்தின் மூலம் சமதர்மம் நிறைவேற்றப்படவில்லை, விலைவாசி குறைக்கப்படவில்லை, வேலையில்லாத் திண்டாட்டம் நீக்கப்படவில்லை, கிராமப் புறத்திற்கும், நகரப் புறத்திற்கும் இருக்கக்கூடிய பேதங்கள் போக்கப்படவில்லை, பிரதேச வேற்றுமைகள் நீக்கப்படவில்லை - இவைகள் அத்தனையும் உங்களால் செய்ய முடியவில்லை. நான் சொன்னவைகளையெல்லாம் நிறைவேற்ற, ஒவ்வொன்றுக்கும் ஆகக்கூடிய செலவுத் தொகையைப் போட்டு கூட்டிப் பார்த்துத்தான் நமது மாநிலத்திற்கு, 1,000 கோடி ரூபாய் ஆகும் என்று குறிப்பிட்டேன். அதற்கு ''ஐயோ, ஆயிரம் கோடியா'' என்று கேட்டார்கள். அதே நேரத்தில் நிபுணர்கள் சொல்லியிருப்பது 600 கோடி. இப்போது இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் சொன்னதை யெல்லாம் வைத்துக் கொண்டு வீட்டுக்குப் போய், புள்ளிவிவரக் கணக்கிட்டு, 600 கோடி ரூபாயோடு கூட்டிப் பார்த்தால் அது 6,000 கோடியாகத்தான் இருக்கும். நாங்கள் மிகச் சிறிய எண்ணிக்கையுள்ள கட்சியில் இருப்பதால் அல்பமாகப் போட்டிருக்கலாம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் 11,000 கோடி அளவு என்றால், 1,000 கோடி ரூபாய் இந்த மாநிலத்திற்குத் தருவதில் என்ன தவறு இருக்கிறது?

இதிலும் நமது நிதி மந்திரி அவர்கள் மூன்று விதமாக இது பிரிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அதாவது சென்டர் செக்டார், ஸ்டேட் செக்டார், பிரைவேட் செக்டார் என்ற சொல்லப்படுகிறது. இதை நான் பார்த்திருக்க மாட்டேனென்று நமது நிதி மந்திரி அவர்கள் கருதியிருக்கலாம். அவ்வாறு அவர்கள் என்னைப் பொறுத்த அளவிலே கருதியிருக்க மாட்டார்களென்றே நம்புகிறேன். அப்படி அவர்கள் கருதியிருந்தாலும், அவர்களுடைய அரசியல் அப்படி எண்ண வைத்திருக்கும்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம்: நான் பேசுகிறபோது நீங்கள் இல்லை.

திரு. சி. என். அண்ணாதுரை : எனக்கு 2, 3 நாட்களாக உடல் நலம் சரியில்லை. அதற்கு நான் ரொம்பவும் வருத்தப்படுகிறேன். இப்போது அதற்குப் பதிலாக நமது நிதி மந்திரி அவர்கள் மீண்டும் பேசும்போது அதைக் கேட்பதற்கான வாய்ப்பு கிடைக்கப் போவதைக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆகவே, இந்தத் திட்டம் போட்டிருக்கக்கூடிய முறை, அதன் குறிக்கோள் ஆகியவை நல்லமுறையில் நடத்தப்படவில்லை என்பதுதான் என் கருத்து. அதற்காகத்தான் நான் ஆயிரம் கோடி ரூபாய் கேட்டேன். எதற்காக ஆயிரம்கோடி ரூபாய், அண்ணாத்துரை குழந்தையைப் போல் கேட்கிறாரே என்று சொன்னார்கள்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம்: நான் சொல்லவில்லை. ஸ்ரீ ராஜாஜி அவர்கள்தான் சொல்லி இருக்கிறார்.

திரு. சி. என். அண்ணாதுரை : அதனால்தான் நானும் சொன்னார்கள் என்று சொன்னேன். இவரும் சொன்னார்; அவரும் சொன்னார். ஆகவே, இருவரும் சொன்னதால்தான் நான் பன்மையிலே பேசினேன். எனக்கு ஒரு சந்தோஷம். முதலிலே நான் 1,000 கோடி ரூபாயை கேட்ட போது, நான் பண்டாரமாகக் காட்சியளித்தேன். இப்போது பண்டாரமில்லை, குழந்தையாகி இருக்கிறேன். குழந்தையைச் சாதாரணமாகத் தாயானவள் இடையிலே தூக்கிக் கொள்வாள். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், நமது நிதி மந்திரி அவர்களுக்கு மத்திய சர்க்காரில் இடம் கிடைத்து, அவர் உட்காரக்கூடிய இடத்திற்கு இட நெருக்கடி ஏற்படாமல் இருந்து, அவர் சொல்லக்கூடிய குறைபாடுகளையெல்லாம் ஏற்றுக் கொள்வதாக இருந்து, அப்படி அங்கே போன பிறகு, அவருக்கு இந்த இடத்து நினைப்பு இருந்து, இந்த இடத்தைப் பற்றிச் சற்று சிந்தித்து, அதற்கான வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டுமென்று நினைப்பு வந்தால், அப்போது தாயானவள் குழந்தையை இடையிலே தூக்கிக்கொண்டு கொஞ்சுவதுபோல், அதாவது குழந்தையாகிய என்னை தூக்கிக் கொண்டு கொஞ்சுவதுபோல், என்னுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்வார்களானால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன் என்பதைச் சொல்லிக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

தேசீய ஒருமைப்பாடு - அரசினர் தீர்மானம்

உரை : 47 *நாள் : 13.11.1959*

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, நாடு எங்கிலும் பேசப்பட்டு வருகிற "தேசீய ஒருமைப்பாடு" என்கின்ற பிரச்சினையாகக்கூடிய ஒரு மாநாட்டின் நடவடிக்கைகளைப் பற்றி குறிப்பேட்டின் பேரில், இன்றைய தினம் இங்கே ஒரு விவாதத்தை நம்முடைய நிதிஅமைச்சர் அவர்கள் துவக்கி வைத்திருக்கிறார்கள் நடைபெற்ற மாநாட்டிலே பல்வேறு கட்சிகள் அழைக்கப்பட்ட போதிலும், நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கட்சி அழைக்கப்படவில்லை என்பதைப் பல அங்கத்தினர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினர். ஆனால் நான் அதை ஒரு குறையாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதை நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் தேசிய ஒருமைப்பாடு - மாநாடு என்று அவர்கள் கூட்ட ஆரம்பித்தது, இன்று காலையிலே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்தின்படி பார்த்தால், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் நடவடிக்கையின் தொடர்ச்சியாக, மூன்றாவது கட்டமாக, அது நடைபெற்றிருக்கிறது. நாட்டிலே இருக்கிற ஒரு ஆளும் கட்சியின் நடவடிக்கைகளிலே இது ஒரு தனியான கட்டமாக அமைந்திருப்பதால், அதிலே நாங்கள் அழைக்கப்படாததைப் பற்றி உள்ளபடியே வருத்தப்படத் தேவை யில்லை. ஆனால், ''தேசீய ஒருமைப்பாடு' என்று எடுத்துச் சொல்லப்பட்டு வந்ததை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே 'தேசீய இணைப்பு' என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். வார்த்தைக்கு வார்த்தை நான் பொருள் பிரித்துப் பார்க்கிறேன் என்று யாரும் என் பேரில் வருத்தப்பட்டுக்கொள்ள வேண்டாம். 'ஒருமைப்பாடு' என்பதற்கு 'இணைப்பு' என்பதற்கும் அடிப்படையிலே வித்தியாசம் இருக்கிறது. 'இணைப்பு என்பது - தனித்தனி உருவங்களைப் படைத்த

பல்வேறு உருவங்களை ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக இணைத்து வைப்பது இணைப்பாகும். 'ஒருமைப்பாடு' என்பது - தனித் தனியாக இருக்கிற உருவங்களாக இருந்தாலுங்கூட, அவைகளையெல்லாம் ஒன்று கூட்டி ஒரு ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது ஒருமைப் பாட்டின் பால் சேர்ந்ததாகும்.

'இந்த மாநாட்டை நடத்தியவர்கள் தேசீய ஒருமைப்பாட்டை வளர்க்க விரும்பினார்கள்' என்று ஏடுகளெல்லாம் ஏழுதின. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் 'இது தேசீய இணைப்பு' என்றார்கள். 'இன்டெக்ரேஷன்' என்பதற்கு அகராதியில் தரப்பட்டிருக்கிற பொருள் - 'துண்டுபட்டிருக்கின்ற பொருள்களை ஒரு பொருளாகக் குவிப்பது அல்லது சேர்ப்பது' என்பதாகும். ஆகவே, இந்த மாநாட்டை நடத்தியவர்கள் 'இன்டெக்ரேஷன்' என்பதற்கான நல்ல விளக்கத்தையும், அதற்கும் முன்னாலே 'நாஷனல்' என்பதற்கான விளக்கத்தையும், எது 'நேஷன்' என்பதற்கான இலக்கணங்களையும், இந்தியாவில் உள்ளவர்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது ஒரே நேஷனைச் சேர்ந்தவர்கள் என்பதற்கான ஆதாரங்களையும் விரிவாகக் கொடுத்திருப்பார்களானால் விவாதம் கட்சி அரசியலுக்கு மட்டும் பயன்படாமல் இன்னும் சற்று உயிருள்ளதாக அமைந்திருக்கும். அதற்கு நம்முடைய துரைத்தனத்தார் தந்திருக்கிற இந்த ஏட்டோடுகூட, அதிலே கலந்து கொண்டவர்கள் அங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்களையெல்லாம் அவர்கள் தொகுத்துக் கொடுத்திருப்பார்களானால் அவரவர்கள் உள்ளத்தில் தேசீய ஒருமைப்பாடு என்பது என்ன என்ன வகையிலே வடிவம் எடுத்தது என்பதை நாம் ஓரளவு தெரிந்து கொண்டிருக்கலாம். அதை அவர்கள் செய்யத் தவறிவிட்டார்கள்.

ஆனால் நம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற இந்த அறிக்கையிலே பார்க்கின்ற நேரத்திலே, இதில் முதல் இரண்டரை பக்கங்களில், இந்தியா என்பது பல்வேறு வகையான இனங்களையும் பல்வேறு வகையான மொழிகளைப் பேசுகின்ற மக்களையும் கொண்ட ஒரு முரண்பாடு நிறைந்த இடம் என்றாலும், அந்த முரண்பாட்டுக்கிடையே ஒரு ஒருமைப்பாட்டை ஏற்படுத்த நெடுங்காலமாக இந்த நாட்டிலே முயற்சி செய்து பலர் அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள் என்ற கருத்து வலியுறுத்தப் பட்டிருக்கிறது. அதற்கு இந்தியத் துணைக் கண்டத்தினுடைய

குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் தம்முடைய அரிய உரையில் ஆதாரமாகக் காட்டியிருப்பதாவது: 'If you look into the Mahabharata, you will find there that almost all the representatives from the north and the extreme south are said to have been present at the Kurukshetra war.' அரசியல் பிரச்சினைகளை விவாதிக்கின்ற நேரத்தில் பாரதக் கதையை ஆராயலாமா என்று கேட்டால், டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிடாமல் இருந்திருப்பாரானால் நானும் அதைக் குறிப்பிடத் தயக்கப்பட்டிருப்பேன். ஆனால், டாக்டர் இராதா கிருஷ்ணன் அவர்களே இதை ஒரு அரசியல் பிரச்சினைக்கு ஆதாரம் அளிக்கக்கூடியது என்று எடுத்திருக்கிறார். நான் உங்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்வேன். இதிலே குறிப்பிட்டிருப்பதில் Extreme South என்று இருக்கிறது. அங்கே வந்திருந்தவர்கள் தென் கோடியிலேயிருந்து வந்திருந்தவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்களே என்று நான் நம்முடைய சங்க இலக்கியங்களைப் பார்த்தேன். அப்படிப் பார்க்கிற நேரத்தில், அவர்கள் பாரதப் போரில் எந்தப் பக்கத்திலேயும் சேராமல் சண்டையில் ஈடுபட்ட இருவருக்கும் சோறு அளித்தார்கள் என்று நம்முடைய சங்க இலக்கியம் சொல்கிறது. அதிலே 'குருக்ஷேத்திரம்' என்ற அபாயகரமான வார்த்தையை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் உபயோகப்படுத்தியதிலேயிருந்து, பாரத காலம் முதற்கொண்டு அடிதடிச் சண்டை நடந்துகொண்டு வந்தது என்பது அதிலே ஆதாரமாக இருப்பதுதான் என்னைப் போன்றவர்களுக்குத் தெரிகிறது.

ஆனால், பலர் இந்தியத் துணைக் கண்டத்தை ஒன்றாக இணைக்க முயற்சி எடுத்துக் கொண்டார்கள். "unity in diversity" முரண்பாடுகளுக்கிடையே ஒருமைப் பாட்டைக் காண விரும்பினார்கள் என்று குறிப்பிட்டிருப்பது அத்தனையும் எந்தெந்த நேரத்தில் எந்தெந்தப் பகுதியில் உள்ளவர்கள் வலிவு பெற்றிருக்கிறார்களோ அவர்கள் இந்தியா முழுவதையுமே தங்களுடைய ஒரு குடையின்கீழ்க் கொண்டு வரவேண்டும் என்பதற்காக முயற்சி எடுத்துக்கொண்டு, இக்காலத்தில் அமைக்கப்படுகிற சாம்ராஜ்யங்களைப் போல், முன்னே சில சாம்ராஜ்யங்களை அமைத்தார்கள் என்பதைத் தவிர, தேசீய ஒருமைப்பாடு என்பதற்கு இன்று அளிக்கப்படுகிற இலக்கணத்தையொட்டி இந்தியத் துணைக் கண்டத்திலே அமைந்திருந்த ஒரு அரசை அருள் கூர்ந்து எனக்குக் காட்டுங்கள், இங்கே குப்த சாம்ராஜ்யத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அக்பருடைய மனப்பான்மையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அசோகனுடைய சாம்ராஜ்யத்தைப்

பற்றியும் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவை அத்தனையும் நர்மதையாற்றுக்கு மேலே தவிர, நர்மதையாற்றுக்குப் கீழே இல்லை என்பதை வரலாறும் பூகோளமும் ஒருசேரக் கூட்டிப் படிப்பவர்கள் நன்றாக உணர்ந்து கொள்வார்கள். ஆனால் அசோகன் அக்பர் இப்படிப்பட்ட பரந்த மனப்பான்மை படைத்தவர்கள் எந்தக் கோடியிலே இருந்தாலும், அவர்களை வாழ்த்த வேண்டியதும் வணங்க வேண்டியதும் தமிழகத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல, தரணியில் உள்ள அனைவருக்குமே கடமையாகும். அந்த வகையிலே அசோகன் புகழ் பெற்றிருக்கிறார் என்றால், அந்த வகையில் அக்பர் புகழ்பெற்றிருக்கிறார் என்றால், அவர்கள் துவக்கிய, அவர்கள் அமைத்த அரசு ஏன் நிலைக்கவில்லை? நிலைக்காததற்கு என்ன காரணம் என்று யோசித்துப் பார்க்கவேண்டும். இன்றையதினம் காஷ்மீரத்திலிருந்து கன்யாகுமரி வரையில் நாங்கள் ஒரே பேரரசை அமைத்துவிட்டிருக்கிறோம் என்றும், அது அமைத்தது மாபெரும் சாதனை என்றும், அதைப் படிப்படியாக எப்படி அமைத்திருக்கிறார் என்பதைத் தங்களுடைய சாதனையாக நம்முடைய நிதி அமைச்சர் எடுத்துச் சொல்லிக் கொண்டு வந்ததையும் அவர்கள் ஆராய்ந்து பார்ப்பார்களானால் இந்த வழிமுறைகளெல்லாம் அசோகருக்கும் அக்பருக்கும் தெரிந்திருக்காது என்றா கருதிக் கொண்டிருக்கிறீர்கள்? கனிஷ்கன், ஹர்ஷன் இவர்கள் அதை அறியமாட்டார்கள் என்ற எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்? அல்லது குப்த, மௌரிய சாம்ராஜ்யத்திலே இப்படிப்பட்ட 'இராஜதந்திர நிபுணர்கள் இருந்ததில்லை என்றா எண்ணுகிறீர்கள்? இதையெல்லாம் யோசித்துப் பார்த்தால், அவர்கள் அத்தனை பேரும் எதை நம்பி ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை அமைத்து, கடைசியில் எது இல்லாததால் அந்த சாம்ராஜ்யம் அழியப்பட்டதோ, அதைப் போலவே இன்றையதினம் நீங்கள் எதை நம்பி இந்த சாம்ராஜ்யத்தை அமைக்கின்றீர்களோ, அது எது இல்லையோ அதனால் அழிக்கப் படப் போகிறது என்பது காலம் அளிக்கும் தீர்ப்பாக இருக்கப் போகிறது.

'பிப்ரவரி மாதத்திலே பார்' என்கிறார் நிதி அமைச்சர். பிப்ரவரி மாதத்தோடு பிரச்னை தீர்ந்துவிடுவதில்லை. தேர்தலில் ஏற்படுகின்ற விளைவுகளையொட்டி உடனே இந்தப் பிரிவினைப் பிரச்சினை விட்டுவிடுவார்கள் என்று நிதி அமைச்சர் அவர்கள் கருதுவார் களானால், அவர் பெரிதும் ஏமாற்றத்திற்கு உள்ளாவார்கள். 'இதைப் போலவே கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்து நாங்கள் அடக்க

முடியும், ஆனால், பொறுத்திருக்கிறோம், மக்களே பார்த்துக் கொள்ளட்டும் என்று இருக்கிறோம்' என்று இருபொருள் படும்படியாக நிதி அமைச்சர் பேசுகிறார் என்றால் - நான் தெளிவாக அவருக்குச் சொல்கிறேன் - எங்களுடைய கொள்கைகளை நீங்கள் மதிக்காது இருக்கலாம். எங்களுடைய வாதங்களை நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால், எங்களுடைய தூய்மையான இருதயத்தைத் தயவுசெய்து சந்தேகப்படாதீர்கள். நாங்கள் இந்தக் கொள்கையில் எங்களை ஈடுபடுத்திக் கொண்ட நேரத்தில் இழிமொழியும் பழிச்சொல்லும் எங்களை வந்து தாக்கும் என்று உணர்ந்த பிறகுதான் ஈடுபடுத்திக் கொண்டோம். அதை அடக்கப் போலீசும் படையாட்களும் பயன்படுத்தப்படும் என்பதை ஒரு துளியும் அறியாமல் அல்ல அந்த நேரத்தில் ஈடுபட்டது. இப்படிப்பட்ட, ஒரு பிரிவினைச் சக்தி என்று உங்களால் அழைக்கப்படுகிற சக்தியைத் தேர்தலிலே இலட்சக் கணக்கான பணத்தைச் செலவழித்து ஒழித்துக் கட்டலாம் என்று திட்டம் இடுவீர்கள் என்பதும் நாங்கள் அறியாததல்ல. ஆனால், நாங்கள் கேட்கிற அந்தக் கோரிக்கை இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது என்றால், நாங்கள் அத்தனை பேர்களும் எங்களுடைய இரத்தத்தைச் சிந்தி அடையவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். அந்த இரத்தமும் உங்கள் கரத்திலே இருக்கும் கத்தியால் வெளிப்பட வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகையால், கத்தி இருந்தால் கூர்மையாகத் தீட்டிக் கொள்ளுங்கள். சட்டம் இருந்தால் விரைவில் அமுலுக்குக் கொண்டு வாருங்கள். எப்படிப்பட்ட பயங்கரமான நடவடிக்கைகளிலே ஈடுபடுவதானாலும் அவைளுக்கெல்லாம் சளைக்காமல் இருப்பதற்குக் காரணம் - தனிப்பட்ட முறையில் நாங்கள் பெரிய துணிச்சல்காரர்கள் என்பது அல்ல - நாங்கள் அந்த லட்சியத்தை அவ்வளவு பரிபூரணமாக நம்பிக் கொண்டிருக்கிறோம். 'இது என்ன பயித்தியக்காரத்தனம்!' என்று நிதி அமைச்சர் அவர்கள் கருதலாம். 'இது என்ன பயித்தியக்காரத்தனம்!' என்றுதான் சுயராஜ்யத்திற்காகப் போராடிய நேரத்திலும் பல பெரியவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். அது இன்றிருக்கும் பல காங்கிரஸ்காரர்களுக்கு விளங்காமலிருக்கலாம்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம்: நீங்களே நினைத்தீர்கள்.

திரு. சி. என். அண்ணாதுரை : நானும் நினைத்தாக நம்முடைய நிதி அமைச்சர் சொல்கிறார். எனக்கும் திராவிடக் கழகத்

தலைமைக்கும் ஏற்பட்ட கருத்து மாறுபாட்டுக்கும் காரணமே சுயராஜ்யத்தைப்பற்றி நான் கொடுத்த விளக்கத்திற்கும் திராவிடக்கழகத் தலைமை கொடுத்த விளக்கத்திற்கும் அடிப்படையில் இருந்த வித்தியாசம்தான் என்பது நாடு அறியும். ஆனால் உலகம் சுற்றுகிற அமைச்சர் இந்தச் சின்ன விஷயத்தை அறியமாட்டார்.

இதிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையே பார்க்கட்டும். இந்தியா எந்தக் காலத்திலாவது ஒரே அரசியலமைப்பின் கீழ் இருந்ததுண்டா? அதற்கான ஆதாரங்கள் தரப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால் - இரண்டொரு சமஸ்கிருத ஸ்லோகங்கள் ஆங்கிலத்தில் போடப்பட்டிருக்கின்றன. அவற்றுக்குப் பொருள் விளங்கவில்லையே தவிர, மற்றவைகளுக்கு நன்றாகப் பொருள் விளங்குகின்றது - இந்தியா ஒரு அரசிலமைப்பின் கீழ் எந்தக் காலத்தில் இருந்தது என்பதற்கான ஆதாரங்கள் ஒன்றுமே இல்லை. 'He was impressed by the toleration of the people', என்று மக்களுடைய சகிப்புத் தன்மையை அவர் பாராட்டினார் என்று இங்கே குறிப்பிட்டிருக் கிறார்கள். சகிப்புத் தன்மை இப்போதுதான் இருக்கிறது என்று அல்ல. அந்தக் காலத்திலிருந்து இன்று வரை தமிழகத்தில் அந்தச் சகிப்புத் தன்மை எப்போதும் தலை நிமிர்ந்து நிற்கிறது. வட நாட்டில் ஏற்படக்கூடிய கலகங்கள் இங்கே நடந்ததில்லை. அலிகாரில் ஏற்பட்டதுபோல, அஸ்ஸாமில் ஏற்பட்டதுபோல, இங்கே ஏற்பட்டதில்லை. நேரு பண்டிதரை 90 நிமிஷங்கள் பேசவிடாது ஆமதாபாத்தில் தடுத்து நிறுத்தியதைப் போல இங்கே நடைபெறு வதில்லை. இது தமிழகத்திற்கேயுரிய தலை சிறந்த பண்பாடாகும்; தமிழர்களுக்கே அத்தகைய பண்பாடு உண்டு. ஆனால் இதைத் தவறாக அவர்கள் எடுத்துக்கொண்டு. 'தமிழர்கள்தானே, அடங்கிக் கிடப்பார்கள்', என்ற எண்ணத்தில் நடந்து கொள்வார்களேயானால் இந்திய ஒற்றுமை என்ற பேச்சு எங்கே கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பதை நான் நிதியமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு பெரியவரே என்னிடம் சொன்னார். "நான் அங்கேயே நாட்டைப் பிரிப்பது அண்ணாத்துரையல்ல, உத்திரப் பிரதேசக்காரர்கள்தான் தென்னாட்டுப் பிரிவினையைச் செய்துவிடப் போகிறார்கள் என்பதைச் சொல்லி வந்தேன்" என்று அந்தக் காங்கிரஸ் பிரமுகர் சொன்னார். நிதியமைச்சரவர்கள், "அவர் யார்" என்று என்னிடத்தில்

கேட்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். கேட்காமலேயே அவருக்குத் தெரியும். இன்றைக்குக் காங்கிரஸ் வட்டாரத்தில் உள்ளவர்களே, குறிப்பாக டி.டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் பாராளுமன்றத்திலே India that is Bharath, Bharath that is U.P. என்று குறிப்பிட்டிருக்கிறார். அவர் ஏன் இப்படிப் பேசவேண்டும்? இன்றையதினம் நமது நிதியமைச்சரவர்கள், இந்திய ஒருமைப்பாடு குறித்துப் பேசும்போது, பழைய சாதனைகளைப் பற்றி, யார் யார் எதையெதை விட்டுக் கொடுத்துவிட வேண்டும் என்பதைப் பற்றிப் பேசினார். எல்லாச் சிற்றரசுகளையும் ஒன்றாகச் சேர்த்தது மாபெரும் சாதனை என்று குறிப்பிட்டுக் கொண்டார்கள். உண்மையில் அவர் அதை அப்படிச் சொல்லிக்கொண்டது சர்தார் பட்டேலுக்குப் பெருமையளிக்கக் கூடியதா அல்லது சிறுமையளிக்கக்கூடியதா என்பதை யோசிக்க வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்த அத்தனை சிற்றரசர்களும் அன்றையதினம் வெறும் ஜரிகைச் சட்டை குல்லா அணிந்த உல்லாச பேர்வழிகளாக இருந்த நேரத்தில், குதிரையில் ஏறுவதற்கு அஞ்சி, குதிரையில் ஏறி வந்தவர்களைத் தூர இருந்து கண்டு களித்த நேரத்தில், மக்கள் புரட்சி செய்துவிட்டால் என்ன செய்வது என்று அரண்மனையைச் சுற்றி எட்டு மதில் சுவர்கள் எழுப்பிக்கொண்டு வாழ்ந்த நேரத்தில் - இப்படி உளுத்துப் போய் சீட்டுக்கட்டு ராஜாக்களைப் போல் வாழ்ந்து கொண்டிருந்தவர்களை டில்லிக்கு அழைத்தவுடனே 'போனது போகட்டும், மிச்சம் என்ன', என்ற கை நீட்டியவர்களின் அரசுகளை ஒன்று சேர்த்தது பெரிய சாதனை என்றால் அதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதைப் பெரிய சாதனை என்றே வைத்துக் கொள்வோம். அதனால் நிதியமைச்சரவர்கள் சந்தோஷப்படலாம் என்றால் அதைப் பெரிய சாதனை என்றே சொல்கிறேன். அந்தப் பெரிய சாதனைக்கு சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு உறுதுணையாக இருந்தவர் திரு. வி. பி. மேனன் என்பதை யாரும் அதற்குள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். சிற்றரசுகளை ஒன்றாகச் சேர்ப்பதற்குப் பட்டேலுக்கு வலதுகரம்போல இருந்தவர் வி.பி. மேனன். என்றைக்குமே இந்தியா ஒரு நாடாக இருக்கவேண்டுமென்பதில் அவருக்குள்ள ஆர்வம் குறைந்ததல்ல. இன்றையதினம் அவர் டில்லியில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டு மகாநாட்டைப்பற்றி 'It was a mountain that brought forth a mouse. One is forced to conclude that it was nothing more than a Congress election stunt." என்று, ''மலையைக் கெல்லி எலியைப்

பிடித்தார்கள். இது காங்கிரஸ் கட்சி கையாள்கிற தேர்தல் தந்திரம்'' என்று சொன்னார். அவர் எங்களைப் போல் பிரிவினைக் கட்சியைச் சேர்ந்தவர் அல்ல. பதவி கிடைக்காத ''ப்ரஸ்ட்ரேஷனில்'' பேசுகிறார் என்று சொல்ல முடியாது. அவர் மிகப் பெரிய பதவியெல்லாம் வகித்தவர். அவரே தேசிய ஒருமைப்பாட்டு மகாநாட்டைப்பற்றி இப்படிப் பேசியிருக்கிறார் என்றால், அதைக் கவனிக்க வேண்டும். ஆச்சாரிய கிருபாளனி அவர்கள் ''பாவிகள் எல்லாம் ஒன்றாகக் கூடிப் பேசினார்கள், பரிகாரம் தேடுவதற்காக'' என்று பேசியிருப்பதும் இந்த மகாநாட்டைப் பற்றித்தான். தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றி பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவரும் மற்றும் எதிர்க்கட்சித் தலைவருமா வி.கே. ராமசாமி முதலியார் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள் என்றால் எங்களுக்காக மட்டுமல்ல காங்கிரஸ் கட்சிக்கும் சொல்லியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள்தான். ''இந்தியா முழுவதற்குமே ஒரே ஒரு சர்க்கார்தான் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். சிலர் தனித் தனியாகப் பிரிந்து போய்விட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் நாங்கள் இரண்டுக்கும் நடுவில் போகிறோம்'' என்று அவர்கள் சொன்னார்களே, பொருளாதார அடிப்படையில், அரசியல் அடிப்படையில் எல்லாத் துறைகளிலும் அவர்கள் நடுவில் போகிறோம் என்று சந்து கண்ட இடத்தில் நுழைகிற தன்மைதான் இந்த அவல நிலைக்குக் காரணம் என்று குறிப்பிட விரும்புகிறோம். இது எந்தப் பிரச்சினையையும் தீர்ப்பதற்குப் பயன்படாது. பிரச்சினைக்குத் தீர்வாக அமையாமல் பிரச்சினையை ஒத்திப் போடுவதற்குப் பயன்படுமே தவிர, வேறு எவ்வித பயனும் கிடையாது. எந்தப் பக்கம் சாய்கிறதோ அந்தப் பக்கத்தில் சேர்ந்து கொள்ள இந்தக் கொள்கையை நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். உண்மையில் உங்களுக்கு இந்த இரண்டு கொள்கையிலும் நம்பிக்கை கிடையாது.

நான் உள்ளபடியே சொல்கிறேன். இந்தியா ஒரே ஒரு நாடாகத்தான் இருக்கவேண்டுமென்று சொன்னால் இந்த ஒருமைப்பாடு தேவை என்று சொன்னால், தமிழ் மொழி அதற்கு இடையூறாக இருக்குமென்றால் அதைக்கூட விட்டுக் கொடுத்தால் என்ன? தமிழ் மொழியினால் தேசிய ஒற்றுமை குலையும் என்று சொன்னால் தேசிய ஒற்றுமைக்காக அதை விட்டுக் கொடுத்து விடுவார்களா, உங்களுக்குச் சிலப்பதிகாரமும் வேண்டும்;

மனுதர்மமும் வேண்டும்; தேவநாகரியும் வேண்டும்; தமிழும் தேவை, கூழும் வேண்டும்; மீசையும் வேண்டும். எத்தனை காலத்திற்கு இந்தப் போக்கு? தேசிய கவுன்சில் கூட்டத்திலே நம்முடைய நிதி யமைச்சரவர்கள் இந்தியை வரவிட மாட்டோம், எங்கள் தமிழ் மொழியை அழிக்க இடம் கொடுக்க மாட்டோம் என்று சொன்னால், அதைத்தான் நான் நாட்டுப் பற்று, மொழிப்பற்று என்று கூறுகிறேன். அதுதான் இனவுணர்ச்சி, அந்த மொழிப்பற்று இருக்கிற வரையில், நாட்டுப் பற்று இருக்கிற வரையில், தமிழ் உணர்ச்சி இருக்கிற வரையில், இலக்கியம் இருக்கிற வரையில், ''தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கோர் குணமுண்டு'' என்று நாமக்கல் கவிஞர் பாடிய கவிதா தத்துவம் உள்ளத்தில் இருக்கிற வரையில் எவ்வளவு தேர்தல் வந்தாலும், எங்களை அழித்து அடைத்துவிடாது; எவ்வளவு சட்டம் வந்தாலும் அழித்துவிட முடியாது. பிப்ரவரியில் பார்த்து விடலாம் என்கிறார் நமது நிதி அமைச்சர். பிப்ரவரியிலே பார்க்கலாம்; தேர்தலைப் பொறுத்தா எங்கள் கட்சி யிருக்கிறது? அரசியல் வாழ்வு என்பது ஐந்து வருஷத்திற்கு ஒருமுறை அளிக்கப்படுகிற மரண சாசனமா? தேர்தலிலே தோற்றார் என்பதற்காக உள்துறை அமைச்சர் பக்தவத்சலத்தின் அரசியல் வாழ்வு அதோடு அழித்து போய்விடவில்லை. தேர்தலில் தோற்றதினால் திரு. கோபால் ரெட்டி அரசியல் வாழ்வை விட்டு ஓடிப்போய் விடவில்லை. இன்று டில்லி அமைச்சராக இருக்கிறார். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அங்கே போகிறபோது அவர் விட்டுக் கொடுப்பாரா மாட்டாரா என்று தெரியவில்லை. திரு. குமாரசாமி ராஜா தேர்தலில் தோற்றுப்போன பிறகுதான் கவர்னர் கிரீடம் அவரைச் சேர்ந்தது. தேர்தல் யாரையும் சாகடித்து விடவில்லை. ஆகவே, அந்தப் பூச்சாண்டியை எங்களிடம் காட்ட வேண்டாம் என்று நிதி அமைச்சர் அவர்களிடம் சொல்ல விரும்புகிறேன். இதுவரை நிதி அமைச்சராக இருந்தவர் ஆல மரத்தடியில் உட்கார்ந்து ஆருடம் சொல்பவரைப் போல் யாரை மிரட்டப் பேசுகிறார்கள்? அவருக்கு நிச்சயமாகச் சொல்கிறேன். எங்களுடைய நாட்டுப் பிரச்சினை தேர்தலோடு இணைக்கப்படவில்லை. தேர்தலோடு இணைக்கப்பட்டதல்ல திராவிட நாட்டு விடுதலை இயக்கம். தேர்தலுக்குப் பிறகு கட்சியின் கருத்து ஊடுருவி நிற்கும்.

வேண்டுமானால் அவர் வாதத்திற்காக இன்றைக்குத் தமிழ்நாடு கேட்பார்கள். நாளைக்குக் கோவையைக் கேட்பார்கள் என்று கேலி

பேசுவதில் ஒன்றும் சிரமமில்லை. நான்கூடச் சொல்வேன் - இன்றைக்கு இந்திய தேசீய ஒற்றுமை என்பவர்கள் இமயத்தை எல்லைக் கோடாக ஏன் சொல்லக்கூடாது? மெசபோடோமியாவை எல்லைக் கோடாக ஏன் சொல்லக் கூடாது? மெசபோடோமியாவையும் சேர்த்துக் கொள்ளலாமே! சீனா பக்கத்திலும் ஏன் போகக் கூடாது? இப்படி நானும் கூடப் பேசிக்கொண்டே போகலாம்.

இன்னும் அவர்கள் இந்த தேசீய ஒருமைப்பாட்டுக்காகக் கூட்டப்பட்ட மகாநாடே தேசிய ஒருமைப்பாடு இருப்பதைக் காட்டவில்லை என்று சொல்கிறார்கள். இதுவரையில் எல்லா ஏடுகளும் எழுதிக் கொண்டு வந்ததையும், எல்லாத் தலைவர்களும் எடுத்துப் பேசிக்கொண்டு வந்ததும் 'நாட்டிலே ஒரு சீர்குலைவு ஏற்பட்டுவிட்டது, அதைச் சரிப்படுத்தத்தான் நாங்கள் இதைச் செய்கிறோம்' என்று சொன்னார்கள். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பின்னால் அதைப் படிப்படியாக மாற்றிக்கொண்டு வந்ததைப்போல், இவ்வளவு வெடிப்பும் அடிப்படையில் இல்லை, மேலேதான் இருக்கிறதென்று சொன்னார்கள். யாராவது கட்டிட நிபுணரைக் கேளுங்கள். அடிப்படை சரியாக இல்லாமல் போனால் தான் மேலே வெடிப்பு ஏற்படுமே தவிர அடிப்படை சரியாக இருந்தால் மேலே வெடிப்பு இருக்காது. ஆகவே மேலே வெடிப்பு இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் அடிப்படை சரியாக இல்லாததுதான். ஆகையால்தான் இந்தியா ஒரே நாடு என்று சொல்லப்படும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் அரசியல் சட்டமானது மிக விரைவிலே நிறைவேற்றப்பட்டதாகப் பெருமைபட்டுக் கொண்டார்கள் - வந்த ஆபத்தே அதிலேதான் இருக்கிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தியத் துணைக்கண்டத்தைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தன்னுடைய பிடியிலேயிருந்து நீக்குவது என்று தீர்மானித்த நேரத்தில் இங்கே அரசியல் திட்டங்கள் பற்றிப் பேசப்படவில்லையா? 'குக்' திட்டம் பற்றிப் பேசப்படவில்லையா? ஐந்து ராஜ்யத்திட்டங்கள் பற்றிப் பேசப்படவில்லையா? அதிலிருந்து என்ன நமக்குப் புரிகிறது? இருக்கும் வரை ஒரே அமைப்பாக இருக்கவேண்டுமென்பதை மட்டுந்தான் நாட்டிலேயுள்ளவர்கள் கவனித்தார்கள் என்பது அல்ல. நீங்கள் சொன்னதற்கு மதிப்புக் கிடைத்ததா? அரசியல் தத்துவவாதிகள் அதை ஏற்றுக் கொண்டார்கள் என்றா கருதுகிறீர்கள்? "பெடரேஷன்"

என்று நிதியமைச்சரவர்கள் வாதாடினார்கள். பெடரேஷனுக்குள்ள இலக்கணத்தின்படி இந்திய பெடரேஷன் இருக்கிறதா? யூனியன் ஆப் இண்டியன் ஸ்டேட்ஸ்'' என்று போடப்பட்டிருப்பதில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகார வரம்பைப் பார்க்கும்போது, நல்ல பெடரேஷன் என்றால் மிச்ச அதிகாரத்தைத்தான் (Residuary Powers) அங்கே கொடுத்து விடுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் மத்திய சர்க்காருக்கல்லவா அந்த அதிகாரம் இருக்கிறது. தேசீய ஒருமைப்பாடு மகாநாட்டிலே கூட, ஒற்றுமைக்கு வழி என்ன என்று கேட்கும்போது, கல்வியை "concurrent subject" ஆக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "Education is strictly a State subject" ராஜ்ய சர்க்காருக்குத் தனியாக இருக்கின்ற போது ஒருவர் யோசனை சொல்கிறார்-'' அதை (Residuary Powers) ஆக்கலாம்'' என்று. அதைப் போல்தான் - "It was felt that this link must ultimately be Hindi" இங்கே நிலைத்துப் போய்விட்டது. கடைசியாக இணைப்புச் சங்கிலி இந்திதான். "இப்போது விழித்துக் கொண்டிருக்கிறார்கள். நன்றாகத் தூங்கட்டும்'' என்றும் சொல்லும் தன்மைக்கும் this link must ultimately be Hindi என்பதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது, என்பதை அறிய விரும்புகிறேன். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஆட்சியிலிருக்கும் வரையில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவருந்தான், பாவம் - எத்தனை காலத்திற்குத்தான் சண்டைபோட்டுக் கொண்டிருப் பார்கள்? என்னைப்போல் பதவிக்காக ஆசைப்படாமலோ, பதவியைப் பற்றி எண்ணிப் பார்க்காமலோ, மேலே ஆகாயம், கீழே பூமி என்று இருந்தால் பரவாயில்லை. அப்படி இருந்தால் இருப்பது ஒன்றும் போகாது. நம்முடைய நிதிமந்திரி சற்றுத்துணிந்தால் உள்ளது அல்லவா பறி போகும். எப்படி அவர் அந்தத் தியாகத்திற்குத் தயாராக முடியும்? ஏற்கனவே பெரிய தியாகத்தைச் செய்து விட்டவர்களா யிற்றே அவர்கள். அவர் அந்தத் துணிச்சலுக்கு வர மாட்டார் என்பதுபற்றி ஆச்சரியப்படவில்லை. ஆனால் துணிவு பெற்றிருப் பவர்களைத் தயவு செய்து இழிவாகக் கருதாதீர்கள். அவர்கள் அறிந்துதான், விளைவுகள் என்னென்ன ஏற்படும் என்பதைத் தெரிந்துதான் இதிலே ஈடுபட்டிருக்கிறார்களே தவிர, நீங்கள் கருதுகிறபடி சிறுபிள்ளைத்தனமாக இதிலே ஈடுபடவில்லை. இங்கே இருக்கின்றவர்கள் ஏதோ நீங்கள் துப்பாக்கியைத் தூக்கியவுடன் அதை எதிர்த்து நிற்க முடியாதவர்கள் என்று கருதாதீர்கள். இருக்கின்ற உள்ளமே ஒன்றுதான். அது போகப்போவதும் ஒரு தடவைதான்.

அவ்வாறு போவது பிரிவினைப் பிரச்சினைக்காகப் போகட்டும் என்ற உணர்வில்தான் எங்கள் பக்கத்தில் இருக்கின்றவர்கள் இருக்கிறார்கள். அந்த உணர்வு எங்களோடு பிறந்தது. அவர் பழகும் இடத்தில் அப்படிப்பட்ட தியாகிகள் வரிசை ரொம்பவும் குறைந்து, மற்றவர்கள் அதிகமாக இருக்கும் நேரத்தில் அவர் காங்கிரஸ் கட்சியில் இருப்பதால் அந்தப் பக்கத்தில் இருக்கும் வீரமும் இன்றையதினம் அவருக்குப் புரியாது.

இன்னொன்றையும் நான் கேட்க விரும்புகிறேன். பெரிய நாடாகாக ஏன் இருக்கவேண்டும்? எதற்காக இருக்கவேண்டும்? ஒரு நாடு பெரிய நாடு, சின்னநாடு என்பதற்கு என்ன அடையாளம் வைத்திருக்கிறார்கள்? ஒரு நாடு, இத்தனை மைல் நீளம், இத்தனை மைல் அகலம் இருக்க வேண்டுமென்ற கணக்கு இருக்கிறதா? சிறு பிள்ளையை ஏமாற்றுவதுபோல், இரண்டு வெல்லக் கட்டியை எடுத்துக்கொண்டு இது பெரிதா; அது பெரிதா என்று ஏமாற்றும் தகப்பனைப்போல், இந்தியா வரையில் காட்டி இவ்வளவு இருக்க வேண்டுமென்கிறீர்களா? எந்த அர்த்தத்திலே பேசுகிறீர்கள்? "Economic viability" பேசுகிறீர்களா? "Political viability" பேசுகிறீர்களா? அல்லது "Military viability" பேசுகிறீர்களா? எதிலே பேசுகிறீர்கள்? அப்படிப் பார்க்கப்போனால் ஒவ்வொரு நாட்டின் எல்லையையும் அழித்து இன்னின்ன அளவில்தான் நாடு இருக்க வேண்டும், அப்போதுதான் தேசிய நாடாகும் என்று சொல்லுங்கள். நம்முடைய பண்டித நேரு அவர்கள் அடுத்து ஐரோப்பாக் கண்டத்தில் நடக்கும் மகாநாட்டில் ஐரோப்பாவிலுள்ள சிறு சிறு நாடுகளின் எல்லையைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லலாமே. அவருக்கு அந்த அலுவல் இல்லையென்றால் நம்முடைய நிதியமைச்சர் அங்கு போய் வந்த பழக்கமுள்ளவர் சொல்லிவிட்டு வருவார். அவர்களும் கேட்டுக் கொள்ளுவார்கள். உலகமே ஒன்றாக ஆகவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். உண்மை. என்னுடைய நாடு என்னிடத்தில், நாம் எல்லோரும் சேர்ந்து ஒன்றாகலாம். யார் எல்லைக் கோட்டைக் கலைக்கிறார்கள்? ஆகையால் இந்திய ஒற்றுமை, இந்தியா என்று சொல்வது கட்டுப்பட்டுப் போயிருக்கும் ஒரு இடத்தில் இருப்பதால் - ஆங்கிலத்தில் சொல்வதானால் "They are maintaining the status quo" இருப்பதை ஆதரிக்கிறார்கள். இருப்பதை ஆதரிப்பதிலே சுவை இருக்கிறது, பலன் இருக்கிறது. சில வேளைகளிலே எளிதாகவும் இருக்கிறது. ஆனால், தேவைப்படுவதைக் கேட்பதில்தான் எரிச்சலை

மூட்டவேண்டி வரும், பல பேருடைய பகை வரும். பழிச் சொல் வரும். தேவைப்படுவதைக் கேட்பவர்கள் இருப்பதைக் கொண்டு திருப்தியடைய மாட்டார்கள் என்பதை நான் கனம் நிதியமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

உலகத்தின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், சிறிய நாடுகளால் உலகத்தின் பண்பாடு வளர்ந்திருக்கிறதா, பெரிய நாடுகளால் வளர்ந்திருக்கிறதா என்று பார்த்தால், உயர்தரமான தத்துவத்தை, இன்றும் போற்றத்தக்க நல்ல பண்பாட்டினை, கலையை, அரசியல் தெளிவை, இவை அத்தனையும் பெற்றிருந்தது ஐரோப்பா நாட்டிலுள்ள அந்த வரலாற்றின்படி "க்ரிக் சிடி ஸ்டேஸ்"லேயே தவிர ஐரோப்பாக் கண்டம் என்று வளர்ந்த பிறகு அல்ல. நம்முடைய நாட்டை எடுத்துக் கொண்டாலும், தமிழகம் தனியாக இருந்தபோதுதான் திருக்குறளை இயற்றிய வள்ளுவர் பிறந்தார். அப்போதுதான் நம்முடைய நாட்டிலே அகமும் புறமும் இயற்றப்பட்டன. எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் அந்தக் காலத்திலேதான் தோன்றின. ஆகவே, விரிவாக இருந்தால்தான் அறிவு பரவும் என்று பொருளல்ல. அதேபோன்றுதான் சிறு நாடாக இருந்தபோதுதான் ரோம் நாட்டில் வல்லமை மிக்கோர் இருந்தனர். ஜுலியஸ் சீசருக்குப் பிறகு ரோமன் எம்பயர் - சாம்ராஜ்யமான பிறகு விரிவாக விரிவாகப் பல இடங்களில் வல்லமை குறைந்ததால் நாளாவட்டத்தில் உடைபட்டுப் போய்விட்டது என்பதைத்தான் நமக்கு உலக வரலாறு காட்டுகிறது. ஏன் உலக வரலாறு தரும் பாடத்திற்கு முரணாக அரசியல் அமைப்பை ஏற்படுத்திப் பார்க்க வேண்டும்? அதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். சிறிய நாடுகள் இன்றையதினம் உலகத்தில் இல்லையா? சைப்ரஸ் நாட்டின் அகல நீளம் எவ்வளவு? மால்டா தீவு எவ்வளவு சிறிது? அது தனியரசாக வேண்டுமென்று போராடிக் கொண்டிருக்கவில்லையா? இங்கிலாந்தின் பக்கத்திலுள்ள அயர்லாந்து தேசம் எதற்காகத் தனி நாடாக இருக்க வேண்டும்? இங்கிலாந்துடன் இணைந்திருந்தால் என்ன கஷ்டம்? அங்கு தோன்றிய தலைவர்கள் எல்லாம் தற்குறிகளா? பேசப்படும் பொருளும் வாதங்களும், அவர்கள் ஏற்ற தியாகமும் வீணுக்காகவா? இவைகளையெல்லாம் நீங்கள் நிச்சயமாக யோசித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைய தினம் ஐக்கிய நாடுகள் மன்றத்தில் 101 நாடுகள் இடம் பெற்றிருக்கின்றன. நூற்று ஒன்று தனித் தனி நாடுகள்

தங்களுடைய உறுப்பினர்களை - தங்கள் பிரதிநிதிகளை - ஐக்கிய நாடுகள் மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள் என்றால் அத்தனை நாடுகள் தனி நாடுகளாக இருக்கின்றன என்பதுதான் அதன் உட்பொருள் ஆகும். இதைப் பற்றி எடுத்துச் சொல்லுகிற நேரத்தில், கனம் நிதி அமைச்சர் அவர்கள் எங்களை 'இது மிகவும் சின்ன கூட்டம்' என்றார்கள். உண்மை இல்லை என்று யாரும் மறுக்கவில்லை. நூற்றைம்பது பேர்களை பின்னால் வைத்துக் கொண்டிருக்கிற நிதி யமைச்சரோடு முன்னால் 10-12 பேர்களை வைத்துக்கொண்டிருக்கிற நான் ஒரு பெரிய கூட்டம் என்று வாதிட முடியாது. இனிமேல் நாட்டிலே பிரிவினையே கூடாது, உள் நாட்டுயுத்தமே வந்தாலும் கூட பிரிவினைக்கு ஒப்புக் கொள்ள முடியாது என்று பண்டித நேரு அவர்கள் பேசியிருப்பதை வைத்துக் கொண்டு கனம் சின்னதுரை அவர்கள் நாட்டை பிரிவினை செய்ய வேண்டும் என்று சொல்லுகின்ற நாங்கள் உள் நாட்டு யுத்தத்தைத் துவக்கி விடுவோம் என்று எண்ணிக்கொண்டு பேசினார்கள். நாங்கள் யாரும் அப்படி ஆரம்பிக்கப் போவதாக இல்லை. எங்களில் யார் யாராலாவது கொல்லப்பட்டாலும் இறக்கச் சித்தமாக இருக்கிறோமே தவிர, யாரையும் சாகடிக்க வந்தவர்களல்ல. செத்த பிறகு...

திரு. ஏ. மாரியப்பன் : இதை உங்கள் சரித்திரமே சொல்லுகிறது.

திரு. சி. என். அண்ணாதுரை : என்ன... என்ன... சரித்திரம் படிக்க வேண்டுமா?.... உன் கிட்டே கத்துகிறேன் அப்பா... உன் கிட்டே கத்துக்கிறேன்...

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : Sir, let this not become a street - quarrel.

திரு. சி. என். அண்ணாதுரை : I wish the Hon. Leader of the House controlled his own party-men instead of others.

துணை சபாநாயகர் : Order, order. The Hon. Member may continue his speech. I am here to control the proceedings in the House.

திரு. சி. என். அண்ணாதுரை : Sir, I am not concerned with the 'thorn' aimed at me. I am only concerned with the Hon. Member cutting the flow of my thoughts.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : சரி, பேசுங்கள்.

திரு. சி. என். அண்ணாதுரை : So, the Hon. Minister, as the Leader of the House, is prepared to advise me only, and not his party-men?

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : The advice applies to both sides. But, as the Leader of Party, the Hon. Member Sir Annadurai has to set up a proper pattern and standard in the discussion. If he uses the 'singular' form while addressing another Hon. Member, does he not expect it back himself ?

திரு. சி. என். அண்ணாதுரை : Did I use the 'singular' form ?

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : Certainly, the Hon. Member did.

திரு. சி. என். அண்ணாதுரை : only when the Hon. Member opposite said that I should learn history or some such thing, I think I said like that and not otherwise.

Sri P.U. Shanmugam rose.

துணை சபாநாயகர் : Order, order. I appeal to the Hon. Members to maintain discipline and order within the House. The Hon. Member may continue his speech.

திரு. சி. என். அண்ணாதுரை : We shall forget that Sir.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : Very generous of you!

திரு. சி. என். அண்ணாதுரை : உள் நாட்டு யுத்தத்தை நாங்கள் ஆரம்பிப்போம் என்று யாரும் தவறாக எண்ணிக்கொள்ளத் தேவையில்லை. இந்தியாவின் மிகப் பெரிய தலைவர் இப்படிப் பேசினார் என்றால் விரோதத்தை உண்டாக்குவதற்குப் பேசினாரே தவிர, நாங்கள் அல்ல உள் நாட்டுப் போரைத் துவக்கப்போவது. உள்நாட்டு யுத்தத்தைப் பற்றி மதுரையில் நமது நிதி அமைச்சர் அவர்கள் பேசியதைப் பார்த்தேன். அமெரிக்காவை நினைவுபடுத்தி நாடு பிரியவேண்டுமென்று சொல்லி உள் நாட்டு யுத்தத்தை அமெரிக்காவில் நடத்தினார்கள் என்று சொன்னார்கள். அமெரிக்க போராட்டத்திற்கு அடிப்படை காரணம் ராஜ்ய சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் ஏற்பட்ட தகராறு அல்ல. அமெரிக்காவில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்திற்குக் காரணம் வடக்குப் பகுதிக்கும் தெற்குப் பகுதிக்கும் அடிமை வியாபாரப் பிரச்சினையில் ஏற்பட்ட தகராறு காரணமே தவிர, ஒருவருக்கொருவர் ராஜ்ய அதிகாரத்திற்காக உள்நாட்டு யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை. அமெரிக்க வரலாற்றை -

அமெரிக்காவிற்கே போய் வந்திருந்தாலும் கூட - படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்காது என்று நினைக்கிறேன் - படித்துப் பார்த்து அடிமை பிரச்சினைக்கும் உள் நாட்டு யுத்தத்திற்கும் உள்ள தொடர்பை அறிந்து மற்றொரு இடத்தில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமெரிக்கா ஐக்கியப்பட்டதாகச் சொன்னாலும் அடிமைப் பிரச்சினை வரும்போது - நீக்ரோ பிரச்சினை வரும்போது - வடக்கே இருக்கிறவர்களுடைய மனப்பான்மை வேறாக இருக்கிறது, தெற்கே உள்ளவர்களுடைய மனப்பான்மை வேறாக இருக்கிறது, ஆகையால் ரேஷ்யல் இண்டெக்ரேஷன் - இனங்களை எப்படி இணைப்பது - என்ற அந்த வேலையில் அவர்கள் இன்று ஈடுபட்டிருக்கிறர்கள். அமெரிக்காவைக் காட்டி உள் நாட்டு யுத்தம் இங்கே நடக்கும் என்று சொல்லுவதைப் போல நான் அமெரிக்காவை ஆதாரத்திற்கு அழைக்கிறேன். அமெரிக்காவில் தோன்றி உட்ரோ வில்சன்தான் "The principle of self-determination" சுய நிர்ணய உரிமை ஒவ்வொரு பகுதிக்கும் வேண்டுமென்ற ஒரு முக்கியமான உண்மையை நாட்டுக்கும் உலகத்திற்கும் அளித்தார்கள். ஆகையால் அமெரிக்காவிலிருந்து எடுக்கக் கூடியது உள் நாட்டு யுத்தம் மாத்திரமல்லாமல் உட்ரோ வில்ஸன் பேசியிருக்கிற "The principle of self-determination" -சுய நிர்ணய உரிமை - அதைப் பற்றியும் அவர்கள் எடுத்துக் கொள்ளலாம். ஆகையால் சுய நிர்ணய உரிமை என்ற அடிப்படையில் நாங்கள் தனி நாடு அமையவேண்டும், நாம் தனிப்பட்ட பண்பாட்டுக்குச் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிற நேரத்தில், பிரிவினை என்று நீங்களாக தப்பு அர்த்தம் எடுத்துக் கொண்டு ''ஐயையோ, உள்ளதிலிருந்து பிரிக்கலாமா'' என்று நீங்களே எடுத்துக்கொண்டு அடிப்படையை ஆராய மறுக்கிறீர்கள், பொதுப்படையாகப் பேசும்போது கொச்சை மொழியில் பிரிவினை என்று சொல்லப்பட்டாலும், இருப்பதிலிருந்து பிரித்து எடுப்பது அல்ல. தனியாக இருந்ததை யாரோ எடுத்துக்கொண்டுபோய் இணைத்து விட்டிருக்கிறார்கள், அந்த இணைப்பு நல்லதல்ல என்று தோன்றியிருப்பதால் அதிலிருந்து விலகவேண்டும், தனித்து இயக்கவேண்டும், தனி அரசாக வேண்டும் என்று சொல்லுகிறோம். அதை விட்டு உடனே பிரிவினையினால் ஏற்பட்ட பாகிஸ்தானைப் பார்ப்போம் என்று சொல்லுகிறார் கனம் நிதி அமைச்சர். பாகிஸ்தானைத்தான் பார்ப்போம். பாகிஸ்தான் பிரிவினையினால் ஏற்பட்ட பயங்கர சம்பவத்திற்குக் காரணம்,

ஏற்பட்ட சோகத்திற்குக் காரணம், பிரிவினையினால் ஏற்பட்டதல்ல - பிரிவினைக்குப் பிறகு இந்தியாவில் இருக்கவேண்டியவர்கள் ஹிந்துக்கள் பாகிஸ்தானத்திலும், பாகிஸ்தானுக்குச் சொந்தக்காரர்கள் என்று நீங்கள் சொல்லுகிற முஸ்லீம்கள் இந்தியாவிலும் இருந்த காரணத்தினால் இந்தக் கலவரங்கள் ஏற்பட்டன. அங்கு ஏற்பட்டது பிரதேசப் பிரிவினையே தவிர மக்கள் பிரிவினை அல்ல. இன்றைய தினம் திராவிட நாட்டுப் பிரிவினை வேண்டுமென்று சொல்லும்போது 10 மைல் கூட்டினாலும் குறைத்தாலும் எந்த வெளி நாட்டுக்காரர்கள் உள்ளே வந்து அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்? இதனால் என்ன பயங்கரமான கலவரம் வந்துவிடும் என்று பயமுறுத்துகிறார்? இங்கு கலவரம் வரும் என்று சொல்லும்போது, பார்வை தெரியாத குருடன் ஒரு குழந்தை செத்துவிட்ட வீட்டின் தெருத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு "குழந்தை ஏன் செத்துவிட்டது" என்று கேட்டு, "பால் குடித்துச் செத்து விட்டது" என்று ஒருவன் சொல்ல, "பால் எப்படி இருக்கும்?" என்று அந்த குருடன் கேட்டு, "அது கொக்கு போல் இருக்கும்" என்று கதை சொல்ல, "கொக்கு எப்படி இருக்கும்?" என்று குருடன் கேட்க, அதற்கு அவன் கையை வளைத்துக் காட்ட, அதைத் தடவிப் பார்த்த குருடன் "இப்படிப்பட்டது தொண்டைக்குள் போனால் பிழைக்கவா பிழைக்கும்" என்று சொன்னதுபோல பாகிஸ்தானை இதற்குக் காரணம் காட்டுகிறார்கள். வெள்ளைக்காரர்கள் ஆட்சி காலத்தில் இருந்து இந்திய தேசீய ஒற்றுமை என்று பேசப்பட்டது என்று என்னை போன்றவர்கள் சொன்னால் கனம் நிதி அமைச்சர் நம்பமாட்டார். நிதி அமைச்சர் அவர்களால் நல்லவர்கள் என்று ஏற்றுகொள்ளக் கூடிய சிலருடைய கருத்துக்களிலிருந்து ஆதாரங்களை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"At the time of shaking off of the British yoke, there was a natural passion for emphasising the oneness of India. It was good and necessary, but perhaps the North is rather overdoing it today.

As I see it, India having obtained her freedom from Western domination is now beginning to feel the re-awakening of there many different areas. This is really a healthy sign of redawning self-expression and the Centre would do well to humble its pride and remember that this is only the beginning of the redawning which unless accepted as a natural phenomenon and handled sympathetically will end in breaking up the very unity aimed at.

To go from the North right down to the South of India is like entering another World."

இதைச் சொன்னவர்கள் காந்தியாருடைய பிரதம சிஷ்யராக இருந்து வந்த மீரா பென் ஆகும். அவருக்குக் கூடவா திராவிடப் பித்து பிடித்து விடும்? அவர்கள் நாட்டை சுற்றிப் பார்த்தார்கள். சுய ராஜ்யத்திற்குப் பிறகு பத்து ஆண்டுகளுக்குப் பிறகு - மக்களுடைய சுய உணர்ச்சியைப் பார்த்தால் புதிதான மன எழுச்சி பெற்றிருக்கிறார்கள் - தன்னைத்தான் அறிந்துகொள்ளத் தலைப்பட்டிருக்கிறார்கள் என்று அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல "Unity without willing co-operating between the groups and the Central poser is worse than open separation." என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்களாகப் பிரிந்து போகலாம் என்ற சொன்ாால் குற்றம் சாட்டுகிறார்கள். இருந்துகொண்டிருக்க வேண்டும் என்று சொல்லுகிறவர்கள் நடந்துகொண்ட முறை என்ன? நம்மைத் தள்ளி விடுங்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில் உலகத்திற்கே வழி கட்டும் அளவுக்கு நாம் பண்போடு நடந்துகொண்டு வந்திருக்கிறோம்.

அஸ்ஸாம், வங்காளத்திலே நடந்த மொழிப் போராட்டத்தைப் பற்றி நமது நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை ஒரு ஆதாரமாக வைத்துக்கொண்டே ஒற்றுமை மனப்பான்மையைப் பெற முடியவில்லை என்று சொல்வது அவ்வளவு தெளிவான கருத்தல்ல. அவர்களுக்கு பெற முடியவில்லை யென்றால், நமக்கும் அவர்களுக்கும் ஈராயிரம் ஆண்டுக் காலமாக பண்பாட்டிலே வெவ்வேறு ஆதாரங்கள் காணப்படுகின்றன. அந்த ஆதாரத்தை இன்றையத் தினம் நடைமுறை அளவுக்குக் கொண்டுவந்து தேசிய ஒற்றுமைப்பாடுக்கு ஆதாரமாகக் காட்டுவது நல்ல அடிப்படையில் அல்ல, தாகூர் பல அரிய கவிதைகள் பாடியிருக்கிறார். அதேபோல் தேசீயக் கவிஞராகிய பாரதியார் மிகச் சிறந்த கவிதைகளை நாட்டுக்கு இயற்றிக் கொடுத்திருக்கிறார். இவைகளைத் தவிர வேறு ஏதாவது நல்ல கருத்துக்களையோ, கவிதைகளையோ எழுதி வைத்திருக்கிறீர்களா? இன்றைக்கு அவர்களைக் காட்டிலும் மேலான கவிதைகள் இயற்றக்கூடியவர்கள் இனி தோன்றப் போகிறார்களா? அப்படிப்பட்டவர்கள் யாரையேனும் நீங்கள் ஒளிந்து வைத்திருக்கிறீர்களா? பண்டித ஜவஹர்லால் நேருவைக் காட்டிலும் நாட்டை நல்ல முறையில் இறுக்கிப் பிடிக்கக்கூடிய தலைவர்கள் யாரையேனும் இன்னும்

வைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அப்படி ஒருவரும் இருப்பதாகத் தெரியவில்லை. பண்டித ஜவஹர்லால் நேரு முயற்சி செய்தால் நாட்டைப் பிரிக்காமல் இறுக்கி வைத்திருக்கமுடியும். ஆனால் அவரே ஓரளவுக்கு நாட்டின் ஒற்றுமைக்காகவும், தர்மத்திற்காகவும் அனாவசியமான கிளர்ச்சி நாட்டிலே கூடாது என்பதற்காகவும் எல்லாவற்றையும் காட்டிலும் இயற்கைக்கு ஒவ்வாத முறையில் நடந்துகொள்வது நியதி அல்ல என்ற முறையில் நடந்துகொண்டு வருகிறார். இயற்கையான வரலாற்றுக்கு முன் இறுக்கிப் பிடிப்பதென்பது முடியாத காரியம். ஆகவேதான், இனியும் இறுக்கி வைத்துப் பிடிப்பதில் அவர் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. அந்த அடிப்படையில்தான் அவ்வப்பொழுது, அந்தந்த இனத்துக்கு ஒரு தனி அரசு அமைத்துக் கொடுத்துக்கொண்டு வருகிறார். ஆகவே அந்த முறையில் இதைக் கவனித்து ஆராய்ந்து பார்த்தால் ஒரு நல்ல முடிவைக் காண முடியும். 'இந்தியன் யூனியன்' அமைந்து இருக்கிறதென்று சொல்லப்படுகின்றது. இந்த இந்தியன் யூனியன் காமன்வெல்த்தில் ஒரு நாடாக இருப்பதுபோல், பல நாடுகள் பிரிக்கப்பட்ட பின்னரும்கூட, காமன்வெல்த்திலே எப்படி பல நாடுகள் அங்கம் வகித்துக்கொண்டு வருகிறதோ அதைப்போல நம் நாட்டிலும் ஆங்காங்கு தனி அரசுகள் ஏற்பட்ட பிறகும் காமன்வெல்த்திலே அங்கம் வகிக்கக்கூடிய நாடுகளாக அவைகளும் திகழலாம். அப்படி ஒவ்வொன்றும் ஒரு உறுப்பினராகச் சேர்ந்து உலகம் பூராவும் ஒன்று என்று நினைக்கக்கூடிய வகையிலே சேர்ந்து கொள்ளலாம். ஆகவே பிரிந்து போகிறோம் என்று யாரும் கருதத் தேவையில்லை. நம்முடைய உரிமையை நாம் கேட்கிறோம். அதுவும் வரலாற்றின் அடிப்படையிலே, பண்பாட்டின் அடிப்படையிலே கேட்கிறோம். எங்களால் முடிந்தால் பெறுகிறோம். இல்லையென்றால் இந்த முயற்சியில் தோல்விகண்டு மடிந்து போகிறோம். ஆனால் நாங்கள் மடிந்து போனாலும் இந்த உணர்ச்சி மட்டும் என்றைக்கும் மடிந்து விடாது என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெளிவாக, திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் இதன் உண்மையை உணராத காரணத்தால்தான் இவ்வளவு தூரம் சொல்லவேண்டியிருக்கிறது. இதற்காக ஒரு விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். இரண்டு நாடுகள் ஒன்றாக இணைந்து நல்ல முறையிலே ஆட்சி நடைபெற முடியுமா என்பதைச் சமீபத்திலே நடைபெற்ற சம்பவம் ஒன்றை எண்ணிப் பார்க்கும்படிக்

கேட்டுக்கொள்ளுகிறேன். 1958-லே எகிப்துக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய சிரியா என்ற நாடும் எகிப்தும் சேர்ந்து 'யுனைடெட் அராபிக் ரிபப்ளிக்' - அதாவது 'அராபிய தேசீயம்' என்ற வகையில் இணைந்து ஆட்சி புரிந்தது. அப்படி இரு நாடுகளும் ஒன்றாக இணைந்தபோது, நம் நாட்டுத் துணை ஜனாதிபதி அவர்களும், குடியரசுத் தலைவர் அவர்களும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பினர். பத்திரிகைகள் எல்லாம் தலையங்கங்கள் எழுதின. மூன்று ஆண்டுக் காலமாக சிரியா, எகிப்து ஆகிய நாடுகளிலே 'அராபிய தேசீயம்' என்ற பெயரிலே ஆட்சி நடந்தது. ஆனால் சிரியாவில் எகிப்தின் ஆதிக்கம்தான் நடைபெற்று வந்ததால் நேற்றையத் தினம் பிரித்துக் கொண்டார்கள். ஆகவே இரண்டு நாடுகள் ஒன்று சேர்ந்து ஆட்சி நடத்த முடியவில்லை என்பது இதிலிருந்து நன்கு தெரிந்த விஷயம். ஆனால் உதாரணத்திற்கு சேர்ந்தவர்கள் பிரிவதற்கும், பிரிந்தவர்கள் சேருவதற்கும் சொல்ல வேண்டுமென்றால் நிரம்ப இருக்கின்றன. ஆகவே இந்த உதாரணத்தைக் காட்டி, அதை மறுக்கவோ அல்லது அந்த உதாரணத்தைக் காட்டி இதை மறைக்கவோ செய்யலாம் என்று நினைத்தால் அது தவறான கருத்தாகும். அந்த ஆராய்ச்சிக்கு இப்போது நாம் இறங்கத் தேவையில்லை. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். அவர்கள் சொன்னபோது நேரு அவர்களின் குரல் என்காதில் கேட்பதுபோல் தொனித்தது. அதாவது ''இனி பிரிவினை இல்லை'' என்று அவர் சொன்னார். அப்படி அவர் சொன்னதிலிருந்து பார்க்கும்போது முன்பு ஏதோ ஒரு பிரிவினைக்கு வழி இருந்தது போலவும், அதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள் என்றும் ஊகிக்க முடிகிறது. எது எப்படியிருந்தாலும், என்றைக்காவது ஒரு நாள் சூழ்நிலை இவர்களே நிச்சயம் இணங்க வைக்கத்தான் போகின்றது. நாங்கள் அந்தச் சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்டு வருகிறோம். நேரம் வருகின்ற காலத்தில் அது தானாகவே பயனைக் கொடுக்கும். ஆனால் இன்றைக்கு இப்படி பேசிவிட்டு, இனி பிரிவினை கிடைக்காது என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. 'In this age of atomic bomb and rapidly changing world, problems like that of Pakistan have no bearing and meaning.' நம்முடைய பண்டித நேரு அவர்கள் சொன்னதுதான் இது. 'அணுகுண்டு சகாப்தத்திலே அற்பத்தனமான பகுதிகள் கேட்கிறார்கள் என்று சொல்லி, அதற்குப் பதிலாக இதிலே எவ்வித பவரும் இல்லை; மீனிங்கும் இல்லை என்று சொல்லப்படுகிறது. அதாவது இதிலே

எவ்விதப் பொருளும் அர்த்தமும் இல்லையென்று சொல்லப்பட்டது. அதுமட்டுமல்ல. கனம் நிதி அமைச்சர் அவர்கள் மதுரையிலே பேசுகையில் பண்டிதநேருவை நேரில் வைத்துக்கொண்டு பேசியிருக்கிறார்கள். 'Americans who fought the Civil War to keep their Union together can appreciate how a proposal to divide the country is resented by vast numbers of the Indian people.' உள்நாட்டு யுத்தத்தை நடத்தியாகிலும் அமெரிக்கர் தங்களை, தங்கள் நாட்டைக் காப்பாற்றிக் கொண்டார்கள் என்பதை மட்டும் உணர்ந்துள்ளார்கள் என்று கருதுகிறேன். ஆனால் இங்கே மட்டும் ஒரு சிலரை அடக்கி விட்டால் போதும்; மற்றவர்களைப் பற்றி எந்தவிதமான கவலையும் இல்லை என்று நினைக்கிறார்கள். இப்படித்தான் பண்டிதநேரு அவர்களும் முதலிலே பேசினார். ஆனால் கடைசியில் பாகிஸ்தான் பிரச்சினை வலுவடைந்து, பாகிஸ்தான் தனியாகப் பிரிந்தது. இதுபற்றி பிறகு நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஒரு பதில் சொல்வார் என்று கருதுகிறேன். இதற்கு கனம் அமைச்சர் அவர்கள் ஒரு பதில் சொல்லக்கூடும். ஆனால் அது சரியல்ல, அதாவது வெள்ளைக்காரர்கள் இருந்தார்கள்; அது நடந்தது என்று சொல்லக்கூடிய ஒரே ஒரு பதிலைத்தான் அவர்கள் வைத்திருக்கக் கூடும். ஆனால் வெள்ளைக் காரர்கள் இருந்தார்கள். அதனால் கொடுத்து விட்டோம் என்று சொல்வதை விட நம்முடைய நண்பர் கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்கள் சொன்னது போல் இவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்ற ஓர் எண்ணம் இருந்திருக்குமானால் இரத்தம் சிந்தியாவது இதைத் தடுத்திருக்க முடியும். ஆனால் அவர்களுடைய கொள்கை அது அல்ல என்பது மறுக்க முடியாத உண்மையாகும். பாகிஸ்தான் பிரச்சினை வலுவடைந்தவுடன், 'In this age of Atomic bomb, there is no place for Pakistan' என்ற அதே நேரு அவர்கள் ஒருதரம் 'The Congress position was that India should remian a National Unit. But at the same time if the population of a unit specifically declared that they would not be in the Common unit, then the Congress would not compel them to unit. Thus the Congress recognized the right of seperation of the determination.' என்று சொல்லியிருக்கிறார். நான் இந்த நேரு அவர்களைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் உள்நாட்டு யுத்தம் வந்தாலும் தடுத்துத் தீரவேண்டும் மென்றார்கள். ஆனால் அப்படிப்பட்ட நேருவை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இப்போது நான் சொன்ன நேருவைத்தான்

நம்புகிறேன். காலம் தான் வர வேண்டுமென்ற அருமையான கருத்தை பண்டித நேரு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இங்குள்ளவர்களோ, எங்கள் கட்சியிலே உள்ள முக்கியமான 10, 15 பேர்களை ஒழித்துக் கட்டிவிட்டால், பிரச்சினை தீர்ந்தது என்று நினைக்கிறார்கள். இத்தகைய அடக்கு முறையைத்தான் செய்ய வேண்டுமென்று இவர்கள் சொல்கிறார்கள். இந்தப் பிரச்சினை, இந்த லட்சியம் நாங்களாக எடுத்துக்கொண்டதல்ல; அல்லது உங்களைப் புண்படுத்த வேண்டுமென்றோ, விரோதித்துக்கொள்ள வேண்டு மென்றோ நாங்கள் ஏற்படுத்திக் கொண்டதல்ல. உங்களிடத்திலே நட்பாக இருக்கவேண்டும், நேசமாக இருக்கவேண்டுமென்ற நல்லெண்ணம் எங்களுக்கெல்லாம் இருக்கிறது. உங்களுடன் ஒத்துழைத்து உங்களுடைய நல்லெண்ணத்தையும், மகிழ்ச்சியையும் நாங்களும் பெற வேண்டுமென்றுதான் நினைக்கிறோம். இப்போது நான் பேசுகின்ற அத்தனை பேச்சுக்களையும் காங்கிரஸ் உறுப்பினர்கள் எவ்வளவு அருவருப்போடு கேட்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் அதையும் நான் தாங்கிக் கொள்கிறேன். உங்களையெல்லாம் நான் மதிக்கிறேன்; அதைவிட மேலாக நான் எங்கள் உரிமையை மதிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

சென்னை நிதிஒதுக்கச் சட்ட முடிவு வாக்கெடுப்பு

உரை : 48 **நாள் : 15.12.1961**

எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்து அண்ணா ஆற்றிய இறுதி உரையிது. நிதிஒதுக்கச் சட்ட முன் வடிவு பற்றி மொழிந்த பிற உரைகளினின்றும் ஓர் மாறுபாட்டைக் காணலாம். இவ்வுரை ஒரு நிறைவு விழாச் சொற் பொழிவாகக் காணப்படுகிறது. ஐந்தாண்டு காலமாக இயந்திரத்தை இயக்கிய அனைவருக்கும் உளமார்ந்த நன்றியைக் காணிக்கை செய்யும் வகையிலும் அதே வேளையில் ஆட்சியாளர்கள் அவர்தம் பணியில் அயர்ந்த தன்மையினைச் சுட்டிக் காட்டும் வகையிலும் அமைந்துள்ளது இவ்வுரை. உரையின் முற்பகுதியில் ஆட்சியாளர்களின் ஆட்சித் திறனை வியந்த வேளையே அவர்கள்பால் காணப்படும் மூன்று குறைகளைச் சுட்டிக் காட்டத் தவறவில்லை. உரையின் இடைப்பகுதியின் குடியாட்சிப் பண்பாடு கொடிகட்டிப் பறக்கும் சென்னைச் சட்ட மன்றப் பெருமையை உரிமையோடு புகழ்ந்து பெருமிதம் கொள்கிறார். தன் அரசியல் வாழ்வின் பெரும் பேறாய் கருதிய அவை உறுப்பினர் தகுதியை எண்ணி கள்ள மில்லா வெள்ளை உள்ளத்தோடு இறும்பூதடைகிறார். உரையின் இறுதியில் இன்னும் தொடர வேண்டிய பணிப் பளுவை உணர வைக்கிறார். உரையை முடிக்கிறார். அடுத்து அவர் காணும் மன்றம் இந்திய நாடாளுமன்றமாக அமைகிறது.

The Words are lovely dark and deep
But, I have promises to keep
And miles to go before I sleep
And miles to go before I sleep

- Robert Frost

திரு. சி. என். அண்ணாதுரை : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஐந்தாண்டுகள் எவ்வளவு சீக்கிரம் உருண்டு ஓடிவிட்டன என்று இந்தச் சபையிலே வீற்றிருக்கிற எல்லா அங்கத்தினர்களும் நிச்சயமாக எண்ணிப் பார்த்துக் கொண்டிருக் கிறார்கள் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். நேற்றைய தினம் நான் இந்த மன்றத்தில் நுழைந்தபோது டாக்டர் கிருஷ்ணாராவ் அவர்களுடைய குழந்தை உள்ளத்தை பிரதிபலிக்கின்ற இன்ப முகத்தை பார்த்துக்கொண்டிருப்பது போல தோன்றியது. ஐந்து ஆண்டுகள் உருண்டு ஓடிவிட்டன. இந்த ஐந்து ஆண்டுகளில் நாம் இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் ஒருவருக்கு ஒருவர் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற பழக்கங்கள், அவரவர்கள் தங்களுடைய குடும்பத்தில் இருக்கிறவர்களைப்பற்றி எண்ணுவதைவிட அதிக அளவுக்கு இங்கே உள்ளவர்களைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்கக்கூடிய அளவுக்கு, நல்ல தொடர்பு இந்த மன்றத்திலே கட்சி அங்கத்தினர்களுக்குள்ளே ஏற்பட்டிருக்கிறது. அந்த தொடர்பு காரணமாக, ஒருவரை ஒருவர் கட்சிக் கொள்கையின் அடிப்படையிலே குறை கூறிக்கொண்டாலும்கூட, யாரும் கவனிக்கப்படத்தக்கவர் அல்ல என்ற முறையில் அல்லாமல், அங்கத்தினர்கள் நல்ல விதத்தில் ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக் கொண்டு ஐந்து ஆண்டுகளாக இந்த மன்றத்தினுடைய அலுவல்களிலே ஈடுபட்டு நாம் நல்ல பணியாற்றுகிறோம் என்று அவரவர்களும் தங்கள் தங்கள் நோக்கத்தின் வழியிலே நினைத்துப் பார்த்து, மதிப்பீடுகளை எடுத்துத் தருகிற கட்டத்திற்கு நாம் இன்றைய தினம் வந்திருக்கிறோம். இதிலே ஆளும் கட்சியைச் சார்ந்த அமைச்சர்களை, எதிர்த்தரப்பில் உள்ளவர்கள், கட்சி தலைவர்கள், கட்சியில் உள்ள முக்கியஸ்தர்கள், அங்கத்தினர்கள் பாராட்டிப் பேசுவது என்பது உள்ளபடியே பாராளுமன்ற ஜனநாயக முறையின் பண்பாகும். ஆனால் அதுகூட வேறு காரணங்களுக்காக பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது என்பதை நான் உணராமல் இல்லை. இருந்தாலும் கூட, பாராளுமன்ற ஜனநாயகப் பண்பின்படி இருக்கிறது இது. ஆட்சியில் உள்ளவர்கள், அமைச்சர்கள் இவர்களைப் பற்றி இந்த மன்றத்தில் எடுத்துப் பேசுவது மட்டுமல்ல, வெளி மாநிலத்திலேயும் என்னை பத்திரிகை நிருபர்கள் ஒரு 10 நாட்களுக்கு முன்பாக சந்தித்துக் கேட்ட நேரத்திலும், நான் சென்னை ராஜ்யத்தில் இருக்கிறேன், ஆட்சியாளர்களிடத்தில் எனக்கு இருக்கிற குறைகள் மூன்று என்பதை தெளிவாக எடுத்துச் சொன்னேன். ஒன்று, அவர்களுடைய நிர்வாகத்திலே மதமதப்பும், மந்தமும் அதிகமாகிக்

கொண்டிருக்கிறது. இரண்டு, மாநில ராஜ்யத்தினுடைய உரிமைகளை பாதுகாக்க போதுமான அளவுக்கு அவர்கள் வலிவு தேடிக்கொள்ளு வதில்லை. மூன்றாவதாக, அவர்கள் தனியார் துறையை வளர்க்கிற அளவுக்கு, பொதுத்துறையை வளர்க்கவில்லை. இம்மாதிரி மூன்று குறைபாடுகள் எங்களுடைய ராஜ்ய சர்க்காரிடத்திலே இருக்கின்றன என்றுதான் அவர்கள் கேட்டதற்கு எடுத்துச் சொன்னேன். 'காப்ஷன்' ஊழலைப்பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள் என்று என்னை கேட்ட நேரத்தில், 'மத்திய சர்க்கார் பற்றி வருகிற புகார்களையும் மற்ற ராஜ்ய சர்க்கார்கள் பற்றி வருகிற புகார்களையும் வைத்துக்கொண்டு ஒப்பிட்டுப் பார்த்தால், எங்கள் ராஜ்சர்க்கார் தங்கம்' என்று நான் சொன்னேன். அதே கருத்தை இந்த மன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் வைத்துக் கொண்டிருக்கிற நாங்கள் ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற அமைச்சர்களை தனித்தனியாக அவர்களுடைய ஆற்றலைப் பற்றி எடுத்து பேசுகிறோம் என்றால், அதுமாதிரி காலையிலே பேசப்படுவது ஜனநாயக பண்பாடு, அது மாலை நேரத்திலே மேடையில் பயன்படுத்தப்படமாட்டாது என்ற எண்ணத்திலே பேசுகிறோம். ஏனென்றால், காலைநேரப் பேச்சுகளில் ''எங்கள் அமைச்சர்களை போற்றிச் சொல்லுகிறார்கள்'' என்று அரசியலை ஓரளவுக்கு அறிந்திராதவர்கள் சிலபேர்கள் பேசுகிறார்கள்; அங்கத்தினர்கள் அல்ல, பொதுவாக கட்சியில் உள்ளவர்கள். ஆகையினால்தான், அமைச்சர்களிடத்தில் உள்ள ஆற்றலை எடுத்துச் சொல்வதற்கும், அமைச்சர்கள் வைத்திருக்கும் கொள்கைகளைச் சொல்வதற்கும் அடியோடு மாறுபாடு இருக்கிறது. இந்த அமைச்சர் அவையில் இருக்கும் அமைச்சர்கள் எல்லோரையும் எடுத்துக் கொண்டாலும், தனித்தனியாக எடுத்துக் கொண்டாலும், எல்லோரும் ஆற்றல் மிக்கவர்கள். நான் இந்த மன்றத்திலே கவனித்துப் பார்த்தவர்கள் அத்தனை பேரும் அதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த விதத்தில் இன்றையதினம் என்னுடைய கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. கோவிந்தசாமி, நம் நிதி அமைச்சராகவும், காங்கிரஸ் கட்சி முக்கியஸ்தராகவும், இன்றையதினம் சட்ட சபையின் நடவடிக்கைகளை நடத்திச் செல்லும் தலைவராகவும் அமர்ந்து நல்ல பணி ஆற்றிக்கொண்டு வருகிற கனம் சுப்ரமணியம் அவர்களை ஏசுநாதருக்கு ஒப்பிட்டுக் சொன்னார்கள், நல்ல உபதேசங்களை செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை மனதில் வைத்துக் கொண்டு. ஏசுநாதருக்கு ஒப்பிட்டுச் சொன்னதைக் கேட்டு ஒரு கணம் சந்தோஷம் அடைந்தேன். ஐந்து வருடம் அவர்களோடு பழகிய

நட்புரிமையோடு, கனம் சுப்பிரமணியம் அவர்களோடு, ஏசுநாதரோடு, நாமும் கூடிப் பழகியிருக்கிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம் என்று மகிழ்ந்தேன்.

உயர்திரு. சி. சுப்பிரமணியம் : சிலுவையில் அறையாமல் இருக்கவேண்டும்! (சிரிப்பு.)

திரு. சி. என். அண்ணாதுரை : மறுகணம், மருட்சி அடைந்தேன். ஏனென்றால், ஏசுநாதரின் சீடர்களில் ஒருவர் அவரைக் காட்டிக் கொடுத்தது போல், இந்த ஏசுநாதருக்கு ஆபத்து வராமல் இருக்கவேண்டுமே என்று கவலைப்பட்டேன். நம்முடைய நிதி அமைச்சர் பத்து ஆண்டுகளாக இந்த மன்றத்திலே நல்ல அனுபவத்தைப் பெற்றது மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கும் நல்ல அனுபவத்தைப் பெற வழிகாட்டியாக இருந்து வந்தார்கள் என்பதை எனக்கு முன்னால் இங்கே இடம் பெற்று இருக்கும் அங்கத்தினர்களும் எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு இந்த மன்றத்திலே, 10 ஆண்டுகளாக, 15 ஆண்டுகளாக இடம் பெற்ற உறுப்பினர்கள் ஆக இருக்கிறவர்கள், புதியதாக வந்தவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறவர்கள், அனைவரையும் எண்ணிப் பார்க்கும் நேரத்தில் மன்ற நடவடிக்கைகளில் நல்ல அக்கரை காட்டித்தான் அத்தனை அங்கத்தினர்களும் நடந்து கொண்டிருக் கிறார்கள். அமைச்சர் அவையில் உள்ள எல்லா அமைச்சர்களும், அவரவர்கள் துறைகளில், தங்கள் தங்களுடைய வேலையை நல்ல திறமையைக் காட்டி, அக்கரையோடு பாடுபட்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை என்பதை சொல்வதனால், அந்த அளவுக்கு, வேறு யாரும் இல்லை என்றோ யாரும் கருதவேண்டாம் என்று அரசியல் காரணத்திற்காக இணைத்துக்கொள்ள விரும்புகிறேன். ஆற்றலோடு பணியாற்றியிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, அவர்களுக்குப் போதுமான வாய்ப்புக்கள் அளிக்கப்படுமேயானால், அதைவிட ஆற்றலோடு அவர்கள் திறன் நாட்டுக்குப் பயன்பட்டிருக்கும் என்பதை நான் எடுத்துக் காட்டத் தவறக்கூடாது, அதை எடுத்துச் சொல்லும் நேரத்தில் ஒரு கட்சியில் இருக்கும் தலைவர்களின், ஒரு நாட்டை ஆளும் அமைச்சரின் உண்மையான ஆற்றலை எப்பொழுது மதிப்பிட வேண்டும் என்று யாராவது என்னைக் கேட்டால், ஆளும் கட்சி 150 உறுப்பினர்களாகவும், எதிர்த் தரப்பில் 50 உறுப்பினர்களாகவும் இருக்கும் இந்தக் காலத்தில் அல்ல. இருக்கின்ற எதிர்தரப்பில் 50 பேர்கள் என்பது மட்டுமல்ல. கனம் சின்னதுரை சொன்னபடி பஞ்ச

பாண்டவர்கள், ஐந்து பேர்கள் என்று சொல்லி, அந்த ஐந்து பேர்களில் யார் தருமன், யார் வீமன் என்ற சந்தேகம் இருக்கிறது என்றும் திரு. சின்னதுரை சொன்னார்கள். ஆனால் எங்களுக்குள்ளே அந்த சந்தேகம் இருந்தாலும், பஞ்ச பாண்டவர்கள் எதிர்த்தரப்பினர் என்று குறிப்பிட்டுவிட்டு, திரௌபதி நாட்டின் நலன் என்று சொன்னார்கள். யார் தருமன், யார் வீமன் என்ற சந்தேகம் வந்தாலும், யார் திரௌபதி என்ற சந்தேகம் இல்லாவிட்டால் நல்லதாக இருக்கும். அந்த வகையில், இளைத்திருக்கும் எதிர்த்தரப்பினரை வைத்துக் கொண்டு, 150 எண்ணிக்கையை வைத்திருக்கும் நேரத்தில் உள்ளபடியே சொல்கிறேன், இருக்கின்ற ஆற்றல் அத்தனையும் வெளிப்படக் கூட தேவை கிடையாது. ஆற்றலைக் காண்பிப்பதற்குப் போதுமான வாய்ப்பு ஏழாது. ஆகையினால் அடுத்து அமைகின்ற அவையிலே எதிர்த்தரப்பினரும், ஆளும் தரப்பினரும் ஏறக்குறைய எண்ணிக்கை பலத்தில் ஒன்றுக்கொன்று எட்டிப் பிடிக்கும் வகையில் இருந்தால்தான், ஆளும் கட்சி அடக்க உணர்ச்சியோடும், எதிர்க்கட்சி பொறுப்புணர்ச்சியோடும் நடந்து கொள்ள இடம் ஏற்பட்டு, ஜனநாயகத்தில் சம நிலை ஏற்படும். அப்படி செயல்படுகின்றவர்களின் ஆற்றல் என்ன என்று கண்டு பிடிக்கலாம். இப்பொழுது ஆற்றல் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் ஆற்றலை மதிப்பிடும் நேரம் இது அல்ல. பணக்கார வீட்டுப் பிள்ளையாக இருந்து பலருடைய பாராட்டுதலைப் பெற வாய்ப்பு அளிப்பதுபோல, ஆளும் கட்சிக்கு எண்ணிக்கை பலம் அதிகமாக இருப்பதால், அதிகாரத்தை பயன்படுத்தப் பயன்படுகிறதே தவிர, அந்தப் பணக்கார வீட்டுப் பிள்ளை பணம் இருந்தாலும், பண்பு கெடாமல் இருப்பது போல, எண்ணிக்கை பலம் அதிமாக இருந்தாலும், அதை மட்டும் அமைச்சர் நம்பிக்கொண்டு இராமல், எங்கள் கருத்துக்களையும் மிக்கப் பொறுமையோடு கேட்டுக் கொண்டு இருந்த அவர்களுடைய தன்மை ஜனநாயகப் பண்பிற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. ஜனநாயகப் பண்பை நிறைவேற்றிக் கொடுப்பதில், நம் நிதி அமைச்சர் இந்த சபையின் நடவடிக்கைத் தலைவர் என்ற முறையிலே ஈடுபட்ட நேரத்திலே, சற்று காரசாரமாக பேசுவார், முன் கோபமாகப் பேசுவார் என்று என்னுடைய தரப்பில் உள்ளவர்கள் கூறினார்கள். நான் இன்றையத் தினம் வெளிப்படையாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் எந்த அளவுக்கு அவரிடத்தில் எரிச்சலோடு வாதங்கள் இருக்கும் என்று எதிர்பார்த்து அவைக்குள்ளே நுழைந்தேனோ, அதற்குக் குறைவாகத்தான் அவர்கள் வாதங்கள்

இருந்தன; அவர்கள் எந்த அளவுக்கு எரிச்சல் ஊட்டுவதைத் தாங்கிக் கொள்வார்கள் என்று நினைத்தேனோ அதற்குக் குறைவாகத்தான் அவர்களால் தாங்கிக் கொள்ள முடிந்தது, அந்த அளவில்தான் வாதங்கள் இருந்தன, அந்த அளவில்தான் நடக்கிறது என்பது மன்றத்தின் நடவடிக்கைகள் நமக்கு மிக நன்றாகக் காட்டுகிறது. அடுத்து வரும் அவையிலே இந்தப் பண்பு மேலும் வரும் என்று உறுதியாக நம்புகிறேன். ஆகையினால், இந்த ஐந்து ஆண்டுகளில், சமநிலை இல்லாத அரசியல் அமைப்பின் கீழ் பணியாற்றும் இந்த மன்றத்திலே இடும் இறுதியான மதிப்பீடு, உண்மையான மதிப்பீடு, போதுமான மதிப்பீடு என்று அதைக் கொள்ள முடியாது என்பதைக் கவனப்படுத்த விரும்புகிறேன்.

இதற்கு இடையில், பார்க்கும் நேரத்தில் நம் அமைச்சர் அவையில் இருக்கும் எட்டு அமைச்சர்களும் நல்ல விதத்தில்தான் பணியாற்றுகிறார்கள் என்பதை எந்த அரசியல் கட்சியில் உள்ளவர்களும் மனமார ஏற்றுக்கொள்வார்கள். குறிப்பாகவும், சிறப்பாகவும் நிதி அமைச்சராக இருப்பவரே, கல்வித்துறைப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு இந்த நாட்டின் கல்வி அதிகமான அளவில் பரவவேண்டும் என்றும், அதன் தரமும் பயனும் உயர வேண்டும் என்றும் மிகுந்த அக்கறை காட்டுகிறார்கள். தொழில் அமைச்சர், தொழில் வாய்ப்புகள் அதிகப்பட வேண்டும் என்கிற அளவுக்கு தனிக்கவனம் செலுத்தி வந்திருக்கிறார்கள். போலீஸ் துறை அமைச்சர் கூடுமான வரையில் எந்த அளவுக்கு போலீஸ் உபயோகிக்கப்படவேண்டும் என்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்து வந்திருக்கிறார். மராமத்துத்துறை அமைச்சர், மராமத்துத் துறையில் மட்டுமல்லாமல், நாங்களெல்லாம் பார்த்து மகிழ்கிற வகையில், பழங்குடி மக்களுக்காக அக்கறைக்காட்டி, பழங்குடி மக்களுடைய அன்பினைப் பெற்றும், அவர்கள் அனைவருடைய நல்ல பாராட்டுதலையும் பெற்றிருக்கிறார். அமைச்சர்களைத் தனித்தனியாக குறிப்பிடவில்லை என்பதனால், அவர்கள் என் நெஞ்சத்தில் இல்லை என்று எந்த அமைச்சரும் கருத வேண்டாம்; உதாரணத்திற்காக குறிப்பாக ஒன்று இரண்டு பேரைக் கோடிட்டுக் காட்டினேன். அவ்வளவு நல்ல முறையிலே திறமையாகப் பணியாற்றி நம் பாராட்டுதலை பெறும்அளவுக்கு பணியாற்றி இருக்கிற அமைச்சர்கள், தாங்கள் வீடு திரும்பும் நேரத்தில், "இந்த ஐந்து ஆண்டுகளில் மற்ற ராஜ்யங்களெல்லாம் சாதிக்காத என்ன காரியத்தை நாம் சாதித்து இருக்கிறோம், மற்ற ராஜ்யங்கள் நம்மை வழிகாட்டியாக எடுத்துக்கொள்கிற அளவுக்கு எந்தத் திட்டங்களை நிறை

வேற்றியிருக்கிறோம், மற்ற ராஜ்யங்கள் பார்த்து பின் பற்றுகிற அளவு என்ன புதுமைகளைப் புகுத்தி இருக்கிறோம்" என்று எண்ணிப் பார்த்து தங்களுக்குத் தாங்களே மதிப்பீடுகளைப் போட்டுக்கொள்ள வேண்டுமே தவிர, நிர்வாகத்தை ஒழுங்காக நடத்திக்கொண்டு போவது மட்டும் அமைச்சர் அவை பாராட்டுதலைப் பெற உரியது ஆகாது. ஏனென்றால், ஒரு அமைச்சர் அவை, நிர்வாகத்தை ஒழுங்காக நடத்தாவிட்டால், மக்கள் குற்றவாளிக் கூண்டிற்கு இழுத்துச் செல்வார்கள், பரவாயில்லை என்று யாரும் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். ஆகையினால், இந்த அமைச்சர் அவை இந்த ஐந்தாண்டுக் காலத்தில் சொந்தப் பெருமை, புகழ் அடையத் தக்க திட்டங்களை இந்த ராஜ்யத்திலே என்ன நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பதைத்தான் அருள்கூர்ந்து அவர்கள் அரசியல் கட்சி அருவருப்பு, எதிர்ப்பு உணர்ச்சி இல்லாமல், எண்ணிப்பார்க்க வேண்டும்.

இதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதற்குக் காரணம் அதற்கேற்ற திறமை அவர்களிடம் நிச்சயமாக இருக்கிறது, நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்ற திறமை இருக்கிறது என்றாலும், அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டு இருந்தாலும், நிர்வாக இயந்திரத்தை செம்மையாக ஓட்டிச் செல்லுகின்ற அந்த ஒரு காரியத்தில் அவர்களுடைய முழு ஆற்றலையும் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. நம்முடைய நிதி அமைச்சரவர்கள் இங்கே இருக்கப்போவதில்லை, டெல்லிக்குப் போகிறார் என்று வெளியில் பரவலாக பேசிக் கொள்ளப்படுகிறது. அங்கு அமைச்சரவையில் இடம் பெறுவார்களென்றும் அரசியலிலே இருப்பவர்கள் ஆருடம் கணிக்கிறார்கள். அவர்கள் இங்கே இருக்கும் நாட்களில் நம் ராஜ்யத்தின் நலனைப் பாதுகாப்பேன் என்று பேசிக் கொண்டிருந்ததை காது குளிரக் கேட்டுக் கொண்டிருந்தோம். இனி மத்திய சாக்காருக்குப் போய், பாரத தேசத்தின் ஒற்றுமைக்காக என்று சொல்லும் நேரத்தில், நம்முடைய ராஜ்யத்திற்கென்று பேசிக்கொண்டிருந்த ஒரு நல்ல உரிமைக் குரலைக்கூட நாம் இழந்து விடுவோமோ என்று நாட்டு மக்கள் கவலைப்படுகிறார்கள். அதோடுமல்லாமல் அவருடைய அறிவாற்றல் ஒரு பரந்த நாட்டுக்கு கிடைக்கிறது, ஒரு பரந்த தேசத்திற்கு கிடைக்கிறது என்று பொதுவாக உபசாரத்திற்காக பேசிக்கொண்டாலும்கூட, தொழில் துறையில் பிற்பட்ட நிலையில் இருக்கிற இந்த ராஜ்யத்துக்கு அவருடைய தொண்டு இன்னும் தொடர்ந்து கிடைக்கவேண்டுமென்று நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் அவர்கள் வேறு இடத்திற்கு போவதாக முடிவு செய்து விட்டதாக பத்திரிகைகளிலே பார்த்தேன்.

அவர்களுக்கு நான் என்னுடைய நல்லெண்ணத்தையும், எனக்கும் அவருக்கும் வயதிலே ஏற்றத்தாழ்வு இருக்குமோ தெரியாது, இருந்தாலும் என் நல்வாழ்த்துக்களையும் அளித்து அவர்கள் அந்த இடத்திற்கு போவதற்கு பொதுமக்களுடைய அனுமதி கிடைக்கிற நேரத்திலே, அந்த இடத்திற்கு சென்று, இங்கு பத்து ஆண்டுகளிலே அவர்கள் பெற்றிருக்கிற நல்ல திறமையையும், நல்ல பயிற்சியையும், பயன்படுத்துகிற நேரத்திலே, அங்கிருந்து பெரிய அலுவலிலிருந்து விலகிய கனம் டி. டி. கிருஷ்ணமாச்சாரி சொன்ன ஒரு ஆங்கில வாசகத்தை அவர் கவனத்திலே வைத்துக்கொண்டு பணியாற்றுவார்களென்று நான் கருதுகிறேன். "The maneater is at large" என்று கனம் டி. டி. கே. அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மனிதனுடைய ரத்தத்தை உறிஞ்சுகிற, குடிக்கிற காட்டுப்புலி அங்கே உலாவுகிறது என்று டி.டி.கே அவர்கள் டெல்லி பேரரசைப்பற்றியும், பேரரசின் சூழ்நிலையைப் பற்றியும் சொல்லிவிட்டு வந்தார்கள். அந்தப் புலி உலவுகிற காட்டிற்குத்தான் நமது கோவை செல்வத்தை அனுப்பிக் கொடுக்கிறோம் என்று நாட்டு மக்கள் அவருடைய பாதுகாப்புக்காக மெத்தவும் இன்றைய தினம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கோவை ஏற்கெனவே இந்தியப் பேரரசுக்கு ஒரு நல்ல நிதி அமைச்சரை அனுப்பிக் கொடுத்திருக்கிறது. இன்றைய தினமும் ஒரு நிதி அமைச்சரை கோவை மாவட்டம் அளிக்கும் என்று வெளியே பேசிக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு இடம் கிடைக்கவேண்டுமே தவிர, பத்தோடு பதினொன்றாக அங்கே உட்கார்ந்திருப்பதைவிட இந்த ராஜ்யத்தை நடத்திச் செல்வதுதான் நல்லது என்று உறுதியாக நான் நம்புகிறேன். அவருடைய நண்பர் என்ற முறையில் இந்த யோசனையை தெரிவித்துக்கொள்ள எனக்கு உரிமை இருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே அவர்களுடைய நிர்வாகத் திறமை வெறும் பாராளுமன்ற விவாதத்திலே மட்டும் அடுத்த ஐந்தாண்டுகளிலே கழிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமேயானால் அது நாட்டிற்கு நஷ்டம் என்று நான் கருதுகிறேன்.

இங்கு அவருடைய அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டு இருப்பதைப்பற்றி நான் குறிப்பிடுகின்ற நேரத்திலேதான், நாம் ஒத்துப்போக முடியாத அரசியல் மாறுபாடுகளை நாம் இன்றைய தினம் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே காங்கிரஸ் கட்சியின் கொள்கையின்படி இந்திய அரசுக்கு உட்பட்ட ஒரு சிற்றரசாக இது நடத்திச் செல்லப்படுவது சீரான நிர்வாகத்தை நடத்தினோம் என்று எப்படி அவர்கள் திருப்திப்படுகிறார்களோ

அவர்கள் திருப்திப்படுவதற்கு காரணம் இருக்கிறது என்பதை எப்படி நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோமோ, அதைப் போலவே இந்திய அரசுக்கு உட்பட்ட ஒரு சிற்றரசு என்ற நிலைமையில்லாமல், ஒரு தனி அரசு என்ற உயர் நிலை இருக்குமேயானால், அவர்களுக்கு இருக்கும் இந்த ஆற்றல் பன்மடங்கு அதிகமாக நாட்டுக்குப் பயன்படும் என்று நான் குறிப்பிட்டுக் கொள்ளாமல் ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொள்வது கொள்கையை மறந்துவிட்ட குற்றத்திற்கு ஆளாவதற்கு இடமளிக்கும். ஆகவே அந்த வேலிக்கு இடையிலே செய்ய வேண்டிய காரியங்களை திறமையாக செய்து, மக்களுடைய நன்மதிப்பை அவர் பெற்றிருக்கிறார். ஆனால் நான் சொன்ன மாதிரி வீட்டுக்கு சென்ற பிறகு, என்னென்ன சாதித்தோம், மற்ற ராஜ்யங்களில் சாதிக்காததை என்ன சாதித்திருக்கிறோம் என்று அமைச்சரவர்கள் எண்ணிப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் பார்க்கின்ற நேரத்தில், இந்த ஐந்து ஆண்டுகளிலே புரட்சிகரமான எந்த புதிய திட்டத்தையும் நாம் நிறைவேற்றவில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். புரட்சிகரமான திட்டம் எதுவும் இல்லையா, உச்ச வரம்பு சட்டம் இல்லையா என்ற எண்ணம் தோன்றும், உச்ச வரம்பு சட்டம் அகில இந்தியாவுக்கும், ஒவ்வொரு ராஜ்யத்துக்கும் சார்ந்தது. நமக்கு மட்டுமல்ல. நாம் தனித்தன்மையோடு சென்னை ராஜ்யத்தின் சார்பில் நிறைவேற்றியிருக்கிற ஒரு புரட்சிகரமான திட்டம் தீவிரமான திட்டம் என்று சொல்லத்தக்க எந்தக் காரியத்திலும் நாம் ஈடுபடவில்லை. ஒரு குடும்பத் தலைவன் பொறுப்போடு ஒரு குடும்பத்தின் வரவைப் பெற்று, அதைச் சீராக செலவழித்து குடும்பத்தை கடனில்லாமல் வைத்துக் கொண்டிருந்தபோதிலும், அல்லது கடன் பட்டாலும் திருப்பித் தரக்கூடிய வருவாயைத் தேடிக்கொண்டு குடும்பத்தை நடத்துவதுபோல, ராஜ்ய சார்க்கார் என்ற குடும்பத்தை நடத்திக் கொண்டு வந்திருக்கிறார்களே தவிர, இந்த நாட்டினுடைய தேவைகளைக் கவனித்து நாட்டின் வறுமையை நீக்குவதற்கு நாட்டு மக்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கேற்ற திட்டங்களைப் போடுவதற்கு நம்முடைய அமைச்சர்களுக்கு போதுமான அவகாசமும், போதுமான அதிகாரமும் அளிக்கப்படவில்லை. ஆகவே அந்த ஆற்றல் நெய்வேலி நிலக்கரியைப்போல் சுரங்கத்தை வெட்டி எடுக்கப்படுகிற நிலையிலும், சேலத்தின் இரும்பைப்போல் பல ரசாயன சாலைகளில் ஆராய்ச்சி செய்வதைப்போலவும் இருக்கிறதே தவிர, போதுமான அளவுக்கு அந்த ஆற்றல் நாட்டுக்கு பயன்படுத்தப் படவில்லை என்பது

எனக்குள்ள குறையாகும். இதைப்போலவே இங்கே நடத்தப்பட்ட விவாதங்களில் ஒவ்வொரு அங்கத்தினரும் காட்டியிருக்கிற திறமை எந்த அளவுக்கு இருந்தது என்பதைவிட எந்த அளவுக்கு இருக்கவேண்டும் என்பதை ஜனநாயகத்தில் கட்சி அரசியல் நடத்துகிற மற்ற நாடுகளில் முறைகளோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். ஆளும் கட்சி என்ற ஒன்று அமர்ந்தவுடனேயே, ஆளும் கட்சியிலுள்ளவர்கள் ஒரு மந்திரி சபையை அமைக்கிறார்கள் என்றால் எதிர் கட்சியிலுள்ளவர்கள் ஒரு "ஷேடோ காபினட்" அமைத்து, இவர் அந்தத் துறையை கவனித்துக் கொள்ளுவார், அவர் இந்தத் துறையை கவனித்துக் கொள்ளுவார் என்ற முறை ஏற்படுகிறது. இன்றைய தினம் ஆளும் கட்சியினருக்கும் எதிர் கட்சியினருக்கும் அந்த வகையிலே இருக்கும் தொடர்பைப் பார்த்தால், அவர் இவருக்கு பதில் சொல்லுவார், இவர் அவருக்கு பதில் சொல்லுவார் என்ற அளவுக்குத்தான் நாம் வளர்ச்சி அடைந்திருக்கிறோம். அதற்குக் காரணம் ஆளும் கட்சியினுடைய எண்ணிக்கை அதிகமாகவும், எதிர் தரப்பின் எண்ணிக்கை குறைவாகவும் இருக்கிறது. நாங்கள் என்ன செய்யலாம் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நிச்சயமாக கேட்க உரிமை படைத்தவர்கள், என்ன செய்யலாம் என்று என்னைக்கேட்டால், நாட்டு மக்களுடைய மனோ நிலையை கணக்கெடுக்கிற நேரத்திலே, இந்த நாட்டு மக்களுடைய அரசியல் கருத்துக்களை, பல்வேறு வகையான மாறுபட்ட கருத்துக்களை, அவரவர்கள் ஆழ்ந்த நம்பிக்கையோடு வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற அடிப்படையிலே ஒரு உண்மையான ஜனநாயகத்தை சட்ட மன்றத்திலே வளப்படுத்த வேண்டுமானால், விகிதாசார உறுப்பினர் முறை "ப்ரபோர்ஷனல் ரெபரசன்டேஷன்" என்ற முறை ஏற்பட்டாலொழிய நாட்டினுடைய கருத்துக்கள் அத்தனையும் சட்ட மன்றத்தில் பிரதிபலிக்கும் காலத்தை நாம் எதிர்பார்க்க முடியாது. நமது நிதி அமைச்சர் அவர்களை, பிரெஞ்சு நாட்டு அரசியல் பொருளாதார மேதை மெராபூ என்பவர் எடுத்துச் சொல்லியிருக்கிற கருத்துக்களை அவருடைய ஓய்வு நேரத்திலே பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் சட்ட மன்றம் எப்படி இருக்கவேண்டுமென்றால், நாட்டை அப்படியே படம் பிடித்து காட்டவேண்டும். ஆனால் நாட்டு அளவுக்கு அந்தப் படம் இருக்காது, படம் சின்ன அளவுக்குத்தான் இருக்குமென்றால், நாட்டிலுள்ள அத்தனையும் அந்த படத்திலே தெரியும். இரண்டொரு தென்னை மரங்கள் இருந்தால், படத்திலே சின்னதாகத் தெரியும், பக்கத்திலே ஒரு கேணி இருக்குமானால் அந்தக் கேணி படத்திலே ஒரு புள்ளி

அளவுக்காவது தெரியும். அதைப்போலவே இந்த நாட்டிலே எழுதப்படுகிற எல்லாவகையான காரியங்களும் இடம் பெறத்தக்க வகையிலே பல்வேறு கட்சிகளும், அந்தந்த கட்சிகளுக்கு நாட்டிலே கிடைக்கிற வாக்காளர் எண்ணிக்கைக்குத் தக்கபடி இடம் கிடைத்திருக்குமானால், 50 லட்சம் வாக்காளர்களால் ஆதரிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சிக்கு 150 இடங்களும், 17 லட்சம் வாக்காளர்களால் ஆதரிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கட்சிக்கு 15 இடங்களும் கிடைக்கும் முறையில் இந்தத் தப்புக் கணக்கு ஏற்பட்டிருக்காது. அந்தத் தப்புக் கணக்கு ஏற்பட்டதினால் எங்களுக்கு அரசியலிலே இடம் ஏற்படாமல் நஷ்டம் வந்துவிட்டது என்பதற்காக இதைச் சொல்லவில்லை. ஆனால் அப்பொழுது சம நிலை ஏற்பட்டிருக்கும். ஆகவே நல்ல ஜனநாயக பண்பாடு வளரவேண்டும் என்று அந்தக் கருத்துக்காகக்கூட இந்த நாட்டு மக்களுடைய மனோபாவத்தை கருத்திலே வைத்து அதற்குப் பாடுபடவேண்டியது முக்கியம் என்ற கருத்துக்கு நான் வந்திருக்கிறேன். என்னுடைய கழகத்தின் சார்பிலே வந்திருக்கிறேன் என்பது மட்டுமல்ல, கம்யூனிஸ்டு கட்சியும் அதே கண்ணோட்டத்துடன் சிந்தனை செலுத்தி வருகிறார்கள் என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இதைப் போலவே எதிர் தரப்பிலுள்ள நாங்கள் 5 கட்சிகளாக இருக்கிறோம் என்ற காரணத்தால் ஆளும் கட்சியில் உள்ளவர்களின் பணி மிகவும் எளிதாக முடிகிறது. கனம் சின்னதுரை பேசியதற்கு ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் பதில் சொல்லி விட்டார். கனம் கலியாணசுந்தரம் பேசியதற்கு இன்னொருவர் பதில் சொல்லி விட்டார் என்ற அடிப்படையில் இப்பொழுது ஆளும் கட்சி இயங்கி வருகிறது. இப்படி ஒருவருக்கு ஒருவர் பதில் சொல்லக்கூடிய அளவில் ஐந்து வருஷங்களாக இங்கு ஆளும் கட்சியிலுள்ளவர்கள் பணியாற்றி வருகிறார்கள். ஆனால் எதிர்க் கட்சியிலுள்ள எல்லா கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய எதிர்க்கட்சியாக இருந்தால் இப்படி பதில்சொல்வது என்பது எளியதாக முடியாது என்பது என் கருத்து, ஆகையால்தான் ஒவ்வொரு கட்சியினுடைய கருத்தும் இந்த சட்டமன்றத்தில் பிரதிபலிக்கிறது. அந்த முறையில் ஜனநாயக முறையில் சில ஈடுபாடு ஏற்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன். அப்பொழுதுதான் எதிர் கட்சியின் முழு பண்பு உண்மையிலேயே நாட்டிற்குக் கிடைக்கும். அந்த முறையில் சொல்லும்போது நம்முடைய அமைச்சர்கள் திறமையாக பணியாற்றி வருகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அதைப் போலவே

நம்முடைய சட்டசபை உறுப்பினர்களும் கட்டுப்பாட்டுடன் இங்கு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். அந்த அளவில் என்னுடைய நன்றி எல்லா அங்கத்தினர்களுக்கும் உரித்தானது. எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களும் அதில் பெரும் பங்கு ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட திறமையில் அவர்களுக்கும் ஒரு பங்கு உண்டு. அவர்களும் விவாதத்தில் எவ்வளவோ நல்ல முறையில் கலந்து கொண்டிருக்கிறார்கள். எவ்வளவோ ஜனநாயக பண்பாடுடன் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். வெளியிலும் சரி இங்கும் சரி நேர்மையாக பொறுப்புள்ள முறையில்தான் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும். நல்ல பொறுப்புள்ள அரசியல் கட்சியாக பணியாற்றி வருகிறார்கள் என்பதை இந்த சட்ட மன்றத்தில் சொல்லிக் கொள்ளுகிறேன். இந்த சட்ட மன்றத்தில் எவ்வளவு வெளி நடப்புகள் நடந்தன. வெளி சட்ட மன்றங்களில் எவ்வளவோ அங்கத்தினர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். எவ்வளவோ வெளி நடப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. எவ்வளவோ வெளியேற்றங்களும் நடந்திருக்கின்றன. எவ்வளவோ சட்டசபை அங்கத்தினர்கள் வெளியிடங்களில் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அந்தப் புள்ளி விவரங்களையும் இங்கு வெளியேற்றம், வெளி நடப்பு கணக்குகளையும் எடுத்துப் பார்த்தால் இந்த சட்ட மன்றம் எவ்வளவோ அமைதியான முறையில் நடைபெற்றதாகத் தெரிய வரும். எதிர் கட்சிகள் எவ்வளவு கண்டனக் குரல்களை எழுப்பினாலும் சபை எவ்வளவோ நல்ல முறையில் நடந்திருக்கிறது. மிக முக்கியமான காரியங்களில் எதிர் கட்சிகள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கும்போது எவ்வளவோ கூச்சல்கள் கிளம்பும். எதிர் கட்சிகள் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதற்கு எவ்வளவோ காரியங்களைச் செய்வார்கள். அவைகள் எல்லாம் இங்கு நடைபெறவில்லை. அவரவர்களுடைய கட்சிக்கு பலத்தையும் செல்வாக்கையும் தேடிக் கொள்வதற்காக எவ்வளவோ காரியங்களை கடைப்பிடிப்பார்கள். அவைகள் எல்லாம் இங்கு கிடையாது. அவரவர்களுடைய பொறுப்புகளை எவ்வளவோ நன்றாக தெரிந்து கொண்டு அதன்படி நடந்து கொண்டிருக்கிறார்கள். கனம் சின்னதுரை கட்சியாகிய ப்ரஜா சோஷலிஸ்ட் கட்சியைப் போன்றும், கம்யூனிஸ்ட் கட்சியைப் போன்றும் சிறு கட்சியாக இருந்தாலும் கூட திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும், ஜனநாயக காங்கிரஸ்

கட்சியாக இருந்தாலும் அவர்கள் எல்லோரும் மிகுந்த பொறுப் புணர்ச்சியுடன் தான் நடந்துகொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களைப்பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் இந்தச் சட்டசபைக்கு வருவதற்கு முன்னாலேயே சட்டத்திலும் அமைதியிலும் ஒழுக்கத்திலும் சட்ட மன்ற ஒழுக்கத்தின்படி நடப்பதிலும் மிகுந்த அக்கரை கொண்டவர்களாக இருந்தார்கள். அதற்கு முக்கிய காரணம் காட்ட வேண்டுமானால் கனம் நிதி அமைச்சரும் சரி மற்ற அங்கத்தினர்களும் சரி சட்டசபையில் விவாதம் நடக்கும் போதும் சரி கேள்விகள் கேட்கும்போதும் சரி, கார சாரமாக கேட்டாலும் பேசினாலும் அவர்கள் வெகு அமைதியாகவும் பணிவுடனும் இருந்திருக்கிறார்கள். அப்படி இல்லாமலிருந்திருந்தால் இந்த ஐந்து ஆண்டும் இவ்வளவு வேகமாக ஓடி இருக்காது. சட்டசபையில் ஏற வேண்டியதுதான். அந்தச் சூட்டுடன் சாப்பிடவும் வேண்டியதுதான். எப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டாலும் அவர்கள் அமைதியை இழக்காமல்தான் இருந்திருக்கிறார்கள். சண்டை போட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. அதைப்போலவே இன்றையதினம் நமது அமைச்சர் அவையும் நல்ல முறையில்தான் பணியாற்றி வந்திருக்கிறது. எல்லா விவாதத்தையும் பொறுப்பான முறையில்தான் நடத்தி வந்திருக்கிறார்கள். ஆனால் ஒன்றை மட்டும் வெகு உணர்ச்சியுடன் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. ஒரு அரசியல் கட்சி இன்னொரு அரசியல் கடசியை எதிர்த்து பேச வேண்டியதுதான். நாங்கள் திராவிட நாட்டை கேட்பதை வைத்துக்கொண்டு நமது நிதி அமைச்சர் அவர்கள் மோகன ராகத்தில் ஆரம்பித்து என்ன செய்து விட போகிறீர்கள் என்று அடானா ராகத்தில் முடித்திருக்கிறார். இன்னும் கல்யாணி ராகத்திற்கு போய் சேருவதாகவும் இருக்கிறது. சில சமயங்களில் எங்களுடைய விவாதங்களை மதிக்காமல் இருக்கிறார்கள், சில உறுப்பினர்கள். அப்படி மதிக்காமல் இருந்தாலும் பாதகம் இல்லை. அந்த உரிமை அவர்களுக்கு இருக்கிறது. அந்த நிலை எங்களுக்கு இருக்கிறது. ஆனால் எங்களுடைய திட்டத்தில் நம்பிக்கையைக் கண்டு குறைகூறாதீர்கள். எங்களுடைய நம்பிக்கைக்கு மதிப்புக் கொடுங்கள். எங்களுடைய நம்பிக்கையான திட்டத்தில் சந்தேகப்படவேண்டாம் என்றுதான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தங்களுக்கு பிடிக்காத கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிறோம் என்று வேண்டுமானால் சொல்லுங்கள். ஆனால் எங்களுடைய நம்பிக்கையில் சந்தேகப்பட வேண்டாம். தவிர ஆளும்

கட்சியிலுள்ளவர்களிடம் எங்களுக்கு தனிப்பட்ட முறையில் நல்ல மதிப்பு உண்டு. கட்சிக் கொள்கை அடிப்படையில் ஒருவருக்கு ஒருவர் கருத்து மாறுபாடுகள் இருக்கலாம். அதெல்லாம் கட்சியின் அடிப்படையில் ஏற்பட்டது. அதன் அடிப்படையில் பேசும்போது ஆத்திரமாகப் பேசலாம். ஒன்றுக்கு ஒன்று விட்டுக் கொடுக்கக் கூடாது என்ற முறையில் பேசலாம். இருந்த போதிலும் எங்களுக்கு ஒவ்வொருவரிடத்திலும் தனிப்பட்ட முறையில் நல்ல மதிப்பு உண்டு. இந்த மன்றத்தில் தங்களுடைய கடமை உணர்ச்சியுடன் நல்ல முறையில்தான் பணியாற்றி வருகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அதைப்பற்றி கனம் கலியாணசுந்தரம் அவர்கள் நன்றாக எடுத்துச் சொல்லிவிட்டார். இப்பொழுது ஐந்து வருஷங்கள் கழிந்து நாம் போகிறோம். இந்த மன்றத்தைவிட்டு வீட்டுக்குப் போகும்போது வழியில் என்ன எண்ணம் வரும் என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். இந்த ஐந்து ஆண்டு காலத்தில் விலைவாசிகளை குறைத்தோமா, விலைவாசிகள் குறையவில்லையே. அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டோம். எந்தந்த வரிகளைப் போட்டோம், இந்த ஐந்தாண்டுகள் இங்கு இருந்தோமே அதற்குள் கடன் அதிகமாக ஆகி விட்டதே அதைத் திருப்பித்தர என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம், பல திட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றினோமே அந்த திட்டங்கள் மூலம் என்னென்ன முன்னேற்றத்தைக் கண்டோம். இந்த ஐந்தாண்டுகள் மன்றத்தில் இருந்தோமே வேலை இல்லா திண்டாட்டத்தைப் போக்கினோமா அதைக் குறைக்க முடியவில்லையே. ஐந்தாண்டு இங்கிருந்தோமே என்ன செய்து விட்டோம் என்றெல்லாம் யோசிக்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே மறுபடியும் ஆளும் கட்சியிலுள்ளவர்களே மறுபடியும் வந்தாலும் சரி அல்லது வேறு எந்தக் கட்சி ஆளும் கட்சியாக வந்தாலும் சரி அவர்கள் செய்ய வேண்டிய காரியங்கள் ஏராளமாக இருக்கின்றன. இந்த ஐந்தாண்டுகளில் செய்யப்படாத காரியங்களையெல்லாம் செய்ய வேண்டியதாக இருக்கிறதே இன்னும் மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும். சேலம் இரும்பு இன்னும் தூங்கிக்கொண்டுதானே இருக்கிறது, நெய்வேலி நிலக்கரி இன்னும் பேச்சளவில்தானே இருக்கிறது, எப்பொழுது அதை எடுத்து பயன்படுத்திக்கொள்ளலாம், ஐந்தாண்டுகளாக காந்த மலையிலுள்ள இரும்பு தூங்கிக்கொண்டிருக்கிறது, ஐந்தாண்டுகளாக நெய்வேலி நிலக்கரி தன்னை வெட்டி எடுக்கவில்லையே என்று நிந்தித்துக்கொண்டிருக்கிறது. சேது சமுத்திரம்,

தூத்துக்குடி துறைமுகம் தங்களை இன்னும் ஆழப்படுத்தவில்லையே என்று இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறது. இவைகளுக்கு எல்லாம் புதிய மந்திரி சபை பதில் சொல்ல வேண்டியதாக இருக்கும். தூத்துக்குடி பவளங்கள் இன்னும் நாங்கள் பாறையிலேயே இருக்கிறோமே எங்களை எப்பொழுது ஆழப்படுத்தி எடுக்கப்போகிறீர்கள் என்று கேட்கும். வரப்போகிற அமைச்சரவை தொண்டி துறைமுகத்திற்கும் கடலூர் துறைமுகத்திற்கும் பாதை வசதி இல்லாத கிராமங்களுக்கும், டாக்டர்கள் இல்லாத வைத்தியசாலைகளுக்கும் வேலை இல்லா மக்களுக்கும் பதில் சொல்ல வேண்டியதாக இருக்கும். மந்திரி சபை எவ்வளவோ திறமைசாலிகளாக இருந்தாலும் இந்த பரிதாபகரமான நிலையைக் கண்டு பரிதவிக்க வேண்டியதாகத்தான் இருக்கும். ஆகவே இவ்வளவு வேலைகளும் செய்ய வேண்டியதாக இருக்கிறது என்பதை அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து இவைகளையெல்லாம் செய்ய வேண்டும் என்று எடுத்துச் சொல்லி இந்த வேலையைச் செய்வதற்கு நாளை வரப்போகிற கட்சி இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சிறந்த ஜனநாயக பண்பை ஜனநாயக பரம்பரையை இந்நாட்டிற்கு விளக்கிக் காட்ட வேண்டும் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த வகையிலே மறுபடியும் நான் குறிப்பிட்டு சொல்வேன். அந்த வேலிக்கு இடையில் அமைச்சர்கள் தங்கள் திறமையை காட்டி நல்லபடி பணியாற்றியிருக்கிறார்கள். அங்கத்தினர்கள் அனைவரும் மன்றத்தினுடைய கண்ணியத்தை நல்ல விதத்தில் உயர்த்தியிருக்கிறார்கள் என்பதை எடுத்துச்சொல்லி இப்படிப்பட்ட மன்றத்தில் ஐந்தாண்டுகள் இருப்பதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்ததை உண்மையாகவே என்னுடைய வாழ்நாளிலேயே பெருமைக்குரிய பகுதியாகக் கருதிக்கொள்ளுகிறேன். இவ்வளவு நல்லவர்களோடு ஐந்தாண்டுகள் பழகுவதற்கு எனக்கு வாய்ப்புத் தரப்பட்டது. இனியும் அப்படிப்பட்ட வாய்ப்புக்கள் தொடர்ந்து தரப்படுவதற்கு அச்சாரம் என்ற முறையிலே நான் கருதிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை இந்த அளவிலே நிறுத்திக்கொள்கின்றேன்.

பேரறிஞர் அண்ணாவின் பிற நூல்கள்

நீதிதேவன் மயக்கம்	(நாடகம்)
சந்திரமோகன் (சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்)	(நாடகம்)
இன்ப ஒளி	(நாடகம்
கண்ணாயிரத்தின் உலகம்	,,
வேலைக்காரி	,,
சந்திரோதயம்	,,
சொர்க்கவாசல்	,,
கோமளத்தின் கோபம்	(சிறுகதைகள்)
கன்னி விதவையான கதை	,,
செவ்வாழை	,,
இரு பரம்பரைகள்	,,
மக்கள் தீர்ப்பு	,,
பவழபஸ்பம்	,,
அப்போதே சொன்னேன்	,,
வெள்ளை மாளிகையில்	,,
பித்தளையல்ல பொன்னேதான்	,,
வண்டிக்காரன் மகன்	,,
இரும்பு முள்வேலி	,,
கடைசிக் களவு	(குறுநாவல்)
குமாஸ்தாவின் பெண்	,,
இலக்கியச் சோலை	(இலக்கியம்)
பிடிசாம்பல்	(வரலாற்று ஓவியம்)
அரசாண்ட ஆண்டி	,,
இரும்பாரம்	,,

கலிங்கராணி (வரலாற்று ஓவியம்)
தசாவதாரம் ”
அண்ணாவின் கவிதைகள் (கவிதை தொகுப்பு)
என் வாழ்வு
செங்கரும்பு
ஆடிய பாதம்
பாரதம்
திரும்பிப்பார்
பாவையின் பயணம்
தேவ லீலைகள்
உலகப்பெரியார் காந்தி
நீதிபதி வக்கீலானார்
இன்பத் திராவிடம்
புன்னகை
யார் கேட்க முடியும்?
துரோகி கப்லான்
கட்டை விரல்
நெஞ்சில் நெருப்பு
அறுவடை
பிரம்மநாயகம்

பேரறிஞர் அண்ணாவின் வாழ்க்கைக் குறிப்புகள்

15-9-1909 - தோற்றம்	:	சி.என். அண்ணாதுரை
தந்தை	:	நடராசன்
தாய்	:	பங்காரு அம்மாள்
சிறிய தாயார் (தொத்தா)	:	ராஜாமணி அம்மையார்
பிறந்தகம்	:	சின்ன காஞ்சிபுரம்
வாழ்க்கைத்துணை	:	இராணி அம்மையார்
தொழில்	:	நாட்டுத் தொண்டு-எழுத்தாளர்.
புனைப் பெயர்	:	சௌமியன், வீரன், சமதர்மன், குறிப்போன், சம்மட்டி, ஒற்றன், சாவடி, ஆணி, பரதன்.

1929-1934 - சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. ஆனர்சு பட்டப்படிப்பு.

26-5-1933 - கோவை மாவட்டம் காங்கேயத்தில் முதலாவது செங்குந்தர் இளைஞர் மாநாட்டில் திருச்சி சி.என். சீனிவாசன் தலைமையில் தந்தை பெரியார் துவக்கஉரை ஆற்ற, அறிஞர் அண்ணா - மாணவர் அண்ணாதுரை சொற்பொழிவு நிகழ்த்த, கேட்டு வியப்புற்று கண்டு பேச தந்தை பெரியார் முயன்று இயலாது போனமை (குடி அரசு - 23-7-1933)

11-2-1934 - முதல் சிறுகதை 'கொக்கரக்கோ' ஆனந்த விகடனில் வெளிவந்தது.

1-2-1936 - சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் கல்வி அமைச்சர் குமாரசாமி ரெட்டியார் தலைமையில் பார்ப்பனர் அல்லாதார்இயக்கமும் காங்கிரசும் பற்றி சொற்பொழிவு.

ஆகஸ்ட் 1936	-	தந்தை பெரியாருடன் வட ஆற்காடுமாவட்டச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளல்.
1936	-	சென்னை மாநகராட்சித் தேர்தலில் நீதிக் கட்சி உறுப்பினராக நிற்றல்.
1937	-	நவயுகம் ஆசிரியர்.
3-1-1937	-	சென்னை தன்மான இயக்க இளைஞர் மன்ற ஆண்டு விழாத் தலைமை ஏற்றல்.
11-4-1937	-	நீதிக் கட்சி செயற்குழு உறுப்பினராதல்.
16-5-1937	-	நீதிக் கட்சி பிரச்சாரக் குழு உறுப்பினராதல்.
1937	-	விடுதலை, குடி அரசு இதழ்களில் துணை ஆசிரியர் பணி ஏற்றல்.
29-8-1937	-	முசிறி தாலுக்கா தன்மான இயக்க மாநாட்டுத் தலைமை உரையாற்றல்.
9-12-1937	-	முதற் கவிதை 'காங்கிரஸ் ஊழல்' விடுதலையில்.
2-9-1938	-	முதல் மடல் 'பரதன் பகிரங்க கடிதம்', விடுதலை.
26-9-1938	-	இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மக்களைத் தூண்டிவிட்ட குற்றம் சாட்டி எழும்பூர் நீதிமன்றத்தில் நீதிபதி உன்னி கிருஷ்ண நாயர் நான்கு மாத வெறுங் காவல் தண்டனை வழங்கினார். இராணி அம்மையார் சிறை செல்லும் அண்ணாவை வாழ்த்திய வாழ்த்துச் செய்தி குடி அரசு, விடுதலையில் வெளிவந்தது.
13-1-1939	-	தமிழுக்காக உயிர் நீத்த நடராசன் இறுதி ஊர்வல நாள் - அண்ணா இரங்கற் கூட்டத்தில் உரை.
18-1-1939	-	தமிழர் திருநாள் - சென்னை உயர்நீதிமன்ற கடற்கரையில் டாக்டர் சி. நடேசனார் படம் திறந்து வைத்தல்.
10-2-1939	-	சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் இந்தி எதிர்ப்புச் சொற்போர்.
சூலை, 1939	-	முதல் குறும்புதினம் 'கோமளத்தின் கோபம்' தொடக்கம் - குடி அரசில்.
6-1-1940	-	பம்பாயில் பெரியார், அம்பேத்கார் உரையாடல்; மொழிபெயர்ப்பு.
23-3-1940	-	முதல் புதினம் 'வீங்கிய உதடு' தொடக்கம்-குடி அரசில்.
2-6-1940	-	காஞ்சியில் திராவிட நாடு பிரிவினை மாநாடு.
8-11-1940	-	விடுதலையில் தி.க. சண்முகம் நடித்த 'குமாஸ்தாவின் பெண்' நாடகத் திறனாய்வு.

7-3-1942	-	திராவிட நாடு கிழமை இதழ் தொடக்கம். தலையங்கம் 'கொந்தளிப்பில்' புரட்சிக் கவிஞர் 'தமிழுக்கு அமுதென்று பேர்' எனும் பாடல் முகப்பில்.
14-3-1943	-	சேலத்தில் நாவலர் - பாரதியார் உடன்அ ண்ணா கம்பராமாயணச் சொற்போர்.
5-6-1943	-	'சந்திரோதயம்' நாடகம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் நடத்தல்.
19-8-1944	-	சேலம் நீதிக்கட்சி மாநாடு-அண்ணாதுரை தீர்மானம் - நீதிக்கட்சி, திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்று மக்கள் இயக்கமாக மலர்தல்.
15-12-1945	-	சென்னை செயிண்ட் மேரி ஹாலில் 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' நாடகம் அரங்கேற்றம் - அண்ணா காகப்பட்டராக நடித்தல்.
13-1-1946	-	'பணத்தோட்டம்' கட்டுரை.
மே, 1946	-	கருஞ்சட்டைப் படை மாநாடு - தந்தை பெரியாருடன் கருத்து மாறுபாடு முகிழ்ப்பு.
29-7-1946	-	நாவலர் சோமசுந்தரபாரதியார் தலைமையில் பாவேந்தருக்குப் பொற்கிழி அளித்தல்.
25-4-1947	-	'வேலைக்காரி' திரை நாடகம்.
1-6-1947	-	'நீதிதேவன் மயக்கம்' நாடகம்.
15-8-1947	-	திராவிட நாட்டில் 'ஆகஸ்ட் பதினைந்து' கட்டுரை - தந்தை பெரியார் 'துக்க நாள்' எனல். பொருந்தாது - அது 'விழா நாளே' எனக் கருத்து விளக்கம் தருதல்.
28-9-1947	-	தந்தை பெரியார் 69-வது பிறந்த நாள் விழா சிறப்புக் கட்டுரை 'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?'
14-1-1948	-	'நல்ல தம்பி' திரையிடல்.
18-4-1948	-	திராவிட நாடு கட்டுரைகட்குத் தண்டனை ரூ.3,000. "இதன் விலை மூவாயிரம்" நூலாதல்.
18-6-1949	-	தந்தை பெரியார் மணியம்மை திருமணம். அண்ணா பிரிந்து நிற்றல்.
10-8-1949	-	'மாலை மணி' - முதல் நாளிதழ். ஆசிரியர்.
17-9-1949	-	தி.மு.க. தோற்றம். 'ஒட்டு மாஞ்செடி, தி.மு.க. துவக்க உரை. ராபின்சன் பூங்கா. ராயபுரம்.

18-9-1949	-	திராவிட நாடு இதழில் 4, 18-4-1948-ல் வரைந்த கட்டுரைக்காக வழக்கு. நான்கு மாதச் சிறைத் தண்டனை ஏற்றல். எதிர்ப்பு கண்டு பத்தாம் நாள் விடுதலை.
12-1-1950	-	நாடெங்கும் பொங்கல் விழா - அறுவடை விழா - உழவர் விழா எடுக்க அறிக்கை விடல்.
1950	-	திருச்சி சிறையில் 'இலட்சிய வரலாறு' எழுதுதல்.
1951	-	'ஆரிய மாயை' நூலுக்குத் தடை.
17-9-1951	-	திராவிட நாடு பிரிவினை நாள் எடுத்தல்.
13, 14, 15 16-12-1951	-	திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநில மாநாடு, சென்னையில்.
1-8-1952	-	இந்தி எதிர்ப்பு அறப்போர் - இந்தி எழுத்துக்களை அழித்தல்.
25-4-1953	-	திருச்சி மர்வட்ட மாநாட்டில் 'காதல்ஜோதி' நாடகம் அரங்கேற்றம்.
15-6-1953	-	'நம் நாடு' நாளிதழ் தொடக்கம்.
13-7-1953	-	மும்முனைப் போராட்டம் - மும்முனைப் போராட்டம் தூண்டிய குற்றம் சாட்டி மூன்று மாதம் சிறையிடல்.
15-7-1953	-	மும்முனைப் போராட்டம் - கழகத் தலைவர்கள், தொண்டர்கள் கைதாதல்.
3-5-1954	-	மொழி வழி மாநில அமைப்பு அறிக்கை வெளியிடல்.
14-1-1955	-	சொர்க்கவாசல் திரையிடல்.
2-2-1956	-	தேவிகுளம், பீர்மேடு இணைப்புக்காகப் பொது வேலை நிறுத்தம்.
29-4-1957	-	தமிழ்நாடு சட்டமன்ற தி.மு. கழகத் தலைமை ஏற்று, எதிர்க்கட்சித் தலைவராதல்.
9-6-1957	-	'ஓம் லேண்டு' ஆங்கிலக் கிழமை இதழ் தொடங்கல்.
3-1-1958	-	அண்ணா கைதாதல்.
2-3-1958	-	தி.மு.கழகத்தினை மாநிலக் கட்சியாகவும், உதயசூரியனை அதன் சின்னமாகவும் இந்திய அரசு ஒப்புதல் அளித்தல்.
24-4-1959	-	அண்ணாவின் தம்பியார் சென்னைப் பெருநகர் மன்ற ஆட்சிப் பொறுப்பினைப் பெறல்.

1-8-1960	-	இந்தி எதிர்ப்பு மாநாடு செங்கையில் அண்ணா தலைமை உரை நிகழ்த்தல்.
1962	-	'சம்பத்' விலகல் குறித்து அண்ணா வருந்தி அறிக்கை வரைதல்.
26-2-1962	-	சட்டமன்றத்திற்குத் தம்பியர் ஐம்பதின்மர் செல்ல அண்ணா பாராளுமன்ற மேலவை உறுப்பினராதல்.
2-8-1962	-	விலைவாசி உயர்வுப் போர் - வேலூர் சிறையில் பத்து வாரம்.
7-1-1963	-	சீனா போர் குறித்துச் சென்னை வானொலியில் ஆங்கிலப் பேருரை.
17-11-1963	-	கட்டாய இந்தி - 17-வது மொழிப் பிரிவு சட்டம் எரித்தல். 16-11-1963 அன்றே கைதாகி, ஆறு மாதம் சிறைத் தண்டனை ஏற்றல்.
1-3-1967	-	தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தில் தம்பியருடன் 138 பேர் அமர்ந்திட அண்ணா தமிழக முதல்வர் பொறுப்பேற்றல். (6-3-1967)
14-3-1967	-	முதலமைச்சர் அண்ணா வானொலிச் சொற்பொழிவு.
14-4-1967	-	'தமிழ்நாடு' பெயரிட்டுப் பெருமை தரல்.
10-1-1968	-	இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு எடுத்து உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் நிற்றல்.
8-9-1968	-	அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பேரறிஞர் அண்ணாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கி பெருமை பெறல்.
4-1-1969	-	கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் சிலை திறப்பு விழாவில் பொழிந்த கடைசி சிறப்புச் சொற்பொழிவு.
2-2-1969	-	தமிழ் மக்கள் பேரறிஞர் அண்ணா அவர்களை இழந்து துன்பக் கடலில் மூழ்கல்.

* * *

பேரறிஞர் குறித்துப் பெருமக்கள்......

அண்ணா அவர்கள் நமது நாட்டுக்கு ஒரு நிதி என்றுதான் சொல்ல வேண்டும். பகுத்தறிவாளர்; மூடநம்பிக்கையை ஒழிக்க என்னோடு இருந்து தொண்டாற்றியவர் ஆவார். பகுத்தறிவு கொள்கைப்படி, துணிந்து, இமயமலை அளவு எதிர்ப்பு வந்தாலும் கவலை ஏதும் கொள்ளமாட்டார்.

- தந்தை பெரியார்.

அண்ணாதுரை இம்மதிப்புமிக்க மாமன்றத்தின் மேலவையில் உறுப்பினராக இருந்தார். மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று விலகிச் சென்று தமிழ்நாட்டின் முதல்வராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே இருந்த உறவு முறையில் அவர் நடு நிலையோடு நடந்து கொண்டார். மாறுபட்ட அரசியல் கட்சியில் இருப்பினும்கூட அதை அவர் வெளிக்காட்ட வில்லை. அண்ணாதுரை உண்மையான ராஜ தந்திரி புகழ்வாய்ந்த இந்தியர்.

- இந்திராகாந்தி.

தமிழ்த் தோன்றல்

"சீரிய கூரிய தீஞ்சொல்" என்பது கம்பன் வழங்கும் அழகிய தொடர்களுள் ஒன்று. இதனை அவன் வழங்கிய இடமும் காலமும் வேறு. ஆயினும் இதன் பொருளும் கருத்தும் அவ்விடம் காலம் முதலிய இயல்பு நோக்காது - உண்மையும் அது நிறைந்த உரையும் இரண்டும் செறிந்த செயலும் ஒருங்கும் நிகழும் இடங்கட்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளன. பல அறிஞர்கள் பால் சீர்மையும் உரையும் செயலும் ஒளிருங்கால் சீர்மையும் கூர்மையும் இனிமையும் நிறைந்த சொற்கள் பிறந்து நல்ல பயனை விளைவிக்கின்றன. அவருள் அன்பர் திரு அண்ணா துரையும் ஒருவர், அவர்பால் சீரிய கூரிய தீஞ்சொற்கள் பெருஞ் செல்வமாக நிலவுகின்றன.

செல்வத்துப்பயன் ஈதல் என்பர். திரு. அண்ணா துரையும் பெருஞ்செல்வமாகிய இச்சொற்களை வரையாது நிரம்ப வழங்குகின்றார். தமிழினஞ் செல்வத் தோன்றல்கள் அவற்றை விரைந்து மனங் கொள்ள ஏற்றுத் தொழில் கேட்கும் தமிழ் நலம் எய்துகின்றனர். இதனைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்து வரும் என் போன்றோர் உள்ளத்தில், எதிர்காலத் தமிழகம் இனிய காட்சி வழங்கக் கண்டு இன்புறுகின்றனர். ஒரு நல்ல சுயமரியாதைக் காரராகக் காட்சி வழங்கிய, தூய சுயமரியாதை வீரராய், மான மாண்புடைய கட்டிளந் தமிழ்த் தோன்றலாய் விளங்குகின்றார் திரு. அண்ணாதுரை.

- ஔவை சு. துரைசாமி

கருத்துப்புரட்சிக்கொரு வீரர்

தோழர் அண்ணாதுரை கருத்துப்புரட்சி செய்து வரும் வீரர். அவர் எழுதும் தலையங்கங்களிலும் பேசும் பேச்சுக்களிலும் புரட்சி வித்துக்கள் நிறைந்துள்ளன. அவை படிப்பவர் உள்ளத்திலும் கேட்பவர் நெஞ்சத்திலும் கருத்துப் புரட்சி விதைத்து வளர்கின்றன. தோழர் அண்ணாதுரை கடல்போன்ற பெருங் கூட்டங்களில் பேசும் சொற்கொண்டல், அவருடைய சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டு கடல் ஒரே அமைதியாக இருக்கும். இடையிடையே கைதட்டும் ஆரவாரம் ஒன்றே அந்தத் தலைக் கடலிடையே கேட்கப்படும். மணிக்கணக்காகப் பேச்சு நிகழும். ஆனால், பேசுகின்றவரிடத்திலும் இரத்தக் கொதிப்பும் துடிப்பும் குறைவு. கேட்கின்றவரிடத்திலும் இரத்தக் கொதிப்பும் துடிப்பும் குறைவு. காரணம் என்ன? அவருடைய சொற்கள் அறிவாற்றல் வாய்ந்த சொற்கள்: புரட்சிக் கருத்துக்கள் பொதிந்த சொற்கள். ஆகையால் வெறும் இரத்தக் கொதிப்பையும் துடிப்பையும் உண்டாக்கி நின்று விடுவதில்லை; அவற்றைக் கடந்து சென்று மூளையைத் தாக்குகின்றன. அந்நிலையில் அறிவு துடிக்கின்றது; எண்ணங்கள் கொதித்து எழுகின்றன. ஆகையால் அவருடைய சொற்பொழிவு கற்றோருக்கு அறிவு விருந்து ஆகின்றது. கல்லாதவருக்கும் பகுத்தறிவுத் தூண்டுகோல் ஆகின்றது; கருத்து வேறுபாடு உடையவர்களுக்கும் ஆராய்ச்சிச் சுடர்விளக்கு ஆகின்றது.

- டாக்டர் மு. வரதராசன்.

இளைஞர்களைக் கவர்ந்த ஏந்தல்

சுயமரியாதை மாணவர்கள், இளைஞர் களிடையில் அண்ணாதுரைக்கு செல்வாக்கு அதிகரித்து வந்திருக்கிறது. அண்ணாதுரையின் சொல்வன்மையும் எழுத்து வன்மையும், இளைய உள்ளங்களுக்கு ருசித்ததே, இதற்குக் காரணம்! அண்ணாதுரையின் பேச்சிலும் எழுத்திலும், புத்துணர்ச்சியும், திருப்தியும் ஏற்பட்டது. அண்ணாதுரையை மாணவர்கள் விரும்பினர்; வாலிபர்கள் சூழ்ந்தனர்.

அண்ணாதுரை, சமூக சீர்திருத்தத்திற்குப் புதிய மெருகு கொடுத்து, புதிய உணர்ச்சிகளைத் தழுவிப் போகாவிட்டால் கட்சிக்கு வளர்ச்சியில்லை எனக் கண்டார். அதனால் புதிய அமைப்புக்குப் பூர்வாங்க வேலைகளைப் பூர்த்தி செய்தார்.

- ப. ஜீவானந்தம்



பூம்புகார் பதிப்பகம்
127 (ப. எண். 63), பிரகாசம் சாலை,
(பிராட்வே),
சென்னை 600 108.
தொலைபேசி : 04425267543